தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2024



உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை
நான் கண்டுணருமாறு என் கண்களைத் திறந்தருளும்.

திருப்பாடல் 119: 18

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2024

வெளியீடு

தொடர்புத் துறை

கன்னியாகுமரிப் பேராயம் C.S.I.

# ஆசியுரை

"நேர்மை அவருக்கு அரைக்கச்சை; உண்மை அவருக்கு இடைக்கச்சை"
எசாயா 11: 5

தென்னிந்தியத் திருச்சபை கன்னியாகுமரி பேராயத்தின் வெளியீடான அருளுரைக் கையேடு-2024, இந்த ஆண்டின் தியான தலைப்புகள் மற்றும் திருமறைப்பகுதிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆயத்தம் செய்யப் பெற்றுள்ளது.

மெதடிஸ்ட் திருச்சபையின் அருட்பணியாளர் திரு. ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்கள் நமது தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளிடம், கிறிஸ்தவ போதனைகள் இந்திய மக்களைப் போய்ச் சேர தாக்கத்தை அல்லது தாகத்தை எப்படி உருவாக்குவது என ஆலோசனைக் கேட்டார். அதற்கு காந்தியடிகள், கிறிஸ்தவ போதனைகள் எந்தவித கலப்படமும் இன்றி போதிக்கப்படவேண்டும் என்று பதிலளித்தார். கடவுளின் வார்த்தையினைப் பகிர்ந்துக்கொள்ளும் போது ஆரோக்கியமான வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும். அருளுரை மேடை கடவுளின் வார்த்தையைப் பகிர்கின்ற ஊடகம். நமது விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்தும் இடம் அல்ல. கடவுளின் வார்த்தைகளைக் கூட்டாமலும், குறைக்காமலும் கலப்படமின்றி கடவுளின் பிரதிநிதியாய் நின்று தெளிந்த புத்தியோடும், நல்ல மனச்சான்றோடும், நிதானத்துடனும் அருளுரை ஆற்றுதல் நன்று. இந்த நல்ல திருப்பணிக்கு இந்த அருளுரைக் கையேடு உதவிடும் என்பதில் ஐயமில்லை.

கடவுளின் கிருபையால் ஒவ்வொரு ஆண்டும் தென்னிந்தியத் திருச்சபையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இறையியல் சிந்தனைகளுடனும் கருத்துச் செறிவுடனும் அருளுரைக் கையேடு வெளியிடப்படுவது பாராட்டுக்குரியது. அருளுரைகளை இறைப்பணியாளர்கள் வாசித்து, தியானித்து இறைமக்களுக்கு இறைவார்த்தைகளைக் கருத்துடன் போதிக்க உறுதுணைபுரியும் ஓர் கைநூல். கையேட்டில் உள்ளவாறே அல்ல, அருளுரைக்காகப் பல மணிநேரங்கள் செலவிட்டு மேலும் பல நூல்கள், செய்திகள், அனுபவ சாட்சிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அருளுரையை முழுமைப்படுத்தலாம். தூய ஆவியாரின் துணையுடன் அருளுரையை மென்மேலும் மெருகேற்ற சீரிய சிந்தையுடன் செயல்படுதல் நன்று. சேகரத்தின் இறைப்பணியாளர்கள் ஒன்றிணைந்து அருளுரை கருத்துகளைச் சிந்திக்கவும், பகிரவும் ஆலோசனைக் கூறுகின்றேன்.

இந்த ஆண்டு அருளுரைக் கையேட்டினை வெளியிட மிகுந்த உதவியாயிருந்த தொடர்புத் துறை இயக்குநர் அருள்திரு. முனைவர். O. டென்சிங், இணை இயக்குநர் திரு. M.R. மில்ட்டன் மார்க் ஆகியோருக்கு நன்றி. தொகுப்பாசிரியர்களாக தங்கள் கடமைகளை நேர்த்தியாய் நிறைவேற்றிய அருள்திரு. T. டேவிட் கிளேட்சன், அருள்திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு ஆகியோருக்குப் பாராட்டுகள். அருளுரையை ஆயத்தம் செய்த அனைவரையும் வாழ்த்துவதோடு அச்சுப் பணிகளை மேற்கொண்ட நாகர்கோவில் அச்சகப் பணியாளர்கள் மற்றும் அச்சக மேலாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் ஆகியோரையும் வாழ்த்திப் பாராட்டுகிறேன். இறைவார்த்தையை இறைமக்களுக்கு ஆன்மிக தாகத்துடன் ஆக்கப்பூர்வமாய் அறிவிப்போம் எனத் தந்தை மைந்தர் தூய ஆவியாரின் திருப்பெயரில் வாழ்த்து கூறி ஆசி கூறுகின்றேன்.

இறைப்பணியில்,

பேரருள்திரு. அறிவர். **A.R. செல்லையா**

பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

# தொடர்புத்துறை இயக்குநரிடமிருந்து . . .

திருச்சபைகளில் ஞாயிறு தூய ஆராதனைகளிலும் பிற சிறப்பு நிகழ்வுகளிலும் அருளுரையாற்றுவது சிறப்பிடம் பெறுகிறது. அருளுரை மேடையில் சொல்லப்படும் இறை வார்த்தைகள் கேட்கிற மக்களுக்கு ஆற்றலும், அறிவுரையும் ஆறுதலும் தருவதாக அமைகிறது. அருளுரை மேடை யூத பாரம்பரியத்தில் இறை வார்த்தைகள் படிக்கப்படும் சிறு மேடை இடமாக இருந்துள்ளது (நெகே. 8: 4) காலப்போக்கில் பல மாற்றங்கள் பெற்று, சுயநலம் சார்ந்து இறையியல் கூறும் இடமாகவும், அதிகாரத்தை நிலைப்படுத்தும் இடமாகவும் மாற்றப்பட்டது. சீர்த்திருத்த இயக்கங்களின் காலங்களுக்குப்பின் திருச்சபைகளில் அருளுரை மேடை இறைவார்த்தைக்கு அதிக முதன்மை கொடுத்தது. இன்று இம்மேடையை மிகத் தூய்மையாகவும் கண்ணியமாகவும் பயன்படுத்துவது அவசியம். ஏனென்றால் அங்கிருந்து சொல்லப்படும் ஒவ்வொரு வார்த்தையும் இறைவார்த்தைகள் மற்றும் கிறிஸ்து தரும் புது வாழ்வுக்கான ஆதாரங்கள். பவுல் தெசலோனிக்காவில் ஆற்றிய பணி குறித்து 1 தெச. 2: 13-14-ல் குறிப்பிடும்போது, கடவுளின் வார்த்தையை நீங்கள் எங்களிடமிருந்து கேட்டபோது அதை மனித வார்த்தையாக அல்ல, கடவுளின் வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டீர்கள் . . . உண்மையாகவே அது கடவுளுடைய வார்த்தைதான்; அதுவே நம்பிக்கை கொண்ட உங்களில் செயலாற்றுகிறது என்கிறார். இவ்வாண்டு நாம் கேட்கும் அருளுரைகளும் இறைவார்த்தைகளும் அதில் நம்பிக்கை கொண்ட நம்மில் செயலாற்றட்டும்.

இந்நூலில் தரப்பட்டிருக்கும் ஒவ்வொரு அருளுரையும் திருமறை சார்ந்து பலதலைப்புகள் அடிப்படையில் தகுந்த ஆயத்தத்தோடும், கருத்தோடும், இறை வேண்டலோடும் ஆயத்தப்படுத்தப்பட்டவை. அருளுரைகளை எழுதிய ஆயர்கள், திருப்பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். நன்றி கூறுகிறேன். இவ்வருட “அருளுரைக் கையேடு 2024” தொகுப்புப்பணியில் மிக சிறப்பாக உழைத்த ஆயர் நண்பர்கள் அருள்திரு. T. டேவிட் கிளேட்சன் மற்றும் அருள்திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு ஆகியோருக்குச் சிறப்பான நன்றிகளை தெரிவிக்கிறேன். இந்நூல் வெளிவர உழைத்த அனைவருக்கும், பேராய அச்சக மேலாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் மற்றும் அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியை கூறுகிறேன்.

இறையருள் நம் அனைவரோடும் இருப்பதாக!

**அருள்திரு. முனைவர். O. டென்சிங்**

இயக்குநர்

தொடர்புத்துறை

கன்னியாகுமரிப் பேராயம், C.S.I.

# தொகுப்பாசிரியர்களிடமிருந்து . . .

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துகள்!

ஆண்டவரிடமிருந்தும் அவரது அருள் வார்த்தைகளில் இருந்தும் பெறப்பெற்ற ஆன்மிக மன்னாவை பிறருக்கு பகிர்ந்து வழங்குவதே அருளுரை எனப்படுகின்றது. இறைவேண்டலுடன் ஆலயங்களில் ஆற்றப்படும் அருளுரை இறைமக்களின் உள்ளங்களில் ஊடுருவிச் சென்று இறையுறவில் வளரச்செய்கின்றது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆலயத்தின் அருளுரை மேடையில், "ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்ற கிரேக்கரின் ஆர்வம் நிறைந்த வேண்டுகோள் எழுதப்பெற்றுள்ளது. ஆண்டவர் இயேசுவையும் அவரது அன்பையும் கண்டுணர விரும்புவோரின் ஏக்கத்தை நிறைவு செய்வதாக அருளுரை அமையவேண்டும் என்பது இதன் வழியாக தெளிவுபெறுகிறது. இறைமக்களின் ஆன்மிகத் தேடலுக்கான விடையாகவும் அருளுரை அமைதல் வேண்டும்.

திருமறை எல்லா காலத்திற்கும் கடவுளின் செய்தியை உலகுக்கு அறிவிக்கும் ஒரு அற்புத புத்தகம். அதை வாழும் சூழலுக்கு ஏற்ப அருளுரையாளர்கள் இறைமக்களுக்கு அறிவிக்கின்றனர். இது ஓர் தெய்வீகப்பணி. அருளுரை சொல்லாற்றலால் சிறப்புறுவது அல்ல. மாறாக, தூய ஆவியாரின் துணையுடன் இறைவார்த்தையை தியானம் செய்து, இறைவேண்டலுடன் பகிர்ந்தால் இறையாளுகையில் மக்களை வழிநடத்த இயலும்.

2024-ம் ஆண்டின் அருளுரைக் கையேட்டை தொகுத்து வழங்கும் வாய்ப்பை எமக்குத் தந்த கண்ணியத்துக்குரிய நமது அன்பு பேராயர் பேரருள்திரு. அறிவர் A.R. செல்லையா அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். நல்ல வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் தந்த பேராயத் தொடர்புத்துறை முன்னாள் இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த், தற்போதைய இயக்குநர் அருள்திரு. முனைவர். O. டென்சிங் மற்றும் இணை இயக்குநர் திரு. M.R. மில்டன் மார்க் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இப்பொறுப்பான பணியில் பல நிலைகளில் உடனிருந்து உதவிச்செய்த அருள்திரு. அறிவர் K. பிறின்ஸ் குமார், அருள்திரு. B. சாம் ஜெபசிங், திரு. S. ஜாண் வினோராஜ், திரு. X. ஜெய எபனேசர், திரு. G. பெர்லிங்டன், திரு. S.S. ஆல்பின் டேவிட் ஆகியோருக்கும், இறை வார்த்தையை அடிப்படையாக கொண்டு, இறையியல் தெளிவுடன் இறை

வேண்டலோடு அருளுரைகளை எழுதிய பேராயர், பேராயரம்மா, சேகர ஆயர்கள், ஆயர்கள், இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள், இறைப்பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். பிழை திருத்தப்பணிகளில் உதவிய திரு. N. தாசையன் (பணிநிறைவு தலைமை ஆசிரியர்), திருமதி. முனைவர் D. பியூலா மற்றும் திருமதி. முனைவர் D. தௌளா இசபெல் ஆகியோருக்கும் உளமார்ந்த நன்றிகள். அருளுரைக் கையேடு 2024, குறித்த நேரத்தில் வெளியிட உதவியதோடு நல்வழி காட்டுதல்களையும் தந்த பேராய அச்சக கண்காணிப்பாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் அவர்களுக்கும், நாகர்கோவில் C.S.I. டயோசிசன் அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

சீர்த்திருத்த செம்மல் மார்ட்டின் லூத்தர் முன்னிறுத்துகின்ற "திருமறை மட்டுமே, கிருபை மட்டுமே, பற்றுறுதி மட்டுமே" என்ற வாழ்வியல் சார்ந்த போதனைகளை அருளுரைகள் வழியாய் சாதனையாக்கவும், ஆண்டவரின் அருள்பெற்று அவரது ஆற்றல்மிகு வார்த்தைகளை நற்செய்தியாய் அறிவிக்கவும் இவ் அருளுரைக் கையேடு துணைச் செய்யட்டும். தந்தை, மைந்தர், தூய ஆவியாராம் மூவொரு கடவுளுக்கே அனைத்து மாட்சியும் உரித்தாகுக. நன்றி.

அருளுரை தொகுப்புப் பணியில்,

அருள்திரு. T. **டேவிட் கிளேட்சன்**

அருள்திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

# பொருளடக்கம்


**அருளுரைகள்** பக்கம் எண்

01.01.2024 கடவுளின் தொடரும் பேரன்புச் செயல் 15

**கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் சிந்தனைகள்**

சிந்தனைப் பொருள் அறிமுகம் 20

நாள் : 1 ஆண்டவரே, உம்மிடம் திரும்பும் வாழ்வைக் கொண்டிருக்க எமக்கு உதவியருளும் 22

நாள் : 2 ஆண்டவரே, என்னிடத்திலுள்ள அனைத்தையும் கொண்டு உம்மையும் என் அடுத்திருப்பவரையும் என்னையும் அன்புசெய்ய எனக்கு உதவியருளும் 26

நாள் : 3 ஆண்டவரே, நாங்கள் காணாதிருப்போருக்கு எங்கள் உள்ளங்களைத் திறந்தருளும் 28

நாள் : 4 ஆண்டவரே, தேவையிலிருப்போரிடமிருந்து நாங்கள் ஒருபோதும் விலகிச் செல்லாதிருப்போமாக 31

நாள் : 5 ஆண்டவரே, காயங்களைக் காணவும் நல்லெதிர் நோக்கைக் கண்டெடுக்கவும் எமக்கு உதவியருளும் 34

நாள் : 6 ஆண்டவரே, தேவையிலிருப்போரை வரவேற்கும் இல்லங்களாக (சத்திரங்களாக) எம் திருச்சபைகளை மாற்றுவீராக 37

நாள் : 7 ஆண்டவரே, எங்கள் அயலாருக்கு எவ்வாறு மறுமொழி வழங்குவது என்பதை எமக்குக் காட்டுவீராக 40

நாள் : 8 ஆண்டவரே, எமது நட்புறவு உமது ஆளுகையின் அடையாளமாய்த் திகழ உதவியருளும் 43

06.01.2024 அனைத்து நாட்டினரையும் தம்பால் ஈர்க்கும் கிறிஸ்து 45

07.01.2024 அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள் 50

14.01.2024 ஒரே ஆண்டவர் ஒரே திருமுழுக்கு 55
21.01.2024 நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு 59
26.01.2024 பொறுப்புள்ள குடியுரிமை 63
28.01.2024 படைப்பின் நன்னலம் 68
01.02.2024 தாங்கும் தயாபரர் 73
04.02.2024 படைப்பின் வீழ்ச்சி நிலை 75
04.02.2024 அமைதியின் கருவியான இளையோர் 79
11.02.2024 தவக்காலம்: ஓர் ஒப்புரவின் காலம் 85
11.02.2024 நலமருள்தலும் முழுமையும் 89
தவக்காலம் ஓர் அறிமுகம் 92
14.02.2024 சிலுவை: தன்னல மறுப்புக்கு ஓர் அழைப்பு 95
16.02.2024 வாழ்வு தரும் உணவு நானே 100
18.02.2024 தொடக்கூடாதவரைத் தொடுதல் 103
தவக்கால புதன் தியானங்கள் - அறிமுகம் 109
21.02.2024 புதுவாழ்வருளும் சிலுவை 111
23.02.2024 உலகின் ஒளி நானே 115
25.02.2024 வாழ்வைக் காக்கும் நம்பிக்கை 119
28.02.2024 புது உறவுக்கு அழைக்கும் சிலுவை 123
01.03.2024 வாழ்வு வழங்கும் ஆண்டவர் 126
01.03.2024 ஆடுகளுக்கு வாசலும், நல்ல ஆயனும் நானே 129
03.03.2024 இறைவேண்டலில் நிலைத்திருத்தல் 134
06.03.2024 ஒன்றிணைக்கும் சிலுவை 137
08.03.2024 வழியும் உண்மையும் வாழ்வும் நானே 141
10.03.2024 விடுவிக்கும் உண்மையான வழிபாடு 144
10.03.2024 மீட்புப் பணியில் பெண்கள் 147
13.03.2024 உயிர்ப்பிக்கும் சிலுவை 150
15.03.2024 உண்மையான திராட்சைச் செடி நானே 153

17.03.2024 சிலுவை: மெசியா யுகத்தின் ஒரு புதிய திருக்காட்சி 155
20.03.2024 நிறைவாழ்வின் அடையாளம் சிலுவை 158
22.03.2024 உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே 162
24.03.2024 ஓசன்னா: கோவிலில் புதிய அரசர் 166

**தூய வாரம்**

25.03.2024 கனியை எதிர்பார்த்த இயேசு கிறிஸ்து 172
26.03.2024 கேள்விகளுக்குப் பதிலளிக்கும் இயேசு கிறிஸ்து 176
27.03.2024 நற்செயலை அங்கீகரிக்கும் கிறிஸ்து 181
28.03.2024 நன்றித் திருவிருந்து: இயேசுவை நினைவுகூர்தல் 184
29.03.2024 நியாய விசாரணைக்குட்படுத்தப்பட்ட இயேசு 187
29.03.2024 சிலுவை: இறப்பின் இறப்பு 190

**சிலுவை திருமொழிகள்**

மன்னிப்பு தரும் இயேசு 194
மீட்பு வழங்கும் இயேசு 197
பராமரிப்பு தரும் இயேசு 200
அங்கலாய்க்கும் இயேசு 203
தவிக்கும் இயேசு 205
நிறைவைக் காணும் இயேசு 209
ஒப்படைக்கும் இயேசு 211
சிலுவை மரணத்திற்குப் பின் நடந்தவை 215

30.03.2024 புது வாழ்வுக்கான எதிர்நோக்கு 219
31.03.2024 உயிர்ப்பு: மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல் 222
01.04.2024 வழி நடத்தும் வல்ல கடவுள் 227
07.04.2024 உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு 230
14.04.2024 உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல் 236
21.04.2024 உயிர்ப்பின் அனுபவத்தில் சமூக உருவாக்கம் 239
28.04.2024 கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல்: உயிர்ப்பு 244

| | | |
|---|---|---|
| 01.05.2024 | உழைப்பாளரை உயர்த்தும் ஆண்டவர் | 247 |
| 05.05.2024 | அருட்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பு | 250 |
| 12.05.2024 | தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல் | 254 |
| 19.05.2024 | வாரும் தூய ஆவியாரே , எம்மைப் புத்தாக்கம் செய்தருளும் | 260 |
| 26.05.2024 | நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம் | 265 |
| 01.06.2024 | அறிவு அருளும் ஆண்டவர் | 270 |
| 02.06.2024 | விண்ணிலிருந்து வரும் ஞானம் | 273 |
| 09.06.2024 | இறைமாட்சியைப் பறைசாற்றும் படைப்பு | 277 |
| 16.06.2024 | உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுங்கள் | 282 |
| 23.06.2024 | சீடத்துவத்தின் மதிப்பு | 286 |
| 30.06.2024 | இறைமக்கள்: உப்பும் ஒளியும் | 289 |
| 01.07.2024 | நலம் நல்கும் ஆண்டவர் | 293 |
| 07.07.2024 | பொறுப்பாண்மை: வெளிப்படைத்தன்மையும் கணக்கொப்புவித்தலும் | 295 |
| 14.07.2024 | இறையியல் கல்வி: நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும் | 300 |
| 21.07.2024 | அருட்பொழிவுத் திருப்பணி: கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பெற்றது | 304 |
| 28.07.2024 | திருமணத்தை மதியுங்கள் | 308 |
| 01.08.2024 | விடுவிக்கும் விடுதலையாளர் | 311 |
| 04.08.2024 | அருட்பணி: கடவுளின் வேதனையைப் பகிர்தல் | 314 |
| 11.08.2024 | திருமுழுக்கு: கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும் | 317 |
| 15.08.2024 | சமூக இசைவு | 322 |
| 18.08.2024 | தூய ஒப்படைப்புப் பலி என்னும் திருவருட்சாதனம் | 325 |
| 25.08.2024 | பன்மைத்துவம்: பொதுவான மானிடமும் நம்பிக்கைப் பகிர்வும் | 329 |

| | | |
|---|---|---|
| 01.09.2024 | அமைதி அருளும் ஆண்டவர் | 332 |
| 01.09.2024 | இயேசுவே குரு | 336 |
| 08.09.2024 | கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பெண் பங்காளர்கள் | 339 |
| 15.09.2024 | என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன் | 345 |
| 22.09.2024 | வறுமைக்குக் கிறிஸ்தவ மறுமொழி | 349 |
| 27.09.2024 | வழிபாட்டில் ஒன்றிப்பு | 352 |
| 29.09.2024 | முதியோரின் ஞானம் | 357 |
| 01.10.2024 | பாதுகாக்கும் பரமன் | 362 |
| 06.10.2024 | இறைமக்களின் திருப்பணி | 366 |
| 13.10.2024 | மாற்றுத் திறனுடையோர்: மாண்பும் சார்பும் | 370 |
| 20.10.2024 | பொருள்ள வாழ்வுத் தேடலில் இளையோர் | 373 |
| 27.10.2024 | சீர்திருத்தப்பெற்ற சீர்திருந்தும் திருச்சபை | 376 |
| 01.11.2024 | இரங்கும் இறைவர் | 380 |
| 03.11.2024 | திருச்சபையில் சிறார் | 383 |
| 10.11.2024 | விளக்குத் தண்டுகளின் மீதுள்ள விளக்கு | 389 |
| 17.11.2024 | பெண் குழந்தையைப் பாதுகாத்தல் | 393 |
| 24.11.2024 | ஆண்டவரின் வருகைக்காக இறைவேண்டலோடு காத்திருத்தல் | 397 |
| 01.12.2024 | உடனிருக்கும் உன்னதர் | 408 |
| | திருவருகை: ஒரு தெளிவுரை | 403 |
| 01.12.2024 | நற்செய்தியைக் கொண்டாடுதல் (எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு) | 410 |
| 08.12.2024 | இறைவாக்கு: தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே | 413 |
| 15.12.2024 | பாவக்கட்டிலிருந்து விடுதலை | 416 |
| 22.12.2024 | மாரநாதா : ஆண்டவரே வாரும் | 422 |
| 24.12.2024 | உலகில் அமைதி | 425 |
| 25.12.2024 | கிறிஸ்துப் பிறப்பு : ஒரு புதிய விடியல் | 429 |

29.12.2024 குடும்பம் என்னும் நலமருளும் இடம் 433
31.12.2024 ஆண்டவரிடம் வாருங்கள் பேருவகை கொள்ளுங்கள் 438

**சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்**

புதிய கல்வி ஆண்டு தொடக்க நாள்
கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்ளுங்கள் 443
தேர்வு நாள்
வெற்றி அருளும் கடவுள் 448
சங்க பண்டிகை
திருப்பணிக் கொடைகளும் பகிர்தலும் 451
சேர்ப்பின் பண்டிகை
பண்டிகை : விடுதலையின் கொண்டாட்டம் 455
பிறந்த நாள்
நீரே என்னை கர்ப்பத்திலிருந்து எடுத்தவர் 460
திருமணத் தொழுகை
இல்லறம் இறைவனின் இணைப்பு 464
புதுமனைப் புகுவிழா
இல்லத்தின் நல்வாழ்வு 467
திருச்சபைநாள் விழா
ஒப்புரவு மற்றும் ஒன்றிப்பை நோக்கிய திருச்சபை 469
வேதமாணிக்கம் ரிங்கல்தௌபே நாள்
உருவாக்கப்படும் மனித பாறைகள் 474
கன்னியாகுமரிப் பேராய நாள்
ஆண்டவருக்கென்று தூயகோவிலாய் வளரும் திருச்சபை477
அனைத்து ஆன்மாக்கள் நாள்
மேகம் போன்ற சாட்சிகள் 480
உழைப்பாளர் நாள்
கடவுளின் பணிவிடையில் பங்கேற்றல் 483
H.M.S. ஞாயிறு
அருட்பணியில் பங்கேற்பு 487

DMPB ஞாயிறு

விண்ணரசின் நற்செய்தியைப் பறைசாற்றுவோம் 492

NMS ஞாயிறு

அனைத்து மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் 495

**விழாக்கால அருளுரைகள்**

திருமறைப்பள்ளி ஆண்டு விழா

சிறுவர் : விண்ணரசின் அடையாளங்கள் 500

கிறிஸ்தவப் பக்திமுயற்சி சங்க ஆண்டு விழா

ஆற்றல்மிகு இளையோர் 503

பெண்கள் சங்க ஆண்டுவிழா

பெண்கள்: இறைத்திட்டத்தின் கருவிகள் 508

ஆண்கள் சங்க ஆண்டு விழா

ஊக்குவிக்கும் இறைமக்கள் 514

பாடகர்க்குழு ஆண்டுவிழா

என் உள்ளம் ஆண்டவரைப் போற்றுகிறது 520

இறைவேண்டல் குழு ஆண்டு விழா

வேண்டுதல் கேட்டருளும் 524

நூலக ஆண்டு விழா

திருச்சட்டத்தை உரக்க வாசித்த எஸ்ரா 526

Liturgical Colours 2024 531

# கடவுளின் தொடரும் பேரன்பின் செயல்

## God's Continuing Act of Grace

செப். 3: 14 - 20 உரோ. 5: 1 - 11

தி.பா. 136 லூக். 13: 1 - 9

" . . . ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார் இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார். நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்" (செப். 3: 15).

புதியதொரு ஆண்டினை நம் வாழ்வினில் தந்து தம் பேரன்பினால் நம்மை நிறைத்தருளும் ஆண்டவருக்கு நன்றி கூறுவோம். இப்புதிய ஆண்டில் புதிய எதிர்பார்ப்புகள், புதிய ஆசிகள், புதிய அனுபவங்களைப் பெறவேண்டுமென்ற இறைவேண்டலோடு காத்திருக்கின்றோம். கடவுளோடு உடன்படிக்கை செய்து உடன்படிக்கையில் உறுதியாய் நிற்க வேண்டுமென்ற விருப்பம் நம்மில் மேலோங்கி நிற்கிறது. புதிய ஆண்டு எனக்கு என்னென்ன நன்மைகளைக் கொண்டுவரும் என்னும் எதிர்நோக்கோடு காத்திருக்கின்றோம். இச்சூழலில் கடவுள் நம்மோடு ஓர் புதிய உடன்படிக்கையினை ஏற்படுத்துகிறார். அவ்வுடன்படிக்கை என்றென்றும் மாறாத, அழியாத அவரது அருட்கொடையான அவரது பேரன்பாகும் (கிருபை). தகுதியற்ற ஒருவருக்குக் கடவுள் அருளும் ஆசியான அவரது பேரன்பினைத் திருப்பாடல் 136-யில் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. கடவுள் தமது பேரன்பினால் இஸ்ரயேலரை அடிமைத்தன வாழ்விலிருந்து மீட்டு, தமது உடன்படிக்கையின் மக்களாக அவர்களை நிலைவரப்படுத்தி ஆசீர்வதித்தார். இப்புதிய ஆண்டிலும் நம்மையும் அவரது பேரன்பின் நிறைவினால் நிறைத்து வழிநடத்துவார்.

புத்தாண்டில் ஆண்டவர் நமக்கு அருளும் இறைவாக்கு, "ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்; இஸ்ரவேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்; நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்" (செப். 3: 15) என்பதாகும். பேரன்பு நிறைந்த கடவுள் தீமைகள் நிறைந்த உலக வாழ்வில் தீமைகள் நம்மை மேற்கொள்ளாது காத்திட நம் நடுவில் இருக்கின்றார். கடவுள் நம் வாழ்வின் மையமாக அமைகின்றபோது, நமது வாழ்வு நன்மைகளினால் நிறைக்கப்படும், நாம் அவரது உறவில் மகிழ்ந்து வாழமுடியும்.இறைவாக்கினர் செப்பனியா இதனைத் தெளிவுபடுத்தும்போது, கடவுள் தமது பேரன்பினால்

இஸ்ரயேலரது வாழ்வினில் அழிவினைத் தள்ளிவிடுகின்றார். பகைவர்கள் மேற்கொள்ளாது காக்கின்றார், தீங்குக்கு விலக்கிப் பாதுகாக்கின்றார் என்கிறார். புத்தாண்டில் நம் அனைவருக்கும் தம் பேரன்பினால் இந்த நன்மையினைத் தருவதற்கு ஆண்டவர் ஆற்றல் நிறைந்தவராயிருக்கிறார்.

**1. அழிவினைத் தள்ளிவிடும் பேரன்பு** (செப். 3: 15)

"ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்."

யூதா, இஸ்ரவேல் மக்கள் வேற்று தெய்வங்களை வழிபட்டு, கடவுளின் உடன்படிக்கையினை உடைத்து, இறைஉறவை விட்டு தூரம் போனதின் விளைவினை செப்பனியா குறிப்பிடுகையில் எருசலேமுக்கு அழிவு உறுதி. ஆனால் ஆண்டவரது இரக்கம் தம் மக்களுக்கு உண்டு, ஆண்டவர் தமது பேரன்பினால் அவர்களுக்குக் கருணைக்காட்டி மனமாற்றம் அடைவதற்கு அழிவினைத் தாமதப்படுத்துகிறார். இதனை "ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்" என்பதிலிருந்து அறிய முடிகின்றது. மக்கள் தீமைகளிலிருந்து மனம் திரும்பாவிட்டால் அழிவு என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அழிவிற்குப் பின்னர் எருசலேம் திரும்பக் கட்டப்படும் என்பது அவரது கருணையின் வெளிப்பாடு. மானிட வாழ்வில் கடவுளின் படைப்புகளுக்கு எதிரான தீமைகளினால் அழிவு என்பது உறுதிப்படுகிறது. ஆனால் கடவுளது பேரன்பினால் படைப்புகள் காக்கப்படுகிறது.

லூக்கா நற்செய்தியாளர், பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் என்ற செய்தி இயேசுவுக்கு சொல்லப்பட்டபோது, மனம் மாறாவிட்டால் கலிலேயரைப் போல அனைவரும் அழிவார்கள் (லூக். 13: 3) எனக் குறிப்பிடுவது தண்டனைப் பெற்ற அனைவரும் பாவிகள் என்பதும், தண்டனை பெறாதவர்கள் தூயவர்கள் என்பதுமல்ல, மாறாக அனைவரும் குற்றவாளிகள். ஆனால் மனம் மாறினால் கடவுளின் பேரன்பின் பலனைச் சொந்தமாக்கமுடியும் என்பது தெளிவுப்படுத்தப்படுகிறது. லூக். 13: 6-9-யில் குறிப்பிடப்பட்டுள்ள அத்திமர உவமையில் திராட்சைத் தோட்டத்திலிருந்த அத்திமரத்தில் மூன்று ஆண்டுகளாக உரிமையாளர் கனிதேடி வந்தார். ஆனால் அவரது விருப்பத்திற்கேற்ப கனி இல்லாததினால், தோட்டத் தொழிலாளரிடம் இந்த மரத்தை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக் கொண்டிருக்க வேண்டும்?" எனத் தனது தண்டனையை அறிவித்தார். ஆனால் தோட்டத் தொழிலாளர் "இந்த ஆண்டும் இதை விட்டு வையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி; இல்லையானால் இதை வெட்டிவிடலாம் என்றார்." கனி மரம் கனி கொடுக்கும் என்ற நிலையில் தோட்டத்தின் உரிமையாளர் கருணை கொண்டு அழிவினைத்

தாமதப்படுத்தினார். புதிய ஆண்டு நமக்குக் கடவுளின் பேரன்பின் வெளிப்பாடாக, மனந்திரும்பி கனிகொடுத்து வாழத் தரப்பட்டுள்ளது. நம்மிடம் கனிதேடிவரும் ஆண்டவர் கனியினைக் கண்டிடும் நிலையில் வாழ்வினைச் சீர்படுத்திட வேண்டும். ஆண்டவர் கனி தேடி வருகின்றபோது கனியற்ற பாழ் மரங்களாய் நிற்பது வேதனையானது. கடவுளின் பேரன்பின் செயல்பாட்டின் நிறைவினைப் புத்தாண்டில் சொந்தமாக்கி நல்ல சுவையுள்ள கனிகளைக் கொடுத்து வாழ்வோம்.

**2. அழிக்கும் பகைவரைத் தடுக்கும் பேரன்பு** (செப். 3: 15)

"உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்."

எருசலேமின் அழிவினையும் மீட்பினையும் தெளிவுபடுத்தும் இறைவாக்கினர் செப்பனியா, நடுவிலிருக்கும் கடவுள் தமது பேரன்பினால் எருசலேமின் பகைவர்களைத் தடுத்து அப்புறப்படுத்தினார் என்கிறார். பகைவர்கள் படையெடுக்கும்போது அழிவுகள் ஏற்படுவது இயல்பானது. இன்றைய நிருப பகுதியில் கிறிஸ்துவின் இரத்தித்தினால் கடவுளுக்கு ஏற்புடையவராக வாழும்போது, அவர் வழியாக தண்டனையிலிருந்து தப்பி மீட்பு பெறுகிறோம் (ரோம. 5: 9) எனப் புரிந்துகொள்ள முடிகிறது. தண்டனையிலிருந்து தப்பி மீட்பு பெறுகிறோம் என்பது கடவுள் தமது பேரன்பினால் நம்மை அழிக்க நினைக்கும் பகைவரிடமிருந்து நம்மைத் தடுத்து மீட்டுத் தப்புவிக்கிறார் என்பதாகும். ஏனென்றால் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்து நம்மை மீட்டுள்ளார். இதனைக் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பினாலேயே நிறைவேற்றியுள்ளார் (ரோம. 5: 8). நமது தீமைகளினால் நாம் கடவுளுக்கு பகைவர்களாயிருந்தும், அவரது மகனாகிய இயேசு கிறிஸ்து நமக்காக உயிர் கொடுத்ததினால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம் (ரோம. 5: 10). ஒப்புரவாக்குதலின்படி கடவுள் தமது பேரன்பினால் நமது தீமைகளை நம்மைவிட்டு அகற்றி நம்மை அவரோடு ஒன்றாக்கியுள்ளார். கடவுளின் ஒப்புரவாக்கும் பேரன்பினால் நமது பகைவரின் கையினின்றும் நம்மைத் தப்புவிக்கிறார். இதனைத் தாவீது அரசர் "என்னுடைய எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்" எனக் குறிப்பிடுகின்றார் (திபா. 23: 5). நம்மோடு நம் நடுவில் வாழும் கடவுள் நம்மை அழிக்கும் பகைவரான இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் அஞ்சாது காத்து, தமது பேரன்பினால் தீமை மேற்கொள்ளாது காக்கிறார் (திபா. 91: 5, 6).

கடவுள் நமது பகைவர்களை தடுத்து நமக்கு மீட்பு அளிப்பதினால் நாம் மட்டுமல்ல கடவுளும் மகிழ்ந்து களிகூருகின்றார், அவரது அன்பினால் நமக்கு

புத்துயிர் அளிக்கின்றார், நமது மீட்பினைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார் (செப். 3: 17). ஆகவே நமது பகைவரை அப்புறப்படுத்தும் கடவுளின் கருணையினைச் சொந்தமாக்கி, நமது வாழ்வின் தீமைகளைக் களைந்து, புத்தாண்டில் புத்தாக்கம் பெற்று மகிழ்வுடன் வாழ்வது நம்மில் கடவுளின் திட்டமாயுள்ளது. இதனைத தூய பவுலார் "கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கியுள்ள நம் ஆண்டவர், இயேசு கிறிஸ்துவின் வழியாய் நாம் கடவுளோடு உறவுகொண்டு, பெருமகிழ்ச்சி அடைகிறோம். இம்மகிழ்ச்சியை நமக்குத் தருபவர் கடவுளே" எனக் குறிப்பிடுகிறார் (ரோம. 5: 11). துன்பங்கள், பெலவீனங்கள் இழப்புகள் வெறுமை ஆசியின்மையினால் தடுமாறியவர்களுக்குக் கடவுள் தமது பேரன்பினை வெளிப்படுத்தி நிறைவினைக் கொடுக்கிறார். ஆசாரிய பரம்பரையினைச் சார்ந்து ஆசாரியத் திருப்பணியினைக் கடவுளுக்கு பயந்து நிறைவேற்றியவர் செக்கரியா, கடவுளின் பேரன்பின் செயலினைச் சொந்தமாக்கி முதிர்வயதில் கடவுளின் திட்டமான மகவினைப் பெற்றபின் தனது பாடலில் நம் பகைவரிடமிருந்து நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார் (லூக். 1: 71) எனக் குறிப்பிடுகிறார். இப்புத்தாண்டில் கடவுள் நம்மை எதிர்க்கும் பகைவர் அனைவரது கையினின்று தடுத்துத் தமது பேரன்பினால் நம்மை மீட்டு வழிநடத்துவார் என்னும் நிலையில் முன்னேறிச் செல்வோம்.

### 3. அக்களிக்கச் செய்யும் பேரன்பு (செப். 3: 15)

"நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்."

கடவுள் தமது பேரன்பினால் மக்களை அரவணைக்கும்போது தீங்கு அவர்களை மேற்கொள்ளவதில்லை. இஸ்ரயேலரது வாழ்வில் கடவுள் தமது இரக்கத்தினால் அவர்களது துன்பத்தை அகற்றி, இழிநிலையினை மாற்றியுள்ளார் (செப். 3: 18). அதோடு தீங்கு சூழ்கின்ற நேரங்களில் அதனால் ஏற்படும் அச்ச உணர்வினை அகற்றி, புத்துயிர் அளித்து, முன்னைய நன்னிலைக்கு உயர்த்தி உலகின் எல்லா மக்களிடையேயும் பெயரும் புகழும் பெறுமாறு செய்கிறார் (செப். 3: 20). கடவுளின் மீட்பின் செயல்பாட்டினால் ஏற்படுகின்ற அக்களிப்பு திருவிழா காலம்போல இருக்கின்றது (செப். 3: 18). கடவுளின் பேரன்பினால் தீங்கிற்கு அஞ்சாமல் வாழும் வாழ்வு, ஆர்ப்பரிப்பு, ஆரவாரம், அக்களிப்பு நிறைந்ததாக அமைகின்றது.

புதிய ஆண்டில் உன்னதரின் பாதுகாப்பில் வாழ்கின்றவர்களுக்கும், எல்லா வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவருக்கும் (திபா.91: 1), ஆண்டவரைப் புகலிடமாகவும், உன்னதரை உறைவிடமாகவும் கொண்டவர்களுக்கும் தீங்கு நேரிடாது. வாதை கூடாரத்தை நெருங்காது. செல்லுமிடமெல்லாம் காக்கும்படி

தூதர்கள் உடனிருப்பார்கள் (திபா. 91: 9-11). கடவுளின் தூதர்களின் பாதுகாப்பில் வாழ்கிறவர்கள் எப்போதும் கடவுளைப் போற்றிப் புகழ்வர். மட்டுமல்லாது தீங்கு மானிட வாழ்வினைச் சூழ்கையில், சோர்ந்து போகாதபடி, கடவுளைச் சார்ந்து, அவரது சித்தம் நிறைவேற நம்மை ஒப்படைக்கையில் நம்மை விடுவிக்க ஆற்றல் நிறைந்தவர் கடவுள். இதனைத் "தீங்கு நாளில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னைத் தப்புவிப்பேன்" என்ற கடவுளின் நம்பிக்கையின் வாக்குறுதி மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

பேரன்பு நிறைந்த கடவுள் நமது அனுதின வாழ்வில் இம்மானுவேலராய் நம் நடுவில் நம்மோடிருந்து வழிநடத்துகிறார். கடவுளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் புத்தாண்டின் பயணத்தில் அவரைப் பின்பற்றிச் செல்லும்போது, தீங்கு நம்மை மேற்கொள்வதில்லை, அச்சம் அனைத்தும் அகன்று, கைகள் சோர்வடையாது (செப். 3: 16) திடமாய் வாழ முடியும். இருளின் ஆற்றலைக் காட்டிலும் கடவுளின் ஆற்றல் அற்புதமானது. தீமையின் ஆற்றலைவிட நமது ஒப்படைப்புள்ள மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் திருப்பணி நிறைவானது. ஆகவே புத்தாண்டின் புனித பயணத்தில் கடவுளின் பேரன்பும், கருணையும் அவரது இரக்கமும் எப்போதும் என்னோடும் என்னுள்ளும் உள்ளது என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டின் புனித பயணத்தில் முன்னோக்கிச் செல்வோம்.

இறையாசி நம்முடன் தங்கியிருப்பதாக.

இறைப்பணியில்

*பேரருள்திரு. அறிவர் A.R.* **செல்லையா**

பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்

கருப்பொருள் : உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்புகூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக. (You shall love the Lord your God . . . and your neighbour as yourself) (லூக். 10: 27)

ஆண்டவர் இயேசு தம் மானுட வாழ்வின் நிறைவில் ஏறெடுத்த ஒன்றிப்பிற்கான இறைவேண்டலை அடிப்படையாகக் கொண்டு, ஒன்றிப்பிற்காக இறைவேண்டல் ஏறெடுப்பதே "கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டலின்" முதன்மையான நோக்கமாகும். ஒன்றித்து வாழ தடையாக அமையும் பிரிவினை எண்ணங்களை விடுத்து, அடுத்திருப்போரை அன்பு செய்து வாழும் நல்வாழ்வை இறைவரிடம் வேண்டிப் பெற்றுக்கொள்ள இந்த ஆண்டின் வார இறைவேண்டல் சிந்தனைகள் வழிகாட்டுதல்களாக அமைகின்றன. "எனக்கு அடுத்திருப்பவர் யார்?" என்ற கேள்விக்குப் பதிலுரையாக ஆண்டவர் கூறிய "நல்ல சமாரியன்" உவமையே (லூக்கா 10: 25-37) தியான பகுதியாகத் தரப்பெற்றுள்ளது.

ஆண்டவரையும் அடுத்திருப்போரையும் அன்பு செய்தலே "நல்ல சமாரியன்" உவமையின் மையக்கருத்து. கடவுளை முழு உள்ளத்துடன் அன்பு செய்ய அழைப்பு விடுக்கும் அவரது அன்பு கட்டளை ஆழ்ந்த அர்ப்பணம் நிறைந்தது. நம் சுயத்தை முழுமையாய்க் களைந்து இறைவரின் திருவுளத்தை உள்ளத்தில் உணர்ந்து, அதை நிறைவேற்ற நம் வாழ்வை முழுமையாக கையளிப்பதே முழுமையான அன்பு. அவரது திரு விருப்பத்தை நிறைவேற்றும் அடிப்படை செயலே அடுத்திருப்போரை நம்மைப் போல் பாவித்து அன்பு செய்தல் ஆகும். அதுவே அவரது அலாதியான ஆவல். ஆண்டவரின் இந்த ஆவலை நிறைவு செய்யும் போது தான் கடவுளை அன்பு செய்த மன நிறைவு கிடைக்கும். எனவே, அடுத்திருப்போரை அன்பு செய்யாமல் கடவுளை அன்பு செய்ய இயலாது.

கடவுளை விட்டு அகன்று வாழ்வோர் உடன் வாழும் மனிதரை விட்டும் அகன்றே வாழ்கின்றனர். அத்தகையோர் அடுத்திருப்போரிடம் முழுமையான இணக்கத்துடன் இணைந்து வாழ்வதில்லை. அவர்கள் இதயத்தில் இரக்கமும் இருப்பதில்லை. இவர்களில் சிலர் குறுகிய நட்பு வட்டத்தை உருவாக்கி ஆள் பார்த்து அன்பு செய்கின்றனர். உதவி எதிர்நோக்குவோரை உதாசீனம் செய்து

கண்டும் காணாதோராய் கடந்துவிடுகின்றனர். இத்தகைய அன்பு தாழ்ச்சி மறையவும் இதயங்களில் இறையன்பு தழைத்தோங்கவும் இறையருள் நாடி இறைவேண்டல் ஏறெடுத்தல் மிகவும் இன்றியமையாதது.

கடவுளிடம் திரும்பி, அவரை அண்டிக்கொள்வதால் இறையன்பு உள்ளத்தில் ஊற்றப்படுகின்றது. அந்த உயர்ந்த அன்பு எல்லையைத் தாண்டிச் சென்று எல்லோரையும் ஏற்றத்தாழ்வின்றி அன்பு செய்கின்றது. தாழ்நிலையோர் என எவரையும் தரம் தாழ்த்தாமல் அனைவரையும் மதிப்பு மிக்கோராய் எண்ணுகின்றது. அடுத்திருப்போரைப் பரிவுடன் பார்க்கின்ற பார்வையையும், அறிமுகம் இல்லாதோரின் அவசரத் தேவையை அறியும் அக்கறையையும், காயப்பட்டோரைக் காயங்கட்டும் கரிசனையையும், உடைபட்ட உள்ளங்களுக்குத் தேறுதல் வழங்கும் உந்துதலையும் வழங்குகின்றது. அடுத்திருப்போரின் பாடுகளைப் பார்த்து பரிதபிக்கும் பார்வையாளராய் அல்லாமல், துன்பச்சூழலில் துணைக்கரம் நீட்டும் பங்கேற்பாளராய்ச் செயல்பட இறையன்பு நம்மை நெருக்கி ஏவுகின்றது.

இந்த ஆண்டின் கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் சிந்தனைகள் நம்மை அடுத்திருப்போருடனும், அடுத்த சபைப் பிரிவினருடனும், அண்டை சமயத்தவருடனும் ஒன்றித்து வாழ அழைப்பு விடுக்கின்றன. இத்தகைய ஒன்றிப்பின் எண்ணம் நம் உள்ளத்தில் துளிர்விட்டால் இவ்வுலகிலேயே நிலைவாழ்வின் மகிழ்வை அனுபவமாக்கிக் கொள்ளலாம்.

அருள்திரு. **R. ஜெகதீஸ்லால் ரெகு**

நாள் **1**

# ஆண்டவரே, உம்மிடம் திரும்பும் வாழ்வைக் கொண்டிருக்க எமக்கு உதவியருளும்

# (Help Us, Lord, to have a life turned towards you)

திபா. 103: 13-18 உரோ. 14: 8-9 லூக். 10: 25-36

"திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து அவரைச் சோதிக்கும் நோக்குடன், "போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்" (லூக்கா 10: 25).

நல்ல பருவ மழையில் புல் பூண்டுகளும் அவற்றின் நடுவில் மரம் ஒன்றும் செழிப்பாக வளர்ந்து வந்தது. பருவ மழை நிற்கவே புல் பூண்டுகள் வாடத் தொடங்கின. மரத்தின் வேர் நீரை நோக்கி ஆழமாகவும், பக்கவாட்டிலும் ஊடுருவிச் சென்றதால் மரம் தொடர்ந்து வளர்ந்து நல்ல கனிகளைப் பிறருக்கு வழங்கியது. அதுபோன்றே, நம் வாழ்வின் ஆதாரமாகிய ஆண்டவரை நோக்கி திரும்பும் போது நாம் நல் வாழ்வைப் பெறுவதுடன் பிறருக்கும் நல்வாழ்வுக்கு வழிகாட்டி நிறைவில்; நிலைவாழ்வையும் பெறுகின்றோம்.

திருச்சட்ட அறிஞர் எழுப்பிய "போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?" என்ற கேள்வி சோதிக்கும் நோக்குடன் கேட்கப்பட்டதாயினும், அந்தக் கேள்வியில் நல்லதோர் ஆவலும், தேடலும் இணைந்துள்ளன. நிலைவாழ்வைப் பற்றி அறியும் ஆவலும், நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளும் தேடலும் ஆண்டவரிடம் திரும்ப நம்மையும் உந்தி தள்ளுகின்றன. இன்று நாமும் இக்கேள்வியுடன் ஆண்டவரின் அண்டையில் திரும்பும்போது கேள்விக்கான பதிலை மட்டுமல்ல, நாம் ஆவலுடன் தேடும் நிலைவாழ்வையும் வழங்குகின்றார்.

### 1. நிலைவாழ்வை அறிய ஆண்டவரிடம் திரும்புவோம்

திருச்சட்ட அறிஞர் ஆண்டவர் இயேசுவிடம் நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை வினவினார். இதற்குப் பதிலாக ஆண்டவர் திருச்சட்ட நூலில் எழுதியுள்ளவற்றைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். திருச்சட்டத்தில் பலநெறிமுறைகள் இருந்தாலும், ஆண்டவரையும் அடுத்திருப்பவரையும் அன்பு செய்யவேண்டும் என்ற முதன்மையான கட்டளைகளை அறிஞர் அறிவார்ந்த நிலையில் குறிப்பிடுகின்றார்.

அடுத்திருப்போர் என்ற வட்டத்தில் யூதரல்லாதோரை இவர்கள் பொதுவாக உட்படுத்துவதில்லை. அடுத்திருப்போரைப் பற்றி குறுகிய வட்டத்தை வரைந்திருந்த திருச்சட்ட அறிஞரின் எண்ண ஓட்டத்தை ஆண்டவர் கண்டுஅதை தேவையில் இருப்போரை நோக்கி திருப்ப உதவுகின்றார். ஆண்டவரிடம் திரும்பும் ஒவ்வொருவருடைய பார்வையும் அடுத்திருப்போரை அக்கறையுடன் பார்க்கின்ற பார்வையாக அமையவேண்டும் என்பதை உவமை வழியாக கற்றுக் கொடுக்கின்றார். இதன் வழியாக, நிலைவாழ்வு "இறையன்புடனும்" "பிறரன்புடனும்" தொடர்புடையது என்பதையும் ஆண்டவர் அழகாக தெளிவுப்படுத்துகிறார்.

கடவுள் தம் அடியார்க்கு வழங்கும் நிலைவாழ்வைப் பற்றிய சரியான புரிதல் நமக்கு நிச்சயம் தேவை. உண்மையான ஒரே கடவுளையும், கிறிஸ்துவாகிய தம்மையும் அறிவதே நிலைவாழ்வு என ஆண்டவர் இயேசு நிலைவாழ்வை அருமையாக வரையறை செய்கின்றார் (யோவான் 17:3). இங்கு "அறிதல்" என்பது அறிவாற்றல் சார்ந்தது மட்டுமல்ல ஆண்டவரிடம் திரும்புவதால் உருவாகும் "ஆழ்ந்த உறவு" சார்ந்த அனுபவம் ஆகும். எனவே, நிலைவாழ்வை இறையுறவில் நிலையாக நிலைத்திருக்கும் வாழ்வு எனக் குறிப்பிடலாம். இந்த உறவு தேவையிலிருக்கும் அடுத்திருப்போரை அன்பு செய்கின்ற கடவுளின் விருப்பத்தை அறியவும் வாழ்வில் அதை வடிவமாக்கவும் நம்மை உந்தித் தள்ளுகின்றது. இதனால், உலக வாழ்வின் நிறைவுக்குப் பின்னர் "மரித்தோர் உயிர்த்தெழுதலில்" தொடங்குவது மட்டுமே நிலைவாழ்வு என்ற புரிதல் மாறி இவ்வுலகில் தொடங்கி பின்னரும் தொடர்கின்ற வாழ்வு என்ற நல்ல தெளிவான புரிதலை ஆண்டவர் வழங்குகின்றார்.

## 2. நிலைவாழ்வைப் பெற ஆண்டவரிடம் திரும்புவோம்

நிலைவாழ்வைப் பற்றிய புரிதலுடன் ஆண்டவரிடம் திரும்பும்போது பிறர் வாழ்வைப் பற்றிய கரிசனையும் நமக்கிருப்பதில் நிறைவு காணும் நல்லெண்ணமும் உருவாகுகின்றன. போதும் என்ற மனநிறைவு பகிரும் நல்மனதை வழங்குகிறது. இந்த உயர்வானப் பகிரும் பண்பு இவ்வுலகிலேயே நிலைவாழ்வை அனுபவமாக்க அருள் செய்கிறது.

இன்றைய உலகம் போட்டி மனப்பான்மை உடையது. அடுத்தவரை விட அதிகம் பெறுவதையும், உடைமையாக வைத்திருப்பதையும் உயர்வாக காண்பிக்கும் உலகம் இது. வருமானத்தை இரட்டிப்பாக்க அதிகமான மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் ஒருவரின் வருமானம் இரட்டிப்பாகும் போது எதிர் முனையில் ஏதோ ஒரு மனிதர் ஒரு மடங்கு ஏழ்மையாக்கப்படுகின்றார் என்பது

உண்மை. மாற்கு 10:17 ஆம்; திருமொழியில் இயேசுவிடம் ஒருவர் வந்து முழந்தாள்படியிட்டு, "நல்ல போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். இங்கும் திருச்சட்ட அறிஞர் கேட்ட அதே கேள்வி எழுகின்றது. மாற்கு 10:22இன்படி இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம் வாடி வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது.

இஸ்ரவேலரின் வாழ்வு ஆண்டவர் வரையறை செய்த வாழ்வு. விடுதலை ஆண்டு என்பது அனைவரும் நல்வாழ்வு வாழ கடவுள் அறிமுகம் செய்த உயர்ந்த திட்டம். லேவியர் 25:10 ல் "ஐம்பதாம் ஆண்டைத் தூயதாக்கி, நாட்டில் வாழ்வோருக்கெல்லாம் தன்னுரிமை அறிவியுங்கள். அது உங்கள் யூபிலி ஆண்டு அந்த ஆண்டில் நீங்கள் உங்கள் நிலப்பகுதிக்கும் உங்கள் இனத்தாரிடமும் திரும்ப வேண்டும்" என்றதோர் அறிவுரை வழங்கப் பெற்றுள்ளது. மக்களிடையே ஏற்பட்ட சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை மீண்டும் சமப்படுத்துவதற்காவே விடுதலை ஆண்டு அறிமுகம் செய்யப்பெற்றது.. இதைத்தாண்டியப் பின் அனைவரும் சமமாக இருப்பர். அங்கு ஒருவர் ஏராளமான சொத்து வைத்திருப்பதற்குச் சாத்தியமில்லை. ஆண்டவர் இம் மனிதருக்குக் கொடுத்த வாக்கு "நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" (மாற்கு:10:21) என்பதாகும். நிலைவாழ்வைப் பெற விரும்பியவர் மறந்த செயலைத்தான் ஆண்டவர் நினைப்பூட்டினார் ஏழையரிடம் இருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பெற்ற செல்வம் அந்த ஏழையர் வாழும் படி மீண்டும் அவரிடம் சேர்க்கப்படவேண்டும் அப்படிச் சேர்த்தப்பின் சேர்த்தவர் நிலைவாழ்வின் வாழ்வுக்குள் பங்கடைவது கடினமல்ல.

மக்களிடம் அதிகமாக கையூட்டு பெற்ற அதிகாரி ஒருவர் தனக்கு மட்டுமல்ல தனது தலைமுறையினரும்கவலைப்படாமல் உண்ணும் விதத்தில் சேர்த்துவைத்தார்; தான் செய்த தவறுக்காக நீதிபதியின் முன் விசாரணை00க்காக கூண்டில் நின்றார். நீதிபதி அவர்கள் அவரிடம், "சாப்பிட்டீர்களா" என்றார். "இல்லை" என்றார். உடனே அவருக்கு 10 இட்லிகள் வாங்கி வரச் சொன்னார். 4 இட்லி சாப்பிட்டதும், "போதும்" என்றார். கூடுதலாக ஒன்றைச் சாப்பிடுங்கள் என்றார். "முடியாது, போதும்" என்றார். நீதிபதி அவரிடம் "உங்கள் ஊதியம் உங்கள் உணவிற்கும் வாழ்விற்கும் மிகவும் போதுமானது. பின் எதற்கு இந்தக் கையூட்டு என்றாராம் வெட்கத்துடன் நின்றார், தவறு செய்த அதிகாரி.

இப்போது நமக்கு எழுகின்ற, "நாம் செல்வம் சேர்ப்பதை ஆண்டவர் விரும்புவதில்லையா?", என்ற கேள்விக்கு மாற்கு 10:21 பதிலாய் அமைந்துள்ளது. அதிகமாகச் சேர்த்தவரிடம் ஏழைகளிடம் கொடுக்கச் சொன்னார். அதிகம் சேர்த்து வைப்பதை, தவறான முறையில் சேர்ப்பதை, அடுத்தவருடையதைச் சேர்ப்பதை நம் ஆண்டவர் வெறுக்கின்றார். ஆனால் உண்மையாய் உழைப்பதை நம் ஆண்டவர் விரும்புகின்றார்.

நீதிமொழிகள் 10: 22 "ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும்; அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம்." ஆம் துன்பம் கலவாத செல்வங்களுடன் நமது சேமிப்பு இருப்பது நல்லது. புதிய ஆண்டின் பயணத்தின் இரண்டாம் நாளாகிய இன்று புதிய தீர்மானங்களுடன் பயணிக்கும் நாம் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாய் நம் பயணத்தைத் தொடர்வோம் இறையாசி நம்முடன் உண்டு.

அருள்திரு. **Y. ஆமோஸ் ஆல்பர்ட்**

நாள் **2**

# ஆண்டவரே, என்னிடத்திலுள்ள அனைத்தையும் கொண்டு உம்மையும் என் அடுத்திருப்பவரையும் என்னையும் அன்புசெய்ய எனக்கு உதவியருளும்

# (Help me Lord to love you, my neighbour and myself with all that I am)

இச. 10: 12-13 திபா. 133 லூக். 10: 25-36

“அவர் மறுமொழியாக, “உன் முழு இதயத்தோடும் , முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூருவாயாக. உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்பதே.” (லூக்கா. 10 : 27)

அகிலத்தின் வாழ்வில் மனித உள்ளம் எல்லாம் சுயதேடலில் மூழ்கியிருக்கிறது. இதனால் உறவுகள் விரிசல் அடைந்து கொண்டிருக்கிறது. எங்கும் எதிலும் உறவு உடைவுகள், இத்தகைய நிலையில் மூவொரு கடவுளின் அன்பில் நிலைத்திருக்கும் உறவு தான் மனுக்குல ஒற்றுமையின் அடித்தளமாகிறது. மூவொரு இறைவன் நம்மை உறவில் திடப்படுத்துகிறார், அன்பில் பலப்படுத்துகிறார், அருளைப் பொழிகிறார், இவை அனைத்தும் ஒருமைப்பாட்டு உணர்வோடு இன்றைய இறை சிந்தனை வழியாக புனித புத்தாக்க நிறைவுக்கு அழைக்கிறது. அழைக்கும் அறைகூவலுக்குச் செவிகொடுத்து தியானிப்போம்.

**1. மூவொரு இறைவனை அன்பு செய்து புத்தாக்கம் பெறுதல்**

“உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூருவாயாக.” (லூக்கா. 10 : 27)

வயதான மன்னன் தனது பிறந்த நாளை அரண்மனையில் கொண்டாடினார். அரண்மனை பணிசெய்யும் அனைவரும் விழாவுக்கு அழைக்கப்பட்டார்கள். பணியாட்களிடத்தில் மன்னர் இந்த அரண்மனையில் என்ன பொருள் வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். ஒவ்வொருவரும் முத்துக்கள், பொன் ஆபரணங்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சென்றார்கள். அவரவர் விருப்பம் போல் எடுத்துக் கொண்டு விரைந்தனர். ஆனால் அரண்மனையில் சிறு வயதிலிருந்தே பணிசெய்த தோட்டக்காரன் அங்கு நின்று கொண்டிருந்தார். மன்னன் அவரை நோக்கி நீ போகவில்லையா? உனக்குத் தேவையானவற்றை எடுத்திருக்கலாமே! என்றார்.

அதற்குத் தோட்டக்காரன், நான் உங்களுடன் இறுதிவரை இருக்க விரும்புகிறேன். என் இறுதி மூச்சுவரை உங்கள் அன்பில் நிலைத்திருக்க விரும்புகிறேன் என்றார். இந்த நிகழ்வு அன்பின் உச்சநிலையை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. அன்பர்களே நாமும் அநேக நிலைகளில் நம்மில் அன்புகூறுகின்ற ஆண்டவரில் அன்புகூராமல் உலகச் செல்வங்களுக்கு வேண்டி அன்பு செய்கிறோம். உண்மையான அன்பை ஆண்டவரிட்த்தில் செலுத்தும் போது நிலைவாழ்வைச் சொந்தமாக்க முடியும். ஏழை கைம்பெண் இறைவனிடம் அன்பு செய்தபடியால் தன்னிடத்திலிருந்த இரண்டு காசையும் காணிக்கையாகப் பகிர்ந்தார். (லூக்கா. 21:2). ஆண்டவரிடம் அன்பு செய்த தானியேல் இறுதிவரை தன்னைத் தீட்டுபடுத்தாதபடி காத்துக் கொண்டார். தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. (தானி. 1 : 8, 6: 28).

## 2. அடுத்திருப்போரை அன்புசெய்து இறையரசுக்கு உரியோராதல்

"உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்பதே" (லூக்கா. 10 : 27).

இன்று நாம் வாழும் உலகம் சுயம் சார்ந்த நிலைகளாகவே இருக்கிறது. சுயதேடல், சுய ஆசை, சுயவாழ்வு என்ற சுயகாரணிகளால் நிறைந்திருக்கிறது. . சுய வாழ்வு என்று மனிதன் தனிமையை நோக்கியே பயணத்தில் இருக்கிறான். இணையதளம், ஊடகம், அலைபேசி இவற்றில் மூழ்கி ஒருவருக்கொருவர் உறவில்லாத வாழ்க்கை வாழுகிறார்கள். இயேசுகிறிஸ்து நல்ல பாடத்தைக் கற்றுத் தருகிறார். தன்னைப் போல் பிறரை நேசிக்கும் சமநிலைப் பிரமாணத்தை நமக்குத் தந்து இறையரசில் இணையச் செய்கிறார். இன்றைய பாடப்பகுதியில் நல்ல சமாரியனுடைய அன்பு செய்கின்ற வாழ்வு முதன்மையான அன்புக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. காயப்பட்ட மனிதனுக்கு இரக்கம் காட்டிய வாழ்வு, காயங்களைத் தொட்டு தன்னிடத்திலிருக்கும் எண்ணெயையும் திராட்சை ரசத்தையும் பகிர்ந்த வாழ்வு, அடுத்திருப்போர் குணமடைய வேண்டும் என்ற பொறுப்பான பணிவிடையின் வாழ்வு நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கச் செய்கிறது. பகைவன் நாகமான் குணமடைய அன்பு காட்டிய சமாரியச் சிறுபெண் (2 அச. 5: 1-12) மற்றும் பவுலாரோடு மெலித்தா தீவார் காட்டிய அன்பின் பிரவாகம் (திப. 28 : 2) பிறரன் பிற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

எனக்கு அடுத்திருப்பவர் யார் என்று கேட்டவருக்கு, குற்றுயிராய்க் கிடந்த மனிதன் மேல் அன்புகொண்டு அவனுக்கு இரக்கம் செய்தவனே என்று கூறிய திருச்சட்ட அறிஞருக்கு ஆண்டவர் பதிலுரைத்து நீயும் போய் அந்தப்படியே செய் என்று அறிவுறுத்துகிறார். புது வருட வாக்குறுதியைப் பெற்ற நாம் வாழ்வில் புத்தாக்கம் பெற்றவர்களாய் மூவொரு கடவுளில் அன்பு செய்து அன்றாடம் அடுத்திருப்பவரோடு அன்புறவில் வாழ்ந்து இறையரசின் சான்றாவோம்.

**திரு. J. பிரபின் செல்வமணி**

நாள் **3**

# ஆண்டவரே, நாங்கள் காணாதிருப்போருக்கு எங்கள் உள்ளங்களைத் திறந்தருளும்

## (Lord, open our hearts to those we do not see)

திபா. 119: 57-63 உரோ. 13: 8-10 லூக். 10:25-36

"அவர், தம்மை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி, "எனக்கு அடுத்திருப்பவர் யார்?" என்று இயேசுவிடம் கேட்டார்." (லூக்கா 10: 29)

இன்றைய மனிதர் தொலை தூர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வேற்று கிரகங்களில் மனிதர் வாழ இயலுமா? என்பதையும் தொல் பொருள் ஆராய்ச்சி வழியாக முற்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள் எப்படிப்பட்டது? என்பதையும் அறிய விரும்புகின்றனர். கண்களுக்குப் புலப்படாதவற்றை அறியவும் தங்கள் அறிவை மனிதர் பயன்படுத்துகின்றனர். ஆனால், அடுத்திருப்பவரைச் சில நேரங்களில் அறிய தவறிவிடுகின்றனர். திருச்சட்ட அறிஞர் தம்மை நேர்மையாளராக காட்ட விரும்பி ஆண்டவரிடம் அடுத்திருப்பவர் யார் என்பதை அறிய விரும்புகிறார். அவரது நோக்கம் தன்னை நேர்மையாளர் என்பதைக் காண்பிப்பதாக அமைந்தாலும் ஆண்டவர் உவமை வழியாக அடுத்திருப்பவரை அறியவும் அன்பு செய்யவும் அழகுற கற்பிக்கின்றார்.

### 1 அடுத்திருப்பவரை அறிதல்

" ... எனக்கு அடுத்திருப்பவர் யார்?..." லூக்கா 10:29

திருச்சட்ட அறிஞர், "எனக்கு அடுத்திருப்பவர் யார்?" என ஆண்டவரிடம் எழுப்பிய கேள்வியை அறிவது முதன்மையானது. யூதக் கலாச்சாரத்தில் இஸ்ரயேலர் ஒரு தனி சமூகமாக வாழ்ந்தனர். இதுதான் கடவுளின் விருப்பம் எனவும் நம்பி வந்தனர். பண்டிகைகளை அவர்களுக்குள்ளேயே கொண்டாடி, தங்களுக்கான குறுகிய வட்டத்தை வரைந்துக் கொண்டனர். அவர்களின் மனதில் "என் இனத்தார்", "வேற்று இனத்தார்" என்ற பிரிவினை எண்ணம் நிறைந்திருந்தது. சொந்த இனத்தவரை மட்டுமே அடுத்திருப்பவராக ஏற்றுக்கொண்டனர். வேற்று இனத்தாரிடம் உரையாடுவதையும், உறவாடுவதையும் தவிர்த்திருந்தனர். இந்தத் தவறான அணுகுமுறையை வேரறுக்கவே இயேசு கிறிஸ்து "நல்ல சமாரியன்" உவமையைக் கூறி நல்லெண்ணத்தை அவர்களிடையே உருவாக்க விரும்பினார்.

உவமையைக் கூறிய பின் ஆண்டவர் இயேசு திருச்சட்ட அறிஞரிடம் கள்வர் கையில் அகப்பட்டிருந்த மனிதருக்கு யார் அடுத்தவர்? என வினவுகிறார். திருச்சட்ட அறிஞர் பரந்த மனதுடன் சிந்தனை செய்வதற்கான உணர்வூட்டலை வழங்கினார். எதிர்மறையான எண்ணம் கொண்டிருந்த அறிஞரிடமிருந்து சரியான விடையை வருவிக்கின்றார். "அடுத்திருப்பவர்" பற்றிய புதிய புரிதலை அறிஞர் பெற்றுக்கொண்டார். தேவையோடிருப்போரின் தேவையை உணர்ந்து உதவும் எவரும் அடுத்தவராயிருப்பார் என புதிய பாடத்தை இதன் வழியாக அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கற்றுக்கொடுக்கிறார். அதே நேரம் தேவையோடிருப்பவரை அடுத்திருப்பவராக பார்த்து உதவும் நல்லெண்ணத்தையும் வழங்குகிறார்.

குற்றுயிராக இருந்தவரைக் குருவும், லேவியரும் பார்த்த பின்னரும் மறுபக்கமாய் விலகிச் சென்றனர். இவர்கள் இருவரும் தேவையோடிருந்தவரை வெறுமனே கண்களால் பார்த்து விட்டு தங்கள் இதயத்தை இறுக அடைத்துக்கொண்டனர். குற்றுயிராக இருந்தவரை இதயக் கனிவுடன் காணத் தவறிவிட்டனர். அவர்களின் பார்வை வெளிப்படையான மரபுகளை நோக்கியே இருந்தது. ஆனால், "அடுத்திருப்பவர்" என்ற வட்டத்தில் உட்படாமல் "தூரமானவர்" என்று ஓரங்கட்டப்பட்டிருந்த சமாரியன் காயமடைந்தவரைக் இதயக் கனிவுடன் நோக்கிப் பார்த்து அடுத்து வந்து உளமார உதவி செய்கின்றார். தேவையோடிருப்போரின் அடுத்துச் சென்று உதவுவதும், அடுத்திருப்போரின் தேவையை அறிவதும் முதன்மையானதாகும். ஒருவருக்கொருவர் அடுத்தவராக இவ்வுலகில் வாழ்வதற்குச் சில ஏற்றத்தாழ்வுகள் தடையாக அமைகின்றன. அவைகளை உடைத்தெறிந்து அருகில் செல்வது நம் கடமையாகும்.

## 2. அடுத்திருப்பவரை அன்பு செய்தல்

"அவருக்கு இரக்கம் காட்டியவரே" லூக்கா 10:37

அடுத்திருப்பவரை அறிந்துக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்திய ஆண்டவர் இயேசு, அடுத்திருப்பவருக்குச் செய்ய வேண்டிய "இரக்கச் செயலையும்" உவமை வழியாகவே கூறினார். திருச்சட்ட அறிஞரும் அதைச் சரியாகப் புரிந்துக்கொண்டு "இரக்கம்" என்ற பண்பினை முன்னிறுத்தி "அவருக்கு இரக்கம் காட்டியவரே" (லூக்கா 10: 37) என்று ஆண்டவர் இயேசுவின் கேள்விக்கு விடை கூறுகின்றார்.

உள்ளார்ந்த அன்பின் வெளிப்படையான செயல்பாடே இரக்கம் என்ற நற்பண்பு ஆகும். ஒருவர் இன்னொருவரின் தேவையை அல்லது வேதனையைப் புரிந்துக் கொண்டு பரிவுடன் உதவும் அன்பின் உயரிய நிலை

தான் இரக்கம். அடுத்திருப்பவரின் தேவையை அறிந்து அன்புடன் உதவுவதே ஒவ்வொருவரின் கடமையாக உள்ளது. எருசலேமிலிருந்து எரிகோ நோக்கிச் செல்லும் பாதையில் குற்றுயிரான நிலையில் இருந்த மனிதரைப் பரிவுடன் பார்த்தசமாரியர்,அவருக்கு முதலுதவி செய்து, மருந்திட்டு, சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்து, பொருளாதார உதவியையும் வழங்குகின்றார். அடுத்திருப்பவரின் வாழ்விற்காகத் தனது நேரம், உழைப்பு, உடைமை, நிதி ஆகியவற்றை வழங்கிய சமாரியர் அன்பை வெளிப்படுத்தும் நல்ல மாதிரிகளை நமக்கு முன்னிறுத்துகின்றார்.

ஆண்டவர் இயேசு "உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக..." (மாற்கு 12:21) என்று கூறுகின்றார். இந்த அன்பு கட்டளையின் அடிப்படையில், "தனி மனிதனாக ஒருவர் உலகையே நேசிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடுத்து இருப்பவரை மட்டும் நேசித்தால் போதுமானது" என்றார், அன்னைதெரசா. "கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பார்; அவரே ஆசி பெற்றவர்." (நீதிமொழிகள் 22: 9) என்கின்றார் சாலொமொன் ஞானி. கருணை நிறைந்த கண்களுடன் அடுத்திருப்போரைப் பார்த்து, தேவையை அறிந்து நிறைவேற்றுகின்ற இரக்கச் செயல்கள் இறைஆசியைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொருவரும் தங்கள் அன்பைப் பகிரும் விதத்தில் ஆதரவுகரம் நீட்டி அடுத்திருப்போருக்கு இரக்கச் செயல் செய்தால் அனைவரின் தேவையும் சந்திக்கப்படுகின்ற புதிய உலகைப் படைக்கலாம்.

புதிய ஆண்டின் தொடக்கவாரத்தில் இறை பதம் அமர்ந்திருக்கின்ற நாம், நம்முடன் வாழும் அடுத்திருப்போரைக் கனிவோடும், கரிசனையோடும் பார்த்து, அவர்களின் வாழ்வு நிலையை அறிந்துணர்ந்து தேவைகளை நிறைவு செய்து, அன்பு நிறைந்த ஒன்றிப்பின் சமூகத்தை உருவாக்க இறையருள் வேண்டுவோம்.

அருள்திரு. J. ஜான் பிரவின் திருப்பதி

நாள் **4**

# ஆண்டவரே, தேவையிலிருப்போரிடமிருந்து நாங்கள் ஒருபோதும் விலகிச் செல்லாதிருப்போமாக

## (May we never turn away from those in need)

எசா. 58: 6-9 திபா. 34: 15-22 லூக். 10:25-36

“குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறு பக்கமாக விலகிச் சென்றார்.” லூக்கா 10:31

துரிதமான இந்த உலக ஓட்டத்தில் அவரவர் வாழ்வை முதன்மைப்படுத்தி பிறரைக் குறித்த கரிசனை இன்றி வாழும் அக்கறையற்ற மனநிலையை ஆண்டவர் விரும்பவில்லை. தேவையில் இருப்போரின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என ஆண்டவர் அக்கறை கொள்கின்றார். இறைசித்தம் நிறைவேற்றும் இறைமக்களாகிய நாம் அவர் வார்த்தைக்குச் செவிமடுத்து அவருக்குச் சான்று பகிர்ந்து வாழ்வது மிகவும் அவசியமான ஒன்று. தம்மைப் போல் தமக்கு அடுத்து இருப்போரையும் நேசிக்க வேண்டும் என்பது நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் கட்டளை. அடுத்திருப்பவர் தேவையில் இருக்கும்போது எங்ஙனம் உதவவேண்டும் என்பதை நல்ல சமாரியர் உவமை வழி எடுத்துரைக்கிறார்.

### 1. பரிவான பார்வை

இயேசு கிறிஸ்துவின் நல்ல சமாரியர் உவமையில் எருசலேமில் இருந்து எரிகோ நோக்கி பயணித்த ஒருவர் கள்வர் கையில் அகப்பட்டுக் குற்றுயிராய் உதவுவாரற்று கிடக்கின்றார். அச்சமயம் அவ்வழியே வந்த முதல் மனிதர் ஒரு யூத குருவானவர். காயமுற்ற மனிதரைக் கண்டும் உதவ மன மற்றவராய் தம் வழியைத் திருப்பி மறு பக்கமாக விலகிச் செல்கின்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்துக்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். குருக்களும் வேவியரும் ஆலயத்தில் கடவுளுக்குப் பணிவிடை செய்வதில் முதன்மையானவர்களாக இருந்தனர். மேன்மைமிகு இறைப்பணியைச் நிறைவேற்றி வந்த இவர்கள் இருவருமே தம் கண் முன்னே தேவையோடு இருந்த மனிதருக்கு உதவாமல் சென்றது வியப்பே. ஆனால் அவர்கள் விலகிச் சென்றதற்குக் காரணங்கள் இருக்கலாம். அதில் பிரதானமான ஒன்று குற்றுயிராய் விடப்பட்ட மனிதர் மாண்டு போனார் என்று அவர் எண்ணியிருக்க கூடும். வழக்கமாக குருவானவர் மரித்துப்போன

உடலைத் தொடுவதற்கு விலக்கி வைக்கப்பட்டு இருக்கின்றார். காரணம் திருச்சட்டத்தின்படி அது அவர்களுக்குத் தீட்டு. மனித நேயத்தை விட்டுவிட்டு இத்தகைய சமய மரபுகளைச் சிக்கெனப் பற்றிக் கொள்கின்ற குறுகிய எண்ணம் அவர்களிடமிருந்ததை அறிய முடிகிறது. சமயம் சார்ந்த சட்டங்களை மக்களின் நல்வாழ்வுக்காய்ப் பயன்படுத்தும் பரிவான பரந்த பார்வை இவர்கள் இருவருக்கும் இல்லாதிருந்தது.

யூத குருவானவர் தன்னையே உயர்வாகப் பார்க்கின்ற குறுகிய பார்வையையும் கொண்டிருக்கலாம். சமூகத்தில் சிறப்புமிக்கவராய்க் கருதப்பட்டதால், செல்லும் இடமெல்லாம் அவர் பெற்ற மதிப்பும் மரியாதையும், அவர் தம் நிலையில் இருந்து இறங்கி தேவையில் இருக்கின்ற மனிதருக்கு உதவ தடை செய்திருக்கக்கூடும். லேவி கோத்திரத்தாராகப் பிறந்து வளர்ந்து குருவானவராக வாழ்ந்து வருபவருக்கு தாம் பெற்ற மேன்மைகளே மற்றோருக்கு உதவவிடாமல் தடுத்து நிறுத்துகின்றது. இதுவே அவர் தம் பாதையில் இருந்து மறுபக்கமாய் விலகிச் செல்ல காரணமாய் அமைந்தது என்று எண்ணலாம். இக்குருவானவரைப் போல் சில தருணங்களில் நம் வாழ்வில் மதிப்பும் மரியாதையும் ஓங்குகின்றபொழுது நம்மோடு வாழும் சக மனிதரின் தேவைகளில் நாம் துணை நில்லாது விலகிச் செல்பவர்களாக வாழ்ந்து வருகின்றோம். இத்தகு அவல நிலை மாறவேண்டும். தேவையில் இருப்போரைப் பரிவுடன் பார்த்து அருகில் சென்று உதவும் நல்லெண்ணம் நம் உள்ளத்தில் உருவாகவேண்டும்.

“உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார்; நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்.” (தி.பா 34:18) என்ற திருவசனத்திற்கு இணங்க கடவுள் தேவையோடும் உள்ளம் உடைந்த நிலையிலும் இருப்போரின் அருகில் இருக்கின்றார். ஆனால், இந்தச் சமயத் தலைவர்களோ அருகில் இருந்த கடவுளைக் காணாமல் விலகிச் சென்றுவிட்டனர். கடவுள் தேவையோடிருப்பவரைக் கண்டும் காணாமலும், விட்டு விலகியும் செல்வதில்லை. எசா. 58:6-10-இன்படி ஒடுக்கப்பட்டோர், பசித்திருப்போர், இல்லம் இல்லாதோர், உடையற்றோர் போன்ற தேவையிலிருப்போரைப் பரிவுடன் பார்த்து அருகில் செல்லுதல் கடவுளைப் பின்பற்றும் அவரது அடியவர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

## 2. செவ்வையான சேவை

தேவையுடன் இருப்போர்க்கு நாம் செய்யும் சேவை இறைவர்க்கே செய்யும் சேவையாகக் கருதப்படுகின்றது. இந்த உயர்வான உண்மையை குருவும், லேவியரும் உணரத் தவறிவிட்டனர். ஆனால், சமாரியரோ

தேவையிலிருந்தவரின் அருகில் சென்று நற்சேவை புரிந்து இறைவரின் திருவுளத்தை இனிதே நிறைவேற்றிவிட்டார். முதலுதவியாக காயம் கட்டுதலையும், தொடர்ச்சியாகத் தேவையான சிகிச்சைக்கான ஏற்பாடு செய்தல், பொருளாதார உதவி வழங்குதல் போன்ற தேவைகளை நிறைவேற்றி நற்சேவை செய்தார். எசா. 58: 6,7 இன்படி விடுதலை வழங்குதல், உணவைப் பகிர்தல், உடையும் உறைவிடமும் வழங்குதல், போன்ற சேவைகளைத் தேவையிலிருப்போர்க்கு வழங்குவதை கடவுள் எதிர்பார்க்கிறார்.

நாம் கடந்து வந்த கொரோனா பெருந்தொற்று காலம் அநேக பாடங்களை நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. நாம் வாழும் வாழ்க்கை நிலையற்றது என்பதை நம் கண் எதிரே கொண்டுவந்து நிறுத்திய இழப்புகள் ஏராளம். அத்தருணத்தில் தேவையோடு இருந்த மக்களின் தேவைகள் சந்திக்கும் வண்ணம் அநேக நல் உள்ளம் கொண்ட நல்ல சமாரியர்கள் உருவானார்கள். மே 18, 2023 தேதியிட்ட இந்தியா டுடே நாளிதழில் "மும்பை மேசியாஸ்" என்ற தலையங்கத்தின் கீழ் வந்த கட்டுரைத் தொகுப்பு ஒன்று கொரோனா காலத்தில் உணவின்றி தவித்த லட்சக்கணக்கானோரின் பசியினைப் போக்கிய இளைஞர்களின் பெரும் பங்காற்றலைப் பதிவு செய்திருந்தது. "கானாசாயியே" என்ற அமைப்பின் நிறுவனர் திரு. ரூபன் மஸ்கொர்னாஸ் அநேக தன்னார்வ இளைஞர்களோடு தம் உயிரையும் துச்சம் என கருதி தேவையில் வாடிய மக்களின் தேவைகள் சந்திக்கும்படி அவர்கள் மேற்கொண்ட சேவை இன்றும் போற்றப்படுகின்றது.

"உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின், தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்ய மறுக்காதே" (நீமொ 3: 27). வாழ்வில் உயர்வுகளும் மேன்மைகளும் நாம் மட்டும் இன்புற்று வாழ்வதற்காக வழங்கப்படுவது அல்ல, மாறாக அது பிறர் நலம் பயக்கும் கருவியாக செயல்படவேண்டும். இதுவே நம் அருள்நாதர் கிறிஸ்தேசுவின் பெருவிருப்பமாக அமைந்திருக்கிறது. நல்ல சமாரியராக இவ்வுலகில் வந்த அவர் தேவையோடு இருக்கும் மக்களுக்குத் தன் நிலையில் இருந்து இறங்கி வந்து உதவி செய்தார். "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை" (பிலி 2: 6). தம் அடியவர்களும் அத்தகு குணநலத்தோடு வாழவேண்டும் என்பது அவர் நமக்குப் பணித்த கட்டளை ஆகும். விலகிச் செல்லும் எண்ணம் நம்மில் மேலோங்குகின்றபொழுது நமக்காய் இறங்கி வந்து உதவி செய்த ஆண்டவரின் அருட்பணியை எண்ணிப் பார்த்து அவருக்குச் சான்றாய் வாழ்வோம்.

**திரு. S. ஜாண் எபனேசர்**

நாள் **5**

# ஆண்டவரே, காயங்களைக் காணவும் நல்லெதிர் நோக்கைக் கண்டெடுக்கவும் எமக்கு உதவியருளும்

## (Lord, Help us see the wounds and find hope)

யோவேல் 2: 23-27 திபா. 104: 14-15, 27-30 லூக். 10: 25-36

"அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி . . . அவரைக் கவனித்துக் கொண்டார்" (லூக். 10: 34)

துருக்கியில் ஏற்பட்ட போரில் உலக மக்களின் மனதைக் கலங்க வைத்த மற்றும் சிந்திக்க வைத்த சம்பவம் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய தன் சிறு வயது சகோதரனைத் தாங்கி அரவணைத்துப் பாதுகாக்கும் சிறுமியின் கரங்கள்.

மனிதன் பறவையைப் போல் பறக்க கற்றுக் கொள்கிறான். மீன்களைப் போல நீந்த கற்றுக் கொள்கிறான். மனிதத்தை வெளிப்படுத்தி மனிதனாக வாழ கற்றுக் கொள்வதில்லை என்று சாக்கிரடீஸ் கூறினார்.

இயேசு கிறிஸ்து கூறும் உவமையில் கள்வர் கையில் அகப்பட்டு, குற்றுயிராகப் பாதையில் இருந்த மனிதனைக் கண்டு விலகிச் சென்ற ஆசாரியனையும் லேவியரையும் பார்க்கும் போது மாய்ந்து போகின்ற மனிதத்தையே காண்கின்றோம். உடல் சார்ந்த காயங்கள் அதிக வலிகளைத் தந்தாலும் மனம் சார்ந்த காயங்கள் அநேக நேரங்களில் மாறாத காயங்களாக அமைவதும் உண்டு. இங்குக் குற்றுயிராய் இருக்கும் மனிதனின் வாழ்வில் நம்பிக்கை ஊட்டி காயங்களைக் கட்டும் நல்ல சமாரியனின் சிந்தனைகளைக் கற்றுக்கொள்வோம். தெருவிலே மனிதன் அருவருத்து ஒதுக்கிய மனிதர்களை தம் கையால் அரவணைத்துப் பாதுகாத்த தெரசா அன்னைத் தெரசா என்ற உயர்ந்த பெயருக்குச் சொந்தக்காரராக மாறினார்.

இவ்வுலகில் வாழ்கின்ற மானுடர்களாகிய நாம் அவருடைய காயங்களால் குணமாக்கப் பெற்றோம். இவ்விடுதலையான வாழ்வைப் பெற்றிருக்கின்ற நாம் நல்ல சமாரியனைப் போன்று பிறருடைய காயங்களைக் கட்ட அழைக்கப்படுகிறோம்.

**1. உடல் காயங்களைக் கட்டும் சமாரியர்** (லூக். 10: 34a)

பெரும்பாலும் நம்முடைய வாழ்க்கை சூழ்நிலை எப்படி இருக்கிறதோ அதன் அடிப்படையிலே கடவுளின் அன்பை அல்லது அவர் தருகின்ற விடுதலையைப் புரிந்து கொள்கிறோம். நமக்கு ஆதரவாக எது நடக்கிறது அல்லது நடக்கவில்லை என்ற அடிப்படையிலேயே கடவுளின் அன்பை நாம் கணக்கிடுகிறோம்.

ஆனால் திருமறையில் கிறிஸ்துவின் வஸ்திரத்தின் தொங்கலையாவது நான் தொட்டால் விடுதலை கிடைக்கும் என்ற அந்த பெண்மணியின் விசுவாசத்தால் விடுதலை பெற்றவுடன் நடுங்கிய அவரைப் பாதுகாத்த கிறிஸ்துவின் அன்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

வழியருகே காயப்பட்டு குற்றுயிராயிருந்த மனிதனுக்கு உதவி செய்து தன் வாகனத்தின் மேல் ஏற்றிப் பராமரிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. அதற்கு உதவி செய்கின்ற நல்ல மனப்பான்மை வேண்டும். இன்றைய சமூகம் என்பது வேடிக்கை பார்க்கின்ற விலகி நின்று ஆலோசனை கூறுகின்ற சமூகம். வலைத்தளங்களில் பதிவிட பெருமைக்காக புகைப்படம் (Selfie) எடுப்பதை தவிர்த்துக் காப்பாற்ற முன் வருதல் வேண்டும்.

**2. மனக்காயங்களை மாற்றும் சமாரியர்** (லூக். 10: 34b)

யோபுவிற்குப் பல சோதனைகள் வந்தன. அதனைப் பார்த்த அவருடைய நண்பர்கள் உன்னுடன் கடவுள் இருந்தால் உனக்கு ஏன் இப்படி நிகழ்கிறது என்று கேலியாகக் கேட்டார்கள். அதனைக் கேட்டபோது யோபுவின் மனதில் கலகங்களும், காயங்களும் கேள்விகளும் போராட்டங்களும் வரவே செய்தன. ஆயினும் அவர் கடவுளுக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டார்.

ஒரு சீடன் தன் குருவிடம் மனச் சோர்வோடு வந்தான். ஏன் என்று கேட்ட குருவிற்குச் சீடன் என்னைப் பற்றிப் பிறர் பேசும் அவதூறுகளை என்னால் தாங்கிகொள்ள முடியவில்லை. வருத்தமாக இருக்கிறது என்றான். அதற்குக் குரு உனக்கு ஒருவர் ஒரு பரிசு தரும் போது அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அது யாருக்குச் சொந்தம் என்றார். அதற்குச் சீடன் அந்த பரிசு தருகின்றவரே அதைக் கொண்டு செல்வார் என்றான். அது போலவே இதுவும் என்றார் குரு.

சோதனை என்ற விஷயத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் காயம் அதிகம் தான் ஆயினும் அந்தக் காயங்கள் மூலமாக நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் விலையேறப் பெற்றவை. அவை தான் நம்மை வடிவமைக்கின்றன. அவை தான் வாழ்க்கையைச் சரியாக வாழ்வதற்கான உந்து விசைகளைத் தருகின்றன.

ஒரு மனிதன் தனிமையின் வேதனையில் வாடும்போது “நான் இருக்கிறேன்” என்ற வார்த்தை அந்த மனிதனுக்கு ஏதோ பெரிய ஆற்றல் கிடைப்பது போல் செய்கிறது. கள்வரிடம் சிக்கிக் காயப்பட்டு வழியருகே இருந்த மனிதரைக் கண்டும் காணாதவர்கள் போல் கடந்து சென்றது அந்த மனிதனின் மனக்காயங்களை அதிகப்படுத்தியிருக்கலாம் ஆனால் சமாரியனின் வார்த்தைகள் அந்த மனிதனுக்கு உடல் காயங்கள் அதிகமாயிருந்தாலும் மனதின் காயங்களை ஆற்றுவதாக ஆறுதல் தருவதாக இருந்தது. அது போன்று நாம் காண்கின்ற நம்முடன் வாழ்கின்ற நம்மவர்களுக்கு நம்முடைய வார்த்தைகளும் செயல்களும் நம்பிக்கையூட்டுகின்ற செயல்களாக அமையட்டும்.

நம்முடைய வார்த்தைகள் காயங்களைக் கூட்டுகின்ற வார்த்தைகளாக அமையாமல் நல்ல சமாரியனைப் போன்று காயங்களைக் கட்டுகின்ற மகிழ்ச்சியான செயல்களாக மாற்றுவோம்.

**திரு. S. சுரேஷ்**

நாள் **6**

# ஆண்டவரே, தேவையிலிருப்போரை வரவேற்கும் இல்லங்களாக (சத்திரங்களாக) எம் திருச்சபைகளை மாற்றுவீராக.

# (Lord, turn our Churches into inns to welcome those in needs)

தொநூ. 18: 4-5 திபா. 5: 11-12 லூக். 10: 25-36

" . . . ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார்" (லூக். 10: 34)

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" இது உலகக் கூற்று.

"இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோஅதை எனக்கே செய்தீர்கள்" இது கிறிஸ்துவின் அருள்வாக்கு.

யூதச் சமய நம்பிக்கையாளர்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் சமாரியர்கள். ஆனால் இயேசு கிறிஸ்து இப்பகுதியில் மூன்றாவது வந்த சமாரியனை நல்ல சமாரியனாகக் காண்பிப்பது அவரின் துணிச்சலான செயலே.

கிறிஸ்துவின் நாசரேத் பிரகடனத்தில் (லூக். 4: 18 - 19) சமுதாயத்தின் விளிம்பில் புறக்கணிக்கப்பட்டோராய் நிற்கும் மக்களின் நல்வாழ்விற்காக பிதாவினால் தாம் அனுப்பப்பட்டதைக் கிறிஸ்து பறைசாற்றுகிறார். அதைக் கிறிஸ்து தமது வாழ்வின் இறுதி வரை பிரதிபலிக்கவும் செய்தார்.

## 1. அருகில் நிற்கும் திருச்சபையாய்ப் பயணிக்க உதவிடும்

எரிகோ பாதையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த மனிதனை அவ்வழியே சென்ற ஆசாரியனும் லேவியனும் பாராமுகமாய் விலகிச் சென்றபோது சமாரியன் ஒருவர் அருகில் வந்து உதவி செய்ய ஆவலாய் நிற்கிறார். நீதி மறுக்கப்பட்டு, சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு, தீயோனால் கட்டப்பட்டு ஏராளமான மக்கள் நாதியற்று நிற்கிற அவல நிலையை இன்றைய உலகில் காணமுடிகிறது. சில நேரங்களில் திருச்சபைகளும் இவைகளைப் பாராமுகமாய்க் கடந்து செல்கிறது. இன்று சமுதாயத்தில் தீயோன் பல வழிகளில் சமுதாயத்தைச் சீரழிக்கின்றான். வரதட்சணைக் கொலைகள், போதைப் பழக்கம், சாதிய வேறுபாடுகள், பிள்ளைகளால் புறக்கணிக்கப்படும் பெற்றோர்கள் மற்றும் ஏராளமான சமூகக் கேடுகள் இன்று மலிந்து காணப்படுகின்றன.

இவைகளைத் திருச்சபை அருகில் வந்து கவனிக்க முற்படுகிறதா அல்லது பாராமுமாய்க் கடந்து செல்கிறதா? திருச்சபை ஏழைகளுக்கு இரங்க அழைக்கப்பட்ட மாபெரும் இயக்கம். மலைப்பொழிவில் (மத். 5) இயேசு கிறிஸ்து, திருச்சபை மக்களோடு மக்களாய் நிற்க வேண்டிய இயக்கம் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். திருச்சபை நான்கு சுவர்களுக்கு இடையே மடங்கிக் கிடக்க வேண்டிய அமைப்பு அல்ல. தேவையோடு இருப்பவர்களின் அருகில் நிற்க வேண்டிய நம்பிக்கையின் அஸ்திபாரம். சமுதாயச் சீரழிவில் தனக்குப் பொறுப்பில்லை என திருச்சபை தூர நிற்க முடியாது. சமுதாயச் சீரழிவு அகற்ற அழைக்கப்பட்ட தூதுவர் கூட்டம் இது. ஒப்புரவாக்குதலின் ஊழியத்தில் கடவுள் நம்மைத் தூதுவராக வைத்திருக்கிறார் ( 2 கொரி. 5: 20). ஆகையால் திருச்சபை மக்களோடு நிற்க வேண்டிய மாபெரும் இயக்கம்.

## 2. காயம் கட்டும் திருச்சபையாய்ப் பணியாற்ற உதவிடும்

ஆசாரியரும் லேவியரும் பாராமுகமாய்ச் சென்றபோது, நல்ல சமாரியன் அருகில் வந்து உயிர் பிழைக்க முதலுதவி செய்து அடுத்தகட்ட நடவடிக்கையில் அவர் இறங்குகிறார். இன்று காயப்படுத்த ஏராளம் மக்கள் உண்டு. காயம்கட்ட மக்கள் இல்லை. திருச்சபை காயம்கட்ட கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டம். நற்செய்தி நூல்களில் மனக்காயங்கள் மற்றும் சரீர காயங்களோடு வந்த அனைவருக்கும் இயேசு காயம் கட்டி உயிர் பிழைக்க செய்தார். சிலுவையின் இறுதி நிமிடத்திலும் கள்வரில் ஒருவர் மனக்காயத்தோடு இயேசுவினிடத்தில் உமது ராஜ்ஜியம் வரும்போது என்னை நினைத்தருளும் என வேண்டுதல் செய்த போது இயேசு அவருக்கு வாழ்வளித்தார். இன்று உதவியற்ற நிலையில் வறுமையின் பிடியில் வாழ்கின்ற மக்கள் கூட்டம், கல்வி கற்க வசதியற்ற மாணவர் கூட்டம், ஆதரவற்ற முதியோர் ஏராளமாய்க் காயப்பட்ட நிலையில் தங்கள் காயங்களை யார் கட்டுவார் என ஆயிரம் கேள்விகளோடு பரிதாபத்தோடு நம்மைச் சூழ்ந்து நிற்கின்றனர். திருச்சபை இதற்கு என்ன பதிலை வைத்திருக்கிறது “ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்” என்ற நீதிமொழியை வைத்து காயங்களைக் கட்டுமா? திருச்சபை ஒரு பார்வையாளராக மட்டும் வேடிக்கை பார்க்காமல் நம்மைச் சுற்றி காயங்களோடு நிற்கிற மக்களின் காயங்களைக் கட்டி முதலுதவி செய்து உயிரைக் காப்பாற்றுவதே திருச்சபையின் தலையாய தவிர்க்க முடியாத கடமை.

## 3. சத்திரத்தில் சேர்க்கும் திருச்சபையாய்ப் பண்பட உதவிடும்

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவரை உயிர் பிழைக்க செய்து அவரைப் பாதுகாப்பான இடத்தில் கொண்டு வந்து சேர்த்தார். அந்த நல்ல

சமாரியன். நோவாவின் நாட்களில் பேழை என்னும் பாதுகாப்பு மையத்தில் ஜனங்களைச் சேர்க்க நோவா போராடினார். ஆனால் ஜனங்கள் பாதுகாப்பு மையத்தைப் புறக்கணித்தனர். பாதுகாப்பு மையத்தில் (பேழைக்குள்) பிரவேசித்தவர்கள் காப்பாற்றப்பட்டனர். திருச்சபை பாதுகாக்கும் பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறது.

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர் மற்றும் வாழ்வின் விளிம்பில் நிற்போருக்குப் பாதுகாப்பு கவசமாக நிற்பது அவசியம். இப்படிப்பட்டோரைத் திருச்சபை என்கிற பாதுகாப்பு மையத்தில் சேர்ப்பது திருச்சபையின் மாபெரும் கடமை. திருச்சபை சமுதாயச் சீர்கேட்டில் இருந்து மக்களைப் பாதுகாப்பது அல்லது விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற செயல்களில் தன்னைத் தொடர்ந்து இணைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. T. டார்லின் ரிச்சர்ட் லாஸ்**

நாள் **7**

# ஆண்டவரே, எங்கள் அயலாருக்கு எவ்வாறு மறுமொழி வழங்குவது என்பதை எமக்குக் காட்டுவீராக

## (Lord, show us how to respond to our neighbour)

திபா. 10: 17-18 பிலி. 2: 1-5 லூக். 10: 25-36

“அதற்குத் திருச்சட்ட அறிஞர், அவருக்கு இரக்கம் காட்டியவரே என்றார். இயேசு நீரும் போய் அப்படியே செய்யும் என்றார். (லூக்கா 10: 37).

இறைவனை, இறைவார்த்தைகளைத் தெளிவற்ற மனநிலையோடு, மேட்டிமையான சிந்தையோடு அணுகுகிற ஆன்மீக உலகில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். திருச்சட்ட அறிஞர் ஒருவர் நிலைவாழ்வை உரிமையாக்க என்ன செய்ய வேண்டுமென்கிற சோதனை கேள்வியொன்றினை இயேசுவிடம் எழுப்புகிறார். கடவுளிடம் அன்புகூர்வதும், உன் மீது அன்பு கூர்வது போல் உன் அயலான் மீதும் அன்பு கூர்வதுமே சிறந்த வழி என்கிற திருச்சட்ட நியதியை இயேசு நினைவுப்படுத்துகிறார். ஆனால் தெளிவடைய வேண்டிய கற்றறிந்த திருச்சட்ட அறிஞரோ தன்னை மேன்மையானவனாக காண்பிக்க எண்ணி நான் அன்பு கூர வேண்டிய அயலான் யார்? என்கிற கேள்வியை இயேசுவிடம் எழுப்புகிறார்.

இந்த கேள்வியை யூத ரபிகள் அடிக்கடி கேட்பதுண்டு. இந்தக் கேள்வி, யாரை நேசிக்க வேண்டும்? யார் அயலானாக அமைய வேண்டும்? என்பதைக் குறித்த யூத சட்டப் புரிதலை சமூகத்தில், மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துவதற்கான சூழ்ச்சி கேள்வியாகவும் அமைகின்றது. ஏனெனில் யூதர்கள் ஒருபுற இன குழந்தைகூட பூமியில் தோன்றிவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் யூதரல்லாத பெண்களின் பிரசவ நேரத்தில்கூட எந்த உதவியும் செய்யக்கூடாது என்கிற சிந்தனைக் கண்ணோட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். ஆகவே யார் என் அயலான்? என்கிற திருச்சட்ட அறிஞரின் கேள்விக்கு இயேசுகிறிஸ்து கொள்கை, எல்லைகளைக் கடந்து அனைவரையும் நேசிக்கிற தெளிவைப் பதிலாக உரைக்கிறார்.

## 1. அயலாரை அறிந்துகொள் (லூக். 10: 37a)

அயலான் என்பதற்கு ஆங்கிலத்தில் 'neighbour' எனவும், தமிழில் பக்கத்தவன், அடுத்திருப்பவன், உறவின் முறையான், அண்டை வீட்டான் என்று பல பொருள்களில் புரிந்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வுலகில் தன் இனத்தானையும், இரத்த உறவின் முறையானையும், உற்ற நண்பனையும், உதவிக்குப் பதில் உதவி தவறாது செய்பவனையுமே அயலானாகப் பாவிக்கிற மனப்பாங்கு பரவலாக மானிட மனங்களில் பதிந்துள்ளது. திருமறையில் யூதர்கள் புறஇனத்தவரை எதிராளிகளாகவே பாவித்தனர். அதேநேரம் "உன்னைப் போலவே உன் அண்டை வீட்டாரையும் நேசி" (லேவி. 19: 18) என்ற நியதியை அறிந்திருந்த யூதர்கள், சக யூதனை மட்டுமே அண்டை வீட்டானாக, அயலானாக வரையறுத்துக் கொண்டனர். இச்சிந்தையே திருச்சட்டத்தை முழுமையாய்க் கற்றுத் தேர்ந்திருந்த திருச்சட்ட அறிஞரின் மனப்பாங்காய் அமைந்திருக்க வேண்டுமென்பது, யார் என் அயலான்? என்கிற கேள்வியினூடாய்ப் புலனாகிறது.

இயேசு கூறிய மறுமொழியில், தன் இனத்தானை மட்டும் அயலானாக பாவிப்பதல்ல, மாறாக இனம், மதம், மொழி பாகுபாடில்லாது உதவி வேண்டி நிற்கிற அனைவரையும் அயலானாகப் பாவிக்கக் கூறுகிறார்.

* துன்பத்தில் துவண்டு கிடந்த மனிதனை அவ்வழியே தற்செயலாய் வந்த குருவானவர் தன் அயலானாக அறிந்து கொள்ளவில்லை. துன்புறுத்தப்பட்டவனுக்குத் தொண்டு செய்வதைவிட சட்டத்திட்டங்களும், வழிபாட்டு முறைகளுமே மேலானது என்று அகன்று செல்கிறார் (லூக்கா 10: 31).

* தன்நலனே இன்றியமையாதது என்ற சிந்தனையால் தான் லேவியனும் துயருற்று கிடந்தவனைத் தன் அயலானாய் அறிந்துகொள்ள முடியவில்லை.

* ஆனால் பாதையோரமாய் வந்த சமாரியனின் பார்வையோ பரிதபித்தவனின் பக்கமாய்ச் செல்கிறது. எவராயினும் உதவி வேண்டி குற்றுயிராய் கிடந்த அம்மனிதனே தன் அயலான் என்றறிந்து பரிவு கொள்கிறார் (லூக்கா 10: 33).

வாழ்விழந்து வருந்துவோரை, நலமிழந்து வாடுவோரை, துணையில்லாது துயரப்படுவோரை, நெருக்கப்பட்டு கலங்குவோரை, உதவி வேண்டி கதறுவோரை எல்லை தாண்டி நம் அயலானாக இனம் கண்டு கொள்ளவேண்டுமென்கிற தெளிவை இயேசு கொடுக்கிறார்.

**2. அயலாராய் நடந்துகொள்** (லூக். 10: 37b)

யார் என் அயலான்? என்கிற கேள்விக்கணைக்கு அயலானை அறிந்து கொள்ள தெளிவாக்கிய இயேசு இரக்கத்ததைக் காண்பித்து, நல்ல அயலானாய் மறுமொழி கொடுக்கும் தெளிவைக் கொடுக்கிறார் (லூக்கா 10: 37).

விலகிச் சென்ற குருவால், லேவியரால் அயலான் யார்? என்பதை அறிந்து கொள்ளவும் இயலவில்லை, நல் அயலானாய் மறுமொழி கொடுக்கவும் இயலவில்லை. ஆனால் சமீபமாய் வந்த சமாரியனோ தன் அயலானை இனங்கண்டு கொண்டதோடு, குற்றுயிராக்கப்பட்ட அயலானிடம் பரிவு கொண்டு, இரக்கத்தைக் காண்பித்து நல் அயலானாய் தன்னை அடையாளப்படுத்துகிறார். சமாரியன் தான் அறிந்துகொண்ட அயலானுக்காய் அன்பையும், இரக்கத்தையும், மனித நேயத்தையும் மறுமொழியாக்குகிறார். இரக்கத்தைக் காண்பித்து சிறந்த அயலானாய் நடந்து கொள்வதே அயலாருக்குக் கொடுக்கும் மறுமொழி என்கிற தெளிவை இயேசு திருச்சட்ட அறிஞருக்கு வழங்குகிறார்.

லூக்கா 10: 36, 37-ல் இம்மூவருள் எவர் அயலானாகத் தோன்றுகிறது என்கிற கேள்விக்கு, இரக்கம் காட்டியவரே என்று திருச்சட்ட அறிஞர் பதிலுரைத்தபோது இயேசு, “நீரும் போய் அப்படியே செய்யும்” என்று கூறி நல் அயலானாய் மறுமொழி கொடுக்க ஆலோசனை கூறுகிறார்.

நிலைவாழ்வை உரிமையாக்க அயலானை அறிவதும், அயலானாய் நடப்பதுமே அவசியமானது என்பது ஆண்டவரின் அறிவுரை, திருச்சட்ட அறிஞர் பெற்ற தெளிவுரை.

கடல் கடந்து கல்கத்தா நகரத்திற்கு வந்த அன்னை தெரசா உலகம் போற்றும் கருணைத் தாயாக போற்றப்பட்டதின் காரணம், யார் தன் அயலான்? என்பதை அறிந்து கொண்டதும், உதவி வேண்டி வாடியோர் மீது பரிவு கொண்டு, இரக்கத்தைக் காண்பித்து சிறந்த அயலானாய் நடந்து கொண்டதுமேயாகும் என்பது அன்னையின் வாழ்வு உணர்த்தும் உண்மை.

இப்புது வருடத்திலும் ஆண்டவரே எங்கள் அயலாரை அறிந்து கொள்ளவும், எங்கள் அயலாருக்கு இரக்கத்தை, அன்பை மறுமொழியாக காண்பித்து நல் அயலானாய் நடக்கவும் தெளிவினைத் தந்து உதவிடும் என்று கேட்போம். ஆமென்.

இரக்கம் இல்லாத இதயம்
இறைவனை ஒருபோதும் நெருங்க முடியாது.

**திரு. S.G. சிபி**

நாள் **8**

# ஆண்டவரே, எமது நட்புறவு உமது ஆளுகையின் அடையாளமாய்த் திகழ்வதாக

## (Lord, may our fellowship be a sign of your kingdom)

திபா. 41: 1-2 உரோ. 12: 9-13 லூக். 10: 25-36

"இயேசு, நீரும் போய் அப்படியே செய்யும் என்று கூறினார்" (லூக்கா 10: 37).

2023, அக்டோபர் மாதம் ஆப்கானிஸ்தான் நாட்டில் 6.3 அளவீடு கொண்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு, சுமார் 2500-க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கி உயிரை இழந்தனர். 10,000 பேர் காயத்தோடு காப்பாற்றப்பட்டனர். பலர் தங்களுடைய இல்லங்களை இழந்தனர். அதே மாதம் ஆப்கானிஸ்தான் தேசத்திலிருந்து ஒரு குழு உலகக்கோப்பை கிரிக்கெட்டில் பங்கேற்பதற்காக இந்தியா வந்தது. அதில் ரஷீத்கான் என்ற கிரிக்கெட் விளையாட்டு வீரர் தன்னுடைய சம்பளம் முழுவதையும் தன்னுடைய தேசத்தில் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதாக அறிவித்தார். பலர் விளையாட வந்திருந்தாலும் ஒருவரின் செயல் ஆச்சரியப்பட வைத்தது.

திருச்சட்ட அறிஞர் ஒருவர் தன்னை நேர்மையாளர் எனக்காட்ட விரும்பி எனக்கு அடுத்திருப்பவர் யார் என (லூக். 10: 29) இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி ஒன்றினைக் கேட்டார். அதற்கு, இயேசு கிறிஸ்து மறுமொழியாக நல்ல சமாரியர் உவமையினைக் கூறினார். எருசலேமிலிருந்து எரிகோவுக்கு ஒருவர் போகும் போது கள்வர்கள் அடித்துக் குற்றுயிராக விட்டுப் போனார்கள். உதவுவார்கள் என்று எண்ணின குரு மற்றும் லேவியர் பக்கமாய் விலகிச் சென்றனர். அந்த நிலையில் ஒருவர் உதவி செய்வது, பிறரைக் கூட்டிணைத்து ஆண்டவரின் ஆளுகைக்கு அடையாளமாகின்றதைப் பார்க்கின்றோம். நாமும் புதிய ஆண்டில் பிரவேசித்திருக்கிறோம். கடவுளின் ஆளுகைக்கு அடையாளமாகும் வாழ்வுக்கு எப்படி நம்மை ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதைச் சிந்திக்கலாம்.

### 1. இரக்கத்தின் வழியாய்க் கூட்டிணைத்து அடையாளமாவோம்

லூக். 10: 36, 37; ". . . எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது? என்று இயேசு கேட்டார். அதற்குத் திருச்சட்ட அறிஞர், அவருக்கு இரக்கம் காட்டியவரே என்றார்."

கடவுளின் ஆளுகையின் அடையாளமாகும் வாழ்வுக்கு, பிறரிடம் இரக்கத்தினைக் காண்பித்துக் கூட்டிணைக்க வேண்டும். இயேசு கிறிஸ்து இவ்வுவமையின் வழியாய் இரக்கம் செய்து பிறரைக் கூட்டிணைக்க கற்றுக்

கொடுக்கின்றார். இரக்கம் என்பது விலை கொடுத்தோ அல்லது குறுக்கு வழிகளிலோ பெற்றுக் கொள்ள முடியாது, மாறாக நம்முடைய வாழ்வின் அங்கமாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய மலைப்பொழிவு அருளுரையில் இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர் மத். 5: 7 என்று குறிப்பிடுகின்றார். சமாரியர் குற்றுயிராய்க் கிடந்த நபருக்கு இரக்கம் காண்பித்தபடியினால் கடவுளுக்கு அடுத்திருப்பவர் என்ற நிலையினைப் பெறுகின்றார். நாமும் இரக்கம் உள்ளவர்களாகப் பிறரைக் கூட்டிணைத்து அவரது ஆளுகைக்கு அடையாளமாக வேண்டும். நம்முடைய வாழ்வில் இரக்கம் இல்லாத பட்சத்தில், நாமும் இரக்கம் இல்லாத நியாயத்தீர்ப்பு பெறுவோம் என்று யாக்கோபு 2: 13 தெளிவுபடுத்துகின்றது. நம்முடைய வாழ்விலும் பல நேரங்களில் கடவுளை விட்டுச் சற்று விலகினபோதும் இரக்கம் ஒன்று அவரிடம் இருக்கின்றபடியினால், நாமும் கடவுளோடு பயணித்து புதிய ஆண்டில் அடி வைத்துள்ளோம். நாமும் பிறருக்கு இரக்கத்தினால் உதவி செய்து கடவுளின் ஆளுகைக்கு அடையாளமாவோம்.

### 2. இறைச் சத்தத்துக்குச் செவிமடுத்து அடையாளமாவோம்

லூக். 10: 37, ". . . இயேசு, நீரும் போய் அப்படியே செய்யும் என்று கூறினார்."

இயேசு கிறிஸ்து நற்செய்தி நூல்களில் அருளுரை வழியாக அறிவுரை கூறுகின்ற வேளையில் இறைச் சத்தத்துக்குச் செவிமடுத்து நடக்க வலியுறுத்துகின்றார். நம்முடைய இன்றைய தியான பகுதியில் பிறருக்கு உதவி செய்ய கற்றுக் கொடுகின்றார். இயேசு கிறிஸ்து பிரதான கற்பனையாக சொல்கின்ற வேளையில் "உன் மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" என்று (லூக்கா 10: 27) கூறுகின்றார். இவ்வுமையில் வரும் சமாரியன் பிறருக்கான தேவைகளைச் சந்தித்து உதவுகின்றான். இந்த உதவி கடவுளுக்குச் செய்ய கூடியதாக பார்க்கப்படுகின்றது. சமாரியனின் உதவி பிறரைக் கூட்டிணைப்பதாக அமைந்தது. நாமும் இந்த புதிய ஆண்டில் கடவுளின் சத்தத்துக்குச் செவிமடுப்போம்.

1 யோவான் 5: 3, "ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது. அவர் கட்டளைகள் நமக்குச் சுமையாய் இருப்பதில்லை."

எனவே கடவுளின் ஆளுகையின் அடையாளமாகும் வாழ்வுக்கு நாம் இரக்கத்தின் வழியாகவும் இறை சத்தத்துக்குச் செவிமடுத்துப் பிறர் நலன் கருதி அவர்களையும் கூட்டிணைத்து இறை ஆளுகைக்குப் பங்காளர்களாவோம்.

**திரு. W. இம்மானுவேல் வில்பின்**

# அனைத்து நாட்டினரையும் தம்பால் ஈர்க்கும் கிறிஸ்து

## Christ Draws all Nations to Himself

எசா. 56: 1 - 8 திவெ. 7: 9 - 14

திபா. 72 மத். 2: 1 - 12

அவர்கள் "அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் கடவுளிடமிருந்தும் ஆட்டுக்குட்டியிடமிருந்துமே மீட்பு வருகிறது" என்று உரத்த குரலில் பாடினார்கள் (திவெ. 7: 10).

கடவுளின் பேரருளினால் நாம் ஆசீர்வாதமான புதிய ஆண்டிற்குள்ளாக பிரவேசித்திருக்கிறோம். அனைத்து நாட்டினரையும் தம்பால் ஈர்க்கும் கடவுள் தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பித் தாமாகவே தம் மக்களை ஈர்த்துள்ளார். இறைவன் இந்த உலகைப் படைத்து மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். அந்தச் சாயலை மனிதன் செய்த பாவத்தின் விளைவால் இழந்து போய் அடிமைத்தனத்திற்குள்ளானான். கடவுள் படைத்த அழகிய உலகம் பாழ்பட்டு போனது. எனினும் கருணையுடன் கடவுள் இவ்வுலகத்தைப் புதுப்படைப்பாக்க விடுதலையாளர்களை எழுப்பினார், தொடர்ந்து இறைவாக்கினரின் வழியாகவும் இயேசுகிறிஸ்துவின் வழியாகவும் அனைத்து நாட்டினரையும் தம்பால் ஈர்த்துக்கொண்டார். கடவுள் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக உலகத்திற்கு அனுப்பி சிலுவையில் ஒப்புக்கொடுத்ததின் வழியாக நம்மேல் வைத்த அன்பை வெளிப்படுத்தினார். (யோவா. 3: 16). இறைவனின் விருப்பத்தைப் பற்றிப் பவுலடியார் I திமொ. 2: 4-ல், எல்லா மனிதரும் மீட்புபெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார் என்று கூறுகிறார்.

போப் ஜாண் 23 அவர்கள் ரோம் வாட்டிகனில் போப்பாக அருட்பொழிவு பெற்றவுடன் அந்த நாட்டின் சிறையொன்றிற்குச் சென்று கைதிகளைச் சந்தித்தார். அது கைதிகளைக் கவர்ந்தது. அப்போது அவர் அவர்களிடம் சொன்னார். நான் ஏன் உங்களிடம் வந்தேன் தெரியுமா? நீங்கள் என்னிடம் வர இயலாது ஏனெனில் நீங்கள் கைதிகள். எனவே நானே உங்கள் முன் வந்து உங்களைச் சந்தித்தேன். இதனால் கைதிகளைக் கிறிஸ்துவின்பால் ஈர்த்துக்கொண்டார். இதுபோலவே இயேசு கிறிஸ்துவும் குமாரனாக

இவ்வுலகிற்கு வெளிப்பட்டு அனைவரையும் தம்பால் ஈர்த்துக்கொண்டார். இதனைக் குறித்து இன்றைய திருமறைப் பாடங்களின் வழியாகத் தியானிப்போம்.

**1. அனைவரையும் நீதியினால் ஈர்க்கும் கிறிஸ்து :** (எசா. 56: 1)

"ஆண்டவர் கூறுவது இதுவே : நீதியை நிலைநாட்டுங்கள்; நேர்மையைக் கடைபிடியுங்கள்; நான் வழங்கும் விடுதலை அண்மையில் உள்ளது; நான் அளிக்கும் வெற்றி விரைவில் வெளிப்படும்."

கடவுளால் மீட்படைந்த இஸ்ரவேல் சமூகத்தினர் புது பிரச்சனைகளைச் சந்தித்தனர். அவர்கள் சமயவழிபாடுகளிலும், சமயஒழுக்க முறைகளிலும் தவறுகளைச் செய்தவர்களாகக் காணப்பட்டார்கள். எனவே கடவுளால் மீட்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள், நியாயம், நீதியைக் கைக்கொள்ளவும் அதனால் இரட்சிப்பு வெளிப்படவும், பாக்கியவான்களாகவும், ஓய்வுநாளை ஆசரித்து, தீமையை விட்டு விடுதலினாலும் கடவுளின் மக்களாக வாழவேண்டும், என்பதை எசாயா இறைவாக்கினர் எடுத்துரைத்தார். இதுமட்டுமல்லாது இதோ நீ அறியாத பிற இனமக்களை அழைப்பாய் உன் கடவுளாகிய ஆண்டவரை, இஸ்ரயேலின் தூயவரை முன்னிட்டு, உன்னை அறியாத பிற இனத்தார் உன்னிடம் ஓடிவருவர். ஏனெனில் அவர் உன்னை மேன்மைபடுத்தியுள்ளார் என்று எசாயா 55: 5-ல் இறைவாக்குநர் எசாயா போதித்தார்.

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான காரணங்கள் என்ன என்பதை திபா. 72: 2, 7 ஆகிய வசனங்களில் அவர் நீதியின் கடவுள் என்றும் தம் மக்களை நீதியோடு ஆண்டு எளிய மக்களுக்கு நீதி தீர்ப்பு வழங்குவார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இயேசுவும் நீதியை நிலை நாட்டும் படியாகவே இவ்வுலகில் திருப்பணியாற்றினார். இறைச்சாயலில் படைக்கப்பட்ட மனிதவர்க்கம் சுயநலம், அநீதி, சுரண்டல் போன்றவற்றால் உருக்குலைந்து போனதை இயேசு தம் நீதியான செயல்பாட்டினால் நிலை நிறுத்தினார். திபா. 72: 11, 12-ல் இயேசுவை எல்லா அரசர்களும் தரைமட்டும் தாழ்ந்து வணங்குவார்கள் என்றும்; எல்லா இனத்தவரும் அவருக்கு ஊழியம் செய்வார்கள். தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் திக்கற்ற எளியோரையும் அவர் விடுவிப்பார் என்றும் கூறுகிறது. இதனால் இயேசு அனைவரையும் நீதியினால் ஈர்ப்பவர் என்பது புலனாகிறது.

இயேசு கிறிஸ்து தண்டனைக்காகப் பிலாத்து முன் நின்ற போது பிலாத்துவின் மனைவியின் வார்த்தையிலே இயேசு நீதிமான் அவரை ஒன்றும் செய்யக்கூடாது என்ற அறிக்கை வெளிப்பட்டது. பகைஞராக நினைக்கும் ஒருவரை நீதிமான் என்று அறிக்கை செய்வது தான் உன்னத சாட்சி. அந்த

சான்றைப் பிலாத்துவின் மனைவியினிடத்தில் இயேசு பெற்றுக் கொண்டார் (மத். 27: 19, 24). அதினிமித்தம் பிலாத்து இயேசுவை விடுவிக்க முயன்றும் தலைமை குருக்களும் மூப்பர்களும் பரபாசை விடுவிக்க மீண்டும் மீண்டும் பிலாத்துவைக் கட்டாயப்படுத்தினர். இதனால் பிலாத்து இறுதியில் கையைக் கழுவி இவரின் இரத்தப்பழி தனக்கு பங்கில்லை என்று கூறி அநீதிக்கு ஒப்படைத்தார். பற்றுறுதியினால் நீதிமான் பிழைப்பான் என்பது மார்ட்டின் லூத்தரின் சிந்தனைகளில் ஒன்று. ஆனால் பிலாத்து நீதி என்று அறிந்தும் அதில் நிலை நிற்கமுடியாமல் போனார். கடல்நீர் உப்பாக இருந்தாலும் கடலில் வாழும் மீன் உப்புத்தன்மை இல்லாமல் இருப்பது போல அநீதிகள் உலகில் இருந்தாலும் இயேசுவைப் போல் நீதியை நடப்பித்து அனைத்து நாட்டினரையும் கிறிஸ்துவின் அருகில் வரச் செய்வோம்.

**2. அனைவரையும் மீட்புப் பணியால் ஈர்க்கும் கிறிஸ்து** (தி.வெ. 7: 10)

"அவர்கள், "அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் கடவுளிடமிருந்தும் ஆட்டுக்குட்டியிடமிருந்துமே மீட்பு வருகிறது" என்று உரத்த குரலில் பாடினார்கள்."

இயேசு மறுபடியும் பூமியில் வருவதற்கு முன்பு நடக்க இருக்கும் சம்பவங்களைப் பல்வேறு வெளிப்பாடுகள் வாயிலாக கடவுள் யோவானுக்கு வெளிப்படுத்துவதை தி.வெ. 7-ம் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். முதல் பகுதியில் இஸ்ரயேல் மக்களின் குலங்கள் அனைத்திலும் முத்திரையிடப்பட்ட 1,44,000 பேரை யோவான் காண்பதாகக் கூறுகிறார். இவர்கள் தோல்வி, அடிமைத்தனம், துன்புறுத்தல் இவைகளைக் கடந்து கிறிஸ்துவால் மீட்கப்பட்டு புது மானிடமாக வாழ்ந்தவர்கள். இவர்கள் செய்த ஊழியத்தினிமித்தம் மீட்கப்படும் திரளானக் கூட்டமாகிய ஜனங்களை யோவான் தரிசிக்கிறார். இவர்கள் தோல்வி, அடிமைத்தனம், துன்புறுத்தல் இவைகளைக் கடந்து கிறிஸ்துவால் மீட்கப்பட்டு புது மானிடமாக வாழ்ந்தவர்கள். இவர்கள் செய்த ஊழியத்தினிமித்தம் மீட்கப்படும் திரளான கூட்டமாகிய ஜனங்களை யோவான் தரிசிக்கிறார். இவர்கள் பெரிய வேதனைகளைத் தாண்டி வந்தவர்கள் என்றும் தங்கள் தொங்கலாடைகளை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தாலே துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள் (தி.வெ. 7: 14) என்றும் கூறப்பட்டுள்ளது. கடவுள் படைக்க தொடங்கிய காலத்திலிருந்து இந்நாள்வரை இத்தகைய வேதனைகள் உண்டானதில்லை என்று இயேசு மாற்கு 13: 14 இல் கூறியது நிறைவேறினது. இவர்கள் மகா துன்பகாலத்து பரிசுத்தவான்கள் என்பது தெளிவாகிறது. இந்தத் திரளான கூட்டத்தார் தொடக்கத்தில் மாசுள்ளவர்களாக, தீட்டுப்பட்டவர்களாக அசுத்தமானவர்களாக, இருந்தவர்கள் தான். ஆனால் கிறிஸ்துவின் மீட்பு பணியால் கிறிஸ்துவண்டை வந்தவர்கள். அவருடைய

அரியணைக்கு முன்பாக வெண்மையான தொங்கலாடை அணிந்தவர்களாய் கையில் வெற்றியின் சின்னமாகிய குருத்தோலை பிடித்தவர்களாயிருந்தார்கள் (திவெ. 7: 9). இந்த ஜனங்கள் தாங்கள் பெற்றிருக்கும் மீட்பின் மகிமையை அரியணையில் வீற்றிருக்கும் கடவுளிடமிருந்தும் ஆட்டுகுட்டியானவரிடமிருந்தும் பெற்றுக் கொண்டோம் என்று பாடினார்கள்.

எழுத்தாளர் ஒருவர் எழுதுவதற்குக் கடற்கரைக்குச் செல்வது வழக்கம். ஒருநாள் அவ்வாறு சென்ற போது சிறுவன் ஒருவன் எதையோ கடலுக்குள் போடுவதைக் கண்டார். சிறுவனிடம் என்ன செய்கிறாய் என்று கேட்டபோது கரைக்கு வந்த நட்சத்திர மீன்கள் வெயில் பட்டால் இறந்து விடாமல் இருக்க அவைகளை மீட்டு மீண்டும் கடலுக்குள் விடுகிறேன் என்றான். இதேபோல் இயேசு கிறிஸ்து நம்மையும், உலகனைத்தையும் பாவத்திலிருந்து மீட்க தம்மை சிலுவையில் தியாகபலியாக ஒப்படைத்தார். அவரால் மீட்புபெற்ற நாம், அவருக்குச் சான்றாக வாழ்ந்து அனைவரையும் கிறிஸ்துவிடம் சேர்க்கும் கருவிகளாவோம்.

### 3. அனைவரையும் ஆளுமையால் ஈர்க்கும் கிறிஸ்து (மத். 2: 6)

“அவர்கள் அவனிடம் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவர் பிறக்க வேண்டும். ஏனெனில், யூதேயாநாட்டு பெத்லகேமே யூதாவின் ஆட்சிமையங்களில்; நீ சிறியதே இல்லை; ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார் என்று இறைவாக்கினர் எழுதியுள்ளார், என்றார்கள்.”

ஏரோது அரசன் காலத்தில் வானத்தில் தோன்றிய விண்மீன் ஒன்று கிழக்கத்திய ஞானிகள் சிலருக்கு, ஓர் அரசன் யூதருக்குப் பிறந்திருக்கிறார் என்ற செய்தியைத் தெரிவித்தது. இச்செய்தியிலிருந்து இறைவன், ஒவ்வொருவரும் இருக்கும் நிலைக்குத் தம்மை உட்படுத்தி அனைவரையும் ஒன்றிணைத்து ஈர்த்துக் கொள்கிறார் என்று புலனாகிறது. அச்செய்தியை அறிந்த ஞானிகள் யூதருக்குத்தானே ஒரு அரசன் பிறந்திருக்கிறார் என்று இருக்காமல், விண்மீன் வாயிலாக உலகமுழுவதுக்கும், யூதருக்கும் அரசனாக கிறிஸ்து பிறந்திருக்கிறார் என்றும் உலகமனைத்தவரும் நம்பிக்கைக்கொண்டு அவரை கண்டுகொள்ள விரைந்து சென்று பணிந்து கொண்டார்கள்.

இயேசுகிறிஸ்துவின் பணி எருசலேம் தொடங்கி உலகின் கடையெல்லை வரை செல்ல வேண்டும். இதுவே இறைத்திட்டம். இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும் என்று யோவா. 10: 17இல் இயேசு கூறுகிறார்.

ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார். பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூத சட்டத்தை அழித்தார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைத்திருக்கும் புதியதொரு மனித இனமாகப் படைத்து அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார் என்று எபே. 2: 14, 15 இல் பவுலடியார் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்து அனைவரையும் ஆளுமையால் ஈர்க்கிறவராக இருக்கிறார். எனவே உயர்ந்தவர், தாழ்ந்தவர், எளியோர்;, செல்வமிக்கவர், என்ற பாகுபாடுகள் இன்றி அனைவரையும் சமமாக ஆளுகை செய்கிறார்.

தென் அமெரிக்க நாடுகளுள் ஒன்றான எல்சால்வடோரின் பேராயர் ஆஸ்கர் ரொமேரோ என்பவர்; ராணுவத்தால் மக்கள் ஒடுக்கப்பட்டதால், மக்கள் வன்முறையாளர்களாக மாறினதைக் கண்டு அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். அம்மக்களின் நல்வாழ்வுக்காகவும் நீதிக்காகவும் போராடினார். இப்பணி கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரின் பணி என்று போதித்து வந்தார். பேராயரை ஒழித்து விட்டால் அமைதியை உருவாக்கலாம் என்று எண்ணிய அதிகாரம் வகிப்போர் 1980 மார்ச் 24 அன்று தொழுகை நடத்திய பேராயரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள். ஆனால் நீதிக்கான போராட்டம் அவர் மரணத்தோடு நின்று விடவில்லை. அவரது இறப்பால் பல்லாயிரம் ஆஸ்கர் ரொமேரோக்கள் எழும்பினர். அவர்கள் கிறிஸ்துவின் ஆளுமையால் ஈர்க்கப்பட்டவர்களாய்க் கிறிஸ்துவின் இராஜ்யம் கட்டப்படவும் அவருக்கு ஏற்புடையவராக வாழவும் அர்ப்பணித்தார்கள். இதனால் அநேகர் கிறிஸ்துவின் பால் ஈர்க்கப்பட்டனர். அன்பானவர்களே கிறிஸ்து நீதியினாலும் மீட்பு பணியினாலும் தம் ஆளுமையினாலும் அனைத்து நாட்டினரையும் தம்பால் ஈர்க்கின்றார் என்பதை அறிந்து நம்மையும் அவருக்கு அர்ப்பணிப்போம்.

அருள்திரு. M.P. விஜயகுமார்

# அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்

## Live Worthy of your Calling

நீமொ. 20: 1-11 உரோ. 6: 12-23

திபா. 14 மத். 7: 15-23

“இப்பொழுது, நீங்கள் பாவத்தினின்று விடுதலைபெற்றுக் கடவுளுக்கு அடிமையாகிவிட்டீர்கள். இதனால் நீங்கள் காணும் பயன் தூய வாழ்வு. இதன் முடிவு நிலை வாழ்வு” (உரோ. 6: 22).

கிறிஸ்தவ விசுவாசிகள் ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்கள். திருச்சபை (எக்ளேஷியா) என்றால் அழைத்து வேறுபடுத்தப்பட்ட கூட்டம் என்று அர்த்தம். ஒரு சிறப்பான நோக்கத்திற்காக, காலா காலங்களில் ஆண்டவர் மனிதரையும் சமூகத்தினரையும் தம்முடைய நோக்கத்திற்காக அழைத்ததுண்டு. ஆபிரகாமை அழைத்தார், வாக்குத் தத்தத்தைக் கொடுத்தார் (தொநூ. 12: 1-3). மோசேயை அழைத்தார், இஸ்ரவேலரை எகிப்தினின்று அழைத்துவரும் பொறுப்பைக் கொடுத்தார் (விப. 3: 4, 10) சாமுவேலை அழைத்தார், இஸ்ரவேலரை (இறைமக்கள்) பரிபாலிக்கும் பொறுப்பைக் கொடுத்தார் (1 சாமு. 8: 1-14). பவுலை அழைத்தார், அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்கும் பணியைக் கொடுத்தார் (திப. 9: 15). மேற்குறிப்பிடப்பட்டவர்களின் சிறப்பு, அவர்கள் தங்கள் அழைப்புக்கேற்றபடி வாழ்ந்தார்கள் என்பதாகும்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச்சிறந்த மறைப்போதகர் மற்றும் சமூக சேவகர் ஆல்பர்ட் ஸ்வைட்சர் என்பவர் (1875-1965). இவர் கடவுளின் அழைப்பைத் தன் வாழ்வில் உணர்ந்த பிறகு தன்னுடைய பேராசிரியர் பணியை விட்டுவிட்டு, ஆப்பிரிக்க நாடுகளில் மருத்துவப் பணியைச் செய்யத் தொடங்கினார்.

ஒருநாள் இவர் தன் பணியாளர்களோடு ஆப்பிரிக்காவில் ஓடும் ஓகோவே ஆற்றின் கரையோரமாய் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது எண்பது வயது மதிக்கத்தக்க வயதான பெண்மணி ஒருவர் உணவு சமைக்கத் தேவைப்படும் விறகுக் கட்டைகளை ஒரு கட்டாகக் கட்டி, தலையில் வைத்து அருகிலிருந்த செங்குத்துப் பாறை மீது சுமக்க முடியாத நிலையிலும் சுமந்து கொண்டு சென்றார். இதை, தற்செயலாகப் பார்த்த ஆல்பர்ட் சுவைட்சருக்கு அக்காட்சி வியப்பாகயிருந்தது. உடனே, அவர் ஓடோடிச் சென்று அந்த வயதான

பெண்மணி சுமந்து சென்ற விறகுக்கட்டையை வாங்கித் தன்மேல் சுமந்து கொண்டு, செங்குத்துப் பாறைக்கு மேலே இருந்த அந்த பெண்மணியின் வீட்டில் இறக்கி வைத்துவிட்டுத் திரும்பி வந்தார்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவருடைய பணியாளர்கள் எதற்காக நீங்கள் அந்த விறகுக்கட்டையைச் சுமந்து சென்றீர்கள்? சொல்லியிருந்தால் நாங்களே அதைச் சுமந்து கொண்டு சென்று அந்த மூதாட்டியின் வீட்டில் வைத்திருப்போமே! என்றார்கள். அதற்கு அவர், அப்படியில்லை பாரமான விறகுக்கட்டை செங்குத்தான பாறைமீது சுமந்து சென்ற அந்த பெண்மணியைப் பார்த்ததும் இயேசு கல்வாரி மலையில் சிலுவையைச் சுமந்துகொண்டு சென்றது எனக்கு ஞாபகம் வந்தது. அதனால் தான் ஓடோடிச் சென்று நான் உதவினேன். இந்த உலகத்தில் யாரும் சுமையைத் தனியாக சுமந்து செல்லக்கூடாது. ஒருவேளை யாராவது இப்படிச் சுமையைத் தனியாகச் சுமப்பதைக்கண்டால் நான் அவர்களுக்கு ஓடோடிச் சென்று உதவி அவர்கள் வாழ்வின் சுமையை இலகுவாக்குவேன். இதற்காகவே நான் அழைக்கப்பெற்றேன் என்றாராம்.

கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வில் நம்முடைய அழைப்பு எப்படிப்பட்டது என்பதை இந்நாளின் திருமறைப்பாடங்கள் வழி தியானிப்போம்.

**1. பரிசுத்தமான வாழ்வு வாழ நாம் அழைக்கப்பட்டோம்** (நீமொ. 20: 9)

“என் இதயத்தை தூயதாக்கிவிட்டேன். நான் பாவம் நீக்கப்பெற்று தூய்மையாயிருப்பவன் என்று யாரால் சொல்லக்கூடும்?”

பரிசுத்தம் என்றால் பலிபீடத்திற்கு ஏற்றது என்பது அர்த்தம். உங்களைத் தூய்மைப்படுத்தி, தூயவராயிருங்கள். ஏனெனில் நான் தூயவர் (லேவி. 11: 44) என்பது இஸ்ராயேல் ஜனங்களுக்குக் கடவுள் கொடுத்த கட்டளையாகும். கடவுளின் உண்மை அவருடைய பரிசுத்தத்தில் விளங்குகிறது. கடவுள் பரிசுத்தர் என்பதால் அவருடைய படைப்பான மனிதரும் பரிசுத்தத்தில் வாழ வேண்டுமென்று விரும்புகிறார். இது ஆண்டவரின் தூய ஆவியால் நடைபெறுகிறது.

அறியாமை கொண்டிருந்த காலத்தின் மோகங்களை தொடர் வாழ்வுக்கு மாதிரியாகக் கொள்ளாமல் கடவுளுக்குக் கீழ்படிந்து வாழ்ந்து பரிசுத்தத்தில் நடக்க புனித பேதுரு அடிகளார் அழைக்கிறார். பரிசுத்தம் கடவுளின் மேன்மையை வெளிப்படுத்துகிறது. இதை ஆண்டவர் ஒரேப் பர்வதத்தில் வெளிப்படுத்தினார் (விப. 3: 1-6). எனவே நம்முடைய பரிசுத்தம் அனைத்து நிலைகளிலும் வெளிப்பட வேண்டும் (1 பேதுரு 1: 15).

மனித வாழ்க்கையின் தருணங்கள் என்பது கடவுள் மனிதனுக்குத் தரும் பரிசாகும். அது அவனை ஆண்டவரிடம் அதிகமாகக்கூட்டி இணைக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு தானியேலின் வாழ்க்கையாகும். தான் சுயமாய் அசுத்தனாய் மாறாமலிருக்கவும் (தானி. 1: 8) பிறர் தன்னை அசுத்தனாய் மாற்றாமலிருக்கவும் (தானி. 1: 9) அவர் முயல்கிறார். தான் அழைக்கப்பெற்ற அழைப்பிற்குப் பாத்திரவானாய் வாழ அவர் எவ்வளவு முயற்சிகளை மேற்கொள்கிறார் என்பதைத் தானியேலின் புத்தகம் வழி நாம் காணமுடியும். இந்த ஒரு விழிப்பு நிலையினால், நாம் இந்த உலகில் கிறிஸ்துவை முன்னிட்டுப் பரிசுத்தமாய் வாழ இயலும்.

**2. முன்மாதிரியான வாழ்வு வாழ அழைக்கப்பட்டோம்** (உரோ 6: 19)

“. . . முன்பு கட்டுப்பாடற்ற வாழ்வுக்கு வழிவகுக்கும் கெட்ட நடத்தைக்கும் நெறிகேட்டிற்கும் உங்கள் உறுப்புகளை நீங்கள் அடிமையாக்கியிருந்தீர்கள். அதுபோல இப்பொழுது தூய வாழ்வுக்கு வழிவகுக்கும் ஏற்புடைய செயல்களுக்கு உங்கள் உறுப்புகளை அடிமையாக்குங்கள்.”

மிஷனரிப் பணிக்காகப் பல பகுதிகளிலிருந்து வாலிபர்கள் பலர் முன் வந்தனர். மிஷனரிப்பணிக்கான பயிற்சியின் கடைசி நாளில் மிஷனறித் தலைமைப் பயிற்சியாளர் மிஷனரி ஒருவரை நாற்காலி ஒன்றில் அமர வைத்து விட்டு ஒரு கண்ணாடிக்குவளை நிறைய தண்ணீரைக் கொடுத்தார். பின்னர் அந்த தலைமை மிஷனரி, அந்த மிஷனரி அமர்ந்திருந்த நாற்காலியைப் பலமாக அங்குமிங்கும் அசைத்தார். அந்நேரத்தில் அந்த குவளையிலிருந்த தண்ணீர் தழும்பி கீழே கொட்டியது.

அப்போது அவர் அந்த இளம் மிஷனரிமார்களிடம் இவ்வாறாகக் கூறினார்; நான் நாற்காலியைப் பலமாக அசைத்தபோது நீங்கள் கீழே விழவில்லை. ஆனால் உங்கள் கையிலிருந்த தண்ணீர் மாத்திரமே கீழே விழுந்தது. உங்களுக்குப் பிரச்சனைகள் ஏராளம் வரலாம். அது உங்களை அசைக்கும். ஆனால் கீழே விழவேண்டியது தண்ணீர் என்னும் உங்கள் துர்க்கிரியை மாத்திரமே என்றாராம்.

இளம் மிஷனரிமார்களின் உடையும், உணவு முறையும், முன் மாதிரியில்லாத வாழ்க்கையும் அவர்களைக் கிறிஸ்துவினின்று அகற்றி நிறுத்தியிருந்ததுதான் இதை அந்த தலைமை மிஷனரி அவர்களிடம் சொல்லக் காரணம். ஆம் கிறிஸ்துவின் பரிசுத்தத்திற்குப் பொருத்தமான நிலையில் வாழாது மாதிரியற்று வாழ்ந்தால் காலத்தை நாம் வெற்றி கொள்ள இயலாது.

நாம் இயேசுவைப் பின்பற்றுபவர் என்னும் நிலையில் கிறிஸ்துவுக்காக உலகில் முன் மாதிரியான வாழ்க்கை வாழ நாம் (திருச்சபை) கடமைப்பட்டிருக்கிறோம். இந்த பொறுப்புணர்வு நம்முடைய விசுவாசத்தை இன்னும் செழுமையுள்ளதாக்கும். இந்த முன் மாதிரி வாழ்வு நம் அழைப்பை மேலும் தெளிவுள்ளதாக்கும். புனித பவுலார், இளம் திருப்பணியாளர் திமொத்தேயுவுக்குச் சொல்லும்போது உன்னைப் பற்றியும், உன் போதனையைப் பற்றியும் கருத்தாயிரு, அவைகளில் நிலைத்திரு. இவ்வாறு செய்தால் நீயும் மீட்படைவாய்; உனக்குச் செவி சாய்ப்போரும் மீட்படைவர் (1 திமொ. 4: 16) என்று ஆலோசனை கூறுகிறார். இயேசு கிறிஸ்து காண்பித்த மாதிரியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறவர்களுக்கு மாத்திரமே கிறிஸ்துவின் வழியான மீட்பிற்கு அனுபவக்காரர்களும் பங்காளிகளுமாக வாழ இயலும். ஆகவே கிறிஸ்துவுக்கு ஏற்புடைய மாதிரிகளை உருவாக்கி கிறிஸ்துவுக்கு உத்தம மாதிரிகளாக வாழ முயலுவோம்.

### 3. அழைப்பிற்குத் தகுதியான நிலையில் வாழ அழைக்கப்பட்டோம்

(மத். 7: 16a)

“அவர்களின் செயல்களைக் கொண்டே அவர்கள் யாரென்று அறிந்து கொள்வீர்கள்.”

நல்லமரம் அல்லது நல்ல கனி என்பது ஒரு மனிதர் எப்படிப்பட்டவர் என்று அறிந்து கொள்வதற்கான மார்க்கமாகவே காணப்படுகிறது.

இயேசு கிறிஸ்து தம்மை அனுப்பின பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் மிகவும் விழிப்பாயிருந்தார். இதனால், தம்மைப் பிதா அழைத்ததின் பொருளை உலகம் அறியச் செய்தது சிலுவையிலாகும். மானிட விடுதலையை உட்படுத்திய இறையரசின் நற்செய்தியை அறிவிக்க பிதாவினால் தாம் உலகில் அனுப்பப்பட்டிருக்கிறேன் என்ற உறுதியான உணர்வும் அதற்காக எந்தத் துன்பத்தையும் சந்திக்கத் தாம் தயாரென்ற அர்ப்பணமும் கலந்த வாழ்க்கையாயிருந்தது. இயேசுவின் இவ்வுலக வாழ்க்கை. இவ்வித ஒரு வாழ்க்கை முறைதான், தாம் அழைக்கப்பட்டதின் நோக்கத்திற்காகத் தம்மை அதற்குத் தகுதியான நிலையில் வைத்து வாழ இயன்றது.

சிலுவையை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறையினூடே மாத்திரமே உலகத்தின் மதிப்பீடுகளுக்கு மாற்றான ஒரு வாழ்க்கைமுறையை ஒருவரால் உருவாக்கியெடுக்க இயலும். அதற்கு நாம் தகுதியானவர் என்று ஆண்டவர் நம்மை அழைத்திருக்கும்போது அந்தத் தகுதிக்கு ஏற்ப வாழ வேண்டியது நம் பொறுப்பு.

கனியிருக்கும் என்று நம்பச் செய்கின்ற அத்தி மரமும் (மத். 21: 18-22) உண்ணமுடியாத கசப்பான பழங்களையுடைய திராட்சைகளும் (எசாயா 5: 2) பயிருக்கிடையிலிருந்து பிடுங்கிவிடவோ அழிப்பதற்கோ இயலாதபடி வாழும் களைகளும் (மத். 13: 24-30) ஆகிய மனிதர்நிலை இன்று அதிகமாக வளர்ந்தே காணப்படுகிறது. மனிதர் நிலை இந்நிலையில் கவலைக்குரியதாயிருக்க மனிதனின் பேராசைகளை ஊதிப்பெருக்கி உலகம் சார்ந்த பொருளியல் ஆசீர்வாதங்கள் தான் இறை ஆசீர்வாதங்கள் என்று திருச்சபையாருக்குப் போதிப்பதின் வழியாக கிறிஸ்தவ ஆன்மீகம் விகற்பமாக்கப்படுகிறது. புனித பவுலடிகளாரின் மொழியில் சொல்வதென்றால் இப்படிப் போதிப்பவர்கள் ஓநாய்கள் (திப. 20: 29). அவர்களைத் துர் உபதேசக்காரர்களென்று அழைக்கவே பேதுரு அடிகளார் விரும்புகிறார். (2 பேதுரு 2: 1). இவர்கள் பலன் தருபவர்கள் என்றாலும் (மத். 7: 16) சோதனை செய்து (1 யோவான் 4: 1) அறிந்து கொள்ள திருமறை வழி ஆண்டவர் நமக்கு அழைப்பு விடுக்கிறார். எனவே, நாம் நம்மைப் பிறருக்கு முன்பாக நல்ல மரமாகவும், நல்ல கனிகளாகவும் முன்னிறுத்தி அழைப்புக்குத் தகுதியான நிலையில் வாழ்ந்து கிறிஸ்துவை நம் மூலமாக வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. **P. சேம் இம்மானுவேல் தோமஸ்**

# ஒரே ஆண்டவர் ஒரு திருமுழுக்கு

## (One Lord, One Baptism)

எண். 11: 23-30 1 கொரி. 10: 1 - 5

திபா. 23 யோவான் 10: 7 - 18

உலகில் வாழுகின்ற மனிதர் தங்களுக்கு மேலான ஒரு ஆற்றல் இந்த உலகத்தில் இருக்கிறது. அந்த ஆற்றல் தான் கடவுள் என்று நம்புகின்றனர். அடிப்படையாகவே சமயங்கள் எல்லாம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடவுள் வணக்கத்தைக் கொண்டுள்ளன. இதில் ஒரே கடவுள் வணக்கத்தைக் கொண்டுள்ள செயல்பாடுகளில் நம் கிறித்தவ சமயமும் ஒன்று கிறித்தவ சமயம் சார்ந்த சடங்குகளில் திருமுழுக்கு என்பது நீங்கா இடம் பெற்றுள்ளது. காணப்படுகிறது. இது சீர்திருத்தத் திருச்சபையின் இரண்டு திருவருள் சாதனங்களில் ஒன்று "Baptism is an outward and visible sign of an inward and spiritual grace" என்று புனித அகஸ்டின் கூறுகிறார். இதை நாம் "உள்ளான மாற்றத்திற்கான வெளிப்படையான அடையாளம்" என்று புரிந்துக்கொள்ளலாம். ஒரே ஆண்டவரில் நம்பிக்கை வைத்து ஒரே திருமுழுக்கில் உறுதிக் கொண்டிருக்கும் சமூகம் பெற்றிருக்கும் நற்பேறுகளைச் சிந்தனைக்குத் தரப்பட்ட விவிலிய பகுதிகளின் வழி சிந்தித்து அறிந்து கொள்வோம்.

எபே. 4: 5, 6-ல், "ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே. திருமுழுக்கு ஒன்றே. எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே. அவர் எல்லாருக்கும் மேலானவர்; எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர்; எல்லாருக்குள்ளும் இருப்பவர்." என்கிறார் பவுலடியார்.

**1. ஒரே ஆவியைப் பெற்ற சமூகம்** (எண். 11: 23-30)

இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பு அவர்களைத் தலைமையேற்று நடத்திய மோசேயின் மனதை உடைத்துப்போடக் கூடிய நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது மோசேயின் தாங்கக்கூடாத சுமையைத் தாங்க 70 மூப்பரைக் கடவுள் தெரிந்தெடுக்கக் கூறுகிறார். அது மட்டுமல்லாமல், ஆண்டவர் மோசேயிடம் (எண். 11: 17) "நான் இறங்கி வந்து அங்கே உன்னோடு பேசுவேன்; உன்னிலிருக்கும் ஆவியில் கொஞ்சம் எடுத்து நான் அவர்களுக்கு அளிப்பேன்; நீ மட்டும் சுமக்காதபடி மக்களின் பளுவை அவர்களும் உன்னோடு சேர்ந்து தாங்குவார்கள்" என்று கூறுகிறார். மோசே ஆண்டவரின் வார்த்தைகளை

மக்களிடத்தில் கூறி மக்களின் மூப்பரில் எழுபது பேரை அவர்களின் அறிவு மற்றும் சமூகத்தில் அவர்களுக்குக் காணப்படும் மதிப்பின் அடிப்படையில் அழைத்துக் கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தி வைத்தார். உடனே ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து மோசேயில் இருந்த ஆவியில் கொஞ்சம் எடுத்து எழுபது மூப்பருக்கும் அளித்தார். இதனால் மோசே தன்னிடமிருந்த எந்த ஆற்றலையும் இழக்கவில்லை. ஆவி மூப்பர்கள் மேல் இறங்கிய உடனே அவர்கள் எல்லாரும் இறைவாக்கு உரைத்தனர். இறைவாக்கு உரைப்பது என்பது எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே கூறுவது மட்டுமல்ல செய்தியை மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் இறைவாக்கு உரைத்தல் என்பது இங்குத் தெளிவாகிறது. மோசே எழுபது பேரையும் பாளையத்திற்கு வெளியே இருக்கின்ற கூடாரத்திலே கூடிவரச் செய்கிறார். ஆனால் அந்த எழுபது பேரில் எல்தாது மற்றும் மேதாது என்கிற இரண்டு பேரும் வரவில்லை. ஆனால் அவர்கள் ஒரே கடவுளை நம்புகிற சமூகத்தைச் சார்ந்த படியினால் அவர்கள் மீதும் அந்த ஆவி தங்கினது. இது குறிப்பிட்ட சில மனிதருக்கும் சில இடத்திற்கு மட்டும் ஆவி கொடுக்கப்படும் என்ற தவறான புரிந்துக்கொள்ளுதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. அவர்கள் கூடாரத்துக்குச் செல்லாமல் பாளயத்திலேயே இறைவாக்குரைத்தனர். ஆகவே அவர்களைத் தடை செய்ய வேண்டும் என்று யோசுவா மோசேயிடம் கூறும்போது மோசேயின் பதில் குறிப்பிடத்தக்கது.

மனித வாழ்வில் தோற்றுவிக்கப்படும் கடவுளின் ஆற்றல், இடம், காலம், சடங்கு முறைகள் முதலிய எதற்கும் கட்டுப்பட்டதன்று. கடவுளின் விருப்பப்படியும் அவரது ஞானத்தின்படியேயும் தகுந்த நேரத்தில் அவர் தமது ஆற்றலை மக்களுக்குக் கொடுக்கிறார். இங்கு இந்த மூப்பர்கள் எல்லாரும் ஒரே கடவுளை நம்பி ஒரே பற்றுறுதியில் உறுதியாய் நின்றபடியினால் இந்த சமூகத்திற்கு ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் ஒரே ஆவியை அருளினார். தற்கால சமூகத்தில் வாழும் மக்களாகிய நாமும் இவைகளில் நம்பிக்கை வைத்து ஏற்றத்தாழ்வின்றி கடவுள் அனைவருக்கும் ஒன்றுபோல் தரும் ஒரே ஆவியைப் பெற்றுக்கொள்ள ஆயத்தப்படுவோம்.

**2. ஒரே ஆன்மிக அனுபவத்தைப் பெற்ற சமூகம்** (1 கொரி. 10: 4)

இஸ்ரவேலர் பெற்ற ஆன்மிக அனுபவத்தைத் திருத்தூதர் பவுலடியார் திருமுழுக்கு கருத்தியலுடன் இணைத்து விளக்குகின்றார். இஸ்ரவேல் சமூகத்தில் மக்கள் அனுபவித்த நான்கு ஆவிக்குரிய நன்மைகளை இந்தப் பகுதியில் சுட்டிக் காட்டுகிறார்.

* நம் முன்னோர் அனைவரும் மேகத்தின் கீழ் வழிநடந்து அனைவரும் கடலைக் கடந்து சென்றனர் (வ 1)

* அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்கு பெற்றார்கள் (வ 2)

* ஒரே ஆன்மீக உணவை உண்டார்கள் (வ 3)

* ஒரே ஆன்மீகப் பானத்தைப் பருகினார்கள் (வ 4)

புற இனத்தவர் அதிகமாக வாழ்ந்து வந்த பட்டணம் தான் இந்த கொரிந்து. கொரிந்து கிறிஸ்தவர்களில் யூதர்களை விட யூதரல்லாதவர்கள் தான் அதிகம் காணப்பட்டனர். யூத சமய நூலைப் பற்றியும் இஸ்ரவேல் மக்களின் வரலாற்றைப் பற்றியும் தெரியாதவர்களுக்குப் பவுல் இவைகளைப் குறிப்பிடுகிறார். கடைசியில் யாவேயையும் இயேசுவையும் சமநிலைக்கு நிறைவு செய்கிறார். இங்குப் பவுல் 1 கொரி. 10: 1, 2-ல் இஸ்ரவேல் மக்கள் மேகத்தின் கீழ் வழி நடந்ததையும், கடலைக் கடந்து சென்றதையும் திருமுழுக்கு அனுபவத்தோடு ஒப்பிட்டு அனைவரும் ஒரே ஆன்மீக அனுபவத்தை இணைந்து பெற்றதாகக் கூறுகிறார்.

Baptizo என்ற கிரேக்க வார்த்தைக்குப் immerse, sink, drown, go under, sink into bath போன்ற அர்த்தங்களைத் தரக்கூடிய ஆங்கில வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. உரோமையர் 6: 3 மற்றும் கலாத்தியர் 3: 27லும் "திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம்" என்று கிறிஸ்தவத் திருமுழுக்கையும், பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் சமூகத்தில் "மோசேயோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்றார்கள்" என்று 2-ஆம் திருவாசகத்தில் யூத திருமுழுக்கையும் குறித்துக் கூறுகிறார். இந்த இரண்டு வாக்கியங்களில் பழைய ஏற்பாட்டில் "இஸ்ரவேலர்" உடன்படிக்கை சமூகமாகவும், புதிய ஏற்பாட்டில் "திருச்சபை" உடன்படிக்கை சமூகமாகவும் இருக்கிறதைச் சுட்டிக் காட்டுகிறார். மோசேயோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கைப் பெற்றுக் கொண்ட இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தில் தங்கள் தவறுகளுக்காகத் தண்டிக்கப்பட்டது போல கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கு பெற்றிருந்தாலும் தவறு செய்தால் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்று பவுல் குறிப்பிடுகிறார். மேலும் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் வனாந்திரத்திற்கு மன்னாவை உணவாக உண்டு (விடுதலைப் பயணம் 6) எல்லாரும் கன்மலையின் தண்ணீரை ஆன்மீகப் பானமாகப் பருகினார்கள் (விப. 17: 117) என்று 3 மற்றும் 4-ஆம் திருவாசகங்களில் கூறுகிறார். அப்படி எல்லாரும் சமூகமாக ஒரே ஆன்மீக அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இன்று ஒரே வழிபாட்டில் பங்குபெறும் மக்கள் விதவிதமான ஆன்மீக அனுபவத்தைப் பெற்றுக் கொண்டேன் என்று கூறுவது பெருகி வருகிறது. ஒரே

கடவுளை நம்பி ஒரே திருமுழுக்கில் உறுதி ஏற்றிருக்கும் நாம் இணைந்து ஒரே சமூகமாய் ஒரே ஆன்மிக அனுபவத்தைப் பெற முயல்வோம்.

**3. ஒரே ஆயரைப் பெற்ற சமூகம்** (யோவான் 10: 7-18)

யோவான் 10: 11-ல் "நல்ல ஆயன் நானே, நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்" என்று இயேசு கூறுகிறார். ஒரே கடவுளை நம்பி ஒரே திருமுழுக்கில் உறுதிக்கொண்டிருக்கும் சமூகம் இயேசுவை நல்ல ஆயனாக பெற்றுக்கொண்ட சமூகம். கூலிக்கு மேய்ப்பவர், ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போவார் (10: 12) ஏனெனில் அவர் நல்ல ஆயரும் அல்லர் ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல. ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக்கொண்டு போய் மந்தையைச் சிதறடிக்கிறது போல ஆடுகளைப்பற்றி கவலைக் கொள்ளாமல் தவறான போதனைகளைக் கூறி மந்தையைத் திருடுவதற்கும், கொல்வதற்கும், அழிப்பதற்கும் (10: 10) துணிந்தவராக இருப்பர். இயேசுவாம் நல்ல ஆயனைத் தலைவராகப் பெற்றிருக்கும் சமூகம் அவரின் அன்பிற்கு உட்பட்டதாக இருக்கும். இயேசு "நல்ல ஆயன் நானே" என்று கூறும்போது இந்த சமூகத்தின் மீது எவ்வளவு அன்பும் மனதுருக்கமும் வைத்திருக்கிறார் என்பதை உணரமுடிகிறது. இந்த நல்ல ஆயன் இந்த சமூகத்திற்காக "தம் உயிரைக் கொடுப்பவராகவும்" (வ. 11) இந்த சமுகத்தில் உள்ள "தம் ஆடுகளை அறிந்திருக்கிறவராகவும்" (வ 15) இருக்கிறார் மேலும் இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உண்டு அவைகளையும் நான் நடத்தவேண்டும் என்று விரும்பி மற்ற ஆடுகளுக்காகக் காத்திருக்கிறார். நாம் இந்த நல்ல ஆயனைப் பெற்ற சமூகத்தில் இருக்கிறோமா என்று சிந்திப்போம்.

அன்பர்களே! ஒரே ஆண்டவரில் நம்பிக்கை வைத்து ஒரே திருமுழுக்கில் உறுதி ஏற்று ஒரே ஆவியைப் பெற்றுக்கொண்ட சமூகமாக, ஒரே ஆன்மீக அனுபவத்தைக் கொண்ட சமூகமாகவும், ஒரே ஆயனைக் கொண்ட சமூகமாகவும் இந்த உலகில் வாழ்ந்து ஒரே கடவுள் நம்பிக்கைக்கும், ஒரே திருமுழுக்குக் கோட்பாட்டிற்கும் சான்று பகர்ந்து அதனால் வரும் பேற்றினை நமக்கு உரியதாக்குவோம். ஆமென்.

அருள்திரு. **M. ஜாபு ஜெய்சிங்**

**21.01.2024** திருத்தோற்றத்திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு, (ஒருமைப்பாட்டு ஞாயிறு)

# நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு

## (Unity for Justice and Peace)

எசே. 37: 15-28 பிலி. 4: 8-20

திபா. 4 மத். 5: 21-26

"அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி அவற்றை ஒன்றாகச் சேர்" எசே. 37: 17

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் டஃப் 1806 ஏப்ரல் 25-ம் நாள் பிறந்தவர். பல்கலைகழகத்தில் இறையியல் பட்டமும், அறிவியல் பட்டமும் பெற்ற இவர் தனது 23-ஆவது வயதில் தன் வாழ்க்கையை அருட்பணிக்காக அர்ப்பணித்தார். இவருக்கு இந்தியாவில் வாழும் மக்களுக்கு நற்செய்திப் பணி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவானது. சமூகத்தில் உயர்குடி மக்களுக்கு நற்செய்தி பணி செய்யும் வாய்ப்புகள் அந்நாட்களில் குறைவாகவே இருந்தது. 1830-இல் கல்கத்தாவில் வந்து செல்வந்தர் மற்றும் சமூகத்தில் உயர்ந்தோருக்கு மேற்கத்திய கலை, அறிவியல் கல்வி, ஆங்கிலேயக் கல்வி இவற்றின் வாயிலாக மூடநம்பிக்கைகளை ஒழித்து நற்செய்திப் பணி செய்ய முனைந்தார். கல்வி வழியாக இறை நீதியை நிலைநாட்ட முனைந்த இவரது முயற்சி பலன் தர ஆரம்பித்தது. ஒரே வாரத்தில் 300 மாணவர்கள் இக்கல்விக்கூடத்தில் சேர்ந்தனர். பல அருட்பணியர் இயக்கங்கள் இவரது முயற்சியைக் குறை கூறியபோதும் அலெக்சாண்டர் டஃப் உறுதியாகச் செயல்பட்டார். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட அக்காலத்தில் உயர்குடிப் பெண்களுக்காகத் தனிப்பள்ளி ஆரம்பித்தார். கல்வியுடன் நற்செய்திப் பணி என்ற இவரது தரிசனத்திற்கு வில்லியம் கேரியும், ஆதரவளித்தனர். இவரது முயற்சியால் உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம் போன்ற சமூக அநீதிகள் மறைந்தன.

அன்று அலெக்சாண்டர் டஃப், வில்லியம் கேரி ஆகியோரின் ஒன்றிப்பு மற்றும் ஒருமித்த செயல்பாடு நீதியும் அமைதியும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வழிகோலியது. தற்காலத்திலும் நாம் வாழும் சமுதாயத்தில் நீதிக்காகவும் அமைதிக்காகவும் ஒன்றிணைய இறைவர் நம்மை அழைக்கிறார். நமக்குத் தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் நீதியையும், அமைதியையும் நாம் சமூகத்தில் நிலைநாட்டப்படுவதற்கான சாத்தியங்களைச் சிந்தனைச் செய்வோம்.

**1. பிரிவினைகளைக் களைதல்** (எசே. 37: 15-28)

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கும் எருசலேமில் எஞ்சியிருந்தோருக்கும் இறைவாக்கு உரைத்தவர் எசேக்கியேல் இறைவாக்கினர். அரசர் சாலமோனுக்குப் பின் வடநாடு, தென்நாடு என்று இரண்டாகப் பிளவுபட்ட நாடு மீண்டும் ஒருங்கிணைந்த இஸ்ரயேலாக மாறவேண்டும் என்கிற கடவுளின் விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். கடவுள் இறைவாக்கினரிடம், இரண்டு கோல்களை எடுத்துக் கொள்ளவும். அதில் ஒன்று யூதாவுக்கும் அவனோடு சேர்ந்திருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் உரியது. மற்றொன்று யோசேப்புக்கும் அவனோடு சேர்ந்த இஸ்ரயேல் வீட்டார் அனைவருக்கும் உரியது. இவ்விரண்டு கோல்களும் ஒரே கோலாகும்படி அவற்றைச் சேர்த்துக்கொள் என்று உருவகமாக ஒன்றிப்பின் செய்தியைச் சொல்லுகிறார் (எசே. 37: 15-19). ஒரே சகோதர உறவுகள் வடநாடு தென்நாடு எனப் பிளவுபட்டு உறவுகளில் விரிசல் இருந்ததையும் வணிகம், போக்குவரத்திற்கான தடைகள் எருசலேம் கோவிலில் இணைந்து வழிபட விரும்பாமல் வழிபாட்டுத் தலங்களைத் தனியே அமைத்துக் கொண்ட சூழலும் காரணங்கள் ஆகும். பிரிவினையின் விளைவாக இஸ்ரேலர்கள் அசீரியர்கள், பாபிலோனியர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டுக்குள் சிறைக் கைதிகளாக, அகதிகளாக, கைவிடப்பட்டவர்களாக உரிமை இழந்து காணப்பட்டார்கள். ஆகவே பிரிவினையால் சிதறிக்கிடந்த மக்களைக் கடவுள் ஒன்றுபடுத்தி நீதியையும் அமைதியையும் ஏற்படுத்த உந்துதல் தருகிறார். மட்டுமல்லாமல், இவர்கள் கடவுளிடமிருந்தும் பிரிந்தே வாழ்ந்தவர்கள். தீவினை செய்யும்போது மனிதர் கடவுளின் உறவிலிருந்து விலகிவிடுகிறார்கள். ஆனால் கடவுளிடம் திரும்பிவரும்போது நெஞ்சமும் உள்ளமும் உள்ளார்ந்த புதுப்பொலிவு பெற்று கடவுளோடும் சகோதர உறவுகளோடும் ஒன்றுபட்டு அமைதியும், நீதியும் மிக்க சமூகமாய்த் திகழ முடியும் என்பதை அவர் நமக்குக் கற்றுத் தருகிறார்.

பிரிவினை களைந்து சகோதர சகோதரிகளாய் ஒன்றிணைந்து வாழ்வது இனிமையானது (திபா. 133: 1) இன்று உறவுகளில் ஏற்படும் விரிசல்கள், சபைகளுக்குள் ஏற்படும் பிரிவினைகள் போன்றவற்றைக் கண்டு கடவுள் உள்ளம் வருந்துகிறார் என்பதைத் திருமறை வழியாக அறிய முடிகிறது. யோவான் 17: 20-23 வரை உள்ள இறைவார்த்தைகளை நாம் படிக்கின்றபோது, நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்து தம் சீடர்களின் ஒற்றுமைக்காக ஜெபிக்கிறதை நாம் அறிந்து கொள்ளலாம் “எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் உலகம் நம்பும்” (யோவான் 17: 21).

மூங்கில் என்கிற சிறுகதையின் எழுத்தாளர் ஜெயகாந்தன், அண்ணன் தம்பிக்கிடையேயான அருமையான உறவையும் பின் நாட்களில் வரக்கூடிய சொத்து சார்ந்த பிரச்சனைகளையும் அதன் மூலமாக அவர்களுடைய உறவு எப்படி முறிந்து போகிறது என்பதையும் எழுதி இருக்கிறார். ஒருவர் இறந்து போகிற பொழுதுதான் மற்றொருவர் தங்களுடைய நீண்டகால பகை தேவையற்றது என உணருகிறார். ஜெயகாந்தன் இப்படிச் சொல்லி கதையை முடிக்கிறார். ஒருவன் மரிக்கும்போது தான் இன்னொருவருக்கு ஞானம் பிறக்கிறது. சாவில் பிறந்த ஞானம் வாழவா பயன்படும்? ஆகவே, நாமும் நீதியும், அமைதியும் நாம் வாழும் சமுதாயத்தில் மலர பிரிவினைகளைக் களைந்து ஒன்றிணைந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

**2. நல்மனம் பொருந்துதல்** (மத்தேயு 5: 21-26)

இயேசு கிறிஸ்துவின் மலைப் பொழிவானது மிகவும் சிறப்புடையது. இயேசு நாதர் எப்போதும் மனித நல்லுறவுக்கு முக்கியத்துவமளித்தவர். இங்கு சகோதர சகோதரிகள் பகை மறந்து நல்மனம் பொருந்துதலைக் குறித்துப் போதிக்கிறார். ஆலயமும், அதில் படைக்கும் காணிக்கையைக் காட்டிலும் சகோதர பாசமும், பகை களைந்து ஒப்புரவாதலும் அவசியமானது என்கிறார். சக மனிதரோடு ஒப்புரவாகாமல் படைக்கப்படும் படையலும் வழிபாடும் அர்த்தமற்றது. "ஒப்புரவாகுதலுக்குப்பின் வழிபாடு" என்பதே இயேசுவின் ஆன்மிகம் (மத். 5: 23-24). அது மட்டுமல்ல நல்மனம் பொருந்துதலுக்கான தாமதம் ஆபத்தானது என்றும் கூறுகிறார் (மத்தேயு 5: 26).

கொலை செய்யாதிருப்பாயாக என்கிற ஆறாவது கட்டளையை அறிந்திருந்த யூதர்களுக்கு இயேசுவானவர் அதற்குரிய புதிய விளக்கத்தைக் கொடுக்கிறார். பிறர் மீது கொண்டிருக்கும் நியாயமற்ற கோபம், கடினமான வார்த்தை இவை கூட கொலை செய்வதற்குச் சமமான தண்டனைக்குரியது. சொற்களாலும், சிந்தனையாலும் கூட ஒருவரை மற்றொருவர் கொல்ல முடியும் என்பதுதான் நாம் இங்கே புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. மனிதம் மதிக்கப்பட வேண்டியதும், மனித உணர்வுகள், உறவுகள் பாதுகாக்கப்பட வேண்டியதும் அவசியம். நல்மனம் பொருந்துதல் வழியாக மரணமடைந்த உறவுகள் மறுபிறப்படைகின்றன.

ஆட்ரி ஹெபர்ன் சொல்லுகிறார், "கண்கள் அழகாக இருக்க வேண்டுமா? உங்களைச் சுற்றி உள்ளவர்களில் நல்ல தன்மைகளைக் காணுங்கள். மெல்லிய உடல் வேண்டுமா? உங்களின் உணவைப் பசித்தவர்களுடன் பகிர்ந்து உண்ணுங்கள். அழகான கூந்தல் வேண்டுமா? உங்கள் கூந்தலை ஒரு குழந்தை தனது பிஞ்சு விரல்களால் ஒருமுறை கோதி விடட்டும். எவரையும்

துச்சமாக நினைக்காதீர்கள். பொருட்களை விட அவசியம் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் மனிதர்கள்."

தூய பவுல் அடிகளார் உரோம் நகர மக்களுக்குக் கூறும்போது, "இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் அமைதியுடன் வாழுங்கள்" (உரோ. 12 : 18) என்று கூறுகிறார். ஆகவே நாமும் நம்மோடு வாழும் சக மனிதர்களிடம் நல்மனம் பொருந்துவதே நீதியையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கான வழி என்பதை உணர அழைக்கப்படுகிறோம்.

**3. பாடுகளில் பங்கேற்றல்** (பிலி. 4: 8-20)

பவுலார் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம், ஒற்றுமை பற்றியும் மகிழ்ச்சி பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. பவுல் தன் இரண்டாம் நற்செய்திப் பயணத்தின்போது, பிலிப்பியர் பலரை மனம் மாற்றினார். திருப்பணியினிமித்தம் சிறையிலடைக்கப்பட்டு பின்னர் வியத்தகு முறையில் சிறையிலிருந்து தப்பினார். மூன்றாம் நற்செய்திப் பணியின் போதும் பிலிப்பியரைச் சந்தித்தார். பின்னாளில் பவுல் சிறையிலடைக்கப்பட்டபோது பிலிப்பியர்கள் எப்பிராதீத்திடம் பணம் கொடுத்து பவுலுக்குப் பணிவிடை செய்யுமாறு அவரை அனுப்பினர். பல திருச்சபைகள் பவுலாரின் பாடுகளில் பங்கு கொள்ள இயலாதபோது பிலிப்பியரின் பேருதவி பவுலாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நீதிக்கும், அமைதிக்குமான கிறிஸ்துவின் ஒன்றிப்புத் திருப்பணியில் சவால்களும், சிறை அனுபவங்களும் அதிக வலியை ஏற்படுத்தியிருப்பினும் துன்பத்தில் பங்கேற்ற பிலிப்பியர்கள்நம் அனைவருக்கும் நற்பணிவிடைக்கான முன்மாதிரியாக உள்ளனர். பிலிப்பியர் தங்களுக்கு அதிகமாய் இருந்ததால் அவற்றில் கொஞ்சத்தைக் கொடுத்து உதவியவர்கள் அல்லர், மாறாக குறைவுகளுடன் வாழ்ந்தவர்கள் மனநிறைவுடன் உதவி செய்தனர் என்பதை அறிய முடிகிறது (பிலி. 4: 19). தமிழில் ஒரு கூற்று உண்டு. "பிறரின் இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள். மற்றவரின் துன்பத்தில் பங்கேற்று உதவி செய்." பவுலடிகளார், உரோமையர் 12: 15-ம் வசனத்தில் "மகிழ்வாரோடு மகிழுங்கள்; அழுவாரோடு அழுங்கள்" என்று கூறுகிறார்.

ஒன்றிப்பு என்பது உள்ளவர்களோடு மட்டுமல்ல அனைத்தையும் இழந்து இல்லாமையிருப்போருடனும் ஏற்படுத்திக் கொள்வதாகும். கூடி வருவது, கூடிப் பகிர்வது போன்ற ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் வாயிலாக நீதியையும் அமைதியையும் நிலைநாட்டி இறையாளுகையின் விழுமியங்களை வெளிப்படுத்தி வாழ அழைக்கப்படுகின்றோம்.

அருள்திரு. **J. தேவ ராஜ ஜெபஸ்டின்**

# பொறுப்புள்ள குடியுரிமை
## (Responsible Citizenship)

ஆமோஸ் 5: 7-15 உரோ. 13: 1-10

திபா. 146 மாற். 12: 13-17

"ஆகையால், அனைவருக்கும் நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுங்கள்" (உரோ. 13: 7).

நாட்டிற்கு கிறிஸ்தவச் சமூகத்தின் சேவையையும் பங்களிப்பையும் பொது மேடையில் நினைவு கூர்ந்து, பெருமைப்பட்ட கர்நாடக மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் ஹேன்ஸ்ராஜ் பரத்வாஜ் அவர்கள் கிறிஸ்தவர்களின் பொறுப்புள்ள குடியுரிமையைக் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

ஏழை மக்களுக்கு மனித மாண்பைக் கொணர்ந்து அவர்களுக்குக் கல்வியறிவையும் கொடுத்து வருகின்ற ஏராளமாகக் கிறிஸ்தவ நிறுவனங்களைப் பெற்ற நமது நாடு பாக்கியமானது. கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் 2.3 விழுக்காட்டினராக மட்டுமே இருந்தாலும், இங்கு 20 விழுக்காடு (ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு) கல்வி நிறுவனங்கள், ஆரம்ப சுகாதார நிறுவனங்கள் மற்றும் சமூகநல மையங்களை நடத்தி நமது நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

அந்த ஆளுநரின் பாராட்டு மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல, இது உண்மையே! ஏறத்தாழ 25 விழுக்காடு சேவை நிறுவனங்களைக் கிறிஸ்தவர்கள் தான் நடத்துகின்றனர். இச்சேவை மூலம் சாதி, சமய, நிற, இன, மொழி, பால் என அனைத்தையும் கடந்து நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார பெருக்கத்திற்கும், சமூக நீதிக்கும், தனி மனித முன்னேற்றத்திற்கும் ஏதுவாகத் திருச்சபைகள் தங்கள் பொறுப்புள்ள குடியுரிமையைப் பதிவு செய்துள்ளன.

இன்று 74வது குடியரசு தின விழாவைக் கொண்டாடுகின்ற நாம் பொறுப்புள்ள குடியுரிமையை மேலும் சீரிய நிலையில் செயல்படுத்துவதற்காக "அனைவருக்கும் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுங்கள்" என்னும் இறைவார்த்தையின் அடிப்படையில் தியானம் செய்வோம்.

**1. அநீதியை வெளியேற்றும் குடியுரிமை** (Citizenship that Eliminates Injustice)

" தீமையை வெறுத்துவிடுங்கள், நகர் வாயிலில் நீதியை நிலைநாட்டுங்கள் அப்பொழுது ஒருவேளை படைகளின் கடவுளாகிய ஆண்டவர் யோசேப்பின் வீட்டாரில் எஞ்சியிருப்போர்க்கு இரக்கம் காட்டுவார்" (ஆமோஸ் 5: 15).

கி.மு. எட்டாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் வடநாடான இஸ்ரயேலில் வலியோரை வாழ்த்தி எளியோரை வாட்டும் அநீதியும் பொய்மையும் நிறைந்து பரவிக்கிடந்தது. நகர் வாயிலில் (ஒலிமுகவாசல்) தீர்ப்பாயம் அமைந்துள்ள இடத்தில் நேர்மை மண்ணில் எறியப்பட்டது (ஆமோஸ் 5: 7) நல்லார் துன்புறுத்தப்பட்டனர், கையூட்டு வாங்கப்பட்டது. வறியோர்க்கு நீதி மறுக்கப்பட்டது (ஆமோஸ் 5: 12). உண்மை பேசுபவர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டனர் (ஆமோஸ் 5: 10). ஏழையர் நசுக்கப்பட்டார்கள். அவர்களிடம் பெறப்பட்ட தானிய வரியைக் கொண்டு உயர் பதவிகளில் இருப்போர் ஆடம்பர வீடு கட்டினர் (ஆமோஸ் 5: 11).

இத்தகைய அநீதிகளைக் கண்டு சீற்றம் கொண்ட ஆமோஸ் இறைவாக்கினர் நீதியையும் நேர்மையையும் வளர்த்துக் கொண்டாலன்றி, எந்த இனமும் கடவுளின் தண்டனைக்கு உள்ளாகும் என்று எச்சரிக்கை விடுத்தார். மேற்சொல்லப்பட்ட அநீதிகள் அனைத்தும் தற்காலத்திலும் மிகவும் வலுப்பெற்று கொடும் பாதிப்புகளை ஏற்படுத்தி மக்களாட்சியின்மேல் இருக்கின்ற நம்பிக்கையை இழக்க வைத்திருப்பதை நாம் கண் கூடாக காண்கின்றோம். இருப்பினும் பெரும்பாலானவர்கள் அநீதிகளைக் கண்டும் காணாதவர்களாய் பொறுப்பற்ற நிலையில் வாழ்வது மிகப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது

ஆனால் திருச்சபை சமூகத்தையும், மக்களின் அவல நிலையையும் உற்று நோக்க வேண்டும். சமூக அநீதிகள் திருச்சபையை ஆக்கிரமிக்காதவாறு நீதியையும், நேர்மையும் பாதுகாக்க வேண்டும். அநீதியை எதிர்த்து இனம், மொழி, சாதி, சமயம் கடந்து குரல் எழுப்பவேண்டும்.

ஒரு பொறுப்புள்ள குடிமகன் அநீதியை வெளியேற்றும் கடமைப் பெற்றுள்ளார். குறைந்த பட்சம் வாக்களிக்கும் உரிமையைப் பணம், பகட்டு, பாரபட்சம் பாராமல் பயன்படுத்தும் நேர்மை கிறிஸ்தவ சமுதாயத்திடம் உள்ளதா?

மேற்கத்தியத் திருச்சபைத் தந்தையரில் பேராயர் அம்புறோஸ் முதன்மையானவர். மேற்கு ஜெர்மனியில் பிறந்த அவர் வட இத்தாலியாவில் குற்றவியல் நடுவராகப் பணிபுரிந்தார். கி.பி. 374-இல் எதிர்பாரா வகையில் மைலான் நகருக்குப் பேராயராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தம் சொத்துக்களை விற்று ஏழைகளின் நலனுக்காகச் செலவிட்டார். ஒருமுறை பேரரசர் தியோடெசியு பலரைக் கொன்றபடியால் அவருக்கு திருவிருந்து கொடுக்க மறுத்து வழிபாட்டு மனையையே பூட்டிவிட்டார். வழிபாட்டில் உயர்ந்த இடங்களை நாடியோரின் இருக்கைகளை மாற்றினார்.

இன்று நாம் அநீதிகளைக் காணும்போது இந்த வம்பு நமக்கு எதற்கு என்று ஒதுங்கிச் செல்கின்றோமா அல்லது நீதிக்காக குரல் கொடுத்தால் துன்பம் வரும் என்றாலும் துணிச்சலோடு போராடுகின்றோமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கொடுங்கோண்மையின் சின்னமான ஹிட்லரை எதிர்த்த போன்காஃபர் போன்ற இறையியலாளர்கள் குருதிச்சான்றினராய் இறந்தனர்.

1706-ஆம் ஆண்டு தரங்கம்பாடி வந்த அருட்தொண்டர் சீகன்பால்கு ஐயர் வெறும் நற்செய்திப் பணி மட்டும் புரியாது அன்றைய டேனிய ஆளுநர் அரசுக்கு எதிராக ஒரு ஏழை கைம்பெண்ணின் வழக்கு குறித்து, நீதி கேட்டு, தரங்கை சிறையில் அடைக்கப்பட்டார்.

கடவுள் தலைவர்களை எழுப்பியதற்கு காரணம் மக்களிடையே நீதியை பாதுகாப்பது ஆகும். அவர்கள் நியாயத்தின் பாதுகாவலர்களாகக் கருதப்பட்டனர்.

இச. 16:18-20-இல் மோசே வழியாக இதை தெளிவுப்படுத்தினார். எனவே அநீதியை வெளியேற்றும் பொறுப்புள்ள குடியுரிமையை நிலைநிறுத்துவோம்.

**2. அதிகாரத்திற்கு உட்பட்ட குடியுரிமை** (Citizenship that subject to the Power)

“அதற்கு இயேசு அவர்களை நோக்கி, சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள் என்றார்.” மாற்கு 12: 17.

ஒரு நாட்டின் குடிமக்கள் எங்கேயோ இருக்கும் ஒரு பேரரசுக்கு வரி கட்டுவதை இயேசு ஏற்கவில்லை. உரோமைப் பேரரசர் சீசரின் பெயரும் உருவமும் பதிந்த ஒரு வெள்ளிக்காசு தங்கள் அடிமைத்தனத்தில் அடையாள வரியாகச் செலுத்தப்பட்ட நிலை மக்களிடையே அருவருப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாகப் பல கிளர்ச்சிகளும் ஏற்பட்டன. தீவிரவாதிகள் உரோமை அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து அழிக்கப்பட்டனர் என்னும் ஒரு வரலாறு உண்டு (திப. 5: 37). இச்சூழலில் மக்கள் உரோமைக் காசுகளைப் பயன்படுத்தியது உரோமை அரசை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாகியது. ஆகவே உரோமை அரசுக்கு எதிரான உணர்ச்சிகளையும் கடந்து அதை ஏற்றுக்கொண்ட நிலையில் அதற்கு உரிய வரி செலுத்துவது நியாயமே என்னும் வகையில் அமைந்தது, இயேசுவின் பதில். மத்தேயு 17:24-இல் வரி செலுத்தும் கடமையைச் செலுத்தும்படி ஆண்டவர் இயேசு பேதுருவுக்குக் கட்டளையிட்ட நிகழ்வும் இச்சிந்தைக்கு வலுவூட்டுகின்றது.

உரோமையர் 13: 1-5-இல் பவுல்அடியாரும் இச்சிந்தையை ஆதரித்துள்ளார். மேலும் 1 பேதுரு 2: 13-17, தீத்து 3: 1-12 ஆகிய நிருபங்களிலும் இச்சிந்தை மேலோங்கிக் காணப்படுகிறது.

ஆனால் அரசை விட வல்லமை படைத்த கடவுளின் ஆட்சிமுறைக்கும் மக்கள் பணிய வேண்டும் என்று தாம் போதித்த இறையாட்சி பற்றிய ஒரு விமர்சனத்தையும் இயேசு வழங்கி மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றார் என்பது தான் மரபு சார்ந்த விளக்கம்.

இந்நிலையில் உரோமைக் கிறிஸ்தவர்கள் இறையரசைக்குறித்த சிந்தையில்லாமல் புரட்சி இயக்கங்களுக்கு ஆதரவு தரும் மனநிலையிலிருந்தனர். இதனால் இயேசு கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தியும், சகோதரத்துவ இறையாட்சியும், தவறாகப் புரிந்து கொள்ளப்பட வாய்ப்பிருப்பதைக் கண்டு பவுல் அச்சம் கொண்டார். ஆகவே குழப்பம் நிறைந்த புரட்சி இயக்கங்களிலிருந்து கிறிஸ்தவர்கள் விலகி இருக்க வேண்டும் என்றும், அதிகாரத்திற்கு உட்பட்டே பற்றுறுதி வாழ்வை வெளிக்காட்ட வேண்டும் என்பதற்காகவும் ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்குப் பணிந்திருங்கள் என்று எழுதினார்.

உரோமையர்13: 2-இல் அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர், என்னும் இறைவாக்கியம் அதிகார மாண்பைப் பேணுவதின் தேவையை உணர்த்துகின்றது.

பொறுப்புள்ள குடியுரிமை அதிகார வரம்பை மீறி செயல்படுவதாலோ, கிளர்ந்தெழுவதாலோ வலுப்பெறமுடியாது. மாறாக சட்டத்தின் அடிப்படையில் அமைதி காத்து, ஆக்கப்பூர்வமாக சிந்தனை செய்து, அமைப்பு ரீதியாக அணுகுவதன் மூலமாகவே வலுப்பெற முடியும்.

சுதந்தரம் என்னும் போர்வையில் நாம் சார்ந்திருக்கும் நாட்டின் சட்ட ஒழுங்குகளை மீறுவதும், சுய உரிமை என்னும் போதையில் நாம் சார்ந்திருக்கும் அமைப்பு, திருச்சபை, குடும்பம் போன்றவைகளின் கட்டமைப்புகளுக்கு ஊறு விளைவிப்பதும் அழிவைத்தான் கொண்டுவரும்.

கி.பி. 1741-ஆம் ஆண்டு ஜலை 31-ஆம் நாள் புகழ்பெற்ற குளச்சல் போரில் டச்சு படைகள் தோல்வியடைந்தது. அப்பொழுது இன்றைய நவீன திருவாங்கூரின் சிற்பி என அழைக்கப்படும் அரசர் மார்த்தாண்ட வர்மா திருவாங்கூரை ஆண்டு கொண்டிருந்தார். போர் கைதியான டிலனாய் என்பவர் அரசரின் பற்றுமிகு குடிமகனாக அங்கேயே தங்கி அரசருக்குப் பணிபுரிய முடிவு செய்தார். டிலனாய் ஓர் அந்நிய நாட்டைச் சேர்ந்தவராயினும் அவரது அரசபக்தி, நேர்மை, திறமை ஆகியவை அரசரின் அரசியல் வெற்றிக்கு மேலும்

உறுதுணையாக அமைந்தன. இவருடைய சீரிய பணியால் தெற்கில் கன்னியாகுமரி முதல் வடக்கில் பொரக்காடு வரை அமைந்த கடற்கரையில் பீரங்கித்தளங்கள் அமைக்கப்பட்டன. பத்மநாபபுரத்திலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள உதயகிரி என்ற பகுதியைச் சுற்றியுள்ள குன்றுகளில் ஒரு கோட்டையையும், ஒரு ஆயுத உற்பத்தி சாலையையும் உருவாக்கினார். பத்மநாபபுரம் அரமனையைப் பாதுகாப்பதற்காக அவர் கருங்கற்களால் எழுப்பிய பிரமாண்டமான கோட்டை இன்றும் வியத்தகு விதத்தில் உயர்ந்து நிற்கிறது. அவர் படைகளின் தளபதியாக உயர்ந்து ஜெனரலாக உயர்த்தப்பட்டார். நாட்டின் மக்கள் அவர்மீது பாசம் கொண்டு அவரை முதன்மை தளபதி என்று அழைக்கத் தொடங்கினர். அவரின் இறைவேண்டல் வாழ்வு நீலகண்டபிள்ளை என்பவர் ஆண்டவருக்குத் தேவசகாயம் என்ற மறைசாட்சியாக உருவாகும் அளவிற்கு சான்று நிறைந்த வாழ்வாயிருந்தது.

நாம் இரண்டு விதமான குடியுரிமையைப் பெற்றுள்ளோம்.

1. நாம் வாழுகின்ற நாட்டின் குடியுரிமை

2. இறையரசின் குடியுரிமை

இறையரசு இவ்வுலகில் தொடங்கி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவு பெறுவது. இறையரசு இம்மண்ணிலேயே மலரவேண்டும். கடவுளின் துணையிருத்தலை உணர்வதும், உரிமைபெற்ற சமத்துவ சமூகத்தைக் காண்பதும் முக்கிய தேவை. இயேசு கிறிஸ்து காண்பித்த புதிய அரசியல் நெறி பொறுப்புள்ள குடிமக்களாக நம்மை உருவாக்குவதில் மறைந்துள்ளது. இறையரசின் தன்மைகளை மனதில் நிறுத்தி அநியாயத்தை வெளியேற்றும் குடியுரிமையையும், அதிகாரத்திற்கு உட்பட்ட குடியுரிமையையும் சிரமேற்கொண்டு சிறந்த குடிமக்களாய் வாழ்ந்து கடவுளின் மாட்சிக்கு மகுடமாய் வாழ்வோமாக!

அருள்திரு. **R. கோல்ட்வின் பால்ராஜ்**

# படைப்பின் நன்னலம்

## (The Goodness of Creation)

தொநூ. 1:24-31 எபே. 1 : 3-14

திபா. 104 : 1-13 மத். 6 : 9-13

" . . . உம் செயல்களின் பணியால் பூவுலகம் நிறைவடைகின்றது" (தி.பா. 104 : 13)

நாம் வாழுகின்ற அறிவியல் உலகில் வியத்தகு மாற்றங்களும் முன்னேற்றங்களும் மானிடர் கண்டுவிட்டாலும் மானிடர் இயற்கையோடு இணைந்து வாழாமலும் படைப்பின் நன்னலத்தைப் பேணாமலும் இருப்பது மானிடரின் பக்குவமற்ற வாழ்க்கை முறையைத்தான் காட்டுகிறது. திருப்பாடல் 104-யை முழுமையாகப் படிக்கும்போது படைப்பின் மேன்மையை நாம் அறிந்துகொள்ள முடியும். இதன் வழியாக விவிலியத்தில் படைப்புகள் முதன்மையான இடத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றுக்கொள்வதனை அறிந்துகொள்ள முடியும்.

இந்தத் திருப்பாடல் கடவுளைப் படைப்பாளராகவும் பாதுகாப்பவராகவும் புகழ்ந்து பாடும் துதிபாடலாக உள்ளது. இப்பூவுலகினை ஒழுங்குற அமைத்துள்ளதில் கடவுளின் ஞானமும் மகிமையும் விளங்குகின்றன என்பதே இப்பாடலின் மையக் கருத்து ஆகும். மேலும் அனைத்து உயிர்களுக்கும் உணவும் உறைவிடமும் கொடுக்கின்றவர் கடவுள். எனவே அவர் படைத்த நிலத்தினைப் பண்படுத்திப் பாதுகாக்க கடவுள் மனிதனுக்குக் கட்டளையிட்டார்.

தொடக்க நூலில் படிக்கும்போது, "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்குக் கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார். (தொ.நூ. 2:15). வள்ளுவர் பெருந்தகை தம் குறளில் சொல்லும்போது," செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்தில்லாளின் ஊடி விடும்" (திருக்குறள் 1039) அதாவது உழவன், தனது நிலத்தை நாள்தோறும் சென்று கவனிக்காமல் இருந்தால், அவனால் வெறுப்புற்று விலகியிருக்கும் மனைவிபோல அது விளைச்சலின்றிப் போய்விடும். எனவே எப்போதெல்லாம் படைப்பின் நன்னலத்தைப் பேணுகின்றோமோ அப்போது மானிடர்க்கு இவ்வுலகத்தைத் தந்த கடவுள் மகிழ்ச்சியடைவார்.

## 1. படைப்பின் நன்னலம் பேணினால் நிறைவாய் வாழலாம்

"கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன." (தொ.நூ. 1 : 31).

கடவுளின் படைப்பினை எப்போதெல்லாம் நேசிக்கின்றோமோ அப்போதெல்லாம் நிறைவாக வாழலாம். தொடக்க நூல் தருகின்ற படைப்பின் செய்தியானது பலுகிப் பெருக வேண்டும், பரந்து சென்று நிலத்தை நிறைக்க வேண்டும் மானிடரின் வளமான செழுமையான வாழ்க்கைக்கு ஏதுவாக பூமியையும் அதிலுள்ளவற்றையும் ஆளுகின்ற அதிகாரத்தைக் கொடுத்தார். ஆனால் அழிப்பதற்காகச் சொல்லவில்லை.

ஆண்டவர் இவ்வுலகைப் படைத்தபோது மிகவும் நல்லது எனக் கண்டார். நல்லவைகளாகப் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் தம் தம் நிலையில் நின்று சிறப்பாகப் பணியாற்றுவதைப் பார்த்தக் கடவுள் அவற்றின் இசைவான இந்த அமைப்பினை நல்லதெனக் கண்டார்.

இறைவன் நல்லதெனக் கண்ட நிலத்தினைப் பேணிக்காப்பது மனிதனின் தலையாயக் கடமையாகும். ஆனால் இன்று இயற்கையை அழித்து செயற்கையைப் போற்றி அமில மழையை வரவேற்கும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண்டவர் மானிடர்க்கு ஈவாகத் தந்த இப் பூமிப் பந்தையும் அதிலுள்ள நீரோடைகள், விலங்கினங்கள், பறவை இனங்கள் அனைத்தையும் பேணிக்காத்து நிறைவாய் வாழ்ந்திட அழைக்கப்படுகின்றோம். படைப்பை நேசித்தால் அல்லது பேணிக்காத்தால் நிறைவாய் வாழலாம் என்பதனை நம் தலைமுறையினருக்கு அழுத்தமாய்ச் சொல்லுவோம். நாம் சுவாசிக்கப் புதிய காற்றைப் பெறுவதற்கு மரங்களை நடவேண்டும். முடிந்தவரை பழைய பல மரங்களை நாம் காப்பாற்ற வேண்டும். நாம் படைப்பைப் பேணிச் சுற்றுச் சூழலுடன் நட்பு வாழ்க்கை வாழ வேண்டும். கடவுளின் உலகில் இயற்கையாக இயல்பாக கிடைக்கப் பெற்றதை நன்றி உணர்வோடு அனுபவிக்க எதிர்பார்க்கப்படுகிறோம்.

## 2. ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி பூவுலகின் நண்பராவோம்

"கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்" (எபே. 1:10).

எபேசியர் திருமுகம் மிகவும் சிறந்த கருத்துகளைத் தன்னுள் கொண்டுள்ளது. இதில் கடவுளின் திட்டம் என்பது மனித குலத்தை மட்டுமல்ல, படைப்பு அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் கடவுளுக்குள் ஒப்புரவாக்குவது என்னும் உயரியக் கருத்தை இத்திருமுகம் எடுத்தியம்புகிறது. இத்திருமுகத்தின் முதல் பகுதியில் ஒற்றுமை பற்றிய மையக் கருத்தே அதிகமாக இடம்பெறுகிறது. தந்தையாம் கடவுள் தம் மக்களை எப்படி அழைத்துள்ளார் என்றும், அவர்கள் எவ்வாறு தம் மகன் இயேசு கிறிஸ்துவினால் மன்னிக்கப்பெற்று, பாவத்திலிருந்து விடுதலை பெற்றார்கள் என்றும், கடவுளின் தூய ஆவியால் எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவுக்குள் கூட்டிச் சேர்க்க வேண்டும் என்பதே இம்மடலின் மையக் கருத்து என்று சொல்லலாம். கடவுளின் திட்டத்தில் அனைத்துலகும் அடங்கும். மனிதனின் மீட்பானது உலக மீட்போடு தொடர்புடையது. இது ஏசாயா 11-ஆம் அதிகாரம் 6 முதல் 9 வரைப் படிக்கும்போது தெரியும். மேலும் ரோமர் 8:19-யைப் படிக்கும் போது, “இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது.” எனவே விண்ணுலகில் உள்ளவைகள் மண்ணுலகில் உள்ளவைகள் என்ற சொற்கள் “அனைத்தையும்” குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளவைகளாகும்.

அனைத்துப் படைப்புகளுக்குள்ளும் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் பூவுலகின் நண்பராக முடியும். மானிட சமுதாயமும், இயற்கை அனைத்தும் கிறிஸ்தவுக்குள் கூட்டிச் சேர்க்கப்படவேண்டும் என்பது ஒரு எதிர் நோக்காகக் காணப்படுகிறது. இது கடவுளால் தொடக்க முதல் திட்டமிடப்பட்ட ஒன்று. பூவுலகின் நண்பராக மாற திருச்சபையைக் கடவுள் கருவியாகப் பயன்படுத்துகிறார். மேலும் கடவுள் அவரது திட்டத்தைத் திருச்சபைக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதனைப் புரிந்துகொள்ளவேண்டும்.

### 3. விண்ணுலகின் நன்னலம் மண்ணுலகில் வரவேண்டும்

“உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!” (மத். 6:10).

மத்தேயு இங்குக் குறிப்பிடுவதைப் பார்க்கும்போது, கடவுளின் ஆளுகை விண்ணுலகில் தங்கு தடையின்றி எந்தவிதக் கருத்துவேறுபாடின்றி நடைபெறுகிறது. ஆனால் பூமியில்தான் தடைப்பட்டுள்ளது. பூவுலகில் தடைபடுவதற்குக் காரணம் தீயவனின் சூழ்ச்சியும் சதிசெயலும் அதற்கு

இசைவாக செயல்படும் மானிடரின் பெலவீனமுமாகும். எனவே இறையரசு வரும்போது ஏற்படும் இறைமாட்சியை இவ்விடம் தெரிவிக்கிறார்.

மத்தேயுவின் மரபுப்படி படைப்புகளின் நன்னலம் பேணும்போது இறையரசு தானாகவே இம்மண்ணில் மலரும். படைப்புகளை நேசிக்கக் கற்றுக்கொள்ளும்போது மானிடர் மீது மனிதம் தானாக மலரும். கடவுளின் படைப்பு அடிப்படைத் தேவைகளையும் இன்றியமையாத சேவைகளையும் உள்ளடக்கியது. காந்தி சொல்லும்போது, "மனிதனின் தேவைகளுக்கான காரியங்கள் இந்த உலகில் போதுமான அளவு உள்ளது. ஆனால் அவனின் பேராசைக்கு இல்லை" ஆனால் மனிதன் தன் சுயநலத்திற்காக அனைத்தையும் சுரண்டி சுடுகாடாக மாற்றி விடுகிறான்.

தமிழர்களின் நூலாகிய சிறு பஞ்சமூலம் சொல்கிறது, குளம் வெட்டுதல், மரம் நடுதல், மக்கள் நடக்கும் வழி உண்டாக்குதல், தரிசு நிலத்தைக் கழனியாக்குதல், கிணறு தோண்டுதல் இவைகளைச் செய்கிறவன் விண்ணுலகிற்குச் செல்வான். ஆனால் இவைகளை அழிக்கிறவன் நரகத்திற்குச் செல்வான் என்று சொல்லவில்லை. காரணம் இவைகளை மனிதன் அழிப்பானா? என்று படைத்தவர் நினைக்கவில்லை. எனவே இவைகளை அழிக்கிறவன் வாழ்ந்தாலே போதும் அது அவனுக்கு நரகமாகவே இருக்கும். எனவேதான் இயேசு இறையரசு நமக்குள்ளே வரவேண்டும் எனச் சொன்னார்.

நிறைவாக, படைப்பின் நன்னலத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்கள் அதனைப் பாழ்படுத்துகின்றனர். மனிதர்களாகிய நாமும் கடவுளின் படைப்பில் ஒரு பகுதி தான் என்கின்ற சிந்தனை மலரும்போது தான் படைப்பின் நன்னலத்தைப் பேண வேண்டும் என்னும் எண்ணம் உருவாகும். மாறாக சுற்றுப்புறச் சூழல் மாசு, காடுகள் அழிப்பு, தண்ணீர் மாசு, வளிமண்டல மற்றும் வாயு மண்டலத்தில் மாசு, கடலில் ஏற்படுகின்ற மாசு, பயிர்கள், கால்நடைகள், பறவைகள், மீன்கள் இவற்றின் மேல் ஏற்படுத்துகின்ற வன்முறை, அநீதிகள் ஒருநாள் நமக்குத் தக்க பாடத்தைப் புகட்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

இயற்கையியலாளர் ரத்னா சிங் சொல்லும்போது, "செயற்கையான சூழலில் அல்லாமல், இயற்கை சூழ்நிலையில் வசிப்பதால் நான் இயற்கையை மதிக்கிறேன். அதை என் இஷ்டம்போல பயன்படுத்திக் கொள்ள நினைக்கக்கூடாது, என்பதில் கவனமாயிருக்கிறேன். கிராமப்புறங்கள் அல்லது காடுகளில் வசிப்பவர்கள் இயற்கையோடு சார்ந்திருப்பார்கள். அவர்கள் மென்மையாகப் பேசுவார்கள், சகிப்புத் தன்மை கொண்டிருப்பார்கள்.

நகரவாசிகளைப்போல நான் இதைச் செய்தேன் அதைச் செய்தேன் என்னால் இது நடந்தது என்றெல்லாம் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். அதைப்போல விலங்குகளைப் பற்றியும் கூறவேண்டும் அவற்றிடம் ஏமாற்றுதல், நயவஞ்சகம் என்பதெல்லாம் இருக்காது. புலிகள் கூட அவற்றின் பசிக்காகத்தான் வேட்டையாடுமே தவிர மற்ற நேரங்களில் அதன் முன் மான் வந்தால் கூடக் கண்டுகொள்ளாது.” (தினத்தந்தி, ஞாயிறு மலர் பக். 20, 25.05.2014)

ஆக, படைப்புகளின் நன்னலம் காக்கப்படும்போது இப்பூவுலகில் அனைத்தும் மகிழ்ச்சியாக இருக்கமுடியும். படைப்புகளின் மகத்துவத்தைப் பண்படுத்துதல் பாதுகாத்தல் வழியாக மட்டுமே சுவைக்க முடியும்.

அருள்திரு. அறிவர். **K. பிறின்ஸ்குமார்**

# தாங்கும் தயாபரர்

எசாயா 46: 1 - 4

"…. நான் உங்களைத் தாங்குவேன்; …. " (எசாயா 46: 4)

ஒருமுறை அன்னைத் தெரசா கல்கத்தாவின் வீதி ஒன்றில் சென்ற போது கண்ட காட்சி ஆச்சரியப்பட வைத்தது. இஸ்லாமியப் பெண் ஒருவரை அவரது சொந்தபந்தங்கள் வீட்டை விட்டு அடித்து விரட்டிக் கொண்டிருந்தார்கள். காரணம் அந்த இளம்பெண் காசநோயாலும் தொழுநோயாலும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். ஏனெனில் இந்த இரண்டு நோய்களும் ஒருவரிடமிருந்து இன்னோருவருக்குத் தொற்றிக் கொள்ளும். வேதனையோடு நடுத்தெருவில் விடப்பட்ட அவரைத் தாங்கிப்பிடித்து அரவணைத்துத் தன் இல்லத்திற்கு அழைத்து வந்து மருந்திட்டு, உணவளித்து, அன்பினால் ஆறுதல் கொடுத்தார். அந்த அன்பிலே பூரித்துப் போன அந்தப் பெண்மணி அன்னைத் தெரசாவிடம், "தாங்கமுடியாத வேதனையால் தவித்து நின்ற என்னைத் தாங்கிப்பிடிக்க கடவுள் தான் உங்களை அனுப்பியிருக்கிறார்" என்று கூறினார்.

எசாயா (அதிகாரம் 40 - 55) ஆறுதலின் தீர்க்கர் என்று அழைக்கப்படுகிறார். சிறையிருப்பின் மக்களுக்குக் கூறப்படுகின்ற ஆறுதல் வார்த்தைகள் இவரது தீர்க்கதரிசனத்தில் அதிகம் காணமுடியும். அழிவைக் காட்டிலும் ஆறுதல், நீதியைக் காட்டிலும் கிருபை என்ற கடவுளின் குணாதிசயத்தை வெளிப்படுத்துகிறார். ஏசாயா 46: 1 - 4-ல் இதுவரையிலும் இஸ்ரவேல் மக்களைக் காத்த கடவுள்; இன்னமும் தாங்கிக் காப்பேன் என்ற வாக்குத் தத்தத்தைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் மக்களைத் தாங்கி நடத்தின கடவுள் நம் வாழ்வினையும் தாங்குகிற தயாபரராக இருந்து எங்ஙனம் காப்பார் என்பதனை இரண்டு சிந்தனையின் வழியாகத் தியானிப்போம்.

**1. கைவிடாமல் தாங்கும் தயாபரர்** (எசா. 46: 3)

தூக்கி அணைக்க தாயும் தாங்கிப்பிடிக்க தந்தையும் கடவுளைப் போல அருகில் இருந்தால் எந்த குழந்தையும் குறைவுபட்டுப் போவதில்லை. பெற்றோர் குழந்தையை மேலே தூக்கிவிடும்போது அந்தக் குழந்தை சிரிக்கும். ஏனெனில் அவர்கள் தன்னைக் கைவிடாமல் தொங்கிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு. கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார் என்று திருமறை தெளிவாக கூறுகிறது.

எசாயா 46: 2 - 3 - ல் பாபிலோனிய விக்கிரகங்கள் உங்களைத் தப்புவிக்காது. அவைகளுக்கு தப்புவிக்கும் ஆற்றல் இல்லை. அதுவே கைவிடப்பட்டு சிறைப்பட்டுப்போகும். நானே உங்களைக் கைவிடாமல் காக்கும் கடவுள், ஆகவே எனக்குச் செவிகொடுங்கள். தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி தாயின் கர்ப்பத்தில்உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன், (எசாயா 46: 3) என்ற வாக்குறுதி கொடுக்கிறேன். “உன்னைக் கை நெகிழமாட்டேன்; கை விடவும் மாட்டேன்” (யோசுவா 1: 5) என்று யோசுவாவுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கடவுள், பாபிலோன் சிறையிருப்பிலும் அதனை நினைவுபடுத்தி, கூட இருந்து கைவிடாமல் தாங்கிபிடிக்கும் தலைவராகச் செயல்படுகிறார். உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே அவர்களை நிர்மூலமாக்காமலும், அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர். “நீரே கனிவும் கருணையும் உள்ள கடவுள்” (நெகேமியா 9: 31) என்று கடவுளின் கருணை சொல்லப்பட்டுள்ளது.

**2. சுமைதாங்கியாய்த் தாங்கும் தயாபரர்** (எசா. 46: 4)

பண்டைக் காலங்களில் சுமைகளைச் சுமந்து களைப்போடு வருகிறவர்கள் அந்தச் சுமையை இறக்கி வைப்பதற்காகச் சுமைதாங்கிக் கல்லினைப் பாதைகளில் அமைத்திருப்பார்கள். எசாயா தீர்க்கர் கடவுளின் குணாதிசயத்தைக் குறிப்பிடும்போது தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் தாங்கினது போல நரை வயது மட்டும் தாங்குவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் (எசாயா 46: 4) என்று கடவுள் சுமைதாங்கியாய் தாங்கும் தயாபரராய் இருக்கிறார் என்பதை உணர்த்துகிறார்.

சுமக்கும் கடவுளாகிய யாவேயை விட்டுவிடாமல் சுமக்கப்படும் பாபிலோனிய தெய்வங்களை விட்டுவிட வேண்டும் என்ற அறைகூவல் கொடுக்கப்படுகிறது. “பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?” என்ற தமிழ்நாட்டுச் சொல் வழக்கிற்கேற்ப “நானே சுமப்பேன்” என்று கடவுளின் இடையறாத தாங்குதல் அவர்களோடிருந்தது (எசாயா 63: 9). நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையில் சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள் (விப. 19: 4).

பாவத்தில் விழுந்த போதும் பாசத்தைக் காட்டும் கடவுள் மீட்பினைத் தர தம் மைந்தரைத் தந்தார். சுமைதாங்கியாய் நம் பாவங்களைச் சிலுவையில் சுமந்து மீட்பினைத் தந்தார். ஆகவே அந்த உணர்வோடு நம்மை கைவிடாமல் தாங்கிடும் சுமைதாங்கியாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து வாழ்வோம். ஆண்டவர் நம்மைக் கைவிடாமல், சுமை தாங்கியாக தாங்கும் தயாபரராய் இருந்து காப்பார்.

அருள்திரு. **C. ஜெபக்குமார்**

# படைப்பின் வீழ்ச்சி நிலை

## The Fallen-ness of Creation

தொநூ. 3: 1-10 உரோ. 3: 21-26

திபா. 53 மத். 18: 23-35

"... அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர்" (உரோ. 3: 24).

2014-ஆம் வருடம் மார்ச் மாதம் 8-ஆம் நாள் கோலாலம்பூரிலிருந்து பெய்ஜிங் என்ற இடத்துக்கு 239 பயணிகளுடன் சென்ற மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் காணாமல் போனது. அதைத் தேடுகிற பணிகள் மிகத் தீவிரமாக இருந்தாலும் 2017-ஆம் வருடம்தான் மேற்கு இந்தியப் பெருங்கடலின் பல்வேறு பகுதிகளிலிருந்து காணாமல் போன விமானத்தின் 20 துண்டுகள் மீட்கப்பட்டன. இதுவரையிலும் இச்சம்பவத்துக்கான காரணம் தெரியவில்லை. ஆனால் திருமறையில் கடவுளின் வார்த்தைகள் மனித குலத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை மிகத்தெளிவாகப் பதிவு செய்துள்ளது. அதன் விளைவுகளை நாம் தலைமுறை தலைமுறையாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

கடவுளின் படைப்புகள் எல்லாம் பரிபூரணமானது. இந்த உலகத்தை அவர் ஒரு நோக்கத்துடன் படைத்தார். தொ.நூ. 1: 31-ல், "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிக நன்றாய் இருந்தன" எனப்படிக்கிறோம். படைப்பின் வரலாற்றில் மனிதரே இறுதியாகப் படைக்கப்பட்டனர். படைப்பின் மகுடமான மனிதரிடம் உடன்படிக்கை செய்து மனிதர் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளையும் கடவுள் கட்டளையிட்டார் (தொ.நூ 2: 15). மனிதரோ கடவுள் அவனுக்குக் கொடுத்த சுயாதீனத்தைப் பயன்படுத்திக் கடவுளின் கட்டளையை மீறிச் செயல்பட்டனர். விளைவாக, மனிதர் உள்ளிட்ட முழு படைப்பும் வீழ்ச்சி நிலையை அடைந்தது. இந்த வீழ்ச்சி பாவத்தை உலகில் கொண்டு வந்து மனித இயல்பு உட்பட முழு உலகத்தையும் சிதைத்துப் பாவத்தில் பிறக்க வழி வகுத்தது (திபா. 143: 2, உரோமர் 3: 1-12, 1 யோவா. 1:8). ஆதிக்கம், அநீதி, அநியாயம், சுயநலம், அன்பற்றத்தன்மை, சமத்துவமின்மை இவை அனைத்தும் மனிதரை ஆட்கொண்டது. கடவுளின் கிருபையின்றி நித்திய ஜீவனை

அடையமுடியாதநிலை ஏற்பட்டது. ஆனால் மனிதர் வீழ்ந்தாலும் அதனின்று மீட்பைப் பெற கடவுள் அனுதினமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

### 1. மனுக்குலத்தின் வீழ்ச்சி (The Fall of Humanity) தொ.நூ. 3: 6

படைத்த மனுக்குலம் வாழ்வதற்காக ஏதேன் தோட்டம், உண்டு மகிழ கனி வகைகள், நல்ல இயற்கை மற்றும் காலநிலை இவைகளை வழங்கிய கடவுள் அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்து ஆசீர்வதித்தார். ஆனாலும் தடை செய்யப்பட்ட வாழ்வின் மரத்தின் கனி தோட்டத்தின் நடுவில் வைக்கப்பட்டது (தொ.நூ. 2: 9). அது நன்மை தீமை பற்றிய அறிவை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடவுளுக்கு எதிரான கிளர்ச்சியையும் கடவுளின் அதிகாரத்தையும் கேள்வி கேட்பதாகவும் அமைந்த சூழ்நிலை தீயோனால் உருவாக்கப்பட்டது (தொ.நூ. 3: 1, 5). ஆதாமும் ஏவாளும் தீயோனின் வார்த்தையால் கவரப்பட்டு கடவுள் விலக்கிய விருட்சத்தின் கனியைப் பறித்து உண்டனர். கடவுள் படைத்த நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் மனிதரின் மீறுதல் முற்றிலும் சிதைத்தது. எனவே ஆதிக்க உணர்வும், தன்னலச் சிந்தனைகளும் அனைத்துப் படைப்புக்களையும் அடிமைகளாக்கி விட்டிருக்கின்றன.

கடவுளிடமிருந்து விலகிய ஆதாமும் ஏவாளும் செங்குத்தான மற்றும் கிடைமட்டமான உறவை வளர்த்து கொண்டனர். பகலின் குளிர்காலத்தில் அவர்கள் கடவுளோடு இருந்தார்கள். பகல் வெளிச்சத்தின்போது சாத்தான் அவர்களோடிருந்தான். கடவுள் அவர்களில் ஒழுக்கமான வாழ்க்கையை விரும்பினார். ஆனால் சாத்தான் அவர்களின் உணர்வுகளுக்கு மகிழ்ச்சியாகவும் திருப்திகரமாகவும் கண்ட வாழ்க்கையைப் பரிந்துரைத்தான். எனவே ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர் (தொ.நூ. 3: 24). தெய்வ பயமற்ற செயல்கள், நெறிமுறையற்ற நடத்தை, அநீதியான மனப்பான்மை போன்றவை சிறிது காலத்துக்கு நன்றாகத் தோன்றலாம். ஆனால் இறுதியில் வேதனையில் முடிகிறது.

### 2. பாவத்தின் விளைவுகள் (The Consequences of Sin) உரோ. 3: 23

ஆதாமின் பாவத்தின் விளைவு மனித வர்க்கம் முழுவதையும் பாவத்தில் விழத்தள்ளியது. வீழ்ச்சிக்கு முன்பாக மனிதனும் கடவுளும் ஐக்கியமாயிருந்தார்கள். வீழ்ச்சிக்குப் பிறகு ஐக்கியம் முடிந்து போனது. அவர்கள் கடவுளின் உறவை விட்டுத் துண்டிக்கப்பட்டார்கள். கடவுளிடமிருந்து மறைந்து கொள்ள முயன்றார்கள். வீழ்ச்சிக்கு முன் மனிதன் கபடற்றவனாக பரிசுத்தமாக இருந்தான். ஆதாம் மற்றும் ஏவாளுக்கு எந்தப் பாவ சுபாவமும் இல்லை. ஆனால் வீழ்ச்சிக்குப் பின் வெட்கப்பட்டார்கள். பவுலார் இதைத்தான்

ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது (உரோ. 5: 12) என்கிறார். வீழ்ச்சிக்கு முன்பாக மனிதன் ஜீவ விருட்ச வாழ்வின் மரத்தின் கனியைப் புசித்திருந்தால் என்றென்றும் வாழ்ந்திருப்பான் (தொ.நூ. 2: 9; 3: 22). வீழ்ச்சிக்குப் பின்னாக ஆதாமின் பாவத்தின் தண்டனையின் ஒரு பகுதியாக சரீர மரணம் உண்டானது (ரோமர் 5: 12). ஆதாம் பாவம் செய்த பின் கடவுள் " . . . நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" (தொநூ. 3: 19) என்றார். ஆதாமின் வீழ்ச்சிக்குப் பின் எல்லா மனிதரும் அந்தச் சுபாவத்தை அவன் மூலமாய்ப் பெற்றுக் கொண்டனர்.

ஊனியல் மனநிலை கடவுளுக்குப் பகையானது (உரோ. 8: 7). துணிச்சலோடு செய்யும் பாவம் மனிதனை வீழ்ச்சிக்கு நேராய் நடத்துகிறது. நம்மை அழிக்கும் தொடக்க பாவம், பெருமை, பொறுப்பற்ற நிலை இவைகளைக் களைந்து நமக்கு வாழ்வு தரும் கடவுளின் போதனைகள் மீது விசுவாசம் வைத்து படைப்பு அனைத்தின் மீதும் பாசங்காட்டி வீழ்ச்சியிலிருந்து மீட்கப்படுவது மிகவும் முதன்மையானதாகும்.

**3. கிறிஸ்துவின் வழியாக மீட்பு (Redemption through Jesus Christ)** மத். 18:25

நற்செய்திப் பாடமான மத்தேயு 18: 23-25-ல் அரசரிடம் பதினாயிரம் தாலந்து கடன்பட்டிருந்த ஒருவன் தன் உடன் பணியாளர் நூறு தெனாரியம் கடன் பெற்றதை மன்னிக்க மனதில்லாதிருந்தான். அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போட்டான். ஆனால் மன்னிப்பைப் பெற்றவன் அதிகமாய்ச் செலவு செய்து கடன்பட்டவனாயிருந்தான். அது மன்னிக்கமுடியாத ஒரு பெரும் தொகை. முழு குடும்பத்தையும் ராஜாவுக்கு அடிமையாகக் கொடுத்தாலும் அவனுடைய கடனை அவனுக்கு அடைக்கமுடியாது. யூத கலாச்சாரமும் மோசேயின் நியாயப்பிரமாணமும் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாவிட்டால் அவனைச் சிறையில் போடவேண்டும் அல்லது அவனது மனைவி பிள்ளைகளை விற்று கடனை அடைக்கக் கூறுகிறது. அப்படியிருந்தும் ராஜா தனக்கு மன்னித்தாரே அதேபோல் தானும் மன்னிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் அவனைக் கொடுமைப்படுத்தினான். அதனால் தண்டனை பெற்று வீழ்ச்சியைச் சந்தித்தான்.

படைப்பை மனுக்குலம் வீழ்ச்சியடையச் செய்தது மாபெரும் மன்னிக்க முடியாத குற்றமாகும். ஏனெனில் பவுலடியார் குறிப்பிடும்போது உரோ. 8: 22-ல் இந்நாள் வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத்

தவிக்கிறது. எனினும் வீழ்ச்சியடைந்து போன நம்மை மன்னித்து மீட்டெடுத்து இறைப்பாதையில் வழிநடத்த கடவுள் என்றும் நம்மோடிருக்கிறார். மனுக்குலம் படைப்பைப் பழுதடையச் செய்கையில் அப்பழுதினை நீக்கும் பழுவான பணியைப் படைப்பின் வரலாற்றில் செய்து முழுமையடையச் செய்வதே கடவுளின் இலட்சியமாகும் (தி.வெ. 21: 5). வீழ்ச்சியினால் இனி வாழமுடியாது என்பதன்று வீழ்ந்தாலும் தூக்கி உயர்ந்த கன்மலையின் மீது நிறுத்த கடவுள் ஒருவரே போதுமானவர் என நாம் அறிய வேண்டும். எனவே படைப்பை வீழ்ச்சியடையச் செய்து மன்னிப்பைப் பெற்ற ஒவ்வொருவரும் மீண்டும் பாவத்துக்கு அடிமைப்படலாகாது.

படைப்பின் வீழ்ச்சி என்பது ஒரு சவாலான கருத்தாகும். இருப்பினும் படைப்பின் வீழ்ச்சியைப் புரிந்து கொள்வதன் மூலம் நம்முடைய பாவத்தையும் மன்னிப்பின் அவசியத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியும். நாம் அனைவரும் பாவத்தில் பிறந்தவர்கள். நம்முடைய பாவத்தின் போக்கு நம்மை ஒரு பரிபூரண உலகில் வாழ விடாமல் தடுக்கிறது. எனினும் இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் வழியாக கடவுள் நம்மை மன்னித்துள்ளார். பாவத்தில் வீழ்ந்துபோன நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவிடம் திரும்புவதன் வழியாக பாவமன்னிப்பைப் பெற்று மகிழலாம்.

அருள்திரு. அறிவர். **P. ராஜா ஜெயசிங்**

# அமைதியின் கருவியான இளையோர்

## Youth as the instrument of Peace

1 சாமு. 24: 1-13 2 கொரி. 7: 1-16

திபா. 119: 9-16 லூக். 10: 1-12

"இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக் கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?" (திபா. 119: 9)

உங்களுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா? ஏன் ஆண்டவர் உங்களை இந்த உலகத்தில் பிறக்க வைத்தார்? உங்களைக் குறித்து ஆண்டவருடைய திட்டங்கள் என்ன? அவர் உங்களைக் குறித்து எப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளையெல்லாம் வைத்திருக்கிறார் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் பார்வையில் "வாழ்க்கை என்பது ஒரு புரிந்துக்கொள்ள முடியாத புதிராக" இருந்தாலும், உண்மையாகவே ஆண்டவர் ஒரு நோக்கத்தோடு தான் உங்களைப் படைத்துள்ளார். நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் குறித்த ஆண்டவருடைய நோக்கத்தை, அவருடைய சமூகத்தில் காத்திருந்து அறிந்துக்கொள்வீர்களென்றால், நிச்சயமாகவே உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படும்.

உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை நீங்கள் அறிய விரும்பினால், அதை உங்களிலிருந்து அல்ல, ஆண்டவரிடத்திலிருந்து தொடங்க முற்படுங்கள். ஏனென்றால், அவரே உங்களை விசித்திர வினோதமாய் படைத்தவர். அவரே உங்களை அநாதி சிநேகத்தால் சிநேகித்தவர். நீங்கள் அவரை அறிகிற அறிவினால் நிரப்பப்படும்போது, உங்களுடைய வாழ்க்கையைக் குறித்த அவருடைய நோக்கத்தை அறிந்து கொள்ளமுடியும்.

திருத்தூதர் பவுல், வாழ்க்கையின் நோக்கத்தை மட்டுமன்று தான் எதற்காக ஆண்டவரால் பிடிக்கப்பட்டேன் என்பதையும் அறியும்படியாகவும், தன்னுடைய மனதைத் திருப்பினார். ஒரு காலத்தில் கிறிஸ்துவை அறியாதவராய், நியாயப்பிரமாணத்தின் மேல் வைராக்கியமுள்ளவராயிருந்து, கிறிஸ்தவர்களை அடித்து, நிர்மூலமாக்குவதே தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்திருந்தார். அந்த நோக்கத்தோடு தமஸ்கு வீதியில் பயணித்தபோதுதான், ஆண்டவர் அவரைச் சந்தித்தார். அவருடைய முதல் கேள்வியே, "ஆண்டவரே, நீர் யார்?" என்பதுதான்.

ஒருவன் ஆண்டவரை அறிகிற அறிவை முதலாவது அடைந்தபிறகு தான், தன்னுடைய வாழ்க்கையின் நோக்கத்தை அறிந்துக்கொள்ளமுடியும். அதனால், “நான் யார்? எதற்காக இந்தப் பூமியில் பிறந்தேன்?” என்று அறிய முற்படுவதைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டுப்பாருங்கள். பவுல் அவ்வாறு கேட்டபோது, ஆண்டவர் தம்மைப் பற்றி சுருக்கமாக ஒரே வார்த்தையில் அவருக்குத் தெரியப்படுத்தினார். அது என்ன? “நீ துன்புறுத்தும் இயேசு நானே” என்பதாகும்.

பவுலின் வாழ்க்கையின் நோக்கத்தைக் குறித்து தம்முடைய ஊழியக்காரனாகிய அனனியாவிடம், “அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார்.” (தி.ப. 9: 15) என்று ஆண்டவர் சொன்னார். தம் மக்களுக்கு எதிராக செயல்பட தீவிரமாக வந்தவரை ஆண்டவர் சந்தித்து, அமைதியின் கருவியாக மாற்றி பயன்படுத்த ஆரம்பித்தார். பவுலும் கூட இதைப் புரிந்துக்கொண்டவராக, பிலிப்பியர் 3: 12-இல், “கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காகத் தொடர்ந்து ஓடுகிறேன்.” என்று எழுதினார்.

அவ்வண்ணமாகவே, இன்றைய இளையோராகிய உங்களையும் ஆண்டவர் அமைதியின் கருவியாகவே பயன்படுத்த விரும்புகின்றார். அதுவே உங்களுடைய வாழ்க்கையைக் குறித்து ஆண்டவருடைய நோக்கமாகவும் இருக்கின்றது. அதனால், ஆண்டவர் உங்களை அமைதியின் கருவியாகத் தம்முடைய சித்தத்தின்படி பயன்படுத்துவதற்கு எப்படிச் செயல்படவேண்டும் என்பதைத் தியானிப்போம்.

**1. கற்றுக் கொள்ளுங்கள்**

“ஆண்டவரே, நீர் போற்றுதற்கு உரியவர்; எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பித்தருளும்.” திருப்பாடல்கள் 119: 12.

அருமையானவர்களே, நாம் நன்றாகக் கற்றுக்கொடுக்க முடியும். ஆனால் நன்றாகக் கற்றுக்கொள்ளும் தன்மை நம்மிடம் இருக்கின்றதா என்பது மிக முக்கியம். நன்றாக நம்மால் பேசமுடியும். ஆனால் பிறர் பேசுவதை நம்மால் கேட்க முடிகிறதா என்பது முக்கியம். ஏனென்றால், இன்று பலரிடம் கற்றுக்கொடுக்கும் திறன் செயல்படுகிறது ஆனால், கற்றுக்கொண்டு, செயல்படும் திறன் இல்லை.

ஞானம் என்பது கற்றுக்கொடுப்பதில் அல்ல, கற்றுக்கொள்வதில் தான் உறுதிப்படுகிறது. சாலொமோன் ராஜாவால் மிக மிக நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுக்க முடிந்தது. ஆனால் அவர் தாவீதைப் போல தேவசமூகத்தில்

கற்றுக்கொண்டவர் அல்ல. எப்படி வாழ வேண்டும் என்று சொல்ல முடிந்த அவரால், எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக்கொண்டு செயல்படத் தெரியவில்லை. ஏனென்றால், அவர் ஒரு போதகப்பிரியனேயன்றி, செயல்பிரியனல்லர்.

நாம் எதைப் பிறருக்குச் சொல்லுகின்றோமோ அதனை முதலாவது நமக்குச் சொல்லவேண்டும். நாம் பிறருக்கு எதைக் கற்றுக் கொடுக்கின்றோமோ, அதை நாம், நமக்கு முதலாவது கற்பிக்க வேண்டும். தாங்கள் பின்பற்றாதவைகளைப் போதிக்கின்றவர்கள், தாங்கள் கேட்பதைப் பின்பற்றாத ஒரு கூட்டத்தை உருவாக்குகின்றார்கள்.

நம்மைச் சுற்றிலும் நிறைய காரியங்கள் நிகழ்கின்றன. சிலருடைய வாழ்க்கையில் அவர்கள் சந்திக்கும் காரியங்கள் நமக்கு வேடிக்கையாக இருக்கக்கூடாது. அங்கே நாம் உணர்ந்து கொள்ளவேண்டியதும், புரிந்துக் கொள்ளவேண்டியதும் ஏராளம் இருக்கும். அவைகள் ஒரு நாள் நம் வாழ்க்கைப்பகுதிகளில் உதவியாக வரும். சிலர் பிறர் குடும்பங்களில் நடைபெறுபவற்றைப் பார்த்துக் கேலியாகப் பேசுவார்கள். விமர்சனம் செய்து பொழுதுபோக்குவார்கள். ஆனால் ஒரு நாள் அவர்களின் வாழ்விலேயே அதுபோன்ற நிகழ்வுகள் நிகழலாம். விமர்சித்து வேடிக்கைப் பேசின நாட்களில் கொஞ்சம் கற்றுக் கொண்டிருந்தால் ஜாக்கிரதையாயிருந்து அதுபோன்று நிகழாமல் தடுத்திருக்கலாம். மற்றவர்களின் வாழ்க்கை வட்டங்களில் நிகழும் பல விஷயங்கள் நாம் நம்முடைய வாழ்க்கையைச் சரியாக வைத்துக் கொள்வதற்கான ஏராளம் நல்ல அறிவுறுத்தல்களையும், எச்சரிக்கைகளையும் தருகிறது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதன்று. அது எனக்கு/நமக்கு எதை உணர்த்துகிறது என்பதே முக்கியம்.

லூக்கா 10: 5-ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களிடத்தில், “நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், “இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!” என முதலில் கூறுங்கள்.” என்று கற்றுக்கொடுத்தார். ஆண்டவர் தம்முடைய சீடர்களை ஒரு சமாதானத்தின்/அமைதியின் கருவியாகத்தான் பயன்படுத்த விரும்பி அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இன்றைய இளையோரையும் அவ்வாறாகவே பயன்படுத்த விரும்புகின்றார். அதனால் இன்றைய இளையோரும், “ஆண்டவரே, நீர் போற்றுதற்கு உரியவர்; எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பித்தருளும்” என்று தாவீது ஜெபிப்பதைப் போல ஜெபித்து, ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து உற்சாகமாகக் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது ஆண்டவர் உங்களை அமைதியின் கருவியாகப் பயன்படுத்துவார்.

## 2. கடைப்பிடியுங்கள்

“முழுமனத்தோடு நான் உம்மைத் தேடுகின்றேன்; உம் கட்டளைகளைவிட்டு என்னை விலகவிடாதேயும்” திருப்பாடல்கள் 119 : 10.

ஒருமுறை ஒரு நோயாளரைப் பரிசோதித்த மருத்துவர், அவருக்கு உடனடியாக அறுவை சிகிட்சை செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். ஆனால் அவரின் மனைவியோ அறுவை சிகிட்சைக்காக மிகப் பெரிய செலவினைச் செய்ய யோசித்தார். உடனே மருத்துவர், “எவ்வளவு செலவு என்று பார்க்காதிருங்கள். உங்கள் கணவர் உயிர்வாழ வேண்டியது எவ்வளவு அவசியம் என்று பாருங்கள்” என்று சொன்னார்.

சில நேரங்களில் சில செயல்கள் மிகவும் கடினமானவைகள் தான். ஆனால் அவை எவ்வளவு கடினம் என்பதைவிட, அது எவ்வளவு அவசியம் என்பதைப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. சிலர் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் எவ்வளவு கடுமையாயிருக்கிறது என்று தான் பார்க்கின்றார்கள். ஆனால் அதனுடைய அவசியத்தை விளங்கிக் கொண்டால், அந்தக் கடினத்தைக் குறித்த எண்ணம் நம்மைக் கடினப்படுத்தாது. நாமும் முழு மனதோடு ஆண்டவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, அதை வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியும்.

ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டுவதா? கடனை வாங்கித் தராமல் போனவனை அப்படியே விட்டுவிடுவதா? சத்துருவை நேசிப்பதா? பகைக்கிறவனுக்கு நன்மை செய்வதா? என்பன போன்ற விஷயங்கள் எல்லாம் மிகவும் கடினமானவைகள்தான். இன்றைய சமுதாயத்தில், பதிலுக்குப் பதிலாக எதையாவது செய்யத் தீவிரிக்கும் ஒரு மனநிலை தான், ஏராளமான தொடர் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கின்றன.

இயேசு கிறிஸ்து சொன்னவைகள் கடினமானவைதான். ஆனால் அந்தக் கடினமானவைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்க முன்வந்தால் அமைதியையும், ஆனந்தத்தையும், நம்பிக்கையையும் இழக்காமல் என்றும் தலைநிமிர்ந்து நிற்கலாம். இன்றைய கிறிஸ்தவர்கள் அருளுரைகள் கேட்பதற்கும் குறைவில்லை. ஆவிக்குரிய நூல்களைப் படிப்பதிலும் குறைவில்லை. ஆனால் கேட்கின்ற படிக்கின்ற சத்தியத்தின்படி ஒருபோதும் வாழ்வதே இல்லை. அவைகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து அனுபவமாக்க முன்வரும்போது தான், உண்மையான ஆசீர்வாதங்கள் வரத்தொடங்கும்.

ஒரு சமயம் தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருப்பதை அறிந்த சவுல் ராஜா, அவனை வேட்டையாடும்படி அங்கே செல்கின்றார். ஆனால் சவுலை மேற்கொள்வதற்குத் தாவீதுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. ஆனால், “கர்த்தர்

அருட்பொழிவு செய்தவர் மீது கைபோடக்கூடாது” என்றுதான் அறிந்திருந்த உண்மையை வாழ்வில் கடைப்பிடித்ததால், தாவீது சவுல் ராஜாவை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகின்றார். இது தாவீதினுடைய வாழ்க்கையில் பின்நாட்களில் மிகப்பெரிய உயர்வைக் கொண்டு வந்தது. அவ்வண்ணமாகவே, இன்றைய இளையோராகிய நீங்களும் கூட நீங்கள் கற்றுக்கொள்கின்ற ஆண்டவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது, ஆண்டவர் உங்களை அமைதியின் கருவியாகப் பயன்படுதத்துவார். தம் ஆசீர்வாதங்களுக்குச் சுதந்தரராகவும் மாற்றுவார்.

### 3. காத்துக் கொள்ளுங்கள்

“இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக்கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?” திபா. 119: 9.

அருமையானவர்களே, குடி மற்றும் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், பாலியல் தவறுகளில் ஈடுபடுகின்றவர்கள் போன்றவர்களில் 90 சதவீதம் பேர் தங்களுடைய இருபது வயதிற்குள்ளாகத்தான் இந்தப் பழக்கங்களுக்குள்ளாக வந்திருக்கின்றனர் என்று ஒரு ஆய்வு கூறுகின்றது. அதாவது, பெரும்பாலான தவறான பழக்கவழக்கங்கள் வாலிப வயதுகளில் தான் வந்து சேருகின்றன. அதுபோல, வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள், அந்த உயர்வுகளுக்கான ஆரம்பங்களை வாலிப வயதுகளில் தான் கண்டிருக்கின்றார்கள். வாழக்கையில் தோல்வி கண்டவர்களில் பெரும்பாலானவர்கள் வாலிப வயதுகளில் தான் அதற்கு வித்திட்டிருக்கின்றார்கள்.

ஆம், நல்லதானாலும், தீயதானாலும், வெற்றியானாலும், தோல்வியானாலும் அவைகளுக்கான விதைகள் விதைக்கப்படும் காலங்கள் வாலிப நாட்கள் தான். வாலிப வயதுகளில் ஒருவர் எப்படிப்பட்ட வாழ்க்கை முறையைத் தெரிந்துக் கொள்வாரோ, அதற்கேற்பே அவருடைய எதிர்காலத்தின் வெற்றியும், தோல்வியும் அமையும். வாலிப நாட்களில் தீயோன் வாலிபர்களைத் தன்னுடைய தீயவழியில் நடத்தி அவர்களின் எதிர்காலங்களைப் பாழாக்கத் தீவிரமாகச் செயல்படுகின்றான். தீயோன் பெரும்பாலும் ஒருவருடைய அறிவு வளர்ச்சிக்கோ, கல்வி பெருக்கத்திற்கோ, வேறெந்த திறமை சார்ந்த உயர்வுகளுக்கோ எதிரியல்ல. இவைகளில் முன்னேறாதபடி அவன்பெரிய தடையாக இருப்பதில்லை. ஆனால், அவர்கள் நற்குணங்களுடனோ, நற்பண்புகளுடனோ, இறைபயத்துடனோ வாழ்ந்துவிடக்கூடாது என்பதிலேயே அதிகக் கவனமாயிருப்பான். ஏனென்றால், எவ்வளவு தான் கற்றாலும், உயர்ந்தாலும், நற்குணமற்றவர்கள் நன்றாக இருக்கமாட்டார்கள் என்பது

அவனுக்குத் தெரியும். அதனால் தான், "உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே" என்றும், "இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக்கொள்வது எவ்வாறு?உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ" என்றும் திருமறை சொல்கின்றது.

வாலிப வயதுகளில் எங்கும் எதிலும் சுதந்தரமாய் இருக்கவேண்டும் என்றே மனம் விரும்புகின்றது. அதே நேரம், சமுதாயம் பலவிதமான கட்டுப்பாடுகளைப் போட்டுத் தங்களைக் கட்டுப்படுத்தி கஷ்டப்படுத்துவதாக வாலிபர்கள் எண்ணுகின்றார்கள். ஆனால், எங்கே கண்டிப்பின் சத்தங்களும், கட்டுப்பாடுகளும் இல்லையோ, அங்கே அனைத்துத் தீமைகளுக்கும் வாசல் திறந்துவிடப்பட்டிருக்கிறது என்று அர்த்தமாகும். அதனால், கண்டிப்புகளையும், கட்டுப்பாடுகளையும் தவறான மனநிலைகளோடு பார்க்காமல், ஆண்டவர், பெற்றோர், ஆசிரியர், பெரியவர்கள் மூலமாக தங்களை நல்வழிபடுத்துகின்றார் என்ற சிந்தனையோடு செயல்படவேண்டும். ஆண்டவருடைய வசனங்களுக்குச் செவிசாய்த்து, வசனத்தின் மூலமாக தங்களைக் காத்துக்கொண்டு, பரிசுத்தமாக வாழ்வில் முன்னேறிச் செல்லவேண்டும். அப்போதுதான் ஆண்டவரால் உங்களை அமைதியின் கருவியாக உலகத்தில் பயன்படுத்தமுடியும்.

இந்த உலகத்தில் ஒரு வாலிபனுக்கு எது உயர்ந்த இலக்காக இருக்கமுடியும்? ஒரு வாலிபனுடைய வாழ்க்கையின் மேல் ஆண்டவர் கொண்டுள்ள நோக்கம் எதுவோ, அந்த நோக்கம் நிறைவேறுவது தான் உயர்ந்த இலக்காகும். உங்கள் வாழ்க்கையைக் குறித்து ஆண்டவர் கொண்டுள்ள நோக்கம், உங்களை அமைதியின் கருவியாக இந்த உலகத்தில் பயன்படுத்தவேண்டும் என்பதுதான். அவ்வாறு ஆண்டவர் உங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றால், நீங்கள் ஆண்டவருடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளுங்கள், கற்றுக் கொள்கின்றவைகளை வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். கடைப்பிடிக்கின்றவைகளை வாழ்நாள் முழுவதும் காத்துக் கொள்ளுங்கள். அதாவது, வாழ்நாள் முழுவதும் வசனத்தின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையில் சாட்சியோடு வாழுங்கள். அமைதியின் கருவியாக உலகத்தில் செயல்படுங்கள். ஆமென்.

அருள்திரு. **R. ரஞ்சிட் சுதிர்**

# தவக்காலம்: ஓர் ஒப்புரவின் காலம்

## LENT : A TIME OF RECONCILIATION

தொநூ. 45: 1 - 15 எபே. 2: 11 - 22

திபா. 85 யோவா. 2: 1 - 11

"தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்கினார்" (எபே. 2: 16).

தவக்காலம் நம்பிக்கையின் காலம். இறைவனின் இரக்கத்தைச் சுவைக்கும் மகிழ்ச்சியின் காலம். இக்காலம் நாம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்துச் சிந்தித்து, புதியதொரு பாதையில் பயணிக்க வழி நடத்தும் காலம். இதுவே ஒப்புரவின் காலம். பாவத்தால் பிளவுபட்ட உறவைச் சரிபார்த்து, நம்மோடும், உலகோடும், பிறரோடும், வாழ்வோடும், இறைவனோடும் ஒப்புரவாகும் காலம். நம் வாழ்வை நாம் கட்டுப்படுத்தி, உலக மாயையின் தூண்டுதலுக்கு, "இல்லை" என்று பதில் சொல்லும் காலம். மகிழ்ச்சியோடு, அமைதியோடு வாழவேண்டிய மனிதர் பாவத்திற்கு "முடியாது", "இல்லை", என்று சொல்ல, முடிவெடுக்கவேண்டிய காலம் இது. கடவுளின் குரலுக்குச் செவிமடுக்கும் காலம்.

மனிதன் தன்னுடைய சுதந்தரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதன் வழியாக கடவுளைவிட்டு வெகுதூரம் சென்றிருந்தால் அதை உணர்ந்து, மனம் வருந்தி, மனம் திருந்தி கடவுளிடமே திரும்பி வருவதற்கான காலம் தான் தவக்காலம். இந்தத் தவக்காலத்தில் நாம் ஐந்து முக்கியச் செயல்பாடுகளில் கவனம் செலுத்தவேண்டும். அவை தர்மம், ஜெபம், நோன்பு, மனம் வருந்துதல் மற்றும் மனம் மாறுதல். இந்தச் செயல்பாடுகள் தனிமனிதர் ஒருவரை இறைவனிடம் மீண்டும் அழைத்துச் செல்ல உதவுகின்றன.

மனம் மாறுதல் என்பது இத்தவக்காலத்தில் ஏற்படுகிற முக்கியமான நேர்மறைத் தாக்கம். நான் மனம் மாறிவிட்டேன் என்று கடவுளிடம் மார்தட்டிக் கூறுவதற்கல்ல. அதைச் செயல்பாடுகளில் காட்ட வேண்டும். அன்பு செய்வதிலிருந்து தவறி வெகுதொலைவு சென்றிருந்தால், அன்பைச் செயல்களில் காட்ட வேண்டும். மன்னிக்க முடியாமல் இறுமாப்புடன் இருந்தால் அதிலிருந்து மாறி மற்றவர்களை மன்னிக்கத் தயாராக இருக்க வேண்டும். இதைத்தான் இயேசு, "பலியை அல்ல; இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று கூறுகிறார் (மத். 9: 5). இயேசுகிறிஸ்துவின் திருப்பணியில் ஒப்புரவு என்ற கருத்தை வலியுறுத்தினார். நீங்கள் உங்கள் நண்பர்களோடு மட்டுமல்ல

பகைவர்களோடும் ஒப்புரவு செய்துகொள்ளுங்கள் என்ற கருத்தை வலியுறுத்தினார். கிறிஸ்துவின் அன்பு என்பது வரைமுறைகளையும் தாண்டியதாகும். காணிக்கை செலுத்தும்போதும் தன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின் காணிக்கையைச் செலுத்துங்கள் என்ற இயேசுவின் ஆலோசனை ஒப்புரவின் ஆன்மீக தன்மையை வெளிப்படுத்துகிறது (மத்தேயு 5: 23 - 26). இதைத்தான் தவக்காலம் நமக்கு உணர்த்துகிறது.

தவக்காலம் மனதையும் ஆன்மாவையும் தூய்மைப்படுத்துவதை நோக்கமாக கொண்ட சுய இயக்க ஆன்மீகப் பயிற்சிகளின் காலமாகும். சாம்பல் புதன்கிழமையோடு தொடங்கி சுமார் ஆறுவாரங்கள் தொடர்ந்து உயிர்ப்பு ஞாயிறோடு நிறைவடைகிறது. இது இறைவேண்டல், தவம் செய்தல், பாவங்களுக்கு மனந்திரும்புதல், தானம் செய்தல் போன்ற செயல்களில் அதிகமாக ஈடுபடச்செய்ய தூண்டுகிறது. இச்செயல்கள் வழியாக மனிதன் கடவுளை நோக்கிப் பயணிக்கிற ஆன்மீக வாழ்வுக்குப் புதிய பாதையை உருவாக்குகிறது.

**1. மன்னிப்பின் வழியாக ஒப்புரவாக்குதல்** (தொநூ. 45: 1 - 15)

மன்னிப்பு கிறிஸ்தவத்தின் சிறந்த பண்பு ஆகும். இயேசுகிறிஸ்துவின் போதனைகளிலும் மன்னிப்பு தனித்துவமிக்கதாக விளங்குகிறது. யோசேப்பு இதற்குச் சிறந்த சான்றாவார். யோசேப்பு தனது சகோதரர்களோடு இணைந்த நிகழ்வு திருமறையில் ஒரு மேன்மையான நிகழ்வு ஆகும். அவரது சொந்த சகோதரர்கள் அவரை வெறுத்தனர் (தொ.நூ. 37: 4), அவரைக் கடத்திச்சென்று கொலை செய்யவும் (தொ.நூ. 37: 23), திட்டமிட்டனர். அந்த யோசேப்பு தன் சகோதரர்களைப் பழிவாங்கும் நிலையில் உயர்பதவியில் உயர்த்தப்படுகின்றார் (தொ.நூ. 45: 1-15). நாட்டில் பஞ்சம் கொடியதாக இருந்தபோதிலும் எகிப்தில் தானியம் ஏராளமாக இருந்தது. யோசேப்பின் சகோதரர்கள் பஞ்சத்தினின்று மீள எகிப்தையே தேடி வந்த சூழலில் தன்னை விற்றுப்போட்டவர்களைப் பழிவாங்கும் சூழல் உருவானபோதும் அவர்களைப் பழிவாங்கவில்லை. அவர் அவர்களைத் தனது சகோதரர்களாக ஏற்றுக்கொள்கிறார். அவர் அவர்களை அரவணைத்து மன்னிக்கிறார். உண்மையான ஒப்புரவு தொ.நூ. 50: 15 - 21 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தவறு செய்த சகோதரர்கள் மனந்திரும்பி “எங்கள் குற்றப்பழியை மன்னித்தருளும்” என்ற கேட்டபோது யோசேப்பு அழுதார். மன்னிப்பின் அடையாளமாக அஞ்சவேண்டாம் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் நான் பேணிப் பாதுகாப்பேன் என்று கூறினார் (தொ.நூ. 50: 21).

மன்னிப்பு கொடுத்தலும், மன்னிப்பு பெறுதலும் கிறிஸ்தவ வாழ்வின் மூலைக்கல். கிறிஸ்தவம் என்றாலே மன்னிப்பு என்று பொருள் கொள்ளலாம். இதே பண்பை பழைய ஏற்பாடும் முன் வைக்கிறது. பழைய ஏற்பாட்டின் கடவுள்

இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்தார். அவர்களுக்கு நாற்பது ஆண்டுகளாகப் பாலைநிலத்தில் பயிற்சி கொடுக்கிறார். அந்தப் பயிற்சியின் காலத்தில் இறைவன் மன்னிப்பு வழங்குபவர் என்பதை உணரும்படியாக அவர்களைப் பலமுறை மன்னித்து வழிநடத்துகிறார். ஆண்டவர் இரக்கமும் பரிவும் உள்ள இறைவன், சினங்கொள்ள தயங்குபவர், பேரன்புமிக்கவர், நம்பிக்கைக்குரியவர். ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர், கொடுமையையும், குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர் (விப. 34: 6 - 7). நாமும் இத்தவக்காலத்தில் பிறரை மன்னித்து ஒப்புரவை உருவாக்கி சான்றாவோம்.

**2. கிறிஸ்துவின் சிலுவை வழியாக ஒப்புரவு** (எபே. 2: 11 - 22)

யூதர்கள் தம் இனத்தைச் சாராதவர்களை “விருத்தசேதனம் செய்யாதவர்கள்” என்று அழைத்தனர். யூத சமயத்தில் ஒருவர் தம்மை இணைத்துக்கொள்வதின் அடையாளம் விருத்தசேதனம் செய்துகொள்வது ஆகும் (லேவி. 12: 3). புறவினத்தவர்கள் விருத்தசேதனம் செய்யாதவர்கள் என்பதால் அவர்கள் இறைவனது உடன்படிக்கைக்குப் புறம்பானவர்கள் என்று யூதர்கள் எண்ணினர். இவர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கையிலே பங்கில்லாதவர்களும் அவருக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களிலும் சேர்க்கப்படாதவர்களாகவும் கருதப்பட்டனர். இவ்வாறு யூதர் புறவினத்தினர் எனப் பிரிந்திருந்த கிறிஸ்தவ சமூகத்தைத் தம் சிலுவை மரணத்தின் வழியாக ஒப்புரவாக்கினார். அதைப் பவுலார் கிறிஸ்து தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய் பகைமை என்னும் சுவரைத் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார் எனக்கூறுகிறார் (எபே. 2: 12). இவ்விணைப்பு யூதருக்கும் பிறவினத்தாருக்கும் இயேசுவின் புதிய உடன்படிக்கையில் சமபங்கை அளித்து இறைவனோடு ஒப்புரவாகும் நிலையை அடையச்செய்தது.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் எருசலேம் தேவாலயத்தின் திரைச்சீலைகள் கிழிக்கப்பட்டு எல்லா மக்களும் இறையவரைத் தரிசிக்கும் இடமாக மாற்றப்பட்டது. திருத்தூயகம் அனைவரும் நுழையும் இடமாக மாறியது. கிறிஸ்துவின் இரத்தம் அனைவரின் பாவங்களையும் கழுவியது. அவரே நம்மிடையே பகையையும் விரோதத்தையும் போக்கிச் சமாதானத்தைக் கொண்டு வந்துள்ளார். அவர்வழியாகவே நாம் எல்லோரும் ஒரு மனதுடன் தந்தையிடம் தூய ஆவியார் வழி அணுகிவரும் பேறு பெற்றுள்ளோம் (எபே. 2: 18). எனவே நாம் அனைவரும் தொலைவிலிருந்து அருகிலே கொண்டுவரப்பட்டவர்கள் (எபே. 2: 13) என்பதை உணர்ந்து நம்மோடு வாழ்பவர்களை ஓரங்கட்டுவதைத் தவிர்த்து அனைத்து மக்களோடும் ஒப்புரவோடு வாழ்வோம். இத்தவக்காலம் கிறிஸ்துவின் சிலுவை வழியாக நம்மை அனைவரோடும் ஒப்புரவாக்கும் காலமாக அமையட்டும்.

**3. மாற்றுருவாக்கத்தின் வழியாக ஒப்புரவு** (யோவா. 2: 1 - 11)

யோவான் நற்செய்தியாளர் சமநோக்கு நற்செய்தியாளர்கள் பயன்படுத்தும் அற்புதம் என்னும் வார்த்தையை விடுத்து "அடையாளங்கள்" என இயேசுவின் அற்புதங்களைக் குறிப்பிடுகிறார். இயேசுவின் அடையாளங்கள் வரவிருக்கும் இறையரசின்படி இயேசு யார்? எப்படிப்பட்டவர்? எதற்காக வந்தார்? என்பதற்கு அடையாளமாக அவரின் செயல்கள் இருந்தது என்பதை எடுத்துக்காண்பிக்க இவ்வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். யூத மரபில் திருமணம் என்பது எட்டு நாட்கள் நடக்கும் ஒரு குடும்ப சமூக நட்பு விழா. இதில் முக்கிய பங்குவகிப்பது திராட்சை இரசம். கானாவூர் திருமண நிகழ்வில் திராட்சை இரசம் குறைவுபட்டது. யூதர்களின் சுத்திகரிப்பு முறைமையின்படி வைக்கப்பட்ட கற்சாடிகள் தண்ணீர் நிரப்பப்பட்டு இயேசுவின் வியத்தகு செயலால் திராட்சை இரசமாக மாறியது.

தண்ணீர் திராட்சை இரசமாக மாற வேண்டுமானால் தன் இயல்பை இழக்க முன்வர வேண்டும். தன் இயல்பையே மாற்றி தன்னையே சுருக்கித் தன் இயல்பை இழக்கவேண்டும். நிறமற்ற, சுவையற்ற மற்றும் மணமற்ற தண்ணீர் வண்ணமயமான, சுவையான மற்றும் நறுமணமுள்ள திராட்சை இரசமாக மாற்றப்பட்டது. சுத்திகரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் கற்சாடிகள் திராட்சை இரசத்தைப் பரிமாறும் ஜாடிகளாக மாற்றப்பட்டது. அதைப்போல நம் வாழ்வில் இருக்கின்ற இயல்புத் தன்மைகள் மாறவேண்டும். நம் குறுகிய எண்ணங்கள் மாறவேண்டும். ஆன்மீகம் என்பது நம் இயல்பை மாற்றுவது. நம் கூட்டை உடைத்து வெளியேறுவது. நம் இயல்பு வாழ்வில் இருக்கும் தன்மைகள் மாறி புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்வதே தவக்காலத்தின் நோக்கமாக அமையவேண்டும்.

கானாவூர் திருமண விழாவில் பரிமாறப்பட்ட புதிய இரசம் பழைய இரசத்தைவிட சுவைமிக்கதாக இருந்தது (யோவா. 2: 9). பழைய இரசம் என்பது அர்த்தமற்ற யூத முறைமைகளையும், மரபுகளையும் சுட்டிக்காட்டுகிறது. புதிய இரசம் என்பது அர்த்தம் தரக்கூடிய வாழவைக்கும் இயேசுவின் புதிய முறைமைகளையும் புதிய வாழ்வையும் காண்பிக்கிறது. இவைகள் கிறிஸ்தவத்தின் புதிய ஆன்மீக தன்மைகளைத் தன்னில் ஏற்று வாழ அழைக்கிறது. ஆன்று லாங் என்ற இறையியலாளர் "இவ்வுலகில் வாழும் கிறிஸ்தவனின் முக்கியமான பொறுப்பு தான் செல்லுமிடமெங்கும் தண்ணீரை இரசமாக மாற்றிக்கொண்டு செல்வதே" என்கிறார்.

நாமும் இத்தவக்காலத்தினைத் தொடங்கும்போது நம்முடைய வாழ்வில் கிறிஸ்து எதிர்பார்க்கும் ஒப்புரவாக்குதல் என்ற நற்பண்பினைச் சிலுவையின் வழியாகப் புரிந்து பொருள் நிறைந்த வாழ்வை இவ்வுலகில் வாழ்வோம்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

# நலமருள்தலும் முழுமையும்

## Healing and Wholeness

யோபு 42 : 1-12 2 கொரி. 12 : 1-10

திபா. 6 யோவா. 5 : 1-9

இறைவன் மனித வாழ்வு நலமுடனும் முழுமையுடனும் அமைந்திடவே விரும்புகின்றார் ஆனால் பிணி, மூப்பு, மரணம் என்ற வாழ்வின் வளர்ச்சியின் சவால்களையும், கூடவே வைத்துவிட்டார். அது படைப்பின் வேளையில் இல்லாவிடினும் பாவத்தின் விளைவாக புகுந்து விட்டன எனலாம். வாழ்வில் நலமுடனிருத்தலும் முழுமை பெறுதலும் தொடர் நிகழ்வுகளாகவே காணப்படுகின்றன. உள்ளமும் உடலும் சோர்வுறும் வேளைகளில் மனிதனின் ஏக்கமும் நலம் பெறுதலுடன் முழுமையாக வாழ வேண்டும் என்பதாகும். Healing (நலமாயிருத்தல்) என்பதற்குக் கிரேக்கத்தில் ueρupeiu (Therapia) என்னும் வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. முழுமை என்பதற்கு olothτu (olothitha) எனவும் கொடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முழுமையடைதலுக்கான சிகிச்சை மனித முயற்சியில் சாத்தியமே எனவும் கொள்ளலாம். சிந்தனைக்கான திருமறைபகுதிகளின் அடிப்படையில் நலமருள்தலுக்கும் முழுமை பெறுதலுக்கும் வழி வகை செய்யும் சிந்தனைகளைத் தியானிப்போம்.

1. **உணர்தல்** (Realization) யோபு 42 : 2, 3.

Realization leads to healing and wholeness உணர்தல் நலம் பெறுதலுக்கும் முழுமைக்கும் வழிவகுக்கும். உணர்ச்சி இழந்து வரும் மனிதர்கள் பெருகி கொண்டுவரும் சமூகத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். உலகில் நம்மோடு வாழும் சக மனிதரின் முகத்தில் சிறுநீர் கழிக்கும் மனிதனின் ஒலிஒளி காட்சிகள் வெளி வந்து மத, ஜாதி வெறியர்களின் தீச்செயலினால் மனுக்குலமே தலைகுனியும் நிலைக்கு அழைத்துச் சென்றுவிட்டது. மனிதன், மனிதன் என்ற உணர்வையே இழந்து விட்டான். அதோடு மனிதன் யார்? இறைவன் யார்? மனிதச் செயல்களின், சிந்தனைகளின் பொருள் என்ன? என்பதையும் உணரத் தவறிவிட்டான். யோபு 42 : 2, 3 வசனங்களில் இறைவன் அனைத்தையும் செய்ய வல்லவர் எனவும் மனிதன் அறிவில்லாமல் இறை ஆலோசனைகளை மறைப்பவனாகவும், தெரியாததையும், புத்திக்கு எட்டாததையும், அறியாததையும் நான் பேசினேன் எனவும் உணர்வதை நாம் காணலாம். 2 கொரிந்தியர் 12 : 1-இல் பவுல் மேன்மை பாராட்டுதல் எனக்குத்

தகுதியல்ல என உணர்கிறார். யோவான் 5 : 6-இல் இயேசு, 38 வருடம் பெதஸ்தா குளத்தின் கரையில் படுத்திருந்த மனிதனிடம் சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா? எனக் கேட்டு அவனை உணர்வடையச் செய்கின்றார். அவன் மறுமொழியிலே தன் இயலாமையையும், உதவிட யாருமில்லை என்ற தனிமையையும் வெளிப்படுத்துகின்றான். Helen Keller கூறுகையில் "Life is either a daring adventure or nothing at all", வாழ்க்கை ஒரு துணிச்சலான சாகசம் அல்லது ஒன்றுமில்லை.

வாழ்வைக் குறித்த உணர்வைப் பெற்றுகொள்ளும் மனிதர்கள் நலமுடன் முழுமை பெற்று வாழ்ந்திடுதல் சாத்தியமானதே.

2. **திருத்திக் கொள்தல்** (Rectification ) யோபு 42 : 4, 5, 6

'Rectification leads to healing and wholeness', திருத்திக்கொள்தல் நலம் பெறுதலுக்கும் முழுமைக்கும் வழிவகுக்கும்.

தவறு செய்தல் இயற்கையான ஒன்று. ஆனால் அத்தவற்றை உணராமல், திருத்தாமல் வாழ்வது மனிதனைத் தீமைக்கு இட்டுச் செல்கின்றது. தன் தவற்றைத் திருத்திக்கொள்ளாத மனிதன் முழுமையடையாத ஒருவனாகவே கருதப்படுகின்றான். யோபு 42 : 4, 5, 6 ஆகிய வசனங்களில், நீதிமானாக யோபு இருந்த தன்னுடைய வாழ்வில் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள முயலுகின்றார். "இறைவனே நான் உம்மைக் கேள்வி கேட்டேன்; தூளிலும், சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்", என்கிறார். மனிதர்கள் தாங்கள் செய்த தவறுக்காக மனஸ்தாபப்படாமல் காணப்படுதலும் தங்கள் வாழ்வைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையைத் தடுக்கின்றது. 2 கொரிந்தியர் 12 : 7-இல் பவுல், "என்னையே நான் உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டுள்ளது", என தான் திருந்துவதற்கான படிநிலையைக் குறித்துக் கூறுகின்றார். யோவான் 5 : 8-இல் இயேசு வியாதியாயிருந்த மனிதனை நோக்கி, எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்பது, 14 வது வசனத்தில் "அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே" என்பதும், மனித வாழ்வில் திருந்தி வாழ்வதினால் மட்டுமே நலமருளுதலையும் முழுமையாதலையும் பெற்றுக்கொள்ள இயலும் எனப் புரிந்துகொள்ளச் செய்கிறது.

George Washington கூறுகையில், "To err is nature, to rectify error is Glory" - தவறு செய்வது இயல்பு தவறை சரி செய்வது பெருமை. ஆனால் மனிதர் இன்று தவறைத் திருத்திக்கொள்வதை விரும்புவதில்லை என்கின்றார்.

Nauman இதை விளக்குகையில் "If someone corrects you and you feel offended, then you have an ego Problem" யாராவது உங்களைத் திருத்தினால்,

அதனால் நீங்கள் புண்படுத்தப்பட்டவர்களாக உணர்ந்தால், உங்களுக்கு (ego) அகங்காரம் என்ற பிரச்சனை உள்ளது - என்றார். வாழ்வைத் திருத்திக்கொள்ள அகங்காரம் தடுக்குமாயின் நம் வாழ்வு நலமுள்ளதாகவும் முழுமை அடைந்ததாகவும் வாழ்ந்திட இயலாது.

3. **புத்துணர்ச்சி பெறுதல்** (Rejuvenation) - யோபு 42 : 10, 12

Rejuvenation leads to healing and wholeness புத்துணர்ச்சி பெறுதல் நலம் பெறுதலுக்கும் முழுமைக்கும் வழி வகுக்கிறது.

புத்துணர்ச்சி பெறுதல் என்பது புதுப்பித்தல், (Renew, Refresh, Renovate and Restore) மறுசீரமைத்தல் போன்ற பல கருத்துகளை உள்ளடக்கியது. புத்துணர்ச்சியைத் தூண்டும் குளிர்பானங்கள் என விளம்பரங்களில் நாம் காண்பது உண்டு. இந்தப் புத்துணர்வு என்பது மனித வாழ்வில் அடுத்த படிநிலைக்கு ஆயத்தப்படுத்தும் செயலாகும். பழைய சோர்வுகளை விட்டுவிட்டு புதிய உணர்வுடன் செயலாற்றுவதாகும். யோபு 42 : 10, 12 வசனங்களில், யோபுவின் சிறையிருப்பைக் கர்த்தர் மாற்றினார். முன்பிருந்ததைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார் எனவும் பார்க்கலாம். பழைய இழப்புகளிலிருந்து புது உற்சாகத்துடன் புது வாழ்விற்கு அடியெடுத்து வைப்பதை யோபுவின் வாழ்வில் காணலாம். 2 கொரி. 12 : 9, 10 வசனங்களில் பவுல் நான் என் பெலவீனங்களில் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன், கிறிஸ்துவினிமித்தம், பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும் இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் என்று கூறுவது திருப்பணிகளிலும், வாழ்விலும் புத்துணர்வை வெளிப்படுத்தும் நிலையையே உணர்த்துகிறது. யோவான் 5 : 9-இல் வியாதியஸ்தன் தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து சென்ற காட்சி, புத்துணர்ச்சியுடன் புதுவாழ்வுக்கு நேராய்ச் சென்ற பயணமாகவே காண இயலும்.

தத்துவ ஞானி Confucius கூறுகிறார். “Life is really simple, but we insist on making it complicated” “வாழ்க்கை மிகவும் எளிமையானது. ஆனால் அதை நாமே சிக்கலாக்குகிறோம்”. எனவே வாழ்வில் நலம்பெறுதலையும் முழுமையையும் பெற்றிட மனித உணர்வுள்ளவர்களாய், தவறைத் திருத்திக்கொள்ளுபவராகவும், புத்துணர்வுடனும் வாழ்ந்திட ஆவன செய்வோமெனில் நலமருளும் முழுமையான வாழ்வை நாம் பெற்றிட இயலும். இறைவன் தாமே நம்மனைவருக்கும் நலமருளும் முழுமை வாழ்வை தந்தருள்வாராக.

அருள்திரு. அறிவர் **J. டானியல் ஜோஷியா**

# தவக்காலம் ஓர் அறிமுகம்

"தவக்காலம்" ஆண்டவர் நம்மை மனந்திரும்ப அழைக்கும் காலம். "தவக்காலம்" நம்மை ஆராய்ந்து அறிந்து, தீயவற்றை விடுத்து நாம் தூயவர்களாக வாழ முயலுகின்ற காலம். தவக்காலத்தில் மனந்திரும்புதலைக் குறித்து அதிகமாகச் சிந்திப்பது திருச்சபையின் மரபு. மனமாற்றத்திற்கு "தன்னிலை உணருதல்" மிக அவசியமாகிறது.

தவகாலத்தைக் குறிக்கும் 'Lent' என்கிற ஆங்கில வார்த்தையின் பொருள் "இளவேனிற்காலம்" அல்லது "வசந்த காலம்" ஆகும். வசந்த காலத்தில் மரங்களிலுள்ள பழுத்த, மரத்திற்கு பயனற்ற இலைகள் உதிர்ந்து, புதிய தளிர்கள் தோன்றி, பூவும், பிஞ்சும், அரும்பி, காயும் கனியும் காண வழி வகுப்பது போன்று, நம்முடைய வாழ்விலும் தவக்காலத்தில் நம் வாழ்விற்குப் பயனற்ற பாவ சிந்தனைகள், தீய செயல்பாடுகள் உதிர்ந்து (விட்டுவிட்டு) நல்ல சிந்தனைகள் தோன்றி, நல்ல செயல்பாடுகளைக் கடைப்பிடித்து, நற்கனி கொடுப்பவர்களாக வாழ நம்மை உருவாக்குகின்ற "ஆவிக்குரிய வசந்தகாலமே" இத்தவக்காலம். தவக்காலத்தில் "நோன்பு" என்ற சொல் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. "உண்ணும் உணவையும் குடிக்கும் பானத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தவிர்த்தல்" என்பது நோன்பின் பொருள்.

**நோன்புக் காலத்தின் பின்னணியம்**

யூதர்கள் சூரியன் உதிக்கும் நேரம் முதல் மறையும் நேரம் வரை நோன்பிருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். தங்கள் மனம் வருந்துதலின் அடையாளமாகவும், கடவுளின் தயவை, இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும் அல்லது கடவுளின் கவனத்தைத் தங்களிடம் திருப்பவும் நோன்பிருந்தனர். நோன்பிருப்பது பக்தி வாழ்வின் உயர்நிலையாகக் கருதினர். பிற்காலத்தில் இது மாய்மால பக்தி வாழ்வாகவும் (பிறர் காணும்படி) காணப்பட்டது. நோன்புக்கு அடையாளமாக உடல் மீது சாம்பல் பூசிக்கொண்டு, சாக்குத் துணி உடுத்திக்கொண்டு, தலைக்கு எண்ணெய் பூசாமல், சாம்பலில் உட்கார்ந்து தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்திய நிகழ்வுகளைப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் காண்கிறோம்.

ஆதித் திருச்சபையின் காலத்தில் வியாழன், வெள்ளி, சனி, உபவாச நாட்களாக கருதப்பட்டன. பின்னர் புனித வாரமாகிய ஏழு நாட்களும் உபவாச

நாட்களாக கருதப்பட்டன. ரோமப் பேரரசர் கான்ஸ்டன்டைன் (முதல் கிறிஸ்தவப் பேரரசர்) கி.பி. 325-ல் கூட்டிய நிசேயா மன்றத்தில் லெந்து காலம் மற்றும் உயிர்த்தெழுதல் திருநாள் ஆசரிப்பை அரசாணை வழியாக வெளியிட்டார். 5-ம் நூற்றாண்டிற்குப் பின் எல்லாக் கிறிஸ்தவர்களும் உயிர்த்தெழுதல் திருநாளுக்கு முன் 40 நாட்களுக்கு முன் சாம்பல் புதன் அன்று சாம்பலைப் பூசி நோன்பு நாளை ஆசரித்தனர். “ஆண்டவரின் முன் அனைவரும் தவறு செய்தவர்கள்” என்ற உண்மையை வெளிப்படுத்துவதாய் இது அமைந்தது. (எஸ். 4: 1), ‘சாம்பல்’ சுயவெறுப்புக்கு, தங்களை தாழ்த்துவதற்கு அடையாளமாகக் கருதப்பட்டது. (யோனா 3: 6-8). தொநூ. 18: 27-இல் “அப்பொழுது ஆபிரகாம் மறுமொழியாக, தூசியும் சாம்பலுமான நான் என் தலைவரோடு பேச துணிந்துவிட்டேன்” என கூறுவது தாழ்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்தத் தவக்காலத்தின் தொடக்கநாள் “சாம்பல் புதன்” (Ash Wednesday) என்று அழைக்கப்படுகிறது. முந்தின வருட குருத்தோலை ஞாயிறு அன்று பயன்படுத்திய குருத்தோலைகளைச் சேகரித்து, தவக்காலத்தின் முந்தின நாளில் அதை எரித்து, சாம்பலாக்கி, அதனைப் புனித சாம்பலாகப் போற்றி, தவக்காலத்தின் முதல்நாள் புதன்கிழமை வழிபாட்டில் ஆயர் மக்களின் நெற்றியில் அச்சாம்பலால் சிலுவை அடையாளமிட்டு ஆசி கூறுவது மரபு. இது கத்தோலிக்க திருச்சபைகளில் இன்றும் பின்பற்றப்படுகிறது. கிறிஸ்தவ வரலாற்றில் “சாம்பல் புதன்கிழமை” தவக்காலமாகிய நோன்பு நாட்களின் ஆரம்ப நாள்.

**தவக்காலம் கணக்கிடுவது எப்படி?**

திருச்சபை கால அட்டவணையில் சாம்பல் புதன்கிழமையில் இருந்து உயிர்த்தெழுதல் நாள் வரையிலும் உள்ள 46 நாட்களில் ஆறு ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக 40 நாட்கள் தவக்காலமாக ஆசரிக்கப்படுகிறது. உயிர்த்தெழுதல் திருநாள் மற்றும் ஓய்வுநாட்கள் கொண்டாட்டத்தின் நாட்கள். எனவே ஓய்வுநாட்கள் நோன்பு நாட்களாக ஆசரிக்கபடுவதில்லை. தவக்காலத்தைக் கணக்கிடுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் இரவும் பகலும் சமமாக உள்ள மார்ச் மாதம் 21-ம் நாளை அடிப்படையாக எடுத்துக்கொள்வர். காரணம் மார்ச் 21-ம் நாள் தான் சூரியன் பூமத்திய ரேகையில் பயணிக்கும். மார்ச் 21-ம் நாளுக்கு அடுத்து வரும் (முழு நிலா) பௌர்ணமி தினத்தைத் தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுதல் நாள். ஒருவேளை பௌர்ணமி நாள் அன்று ஞாயிறு வந்தால் அதற்கு அடுத்த ஞாயிறு உயிர்தெழுதல் திருநாள் ஆகும்.

**திருமறையில் நாற்பது (40) எண்ணின் முக்கியத்துவம் :**

நோவாவின் காலத்தில் 40 நாள்கள் இரவும் பகலும் மழை பூமியின் மேல் பெய்தது (தொ.நூ. 7: 12, 17). 40 நாள்கள் முடிந்த பின் பேழையில் சாளரத்தை நோவா திறந்தார் (தொ.நூ. 8: 6). இஸ்ரவேலர் 40 ஆண்டுகள் மன்னா உண்டனர் (விப. 16: 35). மோசே சீனாய் மலையில் 40 நாள் தங்கியிருந்து கற்பனை, நியாயப்பிரமாணத்தைப் பெற்றுகொண்டார். (விப. 24: 18; 34: 28, இச. 9: 9, 25). இஸ்ரவேலர் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் பயணம் செய்தனர். (இச. 8: 2; எண். 32: 13). இஸ்ரவேலரின் உளவுகாரர்கள் கானானை 40 நாட்கள் தங்கியிருந்து உளவு பார்த்தனர். (எண். 13: 25). பெலிஸ்திய வீரர் கோலியாத் இஸ்ரவேலருக்கு எதிராக 40 நாட்கள் சவால் விட்டார். (I சாமு. 17: 16). எலியா இறைவன் தந்த ஒரு நேர உணவை உண்டு, அதன் ஆற்றலால் 40 நாள்கள் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலைக்கு வந்தார் (I அர. 19: 8). மோசே 2-ம் முறை கற்பலகை கொண்டு சென்ற போதும் 40 நாள் உணவு சாப்பிடாமல், தண்ணீர் அருந்தாமல் ஆண்டவரோடு இருந்தார் (விப. 34: 28). இஸ்ரவேலரின் பாவச் சுமையை எசேக்கியேல் இறைவாக்கினர் 40 நாட்கள் சுமந்தார் (எசே. 4: 6). இஸ்ரவேல் நாட்டைத் தாவீது, சாலமோன் ஆகிய அரசர்கள் 40 ஆண்டுகள் ஆண்டனர். (II சாமு. 5: 4). நினிவே 40 நாளில் அழிக்கப்படும் என யோனா அறிவித்தார் (யோனா. 3: 4).

இயேசு கிறிஸ்து 40 நாள்கள் பாலைவனத்தில் நோன்பு இருந்தார். (மத். 4: 2) இயேசு கிறிஸ்து 40 நாள்கள் பாலைவனத்தில் அலகையினால் சோதிக்கப்பட்டார் (லூக். 4: 2). உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து 40 நாள்கள் உலகத்தில் சுற்றித் திரிந்து அப்போஸ்தலருக்குக் காட்சியளித்தார். (தி.ப. 1).

திருச்சபைக்கு ஒரு ஆன்மிக வசந்த காலத்தைத் தவக்காலமாக திருச்சபையின் பெரியவர்கள் உருவாக்கித் தந்துள்ளனர். தவக்காலம் தூய வாழ்வை உருவாக்கும் காலம் ஏழை, எளியவர் மீது கரிசனைகொள்ளும் காலம். பகிர்ந்து வாழக் கற்றுக்கொள்ளும் காலம். அலகையை (தீயோனை) எதிர்க்கும் ஆற்றல் பெறும் காலம். தவக்காலத்தில் திருமறையின் வழியாக கடவுளின் வார்த்தைகளைக் கவனமாகப் படிப்பதும், தியானிப்பதும், கேட்பதும் அதன்படி வாழ்வதும் நம் மனமாற்றத்திற்கு வழிகாட்டும். உடல்சார்ந்த கட்டுப்பாடுகள் மட்டுமல்ல. உள்ளம் சார்ந்த ஆன்மீகத்தை நெறிப்படுத்துகிற இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகிற, தவறான போதனைகளைப் புறக்கணிக்கிற ஆன்மீக காலங்களாக அமைய ஆண்டவர் அருள் தருவாராக.

அருள்திரு. **T. டேவிட் கிளேட்சன்**

# சிலுவை: தன்னல மறுப்புக்கு ஓர் அழைப்பு

## Cross : A Call to Self - Denial

யோவே. 2: 12-20 கலா. 2:15-21

திபா. 32 லூக். 9: 22-27

"இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். கலா. 2: 20

ஒரு தெருவில் சாக்கடை மூடி திறந்து கிடந்தது. அப்போது அங்கே விளையாடிக் கொண்டிருந்த ஏழு குழந்தைகளும் அந்தச் சாக்கடைக் குழியில் விழுந்துவிட்டார்கள். இதைக் கவனித்த ஒரு குழந்தையின் தாய் வேகமாக ஓடிவந்து தன் உயிரையும் பொருட்டாக எண்ணாமல் எல்லாக் குழந்தைகளையும் காப்பாற்றுகிறார். அதோடு சாக்கடை சேறோடு காணப்பட்ட அக்குழந்தைகள் அனைவரையும் அருகில் இருந்த தண்ணீர் குழாயின் உதவியால் தீவிரமாய்ச் சுத்தப்படுத்தினார். இந்நேரத்தில் மற்ற தாய்மார்களும் தங்கள் குழந்தைகளைத் தேடி கூடிவிடுகின்றனர். அவர்களில் ஒரு பெண், குழந்தைகளைக் காப்பாற்றிய தாயைப் பாராட்டி, "நான் உண்மையிலேயே உமது பொதுநல செயலைப் பாராட்டுகிறேன் நீங்கள் எல்லா குழந்தைகளையும் காப்பாற்றியது மட்டுமல்லாமல்அக்குழந்தைகளையெல்லாம் நீங்களாகவே கழுவிச் சுத்தம் பண்ணினீர்களே. இத்தகைய மனநிலை எவருக்கும் எளிதாக வருவதில்லை" என்றார். அதற்குப் பதிலாக அந்தத் தாய், அப்படி ஒன்றும் இல்லை, எல்லாக் குழந்தைகளையும் கழுவிச் சுத்தம் செய்தால்தான் என் குழந்தை எதுவென்று அடையாளம் தெரியும். ஆகவே தான், எல்லாக் குழந்தைகளையும் கழுவி சுத்தம் செய்தேன் என்றார்களாம். இப்படித்தான் தன்னலமுடையோர் பொதுநலனைக் கருவியாகக் கொண்டு செயல்படும் காலம் இது. ஆனால் பொதுநலனைக் கருவியாகக் கொள்ளாமல் முழுவதும் தன்னல மறுப்புடன் செயல்படும் இறைமக்கள் இவ்வுலகில் உண்டோ எனத் தேடிப்பார்க்கத்தான் செய்கிறார்கள். காரணம் நாம் பற்றிக் கொண்டுள்ள தன்னலம் சார்ந்தவைகளையும் எல்லாப் பற்றுகளையும், ஆசாபாசங்களையும் கைவிடுவதற்குத் தன்னல மறுப்பு பேருதவியாக இருக்கும்.அது உணர்வுகளையும் கட்டுப்படுத்துகிறது.

"தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வாழ்வை ஏற்ற" (பிலி. 2: 7) இயேசு கிறிஸ்து சீடர்களிடம் "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப்

பின்பற்றட்டும்" என (லூக். 9: 23) அழைப்பு விடுத்தார். தன்னல மறுப்பு வழியாக தான் கடவுளின் திருவுளத்தை ஆழமாக அறிந்து கொள்ளவும், நம்மை அர்ப்பணிக்கவும் உதவி செய்கிறது. இது ஒரு துன்பமான அனுபவம் என்பதை விட மகிழ்ச்சியான அனுபவமே.

தடம் மாறிச் செல்லும் தன் வாழ்வைத் தடுத்துநிறுத்தி தன்னையே சுய ஆய்வு செய்து, சரியான வழியில் செல்பவனே சிறந்த மனிதன். இப்படிப்பட்ட சுய ஆய்விற்குத் திருச்சபை வழங்குகின்ற காலம்தான் தவக்காலம். இத்தவக்காலத்தின் முதல் நாளாகிய இன்று தூய பவுலைப் போலவே என்னில் அவர், அவரில் நான் என்ற அர்ப்பண வாழ்வுக்கு ஒப்புகொடுத்து, நமது தன்னல விருப்பத்திற்கு வாழும் வாழ்வை மறுத்து, நற்செய்திக்காகவும் கிறிஸ்துவுக்காகவும் வாழ்ந்து, நமது வாழ்வைக் கட்டுப்படுத்தும் உரிமையை விட்டுவிட்டு அந்த உரிமையைக் கிறிஸ்து இயேசுவுக்குக் கொடுத்து, தன்னலத்தை மறந்து அந்த இடத்தில் இயேசுவைச் சிம்மாசனம் இடச் செய்வதே ஏற்புடையது. இவ்வாண்டின் தவக்காலத்திலும் ஏன் தன்னல மறுப்புக்கான அழைப்பு தரப்படுகிறது என தியானிப்பது பொருள் நிறைந்ததாக அமையும்.

**1. தன்னல மறுப்பு - உலகத்தின் மீதுள்ள ஈர்ப்பிலிருந்து விலக உதவும்**

மகத்தான அர்ப்பண ஈடுபாடு கொண்டவர்களால் தான் தன்னல மறுப்பு மதிப்பினை உருவாக்கிக் கொள்ளமுடியும்.அது உலகப் பொருள்களிலிருந்து முற்றிலுமாக ஒருவரை விலக்கிக் கொள்ளச் செய்கிறது. அவரது மனம், புலன்கள், அறிவு ஆகியவற்றைக் கடவுளுக்கு அர்ப்பணிக்கச் செய்கிறது. மேலும் நமது மனதை ஆசைகளுக்கு இரையாக்கும் காரணிகளைக் களைகிறது. உண்மையாக தன்னலத்தை மறுப்பதால் நாம் உடல், உலகம், சட்டம், சாவு, பிசாசு, பாவம் ஆகிய அனைத்திற்கும் இறக்கிறோம். ஆனால் நாம் கடவுளுக்கென வாழ்கிறோம். கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலும் தூய பவுலார், "நான் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே, இனி வாழ்பவன் நான் அல்ல" (கலா. 2: 19,20) என்ற அறிக்கை வழியாக பவுலாகிய நான் பழைய, பாவ வாழ்வை, ஜென்ம சுபாவங்களைச் சிலுவையில் அறைந்திருக்கிறேன். உலகப் பற்றை விட்டு வாழ்கிறேன் என்கிறார். இப்படித் தன் சுயத்திற்கு மரித்துப்போன ஒருவர் தான், இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றமுடியும் என்றும் Dietrich Bonhoeffer என்ற இறையிலாளர் உரைக்கிறார். இங்ஙனம் உலகத்தையும் அதின் இச்சைகளையும் சிலுவையில் அறைந்து விடுவோருக்கு உலகத்தின் மீதுள்ள ஈர்ப்பிலிருந்து விலகி விடமுடிவதோடு கிறிஸ்துவோடு இணைந்து கொள்ள உதவியாயிருக்கிறது. கொலோ. 2: 11-ல் பவுல் "கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் அவர் வழியாய் விருத்தசேதனம் செய்யப்பட்டு ஊனியல்பைக் களைந்துள்ளீர்கள்" என்கிறார்.

பாரசீகரின் ஆட்சி காலத்தில் பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட கொடும் வறட்சி, வெட்டுக்கிளிகள் விளைத்த அழிவு, இவைகளிலிருந்து நல்வாழ்வு அளிப்பதாக உறுதி வழங்கும்போது, "அழுது புலம்பிகொண்டு உங்கள் முழு இருதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள், நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இருதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவே. 2: 12, 13) என்று யோவேல் இறைவாக்கினர் வழி இஸ்ரவேலரை உலகத்தின் பக்கத்திலிருந்து இறைவன் பக்கம் திரும்ப கடவுள் அழைக்கிறார். இறைமக்களாகிய நாம் இத்தவக்காலத்தில், கடவுளை வெறுக்கும் அளவுக்கு உலகத்தின் மீது அன்பு செய்வதை விட்டுவிட்டு உலகத்தின் மீதுள்ள ஈர்ப்பை வெறுக்கும் அளவுக்கு கடவுளை அன்பு செய்ய வேண்டும் என்ற உறுதியோடு வாழ்வோம்.

## 2. தன்னல மறுப்பு -உறவினைப் பெருக்கிட உதவும்

தவக்காலம் என்பது பள்ளத்தாக்குகளை உருவாக்க அல்ல, உறவுகளில் பாலங்களை அமைக்கவே, சொல்லுக்கும் செயலுக்கும், உள்ளத்துக்கும் உடலுக்கும், செல்வச் செழிப்புக்கும், பட்டினிக்கும், கோட்டைக்கும் குடிசைக்கும், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே புதிய வழித்தடங்களை உருவாக்குவதே. வாழ்விலிருந்து உறவை எடுத்துவிடுங்கள், நூறிலிருந்து ஒன்றை அழித்து விட்டால் பூஜ்யம் தான் பதிலாக கிடைப்பதுபோல, வாழ்வே சூன்யமாகிவிடுகிறது. தன்னலத்தை மறுத்து கிறிஸ்து தம் உடலையும் உதிரத்தையும் நமக்குக் கொடுத்து நமது உறவை நிரந்தர உறவாக்கிக்கொண்டார். தூய பவுலடிகளாரின் தன்னல மறுப்பின் வழியாக ஏற்பட்ட இறை உறவினை, இறை நெருக்கத்தினை, இறை இணைவினை, அவர் பறைசாற்றும்போது ". . . கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா. 2: 20) எனக் குறிப்பிடுகிறார். இவ்வுண்மை, பவுலுக்கும் கிறிஸ்துவுக்கும் மட்டுமல்லாமல், கிறிஸ்தவருக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள ஆழமான உறவை, நெருங்கிய ஒன்றிப்பை அழகாகக் காட்டும் தொடர் இது. தூய பவுல் "கிறிஸ்துவில் நான், என்னில் கிறிஸ்து" என்ற உறவு நிலையை அழுத்தமாகத் தெளிவுபடுத்தும்படியாக ''en christo'' (in Christ) 'கிறிஸ்துவுக்குள்' என்ற உருபை சுமார் 150 முறை தனது கடிதங்களில் பயன்படுத்துகிறார். சிறப்பாக தூய பவுல், 2 கொரி. 2: 14-ல் "கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களைக் கடவுள் கிறிஸ்துவின் வெற்றி பவனியில் பங்கு கொள்ள செய்து . . ." என்றும் 2: 17-ல் மீண்டும் "நாங்கள் கடவுளின் வார்த்தையை மலிவு சரக்காகக் கருதும் பலரைப் போன்றவர்கள் அல்லர், மாறாக கிறிஸ்துவோடு இணைந்துள்ள நாங்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள்," என்பதன் வழியாக, பவுலுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள உறவின் நெருக்கத்தை அறிய முடிகிறது. கிறிஸ்து இயேசுவோடு இணைந்து உறவுடன் வாழ்வதே முழு உரிமை வாழ்வு

மட்டுமல்ல, மிகுந்த கனிகொடுக்கும் வாழ்வாகவும் இருக்கும், அதாவது யோவா. 15: 5 “ஒருவர் என்னுடனும் நான் அவனுடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்” என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். ஆகவே தன்னல மறுப்பு, ஆண்டவரோடும் அடுத்தவர்களோடும் நல்லுறவுடன் வாழ உதவி செய்கிறது.

### 3. தன்னல மறுப்பு உறுதியாய் நம்பிக்கையில் நிலைத்திட உதவும்

வளர்ந்து படரும் கொடி ஒரு கொம்பைப் பற்றிக் கொள்வது போல நம்பிக்கையெனும் கொம்பைக் கட்டிப்பிடித்திட தன்னலமறுப்பு உதவிடுகிறது. யூதச் சட்டத்தின் மீது அதிக ஆர்வம் கொண்டிருந்த பவுல் திருச்சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, இயேசு கிறிஸ்துவின் மீது கொள்ளும் நம்பிக்கையால் தான் ஒருவர் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆகமுடியும் என நாம் அறிந்திருக்கிறோம். ஆதலால் தான் நாமும் சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, நம்பிக்கையால் இறைவனுக்கு ஏற்புடையவராகுமாறு கிறிஸ்து இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம் (கலா. 2: 16) என்றுரைத்ததோடு, அவரது நம்பிக்கை மேலும் வலுவடைந்து வருவதையும் கோடிட்டுக் காட்டி, இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என் மீது அன்பு கூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார் (கலா. 2: 20) என மிக உறுதியாக நம்பிக்கையில் நிலைத்திருந்ததை அறிவித்தார். இப்படி, அவர் கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையின் வழி கடவுளுக்கு ஏற்புடையவராக மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவையும் (உரோ. 5: 1) பெற்றுக் கொண்டதினால் பெருமிதம் கொண்டார். இத்தவக்காலத்திலும் கிறிஸ்து எனக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்ததால் அவரில் உறுதியாய் நம்பிக்கையோடு வாழ்வேன் என்ற தீர்மானம் தேவை. “நமது இருதயத்தின் மிகப் பெரிய பக்கவாதம் நம்பிக்கையின்மையே” என்று ஆஸ்வால்ட் சாம்பர்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார். ஆகவே நம்பிக்கையின்மையினால் வாழ்வில் தடுமாறாமல் தூய பவுலைப் போல தன்னலமறுப்பால் வரும் உறுதியான நம்பிக்கையில் நிலைத்திட முயற்சி செய்வோம். கடவுள் இத்தவக்காலத்திலும் நம்மைப் பக்தர்களாக பார்க்க ஆசைப்படாமல்,நேர்மையான,உறுதியான நம்பிக்கையில் நிலைத்திட முயற்சி செய்வோம்.

### 4. தன்னல மறுப்பு - உயர்நிலைக்கு நேராக நடத்தும்

கரைய விரும்பாத உப்பினால் உணவுக்குச் சுவைதர முடியாது. அழியவிரும்பாத மெழுகினால் உலகிற்கு ஒளியைத் தரமுடியாது. இழக்க விரும்பாத அல்லது தன்னலத்தை மறுக்க விரும்பாத மனிதனால் கடவுளிடமிருந்து எதையும் பெறமுடியாது என்பது தான் உண்மை. தூய

பவுலாரின், "இனி வாழ்பவன் நானல்ல" (கலா. 2: 20) என்ற தன்னல மறுப்பினால் அவரை கடவுளுக்கு ஏற்புடைய மனிதராகவும், கடவுளோடு நல்லுறவுள்ள நபராகவும் மாற்றியது மட்டுமல்லாமல் அவர் ஓர் ஒப்பற்ற திருத்தூதராய் உலகில் உயர்த்தியது. அவரது உன்னத இலட்சியங்களுக்காக அனைத்தையும் தியாகம் செய்வதற்கு வேண்டிய துணிச்சலை தன்னல மறுப்பு தான் வழங்கியது. இயேசுவின் அன்பு சீடன் பேதுரு இயேசுவிடம், "நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே, எங்களுக்கு என்ன கிடைக்கும்? எனக் கேட்டபோது சீடர்களாகிய அவர்களின் தன்னல மறுப்பால் வரும் உயர்நிலைகளை இயேசு பட்டியலிட்டுக் குறிப்பிட்டார். அதன்படி, மத்.19:28-ல், "புதுபடைப்பின் நாளில் மானிடமகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். அப்போது என்னை பின் பற்றிய நீங்களும் இஸ்ரயேல் மக்களின் பன்னிரு குலத்தவர்க்கும் நடுவர்களாய்ப் பன்னிரு அரியணைகளில் வீற்றிருப்பீர்கள்" எனவும் மத். 19: 29-ல் "என் பெயரின் பொருட்டு உறைவிடங்களையோ, உறவுகளையோ, உடமைகளையோ விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காகப் பெறுவர், நிலை வாழ்வையும் உரிமை பேறாக அடைவர்" எனவும் தெளிவாகக் குறிப்பிட்டார். உண்மையாகவே, உலகைப் பிடித்துகொண்டே வாழ்வோமாயின் உண்மை வாழ்வையும் கூடவே உயர்வையும் நழுவவிடுவர். ஆகவே, இத்தவக்காலத்திலும் தன்னலத்துடன் வாழ்வோமானால் இறை ஆசிகளை இழந்து போக நேரிடும் என்ற சிந்தையோடு தன்னல மறுப்புடன் வாழ்ந்து இறை ஆசிகளைச் சொந்தமாக்குவோம்.

தன்னல மறுப்பிற்கு இணையற்ற மாதிரியானவர் இயேசுவே, எப்படியெனில், அவர் தமது பரலோக ஆனந்தத்தைத் துறந்து பாடுகள் நிறைந்தவரானார். விண்ணகத் தோழமைகளை விட்டுப் பாவிகளின் நண்பரானார். நித்திய மகிமையைக் களைந்து தள்ளப்பட்ட கல்லானார். விண்ணில் தூதர் சேனையின் பணிவிடை பெற்றுக் கொண்டிருந்தவர், வேலைக்காரனும் அடிமையுமானார், தூதரால் எப்பொழுதும் போற்றப்பட்டுக் கொண்டிருந்தவர் பகடிக்குப் பலியானார். தமது பூரண அழகை இழந்து நமக்காய் பாவமானார். சிங்காசனத்தை விட்டிறங்கிப் பலி பீடத்தில் தாமாக பலியானார். இவ்வாண்டின் தவக்காலத்தில் இயேசுவைப் பின்பற்ற விரும்பும் நம் அனைவருக்கும் தரப்படும் அடிப்படை நிபந்தனை தன்னல மறுப்பே.

அருள்திரு. **G.S. அஸ்வின் ஜெய்சிங்**

# வாழ்வு தரும் உணவு நானே

## (I am the Bread of Life)

யோவா. 6: 25 - 40

"இயேசு அவர்களிடம், வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது." (யோவா. 6: 35)

கடந்த வருடம் பிப்ரவரி மாதம் உலகையே உலுக்கிய ஒரு இயற்கைப் பேரழிவு துருக்கி, சிரியா தேசங்களைச் சிதைத்துப் போட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.8-ஆகப் பதிவான அந்தப் பூகம்பம் 50,000-க்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவு கொண்டது. மனித உயிர்கள் மட்டுமல்ல பலகோடி மதிப்பிலான பொருட்கள், கட்டடங்கள் தரைமட்டமாயின. சீரான பொருளாதாரத்தைக் கொண்ட இரு நாடுகளும் ஒரு சில விநாடிகளில் இயற்கையின் பேரழிவினால் உடைந்து உருக்குலைந்தன. உடைந்தது பொருளாதாரம் மட்டுமல்ல மனிதனின் உணவும் தான். இருளுக்குள்ளேயும், இடிபாடுகளுக்குள்ளேயும் சிக்கிக் கொண்டவர்களுக்கு உணவு கொடுப்பது என்பது சவாலாக மாறியது. காணொளிகளில் பகிரப்பட்ட ஒரு நிகழ்வு பார்ப்போரின் நெஞ்சைக் கதிகலங்க வைத்தது. இரண்டு மாத குழந்தைக்குப் பாட்டில் மூடியில் ஒவ்வொரு சொட்டாக தண்ணீர் கொடுத்து நீண்ட முயற்சிக்குப் பிறகு மீட்புக் குழுவினர் மீட்டெடுத்தது பார்ப்போரின் கண்களைக் குளமாக்கியது.

உணவு என்பது உடலோடும், உயிரோடும் கலந்தது. உணவு இல்லையேல் உயிரினங்கள் இல்லை. இவ்வுலகமும் இல்லை. அழிந்து போகிற உணவு இவ்வளவு அவசியம் என்று தேடும் வேளையில் அழிந்து போகாத உணவு எவ்வளவு அவசியம் என்பதைத் தேட நாம், அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆண்டவர் இயேசு தம்மைத் தேடி வந்த மக்களைப் பார்த்துச் சொல்கின்றார் "வாழ்வு தரும் உணவு நானே" வாழ்வு தரும் உணவு எத்தகைய தன்மை கொண்டது.

**1. விண்ணிலிருந்து வந்த உணவு** (யோவான் 6: 38)

ஆண்டவர் இயேசுவின் நற்செய்திப் பயணத்தில் ஒரு கூட்ட மக்கள் இயேசுவைப் பின் தொடர்ந்து கொண்டே வந்தார்கள். பின் தொடர்வதற்குக் காரணமும் இருந்தது. யோவான் நற்செய்தியாளர் 6-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில்

“உடல்நலம் அற்றோருக்கு அவர் செய்துவந்த அரும் அடையாளங்களைக் கண்டு மக்கள் பெரும் திரளாய் அவரைப் பின் தொடர்ந்தனர்.” ஆனால், யோவான் 6: 26-ல் இயேசு கிறிஸ்து “நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால் தான் என்னைத் தேடுகிறீர்கள்” என்கிறார். இங்குக் கேள்வி ஒன்று எழும்புகிறது. இயேசுவைப் பின் தொடர்ந்த மக்கள் அடையாளத்திற்காகப் பின் தொடர்ந்தார்களா? அல்லது அப்பத்திற்காகப் பின் தொடர்ந்தார்களா? காரணம், இயேசு ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்திற்ம் அதிகமானவர்க்கு உணவளித்திருந்தார். உணவளித்ததிலே பங்கேற்ற மக்கள் கூட்டம் அடையாளத்தை மறந்து அப்பத்தை நோக்கிப் பயணித்தார்கள். வயிறார உண்டவர்கள் வயிறார உண்டபின் அவர்கள் சொல்லுகின்றனர் “உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையில் இவரே” விண்ணிலிருந்து வந்த இறைமகன் இயேசு என்று சான்றளிக்காமல் உலகிற்கு வந்த இறைவாக்கினர் என்று சான்றளித்தனர். யோவான் 6: 15 அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக் கொண்டு போய் அரசனாக்கப் போகிறார்கள் என்பதை உணர்ந்து இயேசு மீண்டும் தனியாய் மலைக்குச் சென்றார். மோசேயைப் போல இயேசுவையும் மண்ணுலகின் இறைவாக்கினராகவே பார்த்தார்கள். இயேசுவை இம்மண்ணுலக அரசனாக்கப் பின்தொடர்ந்தார்கள். எனவே யோவான் 6: 32-ல் இயேசு அவர்களிடம் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்லர் வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருளுபவர் என் தந்தையே.

அன்பான இறைமக்களே, விண்ணிலிருந்து வந்த உணவை, மண்ணுலகில் அழிந்து போகிற அப்பத்தோடு அடையாளப்படுத்தாமல், வீழ்ந்து கிடக்கும் சமூகத்திற்கு விடுதலை தரும் உணவாக விண்ணவரோடு தொடர்ந்து நடக்க இந்தத் தவக்காலத்தில் முயல்வோம்.

**2. விண்ணில் சேர்க்கும் உணவு** (யோவான் 6: 40)

நம்பிக்கை இழந்த சீடர்களும் நம்பிக்கை இல்லாத மக்களும் இறைமகன் இயேசுவைப் பின் தொடர்ந்த நிலையில் இயேசு சொன்ன வார்த்தை நான் உங்களுக்குச் சொன்னவாறே நீங்கள் என்னைக் கண்டிருந்தும் நம்பவில்லை. இன்று நம்மிலும் பலர் நம்பிக்கை அற்றவர்களாகவே இருக்கிறோம்.

ஒரு பொழுது போக்காளர் கயிறு ஒன்றை இரண்டு மரத்திற்கிடையே கட்டி இந்தக் கயிற்றில் என்னால் விழாமல் நடந்து போகமுடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா என்று கேட்டார். அங்கே கூடியிருந்த மக்கள் கூட்டம் முடியவே முடியாது என்றனர். ஆனால், அவர் அந்தக் கயிற்றில் மிகச் சுலபமாக நடந்து

சென்றார். இப்போது கேட்டார் இந்தக் கயிற்றில் என் இரு கைகளிலும் நாற்காலிகளைச் சுமந்து நடக்க முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? என்று கேட்டார். முடியாது என்று அதே பதிலைக் கூறினர். எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணமாக நற்காலிகளைச் சுமந்து கயிற்றில் எளிதாக நடந்து சென்றார். இறுதியாகக் கேட்டார், உங்களில் ஒருவரை என்னால் சுமந்து இந்தக் கயிற்றில் நடக்க முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? ஆம், உறுதியாக உங்களால் முடியும் என்றனர். சரி, அப்படியானால் யாராவது ஒருவர் என் தோளில் வந்து அமருங்கள் என்றார். ஒருவரும் அவர் தோளில் ஏற முன் வரவில்லை.

இறைவீட்டாரே இதைப்போன்று தான் அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டிருந்தும் அவர்மீது நம்பிக்கை கொள்ள எவரும் முன்வரவில்லை. யோவான் 6: 40-ல் விண்ணில் சேர்க்கும் உணவாகத் தம்மிடம் நம்பிக்கை கொள்ளுமாறு இயேசு அழைக்கிறார். வாழ்வு தரும் உணவாக இருக்கும் இயேசு கிறிஸ்துவை உறுதியாக பற்றிக்கொண்டு இந்தத் தவக்காலத்தில் முன்னேறிச் செல்வோம். அவருடைய உடலை உண்டு, அவரது குருதியைப் பருகி அவரோடு ஐக்கியமாகி அவரது அரசின் அங்கமாவோம். விண்ணக வாழ்வைப் பெறுவோம். இறைநம்பிக்கை கொண்டோரே, விண்ணுலகில் விண்ணவரோடு வாழ விருப்பமா? விண்ணிலிருந்து வந்த உணவை, விண்ணகத் தன்மை நிறைந்த உணவை, விண்ணில் சேர்க்கும் உணவை நம்புவோம். பின் தொடர்வோம். வாழ்வு தரும் உணவாகிய ஆண்டவர் இயேசு எந்நாளும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

**திரு. X. ஜெய எபனேசர்**

# தொடக்கூடாதவரைத் தொடுதல்

## Touching the 'Untouchable'

2 அர. 5 : 1-10 எபி. 13 : 8-17

திபா. 10 : 1-12 மத். 8 : 1-4

"இதனால் தான் இயேசுவும் தம் சொந்த இரத்தத்தால் மக்களைத் தூயவராக்க நகர வாயிலுக்கு வெளியே துன்புற்றார்" (எபி. 13 : 12)

மனிதர்கள் நலமோடு வாழ "தொடுதல்" அடிப்படையான ஒன்று என மருத்துவ உலகம் குறிப்பிடுகிறது. ஓரறிவு உள்ள உயிரினம் முதல் ஆறு அறிவு உடைய மானிடர் வரை அறியப்படுவது அவைகளின் உணர்வுகளால் தான். இப்படி அனைத்து உயிரினங்களுக்குமான அடிப்படை உணர்வே "தொடுதல்" என்று தொல்காப்பியம் எனும் நூல் கூறுகிறது. வெறும் தோல் மட்டுமே தொடுதல் உணர்வை பெற்றிருக்கவில்லை. எல்லா புலன்களுக்கும் தொட்டால் உணரும் திறன் உண்டு. பார்த்தாலே கண்களின் தொடுதல். கேட்பது காதுகளின் தொடுதல் உணர்வாகும். இவ்வகையில் புலன்கள் அனைத்திற்கும் தொடுதல் உணர்வு பொதுவானதாகும்.

David Lindane எனும் எழுத்தாளர் "தொடுதல் என்பது சமூகத்தை ஒன்றிணைக்கும் பிணைப்பு. இதை நாம் குறைவாக மதிப்பிடக் கூடாது. உயிர்வாழவும் மனிதத் தொடுதல் இன்றியமையாதது" எனக் கூறுகிறார். மேலும் அன்றாட வாழ்வில் நாம் சாதாரணமாகத் தொடும் நபர்களைக் கூட தொட முடியாத சூழல் ஏற்பட்டால் அது உடனடி பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் கருணை, நம்பிக்கை போன்ற உணர்வுகள் மெதுவாகக் குறையும் என்று கூறுகிறார்.

"தொடுதல்" என்பது ஒரு குழந்தையாக நாம் கற்றுக்கொள்ளும் உணர்வு. அது நம் வாழ்வைத் திடப்படுத்தும். பெலவீன நேரங்களில் வலி நிவாரணியாக கூட செயல்படமுடியும் என ஆய்வுகள் தெரிவிக்கிறது.

Robin Thunber எனும் ஆராய்ச்சியாளர் கூறும்போது, உங்களைப் பற்றிப் பிறர் எப்படி உணருகிறார்கள் என்பதை அறிய விரும்பினால் அவர்கள் சொல்வதைக் கேட்காதீர்கள் அவர்கள் உங்களை எப்படித் தொடுகிறார்கள் என்பதை வைத்தே நீங்கள் உணர்ந்து கொள்ளலாம் என்கிறார். ஏனென்றால் தொடுதல் என்பது ஓர் உணர்வு சம்பந்தப்பட்ட செயல்.

வீட்டில் வளர்க்கும் விலங்குகளைக் கூட தொடுவதை நிறுத்தினால் அவை பதட்டப்படும் பின்பு நோய்வாய்ப்படும். நீண்ட காலத்துக்கு அது ஆரோக்கியமாய் இருக்காது. குறைவான நாட்களே உயிருடன் இருக்கும் என்று தொடுதலின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளமுடிகிறது. ஆகவே தொடுதலைச் சாதாரணமாகவோ குறைத்தோ மதிப்பிடக் கூடாது. அது மொத்த வாழ்க்கையையும் மாற்றியமைக்கும் ஆற்றல் உடையது.

பெருந்தொற்று காலத்தில் தொடுதல் அறவே கூடாது என்று தனிமைப்படுத்துதல், சமூக இடைவெளி போன்றவை பின்பற்றப்பட்டன. இது உடலளவிலும் மனதளவிலும் ஏற்படுத்திய பாதிப்புகள் ஏராளம் என்பதை நாமே அறிந்துகொண்டோம்.

இன்று, நாம் வாழும் சமூகத்தில் பலர் தொடக்கூடாதோராகப் புறக்கணிக்கப்பட்டு, தீண்டாமை எனும் தீமையால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். சில வேளைகளில் நாமும் கூட நமது கல்வி, புகழ், திறமை, செல்வாக்கு இவற்றைக் கொண்டு பெருமை பாராட்டி, நம்மை நாமே தொட முடியாதவர்களாகக் காண்பித்துக் கொண்டே இருக்கிறோம். இப்படி நம்மைத் தொடமுடியாதவர்களாகக் காண்பிப்பதும், மற்றவர்களைத் தொடக்கூடாதோராக நடத்துவதும் நமது அறிவீனம். தவறான நோக்கத்தோடு கூடிய தொடுதல் அழிவுக்கு நேராய் வழிநடத்தும். அது தீமையின் தொடுதல். அலகையின் தொடுதல். அவர் மனிதனைப் படைக்கும் போது மண்ணைத் தொட்டு அவனை உருவாக்கினார். மனுஷியைப் படைக்கும்போது மனிதனின் விலா எலும்பையும் தொட்டார். ஆண்டவரின் தொடுதல் வாழ்வையும், அதன் முழுமையையும் மனிதனுக்குக் கொடுத்தது.

திருமறையிலே ஆண்டவரின் தொடுதல் தம் மக்கள் மேல் எவ்விதம் அமைந்திருந்தது என சில உண்மைகளைத் தியானிப்போம்.

**1. எண்ணங்களை மாற்றிய தொடுதல்**

"நாகமான் சினமுற்று வெளியேறினார். அப்பொழுது அவர் என்னிடம் வந்து, என் அருகில் நின்று தம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரைக் கூவியழைத்து, தொழுநோய் கண்ட இடத்தின் மேல் தம் கையை அசைத்து குணப்படுத்துவார் என்று நான் எண்ணியிருநதேன்" (2 அர. 5 : 11).

நாகமான் சிரியாவின் படைத்தலைவன். ஆனால் தொழுநோயாளி. அழகான இராணுவ உடைக்குள் அழுகிய துர்நாற்றம் வீசுகிற நோய் இருந்தது. அதைக் குணமாக்க இஸ்ரயேலைச் சார்ந்த சிறுபெண் சமாரியாவில் இருக்கும் இறைவாக்கினர் எலிசா முன்னிலையில் செல்லவும், தொழுநோய் அதனால் குணமாக்கப்படும் என்றும் ஆலோசனை கூறினார்.

நேரடியாக இறைவாக்கினரிடம் செல்லாமல் சிரியா மன்னரிடம் செல்கிறார். அதன் பின்பு இஸ்ரயேல் அரசரிடம் செல்கிறார். சுமார் 400 கிலோ வெள்ளி, 68 கிலோ தங்கம், சிரியா மன்னனின் கடிதம், 10 பட்டாடைகள் என இன்றைய இந்திய மதிப்பில் சுமார் 40 கோடிக்கும் அதிகமான செல்வத்துடன் சுகம் பெறச் சென்றார்.

இது மட்டுமல்ல எலிசா இறைவாக்கினர் என்னிடம் வருவார். அருகில் நிற்பார், யாவே என்று தம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரைக் கூவி அழைப்பார், தொழுநோய், கண்ட இடத்தின் மேல் தம் கையை அசைத்து குணப்படுத்துவார் என்று எண்ணியிருந்தார். மேலும், யோர்தானை விட அபானா, பர்பார் எனும் ஆறுகள் மேலானவைகள், அங்கே மூழ்கி எழுந்து நான் நலம் பெற முடியாதா? என்ற எண்ணங்கள் மேலோங்கி நின்றது.

எலிசா இறைவாக்கினர் கடிதத்தைப் படிக்கவில்லை, பணத்தை வாங்கவில்லை, வீட்டை விட்டு வெளியே வரவில்லை. ஆண்டவரின் பெயரைக் கூவி அழைக்கவோ நாகமானைத் தொட்டு, கையை அசைத்துக் குணப்படுத்தவோ இல்லை. மாறாக ஆண்டவர் நாகமானின் எண்ணங்களைத் தொட்டார். கீழ்ப்படிந்து, யோர்தானில் ஏழு முறை மூழ்கி எழுந்த போது, உடல்நலம் மட்டுமல்ல எண்ணங்களில் மாற்றமும் பெற்றார். ஆண்டவர் நாகமானின் எண்ணங்களைத் தொட்டபோது, இஸ்ரயேலில் இருக்கிற கடவுளைத் தவிர பூமியிலெங்கும் வேறு கடவுள் இல்லை என்பதை அறிந்தார். பணத்தையும், பட்டாடைகளையும் எலிசா வாங்க மறுத்தபோது, சுகம் பெற இவைகள் எதுவும் உதவாது சுகம் தருபவர் ஆண்டவர் ஒருவரே என்பதைப் புரிந்து கொண்டார். யோர்தான் ஆற்றில் மூழ்கி எழுவது நல்லதல்ல என்றவர் இரண்டு கழுதைப் பொதி அளவு மண் வேண்டும் என்று கேட்டார். இனிமேல் ஆண்டவரைத் தவிர வேறு தெய்வங்களுக்கு எரிபலியோ, வேறு பலியோ செலுத்தமாட்டேன் என்று உறுதியளித்தார். இப்படிப் பலவிதங்களில் நாகமான் தன் சுய எண்ணங்களில் தொடப்பட்டார்.

**2. எதிர்பார்ப்புகளைக் கடந்த தொடுதல்**

“ஆகவே நாமும் அவருக்கு ஏற்பட்ட இகழ்ச்சியில் பங்கு கொண்டு பாளயத்தை விட்டு வெளியேற அவரிடம் செல்வோம்” (எபி. 13 : 13).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், நகர வாயிலுக்கு உள்ளே பலிபீடம், திருப்பணி செய்கின்றவர்கள், தலைமை குரு, தொழுகைகள் என அனைத்தும் உண்டு. பாளையத்துக்கு வெளியே பலிசெலுத்தப்படும் விலங்குகளின் இறந்த உடல்கள், கழிவுகள் சுட்டெரிக்கப்படும் (லேவி. 16 : 27). அது மிகவும் அசுத்தமான இடம். யாரும் விரும்பாத பகுதி. அது அசுத்தமான மக்கள் வாழும்

பகுதியாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கருதப்பட்டது. தொழுநோயாளிகளும் பாளயத்துக்குப் புறம்பே தான் வசித்தார்கள்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசுவின் மீட்பின் திருப்பணி நகர வாயிலுக்குப் புறம்பே தான் நடைபெற்றது. பாவிகள், தொடக்கூடாதோர் எனக் கருதப்பட்ட மக்களைத் தம் தூய ரத்தத்தால் தூயவராக்க நகர வாயிலுக்குப் புறம்பே துன்புற்றார். தொடக்கூடாதோர் பலர் புறம்பாக்கப்பட்டவர்களாக எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கிறார்கள். ஆகவே திருச்சபைக்கான அழைப்பினை எபிரேயர் ஆக்கியோன் எபி. 13 : 13-இல் கூறுகிறார். நாமும் இயேசுவுக்கு ஏற்பட்ட இகழ்ச்சியில் பங்குகொண்டு பாளயத்தை விட்டு வெளியேறி அவரிடம் செல்வோம் என அழைக்கப்படுகிறோம். பேதுருவும் தன் தொடக்க திருப்பணிக் காலத்தில், யூதமக்கள் பிற குலத்து மக்களிடம் செல்வதும் உறவாடுவதும் முறைக்கேடு அல்லது தீட்டு என்று தான் கருதினார். ஆனால் யாரையும் தீட்டுள்ளவர்கள் என்றோ தூய்மையற்றவர்கள் என்றோ சொல்லக்கூடாது எனக் கடவுள் அவருக்கு வெளிப்படுத்தினார். (திப. 10 : 28).

200 ஆண்டுகளுக்கு முன்பு உயர்வகுப்பு என்று தங்களைத்தாமே அழைத்த மக்களிடம் இருந்து 12 அடி, 72 அடி தொலைவில் நிற்கவேண்டும். பொதுக் கிணறு, குளம், சாலை, சந்தை போன்ற இடங்களில் வரக்கூடாது. தீண்டாமை, நடவாமை, கல்லாமை எனத் தடைகள் விதிக்கப்பட்டுப் பாளயத்துக்குப் புறம்பே வாழ்ந்த மக்களைப் போல இருந்த நம்மை ஆண்டவர் நற்செய்தியாளர்களைக் கொண்டு மீட்டு, எதிர்ப்புகளைத் தகர்த்து, எதிர்பார்ப்புகளைக் கடந்து தமது அன்பால் தொட்டு வாழ்வித்துக் கொண்டிருக்கிறார். இன்று நம் திருச்சபைக்கு உள்ளே இருக்கிற மக்களை மட்டுமல்ல. மாறாக எதிர்ப்பார்ப்போடு இருக்கும் திருச்சபைக்கு வெளியே உள்ள மக்களையும் குறித்துச் சிந்தித்து, அவர்களும் ஆண்டவரின் தொடுதலைப் பெற திருச்சபையாகச் செயல்படுவோம்.

### 3. ஏக்கங்களைத் தீர்த்த தொடுதல்

“இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, நான் விரும்புகிறேன். உமது நோய் நீங்குக என்று சொன்னார். உடனே அவரது தொழுநோய் நீங்கியது” (மத். 8 : 3).

திருமறையில் “தூய்மை” என்பதற்கான எபிரேயச் சொல் “காடோஷ்” (Kadosh) என்பதாகும். அந்த மூலச்சொல்லிலிருந்து வந்ததுதான் “நலம்” என்றச் சொல்லைக் குறிக்கும் எபிரேயச் சொல் ஆகும். ‘Kadosh’ என்பதற்கு “இறைமை”, “முழுமை” ஆகிய பொருள்கள் உண்டு. எவையெல்லாம் முழுமையானதாகவும் நலமானதாகவும் உள்ளனவோ, அவையெல்லாம்

தூய்மையானதாகக் கருதப்பட்டன. எனவே, நலமிழந்தோரை யூதர்கள் பாவிகள் எனத் தவறாக எண்ணியிருந்தனர். இந்தப் புரிதலினால், தொழுநோயாளர் புறந்தள்ளப்பட்டிருந்தனர்.

தொழுநோய் பிடித்த மனிதர் சமூகத்தில் சகமனிதர்களைப் போல சுகம்பெற்று வாழவேண்டும் என்பது தான் ஏக்கம். ஆகவே பாளயத்தை விட்டு ஊருக்குள் வந்தார். இயேசுவிடம் வந்து பணிந்து கொண்டார். ஆனாலும் ஆண்டவருக்கு விருப்பமானால் தன்னைக் குணமாக்கினால் போதும் என்று தாழ்மையுடன் கூறினார்.

வில்லியம் பார்க்ளே எனும் இறையியலாளர் பாலஸ்தீனாவில் வாழ்ந்த தொழுநோயாளிகளின் நிலை பற்றி விவரிக்கிறார். எருசலேமிலிருந்தும் பிற மதில் சூழ்ந்த நகரங்களிலிருந்தும் ஊருக்குள் வரத் தடை செய்யப்பட்டனர். தொழுநோயாளர்களிடம் தொடர்பு கொள்வது இறந்த உடலுடன் தொடர்பு கொள்ளும் அசுத்தத்திற்கு இணையாகப் பார்க்கப்பட்டது. தொழுநோயாளியிடமிருந்து எதிர்நிற்பவரை நோக்கிக் காற்று வீசினால் தொழுநோயாளி 150 அடி தொலைவில் நிற்கவேண்டும். சில யூத ரபிமார் தொழுநோயாளிகளைத் தொலைவில் பார்த்தாலே அவர்கள் பார்வையிலிருந்து தங்களை மறைத்துக் கொண்டார்கள். சிலர், பக்கத்தில் வந்தாலே கல்லெறிந்து விரட்டுவார்கள் எனத் தொழுநோயாளிகளின் அவலநிலையைக் கூறுகிறார்.

லேவி. 13 : 45, 46 வசனங்களில் தொழுநோயாளிகளைக் குறித்த வாழ்வு முறைகள் கூறப்பட்டுள்ளது. கந்தலான ஆடை அணிந்து, வாயை மூடி அசுத்தம் என அழுது தனிமையிலே வாடுகிற நிலை தான் தொழுநோயாளிகளின் வாழ்வாக இருந்தது. அவமானம், குற்ற உணர்வுகளோடு வாழ்வதை விட சாவதே மேல் என்கிற ஏக்கங்களோடு கூட பலரும் வாழ்ந்தனர்.

மருத்துவ அருட்பணியாளர் Dr. பால் பிராண்ட் இந்தியாவில் பணி செய்தபோது, ஓர் இளைஞருக்குச் சிகிட்சையளித்த அனுபவத்தைப் பற்றிக் கூறுகிறார். பரிசோதனையின் போது பால் பிராண்ட் என்ற அம்மருத்துவர் நோயாளியின் தோளில் கையை வைத்துப் பயப்படாதீர்கள். இது சாதாரணமான நோய் சீக்கிரத்தில் குணமாகிவிடுவீர்கள் என்று கூறினார். அப்போது அந்த நோயாளி மனம் வெதும்பி அழ ஆரம்பித்தார். தன் பக்கத்தில் நின்ற மொழிபெயர்ப்பாளரை நோக்கி, நான் ஏதாவது தவறாகப் பேசிவிட்டேனா? எனக் கேட்டார் மருத்துவர். உடனே மொழிபெயர்ப்பாளர் நோயாளியிடம் அழுகைக்கான காரணத்தைக் கேட்டுவிட்டு மருத்துவரிடம் இவ்வாறு கூறினார்.

நீங்கள் தவறாக ஏதும் கூறவில்லை டாக்டர். அவர் தோளில் நீங்கள் கை வைத்து தட்டிக் கொடுத்ததால் அவர் அழுகிறார். இங்கே வந்து உங்களைப்

பார்க்கும் வரை பல ஆண்டுகளாக யாரும் அவரைத் தொடவில்லை. அவரிடம் பேசவில்லை. வியாதிபிடித்தவர், பாவி எனத் தொடக்கூடாதோராக ஒதுக்கி வைத்ததை எடுத்துக் கூறினார். Dr. பால் பிராண்ட் இளைஞரின் ஏக்கத்தைத் தனது தொடுதலால் நிவிர்த்தியாக்கினார். நமது வாழ்விலும் ஆண்டவரின் தொடுதல் உள்ளது, ஏக்கத்தைத் தீர்க்கிறது என உணர அழைக்கப்படுகிறோம்.

பண்டைய இஸ்ரயேலில் தொழுநோயாளிகள் இருந்ததைப் போன்ற சமூக, சமயச் சூழல் இன்று இல்லாமல் இருக்கலாம். ஆனால் சாதியினாலும் ஏற்றத்தாழ்வுகளாலும், வியாதியினாலும், வயோதிபத்தினாலும், ஏதோ ஒரு சூழலில் குற்றம் புரிந்ததாலும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுத் தீண்டத்தகாதவர்கள் எனக் கருதப்படுவோர் அனேகர் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றனர். இயேசுநாதர் இன்றும் தொடக்கூடாதோரைத் தொடுகிறார். எப்படியெனில், புனிதர் ஆவிலாவின் தெரசா அவர்கள் கூறுகிறபடி,

“கிறிஸ்துவுக்கு, உங்களுடைய உடல் தவிர வேறு உடல் இல்லை. உங்களுடைய கைகள் தவிர வேறு கைகள் இல்லை. உங்களுடைய கால்கள் தவிர வேறு கால்கள் இல்லை. உங்களுடைய கண்கள் தவிர உலகத்தின் மீது இரக்கம் காட்ட வேறு கண்கள் இல்லை. நீங்கள் அவருடைய உடல். உண்மையில் கிறிஸ்து இப்போது உங்கள் உடலைத் தவிர வேறெந்த உடலையும் கொண்டிருக்கவில்லை”, என நிறைவு செய்கிறார்.

ஆகவே நம்மைத் தொட்ட கிறிஸ்துவின் தொடுதலுக்குச் சான்றுகளாய் வாழுவோம். பிறர் வாழ்வும் ஆண்டவரால் தொடப்பட காரணமாய் அமைவோம்.

அருள்திரு. **J. ஜோஸ் டோபின்**

# தவக்கால புதன் தியானங்கள்–அறிமுகம்

ஆன்மிக வாழ்வில் சிலுவையோடு வாழ்வினை உரசிப் பார்த்து சீர்படுத்தும் காலம் தவக்காலம். இக்காலத்தில் இறைவார்த்தையும் இறைவேண்டலும் இறைத்தியானமும் ஆன்மீக வாழ்வினை மெருகூட்டுகின்றது. இறைமக்களின் ஆன்மீக வாழ்வின் வளமைக்காக இவ்வாண்டு தவக்காலப் புதன்கிழமைகளில் எசேக்கியேல் இறைவாக்கு நூலிலிருந்து இறைவாக்கினர் கண்ட சில காட்சிகளையும், அவருக்கு வெளிப்படுத்தப்பட்ட அடையாளங்களையும் அடிப்படையாகக் கொண்டு, கிறிஸ்துவின் சிலுவையோடு அவைகளைத் தொடர்புபடுத்தி, தியானங்கள் அமைய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எசேக்கியேல் இறைவாக்கு நூலில் சொல்லப்பட்டுள்ள உண்மைகளைப் புரிந்து கொள்வதும் அதனை விளக்குவதும் சற்று கடினமானது. ஆனாலும் அவைகள் எழுதப்பட்ட நோக்கத்தைக் கற்று விளக்க முயல்வது பயன் தரக்கூடியது.

இறைவாக்கினர் எசேக்கியேல் எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பும், பாபிலோனிய சிறையிருப்பின்போதும் வாழ்ந்தவர். எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பே கடவுளின் வார்த்தையை மக்களுக்கு அறிவித்த இறைவாக்கினர் எசேக்கியேல், கடவுளை நோக்கி வாருங்கள், கடவுளது வார்த்தைக்குச் செவி கொடுங்கள், கடவுளின் வார்த்தையின்படி வாழ்வை மாற்றிக் கொள்ளுங்கள் என இறைவாக்குரைத்தார். அதோடு கடவுள் தம் மக்களோடு ஏற்படுத்தும் புதிய உடன்படிக்கை மக்களது உள்ளத்தில் எழுதப்படவேண்டும். அது இறைவாக்காய் மக்களின் இதயத்தில் நிலை நிறுத்தப்படவேண்டும் என்பதையும் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இறைவாக்கினர் எசேக்கியேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு வேதனைப்பட்டவர்களுக்கும் எருசலேமில் எஞ்சியிருந்தோருக்கும் அவர் நம்பிக்கையின் இறைவாக்கினைக் காட்சிகளின் வாயிலாகவும் அடையாளச் செயல்கள் வழியாகவும் எடுத்துரைத்தார். பாபிலோன் சிறையிருப்பில் ஆற்றலிழந்து வாழ்ந்த மக்களுக்கு ஆண்டவர் ஆற்றல் அளிப்பவர், அனைத்துத் தீமைகளிலிருந்தும் தூய்மையாக்கி விடுதலை தருகிறவர் என்ற செய்தியினை எடுத்துரைத்தார். அதோடு, எருசலேமில் எஞ்சியிருந்தவர்களுக்கு, உருக்குலைந்த எருசலேம் திரும்பக் கட்டப்படும், சிதறடிக்கப்பட்டவர்கள்

அனைவரையும் கடவுள் கூட்டிச் சேர்த்து, தம் மக்களாக ஒன்றிணைப்பார் என்ற நம்பிக்கையினையும் கொடுத்தார். மேலும் கடவுள் தூரம் போன தமது உடன்படிக்கையின் மக்களோடு தமது என்றும் நிலைத்திருக்கும் உடன்படிக்கையினைப் புது உடன்படிக்கையாகப் புதுப்பிப்பதையும் எடுத்துரைக்கின்றார். கடவுளின் இச்செயல் சிலுவை வாயிலாக நாமும் அவரோடு புது உடன்படிக்கை செய்ய வழிகாட்டுகிறது.

நமது தவக்கால ஆன்மிக வாழ்வு கிறிஸ்துவில் உறுதிப்படவும் சிலுவை ஆன்மீகம் வாழ்வில் வெளிப்படவும் கடவுளின் வார்த்தை நம் இதயத்தில் செயல்பட நம்மைக் கையளிக்க வேண்டும். கடவுளின் ஆற்றல் நிறைந்த வார்த்தைகள் நம் உள்ளத்தை ஊடுருவிப் பாயவேண்டும் மட்டுமல்லாது, வார்த்தையின்படி வாழவேண்டிய ஒப்படைப்பை நமக்குத் தரவேண்டும். பாவத்தினால் இழந்த இறைச்சாயலைத் திரும்ப பெற்றிட, இறைச்சாயலில் படைக்கப்பட்ட அனைவரது வாழ்வும் புதுப்பிக்கப்பட்டு மாற்றுருவாக்கம் அடையவேண்டும். கிறிஸ்துவின் சிலுவை உணர்த்தும் மீட்பு அனைவரது உள்ளங்களையும் ஆட்கொண்டு புத்தாக்கம் செய்யவேண்டும். தொடர்ந்து வரும் தியானங்கள் இத்தகைய ஆன்மிக வாழ்வினை நம்மில் உறுதிப்படுத்தட்டும்.

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

# புதுவாழ்வருளும் சிலுவை

எசே. 36: 16-25

நான் தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன், நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள்; உங்கள் எல்லா சிலை வழிபாட்டுத் தீட்டையும் அகற்றுவேன். (எசே. 36: 25)

பாபிலோனுக்கு சிறைபிடித்துச் செல்லப்பட்ட இஸ்ரயேலர் பாபிலோனிய கடவுளை வணங்க வேண்டுமென கட்டாயப்படுத்தப்படவில்லை. ஆனால் பாபிலோனில் வாழ்ந்து கொண்டு தங்களது எருசலேம் பட்டணம், எருசலேம் கோவில் ஆகியவற்றின் அழிவினை நினைத்து அழுதனர் (திபா. 137) நாடு கடத்தப்பட்ட வாழ்வில் அதிருப்தி அடைந்து, அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற பாபிலோனிய சமய வழிபாட்டிலும், நம்பிக்கையிலும் கவர்ந்திழுக்கப்பட்டு, பாபிலோனிய கடவுளை வணங்கி தங்களைத் தீட்டுப்படுத்தினர். பாபிலோனிய நம்பிக்கையின்படி ஒரு நாட்டில் மக்கள் வழிபடும் கடவுள் ஆற்றல் மிக்கவராக இருந்தால் மக்களது வாழ்வு செழிப்பாக அமையும் என்பதை ஏற்றுக்கொண்டு, தங்களது வாழ்வின் தோல்வியை யாவே கடவுளின் தோல்வியாக எண்ணினர். பாபிலோனியரின் வெற்றியினைப் பாபிலோனிய கடவுளின் வெற்றியாக எண்ணி, பாபிலோனிய சிலை வழிபாட்டினை ஏற்றுக்கொண்டனர். தங்களைத் தாங்களே தீட்டுபடுத்திய இஸ்ரயேலர், தங்கள் யாவே கடவுள் வல்லமை உள்ளவரா? இன்றும் யாவே எங்களை அன்பு செய்கின்றாரா? பாபிலோனிய அடிமை வாழ்விலிருந்து விடுதலை அளிப்பாரா? என்ற கேள்விகளோடு வாழ்ந்தனர்.

ஆனால் ஆற்றல் நிறைந்த கடவுள் இம்மக்களை மீட்பதற்காக முதலில் அவர்களது சிலை வழிபாடு தீட்டிலிருந்து தூய்மையாக்கிப் புதுவாழ்வு அருளிட அவர்களோடு செயல்படுகிறார். இஸ்ரயேலரது பாவமே அவர்களின் அவலநிலைக்குக் காரணமாயிருந்தபடியால் அவர்களது பாவத்தை மன்னிக்க கடவுள் விரும்பி மனமாற்றத்திற்கு அழைக்கின்றார். இம்மனமாற்றம் வெளிச்சடங்காகிய தூய நீரைத் தெளிப்பதினால் உள்மாற்றத்தை கொண்டு வருவதாகக் கூறுகிறார் (எசே. 36: 25). கறைபட்டவனை நீரால் கழுவுவது யூத வழக்கம். யூத மக்கள் சமய சடங்குகளின் முன்னும் பின்னும் நீரைப் பயன்படுத்தி வந்தனர். நீர் பலநிலைகளில் மக்களது வாழ்வினைத் தூய்மையடையச் செய்தது. உடல்நலமற்றோர், தோல் நோய் கண்டவர் (நாகமான்) நீரால் கழுவிக் குணமடைந்தனர் (லேவி. 14: 52; எண். 19). அதோடு

நீரால் கழுவுவது, அசுத்தம் அழிந்து, புதிய வாழ்வு ஆரம்பிப்பதற்கான அறிகுறியாகவும், வெளி அடையாளமாகவும் இருந்தது. சிலுவையில் இயேசு சிந்தின இரத்தம் மானிட வாழ்வினை எல்லாத் தீட்டுகளிலிருந்தும் தூய்மையாக்க வல்லமை கொண்டது. தீமைகளினால் வாழ்வினைத் தீட்டுப்படுத்தி வாழ்கிறவர்களின் வாழ்வினைக் கடவுள் தூய்மையாக்கிப் புதுவாழ்வருளுகிறார் என்பது புதுவாழ்வருளும் சிலுவை உணர்த்தும் உண்மையாகும்.

**1. தீட்டுப்பட்ட மானிட வாழ்வு தூய்மையடைதல்** (எசே. 36: 17)

தீட்டுப்பட்ட இஸ்ரயேலரது வாழ்வினைக் குறித்து இறைவாக்கினர் குறிப்பிடும்போது "தங்கள் நடத்தையாலும் செயல்களாலும் தங்களைத் தீட்டுப்படுத்தினார்கள்" (எசே. 36:17) எனக் குறிப்பிடுகிறார். இவர்கள் தங்களை இரத்தம் சிந்தி, தெய்வ சிலைகளினால் தீட்டுப்படுத்தினார்கள், ஆகவே கடவுள் தமது சினத்தை அவர்கள் மேல் கொட்டினார் (எசே. 36: 18). சிலை வழிபாடு, கடவுளின் கட்டளைக்கு எதிரானது, உடன்படிக்கை உறவினை உடைக்கின்ற ஒன்று. சிறையிருப்பின்போது பாபிலோனியர் மேன்மையாக வாழ்வதைக் கண்ட இஸ்ரயேலர், அவர்களது தெய்வ வழிபாட்டைப் பின்பற்றினர். பாபிலோனிய கடவுள்களால் தங்களது வாழ்வும் மேன்மை பெறும் என்ற நிலையிலே தங்களைத் தீட்டுப்படுததினர். பாபிலோனிய செழுமை வழிபாடு, இன்றைய செழுமை வழிபாடு மற்றும் இறையியலோடு தொடர்புடையது. செழுமை வாழ்வை நம்பி கடவுளை விட்டு தூரம் போவது தீமையானது, தீட்டானது என புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால் கடவுள் தீட்டுப்பட்ட மக்களின் நடுவில் தமது தூய்மையை நிலைநாட்டி, அவரை அறிந்துக் கொள்ளச் செய்கிறார் (எசே. 36: 24). கடவுளின் இச்செயல் தீட்டுப்பட்டவர்களை அரவணைத்து, அன்பு செய்து அவர்களைத் தூய்மையாக்கி, புதுவாழ்வருளும் செயலாகும். கல்வாரி சிலுவையும் தீட்டுப்பட்ட மானிட வாழ்வினைத் தூய்மையாக்கும் ஆற்றல் கொண்டது. கிறிஸ்து சிலுவையில் காயமுற்ற இரண்டு கரங்களையும் நீட்டி நம்மைத் தூய்மையாக்க அழைக்கிறார். கல்வாரி சிலுவையிலிருந்து வெளிப்பட்ட கிறிஸ்துவின் இரத்தம் நமது வாழ்வின் தீட்டுகள் அனைத்தையும் நீங்கி தூய்மையாக்கிட வல்லமையுள்ளது. தவக்காலம் மானிட வாழ்வின் தீட்டு நீங்க சிலுவை நோக்கி வரும் காலம் என்பதைப் புரிந்து, தூய்மையாக்கும் ஆண்டவரிடம் திரும்பி வந்து தூய்மையாக்க நம்மை ஒப்படைப்போம்.

## 2. தீட்டுப்பட்ட திருப்பெயர் தூய்மையடைதல்

இஸ்ரயேலரது நம்பிக்கையின்படி “யாவே” கடவுள் தூய்மையானவர், அவரது பெயரை நாவினால் உச்சரிக்ககூடாது. ஆனால் எருசலேமை விட்டு இஸ்ரயேலர் எங்குச் சென்றாலும் கடவுளின் பெயரைத் தீட்டுப்படுத்தி வாழ்ந்தனர். இதனை எசேக்கியேல் “எங்குச் சென்றாலும் என் பெயரைத் தீட்டுப்படுத்தினர்” (எசே. 36: 20) என்றும், இஸ்ரயேல் வீட்டார் தீட்டுப்படுத்திய என் பெயரைக் குறித்து நான் கவலை கொண்டேன் (எசே. 36: 21) என்றும் குறிப்பிடுகின்றார். கடவுளின் பெயர் தீட்டுப்படுவது கட்டளைக்கும் உடன்படிக்கைக்கும் எதிரானது. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே; ஏனெனில் தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாதுவிடார் (விப. 20: 7) என்பது கடவுள் கொடுத்த கட்டளை. ஆனால் கடவுளது திருப்பெயரைத் தீட்டுப்படுத்தி மக்கள் தங்களைத் தீட்டுப்படுத்தினர். கடவுளின் தூயப்பெயர் தீட்டுப்படுவது கடவுளுக்கும், அவரது உடன்படிக்கையின் மக்களுக்கும் பெரிய அவமானம்.

ஆகவே, தீட்டுப்பட்ட தமது திருப்பெயர் தூய்மையாக்கப்பட கடவுள் செயல்பட்டார் (எசே. 36: 22). கடவுள் அனைத்து ஆற்றலும் நிறைந்தவர் என்பதை மானிடர் அறிந்து கொள்ளவே அவரது செயல்பாடு அமைந்துள்ளது. இதனை “இஸ்ரயேலர் வேற்றினத்தாரிடையே தீட்டுப்படுத்திய என் மாபெரும் பெயரை நான் புனிதப்படுத்துவேன்” என்கிறார். அதோடு கடவுள் தமது தூய்மையை நாட்டில் நிலைநாட்டும்போது (தூய்மைப்படுத்தும்போது) நானே ஆண்டவர் என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகின்றார் (எசே. 36:23). மேலும் எல்லாச் சூழல்களிலும் “யாவே கடவுளே ஆண்டவர்” என்ற நம்பிக்கையில் மக்கள் உறுதியாயிருக்கவே தீட்டுப்படுத்தப்பட்ட தமது தூயப்பெயரை தூய்மையாக்குகிறார். நமது வாழ்வில் வேதனைகளும் துன்பங்களும் சோதனைகளும் பெருகும்போது இறைநம்பிக்கையிலிருந்து விலகிச் செல்லாமலும், ஆற்றல் நிறைந்த ஆண்டவரது திருப்பெயரைத் தீட்டுப்படுத்தாமலும் வாழ கல்வாரி சிலுவை நமக்கு அழைப்பு தருகிறது. அதோடு, இறைமக்களின் பாவத்தினால் தீட்டுப்படுத்தப்பட்ட கடவுளின் திருப்பெயரை தூய்மையாக்கி, மானிட வாழ்வில் கடவுள் துன்பங்களின் நடுவிலும் செயல்படுகிறார் என்பதை உணர்த்துவதே சிலுவை ஆன்மிகம்.

## 3. தீட்டுப்பட்ட இறைமானிட உறவு தூய்மையடைதல் (எசா 36: 25)

இறைமானிட உறவு தூய்மையாகிப் புது வாழ்வு பெற்றிட கடவுளது தூய்மையாக்கும் செயல் இன்றியமையாதது. “நீர்” தூய்மையின் அடையாளம். நீரால் கழுவப்படுவது அசுத்தம் நீங்கி, தீட்டு அழிந்து புதுவாழ்வு

ஆரம்பிப்பதற்கான அறிகுறி. நீரால் கழுவப்படுவது உள்ளான மானிட வாழ்வில் ஏற்படும் மாற்றத்திற்கான வெளிப்படை அடையாளம். திருமுழுக்கின்போது தண்ணீர் அடையாளமாக பயன்படுத்தப்படுவது இதனைத் தெளிவுபடுத்துகிறது. இஸ்ரயேலரது வாழ்வில் தூய நீர் தெளிக்கப்பட்டு, எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவார்கள் (எசே. 36: 25) என்பது உடைந்துபோன இறை மானிட உறவினைத் தூய்மையாக்கும் உன்னதச் செயலாகும். இஸ்ரயேலர் தங்களுக்கு ஆண்டவர் கொடுத்த "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" (விப. 20: 2), யாதென்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன் (விப. 20: 4, 5) என்ற கட்டளைகளை மறந்து, சிலை வழிபாட்டினால் இறைமானிட உறவினைத் தீட்டுப்படுத்தினர். கடவுளின் தூய்மையாக்கும் செயல்பாடு புது உறவினைக் கொடுத்து உடன்படிக்கையினை உறுதி செய்தது.

கிறிஸ்துவின் சிலுவை இறைமானிட உறவின் விரிசலை நீங்கி உடன்படிக்கை உறவினைத் தூய்மையாக்கிப் புதுப்பிக்கின்றது. மானிட வாழ்வின் தீமைகள், அசுத்தங்கள், அழுக்குகள் அனைத்தையும் கிறிஸ்துவின் இரத்தம் அகற்றி வாழ்வினைத் தூய்மையாக்கி, புதுப்பித்து, புதுவாழ்வினைத் தருகின்றது. இதனைத் தூய பவுலார் குறிப்பிடும்போது "ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்" (எபே. 2: 13) என்றும் சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார் (எபே. 2: 16) எனவும் குறிப்பிடுகிறார். தவக்காலத்தில் தீட்டுப்பட்ட நமது இறை மானுட உறவு தூய்மையாக்கப்பட சிலுவையினைச் சார்ந்து, கிறிஸ்துவின் இரத்தம் நமது அனைத்து விதமான தீமைகளிலிருந்தும் தூய்மையாக்க ஆற்றல் கொண்டது என்ற நம்பிக்கையோடு, சிலுவைப் பாதையில் கிறிஸ்துவைப் பின் தொடர்வோம்.

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

# உலகின் ஒளி நானே

## (I am the Light of the World)

யோவான் 8: 12 - 20

"... உலகின் ஒளி நானே ..." (யோவா. 8: 12)

ஒருவர் பிறந்ததிலிருந்தே குகையில் வாழ்ந்து வந்தார். அவருக்கு வெளிச்சம், ஒளி என்றால் என்னவென்றே தெரியாது இருந்தது. எப்பொழுதும் அவருடைய வாழ்வில் இருள்தான் நீக்கமற நிறைந்திருந்தது. ஒருநாள் யாரோ ஒருவர் தாம் வாழ்ந்த குகைக்கு முன்பாக இருந்து, "வெளியே வா, வெளியே வா, வெளியே வந்து சூரிய ஒளியைப் பார்" என்று கத்துவது போன்று இருந்தது. அந்தக் குகை மனிதரும் தான் இத்தனை ஆண்டுகள் வாழ்ந்து வந்த குகையை விட்டு வெளியே வந்தார். அவர் வெளியே வந்து, சூரிய ஒளியைப் பார்த்தபோது அவருடைய கண்கள் கூசின. அவரால் நீண்ட நேரம் சூரிய ஒளியைப் பார்க்க முடியவில்லை. அப்பொழுது அவர் சூரிய ஒளியைப் பார்த்து, "நீ தான் சூரிய ஒளியா? நீ இவ்வளவு பிரகாசமாக இருக்கிறாயே? என்றைக்காவது நீ இருளைப் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டார். அதற்குச் சூரிய ஒளி, "அது எங்கே என்று இப்போது நீ எனக்குக் காட்டு" என்றது. உடனே அவர், சூரிய ஒளியைத் தான் வாழ்ந்து வந்த குகைக்குள் கூட்டிக் கொண்டு போனார். சூரிய ஒளி, உள்ளே சென்றதும் இருள் மண்டிக் கிடந்த குகை ஒளிபெற்றது. உடனே சூரிய ஒளி குகை மனிதனிடம், "நீ சொன்ன இருள் எங்கே?" என்று கேட்டது. அதற்கு அவர், "நீ வந்ததினால், நான் வாழ்ந்து வந்த இந்த குகையில் இருந்த இருள் அனைத்தும் மறைந்து போனது" என்றார். பின்னர் அவர் இருளைவிட (சூரிய) ஒளியில் வாழ்வதை அதிகமாகவே விரும்பத் தொடங்கினார். ஏனென்றால் சூரிய ஒளி அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதனால் அவர் அன்றிலிருந்து குகையில் வாழ்வதை விட்டுவிட்டு ஒளியில் வாழத் தொடங்கினார்.

ஒளி கடவுளின் முதல் படைப்பு (தொ.நூ. 1: 3) எனவும் அந்த ஒளியைப் படைத்த கடவுள் ஒளியானவர் (1 யோவான் 1: 5) எனவும் திருமறை குறிப்பிடுகிறது. தமிழ் இலக்கியத்திலும் வள்ளலார் ஒளியினைக் கடவுளின் உருவக அடையாளமாக அருட்பெருஞ்சோதி, தனிப்பெரும் கருணை எனப் பாடுகிறார்.

இன்றைய தியானத்திற்கு எனக் கொடுக்கப்பட்டிருக்கும் விவிலியப் பகுதியானது இயேசு நாதருக்கும் அவரை இம்மண்ணுக்கு அனுப்பிய தந்தைக்குமான உறவை வெளிப்படுத்தும் ஒளியாகவும், உலகினை விழுங்கிட

விரும்பும் இருளை விரட்டி அடிக்கும் பேரொளியின் ஆற்றலைக் குறித்தும் இத்தவக்கால சிந்தனை அமைகிறது.

**1. உறவை உணர்த்தும் ஒளி** (யோவா. 8: 18)

தொடக்கக் காலத் திருச்சபை பல இன்னல்களைச் சந்தித்த காலகட்டத்தில் யோவான் நற்செய்தி நூல் எழுதப்பட்டது. (90 - 100-க்கும் இடைப்பட்ட காலம்). இயேசு கிறிஸ்துவின் இறைத்தன்மையையும் அவர்அனுப்பப்பட்ட மீட்பர் என்பதையும் ஏற்றுக்கொள்ள மறுத்த யூதர்களுக்கு இயேசுவை மீட்பராகவும் கடவுளின் மகனாகவும் உணரச் செய்வது யோவானின் நோக்கமாக இருந்திருக்கிறது என்பதை யோவான் 20: 31-இல் அறிகிறோம். இங்கு "நானே" உலகின் ஒளி என்ற சொற்றொடரில் நானே என்ற வார்த்தை முதலாம் ஏற்பாட்டில் யாவே "நான்" அல்லது "நானே" என்று தம்மை வெளிப்படுத்துவதை நினைப்பூட்டுகிறது (தொ.நூ. 15: 7; 17: 1; 28: 13; 35: 11, எசாயா 43: 12,25). மிகக் குறிப்பாக யாவே கடவுள் மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தும்போது "இருக்கிறவராகவே இருக்கிறேன்" (I'am that I'am) என்று மோசேக்குத் தம்மை அறிமுகப்படுத்துவதைக் காண முடிகிறது (யாத். 3: 14) (Hebrew words *ani* and *anoki* are very common to mean I am in O.T and the Greek work for I am is *ago*, as well as eimi). ஆகவே "நானே" என்ற வார்த்தை யாவேயாம் கடவுளையும் இயேசு கிறிஸ்துவையும் இங்கு உறவுபடுத்தப்படுகிறது. திருவசனங்கள் 14, 16 18, 19களில் இயேசுநாதர் தம்மைத் தம் தந்தை இம்மண்ணுக்கு அனுப்பினார் என்றும், தந்தையும் தாமும் தனித்து இயங்கவில்லை, ஒன்றித்துச் செயல்படுகின்றனர் என்றும் அவர்களது திரு உறவைத் தெளிவுபடுத்துகிறார்.

விடுதலைப் பயண வரலாற்றில் இஸ்ரயேலர் பகலிலும் இரவிலும் தடுமாற்றம் இன்றி பயணம் செய்யும்படி ஒளியாக, வழியாக அவர்கள் முன் கடவுள் சென்று கொண்டிருந்தார் என்பதை முதலாம் ஏற்பாட்டில் அறிகிறோம் (விப. 13: 17-22). ஆகவே கடந்த கால மூதாதையரின் வரலாற்றில் ஒளியாகச் செயல்பட்ட கடவுளின் செயலாற்றல் மற்றும் அவரது திருவுறவு நேற்று போல் இன்றும் தொடரும் என்பதை இயேசுநாதரின், "நானே உலகின் ஒளி" என்ற சொற்றொடர் சொல்கிறது. "தந்தை"; "நான்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது போல கிறிஸ்துவும் பயன்படுத்துகிறார். ஏனெனில் இது காலத்தைப் பொருட்படுத்தாமல் மண்ணோடும், மக்களோடும் தொடர்ந்து செயல்படும் கடவுளின் இருப்பு நிலையைத் தெரிவிக்கிறது என்று ஜான் கிறிஸ்சோஸ்டம் குறிப்பிடுகிறார்.

சூரியனுக்கும் மண்ணுக்கும் உள்ள உறவைப்போல் கடவுளின் தூய உறவின் ஒளிகீற்று நம்மை வளப்படுத்தவும், வாழ்விக்கவும், வரமாய் வந்துகொண்டே இருக்கும்.

**2. உலகின் இருளகற்றும் ஒளி** (யோவா. 8: 12)

கூடாரப் பண்டிகையின் கொண்டாட்டங்களில் எருசலேம் நகர் மற்றும் திருக்கோவில் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவை நகர் முழுவதும் ஒளியை வீசின. ஆனால் விளக்குகள் இடைவெளியுடனும், விழாவில் இறுதி இரவில்ஒளிராமலும் இருந்தன. இச்சூழல் நானே உலகின் ஒளி என இயேசுநாதர் கூறக் காரணமாய் அமைந்தன என இறையியலாளர்கள் நம்புகின்றனர். முதலாம் ஏற்பாட்டில் துன்புறும் பணியாளரின் சிறப்பியல்பு என்பது நலிந்தோரின் வாழ்வை வெளிச்சமாக்க ஒளியாக வாழ்தல் ஆகும் (எசாயா 42: 6, 7, 49: 6). அவ்வாறு எசாயா முன்னுரைத்த துன்புறும் பணியாளர் இயேசு கிறிஸ்துவே என்று தொடக்க காலத் திருச்சபை நம்பியிருந்தது. நற்செய்தியாளர் யோவான் இயேசுவை உலகின் இருள் நீக்கிப் புதிய விடுதலை தரும் ஒளியாகப் பல இடங்களில் குறிப்பிடுகிறார் (யோவான் 1: 4, 5; 3: 19-21; 9: 5; 12: 35-36). இருட்டு இருட்டு என்று சொல்லிக் கொண்டிருப்பதைவிட அந்த இடத்தில் விளக்கை ஏற்றி வைக்கலாம் அல்லவா என்று ஜேம்ஸ் ஆலன் கூறுகிறார். கிறிஸ்துவாகிய விளக்கு நம் உள்ளத்தில் ஏற்றப்படும்போது பாவ இருள் அகன்று வாழ்வு வெளிச்சம் ஆகிறது. ஒளியும் வாழ்வும் நெருக்கமான இணைப்பைப் பெற்றிருக்கின்றன. இருள் இவ்விரண்டையும் எதிர்க்கிறது. இருள் கடவுளைக் குறித்த புரிதலற்ற, தவறுகளால் நிறைந்து அதனால் துன்புறும் நிலையைக் குறிக்கிறது. Bonhoeffer என்கிற இறையியலாளர் “கிறிஸ்தவர் காலையில் எழுந்து புதிய நாளைத் தொடங்கும்போது அதைப் பயங்கரமாகவோ துன்பமாகவோ நினைத்து துவங்க வேண்டியதில்லை. இருளை நீக்கிப் புதிய நாளை இறைவன் தருகிறார். இரவின் பயங்கரங்கள், புதிய ஒளியில் ஒழிந்துபோகும்” என்று கூறுகிறார்.

இயேசுநாதர் இம்மண்ணின் படைப்புகள் அனைத்திற்குமான ஒளி (Jesus the Universal Light). இயேசுவின் திருப்பணி காலத்தில் சமூக, சமய இருட்டில் தள்ளப்பட்டிருந்த மக்கள் (பெண்கள் குழந்தைகள் எளியவர்கள் மாற்றுத் திறனுடையோர் பிற இனத்தார்) அனைவர் மீதும் விழுந்த இயேசுவின் ஒளியுள்ள பார்வை மானிடர் அனைவருக்கும் அங்கீகாரத்தை அளிக்கும் கடவுளின் சிறப்பை உணர்த்துகிறது.

உங்களிடம் அறிவொளி இருந்தால் அந்தத் தீபத்திலிருந்து மற்றவர்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றிக்கொள்ளட்டும் என்கிறார் கார்ல் மார்க்ஸ். ஒளியாகி இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் தாங்களும் பிறர் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்கள் (யோவா. 8: 12). இயேசுவைப் பின்பற்றும் திருச்சபை அவரது ஒளியை உள்வாங்கித் தனித்தனி சிறு தீபங்களாக இச்சமூகத்தில் இயேசு கிறிஸ்துவின் தொடர்பணியினை நிறைவேற்ற திருச்சபை

பணிக்கப்பட்டு இருக்கிறது. திருச்சபையாகிய திருமக்கள் அனைவரும் வாழும் சமூகத்தின் இருளகற்றும் ஒளி விளக்குகள் ஆவர். வன்முறை (இயற்கை, மனிதர் மீது), வரதட்சணைக் கொடுமை, சாதிய தீண்டாமைகள், அறியாமை, அதிகாரப் பசி, அடிப்படை வாதம் போன்ற எல்லா இருளின் வாழ்வுகளிலிருந்தும் விடுதலை அடைந்து இயேசுவின் வாழ்வியலையும் கற்பிதங்களையும் ஏற்றுககொண்ட திருச்சபையாக இச்சமூகத்திற்கு வழிகாட்டும் ஒளியாக விளங்க வேண்டியது அவசியம்.

இங்கிலாந்து நாட்டில் ஜார்ஜ் ஒயிட்ஃபீல்ட் என்ற ஆங்கிலிக்கன் போதகர் கிறிஸ்துவுக்காகத் தனது வாழ்வில் அயராது திருப்பணி செய்தவர். அப்படி ஒரு நாள் பல இடங்களில் அருளுரைகள் ஆற்றி ஓய்வெடுப்பதற்காக வீடு வந்து சேர்ந்தபோது ஒருவர் ஓடி வந்து "ஐயா! தாங்கள் எங்களது கிராமத்து மக்களிடையே இந்த இரவில் வந்து ஒரு முறை பேச முடியுமா?" என்று வருந்தி அழைத்தார். அந்த இரவில் அந்தக் கிராமத்துக்கு ஒய்ட்ஃபீல்ட் சென்று மெழுகுவர்த்தி ஒன்றை எரியச் செய்து அது அணைந்து போகும் வரை நின்று கொண்டே ஆண்டவரின் திருவார்த்தைகளைப் போதித்தார். போதனைகளை முடித்துவிட்டு களைப்போடு இரவில் தனது இல்லத்திற்குச் சென்றார். மறுநாள் நீண்ட நேரம் அவர் வெளியே வராததால் அயலகத்தார் வீட்டைத் திறந்து பார்த்தபோது முழங்கால் ஊன்றிய வண்ணம் உயிர்பிரிந்த நிலையில் அவர் உடலைக் கண்டனர். அந்த மெழுகுவர்த்தி இறுதி கட்டத்தில் தன் பணியை நிறைவேற்றி எரிந்து அணைந்தது போல ஜார்ஜ் ஒயிட்ஃபீல்டு மெழுகுவர்த்தியாய் தன் வாழ்நாளைப் பிறர் வாழ்வுக்காய் எரித்து தன் பணியை நிறைவேற்றிக் கரைந்து அணைந்தார்.

நமக்காக சிலுவையிலே மரித்து நம்மை மீட்டு தூய ஒளியை நம் உள்ளத்தில் ஏற்றி இருக்கும் கிறிஸ்துவாகிய ஒளியைப் பின்பற்றுவதும் இருளின் செயல்களிலிருந்து விடுதலை ஆகி ஒளியின் மக்களாகச் சமூக அக்கறை உடையவர்களாய் ஒளி விளக்குகளாக விளங்க நமக்கு இத்தவக்காலத்தில் கடவுளுடைய அழைப்பு வருகிறது. அதற்குக் கடவுள் நமக்குத் துணை செய்வாராக.

அருள்திரு. **R.C. எட்வர்ட் சேம்**

# வாழ்வைக் காக்கும் நம்பிக்கை

## Life Saving Faith

2 அர. 4: 1-7 திப. 5: 12-16

திபா. 72 லூக். 5: 17-26

"அவர்களுடைய நம்பிக்கையைக் கண்ட இயேசு அந்த ஆளைப் பார்த்து, உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார் (லூக்கா 5: 20).

இந்த லெந்துகாலம் கிறிஸ்துவில் நல்நம்பிக்கையை நாம் உறுதிபடுத்தும் காலம். கிறிஸ்துவின் மேல் நாம் வைக்கும் நம்பிக்கையே நம் வாழ்வைக் காக்கும். கிறிஸ்து எனக்காக இப்பூலகில் வந்தார். எனக்காகத் திரு இரத்தம் சிந்தினார், எனக்காக உயிர்த்தார். என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையே நம் வாழ்வை மலரச் செய்யும் உன்னத குணமாகும்.

நம்பிக்கையில் நாம் குன்றிப் போனால் இறையாசியைப்பெற இயலாது. நம்பிக்கைக் கொண்டோர் இவ்வுலகில் தீரமுடன் செயல்படுவதைக் காண இயலும். கடந்த ஆண்டு ஒடிசாவில் நடைபெற்ற இரயில் விபத்து நம் யாராலும் மறக்க இயலாததாகும். இந்த இரயில் விபத்தில், ஹவுராவைச் சேர்ந்த ஹெலராம் என்னும்தந்தைக்கு அவரது மகன் பிஸ்வஜித்மாலிக் இறந்து போனதாக செய்தி வந்தது. துடித்துப்போன அவரது தந்தை 230 கி.மீ. பயணம் செய்து நிகழ்விடம் வந்து தன் மகனைத்தேடினார். எங்கும் மகனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆயினும் அவரது நம்பிக்கை தீர்ந்துவிடவில்லை. பிணவறைகளிலும், விபத்துப் பகுதிகளிலும் நம்பிக்கையுடன் தேட ஆரம்பித்தார். மிகுந்த தேடலுக்குப் பின் ஒரு பிணவறையில் தனது மகனின் உடலைக் கண்டுபிடித்தார். அப்பொழுது தான் தனது மகன் உயிருடன் இருப்பதைக் கண்டு கொண்டார். மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு மீண்டும் ஒரு புதிய வாழ்வினைக் கண்டார் பிஸ்வஜித் மாலிக். இது தந்தையின் நம்பிக்கை மூலம் வாழ்வைக் கண்டுகொண்ட மகனின் உண்மைக் கதை.

அதே வேளையில் சிலுவை நாதர் இயேசு கிறிஸ்துவில் நாம் கொள்ளும் நம்பிக்கை நம் முழு வாழ்வையும் மீட்டெடுக்க நமக்கு உதவும். நமக்குத் தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளின் வெளிச்சத்தில் நம்பிக்கையின் மேன்மையினை நாம் காண முயல்வோம்.

## 1. வெறுமையை வேரறுக்கும் நம்பிக்கை

நம்பிக்கையோடு நம் வாழ்வை கட்டமைக்கும் போது, அந்த நம்பிக்கை வாழ்வின் வெறுமையை வேரறுத்து நிறைவுக்கு நேராக நம்மை நடத்தும். பொதுவாக மனித உள்ளம் எளிதில் நிறைவு கொள்ளாது. எவ்வளவு இருந்தாலும் வாய், "இல்லை" என்றே சொல்லும். நம்பிக்கை இருந்தால் இல்லையென்ற வார்த்தை இனி இல்லை. குறைவுக்கு அங்கே இடமில்லை.

II அரசர்கள் 4-ஆம் அதிகாரத்தில் ஒரு இறைவாக்கினரின் மனைவியான கைம்பெண்ணின் நம்பிக்கையற்ற வாழ்வினைக் காண முடிகிறது. வாழ்வை வழங்கும் இறைவன் நம் வாழ்வில் குறைவை நிறைவாக்குவதற்கான ஆற்றலையும் வழங்கியிருக்கிறார் என்பதை அந்த கைம்பெண் அறியவில்லை. கடன்பட்ட உள்ளம் அமைதியின்றித் தவித்தது. தம் பிள்ளைகளைக் கடன் கொடுத்தவர்கள் கொண்டு சென்று விடுவரோ என்ற அச்சம் அவர் நிம்மதியைக் கெடுத்தது. எலிசாவிடம் வந்து இந்தப் பெண் கண்ணீர் வடிக்கவும் காரணம் அவரது வெறுமையே.

"நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? உன் வீட்டில் என்ன வைத்திருக்கிறாய்?" (II அரசர்கள் 4: 2) என்பதே எலிசா இறைவாக்கினரின் கேள்வி. இது நம்பிக்கையைத் தட்டி எழுப்பும் ஒரு கேள்வி. அன்று மோசேயை அழைக்கும்போது, நம்பிக்கை குன்றி நின்றிருந்த மோசேயிடம் இறைவன் கேட்டது, "உன் கையில் இருப்பது என்ன?" (வி.ப. 4: 2) என்பதே. மோசேயின் கையில் இருந்தது ஒரு கோல் மட்டுமே. ஆனால் அதைக் கொண்டே வல்ல செயல்களைச் செய்யும்படி இறைவன் மோசேயைப் பயன்படுத்தினார். ஐயாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு உணவளிக்க வேண்டி சீடர்கள் தயங்கி நின்றபோது, இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம் கேட்டது, "உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன?" (மாற்கு 6: 38) என்பதே.

வெறுமையை நம்மிடம் இருக்கும் நம்பிக்கையைக் கொண்டே வேரறுக்க முடியும். இந்தக் கைம்பெண்ணிடம் இருந்த கொஞ்ச நம்பிக்கையைத் தூண்டி எழுப்பி, ஒரு குடம் எண்ணெயைக் கொண்டே நிறைவாழ்வுக்கு நேராக நடத்தினார் எலிசா. இன்றைய சூழலிலும் நம் வாழ்வில் நம்பிக்கை இழந்து போக அதிகமான காரணிகளுண்டு. ஆனால், நிறைவைக் கண்டுகொள்ள நம்பிக்கை அவசியம் தேவையாகிறது.

"உங்களின் வறுமை உடன் பிறந்தது. தவிர்க்க முடியாதது, தீர்க்க முடியாதது. என்றெண்ணுவது மடமை ஆகும்" என்றார் டாக்டர் அம்பேத்கர். நம்பிக்கை நம்மில் துளிர்க்கும்போது நம் வறுமையும் வெறுமையும் வாழ்வை விட்டு விடைபெறும்.

## 2. வியாதிகளைத் துரத்திடும் நம்பிக்கை

வியாதிகளைத் துரத்திட மருந்தே சிறந்தது என்பது நம் நம்பிக்கை. ஆனால், வியாதிகளைத் துரத்திட நம்பிக்கையே அருமருந்து என்பது அனுபவ பூர்வமான உண்மை. பெருந்தொற்றுக் காலத்தை நாம் கடந்து வந்திருக்கிறோம். தொடக்கக் கால பாதிப்பு நேரங்களில் நம்பிக்கை யாருக்கும் இல்லை. பயமே மேலோங்கி நின்றது. பெருந்தொற்றினால் இறந்தவர்களை விட நம்பிக்கையின்றி, பயத்தினால் இறந்தவர்கள் அதிகம். பின் படிப்படியாக நம்பிக்கை வேர்விட்டபொழுது தான் இறப்பு எண்ணிக்கைக் குறைந்தது.

வியாதி நம்பிக்கையின்மையை ஏற்படுத்துவதில் சிறப்பிடத்தைப் பிடிக்கிறது. நம்பிக்கையில் வேரூன்றி நின்ற யோபுவும் தன் வியாதி நேரத்தில் புலம்பித் தவிப்பதைக் காணலாம். தன் நண்பர்களிடம் தனது பிறந்த நாளைச் சபித்துப் பேசுவதை நாம் காணமுடியும் (யோபு 3). இன்றும் தீர்க்கமுடியாத வியாதிகளைச் சுமந்து நிற்போரின் மனநிலை இதுவே. ஆயினும் நம்பிக்கையில் வேரூன்றியவர்கள் இதிலிருந்து எளிதில் வெளிவரலாம்.

தன் உயிரைப் பாதுகாக்க வேண்டி, அஞ்சி இயேசுவை மறுதலித்தவர் பேதுரு. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புக்குப் பின் அவர் மீது அவர் வைத்த ஆழமான நம்பிக்கையே அவரை அருஞ்செயல் செய்பவராய் மாற்றியது. ஒரு காலத்தில் பேதுருவால் கடல்மீது நடந்து வரமுடியாமல் அமிழ்ந்து போனபோது, “நம்பிக்கைக் குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?” (மத். 14: 31) என்று இயேசு கிறிஸ்துவால் கடிந்துக்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் அதே பேதுரு, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர்மீது நம்பிக்கையில் அதிகதிகமாய் வளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்றார். அவர் பெற்ற நம்பிக்கை, மற்றவர்கள் வாழ்வில் மாபெரும் அருஞ்செயல்கள் நடைபெற காரணமாய் மாறிப் போயின.

பேதுருவின் நிழல் பட்டால் கூட போதும் வியாதிகள் நீங்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் வேரூன்றியது. பேதுருவின் வாழ்வில் வெளிப்பட்ட நம்பிக்கை இங்கே மக்களின் வியாதிகளை மாற்றுவதில் செயல்படுகிறது. இயேசு கிறிஸ்து இருந்த வீட்டினுள் மேற்கூரையைப் பிரித்து பிணியாளியை இறக்கியது நம்பிக்கையின் வெளிப்பாடு. அதே போன்ற நம்பிக்கையின் தொடர் வெளிப்பாடே இங்கும் நாம் காண முடிகிறது. நம்பிக்கையுடன் கூடிய இறைவேண்டல் நம் வியாதியை விரட்டும்.

## 3. தடைகளைத் தகர்க்கும் நம்பிக்கை

நம் வாழ்க்கைப் பாதையில் தடைகள் வரும்போது துவண்டு போனால் முன்னேறிச் செல்ல முடியாது. தடைகளை உடைத்து முன்னேற நம்பிக்கை

எனும் ஆயுதம் நமக்கு அவசியம் தேவையாகிறது. தேவைகளே புதிய கண்டுபிடிப்புகளின் தாய் என்றார் ஒருவர். மனிதன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிகளைக் கண்டுபிடிக்கிறான். அந்த வழிகளில் தடைகள் வந்தால் தகர்த்து முன்னேறிச் செல்ல நம்பிக்கை என்னும் நற்பண்பு தேவை.

இயேசு கிறிஸ்து கப்பர்நகூமில் ஒரு வீட்டில் போதித்துக் கொண்டிருந்த போது, பெருங்கூட்டத்தினால் அந்த வீடு நிரம்பி வழிந்தது. முடக்குவாதத்தால் பாடுபட்ட ஒருவரைச் சுமந்து கொண்டு வந்தது ஒரு நால்வர் குழு. இந்தக் குழுவிற்குத் தடையாக அமைந்தது மக்கள் கூட்டம். ஏனெனில் எல்லோருமே தேவைகளோடும் ஆவலோடும் கூடி வந்திருக்கிறார்கள். அவரவர் தேவைகள் அவரவருக்குப் பெரிது தானே!

இந்தத் தடைகளைத் தகர்க்க சிந்தித்த நால்வர் குழு, வீட்டின் மேற்கூரையைப் பிரித்து அதன்வழியே நோயாளியை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு சேர்க்க முடிவு செய்தது. அதை நிறைவேற்றவும் செய்தது. இயேசு கிறிஸ்துவோ வியந்துப்போய், மனதார பாராட்டி வியாதியிலிருந்து விடுதலைக் கொடுக்கின்றார். இயேசு கிறிஸ்து செய்த அருஞ்செயல் முடக்குவாதமுற்றவரின் நம்பிக்கையினால் நடைபெறவில்லை. தடைகளை உடைத்து முன்னேறிய நால்வரின் நம்பிக்கையினால் நடந்தது. இன்றும் இதைப்போன்று தேவையில் அதிகமான மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் முன்பாக இருக்கும் தடைகளை உடைத்து கிறிஸ்துவிடம் கொண்டு சேர்ப்பது நமது பொறுப்பாக உள்ளது.

“பயம் சாத்தானைச் செயல்பட செய்கிறது. நம்பிக்கை கடவுளைச் செயல்பட செய்கிறது” என்றார். சார்லஸ் காப்ஸ், நம் வாழ்வில் நம்பிக்கையின் பாதையில் நடந்தால் புதுபெலன் உண்டு. நம்பிக்கையோடு நாம் முன்னேறும்போது வெறுமையும் வறுமையும் நம்மில் இருந்து விடைபெறும். நம்பிக்கை வியாதிகளைத் துரத்திடும். தடைகளைத் தகர்த்திடும். நம்பிக்கையை நாம் சுமந்து பயணிப்போம். இறைபெலன் நம்மைச் சுமக்கும்.

அருள்திரு. **M. கிதியோன்**

# புது உறவுக்கு அழைக்கும் சிலுவை

எசே. 11: 14-21

"அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள் நான் அவர்கள் கடவுளாயிருப்பேன்." (எசே. 11: 20).

இஸ்ரயேல் மக்கள் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டு, கடவுளின் உடன்படிக்கையின் மக்களாக அறியப்பட்டவர்கள். கடவுள் அவர்களோடு ஏற்படுத்திய உடன்படிக்கை உறவு புனிதமானது. உண்மையானது. கடவுள் தங்களோடு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டபடியினால் தாங்கள் என்ன தவறு செய்தாலும், கடவுள் அவர்களைத் தண்டிக்கமாட்டார் என்ற தவறான எண்ணத்திலேயே பாவம் செய்து கடவுளோடுள்ள உடன்படிக்கை உறவினை உடைத்தனர். இதன் விளைவே பாபிலோனிய சிறையிருப்பு வாழ்வு. சிறையிருப்பில் வேதனைப்பட்டபோது தங்கள் பாவங்களை நினைத்தும் எருசலேம் அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டதை எண்ணியும் வேதனைப்பட்டனர். ஆனால் எருசலேமில் எஞ்சியிருந்தவர்கள் பாபிலோனில் வாழும் இஸ்ரயேலர் கடவுளைவிட்டு தூரம் போய்விட்டனர், எருசலேம் எங்களுக்கு உரிமையாய்க் கொடுக்கப்பட்டது என்று எண்ணி வாழ்ந்தனர். ஆனால் உடன்படிக்கையின் கடவுள், இஸ்ரயேலர் மனம் திரும்பி, கட்டளைகளை கைக்கொண்டு, கடவுளோடுள்ள உறவில் ஒன்றாகிட தமது ஆற்றலினைத் தருவதாக வாக்கு கொடுக்கிறார். மேலும், தமது ஆற்றலினால் அவர்களை விடுவித்து எருசலேமில் குடியமரச் செய்வதாக உறுதியளிக்கிறார்.

**1. தீமைகளைக் களைந்த வாழ்வு வாழ்தல்** (எசே. 11: 18)

புதிய உறவுக்கு அழைக்கும் கடவுள், சொந்த நாட்டிலிருந்து அவர்தம் மக்களை வேற்றினத்தாரிடம் தூரமாய் அனுப்பியிருந்தாலும், அவர்களைக் சிதறடித்து வேறு நாடுகளில் வாழச் செய்தாலும், அவர்களை முழுமையாக கைவிடாமல், அவர்களோடு இருந்துள்ளேன் என்கிறார் (எசே. 11: 16). தீமைகளின் பெருக்கத்தினால் சிதறடிக்கப்பட்டு, சொந்த நாட்டில் வாழ இயலாதவர்களைத் தமது பேரன்பினால் ஒன்று சேர்த்து இஸ்ரயேல் நாட்டைத் திரும்ப தருவதாக புது உறவை ஏற்படுத்துவதாகவும் வாக்கு கொடுக்கிறார் (எசே. 11: 17). இப்புது உறவில் ஒன்றாகும். அனைவரும் கடவுள் வெறுக்கும் தீமைகளையும் அருவருப்புகள் அனைத்தையும் களைவதாகவும், அதின் வாயிலாக உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இயேசு கிறிஸ்து மானிட வாழ்வின் குற்றங்கள், தீச்செயல்கள், அக்கிரமங்களிலிருந்து நிறைவாழ்வினைக் கொடுக்க சிலுவையினை ஏற்றுக்கொண்டார். மானிட வாழ்வின் தீமைகளைக் களைய சிலுவை இன்று நமக்கு அழைப்பினைத் தருகின்றது. மானிட வாழ்வின் தீமைகளைக் களைந்து கல்வாரிச் சிலுவைக்கு நேராக திரும்பி வரும்போது, வாழ்வு புதுப்பிக்கப்படுகிறது. தீமையினால் உடைந்துபோன இறை மானிட உறவு சிலுவையினால் புதுப்பிக்கப்படுகின்றது. புதிய உடன்படிக்கை உறவு உருவாகின்றது. தவக்காலத்தில் கடவுளோடுள்ள உறவுக்குத் தடையாய் உள்ள தீமைகளைக் களைந்து, கிறிஸ்துவின் சிலுவையோடு நம்மை இணைந்து உடன்படிக்கையினைப் புதுப்பித்துக் கொள்வோம்.

**2. புதுப்பிக்கப்பட்ட வாழ்வு வாழ்தல்** (எசே.11: 19)

தீமைகளைக் களைந்து புதிய உடன்படிக்கையின் மக்களாக மாற்றம்பெற விரும்புகிறவர்களுக்குக் கடவுள் புதிய இதயத்தையும், புதியதோர் ஆவியையும் வழங்குவதாக இங்கு வாக்கு கொடுக்கிறார். புதிய இதயமும் புதிய ஆவியும் புதுப்பிக்கப்பட்ட வாழ்வின் அடையாளம். புதிய ஆவியும் புதிய இதயமும் சிறையிருப்பில் வாழ்ந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தி. கடவுள் மக்களுக்குள் புகுத்தும் ஆவி அவர்கள் கடவுளின் நீதிநெறிகளையும் நியமங்களையும் கடைப்பிடிக்க வேண்டிய ஆற்றலைத் தருகின்றது. அதோடு, தீமைகளின் ஆதிக்கத்தினால் கடினமாகவும், கல்லாகவும் மாறின இதயம் மென்மையாக மாறுகின்றது (எசே. 11: 19). மானிடரின் இதயத்திலிருந்து புறப்படும் பொல்லாத சிந்தனைகள் வாழ்வினைத் தீட்டுப்படுத்துகிறது. இதயத்திலிருந்து வெளிப்படும் தீமைகளிலிருந்து மானிட வாழ்வு புதுப்பிக்கப்பட, மானிட முயற்சி மட்டுமல்ல கடவுளின் ஆற்றல் மானிடரில் செயல்பட இடமளிக்க வேண்டும்.

புதிய உறவுக்கு அழைக்கும் சிலுவை புதுப்பிக்கப்பட்ட வாழ்வின் அடையாளமாயிருக்கிறது. இத்தகைய வாழ்வு வாழ கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வு இன்றியமையாதது. கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றவர்கள் புதுப்படைப்பாகின்றனர். பழைய தீமைகள் நிறைந்த வாழ்வு அழிந்து வாழ்வு புத்தாக்கம் பெறுகின்றது. புதுப்பிக்கப்பட்ட வாழ்வு வாழ்கின்றவர்கள் கிறிஸ்து இயேசுவின் சிந்தனையை வாழ்வின் செயல்களில் வெளிப்படுத்தி வாழமுடியும். தவக்காலத்தில் வெளிவேடம் தரித்த வாழ்வல்ல உண்மையாகவே தீமைகளைக் களைந்து புதிதாக்கப்பட்டவர்களாய் வாழ்வது சிறப்புக்குரியது. இத்தகைய வாழ்வே புதிய ஆவியும் புதிய இதயமும்கொண்ட புதுவாழ்வு.

**3. நியமங்களைக் கடைப்பிடிக்கும் வாழ்வு வாழ்தல்** (எசே. 11: 20)

புதுப்பிக்கப்பட்ட வாழ்வு வாழ்கின்றவர்களது வாழ்வினைக் குறித்து இறைவாக்கினர் எசேக்கியேல் குறிப்பிடுகையில் அவர்கள் (கடவுளின்) நியமங்களின்படி நடப்பார்கள். கடவுளின் நீதிநெறிகளுக்குச் செவிகொடுத்து அவற்றைக் கடைப்பிடிப்பார்கள் என்கிறார் (எசே. 11: 20). கடவுள் தமது சொந்த உரிமை மக்களாகத் தெரிந்துகொண்ட இஸ்ரயேலரது புதுப்பிக்கப்பட்ட வாழ்வில், கடவுளது உடனிருப்பு அவர்களது வாழ்வின் மையமாக அமைகின்றது. கடவுள் வாழ்வின் மையமாக இருப்பதினால் இனிமேல் தீமை அவர்களை மேற்கொள்வதில்லை. கடவுளின் உரிமை பெற்ற மக்களாக, நீடித்து வாழும் வாழ்வினைப் பெற்று மகிழ்வுடன் வாழ்வர். கடவுளின் நியமங்களையும் நீதி நெறிகளையும் கடைப்பிடித்து வாழும்போது பழைய வாழ்வு மறைந்து புதிய வாழ்வு வாழமுடியும். முற்காலத்தில் காட்டு ஒலிவ மரங்களைப்போல இருந்த அவர்களது வாழ்வு, நல்ல கனிதரும் ஒலிவ மரங்களாக மாற்றம்பெறும்.

கடவுளது நியமங்களும் நீதிநெறிகளும் கடவுளோடுள்ள உறவினரைப் புத்தாக்கம் செய்கின்றது. இதனை அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள் நான் அவர்கள் கடவுளாயிருப்பேன் என்னும் உடன்படிக்கை உறுதிப்படுத்துகின்றது (எசே. 11: 20). தவக்காலத்தில் கிறிஸ்துவின் சிலுவை வாயிலாகக் கடவுள் நம்மோடு புது உடன்படிக்கையினை ஏற்படுத்துகிறார். இவ் உடன்படிக்கை உறவு நாம் அவரது இரக்கத்தினாலும் கிருபையினாலும் மீட்கப்பட்டவர்கள் என்ற உறுதியை நமக்குத் தருகின்றது. நமது ஆன்மிக வாழ்வின் பயணத்தில் கடவுளின் வார்த்தையின்படியும் அவரது வழிநடத்துதலின்படியும் பயணிக்கும்போது வாழ்வு முழுமை பெறுகின்றது. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரயேலரது வாழ்வில் நமது உடன்படிக்கையினை நிறைவேற்றி புதிய உடன்படிக்கையின் மக்களாக மாற்றினார். தீமைகளினால் உடைந்துபோன இறைமானுட உறவினை மீண்டும் புதுப்பித்திட சிலுவை நம்மையும் அழைக்கின்றது. சிலுவை தரும் புது வாழ்வினைச் சொந்தமாக்கி மகிழ்வுடன் வாழ சிலுவை நிழலில் வந்தடைவோம்.

அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

# வாழ்வு வழங்கும் ஆண்டவர்

எசே. 34: 11 - 16

" . . . இஸ்ரயேலின் மலைகளின்மேல் செழிப்பான மேய்ச்சல் நிலத்தில் அவை மேயும்." (எசே. 34: 14) .

ஏதென்ஸ் நகரில் மக்களிடம் பேசிய அப்போஸ்தலனாகிய பவுல், "கடவுள் எல்லா மனிதர்களுக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் தருகிறார்" (அப். 17: 25) எனக் கூறுகிறார். வாழ்க்கை என்பது ஒரு விபத்து அல்ல. அது கடவுளிடமிருந்து கிடைத்த ஒரு பரிசு. கடவுள் வாழ்வு கொடுப்பவர். வாழ்வு கொடுப்பது மட்டுமல்லாமல், வாழ்வு கொடுப்பதற்காக வாழ்க்கையை அவர் வழிநடத்துகிறவராகயிருக்கிறார். உதாரணமாக, மார்ட்டின் லூதர் ஒரு போதகர் ஆக விரும்பவில்லை. வழக்கறிஞர் ஆக விரும்பிப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். ஆனால் கடவுளுக்கு வேறு திட்டங்கள் இருந்தன. கடவுள் லூதரின் வாழ்க்கையைத் திசை திருப்பினார். அவர் ஒரு துறவியானார். பின்னர் ஒரு போதகர் ஆனார். கடவுள் அவரது ஆலயத்தைச் சீர்திருத்தவும் அதை மீட்டுக் கொண்டு வரவும் லூதரைப் பயன்படுத்தினார்.

நம் வாழ்க்கைக்கும் கடவுள் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். நம் வாழ்வின் ஆண்டவராக, அவர் நம்மை வழிநடத்துவார், அவருடைய நல்ல திட்டங்கள் நிறைவேறும். 23-வது சங்கீதத்தில் தாவீது சொல்வது அதுவே. "அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்". எசேக்கியேலின் தீர்க்கதரிசனம். திருமறையில் பதிவு செய்யப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களுக்கு ஒரு திருப்புமுனையாகும். இஸ்ரவேலுக்கு ஒரு பிரச்சனை இருந்ததைக் கடவுள் கவனிப்பதின் வழியாக எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் தொடங்குகிறது. அந்த பிரச்சனை என்னவென்றால், இஸ்ரவேலுக்குச் சுயநல மேய்ப்பர் இருந்தனர். இஸ்ரவேலின் தலைவர்கள் தேசத்தைக் கவனிக்கத் தவறியதற்காகக் குற்றம் சாட்டப்படுகிறார்கள். இஸ்ரவேலின் தலைவர்கள் (மேய்ப்பர்கள்) மக்களை (மந்தையை) எவ்வாறு ஒடுக்கினார்கள் என்பதை விளக்குவதற்கு எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் மேய்ப்பனின் உருவகத்தைப் பயன்படுத்துகிறது. மேய்ப்பர்கள் அல்லது மேய்க்கும் உருவகம் இஸ்ரவேலின் பொல்லாத ஆட்சியாளர்கள் மீதான தீர்ப்பை உறுதியளித்து தேசத்தின் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மற்றும் சிதறடிக்கப்பட்ட மக்களுக்கு மந்தைகளின் பெரிய மேய்ப்பராகிய இஸ்ரவேலின் ஆண்டவர் வாழ்வு கொடுக்கிறார் என்கின்ற நம்பிக்கையைத் திருமறைப்பகுதி கற்றுத்தருகிறது.

**1. வாழ்வு வழங்குவதற்காக தேடி வரும் ஆண்டவர்** (எசே. 34: 11)

எசேக்கியேல் 34 ஒரு முக்கியமான தீர்க்கதரிசன உரை, இறையியல் ரீதியாக மந்தைகளை வழிநடத்த மேய்ப்பர்களின் பங்கைப் பற்றிப் பேசுகிறது. தலைவர்கள் தங்கள் தலைமையின் கீழ் உள்ளவர்களின் தேவைகளையும் நலன்களையும் கவனித்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது (பிலிப்பியர் 2: 4)). இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் ஆடுகளின் நலனைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். மேய்ப்பர்கள் ஆடுகளைப் பராமரிக்கும் வேலையை மட்டும் அலட்சியப்படுத்தாமல், ஆடுகளுக்கும் தீங்கு செய்து வந்தனர். அவர்கள் தங்கள் சுயநலத்திற்காக ஆடுகளைப் பயன்படுத்திக் கொண்டனர். மேய்ப்பர்கள் தங்கள் சொந்த நலன்களை மட்டுமே உடுத்திக்கொண்டும், மந்தைகளைச் சூறையாடி கொண்டும் வந்தனர் (எசே. 34: 2, 3, 8). ஆடுகளைத் தேவையான நேரத்தில் பலப்படுத்தி குணப்படுத்துவதற்குப் பதிலாக, அல்லது காணாமல் போனபோது அவற்றைப் பின்தொடர்வதற்குப் பதிலாக, மேய்ப்பர்கள் அவற்றைக் கடுமையாக ஆதிக்கம் செலுத்தினர் (எசே. 34: 4). இது செம்மறி ஆடுகளைக் காட்டுமிருகங்களுக்கு (பகை நாடுகள்) பாதிப்படையச் செய்து, உலகம் முழுவதும் சிதறடித்தது (எசே. 34: 5 - 6, 8). இச்சூழ்நிலையில் மக்களை (மந்தையை) மேய்ப்பர்கள் (இஸ்ரவேலின் ஆட்சியாளர்கள்) “வாய்களில்” இருந்து காப்பாற்றுவதாக தேடி வருகிறேன் என ஆண்டவர் வாக்களிக்கிறார். எசேக்கியேல் 34: 11-ம் வசனம் அதனுடைய, தொனியை ஒரு குறிப்பிடத்தக்க வகையில் மாற்றுகிறது. தோல்வியுற்ற மேய்ப்பர்களிடமிருந்து கர்த்தர் தம் கவனத்தைச் சிதறடிக்கப்பட்ட மந்தையின் பக்கம் திருப்புகிறார். அவர் ஆச்சரியமான ஒன்றைச் சொல்கிறார். நானே என் மந்தையைத் தேடுவேன். மந்தையில் சில சிதறடிக்கப்பட்டபோது ஒரு மேய்ப்பன் மந்தையைத் தேடுவது போல, மந்தையைத் தேடுவேன். இருள் மற்றும் நியாயத்தீர்ப்பு ஆதிக்கம் செலுத்தும் தீர்க்கதரிசனங்களின் தொகுப்பான எசேக்கியேல் புத்தகத்தில் உள்ள நம்பிக்கையின் முதல் வார்த்தைகளில் இதுவும் ஒன்றாகும்.

**2. வாழ்வு வழங்குவதற்காக அழைத்துச் செல்லும் ஆண்டவர்** (எசே. 34: 13-14)

எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் 34-வது அதிகாரத்தில் மேய்ப்பனின் பாத்திரம் மேலும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒரு மேய்ப்பன் என்பவர் பலவீனமானவர்களைப் பலப்படுத்துவது. நோயாளிகளைக் குணப்படுத்துவது, காயங்களைக் கட்டுவது, வழிதவறுவதைத் திரும்பக் கொண்டு வருவது மற்றும் இழந்ததைத் தேடுவது (எசே. 34: 4) ஆகிய பணிகளைச் செய்கிறார். கடவுள்

தனது மந்தையை மீட்டு வாழ்வு கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். அவர் செழுமையான மேய்ச்சல் நிலங்களுக்கும், இஸ்ரவேலின் செழிப்பான மலை உச்சிகளுக்கும் வழிநடத்தும் மேய்ப்பராக இருப்பதைப் பற்றிய தெளிவான சித்திரத்தை எசேக்கியேல் 34: 14 வரைகிறது. அவருடைய ஆடுகளைத் தேடி கவனித்து, சிதறடிக்கப்பட்ட இடங்களிலிருந்து அவற்றைத் திரும்பக் கொண்டு வருவார் (எசே. 34: 9-12). அவர் அவர்களைத் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பக் கொண்டுபோய், அவர்களுக்கு உணவளித்து, நல்ல மேய்ச்சல் நிலத்தில் பாதுகாப்பாகக் கிடத்துவார் (எசே. 34: 13 - 14). மந்தையின் உடல் மற்றும் ஆன்மீக வாழ்வில், ஏராளமான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான கடவுளின் அர்ப்பணிப்பை இந்த உருவகம் குறிக்கிறது. வாழ்க்கைப் பயணத்தில், அடிக்கடி தரிசு திட்டுகளையும், கஷ்டங்களின் பள்ளத்தாக்குகளையும் சந்திக்கிறோம். வாழ்க்கையின் சவால்களுக்கு மத்தியிலும், கடவுளின் வழிகாட்டுதல் ஒரு மேய்ப்பன் தன் மந்தைக்குச் சிறந்த மேய்ச்சல் நிலங்களை அறிவது போல, ஆசீர்வாதங்களும் ஆன்மீக செழுமையும் நிறைந்த வாழ்க்கைக்காக சிறந்த பாதைகளைக் கடவுள் அறிந்திருக்கிறார். வாழ்க்கையின் சவால்களைக் கடந்து செல்லும்போது, கடவுள் மேய்ப்பராக இருக்கிறார். அவர் ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதில் ஆறுதல் கொள்வோம். நாம் தொலைந்து போகும்போது அவர் நம்மைத் தேடி வந்து காயப்படும்போது நம்மைக் குணப்படுத்துகிறார். பலவீனமாக இருக்கும்போது செழுமையான மேய்ச்சல் நிலங்களுக்கு வழிநடத்தி நம்மைப் பலப்படுத்துகிறார். நம் நம்பிக்கை பயணத்தில் பலவீனம், சந்தேகம் மற்றும் அலைந்து திரியும் தருணங்கள் நம் அனைவருக்கும் உள்ளன. கடவுள் நம்மைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் நம்மை மீட்டெடுத்துப் பலப்படுத்தி வாழ்வு வழங்க வாக்களிக்கிறார்.

எசேக்கியேல் 34: 1 - 16-ல் அவர் தொலைந்து போனதைத் தேடுகிறார். வழிதவறியதைத் திரும்பக் கொண்டு வருகிறார், காயமடைந்தவர்களைக் கட்டுகிறார், பலவீனமானவர்களைப் பலப்படுத்துகிறார். கடவுளின் அன்பின் ஆழத்தையும், அவருடைய மந்தையைப் பராமரிப்பதிலும் பாதுகாப்பதிலும் உள்ள அவரது அசைக்கமுடியாத அர்ப்பணிப்பையும் இந்தப் பகுதி நமக்கு நினைவூட்டட்டும் நாம் அவர் மீது நம்பிக்கை வைப்போம் அவரது அன்பான கவனிப்பு வாழ்க்கையின் பயணங்களில் நம்மை வழிநடத்த அனுமதிப்போம்.

**அருள்திரு. R. டட்ஸ் ஞான ராபி**

# ஆடுகளுக்கு வாசலும், நல்ல ஆயனும் நானே

## (I am the Door and the Good Shepherd)

யோவா. 10:1-16

“நல்ல ஆயன் நானே நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்” (யோவா. 10: 11)

ஆடுகளுக்கு மூன்றறிவு, மனிதனுக்கு ஆறு அறிவு என்பார்கள். மூன்றறிவு வித்தியாசமிருக்கின்ற ஆடுகளுக்கும், ஆயனுக்கும் இருக்கின்ற தொடர்பு என்ன? ஆயனுக்கும் ஆடுகளுக்கும் இருக்கின்ற உறவு தாய்-குழந்தை உறவு போன்று உயர்வானது. தாய் தன் குழந்தைகளுக்கு அன்புக்காட்டி இரக்கம்காட்டுவதைப் போன்று ஆயனும் தன் ஆடுகளுக்கு ஆதரவாக, அரணாக இருந்து வழிநடத்துவது வழக்கம் இஸ்ரவேல் வரலாற்றில் ஆடும் ஆயனும் முக்கிய இடம் பெறுகின்றனர். ஆடு மேய்க்கும் ஆயர்களைக் கடவுள் தெரிவு செய்து அரசனாகவும் பெரும் ஆளுமைகளாகவும் ஏற்படுத்தி மக்களை வழிநடத்திய நிகழ்வுகளைத் திருமறையில் காணலாம். இஸ்ரவேலின் முன்னோர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்கள் மேய்ப்பர்களாக இருந்தவர்கள். மோசே மற்றும் தாவீது ஆடுகளை மேய்த்துகொண்டிருந்த போது அழைக்கப்பட்டு நல்ல ஆளுமைமிக்க தலைவர்களாய் உயர்ந்தவர்கள். இருப்பினும் ஆடுகளையும், ஆடு மேய்ப்பர்களையும் குறைவாய் மதிப்பிடும் வழக்கம் இருக்கின்றது.

நாம் வாழும் சமூகமும் ஆடுகளை அறிவு குறைந்த விலங்கு என கருதுவதும, ஆடு மேய்ப்பவர்களை அறிவிலிகள், அசுத்தமானவர்கள் என்றும் தரம் தாழ்த்தி மதிப்பிட்டு ஒதுக்கிவைப்பதுண்டு. சரியாகக் கற்றுக்கொள்ள முடியாத பிள்ளைகளைக் கூட “ஆடு மேய்க்கத்தான் லாயக்கு” என சொல்கின்றது நம் தலைமுறை. வேர்வை சிந்தாமல் செய்யும் பணிகளெல்லாம் கௌரவ பணிகளாகவும், வேர்வை சிந்தி உழைக்கும் பணிகள் கௌரவமற்ற பணிகள் என வரையறைகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றது நாம் வாழும் சமூகம். இருப்பினும் இதற்கு மாற்றாக புது வழிகாட்டியிருக்கின்றார் பொறியியல் பட்டதாரி இளைஞர் வேல் வேந்தன். தான் வளர்க்கும் ஆடுகளுக்குப் பேர் வைத்து அழைத்து அசத்திவரும் இவர் புதுக்கோட்டை அருகே சிலட்டூரைச் சேர்ந்தவர். ஏழ்மையான குடும்பம், நன்றாகப்

படித்திருந்தும் வேலையில்லை, போகும் இடங்களில் எல்லாம் ஏமாற்றம். சோர்வுற்றிருந்த போது அவருக்கு ஏற்பட்ட ஓர் நல் எதிர்நோக்கு தான் ஆடு வளர்த்தல், தினமும் அதிகாலையில் ஆடுகளை மேய்ச்சலுக்கு வழிநடத்திச் செல்வதும், மாலை திரும்பி அழைத்து வருவதும் அவருடைய அன்றாடப் பணி. பத்திரிக்கையாளர்களின் சந்திப்பின் போது அவர் பகிர்ந்து கொண்ட பகிர்வு. "ஆரம்பத்துல ஆடு வாங்கி வளர்க்கப்போறேன்று சொன்னதும் அப்பா, அம்மாவுக்குக் கொஞ்சம் சங்கடம்தான். இன்ஜினீயரிங் முடிச்சிட்டு ஆடு மேய்க்கிறானே! என்று சொல்லி பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் கிண்டல் செஞ்சிருக்காங்க. அதை நான் பெரிசா எடுத்துக்கலை. அப்போ என்னைக் கிண்டல் செஞ்சவங்க எல்லாம், இப்போ என்னை ரொம்பவே பாராட்டுறாங்க" நான் வளர்க்கும் ஒவ்வொரு ஆட்டுக்கும் ஒரு பெயர் வச்சிருக்கேன். இவங்களோடே இருக்கும்போது நேரம் போகிறதே தெரியாது. என ஆடுகளுக்கும் தனக்கும் இருக்கின்ற அனுபவத்தை மலர்ச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் பகிர்ந்து கொண்டார். ஆக ஆடுகளையும், ஆயனையும் தரம் குறைத்து மதிப்பீடு செய்யாமல் நல்ல மதிப்பீடுகளால் அணுகுவது அவசியம்.

**1. பாசமிகு ஆயர்** (யோவா. 10:3 )

" . . . அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார்."

பெயர் சொல்லி அழைத்தல் என்பது பாசத்தின் வெளிப்பாடு அதுவும் அவர்களை வெளியே அழைத்துச் செல்தல் என்பது பாசத்தின் அடுத்தகட்டம். அழைத்துச் செல்வதோடு நிறுத்திவிடாது பசிக்கு உணவு கொடுப்பது என்பது பாசத்தின் அடுத்த அத்தியாயம். விக்டர் கியூகோ அவர்கள் லெஸ் மிசரபில்ஸ் (Les Miserables) என்ற நாவலிலே ஜீன் வால்ஜீன் (Jean Valijean) என்கின்ற கதாபாத்திரம் பற்றிக் குறிப்பிடுகின்றார். பெற்றோரை இழந்த ஏழை மனிதன்; தான் ஜீன் வால்ஜீன். தன் சகோதரியுடன் இல்லத்தில் வாழ்ந்து வருகிறான். எதிர்பாராத விதமாக சகோதரிக்காக, அவளின் ஏழு பிள்ளைகளுக்காக ரொட்டித் துண்டுகளைத் திருடிய குற்றத்துக்காக கைது செய்யப்படுகிறான். தங்குமிட உதவிக்காக பேராயரிடம் வந்தபோது "நண்பனே" என்று அழைத்தவர் ஏன் இந்த சில்வர் பொருட்களில் பாதியை விட்டு விட்டு சென்றுவிட்டாய்? இதோ இவைகளையும் எடுத்துகொள் இவைகள் எல்லாம் உன்னுடையவைகள் என அன்பளிப்பாக வழங்குகின்றார். பசியுடன் வந்தவனுக்கு உணவும், உறைவிடமும் கொடுத்தது மட்டுமல்ல திருடியவனை நண்பன் என்று அழைத்து தன்னுடைமைகளைக் கொடுக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக அவனுக்கு

ஏற்பட்ட அவப்பெயரை மாற்றி மதிப்புமிக்க மனிதனாக்குகின்றார். அவனும் நல்ல மனிதனாய் வாழத் தொடங்குகிறான்.

பாசமிகு ஆயன் தன் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைப்பவர் மட்டுமல்ல ஆடுகளின் தேவை என்ன என்பதைச் சரியாகப் புரிந்துக்கொண்டு பூர்த்தி செய்கின்றவர் (யோவான் 10: 9). இளம் வயதிலேயே மேய்ப்புப் பணியில் திறமையும் ஆற்றலும் பெற்ற தாவீது தன் அனுபவத்தை உள்ளடக்கிப் பாடல் இயற்றுகின்றார். (திருப்பாடல் 23:1-3) ஆண்டவர் என் ஆயராக இருப்பதால் எனக்கு ஏதும் குறையில்லை. பசும்புல் வெளிமீது இளைப்பாறச் செய்து அமைதியான நீர் நிலைகளுக்கு அழைத்துச் செல்வார் அதோடு எனக்குப் புத்துயிர் அளிப்பார் என்கின்றார். நம் அருள்நாதராகிய இயேசு கிறிஸ்துவும் பாசமிகு ஆயராக நம்முடன் பயணிக்கின்றார் நம்மை குறையில்லாமல் நடத்தி நமக்குப் புத்துயிர் வழங்குகின்றார் என்ற உணர்வோடு அவர் சத்தம் கேட்டுச் சித்தம் செய்யும் ஆடுகளாய் அவர்பின் செல்வது அவசியம்.

**2. பாதுகாக்கும் ஆயர்** (யோவா. 10: 12)

“கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளைவிட்டு விட்டு ஓடிப் போவார்.”

ஆடு மேய்த்தல் என்பது சாதாரண பணியல்ல பாதுகாப்பற்ற பணி. எப்பொழுது வேண்டுமானாலும் ஆபத்துகள் வரலாம். செல்லும் பாதைகளும், பயணமும் கூட பாதுகாப்பற்றது எனினும் ஆடுகளைப் பாதுகாப்புடன் வழிநடத்திச் செல்வது தான் ஆயனின் பணி. நாடோடி வாழ்க்கை வாழும் மேய்ப்பர்களுக்கு நிரந்தர வீடுகளோ, பணியிடமோ இருப்பதில்லை. தங்குமிடங்களைத் தெரிவு செய்கின்ற போது தங்கள் வசதிக்கேற்ப இடத்தைத் தெரிவு செய்யாமல் ஆடுகளின் வசதிக்கு ஏற்ற இடத்தைத் தெரிவுச்செய்து கூடாரங்களை அமைத்துக் கூடி வாழ்வர். பகலின் சூரிய வெப்பத்தையும் இரவின் குளிர் கொடுமையும் தங்கள் உடலைப் பாதித்தாலும் கவலைப்படாமல் ஆடுகளின் நலனுக்காகத் தாங்கிக் கொள்வார்கள். இரவும், பகலும் மிக விழிப்புடன் செயல்படுவார்கள். வன விலங்குகளின் அச்சுறுத்தல் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம் என்பதால் கவனமாகக் கண்காணிப்பார்கள். ஆபத்துகள் ஏற்படுகின்ற போது தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஓடாமல் ஆடுகளைப் பாதுகாக்க தீவிரப்படுவார்கள். ஆடு மேய்க்கும் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளைப் பாதுகாப்பார்கள். ஆட்டுகுட்டிகளைத் தூக்கிச் சுமப்பார்கள். சினையாடுகளைக் கவனமுடன் நடத்திச் செல்வார்கள் (ஏசாயா 40:11).

நல்ல ஆயராம் நம் அருள்நாதராகிய இயேசு கிறிஸ்துவும், நாம் ஆபத்துகளை எதிர்கொள்கின்ற போது அவைகளில் சிக்கி அழிந்துவிடாது

நம்மைப் பாதுகாக்கின்றார். உடைவுகளிலிருக்கின்ற போது தந்தையைப் போல் தூக்கிச் சுமக்கின்றார். தடுமாறுகின்றபோது தலைவராகயிருந்து நாம் தடத்தில் நடக்கவும் தடம்பதிக்கவும் உதவிச்செய்கின்றார். இறையியலாளர் A.W. டோஃஸர் குறிப்பிடுகின்றபோது ஆடுகளுக்குப் பாதுகாப்பான ஒரேயிடம், ஆடுகள் ஆயரோடு இருப்பதில் தான் உள்ளது என்கின்றார் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

**3. பாடுபடும் ஆயர்** (யோவா. 10: 11)

"நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பார்."

மேய்ப்புப் பணி பாராட்டும், பதவியும் கிடைக்கும் பணியல்ல, மாறாக பாதிப்பும் பாடுகளும் நிறைந்த பணி. ஆடு மேய்ப்பவர்களிடம் நன்றாக ஆடு மேய்க்கிறீர்கள் என யாரும் பாராட்டுவதுமில்லை. பதவி உயர்வு கொடுப்பதுமில்லை. ஆடு மேய்க்கும் பணியில் தினமும் சவால்கள் வந்துகொண்டே இருக்கும். அவைகளை எளிதாக எதிர்கொள்ளும் பக்குவம் பெற்றிருப்பார்கள். பாடுகள் அவர்களுக்குப் பழகிப்போன ஒன்று, இருப்பினும் ஆரோக்கியமற்ற உணவு முறைகளாலும் தேவையான ஓய்வு கிடைக்காததாலும், தூக்கமின்மையினாலும் மனதும் உடலும் பாதிக்கப்படும் அவல நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். காட்டு விலங்குகளைக் கண்டு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முயலாமல் காயங்கள் ஏற்பட்டாலும் பரவாயில்லை, எப்படியாவது ஆடுகளை மீட்க வேண்டும் எனப் போராடும் அவர்களின் தியாக உள்ளம் உண்மையாகவே மதிக்கப்பட வேண்டியவை. "பாடுகள் ஏற்படுகின்ற போது பதுங்குபவர் அல்ல சிறந்த ஆயர். பாடுகளைப் பக்குவமாக சமாளிப்பவரே சிறந்த ஆயர்". பாடுகளிலும் பரமனுக்காய் நின்று நல்ல ஆயராய் இறைப்பணி செய்தவர் தான் அருள்திரு. றிங்கல்தௌபே ஐயர் அவர்கள். மயிலாடியில் ஜெர்மனி வெள்ளைக்காரர் ஒருவர் திருமுழுக்கு கொடுத்து கிறிஸ்தவராக்குகிறார் என கேள்விப்பட்ட பலர் ஆத்திரம் அடைந்தனர். "உன்னைக் கொன்று உன் ஈரலை தின்றால்தான் என் ஆத்திரம் தணியும்," என அதீத கோபத்துடன் ஈட்டியுடன் குத்த வந்தான் ஒருவன். தன்னைக் குத்திக் கொன்றுவிட வந்தவனைக் கருணையுடன் பார்த்த ஆயர் "என் அன்பு சகோதரனே நீ விரும்பினால் என்னைக் குத்திக் கொன்றுவிடு ஆனால் நீ என்னைக் குத்தி கொன்று என் ஈரலை எடுத்து உட்கொள்ளும்போது என்னோடும் என் உதிரத்தோடும் கலந்துவிட்ட இயேசு கிறிஸ்துவின் அன்பையும் சேர்த்து தானே உண்ண நேரிடும். அது ஒருபோதும் வீண் போகாது. அது உன் உடலிலும் கலந்து உன்னை மாற்றிவிடும். நீயும் கிறிஸ்துவின் பிள்ளையாய் மாறிவிடுவாய்" என்று சொல்லி முழங்கால்படியிட்டார். விழித்துப்

பார்த்தபோது சிறு குழந்தையைப் போல விழுந்துகிடந்தவனைத் தூக்கிவிட்டார். கொல்ல வந்தவனோ மனம் மாறி நல்ல மனிதனாக மாறினான்.

பாடுகள் நிரந்தரமானவைகள் அல்ல. பாடுகள் நமக்குப் பாடம் கற்றுத்தரும். நம்மை ஆற்றல் உள்ளவர்களாக உருவாக்கும். ஆடுகளுக்கு ஆபத்துக்கள் நேரிடுகிற போது அயர்ந்து தூங்கிவிடும் மேய்ப்பனுக்குப் பாதிப்பில்லை. செயல்படும் மேய்ப்பனுக்குத்தான், நல்ல ஆயனுக்குத்தான் பாடுகளும், பாதிப்பும். நம் அருள் நாதராகிய இயேசு கிறிஸ்து, நல்ல ஆயன், செயல்படும் ஆயன், அநீதிகளுக்கு எதிராகவும்; ஒடுக்கப்பட்டோர்களுக்கு ஆதரவான குரலாக ஒலிக்கும் ஆயன், ஆடுகள் மீது கொண்ட பாச மிகுதியினால் தம்முயிரையும் தந்து நமக்கு வாழ்வு வழங்கிய ஆயன் என்பதை இந்தத் தவக்காலத்தில் சிந்திப்போம்.

முதன்மை ஆயராக, நல்ல ஆயராக நம்மை வழிநடத்தும் பாசமிகு ஆயன், பாதுகாக்கும் ஆயன், பாடுபடும் ஆயன் நம்முடன் உண்டு என்ற உணர்வோடு நல்ல ஆடுகளாய் வாழ்ந்து அவருக்குப் பின் செல்வோம்.

**திரு. R. அஷ்வின் ஷாத்**

# 03.03.2024

உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு
தவக்கால மூன்றாம் ஞாயிறு

# இறைவேண்டலில் நிலைத்திருத்தல்

## Persistence in Prayer

2 அர. 20: 1-11 | 1 தெச. 5: 12-22
திபா. 116 | மாற். 7: 24-30

"இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்" (1 தெச. 5: 17).

இறைவேண்டுதல் நமது வாழ்வின் நிகழ்வாக அமையாமல் அதுவே வாழ்வாக அமைய வேண்டும். ஜெப உணர்வு நம் சுவாசமாக இதயத் துடிப்பாக மாறவேண்டும். இறைவேண்டல் வழியாக நம் உள்ளத்தை இறைவனிடம் உயர்த்துகிறோம். நம் உள்ளம் இறைவனோடு இரண்டற கலக்கின்றது. இறை வேண்டுதல் என்பது இறையோடு உறவாடி, உரையாடி இணைக்கும் பாலம் ஆகும். இறைவன் முன்னிலையில் வாழ்வின் அர்த்தத்தைத் தேடுவதே இறைவேண்டல் ஆகும். "இறைவேண்டுதல் என்பது இரண்டு ஆன்மாக்களின் தேடல்" என்று மகாத்மா காந்தி கூறுகிறார். அதோடு, "நமது தினசரி நடவடிக்கைகளில் ஒழுங்கும் அமைதியும் நிலவும்படி செய்வதற்குரிய ஒரே வழி பிரார்த்தனையுடன் உங்கள் பொழுதைத் தொடங்குங்கள்" என்கிறார். இறைவேண்டுதலில் நிலைத்திருத்தல் என்பது இறை நம்பிக்கையின் வெளிப்பாடாகும். நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை (எபிரே. 11: 1) ஆக ஆழமான நம்பிக்கை உண்மையான இறைவேண்டுதலில் நிலைத்திருத்தலாகும். புனித 9-ஆம் லூயி மன்னர் கூறும்போது என் நாட்டிற்கு ஆற்றும் முதல் தொண்டு என் தேசத்திற்காக ஜெபிப்பதுதான், அதுவும் இடைவிடாத இறைவேண்டுதல் மூலம் தான் தன் தேசத்தை வெற்றிகரமாக வழி நடத்தமுடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். ஆக தியான பகுதிகளைத் தியானிக்கும்போது இறைவேண்டுதலில் நிலைத்திருப்பதற்கு நம்பிக்கையோடும் விடா முயற்சியோடும் தாழ்ச்சியோடும் அர்ப்பணத்தோடும் செயல்பட வேண்டும்.

### 1. இறைவேண்டலில் நிலைத்திருத்தல் - நம்பிக்கையின் அடையாளம்

இறைவேண்டுதலில் நிலைத்திருத்தல் என்பது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டும், அதே வேளையில் இருக்கும் நம்பிக்கையை ஆழப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். நம்பிக்கையில்லா ஜெபம்

விதைகளில்லா விளைநிலம் எனவும், துடுப்பில்லாப் படகு போன்றது எனவும் கூறுவர். எசேக்கியா ராஜாவின் வாழ்வின் பகுதி பழைய ஏற்பாட்டுப் பகுதியில் காணும்போது ஆண்டவர் திருமுன் நேர்மையுடன் நடப்பதையும், இஸ்ரவேலின் கடவுளின் ஆண்டவரில் முழு நம்பிக்கை கொண்டு அவரையே பற்றிக்கொண்டு வாழ்வதையும், மோசே மூலம் பெற்றுக்கொண்ட கற்பனைகளின்படி வாழ்வதையும் இயல்பாகக் கொண்டவர். தம் வாழ்வில் வந்த இடர்பாடுகளில் இறை வேண்டுதலில் நிலைத்திருந்து வெற்றி பெற்றவர். “என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவி சாய்ப்பேன்,” (எரேமி. 33: 3), “அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார்.” (ரோம. 10: 12) என்பதற்கிணங்க எசேக்கிய ராஜா இறைவனைச் சார்ந்து நின்று வேண்டுவதில் எவ்வளவு சிறந்தவர் என்பதை 2 அர. 20: 1-11 விளக்குகிறது. எசேக்கிய ராஜா நோயுற்றுச் சாகும் நிலையில் இருந்தார். ஆண்டவர் எசாயா இறைவாக்குநர் வழியாக எசேக்கியாவிடம் நீர் உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்குப்படுத்தும், ஏனெனில் நீர் சாவினின்று பிழைக்கமாட்டீர் என்று சொல்ல, உடனே ஆண்டவரை நோக்கி, “ஆண்டவரே நான் எப்படி உம் திருமுன் முற்றிலும் நம்பிக்கைக்குரியவனாய் நடந்து கொண்டேன் என்பதையும் நினைத்தருளும்.” (2 அர. 20: 3) என்று வேண்டுதல் செய்தார்.

இறைவேண்டுதல் என்பது இறைவனின் சித்தம் நம்மில் நிறைவேற நாம் அளிக்கும் அனுமதி என்றும், “இறைவேண்டல் என்ற அனுமதி கொடுக்குமிடத்தில் அருள் என்ற இறை சித்தம் நிகழ்த்தப்படும்” என்ற புனித அர்னால்டு என்பவர் கூற்றிற்கு இணங்க, “உன் மன்றாட்டைக் கேட்டேன் உன் கண்ணீரைக் கண்டேன், இதோ உன்னைக் குணப்படுத்துவேன்” (2 அர. 20: 5)- இன்படி ஆரோக்கியம் அடைந்தார்.

மேலும் 2 அர. 19:15-2- பகுதியில் அசீரிய மன்னனின் பயமுறுத்தலிலும் படைபெயடுப்பிலும் இறைவேண்டுதலில் நிலைத்திருந்து இறைத்துணையோடு வெற்றி கண்டவர். ஆக எசேக்கிய ராஜாவின் வாழ்வில் இறைவேண்டலும் வாழ்வும் ஒன்றிணைந்து செயல்பட்ட சூழ்நிலைகள் முழுவதாகக் காணப்பட்டது. எனவே அவரது வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக இருந்தது.

### 2. இறைவேண்டலில் நிலைத்திருத்தல் - வெற்றியின் அடையாளம்

வாழ்வின் தடைகளைத் தகர்த்து மீட்பு எனும் வெற்றிக்கான ஜெப வாழ்வே என்றும் ஜெயமாக அமையும். இடைவிடாது ஜெபிக்கும்போது நிச்சயமாக வெற்றி உண்டு. தொடர் இறைவேண்டுதல் நம் எண்ணங்களைக் கூர்மையாக்கி நம்பிக்கையை உறுதிபடுத்துகிறது. உறுதியாக பற்றிக் கொள். இறுதியாக

வெற்றி கொள். இது உறுதியான நம்பிக்கை ஆகும். இறுதி வரை நிலைத்திருக்கும் என்பதற்கான வாக்குறுதி.

தாழ்மையும், இடைவிடாத ஜெபமும் விடா முயற்சியும் நிறைபலன் தரும், வெற்றி தரும் என்பதைத் தான் நற்செய்தி பகுதியில் காண்கிறோம்.

கானானியப் பெண் இயேசுவிடம் தன் மகளுக்காக இறைவேண்டல் ஏறெடுத்தார் (மாற். 7: 25) தான் ஒன்றுமில்லை என்று வெறுமையாக்கிக் கொள்கிறார். “வெள்ளை உள்ளமும் குழந்தைக்குரிய மனநிலையும் இறைவனுக்கு ஏற்புடைமை” என்கிறார் தாகூர். “தங்களைத் தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவி செல்லும்” (சீராக் 35: 17) தாழ்மையோடு, நீர்தாம் வல்லவர், ஆற்றல் நிறைந்தவரென கிரேக்கப் பெண்மணி அவரை வேண்டி நிற்கின்றார் (மாற். 7: 26). அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் என்ற விஞ்ஞானி, “இறைவேண்டுதலினால் ஏற்படும் இறையாற்றல் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு” என்பார். இங்கே இயேசு எதிர்மறையாக அப்பெண்ணின் விண்ணப்பத்தை மறுப்பதாக இருந்தாலும், உமது இனத்து மகள் நான் அல்ல. ஆயினும் நானும் உம் பிள்ளையே என்ற அவரின் எண்ணம் மேஜையின் கீழ் இருக்கும் நாய்க் குட்டிகள் சிறு பிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்னுமே என்று பதிலளித்த நிலையில் (மாற். 7: 28) தன் நம்பிக்கையை வெளிப்படுத்தித் தொடர் வேண்டுதலோடு நிற்கின்றார். “நீர் இப்படிச் சொன்னதால் போகலாம், பேய் உம்முடைய மகளை விட்டு நீங்கிற்று” என்றார் (மாற். 7: 29). “துன்பத்தில் தளரா மனதுடன் இருங்கள், இறைவேண்டலில் நிலைத்திருங்கள்” (ரோமர் 12: 12), என்பதற்கு இணங்க கானானிய பெண் தாழ்ச்சியோடு, ஆண்டவர் தாம் எல்லாம் என்ற எண்ணத்தோடு விடாமுயற்சியோடு நீர்தான் அனைத்தும், உம்மால் தான் முடியும் என அர்ப்பணித்து தான்வந்த நோக்கத்தைப் பெற்றுச் சென்றார்.

அன்னைத் தெரசாவைப் பார்த்து இத்தனை ஆயிரம் பேரையும் வைத்து கண்காணிக்க உங்களுக்கு எங்கிருந்து ஆற்றல் கிடைத்தது என்று கேட்டபோது “தினசரி ஒவ்வொரு மணிநேரம் ஒவ்வொரு சகோதரியும் ஜெபத்தில் நிலைத்திருந்ததன் விளைவே” என்றார்.

நாமும் இறைவேண்டலில் நிலைத்திருப்போம்! வெற்றி பெறுவோம்!

அருள்திரு. **N. ஜாண் பென்டிங்**

# ஒன்றிணைக்கும் சிலுவை

எசே. 37: 15-28

"நான் எப்ராயிமின் கையிலிருக்கும் யோசேப்பு மற்றும் அதனுடன் சேர்ந்த இஸ்ரயேல் குலங்களின் கோலை எடுத்து அதை யூதாவின் கோலுடன் சேர்த்து அவற்றை ஒரே கோலாய் மாற்றுவேன். அவை என்கையில் ஒரே கோலாய் இருக்கும்" (எசே. 37: 19)

இஸ்ரயேல் நாட்டில் அரசர் தாவீதின் ஆளுகைக்குப் பின்னர் எந்த ஓர் அரசரும் கடவுளின் ஆளுகையினை மக்களுக்குத் தரவில்லை. அரசர் சாலமோனின் ஆளுகைக்குப் பின்னர், சரியான ஆளுகை அமையாதபடியினால் நாடு இரண்டாக உடைந்து வடபகுதி இஸ்ரயேல் நாடு என்றும் தென்பகுதி யூதா நாடு என்றும் பிரிந்தது. இஸ்ரயேல் நாடு இரண்டு நாடுகளாகப் பிரிந்ததினால் மக்களும் இரண்டு பிரிவினராகவே வாழ்ந்தனர். யூதாவுக்கும் எப்ராயீமினருக்கும் ஏற்கனவே இருந்த பகை பாபிலோனிய சிறையிருப்பின்போதும் இருந்தது. பாபிலோனில் சிறையிருப்பின்போது ஒரே இஸ்ரயேலராய் இராமல் யூதா என்றும் எப்ராயிம் என்றும் இரண்டாகப் பிரிந்து பகையோடிருந்தார்கள். இஸ்ரயேலரது இரண்டு பிரிவுகளையும் கருத்தில் கொண்டு கடவுள் எசேக்கியேலிடம் இரண்டு கோல்களை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னார். இரண்டு கோல்களும் ஒன்றாக இணைவது என்பது பாபிலோனிலிருந்து கானான் நாட்டிற்குள் திரும்பி வரும்போது பிரிவினை அகன்று ஒரே நாட்டினர் ஆவார்கள் என்பதை உணர்த்துகிறது. மேலும் இரண்டு கோல்கள் இணைவது சிலுவையில் இரண்டு கோல்கள் இணைந்திருப்பதை உணர்த்துவதாக உள்ளது. சிலுவையின் இரண்டு கோல்கள் கடவுளின் மக்கள் கடவுளோடும், சகமக்களோடும் ஒன்றிணைவதையே உணர்த்துகிறது. இரண்டு கோல்களின் இணைப்பை சிலுவையோடு ஒன்றுப்படுத்திச் சிந்திக்கும்போது சிலுவை உடைந்துப்போன இறைமானுட உறவினை ஒன்றிணைக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது. தவக்காலத்தில் கிறிஸ்துவின் சிலுவை வாயிலாக கடவுளோடு ஒன்றிணைவதைக் கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

**1. ஒன்றிணைந்த ஒரே நாடு** (எசே. 37: 22)

இரண்டு நாட்டு மக்களாகப் பாபிலோனில் பிரிந்து வாழ்ந்தவர்களை ஒரே நாட்டினர் ஆக்குவது கடவுளின் திட்டம் (எசே. 37: 22). இதனை இரண்டு கோலும் உன் கையில் ஒரே கோலாகும்படி செய்என்பதின்மூலம் தெளிவுப்படுத்துகிறார்.

அதாவது தென்நாடான யூதா நாடும் வட நாடான இஸ்ரயேல் நாடும் கடவுளின் கையில் ஒன்றாகி, ஒரே இஸ்ரயேல் நாடாகும் என்பதாகும். ஒன்றிணைந்த ஒரே நாட்டில் மக்கள் பிரிவினையின்றி ஒன்றுபட்டு வாழ்வர். கடவுளின் உடன்படிக்கை உறவு புதுப்பிக்கப்பட்டுப் புதிய இஸ்ரயேலராய் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ்வர். ஒற்றுமையின்றி பிரிந்து அழிவினைத் தேடிக்கொண்ட இரண்டு நாடுகளும் ஒன்றாக இணைந்ததால், பல்வேறு நாடுகளில் சிதறடிக்கப்பட்ட மக்கள் புதுவாழ்வையும், தங்கள் நாட்டையும் பெற்றுக்கொள்ளும் நிலையில் ஒன்று சேர்க்கப்படுவர். இது ஒன்றிணைந்த மக்களின் நல்வாழ்வுக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் ஏற்புடையதாக அமையும்.

இன்று பிரிவினை சிந்தனைகளினால் பிளவுபட்டு, ஒருவருக்கொருவர் விரோதங்களோடு வாழும் மக்கள், குடும்பங்கள், சமூகம், திருச்சபைகள், நாடுகள் அனைத்தும் ஒன்றாகிட, இரண்டு கோல்களினால் அமையப்பெற்ற சிலுவையின் இணைக்கும் செயல் செயல்படுகின்றது. சிலுவை பிரிவினையினை அல்ல; ஒப்புரவாகுதலை மையப்படுத்துகிறது. கிறிஸ்து தனது சிலுவை மரணத்தின் மூலம் பிரிவினையான நடுச்சுவரைத் தகர்த்து இரு திறத்தாரையும் ஒப்புரவாக்கி, ஒன்றிணையச் செய்கிறார். சிலுவைத் தகவுகள் நமது வாழ்வின் மையமாகும்போது பிரிவினைகளைக் களைந்து கிறிஸ்துவில் ஒன்றுப்பட்டு இணைந்த புதுவாழ்வு வாழமுடியும்.

**2. ஒன்றிணைந்த ஒரே ஆளுகை** (எசே. 37: 22)

ஒன்றிணைந்த நாட்டில் ஒரே ஆளுகையினைக் கடவுள் ஏற்படுத்துகிறார். இதனை “அவர்கள் எல்லாருக்கும் ஒரே அரசன் இருப்பான்” என்பதின் மூலம் விளக்குகிறார். அதோடு “என் ஊழியன் தாவீது அவர்களுக்கு அரசனாய் இருப்பான். அவர்கள் அனைவருக்கும் ஒரே ஆயன் இருப்பான்” (எசே. 37: 24) என இழந்த தாவீதின் ஆளுகை திரும்ப ஏற்படுத்தப்படுவதை உணர்த்துகிறார். ஒன்றிணைந்த ஆளுகையில் கடவுளின் வழிகாட்டுதலின்படி நீதி வெளிப்படும். பிரிவினை முற்றிலும் அழிந்த நிலையில் இவ்ஆளுகை கடவுளின் ஆளுகையாக வெளிப்படும். மக்களும் தங்கள் தீமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு தூய்மையாக வாழ்வர். கடவுளால் அமைக்கப்பட்ட இறையாளுகையின் மக்கள் ஒருபோதும் தங்களைச் சிலை வழிபாட்டினாலும் அருவருப்பான செயல்பாடுகளினாலும், தங்கள் வேறெந்த குற்றங்களினாலும் தீட்டுப்படுத்திக் கொள்ளமாட்டார்கள் (எசே. 37: 23). இறையாளுகையின் மக்களைக் கடவுள் மீட்டு, தூய்மையாக்கி, அருவருப்புகள் அனைத்தையும் அகற்றி, கடவுளின் மக்களாக்கி, கடவுளே அவர்களுக்குக் கடவுளாயிருந்து ஆளுகை செய்கிறார் (எசே. 37: 23).

இஸ்ரயேலின் ஆளுகை அமைப்பில் கடவுளே மக்களை ஆளுகிறவர், அரசர்கள் கடவுளின் ஆளுகையினை உலகில் வெளிப்படுத்தும் அவரது பிரதிநிதிகள் என்ற நிலையிருந்தது. அதோடு, பிளவுபட்ட இஸ்ரயேல் என்பது கடவுளின் திட்டமல்ல. மாறாக ஒன்றிணைந்த நாடே கடவுளின் திட்டம். நாடு ஒன்றாய் இணைக்கப்படும்போது கடவுளே அவர்களுக்கு அரசராக இருப்பார். கடவுளின் ஆளுகை நீதியினையும் நியாயத்தினையும் வெளிப்படுத்தும் ஆளுகையாக அமையும். தமது ஆளுகையில் கடவுள் நெரிந்த நாணலை முறியார்; மங்கி எரியும் திரியை அணையார்; உண்மையாகவே நீதியை நிலைநாட்டுவார் (எசா. 42: 3) என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. கடவுளின் ஆளுகை அனைவரையும் ஒன்றுப்படுத்தி, தள்ளுண்டவர்களைச் சேர்த்துக் கொள்ளும் ஆளுகையாகும். மன்னராளுகையில் அரசனையும், நாட்டையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவதும், வாழ்வை இழப்பதும் மக்களின் பங்காக இருந்தநிலையில், கடவுளின் ஆளுகையில் தாவீதின் வழிமரபில் தோன்றிய இயேசு கிறிஸ்து உலகினையும் மக்களையும் மீட்பதற்காகத் தன்னையே இழக்கக் கொடுத்தார். கிறிஸ்துவின் சிலுவை இறைவாக்கினர் எசேக்கியேலின் ஒன்றிணைந்த ஆளுகையின் வெளிப்பாடு. இறையாட்சியில் அனைவரும் ஒன்றாகக் கருதப்படுகின்றனர். இறையாளுகையில் பங்கு பெறுகின்றவர்கள் கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் தூய்மையாக்கப்படுகின்றனர். தவக்காலத்தில் சிலுவை வாயிலாக கடவுள் நம்மைத் தூய்மையாக்கி, அவரது ஆளுகையில் இணைத்திட நம்மை அவரிடம் கையளிப்போம்.

### 3. ஒன்றிணைந்த வாழ்வு (எசே. 37: 26)

ஒன்றிணைந்த இறையாளுகையில், கடவுளின் மக்களாய் அனைவரும் கடவுளோடு இணைந்து வாழ்வர். கடவுளோடு இணைந்து வாழும் வாழ்வில் கடவுளின் நீதிநெறிகளின்படி நடந்து, கடவுளின் நியமங்களைக் கருத்தாய்க் கடைப்பிடிப்பர் (எசே. 37: 24). அதோடு சிதறடிக்கப்பட்டுப் போனவர்களும் சிறையிருப்பில் வாழ்கிறவர்களும் திரும்பி வந்து தங்களது சொந்த இடமாகிய மூதாதையரின் இடங்களில் குடியமர்வர். கடவுள் வாக்களித்து உரிமையாய்க் கொடுத்த நாட்டில் அவர்களும் அவர்களது தலைமுறையும் எவ்வித ஒடுக்குதலுமின்றி அமைதியுடன் வாழ்வர். கடவுளின் ஊழியராகிய தாவீதின் தலைமைத்துவத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு நிறைவுடன் வாழ்வர் (எசே. 37: 25). மக்கள் தங்கள் சொந்த நாட்டில் இறைத்திட்டத்தின்படிக் கட்டளைகளைக் கைக்கொண்டு வாழும்போது, அவர்களது வாழ்வு அமைதி நிறைந்த வாழ்வாக அமைகின்றது. கடவுளும் அவர்களோடு நல்லுறவு உடன்படிக்கையினை ஏற்படுத்தி அதனை நிலைத்திருக்க செய்கிறார் (எசே. 37: 36). கடவுளின் நல்லுறவு உடன்படிக்கை மக்கள் கடவுளோடும், தங்களோடு வாழும் மற்ற

அனைத்து மக்களோடும் நல்லுறவில் வாழும் வாழ்வாகும். அதோடு ஒன்றிணைந்த வாழ்வில் கடவுள் தமது உடன்படிக்கையின் மக்களோடு வாழ்ந்து உடன்படிக்கையினைப் புத்தாக்கம் செய்கிறார் (எசே. 37: 27).

கடவுள் ஏற்படுத்தும் ஒன்றிணைந்த வாழ்வில் யூதர் மட்டுமல்ல, பிற இனத்தவரும் கானான் நாட்டில் இசைவாகக் கூட்டி இணைக்கப்படுவார்கள். ஆகவே இன வேறுபாட்டிற்கு இறையாளுகையில் வாய்ப்பில்லை. இதனை இயேசு கிறிஸ்து தனது திருப்பணி காலத்தில், யூதாவையும் சமாரியரையும் ஒன்றாகச் சேர்க்க எடுத்த முயற்சி உறுதிப்படுத்துகிறது (யோவா. 4) மேலும் எசேக்கியேல் இறைவாக்கினரது ஒரே மக்களினமாய் அவர்கள் ஒன்று கூட்டப்படுவர் என்ற வாக்குறுதி, கிறிஸ்துவின் திருப்பணி வாயிலாக நிறைவேறியது. கிறிஸ்துவின் சிலுவை ஒன்றிணைந்த வாழ்வின் மையமாக அமைந்துள்ள சிலுவையில் பகை வேரறுக்கப்பட்டுப் புதிய உறவு உருவாக்கப்பட்டது. இந்தத் தவக்காலம் நமது வாழ்வில் ஒன்றிணைந்து வாழ்வதற்குத் தடையாக உள்ள அனைத்தையும் களைந்து, கடவுளோடுள்ள உறவில் வலுவடைந்து, நம்முடன் வாழும் மற்ற மக்களோடு அனைத்து வேறுபாடுகளையும் களைந்து கிறிஸ்துவில் ஒன்றாகி வாழவும் அனைவரையும் கிறிஸ்துவோடு இணைக்க நமது வாழ்வு சான்றாகும் வாழ்வாகவும் அமைந்திட வேண்டும்.

அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

# வழியும் உண்மையும் வாழ்வும் நானே

## (I am the Way, truth and the Life)

யோவான் 14 : 1-14

"இயேசு அவரிடம், வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" (யோவான் 14 : 6)

இறைமகன் கிறிஸ்து தமது சீடர்களுடனான உறவை பலப்படுத்தி சீடர்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையளிக்கும் வண்ணமாக உரையாற்றுகிறார். இது இறைமைந்தர் கிறிஸ்துவின் பிரியா விடை உரை என்று இறையியலாளர்கள் கூறுகின்றார்கள். யோவான் நற்செய்தியாளர் மூன்று சொற்களை இணைத்துக் கூறும் இலக்கிய வடிவைப் பல இடங்களில் பயன்படுத்துகின்றார். (எ.கா.) கால்நடை செம்மறி மற்றும் புறா (2 : 14), பாவம், நீதி மற்றும் நியாயத் தீர்ப்பு. இதைப் போன்றே வழி, உண்மை மற்றும் வாழ்வு என்று கூறுகிறார்.

மிகச் சிறிய உயிரினமாகிய எறும்பு, தன் உணவைச் சேமிக்க வழியைத் தெரிவு செய்யும், பின்னர் அந்த வழியில் மட்டுமே அது பயணிக்கும். வேறு வழியில் செல்ல முற்படாது. இறைமகன் கிறிஸ்துவும் கூட நானே வழி, உண்மை, வாழ்வு என்று தம்மை அறிமுகப்படுத்தி, இவ்வழியின் வாயிலாக மட்டுமே இறையரசு செல்ல முடியும் என்று போதிக்கிறார். வாழ்வு, உண்மை வழியாக கிறிஸ்து எவ்வாறு மானுடத்திற்குள் செயல்படுகிறார் என்பதைக் குறித்து தியானிப்போம்.

### 1. வாழ்வு அருளும் வழி

"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்" (யோவா. 14 : 1).

கிறிஸ்து தமது பிரியாவிடை உரையில், "நீங்கள் கலங்கி நிற்க வேண்டாம், கடவுளிடம் நம்பிக்கையாயிருங்கள்" என்று சீடர்கள் பற்றுறுதியுடன் வாழ வழி காட்டுகிறார்.

இரண்டு தொலைதூரப் புள்ளிகளை இணைக்கும் ஒரு பாதையே வழி என்பர். வாழ்வு அருளும் இறை மைந்தர் கிறிஸ்து, கடவுளையும் மானுடத்தையும் இணைக்கும் ஓர் வழியாய்ச் செயல்படுகிறார்."உங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்" என்று கூறி, சீடர்களைத் தேற்றிவிட்டு, கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று பற்றுறுதியில் நிலைப்படுத்தி, இயேசு கிறிஸ்து

மானிடரையும் கடவுளையும் ஒன்றிணைக்கும் வழியாய்ச் செயல்படுகிறார். கிறிஸ்துவாகிய அந்த வழி, உண்மையாய், வாழ்வாய் அமைந்திருக்கிறது. யோவா. 14 : 6-ல், "என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" என்று கூறி சீடர்களுக்கு உண்மை வழியைக் காட்டுகிறார்.

இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு வழிகாட்டியாய் மட்டும் இருந்து விடாமல், அவரே அவர்களுக்கு வாழ்வு வழங்கும் வழியாக தம்மை அறிமுகப்படுத்துகிறார். இறையியலாளர்கள் கருத்துப்படி, "நானே வழி" என்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவை வழியையும், "உண்மை" என்பது கிறிஸ்துவின் அனைத்துச் செயல்களிலும், முழு நம்பகத் தன்மையும், "வாழ்வு" என்பது இறையரசுக்கான ஆயத்த வாழ்வு என்பதையும் வலியுறுத்துகின்றது.

விடுதலைப் பயணத்தில் இஸ்ரவேல் மக்கள் வழி இல்லாத சூழலில் ஆண்டவர் வழியை உருவாக்கிச் செங்கடல் நடுவே, அழைத்துச் சென்றார். வாழ்வு வழங்கும் வழியாகச் செயல்படும் கிறிஸ்து, அந்த வழியே நாம் நடக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் நாம் இன்று கிறிஸ்துவாகிய வழியை விட்டு இவ்வுலக வழிகளில் செல்வதால் தான் வாழ்க்கைப் பாதையில் தடுமாற்றம். இந்த தவக்காலங்களில் கிறிஸ்து காட்டும் வழியில் நாம் சென்று வாழ்வடைய அழைக்கப்படுகிறோம்.

**2. விண்ணுலகிற்கான வழி**

"நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலே நீங்களும்; இருப்பீர்கள்" (யோவா. 14: 3).

யூத மரபின்படி "இடம்" என்று ஆண்டவர் குறிப்பிடுவது, கடவுளின் பற்றுறுதியாளர்களுக்கான கடவுளின் வாழ்விடம் என்று கூறப்படுகிறது. யோவா. 14 : 2-3-ன்படி இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு விண்ணுலகில் ஒரு இடத்தை ஆயத்தப்படுத்துகிறார் என்று சொல்லப்படுகிறது. மேலும் இறைமகன் இயேசு கிறிஸ்து, "உங்களை அழைத்துச் செல்ல வருவேன்" என்கிறார்.

இயேசு கிறிஸ்து தாமே சீடர்களை விண்ணுலகத்துக்கு அழைத்துச் செல்வேன் என்று குறிப்பிட்டதால் விண்ணுலகத்திற்கான வழியாக தம்மைக் காண்பிக்கின்றார். அவரே உண்மையான வாழ்வாகிய வழி. கிறிஸ்து வழியாக தந்தையை நாம் பற்றிக்கொள்கிறோம். விண்ணுலக வாழ்வை "தந்தையின் வீடு" என்று இயேசு கிறிஸ்து அறிமுகப்படுத்துகிறார். கிறிஸ்துவின் சிலுவை நம்மை இறையரசுக்கு நேராய் அழைத்துச் செல்லும்.

Christopher Marlowe என்ற ஆங்கிலப் புகழ்பெற்ற நாவலாசிரியர் Dr. Fastus என்ற மனிதனைப் பற்றி நாவல் ஒன்றை எழுதினார். Dr. Fastus என்ற

மனிதன் இந்த உலக வாழ்வு முழுவதையும் கற்றுக்கொள்ளவேண்டும், அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்தான். தீய சக்தியோடு உடன்படிக்கை செய்து கொண்டான். அவரது இறுதி காலத்தில் முதியவர் ஒருவர் எச்சரித்து, நீ போகிற வழி தவறு என்றும் கடவுளுடைய வழியில் செல் என்றும், நீ சரியான வழியைத் தெரிவு செய்ய இன்னும் உனக்கு வாய்ப்பும், நேரமும் உள்ளது என்றார். ஆனால் அவனோ அதை ஏற்க மறுத்தான். அவரது இறப்பின் வேளை வந்த போது அந்த தீய சக்தி அவனை நரகத்துக்கு அழைத்துச் சென்றது என்று எழுதினார் அந்த நாவலாசிரியர்.

கடவுள் தந்த இவ்வாழ்வில் விண்ணுலகிற்கான வழியாக இயேசு நம்முன் நிற்கிறார். இன்று நாம் எந்தப் பாதையைத் தெரிவு செய்யப் போகிறோம். நானே வழி உண்மை வாழ்வு என்று கூறி இறையரசுக்கு நேராக கிறிஸ்து நம்மை ஆயத்தப்படுத்துகிறார். இந்த லெந்து நாட்கள் இறையரசின் மக்களாய் வாழ நம்மை ஆயத்தப்படுத்துகின்ற நாட்களாக அமையட்டும்.

திரு. **J. ஜாண் ஷெல்லி**

# விடுவிக்கும் உண்மையான வழிபாடு

## True Worship that Liberates

விப. 3: 11 - 18 திப. 16: 25 - 34

திப. 137 லூக். 13: 10 - 17

" . . . இந்தக் கட்டிலிருந்து இவரை ஓய்வுநாளில் விடுவிப்பது முறையில்லையா?" (லூக். 13: 16)

"விடுதலை" கிறிஸ்தவத்தின் மையச் செய்தி ஆகும். அவ்விடுதலையை அனுபவமாக்கும் ஊடகமே வழிபாடு. "உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். தம்மை வழிபடுவோர் இத்தகையோராய் இருக்கவே தந்தையாம் கடவுள் விரும்புகிறார்." என்கிறார் ஆண்டவர் (யோவா. 4: 23 - 24). ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை...... என்னை அதற்கென தந்தை அனுப்பினார் (லூக்கா 4: 18 - 19) என்று எசாயா தீர்க்கரின் (எசா. 61: 1) தூரக் காட்சியினை ஆதாரமாக ஏற்றுக்கொண்டு தமது நாசரேத்தூர் பணித்திட்ட அறிவிப்பை இயேசு வெளிப்படுத்தினார். அத்திருப்பணியை நிறைவேற்றவே தாம் அனுப்பப்பட்டதாக (யோ. 3: 16) அறிவித்தார். ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு (II கொரி. 3: 19). உண்மை வழிபாடு எத்தகைய விடுதலையை அளித்தது என்பதனைச் சிந்திப்போம்.

### 1. எகிப்தில் எபிரேயர் பெற்ற விடுதலை

"நான் உன்னோடு இருப்பேன்..........நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள்" (விப. 3: 12)

எபிரேயர்கள் எகிப்து தேசத்தில் ஏறக்குறைய 430 ஆண்டுகள் அடிமை வாழ்வு வாழ்ந்து வந்தனர். அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளின் அடக்குமுறையை முன்னிட்டு ஆண்டவரிடம் அபயக்குரல் எழுப்பினர். அவர்களது துன்பத்தைக் கண்டு, அவர்களது அழுகுரலைக் கேட்டு, அவர்களது துயரங்களை அறிந்து, பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்வதாக ஆண்டவர் உறுதியளித்தார். (விப. 3: 7-9). தமது இருப்பு நிலையைத் தெளிவுபடுத்தியவுடன் (3: 14) உறவு முறையையும் உறுதி செய்து (3: 15), எபிரேயரின் கடவுள் எங்களை, சந்தித்து அவர் விருப்பத்தைத் தெரிவித்தார் (3: 18) எனும் உண்மைச் செய்தியை எகிப்தின் அரசனிடம் போய்

அறிவிக்க மோசேயை ஏற்படுத்தினார். எகிப்திலிருந்து விடுதலை பெற்றுச் செல்லும்போது இம்மலையில் நீங்கள் வழிபாடு செய்வீர்கள் என ஏற்கனவே சொல்லப்பட்ட செய்தியினடிப்படையில், வழிபாடு என்பது ஆண்டவர் மனிதனுக்கு அளிக்கும் விடுதலைக்கு மறுமொழியாக அமைகின்றது என்பது புலனாகின்றது. நம்மைக் காண்கிற, நமது உண்மை நிலையை அறிகிற, நம் உணர்வுகளை மதிக்கிற, எங்கும் நிறைந்த, எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல இறைவன் நமக்கிருக்கிறார். நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப் போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக் கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? (இச. 4: 7). எபிரேய மக்களின் உண்மையான வழிபாடும், வேண்டுதலும் தேசத்துக்கு விடுதலையையும், வாழ்வையும் மகிழ்வையும் கொடுத்தது.

### 2. பிலிப்பி நகரில் பவுலடியார் பெற்ற விடுதலை

"நள்ளிரவில் பவுலும், சீலாவும் கடவுளுக்குப் புகழ்பாடி இறைவனிடம் வேண்டினர்" (திப. 16: 25).

பிலிப்பி நகர் திருப்பணியின் போது குறி சொல்லும் ஆவியைத் தம்முள் கொண்ட அடிமைப்பெண் பவுலடியாரால் குணமாக்கப்பட்டார். அதனால் அவரை அடிமையாக வைத்திருந்தவர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதால், யூதர்கள், நமது நகரில் கலகம் விளைவிக்கிறார்கள். உரோமையராகிய நாம் ஏற்றுக்கொள்ளவோ, செயல்படுத்தவோ தகாத முறைமைகளை இவர்கள் அறிவிக்கிறார்கள் (16: 20 - 21) என பொய்க் குற்றம் சுமத்தி, அவர்களை அடித்து, உதைத்து அதிகாரிகளிடம் ஒப்படைத்துச் சிறையில் அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டி வைத்தார்கள். ஆயினும் நள்ளிரவில் பவுலும், சீலாவும் கடவுளுக்குப் புகழ்பாடி இறைவனிடம் வேண்டுதல் செய்தனர். திடீரென பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்தது. உடனே கதவுகள் அனைத்தும் திறந்தன. விலங்குகளும் கழன்று விழுந்தன (16: 26). குற்றவாளிகள் தப்பிப் போயிருப்பார்கள் என்றெண்ணிய சிறைக் காவலன் தற்கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்திய பவுலடியார் உண்மையான வழிபாடு எத்தகைய கொடிய நிலையிலிருந்தும் விசுவாசிகளை விடுவிக்கும் ஆற்றலுடையது என்பதை நிரூபித்துக் காட்டியதுடன், சிறைக் காவலர் குடும்பத்தினரையும் அத்தகைய விடுதலை வாழ்வுக்குள் வழிநடத்தினார் (16: 31). விடுதலை பெற்றவர்கள் விடுதலை வழங்கும் கருவிகளாக மாற்றுருவாக்கம் பெற்றனர்.

### 3. ஆலயத்தில் ஆபிரகாமின் மகள் பெற்ற விடுதலை

"ஆபிரகாமின் மகளாகிய இவரை......விடுவிப்பது முறையில்லையா?" (லூக்கா 13: 16).

ஓய்வு நாளில் இயேசு தொழுகைக்கூடம் ஒன்றில் கற்பித்துக் கொண்டிருந்தார். 18 ஆண்டுகளாகத் தீய ஆவி பிடித்து உடல் நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார். இயேசு அவரைக் கண்டு "அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" என்று கூறி தம் கைகளை அவர் மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். (13: 10 - 13). "நீதிமான்கள் மன்றாடும் போது ஆண்டவர் செவி சாய்க்கின்றார். அவர்களை அனைத்து இடுக்கண்ணினின்றும் விடுவிக்கின்றார்." "உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்." (தி.பா. 34: 17 - 18) எனும் திருவசனங்கள் இங்கு நினைவுக்கூரத்தக்கது. உண்மையான வழிபாடு பாடுகள். வேதனைகள், துன்பங்கள், மற்றும் தொடர் துயரங்களிலிருந்தும் இறைமக்களை விடுவிக்கும் ஆற்றலுடையது என்பதற்கு இப்பெண்மகள் சாட்சி.

நலமும், துணையும், விடுதலையும் நல்கும் ஆண்டவர் நமக்குண்டு. "உயர்ந்தவரும் உன்னதரும் காலம் கடந்து வாழ்பவரும், "தூயவர்" என்ற பெயரைக் கொண்டவரும் கூறுவது இதுவே : உயர்ந்த தூய இடத்தில் நான் உறைகின்றேன் : நொறுங்கிய, நலிந்த நெஞ்சத்தினரோடும் நான் வாழ்கின்றேன்; நொறுங்கிய உள்ளத்தினரை ஊக்குவிக்கவும், நலிந்த நெஞ்சத்தினரைத் திடப்படுத்தவும் நான் குடியிருக்கின்றேன்" (எசாயா 57: 15). இத்தகைய இறைவனை உண்மையுடன் வழிபட்டு விடுதலை வாழ்வு வாழ விசுவாசித்துக் கீழ்ப்படிவோம்.

அருள்திரு. **D. ஜாண் ஜெப தாஸ்**

# மீட்புப் பணியில் பெண்கள்

## Women in Salfivic Ministry

நீத. 5: 1 - 7 திப. 18: 24 - 28

திபா. 79 லூக். 23: 26 - 31

"தெபோரா ! நீ எழும்பும் வரை . . . இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்விழந்து கிடந்தன" (நீத. 5: 7)

மீட்பு என்பதற்கு விடுவித்தல், பத்திரமாகக் கொண்டு வருதல், தீமையினின்றும் அழிவினின்றும் பாதுகாத்தல் என்பன அர்த்தமாகும். தங்கள் பாவக் குணங்களில் வாழ்கிறவர்கள் பாவத்துக்கும், அசுத்தத்திற்கும், சாத்தானுக்கும் அடிமைகளாயிருக்கிறார்கள். இத்தகையோர் பாவ அடிமைத்தனத்தினின்று விடுபடவும், மனந்திரும்பி மனமாற்றம் பெற்று இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாய் மாற்றம் பெறவும் உதவி செய்வதே மீட்புப்பணியாகும்.

இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்கள் அனைவரும் மீட்புப் பணியில் ஈடுபடுதல் வேண்டும். ஏனெனில் கடவுளின் பேரிலும் சகமனிதர்களிடத்தும் அன்புகூர்தல் என்பது அழிவின் பாதையில் செல்லுபவர்களின் பரிதாப நிலையைக் கண்டு அவர்களின் மீட்புக்காகத் துரிதமாக பணியாற்றுவதாகும். இப்பணியினைப் பரிசுத்த திருமறையில் வருகின்ற பெண்கள் பலரும் துடிப்புடன் செய்து நிறைவேற்றினார்கள்.

### 1. மீட்பு உண்டாகத் துணை சென்ற தெபொராள்

கானான் தேசமாகிய வாக்குத்தத்த தேசத்தில் குடியேறிய இஸ்ரவேலர் ஆண்டவரின் உடன்படிக்கையை மறந்து மனம்போல வாழ முற்பட்டனர். ஆவிக்குரிய வாழ்க்கையிலும், ஒழுக்க நெறிகளிலும் தடம் புரண்டு போயினர். அந்நிய தெய்வ வழிபாடு, விக்கிரக ஆராதனை, விபச்சாரம் எனக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தனர். ஆகையால் கர்த்தர் அவர்களை யாபீன் என்னும் கானானிய அரசனின் கீழ் அடிமைகளாக வாழும்படிச் செய்தார். ஆன்மீக இருள் நிறைந்த அக்காலத்தில் தெபொராள் தன்னை முழுவதும் கர்த்தரிடம் அர்ப்பணித்தவளாகக் காணப்பட்டார். மக்கள் மனம் போல வாழ்ந்த காலத்தில் நற்பண்புகள் நிறைந்த நியாயாதிபதியாக பணியாற்றினார். பாழாய்ப் போன இஸ்ரவேலும் அதன் கிராமங்களும் மீட்படைய தாயாக எழும்பினார்.

கர்த்தர் பாராக் என்னும் வீரனிடம் போருக்குச் செல்லுமாறும் போரில் யாபீன் என்னும் அரசனின் படைத்தலைவனான சிசெராவை ஒப்புக்கொடுப்பதாகவும் கூறியிருந்தார். ஆயினும் பாராக் ஒன்றும் செய்யாது இருந்துவிட்டார். தெபோராள் பாராக்கிடம் கர்த்தர் சொன்னதை நினைவூட்டியபோது, "நீ என்னோடே கூட வந்தால் யுத்தத்திற்குச் செல்வேன் வராவிட்டால் செல்லமாட்டேன்" என்றும் கூறினார். வீரனாயிருந்தும் யுத்தம் செய்ய தைரியமில்லாத பாராக்கை தைரியப்படுத்தி அவரோடு துணைக்குச் சென்றார். போரில் கர்த்தர் அவர்களை வெற்றிச் சிறக்கச் செய்தார். தெபோராளும் பாராக்கும் இதயப்பூர்வமாகக் கர்த்தரைத் துதித்து கர்த்தர் செய்த மீட்பின் செயலுக்கு நன்றி தெரிவித்துப் பாடினார்கள்.

### 2. மீட்பைப் பிரசங்கித்த பிரிஸ்கில்லாள் :

முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்து இயேசுவின் ஊழியத்தை முதன் முதலாக தம்பதியராக நிறைவேற்றியவர்கள் ஆக்கில்லா - பிரிஸ்கில்லா தம்பதியர். பிரிஸ்கில்லா தன் கணவருடன் இணைந்தே ஆறுமுறை புதிய ஏற்பாட்டில் பேசப்படுகிறார். பிரிஸ்கில்லா முதல் பெண் பிரசங்கி எனவும் பெயர் பெறுகிறார். இத்தம்பதியர் கிலவுதியு ராயனின் கட்டளையால் ரோமிலிருந்து கிறிஸ்தவர்கள் என்ற காரணத்தினால் வெளியேற்றப்பட்டவர்கள். இவர்கள் சென்ற இடமல்லாம் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்து வந்தனர். கூடாரம் பண்ணுகிற தொழில் செய்து வாழ்க்கை நடத்தினார்கள். பவுலடியாரும் கூடாரத் தொழில் செய்கிறவரானபடியால் கொரிந்துவில் இவர்களுடன் தங்கி இயேசுவைப் போதித்து வந்தார்.

திப. 18: 24 - 28-ல் எபேசு பட்டணத்தில் இவர்கள் தங்கியிருந்தபோது மறைநூலில் வல்லவனும், பேச்சில் சாதூரியமுமான அப்பல்லோ என்கின்றவரின் போதகத்தைக் கேட்டார்கள். அப்பல்லோ யோவான் கொடுத்த திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். அவருடைய போதகத்தில் குறைவு உண்டாயிருந்தது. பிரிஸ்கில்லாவும், ஆக்கில்லாவும் அப்பல்லோவைத் தங்கள் இல்லத்துக்கு அழைத்து உபசரித்தார்கள். மேலும் இயேசு கிறிஸ்துவையும் அவரால் உண்டான மீட்பையும் எடுத்துரைத்தார்கள். பிரிஸ்கில்லாவின் போதனைகளால் சிறந்த தாலந்துகளைப் பெற்ற அப்பல்லோ திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டார். பின்னர் அகாயா நாட்டிற்கு அவர் வந்தபோது இயேசுவே கிறிஸ்து என்றும் அவராலே மீட்பு உண்டாயிற்று என்பதையும் மறைநூலைக் கொண்டு எடுத்துக்காட்டினார். அதன் விளைவாக சபைகளில் கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ளோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகியது.

### 3. மீட்புக்காக அழவேண்டிய எருசலேம் குமாரத்திகளாகிய நாம் :

கொல்கொதாவுக்கு நேராக சிலுவை சுமந்தவராகச் சென்று கொண்டிருந்த இயேசு நாதரைத் தொடர்ந்து திரள் கூட்டமான ஜனங்கள் பின் சென்று கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தின் மத்தியில் அவருக்காக புலம்பி அழுகிற பெண்களும் காணப்பட்டனர். இயேசு அப்பெண்கள் பக்கமாக திரும்பி எருசலேம் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார் (லூக். 23: 27, 28). அன்று இயேசுநாதர், சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பின் (கி.பி. 70-ல்) எருசலேமுக்குத் தீத்து ராயனால் நிறைவேற்றப்படபோகும் அழிவை முன் உணர்ந்தவராக இவ்வார்த்தைகளைச் சொன்னார். இன்றும் அதே வார்த்தைகள் நம் ஒவ்வொருவரையும் பார்த்துச் சொல்லுவதாய் அமைகிறது. உண்மை, தாழ்மை, பொறுமை ஆகிய நற்குணங்கள் மறைந்து பொய், மாய்மாலம், பெருமையினால் பிறரை அவமதிப்பது, பரிகாசம் செய்வது, பொல்லாப்பு செய்ய துணிகரம் கொள்வது ஆகியவை நம்மில் பெருகியுள்ளன. அழுதல் என்பது மனம்திரும்பாத நிலையிலிருப்பவர்களுக்காகவும், மீட்பை ஏற்றுக்கொள்ளாமல் வாழ்பவர்களுக்காகவும் துக்கங்கொள்வதும் ஆத்துமாவில் வேதனைக் கொள்ளுவதும் வரவிருக்கும் அழிவுகளை எண்ணி நொறுங்குண்ட இதயத்துடன் வருந்துவதுமாகும். திபா. 79-ல் பாடலாசிரியர் “எருசலேமின் அழிவைக் குறித்து புலம்புகிறார். எருசலேம் இஸ்ரவேல் என்று வருகிற இடங்களில் மணிப்பூர் என்று வாசிப்போமானால் இன்றைய சூழ்நிலையில் எவ்வளவு பொருத்தமாய் அமையும். மேலும், லூக். 21: 20-ல் எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்” என்ற இயேசு நாதர் கூறிய கடைசி காலம் பற்றிய சம்பவங்கள் நடைபெறத் தொடங்கிவிட்டது. பெற்றோராக, திருச்சபையோராக நமது மீட்புக்காகவும், நமது பிள்ளைகளின் மீட்புக்காகவும் மனம்வருந்துவதும், ஜெபிப்பதும் அவர்களை வழிநடத்துவதும் கடமையாயிருக்கிறது. மீட்புப் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட ஆண்டவர் அருள்புரிவாராக! ஆமென்!

பேராசிரியை முனைவர். **பெலிசியா செல்லையா**

# உயிர்ப்பிக்கும் சிலுவை

எசே. 37: 1-14

என் ஆவியை உங்கள் மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள் . . . (எசே. 37: 14)

இறைவாக்கினர் எசேக்கியேல் உலர்ந்த எலும்புகள் தரிசனத்தில் பாபிலோனில் சிறையிருப்பில் வாழ்ந்த இஸ்ரயேலரின் வேதனையினையும் அதிலிருந்து கடவுள் அருளும் விடுதலையினையும் தெளிவுப்படுத்துகிறார். பாபிலோனில் சிறையிருப்பிலிருந்த இஸ்ரயேலர் இனிமேல் வாழ்வில்லை வாழ்வு உலர்ந்து போனது, உருக்குலைந்தது என வேதனைப்பட்டனர். ஆனால் இறைவாக்கினர் கடவுள் தமது ஆற்றலினால் அவர்களது உலர்ந்த வாழ்வினை உயிர்பெறச் செய்வார் என்ற நம்பிக்கையினையும் உயிர்ப்பிக்கப்படும் வாழ்வினால் ஏற்படும் நன்மைகளையும் இங்கு எடுத்துரைக்கிறார். கிறிஸ்துவின் சிலுவை நமது ஆன்மிக வாழ்வினை உயிர்ப்பிக்கும் ஆற்றல் கொண்டது. தவக்காலத்தில் சிலுவை ஆன்மிகம் நம்மை எவ்வகையில் உயிர்ப்பிக்கும் என்பதை உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்ற தரிசனத்தைக் கொண்டு சிந்திப்போம்.

**1. உயிரற்ற எலும்புகள்** (எசே. 37: 1-3)

மானிட வாழ்வில் உயிர் வாழ்வின் அடையாளம். உடலில் உயிர் இல்லையென்றால் வாழ்வு உயிரற்றதாக மாறிவிடுகின்றது. இறைவாக்கினர் எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் அவர்மீது ஆண்டவரின் ஆற்றல் இறங்கிய நிலையில், அவரை ஆண்டவர் தமது ஆவியினால் தூக்கிக் கொண்டு எலும்புகள் மிகுதியாய் கிடந்த பள்ளத்தாக்கில் நிறுத்தி, (எசே. 37: 1) அதனைச் சுற்றிலும் நடத்திச் சென்றார். அங்கேயிருந்த எலும்புகள் அனைத்தும் மிகவும் உலர்ந்தவைகளாய்க் காணப்பட்டன (எசே. 37: 2). இந்த உலர்ந்த எலும்புகள் அனைத்தும் செத்துப் போனவர்களின் உலர்ந்த, உயிரற்ற எலும்புகள். இந்த எலும்புகள் பாபிலோனில் சிறையிருப்பில் வேதனைப்பட்ட இஸ்ரயேலரது வாழ்வினைப் பிரதிபலிக்கிறது. இவைகளை உயிர்பெற செய்வது கடவுளின் திட்டமாயிருந்த நிலையில், அவர் எசேக்கியேலிடம் மானிடா! இந்த எலும்புகள் உயிர்பெற முடியுமா? என்று கேட்டார் (எசே. 37: 3). உயிரற்றதை உயிர்ப்பிக்க ஆண்டவரால் மட்டுமே முடியும் என்பதை இறைவாக்கினரது பதில் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது (எசே. 37: 3)

இன்று தீமைகளின் ஆதிக்கத்தினால் மானிட வாழ்வின் ஆன்மிகம் உயிரற்றதாய் உள்ளது. தவக்காலம் ஆன்மிக வாழ்வின் துளிர்காலம். கிறிஸ்துவின் சிலுவை உலர்ந்த ஆன்மிக வாழ்வினை உயிர்ப்பிக்கும் ஆற்றல் கொண்டது. இனிமேல் வாழ்வில்லை எனும் நிலையில் நம்பிக்கையிழந்து வாழ்வோர் சிலுவையண்டையில் நம்பி வந்தால் வாழ்வு உயிர்ப்பிக்கப்படும் என்பதைத் திருமறை தெளிவுப்படுத்துகிறது. உலர்ந்த, உயிரற்ற வாழ்வு உயிர்பெற்று நிலைத்து வாழ நமது சிலுவை ஆன்மிகத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

**2. உயிர்ப்பிக்கும் இறைவாக்கு** (எசே. 37: 4)

இறைவாக்கினரது இறைவாக்கு வாயிலாக மக்களது வாழ்வில் தீமைகளைச் சுட்டிக்காட்டி மனந்திரும்ப அழைப்புக் கொடுக்கும் கடவுள், இறைவாக்கின் வாயிலாக மானிட வாழ்வில் மீட்பின் நம்பிக்கையினையும் கொடுக்கிறார். உலர்ந்த, உயிரற்ற மானிட வாழ்வினை இறைவார்த்தை உயர்ப்பிக்கும் ஆற்றல் கொண்டது. ஆகவே உயிர்ப்பிக்கும் ஆற்றல் கொண்ட ஆண்டவர் இறைவாக்கினரிடம் எலும்புகளுக்கு இறைவாக்குரைக்க கட்டளையிடுகிறார் (எசே. 37: 4) உயிரோடு வாழும் மனுக்குலம் இறைவாக்குச் செவிகொடாத நிலையில், உயிரற்ற எலும்புகள் எவ்வாறு செவிகொடுக்கும்? ஆனால் ஆண்டவரின் வாக்கைக் கேட்கும் எவரும் உயிர்பெற முடியும் என்பதற்கு உயிர்பெற்ற உலர்ந்த எலும்புகள்! ஓர் அடையாளம். "உலர்ந்த எலும்புகளே! ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள்" (எசே. 37: 4) என்பது உயிர்ப்பிக்கும் ஆணடவரின் இறைவாக்கு. இவ்வாக்கு அனைவரையும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் கொண்டது.

உலர்ந்த எலும்புகளை உயிர்பெறச் செய்யும் கடவுள், உலர்ந்த எலும்புகளுக்குக் கூறும் செய்தி "நான் உங்களுக்குள் உயிர்மூச்சு புகச் செய்வேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள்" (எசே. 37: 5) என்பதாகும். உயிர்பெறும் போது உலர்ந்தவை உயிரூட்டம் பெற்று பெலப்படும். மனுக்குலத்தை மண்ணினால் உருவாக்கிய கடவுள் தமது உயிர்மூச்சினால் உயிரினைக் கொடுத்தார். சிறையிருப்பில் வேதனையுற்று, உயிரற்ற நிலையில் வாழ்ந்தவர்களுக்குத் திரும்பவும் தனது உயிர்மூச்சினைக் கொடுத்து உயிர்ப்பிக்கிறார். தவக்காலத்தில் கடவுளின் உயிர்ப்பிக்கும் இறைவார்த்தை நம்மையும் உயர்ப்பிக்க வல்லமையுடையது. இறைவார்த்தையிலிருந்து விலகி தூரம் போய் கீழ்ப்படிதலின்றி வாழ்கிறவர்கள், உயிர்ப்பிக்கும் இறைவார்த்தைக்குச் செவி கொடுக்கும்போது வாழ்வு உயிர்பெறும். கல்வாரிச் சிலுவையில் மன்னிப்பினை அனைவருக்கும் கொடுத்த ஆண்டவர் தமது பிழைகளை உணர்ந்து, இறைவார்த்தை வாழ்வில் செயல்பட ஒப்படைக்கின்றவர்களை மன்னித்து புதுவாழ்வு வழங்குகிறார்.

## 3. உயிர் பெற்ற வாழ்வு

எசேக்கியேல் இறைவாக்கினரது காட்சியில், பள்ளத்தாக்கின் அடியில் கிடந்த எலும்புகள், உயிர்ப்பிக்கும் இறைவாக்கினால் உயிரடைந்து, காலூன்றி, பெரிய படையாக நின்றது. இது சாவின் மீது கடவுள் கொள்ளும் வெற்றியான உயிர்பெற்ற வாழ்வினைத் தெளிவுப்படுத்துகின்றது. இங்கு உலர்ந்த எலும்புகள் இஸ்ரயேலின் உயிரற்ற, நம்பிக்கையற்ற உடைந்த உள்ளத்தையும், உணர்வையையும் குறிக்கின்றது. கடவுளின் ஆவியார் அவர்களுக்குப் புத்துயிர் கொடுக்கையில், அவர்கள் விடுதலைபெற்று மகிழ்ச்சியுற்று சிறப்புடன் வாழ்வர். மேலும் உயிரற்ற நிலையிலிருந்து உயிர்பெற்ற வாழ்வினைப் பெற்றதால் கடவுளே ஆண்டவர் என்பதை மறுபடியும் அறிந்து கொள்வார்கள் (எசே. 37: 13).

அதோடு, இக்காட்சி கடவுள்தரும் புதிய வாழ்வினால், சிதறி வாழும் இஸ்ரயேலர் அனைவரும் சொந்த நாட்டில் கூட்டி இணைக்கப்படுவர் என்பதையும், உலர்ந்து போனவர்கள் மேல் கடவுளின் ஆவி பொழியப்பட்டு உயிரற்ற நிலையிலிருந்து உயிர் பெறுவார்கள் என்பதையும், கடவுள் அவர்களைச் சொந்த நாட்டில் குடியமர்த்துவார் (எசே. 37: 14) என்பதையும் உணர்த்துகிறது. கடவுளின் இச்செயல் நிறைவேறும்போது, வேறு எவருமல்ல, கடவுளே இதனைச் செய்தார், உயிர்பெற்று வாழச் செய்தார் என்பது உறுதிப்படும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அதோடு, கடவுளின் வார்த்தை ஆற்றல் நிறைந்தது என்பதையும் வாழ்வளிக்கக்கூடியது என்பதையும் கடவுளின் வாக்குறுதிகளில் உண்மையோடு நிலைத்திருந்தால் வாழ்வில் உன்னத நிலையினை அடையலாம் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

தவக்காலத்தில் இறையுறவிலிருந்து விலகி, தூரம்போய் உறவில் ஒன்றாகி வாழ இயலாமல் தடுமாறும் அனைவரது வாழ்வினையும் கிறிஸ்துவின் சிலுவை உயிர்ப்பித்து மகிழ்வடையச் செய்கின்றது. இதனைத் தூய பவுலார் தெளிவுப்படுத்தும்போது இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்த ஆண்டவரின் ஆவி நம்மில் குடி கொண்டிருந்தால், கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே நம்மில் குடி கொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய நமது உடல்களையும் உயிர்பெறச் செய்வார் (உரோ. 9: 11) என்கிறார். ஆகவே இந்த தவக்காலத்தில் நம்மை உயிர்ப்பிக்கும் கல்வாரி சிலுவையினை நோக்கி பார்ப்போம். சிலுவையின் நிழலில் அடைக்கலம் புகுந்து, உயிர்பெற்று வாழ்வோம்.

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

# உண்மையான திராட்சைச்செடி நானே

## (I am the true Vine)

யோவா 15: 1- 8

"உண்மையான திராட்சச்செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்"
(யோவா. 15: 1)

யோவான் நற்செய்தியாளர் அடையாளங்கள் வாயிலாகப் பேசுவதில் சிறந்தவர். இப்பகுதியில் இயேசுவைத் திராட்சைச் செடியாகவும் தந்தையாகிய கடவுளைத் திராட்சைத் தோட்டக்காரராகவும் இயேசுவின் சீடர்களைத் திராட்சை கொடியாகவும் உருவகப்படுத்திக் காட்டுகிறார். மேலும் இயேசு தமக்கும் தந்தையாம் கடவுளுக்கும் உள்ள நெருக்கமான உறவை இப்பகுதியில் வெளிப்படுத்துகிறார். திராட்சைச் செடியும் அதின் அறுவடையும் இஸ்ரவேல் மக்களின் கலாச்சாரத்தின் அடையாளமாக இருக்கின்றது. சீடத்துவத்தைக் குறித்து விவரிக்க திராட்சைச் செடியும் கொடியும் எப்படிப் புதுப்பிக்கபடுகின்றன என்பவை பற்றி யோவா. 15: 1-8-இல் காணப்படுகின்றது. இப்பகுதி கற்றுத்தரும் சிந்தனைகளைத் தியானம் செய்யலாம்.

**1. இணைந்து வாழ்வோம்** (யோவா. 15: 4)

"நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்"

இணைந்திருத்தல் யோவான் நற்செய்தியில் கூறப்படும் மிக முக்கியமான பண்பு ஆகும். "இயேசுவோடு இணைந்திருத்தல்" அவரில் நம்பிக்கை வைத்தல் அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ளுதல் போன்ற அர்த்தங்களைக் குறிக்கிறது. இயேசு தம் மக்களோடு இணைந்திருக்கிறார் என்பது திருமறையின் வழியாக நாம் அறிந்த உண்மை. நம் ஆண்டவர் நம்மோடு இணைந்திருக்கின்ற இம்மானுவேலர் (மத்.1: 25). இதை விளக்குவதற்கு ஆண்டவர் பயன்படுத்திய உருவகம் தான் திராட்சைச் செடியும் கொடிகளும். திராட்சைச் செடியோடு இணையாத கொடிகள் பயன் தராது. திராட்சைச் கொடிகள் தானாக தண்ணீரை எடுத்துக்கொள்ள இயலாது. ஆகவே அது மிக முக்கியமான மூலப் பொருளான தண்ணீரைச் செடியோடு இணைந்து இருந்தால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். இதனைத் தம் சீடர்களுக்கு உருவகம் மூலம் இயேசு தெளிவுப்படுத்துகிறார். சீடர்கள் சுயமானவர்களாக இருந்தாலும் அவர்கள் இயேசுவோடு இணைந்திராதிருந்தால் பலன் தர இயலாது என்பதைப் போதிப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அவரின்றி வாழ்வில்லை என்பது யோவான் நற்செய்தியின் மிக முக்கியமான முழக்கம். இயேசுவில் இணைந்திருந்தால் அன்றி உங்களால் ஒன்று செய்ய முடியாது என்று விளக்கம் தருகிறது.

வாஷிங்டன் மாநிலத்தில்14,000 அடி உயரத்தில் உள்ளது மவுண்ட் ராணியர் என்ற சிகரம். 1981-ஆம் ஆண்டு ஜீலை 9-ம் நாள் ஒன்பது மாற்றுத் திறனாளிகள் பல தடைகளைத் தாண்டி வெற்றிகரமாக அச்சிகரத்தைத் தொட்டு திரும்பினார்கள். அவர்களில் ஆறு பேர் பார்வை இல்லாதவர்கள்; இரண்டு பேர் காது கேளாதவர்கள்; ஒருவர் வலிப்பு நோய் உடையவர்; மற்றொருவர் ஊனமுற்றவர்; செயற்கைக் கால் வசதியோடு சென்றவர்; சிகரத்தைத் தொட்டுத் திரும்பிய இவர்களிடம் எப்படிச் சாதிக்க முடிந்தது என்று கேட்டபோது, நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சார்ந்து இணைந்து இருந்தோம். எங்களின் இணைப்பு வெற்றியைத் தந்தது என்று பதிலுரைத்தனர். இதுபோலவே நாமும் கடவுளோடு இணைந்து வாழும்போது பல வெற்றிகளைப் பெற்று கனியுள்ள வாழ்வு வாழ்ந்திட முடியும்.

**2. இனிமையாக வாழ்வோம்** (யோவா. 15: 17)

செடியாகிய இயேசுவோடு இணைந்திருப்பது ஒரு அவசியமான தேவை. அப்படி வாழ்வதன் மூலம் நாம் பெறும் நன்மைகள் என்ன என்பதையும் அப்படி வாழாமல் நாம் பெறுகின்ற தீமைகள் என்ன என்பதையும் யோ. 15: 5-7-இல் காணலாம். கடவுளுடன் ஒன்றிணையாமல் வாழும்போது தறிக்கப்பட்ட கொடிகளைப்போல உலர்ந்து போவோம் என்றும் உலர்ந்த கொடிகள் எரிக்கப்படுவது போல தண்டனையைப் பெற்றுக் கொள்வோம் என்ற உண்மையை அறிய முடிகிறது. பொதுவாக திராட்சை ஆலையில் நடைபெறுகின்ற செயல்களைத் தான் யோவான் நற்செய்தியாளர் அடையாளமாகக் கூறுகிறார். திராட்சை ஆலையில் பழங்கள் தங்களது வடிவத்தை இழந்து பிறர் இனிமையாகப் பயன்படுத்தும் பானமாக மாறுகிறது. இனிமையான வாழ்வு பெறுதல் என்னவெனில் துன்பங்களை ஏற்பதும் சாவால்களைச் சந்திப்பதின் மூலமாய் பிறரது வாழ்வினை இனிமையானதாக மாற்றிடத் துணிவதும் எனலாம். இயேசு நாதர் தம்மை இழந்து இவ்வுலக மக்களின் இனிமையான வாழ்விற்காய் தியாகம் ஏற்றார். திராட்சை சிதைக்கப்படும்போது அது சுவைதரும் பானமாக மாறுவதுபோல இயேசுவின் உடல் சிதைக்கப்பட்டதின் மூலமாய் புது வாழ்வை நமக்குத் தரும் அடையாளமானது. கடவுளோடு இணைந்திருத்தல் என்பது அவருடைய வார்த்தைகளைத் தன்னுள் கொண்டிருத்தலையும் அவரின் விருப்பத்திற்கேற்ப வாழ்வதலையும் நினைவூட்டுகிறது. இப்படிப்பட்ட வாழ்வை நம்மில் வெளிப்படுத்தி நம் விருப்பங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்கின்ற நிறைவான வாழ்வை பெறுவோம்.

> பிறருடன் இணைந்து செயலாற்றுவதை அறிந்து கொள்வதே
> வெற்றியை உண்டாக்கும் மிக முக்கியமான மூலப்பொருள்.
> - தியோடர் ரூஸ்வெல்ட்

இத்தவக்காலம் நம்மை இறைவனோடு இணைப்பதற்காக இறைவன் நமக்குத் தந்த காலம் என்பதனை உணர்ந்து நம்மைச் சுய ஆய்வு செய்து இறைவனோடு இணைந்து இறைவன் தருகின்ற இனிமையான வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

**திரு. S. நியூபின் ஜேம்ஸ்**

# சிலுவை: மெசியா யுகத்தின் ஓர் புதிய திருக்காட்சி

## Cross: A New Vision of the Messianic Age

இச. 18: 15-22 2 கொரி. 1: 3-11

திபா. 73 லூக். 18: 35-43

“ . . . பார்வை பெறும்” (லூக்.; 18: 42).

தவக்காலங்கள் ஆன்மிக வாழ்வில் வசந்தகாலத்துக்கான ஆயத்த நாட்களாகும். இக்காலத்தில் சிலுவை தரிசனம் கண்டு அதன் பொருளுணர்ந்து புது மானுடப் படைப்பாக மாற்றம்பெற வேண்டியது இன்றியமையாதது. ஒரு காலத்தில் இழிவாகவும் கோரமாகவும் கருதப்பட்ட சிலுவை இயேசுவின் பாடுமரண உயிர்ப்புக்குப் பின் ஆன்மீக மீட்பின் சின்னமாக மாற்றம்பெற்றது. சிலுவை இறையன்பின் வெளிப்பாடாகவும், தியாகத்தின் அடையாளமாகவும், புது விடியலுக்கான தொடக்கமாகவும் பார்க்கப்படுகிறது. ஆகவேதான் தூய பவுல் தன் கடிதங்களில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை மாத்திரம் அறிந்திருக்கவும் பிரசங்கிக்கவும் விரும்புகிறேன் என்பார் (I கொரி. 1: 23, 1கொரி. 2: 2, கலா. 6: 14). கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் ஒருவர் கூறும்போது எப்போது, எங்கே ஓர் சிலுவையை ஆலயத்திலோ அல்லது வேறு இடத்திலோ நான் பார்க்கும்போது கருணை நிறைந்த ஓர் அருட்பணி இங்கே நடக்கிறது என்பதை உணருகிறேன் என்பார். ஆதிக்க சிந்தனைகள் தான் வெற்றி தரும் என்ற சித்தாந்தத்தில் உலகம் பயணிக்கும்போது, இல்லை சிலுவை ஓர் புது யுகத்துக்கான தரிசனம் என்பது வெறும் புரட்சிகரமான பார்வையல்ல, சமூக மாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வு.

**1. சிலுவை : கடினப்பாடுகள் வழியாக ஆறுதல்** (Cross: Comforts through Discomforts) :

கடவுள் எங்களுடைய இன்னல்கள் அனைத்திலும் எங்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். நாங்களோ கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க எங்களால் முடிகிறது (II கொரி. 1: 4) இயேசு தம் காலத்தில் இருந்த ரோம அரசியல் ஆதிக்கத்தின் மற்றும் யூத ஆன்மீக ஆதிக்க முகத்திரையை வலிமையற்ற சிலுவை மூலம் கிழித்துத் தொங்கவிட்டார். ஆன்மீகம் பற்றிய குறுகிய எண்ணம்

மாற்றம் பெற்று கடவுளின் உலகளாவிய முழுவாழ்வும், இறையரசும் மலர வேண்டுமென தம்மை தியாக பலியாய் கொடுத்தார். இவ் ஆற்றல் வழியாய் நாங்கள் பிறருக்கு ஆறுதல் கூற ஆற்றல் பெறுகிறோம் என்கிறார் பவுல்.

நான்சி L. ஏயிஸ்லாண்ட் (Nancy L. Eiesland 1964-2009) பிறவிக் குறைபாட்டோடு பிறந்து தன் சிறு வயது முதல் ஒரு மாற்றுத்திறனாளியானார். பல அறுவை சிகிட்சை செய்தும் பயனில்லாத நிலையில், கடவுளை நான் இருக்கிற நிலையில் எப்படி உணர்வது? அப்பழுக்கற்ற கடவுளை மாற்றுத்திறனாளியான நான் எப்படிப் புரிந்து கொள்வது என எண்ணினார். இறையியல் கற்றுப் பேராசிரியராக மாறிய நான்சி மாற்றுத் திறனாளிகள் சார்ந்த பல்வேறு கேள்விகளுக்கு விடை தேடினார். ஒருநாள் திருமறையில் உயிர்த்த இயேசுநாதர் தம் சீடர்களுக்குத் தம் உடலிலுள்ள காயங்களைக் காட்டி "உங்களுக்குச் சமாதானம்" என்று சொன்ன பகுதியை வாசித்தபோது ஒரு புது ஆற்றல் அவருக்குக் கிடைத்தது. ஆம், சிலுவையிலும் உயிர்ப்பிலும் இயேசு கிறிஸ்து ஓர் மாற்றுத்திறனுடைய கடவுளாக என் சாயலில் இருக்கிறார் என்றார். இந்த கடவுள் எனக்கும் என்னைப் போன்ற மாற்றுத் திறனாளிகளுக்கும் ஆற்றல் வழங்க முடியும் என்று "The Disabled God: Towards a Liberatory Theology of Disability என்ற இறையியல் நூலை எழுதினார். கடவுள் சிலுவை என்னும் கடினப்பாடுகளின் வழியாய் நம்மை ஆற்றல்படுத்தி ஆறுதல் தருகிறார். அவரின் தழும்புகளால் நாம் குணமாகிறோம். ஆற்றல் பெற்று பிறரை ஆற்றல்படுத்தி ஆறுதல் வழங்கி மேசியாவின் புது யுகம் படைக்கிறோம்.

**2. மேசியாவின் யுகம்: முழு வாழ்வுக்கான எதிர்நோக்கு** (Messianic Age : An Anticipation for Fullness of Life) :

தாவீது அரசனின் ஆட்சி காலம் இஸ்ரவேலின் பொற்காலம். காலங்கள் செல்லச்செல்ல பிரிவினைகளாலும், அடிமைத்தனத்தாலும் அவதியுற்ற இஸ்ரவேலர் மீண்டும் தாவீதின் ஆட்சிபோல் ஓர் அரசு அமைய மேசியா ஒருவர் வருவார் எனக் காத்திருந்தனர். லூக்.18:38-ல் "இயேசுவே தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என கூக்குரலிட்ட பார்வையற்ற ஒருவருக்குப் பார்வை கொடுத்து வாழ்வில் ஒரு மறுமீட்சியை இயேசு உறுதிசெய்தார். ஈசாயின் அடி மரம் பட்டுப்போகாது. அதிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் என்பது இயேசு தரும் முழு வாழ்வில் நிறைவுறுகிறது. இம்முழு வாழ்வு சிலுவை வழியாக நிறைவேறிற்று என்பது திருமறை கூறும் உண்மை. இயேசு, சிலுவைக்கு நேரான மீட்பின் பயணத்தில் எருசலேம் நகருக்குள் நுழையும்போது முன் நடப்பாரும் பின் நடப்பாரும் ஓசன்னா (save us) என்ற முழக்கத்தோடு ஒரு புது யுகத்தை எதிர்நோக்கினர் (மத். 21: 9) மாற்றுத்திறனுடையோரையும் புறக்கணிக்கப்பட்டோரையும் ஆலயப் பிரவேசம் செய்ததும், சுகம்

கொடுத்ததும் இயேசுவின் இறுதி நாட்களின் புரட்சிகரமான பணி மாத்திரமல்ல, மேசியாவின் புது யுகப் படைப்புக்கான ஒரு மைல்கல்லாகவும் பார்க்கப்படுகிறது. நல்ல ஆயர் இயேசு, “நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். ஆனால் திருடன் கொல்வதற்கும் அழிப்பதற்கும் வருகிறான்” என்றார்.

சிலுவை வழியாக இயேசு ஒரு புது உலகை உருவாக்கும் தரிசனத்தை இன்று திருச்சபைக்குத் தந்து அதின் வழியாக நாம் இப்புதுப்படைப்பின் தூதுவர்களாக செயலாற்ற கடவுள் அருள்தருவாராக. இத்தவக்காலங்கள் கடினப்பாடுகளினூடாய் ஆற்றலும், ஆறுதலும் பெறும் நாட்களாகவும், மேசியாவின் புது உலகின் திருக்காட்சி காணும் காலங்களாகவும் அமைவதாக. ஆமென்.

**அருள்திரு. முனைவர் O. டென்சிங்**

# நிறைவாழ்வின் அடையாளம் சிலுவை

எசே. 47: 1-12

" . . . ஏனெனில் தூயகத்திலிருந்து தண்ணீர் அவற்றிற்குப் பாய்கின்றது. அவற்றின் கனிகள் உணவாகவும், இலைகள் மருந்தாகவும் பயன்படும்." (எசே. 47: 12)

நிறைவாழ்வினை அனைவருக்கும் அருளும் கடவுள் இறைவாக்கினர் எசேக்கியேலை எருசலேம் நகரம் அழிக்கப்பட்ட பின்பு, பதினான்காம் ஆண்டு ஓர் உயர்ந்த மலையின் மீது அழைத்துச் சென்றார். வெண்கலமயமானத் தோற்றம் கொண்ட மனிதர் ஒருவர் அவர் கண்முன்பாகத் தோன்றி புதிய எருசலேம் எப்படி அமைய வேண்டுமென்பதை அவருக்குத் தெளிவுப்படுத்தினார். கடவுள் உயர்ந்த உன்னதமான இடங்களில் வாழ்கிறார் என்பது இஸ்ரயேலரது நம்பிக்கை. இதனை மீகா இறைவாக்கினர் குறிப்பிடுகையில் இறுதி நாட்களில் ஆண்டவரின் கோவில் அமைந்துள்ள மலை, மலைகளுக்கெல்லாம் உயர்ந்ததாய் நிலை நிறுத்தப்படும் (மீகா 4: 1) எனக் குறிப்பிடுகின்றார். முற்றிலும் அழிக்கப்பட்ட கோவிலும் அதனைச் சார்ந்த இடங்களும் மிகவும் சிறப்புடனும் அழகுடனும் அமைக்கப்பட்ட பின்பு ஆண்டவர் அக்கோவிலில் வாசம் பண்ண வருவார் என்பதும், கடவுளின் மாட்சி கோவிலை நிரப்பும் என்பதும் நம்பிக்கை. கடவுளின் மாட்சியின் குரலைப் பெருவெள்ளத்தின் இரைச்சலாகவும், அது கோவிலை நிரப்பியதாகவும், அது கோவிலின் கிழக்கு பகுதியிலிருந்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு, கோவிலிருந்து புறப்படும் வாழ்வு அளிக்கும் தண்ணீர் கிழக்கு வாசலின் அடியிலிருந்து தோன்றி, நீர் ஊற்றாகப் பெருக்கெடுத்துக் கெதிரோன் பள்ளத்தாக்கை நோக்கி ஓடியது. ஆண்டவர் வாசம் பண்ண வந்ததால் கோவில் ஆண்டவரின் ஆசிகள் அனைத்தும் நிறைந்த இடமானது. ஆண்டவரின் கோவிலிருந்து புறப்பட்டு வரும் நீருற்றுக் காட்சியானது, கடவுள் இஸ்ரயேலருக்கும் எல்லா மக்களுக்கும் தருகின்ற அருளையும் ஆசியினையும் விவரிக்கின்றது. கடவுளின் மாட்சியும் கடவுளின் ஆசியும் நீரோடை தரும் நிறைவான வாழ்வாகும். கிறிஸ்துவின் சிலுவை கடவுளது மாட்சியினையும் அனைவரது வாழ்வினையும் வாழச்செய்யும் நீரோடையின் நிறைவினையும் உணர்த்துகிறது. ஆகவே சிலுவையினை வாழ்வு வழங்கும் நீரோடையாகவும் நிறைவாழ்வின் அடையாளமாகவும் புரிந்து கொள்ளலாம்.

**1. ஆண்டவரது ஆசியினை அருளும் நீரோடை** (எசே. 47: 5)

கிழக்கு பகுதியை நோக்கியிருந்த (எசே. 47: 1) கோவிலிருந்து கிழக்கு நோக்கி வந்த தண்ணீர், கோவிலின் பீடத்தின் தெற்குப் பகுதியிலிருந்தும் வந்து (எசே. 47: 1), பாய்ந்து கொண்டிருந்து (எசே. 47: 2). இறைவாக்கினர் எசேக்கியேலுக்கு முன்பாக தோன்றின வெண்கலமயமானத் தோற்றம் கொண்ட மனிதர் ஓர் நூலைக் கொண்டு அளந்து கணுக்காலளவு ஆழமுள்ள தண்ணீர் வழியாக அவரை அழைத்துச் சென்றார் (எசே. 47: 3). பின்னர் அவரை முழங்காலளவு, இடுப்பளவு மற்றும் கடக்க முடியாத அளவு வரையிலும் நடத்திச் சென்றார். நீரோடை ஆறாக மாறி யாராலும் கடக்க முடியாததாய்ப் பெருக்கெடுத்து ஓடியது (எசே. 47: 5). ஆண்டவரின் ஆலயத்திலிருந்து மக்களுக்குக் கிடைக்கும் ஆசியின் நிறைவினை இது உணர்த்துகிறது. அதோடு கடவுளின் ஆசியினை பெற்று நிறைவுடன் வாழும் வாழ்வாகவும் அமைகின்றது. இதனை அரசர் தாவீது குறிப்பிடுகையில் உமது இல்லத்தின் செழுமையால் அவர்கள் நிறைவு பெறுகின்றனர். உமது பேரின்ப நீரோடையில் அவர்கள் தாகத்தைத் தணிக்கின்றீர். ஏனெனில் வாழ்வுதரும் நீரூற்று உம்மிடமே உள்ளது (திபா. 36: 8,9) எனக் குறிப்பிடுகின்றார்.

ஆண்டவரது ஆசியினையும் அவரது செயல்பாட்டினையும் சில நேரங்களில் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம்மால் புரிந்து கொள்ள இயலாதவைகளையும், அறிந்துகொள்ள முடியாதவைகளையும் கடவுள் விரும்பினால் நமக்கு அவைகளை வெளிப்படுத்துவார். ஆண்டவரின் ஆலயத்திலிருந்து புறப்பட்டு வந்த நீரோடையின் நிறைவினைப் புரிந்துகொள்ள எசேக்கியேலை அம்மனிதர் நடத்திச் சென்றார். எசேக்கியேல் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் அவரையும் ஆற்றையும் பின் தொடர்ந்துச் சென்றார். கடவுளின் ஆசியின் நிறைவினைச் சொந்தமாக்கிட நாமும் உயிருள்ள ஆறாய் அவரைப் பின்பற்றிச் செல்ல வேண்டும் என்பதை நீரோடை நமக்கு உணர்த்துகின்றது. கல்வாரி சிலுவை வாழ்வழிக்கும் நீரோடை. மானிட வாழ்வின் தாகத்தினைத் தீர்க்கவே சிலுவையில் தொங்கின ஆண்டவர் “தாகமாயிருக்கிறது” என்று கூறினார். பேரின்ப நீரோடையாம் சிலுவையின் அருகில் வருகின்றவர்களின் தாகம் தணிக்கப்படுகிறது, வாழ்வு நிறைவடைகின்றது.

**2. அனைத்துப் படைப்புகளுக்கும் வாழ்வருளும் நீரோடை** (எசே. 47: 9, 10)

எசேக்கியேல் இறைவாக்கினரது காட்சியில் அவரை வழிநடத்திச் சென்ற மனிதர், தொடர்ந்து அவரை ஆற்றின் கரைக்கு அழைத்துச் சென்றார் (எசே. 37: 6). வாழ்வு அருளும் நீரோடையின் தண்ணீர் பாய்ந்து சென்ற பகுதி முழுவதும் செழிப்படைந்தது. ஆற்றின் இரு கரையோரத்திலும் எண்ணற்ற மரங்கள்

செழித்து வளர்ந்து நின்றது (எசே. 37: 7). ஆறு பாயுமிடமெல்லாம் யாவும் உயிர்வாழும் (எசே. 37: 9) என்பதற்கேற்ப கடவுளின் அனைத்து படைப்புகளும் ஆற்றின் கரைகளில் வாழ்வுபெற்று இறைமாட்சிக்குச் சான்று பகர்ந்தது. கிழக்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்த ஆறு அராபாவில் கடலோடு கலந்தது. உப்பு தன்மை கொண்ட கடல் நீரோடு ஆற்று நீர் கலக்கையில் நல்லத் தண்ணீராக மாறியது. வாழ்வருளும் தண்ணீரினால் திரளான உயிரினங்கள் வாழ்வு பெற்றன (எசே. 47: 9). தூய்மையாக்கப்பட்ட கடலில் ஏராளமான மீன்கள் இருந்தன, மீன்களைப் பிடிக்கும் மீனவர் கடலோரமெங்கும் நின்றனர். ஏன்கேதியிலிருந்து எனக்லயிம் வரை வலைகளை விரிக்கும் அளவிற்குக் கடற்கரையில் இடம் இருந்தது, மீன்கள் பெருங்கடலின் மீன்களைப் போன்று மக்களுக்குப் பயன்தரும் நிலையில் பலவகைப்பட்டதாயிருந்தன. வாழ்வு தரும் தண்ணீரினால் நிலப்பரப்பில் நின்ற மரங்களும் கடலின் மீன்களும் வளம்பெற்று, தேவைகளுடன் வாழ்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாய் அமைந்திருந்தது.

வாழ்வு தரும் தண்ணீர் புதுவாழ்வின் அடையாளம். கடவுளின் கோவிலாகிய தூயகத்திலிருந்து புறப்பட்ட தண்ணீர் பாய்ந்து செல்லுமிடமெல்லாம் வளமாக்குவதைப் போல, நமது வாழ்விலும் கடவுளது உடனிருப்பிலிருந்து அவரது அன்பு நமக்குக் கிடைக்கின்றது. நாமும் கடவுளின் அன்பினை நமது வாழ்வில் பெற்றுக்கொண்டு, ஆவியின் கனிகளை அனுதினமும் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். கனி கொடுக்கும் வாழ்வு என்பது நமது பெருமைக்கான வாழ்வல்ல, பிறரின் வாழ்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும் நாம் பிறருக்குச்செய்யும் பயனுள்ள செயல்களாகும். இயேசு கிறிஸ்துவும் தனது திருப்பணிக் காலத்தில் இத்தகைய பணிவிடைகளை நிறைவேற்றினார். கிறிஸ்துவின் சிலுவை அவரது தன்னலமற்ற பணிவிடையின் முழுமையாகும். கடவுள் கிறிஸ்துவில் விரும்பின கனியினைச் சிலுவை வாயிலாக வெளிப்படுத்தினார். தவக்காலத்தில் நம்மிடம் கனி தேடிக் கடவுள் வரும்போது கனியற்ற பாழ் மரங்களாக நாம் வாழ்வது சரியானதல்ல. வாழ்வருளும் தண்ணீர் கடவுளின் கோவிலிருந்து புறப்பட்டு பல்வேறு உயிரினங்களை வாழச் செய்தது போல, நமது பணியும் வாழ்வும் பிறரின் வாழ்வினை மேம்படுத்துவதாக அமைதல் வேண்டும். தவக்காலத்தில் இத்தகைய வாழ்வு நம்மில் நிறைவேற சிலுவையினைக் கிட்டிச் சேருவோம்.

### 3. **ஆரோக்கியமான வாழ்வருளும் நீரோடை** (எசே. 47: 12)

கடவுளின் கோவிலிலிருந்து புறப்பட்டு கிழக்கு நோக்கிப் பாய்ந்த நீரோடையினால் நிலம் செழிப்படைந்தது. ஆனால் உவர் மற்றும் சதுப்பு நிலங்கள் வளமை பெறாதிருந்தது (எசே. 47: 11) ஆனால் வளம் பெறாத

நிலத்தையும் வளமுள்ளதாக்கி மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வினை அருளும் நிலையில் கடவுள் செயல்பட்டார். உவர்நிலமும் சதுப்புநிலமும் அனைத்து உயிரினங்களுக்கும் பயன்படும் நிலையில் சுவைதரும் உப்பை விளைவிக்கும் உப்பளங்கள் ஆயின (எசே. 47: 11). நல்ல சுவையுள்ள கனிகளைக் கொடுக்கும் மரங்களின் கனிகள் எந்த நிலையிலும் குறையாமல் நிறைவாகவே இருந்தது. ஆண்டவரின் தூயகமாகிய கோவிலிருந்து தண்ணீர் மரங்களுக்குப் பாய்வதால் அவற்றின் கனிகள் உணவாகவும், அவைகளின் இலைகள் பிணி நீக்கும் மருந்தாகவும் பயன்பட்டது. வாழ்வளிக்கும் நீரோடையினால் வாழ்வு பெற்ற மரங்கள் கடவுளின் மக்களின் வாழ்வினை நிறைவடைய செய்தது. அதாவது வாழ்வுதரும் ஆண்டவரின் கனி மரங்கள் மானிட வாழ்வின் பசியினை நீக்கி உடல் ஆரோக்கியத்தையும், சுகமான வாழ்வினையும் பிரதிபலிக்கின்றது.

ஆண்டவரின் கோவிலிருந்து புறப்பட்டு நிலத்தில் பாய்ந்து கொண்டிருக்கும் வாழ்வுதரும் நீரூற்றாகிய ஆறு பாயுமிடமெல்லாம் திரளான உயிரினங்கள் ஆரோக்கியம் பெற்று வாழ்கின்றன. அதோடு உப்பு அதிகமாயிருக்கும் சாக்கடலில் ஆறு பாய்வதால், அது இனிமையான தண்ணீராக மாறி, மானிடரின் உடலுக்கு ஆரோக்கியம் தரும் மருந்தானது (எசே. 47: 12). இறைவாக்கினர் எசேக்கியேலின் இக்காட்சி மக்களுக்கு வாழ்வையும், ஆரோக்கியத்தையும் அருளுகின்றது. சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவின் உடலிலிருந்து வெளிப்பட்ட தண்ணீரும் இரத்தமும் (யோவா. 19: 31, 37) மானிட வாழ்வினைத் தூய்மையாக்கி, ஆரோக்கியம் தரும் மருந்தாக அமைந்துள்ளது. திருவெளிப்பாட்டு நூலில் தூய யோவான் கண்ட காட்சியில் கடவுளின் அரியணையும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கும் இடத்திலிருந்து புறப்பட்டு, புதிய எருசலேம் நகரத்தின் நடுவிலும் வீதியிலும் பாயும் நதியின் இரு கரைகளிலும் பனிரெண்டு விதமான கனிகளைத் தரும் “வாழ்வுதரும் மரம்” இருந்தது. இந்த மரத்தின் கனிகள் உணவாகவும், இலைகள் ஆரோக்கியம் தருவதாகவும் இருப்பதாக வாசிக்கமுடிகின்றது (திவெ. 22: 1-3). ஆரோக்கியமான வாழ்வினை அருளும் நீரோடையாம் கல்வாரி சிலுவை, நமது வாழ்வில் புதுவாழ்வினையும், சுகமான வாழ்வினையும், சரீர, ஆன்மிக வாழ்வில் விடுதலையினையும், நல் ஆரோக்கியத்தையும் கொடுத்து நிறைவாழ்வுக்கு நேராக வழிநடத்துகிறது. நமது தவக்கால சிலுவை ஆன்மிக வாழ்வு நிலைவாழ்வுக்கு அடித்தளமாய் அமைந்திட சிலுவையோடு வாழ்வினை உரசி பார்த்து, புதுவாழ்வுக்கு நேராய் வாழஒப்படைப்போம்.

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

# உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே

## (I am the Resurrection and the Life)

யோவா 11: 17-27

"....உயிர்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்." (யோவா. 11: 25)

மரணம் என்பது மனித வாழ்வில் எவராலும் தட்டிக் கழித்துச் செல்ல முடியாத வாழ்வின் யதார்த்தம். இதை அறிந்திருக்கும் மனிதன், சாவைக் குறித்து பயம் கொள்கிறான். ஆனால் அந்த பயத்தின் நடுவிலும் அவன் சார்ந்திருக்கும் ஆன்மீக நம்பிக்கை அவனை நம்பிக்கையுடன் தன் வாழ்வில் தொடர்ந்து ஓட வைக்கின்றது. இங்கே யோவான்11:25-ல் யோவான் நற்செய்தியாளர் அழுத்தப்படுத்தும் இயேசு நாதரின் அதிகாரமுள்ள வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்குச் சாவின் மீதான பய உணர்வை அகற்றுகிறதாக மட்டுமல்ல, புதிய வாழ்வுக்கான நம்பிக்கையும் அளிக்கின்றது.

மற்ற நற்செய்தி நூல்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்; அற்புதங்களோடு ஒப்பிடுகையில், யோவான் நற்செய்தியாளர் வெளிப்படுத்தும் இயேசுவின் அற்புதங்கள், நீண்ட உரையாடலுக்குப் பின் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதனை இயேசு லாசருவை எழுப்புகிற அற்புதத்திலும் காண இயலுகிறது. இயேசுவுக்கும் - மார்த்தாளுக்கும் இடையே நடந்த நீண்ட உரையாடலை (யோவா. 11:17-27) இதற்கு உதாரணமாக கொள்ளலாம். இங்கே லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளும் இயேசுநாதரும் உரையாடிக் கொள்கிறர்கள். இந்த உரையாடல் இயல்பானது அல்ல. மாறாக தனக்கு மிகவும் அன்பான தன் ஒரே சகோதரனை இழந்து நிற்கும் ஓர் சகோதரியின் மனம் உடைந்த நிலையிலான, நம்பிக்கை சற்று குன்றிய நிலையிலான உரையாடல். இந்நிலையில் இருந்த மார்த்தாளைப் பார்த்து இயேசு நாதர் கூறுகின்றார்.... "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்". இப்படிக் கூறிவிட்டு லாசருவை உயிரோடு எழுப்புவதின் வழியாக இயேசுநாதர் சாவின் மீது தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தையும், மனிதர் எவராலும் நிறைவேற்ற முடியாத செயலைச் செய்து தாம் கடவுளின் திருக்குமாரன் என்பதையும், மூன்றாம் நாள் தாமும் உயிர்த்தெழ போவதின் (யோவான் 20-ம் அதிகாரம்)

முன்னோட்டத்தை மக்களுக்கு விசுவாச உணர்வாகக் கொடுக்கவும் இந்த வல்லமையான செயலை நிறைவேற்றுகின்றார்.

இப்பின்புலத்தோடு, இயேசு நாதருக்கும் நம்பிக்கை இழந்து நிற்கும் மார்த்தாளுக்கும் இடையேயான விசுவாச உரையாடலின் வழி மூன்று குறிப்புகள் சிந்தனைக்குத் தரப்படுகின்றன.

**1. இறைப்பாதம் தேடி ஓடிய மார்த்தா** (யோவா. 11:20)

இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் மார்த்தா அவரை எதிர்கொண்டு சென்றார். மரியாள் வீட்டில் இருந்துவிட்டார்.

இயேசு நாதர் இன்னும் லாசருவின் இல்லத்தில் வரவில்லை அவர் கிராமத்துக்கு வெளியே இருந்தார் (யோவா. 11:30)

இந்நிலையில் மார்த்தாள் முதலில் இயேசுவை நோக்கி ஓடினாள். மரியாளோ இல்லத்தில் இருந்தார் என்று யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக மார்த்தாள் Woman of Action - ஆக பிற நற்செய்தி நூல்களின் குறிப்புகளில் சுட்டிக்காட்டப்படுகின்றார்.

மரியாள் இயேசுவின் பாதத்தடியிலிருந்து கடவுளின் வார்த்தையைக் கேட்பவராகவும், மார்த்தாள் இயேசுநாதருக்காக இதர வேலைகளைக் கவனிப்பதில் சுறுசுறுப்பாக இருந்தார் (லூக். 12:39-40).

மார்த்தாளின் இந்த வேகம். சுறுசுறுப்பு வாழ்வில் தனக்கு அன்பான சகோதரனை இழந்தபோதும், இழப்பின் நடுவிலும், துக்கத்தின் நடுவிலும் நின்று விடவில்லை. இயேசுவைத் தேடி அவரை வரவேற்க அவர் கால்கள் விரைந்தன. வாழ்வில் சந்தித்த எதிர்பாராத இழப்பு மார்த்தாளின் கால்களை முடக்கிவிடவில்லை மறுபடியும் நம்பிக்கையுடன் இயேசுநாதரை நாடி ஓடவைத்தது. தன் துக்கத்தையும், வேதனைகளையும் இயேசுவிடம் வெளிப்படுத்தினார். (யோவா. 11:21).

யூத வழக்கத்தின்படி ஆறுதல் கூற அநேகர் பெத்தானியாவில் லாசருவின் சகோதரிகளைப் பார்க்க வந்திருந்தாலும், இயேசு நாதரின் வருகையும் அவர் வார்த்தைகளும், இந்தக் குடும்பத்துக்கு புது நம்பிக்கையையும், ஆறுதலையும், ஏன் தாங்கள் இழந்துபோனது (லாசரு) திரும்பக் கிடைக்க வழிவகுத்தது. இயேசுவை வாழ்வு தருபவராக ஏற்று, மார்த்தாள் போல் இயேசுவிடம் ஓடிவரும் கால்கள் இன்று இறையடியவர்களின் விசுவாச வாழ்வுக்குத் தேவை.

**2. இறைப்பற்றை வெளிப்படுத்திய மார்த்தா** (யோவா. 11:22)

"இப்போது கூட நீர் கடவுளிடம் கேட்பதை எல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்கு தெரியும்... என்றார்."

மார்த்தாள் தன் துயரத்தின் நடுவிலும் தனக்கு இருந்த இறைப்பற்றை, உறுதியான நம்பிக்கையை இயேசுவிடம் வெளிப்படுத்துகிறார்.

விசுவாச வாழ்விலிருந்து விலகிப்போகும் நிலையில் உருவாகிய தத்துவ மேதைகளின் தத்துவக் கொள்கைகள் (Ex. Gnosticisim / ஞான வாதம்) பெருகியிருந்த கி.பி. 100-ம் ஆண்டில், அதாவது இயேசுநாதரின் மரணத்திற்குப் பிற்பாடு சுமார் 70 ஆண்டுகள் கழித்து யோவான் நற்செய்தியாளர் இந்த நற்செய்தி நூலை எழுதுகிறார். நற்செய்தியாளரின் உள் நோக்கம் இயேசுநாதர் கடவுளின் மகன் என்பதையும், சாவின் மீதும் அதிகாரம் உள்ளவர் என்பதையும் உலகம் அறிய வேண்டும் என்பதே.

இங்கே இயேசுவை மேசியாவாகவும், கடவுளின் மைந்தனாகவும் ஏற்றுக்கொள்ளாத யூத பாரம்பரியத்தின் நடுவில் மார்த்தாள் தன் வார்த்தைகளின் வழி இயேசு நாதரை மேசியாவாகக் காட்டுகின்றார். யோவான் நற்செய்தி நூலின் மைய செய்தியை வெளிப்படுத்தும் கருவியாக மார்த்தாள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார் (யோவா. 20:31) என்று Teresa Okure என்ற ஓர் புதிய ஏற்பாடு விளக்கவுரை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மார்த்தாள் பற்பல வேலைகளைச் செய்வதில் அதிக கவனம் செலுத்துகிறவராக மட்டும் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், அவருக்குள்ளும் இயேசு போதித்த வார்த்தைகள் ஊடுருவப்பட்டிருக்கிறது என்பதையும், அவர் அதை இதயத்தில் பதித்திருந்தது மட்டுமல்ல, அதை அறிக்கையிடும் அளவிற்கு அவருக்கு இறைப்பற்று மிகுதியாய் இருந்தது என யோவான் நற்செய்தியாளர் சான்று பகர்கின்றார். இறைப்பற்றை வாழ்வில் வெளிப்படுத்தும், அறிக்கையிடும் அளவிலான இறை விசுவாசம் இன்று நம்மில் இருக்கின்றதா என்று இத்தவக் காலத்தில் ஆழ்ந்து சிந்திப்பது அவசியமானது.

**3. இறைமாட்சியைக் கண்ட மார்த்தா** (யோவா. 11:23)

"இயேசு அவரிடம், உன் சகோதரன் உயிர்த்தெழுவான் என்றார்"

யூதர்களின் கடைசி காலம் குறித்த நம்பிக்கைப்படி, கடைசி நாளில் ஓர் கடவுளின் தூதனானவர் வந்து கல்லறைகளைத் திறப்பார் எனவும் இறந்துபோனவர்களை வெளியே கொண்டு வருவார் எனவும் நம்பினார்கள்.

அதுமட்டுமல்ல உயிர்த்தெழுதல் மூன்று நாளுக்குள் மட்டுமே நடைபெறும் என்பது அவர்களின் அழுத்தமான நம்பிக்கை. இந்த அழுத்தமான யூத நம்பிக்கைகளை எல்லாம் மார்த்தாள் இயேசுவிடம் உரையாடும்போது வெளிப்படுத்துகின்றார் (யோவா. 11:24, 39).

"நானே உயிர்த்தெழுதல்" என்று அறுதியிட்டுக் கூறும் இயேசுநாதர் எல்லாச் சடங்காச்சாரமான யூத நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து இறை மகிமையை மார்த்தாளும் காண்கின்றார் (யோவா. 11:40). இயேசு நாதரின் மீது உறுதியான விசுவாசம் வைப்பதின் வழியாக வாழ்வின் மிகவும் கடினமான சூழல்களின் நடுவிலும், கண்ணீரின் அனுபவங்களிலும், துக்கத்தின் அனுபவங்களிலும் அவர் நம்மோடு இணைவதையும், நமக்காக வல்லமையாகச் செயல்படுவதையும் உணரவும், வெளியரங்கமாக காணவும் இயலும் என்பதை யோவான் நற்செய்தியாளர் சொல்லும் இந்நிகழ்வு விசுவாசிகளுக்கு நம்பிக்கை வழங்குகின்றது.

மார்த்தாளுக்கும் - இயேசுவுக்கும் இடையேயான உன்னதமான உரையாடல் தொடங்கிய போது விழிநீர் நிரம்பி துக்கத்தோடு தொடங்கியிருந்தாலும், அந்த ஆரோக்கியமான விசுவாச உரையாடல் பெருத்த மகிழ்ச்சியில் நிறைவு பெறுகின்றது. "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே" எனக்கூறும் இயேசு நாதரைப் பற்றிக் கொள்வதும், இன்பத்திலும், துன்பத்திலும் அவரோடுள்ள உரையாடலைத் தவிர்த்து, தள்ளிவிட்டு வாழ்வில் விலகிச் செல்லாமல், இயேசு நாதரின் பாதம் என்றும் பற்றி அனுதினமும் அவருடன் உரையாடி விசுவாச வாழ்வில் முன்னேறுதல் அவசியம்.

திரு. N.P. அலெக்ஸ்

# ஓசன்னா – கோவிலில் புதிய அரசர்

## (Hosanna : New King in the Temple)

எசா. 56: 1-8 1 கொரி. 3: 16-23

திபா. 24 மத். 21: 1-17

“ . . . இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார்; அவர் எளிமையுள்ளவர்; கழுதையின்மேல் ஏறி வருகிறார்; கழுதைக்குட்டியாகிய மறியின் மேல் அமர்ந்து வருகிறார் . . . (மத். 21: 4-5)

மார்செய்ல்ஸ் (Marseilles) என்னும் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய மக்கள் வாழ்ந்த நகரில், கயோட் (Guyot) என்னும் பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் திருமணமாகாதவர்; உணவுக்காகவோ, உடுத்தும் உடைக்காகவோ அதிகம் செலவு செய்யாதவர். அவர் மிகவும் கடினமாக உழைத்து ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்து மார்செய்ல்ஸ் நகரில் இருந்த மக்களெல்லாம் இவர் ஒரு சரியான கஞ்சப் பேர்வழி. இவருக்குத் தான் குடும்பமோ, குழந்தையோ இல்லையே, பிறகு எதற்கு இவர் இவ்வளவு பெரிய மண்டபத்தைக் கட்டிக் கொ;ணடிருக்கிறார்? என்று அவரைக் கேலி செய்தனர். சிலநேரங்களில் அந்நகரில் இருந்த இளைஞர்களில் ஒரு சிலர் அவர் மீது கல்லெறிந்து சீண்டிப்பார்த்தனர். அப்பொழுதெல்லாம் அவர் எந்தவொரு எதிர்வினையும் ஆற்றாமல் அப்படியே இருந்தார். நாள்கள் நகர்ந்தன. கயோட் தான் கட்டிக் கொண்டிருந்த மண்டபத்தை ஒருவழியாகக் கட்டி முடித்தார். மண்டபத்தைக் கட்டி முடித்த ஒரு சில நாள்களில் அவர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்து, கவனிப்பார் யாருமின்றி அப்படியே இறந்து போனார்.

கயோட் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டு அக்கம் பக்கத்து வீட்டார் அனைவரும் அவருடைய வீட்டுக்கு வந்தனர். அப்பொழுது அவருடைய இறந்த உடலுக்கு அருகில் ஓர் உயில் இருந்தது. அந்த உயிலில் மார்செய்ல்ஸ் நகர மக்களே வணக்கம். நான் உங்களிடம் ஒருசில வார்த்தைகள் பேசவேண்டும். இங்கு இருக்கிற மக்களின் வாழ்வை நான் என்னுடைய சிறுவயதிலிருந்தே கவனித்து வருகிறேன். இங்குள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் கூட இல்லை; அதனால் தான் நான் மக்கள் தங்க ஒரு மண்டபத்தைக் கட்டி எழுப்பினேன். இந்நாள் வரை நான் சேமித்த பணமெல்லாம் அருகேயுள்ள பெட்டியில் இருக்கின்றது. அதை எடுத்துக் கொண்டு உங்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவு செய்து கொள்ளுங்கள் என்று எழுதியிருந்தது.

அவர் எழுதிய உயிலைப் படித்துப் பார்த்த மக்கள் அவர் இத்தனை ஆண்டுகளும் மக்களுக்காகத் தான் வாழ்ந்திருக்கிறார். நாம்தான் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று மிகவும் வருந்தினர். மார்செய்ல்ஸ் நகர மக்களுக்காக கயோட் தன்னுடைய வாழ்வு முழுவதையும்அர்ப்பணம் செய்தது போல ஆண்டவர் இயேசு தம் வாழ்வு முழுவதையும் இவ்வுலக மக்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணம் செய்வதற்கு அடையாளமாக மேற்கொண்ட பவனி தான் குருத்தோலைப் பவனியாகும். ஆண்டவர் இயேசுவின் இந்த நெடிய பவனி பிற இனத்தவரின் கலிலேயாவில் தொடங்கி எருசலேமில் நிறைவு பெற்றது. இந்தப் பவனியில் இயேசுவோடு கலிலேயாவிலிருந்து மீட்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர் அதிகமாக கலந்துகொண்டனர் (மத். 19: 2). கலிலேயாவிலிருந்து நடந்து வந்த இயேசு கடைசி இரண்டு மைல்கள் தூரம் கழுதையின் மீது ஏறி பவனியாக வந்தார். அதாவது பெத்பகு-பெத்தானியா கிராமங்களிலிருந்து கழுதையின் மீது ஏறி ஒலிவ மலை வழியாக எருசலேம் சென்றடைந்ததாகத் திருமறை சொல்லுகிறது. பெத்தானியா என்பதற்கு “கடவுளின் கொடையின் வீடு” (The House of the Gift of God) என்பது பொருள். இயேசு கடவுளின் முழுமுதற்கொடையாக இதே உலகிற்கு அனுப்பப்பட்டார் என்பதன் அடையாளம் இது. பெத்பகு என்பதற்கு “வாயின் வீடு” (The House of the Mouth) என்பது பொருள். இது ஆண்டவர் இயேசு தம் வாய் வழி போதனை வழியாக பலரைக் கடவுளிடம் கொண்டு வந்ததன் அடையாளம் ஆகும். இயேசுவின் இந்தப் பவனி ஒலிவமலை வழியாகச் சென்றதாக திருமறை சொல்லுகிறது. யூத பாரம்பரியத்தில் ஒலிவ மரம் இரக்கத்திற்கு அடையாளமாக உள்ளது. இயேசு தம்முடைய இரக்கச் செயல்கள் வழியாக கடவுளின் மீட்பை வெளிக்காட்டியதை ஒலிவ மலை சுட்டிக்காட்டுகிறது. நிறைவாக இயேசுவின் பவனி எருசலேமை வந்தடைந்தது. இது இயேசுவின் பாடு மரணம் வழியாக கடவுளின் மீட்பை உலக மக்களுக்குக் கொண்டு வந்ததை வெளிக்காட்டுவதின் அடையாளமாக (Symbol of Mercy) உள்ளது. இப்படி இயேசு கிறிஸ்துவின் ஒட்டுமொத்த வாழ்வின் வெளிப்பாடே குருத்தோலை பவனி என்றால் அது மிகையாகாது. அரசாட்சி முறையில் பல இன்னல்களையும், அடிமைத்தனங்களையும் அனுபவித்த மக்கள் தங்களை இப்படிப்பட்ட இன்னல்களிலிருந்து விடுவிக்க புதிய அரசர் ஒருவர் தோன்றுவார் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த சூழலில் தான் ஆண்டவர் இயேசு எருசலேம் திருக்கோவிலுக்குள் நுழைந்து புதுமைகள் நிகழ்த்தினார். புதிய அரசர் நிகழ்த்திய புதுமைகள் எவைகள் என தியானிப்போம்.

### 1. இறையில்லத்தைத் தூய்மைப்படுத்திய புதிய அரசர்

“பின்பு இயேசு கோவிலுக்குள் சென்றார்; கோவிலுக்குள்ளேயே விற்பவர்கள், வாங்குபவர்கள் எல்லாரையும் துரத்தினார். நாணயம்

மாற்றுவோரின் மேசைகளையும், புறா விற்போரின் இருக்கைகளையும் கவிழ்த்துப் போட்டார்" (மத். 21: 12)

எருசலேம் திருக்கோவிலுக்குள் நுழைந்த புதிய அரசர் இயேசு முதலில் செய்த செயலே, இறையில்லத்தைத் தூய்மைப்படுத்தியது ஆகும். இறையில்லத்தை இயேசு தூய்மைப்படுத்திய நிகழ்வு நான்கு நற்செய்தி நூல்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் வழியாக நமக்குச் சொல்லப்படும் மிகப்பெரிய உண்மை என்னவெனில், இறையியில்லம் எப்போதும் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதாகும். குருத்தோலை பவனி அன்று இயேசு திருக்கோவிலுக்குள் நுழைந்த பகுதியாகக் கூறப்படுவது புறவினத்தாரின் முற்றமாகும். இப்பகுதி மக்கள் கூட்டம் நிறைந்ததாகவும், வியாபாரம் நடக்கும் இடமாகவும் இருந்தது. ஆலயத்திற்கு ஒவ்வொரு யூதரும் வரி செலுத்தவேண்டும் (மத். 17: 24).இது பழக்கத்தில் இல்லாத செக்கேல் நாணயமாகச் செலுத்தப்படவேண்டும் என்னும் காட்டாயம் இருந்தது. சாதாரண நாணயத்தைச் செக்கேலாக மாற்ற வெள்ளிக்காசுகளையும் செப்புக் காசுகளையும் அள்ளிக் கொடுக்க வேண்டியதிருந்தது. எனவே பஸ்கா திருவிழாவுக்கு வருவோரைச்சுரண்டும் தொழிலாகவே இது நடந்து வந்தது. அதுமட்டுமல்ல, காணிக்கைச் செலுத்துவது யூதர்களின் முக்கியமான கடமைகளுள் ஒன்று. முக்கியமாகச் சுத்திகரிப்புக்காக ஆலயத்திற்குச் செல்லும் தாய்மாரும், தொழுநோய் நீங்கிய பின் குணமானதற்கான அத்தாட்சிப் பெற வருபவரும் புறாக்களைக் காணிக்கையாக செலுத்தவேண்டும் (லேவி 12:8,14:22,15:14, 29). ஆலயத்திற்கு வெளியே ஒன்பது செப்புக் காசுகளுக்கு விற்ற ஒரு ஜோடிப் புறாவை, ஆலயத்திற்குள் 15 செப்புக் காசுகளுக்கு விற்றனர். அதுமட்டுமல்ல, வெளியில் வாங்கப்படும் புறாக்களை மாசுள்ளவை என ஒதுக்கி, கோயிலில் அதிக விலைக்கு விற்கப்பட்ட புறாக்களை வாங்க மக்களை வலியுறுத்தினர். இவ்வாறு ஏழைகளையும் எளியவர்களையும் சுரண்டியது தான் இயேசுவைக் கொதிப்படையச் செய்தது. எனவேதான் இயேசு ஆலயத்தை மையமாக வைத்து கோவிலுக்குள்ளே விற்பவர்களையும், வாங்குவோரையும் வெளியே விரட்டியதோடு, நாணயம் மாற்றுவோரின் மேசைகளையும் புறாவிற்போரின் இருக்கைகளையும் கவிழ்த்துப் போட்டு, இறையில்லத்தைத் தூய்மைப்படுத்தினார்.

## 2. இறையில்லத்தை இறைவேண்டலின் இல்லமாக்கிய புதிய அரசர்

"என் இல்லம், இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும் என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்குகிறீர்கள் என்று அவர்களிடம் சொன்னார்" (மத். 21: 13).

“அவர்களை நான் என் திருமலைக்கு அழைத்து வருவேன்; இறைவேண்டல் செய்யப்படும் என் இல்லத்தில் அவர்களை மகிழச் செய்வேன்; . . . ஏனெனில் என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைமன்றாட்டின் வீடு என அழைக்கப்படும்” (ஏசாயா 56:7) என்ற எசாயா இறைவாக்கினரின் இறைவாக்கின் நிறைவேறுதலே இயேசுவின் இந்த நிகழ்வு என்றால் அது மிகையாகாது. வழிபாட்டு மையம் வியாபார மையமாக மாறும்போது இறைவேண்டலுக்கான சூழலை இழப்பது உறுதி. கள்வர் குகையாக்கி விட்டீர்கள் என்பதை எரேமியா இறைவாக்கினர் எருசலேம் ஆலயத்தின் அழிவைப் பற்றிய அறிக்கையில் குறிப்பிடுகிறார் (எரேமியா 7: 11). பணத்தைத் தெய்வமாக வழிபடும் கள்வர் கூட்டத்தால் கள்வர் குகையாக மாற்றப்பட்ட ஆலயத்தில் நடைபெற்ற ஏமாற்றுச் செயல்களுக்கு எதிராக தம் அதிகாரத்தை இயேசு நிலைநாட்டினார். யூத ஜெப ஆலயங்கள் எருசலேம் திருக்கோவில் இங்கெல்லாம் அதிகாரமானது பிரதான ஆசாரியரிடமே இருந்தது. வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் ஆகியோர் இந்த அதிகார மையத்திற்குள்ளே இருந்தனர். ஆகவே ஆலயத்தின் அதிகாரம் எங்கள் கைகளிலே உள்ளது என்பது இவர்களின் புரிதல். இந்த அதிகாரத்துக்கு அப்பால் இன்னொரு அதிகாரம் உண்டோ? என்று எண்ணும் அளவுக்கு இவர்கள் அதிகாரம் செலுத்தினர். எனவே தான் இறையில்லத்தை அல்லது இறை வேண்டலின் இல்லத்தை வியாபார இல்லமாக மாற்றினர். ஆனால் ஆண்டவர் இயேசு இந்த ஆலயத்தில் தமக்கு அதிகாரம் இருப்பதை வெளிப்படுத்தும் வண்ணமாக சொல்லுகிறார், “இது என்னுடைய வீடு” (மத்.21: 13) எனவும் “இது இறைவேண்டலின் இல்லம்” (மத்.21: 13) எனவும் முழங்கியதாக திருமறைச் சொல்லுகிறது. அது மட்டுமல்ல யோவான் 2: 16-இல் ஆண்டவர் இயேசு “என் தந்தையின் இல்லத்தைச்சந்தை ஆக்காதீர்கள்” என்கிறார். ஆண்டவர் இயேசுவின் செய்திகள் நமக்கு உணர்த்தும் மாபெரும் உண்மை “இறையில்லம் இறைவேண்டலின் இல்லமே” என்பதாகும். ஏனெனில் ஆண்டவர் இயேசு தம் வாழ்வில் இறைவேண்டலுக்கு அதிக முக்கியத்துவமும் முதலிடமும் கொடுத்தார் என்பது மறுக்க முடியாத உண்மை. எடுத்துக்காட்டாக ஆண்டவர் இயேசு

* தமது திருப்பணியின் தொடக்கமான திருமுழுக்கு வேளையில் (லூக். 3: 21).
* திருப்பணிக்குச் சீடர்களைத் தெரிந்தெடுக்கும் முன் (லூக்.6: 12)
* சீடர்களுக்கு இறைவேண்டல் செய்ய கற்றுக் கொடுக்கும் முன் (லூக். 11: 1)
* வல்ல செயல்களைச் செய்யும்போது (மாற்கு6: 46; மாற்கு 1: 35, 7: 34)
* இலாசருவை உயிரோடு எழுப்பும்போது (யோவா.11: 41)
* துன்பங்களை அனுபவிக்கும்போது (லூக். 22: 39-46)
* சிலுவையில் தொங்கியபோது (லூக். 23: 46)

என எப்போதும் இறைவேண்டல் செய்பவராகவே இருந்தார். அது மட்டுமல்ல அவர் தமது போதனைகளில் கூட இறைவேண்டலின் முக்கியத்துவத்தையே அதிகமாக வெளிப்படுத்தினார். அதைக் கற்பிக்கவும் செய்தார்.

ஆண்டவர் இயேசு தமது வாழ்வை ஒரு இறைவேண்டலின் வாழ்வாகவே கடைப்பிடித்ததால், இறை இல்லமும் இறைவேண்டலின் இல்லமாகவே அமைய வேண்டும் என்கிற எண்ணத்தில் இறையில்லத்தை இறைவேண்டலின் இல்லமாக மாற்றினார்.

## 3. இறையில்லத்திற்குள் இயலாதோரை அணுகி வரச்செய்த புதிய அரசர்

“பின்பு பார்வையற்றோரும், கால் ஊனமுற்றோரும் கோவிலுக்குள் இருந்த அவரை அணுகினர். இயேசு அவர்களைக் குணமாக்கினார்” (மத். 21: 14)

வியாபாரிகள் தங்கள் கடைகளை அமைத்திருந்த வெளிமுற்றம் விருத்தசேதனம் பெறாத பிற இனத்தவர்கள் நின்று இறைவேணடல் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடம். ஆனால் அந்த நோக்கம் தடைப்பட்டதால் ஆண்டவர் கோபப்பட்டதாக மாற்கு நற்செய்தியாளர் கூறுகிறார். ஆனால் மத்தேயு நற்செய்தியாளருக்கோ வெளிமுற்றம் மட்டும் விருத்தசேதனம் பெறாதவருக்குரியது என்ற கருத்து ஏற்புடையதன்று. ஏனெனில் கோவில் தீட்டுப்பட்டு விடும் என்பதற்காக அந்த வெளிமுற்றத்திற்குள்ளும் அனுமதிக்கப்படாத உடல் ஊனமுற்றோரை, ஊனமுற்ற நிலையிலும் துணிந்து கோவிலுக்குள் அழைத்த இயேசு அவர்களை ஆதரித்து அவர்களை நலமாக்கி, அவர்களுக்கு வாழ்வு கொடுத்தார். பழைய ஏற்பாட்டின் கெடுபிடி சட்டம், புதிய ஏற்பாட்டின் இரக்கத்தால் சிதறடிக்கப்பட்டது. குறிப்பாக பார்வையிழந்தோரும், கால் ஊனமுற்றோரும் எருசலேமை விட்டு விரட்டப்பட்ட எபூசியரின் குறியீடு (2 சாமு. 5: 8) என்பதால் அவர்களைக் கோவிலுக்குள் அழைத்து ஆதரித்து குணமாக்கியது ஒரு புரட்சிகரமான அடையாளச் செயலே என்றால் அது மிகையாகாது. ஆண்டவர் இயேசு இயலாதோர் மீது அதிக அக்கறையும், கரிசனையும் உடையவர். இப்படிப்பட்டோரின் நல்வாழ்வை அதிகமாக விரும்புபவர் என்பதை மத்தேயு எட்டாம் பிரிவு விளக்கமாக நமக்கு படம் பிடித்து காட்டுகிறது. அப்படிப்பட்ட இயலாதோர் இறையில்லத்திற்குள் வந்து இறைவேணடல் செய்ய வேண்டும் என்கிற தனியாத தாகம் கொண்ட இயேசு இறையில்லத்திற்குள் இயலாதோரை ஆதரித்த புதிய அரசராகத் திகழ்கின்றார்.

ஆண்டவர் இயேசுவை அரசராகக் கண்ட மக்கள் அவருக்குப் பல பெயர்களை வைத்து அழைத்தனர். எடுத்துக்காட்டாக அமைதியின் அரசர், யூதரின் அரசர், தாவீதின் அரசர், இஸ்ரயேலின் அரசர், நீதியின் அரசர் என்பன. அதே நேரம் இயேசு பவனியாக எருசலேம் கோவிலுக்குள் சென்ற புதிய அரசர் என்ற பெயரும் பொருத்தமானதேயாகும்.

இத்தாலியைச் சேர்ந்த தியோடல்ப் என்பவர் ஒரு சிறந்த போதகர், பேராயர், புலவரும் கூட. இவர் சமுதாயச் சீர்திருத்தப்பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். சமுதாயப் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும், அமைதியை நிலைநாட்டுவதிலும் இவர் தன்னை அதிகமாக இணைத்துக் கொண்டார். சார்லி மக்னே என்ற அரசர் இவரது திறமையைப்பற்றிக் கேள்விப்பட்டு கி.பி. 781-இல் தன் அரண்மனைக்கு இவரை அழைத்துக் கௌரவித்தார். தியோடல்ப் அங்கிருந்த கல்விகற்ற அறிஞர்கள், அரசு அதிகாரிகள் அனைவரையும் தமது திறமைகளால் மகிழ்வித்தார். எனவே அரசர் அவரை ஆர்யீன்ஸ் நகரப் பேராயராக நியமித்தார். தனது பேராயத்திலுள்ள எல்லா தேவாலயங்களலும் இவர் பள்ளிக் கூடங்களை நிறுவினார். கிராமங்களிலுள்ள ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப் பள்ளிக் கூடங்களையும் நிறுவினார். இச்சூழலில் கி.பி. 814-இல் சார்லி மக்னே அரசர் மரித்தார். அவரது மகன் பக்தியுள்ள லூயிஸ் அடுத்த அரசராக பொறுப்பேற்றார். இச்சூழலில் முந்தைய அரசர் பெப்பின் அரசரின் மகன் பெர்னார்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார். இச்சூழ்ச்சியில் தியோடல்பும் உடந்தையாயிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு, பேராயர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். எதுவும் செய்ய முடியாமல் சிறையில் அடைக்கப்பட்டதியோடல்ப் தனது துயரை மறக்க பாடல்களை எழுதத் தொடங்கினார். கிபி. 820-இல் அவர் சிறையில் இருந்தபடி எழுதிய பாடல் தான் "ஓசன்னா பாலர் பாடும் ராஜாவாம் மீட்பர்க்கே" எனத் தொடங்கும் 128-ஆவது ஞானப்பாடல் ஆகும்.

தியோடல்ப் சிறையில் இருக்கும்போது லூயிஸ் அரசர் குருத்தோலை ஞாயிறன்று பவனியாகப் பல தெருக்கள் வழியாக மக்களோடு சென்றார். அந்த பவனி தியோடல்ப் இருந்த சிறை அருகிலே வரும்போது, ஏதோ ஒரு காரணத்திற்காக பவனி தடைப்பட்டு நின்றது. அப்போது அந்த சிறையிலிருந்து ஒரு அருமையான பாடல் ஒலி கேட்டது. இனிமையான அப்பாடலைக் கேட்டு, ரசித்த அரசர், "பாடியது யார்?" என வினவினார். அது சிறைக் கைதி தியோடல்ப் என அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அரசர் மனதுருசி அந்நேரமே அவரை விடுவித்து மீண்டும் பேராயராக்கியதோடு, அவர் பாடிய அந்தப்பாடலைக் குருத்தோலை ஞாயிறுதோறும் பவனிப்பாடலாக எங்கும் பாடவேண்டும் என்றும் கட்டளையிட்டாராம். ஆண்டவர் இயேசு நமக்கெல்லாம் புதிய அரசராக இருக்கும்போது அவர் வழியாக பல புதுமைகளை அனுபவிக்கமுடியும் என்பது மறுக்கவே முடியாத உண்மையாகும்.

**அருள்திரு. J. நேச பிரின்ஸ்**

# கனியை எதிர்பார்த்த இயேசு கிறிஸ்து

மத். 21:18-22

“காலையில் நகரத்திற்குத் திரும்பி வந்தபொழுது அவருக்குப் பசி உண்டாயிற்று” (மத். 21: 18)

எருசலேமுக்குக் கழுதை மீது பவனியாக வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து மீண்டும் பெத்தானியாவுக்குச் செல்கிறார். மறுநாள் காலையில் தமது சீஷர்களுடன் கால்நடையாய்ப் பெத்தானியாவை விட்டு எருசலேம் நகர் நோக்கி வரும் இயேசு கிறிஸ்து இம்முறை நியாயம் விசாரிக்கும் மேசியாவாக (Judging Messiah) வருகிறார். இந்தப் பாதை இயேசுவுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் புதிதல்ல. ஆனால் வரும் வழியில் சம்பவித்த நிகழ்வு இயேசு உட்பட அனைவருக்கும் புதுமை தான் இம்முறை வழக்கத்திற்கு மாறாக இயேசுவில் காணப்பட்ட செயல்பாடுகளைக் கண்ட சீஷர்கள் வியந்து போயினர். அனைவருக்கும் வாழ்வளிக்கும் ஆண்டவர் இம்முறை ஒரு அத்திமரத்தின் வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருகின்றார். அந்த அத்திமரத்தின் முடிவு, சீடர்களுக்கு ஆன்மீக வாழ்விற்கான பாடமாய் அமைகிறது. அந்த அத்திமரம் கற்றுதரும் வாழ்க்கைப் பாடத்தினைத் திருமறை வெளிச்சத்தில் சிந்திப்போம்.

## 1. மாய்மால மரம்

முதலாம் நூற்றாண்டு பாலஸ்தீனத்தில் அத்திமரங்கள் ஏராளம் இருந்தன. பெத்பகே, பெத்தானியா, ஒலிவமலை, எருசலேம் போன்ற இடங்களில் அத்திமரச் சோலைகள் நிறைந்து காணப்பட்டன. பெத்பகே என்றால் “அத்திப்பழவீடு” என்றும், பெத்தானியா என்றால் “ஈச்சமரவீடு” என்றும் கூறுவர். அத்திமரத்தின் நிழல் மிகவும் குளிர்ச்சியாகவும், அதின் கனிகள் மிகுந்த சுவையுடனும் காணப்படும். பாலஸ்தீனத்தில் சாலையோரம் வளர்ந்து நிற்கும் அத்திமரங்களின் கனிகள் அனைவருக்கும் பொதுவானவை. பசியோடு எருசலேம் நகர் நோக்கி பயணித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து செழிப்பான நிலையில் இருந்த ஒரு அத்திமரத்தைத் தூரத்திலிருந்து காண்கிறார். அதில் இலைகள் நிறைந்திருந்தது என்பதை மாற்கு 11:13 (அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு . . .) உறுதிப்படுத்துகிறது. இலைகள் இருப்பின் அவற்றில் நிச்சயம் கனிகள் இருக்க வேண்டும், காரணம் அத்திமரம் மற்ற மரங்களிலிருந்து வித்தியாசமானது. “அத்தி பூத்தாற் போல” என்னும் பழமொழிக்கு ஏற்ப முதலில் பச்சை அரும்புகள் தோன்றும், அது பூத்து, அதன் பின் காய் தோன்றும், காய்கள் தோன்றிய பிறகே இலைகள் தோன்றி காய்களை மூடி அதன் கனிகளைப் பாதுகாக்கும். எனவே அத்திமரத்தைக் “கனிமுந்த இலை

பிந்த” என குறிப்பிடுவது உண்டு. ஆக, இலைகள் காணப்படும் அத்திமரத்தில் கனிந்த கனிகளும் காணப்பட வேண்டும் என்பதே இயற்கை நியதி. ஆனால் இயேசு கண்ட அத்திமரம் இதற்கு எதிர்மறையாக விளங்கியது. படைப்பாளராம் கடவுளின் முன் தன் மாய்மாலத்தை வெளிப்படுத்தியது. ஒருவேளை இயேசுவுக்கு முன் அவ்வழியே பயணித்தவர்கள் அதன் கனிகளைப் பறித்திருந்தால் இயேசு நிச்சயமாய் இதனைச் சபித்திருக்க மாட்டார். இம்மரம் எதற்கும் பயனற்றுப் பிறரை ஏமாற்றி நகைப்பூட்டும் தன்மையோடு காட்சி தந்தது. அது அத்திப்பழக் காலம் இல்லை என மாற்கு நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார் (மாற்கு 11: 13). அப்படியானால் இம்மரம் மற்ற அத்திமரங்களைப் போன்று இலைகள் இன்றி தன் இயல்பு நிலையில் இருந்திருக்கவேண்டும். மாறாக அந்த மரத்தின் மாய்மாலம் அதற்கு முடிவைத் தேடித் தந்தது.

பழைய ஏற்பாட்டில் கனிந்த அத்திமரம் இஸ்ரவேல் சந்ததியை அடையாளப்படுத்துகிறது. (ஒசேயா 9:10, எசாயா 28:4). அதே சமயம் கனிதராத அத்திமரம் இஸ்ரவேல் மேல் வரப்போகும் கடவுளின் நியாயத்தீர்ப்பைக் குறிப்பிடுகிறது (எசாயா 34:4, எரே. 8:13, ஒசேயா 2:12, யோவேல் 1:7). கனியில்லாமை இஸ்ரயேல் தேசத்தில் காணப்பட்ட பாவத்தையும், எளியவர்களின் பாடுகளையும், அதிகாரிகளின் அடக்குமுறைகளையும் காட்சிப்படுத்துகிறது புதிய ஏற்பாட்டில் கனியில்லா அத்திமரம் எருசலேமின் கனியற்ற வாழ்வை எடுத்துக்காட்டுகிறது. அதிலும் குறிப்பாக எருசலேமின் மதக்குருக்களின் மாய்மால தோற்றத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவின் அற்புதச் செயல்களைக் கண்டவர்கள் கடவுளைப் போற்றுவதற்குப் பதிலாக இந்த அதிகாரம் எங்கிருந்து வந்தது? இதை எப்படிச் செய்யலாம்? என்றெல்லாம் இயேசுவுக்கு முன் கேள்விகளைத் தொடுத்தார்கள். இயேசுவால் வாழ்வு பெற்ற மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், சமூக கட்டமைப்பின் கடைநிலையில் இருந்தோருக்காக மகிழ்ச்சி கொள்ளாமல் இயேசுவில் குற்றம் காணவும், அவர் மீது குற்றம் சுமத்தவுமே வகை தேடினர். பரிசேயர், வேதபாரகர், பிரதான ஆசாரியர் போன்றவர்களின் வார்த்தைகளில் மட்டும் தான் தேவாலயம், கடவுளின் மக்கள், மீட்பு என்றிருந்தது. ஆனால் அவர்களின் செயல்கள் அவர்களின் வார்த்தைகளுக்கு முற்றிலும் புறம்பாகவே இருந்தன. திருமறையில் எந்த ஒரு இடத்திலும் இந்த கூட்டத்தார் பிறர் வாழ்வு பெற்ற போது மகிழ்ச்சி அடைந்ததாகவோ, அதற்காய்க் கடவுளுக்கு மாட்சிமை செலுத்தியதாகவோ, பிறர் வாழ்வு பெற உதவியதாகவோ, பிறரை நல்வாழ்விற்கு நேராய் வழிநடத்தியதாகவோ காணமுடியாது. அந்த அளவிற்கு அவர்கள் வாழ்வு மாய்மாலமாக இருந்தது. எனவே தான் இயேசு. இத்தகையோரை “வெள்ளை

அடிக்கப்பட்ட கல்லறை” எனக் குறிப்பிட்டார். கனியில்லா அத்திமரம், கனியில்லா எருசலேமின் வாழ்வைப் படம்பிடித்து காட்டுகிறது. “சமயம் வரும்போது சாயம் வெளுக்கும்” என்கிற கூற்றிற்கு இணங்க எருசலேம் நகரத்தாரின் மாய்மாலம் இயேசு கிறிஸ்துவின் காலத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.

## 2. பாடமாகும் மரம்

இயேசுவுக்கு ஏற்பட்ட பசியும், ஏமாற்றத்தின் விரக்தி நிலையும் உண்மையற்ற அத்திமரத்தைச் சபிக்க காரணமாயிற்று. இந்தச் சபித்தலில் கூட ஆண்டவர் அத்திமரத்திற்கு வாழ்வளித்ததாகவே பார்க்க முடிகிறது. காரணம் இந்த அத்திமரம் மாய்ந்தும், சீடர்களின் வாழ்வியல் பாடமாக மாறியது, தற்கால உலகில் நமக்கும் கூட பாடமாக நிமிர்ந்து நிற்கிறது இந்த அத்திமரம். “இனி நீ கனி கொடுக்கவேமாட்டாய்” (மத்தேயு 21:19) என்று இயேசு கூறினார். அத்திமரம் இயேசுவின் திருவார்த்தைகளின் ஆழத்தைப் புரிந்துகொண்டது. மறுநாளில் இயேசுவும் அவரது சீடர்களும் அவ்வழியாய் வரும்போது அத்திமரம் பட்டுப் போனதை காண்கிறார்கள் (மாற்கு 11:20). இதுவும் ஒருவகை கீழ்ப்படிதல் தான், படைப்பாளரின் சொல்லுக்கு அடிபணியும் நற்குணம் அத்திமரத்திற்கு இருந்தது. ஆனால் காலம் கடந்துவிட்டது. காலத்தைப் பயன்படுத்த அத்திமரம் தவறிவிட்டது. இன்னும் பல தலைமுறை வாழ்ந்து பிறருக்குப் பயன்தர வேண்டிய அத்திமரம் தன் மாய்மாலத்தால் தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொண்டது. இயேசு கிறிஸ்துவின் திருப்பணியின் தொடக்கத்தில் வனாந்தரத்தில் அவருக்கு ஏற்பட்ட பசியின் போது, சோதனைக்காரன், “நீர் இறைமகன் என்றால் இந்தக்கற்கள் அப்பமாகும்படிக் கட்டளையிடும்” என்றான் (மத்தேயு 4:3) அது அவரால் முடியும் என்பது அவனுக்கும் தெரியும், ஐந்து அப்பமும், இரண்டு மீன்களும் கொண்டு 5000-க்கும் அதிகமானோரைப் பேரை போசித்தவர் நினைத்திருந்தால் தம் பசியை ஆற்றியிருக்க முடியும். ஆனால் இயேசு கிறிஸ்து அத்திமரத்தைத் தேடி வந்ததின் நோக்கம், பிறருக்குப் பயன் இல்லாது, வீணாய்ப் பகட்டு வாழ்வு வாழ்ந்து வந்த அத்திமரம் பிறர் வாழ்வில் உபயோகமாக மாற வேண்டும் என்பதற்கே.

இவை எருசலேம் நகரத்திற்கு ஏற்படப்போகும் அழிவைச் சுட்டிக்காட்டுகிறது. அதிலும் குறிப்பாக எருசலேம் ஆலயத்தை மையப்படுத்துகிறது. அதற்குத் தேவையான அனைத்தும் செய்யப்பட்டும், அநேக வாய்ப்புகள் வழங்கப்பட்டும், அது தன்னைத் திருத்திக்கொள்ளவில்லை. விசுவாசத்தையும், நீதியையும் வெளிப்படுத்தத் தவறிய எருசலேம் குடிகளுக்கான எச்சரிப்பின் அடையாளமாக இந்தப் பட்டுப்போன அத்திமரம் விளங்குகிறது. ஆதி பெற்றோரான ஆதாமுக்கும்,

ஏவாளுக்கும் ஆடையாக அமைந்த அத்திமரத்தின் இலைகள், புதிய ஆதாமின் காலத்தில் வாழ்க்கைப் பாடமாக அமைய பெற்றிருக்கிறது. இந்த அத்திமரத்தைக் கொண்டு இயேசுவால் வயிற்றுப் பசியை ஆற்றமுடியவில்லை என்றாலும் சீடர்களின் ஆன்ம பசியை ஆற்றுகிறார். இறைவேண்டுதலுக்கான முக்கியத்துவத்தை விசுவாச வாழ்விற்கான அவசியத்தைப் பட்டுப்போன அத்திமரத்தைப் பாடமாக்கி தம் சீடர்களுக்கு அறிவுரை வழங்குகின்றார் இயேசு கிறிஸ்து. Max Anders சொல்லும் போது, "Prayer is an expression of a powerlessness and dependence on God", என்கிறார். தூரத்திலிருந்து பார்க்கும்போது இஸ்ரவேல் நாடு நல்லது போன்றும், அங்கு இலைகள் நிறைந்தும் காணப்பட்டது. அதற்குள் ஆலயமும், ஆராதனைகளும், பண்டிகைகளும் நிறைந்து இருந்தன. ஆனால் அருகில் சென்று பார்க்கும் போது நீதியின் கனியில்லை, கடவுள் மீது உண்மை பக்தியில்லை. ஆண்டவர் நம்மில் விரும்புவது "இலைகளை அல்ல", கனிகளை என்கிற சிந்தை கொண்டு, பிறர் பசியாற்ற கனி கொடுக்கும் வாழ்வு வாழ்வோம், சிலுவை வழி வாழ்வு வழங்கும் கிறிஸ்துவின் சீடர்களாகுவோம். தம்மையே தந்த தன்னிகரில்லாக் கிறிஸ்துவுக்கு நம் நற்குணங்களை நற்கனிகளாக்குவோம்.

**திரு. A. ஜெனில் தாஸ்**

# கேள்விகளுக்குப் பதிலளிக்கும் இயேசு கிறிஸ்து

மத். 21:23-27

" . . . நானும் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்" (மத். 21: 24)

சிறுவன் ஒருவன், ஒரு ஞானியினுடைய ஞானத்தைச் சோதித்திட வேண்டும் என்றும், அவரை விட தான் புத்திசாலி என்பதை நிரூபிப்பதற்காகவும் ஆவல் கொண்டான். எனவே அந்த ஞானியை அணுகி தான் அவரிடம் ஒரு கேள்வி கேட்க விருப்பம் கொள்வதாகத் தெரிவித்தான். ஞானியும் அனுமதி கொடுக்க, அந்தச் சிறுவன் ஒரு குருவியைத் தன்னுடைய கையில் வைத்துக் கொண்டு இந்த குருவி உயிருடன் இருக்கிறதா? அல்லது உயிரற்ற நிலையில் இருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்பினான். சிறுவனின் தந்திரத்தை உணர்ந்து கொண்ட அந்த ஞானி, அந்தக் குருவி உயிருடன் இருப்பதும், உயிரை இழப்பதும் உன் கையில் இருக்கிறது எனப் பதில் கூறினார். சிறுவன் அது எப்படி என வினவ, அந்த ஞானி நான் குருவி உயிருடன் இருக்கிறது என்று கூறினால் நீ அந்தக் குருவியை நசுக்கியே கொன்று விடுவாய், அது மரணித்திருக்கிறது என்று கூறினால் நீ உன் கைகளைத் திறந்து அது பறந்து செல்ல விடுவாய் என்று ஞானமாய் விவரித்து பதிலுரைத்தார். அதே போல தன்னைச் சூழ்ச்சிக்கு நேராக தள்ள நினைக்கும் கூட்டத்திடம் இயேசு ஞானமாக பதிலுரைக்கிறார்.

கேள்விக்களுக்கான பதில்கள் பலவிதங்களில் வெளிப்படுத்தப்படும். ஒரு வார்த்தை, பெரிய உரை, சில வேளைகளில் ஒரு பார்வை, புன்னகை, கண்ணீர் போன்ற சில செயல்கள் கூட பதிலை வெளிப்படுத்தும். இயேசு கிறிஸ்துவும் தமக்கு முன்பாக வைக்கப்பட்ட கேள்விகளுக்குப் பல நிலைகளில் பதிலை வெளிப்படுத்தியுள்ளார். நிலைவாழ்வு, வரி செலுத்துதல், உயிர்த்தெழுதல் போன்ற பல முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார். அந்த வரிசையில் இந்த பகுதியில் தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு எதிர் கேள்வி வழி பதிலை அளித்துள்ளதை நாம் கண்டு கொள்ள முடியும்.

இயேசு கிறிஸ்துவின் பதில் அளிக்கும் சாதுரியத்தை அவருடைய சிறு பருவம் முதலே நாம் அறிந்துகொள்ள முடியும் லூக்கா 2:47-ன் வழி நாம் பார்க்கும் போது "...அவருடைய புரிந்துகொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப்போயினர்." என்று தேவாலயத்தில் ஆண்டவர் இயேசு போதகர்களோடு உரையாடி செயல்பட்ட விதத்தைக் கொண்டு அறிந்து

கொள்கிறோம். அந்த வரிசையிலே இங்கு இயேசு கிறிஸ்து அவர்களுக்கு அளித்த பதில், அவர் எழுப்பிய கேள்வி இந்த மனிதர்களுக்கு மலைப்பையும், திகிலையும் ஏற்படுத்தியது.

### 1. மறுமொழியாகக் கேள்வி

தம்மிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு ஆண்டவர் இயேசு பதிலளிக்காமல் இல்லை. இந்த உரையாடலில் இயேசு சற்று வித்தியாசமான முறையைக் கையாளுகிறார். தம்மைச் சிக்கலில் சிக்க வைக்க வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் கேள்வி எழுப்பியவர்களிடம் மறுமொழியாக ஒரு கேள்வியை எழுப்புகிறார்.

கேள்வியை எழுப்பியவர்களிடமே மறு கேள்வி கேட்பதென்பது அக்காலத்திலே யூத ரபிகள் மத்தியில் காணப்பட்ட ஒரு பழக்கம். அதனுடைய நோக்கம், தெளிவு ஏற்படுத்திட வேண்டும், கேள்வி கேட்போரிடமிருந்தே காணப்பட்ட விடையை வெளிகொணர்ந்திட வேண்டும் என்கிற எண்ணம்.

இயேசு கிறிஸ்து யார்? அவர் என்ன அதிகாரத்தினால் இதைச் செய்கிறார்? என்று கேள்வி கேட்டவர்கள் அவரைக் குறித்து தெளிவாக அறிந்து வைத்திருக்க வாய்ப்பிருந்தது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து தாம் யார் என்பதனையும், தமக்கு எங்கு இருந்து அதிகாரம் வருகிறது என்பதனையும் இதற்கு முன்பு எடுத்துரைத்துள்ளார். மத்தேயு 9-ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள படி, முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்திய இயேசு தமக்கு முன்பாக கேள்வி வருமுன்னே தம்மை மானிட மகனாக வெளிப்படுத்தி, தமக்கு அதிகாரம் உண்டென்பதை எடுத்துக் கூறுகிறார். “மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” (மத். 9:6) என்றார்.

இயேசுவைக் குற்றப்படுத்திட வேண்டும் என்ற ஒற்றை நோக்கோடு, தந்திரமாக அவர்கள் இக்கேள்வியைக் கேட்டபடியால், இயேசு கிறிஸ்துவும் சாதுர்யமான மறுமொழியாக “யோவானுக்கு, திருமுழுக்கு அளிக்கும் அதிகாரம் எங்கிருந்து வந்தது, விண்ணகத்திலிருந்தா? மனிதரிடமிருந்தா?” என்று கேட்டார். (மத். 21:25) பதில் கூற முடியாது என்றல்ல, நான் எழுப்பும் கேள்விக்கு நீங்கள் கூறும் பதில் விடையாகும் என்பதே. சில வேளைகளில் இதே போன்று நாம் எழுப்பும் சரியான கேள்விகள் பதிலையும், தெளிவையும் பெற்றுத் தரும்.

### 2. மறைமுகமான பதில்

இப்பகுதியில் இயேசு கிறிஸ்து தம்மிடம் கேள்வி கேட்டவர்களுக்குப் பதிலளிக்காமல், மடைமாற்றம் செய்தார் எனச் சொல்லி அவரைக் குற்றப்படுத்த

முடியாது. ஏனென்றால் இங்கே கேட்கப்பட்ட கேள்விக்கு இயேசு மறுமொழியாகக் கேள்வி கேட்டிருந்தாலும் அதன் பின்னால் அவர் கேள்விக்குப் பதிலுரைக்கவே விழைகிறார். யோவானுக்கு, திருமுழுக்கு அளிக்கும் அதிகாரம் எங்கிருந்து வந்தது? விண்ணகத்திலிருந்தா? மனிதர்களிடமிருந்தா? என்ற கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லும் நிலையில், திருமுழுக்கு யோவான் வழியிலே, அவர் ஆயத்தப்படுத்திய வழியிலே தாம் வந்ததை வெளிப்படுத்தவே இயேசு அவ்வாறு ஒரு கேள்வியை எழுப்புகிறார்.

இயேசுவுக்கும் திருமுழுக்கு யோவானுக்கும் உரிய தொடர்பு நிலையை நாம் மத்தேயு 3-ம் அதிகாரத்திலே திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் யோவானின் வார்த்தைகளின் வழி அறிந்துகொள்ளலாம். எனக்குப் பின் ஒருவர் வருகிறார். அவர் என்னைவிட வலிமை மிக்கவர் என்று இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்கிறார்.

இங்குத் திருமுழுக்கு யோவானை அனுப்பியவர், அதிகாரம் கொடுத்தவர் தம்மையும் அனுப்பி, தமக்கும் அதிகாரம் தந்திருக்கிறார் என்பதை முன்னிறுத்த இயேசு விழைகிறார். அதற்காகவே அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பியவர்களுக்கு மறைமுகமாக மற்றொரு கேள்வியின் வழி பதிலுரைக்கிறார்.

“பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப் போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள்.” (மத். 10:16-17) என்று தம்மவர்களுக்குப் போதித்தது போலவே ஆண்டவர் இயேசு கிறிஸ்து செய்து காண்பித்தார். அந்த நிலையிலே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிக் கவனமாக வாழ அழைக்கப்படுகிறோம்.

இன்றைய உலகிலும் நம்மை விரும்பாதவர்கள் நம்மை வீழ்த்த நினைக்கும் போதும், நம்மைக் குற்றப்படுத்த முயலும் போதும், நாம் அவைகளைக் கண்டு பயந்து, ஓடி, ஒழியாது, இறைஞானம் பெற்று அவர்களை நம்முடைய பேச்சு, செயல் போன்றவற்றால் கவனமாகக் கையாள அழைக்கப்படுகிறோம்.

### 3. மறுக்கப்பட்ட பதில்

பல நிலைகளில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்த இயேசு இந்தச் சம்பவத்தின் இறுதியில் “நானும் உங்களுக்குக் கூறமாட்டேன்” என்று சரியான பதிலை அவர்களுக்குக் கூற மறுக்கிறார். பதில் தெரியாது என்பதோ பதில் கூறக்கூடாது என்பதோ இயேசுவின் நோக்கமல்ல. வஞ்சக எண்ணத்தோடு பதில் எதிர்பார்த்தவர்களிடம் இருந்து தம்மைத் தற்காத்து கொள்வதற்காகவே அவ்வாறு செயல்படுகிறார்.

இயேசு கைது செய்யப்பட்டுத் தலைமைச் சங்கத்தின் முன்பாக நிற்கும் போது இந்த மக்களின் மனநிலையை எடுத்து கூறும் போது "நான் உங்களிடம் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள், நான் உங்களிடம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டீர்கள்" (லூக். 22:67, 68) என அவர்களைக் குறித்தான தெளிவான புரிந்துகொள்ளுதலை வெளிப்படுத்துகிறார்.

இப்படிப்பட்ட கடினமான சூழல்களை, பிரச்சனைகளை தவிர்க்கவே, தன் மீது இந்த குற்றப்பழி சுமத்தப்படுவதைத் தவிர்க்கவே இந்த பகுதியில் இயேசு மறுமொழியாக கேள்வி கேட்பதையும், மறைமுகமாக பதில் கூறுவதையும், பதிலைக் கூற மறுப்பதையும் கண்டுகொள்ளமுடியும். இந்த இடத்தில் பதில் கூற மறுத்ததினால் அதே வேளையில் அவர்களால் அவரைக் குற்றப்படுத்தவோ, தண்டனைக்குட்படுத்தவோ முடியாமல் போனது.

ஞானமாகவும், கவனமாகவும் செயல்பட்டதின் நிமித்தம் அந்த வேளையில் இயேசு தம்மைத் தற்காத்துக் கொண்டார். "Even a fish can avoid problems if it keeps its mouth shut" என்று ஒரு பழமொழி கூறப்படுகிறது. அதாவது மீனைப் பிடிப்பதற்கென்று தூண்டில் போடப்பட்ட நிலையில், மீனானது தனது ஆசையை அல்லது தேவையைத் தூண்டும் உணவை தவிர்க்க எண்ணம் கொண்டு தனது வாயைத் திறவாமல் மூடிக்கொண்டால், அது பிரச்சனையைத் தவிர்த்துக் கொள்ளும், வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ளும். அதே போல நம் முன்பாக, நம்மை பிரச்சனைகளில் சிக்க வைத்து, நம்மை ஆழ்த்திவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு மனிதர்கள் செயல்படும் போது, நம்முடைய வார்த்தைகளை அடக்கி அவற்றினின்று நம்மைத் தற்காத்துக் கொள்வது சிறப்பு.

கற்றுக்கொள்ள விரும்பி உண்மையான கேள்வி கேட்டவர்களுக்குப் போதனைகளின் வழி பதிலளித்தார்.

தங்களுடைய குற்றங்களை, தங்களுடைய நிலைப்பாட்டை மறைத்து, தங்களை நீதிமான்களாக அடையாளப்படுத்தி, ஆண்டவரைக் குற்றப்படுத்த வேண்டும் என்கிற ஒரே சீரிய எண்ணத்தோடு கேள்வி கேட்டவர்களுக்குத் தம்முடைய கேள்வியினாலேயே பதில் கொடுக்கிறார்.

இத்தனை ஆண்டு காலம் நாம் இறையன்பின் ஆழத்தினையும், வல்லமையும் அறிந்தவர்களாக இருந்தாலும், எத்தனையோ தருணங்களில், வாழ்வின் விளிம்பு நிலைகளில் ஆண்டவரது அன்பை உணர்ந்திருந்தாலும் பல நேரங்களில் நம்பிக்கையற்றவர்களாக ஆண்டவர் மீது விசனம் நிறைந்த கேள்விகளை வீசி எறிவோமானால், நம்மை மீட்டெடுக்க தம்மை

வெறுமையாக்கி சிலுவையில் தம் ஜீவனையும் விட்ட இயேசு கிறிஸ்து நம்மைப் பார்த்து எழுப்பும் கேள்வி உனக்காக நான் மரித்தேனே, உன் ஆக்கினைகளை நான் ஏற்றுக்கொண்டேனே, உன் பாவம் கழுவப்படும்படி என் இரத்தத்தைச் சிந்தினேனே, என் அன்பில் நிலைத்திருக்கிறாயா? என்ற கேள்வியை எழுப்புகிறார். நாம் என்ன செய்யப் போகிறோம். அவரின் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க கூடிய வகையில் நம்முடைய செயல்பாடுகள் இருக்கும் என்று சொன்னால், நமக்குப் பதிலளிக்கும் ஆற்றல் மிகு ஆண்டவராக அவர் செயல்படுவார்.

தூய வாரத்தில் வைக்கப்பட்டிருக்கும் நாம், நம்முடைய செய்கைகளையெல்லாம் நியாயப்படுத்தி ஆண்டவரே நீர் எனக்கு என்ன செய்தீர்? எனக்கு ஏன் இந்த பாடுகள்? என்னை ஏன் நீர் காப்பாற்றவில்லை? விடுவிக்கவில்லை? இந்த உலகில் ஏன் இத்தனை அநீதிகள்? எனக் கேள்வி கணைகளைத் தொடுப்பதை விடுத்து, ஆண்டவரிடத்தில் நம்மைத் தாழ்த்தி இரக்கத்தைக் கேட்போமா?

தம் குற்றப்பலிகளை மூடிமறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது : அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார் (நீமொ. 28:13) என்கிற நிலையில் நம் குற்றங்களை ஆண்டவருடைய சமூகத்தில் மனத்தாழ்மையாய் அறிக்கை செய்து, மன்னிப்பைப் பெற்று, தூய வாழ்வு வாழ முற்படுவோம்.

**திரு. A. கிளாட்ஸ்டன் ரூப ராஜ்**

# நற்செயலை அங்கீகரிக்கும் கிறிஸ்து

மத். 26: 6-13

" . . . அவர் எனக்குச் செய்தது முறையான செயலே" (மத். 26: 10).

நற்செயல்கள் செய்தும் பாராட்டப்படாமல் அங்கீகரிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுபவர்கள் உண்டு. இயேசு கிறிஸ்து செல்லும் இடமெங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார். (திப. 10: 38) ஆனால் இயேசு கிறிஸ்துவை சீஷரும் பரிசேயரும், பிரதான ஆசாரியரும், வேதபாரகளும் பெருவாரியான யூதரும் புரிந்து கொள்ளவில்லை. அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் உணவருந்துவதென்னவென்று கேட்டார்கள் (மாற்கு 2: 16) ஆண்டவர் நற்செயல் செய்கிறவர். நற்செயலை மக்களிடம் எதிர்பார்க்கிறவர் நற்செயலை மற்றவர்கள் அங்கீகரிக்காவிட்டாலும் அவர் அங்கீகரிக்கிறவர்.

யூத வழக்கப்படி குழந்தைகளும் பெண்களும் புறக்கணிக்கப்பட்டவர்கள். இயேசுவின் காலத்தில் யூதர்கள் பெண்களைத் தாழ்வாக மதித்தார்கள். சிறுவர்களையும் பெண்களையும் ஏற்பதிலும், அவர்களை மதிப்பதிலும் அவர்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதிலும் முன்னுரிமை வழக்கப்படவில்லை. ஆனால் இயேசு சிறுவர்களை அங்கீகரிக்கிறார் (மத். 19:14). இன்றைய திருமறைப் பகுதியில் பெண் ஒருவர் இயேசுவுக்கு நறுமண தைலம் பூசி நற்செயல் செய்த நிகழ்வு நான்கு நற்செய்தி நூல்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது (மத். 26: 6-13, மாற்கு 14: 3-9, லூக். 7: 36-50, யோ. 12: 1-8). இயேசு பெத்தானியாவிலே தொழுநோயாளியாயிருந்து சுகம் பெற்ற பரிசேயராகிய சீமோன் வீட்டில் உணவருந்த பந்தியில் அமர்ந்திருந்தபோது ஒரு பெண் நறுமணத்தைலம் கொண்ட படிகச்சிமிழுடன் அவரிடம் வந்து தைலத்தை அவர் தலையிலே ஊற்றினார். இதைக்கண்ட சீடர்கள், இந்த தைலத்தை இப்படி வீணாக்குவதேன்? இதை நல்ல விலைக்கு விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே? என்று சொல்லி அவரது செயலை அங்கீகரிக்கவில்லை. ஆனால் இயேசு இது முறையான செயலே என்று சொல்லி அந்தப் பெண்ணிற்கும் அங்கீகாரம் அளிக்கிறார். அவரது நற்செயல் எப்படிப்பட்டது? ஏன் அங்கீகாரம்? என்பதைத் தியானிப்போம்.

**1. விலையேறப் பெற்றவைகளினால் நற்செயல்** (மத். 26: 9)

சீஷர்கள் இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள். மாற்கு நற்செய்தி நூலில் இதை முந்நூறு

பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு பணம் என்பது ஒரு வேலைக்காரரின் ஒருநாள் கூலி ஆகும். இந்த தைலத்தின் மதிப்பு ஒருவரின் ஓராண்டு கூலிக்குச் சமம். கிட்டத்தட்ட ஒருவருட உழைப்பின் பலனை ஆண்டவருக்குக் கொடுக்கிறாள். அந்தத் தைலம் நளதம் என்னும் தைலம் என்றும் இலாமிச்சை நறுமணத் தைலம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மிகவும் உயர் குலத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே இந்த விலை உயர்ந்த பொருட்களை வைத்திருப்பார்கள். பண்டைய காலங்களில் எண்ணெயும் நறுமணத்தைலமும் புட்டியில் அடைத்து முத்திரையிடப்பட்டு மூடப்பட்டிருக்கும். எனவே அதன் கழுத்துப்பாகத்தை உடைத்து மட்டுமே அதைத் திறக்க முடியும். இங்கு இலாமிச்சை அல்லது நளதம் என்னும் தைலத்தைவிட தைலம் வைக்கப்பட்டிருந்த வெள்ளைக்கல்பரணி விலை உயர்ந்தது. தனக்குப் போகத் தான் தானம் என்பார்கள். இப்பெண் விலை உயர்ந்த பரணியைத் தனக்காக வைத்திராமல் அதை உடைத்து ஊற்றினாள். பரிமளத் தைலம் அவள் சொத்து. அந்த் தைலம் கலப்பற்றது. விலையேறப்பெற்றது. விலையேறப்பெற்றவைகளால் நற்செயல் செய்தார். இயேசு கிறிஸ்து அச்செயலை அங்கீகரித்தார். நாம் நம் வாழ்வின் விலையேறப் பெற்றவைகளினால் ஆண்டவருக்கு நற்செயல் செய்வோம்.

**2. விலையேறப் பெற்றவருக்கு நற்செயல்** (மத். 26: 10, 11)

இயேசுவைக் குறித்து பேதுரு தனது நிருபத்தில் அவர் விலையேறப்பெற்ற ஜீவனுள்ள கல் (1 பேதுரு 2: 4) என்றும் விலையேறப் பெற்றவர் (1 பேதுரு 2: 7) என்றும் கூறுகிறார். 1 பேதுரு 1: 19-ல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே என்கிறார்.

சமயத்தலைவர்கள் மட்டுமல்லாமல் இயேசுவின் சீடர்களும்கூட அவரைச் சாதாரண மனிதராகவே ஏற்றுக்கொண்டார்கள். எல்லாரும் இயேசுவின் தலையில் ஊற்றப்பட்ட தைலத்தின் மதிப்பைச் சிந்தித்தார்கள். உயர்ந்த விலைக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள். சீடர்கள் இந்த வீண் செலவு என்னத்திற்கு? என்று சொல்லி முகம் சுளித்தார்கள், கோபப்பட்டார்கள், முறுமுறுத்தார்கள். தொல்லை கொடுத்தார்கள். ஆனால் ஏன்? எதற்காக? யாருக்கு? எந்த நோக்கத்தில் அந்த செயல் நிறைவேற்றப்பட்டது என்பதை உணராதிருந்தார்கள். ஆனால் இயேசுவை இறைமகனாக ஏற்றுக்கொண்ட அந்தப் பெண் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்கு முன்பாக அந்த நறுமண தைலம் விலைமதிப்புடையதல்ல என உணர்ந்தார். சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த தன்னை விலையெறப் பெற்றவளாய் மாற்றிவிட்ட விலையேறப் பெற்ற இயேசுவுக்கு நற்செயல் புரிந்தாள். பாவியான பெண் என்று முத்திரையிடப்பட்டு அங்கீகாரம்

இழந்த பெண் "என்னிடத்தில் மிகவும் அன்பு கூர்ந்தாளே" என்று இயேசுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்கிறாள். ரத்தினங்கள், வெண்கற்பாளங்கள், கோமேதக கற்கள், ஞானம், பொன், வெள்ளி, நறுமணத் தைலம் இவைகள் விலையேறப்பெற்றவைகள். இவைகளைக் காட்டிலும் விலையேறப்பெற்றவர் நம் ஆண்டவர். இதை உணர்ந்து அவருக்குப் பணி செய்வோம்.

**3.விலையேறப்பெற்ற நற்செயல்** (மத். 26: 12, 13)

அபிஷேகம் செய்வது என்பது ஒரு புனிதமான அடையாளச் செயல். ஒருவர் மீது எண்ணெய் அல்லது நறுமணத் தைலம் ஊற்றுவது அருட்பொழிவு என்று அழைக்கப்பட்டது. ஒருவரை நல்லடக்கம் செய்வது மிக முக்கியமானது. இறந்து போனவர்களின் உடல் கெட்டுப்போகாமல் பாதுகாக்கும்படி எண்ணெய் அல்லது நறுமணப் பொருட்களை உடலில் பூசுவார்கள் (மாற்கு 16: 1, 2) (லூக். 24: 1). தமது உடலை அடக்கம் செய்வதற்கு ஆயத்தமாகவும், தாம் கடவுளால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதை நினைப்பூட்டும்படியாகவும் இந்தப் பெண் நறுமணத் தைலத்தை தன் உடல் மீது ஊற்றினார் என்று இயேசு சொன்னார். "இயேசுவே மேசியா" என வெளிப்படுத்தி விலையேறப்பெற்ற நற்செயலை செய்தார். ஆகவே இயேசு, உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்த விலையேறப்பெற்ற நற்செயலும் எடுத்துக்கூறப்படும். இவரும் நினைவு கூரப்படுவார் என்றார்.

பவுல் எபேசியரிடத்திலே, "நற்செயல் செய்வதற்காகவே நாம் கிறிஸ்து இயசேுவுக்குள் படைக்கப்பட்டு கடவுளுடைய செய்கையாயிருக்கிறோம்" என்கிறார் (எபே.2: 10). சோர்ந்து போகாமல் நற்செயல்களைச் செய்வோருக்குக் கடவுள் நித்திய ஜீவனை அளிப்பார் (ரோமர் 2: 7). நற்செயல் செய்பவர்கள் நித்திய ஜீவனையும் அடைவார்கள் (மத். 25: 31-46). மனுஷர் உங்கள் நற்செயல்களைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தவேண்டும் என்றார் இயேசு கிறிஸ்து (மத். 5:16). கொலோ. 1: 10-ல் கனிகளைத் தரும் சகலவித நற்செயல்களையும் செய்யவேணடும் என்று சொல்லப்பட்டுள்ளது.

காய்க்கின்ற மரம்தான் கல்லடிபடும் என்பது பழமொழி. நற்செயல் செய்ய முற்படும்போது அதற்கு எதிர்ப்புகளும் தடைகளும் ஏற்படுவது இயல்பு. தடைகளைத் தாண்டி விலையேறப்பெற்றவைகளினால் விலையேறப் பெற்ற ஆண்டவருக்கு விலையேறப்பெற்ற செயலைக் கைம்மாறு கருதாமல் செய்வோம். நல்மனதோடு செய்யும் நற்செயல்கள் கடவுளால் அங்கீகரிக்கப்படும் என்று பணி செய்வோம். நம் நற்செயல்களால் நற்செய்தி சொல்லுவோம். ஆமென்.

**திரு. S. லெனின்**

# நன்றித் திருவிருந்து: இயேசுவை நினைவுகூர்தல்

## Eucharist : The Re-membering Jesus

| | |
|---|---|
| வி.ப. 12:1-17 | 1 கொரி. 11:23-34 |
| திபா. 116 | மத். 26:17-30 |

"………. என் நினைவாகச் செய்யுங்கள் என்றார்" (I கொரி. 11:24)

பல நூற்றாண்டுகளாகக் கோடிக்கணக்கான கிறிஸ்தவ மக்களின் வாழ்வோடும் வழிபாட்டோடும் இணைந்து இரண்டறக் கலந்திருப்பது ஆலயங்களில் நடைபெறும் நற்கருணைத் தொழுகை. நற்கருணைத் தொழுகையின் அடிப்படை விவிலியப் பின்னணியமாயிருப்பது வியாகுல வியாழன் இரவு நடைபெற்ற புதுமையான இயேசுவின் இறுதி இரவு விருந்தாகும். இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் நடந்த விடுதலையை நினைவு கூர்ந்து, இயேசு உருவாக்கிய இறுதி இராவிருந்து. பாஸ்காவின் பரிணாம வளர்ச்சி எனக் கூறுவதை விட பரிணாமத் தொடர்ச்சி எனக் கூறுவது பொருத்தமானது. இவ்வாறு இயேசுவின் இராவிருந்து, ஒரு இன மக்களின் விடுதலை வரலாறாகக் கொண்டாடப்பட்ட பாஸ்காவை உலக மானிடர் அனைவரின் கொண்டாட்டமாக மாற்றியமைத்தது. உலக மானிடர் அனைவரையும் ஒருடலாய் ஒருயிராய் இணைத்து நோக்கும் இயேசுவின் இறுதி இராவிருந்து வெளிப்படுத்தும் உன்னத உண்மைகளை விவிலிய வழி நின்று தியானிப்போம்.

### 1. தியாக வாழ்வை நினைவு கூருங்கள் (மத் 26 : 26)

இன்றைய நற்செய்திப் பகுதி (மத். 26;17-30) முழுமையும் படிக்கும் போது, யூத பின்னணியங்களோடு கூடிய பாஸ்கா விருந்தில் இயேசு ஆர்வம் காட்டவில்லை என்பதைக் காண முடிகிறது. மாறாக பாஸ்கா விருந்திற்கு தம்முடைய வாழ்வு சார்ந்த புது அர்த்தத்தையும் புது விளக்கத்தையும் தருகிறார். இயேசுவின் பாஸ்கா விருந்தில் "அப்பம்" பிட்கப்படுகிற இயேசுவின் உடலாகவும், "இரசம்" சிந்தப்படவிருந்த இயேசுவின் இரத்தமாகவும் விளக்குகிறார். பாஸ்கா பண்டிகைக்கான இவ்விளக்கம் வார்த்தை சார்ந்த விளக்கம் என்பதை விட, இயேசுவின் வாழ்வு சார்ந்த விளக்கம் எனக் கூறலாம். இயேசு இவ்வுலகில் பணி செய்த காலங்களில் தம்மையே மக்களுக்கு வழங்கியதையும் சிலுவையில் தமது உடலையும் உதிரத்தையும் தியாக

பலியாகக் கொடுத்ததையும் இயேசுவின் இறுதி இரா விருந்து அடையாளமாகக் காண்பிக்கிறது. ஆகவே நற்கருணையில் பங்கு பெறுகிற நாம் பிறர் வாழ்வுக்காக தியாகம் செய்து பணி செய்ய அழைக்கப்படுகிறோம்.

இயேசுவின் இராவிருந்து நற்கருணையை முழுமையாகப் புரிந்து கொண்டு செயல்பட்டவர் அன்னைத் தெரசா அம்மையார் என்பதை அவர்களுடைய தியாகத்தின் பணி வாழ்வு வழியாக அறிந்து கொள்ளலாம். அவர்கள் ஒரு முறை இரயில் பயணம் மேற்கொண்ட போது சேரிகளில் துன்புறும் முதியவர்கள் மற்றும் நோயுற்றவர்களிடம் காயப்பட்ட இயேசுவைத் தரிசித்தார். மடங்களில் முடங்கியிருக்கும் பக்தி வாழ்வை விட மாடங்களில் சென்று தியாகப் பணி செய்வதே இயேசுவின் ஆன்மீகம் என உணர்ந்து கொண்டார். ஆடம்பரங்களைத் துறந்து கன்னி மடத்திற்கு வந்தது முதல் துறவு நிலை கன்னி மடத்தையும் துறந்து வீதியில் பணியாற்றியது, பிறர் வாழ்வுக்காய் பிட்கப்பட்ட இயேசுவின் உடலை நினைவுபடுத்துகிறது. (என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்! )

**2. தூய வாழ்வை நினைவு கூருங்கள்** (மத். 26: 28)

பழைய ஏற்பாட்டு பாஸ்கா மரபுகளின்படி (வி.ப. 12: 1-17) இயேசுவின் இறுதி இரா விருந்து ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தாலும், கசப்பான கீரை, பழுதற்ற ஆட்டுக்குட்டியின் இறைச்சி, புளிப்பற்ற அப்பம் ஆகியவற்றைப் பகிரும் நிகழ்வுகள் இயேசுவின் பாஸ்கா விருந்தில் குறிப்பிடப்படவில்லை. யூத பாஸ்கா விருந்தில் யூதாசின் பாவத்தை ஆண்டவர் உணர்த்துகிறார். தொடக்க கால திருச்சபையில் நற்கருணை இயேசுவோடும் ஏனைய இறைமக்களோடும் உள்ள உறவை வெளிப்படுத்தும் அடையாளமாகக் கருதப்பட்டது. இந்த நட்புக்கு நற்கருணையில் பங்கேற்கும் யூதாசின் காட்டிக் கொடுக்கும் தீய எண்ணம் தடையாக இருந்தது. தமிழ் அற நூல் திருக்குறள் நட்பைப் பற்றிக் கூறும் போது

உடுக்கை இழந்தவர் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள் எண் 788) எனக் கூறுகிறது.

ஒருவர் உடுத்தியிருக்கும் துண்டு அவிழ்ந்தால் எவ்வளவு விரைவாகச் சென்று அவன் கரம் அத்துண்டை அவிழாமல் திரும்ப உடுத்துமோ அவ்வளவு வேகமாக பிறருக்குத் துன்பம் வரும்போது தூக்கி விட வேண்டும் என விளக்குகிறது.

இயேசுவுக்கு அரசியல் ஆன்மீக தலைவர்களால் தீமை வரும் போது அவரை நட்புறவுடன் காப்பாற்ற முயற்சிப்பது யூதாசின் கடமை. ஆனால் காப்பாற்ற முயலாமல் காட்டிக் கொடுக்க முற்பட்டான். இயேசு எதிர் நோக்கும் இறையரசு சமூகத்தை உறவாக்க பாவம் தடையாக இருக்கிறது. ஆகவே தான்

இறுதி இராவிருந்தின் முதல் பகுதியில் யூதாசின் பாவம் சுட்டிக் காட்டப்படுகிறது. தூய உள்ளத்தோராய் நற்கருணையில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படுகிறது. தூய பவுலடியாரும் கொரிந்து சபைக்குக் கடிதம் எழுதும் போது தூய உள்ளமே நற்கருணையில் பங்கேற்பதற்கு நம்மை தகுதிப் படுத்துகிறது எனக் கூறுகிறார். ஆகவே எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால் அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராக குற்றம் புரிகிறார் (1 கொரி. 11: 27). இவ்வாறு இயேசுவின் இறுதி இராவிருந்து பாரம்பரிய பாஸ்காவிற்கு மாற்றாக புதிய தகவுகளை உலக மானிடர்களுக்கு வெளிப்படுத்துகிறது.

இயேசுவின் இராவிருந்தின் தொடர்ச்சியாக ஆலயங்களில் நடக்கும் நற்கருணை தொழுகையில் கலந்துகொண்டு இயேசுவின் உடலும் உதிரமுமான அப்பம் இரசம் ஆகியவற்றை உட்கொள்ளுகிறவர்களாகிய நாம் தூய வாழ்விற்கும், தியாக வாழ்விற்கும் அர்ப்பணம் செய்வோமாக. இத்தகைய மதிப்பீடுகளோடு இயேசு எதிர்நோக்கும் இறையரசு சமூகங்களை உருவாக்குவோம். தூய வாழ்வு வாழவும் தியாக வாழ்வு வாழவும் தூய ஆவியர் துணை நின்று வழி நடத்துவாராக.

அருள்திரு. **K.G. மோகன்**

## 29.03.2024

# நியாய விசாரணைக்குட்படுத்தப்பட்ட இயேசு

லூக்கா 22: 63 - 23: 25

"......நான் உங்களுக்கு முன்பாக விசாரித்த போது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை..... அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை. மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லை (லூக். 23: 14, 15)

கெத்செமனே தோட்டத்தில் சீடர்களுடன் இருந்த போது யூதாஸ் முத்தத்தினால் காட்டி கொடுக்க, போர்வீரர்கள் அவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட உடனே இயேசு கொலை செய்யப்படவில்லை. அவரை நியாய விசாரணைக்கு உட்படுத்தி, குற்றவாளி எனத் தீர்ப்பு செய்து, இயேசுவைக் கொலை செய்தது சரியே என உலகுக்குகாட்ட விரும்பினர். அதற்காக அவர் விசாரணைக்காக பல இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

### 1. சனகரீம் சங்கத்திற்கு முன் (மத சம்மந்த விசாரணை)

(யோவா. 18: 19-24) (மத். 26: 57-68)

சனகரீம் சங்கம் மத சம்மந்த விசாரணைக்காக யூதரால் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவர் பிரதான ஆசாரியன். இதில் உறுப்பினராக சதுசேயர், பரிசேயர் 71 பேர் உண்டு. அப்போதைய பிரதான ஆசாரியன் காய்பா. இச்சங்கம் நியாயப் பிரமாணம் மீறுதல், தேவதூஷணம், கள்ள தீர்க்கதரிசனம் உரைத்தல் போன்றவற்றை விசாரித்து தண்டனை வழங்கியது. போர்வீரர்களைக் கொண்டு குற்றவாளிகளைப் பிடித்து விசாரிக்கவும் அதிகாரம் உண்டு. ஆனால் மரண தண்டனை நிறைவேற்ற அதிகாரம் இல்லை. இச்சங்கம் இரவில் கூட்ட கூடாது என்பது நியதி. ஆனால் கைதுசெய்யப்பட்ட அன்று இரவே சட்டவிரோதமாக கூடியது. விரோதிகளான சதுசேயர், பரிசேயர் இயேசுவைக் கொலைச்செய்ய கூட்டு சேர்த்தனர். பிரதான ஆசாரியன், ஆலோசனை சங்கத்தார். சாட்சிகள் தேடியும் கிடைக்கவில்லை. சிலர் தேவாலாயத்தை இடித்துக் கைவேலையின்றி வேறொன்றை 3 நாளில் கட்டுவேன் என்றார் என்றனர். இது பொருந்தவில்லை இறுதியில் பிரதான ஆசாரின் "நீ கடவுளின் மகனாகிய மெசியாவா? எனக் கேட்க, இயேசு "ஆம்" என்ற உடனே அவன் தன் மேலுடையைக் கிழித்துக் கொண்டு இவன் கடவுளைப் பழித்துரைத்தான். இன்னும் சான்று தேவையா? இவன் மரணத்திற்கு பாத்திரவான் என்றான். ஜனங்கள் இயேசுவை துப்பவும், குட்டவும், அடிக்கவும் தொடங்கினர்" (மத். 26: 63).

## 2. பிலாத்துவுக்கு முன் (தேச சம்மந்தமான விசாரணை)

(யோவா. 18: 28- 40)

யூத ஆலோசனை சங்கத்திற்கு மரண தண்டனை அளிக்க அதிகாரம் இல்லை. மரண தீர்ப்பு வழங்கும் அதிகாரம் தேசாதிபதிக்கு மட்டுமே உண்டு. (யோவா. 18: 31) அப்போதைய தேசாதிபதி பிலாத்து . இவன் சிசேரியாவில் தங்குவான். பண்டிகை காலத்தில் யூதர் கலகம் செய்யாமலிருக்க எருசலேமில் வந்து தங்குவான். பிலாத்துவிடம் இயேசுவுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் கூறினர்;

1) நாட்டில் கலகம் உண்டாக்க முயன்ற

2) இராயனுக்கு வரி கொடுக்க வேண்டாம் என்றான்

3) தன்னை அசரர் என்று கூறினான்.

முதல் இரு குற்றச்சாட்டுகளை பிலாத்து ஏற்கவில்லை. விசாரிக்கவும் இல்லை. தன்னை அரசர் என்றதை விசாரிக்க "நீர் சொல்கிறபடி நான் அரசர் தான் ஆனால் என் அரசு இவ்வுலகத்துக்குரியதல்ல" என்றார். (யோவா. 18: 33-37) (அதாவது யூதருடைய கருத்துப்படி தான் மேசியாவாகிய அரசர், ரோம அரசுக்கு அரசர் அல்ல என்பது பொருள்). பிலாத்து இயேசு குற்றமற்றவர் என உணர்ந்து, விடுதலை செய்ய முயன்றான். ஆனால் விடுதலை செய்தால் யூதர் ரோம ராயனுக்குப் பிலாத்துவைக் குறித்து புகார் கூறி அவன் தவறுகள் கண்டுபிடித்து, பதவி போகும் என பயந்தான். எனவே விசாரணையில் கலிலேயர் என அறிந்ததால் கலிலேயரை ஆளும் ஏரோதுவிடம் இயேசுவை அனுப்பினான்.

## 3. ஏரோதுவின் முன் இயேசு (லூக். 23: 5-12)

இயேசு ஏரோது முன் நிறுத்தப்பட்டார். ஏரோது அப்போது எருசலேமில் தான் இருந்தான். இயேசுவைப் பற்றியும் செய்தி அறிந்திருந்தான். இயேசுவைப் பார்க்கவும் விரும்பியிருந்தான். (லூக். 9: 7-10; 23: 10) இயேசுவிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டது. மவுனமாய் நின்றார். யாதொரு குற்றமும் காணாநிலையில் இயேசுவை இகழ்ந்து ஏளனம் செய்து பளபளப்பான ஆடையை அவருக்கு உடுத்தி, திரும்பவும் பிலாத்துவிடம் அனுப்பினான். அதுவரை பகைவராயிருந்த பிலாத்துவும் - ஏரோதும் நண்பராயினர் (லூக். 23: 12).

## 4. மறுபடியும் பிலாத்துவின் முன் இயேசு : (லூக். 23: 13-25) (மத். 27: 17)

பிலாத்து முன் இயேசு மீண்டும் விசாரிக்கப்பட்டார். யூதரையும் பிரியபடுத்தி இயேசுவையும் விடுதலையாக்க விரும்பினான். பண்டிகைதோறும்

ஒருவரை விடுதலை செய்யவேண்டும் அதன்படி இயேசுவை விடுதலை செய்வேன் என்றான். மக்கள் 'இவனை அகற்றும், பரபாசை விடுதலையாக்கும், இவனைச் சிலுவையில் அறையும்' எனக் கூக்குரல் இட்டனர் (லூக். 23: 17-23). பின்பு பிலாத்து இயேசுவைத் தண்டித்து விடுதலையாக்குவேன் எனக்கூறி, இயேசுவை கசையால் அடித்து, முள்முடி சூட்டி, செந்நிற மேலுடை அணிவித்து, 'இதோ இந்த மனிதன்' என்றார் (யோவா. 19: 1-5). பிலாத்து நடுவர் இருக்கையின் மீது அமர்ந்திருந்தபோது அவருடைய மனைவி ஆள் அனுப்பி 'இந்த நேர்மையாளரின் வழக்கில் நீர் தலையிட வேண்டாம்' என்றாள் (மத். 27: 19). பிலாத்து ஒரு பக்கம் 'இயேசு' மறுபுறம் 'பதவி'? 'ஜனங்கள்' 'சிலுவையில் அறையும்' என்றனர். பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்பு கொடுத்துக் கை கழுவினான். (மத். 27: 24-26) இயேசுவை 'மண்டையோட்டு இடம்' என்று பொருள்படும். 'கொல்கொதா' என்ற இடத்தில் இரு கள்வர் நடுவில் சிலுவையில் அறைந்தனர்.

நியாய விசாரணைக்கு இயேசு உட்படுத்தப்பட்டபோது நீதி நியாயம் நசுக்கப்பட்டு அநீதி தலை தூக்கியது.

* ஆன்மீகவாதிகள் (சனகரீம் சங்கம்) விசாரணையில் நியதிகள் மீறப்பட்டது அநீதி செய்ய தவறானச் சாட்சி தேடினர். நீதிபரரை கொலைச் செய்ய ஆர்வமாய், விரைவாய் செயல்பட்டனர்.

* ஆட்சி செய்தவர்கள் தாங்கள் செய்வது அநீதி என அறிந்தும், உணர்த்தப்பட்டும் அறியாதவர்கள் போல நடந்து கொண்டு தங்கள் பதவியை காப்பாற்றி மற்றவரை திருப்திப்படுத்தி அநீதியான தீர்ப்பு தந்தனர்.

* இவைகளின் மத்தியில் இயேசு கிறிஸ்து அமைதி காத்து, விசாரணைக்கு ஒத்துழைத்து, சிலுவை மரணத்தை ஏற்க ஆயத்தமானார். உலகை மீட்க ஆவல் கொண்டார். அதற்காக எந்த தியாகத்தையும் செய்ய முன் வந்தார்.

* இன்றைய காலகட்டத்திலும் எங்கெல்லாம் நியதிகள் மீறப்படுகின்றதோ, அறிந்தும் அநீதியான தீர்ப்புகள் வழங்கப்படுகிறதோ அங்கு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததை போன்ற நிகழ்வுகள் அரங்கேறுகிறது. அங்கெல்லாம் 'நீ துன்பபடுத்தும் கிறிஸ்து நானே' என்ற குரல் ஒலிக்கிறது. இத்தகையோர் நவீன காலத்தின் காய்பாவாக, பிலாத்துவாக, ஏரோதுவாக வலம் வருகின்றனர்.

**அருள்திரு. T. டேவிட் கிளேட்சன்**

# சிலுவை : இறப்பின் இறப்பு

## Cross : Death of Death

எண். 21: 1-9 1 கொரி. 15: 50-58

திபா. 22 மத். 27: 1-56

. . . சாவு முற்றிலும் ஒழிந்தது வெற்றி கிடைத்தது (1 கொரி. 15: 54)

**முகவுரை**

சிலுவை என்ற வார்த்தை கிரேக்கத்தில் 'staurous' என்றும், லத்தீனில் 'crux' என்றும் குறிப்பிடப்படுகிறது. இதன் பொருள் "துன்பத்திற்குரிய கழுமரம்" என்பதாகும். "மரத்தில் தொங்கவிடப்பட்டவன் கடவுளால் சபிக்கப்பட்டவன்" என்கிறது இணைச்சட்டநூல் (இச. 21: 23) அன்று அவமானத்தின் சின்னமாக பிரதிபலிக்கப்பட்ட சிலுவை, இன்று இயேசுவின் பாடுகளால் மீட்பின் சின்னமாயிற்று. இந்தச் சிலுவையில் தான் நம் மாபரன் இயேசு விலைமதிப்பில்லா தமது திருரத்தத்தைச் சிந்தி நம்மை மீட்டெடுத்தார். ஆக, கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரலாற்றையே மாற்றியது.

"என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார். என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார். தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றி விடுவார்" (ஏசாயா 25: 8) என்கின்றார் இறைவாக்கினர் எசாயா. இந்த இறைவார்த்தையின் நிறைவேறுதலைக் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் சிலுவை - இறப்பை ஜெயமாக மாற்றியது என்பதனைச் சாவு முற்றிலும் ஒழிந்தது, வெற்றி கிடைத்தது (I கொரி. 15: 54) எனக் குறிப்பிடுகின்றார் பவுலடிகளார். இறப்பின் இறப்பு என்பது புதுவாழ்வின் தொடக்கம். இந்தப் புதுவாழ்வை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனைக் குறித்து இன்றைய திருவிவிலிய பாடங்கள் கற்றுத் தரும் உண்மைகளை தியானம் செய்யலாம்.

**1. இறப்பால்** (மத். 27: 1-56)

யாருடைய இறப்பால்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இறப்பால். ஆம், கிறிஸ்துவின் இறப்பால், மானுடம் உயிர்பெற்றது. மீட்பைப் பெற்றது. இறப்பு என்ற வார்த்தை வாழ்விற்கு ஒரு மாபெரும் தடை. மிகவும் அஞ்சப்படுகிற வார்த்தை இது மனிதனின் பாவத்தின் விளைவு. "நீ மண்ணுக்குத் திரும்புவாய்" என்ற ஆண்டவருடைய வார்த்தை, பாவத்தில் விழுந்த மனிதனுடைய சரீரத்திற்கு, மரணம் நியமிக்கப்பட்டது. இவ்வாறு தொடக்க

மனிதனின் கீழ்ப்படியாமையினால், மானுடம் வீழ்ச்சி பெற்றது. இதனை ஜென்ம பாவம் என்று கிறிஸ்தவ இறையியல் கற்பிக்கிறது. ஆதாமினால் பாவம் பிறந்தது. பாவத்தினால் சாவு நுழைந்தது. “ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போல கிறிஸ்துவை முன்னிடடு அனைவரும் உயிர் பெறுவர்” (I கொரிந்தியர் 15: 22). ஆம்! இறுதி ஆதாமாகிய கிறிஸ்துவினால், பாவத்திலிருந்தும், சாவிலிருந்தும் விடுதலை பெறுகின்றோம். குற்றம் புரிவோர் தண்டனை பெறுவர் எனும் நிலைமாறி, கிறிஸ்துவின் இறப்பால், மன்னிப்பு வாழ்வு நிச்சயம் எனும் மகிழ்வு நிலை ஏற்படுகிறது.

முதலாம் ஏற்பாட்டில், இஸ்ரவேலரின் வாழ்வில் மீட்புக்குப் பரிகாரமாக, பஸ்கா ஆடு அடிக்கப்பட்டது போல, இரண்டாம் ஏற்பாட்டில், முழு உலக மக்களுக்கும் வாழ்வு கொடுக்கும்படியாக கடவுள் தமது சொந்த மகனையே பழுதற்ற ஆட்டுக்குட்டியாய் அனுப்பினார். இயேசுவின் சிலுவை மரணத்தினால், சாவு முற்றிலும் ஒழிக்கப்பட்டு, புது வாழ்வு கிடைத்தது. எனவே கிறிஸ்துவின் இறப்பால் நாம் இறப்பின் இறப்பாகிய மீட்பினைப் பெறுகின்றோம்.

**2. மாற்றுருப் பெற்றால்** (1 கொரி. 15: 50-58)

இத்திருவிவிலியப் பகுதியில், பவுல் குறிப்பிடுவது, ஊனியல்புடைய மனிதர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைய முடியாது, காரணம் என்னவெனில், இறப்பின் இறப்பாகிய மீட்பினைப் பெற்றுக்கொண்டு, கடவுளுடைய ராஜ்யத்தில் நுழைய வேண்டுமென்றால், முதலில் நாம் மாற்றுருப் பெற வேண்டும். அவ்வாறு மாற்றுரு பெறுவதற்கு முதல்படி, ஆவியானவரால் மறுபடியும் பிறப்பதாகும் (யோவா. 3: 3, 5, 6) கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கும் அன்பு, உணர்ச்சிவசமான மனம் நெகிழ்ந்து பரவசப் பாடலைப் பாடிடும் அன்பு அல்ல. ஆகவே, இறப்பின் இறப்பாகிய மீட்பினைப் பெற்றுக் கொள்ள மறுபடி பிறத்தல் என்பது மிகவும் அவசியமானது ஆகும்.

எண். 21: 1-9-ன் படி பாலை நிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல, மானிட மகனும் பிதாவினால் உயர்த்தப்பட்டார் (யோவா. 3: 14, 1 5) இறைமகன் இயேசுவின்மேல் நம்பிக்கை கொண்டு மாற்றுருப் பெற்று அவரை நோக்கிப் பார்க்கும் அனைவரும் வாழ்வு பெறுவர். விசுவாசிப்பதற்கு கட்டணம் தேவையில்லை. எத்தனை பேர் மாற்றுருப் பெற்று நோக்கிப்பார்த்தாலும், அத்தனை பேருக்கும் அவர் புது வாழ்வு கொடுக்கிறார்.

இறுதியாக, “மாற்றுருப் பெறுவதற்கான நம்முடைய பிரயாசம் வீணாகாது, ஏனெனில் நமது பிரயாசங்கள் யாவும் முடிவுற்ற பின் நாம் நித்தியமான பலனைப் பெற்றுக் கொள்வோம்” என்று குறிப்பிடுகின்றார் பவுலடிகளார். ஆகவே நாம் சோர்ந்து போகாமல் இருப்போமாக. துன்பம்,

துயரம், உபத்திரவங்களால் மனம் தளராமல் அவருக்குள் நிலைத்து நிற்போமாக. கிறிஸ்து தம்முடைய உதிரத்தைச் சிந்தி, மரணத்தை வென்று, ஜெயமாக்கினார். நமக்கான மாற்றுமருந்து ஜீவ நீருற்றாகிய இயேசுவிடம் உள்ளது. நாம் அதைப் பருகுவதால், மரணம், வாழ்வு மற்றும் சாவாமை ஆகியவற்றின் விதிகள் மாறுகின்றன. கிறிஸ்துவுக்குள் நமக்குப் பரலோக நம்பிக்கையும், அவருடனே கூட அர்த்தமுள்ள நித்திய ஜீவ சந்தோஷமும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கடவுள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே, நமக்கு இறப்பின் இறப்பாகிய மீட்பினைக் கொடுத்து நிலை வாழ்வுக்கு நம்மை வழிநடத்துகின்றார்.

**முடிவுரை**

சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை. நிலத்திலே விதைக்கப்பட்ட விதை மடிந்து போவதில்லை. மாறாக, அது மறுபடியும் முளைத்து கனி கொடுக்கிறது. அதுபோல, கிறிஸ்துவின் சிலுவைச் சாவு மடிந்து போவதற்காக அல்ல, மாறாக மானுடம் மீட்படைவதற்காகவே. ஆம்! சிலுவை இறப்பிற்கு இறப்பைக் கொடுக்கின்றது. இதன் வழியாக ஆண்டவர் வழங்குகின்ற புதுவாழ்வையும் நிலைவாழ்வையும் பெற்று மகிழ்வுடன் வாழ்வோம்!

**அருள்திரு.T. லிபின் ராஜ்**

# சிலுவைத் திருமொழிகள்

# மன்னிப்பு தரும் இயேசு

லூக். 23 : 32-34

" . . . தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" லூக்கா 23: 34

கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே யுலகினுக்கோரி ரட்சகரென் றெடுத்துரைக்கும்
வேண்டுமோ யினிச்சான்று இதைவிடுத்து வேறொன்றே

கிருத்துவக் கம்பர் என்று அழைக்கப்படும் எச்.ஏ. கிருட்டிண பிள்ளை இயற்றிய இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலின் பாடல் வரிகள் இவை.

ஓர் ஓய்வு நாள் ஆராதனையில் போதகர் ஒருவர் மன்னிப்பின் மகத்துவத்தைக் குறித்தும், நாம் பிறரை மன்னிக்காவிட்டால் நிறை வாழ்விற்குத் தகுதியற்றவர்களாய் மாறிவிடுவோம் என்றும் அருளுரையாற்றிக் கொண்டிருந்தார். இதனை வயது முதிர்ந்த முதியவர் ஒருவர் தன் இல்லத்திலிருந்து ஒலிபெருக்கியின் வாயிலாக கேட்டுக் கொண்டிருந்தார். ஆராதனை முடிந்த பின் அந்த முதியவர் தன் மகனிடம், மகனே, போதகரை அப்பா காண விரும்புகிறார் என்று கூறி வீட்டிற்கு அழைத்து வரச் சொன்னார். வீட்டிற்கு வந்த போதகரிடம், ஐயா நான் உங்கள் செய்தியைக் கேட்டேன். தாங்கள் கூறியது போல் ஒருவேளை நான் என் பக்கத்து வீட்டுக்காரரை மன்னிக்காவிட்டால் நிச்சயமாக நான் நிறைவாழ்வுக்குச் செல்ல முடியாதா? வேறு வழியே இல்லையா? என்று கேட்டார். அதற்கு அந்தப் போதகர் இல்லை ஐயா நீங்கள் நிச்சயமாக முழு மனதுடன் மன்னித்தால் மாத்திரமே நிறை வாழ்விற்குச் செல்ல முடியும் என்று கூறினார். உடனே அந்த முதியவர் சரி ஐயா நான் என் பக்கத்து வீட்டுக்காரரை முழு மனதுடன் மன்னிக்கிறேன். நான் அவரை மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் எனக்காக ஜெபியுங்கள் என்று சொல்ல அந்த போதகர் ஜெபித்து கடந்து சென்றார். போதகர் சென்ற பின் அந்த முதியவர் தன் மகனை அழைத்து, மகனே போதகர் கூறியதுபோல் நான் முழு மனதுடன் அந்த பக்கத்து வீட்டுக்காரரை மன்னித்து விட்டேன். ஆனால் நீ அந்தப் பக்கத்து வீட்டுக்காரரை மன்னித்து விடாதே. அவர் செய்த செயல்களை மறந்துவிடாதே என்று கூறினார். இன்று பல நேரங்களில் நம் மன்னிப்பின் செயல்கள் இப்படித்தான் காணப்படுகின்றன.

"தண்டனை கொடுப்பதற்குத் தாமதம் செய், ஆனால் மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே" என்று அன்னைத் தெரசா கூறுகிறார்.

சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்ட இயேசு தம் முதல் வார்த்தையாய் வெளிப்படுத்திய மன்னிப்பின் நறுமணத்தைத் திருமறை சார்ந்து தியானிப்போம்.

### 1. அன்பின் அடையாளமாய் மலர்ந்த மன்னிப்பு

பஸ்கா விருந்திற்குப் பின் கெத்சமனே தோட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் இரவு முழுவதும் அலைக்கழிக்கப்பட்டு போகிற வருகிற வழிகளில் போர்ச் சேவகர்களால் அடிக்கப்பட்டு ஏற்பட்ட காயங்களின் வேதனை ஒருபுறம். முள்முடி சூட்டப்பட்டு மூன்றாணிகளில் சிலுவையில் அறையப்பட்டதினால் ஏற்பட்ட காயங்களின் வேதனை மறுபுறம். இந்த வேதனைகளின் உச்சத்தில் இயேசு உதிர்த்த அன்பின் வார்த்தை தான், "பிதாவே இவர்களுக்கு மன்னியும்." பொதுவாக சிலுவையில் அறையப்படுபவர்கள் தங்கள் வேதனையின் உச்சத்தில் தீய, தகாத வார்த்தைகளை, சாபமான வார்த்தைகளைப் பேசுவார்கள். ஆனால் இயேசு அதற்கு நேர் எதிர் மறையாக தம்முடைய முதல் வார்த்தையாக அன்பின் வார்த்தையை உதிர்த்தார்.

சந்தன மரம் தன்னை வெட்டுபவர்களுக்கு நல்ல நறுமணத்தைக் கொடுக்கும். பனைமரம் தன்னை அறுத்து காயப்படுத்துகிறவர்களுக்கு நல்ல சுவையான சத்தான பதநீரைக் கொடுக்கும். பூ தன்னைப் பிழிபவருக்கு நறுமணமிக்க திரவியத்தைக் கொடுக்கும். அதேபோல் இயேசுவும் தாங்கொணா வேதனையின் மத்தியில் மன்னிப்பின் நறுமணத்தை அன்பின் அடையாளமாய் உதிர்த்தார்.

இயேசு யாரை மன்னித்தார்? பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக என்ற கட்டளையை மீறி பொய் சாட்சிகளை ஏற்படுத்திய யூத தலைவர்கள், மரிக்கும் சூழல் வந்தாலும் மறுதலிக்க மாட்டேன் என்று வாக்கு கொடுத்து மூன்று முறை மறுதலித்த பேதுரு, ரபீ என்று முத்தமிட்டு காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத், ஆட்சியாளர்களிடம் நற்பெயர் வாங்க அநீதியான செயல்களைச் செய்த போர் சேவகர்கள், இயேசுவுக்குச் சிவப்பு அங்கியை உடுத்தி அவமானப்படுத்திய ஏரோது, பதவி ஆசையினால் தன் கரங்களைக் கழுவி இயேசுவைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்த பிலாத்து, இயேசுவைச் சிலுவையில் அறையும் என கூக்குரல் எழுப்பிய ஜனங்கள், என இயேசு எல்லாரையும் மன்னித்தார். இயேசு நிபந்தனையற்ற நிரந்தரமான மன்னிப்பை யாவருக்கும் கொடுத்தார். ஆண்டவரே, என் சகோதர சகோதரிகள் குற்றம் செய்தால் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று கேட்ட பேதுருவிடம் (மத்தேயு 18:21, 22) கணக்கு வைத்து அல்ல கணக்கில்லாமல் மன்னிக்க கூறிய இயேசு சிலுவையில் அன்பின் அடையாளமாய் மன்னிப்பைக் கொடுத்தார்.

## 2. போதனையின் அடையாளமாய் மலர்ந்த மன்னிப்பு

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

- திருக்குறள் (வினைத்திட்பம் 664)

போதனை செய்வது எல்லாருக்கும். எளிது ஆனால் அதன்படி வாழ்வது கடினம். சத்துருக்களைச் சிநேகியுங்கள், சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், நிந்திக்கிறவர்களுக்காய் துன்பப்படுத்துபவர்களுக்காய் ஜெபம் பண்ணுங்கள் என்று கற்றுக் கொடுத்த ஆண்டவர் (மத்தேயு 5: 44) அதை தம் வாழ்வில் வெளிப்படுத்தி முன்மாதிரியைக் காட்டுகிறார். ஒரு கன்னத்தில் அறைகிறவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டுங்கள் (லூக்கா 6:29) என்று மன்னிக்க கற்றுக் கொடுத்தவர், மன்னிப்பைச் சிலுவையில் கற்றுக் கொடுத்து பிறரை மன்னிக்க நம்மையும் அழைக்கிறார்.

ஒரு ராஜா தன்னிடம் பதினாயிரம் தாலந்து கடன்பட்டவனிடம் இரக்கம் கொண்டு அவன் கடனை மன்னித்தார். மன்னிப்பைப் பெற்றவன் போகும் வழியில் தன்னிடம் நூறு வெள்ளி பணம் கடன் பெற்ற உடன் வேலைக்காரனுக்கு மன்னிக்க மனதில்லாததினால், அவன் ராஜா தனக்கு கொடுத்த மன்னிப்பை இழந்து தண்டனையைப் பெற்றான் (மத்தேயு 18: 23-35). “மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்” (மத்தேயு 6: 14). சிலுவையிலிருந்து மன்னிப்பைப் பெற்ற நாம் பிறரை மன்னிக்கிறோமா? இயேசு கற்றுக் கொடுத்த ஜெபத்திலும் மன்னிப்பின் நறுமணத்தைப் பிரதிபலிக்கிறார். “எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்” என்று பிறரை மன்னிக்கக் கற்றுக்கொடுத்த ஆண்டவர் தாம் சிலுவையில் அறையப்பட காரணமானவர்கள் எல்லாரையும் மன்னித்து மன்னிப்பின் அடையாளத்தைச் செயலில் காட்டி இருக்கிறார்.

சிலுவையில் மன்னிப்பை நமக்கு கற்றுத் தந்த ஆண்டவர், பிறரை மன்னிக்க நம்மையும் அழைக்கிறார். நாமும் பிறரை மன்னிப்போம். மறை வாழ்விற்குச் சான்று பகர்வோம்.

**திரு. சகுந்த் J. மார்ட்டின்**

# மீட்பு வழங்கும் இயேசு

லூக். 23: 38-43

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக். 23: 43).

"மீட்பு" என்பது இவ்வுலகில் வாழும் எல்லோருக்கும் இறைவனால் அருளப்பட்ட கிறிஸ்துவின் முடிவில்லாச் செயல். சிலுவையின் விளிம்பிலும், துன்பப் பாதையிலும் துளி கூட தன்னலம் எண்ணாமல் மீட்பை அருளினார். இயேசுநாதர் "மீட்பு என்றும் அழிந்து போவதில்லை" என உறுதியாகச் சொல்லுகிறேன் என்ற வார்த்தையை லூக்கா 23:43-ல் வலுப்படுத்தினார். "பால்திலிக்" என்ற மெய்யியலாளர் மீட்பைக் குறிப்பிடும் போது ஒருவன் கடவுளால் கிறிஸ்துவின் மூலம், தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்வதே, "மீட்பு" என்கிறார். இதனால் இயேசு கிறிஸ்துவின் வழியாக மட்டுமே மீட்பு உண்டு என்பது சான்றாகிறது. கிறிஸ்துவின் நற்செய்தியின் அடிப்படை மீட்பு என்பதைத் திருமறையில் உள்ள நற்செய்தி நூல்கள் நமக்குத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் இவ்வுலகத்தில் வந்தார்" என்ற இறைவார்த்தை மீட்பின் செயலை வெளிப்படுத்துகிறது.

இந்த மீட்பானது சிலுவையின் முடிவு பரியந்தம் வெளிப்பட்டதை இந்த இரண்டாம் வார்த்தை நமக்கு ஆழமாகத் தெளிவுபடுத்துகிறது. "நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய்" என்ற மறைவாக்கு, பாவத்தினாலும், தீமையினாலும் உழன்று கொண்டிருக்கின்ற மனுகுலத்திற்கு ஒரு புது நம்பிக்கையைத் தருகிறது. இந்த ஆற்றல் மிகு வார்த்தை, திருமறையில் இயேசுவின் போதனைகளால் கவரப்பட்ட ஆயக்காரன் தன்னை "உணர்ந்து" மனம்திரும்பினது போல, சிலுவையில் மீட்பைப் பெற்ற குற்றவாளியும் மனம் திரும்பினான் என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

### 1. உள்ளம் உடைந்து தேடுபவர்க்கு மீட்பு (லூக். 23: 40)

சிலுவை காட்சியைப் பார்க்கையில் இயேசுநாதரின் இரண்டு பக்கங்களிலும், இரு குற்றவாளிகள் தொங்கினார்கள். ஒரு குற்றவாளி, தன் பேச்சின் மூலம் அனைத்துலக மீட்பரைப் பழித்துரைத்தான். கடினமான இருதயமுள்ள அந்தக் குற்றவாளி, தன் வாழ்வின் இறுதி வரையிலும், உள்ளத்தைக் கல்லாகவே வைத்திருந்தான். ஆனால் "டிமாஸ்" என்னும் பெயர் பெற்ற மற்ற குற்றவாளியோ, உள்ளம் உடைந்தவனாய், பழித்துரைத்த குற்றவாளியைக் கண்டித்து, இயேசு நாதரைத் தன் மீட்பராகவே

ஏற்றுக்கொள்கிறான். அவருக்கு அஞ்சி நடந்து அவரையே தேடவேண்டும் என்கிற செய்தியைச் சிலுவையில் தொங்கியபடியே மற்றவனுக்குச் சொல்லுகிறான். இதுவே உள்ளம் உடைந்து மீட்பைப் பெற்று கொள்வதற்கான வாழ்வின் அடிப்படைச் செயல்பாடு ஆகும்.

**2. உணர்ந்து வேண்டுபவர்க்கு மீட்பு** (லூக். 23: 41)

இயேசுவிடம் உணர்ந்து வேண்டின குற்றவாளி மீட்பைச் சுதந்தரித்தான். அவன் தன் பாவத்தை உணர்ந்தபின் மற்ற குற்றவாளியை நோக்கி "நாம் தண்டிக்கப்படுவது முறையே" என்கிறான். தொடர்ந்து அவன் கூறுகின்றபோது, நாம் செய்த பாவச் செயல்கள், தீமையான காரியங்கள் இவற்றிற்காக தண்டனையைப் பெறுகிறோம். ஆனால் கிறிஸ்துவோ பாவமற்றவர், குற்றமற்றவர். முழு உலகத்திற்கும் மீட்பைத் தருவதற்காகவே சிலுவையை ஏற்றிருக்கிறார் என்று சொல்லித் தன்னை உணர்ந்து, தன்னைப் போன்று சிலுவையில் தொங்கும் மற்ற குற்றவாளிக்கு உண்மையை எடுத்துரைக்கிறான். தான் பாவி என்றும், இறப்பதற்கு முன்பு கடவுளின் இரக்கத்தையும், மீட்பையும் பெறவேண்டும் என்றும் அவன் உணருகிறான்.

திருமறையில் இளையகுமாரன் உவமையில், அவன் வாழ வழியின்றி தவித்த கடைசி நேரத்தில், தன்னுடைய பாவ நிலை அறிந்து, தவறை உணர்ந்து, மனம் வருந்தி, தந்தையிடம் வந்து, தனது பாவங்களை அறிக்கையிடுகிறான். மீட்பைப் பெற்றுக்கொண்டான் (லூக். 15: 11-24). மேலும் ஏசாயா 55:7-ல் துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன். அவர் அவன் மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன் அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெற்றிருக்கிறார் என்கிற வசனம் தன் பாவங்களை உணருகிற மனுஷன் இறைவனிடமிருந்து மன்னிப்பைப் பெறுகிறான் என்பதை நமக்கு ஆழமாக எடுத்துரைக்கிறது.

**3. உணர்வடைந்து செயல்படுபவர்க்கு மீட்பு** (லூக். 23: 42)

உள்ளம் உடைந்த குற்றவாளி உணர்வடைந்து மீட்பிற்காக செயல்படுகிறான். அதற்குரிய அடையாளம் அவனுடைய நம்பிக்கை கொண்ட வார்த்தையிலே உறுதிபடுத்தப்படுகிறது. "உம்முடைய ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைத்தருளும்" என்கிற வார்த்தை, மீட்பிற்காக குற்றவாளி செயல்படுகிறான் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. இங்குத் துன்பச் சூழ்நிலையில் இருந்த குற்றவாளி நம்பிக்கை நிறைந்தவனாய், தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற உறுதியான மனதோடு இந்த வார்த்தையை இயேசுநாதரிடம் கூறினான். மனம்திரும்புதல் இல்லாமல், நம்முடைய

பாவங்கள் மன்னிக்கப்படாமல் பரலோக ராஜ்ஜியம் செல்ல முடியாது என்பதை உணர்ந்து அவன் செயல்பட்டதை இந்தப் பகுதியில் நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

பிலிப்பியர் 1:20, 21-ல் பவுல் மீட்பின் நற்செய்தியை அழகாக எடுத்துரைக்கிறார். கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு செயல்படுகின்ற போது பேரின்ப வாழ்வைப் பெறுவது நிச்சயம். மீட்கப்பட்ட மனிதனின் மனநிலை பிறரை மீட்டெடுக்கும் மனநிலையாக மாறவேண்டும்.

விசுவாசித்த அந்த குற்றவாளிக்கு இயேசு அளித்த பதில் ஒரு நம்பிக்கையின் செய்தியாக இருந்தது. “இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்”, என்பதே அந்தச் செய்தி.

அருள்திரு. **S. செல்ல ஜெபராஜ்**

# பராமரிப்பு தரும் இயேசு

"இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா, இவரே உம் மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம், இவரே உம் தாய் என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்." (யோவா. 19: 26, 27).

உலகம் முழுவதும் தேடினாலும், அகராதியைப் புரட்டினாலும் அம்மா காட்டும் பாசத்திற்கு உதாரணம் எங்கும் கிடையாது. அந்த அளவுக்கு தூய்மையானது அம்மாவின் அன்பு. என் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தன் தேவைகளைக் குறைத்துக் கொண்டவள் அம்மா! வாழ்க்கை என்னும் மேடையில் நடிக்கத் தெரியாத ஒரு கதாபாத்திரம்- அம்மா. வார்த்தைகளே இல்லாத வடிவம், அளவு கோலே இல்லாத அன்பு, சுயநலமே இல்லாத இதயம், வெறுப்பைக் காட்டாத முகம் - அது அம்மா!

யூதர்கள் மத்தியில் பிரபலமடைந்திருந்த பழமொழி "இறைவன் தாமே எல்லா இடத்திலும் இருக்க முடியாததால் தாயைப் படைத்தார்" என்பதாகும்.

பிரசவ வலியைத் தாங்கிய தாய்க்கு, தன் பிள்ளையின் ஒரு துளி கண்ணீரைத் தாங்க முடிவதில்லை. இங்கு இயேசுவின் தாய் மரியாள், தன் பிள்ளை படும் பாடுகளையும், இரத்தம் சிந்தும் அவல நிலையையும் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாது, உள்ளம் உடைந்து நிற்கும் நேரம், இயேசு தம் தாயைப் பார்க்கிறார். பெற்ற மனம் படும் வேதனையைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாமல் தவிக்கிறார்.

தாய் இப்போது கணவனை இழந்த கைம்பெண். தன் மகனையும் இழக்கப் போகும் நேரம், எண்ணங்கள் இயேசுவை வாட்டியது. பிள்ளையின் சாவைக் காண வேண்டிய நிர்ப்பந்தமான நிலையை எண்ணி வருந்தினார் இயேசு. தம் தாய்க்கு ஒரு ஆதரவை ஏற்படுத்திப் பிதாவண்டை செல்ல தம்மை ஆயத்தப்படுத்தும் வண்ணமாய் இறைமகன் இயேசு இம் மூன்றாவது வார்த்தையைச் சிலுவையில் மொழிந்தார். இந்த வார்த்தை உணர்த்தும் உண்மைகள் என்ன என்பதைத் தியானிப்போம்.

**1. அன்னை மீது அக்கறை கொண்ட இயேசு** (யோவா. 19: 26)

தம்மை வயிற்றில் சுமந்த போது, தம் தாய்க்கு ஏற்பட்ட கன்னிப் பிறப்பின் நிந்தனையை எண்ணிப் பார்த்தார். தமது குழந்தைப் பருவத்தில், ஏரோதின் கையினின்று தப்புவித்து தம்மைக் காக்க இரவோடு இரவாக எகிப்துக்குச் சென்று பாதுகாத்த பராமரிப்பை எண்ணிப் பார்த்தார். (மத். 2: 13, 14). யூதக் குடும்பத்தில்

பிறந்ததால், விருத்தசேதனம் செய்து, திருமறையைக் கற்றுக்கொடுத்த ஆசிரியையான தாயின் பக்திமிக்க வளர்ப்பை எண்ணிப்பார்த்தார். (லூக். 2: 21-24) 12-ம் வயதில் பஸ்காப் பண்டிகை நேரம் தம்மைக் காணாமல் பதறியடித்து ஓடித் தேடிய தாயின் கரிசனையை எண்ணிப் பார்த்தார். (யோவான் 19: 25 - 27)

இப்படிப்பட்ட தாய் தனிமைப்படுத்தப்படுவதை எண்ணிக் கலங்கினார். தாயையும் தகப்பனையும் கனம் பண்ணுங்கள் என்ற கட்டளையை நன்கு அறிந்தவர். நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல நிறைவேற்றவே வந்தேன் (மத். 5: 17) என்றவர், தாயை மறப்பாரோ? கொர்பான் காணிக்கையின் அர்த்தமின்மையை விளக்கினவர் தாயை மறப்பாரோ? துன்ப நேரத்திலும் பெற்ற தாயை மறப்பவன் உத்தம ஊழியக்காரனாய் இருக்க முடியாது என்பதை உணர்ந்திருந்த இயேசு தம் தாய் மீது கரிசனை கொண்டார். "தமது சொந்தக் குடும்பத்தை நடத்தத் தெரியாத ஒருவரால், கடவுளின் சபையை எவ்வாறு கவனிக்க முடியும்?" (I தீமோத். 3: 5). தான் இல்லாத குறை ஒருபோதும் தம் அன்னைக்கு வந்துவிடக்கூடாது என்பதை மனதில் எண்ணினார். திருவசனத்தைப் போதிப்பவர்கள், அதன்படி செய்பவர்களாகவும் இருக்கவேண்டும் (யாக்கோபு 1: 22) என்பது போல், இயேசு தாய் மீது அக்கரை கொள்ளுகிறார். இயேசுவைக் கர்ப்பந்தரித்த போது களிகூர்ந்து பாடிய மரியாள், இளவயதில் வாழ்வின் நிறைவைக் காணப்போகும் தம் பிள்ளையை எண்ணிக் கலங்கும் போதும், தம் உயிர்த்தெழுதலை அறிந்திராத தாய் மேல் அக்கறை கொள்ளுகிறார்.

**2. அன்னையை அன்பானவரிடம் ஒப்படைத்த இயேசு** (யோவா. 19: 27)

யூதாஸ் காட்டிக் கொடுத்து வாழ்வை இழந்தார். பேதுரு மறுதலித்துப் போனார், மாற்கு, வஸ்திரத்தையும் உதறித் தள்ளி ஓடி ஒளிந்தார். சீடரெல்லாம் இயேசுவைத் தனியே விட்டு விட்டுத் தப்பி ஓடிய போதும், நெஞ்சில் சாய்ந்திருந்து, இயேசுவின் இதயத் துடிப்பைச் செவிகளில் உணர்ந்திருந்த யோவான், சிலுவையின் அடிவாரம் வரை கூடவே வந்தார். தமக்கு எது நடந்தாலும் தம் அன்னைக்கு உறுதுணையாய் நிற்கும் யோவானை இயேசு கண்டார். இந்த யோவானை விட நல்ல மகன் என் தாய்க்குக் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்த இயேசு தன் தாயிடம் சொன்னார்; ஸ்திரீயே! அதோ உன் மகன். ஸ்திரீ என்பது மரியாதையற்ற சொல்லல்ல. தம் தாயும், தந்தையுமானவர் பிதா ஒருவரே என்பதை உணர்ந்திருந்த இயேசு, இன்னும் மூன்று தினங்களில் உயிரோடெழுந்து, எல்லா மக்களுக்கும் ஆண்டவராய் மாறப் போகும் இயேசு, மரியாளுக்கும், தாம் ஆண்டவர் என்பதை உணர்த்தும் வண்ணமாய் ஸ்திரீயே என்று அழைத்து தம் சீடனிடம் ஒப்படைத்தார். மனிதனின் முதல் கடமை தன் வீட்டிற்குள் தொடங்குகிறது என்பதற்கிசைய இயேசுவின் இன்றியமையாத கடமை தம் அன்னையில் நிறைவேறுகிறது.

ஏன் யோவானைத் தெரிந்தெடுத்தார்? முதிர் வயதாகி மரிக்கப் போகிறவர், இந்த யோவான் சீடன் மட்டுமே என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். மற்ற சீடரெல்லாம் இரத்த சாட்சிகளாக மரிக்கும் போது, தம் தாயினால் அதைத் தாங்கிக்கொள்ள இயலாது என்பதை உணர்ந்திருந்த இயேசு, இனி ஒரு முறை தாய் - மகன் பிரிவு ஏற்பட்டு விடக் கூடாது என்பதை உணர்ந்து யோவான் என்ற அன்பான சீடனிடம் ஒப்படைக்கிறார். தம் தாய் நீடிய ஆயுளுடன் வாழ வேண்டும் என்பதை விரும்பினவராய்ச் சீடனைப் பார்த்து சொன்னார் “சீடனே! அதோ உன் தாய்.” சீடன் யோவானுக்கும் இது ஒரு மாபெரும் சிலாக்கியமாகவே அமைந்தது.

திருமறை சொல்லுகிறது, அந்நேரம் முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார் (யோவான் 19: 27) ஆம், இயேசுவின் சொல்லுக்கு மறுத்துரைக்காத சீடன், யோவான், அந்நேரமே, மரியாளைத் தன் தாயாக ஏற்றுக்கொண்டார்.

இயேசுவின் உடலில் ஏற்படும் காயங்களின் வலிகளை மனதில் உணர்ந்த தம் தாய் மரியாளைச் சீடனிடம் ஒப்படைத்து நின்ற இயேசுவின் சிந்தை நம்மிலும் உண்டாக வேண்டும். தாயின் வலிகளைஉணரத் தெரிந்த பிள்ளைகளாய், தாய் தந்தையை அன்பு செய்து, பராமரித்து வாழ முற்படுவோம். ஒரு தாய் ஐந்து குழந்தைகளைக் கூட வளர்த்து காப்பாற்றுவார். ஆனால் அந்த ஐந்து குழந்தைகளும் ஒன்று சேர்ந்து ஒரு தாயைக் காப்பாற்றுவதை கடினமாகக் காணும் மக்கள் நிறைந்த உலகம். அன்னையைத் தந்தையை அன்பு செய்து வாழ்வோம். இறைவனின் அருள் ஆசிகளைப் பெறுவோம்.

அருள்திரு. **T. சாம் பீட்டர்**

# அங்கலாய்க்கும் இயேசு

மத். 27 : 45-50

"... என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? ..." மத். 27 : 46

இயேசு கிறிஸ்து வேதனையின் மத்தியிலும் சரித்திரத்தில் சாதனையாக உலகத்திற்கு அனுப்பின தந்தையிடம் மகனாக இவ்வார்த்தையைப் பேசுகிறார். வேதனை, சோதனை, வலி போன்றவைகள் மனிதனின் வாழ்க்கையில் குறுக்கிடும்போது அனைத்தும் அனைவருக்கும் மறுக்கப்படுவதையும், மறைக்கப்படுவதையும், மறந்து போவதையும் பொதுவாக உலக வாழ்க்கை சார்ந்து நாம் அறியலாம். ஆனால், பணி செய்வதற்கே வந்த இயேசு கிறிஸ்து சிலுவையின் உயரத்தில் தொங்கிக்கொண்டு இந்த வார்த்தையை, பாதிக்கப்பட்டவராக, கைவிடப்பட்டவராக அங்கலாய்ப்போடு, கை கொடுக்கும் தந்தையிடம் கூறுகிறார்.

"ஏலி, ஏலி, லெமா சபக்தானி" என்னும் வார்த்தை எபிரேயம் மற்றும் அரமேய மொழிச் சொற்கள் கலந்த ஒரு கூற்றாக உள்ளது. "ஏலி" எனும் வார்த்தை எபிரேய மொழியில் கடவுளை "என் இறைவா" என அழைப்பதாகும். "லெமா சபக்தானி" என்பது அரமேய மொழி வார்த்தையாகும். ஆனால் இந்த வார்த்தை மாற்கு நற்செய்தி நூலில் அரமேய மொழியில் மட்டுமே உள்ளது. இதனால்தான் மாற்குவில் ஏலி என்பதற்குப் பதிலாக "எலோயி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் "சபக்தானி" என்ற வார்த்தையின் பொருள், "முழுவதுமாகக் கைவிடுதல்" என்பதாகும். அதாவது ஒருவருக்குப் பதிலாக மற்றொருவர் சாகடிக்கப்படுவதாகும். ஒருவரையும் கைவிடாத கடவுள், இயேசு கிறிஸ்துவையே கைவிடுகிறார். காரணம் பூமியிலே மனிதத் தன்மையோடு வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் கைவிடப்படுகிற நிலை உண்டு. இயேசு தாம் கைவிடப்பட்டதை உணர்ந்து அங்கலாய்க்கிறார். இந்த வார்த்தையின் வலிகளும் வேதனைகளும் பெருமூச்சாகவும், மரண விளிம்பில் நின்று கொண்டு உரைத்த குரலாகவும் வெளிப்பட்டது. இந்த வார்த்தை கற்றுத்தரும் உண்மைகளைத் தியானிப்போம்.

### 1. உணர்ச்சிமிகு அங்கலாய்ப்பு

வலியை உடம்பில் உணர்வுபூர்வமாக உணரும்போது உள்ளம் மரத்து போகின்ற சூழல் உணரப்படும். ஆனால் இங்கு இயேசு கிறிஸ்து தம்முடைய தந்தையாகிய இறைவனிடத்தில் உள்ளத்தின் உயிரோட்டமான வார்த்தைகளைக் கூறுகிறார். தந்தையின் அழைப்பை ஏற்று அவனி வந்த ஆண்டவர் தனிமையாகத் தள்ளப்பட்டு இவ்வார்த்தையை உள்ளத்தில்

உணரப்பட்ட வலிகள் மத்தியில் எடுத்துரைக்கிறார். அவரது கதறுதல் என்பது உள்ளத்தின் உயிரோட்டமாக காணப்படுகிறது. கரம் கொடுத்து உதவிய இயேசு கைவிடப்பட்ட சூழலில் இவ்வார்த்தையைக் குறிப்பிடுகிறார் என்பது மிகவும் சிறப்புமிக்கது.

**2. உறவின் அங்கலாய்ப்பு**

திருப்பணியில் தந்தையின் திருவுள விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்த அவருக்கு உலகம், பரிசாகச் சிலுவையைக் கொடுத்தது. இப்போது அந்த கொடுமையின் உச்சத்தில் இருக்கும்போது உறவின் போராட்டத்தை இயேசு உணர்ந்து தந்தையிடம் சித்தத்தைச் சுத்தமாக நிறைவேற்றி விட்டேன் என்பதற்கு அடையாளமாக தந்தையாம் கடவுளிடம் இவ்வார்த்தையை உறவுசார்ந்த போராட்டமாக வெளிப்படுத்துகிறார். இங்கு உறவு என்பது மனிதத்தால் உதறித் தள்ளப்பட்டாயிற்று. எனினும் பதறிப் போனவராக வார்த்தைகளை எடுத்துரைக்காமல் தந்தையைச் சார்ந்து நின்று இவ்வார்த்தையைக் கூறுகிறார்.

**3. உறுதித்தன்மையான அங்கலாய்ப்பு**

நீரோட்டத்தைக் கண்களால் காண முடியும். காரணம் தண்ணீர் ஓடுவதைப் பார்த்து நீரோட்டம் என்று குறிப்பிடலாம். இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தில் கண்ணீரும், செந்நீரும் நீரோட்டம் போல் காணப்படுவது இறைவன் மேல் அவர் கொண்டிருந்த பற்றுறுதியை வேரோட்டமாகப் புரிந்துகொள்ளச் செய்கிறது. செடிகளிலும், கொடிகளிலும், மரங்களிலும் வேரோட்டத்தை மனிதர்களாகிய நம்மால் பார்க்க முடியாது. ஆனால் மண்ணைத் தோண்டி பார்க்கும்போது வேரோட்டத்தை காணலாம். அதே நேரத்தில் அந்த வேர்களுக்குப் பாதிப்பு. பழுது என்பது வரும்போது மண்ணுக்கு மேல் இருக்கும் செடிக்கோ, கொடிக்கோ மரத்துக்கோ பாதிப்பு என்பது அறியப்படும். சிலுவையில் தொங்கியவராக இயேசு கிறிஸ்து, தந்தையினிடத்தில் பேசுவது அவரது பற்றுறுதியையும், பகிர்தலையும், பாசத்தையும் வேரோட்டமாக நமக்கு எடுத்துரைக்கிறது. கடவுளின் திருத்திட்டத்திற்கு எதிராகச் சோதனைகள் வரும்போது அதை எதிர்த்து போராடும் போது வேதனைகள் உண்டு. அதிலும் உண்மையுடன் செயல்படும்போது நம்முடைய வாழ்வின் வேர் மண்டலத்தைப் பாதிக்காது என்பதற்கு ஆதாரமாக இவ்வார்த்தைக் காணப்படுகிறது.

சிலுவைப் பாதை என்பது அங்கலாய்ப்போடிருந்த இயேசு கிறிஸ்துவைத் தந்தையின் உறவிலும் தரணியின் மக்களின் உறவிலும் உறுதிப்படுத்தியது. ஆகவே, இவ்வார்த்தை அவரது உலக இறுதிப் பயணத்தில் குருதிப் பகிர்தலுடன் உறுதி வார்த்தையாகக் காணப்படுகிறது.

**திரு. M.R. மில்டன் மார்க்**

# தவிக்கும் இயேசு

யோவா. 19:28-29

"தாகமாய் இருக்கிறது" (யோவா. 19:28)

இயேசு சிலுவையில் மொழிந்த ஐந்தாம் திருமொழி அவரது தாகத்தையும் தவிப்பையும் காட்டுகிறது. உடற்பாடுகளாலும் ஆன்மீக பாடுகளாலும் இயேசுவுக்குத் தாகம் உண்டானது. இயேசுவின் தாகம் அவரது தவிப்பை நமக்கு சவாலாய் முன் வைக்கிறது. யார் என் தாகத்திற்கு அர்த்தம் கொடுப்பது என்பதே இயேசுவின் தவிப்பு. அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, "தாகமாய் இருக்கிறது" என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார் (யோவான் 19:28). இவ்வாக்கியத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல், "டிப்ஸாவோ". இச்சொல் உடல்ரீதியான தாகத்தைக் குறிக்கிறது. அதே சமயம் உள்ளத்தின் விருப்பத்தையும் ஆர்வத்தையும் அடையாளப்படுத்துகிறது. அதாவது, இயேசுவின் தாகம் உடல் ரீதியான தாகத்தையும் ஆன்மீக தாகத்தையும் ஆன்மீக ஆர்வத்தையும் குறிக்கிறது.

### 1. உடற்பாடுகளால் உண்டான தாகம்

இயேசுவின் உடற்பாடுகளை நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியும். கைது, விசாரணை, அலைச்சல், சோர்வு, வேதனை போன்றவைகளால் உடலில் தாகம் ஏற்படுவது இயல்பானது. அறிவியல் ரீதியாக உடலில் இருந்து இரத்தம் வெளியேறினால் தாகம் உண்டாகும். இயேசு சிலுவையில் 6 மணி நேரம் தொங்கினார். கைகள் கால்கள் சிலுவை மரத்தோடு ஆணிகளால் அடிக்கப்பட்டிருந்த காயங்கள், தலையில் முள்முடி இக்காயங்களில் அதிகமான இரத்தம் இயேசுவின் உடலில் இருந்து வெளியேறியதால் அவருக்குத் தாகம் உண்டானது. எனவே சிலுவைப்பாடுகளால் இயேசு தாகமாய் இருந்தது உடல் ரீதியான ஒன்று.

### 2. ஆன்மிகப்பாடுகளால் உண்டான தாகம்

"மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார்" என்ற வாக்கியத்தைக் கவனித்தால், இயேசுவின் தாகம் உடல்ரீதியான தாகத்திற்கு அப்பாற்பட்டது என்பதை நாம் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது. இயேசுவின் ஆன்மீப் பாடுகள் இயேசுவைத் தாகம் அடையச் செய்தது. இயேசு இவ்வுலக மக்களின் பாவங்களை ஏற்றுக்கொண்டு ஒரு பாவியைப் போல ஒரு

அக்கிரமக்காரரைப்போல சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்தபடியால் உண்டான பாடுகளே இயேசுவின் ஆன்மீகப் பாடுகள். பாவம் அறியாத பரிசுத்தரான இயேசு பாவமானார், சாபமானார் (கலா. 3:13).

இயேசுவின் உடற்பாடுகளால் உண்டான தாகமும் ஆன்மீகப்பாடுகளால் உண்டான தாகமும் நம் முன் வைக்கும் அறைகூவல் என்ன? இயேசுவின் தாகம் நமக்கு தரும் அழைப்பு என்ன?

உலக மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே இயேசுவின் தவிப்பு, வாஞ்சை, ஏக்கம், விருப்பம் மற்றும் எதிர்பார்ப்பு.

இயேசுவின் இப்பேராவல் நிறைவேற சீடர்களிடம் இயேசுவின் உபதேசத்தை வாழ்வில் காட்டும் பணிவிடை தாகமும் இருக்கவேண்டியது அவசியம். இரட்சிப்பின் பணி அல்லது சுவிசேஷப் பணி என்பது இரட்டைப்பணி; பறைசாற்றுதலும் பணிவிடை செய்தலும் ஆகும். பறைசாற்றுதல் என்பது உபதேசம். பணிவிடை செய்தல் என்பது ஊழியம். ஆக, முதலாவது உபதேசத் தாகம், அதைத் தொடர்ந்து ஊழியத் தாகம்.

**a. உபதேசத் தாகம் உடைய சீடர்கள்**

யாக்கோபு 5:20; தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக் கடவன். ஒரு ஆத்துமாவை இரட்சிப்புக்குக் கொண்டுவருவதன் தொடக்கம் உபதேசம். அந்த உபதேசத்தின் சாரம்சம் : "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது" என்ற இயேசுவின் அறைகூவல். அழிவை நோக்கிச் செல்லும் ஒருவருக்கு வாழ்வுக்கு வழிகாட்ட உபதேசம் மிக மிக அவசியம். இதற்கு திப. 8:26-40-ல் சொல்லப்பட்டிருக்கும் பிலிப்பு - எத்தியோப்பிய மந்திரி உபதேச உரையாடல் ஒரு சான்று.

வ. 30; பிலிப்புவின் கேள்வி : நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா? வ. 31; எத்தியோப்பிய மந்திரியின் பதில் கேள்வி : ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்?

இந்த இரு கேள்விகளும் அறிவித்தல் அல்லது உபதேசத் தாகத்தின் அவசியத்தைக் காட்டுகிறது. இச்சம்பவத்தின் விளைவு. இரட்சிக்கப்படுதலும் திருமுழுக்கும் என்பதை நாம் அறிவோம்.

யோவான் 4-ம்; அதிகாரத்தில் சமாரியப் பெண்ணைச் சந்தித்து, "தாகத்துக்குத்தா" என்றார். (4:8). இது சரீர தாகம் அல்ல. ஏனெனில் அவளைச் சந்தித்து நற்செய்தியை அறிவிக்கும்படி பசியாயிருக்கிறேன் என்று சொல்லி

சீடர்களை உணவு வாங்க அனுப்பின பின்னர் அப்பெண்ணுக்கு இரட்சிப்பை வழங்கி, தம்மை மேசியா என்று அறிவிக்கிறார். பின்பு சீடர்கள் வந்து உணவு ஆயத்தம் சாப்பிடுங்கள் என்றனர். "நான் உண்பதற்குரிய உணவு ஒன்று உண்டு." அது உங்களுக்குத் தெரியாது" என்றார் (யோவான் 4:32). சீடர்கள் வேறு யாரோ இயேசுவுக்கு உணவு கொண்டு வந்திருப்பார்களோ என்று அங்கும் இங்கும் சுற்றிப் பார்க்கின்றனர். அப்போது இயேசு என்ன சொல்கிறார் : "நான் என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோவான் 4:34). "அவருடைய உபதேசத்தின் நிமித்தம் (வ. 41) அநேக சமாரியர் அவர் மேல் நம்பிக்கை வைத்தார்கள்."

ஆண் பெண் வேறுபாடு, யூதர் சமாரியர் அதாவது இன வேறுபாடு, நல்லவர் கெட்டவர் வேறுபாடுகளைக் களைந்து எல்லாருக்கும் இயேசுவின் உபதேசம் சென்றடையவேண்டும் என்ற தாகம் கொண்ட சீஷத்துவம் இயேசுவின் தவிப்பாய் அல்லது எதிர்நோக்காயிருந்தது

**b. ஊழியத் தாகம் உடைய சீடர்கள்**

அதாவது பணிவிடை செய்ய விருப்பம், சேவைசெய்யும் சிந்தனை, பொதுநலம் கருதும் மனப்பாங்கு. லூக்கா 10:25-37-ல் சொல்லப்பட்டிருக்கும் நல்ல சமாரியனின் பணிவிடை ஊழியம் ஒரு நல்ல சான்றாய் விளங்குகிறது.

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவைக் கேட்ட நியாயசாஸ்திரிக்கு இயேசு சொன்ன பதில் என்ன? பாதிக்கப்பட்ட மனிதனைப் பார்த்து விலகிச்சென்ற ஆசாரியனையோ லேவியனையோ முன்னுதாரணமாக வைக்காமல் பாதிக்கப்பட்டவருக்கு பணிவிடை செய்து அவரைப் பராமரித்து அவருக்கு மனிதநேயத்தை வெளிக்காட்டிய நல்ல சமாரியனைச் சான்றாய் வைத்து, நீயும் போய் அந்தப்படியே செய் என்று அவருக்கு இரட்சிப்புக்கு வழிகாட்டி ஊழியத் தாகத்துக்கு அறைகூவல் விடுக்கிறார்.

இயேசுவின் தவிப்பைப் பூர்த்தி செய்வதற்கான சீஷத்துவத்தில் உபதேசத் தாகமும் ஊழியத் தாகமும் அவசியம். இத்தகைய சீஷத்துவத்திற்கு சீஷர்கள் உன்னதத் தாகம் உடையவர்களாய் இருப்பது மிக மிக அவசியம்.

நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள் (கொலோ. 3:1-2).

உலகின் மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் தந்தையின்பால் அன்பு இராது (1 யோவான் 2:15)

உலக வாழ்வில் அல்ல உன்னத வாழ்வில் தாகம் கொண்ட சீடத்துவமே இயேசுவின் தவிப்பு.

ஆகையால், இந்த உன்னத வாழ்வுக்கான தாகம் உடைய சீடத்துவத்தினால் மட்டுமே உபதேசத் தாகத்திலும் ஊழியத் தாகத்திலும் உறுதியாய் இருக்க முடியும்.

“என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு” (யோவான் 4:34).

தந்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய பேராவலை நிறைவேற்றுவதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்ற இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கிற நமக்கு உபதேச தாகமும் ஊழிய தாகமும் கொண்ட சீடத்துவம் அவசியம். அத்தகைய சீடத்துவமே இயேசுவின் தவிப்பாகும்.

இயேசுவின் ஆன்மீக தாகம் கொண்டவர்களாய் இயேசுவின் தவிப்பை நிறைவேற்றும் சீடர்களாய் அவர் கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. **L. பென்சாம்**

# நிறைவைக் காணும் இயேசு

யோவா. 19: 29, 30

"எல்லாம் நிறைவேறிற்று" (யோவா. 19: 30)

நிறைவைக் காணக்கூடியத் தருணத்தில் கிறிஸ்து சிலுவையில் மொழிந்த ஆறாவது வார்த்தை "நிறைவேறிற்று" என்பதாகும். இது ஒரு வெற்றியின் வார்த்தையாக அமைகிறது கிரேக்க வார்த்தையான 'Tetelestai' என்ற வார்த்தையின் ஆங்கில பொருள் 'It is Finished' என்பதாகும் அதனுடைய பொருள் எல்லாம் நிறைவேறிற்று.

கிறிஸ்து பயன்படுத்தும் "நிறைவேறிற்று" என்ற இந்த வார்த்தை, 'எதுவும் இனி இல்லை' என்று உலக பொருளைக் குறிப்பிடுகிறார். தம்முடைய பணி முடிந்து விட்டது என்ற பொருளை அது வெளிப்படுத்துகிறது. காரணம் இயேசு அவர்களிடம், "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோ4:34ல்) எனக் குறிப்பிடுகின்றார். தம்முடைய வேதனையின் மத்தியில் அவர் உரைத்த இந்த வார்த்தையை யோவான் நற்செய்தியாளர் ஒரு வெற்றியின் முழக்கமாக நமக்குத் தந்திருக்கிறார். இந்த "நிறைவேறிற்று" என்ற வார்த்தை, ஒரு பணிவிடைக்காரன் தனக்கு தன்னுடைய எஜமானால் கொடுக்கப்பட்ட கடுமையான பணியைச் செய்து முடித்த பின்பு தன் எஜமானோடு உரைக்கக்கூடிய ஒரு வார்த்தை தான் "நிறைவேறிற்று" (Tetelestai). கிறிஸ்து மொழிந்த இந்த "நிறைவேறிற்று" என்ற வார்த்தை இது என்னுடைய முடிவு அல்ல எனக்கு கொடுக்கப்பட்ட பணியின் முடிவு என்ற வெற்றியின் முழக்கமாக அமைகிறது. இன்று இந்த "நிறைவேறிற்று" என்று கிறிஸ்து குறிப்பிடும் வார்த்தை எதை நமக்குக் குறிக்கிறது?

### 1. நல்லிணக்கப் பணி நிறைவேறிற்று

கிறிஸ்து வாழ்ந்த நாட்களில்சமூகத்தில் மக்களிடையே பலவிதமான பிரிவினைகள் காணப்பட்டன. எனவே தான் கிறிஸ்து தம்முடைய பணிகளில் ஒன்றாக மக்களை நல்லிணக்கத்தோடும் அமைதியோடும் நடத்தும் பணியை மேற்கொண்டார். காரணம், சாதி ரீதியாக மக்களை அடிமைப்படுத்துவதும், பிரிவினையோடு நடத்தியதும், ஒரு செயலாக இருந்தது. கிரேக்கர் என்றும் சமாரியன் என்றும் மக்களை வேறுபடுத்தி வேற்றுமையின் பிளவை இதனால் உருவாக்கினார்கள். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த இடைவெளி இத்தகைய சூழலின் காரணமாக பாவத்தின் சூழலை உருவாக்கியது. ஆனால் கிறிஸ்து தமது பணியின் நிமித்தமாக மனிதர்களுக்கு

இடையே இருந்த வேற்றுமையை அகற்ற முற்பட்டார் சமூகத்தில் காணப்பட்ட அநீதியை எதிர்த்தார் எனவே தான் இறையரசில் எல்லாரும் ஒன்று என்று சொல்லக்கூடிய சிந்தனையை வெளிப்படுத்தினார். இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலா 3:28). எனக் குறிப்பிடுகின்றார். எனவே நாம் இத்தகைய வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாகக் கிறிஸ்து காண்பித்த பணியாகிய நல்லிணக்கத்தை நம்முடைய வாழ்க்கையிலே கொள்ள வேண்டும்.

**2. மீட்பின் பணி நிறைவேறிற்று**

கிறிஸ்துவின் பணிகளில் முதன்மையான பணியாகக் கருதியது மீட்பின் பணியாகும். ஏனெனில், மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற்கு10:45). மனித வாழ்வைப் பாவத்திலிருந்து மீட்டு நித்திய ஜீவனை கொடுக்கும்படியாக அவர் வந்தார் என்பது யோவான் 3: 16 ல் பார்கின்றோம். அதையும் அவர் செய்து நிறைவேற்றினார். இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலில், ஏன் கிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டு தம்முடைய வேதனையின் மத்தியில் மனிதனின் வாழ்விற்கு மீட்பைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணலாம். காரணம் கடவுள் மனிதன் மீது வைத்த அன்பு. தூய பவுலார் குறிப்பிடுகையில், “ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார்.” (ரோமர் 5:8). வாழ்வின் நிறைவைக் காணக்கூடிய தருணத்திலும் கிறிஸ்து தமக்கு தமது பிதாவினால் கொடுக்கப்பட்ட கடமையைச் சரியாக நிறைவேற்றி நம்மை நல்லிணக்கத்தோடு மீட்பின் பாதையில் நம்மை நடத்தி இருக்கின்றார்.

கிறிஸ்து மொழிந்த “நிறைவேறிற்று” என்பது தமது பணி மாத்திரம் முடிவடைந்தது என்பதாகும் காரணம் ஒரு சிற்பி தனது சிற்பத்தைச் செதுக்கி முடித்த பின்பு அதை உரியவரிடம் கொடுத்து “இது இனி உங்களுடையது இதைப் பாதுகாக்க வேண்டிய கடமை உங்களுடைய பணி” என்று அதை உரியவரிடம் கொடுப்பார். அதைப் போலத்தான் இன்று தமதுப் பணியை கிறிஸ்து நிறைவேற்றி நம்முடைய கரங்களில் அவர் தந்திருக்கிறார். எனவே அந்த பணியை நாம் சரியாக செய்யவேண்டியது நம்முடைய கடமையாக இருக்கிறது. மக்களை நல்லிணக்கத்தோடு மீட்பின் பாதையில் நடத்துவோம் அவரது அன்பை உலகுக்குக் காட்டுவோம். கடவுளின் இராஜியத்தைக் கட்டுவோம்.

**திரு. S. பிளஸின்**

# ஒப்படைக்கும் இயேசு

லூக். 23 : 44-49

“தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார் (லூக். 23 : 46)

“வாழ்வு வாழ்வதற்கே” என்பது முதுமொழி. அதற்காக எப்படியும் வாழலாம் என்பதல்ல, இப்படித் தான் வாழவேண்டும் என்று வாழ்க்கையின் நெறிமுறைகளை வாழ்வினில் தந்து, முழுமையாய் வாழ்ந்து காட்டி, வாழ்வின் நிறைவு வரை முன்மாதிரியாய் வாழ்ந்தவர் இயேசு கிறிஸ்து.

இயேசு கிறிஸ்து உலக வாழ்வின் இறுதியில் “எல்லாம் நிறைவேறிற்று” என்பதையறிந்து தந்தையின் கையில் தம் உயிரை நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். தமது உயிரைக் குறித்து இயேசு மிகத் தெளிவாக அறிந்திருந்தார். யோவான் 10: 17-ல், “தந்தை என் மீது அன்பு செலுத்துகிறார். எனவே தான் என் உயிரைக் கொடுக்கிறேன்; அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவே கொடுக்கிறேன்” என கூறியிருந்தார். ஆகவே தான் தந்தை மீது வைத்திருந்த அன்பையும், நம்பிக்கையையும் சிலுவையில் நின்று ஏழாம் திருமொழியின் வழியாக வெளிப்படுத்துகின்றார். இங்கு இயேசு ஏன் தம் உயிரை தந்தையின் கைகளில் ஒப்படைத்தார்?

### 1. உயிர் என்னுடையதல்ல

“தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் . . .” (லூக்கா 23: 46). இங்கு உயிர் என்னுடையதல்ல என்கிற உண்மையை உலகிற்கு உரக்க சொல்லுகின்றார். படைப்பின் வரலாற்றில் தொடக்கநூல் 2: 7-ல் “கடவுள் நிலத்தின் மண்ணினால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.” ஆகவே தான் இயேசு உயிர் தந்த உரிமையாளராம் தந்தையாம் கடவுளின் கையில் தம் உயிரை இறுதியில், உறுதியாய் ஒப்படைத்தார்.

தீய ஆவியால் ஆள்கொள்ளப்பட சவுல் அரசன் தாவீதின் உயிரைப் பறிக்கத் துடிக்கின்றார். திபா. 31: 5-ல் தாவீது இறைவனிடம் மன்றாடுகின்றார். “உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்.” இதைப் போன்று கடவுளுக்கு அஞ்சி நடந்த யோபுவின் உயிரை அலகை பறிக்க முற்படும்போது “இதோ! அவன் உன் கையிலே! அவன் உயிரை மட்டும் விட்டுவை” என கடவுள் கூறினார் (யோபு 2: 6). ஆகவே தான் யோபு 12: 10-ல் அவர் கையில் தான்

அனைத்துப் படைப்புகளின் உயிரும், மனித இனத்தின் மூச்சும் உள்ளன என யோபு சொல்கிறார். இங்கு உயிர் கடவுளுக்குரியது மட்டுமல்ல தம்மடியவர்களின் உயிரையும் பாதுகாக்கின்றார். அதே வேளையில் அலகை அதை பறிக்கத் துடிப்பதையும் காண்கிறோம்.

இன்று இந்த உண்மையைப் பலர் புரிந்து கொள்வதில்லை, ஆகவே தான் தங்கள் உயிரைக் குறித்து பயப்படுகின்றார்கள். இயேசு சொன்னார் "தம் உயிரைக்காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர்; என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரே அதைக் காத்துக் கொள்வர்." (மத்தேயு 10: 39) பாப் இசைப்பாடகரும், நடன இயக்குநரும், பாடல் ஆசிரியருமான மைக்கல் ஜோசஃப் ஜாக்சன் நீண்டநாள் வாழ, தன் உயிரைப் பாதுகாக்க 12 மருத்துவர்களையும், 15 உடல் பயிற்சியாளர்களையும் எப்போதும் தன்னுடன் வைத்திருந்தார். உணவு சாப்பிடும் முன் ஆய்வகத்தில் சோதிக்கப்பட்டது. ஆனால் 25 ஜன் 2009 அன்று தனது 51-வது வயதில் மரித்துப்போனார்.

இயேசு கிறிஸ்து தம் உயிரைக் குறித்து கவலைப்படவில்லை, தந்தையின் சித்தத்தைச் சிலுவையில் நிறைவேற்றி உரிமையாளர் கரத்தில் உயிரை ஒப்படைத்து, உலக மீட்பரானார். பல இறை மனிதர்கள் இறைசித்தம் நிறைவேற்றி இறப்பு நேரத்தில் இறைகரத்தில் தங்களை முழுமையாய் ஒப்படைத்தார்கள். திருத்தொண்டர் ஸ்தேவான் இறப்புக்கு முன் வேண்டினார். "ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்" (திப. 7: 49). மார்ட்டின் லூத்தர், "சத்திய பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்." எனக்கூறி வாழ்வை நிறைவு செய்தார். நாமும் உயிர் என்னுடையதல்ல என உணர்ந்து இறைசித்தத்தை நிறைவேற்றி அவர் கரத்தில் நம்மை ஒப்படைப்போம்.

### 2. உறவு முறிந்து போனதல்ல

"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று சொல்லும்போது உறவு முறிந்து போனதல்ல மாறாக உறவு தொடருவதைக் காணமுடியும். முதல் வார்த்தையில், "தந்தையே" என அழைத்தவர் இறுதி வார்த்தையிலும் "தந்தையே" என அழைத்து உறவின் சிறப்பைக் காட்டுகிறார்.

தந்தை தன் அன்பு மகனுக்கு ஒரு பரிசு பொருளைக் கொடுக்கும்போது மகன் மிகுந்த மகிழ்ச்சியடைகிறான். அதே மகன் தன் தந்தைக்கு ஒரு பொருளைக் கொடுக்கும்போது இரட்டிப்பான மகிழ்ச்சியடைகிறார் தந்தை. இங்கு அன்பு உறவு, பாசம் கரைபுரண்டோடுகிறது. இதைபோன்று சிலுவையின் ஏழாவது திருமொழியில் தந்தையின் கரத்தில் தம் உயிரை ஒப்படைத்தபோது உறவு புதுப்பொலிவு பெறுகின்றது.

இயேசு தம் திருப்பணிக்காலத்தில், நிறைவிலும் குறைவிலும் தந்தையோடுள்ள உறவில் நிலைத்திருந்தார். யோவான் 11: 41-ல் லாசருவின் கல்லறை அருகில் நின்று “தந்தையே நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்” என்றார். மாற்கு 14: 36-ல் கெத்சமனே தோட்டத்தில் “அப்பா, தந்தையே எல்லாம் உம்மால் இயலும்” என மன்றாடினார். மட்டுமல்ல யோவான் 14: 11-ல் “நான் தந்தையுடன் இருக்கிறேன், தந்தை என்னுள் இருக்கிறார்” என உறவின் வலிமையை உணர்த்துகின்றார். யோவான் 13: 1-ல் இயேசு இறை உறவில் மட்டுமல்ல “உலகில் வாழ்ந்த தமக்குரியோர் மேல் இறுதி வரையும் அன்பு செலுத்தினார்” எனக் காண்கிறோம்.

வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்முடைய உறவு கடவுளோடும், சமூகத்தோடும், குடும்பத்தோடும் எப்படி இருக்கிறது? எபேசு சபைக்கு ஆண்டவர் சொல்கிறார் திவெ. 2: 4, 5-ல் “உன்னிடம் நான் காணும் குறையாதெனில், முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை. ஆகையால் நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்துவிட்டாய் என்பதை நினைத்துப் பார்; மனம் மாறு . . .” என கூறுகின்றார். நமக்கும் அறைகூவல் விடுகின்றார். இறை உறவை, வாழ்வின் இறுதி வரை முறித்துவிடாமல் அவர் கரத்தில் நம்மை முழுமையாய் ஒப்படைப்போம்.

### 3. உலகம் இறுதியானதல்ல

தந்தையின் கரத்தில் தம் உயிரை ஒப்படைத்து உலகம் இறுதியானதல்ல, ஒரு புது வாழ்வின் தொடக்கம் என உலகிற்கு உறுதி செய்தார். “உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்” (திபா. 31: 5) என்ற சங்கீதக்காரனின் இறைவேண்டுதலை யூதக் குழந்தைகள் இரவில் உறங்கச் செல்லும் முன் ஏறெடுப்பார்கள். இங்கு மறுநாள் காலையில் விழிப்போம் என்கிற நம்பிக்கை அடங்கியிருக்கிறது. இயேசுவும் தம் தாய் தமக்கு கற்றுத்தந்த மன்றாட்டை நம்பிக்கையோடு சிலுவையில் ஏறெடுத்தார். இங்கு உலகம் இறுதியானதல்ல உயிர்தெழுதல் என்ற புதுவாழ்வு உண்டு என உணர்ந்து தம் உயிரைத் தந்தையின் கைகளில் ஒப்படைத்தார்.

“என் ஆண்டவரே என் வாழ்வின் பாதியிலே என்னை எடுத்துக் கொள்ளாதேயும்” (திபா. 102: 24) என்ற சங்கீதக்காரனின் உள்ளக் குமுறலின் மன்றாட்டின் அடிப்படையில் இறப்பைக் குறித்த பயம், கலக்கம் மக்களிடம் இருந்தது. இயேசு தம் திருப்பணியின்போது இறப்பு ஒரு உறக்கம் என போதித்தார். மாற்கு 5: 39-ல் யவீருவின் மகளைக் குறித்து “பிள்ளை உறங்குகிறாள்” என்றார். யோவான் 11: 11-ல் “நம் நண்பன் இலாசர்

தூங்குகிறான்" என்றார். ஆக இறப்பு என்பது இரவினில் கண்களை மூடி காலையில் கண் விழிப்பது போன்ற ஒரு அனுபவம். மார்ட்டின் லூதர் இதைக் குறித்து சொல்லும்போது "பரிசுத்தவான்களுக்கு மரணம் என்பது பூமியில் கண்மூடி நித்திரையடைந்து பரலோகத்தில் கண்விழித்து எழும்புவது. ஆகவே பரிசுத்தவான்களுக்கு மரணம் ஒரு வெற்றியின் நிகழ்வு" என்றார். இறப்பு நம் வாழ்விலும் வெற்றியின் நிகழ்வாக அமைய, தூய வாழ்வு வாழ்ந்து, நற்செயல்கள் பல புரிந்து இறைக்கரத்தில் நம்மை ஒப்படைத்து, நித்திய வாழ்வை உறுதி செய்வோம்.

சிலுவையின் ஏழாவது திருமொழியின் வழியாக தந்தையாம் கடவுளிடம் தம்மை முழுமையாக ஒப்படைத்த இயேசுவைப் போல நாமும் பரிசுத்தமாய் வாழ்ந்து, பரமனின் உறவில் வளர்ந்து, பரலோக பங்காளிகளாக மாற நம்மையும் அவர் கரத்தில் ஒப்படைப்போம்.

அருள்திரு. **S. சேம் விக்டர்**

# சிலுவை மரணத்திற்குப் பின் நடந்தவை

மத்தேயு 27:50-66

"மரணம்" அல்லது "உடலை விட்டு உயிர் பிரிதல்" என்பது உலகில் பொதுவான ஓர் நிகழ்வு. இதை ஏற்கனவே சந்தித்தவர்களும் அநேகர், சந்திக்கக் காத்திருக்கிறவர்களும் அனேகர். இம்மரணத்தினைப் புதிய வாழ்விற்கு உரிய தொடக்கமாக மாற்றிக் கொள்வதில் தான் "சவால்" அமைந்திருக்கிறது.

பலர் வாழ்கின்ற உலகில் எதிரிடும் சில சூழல்களில் தற்கொலை தான் சிறந்த முடிவு என்ற தவறான எண்ணம் சிலர் கொள்கின்றனர். மரணத்தைவிட கொடிய வலி தரும் ஒன்று தான் தற்கொலை என்பதை இந்த நாளில் நாம் நினைவு கூர்வது சிறப்பான ஒன்று. "எவருடைய சாவிலும் நான் இன்பம் காண்பதில்லை, என்கிறார் தலைவராகிய ஆண்டவர். எனவே மனம் மாறி வாழ்வு பெறுங்கள் பிழைக்க விரும்பும் எவரும் மனம் திரும்பக் கடவோம்". (எசேக்கியேல் 18:32) என்பது வாழ்வை விரும்பும் கடவுளின் அன்பு அறிக்கையாகும்.

வாழ்வும், வழியும், வாய்மையுமாய் இருக்கின்ற இயேசு கிறிஸ்து சாவின் கூரினை ஒடித்து, மரணத்தை ஜெயமாய் விழுங்குகையில் நாம் உலகத்தில் வாழ்வதற்கும், அவரை அண்டிக்கொள்வதற்கும், உள்ளத்தில் ஏற்று விசுவாசம் கொள்வதற்கும் தடையாய் நின்ற திரைகளை அல்லது தடைகளை நம்மை விட்டு முற்றிலுமாய் விலக்கினார். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பின் நிகழ்தவைகளைத் தியானிப்போம்.

## 1. உலகத்தை மறைத்து நின்ற இருள்

"நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று" (மத். 27:45)

கயவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, வஞ்சகர்களால் விசாரிக்கப்பட்டு, கொடியவர்களால் குத்தப்பட்டு, துன்மார்க்கர்களால் சிலுவையில் தொங்கவிடப்பட்டிருக்கிறார் அருள்நாதர் இயேசு கிறிஸ்து.

நண்பகல் நேரம் இது, உண்மையில் இருளுக்கான நேரமில்லை என்பதை நாம் அறிய வேண்டும். அப்படியானால், இந்த இருள் இந்நேரத்தில் பூமி எங்கும் எப்படி வந்தது. தீமையின் விளைவால் வந்தது என உணர்வோம். ஏனெனில், திருமறையின் ஆரம்பம் முதலே ஆற்றல் வாய்ந்தவைகளில் அல்லது ஆதிக்கம் செலுத்தி வந்தவைகளில் ஒன்றாகக் கூறப்படுவது, "இருள்".

எபிரேய மொழியில் இருள் "கொஷேக்" எனவும், கிரேக்க மொழியில் "ஸ்கோட்டோஸ்" எனவும் அறியப்படும். இது "பாவம்" என்ற பொருளைத் தான் தருகிறது.

1 யோவான் 2: 11-ன் படி நீங்களும், நானும் இருளிலே (பாவம்) நடந்தபடியினால் இருள் இயேசுவைச் சிலுவை மட்டும் கொண்டு சென்றது. இயேசு கிறிஸ்துவோ, இருளை அதாவது உலகத்தை மறைத்து நின்ற பாவத்தைக் கொடும் கொல்கொதாவின் சிலுவையிலே அறைந்தார். ஆதலால் உலகத்தில் மனிதன் வாழத் தடையாய் நின்ற இருள் அல்லது பாவம் என்னும் கொடுந்திரை விலகி, 1 யோவான் 2: 8-ன் படியாக, மெய்யான ஒளி இப்போது உலகில் பிரகாசித்திருக்கிறது.

**2. உன்னதரை மறைத்து நின்ற திரை** (மத்தேயு 27: 51)

"அதே நேரத்தில் திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ் வரை இரண்டாகக் கிழிந்தது, நிலம் நடுங்கியது; பாறைகள் பிளந்தன."

தமிழ் மொழியில் "திரைச்சீலை" என அறியப்படும் இவ்வார்த்தை ஆங்கில மொழியில் "Veil" எனவும், கிரேக்க மொழியில், "கட்டபெட்டாஸ்மா" எனவும் அறியப்படுகிறது. இதன் பொருள் எருசலேமில் உள்ள தேவாலயத்தின் வெளிப்புறப் பகுதிகளில் இருந்து மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பிரித்த திரை. உன்னதமான கர்த்தரையும், உலகத்தையும் பிரித்து வைத்திருந்த தடுப்புச் சுவர் போல இந்த "திரைச்சீலை" அமைந்து இருந்தது.

சாலமோன் கட்டிய ஆலயம் முப்பது முழ உயரத்தில் இருந்தது (1 அரசர்கள் 6: 2). ஏரோது அதை 40 முழமாக உயர்த்தியதாக 1-ம் நூற்றாண்டு யூதச் சரித்திர ஆசிரியரான ஜோஸிபஸ் கூறுகின்றார். எனவே, இந்தச் சரித்திரத்தின் படி, திரைச்சீலை 60 அடி உயரத்தில் நீலம் / ஊதா / கருஞ்சிவப்பு நிறத்தில் 4 அங்குல தடிமத்தில் இருந்தது.

இந்த கடினமான கொடுந்திரைதான் மனிதரைப் பிரிக்கும் தடுப்புச் சுவராய் தேவ ஆலயத்தில் இருந்தது. உன்னதரையும், மக்களையும் பிரித்து நின்ற கொடுந்திரையை மேலிருந்து கீழாக கிழியச் செய்தது இயேசுவின் மரணம்.

**3) உயிர்ப்பை மறைத்து நின்ற திரை** (மத்தேயு 27: 52)

"கல்லறைகள் திறந்தன; இறந்த இறைமக்கள் பலரின் உடல்கள் உயிருடன் எழுப்பப்பட்டன"

யூத மார்க்கத்தின் படி சதுசேயர்கள், உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாதவர்கள் (மத்தேயு 22:23), மற்றும் பரிசேயர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உள்ளவர்கள் (திருத்தூதர் பணிகள் 23:8).

இயேசு கிறிஸ்து தமது ஊழிய நாட்களில் உயிர்த்தெழுதல் உண்டு என்று போதித்து வந்ததைத் (யோவான் 5:25-29) தமது மரணத்தின் போதும், தம்முடைய உயிர்த்தெழுதலிலும் உறுதிப்படுத்தி மக்கள் மனதை அல்லது உள்ளத்தை மறைத்து நின்ற சந்தேகம் என்னும் கொடுந்திரையை விலக்கினார்.

மத்தேயு 27:52 மற்றும் 54 ஆகிய வசனங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது, எல்லாவிதமான ஐயங்கங்களில் இருந்தும் சுற்றியிருந்த மக்கள் விடுதலையாகிச் சொன்ன அறிக்கை "இவர் உண்மையாகவே இறைமகன்" என்பதாகும்.

கிறிஸ்துவின் அன்பில் மிகவும் பிரியமானவர்களே, இங்கே நாம் தியானிக்கப் பெற்ற திருவசன வார்த்தைகளை, விசுவாசிக்க ஆயத்தமா?

ஏனெனில், "கொடுந்திரை" அகலவே இயேசு கிறிஸ்து மரணத்தைத் தழுவி ஏற்றுக் கொண்டார். இதற்குக் கண்களால் கண்டவர்கள் சாட்சி, கரங்களில் தவழும் திருமறை சாட்சி, நாமும் கூட சாட்சிகளாவோம்.

தனிமனித வாழ்வில், குடும்ப வாழ்வில், சமுதாய வாழ்வில் இன்னும் எந்தெந்த வகைகளில் கொடுந்திரைகள் எழும்பி நம் வாழ்வுக்குத் தடையாக நிற்கிறது என்பதை இந்த நாளில் சிந்தித்து அவைகளை, மரணத்தை ஜெயமாய் விழுங்கிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் கிழித்தெறிவோம். உன்னதர் இயேசு கிறிஸ்துவால் நமக்கு அருளப்பட்ட வாழ்வை ஜெயமாய் வாழ்வோம்.

**யூதாஸ் ஸ்காரியோத்தின் முடிவு**

இயேசுவைக் காட்டிகொடுப்பதற்காக தான் வாங்கிய 30 வெள்ளிக்காசுகளை வாங்கியவர்கள் இடத்திலேயே வீசி எறிந்து விட்டு செய்த மாபெரும் தவறை எண்ணி தற்கொலை செய்து கொண்டான். உடலானது தலை கீழாக விழுந்து வயிறு வெடித்து குடல்களெல்லாம் சரிந்து போனது. அந்தப் பணம் கொண்டு வாங்கிய நிலம் "இரத்த நிலம்" எனப்பட்டது (தி.ப. 1:18, 19).

**காய்பாவின் முடிவு**

இது இவரது குடும்பப் பெயர், நிஜப் பெயர் ஜோசப். பிரதான ஆசாரியனாகவும், சன்கரிம் சங்கத் தலைவராகவும் இருந்த காய்பா பின் நாட்களில் சிரியாவின் கவர்னர் பதவியில் இருந்த "விட்டெலியஸால்" பதவியில் இருந்து நீக்கப்பட்டார். (யூத வரலாற்று ஆசிரியர்கள் ஜோசிபஸ் & காய்ப்பஸ்).

**எரோதுவின் முடிவு**

பின் நாட்களில் ரோமானியப் பேரரசர் கலிகுலாலோடு ஏற்பட்ட ஆட்சிச் சிக்கலால் நாடு கடத்தப்பட்டார் அல்லது கொலை செய்யப்பட்டார் எனவும் இரண்டு விதமான வரலாற்றுக் கருத்துகள் உள்ளன. (3-ம் நூற்றாண்டு வரலாற்று ஆசிரியர் : காசியஸ்டியோ).

**பொந்தியுபிலாத்துவின் முடிவு: (ஆளுநர்)**

தன் உலகப்பிரகாரமான அரச பதவியைத் தக்க வைத்து கொள்வதற்காகவும், ஆடம்பரமான வாழ்வை அரச மாளிகையில் வாழ விரும்பியும் உலகின் இரட்சகரைக் கை கழுவி விட்ட பொந்தியு பிலாத்து பின் நாட்களில் ரோமப் பேரரசர் கலிகுலாலால் தூக்கிலிடப்பட்டார் அல்லது பதவி இறக்கம் செய்யப்பட்டு தற்கொலை செய்தார். பின்பு அவரது உடல் டைபர் ஆற்றில் வீசப்பட்டது என்று ரோம மரபு கூறுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் இருளில் இருப்போருக்கு நம்பிக்கை ஒளியையும், தீமையுடன் கைகோர்ப்போருக்கு எச்சரிப்பாகவும் அமைந்துள்ளது.

திரு. **D.C. ஆன்ட்ரூ டேவி**

# புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு

## Hope for the New Life

தானி. 12: 1-4 1 பேது. 4: 12-19

திபா. 4 மத். 27: 62-66

“ இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர்; அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர் . . . தானி. 12: 2

புனித சனிக்கிழமை தவக்காலத்தின் இறுதி நாள். சிலுவைப் பாடுகளின் பலனாய் வரும் பெருமகிழ்ச்சியினை எதிர்நோக்கும் நம்பிக்கையின் பெருநாள். நிச்சயமாய் வரும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்காய் அமைதியுடன் காத்திருக்கும் திருநாள். தீமை ஒழிந்து புதுவாழ்வு பிறக்கும் எனும் உறுதியினை விதைக்கும் நன்னாள். இச்சிறப்புகள் எல்லாம் இருப்பதனால்தான் இந்நாள் பெரிய சனிக்கிழமை (Great Sabbath) என அழைக்கப்படுவதும் உண்டு.

இந்த நம்பிக்கையின் திருநாளில், யூதர்கள் வேற்றினத்து மன்னர்களால் ஒடுக்குதலைச் சந்தித்து, இன்னுயிர்கள் பலவற்றை இழக்கக் கொடுத்து, துன்புற்று, நம்பிக்கை இழந்து நின்ற சூழலில், மக்கள் வீழ்ச்சியில் இருந்து எழுவர், புதுவாழ்வு காண்பர் எனும் எதிர்நோக்கை விதைத்த தானியேல் நூலில் இருந்து முடிவின் காலம் (தானி. 12) பற்றிய இறைவாக்கினை மையமாகக் கொண்டு சிந்தனை செய்வோம்.

### 1. மாண்டவர் மீள்வர்

“இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர். . “. தானி. 12: 2

கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படைகளில் ஒன்று மரித்தோர் உயிர்த்தெழுதல் என்பதாகும்.

மரித்தோர் உயிர்த்தெழுதல் பற்றி உறுதியாகச் சொல்லும் ஒரு சில பழைய ஏற்பாட்டு திருமறைப்பகுதிகளில் இத்திருவசனம் (தானி. 12: 2) முக்கியமானது. யோபு 19: 26, சங்கீதம் 16: 10; 49: 15; ஏசாயா 26: 19; ஒசியா 13: 4 போன்ற பழைய ஏற்பாட்டுத் திருவசனங்கள் வெளிப்படுத்தும் உணர்வை தானியேல் 12: 2 வலுப்படுத்துகின்றது.

மரணம் என்பது இவ்வுலகினை விட்டுச் சீயோனுக்கு செல்வது. (சங். 6: 4, 5; 88: 10-12) சீயோனின் துயரம் எதுவெனில் இங்கே மாண்டவர் அனைவரும் கடவுளுடனான உறவை இழக்கும் நிலையை அடைகின்றனர். இந்த

இறையுறவற்ற சூழலினின்று இறையுறவைத் திரும்பப்பெற இயலும் எதிர்நோக்கைத்தான் தானியேல் 12: 2 விதைக்கின்றது.

கடவுளை அறிந்து, நம்பிக்கையில் நிலைத்து நின்ற மக்கள் பகைவர்களின் போர் வாளாலும், நெருப்பாலும், கொடும் சிறையாலும் மாண்டாலும் முடிவின் காலத்தில் உயிர்பெற்று மீண்டு வருவர் என்பது சிறப்பு. இயேசுவைச் சிலுவைக்கு உள்ளாக்கியோர், உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உடைய பரிசேயர் உட்பட தலைமை குருக்களும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிகழக்கூடாது எனக்கருதி இயேசுவின் கல்லறைக்கு முத்திரையிட்டுக் காவலும் வைத்தனர். ஆனால் இவர்தம் திட்டம் பொய்த்துப்போய், இயேசு உயிர்த்தெழுதலின் முதற்பலனாகி மாண்டவர் மீள்வர் என்பதனை உறுதியாக்கினார்.

## 2. மீண்டவர் வாழ்வர்

“ . . . அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்” (தானி. 12: 2)

முடிவில்லா வாழ்வு என்பது இறையுறவுடன் மரணமின்றி நீடித்து வாழும் நிலைவாழ்வு ஆகும்.

மரணித்தவர் உயிருடன் எழும்புவர். ஆனால் உயிர்பெற்று எழும் அனைவரும் நிலைவாழ்வுதனைப் பெறுவதில்லை. இறைவனுக்கு ஏற்புடையோராய் உலகினில் வாழ்ந்தவரே நிலைவாழ்வினைப் பெறுவர்.

தானியேல் பதினொன்றாம் அதிகாரம் சுட்டுகின்ற போர்ச்சூழலில் சிலர் எதிரிகளின் பசப்பு மொழிகளால் ஈர்க்கப்பட்டு இறைவனுடனான உடன்படிக்கையை மீறி எதிரிகள் பக்கம் சாய்ந்து விடுவர். ஆனால் கடவுளுடனான உடன்படிக்கையால் உறுதியோடு நிற்போரோ எதிரிகளின் வாளையும் நெருப்பையும் கண்டு அஞ்சாது எதிர்கொள்வர். இவற்றால் மடிந்தும் போவார் (தானி. 11: 33). இப்படி இறைவனின் பக்கம் இறுதிவரை நிற்போருக்கானதே நிலைவாழ்வு.

துன்பக் காலத்தையும், சோதனைக் காலத்தையும் எதிர்கொள்ளும் இறைமக்களை ஊக்கப்படுத்தி தளர்ந்து போன நம்பிக்கையினைக் கட்டி எழுப்புவதை நோக்கமாகக் கொண்ட பேதுரு எழுதின முதலாம் நிரூபம் அழியாத, மாசற்ற, ஒழியாத உரிமைப்பேறு விண்ணுலகில் உண்டு என விளம்புகிறது (1 பேது. 1: 4).

கொலைஞராகவோ, திருடராகவோ, தீமை செய்பவராகவோ இருந்தால் இறைவன் தரும் நிலைவாழ்வைச் சொந்தமாக்க இயலாது என்பதனைத் தெளிவுபடுத்தி, கிறிஸ்துவின் பொருட்டு துன்புறுவோருக்கு இறைவனின் மாட்சி வெளிப்படும் நாளில் அதற்குரிய பலன் உண்டு என்பதனைப் பேதுரு அப்போஸ்தலர் உறுதிப்படுத்துகின்றார் (1 பேதுரு. 4: 15-19).

### 3. வாழ்பவர் ஒளிர்வர்

“ஞானிகள் வானத்தின் பேரொளியைப்போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும் என்றென்றைக்கும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்” (தானி. 12: 3).

ஒளிர்தல் என்பதின் அடிப்படையான பொருள் பலருக்குப் பயன்தரும் வாழ்வைக் கொண்டிருத்தல் என்பதாகும். இயேசு தம்முடைய மலைப்பொழிவினில் தம் சீடர்களைப்பார்த்து, “நீங்கள் உலகினுக்கு ஒளியாயிருக்கிறீர்கள்” என்பார் (மத். 5:14).

தானியேல் உணர்த்துவது பலருக்குப் பயனுள்ள வாழ்வை உடையவர்களாய் இம்மையில் வாழ்ந்தவர்கள் மறுமையிலும் பயன் கொடுக்கும் வாழ்வைப் பெற்றுக்கொள்வர் என்பதாகும். இக்கருத்து இறைமக்களுகக்கு நம்பிக்கையை விதைக்கும் எண்ணத்தின் தொடர்ச்சியாகும்.

துன்பக்காலத்தில் ஞானத்துடன் அதாவது இறையச்சத்துடன் (நீதி.9: 10) கடவுளின் வழிகளைப்போதித்து பலரை நல்வழிக்குக் கொண்டு வந்தவர்கள் அதன் பலனை அடைவர். அவர்கள் இரவிலும் பகலிலும் அதாவது எப்போதும் முடிவில்லாக் காலத்துக்கும் பயன் கொடுக்கும் வாழ்வைப் பெறுவார் என்பதனைப் பேரொளியைப் (சூரியன்) போலவும், விண்மீன்களைப் போலவும் எனும் ஒப்புமைகள் உணர்த்துகின்றன.

உலகத்தின் முடிவில் என்ன நடக்கும் என்பதனை வயலில் தோன்றிய களைகள் என்னும் உவமை வழி இயேசு விளக்கும்போதும் “நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல ஒளி வீசுவர்” என்கிறார் (மத். 13: 43).

### முடிவுரை

தீமை நன்மையைச் சில நேரம் மேற்கொள்வது உண்டு. நீதியை அநீதி சில நேரம் விழுங்குவது உண்டு. உண்மையைப் பொய்மை சில நேரம் அபகரிப்பதும் உண்டு. இச்சூழல்கள் சமூகத்தில் மலிகின்றபோது நன்மை செய்தவர்களும் நேர்மையாளர்களும் நீதியை விரும்பியவர்களும் அவநம்பிக்கைக்கு உள்ளாகிச் சோர்ந்து விடுகின்றனர். ஆனால் உண்மைக்கும் நீதிக்கும் நேர்மைக்கும் ஒருநாளும் சாவு இல்லை. இவைகள் அநீதிகளால் மங்கிக் கிடந்தாலும் ஒருநாள் வீறுகொண்டு எழும். தானியேலின் புத்தகத்தின் திருவசனங்கள் இதைத் தெளிவுபடுத்துகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதல் இதனை உறுதிப்படுத்தவும் செய்திருக்கிறது.

**அருள்திரு. T. சுதீர்**

# உயிர்ப்பு: மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல்

## Resurrection : Celebrating the Joy of Salvation

விப. 14: 5-31 கொலோ. 3: 1-11

திபா. 118: 14-29 மத். 28: 1-10

“அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்...” (மத். 28: 6).

ஆண்டுகள் ஈராயிரம் தாண்டினாலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புச் செய்தி மீட்பின் மகிழ்வுச் செயலாகவே உள்ளது. ஆகவே உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வின் கொண்டாட்டம்தான். உலக அதிசயங்களில் ஒன்று சீனப் பெருஞ்சுவர். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் கட்டத் தொடங்கிப் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கட்டப்பட்டும் சீரமைக்கப்பட்டும் வந்தது. அதன் நீளம் ஏறத்தாழ 4000 மைல்கள் (6400 Km) சீன நாட்டின் வடபகுதியைப் பாதுகாப்பதற்கென்று கட்டப்பட்டது. நிலாவிலிருந்து பூமியைப் பார்க்கும் போது மனிதனால் கட்டப்பட்ட கட்டடங்களில் கண்ணுக்குத் தெரிகின்ற கட்டடம் இது மட்டுமே!

இவ்வளவு புகழும், வலிமையும் பெற்ற கட்டடம் சீன நாட்டிற்கு அரணாக இருக்கும் என்று கருதப்பட்டது. இதனால் அன்னியப்படை அவ்வளவு எளிதில் சீனாவுக்குள் நுழைய முடியாது என்று கருதப்பட்டது. ஆனால் எதிரிகள் இதையும் தாண்டி சீனாவுக்குள் நுழைந்தனர். எவ்வாறு? சீனப் பெருஞ்சுவரில் ஆங்காங்கே இருந்த நுழைவு வாயில்களில் காவல் பணியாளர்களுக்கு லஞ்சம் கொடுத்ததன் விளைவாக. தலைமை குருக்களும், மூப்பர்களும் ஆண்டவரின் உயிர்ப்பைக் காவலர்களுக்கு லஞ்சம் கொடுத்து தகர்த்துவிடலாம் என்று எண்ணினார்கள். ஆனால் உயிர்ப்பு சீனப் பெருஞ்சுவர் போன்றது அன்று. அதை லஞ்சத்தின் மூலம் ஒன்றுமில்லாததாக ஆக்கிவிட முடியாது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு செயல் உண்மை வரலாற்றுச் செயல்; அது மீட்புச் செயல் அதைக் கொண்டாடித்தான் ஆகவேண்டும். ஆகவேதான் “உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல்” என்னும் சிந்தனை.

கதிரவனை யாராலும் கட்டிப்போட இயலுமா? ஆண்டவரைப் புதைத்து விட்டதாக பகைவர்கள் பெருமையடித்துக் கொண்டார்கள் : அவரோ “புதையலாக” வெளிப்பட்டார். அவரது பூதஉடல் மண்ணோடு மண்ணாகிப்

போகும் என்று மனக்கோட்டை கட்டினார்கள். அவரோ மூன்று நாள் தூங்கிய புயலாகப் புறப்பட்டார்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தார் நம் உள்ளத்தில் ஒரு தன்னம்பிக்கை பிறந்திருக்கிறது. நம்மை எரிக்க வரும் எந்த நெருப்பும் இனி எரிந்து போகும் என்னும் நம்பிக்கை. ஆயிரம் தோல்விகள் மத்தியிலும் அசைக்க முடியாத நம்பிக்கையில் இனி நம்மால் வாழ முடியும் என்று ஒரு மனத் தைரியம் ஏற்பட்டிருக்கிறது. உயிர்ப்பு ஏன் மீட்பின் மகிழ்வின் கொண்டாட்டம் எனத் தியானிக்கும் போது :

### 1. பட்ட மரம் துளிர்த்தது :

“அவர் இங்கே இல்லை அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்” (மத். 28: 6).

கல்லறைகள் எல்லாம் மூடியே இருக்க; ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கல்லறை மட்டும் திறந்திருப்பதின் இரகசியம்; பட்டமரம் துளிர்த்திட்ட அனுபவம் தான். அவர் இறந்தார், அடக்கம் பண்ணப்பட்டார் உண்மைதான். ஆனால் அவர் உயிர்த்தார். அவர் துளிர்த்தார் அதுதான் நம் மீட்பு அதுதான் நம் மகிழ்வு அதுதான் நம் கொண்டாட்டம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளும் சிலுவைச் சாவும் சிலுவையைப் புனிதமாக்கிற்று, துளிர்விடச் செய்தது எனலாம். பவுலார் நீதி சட்டத்தை மேற்கோள்காட்டி குறிப்பிடும் போது (இச. 21: 23). “மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்” என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார்.” (கலா. 3: 13).

இயேசு கிறிஸ்துவால் சிலுவைமரம் சிலுவையாகிய பட்டமரம் துளிர்த்தது என்பதைப் பவுலார் குறிப்பிடும்போது : “நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப் பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்டமாட்டேன்” (கலா. 6: 14). பவுலார் சிலுவையைக் குறித்து பெருமை பாராட்டுகின்றார் என்றால் அது கிறிஸ்துவால் துளிர்விட்ட மேன்மையான அடையாளமானதினால் தானே இல்லையா?

கிறிஸ்துவின் இறப்பால் பயந்து, பட்டுப்போன மரமாய் பூட்டிய அறைக்குள்ளே அடங்கிபோன அடியவர்கள், (யோவா. 20: 19) எம்மாவு கிராமத்துக்கு ஓடிப்போனவர்கள், பட்டுப்போனவர்கள், கிறிஸ்துவின் உயிர்ப்பால் துளிர்விட்டு துணிச்சலோடு சாலமோன் மண்டபத்தில் ஏறி நின்று

கூறிய வார்த்தை “வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள் ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார் இதற்கு நாங்கள் சாட்சிகள்” (தி.ப. 3: 15).

பட்டமரமாய் பூட்டிய அறைக்குள் முடங்கிப்போன அடியவர்களை உயிர்த்த ஆண்டவர் துளிர்விடச் செய்தார் எனலாம். மட்டுமல்லாது தாங்கள் மட்டுமல்ல மற்றவர்களையும் துளிர்விடச் செய்தனர் (யோவா. 19: 22). என்று யோவான் குறிப்பிடுகின்றார்.

எல்லாம் முடிந்துவிட்டது, பட்டுப்போய் விட்டது என்று பயத்தினால் அறைக்குள் அடங்கி, என்னை யாரும் பார்க்க கூடாது. நானும் யாரையும் பார்க்க விரும்பவில்லை ‘Leave me alone’ என்று தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு வாழும் எத்தனை பேர் இந்த உலகில் உண்டு. நோய், இயலாமை, இல்லாமை, உறவுகள் உதறிவிட்ட நிலை, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று பட்டுப்போன அனுபவங்களுக்குள்ளாக வாழும் நமக்கு உயிர்ப்பு நம்மை துளிர்விடச் செய்யும் ஆற்றல் என்பது தான் மீட்பின் மகிழ்வின் கொண்டாட்டம்.

முடிந்தது இவ்வாழ்வு என்னும் முன்னை பயம் வேண்டாம்
முடிவில் தொடரும் துளிரில் வாழ்வின் புதுமை பின் காண்போம்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் உலகை வென்றவர்
உள்ளம் சோரும் வேளை வந்து உதவி செய்பவர்

என்ற பாடல் வரிகள் நம்மை உயர்ப்பின் கொண்டாட்டத்திற்கு அழைக்கிறது.

கதிரவனைக் கண்ட தாமரை மலர்வதைப் போல
நீதியின் சூரியனாம் உயிர்த்த ஆண்டவரைக் கண்டு
துளிர்விட்டு வாழ உயிர்த்த ஆண்டவர் அருள்புரிவாராக.

ஆம் உயிர்ப்பு மீட்பின் மகிழ்வின் கொண்டாட்டம்.

**2. பரலோகம் திறந்தது**

“நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார்” (கொலோ. 3:1).

சிலுவையாகிய திறவுகோலைக் கொண்டு இயேசு கிறிஸ்து பரலோக வாசலைத் திறந்தார். அதுதான் Easter. “இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நாம்

விண்ணக வாழ்வுக்கு உரியவர்கள்” என்பதைப் பறைசாற்றுகிறது. ஆகவே ஆண்டவர் தமது உயிர்ப்பால் பரலோக வாசலைத் திறந்தார்; மட்டுமல்ல நமக்கும் ஓர் இடம் ஏற்பாடு செய்கிறேன் என்கிறார்.

“என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன் என்று சொல்லியிருப்பேனோ? நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்பொழுது நான் இருக்கும் இடத்தில் நீங்கள் இருப்பீர்கள்” (யோவா. 14: 2-3).

திவ்விய வாசகன் யோவானுக்கு உயிர்த்த ஆண்டவர் கொடுத்த காட்சியினுடைய மாட்சி அதுதான் “இதன்பின் நான் ஒரு காட்சி கண்டேன்; விண்ணகத்தில் ஒரு கதவு திறந்திருந்தது.... இவ்விடத்திற்கு ஏறி வா....” (திருவெளி. 4: 1) என்று குரல் எக்காளமாய் முழங்கியது.

மகிழ்வோடு தொடங்கிய இஸ்ராயேலரின் விடுதலைப் பயணம் செங்கடலை முட்டி நின்ற போது முன்னால் செங்கடல், பின்னால் பார்வோனின் சேனைத் திரள். ஐயோ முடிந்து விட்டது என்று அங்கலாய்த்த சமயம், இல்லை இல்லை முடிவு இல்லை, புதிய விடியல் என்று புதிய வழித்தடத்தை, செங்கடலில் வாசலைத் திறந்து வழி வகுத்துக் கொடுத்த யாவே கடவுளின் ஆற்றலில் கிறிஸ்துவின் உயிர்ப்பு அடையாளப்படுத்தப்படுகிறது இல்லையா? (வி.ப. 14: 15-22). கல்லறையோடு காணாமல் போவதற்குக் கடவுள் மனிதர்களைப் படைக்கவில்லை. காலங்களைக் கடந்து அவரோடு கூடி வாழும் பேரின்பப் பெருவிழாவுக்காகவே நம்மைப் படைத்தார். மனித வாழ்க்கைப் பயணத்தில் மாபெரும் மீட்பைப் பெற்று மகிழ்ந்து கொண்டாடவே ஆண்டவர் உயிர்த்தார்.

கல்லறையே கடைசி வீடு என்ற நிலை வேண்டாம்
கல்புரண்ட காட்சிதனைக் கணமே எண்ணுவோம்

உயிர்த் தெழுந்த ஆண்டவர் உலகை வென்றவர்.
உள்ளம் சோரும் வேளை வந்து உதவி செய்பவர்.

என்ற பாடலின் வரிகள் நமக்குப் பரலோகத் திறந்த வாசலை அடையாளப்படுத்தி நிற்கிறது எனலாம்.

ஆண்டவர் சிலுவையில் மரித்து தமது உயிர்ப்பின் வழியாய்ப் பரலோக வாசலைத் திறந்து வைத்துள்ளார். பரலோக வாசலில் நுழைய நாம் பாவத்திற்கு மரித்து பரலோகத்தை உரிமையாக்கிக் கொள்ள ஆண்டவர் விரும்புகிறார்.

“நெருப்பைச் சந்திக்காத தங்கம் முழுமை அடைவதில்லை”.

அதுபோல பாவத்திற்கு மரிப்பதில் மரண அவஸ்தைப் படாத எவரும் பரலோகத்தை சொந்தமாக்குவது கடினம். வாலிபன் ஒருவன் உயர்ந்த கொடி மரத்தில் ஏறி கீழே இறங்கிய போது அவனது தலை சுற்றியது. ஐயோ நான் செத்தேன் என்று கதற; கொடி மரத்தின் அடியில் இருந்த பெரியவர் ஒருவர், “தம்பி கீழே பார்க்காமல் மேலே பார்த்துக் கொண்டே இறங்கு” என்றார். அவனும் அவ்வாறே செய்து பத்திரமாய்க் கீழே இறங்கினான்.

நாம் நம்மையும், நம் பிரச்சனைகளையும் பார்க்கும்போது நமது தலை சுற்றுகிறது; இரத்த அழுத்தம் உயர்கிறது, வாந்தி வருகிறது; வயிறு வலிக்கிறது, இருப்பதைவிட இறப்பது மேல் என்று தோன்றுகிறது. ஆனால் பவுலார் கூறுவது போல “நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்; அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கம் அமர்ந்திருக்கிறார்” (கொலோ. 3: 1).

நம் எண்ணங்களும், பார்வைகளும் மேலுலகு சார்ந்தவைகளாக இருக்கவேண்டும். ஏன் என்றால் நம் மீட்பர் அங்கிருக்கிறார். அதுதான் நம் மகிழ்ச்சி, நம் கொண்டாட்டம், ஆம் உயிர்ப்பு மீட்பின் மகிழ்வின் கொண்டாட்டம்.

உயிர்ப்பு : பட்டமரம் துளிர்விடும் அனுபவம்

பரலோகம் திறக்கும் அனுபவம் இந்த அனுபவத்தில் நாம் பெற்றுக்கொள்வது மீட்பின் மகிழ்ச்சி. இந்த மகிழ்வைக் கொண்டாடுவோம்; இறையாளுகைக்குள் இணைவோம்.

அருள்திரு. **S.M. டேனியல் தேவதாசன்**

# வழிநடத்தும் வல்ல கடவுள்

இச. 1: 29 - 33

"பாளையமிறங்கத்தக்க இடத்தை உங்களுக்காகத் தேடவும், நீங்கள் செல்ல வேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும், இரவில் நெருப்பிலும் பகலில் மேகத்திலும் உங்கள் முன் அவர் நடந்து சென்றாரே!" (இச. 1: 33)

Let's make a deal என்ற Game Show மிகவும் பிரசித்திப் பெற்றது. இதை மாண்டி ஹால் (Monty Hall) என்பவர் நடத்தி வந்தார். இந்த Game Show வில் மாண்டி ஹால் பார்வையாளர்களைக் கவரும் வகையில் மூன்று கதவுகளை வைத்திருப்பார். அதில் ஏதாவது ஒரு கதவுக்குப் பின்னால் விலையுயர்ந்த கார் (Car) ஒன்று வைக்கப்பட்டு இருக்கும் வேறு இரண்டு கதவுகளுக்குப் பின்னால் விலைகுறைந்த சாதாரணமான பொருட்களை வைத்திருப்பார். இந்த நிகழ்ச்சியை நடத்தும் மாண்டி ஹால் பார்வையாளர்களிடம் கேட்பார், நீங்கள் எந்தக் கதவைத் தெரிவு செய்யப் போகிறீர்கள்? எந்தக் கதவுக்குப் பின்னால் இருக்கும் பொக்கிஷம் உங்களுக்கு வேண்டும்? மாண்டி ஹால் கேட்கும் இக்கேள்வியால் பார்வையாளர்கள் குழம்பிப் போவார்கள். எதைச் சொன்னால் விலையுயர்ந்த காரைப் பரிசாகப் பெற்றுச் செல்லலாம் என்பது தான் குழப்பத்துக்கான காரணம்.

நமது வாழ்க்கை ஓட்டத்திலும் எண்ணற்ற கதவுகள் காணப்படுகின்றன. எந்தக் கதவின் வழியாகச் சென்றால், என் வாழ்வு வளம் பெறும்? எதைத் தெரிவுச் செய்தால் இந்த அவனியில் என்னால் அமைதியாக வாழ முடியும்? போன்ற கேள்விகளும் குழப்பங்களும் நமக்குள் எழுகின்ற நிலையில் கடவுள், இப்புதிய மாதத்தில் இஸ்ரயேல் மக்களைப் பாலைவனப் பயணத்தில் இரவில் நெருப்பாலும் பகலில் மேகத்தாலும் வழிதனைக் காட்டி முன்சென்று நடத்தினது போல நம்மையும் வழிநடத்த வல்லவராயிருக்கிறார்.

**1. சுமக்கும் கடவுள்** (இச. 1 : 31)

பாலை நிலத்தில், நீங்கள் நடந்து வந்த வழிகளில் எல்லாம் இங்கு வந்து சேரும்வரை ஒருவன் தன் மகனைத் தூக்கிச் செல்வது போல, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களைத் தூக்கி வந்ததைக் கண்டீர்களே!

இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக எகிப்தில் இருந்தபோது பட்ட பாடுகளும், அடைந்த துன்பங்களும் எண்ணில் அடங்காதவை. துன்புறும் மக்களோடு தம்மை இணைத்துக்கொள்ளும் கடவுள், மோசே வழியாக

இஸ்ரயேலர்களை விடுவித்து வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டிற்கு அழைத்துச் செல்லுகிறார்.

இஸ்ரயேலரின் இந்தப் பாலைநிலப் பயணத்தில் பல புதுமைகளும், அருஞ்செயல்களும், புரட்சிகரமான இறைவெளிப்பாடும் அதிகம் இருந்தன. பயணத்தில் செங்கடல் எதிரே நின்றபோது இரண்டாகப் பிளந்து பாதையைக் காட்டி, பசியினால் முணுமுணுத்த மக்களுக்கு மன்னா, காடை போன்றவைகளை ஆண்டவர் தம் அருஞ்செயலால் வழங்கினார். தாகம் தீர பாறையிலிருந்து தண்ணீர் தருவிக்கப்பட்டது. கசந்துபோன தண்ணீரும் கூட மதுரமாக மாற்றம் பெற்றது.

பாலைநிலப் பயணத்தில் ஏற்பட்ட கடினங்களிலும் களிப்புகளிலும் தகப்பன் தன் மகனைச் சுமந்து செல்வதுபோல, கழுகு தன் குஞ்சுகளைச் சுமப்பதுபோல, தாய் கருவறையில் குழந்தையைச் சுமப்பதுப்போல, நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மைச் சுமந்து வந்தார் என மோசே இஸ்ரயேலருக்கு கடவுளின் உடனிருப்பையும் பராமரிப்பையும் உணர்த்தி மக்களைப் புரிந்துகொள்ளச் செய்கிறார்.

வாழும் உலகில் கடவுளின் அன்பு ஒன்றே மிகவும் உயர்ந்ததும் உன்னதமானதாகும். இதைத்தான் இறைவாக்கினர் ஏசாயா வழியாகத் தெளிவுப்படுத்துகிறார். உங்கள் முதுமை வரைக்கும் நான் அப்படியே இருப்பேன்; நரை வயது வரைக்கும் நான் உங்களைச் சுமப்பேன்; உங்களை உருவாக்கிய நானே உங்களைத் தாங்குவேன்; நானே உங்களைச் சுமப்பேன்; நானே விடுவிப்பேன் என்கிறார் (எசாயா 46: 4, ஒசே 11: 1, 3 4).

துன்பங்கள் நிறைந்த அவனியில் கடவுள் நம்மை வழிநடத்தும் விதம் முற்றிலும் வித்தியாசமானது கட்டுக்கடங்காத கடினங்களாலும், கடக்க முடியாத கடினப் பாதைகளாலும், கரடுமுரடான வழித்தடங்களாலும் அல்லலுறும் போது தந்தை தன் மகனை தோளில் தூக்கிச் செல்வது போல் நம்மையும் சுமந்து வழிநடத்தும் ஆற்றலுள்ள ஆண்டவருடைய கரங்களில் நம்மைக் கொடுப்போம்.

**2. முன்நடக்கும் கடவுள்** (இச. 1: 33)

பாளயமிறங்கத்தக்க இடத்தை உங்களுக்காகத் தேடவும், நீங்கள் செல்ல வேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும், இரவில் நெருப்பிலும் பகலில் மேகத்திலும் உங்கள் முன் அவர் நடந்து சென்றாரே! (இ.ச. 1: 33)

கடவுள் வழிகாட்டுபவர்! செல்லும் வழி தெரியாமல் தடுமாற்றத்தோடு கலங்கி நிற்கும் அனைவருக்கும் வாழ்வாகவும் வழியாகவும் இருந்து

பாதையைக் காட்டித் தருபவர் என்ற பேருண்மையை இத்திருமறைப் பகுதி நமக்குக் கற்றுத்தருகின்றது. முன்நடத்தல் என்பது வழிகாட்டுதல் என்ற பொருளைத் தருகிறது. பழக்கப்படாத பாதையில் பயணிக்க நேருங்கால் அப்பயணத்தில் ஆண்டவர் பங்கெடுத்து நமக்கு முன்னே சென்று கோணலாய் இருப்பவற்றைச் செவ்வைப்படுத்துகிறார். கடினமானதை எளிதாக்கி இலக்கை அடைய வழி காட்டுகிறார்.

இஸ்ரயேல் மக்கள் பாலைநிலப் பயணத்தில் தடுமாறாமலும் திசைமாறாமலும் பயணிக்க மேகத்தூணையும் நெருப்புத் தூணையும் அடையாளமாக வைத்து ஆண்டவரே அவர்களுக்கு வழிகாட்டியாக முன் சென்றார். ஆண்டவர் தம் மக்களை வழிநடத்த பகலில் மேகத் தூணிலும், இரவில் அவர்களுக்கு வழிகாட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார். தமக்கு உரிமையானவர்களைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் கடவுள் இயற்கையையும் இங்குப் பயன்படுத்துகிறார். மேகத்தூண் நகரும்போது மக்களும் நகர்ந்தனர். அது நிற்கும்போது மக்களும் ஓய்வு எடுத்துக் கொண்டனர். இந்த இருதூண்களும் சென்ற திசையை நோக்கியே மக்களும் பயணப்பட்டனர்.

"....அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார். தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டி வந்த பின் அவர் அவற்றிற்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும்...." யோவா. 10: 3, 4, திபா. 78: 52.

நமது வாழ்க்கைப் பயணம் கடினமாகவும், உயரமாகவும், செங்குத்தாகவும், பழுதாகவும், பளுவாகவும் அமையும்போது நாம் சோர்வடைய வேண்டியதில்லை. இயேசுகிறிஸ்து நமது பலவீனங்களிலும், சோர்வுகளிலும் உடனிருந்து, நமது தோள்களில் உறுதியான மற்றும் மென்மையான அவரது காயப்பட்ட கரத்தை வைத்து இப்புதிய மாதத்தில் நம்முடன் பயணிக்கிறார் என்பதை உணர அழைக்கப்படுகிறோம். கடவுள் நம்மை வழிநடத்துவதோடு மட்டுமல்லாமல் அவரே வழியாகவும் உள்ளார்.

வழிநடத்தும் வல்ல கடவுளிடம் நம் வாழ்வைக் கையளிப்போம். வாழ்வு என்னும் பயணத்தில் வலுவிழந்துபோகும் நேரத்தில் தோளில் சுமக்கும் கடவுள் அவர்! வழி தவறும் தருணத்தில் வழி அறியா நேரத்தில் முன் செல்லும் கடவுள் அவர்! வல்ல கடவுள் வழி நெடுக நம்மை நடத்தி வந்தால் பாதைகள் அனைத்தும் தெளிவடையும்!

அருள்திரு. R. ஜெஸ்பேள் ராபின்

*07.04.2024*

# உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு

## ENCOUNTER WITH THE RISEN LORD

தொநூ 32: 22-32 திப 9:1-18

திபா 40 யோவா 20: 24-29

"தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்றார். இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார்." (யோவா 20: 28-29)

கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களான நாம் அவருடைய நேரடிப் பார்வையில் அனுதினமும் இருக்கிறோம். ஒவ்வொரு நாளும் கடவுளைச் சந்திப்பது அவருடன் இணைந்து வாழும் ஆசிநிறைந்த வாழ்வாகும். திருமறையில், கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான சந்திப்புக்கள் மனித வாழ்வில் உன்னத அனுபங்களைத் தந்திருக்கிறது. நம்மைச் சந்திக்க விரும்பும் கடவுளை நாமும் சந்திக்க தயாராக வேண்டும். வாழ்வின் பல்வேறு சூழல்களில் கடவுள் நம்மைச் சந்திக்கிறார். நம்மோடுள்ள உறவை மீட்டெடுக்க, நாம் எங்கே இருக்கிறோம் எனத் தாமாகவே நம்மைத்தேடி வந்து சந்திக்கிறார் (தொநூ 3: 9)" நாம் தவறுகள் செய்து உடன்வாழ் மக்களிடமிருந்தும், கடவுளிடமிருந்தும் தூரமாய்ச் சென்றாலும் தம் உடனிருப்பை உணர்த்த (தொநூ 28: 15), தம் பணிக்காக நம்மை அழைக்க (விப 3: 1-15), கொடிய சவால்களின் நடுவிலும் நம்மைத் துணிவுடன் உறுதிப்படுத்த (1அர 19: 1-18), கடவுளின் மீட்புக்குக் கருவியாக நம்மை உருவாக்க (லூக் 1: 26-38), ஆண்டவரைக் குறித்த அறிவில் உள்ள குழப்பங்களிலிருந்து தெளிவைத் தர (லூக் 24: 13-17) கடவுள் நம்மைச் சந்திக்கிறார். உக்ரைன் நாட்டின் மூத்த போதகர் சண்டே அடெல்ஜா Sunday Adelaja) என்பவர் கடவுளுடனான சந்திப்பைக் குறித்துக் கூறும்போது, "கடவுளோடுள்ள ஒவ்வொரு சந்திப்பிலும் ஆழமானவைகள் உங்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது" என்கிறார் (Deep things are revealed to you in every encounter with God). கடவுளுடனான சந்திப்பு நமக்குள் தரும் அனுபவம் என்ன என்பதைச் சிந்திப்போம்.

**1. பெயர் மாற்றம் தரும் இறைச் சந்திப்பு** (தொநூ 32: 22-32)

இறைதூதர்கள் அடிக்கடி மனித உருவில் மனிதர்களைச் சந்தித்த நிகழ்வுகள் திருமறையில் கூறப்பட்டுள்ளன. இங்கு யாக்கோபைக் கடவுள்

இறைத்தூதராக வந்து சந்தித்த இச்சந்திப்பில் நடந்த போராட்டமும், யாக்கோபு பெற்ற மாற்றமும் விளக்கப்பட்டிருக்கிறது. இது, யாக்கோபு 20 ஆண்டுகளுக்கு முன் ஏமாற்றிய தன் சகோதரன் ஏசாவைச் சந்திப்பதற்கு முந்தைய இரவு நடந்த நிகழ்வாகும். கடந்த 20 ஆண்டுகளில் யாக்கோபின் வாழ்வில் என்ன நடந்தது என்பதற்கு அடையாளமான ஒரு போராட்டம் தான் இங்கு நடைபெற்றது. தன் சகோதரனையும் தந்தையையும் ஏமாற்றி வெற்றி பெற்றது போல் எண்ணம் கொண்டு வாழ்ந்த யாக்கோபு, இங்குக் கடவுளோடு போராடி வெற்றி பெற நினைத்தார். 147 ஆண்டுகள் வாழ்ந்த (தொநூ 47:28) யாக்கோபின் தொண்ணூறாவது வயதில் இப்போராட்டம் நடைபெற்றது. தன் இளவயதில் நல்ல ஆற்றலுள்ளவரான யாக்கோபு தன் முழு ஆற்றலோடும் கடவுளோடு போராடுகிறார். இந்தப் போராட்டத்தில், யாக்கோபுக்குச் சில பாடங்களைக் கற்பிக்க இறைதூதர் யாக்கோபின் தொடை மூட்டுப் பகுதியைத் தொட்டார். யாக்கோபு தன் வாழ்நாள் முழுவதும் நொண்டி நடந்தார். பணிவும், மனத்தாழ்மையும் மிக முக்கியம் என்பதைக் கற்பித்து, கடவுள் கொடுத்த செழுமையின் காரணமாகவோ அல்லது இறைத்தூதருடன் போராட்டம் நடத்தினதற்காகவோ அதிகமாக தன்னை உயர்த்தக்கூடாது என்பதற்கான நிலையான நினைவூட்டலாக கடவுள் யாக்கோபைத் தொட்டார்.

பெண்களைக் கொண்டும், செல்வத்தைச் சேர்த்தும் வாழ்ந்து, அவைகளைப் பற்றிக்கொண்டிருந்த யாக்கோபு, இங்கு, எந்த ஒரு சாதாரண மனிதனுடனும் தான் போராடவில்லை என்பதை உணர்ந்து, “நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போகவிடேன்” எனக் கடவுளைப் பற்றிகொண்டார் (தொநூ 32:26). கடவுள் யாக்கோபின் பெயரை, “இஸ்ரயேல்” என மாற்றம் செய்தார். “தட்டி வீழ்த்துவோர்” “ஏமாற்றுபவர்” அல்லது “கால் வாரிவிடுபவர்” என்ற பொருள் உள்ள “யாக்கோபு” என்னும் பெயர் இங்கு “இறைவனோடு போராடினவன்” என்ற பொருள் உள்ள “இஸ்ரயேல்” என மாற்றப் பெறுகிறது.

இது மாற்றத்தின் தருணம், ஒரு புதிய தொடக்கம். கடவுளோடு உள்ள சந்திப்பில் யாக்கோபு ஒரு புதிய மாற்றம் பெற்றார். பெயர் மாற்றம் என்பது இறைவனில் வாழ்வதற்கான ஒரு புதிய அடையாளம். பழைய சுயத்தை உதறிவிட்டு புதிய மனிதனை அணிந்து கொள்ள அழைக்கப்பட்டார். நம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் இதுபோன்ற சந்திப்புகள் இருக்கும். யாக்கோபு தனது வாழ்நாள் முழுவதும் ஒரு தளர்ச்சியுடன் இருந்தார். அவர் கடவுளைச் சந்தித்ததையும், கடவுளில் பெற்ற மாற்றத்தையும் நினைப்பூட்டும் ஒரு நிலையான நினைவூட்டல் ஆகும். யாக்கோபின் இந்த மாற்றம் மீண்டும் மீண்டும் உறுதிசெய்யப்படுவதையும் திருமறையில் நாம் காண்கிறோம் (தொநூ 35: 10).

மனிதவாழ்வில் மன்னிப்பு என்பது மிக முக்கியமானது” அது கடவுளின் பேரிரக்கத்தால் மட்டுமே பெறமுடியும் என்பதும், கடவுளை நெருங்கிவந்து அவரை அறிதலும், அவரை நெருங்கிவர மனத்தாழ்மை மிகத் தேவை என்பதும், பழைய இயல்புகள் அகன்று புதிய படைப்பாய் மாறுதல் என்பது கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய அடையாளத்தைத் தரும் என்பதும் இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடமாக அமைகின்றன. கடவுளை உண்மையாய் சந்திப்பது தரும் மாற்றத்தைக் குறித்து சிறந்த எழுத்தாளரான றாபின் பெர்ட்ராம் (Robin Bertram) என்பவர், “வாழும் கடவுளுடனான ஓர் உண்மையான சந்திப்பு, சமயப்பற்றின் வீரியத்தை உடைக்கிறது” மனிதனின் செருக்கை வெறுமையாக்குகிறது” மிகவும் இழிவான, கெட்ட மனிதனைக் கூட கடவுளின் மாட்சிமைக்காக வாழும் ஒரு பாத்திரமாக மாற்றுகிறது” என்கிறார்.

**2. பணிமாற்றம் தரும் ஆண்டவரின் சந்திப்பு** (திப 9: 1-18)

திருச்சபை இன்று உலகெங்கும் பரவியிருக்கிறது என்று சொன்னால் அதற்கு அடித்தளமிட்டவர் தூய பவுலடியார் என்பதை எவராலும் மறுக்க முடியாது. “புறவினத்தாரின் திருத்தூதர்” என்று அழைக்கப்படும் தூய பவுலடியாரின் மனமாற்ற நிகழ்வு திருமறையில் மூன்றுமுறை சொல்லப்படுகிறது (திப. 9: 1-22’ 22: 3-16’ 26: 9-23). தூய பவுலடியாரின் மனமாற்றம்தான் கிறிஸ்தவத்தின் மற்றும் திருச்சபையின் எல்லைகளை உலகமெங்கும் விரிவுபடுத்தியது. கிறிஸ்தவர்களையும், திருச்சபையையும் துன்புறுத்தி, கிறிஸ்தவத்தை வேரறுக்க நினைத்துச் சென்ற தூய பவுல், தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் ஆண்டவரால் பிடிக்கப்பட்டார். பின்பு கிறிஸ்துவுக்காக துன்பமேற்று, எதையும் செய்யத்துணிந்தவராகத் தன்னை ஒப்படைத்தார்.

பவுல் தமஸ்கு பாதையில் மிகப்பெரிய ஒளியைக் கண்டு பார்வையிழந்து, தடுமாறி விழுந்து அங்கு ஆண்டவரைச் சந்தித்தார். பவுலின் இந்தப் பார்வையிழப்பு என்பது தண்டனையையோ, ஆற்றலின்மையையோ, அறியாமையையோ குறிப்பது அல்ல. மாறாக, இது ஞானத்தைக் குறிக்கிறது. தன் பார்வையிழப்பால் பவுல் ஆன்மிக உள்ளொளியை, ஆன்மிக அறிவைப் பெற்று, ஆண்டவர் இயேசுவைத் தெளிவாகக் கண்டார். ஆண்டவருடனான பவுலின் சந்திப்பு, பவுலின் கண்ணோட்டத்தை உடலளவிலும் ஆன்மிக அளவிலும் பலவீனமாக்கியது. நாம் நினைப்பதற்கும், கேட்பதற்கும் அதிகமாகச் செய்ய கடவுள் ஆற்றலுள்ளவர் என்பதைக் கற்றுக்கொண்டார். இந்த உணர்வுதான், தன்னுடைய எண்ணத்திற்கு நேர்மாறான நற்செய்தியின் திருக்காட்சியைத் தழுவிக்கொள்ள பவுலை அனுமதித்தது.

இவ்வுலக ஞானம் கடவுளின் பார்வையில் மடமை எனவும், கிறிஸ்துவின் உடல், பல்வேறு திறமைகளுள்ள உறுப்புக்களால் உருவாக்கப்பட்டது எனவும், வலுவின்மையில் தான் கடவுளின் வல்லமை நிறைவாய் வெளிப்படும் எனவும் கொரிந்தியருக்குக் கடிதங்கள் எழுதியபோது தூய பவுல் அறிக்கையிட்டார் (1கொரி 1: 20; 1கொரி 12; 1கொரி 12: 9). இவைகள்தான் பவுலின் மனமாற்றத்திலும் வெளிப்பட்டது. தன் கடந்தகால வன்முறை வாழ்வு மற்றும் தற்போதையை பார்வையின்மை நிலையிலும் அனனியா என்பவரால் வரவேற்கப்பட்டார். திருச்சபை மூர்க்க குணமுள்ளவர்களை, ஓரங்கட்டப்பட்டவர்களை, மாற்றுத்திறனாளிகளை மற்றும் துன்புறுத்துவோரை ஏற்றுக்கொள்கிறது என்ற திருச்சபையின் மாற்றுத் தன்மையைச் சந்திக்க பவுலின் பார்வையற்ற பற்றுறுதி அனுமதித்தது.

திருத்தூதர் பவுல் பெரிய நிலையிலிருந்து கடைநிலையானவருக்கும், யூதர்களின் இறுகிய மனப்போக்கில் இருந்து சான்று பகரும் வாழ்வுக்கும், துன்பத்திலிருந்து இயேசுவுக்காக துன்பம் ஏற்பவராகவும் மாறி பிற இனத்தவருக்குத் திருத்தூதுவரானார். உயிர்த்த ஆண்டவர் இயேசுவைச் சந்திப்பதற்கு முன்பு இவருடைய வாழ்வு தன்னலம் மிக்கதாகவும் மேலோட்டமான சமய சடங்குகளை ஆன்மீக வாழ்வாகக் கொண்டதாகவும் இருந்தது. ஆனால், ஆண்டவரைச் சந்தித்த பின்பு அவருடைய வாழ்வு தன்னலம் கடந்து பிறர்நல மைய வாழ்வாகவும், இயேசு கிறிஸ்துவின் மீதும் அவரது ஆட்சியின் மீதும் ஆர்வமுள்ள ஆன்மீக வாழ்வாகவும் உருமாற்றம் பெற்றது.

ஒருவரது விருப்பமின்றி கடவுள் அவரை மீட்க மாட்டார் என்பது உண்மை. ஆனால், ஒருவரின் விருப்பத்தையே கடவுள் மாற்றுகிறார் என்பது மாறாத உண்மை. கடவுள் ஒரு மனிதனை முழுமையாக மாற்றுருவாக்குகிறார்" இந்த மாற்றுருவாக்கத்தின் ஒரு பகுதியில் அம்மனிதனின் விருப்பம் உள்ளடங்கியிருக்கிறது. கடவுளின் இச்செயல் எசேக்கியேல் 36: 26 முதல் உள்ள பகுதியில் விளக்கமாக நாம் படிக்க முடிகிறது. "நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலிலிருந்து கல்லாலான இதயத்தை எடுத்துவிட்டு, சதையாலான இதயத்தைப் பொருத்துவேன்" என்பது இச்செயலின் முக்கிய கூறுபாடு ஆகும் (எசே. 36: 26).

இயேசு கிறிஸ்துவுடனான பவுலின் சந்திப்பு பவுலுக்குள் மாபெரும் மாற்றத்தை உருவாக்கியது. பவுலின் பணியில் ஒரு மிகப்பெரிய மாற்றம் உண்டானது. துன்புறுத்துபவராயிருந்த பவுலை ஒரு மாபெரும் அருட்பணியாளராக ஆண்டவர் மாற்றினார். திருச்சபையைத் துன்புறுத்தும்

வெறித்தனமான ஓநாயாக இருந்த பவுல், ஆட்டுத்தோல் அணிந்த ஓநாய்களிடமிருந்து திருச்சபையைப் பாதுகாக்கும் ஓர் உண்மையான மேய்ப்பனாக மாறினார். எதிரியாயிருந்தவர், தனக்குக் கிறிஸ்து வழங்கிய அருளால் ஆற்றல்பெற்ற பாதுகாவலராக மாறினார். “வாழ்வது நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்” என்ற பவுலின் வார்த்தை (கலா 2: 20) முற்றிலும் அவர் இறைவனின் இறையாட்சி பணியில் இரண்டறக் கலந்திருக்கும் நிறைவாழ்வைச் சுட்டிக்காட்டுகின்றது இவரின் வாழ்வில் அனைத்தையும் இயேசு கிறிஸ்துவுக்காக இழக்கின்ற, அவருக்காக உயிரையும் அளிக்கின்ற சான்று பகரும் தூய வாழ்வைக் கொடுத்தது.

இயேசு கிறிஸ்துவின் பாதையை தன் இலக்காகவும் அவரின் வாழ்வை முன்மாதிரியாகவும் அவர் பணியை உயிர் மூச்சாகவும் கொண்டு திருத்தூது பணியாற்றிய பவுலைப் போல நாமும் இயேசு கிறிஸ்துவுக்காக அவரின் இறையாட்சி மதிப்பீடுகளுக்காக நம் வாழ்வையும் ஒப்படைக்க முன்வருவோம்.

**3. பற்றுறுதியில் புதுமை தரும் ஆண்டவரின் சந்திப்பு** (யோவா 20: 24-29)

உயிர்ப்புக்குப் பின் இயேசு கிறிஸ்து தம் சீடர்களைச் சந்தித்த நிகழ்ச்சிகளை நான்கு நற்செய்திகளிலும் நாம் கவனமாக படித்தால், இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பைத் தோமா மட்டும் சந்தேகப்படவில்லை எல்லா சீடர்களுமே சந்தேகப்பட்டனர் என்பது தெளிவாகும். இயேசு கிறிஸ்துவிடம் கேட்கமுடியாமல், மனதுக்குள் மற்ற சீடர்கள் புதைத்து வைத்திருந்த சந்தேகத்தைத்தான் தோமா வாய்விட்டுச் சொன்னார். எனவே தோமாவை மட்டும் சந்தேகப்பேர்வழி என்று கூறாமல், எல்லாச் சீடர்களுமே சந்தேகத்தில், பயத்தில் தத்தளித்தார்கள் என்பதை இங்குப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது பயம், சந்தேகம் எல்லாவற்றிற்கும் காரணம் இருந்தது.

தங்கள் மீன் பிடிக்கும் தொழில், பெற்றோர், குடும்பம், வீடு என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை நம்பி மூன்றாண்டுகள் வாழ்ந்தவர்கள் இந்தச் சீடர்கள். அந்த மூன்று ஆண்டுகளில், இயேசுதான் அவர்களது உலகம் என்று மாறிப்போன நேரத்தில், அந்த உலகம் வேரோடு பறிக்கப்பட்டு, சிலுவையில் தொங்கவிடப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் இறப்பு, அவர்கள் வாழ்வில் விட்டுச்சென்ற அந்த வெற்றிடத்தை, சந்தேகமும், பயமும் நிரப்பிவிட்டன. தங்களில் ஒருவனே இயேசுவைக் காட்டிக்கொடுத்து, இந்தக் கொடுமைகள் நடக்கக் காரணமாய் இருந்தான். இயேசு கிறிஸ்து பிடிபட்டார் என்பதை அறிந்ததும் அவர்கள் காணாமல்போனது, ஒருவர் இயேசுவைத் “தெரியாது” என்று மறுதலித்தது போன்ற அவர்களது செயல்பாடுகள்

அனைத்தும் அவர்களது சந்தேகத்தை இன்னும் அதிகமாக்கியது. இதுவரை அவர்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்திருந்த நம்பிக்கை தொலைந்து போனது.

அச்சத்தில், ஐயப்பாட்டில், பூட்டப்பட்ட அந்த அறையின் இருளில் இனி வாழ்ந்தால் போதும் என்று தீர்மானித்த சீடர்களை இயேசு அப்படியே விட்டுவிடவில்லை. அவர்கள் வாழ்வில் மீண்டும் நுழைந்தார். அவர்கள் வாழ்வில் மீண்டும் நுழைய பூட்டப்பட்ட கதவுகள் இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு தடையாய் இல்லை. தம் கல்லறையை மூடியிருந்த அந்தப் பெரும் பாறையே அவரைத் தடுக்கமுடியவில்லை. இந்த கதவுகள் அதைவிட மேலானவை அல்ல. அவைகளைத் தாண்டி உள்ளே சென்றார். இயேசு கிறிஸ்து, சீடர்களின் சந்தேகங்களுக்கு, தோமாவின் சந்தேகங்களுக்குக் கூறிய பதில்: "இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்... நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார் (யோவா 20: 27,29). தோமா, நம்பிக்கையின் உச்சத்தைத் தொடுகிறார். தோமாவின் அவநம்பிக்கை நமது நம்பிக்கைக்கு வித்தாக அமைந்துள்ளது. தோமாவின் அவநம்பிக்கையைக் கண்டித்து இயேசு கிறிஸ்து அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" எனக் கூறினார் (யோவா 20: 29). இந்த அழைப்பின் வாயிலாகத் தோமாவின் மனதை இயேசு கிறிஸ்து மிக ஆழமாகத் தொட்டார். நம்பிக்கையின் உச்சக்கட்டம் என்பது கடவுளிடம் சரணடைவதாகும். தோமா, "என் ஆண்டவரே! என் கடவுளே!" என்று கூறி இயேசு கிறிஸ்துவிடம் சரணடைந்தார். இயேசு கிறிஸ்து தோமாவை இப்படி ஆழமாய்த் தொட்டதால், அவர் கண்ட அந்த வியத்தகு உண்மையை உலகெங்கும், சிறப்பாக, இந்தியாவிலும் அவர் பறைசாற்றினார்.

அறிவுத்திறனுக்கு எட்டாத இறைவனை, அவரது இரக்கத்தை நம்பும்போது, நம் வாழ்வில் உருவாகும் சந்தேகப் புயல்கள் தானாகவே அடங்கும்" சந்தேகத்தில் புதையுண்ட நாம், கல்லறைகளிலிருந்து உயிர் பெற்று நம்பிக்கையுடன் வாழமுடியும். நாம் கடவுளைச் சந்திப்பதைக் குறித்து உக்ரைன் நாட்டின் மூத்த போதகர் சண்டே அடெல்ஜா (Sunday Adelaja) என்பவர், "கடவுளைச் சந்திப்பது என்பது உலகத்தின் மீட்புக்கான அவரது அன்பான இதயத்தின் வலியை உணர்வதாகும்" எனக் கூறினார் ("To have an encounter with God is to feel the ache of his loving heart for the redemptions of the earth").. நாம் உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அனுதினமும் நமது வாழ்வில் சந்திப்போம். அவரால் ஆற்றல்பெற்று நம்பிக்கையுடன் பற்றுறுதிப் பயணம் தொடர்வோம்.

**அருள்திரு. T.P. ஸலீம் தங்க குமார்**

# உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல்

## Identifying Risen Lord in the Work Place

ரூத். 2: 1-18 திப. 9: 36-43

திபா. 15 யோவா. 21:1-14

இயேசுவின் அன்புச் சீடர் அதைக் கண்டு பேதுருவிடம், "அங்கு நிற்பவர் ஆண்டவர் தாம்" என்றார். (யோவான் 21:7)

உயிர்த்தெழுதல் நாளில் இயேசுவைக் கண்ட காட்சி பேதுருவுக்கும் சீடர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தை அளித்தது. ஆனால் அந்த உற்சாகம் விரைவில் அவர்களை விட்டு மறைந்தது. மூன்று வருடங்களாக அவர்கள் இயேசுவின் அருகில் தோழர்களாக இருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் வாழ்க்கையில் ஓர் இடைவெளி ஏற்பட்டது. தாங்கள் நம்பி வந்த இயேசு தங்களுடனில்லை என்ற உணர்வினால் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் பேதுரு நான் முந்தைய நிலையின்படி மீன்பிடிக்கப் போகிறேன் என்று சீடர்களிடம் கூற, அவருடனிருந்த வேறு ஆறு சீடர்களும், நாங்களும் உம்மோடு வருகிறோம் என்று, போய் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை. மிகுந்த விரக்தியோடும், சோர்வோடும் பணிக்களத்தில் இருந்த நேரத்தில் இயேசுவை அவர்கள் அடையாளம் கண்டனர். சீடர்களுடன் பணிக்களத்தில் இருந்த இயேசு அவர்களுக்கு என்னென்ன செய்தார் என்பதை இன்று தியானிக்கப் போகின்றோம்.

**1. உடனிருக்கிறார்** (யோவா. 21:4)

பேதுருவும் அவருடன் சென்ற சீடர்களும் மீன்பிடித் தொழிலில் வல்லுநர்கள். எங்கே வலை வீசினால் மீன் கிடைக்கும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய அனுபவ அடிப்படையில் குறித்த நேரத்தைத் தெரிவு செய்து இரவு நேரத்தில் மீன்பிடிக்கச் சென்றனர். ஆனால் அனுபவம் அவர்களுக்குக் கைகொடுக்கவில்லை. மறுநாள் காலை வந்ததும் அவர்கள் தொடங்கியதைப் போல அவர்களின் வலைகள் காலியாக இருந்தன. சோர்வு, விரக்தி, இறுக்கம், குழப்பம், பசி இவைகளால் பணியிடத்தில் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். பிள்ளைகளே மீன் ஒன்றும் அகப்படவில்லையா? என்ற

இயேசுவின் கேள்விக்கு "இல்லை" என்ற அவர்களுடைய பதில் பணியிடத்தில் விரக்தியால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரின் பதிலையும் பிரதிபலிப்பதாய் உள்ளது. வேலை செய்யும் போது நாள் முழுவதும் பணியாற்றி ஊதியம் கிடைக்காத போது, கணினியில் நாள் முழுவதும் பணியாற்றி மாலையில் எழுதியவைகள் அனைத்தும் அழிந்து விடும்போது, வாழ்நாள் முழுவதும் பிள்ளைகளுக்காகப் பணிசெய்து பிள்ளைகள் மறந்துவிடும் சூழல் வரும்போது சீடர்கள் பெற்ற உணர்வை நாமும் பெற நேரிடுகின்றது. இத்தகைய விரக்தியின் சூழலில் இயேசு கரையில் நிற்கிறார் (வ. 4). ஆனால் உடனிருக்கும் அவரை இயேசு என்று சீடர்கள் அறிந்துகொள்ளவில்லை.

**2. உதவி செய்கிறார்** (யோவா. 21:6)

"மீன்கள் ஒன்றும் படவில்லை" என்று பதிலளித்த சீடர்களிடம் இயேசு, "படகின் வலப் பக்கத்தில் வலை வீசுங்கள்; மீன் கிடைக்கும்" என்று கூறினார். அவர்களும் அவ்வாறே செய்ய திரளான மீன்கள் கிடைத்தன. இயேசு ஆலயத்தில் மற்றும் ஜெப வேளையில் மட்டும் உதவுபவரல்லர், வியாபாரத் தலங்களிலும், அலுவலகங்களிலும், வயல்வெளிகளிலும் நம்முடைய பணிகளில் நமக்கு உதவுகிறவர் என்ற உண்மையை இங்கே நாம் காண்கிறோம். மேலும் பணியிடத்தில் சீடர்களைச் சந்தித்த ஆண்டவர், அவர்கள் தங்கள் முந்தைய பணிக்குத் திரும்பிச் சென்றதைச் சுட்டிக்காட்டவோ, குற்றமாக, குறையாகக் குறிப்பிடவோ இல்லை. அவர்களது கடினப்பாடுகளில் அவர்களுடன் பங்கேற்கிறார். அவர்கள் பணிகளில் வெற்றி காணும்படி அவர்களை ஊக்கப்படுத்துகின்றார். சீடர்களைப் போன்று உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிமையை நமது பணியிடங்களில் காண நாம் செய்ய வேண்டிய முக்கியமான செயல் ஒன்று உள்ளது. அது, "படகின் வலப் பக்கத்தில் வலை வீசுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த சீடர்களைப் போன்று கீழ்ப்படிவதாகும். சீடர்களைப் போன்று பணியிடத்தில் எப்போதும் அற்புதம் நிகழும் என்றும் எதிர்பார்க்கக்கூடாது. மாறாக, கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதால் மாற்றத்தை எதிர்பார்க்கலாம். வலது புறமாக வலையை வீசுவதால் வெறுமையான வாழ்வு திருப்தியாக மாறுகிறது. மீன்களே இல்லாத வலையில் இழுக்க முடியாத அளவுக்கு மீன்கள் கிடைக்கின்றன. ஆடையைக் களைந்து மீன்பிடிக்கச் சென்ற பேதுரு, ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கிறிஸ்துவிடம் வருகிறார். "மீன்கள் அகப்படவில்லை" என்ற சீடர்கள் மீன்களுடன் வலையை இழுத்துக்கொண்டு வருகிறார்கள்.

**3. உணவூட்டுகிறார்** (யோவா. 21:12)

இயேசு பணியிடத்தில் சீடர்களுடனிருந்து உதவுபவராக மட்டும் இல்லாமல் உடன் பணியாளராகவும் இருப்பதாக யோவான் 21:9-12 வரையுள்ள வசனங்கள் கூறுகின்றன. படகை விட்டு இறங்கிய சீடர்கள் இயேசு

அவர்களுக்காக காலை உணவைச் சமைப்பதில் மும்முரமாக இருந்ததைக் காண்கின்றனர். உணவு சமைத்து முடிந்ததும், உணவருந்த வாருங்கள் என்று சீடர்களை அழைக்கிறார். இயேசுவின் அழைப்பு முன்பு நடந்த பலவற்றைச் சீடர்களுக்கு நினைவூட்டியது. கரி நெருப்பு இயேசுவை மறுதலித்த இரவைப் பேதுருவுக்கு நினைவூட்டியது. கரி நெருப்பின் மீதிருந்த மீனும், அங்கிருந்த அப்பமும் ஐந்து அப்பங்களையும், இரண்டு சிறிய மீன்களையும் கொண்டு 5000 பேருக்கும் அதிகமானோருக்கு இயேசு உணவூட்டியதைச் சீடர்களுக்கு நினைவூட்டியது. இன்றும் உணவில்லாமல் கடினப்படுவோருக்கும் பணியிடங்களில் களைப்புடனிருப்போருக்கும் இயேசு உணவூட்டுபவராக இருக்கிறார்.

"பைபிள் நெடுஞ்சாலைகள்" என்ற நூலில் ஐவர் பவல் உணவருந்த வாருங்கள் என்ற இயேசுவின் அழைப்பைப் பின்வருமாறு விளக்குகிறார் கடற்கரை அமைதியாக இருந்தது. கடற்கரை சத்தம் மற்றும் பறவையின் சத்தம் தவிர அமைதி உடைக்கப்படவில்லை. இரட்சகர் தனது சோர்வான விருந்தினர்களுக்குக் காலை உணவை வழங்க தயாராகிக் கொண்டிருந்தார். அவர்கள் தங்களை அழைத்த ஆண்டவரின் அழைப்பைச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அவர்களது பணி முற்றிலும் தோல்வியாக, நம்பிக்கையற்றதாகத் தோன்றியபோது, கடற்கரையில் கிறிஸ்துவின் தோற்றம் தோல்வியை வெற்றியாக மாற்றியது. கிறிஸ்து அளித்த உணவு அவர்களது எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் புதிய வலிமையை அவர்களுக்குத் தந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு காலைப் பொழுதில், கடற்கரையில், "மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" (லூக். 5:10) என்ற இயேசுவின் அழைப்பைப் பேதுரு நினைவுகூர்ந்தார். மேலும் அந்திரேயா போன்ற சீடர்களை "வந்து பாருங்கள்" என்று அழைத்தவர் இப்போது "உணவருந்த வாருங்கள்" என்று அழைப்பதைச் சீடர்கள் சிந்தித்தனர். இயேசுவை வந்து பார்த்தால் மட்டும் போதாது. அவரோடு உணவருந்தும் நிலை வர வேண்டும். இயேசுவோடு உணவருந்தும் நிலைக்கு வந்த பின்பே சீடர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக மாறுகின்றனர்.

**முடிவுரை**

பணியிடத்தில் சீடர்களைச் சந்தித்த ஆண்டவர் அவர்களது கடினப்பாடுகளில் உடனிருந்து உதவி செய்கிறார். தம்மைப் பார்த்து, பழகிப் பின்வாங்கியவர்களை மீண்டும் தம்மோடு உணவருந்துவோராக மாற்றுகிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து பணியிடங்களில் சீடர்கள் பெற்ற உயிர்த்த கிறிஸ்துவின் மகிமையைக் காண நம்மை அர்ப்பணிப்போம்.

**அருள்திரு. முனைவர். A. ராயப்பன் ஐசக்**

# உயிர்ப்பின் அனுபவத்தில் சமூக உருவாக்கம்

## Community Formation around Resurrection Experience

எசா. 25: 1 - 9 திப. 4: 32 - 37

திபா. 126 லூக். 24: 13 - 35

"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்" திப. 4: 32 a

மனிதர்கள் இணைந்து வாழும் முறையே சமூகம் என்றழைக்கப்படுகிறது. சமூகங்கள் நம்பிக்கையின் அடிப்படையிலும் கொள்கையின் அடிப்படையிலும் கோட்பாடுகளின் அடிப்படையிலும் அனுபவங்களின் அடிப்படையிலும் கட்டமைக்கப்படுகின்றன. நம் தேசத்தந்தை என புகழப்படும் மகாத்மா காந்தி அவர்கள் அகிம்சை எனும் கொள்கையின் அடிப்படையில் ஒரு சமூகத்தை அமைக்க முயன்றார். கிறிஸ்தவர்கள் என அறியப்படும் விசுவாசிகள் என்னும் சமூகம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக்கொண்டு உருவான ஒரு சமூகம். உயிர்ப்பின் அனுபவத்தில் உருவாக்கப்பட்ட சமூகத்தின் சிறப்பியல்புகளைத் தரப்பட்டிருக்கும் திருமறை பகுதிகளின் வழியே சிந்திக்க முயல்வோம்.

**1. சுகிர்தம் பெறும் சமூகம்** (எசா. 25: 8)

"என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார் : என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார்: தம்மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார்..."

சுகிர்தம் என்னும் சொல் இன்பம், நன்மை போன்ற அர்த்தங்களை உடையது. மனித வாழ்க்கை பாடுகள், துன்பம், துயரம், நிறைந்தது. வாழ்வின் துயருக்குப் பல காரணங்கள் இருந்தாலும், மரணம் மனிதத் துக்கத்துக்கு முக்கிய காரணமாயிருக்கிறது. மரணம் மற்றும் மரணம் குறித்த எண்ணங்கள் மனிதன் மகிழ்ச்சியை அனுபவிக்கவிடாமல் தடை செய்கிறது. "சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதா" என்னும் கண்ணதாசனின் வரிகள் மரணம் குறித்த மனிதனின் அச்சத்தை, அங்கலாய்ப்பைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இந்நிலையில் மரணம் கர்த்தரால் ஜெயமாய் விழுங்கப்படும் எனும் இறைவார்த்தை பற்றுறுதியாளர்களின் சமூகத்திற்குப் பெரும் மகிழ்ச்சியாக அமைகிறது. மரணம் விழுங்கப்படும்போது, சாவு

ஒழிக்கப்படும்போது கர்த்தராகிய ஆண்டவர் அவர்தம் அடியார் அனைவருடைய முகங்களிலிருந்து கண்ணீரைத் துடைப்பார், தமது மக்களின் நிந்தையை அவமானத்தை முற்றிலும் நீக்கிவிடுவார். இதனால் அவர்மீது நம்பிக்கையுடையவர்கள் சுகிர்தம் பெறும் சமூகமாகத் திகழுவார்கள்.

உலகைப் படைத்த கடவுள் மனிதனைப் படைப்பின் மகுடமாகப் படைத்தார். ஆனால் மனிதனின் கீழ்ப்படியாமை மானுடத்துக்குள் பாவத்தையும் அதன்வழியே மரணத்தையும் கொண்டு வந்தது. தூய பவுலடியார் மரணத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, பரிகரிக்கப்பட வேண்டிய கடைசி சத்துரு மரணம் என்று குறிப்பிடுகிறார் (1 கொரி. 15: 26). பாவத்திலிருந்து மனிதனை மீட்கப் பரிகாரியாய் இறைமைந்தர் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்தார். சாவை ஒழிக்க வந்தவரைச் சாகடிக்க முயன்றனர். சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனால் அவரோ மரணத்தை ஜெயமாய் விழுங்கி மரணத்தை வெற்றி சிறந்து உயிரோடே எழுந்தார். இதனால் சாவின் துக்கத்தில் இருந்தோருக்கு சுகிர்தம், இன்பம் உண்டாயிற்று.

துக்கமுகமாயிருந்த எம்மாவு சீடர்களின் துக்கத்தை மாற்றி, அவர்களது இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது உயிர்ப்பின் அனுபவம் (லூக். 24: 32) இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைத்து அவரது கல்லறையின் அருகே நின்று அழுது கொண்டிருந்த மரியாளுக்கு அவரது உயிர்த்தெழுதல் அழுகை, அச்சத்தைப் போக்கி ஆனந்தத்தைத் தந்தது (யோவா. 20: 11ff). இயேசு கிறிஸ்துவின் மரணத்தால் அவரை நம்பியிருந்தவர்கள். துன்பங்களையும் துயரங்களையும் நிந்தைகளையும் அவமானங்களையும் அவதூறுகளையும் சந்திக்க நேரிட்டது. அவரது உயிர்ப்பு அவர்களுக்குச் சுகிர்தத்தை, இன்பத்தைத் தந்தது.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் பற்றுறுதி கொண்டு அவருக்கு ஆராதனை செய்யும் நம்முடைய வாழ்விலும் உயிர்த்தெழுதல் சுகிர்தம் அருளும் அனுபவமாக அமையட்டும். வாழ்வின் துக்கமகற்றி மரணத்தைக் குறித்த பயமின்றி நம்பிக்கையுடன் முன்னேறுவோம். அப்போஸ்தலனாகிய தூய பவுல் குறிப்பிடுவதைப் போல அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கை யற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம் அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூட கொண்டுவருவார் (1 தெச. 4: 13, 14). நம் வாழ்வின்

துக்கங்கள், துயரங்கள் நீங்கி உன்னதருடனான உறவில் நிலைத்திருந்து வாழ்வில் சுகிர்தம் பெற ஆண்டவர் அருள் செய்வாராக.

**2. சுயநலம் இல்லாச் சமூகம்** (திப. 4: 32 b)

"...அவர்களுள் எவரும் உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை: எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது."

உயிர்ப்பின் அனுபவத்தில் கட்டமைக்கப்பட்ட பற்றுறுதியாளர்களின் சமூகத்தைக் குறித்து நாம் இங்கு அறிந்துகொள்ள முடிகிறது. இந்தச் சமூகம் சுயநலமில்லாத சமூகமாக இருந்தது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்டு, கேட்டு, அனுபவித்த மக்கள் கிறிஸ்துவிலும் அவரது உயிர்த்தெழுதலிலும் நம்பிக்கையுடையவர்களாய்த் தங்கள் சுயநலத்தை விட்டுவிட்டு பிற மக்களுடைய நல்வாழ்வை விரும்பி அதற்காய்த் திட்டமிடுவதையும் செயல்படுவதையும் இங்கு காணமுடிகிறது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (தி.ப. 4: 34, 35).

உயிர்த்தெழுதலின் அனுபவம் நான், எனக்கு, என்னுடைய என்னும் சுயநல எல்கையை கடந்து, பிறர் மீது கரிசனையுடைய, மற்றவர்களின் நல்வாழ்வை விரும்புகின்ற, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், எவரும் அழிந்துபோய்விடக்கூடாது எனும் இறைத்திட்டத்தைப் பூமியில் நிறைவேற்ற பற்றுறுதியாளர்களை உந்துகிறது. உயிர்ப்பின் அனுபவம் நம்பிக்கையாளர்கள் தங்களுடையவைகளை இழந்தாகிலும் பிறரை வாழவைக்கவும் இல்லாதவர்களுக்குத் தங்களுடையவைகளைக் கொடுத்து, அவர்களது வாழ்வையும் உயர்த்தும், பகிர்ந்தளிக்கும் பண்பை வளர்க்கிறது.

இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாய் வந்த முழுக்கு முனிவன் யோவான், "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" என்கிறார் (லூக். 3: 11). இயேசு கிறிஸ்துவும் "உங்கள் உடைமைகளை விற்று தர்மம் செய்யுங்கள்" என கூறுகிறார் (லூக். 12: 33). தூய பவுலடியாரும் "நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ளவேண்டும்" என்று பிலி. 2: 4-ல் குறிப்பிடுகிறார்.

சுயநலம் பெரும்பாவம் என்பதில் ஐயமில்லை. இன்று சுயநல வலையில் சிக்குண்டு நான், எனது, எனக்கு, என்னுடைய என்னும் மனப்பான்மையுடன் வாழும் அநேக மக்களை நாம் இந்த உலகத்தில் காண்கிறோம். சுயநல சிந்தை

பிறரைக் குறித்து எண்ணாது தன்னுடையவைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து மற்றவர்களைக் குறித்து கரிசனை இல்லாத குறுகிய வட்டத்துக்குள் வாழ்வை அமைத்துக்கொள்ளச் செய்கிறது. லூக்கா 16: 19 - 31 இல் சொல்லப்பட்டுள்ள லாசரு செல்வந்தர் உவமையில் அந்தச் செல்வந்தர் வேறு எந்தப் பாவமும் செய்ததாக நம்மால் காண இயலவில்லை. அவர் செய்த ஒரே பாவம் அவரது வீட்டுப்படியில் பசித்த வயிறுடன் உணவுக்காய் ஏங்கியிருந்த லாசருவைக் கண்டுகொள்ளாமல், சுயநலவாதியாய் இருந்ததுதான். அந்த சுயநலத்தினிமித்தம் அவர் நரகாக்கினைக்குள்ளானார். மற்றவர்களின் வாழ்வை எண்ணாது தங்களையே முன்னிலைப்படுத்திக் கொண்டிருந்த மக்கள், பிறரை அடிமைகளாய் எண்ணி அதிகாரம் செலுத்தியவர்கள் உயிர்த்தெழுதலின் அனுபவத்தினால் பிறரை மனிதர்களாய் மதிக்கவும் அவர்களும் இறைமக்களே, அனைவரும் சமமானவர்களே என்னும் எண்ணம் பெற்று தங்களுடையவைகளைப் பகிர்ந்தளிக்கும் பொதுநலனைக் கற்றுக்கொண்டனர். இச்சிந்தனையின் அடிப்படையில் அருட்பணியாற்ற நம் பகுதிக்கு வந்த மேற்கத்திய அருட்தொண்டர்கள் தங்களையும் தங்களுடையவைகளையும் தியாகம் செய்து அடிமைத்தனத்தை அகற்றி எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் எனும் சமத்துவ, சுயநலம் இல்லா சமூகத்தைக் கட்டியெழுப்பினர்.

**3. சுவிசேஷம் அறிவிக்கும் சமூகம்** (லூக். 24: 35)

"அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்"

இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் நிமித்தம் பயந்து கலங்கி, இயேசு உயிர்த்தெழுந்தார் என்னும் உண்மையை உணராதவர்களாய், எருசலேமிலிருந்து எம்மாவுக்குத் திரும்பிச்சென்ற சீடர்கள் தாங்கள் செல்லும் வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவைச் சந்தித்ததையும் உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்றவர்களாய் எருசலேமுக்குத் திரும்பி வந்து இயேசு உயிர்த்தெழுந்ததை அறியாத சீடர்களுக்கு "இயேசு உயிர்த்தெழுந்தார்" என்னும் சுவிசேஷத்தை நற்செய்தியாய் அறிவிப்பதையும் இங்கு நாம் காணமுடிகிறது. பிறர் அச்சத்திலும் அறியாமையிலும் துக்கத்திலும் இருக்கும்போது அவற்றை அகற்றும் செய்தியை, வழியை நாம் அறிந்திருந்தும் அதனை அறியாதவர்களுக்கு அறிவிக்காமல் இருக்கக்கூடாது என்னும் சீரிய சிந்தையுடன் இரவோடு இரவாக எருசலேமுக்குத் திரும்பி வந்து உயிர்த்தெழுதலின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்தனர்.

அஞ்சி, நடுங்கி இருந்தவர்கள் உயிர்த்தெழுதலின் உண்மையை உணர்ந்தபோது அதனை உரக்க சொன்னார்கள். கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சிகொடுத்தார்கள் என்று தி.ப. 4: 33 ல் கூறப்பட்டுள்ளது. இயேசுவின் பாடுகளை ஏற்றுக்கொள்ள இயலாமல், ஓடி ஒளிந்து, மறுதலித்த பேதுருவும் கூட "இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (தி.ப. 2: 32) என்றும் ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் (தி.ப. 3: 15) என்றும் கூறி அறிவித்தார். இயேசுவையும் அவரது உயிர்த்தெழுதலையும் குறித்துப் பேசிய பேதுருவையும் யோவானையும் பேசாமல் இருக்க கட்டளையிட்ட பிரதானிகளிடம் "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே" (தி.ப. 4: 20) என்றார்கள்.

நற்செய்தியை அறியாத மக்களுக்கு அதனை அறிவிக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. சமாரியா பட்டணத்துக்குள் மக்கள் உணவின்றி பட்டினியால் தவித்துக்கொண்டிருக்கையில் பட்டணத்துக்கு வெளியே உணவைக்கண்ட 4 தொழுநோயாளிகள் கூறிய "நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்" (2 அர. 7: 9) எனும் அந்த வார்த்தைகள் இங்கு நினைவுகூரத்தக்கவை. அப்போஸ்தலனாகிய தூய பவுலடியார் கூறும்போது, "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!" "அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது" (1 கொரி. 9: 16) என்கிறார். உயிர்த்தெழுதலைக் கண்டு, கேட்டு, விசுவாசித்து அனுபவித்த சமூகமாகிய நாமும் சுவிசேஷத்தை அறிவிக்கும் சமூகமாக வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த அழைப்பை உணர்ந்த மேலைநாட்டு அருட்பணியாளர்கள் அந்தகாரத்திலும் அடிமைத்தனத்திலும் இருந்த நமக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவரை நற்செய்தியாய் அறிவித்ததன் விளைவே நாம் இன்று வாழும் வாழ்க்கை.

உயிர்ப்பின் அனுபவத்தில் உருவாக்கப்பட்ட விசுவாச சமூகமாகிய நாமும் சுகிர்தம் பெறும் சமூலமாக, சுயநலம் இல்லாச் சமூகமாக, சுவிசேஷம் அறிவிக்கும் சமூகமாக, வாழ ஆண்டவர் தாமே அருள் செய்வாராக. ஆமென்.

**அருள்திரு. M. இம்மானுவேல் கின்சன் பெல்**

# கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல்: உயிர்ப்பு

## (Believing in Christ: The Resurrection)

2 அர. 4: 27-37 1திப. 26: 12-23

திபா. 90 யோவா. 11: 17-28

" . . . என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா. 11: 25).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கை கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம். பேதுரு திருச்சபைக்குக் கடிதம் எழுதும்போது "நீங்கள் கடவுளிடம் நம்பிக்கைக் கொண்டு அவரை எதிர்நோக்கி இருக்கவே இவ்வாறு செய்தார்" (1பேது. 1: 21) எனக் கூறுகிறார். கடவுளின் குமாரனாகிய கிறிஸ்து இந்த உலகில் வந்து, பாடுகளை ஏற்று, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கையை நமது விசுவாசப்பிரமாணத்தின் முக்கியமான பக்தியாக திருச்சபை ஏற்றிருக்கிறது. இந்த நம்பிக்கைக்குப் புறம்பான நம்பிக்கை கொண்டவர்களைத் திருச்சபை உறுதியாய் நிராகரித்தது.

ஆதித்திருச்சபையின் வரலாற்றைத் திருத்தூதுவர் பணிகள் நூலில் படிக்கும்போது அப்போஸ்தலருடைய சாட்சி, "இயேசுவை நீங்கள் கொலை செய்தீர்கள் கடவுள் அவரை உயிரோடே எழுப்பினார் இதற்கு நாங்கள் சாட்சிகள்" என்பதே (திப. 2: 23, 32; 3: 15). எனவே உயிர்த்தெழுந்தவராய், என்றும் நம்முடன் வாழுகின்ற கிறிஸ்துவில் நாம் முழு நம்பிக்கை கொண்டு வாழவேண்டும். இன்று நமது நம்பிக்கை பயணத்தில் நமது நம்பிக்கை எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

**1. துன்பத்தில் துவளாத நம்பிக்கை** (2 அர. 4: 27-37)

கடவுள் மீது நாம் நம்பிக்கை கொண்டு இந்த உலகில் வாழும்போது எக்காலங்களிலும், எத்தகைய சூழல்களிலும் கடவுள் நம்முடன் இருப்பார் என்கின்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். இந்த நாளின் பழைய ஏற்பாட்டுத் திருமறைப் பகுதியில் சூனேம் ஊர்ப்பெண், எலிசாவைத் தன் வீட்டில் ஏற்று உபசரித்தார். அவருக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. ஆனால் கடவுள் அவரது குறைவை மாற்ற ஒரு மகனை அவருக்குக் கொடுத்தார். பிள்ளை திடீரென மரணம் அடைகின்றான். ஆனால் அவர் தனது உள்ளத்தில் கடவுளின் வார்த்தையின்படி கடவுள் தனக்குக் கொடுத்த பிள்ளை, குறுகிய காலத்தில் மரணம் அடையமாட்டான் என உறுதியாக நம்பினார். எனவே செத்துப்போன

பிள்ளையை அறைவீட்டில் அடைத்துவைத்து விட்டு யாரிடமும் எதுவும் கூறாமல் கடவுளின் மனுஷனை நோக்கி ஓடினார். அவளது நம்பிக்கை வீண் போகவில்லை. தனது மகனைத் திரும்ப உயிரோடு பெற்றுக் கொண்டார். தாவீது அரசர் திபா. 23: 4-ல் சாவின் இருள் சூழும் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும் . . . என்று கடவுள் தன்னோடு இருக்கும்போது எந்தக் கடினமான சூழல்களும் தன்னை அச்சமடைய செய்வதில்லை என்கிறார்.

இந்த உலகில் பாடுகளும், வேதனைகளும், ஏமாற்றங்களும், எதிர்ப்புகளும், சோர்வுகளும் நம்மை எதிர்கொள்வதைத் தவிர்க்க முடியாது. ஆனால் அவற்றின் ஊடாக நம்மை நடத்துக்கின்ற கடவுள் நம்முடன் இருக்கிறார். இந்த நம்பிக்கையைப் பவுலடியார் 2 கொரி. 4: 7, 8 வசனங்களில் வெளிப்படுத்துகின்றார்.

**2. அனுபவத்தால் உறுதி செய்யப்பட்ட நம்பிக்கை** (திப. 26: 15)

யூதர்களால் குற்றம் சாட்டப்பட்ட பவுல் அப்போஸ்தலர், அகிரிப்பா இராஜா முன்பாக தனது பதிலைக் கூற அனுமதிக்கப்பட்டார். அப்போது தனது நம்பிக்கை உயிர்தெழுந்த கிறிஸ்து மீது உறுதியாய்க் காணப்படக் காரணம் என்ன என்பதை விளக்குகின்றார். திப. 26: 8-11 வரையுள்ள வசனங்களில் நானும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நம்பாமல், அவரை நம்புகிறவர்களைத் துன்பப்படுத்தினேன். ஆனால் அந்த இயேசுவை நான் தரிசித்து நீ துன்பப்படுத்தும் இயேசு நானே என்ற அவரது குரலைக் கேட்டு அதனை எனது அனுபவமாக்கிக் கொண்டபடியினால், அவர் எனக்குக் கொடுத்த கட்டளையின்படி இயேசுவே கிறிஸ்து நாங்கள் எதிர்பார்த்திருந்த கிறிஸ்து என அறிந்து அவர்மூலமாக, பாவ மன்னிப்பும், தூய்மை ஆகுதலும் நடைபெறும் என்பதை அறிந்து அதை அனுபவமாக்கி மற்றவர்களுக்கும் கூறுகிறேன் என்கிறார்.

ஒன்றை நாம் அனுபவமாக்கும்போது அதைக் குறித்த தெளிவும் உறுதியும் நம்மிடம் வெளிப்படும். இங்கே இயேசுவைத் தனது அனுபவத்தில் அறிந்த பவுலடியார் எத்தனைத் துன்பங்கள் வந்தாலும் அதுவே உண்மை என்பதை உறுதியுடன் கூறுகிறார் சாதுசுந்தர் சிங் அவர்களது வாழ்க்கை, இதற்கு நல்ல எடுத்துக்காட்டாய் அமைகின்றது.

**3. இறையரசின் எதிர்நோக்குடன் கூடிய நம்பிக்கை** (யோவா. 11: 27)

லாசரு இறந்தநிலையில் இயேசு பெத்தானியாவுக்கு வருகிறார். அவரை எதிர்கொண்டு சென்ற லாசருவின் சகோதரி மார்த்தாவும் இயேசுவும்

உரையாடுகின்றனர். அப்போது இயேசு, “உன் சகோதரன் உயிர்த்தெழுவான்” என்கிறார் (யோவா. 11: 23). மார்த்தாள் இறுதி நாளில் உயிர்த்தெழுதல் நடைபெறும்போது அவள் உயிர்த்தெழுவான் என பதில்கூற, இயேசு நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்று கூறுகிறார். அப்போது பதில் உரைத்த மார்த்தாள் இயேசுவை மேசியாவாக உணர்ந்து அவரை, “நீரே மேசியா, நீரே இறைமகன், நீரே எங்கள் நம்பிக்கைக்கு உரியவர்” என்பதை வெளிப்படுத்துகின்றார். இங்கு அவரது பார்வை இயேசுவே இறையரசை இந்த உலகின் மக்களுக்கு உரிமையாக்க இந்த உலகத்தில் வந்த மேசியா அவர் என்றும் வாழ்பவர் எனப் பார்க்கின்றார்.

மனித வாழ்வின் மிகப்பெரிய நம்பிக்கை, இந்த உலக வாழ்க்கை முடிந்தபின் இறைவனோடு தொடரும் வாழ்க்கை பற்றியது. இதைத் தாவீது அரசர் திபா.23: 6-ன் இறுதிபகுதியில், “நானும் என் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்” என்கிறார். இயேசு கிறிஸ்து சீடரிடம் கூறும்போது யோவா. 14: 3-ல் “. . . திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்” என்று கூறுகிறார். எனவே உயிர்தெழுந்த இயேசுவிடம் நாம் நம்பிக்கை வைக்கும்போது இறையரசில் அவருடன் பங்குபெறும் உறுதி நம்மிடம் காணப்படும்.

உயிர்த்த கிறிஸ்துவின் மீது நாம் வைக்கும் நம்பிக்கை துன்பத்தால் நாம் துவண்டு போகாமல் நம்மைப் பாதுகாக்கும் அந்த நம்பிக்கை நமது அனுபவம் ஆகும்போது இந்த உலகில் எவராலும் அசைக்கமுடியாதபடி அது உறுதி உடையதாக மாறும். அந்த நம்பிக்கை இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் இறையரசின் பங்காளியாக நம்மை மாற்றும். எனவே உயிர்த்த கிறிஸ்துவில் உறுதியான நம்பிக்கை கொண்டு நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம்.

அருள்திரு. **J. விக்டர் ஞானராஜ்**

# உழைப்பாளரை உயர்த்தும் ஆண்டவர்

மத்தேயு 25: 14-23

" சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தீர் எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்" (மத். 25 : 21)

**முன்னுரை**

இன்று உலக உழைப்பாளர் தினம். 18-ம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 12 முதல் 18 மணிநேரம் கட்டாய வேலை செய்ய பணிக்கப்பட்டனர். இதை எதிர்த்து 1886-ல் அமெரிக்காவின் சிகாகோ மாநிலத்தில் தொழிலாளர்கள் கடுமையாகப் போராடினர். துப்பாக்கியால் சுடப்பட்டும், தூக்கில் ஏற்றப்பட்டும், கண்மூடித்தனமாக தாக்குதலுக்கும் ஆளாகி 8 மணிநேர வேலைக்கான உரிமைப்போராட்டத்தில் உயிரிழந்தோர் ஏராளம். இதன் விளைவால் 8 மணிநேரம் வேலை, 8 மணிநேரம் ஓய்வு, 8 மணிநேரம் உறக்கம் என்ற உரிமையைத் தொழிலாளர் வர்க்கம் பெற்றுக் கொண்டது.

உழைப்பு என்பது இயற்கையின் இயல்பு; இறைவனின் அருள்கொடை இறைப்பண்பின் கூறு என்பதனைத் திருமறை உணர்த்துகின்றது.

இன்றைய தியானப் பகுதியில், "பணியாளர்களும் அவர்களின் தலைவனும்" உவமையில், புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் தலைவன், முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் பணியாளர்கள் மற்றும் முயற்சி ஏதுமின்றி முடங்கியிருக்கும் பணியாளர் உழைப்பாளர் தினத்தின் சிந்தனைப் பொருளாய் அமைந்துள்ளனர். இங்கு வாய்ப்பு, கடின உழைப்பு, பொறுப்புணர்வின் தேவை ஆகியவை முக்கியமான கூறுகளாகப் பதிவிடப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள திருமறைப் பகுதியை மையமாகக் கொண்டு தலைவனின் எண்ணங்களில் பணியாளர்களின் மனநிலை உழைப்பில் எப்படி இருந்தது என்பதைத் தியானிப்போம்.

**1. உழைப்பில் உன்னதம் தேடுபவர்**

"நெடும் பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடைமைகளை ஒப்படைத்தார் "(மத். 25: 14)

இந்த நிகழ்வின் முதன்மை கதாபாத்திரமாக வரும் தலைவன் அல்லது எஜமான் உழைப்பிற்குச் சிறந்த உதாரணம். வாழ்வதற்கான வாய்ப்புகள்

உலகில் பரவிக்கிடக்கின்றது என்பதனை உணர்ந்தவர். இவர் உழைப்பிற்கான புதிய வாய்ப்புகளைத் தேடுகின்றதோடு, தன்னோடு உழைப்பதற்குப் பிறருக்கு வாய்ப்புகளைக் கொடுக்கின்றவராகவும் இருக்கின்றார்.

தொலைதூரம் செல்லுதல், நெடும்பயணம் செல்லுதல் என்பது உழைப்பின் மூலம் சம்பாதித்தல் என்பதனையும், சம்பாதிப்பதற்கான வாய்ப்புகளையும் தேடுகின்ற அணுகுமுறையாகும்.

அடுத்தாக இவர் தம் உடைமைகளைப் பிறரிடம் கொடுக்கின்றார். இது பிறருக்கு உழைக்கும் வாய்ப்பு வழங்குகிறது. அதோடுகூட தன்னுடைய எல்லாச் சொத்திற்கும் அல்லது உடைமைகளுக்கும் பாதுகாப்பும், இலாபமும் கிடைப்பதாக உணருகின்றார்.

### 2. உழைப்பால் உயர்வைத் தேடுபவர்

“ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக் கொண்டு வாணிகம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார். அவ்வாறே இரண்டு தாலந்து பெற்றவர் மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார்.” (மத். 25: 16, 17)

ஐந்து தாலந்து மற்றும் இரண்டு தாலந்து பெற்றுக்கொண்டவர்கள், தங்களுக்குத் தரப்பட்டதை உழைப்பின் மூலமாய் இருமடங்குகளாக மாற்றுகின்றனர். திறமைக்கேற்ற வாய்ப்புகள் கிடைக்கின்றன. கிடைத்த வாய்ப்புகளைத் திறமையாகப் பயன்படுத்தினர். இதனைக் கண்ட தலைவன் “நேர்மையானவர்கள்”, “உண்மையானவர்கள்” என்று பாராட்டுகிறார். உயர்பணியில் இவர்களைப் பணியமர்த்துகிறார்.

இந்த பாராட்டிற்கும் பணி உயர்வுக்கும் காரணம்; தனக்கும் தன்னுடைய முதலீட்டிற்கும் நேர்மையானவர்களாய் இருந்தார்கள். தங்களுடைய கடமைகளில் உண்மையானவர்களாயிருந்தார்கள். எனவே உழைப்பின் பலனைப் பெற்றுக் கொண்டார்கள்.

நூறுபேரை விட சிறந்தவராக வேண்டுமென நினைப்பவர் ஏனைய 99 பேரை விடக் கடினமாக உழைக்கவேண்டும். இங்கும் உழைப்பு உயர்வைத் தந்தது.

### 3. உழைப்பில் குறைகளைக் காண்பவர்

“நான் பயந்து போய் உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்” (மத். 25: 25).

“காரணங்கள் சொல்பவர் காரியங்கள் செய்வதில்லை; காரியங்கள் செய்பவர்கள் காரணங்கள் சொல்வதில்லை.” இந்த உவமையில் இடம்பெறும்

மூன்று பணியாளர்களுக்கும் சரிசமமாய்த் தாலந்துகளைத் தலைவன் தரவில்லை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப தருகின்றார். ஒரு தாலந்தை வாங்கினவர் பயப்படுகிறவராய் அடையாளப்படுகின்றார். இது உழைப்பை மறுப்பதற்கான மாற்றுவழி.

நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் இவருடைய தலைவன் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றவர். உழைத்து பலன் பெற விரும்புகின்றவர் என்பதையெல்லாம் அறிந்தவராய் இருந்தாலும் சோம்பல் இவரைத் தடுத்து நிறுத்துகின்றது.

பிறர் உழைப்பில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் தாமாக உழைக்க நினைப்பதில்லை என்ற அடையாளமாக தன்னை வெளிப்படுத்துகின்றார்.

இரும்பைப் பயன்படுத்தாவிட்டால் துருபிடித்துப்போகும். தேங்கிய நீர் தன்னுடைய தூய்மையை இழந்துவிடும் இது போன்று தான் உழைக்காமல் இருப்பது மனதின் வலிமையையும் மனிதரின் திறனையும் உறிஞ்சிவிடுகிறது. உயரங்களையும் உச்சங்களையும் தொட்டவர்களில் பலர் மிகச் சாதாரணமானவர்கள் என்பதால் தான் உலகம் பலரையும் கொண்டாடுகிறது. இதற்குக் காரணம் அவர்களின் அயற்சியில்லாத, கண் துஞ்சாத உழைப்பு.

தொடக்க நூல் 31: 40-ல் தன்னுடைய உழைப்பின் பலனை முழுமையாய் தர மறுக்கின்ற லாபானிடம் யாக்கோபு, “பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது. இவ்விதமாய்ப் பாடுபட்டேன்” என்று உழைப்பினையும் உழைப்பினால் தனக்கு வரவேண்டிய உரிமையையும் உரக்கச் சொல்லுகின்றார். உழைக்க கற்றுத் தந்த கடவுள் உழைக்கும் வாய்ப்பையும் வழங்கியுள்ளார். உழைப்பவரை உயர்த்துகிறார் என்பதும் விவிலியம் காட்டும் உண்மையாகும். உழைப்போம்! உழைக்க வழிகாட்டுவோம்!

அருள்திரு. **R.B. ஜெங்கின்ஸ்**

# அருட்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பு

## Christ's Invitation to be Expression of Mission

எசே. 34: 25-31 1 பேது. 2: 1-10

திபா. 47 யோவா. 20: 19-23

"உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. (I பேது. 2: 9(b)).

அருட்பணி என்பது நற்செய்தி அறிவிப்பது மட்டுமன்று, நமது வாழ்வுச் சூழலில் நற்செய்தியாம் கிறிஸ்துவை பிரதிபலித்து வாழ்வது. இறைமக்கள் அனைவரது வாழ்வும் அருட்பணியின் வெளிப்பாடாக அமைவதை இறைவன் விரும்புகின்றார். இதனை யூதர்களாலும், ரோமர்களாலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்ட நிலையில் போந்து, கலாத்தியா கப்பதோக்கியா, ஆசியா, பித்தினியா போன்ற நாடுகளில் சிதறிக்கிடந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கடவுளின் ஆற்றல்மிகு செயல்களை அறிவிப்பதற்காக கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தார், உரிமைச் சொத்தான மக்கள் என பேதுரு கூறுகிறார்.

### 1. நற்செய்தியை அறிவித்தல் (Proclamation)

பேதுரு இப்பகுதியில் நற்செய்தியை அறிவிப்பது கிறிஸ்தவர்களின் கடமை என்கிறார். தொடக்க காலத்திருச்சபை தங்கள் வாழ்நாளிலேயே கிறிஸ்துவின் வருகை நிகழும் என்றும், அதற்கு முன்பு நற்செய்தியை அனைத்து மக்களிடமும் கொண்டு செல்லவேண்டும் எனவும் போதித்தது. பேதுரு துன்பச்சூழலில் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டு சிதறுண்டு காணப்பட்ட கிறிஸ்தவர்களும் கடவுளின் ஆற்றல்மிகு செயல்களை அறிவிப்பதற்கு கடமைப்பட்டவர்கள் என்கிறார்.

I கொரி. 9: 16-17-இல் பவுலடிகளார் நற்செய்தியை அறிவிப்பதற்காகவே தாம் கடவுளால் தெரிவு செய்யப்பட்டதாகவும், நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ கேடு எனவும், நற்செய்தியை அறிவிக்கும் கட்டாயம் தனக்கு உள்ளதாகவும் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவை தம் மீட்பராக ஏற்றுக்கொண்ட அனைவரும், நற்செய்தியை அறிவிப்பது மிக முக்கியமானக் கடமை என பேதுரு வலியுறுத்துகிறார்.

**2. நற்செய்தி அறிவித்தலும், சான்று பகர்தலும்** (Proclamation and witnessing)

பேதுரு நற்செய்தி அறிவித்தல் வெறும் வார்த்தைகளாக இல்லாது அது அறிவிப்போரின் வாழ்வாக இருக்கவேண்டும் என அறிவுறுத்துகிறார். அருட்பணியின் கூறுபாடுகளில் அறிவித்தலும் சான்று பகர்தலும் இணைந்தே புரிந்து கொள்ளப்படுகிறது. Proclamotion is declaration of words and witness in visible action. இயேசுநாதர் தாம் அறிவித்த இறையரசின் அடையாளமாகவே இந்த உலகத்தில் வாழ்ந்தார். நாம் கூறும் நற்செய்தி நமது செயல்பாடுகளை விவரிப்பதாகவும், நமது செயல்பாடுகள் நான் கூறும் நற்செய்திக்கு விளக்கம் கொடுப்பதாகவும் இருக்க வேண்டும் என்பது பேதுருவின் கருத்து. நற்செய்தியை அறிவிப்பதில் முனைப்புடன் செயல்பட்ட திருச்சபை, நற்செய்தியில் வாழவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் உயிருள்ள கற்கள், ஆவிக்குரிய இல்லம் (1 பேதுரு. 2: 5). என்னும் உருவகங்களைப் பேதுரு பயன்படுத்துகிறார்.

எசாயா 8: 18-ல், "ஆண்டவரில் நம்பிக்கை கொள்ளாமல் குறிகேட்பவர்களாகவும், இறந்தோரிடம் முறையிடுகிறவராகவும் வாழ்ந்த யூதா மக்கள் நடுவில், சீயோன் மலையில் குடியிருக்கும்; கடவுளுக்கு அடையாளங்களாகவும், அறிகுறிகளாகவும் நானும் என் குமாரர்களும் இருக்கிறோம்" என்கிறார். இயேசுவை வெறும் வார்த்தைகளில் விவரிக்காமல் இயேசுவுடன் வாழ்ந்து காட்டும் சீடத்துவ உருவமாக வாழ அழைக்கப்படுகிறோம்.

**3. நற்செய்தியை அறிவிப்போரின் வாழ்க்கை முறைகள்** (Life of the proclaimer)

திருச்சபை மக்கள் தாங்கள் அறிவிக்கும் நற்செய்திக்கு ஏற்றாற்போல வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் பல்வேறு வாழ்க்கை நெறிகளை தனது கடிதத்தில் குறிப்பிடுகிறார். பவுலடிகளாரும் பிலிப்பியத் திருச்சபைக்கு எழுதும் கடிதத்தில் கிறிஸ்தவ வாழ்வு குறித்து குறிப்படும்போது "கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளுங்கள்" (பிலி. 1: 27) என அறிவுறுத்துகின்றார். பேதுரு வலியுறுத்திக் கூறும் மூன்று வாழ்க்கை நெறிகளை புரிந்து கொள்வது நலம் தரும்

**3a. நன்னடத்தை** (Conduct)

1 பேதுரு 2: 12, பிற இனத்தவர் நடுவில் நன்னடத்தை உடையவர்களாய் இருங்கள். கிரேக்க கலாச்சார, சமயச் சூழலில் சிதறிக் கிடக்கும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய நன்னடத்தை வழியாக கிறிஸ்துவாகிய நற்செய்தியை

பிரதிபலிக்க பேதுரு அழைப்பு விடுக்கிறார். 1 பேதுரு 2: 17-ல் பல்வேறு வாழ்க்கை நெறிகளை சுட்டிக்காட்டும் பேதுரு. 1 பேதுரு 1: 15-இல் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள் என கூறுகிறார். 2 பேதுரு 3: 10-14-இல் கடவுளின் வருகையை எதிர்நோக்கியிருப்போர் தூய்மையான, இறைப்பற்றுள்ள நடத்தையில் சிறந்து விளங்க வேண்டுமெனவும் கடவுளின் வருகையில் குற்றமற்றவராக காணும் வகையில் வாழ முயற்சியுங்கள் எனவும் அழைப்பு விடுகிறார். தானியேல் 1: 8-ல் பாபிலோனிய அரண்மனையில் வேற்று சமய கலாச்சார சூழலில் வாழும் தானியேல் அரண்மனையின் உணவு அல்லது திராட்சை ரசம் தன்னை தீட்டுப்படுத்தாதவாறு கவனமுடன் வாழ்கின்றார். இறைமக்களின் நன்னடத்தையின் வழியாக இறைவனை மக்கள் தளங்களில் எளிதாக வெளிப்படுத்த முடியும்.

### 3b. கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றல் (Participaing in Christ's suffering)

1 பேதுரு 4: 13, "கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்ளுகிறீர்கள் என எண்ணி மகிழுங்கள்."

இயேசு கிறிஸ்துவின் துன்பங்கள் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பாதையாக அமைந்தது போல கிறிஸ்தவர்கள் சந்தித்த துன்பங்கள் அவர்களின் மீட்புக்காக பாதையாக அமைந்தது. தொடக்க கால கிறிஸ்தவர்கள் நாங்கள் நாள்தோறும் துன்புறுகிறோம், வசை மொழிகளுக்கு ஆளாகிறோம். ஏன் இந்த தீராத துன்பம் என அங்கலாய்த்தபோது, பேதுரு அவர்களிடம் கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கு கொள்ளுகிறீர்கள் என நினைத்து மகிழுங்கள் என்றும், கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு முன் மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்களும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள் என அழைப்பு விடுக்கிறார். எசா 53-ஆம் அதிகாரம் இயேசுவின் பாடுகளை முன்னறிவிப்பதற்காக பாடப்பட்ட தீர்க்கதரிசனப்பாடலாகும். இயேசுவின் துன்புறுத்தலையும் இறப்பையும் சுட்டிக்காட்டும் பாடுபடும் தாகனைப் போல அனைத்து கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் வழியில் பாடுகளை ஏற்க அழைக்கப்படுகிறோம். நற்செய்திப் பயணத்தில் இடர்களும், ஆபத்துக்களும், துன்பங்களும் தவிர்க்கமுடியாதவைகள். ஆகவே துன்பத்தை வீரத்துடனும், நம்பிக்கையுடனும் எதிர் கொள்வது நற்செய்திக்கு சிறந்த அடையாளமாக அமையும்.

### 3c. மந்தைக்கு மாதிரியாகத் திகழ்தல் (Setting an example to the flock)

"உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன் மாதிரியாய் இருங்கள்" (I பேதுரு 5: 3) எனக் கூறி பேதுரு தனது கடிதத்தில் மூப்பர்கள், ஆயர்கள், மேற்பார்வையாளர்கள் முன் மாதிரியுடன் வாழ

அறிவுறுத்துகிறார். விசுவாச வாழ்வில் ஆபத்துகளும் சோதனைகளும் இருந்தாலும், தன்னலமில்லாமல், முழு நம்பிக்கையுடனும், உண்மையுடனும் பணியாற்ற அழைக்கிறார். எசே. 34: 31-இல் இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் சுயநலமிக்கவர்களாக மாறிய நிலையில் தாமே மந்தைகளை மேய்த்து பாதுகாப்பதாக கூறுகிறார்.

யோவா. 10: 14-15-ல் இயேசுநாதர் தம்மையே நல்ல ஆயன் எனக் கூறுகிறார். நல்ல ஆயன் ஆடுகளை நன்கு அறிந்து சரியான பாதைகளில் நடத்தி, பராமரித்து வாழ்வை வழங்குகிறார். ஆடுகளின் நலனுக்காக தம் உயிரைக் கொடுப்பதற்கும் தயாராக இருப்பதாகக் கூறினார். தொடக்க காலத்திருச்சபையும் இயேசுவை நல்ல மேய்ப்பராக ஏற்றுக்கொண்டது. பேதுரு திருச்சபைகளின் மூப்பர்கள் மக்களிடம் அன்புடனும் அக்கரையுடனும் செயல்பட்டால் இறைமக்களின் வாழ்வு மகிழ்வாக அமையும், திருச்சபையும் வளர்ச்சியடையும் என்கிறார். 1 திமொ. 4: 12-16-ல் பவுலடிகளார் இளைஞனாகிய தீமோத்தேயுவினிடத்தில், “நீ இளைஞனாக இருப்பதால் திருச்சபையார் உன்னை தாழ்வாக கருதாதபடி மந்தைக்கு முன்மாதிரியாக வாழ்ந்தால் நீயும் உனது வார்த்தைகளைக் கேட்போரும் மீட்பு பெறுவர்” என்கிறார்.

**நிறைவுரை**

யோவா. 20: 19-23-ல் பூட்டப்பட்ட அறையில் கூடியிருந்த சீடருக்கு இயேசு காயமுற்ற தம் கைகளையும் விலாவையும் காட்டி சிலுவையில் அறையப்பட்டு இறந்த இயேசு நான் தான் என கூறுகிறார். இயேசுநாதர் தமது துன்பங்கள், இறப்பு, உயிர்த்தெழுதல் வழியாக இவ்வுலகுக்கு வாழ்வை வழங்கினார். இந்த வாழ்வைப் பிறருடன் பகிர்வதே அருட்பணி. இந்த அருட்பணியை நிறைவேற்றவே இயேசு சீடர்களை அதிகாரப்படுத்தி அனுப்புகிறார். தூய ஆவியானவரின் துணையுடன் அருட்பணி நிறைவேற்றப்பட வேண்டும் என்பது யோவான் நற்செய்தியாளரின் கருத்து. இந்த அருட்பணி வெறும் வார்த்தைகளாக நில்லாமல் வாழ்வில் வெளிப்படவேண்டும்.

அருட்பணிக்கான அழைப்பு நமக்கு தரப்படுகிறது. கடவுளின் அழைப்பு எல்லோருக்கும் பொதுவானது. இந்த அழைப்பை ஏற்பதற்கும், மறுப்பதற்கும் நமக்கு உரிமை உண்டு. இருப்பினும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளாகிய அன்பு, நீதி, சமத்துவம், உண்மை ஆகியவற்றைப் பிரதிபலித்து வாழ அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. **S. கிறிஸ்டோபர் விஜயன்**

# தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல்

## Waiting upon the Holy Spirit

எசா. 40: 25 - 31 திப. 1: 1 - 11

திபா. 51 லூக். 24:44-49

"இதோ, என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்" (லூக். 24: 49).

**முன்னுரை**

இன்றைய நவீன உலகில், காத்திருத்தலை எவரும் விரும்பவில்லை. காலையில் விதைத்ததை மாலையில் நல்ல லாபத்தோடு அறுவடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இயங்கும் மக்களைக் கொண்ட உலகமாக தற்போதைய உலகம் மாற்றப்பட்டுவிட்டது.

கிறிஸ்தவ ஆன்மீகத்தின் முக்கிய அம்சமான காத்திருத்தல் என்பதைக் கடைப்பிடிப்பது மிகவும் பாரமானதாகவும் நடைமுறைக்கு ஒவ்வாததாகவும் வழக்கொழிந்த (Obsolete) ஒன்றாகவும் உணரப்படுகிற நிலைமையும் மேலோங்கி வருகிறது.

இந்த சூழலில், தூய ஆவியாரை எதிர்நோக்கி ஏன் காத்திருக்க வேண்டும் என்பதை இன்றைய திருமறைப் பாடங்கள் வழியாகத் தியானிப்போம்.

**1. உன்னதரோடுள்ள உறவில் ஒன்றிணைய காத்திருத்தல்** (எசா. 40:25-31)

"காத்திருப்பு" என்பதற்கு ஆங்கில விவிலியத்தில் 'wait' என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதன் ஒரு நபருக்காகவோ அல்லது ஒரு செய்திக்காகவோ காத்திருக்கும்போது (waiting) சோர்வும், களைப்பும் தான் உண்டாகும். ஆனால் ஆண்டவருக்காகக் காத்திருப்பவர்கள் கழுகுகள் போல புதிய ஆற்றல் பெறுவார்கள் என்கிறது திருமறை.

இங்கு காத்திருத்தல் என்ற வார்த்தைக்குப் பயன்படுத்திய எபிரேய வார்த்தையானது :

1. எதிர்பார்ப்புடனிருத்தல்
2. பொறுமையோடிருத்தல்
3. ஒன்றாக சேர்த்து முறுக்கிக் கட்டுதல் என்ற விளக்கங்களைத் தருகிறது.

மேலும், காத்திருத்தல் என்ற வார்த்தைக்குப் பயன்படுத்திய (காவாக் - kawah) எபிரேய வார்த்தையானது “திரிக்கப்படுதல்” என்ற பொருளைத் தருகிறது.

எடுத்துக்காட்டாக, தேங்காய் மட்டையின் மஞ்சிக்கு எந்த வலிமையும் (strength) கிடையாது. ஆனால் அதே தேங்காய்மட்டை மஞ்சி கயிறாகத் திரிக்கப்பட்டு, அது கயிறாக மாறும் போது அதற்கு புதுவலிமை உண்டாகும். அதுபோல, “எந்த மனிதர் கடவுளோடு திரிக்கப்படுகிறாரோ (ஒன்றாக சேர்த்து முறுக்கிக் கட்டப்படுகிறாரோ) அவரே புதுபெலன் அடைவார்” என்பதே Kawah என்பதன் கருப்பொருள் ஆகும்.

இறைவனுக்கு காத்திருப்பவர்கள் அல்ல, இறைவனுடன் திரிக்கப்படுபவர்களே கழுகுகள் போல புதிய ஆற்றலைப் பெறுவார்கள் என்பது இங்கு அழுத்தம் பெறுகிறது.

வயதான கழுகுக்கு இறகுகள் வலுவிழந்துவிடுவதால், முன்புப்போல் வேகமாகவும், உயரமாகவும் பறக்க முடியாது. இதனால் பலவீனமாக உணரும் கழுகு, தொலைதூரத்தில் உள்ள காடுகள் அல்லது மலைப்பகுதிகளுக்குச் சென்று, தன் அலகுகளால் உடலெங்கும் குத்திக்கொண்டு இறகுகளைப் பிய்த்துவிடுகிறது. மேலும் பாறைகளில் தன் அலகுகளையும், நகங்களையும் மோதி நீக்கிவிடுகிறது. பின்னர் புதிய இறகுகளும், நகங்களும் முளைக்கும் வரை தன்னை மறைத்துக்கொண்டு வாழ்கிறது. புதிய இறகுகள் முளைத்தவுடன், வெளியே வந்து முன்பை விட உயரமாக பறக்க ஆரம்பிக்கிறது.

ஆண்டவருக்கு காத்திருத்தல் என்பது நம்முடைய ஆசைகள், விருப்பங்கள் நிறைவேறவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றி ஆண்டவருடைய திருவுளம் (Will of God) நிறைவேறவேண்டும் என்று ஒப்படைத்தல் ஆகும். அதுமட்டுமல்ல, இறைத்திருவுளத்துக்குக் காத்திருத்தல் என்பது அவரோடு இணைத்துக் கட்டப்படும் ஒரு புதிய அனுபவம் ஆகும். அதாவது அவரே நமக்குள் எல்லாவற்றிற்கும் எல்லாமாக மாறிவிடும் அனுபவம் அந்த அனுபவமே புதிய ஆற்றலை அருளும்.

மருத்துவராகவும், எழுத்தாளராகவும் விளங்கும் Geoffrey Simmons என்பவர் எழுதிய Billions of Missing Links என்ற நூலில், ஒரு குழந்தை பிறக்கும் தருணத்தில் நிகழும் விந்தைகளைப் பின்வருமாறு விளக்கிக்கூறியுள்ளார் : “தாயின் உதிரத்திலிருந்து வெளியேறும் வரை, குழந்தை தானாகவே சுவாசிப்பதில்லை. அது, வெளியேறுவதற்கு முன்னர், அன்னையின் உதிரத்தில் தானாகவே சுவாசிக்க ஆரம்பித்தால், சூழப்பட்ட திரவத்தால் மூச்சடைத்துப்போகும். வெளியேறியபின், தாமதமாகச் சுவாசித்தால்,

மூளைப்பகுதி பாதிக்கப்படும். இவ்வாறு பல வியப்பான அம்சங்கள் இணைந்து, ஒரு புதிய உயிரை இவ்வுலகிற்குக் கொணரும் புதுமையைப் புரிகின்றன.”

தாயின் உதிரத்திலிருந்து வெளியேறிய அந்நொடியில், நமது நுரையீரலை நிறைத்திருந்த நீரை வெளியேற்றிவிட்டு நாம் முதல் முறையாக, சுயமாக, சுகமாக சுவாசிக்க ஆரம்பிக்கும் வரை பொறுமையோடு காத்திருப்பதே நமது வாழ்வின் தொடக்கமாகவும், அடித்தளமாகவும் அமைகிறது. பொறுமை இழந்தால் வாழ்வையே இழக்க நேரிடும். அதுபோலவே, நமது சுயமாக செயல்பட முயல்வதை விடுத்து, ஆண்டவருடன் திரிக்கப்பட காத்திருக்கவேண்டும்.

சரியாக பாதுகாக்கப்படாத ஓர் இரும்பை துரு அரித்து நிர்மூலம் செய்கிறது போல, ஆண்டவருக்குள் தங்களுடைய வாழ்க்கையை அமைத்திராதவர்களின் ஆற்றலையும் இந்த உலக சோதனைகள் என்னும் துரு அரித்து விடும். ஆகவே, ஆண்டவரோடு திரிக்கப்பட (இணைக்கப்பட/முறுக்கிக் கட்டப்பட) காத்திருக்க வேண்டியது அவசியம்.

**2. உன்னத உறுதிமொழி நிறைவேற எதிர்நோக்குடன் காத்திருத்தல்** (திப. 1: 1 - 11)

“அவர் மீண்டும் வருவார்” (தி.ப. 1:11) என்ற வார்த்தைகள் நாம் காத்திருப்பதற்கான எதிர்நோக்கை நமக்குத் தருகின்றன. எதிர்நோக்கில் தயக்கம் அறவே கூடாது. நம் வாழ்வின் ஒவ்வொரு செயலையும் உந்தித் தள்ளுவது எதிர்நோக்கே ஆகும். காலையில் எழுவோம் என்ற எதிர்நோக்கு இருப்பதால் தான் இரவு தூங்கச் செல்லுமுன் “வேக்அப் கால்” (Alarm) வைக்கின்றோம்.

படிப்பது, பயணம் செய்வது, வேலை தேடுவது, தேடிய வேலையில் சம்பாதிப்பது, திருமணம் முடிப்பது என எல்லா வாழ்க்கை நிகழ்வுகளிலும், எதிர்நோக்கு இழையோடியிருக்கின்றது.

நல்ல பலசாலியும் மிகுந்த தன்னம்பிக்கையும் கொண்டிருந்த அவர் ஒரு சிறந்த மருத்துவர். ஆனால் அவரது மனைவியோ மிகவும் பலவீனமானவர். எல்லாவற்றிற்கும் கணவனையே நம்பியிருந்தார். ஒருநாள் எதிர்பாராத சூழலில் அம்மருத்துவர் மரித்துவிட்டார். அவரது பிரிவை அவருடைய மனைவி தாங்கமாட்டார் என அனைவரும் எண்ணினர். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புக்கு மாறாக அவர் தனது காரியங்களை நன்கு நடத்தினார். அவருடைய கணவர் உயிரோடிருந்த காலத்தில் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு நல்ல பிணைப்பை அளித்திருந்தது. இம்மருத்துவர் தனது நோயாளிகளைப் பார்க்கச் செல்லும் பொழுது ஒரு குறிப்புச் சீட்டை கதவில் வைத்து விட்டுச் செல்வார்.

அவர் மரித்தபின் அம்மனைவி அதனை எடுத்து அனுதினமும் தான் பார்க்கும்படியாக ஒரு சுவரில் மாட்டி வைத்தார். அக்குறிப்பு அவருக்கு அதிக நம்பிக்கையையும் வலிமையையும் தந்தது. அவ்வாறு அவருக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிப்பதற்கு அக்குறிப்பில் என்ன எழுதியிருந்தது? "வெளியே சென்றுள்ளேன், சீக்கிரத்தில் வந்துவிடுவேன்" என்ற சொற்களே அதில் காணப்பட்டது.

இது போலவே, சீடர்களிடம் இயேசுவும் கூறிச் சென்றார். புதிய ஆற்றலுடன், உத்வேகத்துடன், எண்ணத்துடன் செயல்பட வைக்கும் நோக்கில் இந்த காத்திருப்பின் காலம் தரப்பட்டுள்ளது.

சீடர்கள் காத்திருந்தார்கள் ஆகவே பலப்பட்டார்கள். சீடர்கள் காத்திருந்தபடியால் தூய ஆவியார் அவர்களோடு ஒன்றாகக் கலந்துவிட்டார். அவர்கள் காத்திருந்தார்கள் எனவே இறைத்திருவுளம் அவர்களில் நடந்தது. காத்திருந்த சீடர்கள் சான்றாளர்களாக மாறி உலகமெங்கும் நற்செய்தியைப் பரப்பினார்கள்.

**3. உன்னத ஆற்றல்பெற பொறுமையுடன் காத்திருத்தல்** (லூக்கா 24: 44-49)

இந்த உலகத்தில் தங்களை ஆற்றல்படுத்திக்கொள்ளவும், பிறர் கவனத்தை ஈர்க்கவும் மக்கள் விதவிதமான காரியங்களைச் செய்கின்றனர். சிலர் தங்களுடைய உடலை வலிமைப்படுத்துவதற்காக உடற்பயிற்சி மையத்தை நாடுகிறார்கள். பலர் இந்த உலகத்தில் தங்களை செல்வத்தில் திறனுள்ளவர்களாக காண்பிக்கும் பொருட்டு பலவிதங்களில் செல்வம் சேர்க்கிறார்கள்.

இத்தகைய உலக வலிமைக்காக இரவும் பகலும் தங்கள் உடலைக் கெடுத்து மக்கள் வேலை செய்வது கண்கூடு. சிலர் தங்களை மனிதர்கள் நடுவில் ஆற்றல் உள்ளவர்கள் அல்லது பிரபலமானவர்கள் என்று காண்பிப்பதற்காக ஒரு கூட்டத்தைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு நடக்கிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குள் புஸ்வாணம் போல மாறிவிடுகிறது.

எப்படியென்றால் ஒரு வலிமையும் திடனுமுள்ள மனிதருக்கு திடீரென ஏதேனும் நோய் வரும்போது உடல் சோர்ந்து போய், பெலன் இழந்து விடுகிறது. செல்வத்தில் திறனுள்ளவர்களாகக் காண்பித்தவர்கள் திடீரென ஏற்படும் இயற்கை பேரிடர் அல்லது வேறு ஏதேனும் அழிவு வரும்போது எல்லாவற்றையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் நிலையும் உருவாகிறது. இவ்வளவு அநித்தியமானது தான் இவ்வுலக ஆற்றல். ஆகவே உன்னத ஆற்றலுக்காக நாம் பொறுமையோடு, எதிர்நோக்குடன் காணப்பட வேண்டும்.

ரீனா ஒரு ஏழை சிறுமி, அவளுக்கு அப்பா கிடையாது. அம்மாவும், ஒரு தம்பியும் தான். அவளுக்கு 16-வது பிறந்தநாள் வந்தது. ரீனா அம்மாவின் கஷ்டம் நன்கு அறிந்தவர். ஆகவே, அம்மாவைக் கஷ்டப்படுத்தாமல், தனது பிறந்த நாளுக்கு என்ன பரிசு கேட்கலாம் என்று யோசித்தாள். நீண்ட யோசனைக்குப் பின் அம்மாவிடம் வந்து, தனக்கு ஒரு அழகான வண்ணத்துப்பூச்சியும், மணம் வீசும் மலரும் பிறந்தநாள் பரிசாக வேண்டும் என்று கேட்டாள்.

ரீனாவின் அம்மா, மகளுக்கு ஒரு கம்பளி பூச்சியையும், முள் செடியையும் பிறந்தநாள் பரிசாகக் கொடுத்தார். ரீனாவுக்கு ஒரே வருத்தம். நான் கேட்ட இந்த சின்னப் பொருளைக் கூட அம்மா நமக்கு தரவில்லையே என்று விரக்தி அடைந்தாள் ரீனா. இருந்தாலும் அம்மா தந்த பிறந்த நாள் பரிசாகிய கம்பளி பூச்சியைப் பத்திரமாக வைத்துக் கொண்டாள். மேலும், அந்த முள் செடியையும் முற்றத்தில் ஓர் ஓரமாக நட்டு வைத்தாள். சில நாட்கள் கழித்து, அருவருப்பாக இருந்த கம்பளிப்பூச்சி ஒரு அழகான வண்ணத்துப்பூச்சியாக மாறியது. நட்டு வைக்கப்பட்ட அந்த முள்செடியில், அழகான மலர் ஒன்று இதழ் விரித்து மணம் வீசிக் கொண்டு நின்றது. அந்த காட்சியைக் கண்ட ரீனா ஓடிச்சென்று அம்மாவைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

அம்மா மெதுவாக சொன்னாங்க : "ரீனா ! நீ பொறுமையோடு காத்திருந்து, அமைதியாக சூழ்நிலைகளை ஏற்றுக்கொண்டால், நீ எதிர்பார்க்கிற காரியங்கள் தானாக வரும். கம்பளிப்பூச்சி வண்ணத்துப் பூச்சியாக மாறவும், முட்கள் மலராக மாறி மணம் வீசவும் நீ காத்திருக்கத்தான் வேண்டும். நினைத்தது உடனே அடைந்திட முடியாது. ஒவ்வொன்றும் அதினதின் காலத்தில் நடைபெற நாம் காத்திருக்கத்தான் வேண்டும். நாட்கள் வாரங்களாக மாற, வாரங்கள் மாதங்களாக மாற, மாதங்கள் வருடங்களாக நீள்கிறது என்று பொறுமை இழந்த உன் மனது மாறி பண்பட வேண்டும். அதற்காகத் தான், கடவுள் காத்திருக்க வைக்கிறார். நாம் விரும்புகிற காரியங்களை விட, மகா பெரிய நன்மைகளை நமக்கு தர கடவுள் சித்தம் கொண்டுள்ளார். நாம் பொறுமையோடு, விசுவாசத்தோடு காத்திருந்தால், நாம் எதிர்பார்ப்பது நமக்கு கிடைக்கும். ரீனா சமத்தாக அன்னையின் ஆலோசனையைக் கேட்டு தலையாட்டினாள்.

மணவாளனுக்காக மணவாட்டி காத்திருத்தல் அன்பைப் பெருகப் பண்ணுமே தவிர குறைக்காது. அதுபோல, மணவாளன் இயேசுவுக்காக நாம் காத்திருக்கும் போது அது நம்மை உன்னத ஆற்றலடையச் செய்யும் என்பது தெளிவு.

எத்தகைய காரியமாக இருந்தாலும் ஆண்டவருக்காக, அவருடைய காலத்திற்காக, அவர் குறித்திருக்கும் நேரத்திற்காகக் காத்திருக்க வேண்டும். ஆண்டவர் தரும் விடுதலையை எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டும்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த நேரம் ஜெர்மனி நாட்டு அதிபர் கொன்ராடு அடனாவர் வானொலி, தொலைக்காட்சி வழியாக மக்களுக்கு உரையாற்றுகிறார். “நாம் அழிவு சிதைவு இடிபாடுகளுக்கு இடையே நின்று கொண்டிருக்கிறோம். நாம் விழித்தெழும் நேரம் வந்து விட்டது. வீறுகொண்டு கரம் கோர்ப்போம் புதிய ஜெர்மனியைக் கட்டி எழுப்பக் கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் நழுவ விடக்கூடாது.” மக்கள் கூர்ந்து கேட்டனர். விழித்து எழுந்தனர். விளைவு வளமான செழிப்பான புதிய ஜெர்மனி. இத்தகைய ஆக்கபூர்வமான விளைவுகளை உருவாக்க உன்னத ஆற்றலுக்காக நாம் காத்திருக்க வேண்டும்.

இன்றைய அவசர உலகில் எல்லாம் உடனடியாக நிகழ்ந்தேற வேண்டும் என்னும் நோக்கத்துடன் மக்க0ள் பற்பல வளைந்த வழிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுகிறார்கள். அவசரம் ஆபத்தைத் தரும் என்ற பொன்மொழி போல, அத்தகைய முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்து வாழ்வில் வெட்கப்பட்டுப் போகக்கூடிய நிலையை உருவாக்கும் என்பது மறுப்பதற்கில்லை.

ஏதாவது நன்மையை பெறுவதற்காக உலக வழிகளில் செல்லாமல், விவிலிய வழிகாட்டுதல்படி காத்திருப்பதால், இழப்பு அல்லது பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வும் இன்று பெரும்பாலான மக்களிடம் மேலோங்கி நிற்கிறது. ஆனால், உலகத்தின் அவசரத்துக்கு ஏற்ப திருமறை போதிக்கும் கட்டளைகளை மாற்றிக்கொள்ள முடியாது. இறைவனிடம் இருந்து கிடைக்க வேண்டிய நன்மைகளை, நம்பிக்கையோடும் பொறுமையோடும் காத்திருந்து பெற வேண்டுமென்பதே திருமறை வழங்கும் மாபெரும் கட்டளையாக உள்ளது.

**நிறைவுரை**

இறைவன் படைத்த சாதகப் பறவையானது குளம் குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் நீரையோ, கழிவு நீரையோ பருகாது. மாறாக, கார்காலம் வரை காத்திருந்து கார்காலத்தில் பெய்யும் மழை நீரை வாய் திறந்து பருகி உயிர் வாழ்கிறது. நாமும் சாதகப் பறவையாக மாறி, **“உன்னதரோடுள்ள உறவில் ஒன்றுபடவும், உன்னத உறுதிமொழி நிறைவேறவும், உன்னத ஆற்றல் பெறவும்”** தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருக்க இக்காலம் அழைப்பு விடுக்கிறது. ஆகவே, பொறுப்புணர்வோடும், கடமையுணர்வோடும், அர்ப்பணிப்புடன் உறுதியோடும் வருங்கால வாழ்வின் விடியலை எதிர்நோக்கி செயல்படுவோம். இறையாசியால் நிரப்பப்படுவோம்.

**அருள்திரு. R. சாம் பிரின்ஸ்**

# வாரும் தூய ஆவியரே, எம்மைப் புத்தாக்கம் செய்தருளும்

## Come Holy Spirit Renew us

எசே. 37: 1-14 திப. 2: 1-13

திபா. 104: 24-35 யோவா. 16: 1-11

"அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்" (திப. 2: 4).

தூய ஆவியர் என்ற புரிதல் திருச்சபையின் அடிப்படை விசுவாசம். அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம், நிசேயா விசுவாசப்பிரமாணத்தில் தூய ஆவியரை நம்புகிறேன் என அறிக்கையிடுகின்றோம். இறையாசியிலும் தூய ஆவியர் என்று பயன்படுத்துகின்றோம். ஆகவே தூய ஆவியானவர் ஆன்மீக வாழ்வோடு செயல்படுகின்றவராக இருக்கின்றார் மட்டுமல்ல வரலாற்றில் செயல்படுகின்றார். திருமறை தொடக்கம் முதல் முடியும் வரை ஆவியரை குறித்து விளக்கங்கள் இடம் பெறுகின்றன. ஆதியாகமம் 1: 2-ல், "கடவுளின் ஆவி தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தது" என்றும் வெளிப்படுத்தல் 22: 17-ல் "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

அப்போஸ்தலர் நூல் பரிசுத்த ஆவியரின் நூல் என்று அழைக்கப்படுகின்றது. அப்போஸ்தலரின் மையப் பொருளில் ஆவியே அப்போஸ்தலர்1-13 அதிகாரங்களில் 40-க்கு மேற்பட்ட இடங்களில் பரிசுத்த ஆவியர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

- ஆவியர் இல்லாது நற்செய்தி இல்லை
- ஆவியர் இல்லாது ஒருமனம் இல்லை
- ஆவியர் இல்லாது சீடத்துவம் இல்லை

ஆவியரே ஆன்மிக மறுமலர்ச்சியின் தொடக்கம், ஆவியரே திருச்சபைக்கு முதன்மையான அற்புதம். ஆகவே தூய ஆவியர் இல்லாத சபை மரித்த சபையாகிடும். உயிருள்ள சபையாக செயல்பட தூய ஆவியரால் புத்தாக்கம் செய்யப்பட வேண்டும். காரணம், தூய ஆவியர் கொடுக்கப்பட்ட நாளே கிறிஸ்தவ திருச்சபையின் தொடக்கம்.

**1. பழைய பண்டிகையைப் புதிய பண்டிகையாகப் புத்தாக்கம் செய்த ஆவியர்** (திப. 2: 1 )

“பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்”

“பெந்தேகோஸ்து” என்பது கிரேக்க சொல். “ஐம்பதாவது நாள்” என்பது இதன் பொருள். இந்த நாளை அறுவடைக்கு நன்றி செலுத்தும் யூதத் திருநாளாக யூதர்கள் ஆசரித்தார்கள். பஸ்கா திருவிழாவுக்குப் பின் ஐம்பதாவது நாள் இது கொண்டாடப்பட்டது. அதாவது ஏழு ஓய்வுநாளுக்கு மறுநாள் கொண்டாடப்பட்டது. (7 C 7 = 49, 49 + 1 = 50)

சதுசேயர் : பஸ்கா விழாவின் முதல் நாளிலிருந்து 50 நாட்களைக் கணக்கிட்டனர்

பரிசேயர் : நிசான் 14-ல் எகிப்தில் பஸ்கா ஆசரித்தனர். இது ஒரு வியாழக்கிழமை. இரண்டு நாளுக்கு பின் ஓய்வு நாள். இந்த ஓய்வு நாளிலிருந்து 50 நாளை எண்ணினர்.

எபிரேய மாதத்தின்படி நிசான் மாதம் பஸ்கா பண்டிகையும் அதைத் தொடர்ந்து 50-வது நாளாக சீவான் மாதம் 6-ஆம் 7-ஆம் நாளில் அறுவடைப் பண்டிகை ஆசரிக்கப்பட்டது. இந்த பண்டிகை வாரங்களின் பண்டிகை (லேவி 23: 15, 16, இச. 16: 9, 10), அறுவடைப் பண்டிகை, முதற்பலன் பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது. இந்த 50-வது நாளிற்கு பிற்காலத்தில் உடன்படிக்கை விழா என்ற பெயரும் கொடுக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலை பெற்று ஐம்பதாம் நாள் சீனாய் மலை வந்தடைந்தனர். எகிப்திலிருந்து புறப்பட்ட 3-ம் மாதம் 6-ஆம் 7-ஆம் நாள்களில் கடவுள் உடன்படிக்கை செய்தார். விப. 19: 7-11 சீனாயில் 10 கற்பனை கொடுக்கப்பட்டது. இத்துடன் இணைச்சட்டமாக 613 சட்டங்கள் சேர்த்தனர். இவை அத்தனை சட்டங்களையும் கி.மு. 587-ல் எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்ட பின்பு வாசித்து உடன்படிக்கையை நினைவு கூரும் நாளாக ஆசரிக்கப்பட்டது. இந்த 50-ஆம் நாள் நீதி சட்டம் தரப்பட்டது. இந்த நாளையே யூத சமயத்தின் பிறந்த நாளாக கருதினர்.

Y புதிய ஏற்பாட்டில் 50-வது நாள் :

இயேசு கிறிஸ்து மரித்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாளாக இருந்தது. (யோவா. 19: 31). நிசான் 15-ல் வரும் ஓய்வுநாளே இந்த நாள். திப. 1: 3-ல் அவர் பாடுபட்ட பின்பு 40-வது நாள் தரிசனமாகி விண்ணுக்கு

எழுந்தருளினார் (1: 9) 50-வது நாளில் தூய ஆவியர் அருட்கொடையாக கொடுக்கப்பட்டார். இந்த நாள் தூய ஆவியரைப் பெற்ற புதிய உடன்படிக்கையின் நாளாக மாறியது. பழைய உடன்படிக்கை நாளில் சட்டம் கொடுக்கப்பட்டது. இப்போது தூய ஆவியர் கொடுக்கப்பட்டதால் புதிய உடன்படிக்கை நாளானது.

- யூத பண்டிகை கிறிஸ்தவப் பண்டிகையானது.
- வாரங்களின் பண்டிகை வரங்களின் பண்டிகையானது.
- நன்றி செலுத்தும் பண்டிகை நற்செய்தி அறிவிப்பின் பண்டிகையானது.
- பத்து கட்டளை பெற்ற பண்டிகை புதிய கட்டளையின் பண்டிகையானது.

ஆதித் திருச்சபை இந்த நாளில் பலருக்கு திருமுழுக்கு கொடுத்து வெண்ணுடை தரித்தது ஆகவே இந்த நாள் வெண்மையின் ஞாயிறு (White Sunday) என்று அழைக்கபட்டது. தூய ஆவியரின் அருட்கொடை ஈவு பழைய பண்டிகையைப் புதிய பண்டிகையாக நமக்கு தந்திருக்கின்றது. ஆகவே கிறிஸ்து பிறப்பு, உயிர்த்தெழுதல் போன்று தூய ஆவியர் திருநாள் கிறிஸ்தவ ஆன்மீகத்தில் முதன்மைப்படுத்தப்படவேண்டும்.

**2. பல பாஷைகளைப் புரிந்துகொள்ளச் செய்த ஆவியர்** (திப. 2: 4)

ஆவியானவர் ஒன்பது விதமான வரங்களைத் தருவதாக. பவுல் 1 கொரி. 12: 7-ல் குறிப்பிடுகின்றார். இந்த வரங்களில் ஒன்று பாஷை வரம். பாஷை வரம் முதல் முதலாக பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியாரால் நிரப்பப்பட்டவர்கள் வரங்களின்படி வெவ்வேறு பாஷைகளைப் பேசினர். இந்த பாஷை வந்திருந்த அனைவருக்கும் புரிந்தது. பேசியவர்கள் கலிலேயர்கள் (திப. 2: 7) கலிலேயருக்கு தாய்மொழி தவிர வேறு மொழி தெரியாது. ஆனால் ஆவியர் அனைவரும் புரியும்படி பேச செய்தார். அறியாமையிலிருப்போரும் ஆவியரால் நிரப்பப்படும்போது பிறர் ஆச்சரியப்படும் வகையில் நடத்தப்படுகின்றார்கள்.

பாபேல் பாஷை சிதறப் பண்ணியது (தொநூ. 11:9) காரணம் நமக்கு ஒரு நகரம் நமக்கு பேர் (4) என்று பெருமையின் உயரமே பாபேல் கோபுரம். ஆனால் பெந்தேகோஸ்தே நாளில் ஒரு மனமும், இறை வேண்டலும் இருந்தது. ஆகவே அவர்கள் பேசிய பாஷை அனைவருக்கும் புரிந்தது. ஆவியர் புரிய வைப்பவர். ஆவியர் பிலிப்புவைக் கந்தாகே என்பவரின் மந்திரியிடம் அனுப்பி ஆகமத்தைப் புரியவைத்தார். (திப. 8: 29-31). பவுல் அந்நிய பாஷை அனைவரும் பேசுவதை விரும்பினார். ஆனாலும் சபையில் பேசுபவர்கள் அதன் அர்த்தம் சொல்ல வேண்டும் என்றார் (1 கொரி. 14: 5, 12, 13. அந்நிய பாஷை பேசாமலிருப்பதே

சிறப்பு என்பது பவுலின் முடிவு (1 கொரி. 14: 27, 28). மனுஷர் பாஷையானாலும் தூதர் பாஷையானாலும் அன்பே முக்கியமானது (1 கொரி. 13: 1) ஆகவே இன்றைய திருச்சபைக்குத் தேவையானது புரியாத பாஷையல்ல புரிகின்ற பாஷையே.

**3. பயந்த ஐக்கியத்தைப் பலமுள்ள ஐக்கியமாகப் புத்தாக்கம் செய்த ஆவியர்** (தி.ப. 2: 14)

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்பு வரை உறுதியாயிருந்த சீடத்துவ ஐக்கியம் சிலுவை மரணச் சூழலிலேயே பயம் சூழ்ந்தது. இயேசுவின் தலைமைத்துவம் இல்லாததால் பயம் அதிகமாக பற்றிக்கொண்டிருந்தது. இயேசு சிலுவை சவாலை எதிர்கொள்ள சீடத்துவத்திற்கு பன்முக ஆயத்தம் கொடுத்திருந்தார்.

யோவான் 16: 5 - நான் என்னை அனுப்பிய வரிடத்திற்கு போகிறேன். 14: 16 - தேற்றரவாளன் தரப்படுவார். 14: 17 - சத்திய ஆவியர் உங்களுடனே வாசம் பண்ணி உடனிருப்பார். 14: 26 - பரிசுத்த ஆவியர் போதித்து நினைப்பூட்டுவார். 14: 27 - உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

இத்தனை ஆயத்தங்களுக்கு பின்பும் இயேசுவின் சிலுவைப்பாடுகளில் பயந்தே இருந்தனர்.

லூக்கா 22: 54 - பேதுரு தூரத்தில் நின்றார். 22: 57 - பேதுரு மறுதலித்தார்; உயிர்த்தெழுந்த பின்பும் பயம் தீரவில்லை; லூக்கா 24: 5 - ஸ்திரீகள் பயப்பட்டனர். 24: 27 - அவர்கள் கலங்கி பயந்தார்கள் பயந்தவர்களை இயேசு ஆற்றல்படுத்தினார்.

திப. 1: 4 - சில நாளில் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர். 1: 8 - பெலனடைந்து.... சாட்சிகளாயிருப்பீர்கள். எருசலேமில் மேல்வீட்டறையில் 120 பேர் கூடியிருந்தனர். ஆவியர் கொடுக்கப்பட்டதால் புதிய பலமுள்ள ஐக்கியம் உருவானது. பயந்த ஐக்கியம் பலமுள்ள ஐக்கியமானது.

திப. 2: 14 - பேதுரு உரத்த சத்தமாய் பேசினார். 2: 15 - வெறித்தவர்கள் சத்தமல்ல, ஆவியை பெற்றவர்களின் சத்தம். 2: 43 - பயந்தவர்கள் பிறர்பயப்படும்படி அற்புதங்கள் செய்தனர். 2: 46 - பயந்து ஒரு வீட்டில் இருந்தவர்கள் வீடுகள்தோறும் சென்றனர். 3: 12 - சுயபலமல்ல சுகமாக்குவது (16) அவருடைய பெலம். 4: 7 - எந்த பலம் (10) உயிர்த்த ஆண்டவர் தந்த பெலம். 4: 13 - படிப்பறியாமை, பேதமைகளைப் பலர்முன் பேச வைத்தது. 4: 31 - பரிசுத்த ஆவியரால் நிரப்பப்பட்டவர் தைரியமாய் பேசினார். 4: 33 - பரிசுத்த ஆவியரால் நிரப்பப்பட்டவர் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள்.

பரிசுத்த ஆவியர் பயந்தவர்களை தைரியமுள்ளவர்களாக்கினார். பலவீனரை பலமுள்ளவராக்கினார், பேதைகளைப் பெருமைப்படுத்தினார், மறுதலித்தவர்களைச் சாட்சிகளாக்கினார்.

**4. பழைய மனிதனை புதிய மனிதனாக்கிய ஆவியர்** (திப. 2: 17, 18)

பரிசுத்த ஆவியர் பழைய திருச்சபையை புதிய திருச்சபையாக்குபவர்(ஆவியில்), பழைய குணத்தைப் புதிய குணமாக மாற்றுபவர், பழைய மனுஷனைப் புதிய மனுஷனாக்குபவர். மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என யோவேல் 2: 28, 29-ல் காணமுடிகின்றது. இது அனைவரும் ஆவியரால் நிறைகின்ற அனுபவம். குமாரர், குமாரத்திகள், வாலிபர், மூப்பர், ஊழியக்காரர், ஊழியக்காரிகள் என திருச்சபை முழுமையும் இறைவாக்குரைப்பவர்களாக, தரிசனம் காண்பவர்களாக, சொப்பனம் காண்பவர்களாக ஒரே சூழலில் மாற்றப்படுகின்றனர்.

முற்காலத்தில் எசாயா, எரேமியா போன்று இறைவாக்குரைத்தோர் ஆபிரகாம், யாக்கோபு போன்று தரிசனம் கண்டோர் தொநூ. 12: 7, 26: 2, 35:1 யோசேப்பு, சாலொமோன், தானியேல் போல் சொப்பனம் கண்டோர் (தொநூ. 37: 5, 1 அர. 3: 5, தானி. 7: 1) இஸ்ரயேலர் வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் வந்து சென்றனர். பெந்தெகோஸ்தே அனுபவம் ஒரே நேரத்தில் திருச்சபை முழுமைக்கும் தரப்படுவதாக அமைகின்றது.

யூத ரபீகள் ஆவியரை ஞானமுள்ளோர், வசதியுடையோர் மட்டுமே பெறமுடியும் என நம்பினர். ஆவியர் அனைவருக்கும் தரப்படுகின்றவர். ஆவியின் படி நடந்தால் ஆக்கினைத் தீர்ப்பில்லை, ரோமர் 8: 1; ஆவியின் படி நடப்பவர் ஆவிக்குரியவைகளைச் சிந்திப்பர் ரோமர் 8: 5; ஆவியின் சிந்தை ஜீவன், சமாதானம், ரோமர் 8: 6; ஆவியால் நடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய புத்திரர், ரோமர் 8: 14.

ஆவியர் திருச்சபை முழுமையையும் புதிய மனிதராக்குபவர். இன்று பழைய மனுஷ செயல்களை விட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ள வேண்டும். கொலோசேயர் 3: 9, 10. ஆவியர் மாம்ச செயல்களை மாற்றி (கலா. 5: 19-21) ஆவியின் கனி தரும் புதிய மனிதனாக்குகின்றார் (22-25). பரிசுத்த ஆவியானவரை இன்றைய ஐக்கியம், ஆன்மீகம், வரலாறு, வாழ்வு, பாரம்பரியம் போன்ற அனைத்திலும் செயல்பட அனுமதிக்கும்போது புத்தாக்கம் மலர்ந்திடும்.

அருள்திரு. **I. ரெஞ்சித் வேதகுமார்**

**26.05.2024** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & மும்மை ஞாயிறு

# நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம்

## We Worship the Triune God

தொநூ. 1: 1-28 2 கொரி. 13 : 11-14

திபா. 2 யோவா. 1: 1 - 18

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

(2 கொரி. 13: 14)

கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கையில் திரித்துவ கடவுளை நாம் வழிபடுகிறோம். "திரித்துவம்" என்ற சொல்லை திருமறையில் நேரடியாக நாம் காணமுடியாது. ஆனால் திரித்துவக் கோட்பாடுகளே திருச்சபையின் அஸ்திபாரமாகும். திருச்சபையின் நம்பிக்கையிலும், பற்றுறுதி அறிக்கையிலும் பிரித்துப்பார்க்கமுடியாத அளவில் நம் வாழ்விலும், செயலிலும், வழிபாட்டிலும் இதை வெளிப்படுத்துகிறோம். இறைவனின் ஆள்தத்துவத்தை பழைய ஏற்பாட்டில் தந்தை படைப்பாளராகவும், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து மைந்தராகவும் மீட்பராகவும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் தூய ஆவியார் பெந்தெகோஸ்து நாளில் அருளப்பட்டு முழு மனுக்குலத்தையும் வழிநடத்துபவராகவும் புரிந்துகொள்ள இயலும், தந்தை, மைந்தர், தூய ஆவியார் என திரித்துவ கடவுளாகக் காட்டப்படுகிற இவர்கள் ஒரே தன்மையுடையவர்களாகவும் சம அதிகாரம், ஆற்றல் நிறைந்தவர்களாகவும் செயல்படுகின்றனர். ஒரே இறைவன் மூன்று நபர்கள் எனப்படும் மறைபொருளை மூவொரு இறைவன் (Triune God) என்று அழைத்து மனிதர்களாகிய நாம் இறைவனைச் சார்ந்து வாழ்கிறோம். அவரே நம் வாழ்வில் முழுமையானவர். மூவொரு இறைவன் வரலாற்றில் படைப்பாளராக, பாதுகாப்பவராக, உறவாடுகிறவராக, உடனிருப்பவராக செயல்படுகிறார். மட்டுமல்ல தொழுகையிலும், நம் பற்றுறுதியின் மையமாகவும், நம் வாழ்வின் ஒளியாகவும், வழிகாட்டியாகவும், அவர் வருகையை எதிர்கொள்ளத் தூண்டும் இலக்காகவும் நம்மில் செயல்படுகிறார் என்பதைத் தரப்பட்ட திருமறைப் பகுதிகள் வழியாக புரிந்துகொள்வோம்.

**1. இறைவரின் படைப்பிலும் எதிர்பார்ப்பிலும் இணைதல்** (தொநூ. 1: 1-28)

இறைவன் படைப்பாளர். அவர் தம் வார்த்தையால் முழுபடைப்பும் படைக்கப்பட்டது. வெறுமையான உலகை, இருள் மூடியிருந்த உலகை, மனிதன் வாழும் உலகாக மாற்றம் செய்தல் இறைவனின் படைப்பின் ஞானம் ஆகும். இறைவனின் வளம் நிறைந்த பார்வை, வருங்கால பார்வை ஆகியனவற்றை அவர் தம் படைப்பில் உணரலாம். படைப்போடும், வரலாற்றோடும் செயல்படும் இறைவன் நம் வாழ்வோடும் இணைகிறார். அவர் படைப்பு அனைத்தும் மனுக்குலத்திற்கே. அவர் படைத்த உலகை பண்படுத்த, பாதுகாக்க, பலுகிப்பெருக என்னும் இறைவனின் நோக்கத்தை உணராமல் ஆதாம் ஏவாள் கீழ்படியாதபோது இறைவன் முன் நிற்க முடியாமல் ஒளிந்துக்கொண்டனர். நீ எங்கே இருக்கிறாய்? (தொநூ. 3: 9) என தேடிவரும் செயலால் இறைவனின் அன்பையும் கரிசனையையும் நாம் உணரமுடியும். இறைவன் படைப்புக்கு மட்டுமன்றி இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் (விப. 3: 12-15) “இருக்கிறவராகவே இருக்கிறேன்” என மனித விடுதலைக்கு உதவி செய்பவராக வெளிப்படுத்தப்படுகிறார். ஆபிரகாமின் இறைவன், ஈசாக்கின் இறைவன், யாக்கோபின் இறைவன் என்று பூர்வ கால மூதாதையருக்கு உதவிய இறைவன் இன்றும் இளைய தலைமுறையினருக்கும் உரியவராகிறார். வாழ்வில் ஏமாற்றம் நிறைந்த அனுபவத்தில் இருந்த ஆபிரகாமை சந்தித்த மூன்று மனிதர்கள் (தொநூ. 18: 2) வாயிலாக இறைவனின் கரிசனையையும், வாக்குறுதியில் உண்மையுள்ளவர், எதிர்காலத்தைத் திட்டமிடுகிறவர் என்பதையும் அவர் புரிந்துகொண்டார். இன்றைக்கும் இறைவன் நம் அனைவருக்கும் உரியவராகிறார். இன்று இயற்கை வளங்களை சுரண்டுதல், காடுகளை அழித்தல், விவசாய நிலங்களை மனைகளாக மாற்றுதல், நீர்நிலைகளை மூடுதல், சுற்றுப்புறத்தை மாசுபடுத்துதல் போன்ற செயல்களால் இறைவனின் படைப்புக்கு முரணாக வாழாமல் படைப்பாளரின் எதிர்பார்ப்பில் இணைதல் அவசியம். ஏனெனில், மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை (திபா. 24: 1). திரித்துவ இறைவனை படைப்பாளராகவும், படைப்பின் நோக்கத்தைப் பாதுகாக்கிறவர்களாகவும் ஏற்று அவரில் இணைவோம்.

**2. இறைவரின் வார்த்தையில் வளருதல்** (2 கொரி. 13: 11 - 14)

கொரிந்து திருச்சபையின் பிரிவினைகள் (i) அணி சார்ந்த பிரிவினைகள் - பவுலைச் சார்ந்தவர், கேபாவைச் சார்ந்தவர், அப்பல்லோவைச் சார்ந்தவர்கள்

(1 கொரி. 3: 5). (ii) இனம் சார்ந்த பிரச்சனை யூதருக்கும் யூதரல்லாதோருக்கும் (புற இனத்தவர்) பிரிவினையாக மாற்றம் பெறுகிறது. (iii) பவுல் ஊழியத்தின் மேல் வரும் சந்தேகம் (2 கொரி. 13: 3). இவைகள் கொரிந்து திருச்சபையை வலுவிழக்கச் செய்கிறது. இன்று திருச்சபைகளில் காணப்படும் அணி சார்ந்த பிரிவினைகள், அதிகாரம் சார்ந்த பிரிவினைகள், சட்டம் சார்ந்த வினாக்கள், குழப்பங்கள், திருச்சபை சட்டங்கள் நீதிமன்றங்களின் முடிவுக்குக் காத்திருத்தல் விசுவாசிகளுக்கு சோர்வையும் இறை நம்பிக்கையின்மையும் தருவது போன்ற சூழலில் பவுல் அன்றைய சூழலை மனதிற் கொண்டு பதில் சொல்ல விளைகிறார். தந்தை, மைந்தன், தூய ஆவியாரின் பெயரில் பவுல் கடிதங்களில் முதன் முதலாக மூவொரு இறைவனின் பெயரில் வாழ்த்து சொல்லி அவர்களுக்கு ஆலோசனை அளிக்கிறார். உங்கள் நடத்தையை சீர்ப்படுத்துங்கள்; என் அறிவுரைக்குச் செவி கொடுங்கள்; மன ஒற்றுமை கொண்டிருங்கள்; அமைதியுடன் வாழுங்கள்; அப்பொழுது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார் (2 கொரி. 13: 11). இன்றைய திருச்சபை அடையாளங்கள், அற்புதங்கள், ஆடம்பரங்கள் போன்றவைகளுக்கு தரும் முக்கியத்துவம் இறை வார்த்தைக்கு தருவதில்லை. நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள் (யோவா. 15: 14) மிகுந்த கனி கொடுங்கள் (யோவா. 15: 5) என் கட்டளைகளை கடைபிடியுங்கள் (யோவா. 15: 10) போன்ற அறிவுரைகளுக்கு செவிமடுப்பதே ஆன்மீக நாட்டம். கனியற்ற செயல்களுக்கும், எண்ணங்களுக்கும் விலகியிருத்தல் ஆரோக்கியமான ஆன்மீகத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும். திருச்சபை பிரிவினைகளுக்கும், சுயநலன்களுக்கும் இடம் தராமல் இறை வார்த்தையை முன்னிலைப்படுத்தினால் விசுவாசக் குடும்பங்கள் திரித்துவ இறைவனின் ஆசியை பெற்றுக்கொள்ளும்.

### 3. இறைவரோடு இணைந்து வாழுதல் (யோவா. 1: 1 - 18)

இயேசுகிறிஸ்துவின் பிறப்பு முழு மனுகுலத்திற்கும் மீட்பை பெற்றுத் தந்தது. இறைவன் மானிடர் மேல் கொண்ட தம்முடைய அன்பையும், குணநலன்களையும் செயல்பாடுகளையும், எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்துகிறார். “அவரிடம் வாழ்வு இருந்தது; அந்த வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது” (யோவா. 1: 4). மானிட வரலாற்றோடு இணையும் இயேசுகிறிஸ்து தம்மை “உலகில் நானே ஒளி; என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பர்”

(யோவா. 8: 12) என்கிறார். காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் (எசா. 2: 2) என்ற எதிர்பார்ப்பு நிறைவேறியது. இஸ்ரவேல் மக்களின் வனாந்திரப் பயணத்தில் பங்கு கொண்டு அவர்களை இரவு பகலாக பராமரித்து பாதுகாத்தவர், ஒடுக்கப்பட்டவரோடு உடனிருந்து விடுதலை தரும் தந்தையாகிய இறைவனின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து தம் திருப்பணியில் பாதிக்கப்பட்டோருக்கு மனதுருகும் இறைவனாய் (மத். 9: 36, 14: 4), உணவளிக்கும் இறைவனாய் (மாற். 6: 42), காயம் கட்டும் இறைவனாய் (லூக். 10: 37), நோயின் வலியிலிருந்து விடுதலை தருகிறவராய் (யோ. 5: 8, 9: 6, 7) தம்மை அர்ப்பணித்து பாவத்திலிருந்து விடுவித்து இறைவனோடு இருந்த உறவை மீண்டும் புதுப்பித்து சிலுவையில் தம்மை கொடுத்த அன்பால் நாம் அவரோடு இணைந்து வாழ சமூக மாற்றத்துக்கு அழைத்துச் செல்கிறார். நாம் தொடர்ந்து அவரோடு இணைந்து வாழ பிதாவின் திட்டத்தை நிறைவேற்றி இயேசுகிறிஸ்து தூய ஆவியரை நமக்கு தருவதாக வாக்குபண்ணுகிறார். உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார் (யோவா. 16: 17, 8, 12). இயேசுகிறிஸ்து அளித்த வாக்குறுதி பெந்தக்கோஸ்தே நாளில் நிறைவேறியது. அவர்கள் அனைவரும் தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்டனர். (திப. 2: 4). இறைவனோடு நாம் அனைவரும் இணைந்து வாழ இயேசுகிறிஸ்துவின் இறைவேண்டல் நான் அவர்களுக்குள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக (யோவா. 17: 23) என்பதாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் ஊடகமாய் சான்று பகர்வோம்.

திருச்சபை நம்பிக்கையிலும் பற்றுறுதி அறிக்கையிலும் நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம். இவைகளை நாம் புரிந்து திரிபுக் கொள்கைக்கு உட்படாமல் நாம் விசுவாச வாழ்வில் பயணிக்க அழைக்கப்படுகிறோம். இறைவனின் படைப்பிலும், எதிர்பார்ப்பிலும் இணைந்து இறை வார்த்தையில் வளர்ந்து இறைவனோடு ஒன்றித்து வாழ நாம் மூவொரு கடவுளை வழிபடுவோம்.

சீனாவில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் “பாஸ்கர் கலவரம்” மூண்டது. இந்தக் கலவரத்தில் ஈடுபட்டோர் வெளிநாட்டுக்காரர்களையும், ஐரோப்பிய மிஷனெறிகளையும் விரட்டியடிக்க முற்பட்டனர். கோஃபோர்த் என்ற மிஷனெறி கலவரக்காரர்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நான்கு குழந்தைகள் மற்றும் உதவியாளர்களுடன் பத்து மாட்டு வண்டிகளில் பாதுகாப்பான இடத்தை நோக்கி பயணத்தை மேற்கொண்டார். வழியில்

கலவரக்காரர்கள் அந்த வண்டிகளை இடைமறித்து கோஃபோர்த்தை கீழே தள்ளி கத்தியால் தாக்கினார்கள். கோஃபோர்த் மயங்கி விழுந்தார். அவர்கள் மேலும் கோஃபோர்த்தைத் தாக்குவதற்குள் எங்கிருந்தோ ஒரு குதிரை ஓடி வந்தது. அது கோஃபோர்த்திற்கு முன்னாலே நின்று கொண்டு தன் கால்களை உதறிக்கொண்டு கொள்ளையர்கள் நெருங்காதபடி தடைசெய்தது. மற்றக் கொள்ளையர்கள் வண்டியிலிருந்த பொருட்களை எடுக்கத் தொடங்கின போது அவர்களுக்குள் பொருட்களை எடுப்பதில் சண்டை வந்துவிட்டது. இந்த நேரத்தில் மயக்கம் தெளிந்த கோஃபோர்த் தன் குடும்பத்தாரையும், உதவியாளர்களையும் அழைத்துக்கொண்டு வேகமாக அடுத்த கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார். கடவுளை நம்பிய அருட்பணியாளர் குடும்பத்தை மூவொரு கடவுள் கண்மணி போல பாதுகாத்தார். நாமும் மூவொரு கடவுளில் நம்பிக்கை கொண்டு அவரில் இணைந்து வாழுவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக! (II கொரி. 13: 14) ஆமென்.

அருள்திரு. **R. சாம் கிறிஸ்டோபர்**

# அறிவு அருளும் ஆண்டவர்

நீதி. 2: 1-11

"ஏனெனில் ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே." (நீதி. 2: 6)

வாழ்வு சீக்கிரம் சுழன்று இயங்க அறிவு முதன்மை தேவையாக உள்ளது. அறிவு உணர்வோடு தொடர்புடையதாகும். பிறந்த குழந்தை அழவில்லையென்றால் ஏதோ குறைபாடு என்று அலறியடிக்கின்றோம். கடவுளின் படைப்பில் அறிவுடைமை முழுமைக்கு தேவையான முதன்மை உணர்வாக உள்ளது. இந்த அறிவு கல்வியினாலோ, அனுபவத்தினாலோ, சூழலினாலோ பெருக்கிக் கொள்ளப்படுவதாகும். ஆனால் இந்த அறிவு மேம்படுவதற்கு கடவுள் அருளும் ஞானம் அவசியமாகவுள்ளது.

ஞானத்தை எபிரெயத்தில் 'Chokma' தமிழில் "திறன்" என்பதாய் பொருள்படுத்தி வகைப்படுத்தியுள்ளனர். தனது சமூக வாழ்வில் ஒருவர் எவ்வளவாய் அனுபவங்களால் முதிர்ந்திருந்தாலும் கடவுளின் அருள்கொடையான ஞானம் (திறன்) மேம்படவில்லையெனில் அவரது அடையாளம் பொருளற்றதாயிருக்கும் சீன தத்துவவியலாளர் கன்பியூஷியஸ் (Confucius) கூறும்போது "தனக்கு என்ன தெரியும் என்ன தெரியாது என்பதனை அறிந்து தெளிவுப்படுவது தான் ஞானம்" என்கிறார். ஒருவரின் நினைவலைகளைக் குப்பைத்தொட்டியாக எல்லாவற்றையும் உள் ஏற்றி வைப்பதால் அறிவு கூர்மையானவர் என்பதாகிவிட இயலாது. எதனை எங்கு எப்படி செலுத்த வேண்டும் என்பதனை தெளிவுடன் செயல்படுத்த இறைஞானம் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஞானத்தின் தன்மை நபருக்கு நபர் வேறுபாடுள்ளதாயிருந்தாலும், ஞானத்தில் குறைவுடையவர் என்கின்ற உணர்வு சிலரை துயரூட்டுவதுண்டு. ஆகையால் யாக்கோபு 1: 5-ல் நம்மிடையே குறைவான ஞானம் கொண்டிருப்பவர் கடவுளிடத்தில் கேட்கட்டும் அப்போது தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பார் என்பதினூடாய் குறைவை ஒரு பொருட்டாக்க வேண்டாம் என விவிலியம் வலியுறுத்துகின்றது. குறைவுடைமை நிறைவடைய வழிவகை செய்கின்றது. அதே தருணம் தம்மை குறைவுடையவர் என்கின்ற தாழ்வு மனநிலை ஒருபோதும் குறைவை நிவிர்த்தி செய்ய உதவுவதில்லை. ஏனெனில் கேட்பதும் பெற்றுக் கொள்வதும் வளர்ச்சி படிநிலைகளின் அடிப்படையாகும். மத்தேயு 7: 7-ன்படி கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பதாக இயேசுநாதர் அறிவுறுத்துகின்றார். நான் எப்படி

கேட்க முடியும் என்கின்ற தயக்கம், முன்னேற்ற படிகளில் கால்களை முன்னெடுத்து வைக்காமல் என்னால் முன்னேற இயலவில்லை என்பது அறிவுகுறைவின் வேட்கையாகும். அவ்வண்ணமே கேட்டபடி எல்லாம் கிடைக்குமா என்றால் நிச்சயம் கிடைப்பதில்லை. பின்னர் எப்படி வாய்க்கும் என்பதனை விவிலியத்தின் இரண்டு நபர்களின் வாழ்வுகளில் அறிவினால் ஏற்பட்ட மாற்றங்களை தொடர்ந்து சிந்தித்து அறிந்து கொள்வோம்.

### 1. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் அறிவின் மேன்மை

நாம் கேட்கின்றவற்றை எல்லாம் முகமலர்ச்சியோடு கொடுக்க எவரும் முன் வருவதில்லை ஏன் நம்மை ஈன்றெடுத்த பெற்றவர்களே சில தருணங்களில் முன்வருவதில்லை. ஆளுக்கு ஆள் தங்களது விருப்பத்திற்கு இணங்கும்போது தான் கொடுக்க முன்வருவர்.

ஆனால் கடவுள் எல்லாவற்கும் பொதுவான ஒரே நிபந்தனையை (Condition) தான் முன்வைக்கின்றார். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீதி. 9: 10 ). ஞானம் தொடங்கும் இடத்தில் கடவுள் மேலுள்ள அச்சம் குறிக்கப்படுகின்றது. அச்சம் என்றவுடன் அய்யோ: அவர் பார்க்கிறார், அவரை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடாது என்கின்ற உலக கண்ணோட்டத்திற்கு மாறாக "ஆண்டவருக்கு அஞ்சுவது தீமையை பகைக்கச் செய்யும்" (நீதி. 8: 13). தீமை என்கின்ற செயல் தன்மையை விட்டொழிந்து வாழ்வது கடவுள் விரும்பும் அச்சநிலையாகும். நாம் கேட்பதினால் அருளிச் செய்யும் கடவுளின் குணநலன் நம்மில் உடையதாக வேண்டும்.

யோசேப்பின் வாழ்வில் அவர் சற்றும் எதிர்பாராதவிதமாய் சகோதரர்கள் அவரை விற்றுபோட்டனர். எகிப்திய தலைவரின் இல்லத்தில் மேலாளராக பணியாற்றினார். (தொநூ. 39: 4). தனது தலைவரின் மனைவி யோசேப்பை தீமைக்கு அழைத்தார். ஆனால் அவரோ இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து, கடவுளுக்கு எதிராக பாவம் செய்யலாமா? (தொநூ. 39: 9) என்றார். உலகில் தீமைக்கு விலகி ஒடினார். ஆனால் உலக அடிப்படையில் சிறைத் தண்டனை தான் கிடைத்தது. அதேவேளை சிறையிலேயே கனவுக்கு விளக்கம் கொடுக்கும் அறிவை கடவுள் அருளுகின்றார். இதனால் பார்வோனின் கனவு விளக்கம் கிடைக்கப் பெற்றது. இதனால் யோசேப்பின் வாழ்வு மேன்மை பெற்றது. தொநூ. 41: 39-ல் பார்வோன் யோசேப்பை நோக்கி, "இவற்றையெல்லாம் கடவுள் உம் ஒருவருக்கே அறிவித்துள்ளார். உம்மைவிட மதிநுட்பமும் ஞானமும் செறிந்தவர் யாருமிலர்" என்கின்றார். தொநூ. 41: 41-ல் எகிப்து நாடு முழுவதிற்கும் உம்மை அதிகாரியாக நியமிக்கிறேன் என்று சொன்னார். ஆண்டவரிடம் கொண்ட அச்சம் யோசேப்பை அறிவாற்றலோடு மேன்மையடைய செய்தது.

## 2. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் அறிவின் தெளிவு

செயல் ஒன்றை செய்வதற்கு தெளிவு முக்கியமான ஒன்றாகும். தெளிவு முழுமை பெறும்போது துணிவு உடன்பிறப்பாய் துணைநின்று செயல்படும். இத்தனை ஆற்றலை எவ்வளவாய் பெருக்குகின்றோமோ அவ்வளவு தெளிவு பலப்படும். யாதொன்றையும் துணிவுடன் செயல்படுத்த முதலாவது அதனுள் தெளிவை பெற்றுக்கொள்ளும் முயற்சி முக்கியத்துவமானது. லூக். 8: 26-35 கலிலேயாவுக்கு எதிரே இருக்கும் கெரசேனர் ஊரில் இயேசுநாதர் தரையிறங்கும்போது அறிவு தெளிவில்லாமல் செய்வதறியா வாழ்வு நிலையோடு வாழ்ந்த ஒருவரைக் கண்டார். அவரது பெயர் இலேகியோன் என்பதாகும். இவரது செயல்திறனை தடை செய்திருந்த தீய ஆவியின் ஆற்றல்களை இயேசு அப்புறப்படுத்தினார். இதனால் பேய்கள் நீங்க பெற்றவர் ஆடை அணிந்து அறிவு தெளிவுடன் இயேசுவின் காலடியில்அமர்ந்திருந்தார் (லூக். 8: 35).

பொதுவாக சாலமோனை ஞானியாக (அறிவாளியாக) பேசியும், கேட்டும், புரிந்து பழகிவிட்டோம். ஆனால் தாவீதை அவரது தெளிவுமிகுந்த செயலால் அறிவுமிகுந்தவராய் பார்க்க முடிகின்றது. தன்னிடம் இருப்பதனை எந்த இடத்தில் எப்படி பயன்படுத்த வேண்டும் என்கின்ற அறிவு தெளிவு அவரிடம் இருந்தது. ஆடு மேய்க்கின்றபோது சிங்கமோ அல்லது கரடியோ மந்தையில் புகுந்து ஆட்டை கவ்விக் கொண்டு ஒடினால், நான் பின்தொடர்ந்து ஓடி அதை அடித்து அதன் வாயினின்று ஆட்டை விடுவிப்பேன் என்றும் அது என் மீது பாய்ந்தால் அதன் தாடியைப் பிடித்து நன்றாக அடித்து கொல்வேன் என்றும் தன் திறனை நினைவு கூர்ந்தார். சிங்கத்தையோ, கரடியையோ எதிர்கொள்ளும் அறிவாற்றலை ஆண்டவர் எனக்கு தந்திருக்கிறார். அப்படியென்றால் அதே அறிவு திறனை இங்கும் பயன்படுத்த முடியும் என்கின்ற துணிவு அவரில் துளிர்விட்டது. சற்றும் எதிர்பாராத சூழலில் பெலிஸ்தியன் கோலியாத் தாவீதை அவனது உருவத்தினாலும், இளமை பருவத்தினாலும் ஒரு பொருட்டாகக் கூட எண்ணாத சூழல். ஆனால் தாவீதோ எந்த போர் கருவிகளும் இல்லாமல் சிங்கத்தையும், கரடியையும் எப்படி முறியடிப்பேனோ அதே அறிவு திறனினால் உன்னையும் முறியடிக்கின்றேன் என இஸ்ரயேலின் கடவுளை நிந்தித்த கோலியாத்தை முறியடித்தார். வியக்கத்தக்க விதமாய் பெலிஸ்தியர் வீழ்ந்தனர்.

யாசகம் (பிச்சைக்காரர்) செய்யும் ஒருவரிடம் வைரம் இருந்தும் மதிப்பு உணரப்படாதது போல அநேகர் தங்களிடத்தில் இருக்கும் அறிவுத் திறனை சரியான இடத்தில் சரியாக பயன்படுத்தாமல் அறிவுக்கூர்மை இழந்து காணப்படுகின்றனர். ஒரு புதிய கல்வி ஆண்டில் தங்களது கல்விப் பயணத்தைத் தொடங்கும் சூழலில் ஆண்டவரில் கொள்ளும் அச்சம் மேன்மையடையச் செய்து தெளிவோடு முன்னேறி புதிய மாதத்தில் வளர்ச்சியையும், முழுமையையும் பெற்றுக் கொள்ள அருள் செய்வதாக. ஆமென்.

**திரு. S. ஜெபின் பொன் பால்**

# விண்ணிலிருந்து வரும் ஞானம்

## Wisdom from Above

1 அர. 3: 16-28 யாக். 1: 1-8

திபா. 119: 33-40 லூக். 10: 21-24

"நீதித்தீர்ப்பு வழங்குவதற்கெனக் கடவுள் அருளிய ஞானம் அவரிடம் உள்ளது என்று கண்டு, அவருக்கு அஞ்சி நடந்தனர்." (1 அரசர் 3: 28b)

தற்போதைய நூற்றாண்டை "அறிவாளிகள் நூற்றாண்டு" என சொல்வது உண்மையே (Intellectual's Era). 3-5 வயது குழந்தை கணினியை இயக்குகிறது; திருக்குறளை மனனம் செய்கிறது; இசைக்கருவிகளை நேர்த்தியாக வாசிக்கிறது. அறிவு பெருகியிருக்கிற அளவிற்கு ஞானம் வளர்ந்திருக்கிறதா? உலகை இணைய தளத்தின் வழியாக தம் விரல்களுக்குள் வைத்திருக்கிறது, இன்றைய மாணவர் உலகம். ஆனால், நடைமுறை வாழ்வு என வரும்போது, பெரும்பாலும் தொடர்பு எல்லைக்கு வெளியே நின்றுவிடுகின்றனர்.

ஜாண் கால்வின், ஞானம் மேலிருந்து (விண்ணிலிருந்து) வருகிறது என புரிந்து கொண்டார். இது இறைவன் மற்றும் மனிதன் ஆகிய இருவரையும் அறிந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தை உள்ளடக்கியது. ஞானம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இறைவனைப் பற்றியது மற்றும் நம்மைப் பற்றியது என்று கால்வின் ஞானத்தை விளக்குகின்றார். ஞானம் இறைவனின் முக்கிய அருள்கொடை. பவளத்திலும் ஞானமே சிறந்தது; நீங்கள் விரும்புவது எதுவும் அதற்கு நிகராகாது. ஞானம் இடறாது; விலை உயர்ந்தது. நிகர் எதுவும் இல்லை (நீமொ. 8: 11) என்கிறார் சாலமோன்.

பொதுவாக, ஞானம் (Wisdom), அறிவு (Knowledge) மற்றும் தகவல் (information) இவைகளுக்கு வித்தியாசம் உண்டு. தகவல் : தகவலை கூட்டிச்சேர்ப்பது; அறிவு : பெற்ற தகவலைப் புரிவது (அல்லது) அறிவது. ஞானம் என்பது பெற்ற அறிவை எப்படி பயன்படுத்துவது, வாழ்வு சூழலுக்கு எப்படி பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது ஆகும். இறைவனை மகிமைப்படுத்த, படைப்பைப் பாதுகாக்க படைப்புகளோடு உறவு கொள்ள கடவுளால் அருளப்படும் ஈவு ஆகும். இது விண்ணிலிருந்து வரும் ஞானம் எனப்படுகிறது. கடவுளின் ஞானமும் அறிவும் மிகவும் மிகுதியானது அனைவரும் இறைஞானம் பெற்று வாழ்வது இறைவனுடைய எதிர்பார்ப்பு.

### 1. விண்ணிலிருந்து வரும் ஞானம் : இரக்கம் நிறைந்தது

"நீதித் தீர்ப்பு வழங்குவதற்கெனக் கடவுள் அருளிய ஞானம் அவரிடம் உள்ளது என்று கண்டு, அவருக்கு அஞ்சி நடந்தனர்". (1 அரசர் 3: 28(b))

சாலமோன் ஞானத்தில் சிறந்தவராக இருந்தார். ஞானத்தைப் பயன்படுத்தி சிக்கலைத் தீர்த்தார். இன்றைய திருமறையில் இடம்பெறும் 2 பெண்களில் ஒருவர் குழந்தையை மாற்றியவர் மற்றும் மோசமான பொய்யர். தவறை மூடிமறைக்க நம்பிக்கையோடு இருந்தார். ராஜா முன் பொய் சாட்சியம் சொல்ல தயாராக இருந்தார். பொய் சொன்னால் மாட்டிக்கொள்வோம் என்ற பயம் அற்றவராக இருந்தார். C.C.T.V. இல்லை; D.N.A. சோதனை இல்லை; விசாரணை நடத்த விசாரணைக்குழு இல்லை; வழக்கை எதிர்த்து போராட வழக்கறிஞர் இல்லை. சமுதாயத்தில் இரு பெண்களும் ஒடுக்கப்பட்டவர்கள். இது யாராலும் தீர்க்கமுடியாத வழக்கு. எனவே, ராஜா முன் நிறுத்தப்பட்டனர். இருவரும் உயிரோடிருக்கும் குழந்தை தன்னுடையது என போராடுகிறார்கள். ஒரு பெண்ணின் உண்மையான அன்பு, மேலிருந்து வந்த ஞானம் வழியாக நிரூபிக்கப்பட்டது. அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற குழந்தையை உண்மை தாயிடம் கொடுக்க வைத்தார். நீதி தீர்ப்பு வழங்க கடவுளுடைய ஞானம் அவருக்குள் இருந்ததை இஸ்ரவேலர் கண்டனர்.

அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமல் போனதினால் கர்த்தர் சாலமோனிடம் கோபமானார் (1 அர 11: 10) . இவ்வளவு இறைஞானம் பெற்று சிறந்த சாலமோனிடம் எதற்காக கர்த்தர் கோபப்படவேண்டும்? (1 அர 4: 32-33). அவர் 3,000 நீதிமொழிகளைச் சொன்னார். அவருடைய பாட்டுகள் 1,500 லீபனோனில் இருக்கிற கேதுரு மரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்பு பூண்டுகள் வரைக்குமுள்ள மரம் முதலிய தாவரங்களைக் குறித்தும், மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், மச்சங்கள் குறித்தும் வாக்கியங்களைச் சொன்னார். சாலமோனின் ஞானம் நீதிமொழிகள், பாடல்கள், கவிதைகள், தாவரங்கள் விலங்குகள் குறித்த ஞானத்தில் சிறந்து விளங்கினார். ஞானியின் கட்டுமானப் பணியால் ஆலயம் அமைக்கிறார். ஆலய அர்ப்பணிப்பில் ஆயிரக்கணக்கான மாடுகள், ஒரு லட்சத்திற்கும் மேலான ஆடுகளைப் பலியிட்டார். இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட சாலமோனிடம் ஏன் கோபப்பட்டார். சாலமோன் தன் தகப்பனாகிய தாவீதைப் போல கர்த்தரைப் பூரணமாய் பின்பற்றாமல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான் (1 அர. 11: 6) . 1 அர. 12-ல் சாலமோன் ஆட்சியின் கீழ் இஸ்ரவேலர் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர். வரிக் கொடுமை மற்றும் பாரமான நுகத்தைச் சுமத்தினார். மகன் ரெகோபெயாம். மக்களுக்குள் கலக்கம் ஏற்படுத்தினார். வரிக் கொடுமைகளோடு தகப்பன் சவுக்குகளால் தண்டித்தார். நான் தேள்களினால் தண்டிப்பேன் என கடினமான உத்தரவு கொடுத்தார் (1 அர. 12: 14).

பிந்தைய காலத்தில் சாலமோனின் ஞானம் இரக்கமற்ற ஞானமாக விளங்கியது. தான் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக மற்றவர்களை அடக்கி அடிமைப்படுத்தி இரக்கமற்ற செயல்புரிவது இறைஞானமல்ல.

இறைவனின் விண்ணக ஞானம் நம்மை இறைவனுடைய பிள்ளைகளாக இரக்கத்தைக் கொண்டவர்களாக வெளிப்படுத்தும். ஓசியா, "கர்த்தர் பலியை அல்ல; இரக்கத்தை விரும்புகிறார்" என கூறுகிறார். சாலமோன் தவறிவிட்டார். மக்களை மறந்து மனித நேயம் அற்ற கொடுங்கோல் ஆட்சி செய்ததால் இறை ஞானத்தை பிரதிபலிக்க முடியவில்லை.

**2. விண்ணிலிருந்து வரும் ஞானம் : இணைக்கக்கூடியது** (யாக். 1: 5)

"உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும். அப்பொழுது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பவர்."

யாக்கோபு நூல் ஏன் எழுதப்பட்டது என பார்க்கும்போது, புதிய சமூகத்தில் பல ஏற்றத்தாழ்வுகள் நிறைந்திருந்தது. திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்தில் அவர்களை விசாரிக்கிறதும் . . . (யாக். 1: 27) உபத்திரவத்தில் விசாரிக்கும் நிலை வேறுபாடுகளை களைவது ஆகும். இறை ஞானம் அப்படிப்பட்டது. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும் பின்பு சமாதானமும் இணக்கமுள்ளதாயும் இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதம் இல்லாததாயும், மாயமற்றதாயும் இருக்கிறது (யாக். 3: 17). ஞானத்தில் இவைகள் இருக்கவேண்டும். ஞானத்தின் வழி மக்களை இணைக்கவேண்டும்; இணக்கம் ஏற்படுத்தவேண்டும். கல்வி குறிப்பிட்டவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இச்சூழலில் ஞானத்தால் அனைவரையும் இணைக்கமுடியும்.

ஞானத்தில் குறைவுள்ளவர் இறைவனிடம் கேளுங்கள் (யாக். 1: 5) இது குறிப்பிட்டவர்களுக்கு அல்ல ; அனைவருக்கும் உரியது ; பாரபட்சம் அற்றது. இந்திய வரலாற்றில் கல்வி ஏற்றத்தாழ்வு நிறைந்தது. கற்பிப்பில் பெரிய பிரிவினை. அன்று, ஆண்களுக்கு மட்டும் கல்வி அதிலும் ஒரு சாரார் மட்டும். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. அண்மையில்தான் பெண்களுக்குக் கல்வி திறக்கப்பட்டது. ஞானம் அனைவரையும் இணைக்கக்கூடியது. இன்றைய கல்வியும் ஏராளமான வேறுபாடுகளையும், குறைபாடுகளையும் கொண்ட கல்வியாக காணப்படுகிறது. ஸ்தோயிக்கர்கள் என்ற பிரிவினர்; மனுஷர் பாடுகளை அனுபவிக்கப் பிறந்திருக்கிறார்கள் என்று போதித்தனர். மனிதனுக்குச் சந்தோஷம் இல்லை, அவன் எப்பொழுதும் துக்கப்பட வேண்டியவன் தான் என்று உபதேசம் பண்ணினார். இவர்களது கற்பிப்பு நிறைவானது அல்ல; குறைவானது. எல்லோரையும் ஒன்றிணைக்கும் கற்பிப்பாக இல்லை.

கிறிஸ்துவின் கற்பிப்பு ஸ்தோயிக்கர்களின் கற்பிப்புக்கு முற்றிலும் மாறுபட்டது. சோதனை உண்டு; அதில் வருத்தப்படவேண்டியதில்லை. சந்தோஷப்பட வேண்டும். சோதனையை பொறுமையாய் சகிக்க வேண்டும்.

வருத்தப்படவேண்டும் என்பது ஸ்தோயிக்கர் உபதேசம், ஆனால் சந்தோஷப்பட வேண்டும் என்பது கிறிஸ்துவின் உபதேசம். விண்ணின் ஞானம் சம்பூரணமாய் எல்லோரையும் இணைக்கிற ஒன்று (யோ. 1: 21). சந்தேகத்தை மாற்றுகிறது; அவிசுவாசத்தை மாற்றுகிறது; இருமனதை மாற்றுகிறது; சோதனையைச் சகிக்கும்; பொறுமையை கற்றுத்தரும். விண்ணின் ஞானம் எச்சூழலிலும் மன இரம்மியமாக இருக்கக் கற்றுத் தருகிறது.

**3. விண்ணிலிருந்து வரும் ஞானம்: இயக்கக்கூடியது** (லூக்கா 10: 21)

" அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம் என்றார்."

பாலகருக்கு (குழந்தைகளுக்கு) என்பது கிரேக்க மொழியில் "வலிமையற்றவர்கள்", "நசுக்கப்பட்டவர்கள்", "ஒடுக்கப்பட்டவர்கள்" என்பதுதான் பொருள். பரிசுத்த ஆவியின் வல்லமையால் இரட்சிப்பின் சத்தியத்தைப் புரிந்து கொள்கிறார்கள். நாம் எளிய பெலவீனராக இருந்தாலும் கர்த்தர் இறை ஞானத்தால் நம்மை இயக்குகிறார்.

பவுல் யூத மார்க்கத்தில் தேறினவராக இருந்தார். கமாலியேலின் பாதப்படியில் அமர்ந்து கல்வி கற்ற ஞானியர். அப்படிப்பட்ட ஞானம் கொண்டவர் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனானபின் ஞானத்தில் குழந்தையானார். சிலுவையிலறையப்பட்ட இயேசுவையே அன்றி வேறொன்றையும் அவர்களுக்குள்ளே அறியாதிருக்க தீர்மானித்தார். அவர்களுடைய விசுவாசம் மனுஷனுடைய ஞானத்தால் அல்ல; இறை பெலத்தால் நிறைந்திருக்கும்படி அவருடைய பேச்சும், பிரசங்கமும், மனுஷனுடைய ஞானத்தால் அல்ல; இறை பெலத்தால் நிறைந்திருக்கும்படி மனுஷனுடைய நயவஞ்சகமுள்ளதாயிராமல் ஆவியானாலும், பெலத்தினாலும் உறுதியாய் இருந்தது.

பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது. ஆண்டவர் சீடர்களுக்கு அதிகாரம் வழங்கி அதிகாரப்படுத்துகிறார் (லூக். 10: 19). இதை எப்படி ஏற்படுத்துகிறார் என புரியும்போது, கர்த்தர் சீடர்களுக்கு வசதியை ஏற்படுத்தவில்லை; மந்திரத்தைப் பயன்படுத்தி உயர்வதற்கு வழிகாட்டவில்லை. மாறாக, ஞானத்தை வழங்குகிறார். நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள்; அது விடுவிக்கும். பெரிய ஆயுதம், வசதி, ஐசுவரியம் மந்திர சக்தி, பெலன் வழங்கவில்லை. மாறாக ஞானத்தை வழங்கினார். ஞானம் (இறை ஞானம்) இயக்குகிற ஆற்றலாக மாறுகிறது.

**அருள்திரு. அறிவர். T. ராஜன்**

# இறை மாட்சியைப் பறைசாற்றும் படைப்பு

## (Creation proclaims Glory of God)

நீமொ. 8: 22-31 தி.வெ. 21: 1-8

தி.பா. 19 லூக். 8 : 22-25

தி.பா. 19: 1 "வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர் தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது."

திருமறையின் தொடக்கமாகவும், இறைவனை அறிகின்ற அறிவின் தொடக்கமாகவும் திகழ்வது படைப்பாகும். இப்படைப்பு கடவுளின் மாட்சி, ஆற்றல், இறைத்தன்மை மற்றும் இறை அறிவை வெளிப்படுத்துகிறது. படைப்புகள் கடவுளின் மகிமை வெளிப்படும் அரங்கு ஆகும். உலகின் ஒவ்வொரு பகுதியிலும் வானத்திலும் பூமியிலும் கடவுளின் அதிகாரத்தின் மாட்சியும், நன்மையும், ஞானமும் நிலைத்தன்மையும் பொறிக்கப்பட்டிருக்கிறது என்று ஜாண் கால்வ் என்பவர் குறிப்பிட்டுள்ளார். அதாவது படைப்பின் முழுமையிலும் கடவுளின் மாட்சி வெளிப்பட்டிருக்கிறது என்பது அழுத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து ஆற்றலுமுள்ள கடவுள் தம்மை இயற்கையின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். அவரது ஆற்றல் மட்டுமல்லாமல் அவரது மாட்சியும் இயற்கையின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் (திபா. 19: 1-6) திருமறை சுட்டிக்காட்டுகின்றது. கடவுளின் படைப்பு அவருடைய அன்பின் வெளிப்பாடு ஆகும். இறை மாட்சியைப் பறைசாற்றும் படைப்பு என்ற தலைப்பை மையப்படுத்தி இன்றைய திருமறைப் பகுதிகளின் உதவியோடு தியானிப்போம்.

**1. இறை அறிவால் கட்டமைக்கப்படும் படைப்பு** : (நீமொ. 8: 22-31)

கடவுளின் எல்லையற்ற ஞானத்தால் உலகம் கட்டமைக்கப்பட்டு இன்று வரை நிலை நிறுத்தப்பட்டுள்ளது. திபா. 8-ல் உலகு கடவுளின் கை வேலைப்பாடு என்று குறிப்பிட்டுள்ளது. இறைவன் தமது ஆற்றல்மிகு வாக்கினால் உலகினைப் படைத்தார். மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள் ஒளி தோன்றுக என்றார். ஒளி தோன்றிற்று (தொ.நூ. 1: 2, 3). கடவுள் ஞானத்தால்

பூவுலகிற்கு அடித்தளமிட்டார். விவேகத்தால் வானங்களை நிலைபெறச் செய்தார். (நீமொ. 3: 1).

கடவுளின் படைப்பில் சீரிய ஒழுங்குமுறை உள்ளது. காலை மாலை என்றும், முதல்நாள் என்றும் தனிமைப்படுத்தி ஒழுங்குபடுத்தி படைக்கப்பட்டது.

திருப்பாடலாசிரியர் தனது திருப்பாடலில் கடவுளாகிய ஆண்டவர் பேரொளியை ஆடையாக அணிந்து, வான்வெளியைக் கூடாரமாக விரித்துள்ளார். பூவுலகை அதன் அடித்தளத்தின் மீது நிலைநாட்டி அது என்றென்றும் அசைவுறாது செய்தார். அதனை ஆழ்கடல் ஆடையென மூடியிருந்தது. மலைகளுக்கு மேலாக நீர்த்திரள் நின்றது. கடவுள் அதைக் கண்டிக்க அது மலைகள் மேல் ஏறி பள்ளத்தாக்குகளில் இறங்கி அதற்கென்று குறித்த இடத்தை அடைந்தது. மீண்டும் அது மீறிச் செல்லாதவாறு அதற்கு எல்கை வகுத்தார். கதிரவனையும், சந்திரனையும் காலக்குறிப்புக்காகப் படைத்தார். சில விலங்குகள் வாழ்வதற்காக இருள் படைக்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார் (தி.பா. 104).

மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதைப்பனுக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச் செல்வதில்லை என்று இறைவாக்கினர் ஏசாயா இறை அறிவால் கட்டமைக்கப்பட்ட படைப்பைக் குறித்துத் தெளிவுப்படுத்துகிறார் (ஏசா. 55: 10).

ஆனால் இன்று கடவுளின் படைப்பில் ஒழுங்குமுறையினை மீறுவதால் மனிதன் மனுமக்களுக்கும், உலக படைப்புகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றான். எனவே மனுமக்களாகிய நாம் இறை அறிவை நம் உள்ளத்தில் கொண்டு படைப்பின் கட்டமைப்பைப் பாதுகாத்து இறை ஆசி பெறுவோம்.

**2. இறை ஆளுகையில் கச்சிதமாக்கப்படும் (சீரமைக்கப்படும்) படைப்பு** (திவெ. 21: 1-8)

கடவுளின் உறைவிடம், அரியணை, ஆற்றல் மற்றும் நோக்கம் இவைகள் இறைமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அவை எப்படி இந்த உலகில் குறிப்பாக மனு மக்களில் விரிவுபடுத்தப்படும் என்பதைத் திருவெளிப்பாடு 21: 1-8 குறிப்பிடுகின்றது.

இறைவனின் படைப்பு சீரழிவைச் சந்தித்தது. படைப்பு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மனிதனின் பாவமே காரணம் ஆகும். ஏவாளின் மிதமிஞ்சிய சுயநலம்

பாவத்தை வருவித்து படைப்பில் சீர்கேட்டினை ஏற்படுத்தியது (தொ.நூ. 3). கடவுளின் ஞானத்தை விட தன் ஞானம் பெரிது என்ற சிந்தனை பெருகிக் கொண்டிருக்கும் காரணத்தால் சக படைப்புகள் வீழ்ச்சியடைகின்றன. சுயநல தேட்டத்தினால் அதிக வாகன பெருக்கங்கள் ஏற்பட்டன. இதன் புகை தாக்கத்தால் ஒசோன் படலத்தில் ஓட்டை ஏற்பட காரணமாகிவிட்டோம். இதனால் சூரியனின் நேரடித் தாக்குதல்கள் பல தோல் நோய்களை உருவாக்குகின்றன. இத்தகைய சூழலை மாற்றும் வகையில் புதிய வானம், புதிய பூமி அமையும். புதிய வானம், புதிய பூமி சீர் கெட்ட படைப்பைக் கச்சிதமாக்கிறது.

2014-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் மாநிலங்களில் ஒன்றாகிய கென்டக்கி (Kentucky) என்ற இடத்திலுள்ள தேசிய கார்வெட் (Corvette) அருங்காட்சியத்தில் ஒரு புதை குழி தோன்றியது. இதில் எட்டு வகையான உயர்தர செவரோலெட் கார்வெட் பந்தயக் கார்கள் (Chevrolet Corvettee Sports Cars) புதையுண்டன. அவ்வாகனங்கள் மிகவும் சேதமடைந்தன. அவற்றில் சில பழுது நீக்கம் செய்ய முடியாத அளவிற்குச் சிதைந்து போயின. அதில் குறிப்பிட்ட ஒரு கார் பலரின் கவனத்தை ஈர்த்தது. ஏனெனில் 1992-ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட கார்களில் 10 இலட்சம் இலக்கை எட்டிய கார் அது. ஆகவே அங்கிருந்த வாகனங்களிலே மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாக இருந்த வாகனம் அது. சீர்குலைந்து சிதைந்திருந்த அந்த வாகனத்தை நிபுணர்கள் சீரமைத்து கச்சிதமாக மாற்றியிருந்தார்கள். அதைப் போல சீர்குலைந்த படைப்பினை ஆண்டவர் அவரது ஆளுகையில் புதிய வானம் புதிய பூமியை அமைத்து கச்சிதமாக மாற்றுகிறார்.

இன்று நாம் கடவுளின் படைப்பினைப் பல்வேறு நிலைகளில் சீரழிக்கிறோம். இல்லத்தின் கழிவுப் பொருட்கள் (Wastes) எஞ்சிய உணவு வகைகள், நெகிழிப் பொருட்கள் போன்றவற்றைப் பொது இடங்களில் தூக்கி வீசி விடுகின்றோம். இது சுற்றுப்புற நலனைச் சீர்குலைப்பதால் பல்வேறு விதமான கேடுகள் விளைகின்றன. பொது இடத்தில் எச்சில் துப்புதல் பலரின் உடல்நலத்திற்கு உலை வைக்கிறது. இதையெல்லாம் உணர்ந்து படைப்புகளைக் கச்சிதமாக்கி புதிய வானம் புதிய பூமி அமைந்திட இறைவனோடு இணைந்து செயல்பட அழைக்கப்படுகின்றோம். இறைவனால் படைக்கப்பட்ட படைப்பு எல்லோரும் மகிழ்ந்து வாழக்கூடிய வீடு என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கூற்றுப்படி வாழ முற்படுவோம்.

### 3. இறை ஆற்றலால் கட்டுப்படுத்தப்படும் படைப்பு (லூக். 8: 22-25)

கலிலேயாக் கடலில் திடீரென்று புயல்காற்று வீசுவது சகஜமான ஒன்று. அது கடல் மட்டத்திற்குக் கீழ் ஏறக்குறைய 200 மீட்டர் ஆழத்தில், தாழ்வாக

இருப்பதால் சுற்றுப்புறப் பகுதியைப் பார்க்கிலும் அங்குக் காற்று அதிக சூடாக இருக்கிறது. இது வளி மண்டல கொந்தளிப்புகளை உருவாக்குகிறது. இதோடு பலத்த காற்று வடக்கே உள்ள எர்மோன் மலையிலிருந்து கீழே யோர்தான் பள்ளத்தாக்கு மீது பலமாக வீசுகிறது. ஒருவினாடி அமைதி நிலவினாலும் மறு வினாடிக்குள் கடும் புயல் காற்று வீசத் தொடங்குகிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீடர்களும் கடலில் படகு பயணம் மேற்கொண்டார்கள். படகு போய்க் கொண்டிருந்தபோது இயேசு கிறிஸ்து அயர்ந்து தூங்கிவிட்டார். அப்பொழுது புயல் காற்று வீசியது. படகு நீரால் நிரம்பியது. ஆபத்துக்குள்ளான சீடர்கள் இயேசு கிறிஸ்துவிடம் வந்து ஆண்டவரே, ஆண்டவரே, நாங்கள் சாகப்போகிறோம் என்று பயத்துடன் கதறி அவரை எழுப்பினார்கள். அவர் விழித்தெழும்பி காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் கடிந்து கொண்டார். உடனே அவை ஓய்ந்தன. அமைதி ஏற்பட்டது.

தற்காலச் சூழலில் நாம் எதிர்கொள்ளுகின்ற இயற்கைச் சீற்றங்கள், அதிக மழை, அதிக வறட்சி, அதிக புயல் காற்றின் தாக்கங்கள் இவை அனைத்தும் படைப்புகள் சரியாக பராமரிக்கப்படாததால் ஏற்படுகின்றன என்ற எச்சரிப்பை இந்நிகழ்வு சுட்டுகின்றது.

அந்த ஆறுமாத குழந்தை பசியினால் கதறி அழுதது. பால் பாத்திரம் காலியாக இருப்பதைக் கண்ட குழந்தையின் தாய்க்கு கை, கால் ஒடவில்லை. பதற்றமான சூழல். பாலைக் குடித்து விட்டு வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்திருந்த பூனையின் மனது குறுகுறுத்தது. தான் செய்த மடத்தனமான செயலை நினைத்து வருந்தியது. குழந்தைக்குப் பால் வாங்கி வர முடிவு செய்தது. பக்கத்து விட்டு பசுவிடம் பாலைக் கடனாக கேட்டது. பூனையாரே நிலமெல்லாம் காய்ந்து வறண்டிருப்பதால் புல் இல்லை. நானோ சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகிறது. வற்றி வதங்கியிருக்கும் எனது மடியே இதற்கு சாட்சி. எனவே நீ எனக்கு புல் அறுத்துவா நான் உனக்கு பால் தருகிறேன் என்றது பசு. நிலத்தைப் பார்த்த பூனை, நிலமே என் பசுவுக்கு கொஞ்சம் புல் தா என்றது. நிலம் பூனையைப் பார்த்து சிரித்தபடி நான் பசுமையை மறந்து பல ஆண்டுகளாகிறது. இதற்கு காரணம் ஏரியில் தண்ணீர் இல்லாமைதான் என்றது. பூனை ஏரியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தது. ஏரியே உன்னை இச்சூழலுக்குத் தள்ளியது யார் என்று கேட்டது. ஏரி மலையைச் சுட்டிக்காட்டி அந்த காடுகள் மொட்டையானதால் மேகங்கள் மழை பொழிய மறந்துவிட்டன என்றது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிதட்டுத் தடுமாறி மலையை அடைந்த பூனை காடுகளின் பரிதாப நிலையைப் பார்த்து உன்னை இந்த அளவிற்குப் படுபாதாளத்தில் தள்ளியது யார் என்று ஆத்திரத்துடன் கேட்டது. அதோ

பங்களாவில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருக்கும் இதயமற்ற மனிதர்கள்தான் எங்களைச் சிதைத்தார்கள். மனிதர்களின் சுயநலத்தால் தான் மழையில்லை. மழையில்லாததால் தான் ஏரியின் மடியில் நீரில்லை. நீரில்லாததால் நிலம் வறண்டு பசுமையை மறந்துவிட்டது. நிலம் வறண்டதால் தான் பசு பட்டடினியாய் கிடக்கிறது. பசுவின் மடி வற்றியதால் தான் குழந்தையின் வயிறு வெற்றிடமாகிறது. அந்த குழந்தையின் அழுகுரல் தான் சிதைந்த இயற்கையின் துயரக் குரல் என்றது அந்த மலை.

இன்று நமது சுயநலம் இயற்கையைச் சிதைத்து சின்னா பின்னமாக்கியுள்ளது. ஆண்டவரிடம் மனவருந்தி மன்னிப்பு கேட்போம்.

இன்றைய திருமறைப்பகுதியில் புயல் காற்று வீசிய சூழலில் காற்றையும், நீரின் கொந்தளிப்பையும் இயேசு கிறிஸ்து கடிந்து கொண்ட உடனே இயற்கை அமைதலாகிவிட்டது. இது இறைவனின் ஆற்றலுக்கு முன் எதுவும் கட்டுப்பட்டே ஆகவேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. கப்பல் பயணத்தில் புயல்காற்று வீசி அலைக்கழித்த போது ஆண்டவரே, நாங்கள் சாகப்போகிறோம் என்று சீடர்கள் இயேசு கிறிஸ்துவிடம் அடைக்கலம் புகுந்தனர். அதைப் போல நம் வாழ்விலும் கடவுளின் ஆற்றலை நம்பி சிக்கல்களைக் கட்டுப்படுத்தி படைப்புகளைப் பேணி பாதுகாக்க அழைக்கப்படுகிறோம்.

படைப்பு இறைமாட்சிமையைப் பறைசாற்றுகின்றது. ஆனால் அந்த படைப்பு இறை அறிவால் கட்டமைக்கப்பட்டது. இறை ஆளுகையில் கச்சிதமாக்கப்படுகிறது (சீரமைக்கப்படுகிறது), இறை ஆற்றலால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை உணர்ந்து செயல்படுவோம். நல்ல இயற்கையின் பசுமையை அனுபவித்து இறை ஆசிப் பெறுவோம்.

அருள்திரு. **R. டேவிட் ஜெபசிங்**

## 16.06.2024

# உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுங்கள்

## (Worship the Lord in Truth and Spirit)

| | |
|---|---|
| எசா. 6: 1-8 | 2 தெச. 2: 13-17 |
| திபா. 139 | யோவா. 4: 15-26 |

"படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர் தூயவர் மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது" (எசா 6: 3).

வழிபாடு இறை நம்பிக்கையின் வெளிப்பாடு. கடவுளால் படைக்கப்பட்ட மானுடம் இறைவரை வழிபடவேண்டும் என்பது இறைநீதி. வாழ்வும் வழிபாடும் இணைந்து செயல்படுவதுதான் இறைவருக்கு உகந்த உண்மையான வழிபாடு. அகத்தூய்மையோடும் புறத்தூய்மையோடும் வழிபடுவது முழுமையான வழிபாடு. இறைமக்களது வாழ்வில் வழிபாடு கடவுளுடன் உள்ள உடன்படிக்கையை புதுப்பிக்கின்ற, கடவுளின் செயல்களை நினைவுபடுத்தி நன்றி செலுத்தி மகிழும் வாழ்வியல் அனுபவம். எனவே இறைமக்கள் வாழ்வில் ஆலயம், வழிபாடு உன்னத இடத்தை பெற்றுள்ளது.

Worship என்கிற ஆங்கில வார்த்தைக்கு Sahah என்ற எபிரேய சொல்லும் Proskubeo என்ற கிரேக்கச் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை தமிழில் மொழிபெயர்க்கும் போது நேர்படுதல், சீர்திருந்துதல், முத்தமிடுதல், சேவை செய்தல் போற்றுதல் போன்ற பொருள்களைத் தருகிறது.

யூதாவை நீண்டகாலம் (52 ஆண்டுகள் ) நிர்வாகத்திறமையுடன் ஆளுகை செய்த உசியா அரசர் மரணமடைந்த பின்னர் மன்னராட்சியில் ஓர் இடைவெளி ஏற்பட்டது. யாவே கடவுளை வழிப்பட்ட மக்களின் சகோதரத்துவ உறவுகளில் உடைவு, மக்களின் பேராசை போலித்தனமான வழிபாடுகளுக்கு இட்டுச் சென்றது. ஆன்மீக மயமான எருசலேம் பொருளாதார நிறுவனமாக மாறி நாட்டிற்கு வருமானம் சேர்த்தது. இறை மக்களது வாழ்விற்கும் வழிபாட்டிற்கும் தொடர்பின்றி, "யாவே" நம்பிக்கை நலிவடைந்திருந்தது. அரசர் உசியாவின் இறப்பால் அசீரியா மகிழ்ச்சி அடைந்தது. இந்த சூழலைப் புரிந்துகொண்ட எசாயா அசீரியாவால் தன் நாட்டிற்கும், தன் மக்களுக்கும் கேடுவருமோ என்று அச்சமுற்று இறையவரை வழிபட இறை இல்லம் சென்றார். அங்கு வழிபாட்டுச் சூழலில் அவர்பெற்ற அனுபவம் இறை வழிபாடுகள் எப்படி அமையவேண்டும் என்ற படிப்பினையை நமக்கு கற்றுத் தருகின்றது

**1. இறை வெளிப்பாட்டை உணருதல்** (எசா. 6: 1)

“மிகவும் உயரமானதோர்அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன் அவரது தொங்கலாடைகோவிலை நிரப்பி நின்றது.”

இறை வழிபாடு என்பது இறை வெளிப்பாட்டை உணரும் ஆன்மிக செயல். மன்னராட்சியில் ஏற்பட்ட இடைவெளியில் இறையாளுகையினை எதிர்பார்த்து இறை இல்லம் சென்ற ஏசாயா இறைவெளிப்பாட்டை உணர்ந்தார். தலைமைஇல்லாத நாட்டில் தலைமையை ஏற்படுத்துகிற ஆண்டவர் உயரமானதோர் அரியணையில் அமர்ந்திருப்பதைக் கண்டார். தனது நாட்டிற்கு என்ன ஆகுமோ? என்று அச்சமுற்ற எசாயா கண்ட காட்சி.

1. தன் மக்களுக்காக கடவுள் இருக்கிறார்.

2. தன் மக்களை பாதுகாக்க அவர் இறங்கி வருகிறார்.

3. தன் மக்களின் மீது கடவுள் கரிசனையும் இரக்கமும் கொண்டுள்ளார்.

4. மக்களது வேதனைகளில் பங்கெடுக்கின்றார், ஆகிய உண்மைகளை உணர்த்தியது.

இறை வெளிப்பாட்டினால் எசாயா அச்சம் அகன்று அகத்தெளிவடைந்து ஆண்டவருடைய மாட்சியை, தூய்மையை உணர்ந்தார் அவருடைய தொங்கலாடை கோவிலை நிரப்பி நின்றது (எசா. 6: 1). இறைமக்கள் உண்மையோடும் தூய்மையோடும் இறைவரை வழிபடும்போது இறைமாட்சி ஆலயத்தை நிரப்பும். அதோடு, ஆலயத்தை நிரப்பும் இறைமாட்சி அனைத்துலகையும் நிரப்பும் இதனை எசா. 6: 3-யில் “. . . மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது” என வாசிக்க முடிகிறது. மேலும் எசாயா தன் நிலைப்பாட்டையும் தகுதியின்மையையும் உணர்ந்து கடவுளது தூய்மையைக் கண்டு அச்சமுற்று “ஐயோ நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் . . . என் கண்கள் கண்டனவே,” என்கிறார். “ஐயோ நான் அழிந்தேன்” என்ற எசாயாவின் குரல் இனிமேல் உயிருடன் இருக்க முடியாது (விப. 33: 20) என்பதை உணர்த்துகிறது, இறை வெளிப்பாட்டினால் தன்னிலை உணர்ந்த எசாயா இறை இரக்கத்தைப்பெற்றார். இங்கு ஏசாயாவின் வழிபாடு மட்டுமல்ல வாழ்வும் அர்த்தம் பெற்று அச்சமும் அழுக்குகளும் அகன்று நம்பிக்கை உறுதி அடைந்தது (எசா. 6: 7).

நமது வாழ்விலும் வழிபாடு இறை வெளிப்பாட்டை உணர்த்தும் ஆன்மிக செயலாக அமையும்போது வாழ்வும் வழிபாடும் அர்த்தம் பெறுகிறது.

**2. இறைத்திட்டத்தை அறிதல்** (எசா.6: 8)

"யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?"

தம்மை வெளிப்படுத்தும் கடவுள் நோக்கங்களின்றி, தேவைகளின்றி வெளிப்படுத்துவதில்லை, கடவுள் வெற்றுக்காட்சியாளர் அல்ல. கடவுள் தேவைகளோடும், எதிர்பார்ப்புகளோடும், திட்டங்களோடும் வெளிப்படுத்துகிறார் (விப 3: 1). கடவுள் அனைத்துலகையும் ஆளுகை செய்கிறவராக மிகவும் உயரமானதோர் இடத்தில் அமர்ந்திருக்கிறார். மேலும் கடவுள் உயர்ந்தவர் மட்டுமல்ல, அவரது திட்டங்களும் உயர்ந்தவை. எங்கெல்லாம், யாரிடமெல்லாம் கடவுள் தம்மை வெளிப்படுத்தினாரோ. அங்கெல்லாம் கடவுள் தம் திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்.

எசாயாவை கடவுள் சீர்கெட்ட யூத மக்களை எச்சரிக்கவும், கடின இதயம் கொண்டவர்களுக்கு இறை வார்த்தைகளின் வழி இறை தீர்ப்பை மக்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் அறிவிக்கவும் அழைத்தார் (எசா. 6: 9). இறைதிட்டம் கடினங்கள் நிறைந்தவை கடினமானச் சூழலில் இறைவரை வழிபடச் சென்ற எசாயா இறைத்திட்டதை அறிந்து கொண்டார். இன்றும் மானிட வாழ்வில் எச்சூழலிலும் ஆவியோடும் உண்மையோடும் கடவுளை வழிபடும்போது அவர் தம் திட்டங்களை மானிடருக்கு அறிவிக்கின்றார்.

ஆனால், இன்று இரைச்சல்களும், பூசல்களும் நிறைந்திருக்கும் வழிபாடுகளில் இறைத் திட்டங்களை அறிய முடிவதில்லை. பெரும்பாலான மக்கள் வழிபாட்டிற்கு வரும்போது இறைதிட்டம் என்ன? என்று அறிவதற்குப் பதிலாக தங்களுடைய திட்டங்களை, கடவுள் அங்கீகரிக்க வேண்டும் என்றும், தங்களது தேவைகளை கடவுள் நிறைவு செய்யவும் வேண்டுமென்ற மனநிலையோடு வருகிறார்கள். எனவே தான் கடவுளது திட்டங்களைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. இன்றைய மக்களின் ஆன்மிக வாழ்வின் சீரழிவுக்கும், திருச்சபைகள் சந்திக்கும் சவால்களுக்கும் காரணம் காலாகாலங்களில் கடவுள் அறிவிக்கும் திட்டங்களை மக்கள் தெளிவாக அறிந்து கொள்ளாமையாகும். ஆகவே நமது வழிபாடுகள் வெறும் வெற்றுச் சடங்குகளாக அல்ல, இறை திட்டத்தை அறியும் வழிபாடாக அமையவேண்டும்.

**3. இறை திட்டத்திற்கு ஒப்படைத்தல்** (எசா. 6: 8)

"இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்"

வழிபாட்டின் முழுமை என்பது வழிபடுகிறவர்கள் தம்மை இறைவருக்கு ஒப்புக் கொடுப்பதாகும். இறை திட்டத்திற்கு தம்மை கையளிப்பது பலியாகுதல் என்பதாகும். மேலும் இறையவர் விரும்பும் வாழ்வை எற்பதாகும். இத்தகைய வாழ்வு கடவுள் நுகரும் வாசனையாக அமைகிறது. ஆலயத்தில் ஆண்டவரை

வழிபடுகையில் எசாயா உன்னதமான கடவுளின் விண்ணக அவையைக் காண்கிறார். கடவுளின் திட்டம் நிறைவேற யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்? (எசா. 6: 8) என்ற கடவுளின் குரல் எசாயாவின் காதுகளில் விழுந்தது. இச்சூழலில் ஆண்டவரே, இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும் (எசா. 6: 8) என்று விரும்பி தன்னை ஒப்படைத்தார். நிபந்தனையின்றி தன் பாவங்களை மன்னித்த கடவுளுக்கு, எந்தவித நிபந்தனையுமின்றிப் பணி செய்ய தம்மை ஒப்படைத்தார். மேலும் வழிபாட்டை "சேவை செய்தல்" எனவும் புரிந்து கொள்ளலாம். ஆகவே எசாயா கடவுளுக்குச் சேவை செய்ய தன்னை ஒப்படைத்தார் என்பதை அறிய முடிகிறது. தூய பவுலார், "கடவுளுக்கு உகந்த, தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள் இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு" (உரோ. 12: 1) என்கிறார்.

உண்மையோடும், ஆவியோடும் ஆண்டவரை வழிபடுவது என்பது வெறும் ஆலயத்தில் மட்டும் அல்ல, எங்கும் எப்போதும் வழிபட முடியும். நம் ஆண்டவர் இயேசுவும் சமாரியா பெண்ணிடம் அறிவுறுத்திய உண்மையும் இதுதான். யோவா. 4: 15-26 வரையிலும் படிக்கும்போது, வழிபாடு மரபுகளும், இடங்களும் சார்ந்தது அல்ல. எங்கும் வழிபட முடியும் என்றார். அன்னைத் தெரசா அவர்கள் உடன் அருட்சகோதரிகளுடன் ஆலய வழிபாட்டிற்குச் செல்லும்போது, வழியின் ஓரத்தில் கிடந்த முதியவரைக் கண்டார்கள். ஒதுக்கப்பட்டு, கைவிடப்பட்டிருந்த அந்த முதியவரின் அருகில் சென்று அவரை தூக்கினார்கள். இதைக்கண்ட உடன் அருட்சகோதரிகள் அம்மா வழிபாட்டிற்கு நேரமாகிவிட்டது வாருங்கள் என்று அழைத்தார்கள். அழைப்பை மறுத்த அன்னைத் தெரசா அவர்களுக்குச் சொன்ன பதில், சிந்தனைக்கு உரியது, "நான் கடவுளைக் கண்டேன்" வழிபாட்டிற்கு வரவில்லை என்பதாகும்.

வாழ்வு வழிபாடாக மாறும்போது முழுமை அடைகிறது. இன்றைய சூழலில் கிறிஸ்துவை வாழ்வின்மூலம் வெளிப்படுத்துவது உண்மையான வழிபாடு. உருவமற்ற கடவுளை, வாழ்வின் மூலமாக வெளிப்படுத்துவது உண்மையான வழிபாடாகும் (யோவா. 4: 24).

நமது வழிபாடுகள் உண்மையோடும் ஆவியோடும் அமையும்போது வழிபாட்டில் இறை வெளிப்பாட்டை உணரமுடியும். இறை திட்டங்களை அறிய முடியும், இறை திட்டத்திற்கு ஒப்படைக்க முடியும். இத்தகைய நமது அனுதின வழிபாடுகள் விண்ணக வழிபாட்டின் முன் சுவையாக அமையும்.

**அருள்திரு. A. ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

## *23.06.2024*

# சீடத்துவத்தின் மதிப்பு

## Cost of Discipleship

தானி. 6:11-23 2 கொரி. 6:1-10

தி.பா. 34 மாற். 10:35-45

"உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்" (மாற். 10: 44)

சீடனைக் குறிக்கும் மதற்றேஸ் (Mathetes) என்னும் கிரேக்க சொல் பெயர்ச் சொல்லாக சுமார் 260 முறை புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. இச்சொல் மன்தனோ (Manthano) என்கிற வினைச் சொல்லில் இருந்து பிறந்துள்ளது. இச்சொல்லுக்கு அடிப்படையான கருத்து "கற்றுக்கொள்" என்பதாகும்.

பிற்காலத்தில் யூத சமய வழக்கத்தில் சீடர் என்பது, யூதரது நீதிச்சட்டங்களை விளக்கி வந்த ரபீமாரிடம் கல்வி கற்று வந்த மாணவர்களைக் குறிப்பதாக அமைந்தது.

சீடத்துவத்தின் மதிப்பு என்பது தன் குருவை தன் வாழ்வில் வெளிப்படுத்துவதில் அமைவதாகும். குருவின் பண்புகளாக தன் வாழ்வில் உள்வாங்கி தான் வாழ்ந்து வரும் சமூகத்தில் வெளிப்படுத்தவேண்டும். இதன் அடிப்படையில் தான் சீடத்துவத்தின் மதிப்பு வெளிப்படும். சீடத்துவத்தின் மதிப்பு வெளிப்பட எந்த நிலையில் அடிப்படையில் சீடன் தன் வாழ்வை வெளிப்படுத்த வேண்டும் என்பதைத் தியான பகுதி வாயிலாக கற்றுக்கொள்வோம்.

### 1. சீடன் தன் நிலையில் நிற்க வேண்டும்

சீடன் தன் வாழ்வை தன் நிலையில் நிறுத்த வேண்டும். தன் நிலையை மிஞ்சி செல்லக்கூடாது. சீடன் தன் நிலையில் தன் வாழ்வை நிறுத்தும் போது தான் சீடத்துவத்தின் மதிப்பு வெளிப்படும்.

இயேசுவின் சீடரில் யாக்கோபும் யோவானும் மற்ற 10 சீடர்களைப் போல தங்கள் வாழ்வை தங்கள் நிலையில் நிறுத்தியிருக்க வேண்டும். தங்கள் நிலையை மிஞ்சிப் போகிறார்கள். அவர்கள் இயேசுவிடம் வந்து நீர் அரியணையில் இருக்கும் போது எங்களில் ஒருவர் உமது வலது புறத்திலும் இன்னொருவர் இடது பக்கத்திலும் இருக்க அருள் செய்ய வேண்டுமென வேண்டிக்கொள்கிறார்கள். தங்களுடைய நிலையை விட்டு மிஞ்சி போகின்ற

நிலைமை இயேசுவோடு இருந்த இவர்கள் அவரது வலது புறத்திலும் இடது புறத்திலும் அமரும்படி அருள்வது, அவரது செயல் அல்ல என்பதை புரிந்திருக்க வேண்டும்.

தன் வாழ்வின் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளாதவன், தன் நிலையை விடுத்து மிஞ்சிப் போகிறான். இயேசுவோடு இருந்த இவர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளவில்லை. தங்கள் நிலையை விடுத்து மிஞ்சி போய் சீடத்துவத்தின் மதிப்பை இழந்து போகிறார்கள்.

தங்கள் குருநாதர் இயேசு எந்த நிலையிலும் தம் நிலையை விடுத்து, மிஞ்சிப் போகவில்லை. தம் நிலையில் தம்மை நிலை நிறுத்திக்கொண்டார். தன் தந்தையின் மீட்பு திட்டத்தை நிறைவேற்ற வந்த அவர் இந்நிலையில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டார். தம் நிலையை விடுத்து மிஞ்சி போவதற்கு அவருக்கு வாய்ப்பு இருந்தது. இயேசு சந்தித்த மூன்று சோதனைகள், மக்கள் அவரை அரசனாக்க முற்பட்ட நிலை. இவைகளை எல்லாம் இயேசு பயன்படுத்தவில்லை. அவைகளை எல்லாம் தவிர்த்து தம்மை தமது நிலைக்குள்ளாக அடக்கிக்கொண்டார். இதையெல்லாம் யாக்கோபும், யோவானும் புரிந்திருக்கவேண்டும். இதை புரிந்திருந்தால், தங்கள் நிலையை விடுத்து மிஞ்சிப் போயிருக்கமாட்டார்கள்.

கிறிஸ்தவ உலகில் இன்றெல்லாம் தங்களை மிஞ்சி காட்டக்கூடிய போக்குகள் வளர்ந்து கொண்டே வருகிறது. இது சீடத்துவத்தின் மதிப்பு அல்ல. அவமதிப்பு ஆகும்.

### 2. சீடனில் நற்பண்புகள் வெளிப்படவேண்டும்

சீடன், தான் வாழும் சமூகத்தில் நற்பண்புகளை வெளிப்படுத்தும் போது தான் சீடத்துவத்தில் மதிப்பு வெளிப்படும். சீடன் தன் வாழ்வில் பொறுமை, சகிப்புத் தன்மை, தங்கள் உணர்வுகளை அடக்கிக் கொள்ளுதல் இது போன்ற நல்ல பண்புகளை வெளிப்படுத்தவேண்டும்.

யோவான், யாக்கோபு இவர்களுடைய செயல்பாட்டை பார்க்கிற மற்ற பத்து சீடர்களும் தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, பொறுமையோடு நின்றிருக்க வேண்டும். அவ்வாறு நின்றார்களில்லை. மாறாக யோவான் யாக்கோபு மீது கோபப்பட்டார்கள் என்பதாக திருமறைப் பகுதி சொல்கிறது. சீடத்துவத்தின் மதிப்பை வெளிப்படுத்த வேண்டிய இவர்கள், சீடத்துவத்தை அவமதிக்கிறார்கள்.

நமது செயல்பாடுகள் சீடத்துவத்தின் மதிப்பை வெளிப்படுத்துகிறதா? அவமதிக்கின்றதா? நாம் சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவை

பின்பற்றுகிறவர்கள், கிறிஸ்துவுக்குப் பணி செய்கிறவர்கள் தங்கள் வாழ்வு உயர வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். கிறிஸ்துவைக் குறித்து கவலைப்படுவதில்லை. இவையெல்லாம் சீடத்துவத்தை அவமதிப்பதாகும். கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் சீடத்துவத்தின் மதிப்பு வெளிப்படும் வகையில் வாழ வேண்டும்.

### 3. சீடன் பணியாளாய் நிற்க வேண்டும்

சீடன் பிறருக்குப் பணிவிடை செய்யும் போது தான் சீடத்துவத்தின் மதிப்பு வெளிப்படும்.

பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள், அவர்களுக்குள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார்கள். தம்மை பின்பற்றும் தமது சீடர்கள் அவ்விதம் இருக்கக்கூடாது என இயேசு போதனை வழங்குகிறார். பெரியவனாக இருக்க விரும்புகிறவன் தொண்டனாய் இருக்க வேண்டும். முதன்மையானவனாக இருக்க விரும்புகிறவன் அனைவருக்கும் பணியாளனாக இருக்கக் கடவன் இது தான் இயேசுவின் போதனை. பிறருக்குத் தொண்டனாய் பணி செய்வதில்தான் சீடத்துவத்தின் மதிப்பு வெளிப்படும். பிறருக்கு நல் தொண்டாற்றி சீடத்துவத்தின் மதிப்பை வெளிப்படுத்துவோம்.

கிறிஸ்துவை பின்பற்றும் அவரது சீடர்களாகிய நாம், நமது நிலையில் நம் வாழ்வை நிறுத்துவோம். நற்பண்புகளை வெளிப்படுத்துவோம். பணியாளனாக நிற்போம். இந்நிலைகளில் நம் வாழ்வை அமைத்து சீடத்துவத்தின் மதிப்பை வெளிப்படுத்துவோம்.

**அருள்திரு. T. ஆஸ்ற்றின் எட்வின் றிச்சேடு**

**30.06.2024**

# இறைமக்கள் : உப்பும் ஒளியும்

## People of God : Salt and Light

எசா. 49:1-7 எபே. 5:1-5

தி.பா. 27 மத். 5:13-16

"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்"... (மத்தேயு 5:14)

உத்தராகண்ட் மாநிலம் பாகேஷ்வர் மாவட்டம் க்வார் கிராமத்தைச் சேர்ந்தவர் பிரகாஷ் கோஸ்சுவாமி, தனது கிராமத்தை முக்கிய சாலையுடன் இணைக்க மலையைக் குடைந்து சாலை அமைத்துள்ளார். 500 மீட்டர் தூரம் கொண்ட இந்த சாலையை சுத்தியல் மற்றும் உளியின் உதவியுடன் 9 மாதங்களில் உருவாக்கி உள்ளார். இது குறித்து அவர் கூறும்போது "நான் அமைத்த சாலை பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளது. எனினும் இன்னும் அகலப்படுத்த வேண்டி உள்ளது. இப்போது, இந்த சாலையில் 4 சக்கர வாகனங்கள் பயணிக்க முடியும். அதனால் 300 பேர் பயனடைவார்கள். இந்த சாலையை அமைக்க அரசோ, கிராம மக்களோ யாரும் உதவவில்லை. மாறாக என்னை ஏளனம் செய்தார்கள்" என்றார். கூலி வேலைச் செய்து வரும் கோஸ்சுவாமி தினமும் 600 ரூ. சம்பாதிக்கிறார். வேலைக்கு செல்லும் முன்பு காலை 5 மணி முதல் 9 மணி வரை சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உத்தராகண்டில் இதுபோல சாலை வசதி இல்லாத சுமார் 84 கிராமங்கள் உள்ளன. சில கிராம மக்கள் முக்கிய சாலையை அடைய 10 கி.மீ. வரை நடந்து செல்ல வேண்டி உள்ளது. இதனிடையே பாகேஷ்வர் மாவட்டத்தின் கன்டா பகுதி மக்கள் சாலை அமைத்துத் தரும்படி கடந்த 20 ஆண்டுகளாக அரசுக்குக் கோரிக்கை வைத்தனர். ஆனால் அரசு கண்டுகொள்ளவில்லை. இதையடுத்து 10 பெண்கள் கூட்டாக சேர்ந்து சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கோஸ்சுவாமி என்ற ஒரு மனிதரின் தன்னலமற்ற பணியினால் க்வார் கிராம மக்கள் எளிய முறையில் பயணம் செய்ய முடிகிறது (இந்து தமிழ் 20.02.2023).

"உப்பு" "ஒளி" என்ற உருவகத்தின் வழியாக சுயநலமற்ற தன்னலமற்ற பொதுப்பணியில் ஈடுபட இயேசுவின் பேரருளுரை உதவுகிறது. உப்பு "சுவையூட்டும்" "தூய்மைப்படுத்தும்" "கெட்டுப்போகாமல் பாதுகாக்கும்". இத்தகைய பணியில் உப்பு தன்னைக் கரைத்து கொள்கிறது. மனிதநேயம் தணிந்துவிட்ட சூழலில் உப்பாக ஒளியாக வாழும்போது மீண்டும் மனிதநேயம் துளிர்விடும். நற்செய்தி வழியாக இறைமக்கள் உப்பாக ஒளியாக வாழ கற்றுக்கொள்வோம்.

**1. நல்லொழுக்கத்துடன் ஒளிருங்கள்** (மத்தேயு 5: 13)

“நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால்....”

கடவுளின் படைப்பில் மனுக்குலம் உயர்வாய் படைக்கப்பட்டது. ஆனால், மனுக்குலம் உவர்ப்பற்றதாய் மாறியது. உவர்ப்பற்றது பயன்படாது, குப்பையில் கொட்டப்படும். இந்த உலகில் உப்பாய் ஒளியாய் வாழ ஒளிர நல்லொழுக்கம் இன்றியமையாதது. மக்களினங்களுக்கு ஒளியாய் படைக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் உவர்ப்பற்ற நிலையில் வாழும்போது மற்ற மக்களால் மிதிக்கப்பட்டார்கள். கடவுளால் வெளியே கொட்டப்பட்டார்கள். (எசாயா 49:1) வெளியே கொட்டப்பட்டவர்கள் மீண்டும் தங்கள் வாழ்வைச் சீர்படுத்தும்போது ஒளியாக மாற்றப்படுவார்கள். கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் பாடுகளைச் சந்திக்கும்போது, அந்த பாடுகளிலும் நல்லொழுக்கமுள்ளவர்களாய் வாழும்போது மற்றவர்கள் முன் ஒளிர முடியும். திருப்பாடல் 27-இல் நல்லொழுக்கத்துடன் கடவுள் மீது பற்றுதலோடு வாழும்போது தீங்குநாளில் தம் கூடாரத்தில் மறைத்து, வெறுப்போர் முன்பாக தலைநிமிரச் செய்து ஒளிரச் செய்வார். நல்லொழுக்க வாழ்வு பற்றிய செய்தியை தூய பவுலடிகளார் எபேசு திருச்சபை இறைமக்களுக்குக் கற்பித்து, நறுமணம் வீசும் வாழ்வு வாழுங்கள் என்கிறார். (எபேசியர் 5:1-5)

தனி வாழ்க்கையிலும், பொது வாழ்விலும் ஒழுக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது குறைந்துகொண்டே வரும் காலம் இது. நல்லொழுக்கம் பல நன்மைகளுக்கு வித்தாக அமையும் என்பதைத் திருவள்ளுவர் தன் குறளில் விளக்கியுள்ளார். நல்லொழுக்கம் என்ற விதையிலிருந்து நற்பெயர், புகழ், மகிழ்ச்சி, பொருள், பதவி ஆகிய நன்மைகள் கிடைக்கும்.

“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்மை தரும்.”

நல்லொழுக்கமற்றவர்களாய் தீயொழுக்கத்தில் வாழ்வோரால் “உப்பாக” “ஒளியாக” வாழ முடியாது. உப்பாக ஒளியாக வாழ நல்லொழுக்கம் வித்தாக அமைய வேண்டும். நல்லொழுக்கத்தால் கிடைக்கும் பயன்கள்.... 1. நற்குடிப்பிறப்பு 2. நீண்ட ஆயுள் 3. செல்வப் பெருக்கு 4. அழகு 5. நிலவுடமை 6. சொல்வன்மை 7. கல்வி 8. நோயின்மை என்பவையாகும்.

**2. நற்குணங்களால் ஒளிருங்கள்** (மத்தேயு 5:16 (a))

“உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க!”

உலகத்தில் ஒளிர நற்குணங்கள் காரணிகளாக அமைகின்றன. நற்குணங்களால் இந்த உலகம் ஒரு மனிதனை அறிந்துகொள்ளும். ஜாண்

ரஸ்கின் "கிறிஸ்தவர்கள் செல்கின்ற இடமெல்லாம் ஒளியூட்டக்கூடியராக இருக்கவேண்டும்" என்கின்றார். எசாயா இறைவாக்கினரும் கடவுளின் பணியாளர், கடவுளின் மக்கள் மற்றவர்களுக்கு முன் ஒளிர வேண்டுமென்கிறார் (எசாயா 49:1..). எபேசியர் 5:8 இல் "ஒளி பெற்ற மக்களாய் வாழுங்கள்" என்கிறார். ஒளிபெற்ற மக்களாய் வாழ ஆவியின் கனியால் வாழ வேண்டும். மத்தேயு 5:1-12 வரை உள்ள பகுதியில் நற்குணங்களால் ஒளிர அறநெறி நற்பண்புகளைச் சொல்லியிருக்கிறார். எ.கா. அன்னை தெரசா தங்கள் நற்குணங்களால் உலகமறிய போற்றப்பட்டவர்கள். "...நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப் போல் ஆகுங்கள்" (எபேசியர் 5:1). இயேசுவைப் போல வாழவேண்டும், மாற வேண்டும். அவரைப் போல மாறும்போது "அன்பு" "நல்ல நடத்தை" "நன்றி சொல்லுதல்" "கீழ்படிதல்" "ஞானமாய் வாழுதல்" "கருத்தாய் வாழுதல்" போன்ற நற்பண்புகள் தானாய் ஏற்படும்.

ஒருவருடைய குணத்தை அவர் பேசும் சொல்லால் அறிய முடியும். அதுபோல, ஒளியில் நடக்கிறவர்கள் ஆண்டவருக்கு உகந்த நன்னடத்தையை வெளிப்படுத்துகின்றவர்களாகக் காணப்படுவார்கள். "பண்பிருந்தும் செல்வம் இல்லையேல் தாழ்வில்லை. செல்வம் இருந்தும் பண்பில்லை தாழ்வு" என்பது பழமொழி. வள்ளுவர் சொல்லும்போது,

> "பண்பு உடையார்ப் பட்டுண்டு உலகம், அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்."

அதாவது, நல்ல பண்புடையவர் உலகில் இருந்து வருவதாலேயே உலகம் இயங்கி வருகிறது. அவர்கள் இல்லையென்றால் புவி என்றோ புழுதியாகப் போயிருக்கும்.

### 3. நற்செயல்களால் ஒளிருங்கள் (மத்தேயு 5: 16 (b))

"...அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு..."

கோவையைச் சேர்ந்த இளம்பெண் ஸ்ரீவித்யா, அகவை 27. கணவர் பைரவன் மற்றும் 2 பிள்ளைகள். பி.என். புதுரைச் சார்ந்தவர். கடந்த 10 மாதங்களாக அரசு மருத்துவமனையில் உள்ள குழந்தைகளுக்குத் தாய்ப்பால் தானம் செய்து வருகிறார். அரசு மருத்துவமனைகளில் தினமும் 15-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்கின்றனர். அதில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குழந்தைகள் குறைந்த எடையிலும், உடல்நலன் பாதிக்கப்பட்ட நிலையிலும் பிறந்திருப்பார். அதுபோன்ற குழந்தைகளுக்கு அவர்களது தாயாரால் நேரடியாக தாய்ப்பால் கொடுக்க முடியாத சூழல் உள்ளது. பிறந்த குழந்தைகளுக்கு ஒரே உணவு தாய்ப்பால் மட்டுமே. எனவே தாய்ப்பால் கிடைக்காத பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பால் தானம் அளிக்க முடிவு செய்து, அமிர்தம்

பவுண்டேசன் வழியாக தாய்ப்பால் தானத்தைச் சமூகசேவை அடிப்படையில் அளித்து வருகிறேன். இந்த செயல் எனக்கும் என் குடும்பத்திற்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. (இந்து தமிழ் 25.01.2023) இப்பெண்மணியின் நற்செயல் எல்லாராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இந்த செயலுக்காக "Indian Book of Records" மற்றும் "Asian Book of Records" சார்பில் பாராட்டுச் சான்றிதழ், விருதும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார்கள்.

நற்செயல் என்றால் "பிறர்நலம் புரிதல்" என்பதாகும். இறைமக்கள் பிறர்நலம் பேணுவதை மாற்று சமயத்தவர்கள் கண்டு இறையவரைப் போற்ற வேண்டும். நற்செயல்களின் வழியாகத்தான் நாம் நம் சமூகத்தை நல்வழிப்படுத்த முடியும். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும்பொழுது, உதவி செய்பவர்கள் உதவி செய்வதனால் தனக்கு என்ன பயன் என்று கருதாமல் உதவி செய்ய வேண்டும். இயேசுவின் பணி வாழ்வு என்பது நற்செயல்களால் நிறைந்தது. மலைப் பேரருளுரை ஆற்றும் முன்பே திரளான மக்களுக்கு நற்செயல் செய்துள்ளார். (மத்தேயு 4:23-25). நற்செயல் என்பது ஒளி நிறைந்த வாழ்வு. உப்பு பிறர்க்கு சுவை கொடுப்பதுபோல, ஒளி பிறருக்கு இருளில் வழிகாட்டுவதுபோல மனிதர்களும் தங்கள் செயல்களால் இந்த உலகில் ஒளிர வேண்டும். நற்செயல் அல்லது உதவி செய்ய பெரிய வருமானம் தேவையில்லை. நல்ல மனமே தேவை. (எ.கா.) அமெரிக்காவைச் சேர்ந்த சக்ஃபீனி என்ற செல்வந்தர் கோடிகணக்கில் பணம் சம்பாதித்தும் மிக எளிமையாக வாழ்ந்தார். எவருக்கும் தெரியாமலேயே தனது எட்டு பில்லியன் டாலர் சொத்தைத் தானம் செய்தார். அது மற்றவர்களுக்குத் தெரியவந்தபோது, அவர் கூறியதாவது "என்னுடைய பணம் மற்றவர்களுக்குப் பயன் அளிக்கும்போது நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறினார். ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்குப் பின்னாக அருட்பணியாளர்களின் நற்செயல்கள் உள்ளன.

"உப்பு" "ஒளி" என்பதைச் சிறிய உருவகப் பொருளாகப் பயன்படுத்தி, மிகப்பெரிய உண்மைகளைச் சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். சீடர்களும், அவரைப் பின்பற்றும் இறைமக்களும் உப்பாக, ஒளியாக வாழ வேண்டும் என்பது அவர் விருப்பம். இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதே இறைமக்களின் கடமை. ஆகவே, இறைமக்கள் உப்பாக ஒளியாக வாழ்ந்து, விண்ணகத் தந்தையை செயல்கள் வழியாக மகிமைப்படுத்தி விண்ணரசை மண்ணுலகில் நிறுவி ஒளிருவோம்.

அருள்திரு. **M. ஜெஸ்லின் ஸ்டீபன்**

# நலம் நல்கும் ஆண்டவர்

எசா. 57: 14-19

"அவர்களை நான் நலமடையச் செய்வேன்" - எசா. 57: 19

இந்த உலகத்தில் நலமுடன் வாழும் வாழ்க்கையையே நாம் அனைவரும் விரும்புகிறோம். நாம் எவ்வளவு செல்வம், உடல் வலிமை, புத்திகூர்மை உடையவராக இருந்தாலும், உடல் நலம் இல்லை என்றால், நம் வாழ்வே சோர்ந்து விடுகிறது. இந்த உடல் நலத்தைப் போல, மனநலமும் மிக மிக முக்கியமானது. உடல் நலமும், மனநலமும் நன்றாக இருப்பவரே இந்த உலகில் நலமுடன் வாழ்கிறார். உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் உலகில் பல சிகிச்சை முறைகளும், உணவு முறைகளும் இருந்தாலும் அது கடவுள் நமக்கு தருகின்ற நலத்திற்கு இணையாவதில்லை. ஆகவே கடவுள் நமக்கு தரும் நலம் மட்டுமே நாம் முழு நலமுடன் வாழ நமக்குத் துணை புரிகிறது.

எசா. 57-ல் இஸ்ரவேல் மக்களின் சிலை வழிபாடு கண்டிக்கப்படுகிறது. கடவுளை மறந்து சிலை வழிபாட்டுக்கு நேராக சென்ற இஸ்ரவேல் மக்கள், கடவுளிடம் மீண்டும் அடைக்கலம் புகும்போது, கடவுள் அவர்கள் வாழ்வில் நலம் நல்குவார் என்பதை எசாயா தீர்க்கர் எடுத்துரைக்கின்றார். அவர்கள் கடவுளை விட்டு தங்கள் மனம் போன போக்கில் சென்றதால், அவர்கள் மனதில் நலமின்மை ஏற்படுகிறது. இந்த சூழலில் கடவுள் அவர்களுக்கு மீண்டும் நலம் கொடுப்பதாய் வாக்களிக்கிறார். நலம் நல்கும் கடவுள் எப்படி அவர்கள் மனதை நலமின்மையிலிருந்து நலப்படுத்துவார் என்பதைச் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

**1. ஆறுதல் வழங்கி நலம் நல்குவார்** (எசா. 57: 18)

"அவனை நடத்தி சென்று அவனுக்கு மீண்டும் ஆறுதல் அளிப்பேன்"

மனநலத்திற்கு மிக மிக முக்கியமான ஒன்று மன ஆறுதல். ஆறுதலற்ற மனம் மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு முக்கிய காரணம் கவலை. கவலையினால் ஏற்படுகிற மன அழுத்தமே இன்று அதிகம். இந்தியாவில் 18-லிருந்து 64 வயதுக்குட்பட்ட இந்தியர்களின் 42 சதவீதத்தினர் கவலை எனும் மன அழுத்தத்தால் தங்களுக்கு இருக்கிற மன ஆறுதலற்ற நிலையைக் குறிப்பிடுகின்றனர். நாம் நம் வாழ்வில் இருக்கிறவற்றை விட்டு விட்டு இல்லாத ஒன்றை நாடி கவலையுடன் மன ஆறுதலற்று அலைகிறோம். இதுதான் நம் மனதில் இன்று பெரும்பாலும் நலமின்மையை ஏற்படுத்துகிறது. இதுதான் பல வேளைகளில் நம் வீழ்ச்சிக்குக் காரணமாகிறது. தொநூ. 37: 35-ல் நான் துயருற்றுப் பாதாளத்தில் இறங்கி என் மகனிடம் செல்வேன் என யாக்கோபு அழுது புலம்புகிறார். ஆறுதலற்ற மனம் அழிவைத் தேடுகிறது என்பதற்கு இது

ஓர் உதாரணமாக இருக்கிறது. மனம் ஆறுதலற்று இருக்கும்போது, மனிதர்களால் நம் மனதை ஆறுதல் படுத்த இயலாது. கடவுள் ஒருவரே ஆறுதல் தர முடியும். எசாயா 57-ன் இந்த பகுதியில் தங்கள் மனதில் நலமற்றவர்களாக இஸ்ரவேலர்கள் உணர்ந்த போது, கடவுளே அவர்கள் மனதிற்கு ஆறுதல் கொடுத்து நலம் அளிப்பதாய் வாக்களிக்கிறார்.

**2. அமைதி வழங்கி நலம் நல்குவார்** (எசா. 57: 19) :

"... தொலைவில் இருப்போருக்கும் அருகில் இருப்போர்க்கும் அமைதி! என்கிறார் ஆண்டவர் ..."

வாழ்வில் அமைதியின்மையும் மனநலன் சார்ந்த ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. கொந்தளிக்கும் கடலில் எப்போதும் அலை இருந்துக்கொண்டே இருக்கும். கடலின் கொந்தளிப்பு சில நேரங்களில் அச்சத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துகிறது. அதுபோல அமைதியற்ற வாழ்வும் கொந்தளிக்கும் கடல் அலைக்குச் சமமாக கருதப்படுகிறது. மனிதன் அமைதியை தேடி பல இடங்களுக்குச் செல்கின்றான். தனிமையை நாடுகின்றான். ஆனாலும் அமைதி சிலநேரங்களில் கிடைப்பதில்லை. 2 குறிப். 15: 4 - 15-ல் கடவுளை மறந்து அமைதியற்று வாழ்ந்த இஸ்ரவேலருக்கு அசரியா இறைவாக்கு உரைக்கிறார். அவர் இறைவாக்கை கேட்டு அவர்கள் கடவுளிடம் திரும்பினார்கள். ஆனாலும் அவர்களுக்கு அமைதி கிடைக்கவில்லை. நாடு நாட்டையும், நகர் நகரையும் எதிர்த்து ஒன்றையொன்று நசுக்கியது. இந்த சமயத்தில் நீங்கள் மனத்திடன் கொள்ளுங்கள். தளர்ந்து போக வேண்டாம். உங்களுக்கு ஏற்ற கைம்மாறு கிடைக்கும் என அசரியா இறைவாக்கு உரைக்கிறார். இதைக்கேட்ட அரசன் ஆசா கடவுளுக்கு எதிரான அருவருப்புகளை அகற்றி கடவுளாகிய ஆண்டவரிடம் உடன்படிக்கை செய்தார். கடவுள் அவர்களுக்கு அமைதி அளித்தார். இப்போது தான் அமைதியற்ற வாழ்வில் அமைதி ஏற்பட்டது. கடவுள் ஒருவரே தம் வாழ்வில் அமைதியைத் தருகிறவர். எசா. 57: 19-ல் அமைதியின்மையினால் நலமற்று இருந்த மக்களுக்கு அவர்கள் தொலைவில் இருந்தாலும் அருகில் இருந்தாலும் கடவுளே அமைதி அளித்து நலம் நல்குவதாய் வாக்களிக்கிறார்.

நாம் உலக அழுத்தத்தால் மனமுடைந்து நலமற்றவர்களாக உணரும் போது ஆண்டவரே நமக்கு நலம் தருகிறார். நாம் உலகு சார்ந்து நம் வாழ்வில் நலத்தை எதிர்பார்த்தாலும் கடவுள் நமக்குத் தரும் நலமே முக்கியமானது. எனவே நம் சூழல்களை, சூழல் சார்ந்த அழுத்தங்களை ஆண்டவரிடம் தெரிவிக்கவேண்டும். ஆண்டவரிடம் நாம் தெரிவிக்கும் போது அவரே நலமற்ற நம்முடைய வாழ்வில் ஆறுதலையும், அமைதியையும் தந்து நலத்தைத் தருகிறார்.

**திரு. D. டாஃபின் பெனியேல்**

# பொறுப்பாண்மை: வெளிப்படைத்தன்மையும் கணக்கொப்புவித்தலும்

## Stewardship : Transparency and Accountability

விப. 36: 2-7 பிலி. 4: 10-20

திப. 116: 12-19 லூக். 19: 11-27

அதற்கு அவர் இவரிடம், "நன்று, நல்ல பணியாளரே, மிகச் சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே, பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்" என்றார் (லூக். 19: 17).

தமிழக முன்னாள் முதல்வர் காமராஜர் பள்ளிக்கூட மாணவராயிருந்த போது பொங்கல் பண்டிகை கொண்டாட அனைத்து மாணவர்களும் அவரவர் பங்காக 13 அணா விகிதம் வகுப்பு ஆசிரியரிடம் கொடுத்தனர். முடிவில் வகுப்பு மாணவர்கள் வரிசையாக நின்று அவரவர் பங்கு சுண்டலை வாங்கிச் செல்லவே, வரிசையில் கடைசியில் நின்ற காமராஜருக்குச் சுண்டல் கொஞ்சமாகக் கிடைத்தது. அதை அவரது அம்மாவிடம் கொடுத்ததும் இவ்வளவு குறைவாக இருக்கின்றதே எனக் கேட்டார். அதற்குக் காமராஜர், அனைத்து மாணவர்களிடமிருந்தும் சமமாக காசு பெற்றுக்கொண்ட வகுப்பாசிரியர் அனைவருக்கும் சமமாக பிரித்துக் கொடுத்திருக்கவேண்டும். அந்தப் பொறுப்பை அவர் தவறவிட்டதால் தான் இப்படி குறைவாகக் கிடைத்தது என்றார்.

ஒருவருக்குத் தரப்படும் பொறுப்பைக் குறையின்றிச் செய்து நிறைவேற்றிப் பிறரிடம் பாராட்டுபெறுவது பொறுப்புணர்வு. கிடைக்கும் வளங்களைத் தேவையறிந்து பயன்படுத்துவதும் கண்முன் இருக்கும் கடமையினை முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்துவதும் பொறுப்புணர்வின் வெளியீடுகள் எனலாம். நமக்குக் கிடைக்கப்பெறும் பணிவிடையை, கடமையுணர்வை, பயன்பாட்டுணர்வை, பாதுகாப்புணர்வைத் தான் பொறுப்பாண்மை (Stewardship) என்கிறோம். இவண் தரப்பட்ட மறைப்பாடங்களின் அடிப்படையில் எவை எவைகளில் பொறுப்பாண்மையைச் சிறப்புடன் செயல்படுத்துவது என்பதை அறிய முற்படலாம்.

**1. உடைமையைக் கொடுப்பதில் பொறுப்பாண்மை**
(Responsibility in Giving Possession)

மோசேயை நோக்கி, "மக்கள் கொண்டு வருவது ஆண்டவர் கட்டளையிட்ட வேலைக்கு அதிகமாகவே உள்ளது" என்று அறிவித்தனர் (வி.ப. 36: 5).

எதையும் பதிலுக்கு எதிர்பார்க்காமல், இருப்பதைப் பிறருக்குப் பகிர்வதுதான் கொடுத்தல், இறைவன் நமக்கு ஈவாகத் தரும் திறமைகள், பொருட்கள், செல்வங்கள் மற்றும் இதர வளங்கள் அனைத்தையும் உரிய நேரத்தில் கொடையாகக் கொடுப்பது என்பதே கொடுத்தலாகும். இதற்கு எடுத்துக்காட்டாக இஸ்ரவேல் மக்களும் தாங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தங்கள் வளங்களில், குறிப்பாக காப்புகள், காதணிகள், மோதிரங்கள், நீலம், கருஞ்சிவப்பு மற்றும் சிகப்பு நிறத்திலான நூல், மெல்லிய நார்ப்பட்டு, வெள்ளாட்டு உரோமம், ஆட்டுக்கிடாய் தோல்கள் (விப. 35: 22, 23) போன்றவற்றைக் கடவுள் வெளிப்படையாக விரும்பி மோசேயிடம் கட்டச்சொன்ன சந்திப்புக் கூடார வேலைக்காய் காணிக்கையாகக் கொண்டு வந்தனர். தூயக வேலையில் ஈடுபட்டிருந்த கலைஞர்கள் மோசேயிடம் சென்று மக்கள் கொண்டு வரும் காணிக்கைகள் அதிகமாகவே உள்ளன என்று அறிவித்தனர். மோசே காணிக்கை கொண்டு வருபவர்களிடம் இனிமேல் காணிக்கை கொண்டு வரவேண்டாம் எனக் கூறினார். (விப. 36: 5, 6). காணிக்கை கொடுப்பது போதும் எனக் கூறும் ஒரே பகுதி இதுதான். இஸ்ரயேலர் தங்கள் வளங்களில் பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாக ஆண்டவருக்குக் கொடுக்கவேண்டும் (லேவி. 27: 30-32) என்ற மறைக்கட்டளையையும் தாண்டி வெளிப்படையாக, உற்சாகமாக, உள்ளன்போடு, முகவாடலின்றி கடவுள் பணிக்குத் தங்கள் உடைமைகளைக் கொடுப்பதை இப்பகுதி கூறுகின்றது.

கணக்குப்பார்க்காமல் கொடுப்பதால் குறைந்துவிடாது. கொடுப்பதில் நிபந்தனையும் இருத்தல் கூடாது. பத்து ரூபாய் கொடுத்தால் நூறு ரூபாய் திருப்பிக் கிடைக்கும் என்ற எண்ணத்தோடும் முதலில் என்னை ஆசீர்வதிக்கட்டும் பின்னர் நான் கொடுக்கிறேன் என்ற சிந்தையோடும் கொடுத்தலாகாது. இப்படிக் கொடுப்பதும் பொறுப்பாண்மையின் சிறந்த படிநிலை எனலாம். காரணம் நம்முடைய ஈகை கடவுளுக்குப் பிரியமானது (2 கொரி. 9: 7). வெளிப்படைத் தன்மையோடு கடவுள் பணிக்குக் கொடுப்பதும் கணக்கொப்புவித்தலின் அடிப்படைக் கூறு என்பதில் ஐயமில்லை.

**2. உதவி செய்வதில் பொறுப்பாண்மை**
(Responsibility in Helping)

"நான்பட்ட துன்பத்தில் நீங்கள் பங்குகொண்டது உங்கள் நன்மனத்தைக் காட்டுகின்றது" (பிலி. 4: 6)

இடர்படும் ஒருவருக்கு இன்னொருவர் தானாக முன் வந்து நன்மை செய்தலே உதவி. மானுட மனதுக்கு மகிழ்ச்சியூட்டும் செயல் என்பது நலிந்தோருக்கு உதவுவதும் வேதனையிலிருப்போரின் வேதனையைத் தணிப்பதுமாகும். "உதவாமல் இருந்து துருப்பிடித்து அழிவதைவிட உதவுதல் வழியாக தேய்ந்து அழிவது சிறந்தது", என ரிச்சர்ட் கம்பர்டேண்ட் கூறுகிறார். "வாழ்க்கை அவரவர் வாழ்வதற்கு மட்டும் என்று கருதாமல் அது, மற்றவர்கள் நலனுக்கும் வேண்டும் எனக் கருதவேண்டும்," என்று ஈ.வே.ரா. பெரியார் குறிப்பிட்டார். "அதிகமாக நேசிப்பவன் அதிகமாக உதவி செய்வான்" என அக்கம்பிஸ் என்பவர் சொல்லுகிறார். பண உதவி செய்து பிறரைக் கைதூக்கிவிடுவது பெரிய செயல் என்றால் அதைவிட பெரிய செயல் என்பது பிறரது துன்பத்தில் நேரடியாக பங்கேற்பதாகும். இன்றுக்கொடுக்கப்பட்ட திருமுகப்பகுதியில் தூய பவுல் துன்பப்பட்ட நேரத்தில் பிலிப்பிய நகர கிறிஸ்தவர்கள் கனிந்த உள்ளத்துடன் (பிலி. 4: 15) உதவியிருக்கின்றனர். பவுலார் துன்பப்பட்ட நேரத்தில் பிலிப்பியர் பவுலாருக்குக் கொடுத்தனுப்பிய பணம், பொருட்கள் போன்றவற்றைவிட அவற்றைக் கொடுக்க முன்வந்த தாராள மனதை பவுலார் பாராட்டுகிறார் (பிலி. 4: 18). உதவி செய்வதைவிட பிறரொருவரின் தேவையில் உதவுவது மனிதர்களின் தலையாய பொறுப்பாண்மை என்பதை இதன்மூலம் புரியலாம்.

கொரோனாவின் தாக்கம் உச்சத்தில் இருந்த நேரத்தில் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த போலீஸ்காவலர் ஒருவர் 72 வயது முதியவரை மலைப்பகுதியில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக முதுகில் சுமந்து சென்று தடுப்பூசி செலுத்தச் சென்ற காட்சி செய்தித்தாளில் வந்ததை நாம் படித்திருப்போம். எந்த எதிர்பார்ப்புமில்லாமல் உதவிசெய்யும் வணக்கத்துக்குரிய மனிதர்கள் நம்மைச் சுற்றி இருக்கத்தான் செய்கின்றனர். "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, மாறாக உன் உதவியால் மற்றவர் மனதில் நீ வாழும் வரை", என அன்னைத் தெரசா மொழிந்தார். இப்புகழ்மொழிக்கேற்ப வெறுமையும் வறுமையும் பவுலாரை நெருங்கிய நேரத்தில் பிலிப்பியர் செய்த உதவியால் பெற்ற பாராட்டைப்போல் நாம் உதவி செய்து பரமபாராட்டைப் பெறுவோம்.

### 3. உழைத்து உயர்வதில் பொறுப்பாண்மை (Responsibility in working)

முதலாம் பணியாளர் வந்து, ஐயா, உமது மினாவைக் கொண்டு பத்து மினாக்களைச் சேர்த்துள்ளேன் என்றார் (லூக். 19: 16).

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இளைஞன் குறைந்தது மாதம் ரூ. 20,000 ஊதியம் கிடைக்கும் வேலையில் சேரமுடியும். ஆனால், இப்போது மாதம்

ரூ. 8,000 ஊதியம் கிடைக்கும் வேலையைப் பெறுவதே கடினமாக மாறியிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இன்றைய உலகம் சிக்கியிருக்கின்றது. இந்நிலையில் சீனநாட்டைச் சேர்ந்த லுவோ ஹீயெஷாங் என்ற 31 வயது இளைஞன் தனது வலைதளத்தில் "சும்மா படுத்திருப்பதே நீதி" (lying flat is Justice) என்ற பதிவில் "கடந்த இரண்டு வருடங்களாக நான் எந்த வேலையிலும் இல்லை. அங்குமிங்குமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். சும்மா படுத்திருப்பதுதான் என்னுடைய தத்துவம். கிடைக்கும் வேலையில் வரும் சிறிய வருமானத்தைவைத்து என்னைக் கவனிக்கிறேன். நான் திருமணம் செய்யவில்லை. எனக்குத் தனிப்பட்ட வீடுமில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். இப்படி இளைஞர்கள் சும்மா படுத்திருப்பதால் சீனப்பொருளாதாரத்தில் தடுமாற்றம் கண்டுவருவதாக பத்திரிகை குறிப்பிடுகிறது.

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும் இப்படி உழைக்க மனதில்லாமல் சும்மா சுற்றிதிரிந்தவர்கள் இருந்ததாக இன்றைய நற்செய்திப் பகுதி பறைசாற்றுகின்றது. இப்படி உழைக்காமல் சுற்றும் சோம்பேறிகள் உழைத்து உயரவேண்டும் என்பதற்காகவே இந்த உவமையைக் குறிப்பிட்டுள்ளார். நற்செய்திப் பாடத்தில் குறிப்பிட்டுள்ள "றாத்தல்" என்ற சொல்லுக்கு "மினா" என்ற பெயர் விவிலியத்தில் இடம்பெற்றிருக்கிறது. உயர்குடி மக்களிடமிருந்து மினாக்களைப் பெற்றவர்களில் முதலாம் நபர் மேலும் பத்து மினாக்களையும் இரண்டாவது நபர் மேலும் ஐந்து மினாக்களையும் சம்பாதித்து உயர்குடிமகனிடம் கொண்டுவந்தனர். அதே நேரம் மூன்றாவது நபர் கிடைத்த மினாவை தன் கைக்குட்டையில் முடித்து வைத்து தான் உழைத்து சம்பாதிக்கத் தவறியதற்கான காரணம், கொடுத்தவர்தான் எனக் குற்றப்படுத்துகின்றார். ஒருவருக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை நன்முறையில் பயன்படுத்தி உழைப்பால் உயர்ந்தால் வளம் சேர்ந்துகொண்டேயிருக்கும். முதலாம் நபர் அப்படிச் செயல்பட்டதால் உழைக்காமல் திரும்ப கொண்டு வந்த மூன்றாம் நபரின் மினாவையும் சேர்த்துக்கொண்டார். (லூக். 19: 24). "உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும்" (மத். 25: 29) என்ற மறைவாக்கின்படி வாழ்க்கையில் முன்னேற ஆர்வத்தோடு உழைப்பவர் உள்ளவராகவும் முன்னேற எந்த ஆர்வமின்றி சோம்பேறிகளாகச் சுற்றித் திரிபவர்கள் இல்லாதவர்களாகவும் இருப்பதை இந்த உவமை நமக்கு உணர்த்துகின்றது. முயற்சியும் உழைப்பும் இல்லாத மனிதனுக்கு வாழ்க்கையும் இல்லை வளர்ச்சியும் இல்லை. "உனக்கு வேண்டிய உணவை உன் வியர்வையில் தேடு" என விவிலியம் கூறுகிறது. ஒருவரின் உயர்விற்கும் புகழுக்கும் பின்னால் இருப்பது அவரது உழைப்புதான்.

அமெரிக்க கோடீஸ்வரர் ராக்பெல்லர் தினம் இரண்டு ரூபாய் கூலியில் தான் தன் வேலையைத் தொடங்கினார். “என் மகன் வெற்றிபெற ஏதாவது ஒரு தத்துவத்தைக் கூறுங்கள்,” என தாமஸ் ஆல்வா எடிசனிடம் கேட்ட தாயாரிடம் கடிகாரத்தைப் பாராமல் உழைக்க உன் மகனிடம் சொல்” எனக் கூறினார். “பிறரைச் சுரண்டி ஒரு கோடி சம்பாதிப்பதைவிட நிலத்தில் உழைப்பால் பரண்டி சம்பாதிக்கும் ஒரு ரூபாயே மேல்” என ஆன்றோர் கூறுவர். கடவுள் நமக்கு ஈவாக தரும் திறன்களைப் பொறுப்பாகப் பயன்படுத்தினால் நம் இருப்பில் உயர்வும், இறைபார்வையில் பாராட்டும் கிடைக்கும்.

கடவுள் நமக்குத் தரும் வாய்ப்புகளைப் பொறுப்போடு வெளிப்படையாக கணக்கொப்புவிக்க நம் உடைமைகளைக் கொடுப்போம் உதவி செய்து வாழ்வோம்! உற்சாகமாய் உழைத்து உயர்வோம்! கடவுளின் ஆசி எப்போதும் நம்மில் தங்கும்!

அருள்திரு. அறிவர். **S. வில்சன்**

# இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும்

## Theological Education : Knowing and Doing Faith

| | |
|---|---|
| வி.ப. 3: 1-12 | 2 திமொ. 2: 1-13 |
| திபா. 111 | யோவா. 12: 20-26 |

இறைவனை அறிகின்ற அறிவே உயர்ந்த கல்வி (The greatest education is the knowledge of God) என்பது கானாவைச் சார்ந்த எழுத்தாளர் லைலா கிஃப்றி அகிதா கூறிய பொருள் பொதிந்த கூற்று ஆகும். விண்வெளி போன்ற படைப்புகளைப் புரிந்துகொள்ள மனிதர் தடுமாறுகின்ற நிலையில், அனைத்தையும் படைத்த கடவுளை அறிந்துக்கொள்வது மிகப் பெரும் சவால் எனலாம். கடவுளை ஆய்வகத்தில் வைத்து ஆய்ந்து அறிந்துகொள்ள இயலாது. மாறாக, கடவுள் தாமாகவே முன் வந்து தம்மை வெளிப்படுத்துவதின் வழியாக அவரை அறிந்துக்கொள்கிறோம். இயற்கை, இறைவார்த்தை, வரலாற்று நிகழ்வுகள், கிறிஸ்துவின் மனுவுருவேற்பு போன்றவை வழியாக கடவுளைப் புரிந்துக்கொள்கிறோம். கிறிஸ்து தமது திருவுதிரம் வழியாக மீட்டுக்கொண்ட திருச்சபை மற்றும் திருப்பணிகள் வழியாகவும் நாம் கடவுளை அறிந்துகொள்கிறோம்.

இறைவரையும், இறைவார்த்தையையும், இறைப்பணியினையும், இறைச் செயல்பாட்டினையும் முறையாகக் கற்றுத் தற்கால உலகில் எழுகின்ற சவால்களுக்குப் பதிலுரைப்பது இறையியல் கல்வியின் நோக்கமாகும். இறையியல் கல்வி என்பது வெறுமனே அறிவைக் குவிப்பது மட்டுமன்று, மாறாக இறைவருக்கும் இறைமக்களுக்கும் உண்மையான தொண்டாற்றுதலுக்கேற்ப இதயத்தையும் மனதையும் வடிவமைப்பது என்கிறார், திமோத்தி டென்னேர (Theological Education is not just about accumulating knowledge, it is about shaping hearts and minds for faithful service to God and God's people). இறையியல் கல்வி வழியாக எப்படி நம்பிக்கையை அறிந்து செயல்படுத்தலாம் என்பதைத் தரப்பெற்றுள்ள திருமறைப் பாடங்கள் வழியாகத் தியானம் செய்யலாம்.

**1. இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் விடுதலைப்பணி செய்தலும்** (விப. 3:1-12)

விடுதலைப்பயணம் நூலின் மூன்றாம் அதிகாரம், கடவுள் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தியதைக் குறிப்பிடுவதோடு, விடுதலைப்பணிக்கான

அழைப்பை அழகுறத் தெளிவுபடுத்துகிறது. மோசே இந்த அழைப்பினைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், அவரது முழு கவனமும் தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதாகும். எரிகின்ற முட்செடியில் இறைக்காட்சியைக் கண்டு, இறைச்சத்தம் கேட்டு அழைப்பைப் பெற்றுக்கொள்கிறார். அநியாயமாய் அடிமைப்படுத்தப்பட்டுத் துன்புறும் இஸ்ரவேல் மக்கள் விடுதலை பெற வேண்டும் என்பதே இந்த அழைப்பின் நோக்கமாகும். "துன்பத்தைக் கண்டேன்", "கூக்குரலைக் கேட்டேன்", "துயரங்களை அறிவேன்", "விடுதலையாக்க இறங்கினேன்" என்பன போன்ற சொற்றொடர்கள் கடவுளின் தன்மையைப் புரிந்துக்கொள்ள உதவியாக உள்ளன. ஒடுக்கப்படுகின்ற மற்றும் ஓரங்கட்டப்படுகின்ற மக்களோடு கடவுள் எப்படி தம்மை இணைத்துக் கொள்கிறார் என்பதை இப்பகுதி வெளிப்படுத்துகிறது. ஆகவே தான் விடுதலை இறையியல்களுக்கு அடித்தளமாக இப்பகுதி அமைந்துள்ளது. 1969 ஆம் ஆண்டு பெரு நாட்டு இறையியலாளர் குஸ்டாவோ குற்றியரஸ் இப்பகுதியை மையமாக வைத்து விடுதலை இறையியலை உருவாக்கினார்.

இறையியல் கல்வியின் முக்கியமானதோர் கோட்பாடு, "கேள்விகளை எழுப்பி விடை காண்பதாகும்". கடவுளுக்கும், மோசேக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலிலும் மோசே பல கேள்விகளை எழுப்புகின்றார். "நான் யார்", "உம் பெயர் என்ன?" என்பன போன்ற கேள்விகள் தன் இயலாமையை உணரவும், கடவுளின் வியத்தகு இயல்புகளை உணரவும் உதவின. இதன் விளைவாக, மோசே கடவுளில் நம்பிக்கைக் கொண்டு, விடுதலைப் பணி செய்ய தன் வாழ்வை ஒப்படைத்தார். மக்களின் துன்பத்தில் கடவுளும் பங்குபெறுகிறார் என்ற நம்பிக்கையும், அவர்களின் நல்வாழ்விற்காக விடுதலைப் பணி செய்ய ஒப்படைப்புள்ளோரைத் தேடுகிறார் என்பதும் இந்த நிகழ்வு வழியாக வெளிப்படும் இறையியல் தெளிவுகள் எனலாம். இறை அறிவு மற்றும் இறை நம்பிக்கை எப்படி மோசேயை விடுதலைப் பணி செய்ய அழைத்ததோ, அது போன்றே இறையியல் கல்வியும் விடுதலைப் பணி செய்ய ஒவ்வொருவரையும் தூண்ட வேண்டும். புருக்மேன், "எந்த அடிமையின் வேதனையும் கடவுளின் அனுதாபத்தைத் தூண்டும், அந்த அடிமை உடன்படிக்கை சமூகத்தைச் சார்ந்தவராக இருக்கவேண்டும் என்றில்லை" என்று குறிப்பிடுகின்றார்.

**2. இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் நெறியுள்ளோராய் வாழ்தலும்** (2 திமொ. 2: 1-3)

பவுல் தன் உடன்பணியாளராகிய திமொத்தேயுவுக்கு நல்ல நெறியுள்ள வாழ்வு வாழ்வதற்கான அறிவுரைகளை வழங்குகின்றார். இறை நம்பிக்கை உடையவராக இறைப்பணி செய்கிறவர்களிடத்தில் இருக்க வேண்டிய பண்புகளை "நல்ல படைவீரன்" (வ. 3), "விளையாட்டு வீரர்" (வ. 5) மற்றும்

“நிலத்தில் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்” (வ. 6) ஆகிய உருவகங்கள் வழியாக விளக்குகிறார். ஆயுதம் மற்றும் படைவீரன் உருவகங்கள் பவுலடியாரின் பல மடல்களில் வெளிப்படுவது உண்டு. (உரோ. 6 : 13, 7 : 23; 1 கொரி. 9 : 7; 2 கொரி. 6 : 7; எபே. 6 : 11-18). இங்கு இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல படைவீரர்களாகத் தொண்டாற்ற வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். பொதுவாக படைவீரர்கள் அச்சத்தைக் களைந்து துணிச்சலுடன் செயல்படுபவர்கள், சுயக்கட்டுப்பாடுடன் வாழ்பவர்கள், ஆபத்தான சூழ்நிலையிலும் திறப்பில் நின்று தன் உயிரைப் பணையம் வைத்து பிறரைக் காப்பாற்றுபவர்கள். விளையாட்டு வீரரும் அவ்வண்ணமே நெறியுள்ள வாழ்வு வாழ அழைக்கப்பெற்றவர். நெறியற்ற வாழ்வு குறிக்கோளை அடைய தடையாக அமைந்துவிடும். பந்தய சாலையில் ஓடுவதைக் குறித்து பவுலடியார் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். எந்த விளையாட்டில் ஈடுபட்டாலும் விளையாட்டு ஒழுங்கின்படி ஈடுபட்டால் மட்டுமே பதக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் இல்லையெனில் தகுதி நீக்கம் செய்யப்பட்டு விடுவர்.

அமெரிக்க நாட்டைச் சார்ந்த ஓட்டப் பந்தய வீராங்கனை மரியன் ஜோன்ஸ் 2000 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் ஐந்து பதக்கங்களை வென்றார். அவருடைய சாதனையைப் பார்த்து உலகமே வியந்தது. ஆனால் 2007 ஆம் ஆண்டில் அவரைப் பரிசோதித்த போது தடைச்செய்யப்பட்ட ஊக்கமருந்தினைப் பயன்படுத்தியதைக் கண்டுபிடித்தனர். அவரிடமிருந்து அனைத்துப் பதக்கங்களும் திரும்பப் பெறப்பட்டன. அது அவருக்கும் அவருடைய நாட்டிற்கும் தலைகுனிவை ஏற்படுத்தியது. அவரிடம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை மற்றும் இலட்சியம் இருந்தன. ஆனால் சட்டத்திற்கு மாறாக அதைப் பெற முற்படுகின்ற போது அது தோல்வியில் தான் முடிவுறுகிறது.

அடுத்ததாக நிலத்தில் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளரை உருவகப்படுத்துகின்றார். இறைப்பணியாளர் கடினமாக உழைப்பவராகத் திகழ வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். சூழ்நிலைகளைக் காரணம் காட்டி ஒதுங்காதபடி நம்பிக்கையுடன் முயற்சி செய்தலே நல்ல பலனைத் தரும். ஆகவே, ஓர் படை வீரரைப் போன்றும், விளையாட்டு வீரரைப் போன்றும், விவசாயியைப் போன்றும் கடினமாக உழைத்து, சட்டத்தின்படி வாழ்ந்து துணிவுடனும் கட்டுப்பாட்டுனும் கிறிஸ்துவுக்குப் பணி செய்கின்ற இறைப்பணியாளர்களை உருவாக்குவது இறையியல் கல்வியின் நோக்கமாகும்.

**3. இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் இயேசுவின் தொண்டனாய் வாழ்தலும்** (யோவா. 12 : 20-26)

இன்றைய நற்செய்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது, இயேசுவைக் காண கிரேக்கர் வருகை தந்தபோது இயேசு கிறிஸ்து ஆற்றிய உரை ஆகும்.

இப்பகுதியானது எருசலேமை நோக்கிய வெற்றிப் பவனிக்கு பின்னர் வருகின்றது. எருசலேமில் வந்து கோவிலில் சீர்திருத்தத்தை ஏற்படுத்திக் கூறிய, "அனைவருக்குமான இறைவேண்டல் இல்லம்" என்ற கூற்று யூதரல்லாத பிற மக்களுக்கு இயேசுவின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும். மரித்துப் போன லாசருவை உயிரோடு எழுப்பிய, பிரிவினையை அகற்றி ஆலயம் அனைவருக்குமான இடம் என உரக்கக் கூறிய இயேசுவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கிரேக்கருக்கும் ஏற்பட்டது. கிரேக்கர் இயேசுவைக் காண வருகின்றனர் என்ற செய்தியை பிலிப்புவும், அந்திரேயாவும் இயேசுவுக்கு அறிவித்தவுடன், மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறினார். அப்படியெனில், யூதரல்லாதோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நேரத்தில், தம் பணியில் முழுமை அடைந்ததாக உணர்கின்றார்.

அதனைத் தொடர்ந்துதான் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை கொள்ளும் அவருடைய தொண்டனிடத்தில் இருக்கவேண்டிய தகவுகளை விளக்குகின்றார். நற்செய்தியின் நிமித்தமாக வாய்மைக்குச் சான்றாளர்களாக நீதிக்குக் குரல் கொடுத்தால் பாடுகள் உண்டு என்பதை அறிந்து வாழ்வைக் காத்துக்கொள்ள பின்வாங்கிவிட்டால் நம் வாழ்வை இழந்துவிடுவோம். மாறாக, நாம் கற்றிருக்கும் இறையியலுக்குச் சான்றாளர்களாய் வாழ்ந்து, பாடுகளை ஏற்க முன்வருகின்றபோது, மரிக்க நேரிட்டாலும் நாம் நிலைவாழ்விற்கு உரியவர்களாவோம். இதனை இயேசு கோதுமை மணி உருவகம் வழியாக விளக்குகிறார். இக்கருத்தை ஏனைய நற்செய்தி நூலாசிரியர்களும் விளக்குகின்றனர். (மத். 10:39, மாற். 8:35, லூக். 9:24) பிறர் வாழ்வு பெற தம் இன்னுயிரைத் தியாகம் செய்ததைப் போன்று தம்மைப் பின்பற்றும் சீடர்களும் செயல்பட வேண்டும் என இயேசு கற்பிக்கின்றார். இந்த சிந்தனையைத் தான் அறிவர். தாமஸ் தங்கராஜ் அவர்கள் பாடல் வரிகளில் எழுதியுள்ளார்.

"பிறர் வாழ வேண்டுமெனில் நான்  சாக வேண்டும்
நான் சாக வேண்டுமெனில் அவர் வாழ வேண்டும்
எனில் இயேசு தினம் வாழ வேண்டும்"

இயேசுவின் சீடர்கள் இதனை அறைகூவலாக ஏற்று உலகின் பல பகுதிகளுக்கும் கடந்து சென்று கோதுமை மணிகளாய் நிலத்தில் மடிந்தனர். தங்களை இழந்து பிறர் வாழ வழி வகுக்கின்ற சீடர்களை உருவாக்குவது இறையியல் கல்வியின் நோக்கமாக அமைதல் வேண்டும்.

இறையியல் கல்வி வழியாக இறைநம்பிக்கையை அறிந்துணர்கின்றபோது, விடுதலைப்பணி செய்ய உந்துதல் வழங்குவதோடு, நெறியுள்ள வாழ்வு வாழவும், இயேசுவின் தொண்டர்களாய் வாழவும் நம்மை வழிநடத்துகின்றது.

அருள்திரு. **T. ஜெபின்**

## 21.07.2024

# அருட்பொழிவுத் திருப்பணி: கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பெற்றது

## Ordained Ministry : Marked by the Wounds of Christ

I சாமு. 22:12-23 கலா. 6:11-18

திபா. : 56 யோவா. 21:15-19

.....ஏனெனில் என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம் (கலா. 6: 17).

அடையாளமாவதும் அடையாளப்படுத்துவதும் இன்றைய காலகட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அடையாளக்குறைவு இன்று பல காரியங்களில் மனிதர்களைச் சமய சமூக ஆன்மீகக் காரியங்களில் நிலைநிறுத்துவதில் கடினப்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது. (Identity Crisis that prevails among the Human for Identifying himself / herself for being a better person in the cmmunity (tattooing) life.) தற்காலச் சூழலில் பச்சைகுத்தும் கலாச்சாரம் பெருகித் தனக்குப் பிரியமானவர்களை உடம்பில் குத்தி வரைந்து காட்டும் நிலைமை வளர்ந்து வருகிறது. பச்சைக் குத்துதலைத் திருமறை ஏற்றுக்கொள்வதில்லை (லேவி 19:28) இயேசு கிறிஸ்துவின் உண்மையான அடையாளங்களைச் சுமந்து வாழ்வதில் குறைவையும் பின்னடைவையும் ஏற்படுத்தி உள்ளது. அடையாளங்களுக்குப் பஞ்சமில்லை ஆனால் உண்மையான அடையாளங்களை உடலில் ஏற்றுக்கொண்டும் சுமந்தும் அடையாளப்படுத்தியும் வாழ முடியுமா? என்பது தான் கேள்வியாக கேட்கப்பட வேண்டும். யூத சமயத்தில் அடையாளமாக விருத்தசேதனம் (கலா. 2:4, 3:1), கிறிஸ்தவத்தின் அடையாளமாக சிலுவை (Cross), திருச்சபையின் விசுவாசி என்பதற்கு திருமுழுக்கு, திடப்படுத்தல் இவைகளை அடையாளமாகக் கொண்டு முன்செல்வதைவிட சிறப்பானது உடலில் தழும்புகளை இயேசுவுக்காகக் கொண்டிருத்தலாகும். இது தனிப்பட்ட நபரை ஆண்டவருக்கு அடிமையாக அடையாளப்படுத்துகிறது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் அருட்பொழிவு பெற்றவர்கள் கடவுளின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டு கடவுளுக்கு அடிமையின் அடையாளங்களாக செயல்பட்டார்கள். ( I சாமு. 22:12-23) சொல் அடையாளம் மற்றும் செயல் அடையாளம் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட இவர்களை ஆன்மீகம் மற்றும் சமூக உயர்வின் அடையாளங்களாகக் காட்டியுள்ளது. இயேசு தமது உடலில் தந்தையின் அடிமையாக ஐந்து காயங்களை அடையாளமாக

ஏற்றுக்கொண்டார். பவுலார், விருத்தசேதனமும் பேசப்படும் வார்த்தைகளும் அடையாளமாவதில்லை, மாறாக உடலில் காணப்படும் தழும்புகள் அடையாளமாக அறியப்படுகிறது என்பதை வலியுறுத்துகிறார் (II கொரி. 11:23-28). ஆகவே காயங்கள்/ தழும்புகள் அடையாளமாக அறியப்படவேண்டும் என்றால் அந்த நபர் கிறிஸ்துவின் அடிமையாக மாற்றம் பெறவேண்டும். (not only the scars make the individual for identity but become appointed to the slave for Christ).

உடலில் தழும்புகளை ஏற்ற அடிமைகளுக்கு எத்தகைய அடையாளம் அவசியமாகிறது என்பதை யோவான் 21:15-19 மையமாக கொண்டு பின்வரும் சிந்தனைகளைக் கற்றுக்கொள்வோம்.

பேதுரு அழைப்பு பெற்றபோது பெற்றோர் / உறவினர் வைத்த பெயர் மாற்றம் பெறுகிறது. இப்போது "கேபா" என்று குறிப்பிடுகிறார். அதன் பொருள் பாறை (Rock) என்பதாகும் (யோவா. 1: 42). இந்தப் பாறை மீது என் சபை கட்டப்படும். (மத். 16:18). சீமோன் என்றால் அதன் பொருள் "மணல்" (Sand) மணல் கட்டுமானத்திற்கு உறுதியாய் இருப்பதில்லை அதற்குப் பல கலவைகள் தேவைப்படுகிறது. ஆகவே திருச்சபை கட்டுமானத்திற்குக் கலவையில்லாமல் "பாறையாகிய" உன்னைப் பயன்படுத்துகிறேன் என்று குறிப்பிடுகிறார்.

இந்தியாவிற்கு வந்து இறைத்தொண்டு செய்து மக்கள் மனதில் இடம் பிடித்த "தெரசா" - "அன்னைத் தெரசாவாகவும்", நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, "தேசத் தந்தை" எனவும் பெயர் அடையாளம் தரப்பட்டது. திருமறையிலும் ஆபிரகாம் - "விசுவாசிகளின் தந்தை" என்ற சிறப்பு பெயரால் அடையாளப்படுத்தப்படுகிறார். பெயர் அடையாளத்திற்குப் பின்னர் "பேதுரு" எப்போதும் முன்நிலை அடையாளப்படுத்தப்பட்ட அடிமையாக (Identified slave) திருப்பணியில் இயேசுவோடு முன்வருவதையும் இயேசுவின் மரணத்திற்குப் பின்னர் சாதனையாளராக முதல் செய்தியில் 3000-க்கும் மேற்பட்டோர்களை விசுவாசிகளாக மாற்றியதும் குறிப்பிடப்பட வேண்டியவைகள். இயேசுவைக் காட்டிகொடுத்து விலைவாங்கிய யூதாசுக்கு இயேசுவின் உண்மையான விலை தெரியவில்லை ஆகவே அவருக்கு இப்படிப்பட்ட மாற்றுப் பெயர் இயேசுவால் தரப்படவில்லை. மாற்றுப்பெயர் அல்லது அருட்பொழிவு பெற்றவர் நிச்சயமாக அந்தப்பெயரின் பொருள் புரிந்து அர்ப்பணிப்புடன் பணி செய்ய தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் காட்சி வழியாக பேதுருவை பார்த்து இயேசு பேசிய வார்த்தைகள் இந்தத் திருமறை வசனங்களில் வருகின்றன "... நீ என்னில் அன்பாயிருக்கிறாயா..." என்ற அன்பு

கேள்வியும் அன்பு செய்கிறவர்கள் ஆடுகளையும் ஆட்டுகுட்டிகளையும் பேணி வளர்க்க வேண்டும் என்ற அன்புக் கட்டளையும் முதன்மையானவை. (Tend/ feed) சிலுவையில் அறையப்பட்டவுடன், இயேசு மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அன்பில்லாதவனாக மாறியது மட்டுமன்று இவருடன் பயணித்த சீடர்களிடம் “நான் மீன் பிடிக்க போகிறேன்” என்று சொல்லும் நிலைக்கும் சென்றுவிட்டார். ஆகவே இயேசு கிறிஸ்து இவரது அன்பினைச் சோதனை செய்கிறார். மற்ற சீடர்களுக்கு இந்த சோதனை நடத்தப்படவில்லை. பேதுருவோ அன்பில்லாதவராக தனது அடையாளத்தை இழந்தவர். காரணம், இயேசுவை மூன்று முறை மறுதலித்தவர். இந்த உரையாடலில் பேதுரு மிகவும் துயரமடைந்தார்” (grieved) மூன்றாவது என்றதும் பேதுரு மூன்று முறை மறுதலிப்பு நிகழ்வை நினைத்திருக்கக்கூடும். ஆகவே துக்கப்பட்டார். இயேசு மன அடையாளம் (துணிவு) உறுதிபட்டதை உணர்ந்து ஆடு மற்றும் ஆட்டுக்குட்டி இவைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பினைக் கொடுக்கிறார். மறுதலித்த மனம் திடனடைந்தது. மாறுபட்ட நிலைகொண்ட மனம் இயேசுவின் பாதைக்குத் திரும்பியது. ஆகவே மன அடையாளம் இயேசுவின் சீடர்களாக அல்லது பணியாளர்களாக அல்லது அவரின் அடிமைகளாக வாழ்ந்து வருகிறோம் என்பதை வெளிப்படுத்துகிறது அதனுடன் மன அடையாளம் என்பது மனமாற்றத்தின் அடிப்படை தேவையாகவும் பார்க்கப்படுகிறது. இந்த உரையாடலுக்குப் பின்னர் மன உறுதியுடன் தடுமாற்றமில்லாமல், தைரியமாகத் தன்னை இயேசு கிறிஸ்துவால் அடையாளபடுத்தப்பட்ட அடிமையாக தனது நற்செய்தி கடமைகளை செயல்படுத்தினார். மக்களை எச்சரிக்கும் தைரியத்தை இந்த மன அடையாள அனுபவம் பெற்றுத் தந்தது (தி.ப. 2:14-22). மன அடையாளம் மனித மாண்புகளைத் தப்பிதமில்லாமல் நிலைநிறுத்துவதற்கும் உதவி செய்வதற்கும் நம்மை முன் நிறுத்துகிறது. அருட்பொழிவு திருப்பணியில் இணைந்தவர் அனைவரும் மன அடையாள மன உறுதியைச் சமூகத்திற்குத் திருச்சபையின் வழியாக வெளிப்படுத்த தவறாமலிருக்கவேண்டும்.

பேதுருவிடம் உரையாடி காட்சி தந்தவர் மூன்று கேள்விகளைக் கேட்டு பதில் சொன்ன பின்னர் மூன்று முறையும் தனது பணி எதுவாக இருக்கவேண்டும் என்பதை உறுதியாக கூறுகிறார். தொழில்முறை அடையாளம் என்பது “அன்புடன்” அல்லது அன்பை மையப்படுத்த மிகுந்த அக்கறையுடன் செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதும் வலியுறுத்தப்படுகிறது. ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் பேணி, பராமரித்து ஆபத்துக்கள் ஏற்படவிடாமல் கவனமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டிய மிகவும் கடினமான பணி பேதுருவிடம் பணிக்கப்படுகிறது.

எசேக்கியேல் 33:7-ஆம் வசனத்தில் உன்னைக் காவலாளியாக (Watch-man) வைத்தேன் என்பதை உறுதிப்படுத்துகிறார். காயீன் ஆபேல் நிகழ்வில்

நான் என் சகோதரனுக்கு “காவலாளியோ” (தொ.நூ. 4:9) என்று சொல்லப்படும் வார்த்தை. நாம் ஒருவருக்கு ஒருவர் காவலாளியாக வாழவேண்டும் என்பதைக் கடவுள் எதிர்பார்த்து “காயீன்”-ஐத் தேடுவதை உணர முடிகிறது. கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்ட ‘Bosko’ என்னும் சொல்லின் பொருள் ஆங்கிலத்தில் ‘Tend/Feed’ பொருள்படுவதாக உள்ளது. ஆடுகளைப் பேணுவதும் பராமரிப்பதும் முதன்மையான கடமைகளாக உள்ளன. முட்புதரில் சிக்கிவிட்டால் ஓடிச் சென்று தேடிக் கண்டுபிடித்து தோளில் சுமந்து பிற ஆடுகளுடன் சேர்த்து பார்க்கும் பார்வையும் அவசியமாகிறது. (லூக்கா 15:4, 5). பொறுப்பற்ற நிலையில் பணி செய்யாமல் இருப்பது நல்லது. எண்ணிக்கை குறைவுபடாமல் பார்த்துக் கொள்வதும் சாத்தியமாகாத நிலையில் கவனமாய் அருட்பணி செய்து குறைவிற்கான காரணங்களைக் கண்டுபிடித்து பணி செய்தலும் தற்கால சூழலில் அவசியமாகிறது. பாதை மாறியவர்களின் சுமைகளை அறிந்து கடவுள் இஸ்ரவேலர்களைக் கானான் தேசம்; கொண்டு சேர்த்ததையும், நமது அருட்பணி வாழ்வில் கடைபிடித்தல் வேண்டும். ஆகவே தொழில்முறை அல்லது பணி முறை அடையாளங்கள் கடவுள் அருட்தொண்டின் அடிமைகள் என்பதை மக்களுக்கு எப்போதுமே உணர்த்திக்கொண்டே இருந்திடல் வேண்டும்.

உடலில் காணப்படும் தழும்புகள் இயேசுவின் அருட்பணியில் அவருக்கான அடிமைகள் என்பதை அவரது வாழ்வியலின் அனுபவத்தோடும் மறு உருவாக்கத்திற்கென வடிவமைப்போடும் பேதுருவுக்கு உணர்த்தி இதுவரையிலும் உனக்குப் பிடித்ததைச் செய்திருக்கிறாய் இனி நீ போக வேண்டியது உனக்குப் பிடிக்காததாக இருக்ககூடும் அந்த இடத்திற்குச் செல்வதற்கு இத்தகைய அடிமையின் அடையாளம் உதவியாக அமையட்டும் என்று அனுப்புகிறார். ஆகவே பேதுரு தனது அருட்பணியை இயேசு கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட அடிமை என்ற மனநிலையுடன் தைரியமாக செயல்பட்டு இறுதியில் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார். அடையாளத்தை ஏற்று அடையாளப்படுத்தப் பட்டவர்களால் மட்டுமே ஆண்டவர் விரும்பும் அருட்பணியைச் செய்யமுடியும். கடவுளின் உண்மை மதிப்பு அறிந்து செயல்படவும் வழி செய்யும். கடவுள் நம்மை அன்பை முன் நிறுத்திப் பணி செய்ய அருட்பொழிவு செய்திருக்கிறார். அன்னைத் தெரசா அம்மையார் குறிப்படும் போது,

> அன்பை மட்டுமே கடன் கொடுங்கள் அது மட்டுமே
> அதிக வட்டியுடன் திரும்பிக் கிடைக்கும் என்கிறார்.

**அருள்திரு. அறிவர் முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

## 28.07.2024

# திருமணத்தை மதியுங்கள்

## Honour Marriage

மலா. 2: 13-16 1 கொரி. 13: 1-14

திபா. 45 மாற். 10: 2-9

திருமணம் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு அல்ல அது கடவுளால் நியமிக்கப்பட்டது. திருமணம் ஒரு தெய்வீக ஏற்பாடு என்பதை நாம் புரிந்துக் கொள்ளவேண்டும். ஆதியிலே ஏதேனிலே கடவுளே திருமணத்தினை ஏற்படுத்தினார். திருமறை சொல்கிறது, மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் (தொ.நூ. 2: 18) என்றே ஆண்டவராகிய கடவுள் குடும்பத்தை உருவாக்கினார். ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதே திருமணத்தின் அடிப்படை நோக்கம். திருமணம் வாழ்நாள் முற்றும் நிலைத்திருக்க வேண்டிய உறவு நிலை. கடவுள் இணைத்த திருமணத்தைப் பிரிக்க எவருக்கும் அதிகாரமில்லை. திருமணமும் குடும்ப வாழ்வும் தற்காலிகமான நிகழ்வுகள் அல்ல. பரிசோதனைத் திருமணத்திற்குத் திருமறையில் இடமில்லை.

இல்வாழ்க்கையின் அடித்தளம் மெய்யான திருமணமே. ஆகையால் கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும் வாழவேண்டும். மதிப்பாக காக்கப்பட வேண்டிய திருமணம் இன்று அவமதிக்கப்படுகின்ற நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. கனமுள்ளதாய் காக்கப்பட வேண்டிய திருமண வாழ்வு இன்று கனமற்றதாய் மாறிவருவது வேதனை அளிக்கின்றது. திருமண வாழ்வு இன்று எதிர்கொள்ளும் சவால்களை மேற்கொண்டு வெற்றி பெற இறைபெலனும் ஆலோசனையும் அவசியம் தேவை. அமெரிக்காவைச் சார்ந்த Rocket Lab என்ற தனியார் விண்வெளி நிறுவனம் பூமியை நோக்கி விழும் ராக்கெட்டை நடுவானில் ஹெலிகாப்டர் மூலம் மீட்கும் சோதனையை வெற்றிகரமாக நடத்தி சாதனை புரிந்துள்ளது. குடும்பங்களும் திருமண வாழ்விற்கு விரோதமாக எழும்பும் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமானால், திருமணம் குறித்த திருமறையின் சத்தியங்களை அறிந்து அவற்றின்படி நடந்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவக் குடும்பங்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, கிறிஸ்துவிலே அஸ்திபாரமிட்டுக் கட்டப்படவேண்டும். உலகின் உயரமான கட்டடம் என்று சொல்லப்படும் துபாய் தேசத்தின் புர்ஜ் கலீஃபா (Burj Khalifa) 163 மாடிகளைக் கொண்ட உயரமான கட்டடம். அத்துணை உயரமாக அந்த கட்டடம் உயர்ந்து நிற்க 192 குவியல்கள் 50 மீட்டர் ஆழத்தில் புதைந்து நிற்கின்றது. நமது திருமணங்கள் சிதறாமல் சீராய் காக்கப்பட்டு கெம்பீரமாய் எழுந்து நிற்க வேண்டுமானால் திருமறையின் சத்தியங்களில் நங்கூரமிடப்பட வேண்டும்.

கடவுளால் உன்னத நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட திருமணத்தின் மதிப்பு காக்கப்பட வேண்டுமானால் திருமறையின் வெளிச்சத்தில் மூன்று உண்மைகளைக் கற்றுக் கொள்வோம்.

**1. அன்பினால் திருமணத்தை மதியுங்கள்** (Honour Marriage with Love)

அன்பினால் இசைந்து வாழ்ந்து திருமண பந்தத்தை மதித்து வாழ வேண்டும். ". . . புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்" (மாற்கு 10: 7) அன்பினால் கட்டப்பட வேண்டிய திருமண வாழ்வு உலக பொருட்களையும், பணத்தையும், செல்வத்தையும் முதன்மைப்படுத்திக் கட்டப்படுவதால் நிலைத்து நிற்க முடியாமல் தடுமாறுகிறது. இந்தியாவில் மட்டுமே சராசரியாக ஒரு மணி நேரத்துக்கு ஒரு பெண் வரதட்சணைக் கொடுமை காரணமாக உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. திருமண விஷயத்தில் பெண்ணை ஒரு பரிவர்த்தனைப் பொருளாகவே பார்க்கும் சமூக மனப்பாங்கு இந்தியாவில் இன்னும் மாறவில்லை.

அமெரிக்க மிஷனெரியாகவும் இறையியலாளராகவும் ஊழியம் செய்த E. Stanley Jones திருமணத்தைக் குறித்து சொல்லுகையில், "Marriage is over in an hour, and yet it takes a life time to be really married." இந்தக் கூற்று உண்மையானது. தான், திருமணம் ஒரு மணிநேரத்தில் நடந்து முடிந்துவிடும். ஆனால் திருமணத்தின் மேன்மையைப் பெற வாழ்நாள் முழுவதும் பிராயாசப்பட வேண்டும்.

**2. உத்தமத்தினால் திருமணத்தை மதியுங்கள்** (Honour Marriage with Loyalty)

திருமணத்தை அனைவரும் உயர்வாக மதிக்கவும், மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கவும் எபிரேய நிருப ஆக்கியோன் எழுதியுள்ளார். திருமணத்தை அற்பமாய் எண்ணி யோசனையின்றிச் செய்யாமல், கருத்தோடும், ஜெபத்தோடும், திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நோக்கங்களைச் சிந்தித்து அதைச் செய்வது அவசியம். இது ஒவ்வொரு திருமண ஆராதனையிலும் முகவுரையாக சொல்லப்படுகிறது. உத்தமமும் உண்மை நிலையும் இன்றி திருமண பந்தங்கள் மகிழ்வின்றி இருக்கும் நிலை மாற்றம்பெற வேண்டும்.

**3. ஒளிர்வுத்தன்மையுடன் திருமணத்தை மதியுங்கள்** (Honour Marriage with Luminosity)

திருமண வாழ்வு ஒளிர்வு தன்மையுடன் பிரகாசிக்க வேண்டுமானால் இயேசு கிறிஸ்து என்னும் ஒளி நம் வாழ்வை நிரப்ப வேண்டும். செசரியா பட்டணத்தானும் இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாக பணியாற்றிய தேவ பக்தியுள்ள மனுஷன் கொர்நேலியு. இந்தக் குடும்பம் குறித்த அற்புதமான சாட்சி திருத்தூதர் பணிகள் 10: 2-ல் எழுதப்பட்டுள்ளது. "அவர்இறைப்பற்றுள்ளவர் தம் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி

நடத்தவர் . . .” இடைவிடாது கடவுளிடம் மன்றாடி வந்தார். கொர்நேலியுசின் குடும்பம் ஒளிர்வுத்தன்மையுடன் காணப்பட மிக முக்கியமாக அமைந்தது அவரது குடும்பத்தினரின் ஜெப வாழ்வு, அந்தக் குடும்பம் வசனத்தைக் கேட்பதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாய் இருந்ததையும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு திருமுழுக்கு பெற்ற குறிப்புகளும் எழுதப்பட்டுள்ளது. திருப்பாடகர் தாவீது கூறும்போது, “ஆண்டவரது பேரன்போ அவருக்கு அஞ்சுவோர் மீது என்றென்றும் இருக்கும் அவரது நீதியோ அவர்களின் பிள்ளைகளின் மீதும் இருக்கும்.” “ஒளிர்வுத்தன்மை” என்ற பதத்திற்கு ‘Luminosity’ என்ற ஆங்கில பதம் பயன்படுத்தப்படுகிறது. ‘Luminosity’ என்றால் ‘relative brightness of something.’ இயேசு கிறிஸ்துவாகிய ஒளி நம் குடும்பங்களில் பிரகாசித்தால் மட்டுமே திருமணத்தின் மேன்மையை நாம் அனுபவிக்க முடியும்.

இன்று திருமணத்தின் மதிப்பு இழந்துபோனதற்கான அடிப்படை காரணம் இறைப்பற்றோடு, கடவுளுக்கு அஞ்சி நடத்தப்பட வேண்டிய குடும்பங்கள் பயபக்தி இல்லாத அவபக்திக்குரிய காரியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதே. திருமண ஆராதனைகளில் ஏறெடுக்கப்படும் ஜெபம் இவ்வாறு அமைந்துள்ளது. “சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, உம்முடைய உதவியின்றி நாங்கள் யாதொன்றையும் தகுந்த முறையில் செய்ய திராணியற்றவர்கள் . . . உமது பேரருளை இவர்களில் பெருகச் செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம்.” ஆண்டவருடைய உதவியின்றி நாம் எதையும் தகுந்த முறையில் செய்ய முடியாது. எனவே, குடும்ப ஜெபவேளையில் குடும்பமாக நம்மை அவரது பாதத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும். திருமறை படித்தல் கர்த்தருடைய ஆலோசனைக்கு நேராய் நம்மை வழிநடத்தும். இங்கிலாந்து தேசத்தில் 18-ம் நூற்றாண்டில் தேசிய அளவில் எழுப்புதலுக்காய் ஆண்டவரால் பயன்படுத்தப்பட்டவர் ஜாண் வெஸ்லி. ஜாண் வெஸ்லியும் அவரது மனைவி மேரி வெஸ்லியும் தினமும் தங்கள் பிள்ளைகளை அழைத்து பேசி அவர்களுக்காக ஜெபிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். குடும்ப ஜெபமும் இறைபற்றும் குறைந்து போனதே குடும்ப வாழ்வு ஒளிர்வு தன்மையை இழந்து போனதற்கான காரணம்.

அன்போடும், உத்தமத்தோடும், ஒளிர்வுத் தன்மையோடும் திருமணத்தை மதித்துப் பாதுகாக்கவே ஆண்டவர் நம்மை ஏற்படுத்தியுள்ளார். பல சவால்களைச் சந்திக்கும் நமது திருமணத்தை மதித்து ஆண்டவர் பாதம் அர்ப்பணித்து வெற்றியுள்ள குடும்ப வாழ்வைத் தொடருவோம்.

அருள்திரு. P. சேம் பிளசிங்

# விடுவிக்கும் விடுதலையாளர்

விப. 3: 7 - 12

"எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அதாவது கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்." (விப. 3: 8)

அன்னை தெரசா ஒருமுறை தன்னுடன் இருக்கும் சகோதரிகளுடன் ஒரு முதியவர் வீட்டிற்குச் சென்று சில பணிகள் செய்த வேளையில் அந்த வீட்டின் மூலையில் ஒரு பெரிய விளக்கு இருந்ததைக் கண்டார். அதனை யாரும் ஒருநாளும் ஏற்றுவதில்லை. இதனைக் கண்ட அன்னை அந்த மனிதரிடம், "இந்த அருமையான பெரிய விளக்கை ஏற்ற யாருமில்லையா?" என்றதும், "ஒருவருமில்லை" என்று சொன்னார் முதியவர். உடனே அன்னை, "நான் தினமும் ஒரு சகோதரியை அனுப்புகிறேன்" என்றதும் சரி என்றார். இரண்டு வருடம் கடந்து, அந்த முதியவர் அன்னையை சந்தித்து, அம்மா நீங்கள் ஏற்றிய விளக்கு இன்னும் என் வாழ்வில் எரிந்து கொண்டே இருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

விடுதலைப்பயணத்தை வெளிப்படையாக முடுக்கிவிடும் பணிக்கு மோசே உருவாக்கப்படுகிறார். அடிமைத் தனத்திலிருந்து வெளிப்பட்ட அழுகுரல் ஆண்டவர்முன் ஓர் இறைவேண்டலாக அமைகிறது. நாடோடி வாழ்க்கைச் சூழலில், மேய்ப்புத் தொழில் செய்த மூதாதையர், குறிப்பாக யாக்கோபு வாழ்ந்த சூழலில் மோசேயும் வாழ்கிறார். இத்தகைய சாதாரண வாழ்க்கைச் சூழலில் இறைவன் ஓர் அருஞ்செயல் வாயிலாக காட்சி தந்து விடுதலைப் பணிக்கு மோசேயை அழைக்கிறார். ஓர் அருங்காட்சி மூலம் கடவுள் மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தியதும் அவரை விடுதலைப்பணிக்கு அழைத்ததும், இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் பின்னர் விடப்பட்ட அழைப்பிற்கு ஒரு முன்செயலாக அமைந்தது. ஆயினும் விடுதலை வீரராகச் செயல்பட, ஒரு சிறப்பான காட்சி வழியாக, குறிப்பிட்ட சூழலில் மோசே அழைக்கப்பட்டது தனிச்சிறப்புமிக்கது. இந்தப் புதிய மாதத்திலும் விடுவிக்கும் விடுதலையாளர் நம்முடன் இருந்து வழிநடத்தும் நிலைகளைக் குறித்து தியானிப்போம்.

## 1. குரலைக் கேட்டு விடுவிக்கும் விடுதலையாளர்

"அப்போது ஆண்டவர் கூறியது; எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை

என் கண்களால் கண்டேன்; அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன்" (வி.ப. 3: 7).

"என் மக்கள்" என்று ஆண்டவர் இங்கு முதன் முதலாவதாகச் சொல்லிக்காட்டுகிறார். நான் உங்கள் கடவுள், நீங்கள் "என் மக்கள்" என்பதை உடன்படிக்கையின் நிபந்தனை வாசகமாக எபிரேய மறை பலஇடங்களில் குறிப்பிடுகிறது. கடவுளின் அன்பும், அருளும் வலியச்சென்று முந்திச் செயல்படுகிறது. இந்த அரிய உண்மையை வலியுறுத்தும் வண்ணம், கடவுள் உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னரே "என் மக்கள்" என்று எபிரேய அடிமைகளுடன் தம்மைச் சொந்தமாக்கிக் கொள்கிறார். "கண்டேன், கேட்டேன், அறிவேன்" ஆகிய சொற்கள் கடவுள் ஆளியல்பில் ஆழ்ந்து ஈடுபாடு கொண்டு செயல்படுதலைக் குறிக்கும். வி.ப. 3: 9-இல் வரும் "அழுகுரல் என்னை எட்டியுள்ளது". "கொடுமையையும் கண்டுள்ளேன்" ஆகிய சொற்களும் இந்த உண்மையை மேலும் வலியுறுத்துகின்றன. இக்கால சூழலிலும் வேதனையோடும், கண்ணீரோடும், வருத்தத்தோடும் வாழ்க்கின்ற மக்களின் அழுகுரலைக் கேட்கின்ற ஆண்டவர் இந்தப் புதிய மாதத்திலும் நம்மை நடத்துவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து காட்ட வேண்டும். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன் (யோவான் 16: 33) என்ற இறைவார்த்தையைக் கடைப்பிடித்து நம்பிக்கையுடன் நம் வாழ்வின் பயணத்தைத் தொடர்வது சிறப்பானது.

வாழ்க்கை ஒரு பயணம் . . !
நல்லதோ, கெட்டதோ
நகர்ந்து கொண்டே இருங்கள் . . !
இன்பம் வந்தால்
ரசித்துக் கொண்டே செல்லுங்கள் . . !
துன்பம் வந்தால்
கடந்து செல்லுங்கள் . . !

பாடுகளிலும் நம் குரலைக் கேட்டு விடுவிக்கும் விடுதலையாளரைப் பற்றிக் கொண்டு வாழ்வதற்குப் பழகிக் கொள்வோம்.

## 2. குறைவின்றி வழிநடத்தும் விடுதலையாளர்

"அப்போது கடவுள், நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம்

இதுவே என்றுரைத்தார் (வி.ப. 3: 12). "எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும், தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அதாவது கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்" (வி.ப. 3: 8).

அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரயேலர் பாலும், தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அழைத்து செல்லப்பட்டனர். குறைவை நிறைவாக்கி, முழுமையான விடுதலை தந்து விடுவிக்கும் விடுதலையாளராகக் கடவுள் செயல்பட்டார்.

கடவுள் எப்பொழுதும் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், பாதிக்கப்பட்டோர் பக்கம் நின்று செயல்படக்கூடியவர். ஆகவேதான், அவர் இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கிய சட்டத்தில் ஏழைகள், கைம்பெண்கள், அந்நியர்கள் மீதான கரிசனை குறித்த பல சட்டங்களை வகுத்துத் தந்தார். கடவுளுடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவும் பாதிக்கப்பட்டோர் பக்கம் நின்று செயல்பட்டதன் விளைவாகத்தான் அவர் சிலுவைச் சாவையும் ஏற்று வெற்றி சிறந்தார். மத்தேயு 25 : 31-46 வரையுள்ள பகுதியில் இயேசு கிறிஸ்து தம்மை அந்நியராக, பசியுற்றோராக, நோயுற்றோராக அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஆனால் மக்கள் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை (மத். 25: 44) மத்தேயு 25: 37-39-இல் நேர்மையாளர்கள் தாங்கள் செய்த நன்மைகளை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் மீது கொண்டிருந்த அன்பின் அடிப்படையில் அவர்கள் கிறிஸ்துவுக்காகச் செயல்படுகிறார்கள். எனவே நாம் கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம் திருப்பணி செய்ய அழைக்கப்படுகிறோம். ஏனெனில் அவ்வன்பு ஏற்றத்தாழ்வுகளை, ஒடுக்குதல்களை, அடக்குமுறைகளை எதிர்த்து அனைவரையும் இறையரசுக்குள்ளாக உள்ளடக்கும். எனவே, நாமும் இவ்வுலக வாழ்வில் குரலைக்கேட்டு, குறைவின்றி வழிநடத்தும் விடுதலையாளரைப் பற்றிக் கொண்டு, இறைவேண்டல் செய்து, இறைவார்த்தைகளைப் படித்துத் தியானம் செய்வோம். ஆண்டவராகிய கடவுள் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

**திரு. P. சோபால்**

# அருட்பணி: கடவுளின் வேதனையைப் பகிர்தல்

## Mission: Sharing God's Pain

எசா. 6 : 1-8 தி.ப. 9 : 10-18

திபா. 40 : 1-13 லூக். 10 : 1-11

எசா. 6 : 8a "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?"

கடவுளின் மகத்துவத்தைப் படைப்பில் காண்கிறோம். (திபா. 8; யோபு 38) படைத்த யாவையும் நல்லதென்று கண்டார். படைப்பின் மகுடமாக மனுக்குலத்தைப் படைத்து, மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டி படைப்பு யாவற்றையும் பண்படுத்தவும், பாதுகாக்கவும், ஆளுகை செய்யவும் ஏற்படுத்தினார். ஆனால் மனுக்குலம் கடவுளின் எண்ணத்தை நிறைவேற்றாமல் எதிராக செயல்பட்டது. இதனால் வீழ்ச்சியின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. படைக்கப்பட்ட முதல் குடும்பம் ஆதாம் ஏவாள் மட்டுமல்ல தொடர்ச்சியாக இச்செயல் நடைபெறுகிறது. எசாயா 5-ம் அதிகாரத்தில் திராட்சைத் தோட்ட உவமை மூலம் கடவுள் தனது வேதனையைப் பகிர்கிறார். எசா. 5 : 4-ல் "என் திராட்சைத் தோட்டத்திற்குச் செய்யாது நான் விட்டுவிட்டதும் இனிச் செய்யக்கூடியதும் ஏதும் உண்டோ? நற்கனிகளைத் தரும் என்று நான்காத்திருக்க, காட்டுப் பழங்களை அது தந்ததென்ன?" என்கிறார்.

வீழ்ந்து போன மனுக்குலத்தை மீட்க தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைத் தந்தருளினார். அவர் தமது அருட்பணியின் தன்மையை லூக். 4:18-ல் அழகாக எடுத்துரைத்தார். ஏழைகளுக்கு நற்செய்தி, இருதயம் நறுங்குண்டவர்கள் குணப்படுத்தப்பட வேண்டும்; சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை; பார்வையற்றோருக்குப் பார்வை; நொறுங்குண்டவர்களுக்கு விடுதலை மற்றும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவித்தல் என்கிறார். இது ஒரு எளிய பணி அல்ல. கடினமான இப்பணியின் மூலம் அவர் சிலுவையில் மரித்தார். இப்பணியைத் தொடர இன்றும் அழைப்பைத் தருகிறார். லூக். 9:23 "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்ற கடவன்." இத்தொடர்பணிக்கான அழைப்பும், கடவுளின் வேதனையையும் இன்றைய திருமறைப் பகுதிகளின் மூன்று குறிப்புகளின் வாயிலாகச் சந்திப்போம்.

**1. பாவம் உணர்த்த அழைப்பு :** எசா. 6:5

எசாயா இறைவாக்கினரின் தேவாலயத் தொழுகைக் காட்சியை நாம் எப்படிப் பார்க்கிறோம். கடவுளின் பிரசன்னத்தை உணர்த்த அவர் கடவுளுக்கு முன் தன்னையும், மனுக்குலத்தையும் காணும் காட்சியைத் தான் இந்த வசனம் காட்டுகிறது. 5-ம் அதிகாரப் பின்னணியத்தில் மனுக்குலம் செல்வாக்கு நிறைந்த உலகிற்குள் வீழ்ந்து கிடக்கிறது. உரோ. 12:2-ல் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த உலகத்தின் போக்கின்படி வாழாமல் கடவுளுடன் வாழும் வாழ்வை முன்னிலைப்படுத்துகிறார்.

எசா 6:5-ல் தன் நிலையையும், மானிடத்தின் நிலையையும் உணர்ந்த இறைவாக்கினர், தொடர் வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி தூய்மையாக்கப்படுகிறார். பின் மானிடத்தைக் குறித்த கடவுளின் வேதனையின் சத்தத்தை கேட்டு அதை அவர்களுக்கு உணர்த்த அழைப்பைப் பெறுகிறார். அழிவின் விளிம்பில் இருக்கும் மக்களுக்கு பாவத்தை உணர்த்துவது கடினமான செயல். இது இறையடியவருடன் திருச்சபையும் இணைந்து செயலாற்ற அழைக்கப்படும் ஒன்றாகும். திப. 12:5-இல் பேதுரு அருட்பணியின் காரணமாய்ச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கையில் சபையார் அவருக்காக ஜெபித்தனர் என்று வாசிக்கிறோம்.

**2. பலவானுக்கும் உரைக்க அழைப்பு :** எசா. 6:8, 9

செல்வச் செழிப்பில் கடவுளை மறந்த நிலையிலும் கடவுளுடைய வார்த்தைக்குச் செவி கொடாத நிலையிலும் வாழ்வோரிடம் செல்ல அழைப்பும், இறைவாக்கினரின் அர்ப்பணிப்பும் தான் இது. திப. 9:15-இல் சவுலைக் குறித்து அனனியாவிடம் ஆண்டவரின் வார்த்தை : நீ போ : அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்பதாகும். கடினமான பணியின் நிழலோட்டத்தை யோனாவின் அழைப்பில் நாம் புரிந்துகொள்ளலாம். (யோனா. 1:1-4; 12). மகா நகரமாகிய நினிவேக்கு விரோதமாக கடவுளின் வார்த்தையை, பிரசங்கித்தால் உயிருக்கு ஆபத்து என அஞ்சினார். மன்னனுக்கும், மக்களுக்கும் விரோதமாகப் பேச பயந்து, தன்னையே சமுத்திரத்தில் போட்டு விடுங்கள் என்கிறார். அருட்பணி அழிவில் இருக்கும் மக்களுக்கு நற்செய்தியும் கேடு செய்வோருக்குக் கடிந்துரைப்பாகவும் அமைகிறது.

**3. பணிவுடன் உணர்த்த அழைப்பு :** லூக். 15:3

பலவான் பெருகிக் கொண்டிருக்கிறான் பாவமும் பெருகியது. எரே. 8:21-இல் என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களில் நானும் காயங்களுடன்

நிறுத்தியிருக்கிறேன் என்றும் கடவுளின் வார்த்தை கடவுளின் வேதனையைக் காட்டுகிறது. மேலும் லூக். 10:3-இல் இயேசுநாதர் சீடர்களை அருட்பணிக்கு அனுப்பும் போது புறப்பட்டுப் போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, நான் உங்களை அனுப்புகிறேன் என்கிறார். இயேசு நாதரின் கூற்று எதை உணர்த்துகிறது? ஓநாய் ஆட்டுக்குட்டிகளை அடித்துப் புசிக்கும் குணம் உள்ளது. அந்நிலையில் பெலன் குன்றிய ஆடு ஓநாய்க்குப் போதிக்க முடியுமா? ஓநாய் என்று இயேசு நாதர் கூறுவது Hard hearted people அதாவது இருதயக் கடினம் உள்ள மக்கள். இவர்கள் உலகு சார்ந்து, செல்வம் சார்ந்து, பதவி சார்ந்து, புகழ் சார்ந்து எந்தத் தவறையும் செய்யத் தயங்காத மக்கள். ஆட்டுக்குட்டி உருவகம் போர்க்குணம் அற்ற, எதிர்த்து நிற்காத, பணிவின் பண்பு நிறைந்த ஒன்று. ஆக, அருட்பணி : பணிவுடன், பண்புடன் இருதயக் கடினம் நிறைந்த உலகம் சார்ந்து எளியவர்களை ஒடுக்கும் மக்களுக்குக் கடவுளின் வேதனையைப் பகிர்ந்து கொள்வதற்கு அழைப்பு ஆகும்.

கடவுளின் வேதனையைப் புரிந்தவர்களாக, கடவுளின் அழைப்பை ஏற்று பாவத்தை உணர்த்துவோம். ஏழைகளுக்கு ஆதரவாக மட்டுமல்ல, பலவானுக்கும், கடின இருதயத்துடன் செயல்படுபவர்களுக்கும் பணிவுடன் பண்புடன் கடவுளின் வார்த்தைகளை எடுத்துரைப்போம். அதன்படி செயலில் காட்டுவோம்.

அருள்திரு. அறிவர். **D. சேம் கிறிஸ்டோபர்**

## 11.08.2024

# திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும்

## Baptism: Dying and Rising up with Christ

தொ.நூ. 7: 11-24 உரோ. 6: 1-14

திபா. 29 யோவா. 12: 20-26

"அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்." உரோ. 6: 5

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படையாக இருப்பது முதலாவது திருவருட்சாதனமாகிய திருமுழுக்கு ஆகும். ஆகவேதான் ஒருவர் கிறிஸ்துவை உடையவராவதின் முதல் புள்ளியாய்த் திருச்சபை மரபில் திருமுழுக்கு அமைகிறது. திருமுழுக்கு என்னும் தூய திருவருட் சாதானத்தை வெறும் சடங்காகவும், மரபாகவும் முழுகுதல் என்னும் பதத்தை முன்னிறுத்தி ஆசீர்வாதங்களுக்கான, அற்புதங்களுக்கான தளமாகவும் பார்க்கிற இன்றைய கிறிஸ்தவர்களின் வாழ்வில் இன்றைய தியானம் நிச்சயம் மாற்றத்தைக் கொண்டு வருவது அவசியம்.

தூய லூக்கா நற்செய்தி நூலில் 12-ம் அதிகாரம் 50-ம் வசனத்தில் இயேசு கிறிஸ்து உலகமக்களின் பாவங்களுக்காக தன்னுடைய சரீரத்தில் ஏற்றுக்கொண்ட பாடுகளின் வழியான இறப்பை "நான் முழுக வேண்டிய ஸ்நானம் உண்டு. நான் பெறவேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு" என்று குறிப்பிடுவதின் வழியாய்; திருமுழுக்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் இவைகளுள் வேரூன்றியுள்ளது என்பதைப் புரிந்திட வேண்டும்.

திருமுழுக்கு ஒரு சடங்கு/சாக்கிரமெந்து என்பதைத் தாண்டி கிறிஸ்துவுடன் இறத்தலிலும் எழுதலிலும் பங்குபெறுதல் என்னும் ஒரு வாழ்வியல் உண்மையை உணர்வது நன்று. உலக வழக்கப்படி இறப்பில் ஒருவரின் வாழ்வு முற்று பெறுகிறது. கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படும்போது நம் பாவ வாழ்வும் திருமுழுக்கில் முற்றுப் பெறுகிறது. இயேசு கிறிஸ்துவில் தொடருகின்ற புத்துயிர் பெற்ற வாழ்வு எழுதலின் அனுபவம். கடவுளுக்கும் அவர்தம் மக்களுக்கும் இடையேயுள்ள புதிய உடன்படிக்கையினுள் பிரவேசிப்பதாகும்.

**திருமுழுக்கு :** பாவம் நீங்க கழுவப்பட்டு சுத்திகரிக்கப்படுதல் (1 கொரி. 6: 11), மறுபடி பிறத்தல் (யோவா. 3: 5), கிறிஸ்துவால் ஒளியூட்டப்படுதல் (எபேசி. 5: 14), பெருவெள்ளத்திலிருந்து பேழையின் வழியே மீட்கப்படுதல் (1 பேதுரு 3: 20, 21) என்று பல உருவகங்களின் வழியே விளக்கப்பட்டாலும், கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும் என்னும் வாழ்வியல் உண்மையைத் தெரிந்து கொள்ளுவது விசுவாச வாழ்வுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இதனை மூன்று வாழ்வியல் முறைமைகளின் வழியே அறிந்து கொள்வோம்.

**1. திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இணைந்திருத்தல்** (உரோ. 6: 3)

திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கிறோம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு குறிப்பிடுகிறார். கிறிஸ்துவுக்குள்ளாய் திருமுழுக்கு பெற்றோர் அவரோடு இணைகிறார்கள் (Union with Christ) எனவே பொது சீடத்துவத்துக்கு அடையாளமாகவும், முத்திரையாகவும் திருமுழுக்கு அமைகிறது. திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவோடும், திருச்சபையோடும் ஐக்கியப்படுகிறோம். ஒரே மீட்பரை அறிக்கை செய்யவும், அவருக்குள் ஒரே மந்தையாக வாழவும் அழைப்பு பெறுகிறோம் (எபேசி. 4: 4-6).

கலாத். 3: 27, 28-ல், “கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்; எனவே இனி உங்களிடையே யூதர் - கிரேக்கர், அடிமைகள் - உரிமைக் குடிமக்கள், ஆண் - பெண் என்னும் வேறுபாடு இல்லை. கிறிஸ்துவுடன் திருமுழுக்கினால் இணைக்கப்பட்டுள்ள நீங்கள் அனைவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்” என பவுலடியார் கூறுகிறார். இன்று திருமுழுக்கு இறைமக்களைச் சடங்கின் அடிப்படையில் பிரிக்கிறதாயும் திருச்சபைகளை உடைக்கிறதாய் இருக்கிறது. இது விவிலியப் போதனைக்கு எதிரானது.

கலாத். 3: 29 கூறுகிறது, இப்படிக் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்ற நீங்கள்/நாம் வாக்குறுதியின் அடிப்படையில் “உரிமைப் பேறு” உடையவர்கள் அதாவது, எதிர் வரும் நம்பிக்கையில் இணைந்திருக்கிற உரிமைப் பேறு பெற்றவர்கள். ஆகவேதான் சிலுவையில் தம்முடன் தொங்கிக் கொண்டிருந்து, கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவராய் “இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற் கொள்ளும்”, என்ற குற்றவாளிக்கு (லூக். 23: 43) “நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்” என்று இயேசு கூறினார்.

வேறுபாடுகள் இல்லாமல் மீட்பின் நாளில் ஆண்டவருடன் பேரின்ப வீட்டில் உரிமைப் பேறு பெற்ற மக்களாய் இணைந்திருக்கிற அனுபவமே திருமுழுக்கு பெற்றவர்களின் வாழ்வியல் அனுபவம். இதனைத் தொடக்க

நூலில் 7-ம் அதிகாரத்தில் 11 முதல் 24 வரையான பகுதியில் நோவாவின் பேழையினுள் எந்த வேறுபாடும் இல்லாமல் மீட்கப்பட்டவர்களாய் இணைந்திருந்த அனுபவத்தின் வழியே புரியலாம். திருமுழுக்கு தெளிவாக நோவாவின் பேழையினுள் பிரவேசிக்கும் அனுபவமாக வேண்டும். சுற்றிலும் நெருக்கடிகள் (வெள்ளப் பெருக்கின்) மிகுதியாயிருந்தாலும் திருமுழுக்கு பெற்ற விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் இணைந்து இறைமக்களுடன் பேரின்ப வீட்டில் மகிழ்ச்சியாயிருப்பதை அனுபவமாக்க வேண்டும்.

கொலோ. 2: 20-ல் பவுல் கூறுகிறார், "கிறிஸ்துவோடு இறந்த நீங்கள் உலகின் பஞ்ச பூதங்களிலிருந்து விடுவிக்கப்பட்டீர்கள்" என்கிறார். எனவே திருமுழுக்கு (பாவங்களுக்காக) கிறிஸ்துவுடன் இறத்தலின் அனுபவத்தினூடே அவருடன் இணைந்து, உலகின் எந்த நெருக்கடிகளின்றும் நம்மை விடுவித்து உரிமைப் பேறுபெற்றவர்கள் பங்கடைகிற பேழையின் நிறைவான நித்திய மகிழ்வுக்குள் நம்மை நடத்துகின்றது.

**2. திருமுழுக்கு : கிறிஸ்துவுக்காக வாழ்தல்** (உரோ. 6: 11)

திருமுழுக்கின் வழியே, நீங்கள், "பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள், கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள்" என்கிற மற்றுமொரு சிந்தனையை விவிலியம் தருகிறது. ஒரு புதிய வாழ்க்கையின் மெய்மைக்குத் திருமுழுக்கு ஒரு ஆரம்பமாகும். அது ஒரு கணநேர அனுபவமல்ல; கிறிஸ்துவுக்குள் வாழ்நாள் முழுவதும் காட்டும் ஒரு வளர்ச்சியையும் அது குறிக்கிறது. 2 கொரி. 3: 18-இல் "இப்போது நாம் அனைவரும் முக்காடு இல்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சியைப் பிரதிபலிக்கிறோம். இவ்வாறு மேன்மேலும் மாட்சி பெற்று அவர் சாயலாக மாற்றமடைகிறோம். இவையெல்லாம் ஆவியாம் ஆண்டவரின் செயலே" என பவுலடியார் கூறுகின்றார்.

கிறிஸ்துவின் வாழ்வில் தொடரும் போராட்டங்களை அனுபவிப்பதும், அதேநேரத்தில் இறையருளை அனுபவிப்பதுமாகும். இந்தப் புதிய உறவில் திருமுழுக்கு பெற்றவர்கள் கிறிஸ்துவுக்காகவும், அவரது திருச்சபைக்காகவும், தாம் நேசிக்கின்ற இந்த உலகிற்காகவும் வாழ்கிறார்கள். அவ்வாழ்வில் தன்னொழுக்கத்தையும், நல்லொழுக்கத்தையும் வெளிப்படுத்தி வாழ்வதையே கிறிஸ்தவம் போதிக்கிறது. எதிர்பாராத விதமாக திருமுழுக்கிற்குத் திருச்சபைகள் கொடுக்கிற அதிக முக்கியத்துவத்தினால் கிறிஸ்துவுக்காக வாழ்கிற நெறியுள்ள வாழ்க்கை முறை மேம்படவில்லை; மாறாக இதனை வியாபார உத்தியாக செயல்படுத்துகிற சிலரின் பொருளாதார வளர்ச்சி நிலைகள் மேம்பட்டிருக்கிறது.

உரோ. 6: 12-ல், "ஆகவே இறந்த உங்கள் சாவுக்குரிய சரீரத்தின் மீது மறுபடி பாவம் ஆட்சி செலுத்த விடாதிருங்கள்", என்று பவுலடியார் எச்சரிக்கின்றார். திருமுழுக்கில் கிறிஸ்துவுக்காக வாழ்தல் இன்றியமையாதது. இன்று வாழ்தலுக்கு முக்கியத்துவம் தராமல் வரப்போகும் வாழ்வை அதிகம் பேசுகிறோம். வாழும் காலத்தையும், வாழும் முறைகளையும் மறந்து வரும் காலத்தைச் சிந்திப்பது பயனற்றது.

திருமுழுக்கின் வழியே முத்திரையிடப்பட்ட நம் உடலின் உறுப்புக்களைத் தீவினையின் கருவிகளாக பாவத்திற்குத் திரும்ப ஒப்படைத்தலை ஆண்டவர் வெறுக்கிறார் (உரோ. 6: 13a) நம் நிகழ்கால வாழ்வில் நாவின் வார்த்தைகளும், கண்ணின் பார்வைகளும், கைகளின் செய்கைகளும் நல்வினையா? தீவினையா? என்பதை எப்பொழுதும் சிந்தனை செய்தல் வேண்டும். திருமுழுக்கு பாவமன்னிப்பு அடைந்தபின் பெற்றுக்கொள்வது அல்ல; மாறாக அனுதின பாவமன்னிப்புக்கும், மனமாற்றத்திற்கும் அது நம்மை வழிநடத்திட வேண்டும். லூக்கா 3: 7-ல் தம்மிடம் திருமுழுக்கு பெற புறப்பட்டு வந்த கூட்டத்தைக் கண்டு யோவான், "விரியன் பாம்புக் குட்டிகளே, வரப்போகும் சினத்திலுருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள் . . ." என்கிறார். திருமுழுக்கில் கிறிஸ்துவுக்காக வாழ்தல் மிக இன்றியமையாதது. அது பாவத்தினிமித்தம் ஒவ்வொரு நிமிடமும் துக்கப்படுகிற அனுபவமாகவும் பாவத்திற்கு விலகி வாழ்கிற வாழ்வு முறையாகவும் வேண்டும்.

**3. திருமுழுக்கு : கிறிஸ்துவுக்கு ஒப்படைத்தல்** (உரோ. 6: 13)

பவுல் உரோமையருக்கு எழுதுகின்ற போது திருமுழுக்கின் வழி "இறந்ததும் வாழ்வோராய் உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள்" என்று கூறுகிறார். இப்போது நீங்கள் சட்டத்திற்கு (பிரமாணங்களுக்கு) உட்பட்டவர்கள் அல்ல; மாறாக அருளின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் (Since you are not under law but under grace). ஒப்படைத்தலின் அனுபவத்தை வாழ்வியலிலிருந்து கற்றுத்தரும் இயேசு நாதர் யோவா. 12: 24-ல் "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" என்கிறார். ஒப்படைத்தலினால் பலன் உருவாகிறது. நம் திருமுழுக்கு பெற்ற வாழ்வினால் உருவாகும் பலனே ஆண்டவர் நமக்கருளிய அருட்பணியின் நோக்கம்.

1 கொரி. 15: 36-ல் பவுல் கூறுகிறார், "அறிவிலியே நீ விதைக்கும் விதை மடிந்தாலொழிய உயிர்பெறாது." கிறிஸ்துவுக்காய் ஒப்படைத்தலை இவ்வசனம் குறிப்பிடுகின்றது. கிறிஸ்து நாதரின் சிலுவை வரையிலான ஒப்படைப்பில்

மனுக்குலத்தின் மீட்பின் பயன் அருட்பணித்திட்டமாக வெளிப்பட்டது. அப்படியே நம்மிடையே அருள்நாதரின் எதிர்பார்ப்பும் அதுவேதான்; அதனை யோவா. 12: 26-ல் "எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பார். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்" என்கிறார். கிறிஸ்துவுக்காய் திருமுழுக்கின் வழி நம்மை ஒப்படைத்தலில் இறைத்தொண்டு அடங்கியிருக்கிறது.

கம்யூனிஷ நாட்டில் வேலைபார்த்து வந்த வாலிபன் ஒருவனுக்குத் திருமணம் நடைபெற்றது. விடுமுறைக்கு வந்து திருமணத்தை முடித்து மறுபடியும் பணிபுரிந்த கம்யூனிஷ சித்தாந்தம் உள்ள அதே நாட்டிற்கு வேலைக்கு சென்றான். மனைவியோடு இருந்த பேச்சுத் தொடர்பு கொஞ்சம் கொஞ்சமாய் குறைய ஆரம்பித்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான். என்னை மன்னித்து விடு. எனக்கு குடும்ப வாழ்வு பற்றிச் சிந்திக்க நேரமில்லை என் வாழ்நாளில் ஒவ்வொரு நாளிலும் 8 மணிநேரங்கள் நான் பற்றிக்கொண்ட கம்யூனிஷ சித்தாந்தங்களில் ஒன்றித்து அதற்காய் உழைக்கிறேன். 8 மணிநேரம் அதனைப் பரப்புவதற்காய் சிந்தனை செய்கிறேன். 8 மணிநேரம் அதன் எதிர்காலத்தைப் பற்றி கனவு காண்கிறேன் என்று எழுதினாராம்.

உலகில் ஒரு சித்தாந்தத்திற்காய் என்னவொரு ஒப்படைப்பு. தொண்டாற்ற என்ன ஒரு துடிப்பு. திருமுழுக்கினால் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்கிற நாம் மீட்பின் நாளில் உரிமைப் பேறாய் பெறப்போகும் நித்திய மகிழ்வைப் பற்றி கனாக் காணவும், அதற்காய் நம் அவயவங்களைப் பாவத்திற்கு மறுபடியும் ஒப்படைத்தலை விடுத்து நல்வினை செய்து வாழவும், இறையரசுக்காய் தொண்டாற்ற நம்மையே ஒப்படைத்தலையும் அருள்நாதர் விரும்புகின்றார். திருமுழுக்கு இத்தகைய ஒப்படைத்தலோடு கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலுமான அனுபவத்தை நம்மனைவருக்கும் நிச்சயம் கொடுக்கும். ஆமென்.

அருள்திரு. **J. ஹெரால்டு அனித்**

# சமூக இசைவு

## Communal Harmony

தொநூ. 11: 1-9 2 திமொ. 2 : 14-26

திபா. 66 மத். 5: 38-48

சுதந்தர இந்தியா, தேசியக் கொடியை மிகக் கண்ணியம் மிக்கதாகவே கருதுகிறது. குங்குமப்பூ, வெள்ளை மற்றும் பச்சை நிறங்கள் சமூக இசைவினை வலியுறுத்தியே நிற்கின்றன. அதாவது தேசியக் கொடியில் மூன்று நிறங்களும் ஒன்றிசைந்து காணப்படுவது போல் இந்திய மக்களும் வேற்றுமைகளில் ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்பதே அக்கொடி தேசிய மக்களுக்கு வலியுறுத்தும் பாடம். இந்திய நாட்டின் அழகு என்பதே வேற்றுமையில் ஒற்றுமை ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் திருமறைப் பகுதிகள், இந்திய நாடு சமூக இசைவோடு வாழ எந்நிலையில் அழைப்பு விடுக்கிறது என்பதைப் பார்ப்போம். எவைகளால் வரும் சமூக இசைவு உண்மையான விடுதலையைக் கொண்டு வருகிறது என்பதைச் சிந்திப்போம்.

**1. தாழ்மையால் வரும் சமூக இசைவே உண்மையான விடுதலை** (மத். 5: 39)

மத்தேயு 5: 39-ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகின்ற, “ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் கொடு”, என்ற இந்த திருவார்த்தை தாழ்மை எனும் அழகிய பண்பினை வலியுறுத்திக் கூறுகின்றது. இந்தத் தாழ்மை எனும் பண்பு மிகச் சிறந்த உயரிய பண்பு ஆகும்.

அதாவது, ‘நான்’ அல்லது ‘எனது’ என்னும் எண்ணங்களும் உணர்வுகளுமே எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஆணி வேராய்க் காணப்படுகிறது. இன்று நாட்டிலே காணப்படும் ஊழல்கள், கொலைகள், கனிம வளக் கடத்தல்கள், பாலியல் வன்முறைகள் என எல்லா அநீதிகளும் ‘நான்’ அல்லது ‘எனது’ எனும் தன்னலம் சார்ந்த உணர்வுகளாலேயே அரங்கேறி வருகிறது.

யோனா இறைவாக்கினரின் நூல் அழகிய வரலாறு ஒன்றை நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருகிறது. அதாவது நினிவே என்னும் நகரம் அநீதிகளால் நிரம்பி வழிகின்றது. யோனா தீர்க்கர் கடவுளால்

அனுப்பப்படுகிறார். (இவர் கி.மு. 9-ம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருதப்படுகிறது). அவர் நினிவேயின் அநீதிகளைச் சுட்டிக்காட்டுகிறார். 'நான்', 'எனது' எனும் எண்ணங்களோடு வாழ்ந்து கொண்டிருந்த அந்த நாட்டு மன்னன் முதல் அனைத்துத் தரப்பினரும் உணவைக் கூடத் தவிர்த்து ஆண்டவரின் முன் மண்டியிட்டனர். தாழ்மையோடு தங்கள் நல்வாழ்விற்காய் மன்றாடினர். கடவுள் அவர்களுக்கு இரங்கினார். இவ்விதத் தாழ்மை மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் ஒன்றிசைந்து வாழ்வதற்கு அடிப்படை ஆதாரம் ஆகும்.

இந்தத் தாழ்மை என்பது சாதாரணமாக, எளிதாக மனிதரில் வந்துவிடுவது இல்லை. திருமறை தியானம், இறைவேண்டல், நோன்பு போன்றவைகளால் ஏற்படுகிறது. ஆம்! கிறிஸ்தவர்களின் கடமை என்பது, தாழ்மையின் மறு உருவாகிய இயேசுவின் சிந்தை உடையோராய் அனைத்து இந்திய மக்களையும் மாற்றுவது ஆகும்.

அப்படித் தாழ்மை எனும் நற்குணம் அனைவரிலும் மேலோங்கும்போது அது நல்ல சமூக இசைவினைக் கொண்டு வருகிறது. உண்மையான விடுதலைக்கு அடிப்படை ஆதாரம் ஆகிறது.

**2. அன்பினால் வரும் சமூக இசைவே உண்மையான விடுதலை** (மத். 5: 44)

உலகளாவிய முக்கியத் தலைவர்களால் மிகவும் பயன்படுத்தப்பட்ட இயேசுநாதரின் திருவார்த்தை மத்தேயு 5: 44 ஆகும். இந்த திருவார்த்தை அன்பை ஆதாரமாகக் கொண்ட வார்த்தை ஆகும்.

எதிரி மீது அன்பு காட்டுவது என்றால் அது எளிதல்ல. ஆனால் மனித குமாரனாக இந்த உலகில் வாழ்ந்த ஆண்டவர் அதைச் செய்தார். தன்னைக் கைது செய்து சிலுவையில் அறையும் போதும், "தந்தையே இவர்களை மன்னியும்" என்றார். அதுதான் அன்பு.

எப்படி இவ்வித நிபந்தனைகளே இல்லாத அன்பை ஒருவர் வெளிக்காட்ட முடியும்?

அதாவது, தூய ஆவியானவர் அன்பின் ஆவியானவர் ஆவார். அவர் ஒரு நபரை ஆட்கொள்ளும்போது அந்த நபர் அன்பு மிக்கவராய் மாறுகின்றார். நிபந்தனை அற்ற அன்பைக் காண்பிக்கின்றார்.

திருமறையில் 1 சாமு. 26-ஆம் அதிகாரத்தில் தாவீது சவுலின் நிகழ்வு வருகிறது. அதில் சவுல் தன்னைக் கொல்லப்பார்த்தும் தாவீது கட்டுப்பாடோடு நடந்து கொண்டார். அதாவது, சவுலைக் கொல்ல தாவீதிற்குத் தருணம் கிடைத்த

போதும் அவர் அந்தத் தவற்றைச் செய்யவில்லை. காரணம் அவருக்கு ஆண்டவர் மீது இருந்த அன்பு, மட்டுமல்லாமல் சக மனிதர் மீதும் அவர் கொண்டிருந்த அன்பு ஆகும்.

ஆம்! இந்த அன்பு இந்திய நாட்டின் ஒவ்வொரு மக்களிலும் காணப்படுமாயின் சமூக இசைவு என்பது தானாகவே ஏற்படும். இதனால் நாம் அனைவரும் அன்பை எல்லோரிலும் பகிரும் கருவிகளாய் காணப்பட வேண்டும். அன்பின் இயேசுவில் ஒவ்வொரு நபர்களும் வாழ ஊக்குவிக்க வேண்டும். அப்போது இந்திய நாடு உண்மையான விடுதலையை பெற்றுக்கொள்ளும்.

ஆம்! இயேசு நாதரின் பண்பியல்புகளாகிய தாழ்மை, அன்பு இவைகளை ஒருவர், அல்லது ஒரு சமூகம் கொண்டிருக்குமேயாயின் அந்நபர் அல்லது அச்சமூகம் சிறந்து விளங்கும். இதனால் இந்திய நாட்டின் மெய்யான விடுதலைக்காய் அன்பை, தாழ்மையைப் போதிக்கும் ஊடகங்கள் ஆவோம், ஊக்கமாய்ச் செயல்படுவோம்.

இறையவர் அருள்புரிவாராக!

அருள்திரு. **J.T. ஜெறோம்**

## 18.08.2024

# தூய ஒப்படைப்புப் பலி என்னும் திருவருட்சாதனம்

## Sacrament of Holy Qurbana (Holy Sacrifice)

2 அர. 4: 42-44 — 1 கொரி. 11: 23-30

தி.பா. 100 — யோவா. 6: 15-59

யோவான் 6: 54

“எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்.”

திருவருட்சாதனம் என்பது ஆன்மீக வாழ்வின் மாற்றத்திற்காக உள்ளான அருளைப் பெறுவதற்கான வெளிப்படையான அடையாளம் ஆகும். திருவருட்சாதனங்கள் இறைமகன் இயேசு கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டுத் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டன அவையே 1. திருமுழுக்கு 2. திருவிருந்து இவைகளையே நாம் திருவருட்சாதனங்களாக பின்பற்றுகிறோம்.

திருவிருந்து - ‘Holy Qurbana’ என்று அழைக்கப்படுகிறது. Qurbana என்ற வார்த்தை சிரியாக் மற்றும் அராமிக் மொழியில் தியாகம், காணிக்கை என்று பொருள். கடவுள் தன்னுடைய ஒரே மகனைத் தியாக பலியாகக் கொடுத்ததை நினைவூட்டும் செயலாக திருவிருந்து கருதப்படுகிறது. இயேசு சிலுவையில் தம்மை மானிட மீட்புக்காகத் தியாக பலியாகக் கடவுளுக்கு அர்ப்பணித்ததை நாம் புரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து தம்மையே பலியாகக் கொடுத்தார் (எபி. 9: 25) இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம்முடலைப் பலியாக செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம். (எபி. 10: 10) எனவே திருவிருந்து தூய ஒப்படைப்பு பலி என்று அழைக்கப்படுகிறது.

### 1. அநேகர் வாழ்வதற்கான - தூய ஒப்படைப்புப் பலி

“கிறிஸ்தவர்கள் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகிறார்கள்” என்றார், தூய புனித எரோணிமுஸ். அதாவது நல்ல கிறிஸ்தவ வாழ்வு என்பது தானே நடைபெறக்கூடிய ஒரு நிகழ்வு அல்ல. மாறாக ஒரு சில நல்ல பண்புகளை நமதாக்கும் போது நம்மில் வெளிப்படுபவை. இப்படிப்பட்ட நல்ல பண்புகளை நம்மில் உருவாக்கக்கூடிய தன்மை நற்கருணைக்கு உண்டு. உதாரணமாக தொடக்க கிறிஸ்தவர்களின் வாழ்வு, பகிர்வை மையப்படுத்திய வாழ்வாக சுயநலத்தை வெற்றி கொண்ட வாழ்வாக காணப்பட்டது. இதற்கான முக்கிய

காரணம் அவர்கள் அப்பம் பிடுதலிலும் இறைவேண்டலிலும் நிலைத்திருந்ததே என லூக்கா (தி.ப. 2: 46) கூறுகிறார். அப்பம் பிடுதல் என்பது தொடக்க கால கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்து வந்த தூய ஒப்படைப்புப் பலியைச் (திருவிருந்தை) சுட்டிக் காட்டுகிறது. இந்த அப்பம் பிடுதல் நிகழ்வே அவர்கள் தங்கள் பொருட்களைப் (உடைமை) பகிர்ந்து கொள்வதற்கு வழி நடத்தியது. எல்லா உடைமைகளையும் (அவர்கள்) பொதுவாக வைத்திருந்ததற்குக் காரணம் அப்பத்தைப் பொதுவில் பங்கிட்டுக் கொண்டதே.

2 அர. 4: 42-44-ல் எலிசா அங்கு கொண்டு வரப்பட்ட இருபது வாற்கோதுமை அப்பங்களையும் முற்றிய தானிய கதிர்களையும் பகிர்ந்தளிக்க கூறுகிறார். ஆனால் அவருடைய பணியாளர் அது குறைவுபடும் என்கிறார். அதற்கு ஆண்டவர் பகிர்ந்தளித்தால் உண்ட பின்னும் மீதி இருக்கும் என்கிறார். அவ்வாறே செய்தபோது ஆண்டவர் வாக்கின்படி மீதியும் இருந்தது. அப்படியே இயேசுவின் பகிர்ந்தளிக்கும் தியாகத் திருவிருந்தினை ஒப்பிட்டுப் பார்த்தோமானால் ஆண்டவர் இயேசு தம் வாழ்வினை நமக்காகப் பகிர்ந்தளித்தார். மத். 26: 28 மற்றும் மாற்கு 14: 24-ல் இயேசு “இது எனது உடன்படிக்கையின் இரத்தம் பலருடைய பாவமன்னிப்புக்காக சிந்தப்படும் இரத்தம்” என்றார். மாபெரும் தியாக சீலராக விளங்கும் இயேசு கிறிஸ்து தம் உடலையும் இரத்தத்தையும் ஒட்டு மொத்த மனித குலத்திற்கு வழங்கிய நிகழ்வு தூய ஒப்படைப்புப் பலி ஆகும்.

## 2. அழியா வாழ்வுக்கான தூய ஒப்படைப்புப் பலி

யோவான் 6: 53 “மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்.”

திருவிருந்தை அழியா வாழ்வுக்கு மருந்து என்றும்; என்றென்றும் இயேசு கிறிஸ்துவில் வாழ உதவும் மருந்து என்றும் அந்தியோகியா பேராயர் இன்னாசியு குறிப்பிடுகிறார்.

இன்றைய உலகில் வளமான வாழ்வைத் தொலைத்து விட்டு வறண்ட பாலைவனத்தில் வாடிக்கொண்டிருப்போர் பலர். வாழ்க்கையை வெங்காயத்திற்கு ஒப்பிடுகிறார் மார்க்ஸ். வெங்காயத்தை உரிக்க உரிக்க கண்ணீர் வருவது போல, வாழ்க்கையில் வருடங்கள் அதிகமாக அதிகமாக வருத்தங்களும், வறட்சிகளும் தான் அதிகமாகின்றன. நிறைவாக வாழவேண்டிய வாழ்வை நிம்மதியின்றி நடத்திக்கொண்டிருப்போர் அநேகர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அழியா வாழ்வைக் கண்டடைவதற்கான வழியை இயேசு சுட்டிக் காட்டுகிறார். “இந்த உலகத்திற்கு வாழ்வைக் கொண்டு வந்தேன் அதை நிறைவாகக் கொண்டு வந்தேன்” (யோவான் 10: 10) என்று கூறிய இயேசு அவ்வாழ்வை நற்கருணை வழியே தருகிறார்.

இறந்த உடல்களை இயேசு தொட்டபோது அவை வாழ்வைப் பெற்றுக்கொண்டன என்றால், உயிருள்ள உடல்களான நமக்குள் இயேசு வருகின்றபோது நமக்குள் எவ்வளவு மாற்றம் விளைய வேண்டும்? அழியக்கூடிய, முழுமையற்ற பலவீனமான நம்மை இயேசுவின் அழியாத தன்மைக்குள்ளும், முழுமைத்தன்மைக்குள்ளும் மாற்றுருவாக்கம் செய்வதே நற்கருணை. "நம்முடைய உடல், திருவிருந்தில் இணைவதின் வழியாக, தூய்மையாக்கப்பட்டு, நிலையான உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்கிறது" என்று தூய ஐரேனியஸ் கூறுகிறார். திருப்பந்தியில் பங்குபெறுவோர் நிலைவாழ்வைப் பெறுவார்கள். இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன் என்றும் (யோவான் 6: 54) மன்னாவைப் புசித்தவர்கள் இறந்தார்கள். ஆனால் என்னைப் புசிப்பவர்கள் இறக்கமாட்டார்கள் என்றும் இயேசு கூறுகிறார்.

### 3. ஆராய்ந்தறியும் வாழ்வுக்கான ஒப்படைப்புப் பலி

"ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகவேண்டும்" (1 கொரி. 11: 28).

டிரண்ட் மாமன்றத்தின் அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நோயை விளைவிக்கும் பாவத்திலிருந்து ஒருவரை பாதுகாக்கும் மருந்து தான் திருவிருந்து என்று திருச்சபை அழைக்கிறது. எனவே ஒருவர் திருவிருந்தில் பங்குகொள்ளும்போது தன் நிலை உணரவேண்டும். பாவிகள் என்ற உணர்வு வேண்டும். இந்த உள்ளான உணர்வு இல்லாமல் பங்குபெறுவது தவறு என தூய பவுலார் கண்டித்து உணர்த்துகிறார். (1 கொரி. 11: 29, 30) திருவிருந்து வழிபாட்டில், "அன்று சீடர் மத்தியில் பிரசன்னராய் இருந்தது போல, இன்று நாங்கள் அப்பத்தைப் பிட்கையில் எங்கள் மத்தியிலும் பிரசன்னராய் இரும்" என்று இறைவேண்டல் செய்யும் போது கிறிஸ்து நம் மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. ஆதித்திருச்சபையில் திருவிருந்து அனுசரிக்கப்படும்போது, கிறிஸ்து அவர்கள் நடுவில் இருப்பதைப் போன்ற உணர்வைப் பெற்றிருந்தனர். இன்று திருவிருந்தில் பங்கு பெறுவது ஒரு மரபாக மாறி உள்ளது. கிறிஸ்து நம் மத்தியில் உள்ளார் என்ற உணர்வு ஏற்படும் போது தான் திருவிருந்தின் வழியாக உண்மையான கடவுளின் பிரசன்னத்தை உணர முடியும். நாம் உண்ணும் அப்பம் பிட்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் உடல் (Broken Body) என்பதுடன் உண்மையான உணவு என்றும் நாம் பருகும் திராட்சை ரசம் பிழியப்பட்ட கிறிஸ்துவின் உதிரம் என்பதுடன், உண்மையான பானம் என்ற உணர்வும் நமக்கு வேண்டும். 1 கொரி. 10: 16 மற்றும் யோவான் 6: 55 இதை உணர்த்துகிறது.

கீர்த்தனை 441-ம் பாடலில் முதல் சரணத்தில் வேதநாயகம் சாஸ்திரியார் இவ்வாறு எழுதியுள்ளார். "ஆராயும் எமதுள்ளங்களை, பலவாறான நோக்கம் எண்ணங்களை" இத்தகைய ஆராய்ந்தறியும் எண்ணம் அவரவருக்கு நற்கருணையில் பங்குபெறும்போது ஏற்படவேண்டும். திருவிருந்து (தூய ஒப்படைப்பு பலி) என்னும் திருவருட்சாதனத்தில் பங்குபெறும்போது அநேகர் வாழ்வுபெறும் பொருட்டு கிறிஸ்து தம்மையே பலியாகப் பகிர்ந்தார் என்பதையும் அனைவரும் அழியா வாழ்வுபெறும் பொருட்டு தூய ஒப்படைப்புப் பலியை ஏற்படுத்தினார் என்பதையும் நினைவுகூர்கின்றோம். இத்தூய ஒப்படைப்புப் பலியில் நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்மையே நாம் தியாக பலியாக்கிட தூய ஒப்படைப்புப் பலியாகிய திருவிருந்து நமக்குத் தூண்டுதலையும் துணிவையும் தருவதாக அமையட்டும்.

அருள்திரு. **N. யோபுதாஸ்**

## 25.08.2024

# பன்மைத்துவம்: பொதுவான மானிடமும் நம்பிக்கை பகிர்வும்

## Plurality: Common Humanity and Faith Sharing

யோனா. 4: 1-11 மத். 22: 1-14

திபா. 82 திப. 8: 26-40

நாம் வாழும் சமூகம் பன்மைச் சமூகம் ஆகும். பல்சமய சூழலில், பல நம்பிக்கையோடு வாழுகிற மக்கள் மத்தியில் நாமும் வாழ்கிறோம். எனவே அவர்கள் மத்தியில் நமது செயல்பாடு எப்படி இருக்கவேண்டும் என்பதை சிந்தனை செய்வோம்.

வின்செென்ட் சர்சில் அவர்களிடம் உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத நாள் எது என கேட்டனர். அதற்கு அவர் என் மனைவி என்னைக் கணவனாக ஏற்றுக்கொண்ட நாள் (திருமண நாள்) என்றாராம். உலகில் விதவிதமான திருமணங்கள் நடந்துள்ளன. சில திருமணங்கள் ஆகாயத்திலும் சில திருமணங்கள் கடலுக்கு அடியிலும் நடந்து வியப்பைத் தந்துள்ளன. இப்படி திருமறையிலும் வியப்பைத் தந்த ஒரு பிரமாண்ட திருமணம் ஒன்று உள்ளது. அத்திருமணத்தில் மணமகன் - மணமகளுக்கு மட்டும் அல்ல வருகை தந்த எல்லாருக்கும் புது ஆடை தந்து, புதுமையாய், புரட்சியாய் அந்தத் திருமணம் (மத். 22: 1-14) நடந்தது. இது ராஜா வீட்டு திருமணம், அழைக்கப்பட்டவர் வராதபோது வழி சந்திக்குச் சென்று நல்லோர் - பொல்லோர் எல்லோரையும் பங்குபெற செய்த புதுமையான திருமணம். இந்த திருமணத்தில் மாறுபட்ட 3 சூழலைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். அதில் நாம் எப்படி வாழவேண்டும் என்பதை தியானம் செய்வோம்.

**1. முதல் குழு: செழிப்பை ஆராதிக்கிறவர்கள்** (மத். 22: 5)

மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை. ஒவ்வொருவரும் விதவிதமான விருப்பு. வெறுப்புகளுடன் வாழ்வார்கள். அப்படித்தான் இந்த நிகழ்விலும் அழைக்கப்பட்டவர்கள் ஒரு குழு. அவர்கள் சம்பாதிப்பை, பணத்தையும் முதன்மைபடுத்தினர். ஒருவர் தன் வயலுக்கும், ஒருவர் தன் வியாபாரத்துக்கும் செல்வதாக கூறுகின்றனர். இதன் பொருள் நாம் வாழும் சூழலில் ஒரு குழு பணத்தை மையப்படுத்தியே செயல்படுகிறார்கள். அன்போடு அழைத்த அழைப்பைவிட பணம் தான் பெரிதாய்த் தோன்றியிருக்கிறது. இக்குழு செழிப்பை ஆராதிப்பவர்கள். இன்று பலரும் இப்படித்தான்

காணப்படுகிறார்கள். அவர்கள் மத்தியில், நம்முடைய நம்பிக்கையும் செயலும் சிறந்ததாய்க் காணப்பட வேண்டும். ஈசாக்கைச் சுற்றி வாழ்ந்த பெலிஸ்தியர்கள் செழிப்பை விரும்பினார்கள். இவர் கடினப்பட்டு தோண்டிய கிணறு தங்களுடையது என வாதிட்டபோதும், இவரோ, இறைவன் மீது நம்பிக்கை கொண்டு உலகப் பொருளை முதன்மைபடுத்தாமல் சண்டைக்கு நிற்காமல் விட்டுக்கொடுத்து வந்தார். இவரைப் போல நாமும், உலகப் பொருளை முதன்மைப்படுத்தாமல் மற்றவர்களுக்கு முன் இறைவனை மட்டும் நம்பி வாழ்வோம்.

**2. இரண்டாம் குழு: தம்மையே ஆராதிக்கிற குழு** (மத். 22: 12)

நம்மை சுற்றி வாழ்பவர்களில், இவர்கள் மிகவும் மாறுபட்டவர்கள். திருமண வீட்டார் எல்லாருக்கும் திருமண ஆடை கொடுத்து வரவேற்கின்றனர். ஆனால் இங்கு ஒருவர் மட்டும் திருமண ஆடையை அணியாமல் வந்தார். கேட்டப்பொழுது, சரியான பதிலைச் சொல்லாமல் அமைதியாய் இருக்கிறார். இவன் தந்த ஆடையை நாம் ஏன் போடவேண்டும். திருமண ஆடையை அணிந்து தான் செல்லவேண்டுமா? நான் என் மனம் போல்தான் செல்வேன் என்று தன் பெருமையை நினைத்து வந்தவர் அவர். இன்று சமூகத்தில் இப்படிச் சிலர் வாழ்கிறார்கள். யார் சொல்லியும் கேட்காதவர்கள். இவர்கள் மிகவும் மோசமானவர்கள். ஆபத்தானவர்கள். சுயநலக்காரர்கள். பிடிவாதக்காரர்கள், கீழ்ப்படியாதவர்கள். யோனாவும், இறைவன் சொல்லியும், நினிவேக்குச் செல்லாமல் வேறு வழியில் செல்கிறார்.

இளைய மகன் உவமையில் மூத்த குமாரனும் தகப்பன் அழைத்தும் வீட்டுக்குள் செல்ல மனதில்லாமல் வெளியே நிற்கிறார். இவர்கள் தங்களையே ஆராதிக்கிறவர்கள். இவர்கள் மத்தியில், நம்முடைய கிறிஸ்தவ நம்பிக்கையை நாம் எப்படி வெளிப்படுத்த போகிறோம்? தம்மையே ஆராதித்த நெபுகாத்நேச்சர் முன் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ தம் பக்தி வைராக்கியத்தைக் காட்டியதுபோல், பாவ இச்சைக்குள் விழுந்து வீழ்ச்சியை சந்தித்த இஸ்ரவேலுக்குள் எழும்பிய பினேகாரை போல பக்தியோடு எழும்ப வேண்டியது நமது கடமை. தம்மையே ஆராதிக்கிற மக்களுக்கு முன் இறைவனை ஆராதிக்கிறதின் மகிமையை நாம் பகிரவேண்டும்.

**3. மூன்றாம் குழு: தம்மை வெறுமையாக்குகிற குழு** (மத். 22: 10)

இன்று வாழும் சமூகத்தில், மிக சிறப்பானவர்கள் இவர்கள். உப்பை போல் ஒளியைப் போல் தமக்காக வாழாமல் பிறருக்காய் வாழ்பவர்கள் இவர்கள். அந்த திருமண அரங்கம் திருமண ஆடை அணிந்த விருந்தாளிகளால் நிறைந்திருந்தது என்றால் அதன் ஆழமான கருத்து என்ன? திருமண ஆடை

அணிந்தவர்கள், அவர்களின் உடல் அளவுக்கு ஏற்றவாறு தைத்த, அளவான துணியை அணியவில்லை. மாறாக ஏதோ ஒரு அளவில், ஏதோ ஒரு வடிவில் இருந்த ஆடையை, தம் விருப்பத்துக்கு ஏற்றவாறு அணியாமல், திருமண வீட்டாரின் விருப்பத்துக்காக அணிந்தவர்கள். இவர்கள் தங்கள் அழகை நோக்காமல் கல்யாண வீட்டாரின் சந்தோஷத்திற்காய் அணிந்து வந்தார்கள்.

பல்சமய சூழலில், பல மக்கள் வாழும் இடத்தில் இவர்களைப் போல் வாழவேண்டும். நம் விருப்பத்தை முதன்மைப்படுத்தி வாழ்வது அல்ல. பிறரின் விருப்பம். பிறரின் சந்தோஷம், பிறரின் சூழல் இவைகளை மனதில் கொண்டு செயல்படவேண்டும். ரூத்-நகோமியின் விருப்பத்திற்காய்ப் பெரிய தியாகத்தை ஏற்று பெத்லகேம் வருகிறார். பிரிஸ்கில்லா ஆக்கில்லாவின் சந்தோஷத்துக்காய் ரோமை விட்டு வெளியே வருகிறார். இயேசு கிறிஸ்துவும் தம சந்தோஷத்திற்காய் அல்ல, பிறரின் சந்தோஷத்தை முதன்மைபடுத்திச் செயல்பட்டார். நாமும் அவ்வாறு வாழ்வோம். ஆமென்.

**அருள்திரு. P. ராஜா ஸ்டாலின்**

# அமைதி அருளும் ஆண்டவர்

ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக ! எண். 6: 26.

குருகுலம் ஒன்றில் குரு தனது மாணவர்களுக்கு ஓவியப் போட்டி ஒன்றை அறிவித்தார். ஓவியப் போட்டியில் குரு மாணவர்களிடம் அமைதி பற்றிய உங்கள் சிந்தனையை ஓவியமாய் வரையுங்கள் என்றார். ஒரு மாணவர் அழகான ஏரியை வரைந்திருந்தார். மற்றொருவர் பூக்களை வரைந்திருந்தார். இன்னொருவர் புறாக்களை வரைந்திருந்தார். எல்லாம் நன்றாக இருந்தது. கடைசியாக இருந்த மாணவரின் ஓவியத்தைப் பார்த்த குரு அவரைக் கட்டியணைத்துக் கொண்டார். அவர் வரைந்த ஓவியத்தில் கடலில் வானம் கறுத்த மேகங்களுடன் காணப்படுகின்றது. இடி மின்னலுடன் மழை பொழிகின்றது. காற்று பலமாக வீசுகிறது, பறவைகள் பயத்துடன் பறக்கின்றன, இவற்றிற்கிடையே கடலில் ஒரு கப்பலானது பிரச்சனைகளைச் சமாளித்து அமைதியாகச் செல்கிறது. பிரச்சனையும் போராட்டமும் இல்லாத இடத்தில் இருப்பதல்ல அமைதி. மாறாக இவைகளின் மத்தியில் எதற்கும் கலங்காமல் எதுவும் தன்னைப் பாதிக்கவிடாமல் உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி. எனவே நிதானமாக உள்ள கப்பல் பரிபூரணமான அமைதியில் இருக்கிறது என்றார். அனைத்து வசதிகளும் அமையப்பெற்று எந்த ஒரு பிரச்சனையும் இல்லாத ஒரு சூழலில் வாழ்வது அமைதியன்று. அது ஒரு வாழ்க்கையுமன்று. ஆயிரம் துன்பங்களுக்கு நடுவில் நிச்சயம் ஒருநாள் விடியும் என்று விடாமுயற்சியுடன் தினமும் உழைத்துக்கொண்டு வருகிறார்களே அவர்களிடம் இருப்பதுதான் அமைதி. எத்தனையோ பிரச்சனைகள் இருந்தாலும் யார் என்ன தொல்லைகள் தந்தாலும் தனக்கு நேரும் அவமானங்களை விட தான் எட்டவேண்டிய இலக்கே பெரியது என்று எதையும் பொருட்படுத்தாமல் கடந்து சென்று கொண்டிருக்கிறார்களே அவர்கள் உள்ளத்தில் உள்ளது தான் அமைதி என்றார் குரு.

பரப்பரப்பான இவ்வுலகத்தில் நாம் அனைவரும் தேடுவது அமைதி. எங்குப் பார்த்தாலும் அமைதியற்ற நிலையைக் காண்கிறோம். குடும்பங்களிலும் அமைதியற்ற தன்மை. நாடுகளுக்கு இடையே அமைதியற்ற நிலை. ஏன் தனிமனித வாழ்விலும் கூட அமைதியிழந்த நிலை. அமைதி என்பது வெளிப்புறத்தில் ஒலிகள் எதுவும் இல்லாத நிலையைக் குறிப்பதன்று; மாறாக, நம் ஆழ்மனத்தில் சலனமில்லாத ஒரு நிலையைக் குறிப்பதாகும். இது ஆழ்கடலில் நிலவும் அமைதியைப் போன்றது. நம்மைச் சுற்றியும் நமக்குள்ளும்

எவ்வளவுதான் போராட்டங்களும் பிரச்சினைகளும் எழுந்தாலும் நம் மனது சலனப்படாமல், நம் இயல்பு வாழ்வு பாதிக்கப்படாமல் வாழ வழிவகுப்பதே உண்மையான அமைதி. இத்தகைய அமைதி கடவுளிடமிருந்து மட்டுமே வருகிறது. கடவுளின் அமைதி (Shalom) என்பது நீதி, நேர்மை, முழுமை, நல்மனம், மகிழ்ச்சி, பரிவிரக்கம், பகிர்தல், நல்லிணக்கம் ஆகியவற்றைக் குறிக்கின்றது. மனிதனைப் படைத்த கடவுள் மனிதர்கள் அமைதியோடு வாழ வேண்டும் என்பதைத்தான் விரும்புகின்றார்.

ஆனால் நம்முடைய உலக நாட்டங்கள், பலவீனங்கள், கடவுளின் உடனிருப்பைக் கண்டுணராத நிலை போன்ற பல காரணங்களினால் நிறைவான அமைதியை இழந்து தவிக்கிறோம். கடவுளுடன் நிலைத்திருந்து அவருடைய உடனிருப்பை உணரும் போது நம் மனது சலனப்படாமல் உள்ளான அமைதியை முழுமையாக உணர்ந்து கொள்ளும். அத்தகைய கடவுள் தரும் அமைதியைப் பெற நம் வாழ்வைப் பக்குவப்படுத்துவோம். கடவுள் மோசேயின் வழியாக ஆரோனுக்கும் அவரது வழித்தோன்றல்களுக்கும், தலைவர்கள் மக்களை எவ்வாறு ஆசீர்வதிக்க வேண்டுமென்று சொன்ன வார்த்தை தான், “ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக” (எண். 6: 26) என்ற ஆசி. இதனை அடிப்படையாக கொண்டு கடவுள் எப்படி அமைதியைத் தருகிறார்? என்பதை தியானம் செய்யலாம்.

### 1. பாதுகாத்து அமைதி அருளுகிறார்

“ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக.” எண். 6: 24

பாதுகாப்பு என்பது மனித வாழ்க்கையில் மிக முக்கியமானது. பாதுகாப்பை நாம் அமைதியுடன் ஒப்பிடலாம். எப்படியென்றால் பாதுகாப்புடன் வாழ்வதென்பது நாம் அமைதியுடன் வாழ்வதற்குச் சமமாகும். “ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக.” ஆசீர்வாதங்கள் என்பது கடவுளிடமிருந்து நமக்குத் தரப்படுகிறது. ஏனென்றால் படைத்தவர் கடவுள் படைப்பு கடவுளுக்குரியது. பாதுகாப்பது, படைத்தவற்றைத் தமது ஆசியால் நிரப்புவது ஆகியன கடவுளுக்குரியனவாக இருப்பதை திருமறை நமக்கு உணர்த்துகின்றது. “விண்ணையும் மண்ணையும் உருவாக்கியவர் அவரே”. மனிதன் வாழ்வதற்காக எல்லாவற்றையும் படைத்த கடவுள் அவன் வாழ்வதற்காக ஆசீர்வாதங்களையும், தருகின்றார். அந்த ஆசீர்வாதங்களில் மிக முக்கியமானது பாதுகாப்பு. “உமது கண்ணின் மணியென என்னைக் காத்தருளும் உம்முடைய சிறகுகளின் நிழலில் என்னை மூடிக்கொள்ளும்.” “ஆண்டவரே, மாயும் மனிதரிடமிருந்து, இவ்வுலகமே தங்கள் கதியென வாழ்ந்து மாயும் மனிதரிடமிருந்து, உமது கை வலிமையினால் என்னைக் காப்பாற்றும்”

(திருப்பாடல் 17: 8, 14) என்ற வசனங்கள் கடவுளின் காப்பாற்றும் செயலுக்குச் சான்று பகர்கின்றன. அன்று இஸ்ரவேல் மக்களுடைய அமைதியற்ற, குழப்பங்கள் நிறைந்த பாலைவன பயணத்திலும் அவருடைய பாதுகாக்கும் கரம் அவர்களோடிருந்தது. மக்களோடு அவர் இருந்ததால் செங்கடல் ஒதுங்கி நின்றது. ஆண்டவர், பகலில் அவர்களை வழிநடத்த மேகத் தூணிலும், இரவில் ஒளிகாட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார். பகலிலும் இரவிலும் பாலைவன வெயிலில் இருந்து அவர்களைப் பாதுகாக்க மேகத் தூணும், இரவில் பாலைவன குளிருக்கும் இருட்டுக்கும் பாதுகாக்க நெருப்புத் தூணும் மக்களைவிட்டு அகலவேயில்லை. அப்படி பாதுகாத்து வழி நடத்திய இறைவன் அமைதியாய் அவர்களை வழிநடத்தினார்.

நாம் பாதுகாப்பு இல்லாத உலகத்திலே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எந்தக் காரியத்திலும் எந்த இடர் வந்தாலும் எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார். அவர் நம்மோடு இருந்து நம்மைக் காப்பார். தீங்குக்கு விலக்கிப் பாதுகாப்பார். காப்பாற்றுகின்ற கடவுள் நமக்கு ஆசி தந்து அமைதியாய் நடத்துவார்.

## 2. கிருபையினால் அமைதி வழங்குகிறார்

“ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன்மீது அருள்பொழிவாராக.” (எண். 6: 25)

கடவுள் தருகின்ற அமைதி கிருபையோடு தொடர்புடையது. அவர் தம்முடைய கிருபையினால் அமைதி வழங்குகிறார். கிருபை என்பது தகுதியில்லாதவனுக்கு தரப்படுவது. அமைதிக்காக காத்திருக்கின்ற மனித வாழ்க்கையில் அவருடைய கிருபையினால் அமைதி தருகிறார். கிருபை என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் மையக் கருத்தாகும். இந்தக் கிருபையை நாம் அனுபவிக்கும் போது, அது நம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது நமக்கு அமைதியைத் தருகிறது. கிருபையின் வழியாகத் தான் நாம் கடவுளால் தெரிந்துக் கொள்ளப்பட்டிருக்கிறோம், மன்னிக்கப் பட்டிருக்கிறோம், மீட்கப்பட்டிருக்கிறோம், அவருடன் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். இது கடவுள் நமக்குத் தருகின்ற தயவும் அன்பும் ஆகும். வாழ்க்கையின் சவால்கள் மற்றும் நிச்சயமற்ற நிலைகளுக்கு மத்தியிலும் கூட கடவுளின் கிருபை நமக்கு உதவி செய்கிறது. எபேசியர் 2: 8-ல் “நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள் இது உங்கள் செயல் அல்ல மாறாக இது கடவுளின் கொடை.” இது கடவுளின் அளவற்ற அன்பாலும் கருணையாலும் நமக்குத் தரப்பட்ட அருட்கொடை. கடவுளின் கிருபையின் ஆழத்தை நாம் உண்மையாகப் புரிந்துகொள்ளும்போது, அது எல்லாப் புரிதலையும் மிஞ்சும்

அமைதி உணர்வைத் தருகிறது. உரோமையர் 5: 1-ல், "ஆகையால், நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள நாம், நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம்" என்று கூறுகிறது. இயேசுவின் வழியாக அவர் அருளிய கிருபையினாலே நாம் கடவுளோடு சமாதானமாக இருக்கமுடியும் என்பதை இந்த வசனம் நமக்கு நினைவூட்டுகிறது. நாம் இனி நம்பிக்கையுடன் அவரை நெருங்கிச் சேரலாம்.

வாழ்க்கையின் சவால்களை நாம் கடந்து செல்லும்போது, சில தருணங்களில் நம் வாழ்க்கையில் அமைதியை இழந்துவிடுகிறோம். ஆனால் நாம் கடவுளின் கிருபையில் நங்கூரமிடும்போது, நம் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்ட அமைதியை நாம் அனுபவிக்க முடியும். கடவுள் நம்முடன் இருக்கிறார், நம்மை வழிநடத்துகிறார், ஒவ்வொரு புயலிலும் நம்மைச் சுமந்து செல்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்வதில் நாம் ஆறுதலையும் வலிமையையும் காணலாம். எனவே, கடவுளின் கிருபையை நாடி, நம் வாழ்வில் அமைதியைக் கொண்டுவர அனுமதிப்போம். அவருடைய அன்பு மற்றும் மன்னிப்பின் நிச்சயத்தில் இளைப்பாறுவோம். அமைதி நிறைந்த உலகை உருவாக்கி, அதே கருணையை மற்றவர்களுக்கும் வழங்குவோம்.

**திரு. P.C. பெறின் போப்பி**

# இயேசுவே குரு

## Jesus the Guru

நீமொ. 4: 1-19 திப. 22: 1-5

திபா. 141 லூக். 4: 31-44

". . . இயேசு கலிலேயாவிலுள்ள கப்பர் நாகூம் ஊருக்குச் சென்று, ஓய்வுநாள்களில் மக்களுக்குக் கற்பித்து வந்தார்." (லூக். 4: 31)

கல்வி என்பது அறியாமையையும், மூடப்பழக்க வழக்கங்களையும், தவறான நம்பிக்கைகளையும் மாற்றி அறிவுப்பூர்வமாக சிந்திக்க வைப்பது ஆகும். பண்டைய நாள்களில் மரத்தினுடைய இலை ஆடும்போது "பேய் ஆட்டுகிறது" என்று கூறினர். அன்று ஒருவர் திடீரென்று இறக்கும்போது "வாதை அடித்தது" என்று கூறினர். இன்று அது 'Cardiac Arrest' என்று கூறுகின்றனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் மும்பையிலிருந்து தானே வரை முதல் ரெயில் தண்டவாளத்தைப் போட்டபோது, இந்திய மக்கள் எல்லாரையும் Belt போட்டு கட்டி இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லுகிறார்கள் என்று கூறினர். ஆனால் இன்று ரெயில்வே துறையின் வளர்ச்சியைக் கண்டு உலகமே வியந்து நிற்கிறது. நல்லுள்ளம் கொண்ட நற்செய்தியாளர்கள், நற்செய்தியைக் கல்வியோடு நமக்குத் தந்தனர். அரிஸ்டாட்டில், "எதையுமே அறிவுப்பூர்வமாக பாருங்கள்" என்று கூறினார்.

கற்றுக் கொடுத்தலைக் குறிக்கும் லிம்மெட் (Limmed) என்ற எபிரெயச் சொல். "தாம் அறிந்தவற்றை முறையாக மற்றவர்க்குக் கற்பித்தல்" (சஉ. 12: 9). "நல்வழிகளைக் கற்றுக் கொடுத்தல்" (திபா. 51: 13; எரே. 2: 33), "நியமங்கள், முறைமைகளைக் கற்பித்தல்" (இச. 4: 5), "பேசுவதற்குக் கற்றுக் கொடுத்தல்" (எரே. 9: 4), "ஆண்டவருடைய வார்த்தைகளைக் கற்றுக் கொடுத்தல்" (இச. 11: 19) "திருச்சட்ட நூல்களைக் கற்றுக் கொடுத்தல்" (2 குறி. 17: 7-9) ஆகிய பொருள்களைக் கொண்டுள்ளது.

ஹோரா (Horah) என்னும் வேறொரு எபிரெயச் சொல், "சரியான வழிகளைக் கற்பிப்பது" (2 அர. 12: 3), "எதைச் சொல்லுவது எனக் கற்பித்தல்" (விப. 4: 12) "நல்ல, நேரிய வழிகளைக் கற்பிப்பது" (1 சாமு. 12: 23), "ஆண்டவருக்கு அஞ்சி வாழும் முறையைக் கற்பிப்பது" (2 அரச. 17: 28) "கடவுளின் சட்டங்கள் முறைமைகளைக் கற்றுக் கொடுப்பது" (லேவி. 14: 57) ஆகிய பொருள்களைக் குறிக்க பயன்படுத்தப் பெற்றுள்ளது. இதன் பெயர்ச்

சொல் தோரா. இதன் பொருள் "கற்பித்தல்" அல்லது "போதித்தல்" என்பதாகும். இன்றைய திருமறைப்பாடங்களின் வழியாக இன்றைய தியானத்திற்கு நம்மை திருப்பிக் கொள்வோம்.

**1. ஞானத்தைக் கற்றுக் கொடுக்கும் குருவாகிய சாலமோன்** (நீமொ. 4:1-19)

சாலமோன் எழுதிய நீதிமொழிகள் நூல் ஒழுக்கத்தையும் சமயத்தையும் சார்ந்த போதனைகளையும் தருகின்றது. இவை அன்றாட வாழ்வையும் நடைமுறை வழக்கையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. சமய ஒழுக்கம் பற்றியும் நல்லறிவு, நன்னடத்தை ஆகியவையும் வலியுறுத்தப்படுகின்றன. மேலும் குடும்ப உறவுகள், சமூக உறவுகள், தற்கட்டுப்பாடு, மனத்தாழ்மை, பொறுமை ஏழையர் பால் அன்பு, மாறாத நட்பு ஆகிய பண்புகளை எடுத்தாளுகின்றது. "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" எனத் தொடங்கி முதல் ஒன்பது அதிகாரங்கள் ஞானம் பற்றிய புகழுரையை எடுத்துரைக்கின்றது. இன்றைய தியானத்தின் முதலாம் திருமறைப்பாடம் ஞானத்தினால் வரும் நன்மைகளைப் பற்றி விளக்குகின்றது. ஞானம் என்பதற்கான எபிரெயச் சொல் "ஹோக்மா" (Hokmah) என்றழைக்கப்படுகிறது. ஞானம், "வாழ்வை எப்படி வாழ்வது" என்ற அடிப்படை வழிமுறைகளைத் தந்து, வாழ்வை நலமாக்கி வெற்றியடைய செய்வது ஆகும்.

ஞானத்தையும் மெய்யுணர்வையும் தேடிப் பெறு. ஞானத்தைப் புறக்கணியாதே; அது உன்னைப் பாதுகாக்கும்; அதை அடைவதில் நாட்டங்கொள்; அது உன்னைக் காவல் செய்யும்; அது உன்னை உயர்த்தும்; அது உன்னை மாண்புறச் செய்யும்; ஞானத்தின் வழிகளில் நடக்கிறபோது கால் சறுக்காது; நீ ஓடினாலும் இடறி விழமாட்டாய். அது உயிரளிக்கும்; உடல் நலம் தரும் போன்ற ஞானம் சார்ந்த நல்ல கற்பிதங்களைச் சாலமோன் வழங்கியுள்ளார்.

**2. திருச்சட்டங்களைக் (நியாயப் பிரமாணம்) கற்றுக் கொடுக்கும் குருவாகிய பவுல்** (திப. 22: 1-5)

இன்றைய இரண்டாம் திருமறைப் பாடத்தில் பவுல் தம்மைக் குறித்து விளக்கம் கொடுக்கிறார். யூத பிறப்பையும் இரபிகளிடம் கல்வி கற்ற நிலையினையும் எடுத்துரைக்கிறார். ஹில்லேல் பிரிவினைச் சேர்ந்த கமாலியேலிடம் கல்வி கற்றார். கமாலியேலின் காலடியில் அமர்ந்து தந்தையரின் திருச்சட்டங்களால் அறிவை நுட்பமாக பெற்றவர்.

திருச்சட்டங்களை இயேசு திருச்சட்ட அறிஞருக்குக் கற்றுக்கொடுகிறார். ஒரு திருச்சட்ட அறிஞர் இயேசுவிடத்தில் வந்து போதகரே, நிலைவாழ்வை

உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார். அதற்கு இயேசு, திருச்சட்ட நூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கிறீர் என்று அவரிடம் கேட்டார். அவர் மறுமொழியாக, உன்முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூருவாயாக என்று பதிலளித்தார். அதற்கு இயேசு "சரியாய்ச் சொன்னீர் அப்படியே செய்யும். அப்பொழுது வாழ்வீர்" என்றார். இயேசு கூறின திருச்சட்டங்களைப் பவுலும் பல திருச்சபைகளுக்கு எழுதினார். திருச்சட்டம் கற்பிக்கும் ஒழுக்க நெறி தங்கள் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தங்கள் நடத்தையில் காட்டுகிறார்கள் (உரோ. 2: 15, 19; 3: 20, 28; 7: 14; கலா. 3: 12; 3; 1திமொ. 1: 9, 10).

நாமும் திருச்சட்டங்களைக் கற்றுக் கடைப்பிடித்து வாழுவோம்.

**3. வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் தலைமைக்குருவாகிய இயேசு** (லூக். 4: 31-44)

இயேசு கலிலேயாவிலுள்ள கப்பர் நாகூம் ஊருக்குச் சென்று, ஓய்வுநாள்களில் நற்செய்தியை வாழ்க்கைப் பாடமாக மக்களுக்குக் கற்பித்து வந்தார். அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் அதிகாரத்தோடு கற்பித்தார். இயேசு கப்பர் நாகூம் மட்டுமல்ல மற்ற ஊர்களுக்கும் வாழ்க்கைப் பாடமாகிய இறையாட்சியைக் குறித்து யூதேயாவிலுள்ள தொழுகைக்கூடங்களில் பறைசாற்றியும் கற்பித்தும் வந்தார்.

கல்வி ஞாயிறு தொழுகையில் பங்கேற்றிருக்கும் நாம் ஞானத்தின் நன்மைகளைப் பெற்று, திருச்சட்டங்களை அறிந்தும் அதன்படி வாழ்ந்தும் வாழ்க்கைப் பாடங்களைக் கற்றும் ஆன்மிக நிலையில் சிறந்தும் வாழ்வோம்.

அருள்திரு. **T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

# கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பெண் பங்காளர்கள்

## Women Partners in God's Liberative Act

விப. 1: 15-22 உரோ. 16: 1-16

திபா. 148 மாற். 15: 37-41

. . . அவருடன் எருசலேமுக்கு வந்திருந்த வேறு பல பெண்களும் அங்கே இருந்தார்கள் (மாற். 15: 41(b))

விடுதலை உணர்வு என்பது ஒவ்வொரு மனிதனின் உயிர்மூச்சோடு கலந்தது. இருளில் வாழ்வோர் விடியலையும், சிறையில் வாழ்வோர் விடுதலையையும் தேடுவது தவிர்க்க முடியாதது. அடிமைத்தனத்தை யாரும் விரும்புவதில்லை. கூண்டில் அடைக்கப்பட்ட அரசனாக இருப்பதை விட சுதந்தர பறவையாக இருப்பது நல்லது என்கிறது டேனிஷ் பழமொழி. அமைதியான அடிமைதனத்தை விட ஆபத்தான சுதந்தரம் மேலானது என்கிறார் பிடல் காஸ்ட்ரோ. இதை நன்கு உணர்ந்த இயேசு தமது பணி வாழ்வின் நோக்கமாக பல்வேறு விதமான மனிதர்களுக்குத் தாம் அளிக்க இருக்கும் விடுதலையைப் பற்றி லூக்கா 4: 18, 19-ல் தெளிவுபடுத்துகிறார். தமது விடுதலைப் பணியில் தம் பணியை நிறைவேற்ற சீடர்களைத் தெரிவு செய்து பயிற்றுவித்துப் பயன்படுத்துகிறார். இயேசு கிறிஸ்து தமது மீட்பின் பணிவிடைத் திட்டத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடு பாராமல் அனைவரையும் பயன்படுத்துகிறார் என்பதினை இன்றைய திருமறைப் பகுதிகள் நமக்கு விளக்கமாக கற்றுத் தருகின்றன.

யூத பாரம்பரியத்தில் பெண்கள் இரண்டாம் நிலையினராகக் கருதப்பட்டனர். ஏனெனில் யூத ரபி பொது மக்கள் மத்தியில் தன் மனைவியுடன் பேச மாட்டார். இந்த சூழலில் தான் இயேசு நாதர் தமது விடுதலைப் பணியில் பெண்களை மிகவும் அதிகமாக தம்முடன் பயன்படுத்தினார். இவ்வாறு கடவுளுடன் விடுதலைப் பணியில் இணைந்து செயல்பட்ட ஒரு சில பெண்களைப் பற்றி பின்வரும் பகுதியில் தெளிவுடன் காண்போம்.

### 1. விடுதலைப் பணியில் வீரமுடன் செயல்பட்ட பெண்கள் (விப. 1:17)

"ஆனால் அந்த மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், எகிப்திய மன்னன் தங்களுக்குக் கூறியிருந்தபடி செய்யவில்லை, மாறாக, ஆண் குழந்தைகளையும் அவர்கள் வாழவிட்டார்கள்."

விடுதலைப் பணிக்கு வீரம் என்பது மிகவும் தேவையானது. எனவே தான் விடுதலைப் பணியில் செயல்படும் பணிவிடைக்காரர்களை, வீறுகொள், துணிந்து நில் என்று ஆண்டவர் தைரியப்படுத்துவதைத் திருமறையில் நாம் கற்றுக்கொள்கிறோம் (யோசுவா 1: 6). இயேசு கிறிஸ்துவும் விடுதலைப் பணியில் ஈடுபடும் சீடர்களை, “நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்” என்று தேறுதல் படுத்துவதையும் திருமறைப் பகுதியில் நாம் காணலாம். (லூக். 24: 38). அச்சமில்லை, அச்சம் என்பது இல்லையே, உச்சி மீது வானம் இடிந்து வீழ்ந்தாலும் அச்சம் என்பது இல்லையே, என்பது பாரதியாருடைய பாடல். எனவே விடுதலைப் பணிக்கு வீரமுடன் செயல்படுதல் விடியலைக் கொண்டு வரும்.

எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்களின் அடிமைத்தனம் பெருகினது. இஸ்ரயேலர் தங்களது சுய அடையாளங்களை இழந்து நின்றனர். இதனுடைய வெளிப்பாடு தான் இஸ்ரயேலர் ஈன்றெடுக்கும் ஆண் குழந்தைகளைக் கொலை செய்ய வேண்டும் என்பதே சிப்பிராள், பூவாள் என்ற இரு தாதியர்களுக்கும் தரப்பட்ட அரசு ஆணையாகும். சிப்பிராள் என்றால் “அழகு” என்றும் பூவாள் என்றால் “வாய்” என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. அரசு ஆணை கடினமாய் இருந்தாலும் இஸ்ரவேலர் தப்புவிக்கப்படவில்லை என்றால், இஸ்ரவேல் சந்ததியே அழிந்துவிடும் என்ற அச்சத்தால் தாதிய பெண்மணிகள் அரசனையும், அரசு ஆணையையும் குறித்து அச்சப்படாமல் வீரமுடன் இஸ்ரவேலருக்குப் பிறந்த ஆண் குழந்தைகளைத் தப்புவிக்கச் செய்கின்றனர்.

பிசாசு தனது சூழ்ச்சியினை நிறைவேற்ற சரியான நபர்களையே அணுகினான். தாதியர் ஒரு இக்கட்டான நிலையில் வைக்கப்பட்டார்கள். ராஜாவுக்குக் கீழ்ப்படிவதா? இல்லை, பலுகிப் பெருகுங்கள் என்று ஆசீர்வதித்துக் கட்டளையிட்ட கடவுளுக்குக் கீழ்ப்படிவதா? மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படி என்று போதிக்கும் திருமறையே (உரோ. 13: 1) கொலை செய்யாதிருப்பாயாக என்றும் கூறவில்லையா? (விப. 20: 13) கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனசாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டுமே (உரோ. 13: 5). தங்கள் உயிருக்கு ஆபத்து நெருங்கி விட்டது என்று தெரிந்தும் சிப்பிராளும், பூவாளும் தமக்கு உகந்த ஒரு சமுதாயத்தை எழுப்பிக் கொண்டிருக்கும் கடவுளின் திட்டத்தில் அவருடன் சேர்ந்து செயல்படத் தீர்மானித்தார்கள். மருத்துவச்சிகள் சர்வாதிகாரியான பார்வோனுக்குப் பயப்படுவதைப் பார்க்கிலும் சர்வலோக அதிபதியாகிய கடவுளுக்கு பயப்படுவதைத் தெரிந்துகொண்டார்கள்.

குழந்தைகள் (விசேஷமாக பெண் பிள்ளைகள்) கொலை செய்யப்படுதல் இன்று சமுதாயக் கொடுமையாக மாறி வருகிறது. கடவுளுக்கு முன்பாக ஆண்

பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் சமம், இருபாலரும் கடவுளின் சுதந்தரம் என்று நாம் நமது சமுதாயத்திற்குப் போதிக்க கடமைப்பட்டுள்ளோம். இன்று கருச்சிதைப்பு உலகின் பல பாகங்களில் சட்ட ரீதியானது. இது பிசாசுக்குச் செலுத்தப்படும் நரபலி என்று டாக்டர் ரெபெக்கா பிரெளன் கூறுகிறார். கானானிலிருந்த பாகாலின் கோவிலில் பல குழந்தைகளின் எலும்புகள் இருந்ததாகப் புதை பொருள் ஆராய்ச்சி கூறுகிறது. ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக நாம் அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு ஆலோசனை கூறி இறைத்திட்டத்தில் வழி நடத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**2. விடுதலைப் பணியில் ஆர்வத்துடன் பணி செய்த பெண்கள்** (மாற். 15:41)

"இயேசு கலிலேயாவில் இருந்த போது அவர்கள் அவரைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்து வந்தவர்கள், அவருடன் எருசலேமுக்கு வந்திருந்த வேறு பல பெண்களும் அங்கே இருந்தார்கள்."

"ஆர்வம்" என்னும் சொல் "வாஞ்சை" அல்லது "விருப்பம்" என வேறு பொருளையும் தருகிறது. விடுதலைப் பணி என்பது கட்டாயத்தின் பெயரிலோ, வற்புறுத்தலின் பெயரிலோ நிறைவேற்றப்பட வேண்டிய பணியன்று. விடுதலைப் பணியைக் கட்டாயத்தின் பெயரிலோ, வற்புறுத்தலின் பெயரிலோ நிறைவேற்றினால் பாடுகளும், தடைகளும் வருகின்ற போது விடுதலை பணிவிடைக் களத்தை விட்டே பின்வாங்கிப் போவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால் உள்மனதின் உத்வேகத்துடன் விடுதலைப் பணியை நிறைவேற்றும் போது தடைகளும் வேதனைகளும் வெற்றிப் பயணத்தில் படிக்கட்டுகளாக மாற்றம் பெறுகின்றன.

இயேசு நாதர் ஆண் ஆதிக்கம் நிறைந்த காலச் சூழலில் தம்முடைய திருப்பணிவிடையை நிறைவேற்றிய போது பெண்களைத் தமது சீடர்களாக கொண்டிருப்பது விடுதலை பணியினுடைய மாற்றுருவாக்கம் ஆகும் (லூக். 8: 1-3). ஏனெனில் சமயங்களில் பெண்கள் என்பவர்கள் கடை நிலையினராகக் கண்டு கொள்ளப்பட்டனர்.

சீனர்கள் பெண்ணுக்கு ஆன்மாவே இல்லை என்றனர். எனவே கணவன் மனைவியைக் கொன்றால் அது கொலைக்குற்றமாகக் கருதப்படவில்லை. வயலிலிருந்து வேண்டாத களையைப் பிடுங்கி எறிந்தது போலக் கருதப்பட்டனர்.

இந்தியாவில் பெண் மறைநூலை கேட்கக்கூடாது என்று தடை செய்தனர்.

புத்தர் பெண்களுக்குத் தீட்சை கொடுக்கத் தயங்கினார். பெண் சந்நியாசிகளை உள்ளே விட்டால் ஆண் சந்நியாசிகள் கெட்டுப்போகலாம் என்று அஞ்சினார்.

மகா வீரரோ, “பெண் ஞானம் பெற முடியாது. அவள் நல்வினைகள் செய்து அதன் பலனாய் அடுத்தபிறப்பில் ஆணாகப் பிறக்க வேண்டும், பிறகு ஞானம் பெற முயலலாம்” என்றார்.

எந்த சமணமதம் பெண்கள் ஞானம் பெற முடியாது என்று சொன்னதோ அதே மதத்தில் ஒரு பெண் ஞானி தோன்றினார். பெயர் மல்லிபாய். சமணர்கள் வேறுவழியில்லாமல் அவரை இருபத்தி நான்காவது தீர்த்தங்கரராக ஏற்றுக்கொண்டனர். ஆனால் காலப்போக்கில் அவள் பெயரை மல்லிநாதர் என்று ஆண்பெயராய் மாற்றி அவருடைய உருவத்தையும் ஆண் உருவமாய் செதுக்கி வைத்து விட்டனர். இதுதான் சமயங்களும் சமூகங்களும் பெண்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம். ஆனால் இயேசுவோ ஆணாதிக்க மமதையில் மூழ்கியிருந்த யூத சமூகத்தில் பெண்களைத் தம் சீடர்களாகக் கொண்டிருந்ததை விளக்குகிறது இன்றைய வாசகம்,

தூங்கிக் கொண்டிருக்கும் பெண் எழுந்தால் மலையும் இடம் பெயரும் - என்று சீனப் பழமொழி கூறுகிறது.

இவ்விதம் கலிலேயாவில் இயேசுநாதரின் பணிவிடையில் உடன் இருந்த பெண்கள் கல்வாரி நிகழ்விலும் உடன் இருப்பதை மாற். 10: 40, 41 விளக்கிச் சொல்கிறது.

லூக். 8: 3-இல் இயேசு கிறிஸ்துவின் விடுதலைப் பணியில் வாஞ்சை கொண்ட பெண்கள் தங்களது ஆஸ்தி முழுவதையும் விற்று ஆண்டவருடைய விடுதலைப் பணிவிடைக்கு ஆதரவாய் இருப்பதைக் கற்றுக் கொள்கிறோம்.

லூக். 7: 36-50-இல் குறிப்பிடப்பட்ட பாவியான பெண்மணி தன்னுடைய வாழ்வின் முழு ஆதாரத்தையும் ஒன்று திரட்டி இயேசு கிறிஸ்துவின் திருப்பாதத்தில் நளத தைலம் பூசி இயேசு கிறிஸ்துவிற்கு விடுதலைப் பணியில் ஆதரவாயிருப்பது பார்போற்றும் பணிவிடையாகும்.

இந்நிகழ்வுகள் எல்லாம் விடுதலைப் பணியில் பெண்கள் காட்டிய ஆர்வத்தினை நமக்கு விளக்கி சொல்லுகின்றன.

**3. விடுதலைப் பணியில் ஆதரவு தந்த பெண்கள்** (உரோ. 16: 3)

“கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்ற பிரிஸ்காவுக்கும் ஆக்கிலாவுக்கும் என் வாழ்த்து.”

விடுதலைப் பணியில் வலுவுடன் பணி செய்த திருப்பணிவிடையாளர்களில் பவுலடியார் முதன்மை பெறுகிறார். இவர் ரோமாபுரியருக்கு கடிதம் எழுதுகின்ற போது ஒரு சில பெண்மணிகளை

வாழ்த்தும்படி அறிவுரை வழங்குகிறார். ஏனெனில் இங்குச் சொல்லப்படும் பவுலடியாரின் விடுதலைப் பணிவிடைக்கு ஆதரவாயிருந்தவர்களில் முதன்மையானவர் பிரிஸ்கா. பவுலடியார் தமது இரண்டாவது அருட்பணி பயணத்தில் பிரிஸ்கா குடும்பத்தாரைக் கொரிந்து பட்டணத்தில் வைத்து சந்திக்கிறார். இச்சந்திப்பின் போது மீட்பின் பணிவிடைத் திட்டத்தை நிறைவேற்ற பிரிஸ்கா குடும்பத்தவர் விடுதலைப் பணியில் எப்படி பணியாற்றினார்கள் என்பதினை உரோ. 16: 3, 4 விளக்குகின்றன. இல்லத்தை இறை இல்லமாக மாற்றிய பெருமை இப்பெண்மணியைச் சாரும்.

விடுதலைப் பணிவிடைத் திட்டத்தில் அப்பொல்லோவை உருவாக்கிய பெருமை பிரிஸ்கா குடும்பத்தவரைச் சாரும். ஆக்கில்லா பிரிஸ்கில்லா எபேசுவுக்கு பவுலுடன் வந்தார்கள். பவுல் அவர்களை எபேசுவில் விட்டு விட்டு வேறு இடங்களுக்குப் போனார். அவர்கள் அங்குள்ள தொழுகைக்கூடத்திற்கு வந்தபோது அப்பொல்லோ என்னும் மறைநூலில் வல்லவரான சாதுரியவானைக் கண்டார்கள். திருமுழுக்கு யோவான் ஸ்நாபகன் வழியாக வெளிப்பட்ட இறைத் திட்டத்தை மட்டும் அறிந்திருந்த இவர் பெற்ற வெளிச்சத்தை உடனே பிரசித்தப்படுத்தத் துணிவுடன் முன் வந்து தொழுகைக் கூடங்களுக்குப் போய் வாதங்களை முன் வைத்தார். வாக்கு வல்லமைமிக்க அவரது சொற்பொழிவில் ஒரு முழுமை இல்லாத தன்மை காணப்பட்டது. அதனைப் புரிந்து கொண்ட ஆக்கில்லா தம்பதியினர் இயேசு கிறிஸ்துவின் பூரண வெளிப்பாட்டை அவருக்குத் தெளிவாக விவரித்துக் கூறினர். பழைய ஏற்பாட்டு நிழலுருவத்தின்படி பிரசங்கித்துக் கொண்டிருந்தவரைப் புதிய ஏற்பாட்டு நிஜத்துக்குள் கொண்டு வந்தனர். அதன் விளைவாக அவர் தனது வாழ்வில் மாற்றம் பெற்றதுமன்றி தனது வார்த்தையால் பலரது வாழ்வில் மாற்றம் வரச்செய்தார். பவுல் நட்ட கொரிந்து சபையை, இவர் நீர்பாய்ச்சினார். கடவுள் தமது கிருபையாகிய ஒளியையும், காற்றையும் வீசச் செய்து (I கொரி. 3: 6). நல்ல விளைச்சலைக் கட்டளையிட இவர்களது செயலும் ஒரு காரணமாயிற்று. பவுலுக்கு நிகராக ஒரு தலைவனாக அப்பொல்லோ ஆதி சபையாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஒரு நடமாடும் நற்செய்தியாளராய், மறைநூல் உரைஞனாகவும் திகழ்ந்தார். அழிக்கிறவர் என்னும் அர்த்தம் கொள்ளும் அப்பொல்லோவை, சாத்தானின் கோட்டைகளைத் தகர்த்து இறை வார்த்தையால், இறையரசைக் கட்டும் பணியில் ஈடுபடுத்தியது இந்த விசுவாசக் குடும்பமே (தீத்து 3: 13).

பெண்கள் விடுதலைப் பணியில் வீரத்துடனும், வாஞ்சையுடனும், ஆதரவுடனும் செயல்பட்டதினால் இயேசு கிறிஸ்து இவர்களைத் தம் திருப்பணிக் களத்தில் பயன்படுத்தினார்.

மராட்டிய மன்னன் வீர சிவாஜி ஒரு கடுமையான போரில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியைக் கொண்டாட ஒரு மிகப்பெரிய விழா எடுக்கப்பட்டது. விழா தொடங்குவதற்குமுன் அந்த மேடையில் இரண்டு சிம்மாசனங்கள் போடப்பட்டிருந்தன அனைவருடைய சிந்தனைகளும், அந்த இருக்கைகளைச் சுற்றியே இருந்தன. ஒரு இருக்கை மன்னன் சிவாஜிக்கு என்பது எல்லோருக்கும் தெரியும்? மற்றொரு இருக்கை? இளவரசனுக்கா? மன்னனின் மனைவிக்கா? போரில் வெற்றிகொணர்ந்த தளபதிக்கா? அனைவரும் யோசித்துக் கொண்டிருந்தபோதே சிவாஜி தன் தாய் ஜீஜியோடு மேடையில் தோன்றி, தன் தாய்க்கு மற்றொரு இருக்கையைக் கொடுத்து தன் அன்னையைப் பெருமைப்படுத்தினார். எனவே நாமும் திருப்பணிவிடைக் களத்தில் பெண்களை மதிப்புடையவர்களாய்ப் பார்த்து பணிவிடை செய்ய அழைக்கப்படுகின்றோம்.

அருள்திருமதி. **பெபின் தங்கராஜ்**

***15.09.2024***

# என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன்

## My Peace I Give to You

செக். 8: 12-19 உரோ. 5: 1-5

திபா. 119: 161-176 யோவா. 16: 16-33

"என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன்." யோவா 16: 33.

அமைதியை வெளிப்படுத்தும் ஓர் ஓவியம் வரையும் போட்டி நடந்தது. பலர் கலந்து கொண்டனர். அலைகளற்ற கடல், கண்ணைக் கவரும் தோட்டம், அழகிய மலர்கள், அன்பான குடும்பம் என்று பல ஓவியங்கள் இருந்தன. அதனோடு இடி மின்னலுடன், புயல் காற்றினால் மரங்கள், வீடுகள் சேதமடைந்து இருக்க, அங்கு ஒரு மரத்தின் துவாரத்தில் ஒரு தாய்ப் பறவையும், குஞ்சுகளும் அன்போடு கொஞ்சுகின்ற ஓவியமும் காணப்பட்டது. இதில் என்ன அமைதி இருக்கிறது என்று ஓவியனை வினவினார். அவர் சொன்னார் அமைதி என்பது மயான அமைதி அன்று. இந்தக் கொடிய சூழலிலும் தன் தாய் தன்னுடன் இருப்பதால் அந்தக் குஞ்சுகள் எவ்வித பதட்டமும் இன்றி கவலையும் இன்றி மகிழ்ச்சியாய் இருக்கிறதே அதுதான் அமைதி என்றார்.

இன்று உலகில் பல தீமைகள், துன்பங்கள், கொடிய வியாதிகள் எனப் பல சவால்கள் நிறைந்த சூழலில் மனிதன் அமைதியின்றி வாழ்கின்றான். அமைதியான வாழ்வைத் தேடிய பயணமே மனித வாழ்வின் நெடிய பயணம். பணம், பொருள், செல்வம், இன்பம், பட்டம், பதவி இவைகளால் அமைதியான வாழ்வைத் தேடும் மனிதர்கள் தோல்வியடைகின்றனர். அந்தத் தோல்வி மனிதனில் நம்பிக்கையின்மை, தாழ்வு மனம், வேதனை, கசப்பு, கவலை, கலக்கம், மனஅழுத்தம், தன்னைத்தான் அழித்தல் என்ற பல பாதிப்புகளுக்குள் கொண்டு செல்கின்றது.

இன்றைய நற்செய்தி பகுதியில் இயேசு தம் சீடர்களிடம் தமது பாடு மரணத்தைக் கூறிய போது சீடர்கள் சோர்ந்து போனதையும் நம்பிக்கை இழந்து கலக்கமடைந்ததையும் கண்ட இயேசு அவர்களுக்கு நம்பிக்கையூட்டினார். நிலையான அமைதியைப் பெறும் வழிகளைக் கூறி, என் வழியாக நீங்கள் அமைதி காணும் பொருட்டு இவற்றைச் சொன்னேன் என்றார். இயேசுவின் இந்த வார்த்தை சீடர்களுக்கும் அமைதியைத் தேடி பயணிக்கும் அனைவர்க்கும் நம்பிக்கையின் வார்த்தையாக அமைந்துள்ளது. இச் செய்தியில்

அமைதியின்மைக்குக் காரணம் என்ன என்றும் உண்மையான அமைதியைப் பெற்றுக்கொள்ள வழி என்ன? என்றும் இத்திருமறை பகுதி வழி சிந்திப்போம்.

**1. இறைஉடனிருத்தலை இழப்பதால் ஏற்படும் அமைதியின்மை** (யோவான் 16: 16-20)

"இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காண மாட்டீர்கள்."

இயேசு கிறிஸ்து தம்முடைய பாடு மரணத்தைச் சீடர்களோடு பலமுறை கூறினார். அப்போது "இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காண மாட்டீர்கள்" என்றார் இவ்வார்த்தை கேட்ட சீடர்கள் கலக்கமடைந்து அமைதி இழந்தனர். சீடர்களின் அமைதி இழப்பிற்குக் காரணம் கடவுளின் திட்டத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததாகும். இனி இயேசு தங்களோடு இருக்கமாட்டார், அவருடைய உடனிருத்தலை இழந்து விடுவோம் என்பது சீடர்களைக் கலங்க செய்தது. ஆம் இறைவனின் உடன் இருத்தலை அதாவது இறை பிரசன்னத்தை மனிதன் இழந்திடும் போது அமைதியை இழக்கின்றான் என்பது உண்மை. இறைவன் நம்மோடு இல்லாத ஒவ்வொரு நிமிடமும் உண்மையான அமைதியும் மகிழ்வும் இல்லாத ஒன்றாக மாறுகின்றது.

மகிழ்வுடன் அமைதியான வாழ்வு வாழ்ந்த ஆதாம், ஏவாள் பாவத்தால் இறையுடனிருத்தலை இழந்தனர் அவர்கள் வாழ்வு அமைதியற்ற ஒன்றாய் மாறியது. இஸ்ரயேலின் முதல் அரசர் சவுல், நீதித் தலைவர் சிம்சோன் அமைதி இழந்திட காரணம் இறையுடனிருத்தலை இழந்ததாகும்.

இறைவாக்கினர் செக்கரியாவின் காலம் இஸ்ரவேலர் தங்கள் பாவத்தால் தங்கள் ஆலயம் தகர்க்கப்பட்டு அடிமைகளாய் வாழ்ந்த காலம். தங்களுடைய பாவங்களால் இறைப்பிரசன்னத்தை இழந்து விட்டோம் என்று துயரத்தோடு இருந்தவர்களைச் செக்கரியா வழியாக அமைதி வழங்கவும் இறையில்லத்தைத் திரும்பக் கட்டி எழுப்பவும் ஜனங்களை வழிநடத்தக் கூறுகின்றார் கடவுள். இழந்து போன அமைதியும், ஆசிகளும் மீண்டும் ஏற்படும் என்று வாக்குரைக்கின்றார். (செக். 8: 12-19).

நம்முடைய வாழ்விலும் இறைவன் நம்முடன் இருக்க தடையாய் இருப்பது பாவங்களே. அமைதி என்பது எந்தப் பிரச்சனையும் இல்லாத நிலையன்று. மாறாக இறைவன் பிரசன்னமாய் இருக்கின்ற நிலை (Peace is not the absence of trouble but the presence of God) இறையுடனிருத்தலை இழந்தால் அமைதியின்மை ஏற்படும் என்பதை உணர்ந்து இறைவன் நம்மை விட்டு விலகிடும் சூழல் ஏற்படாமல் இறைவன் விரும்பும் தூய வாழ்வால் இறைவன் நம்முடன் இருக்க நம்மை ஒப்படைப்போம்.

**2. இயேசு கிறிஸ்துவால் கிடைக்கும் உண்மையான அமைதி** (யோவா. 16:33)

"என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன்."

இறை மனித உறவு உடைவால் இறை பிரசன்னத்தை இழந்து அமைதியற்ற வாழ்வால் கலங்கிடும் மனிதர் அமைதியின் உறைவிடமான இறைவனில் சங்கமிக்கின்ற போது உண்மையான அமைதியைப் பெற முடியும் என்பதை இயேசுவின் அழைப்பு உறுதிப்படுத்துகிறது: "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11: 28). இயேசுவின் பிறப்பை முன்னுரைத்த இறைவாக்கினர் எசாயா அவரை "அமைதியின் அரசர்" ஆக வெளிப்படுத்துகிறார் (எசாயா 9: 6). இறைவாக்கினர் மீகா, "அமைதியின் காரணர் இறைவன்" என்கிறார் (மீகா 5: 5).

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்த விண்ணகத் தூதர்களும் உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்று லூக்கா 2: 14-இல் புகழ்ந்தனர். இயேசு தன் சிலுவை சாவின் வழியாக நிலையான அமைதி வாழ்வை ஏற்படுத்தினார் என்று கொலோசையர் 1: 20-இல் பவுலடியார் தெளிவுபடுத்துகின்றார். விசுவாசத்தால் நீதிமான் ஆக்கப்பட்ட நாம் கிறிஸ்து வழியாய் கடவுளிடத்தில் சமாதானம் பெற்றோம் என்று உரோ. 5: 2-இல் பவுலடியார் கூறுகிறார்.

கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் வழியாக தான் இன்றும் பாவ மனிதர் அமைதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது உறுதியான உண்மை. ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்படுகின்ற ஒவ்வொருவரும் அப்பா - பிள்ளை என்ற உறவைப் பெற்று இறைவன் நம்மோடு இருக்கிறார் என்கிற நம்பிக்கையைப் பெறுகின்றனர். இந்த நம்பிக்கையே நாம் துன்பங்கள், பாடுகள், வேதனைகள், அவமானங்கள், குறைவுகள் போன்ற எந்தத் தீமைகளைச் சந்தித்தாலும் அமைதி இழக்காதபடி நம்மைக் காக்கின்றது.

இதைத்தான் இயேசு கிறிஸ்து என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன் என்று யோவான் 15: 27-இல் கூறுகின்றார். இவ் அமைதி உலகின் பொருட்களாலோ உலகின் மனிதர்களாலோ உலகின் சிற்றின்பங்களாலோ பெற்றிடும் மாயையான அமைதி போன்றதல்ல. இறைவன் நம்முடன் இருப்பதால் ஏற்படுகின்ற ஓர் உள்ளான உண்மையான அமைதி.

தூயவராகிய கடவுள் நம்முடன் இருக்க நம் வாழ்வும் தூயதாய் இருக்க வேண்டும். இத்தூய வாழ்வை நாம் பெற்றிட இறை உறவில் நிலைத்திருப்பது

அவசியம் என்று திருமறை கூறுகிறது. ஒரு மனிதன் எவ்வளவு ஆழமான இறை உறவை வைத்திருக்கிறானோ அந்த அளவு அவன் எவ்வளவு பெரிய துன்பங்களைச் சகித்தாலும் அமைதி இழக்காமல் இருப்பான்.

ஒரு நாட்டுக்குச் சொந்தமான கடலுக்கு மேலே செல்லக்கூடிய சாதாரண கப்பலும் கடலின் ஆழத்தில் பயணம் செய்யக்கூடிய நீர் மூழ்கிக் கப்பலும் நடுக்கடலில் அருகருகே இருந்தன. ஒரு நாள் காலையில் சாதாரண கப்பலில் இருந்த ஓர் அதிகாரி நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஓர் அதிகாரியைத் தொடர்புகொண்டு நேற்று இரவு கடுமையான புயல் அடித்தது அதில் எங்கள் கப்பல் கொஞ்சம் பாதிக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டதா? என்று கேட்டாராம். அதற்கு நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து அதிகாரி என்ன ! நேற்று இரவு புயல் அடித்ததா? புயல் அடித்தது கூட எங்களுக்குத் தெரியாதே என்றாராம். அதாவது புயல், மழை, இடி, அலை முதலியவை மேலே பயணம் செய்யும் கப்பலுக்குதான் கடலின் ஆழத்தில் இருக்கும் கப்பலை இவை ஒன்றும் செய்து விட முடியாது.

உலகம் அமைதி என்று கருதுவது புயல், மழை, இடி, அலைகள் போன்ற பிரச்சினைகள், துன்பங்கள் இல்லாத நிலையே. ஆனால் இயேசு தரும் அமைதியோ வாழ்க்கையில் நம்மைச் சுற்றி எவ்வளவு துன்பங்கள் இருந்தாலும் அதற்கு மத்தியிலும் மனம் பதறாமல் நிறைவாய் அமைதியாய் இருக்கும் நிலை ஆகும். இத்தகைய நிலையான அமைதியை நம் ஆன்மீக ஆழத்திற்குள் இறை உறவிலே நிலைத்திருக்கும் போது மட்டுமே நாம் கண்டு கொள்ள முடியும்.

உலகம் தராத அமைதியைத் தருவதாகவும், என் அமைதியையே உங்களுக்குத் தருகிறேன் என்றும், என் வழியாகவே நீங்கள் அமைதி பெறுவீர்கள் என்றும் கூறிய இயேசு கலங்கிய சீடர்கள் பூட்டிய அறைக்குள் இருந்தபோதும் “உங்களுக்கு அமைதி”, என்று அமைதியைக் கொடுத்தார்.

இறைவன் அவருடைய உறவில் நிலைத்திருக்கின்ற, பாவத்தை வெறுத்து வாழுகின்ற, அனைவரோடும் உடன் இருப்பார். இறைவன் நம்மோடு இருப்பதே அமைதிக்கான ஆதாரம்.

“அமைதியான வாழ்வு” என்ற கருத்துக்கு ஏற்ப ஆன்மிக வாழ்வின் ஆழத்திற்குச் செல்வோம் இறையுடனிருத்தலை இழக்காமல் இறை உறவில் நிலைத்திருப்போம். இறைவன் நம்மோடு இருந்து உண்மையான அமைதியான வாழ்வைத் தருவார்.

அருள்திரு. **C. ஜீவ ஜெய கிங்ஸ்லி**

# வறுமைக்குக் கிறிஸ்தவ மறுமொழி

## Christian Response to Poverty

ஆமோஸ் 8: 4-7 யாக். 2: 1-7

திபா. 145 லூக். 16: 19-31

“அதற்கு ஆபிரகாம், மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய்; அதேவேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்” (லூக். 16: 25).

வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம் பாதுபாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு பிற குடிமக்களிடம் மதிப்பு பெறுதல் போன்றவை உட்பட, வாழ்க்கைத் தரத்தை தீர்மானிப்பவற்றை இழந்த நிலையாகும். இது ஒரு சமூகப் பிரச்சனையாகும். சமயங்களும் பிற அறநெறிக் கொள்கைகளும் வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இந்திய அளவில் 2019-2020 கணக்கின்படி வறுமைகோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் கிராமப்புறங்களில் 27 கோடியும், நகர்ப் புறங்களில் 7.1 கோடியுமாகும். வறுமை இந்திய அளவில் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வறுமையின் கொடுமை தலித் மக்களையும், ஆதிவாசிகள், பெண்கள் ஆகியோரையும் மிகக்கடுமையாக பாதிக்கிறது. ஜோசி என்பார் சமத்துவமற்ற இந்த சமூக பொருளாதார அமைப்பும், புதிய வளர்ச்சியை ஒரு சிலரது செல்வ வளமைக்கும் பலரை நிரந்தர வறுமைக்கும் இட்டுச் செல்லுமாறு திருப்பி விட்டு விடுகிறது என வாதிடுகிறார். அவரது கருத்தில் வறுமை ஒழிப்பு திட்டங்களின் பலவீனமானது, ஏழைகளுக்காக ஒதுக்கப்படும் பணம் அவர்களுக்கு எதிராக செயல்படும் அமைப்பிடம் போய்ச் சேருகிறது. இச்சூழலில் இவ்வறுமையை வேரறுக்க திருமறை தரும் வழிகாட்டுதலைப் புரிந்து கொள்வது, அவசியமாயிருக்கிறது.

### 1. திணிக்கப்படும் வறுமை (ஆமோஸ் 8: 4-7)

வறுமை இயல்பாக தோன்றுவதில்லை, இது சமூகத்தால் திணிக்கப்படும் ஒன்றாகும். திருமறையும் அதனைத் தெளிவுபடுத்துகிறது. இதற்கு எதிராக ஆண்டவர் குரல் கொடுக்கிறார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

8-ஆம் நூற்றாண்டின் மத்தியகாலம் இராண்டாம் யெரோபெயாமின் ஆட்சி காலமாகும். சீரியா வீழ்ச்சியடைந்தது, இஸ்ரவேல் தேசம் சமாதானம்

பெற்றுச் செழித்த காலம். வியாபாரம் பெருகியது செல்வந்தர்களும் பெருகினர். செல்வம் குவிந்தது. ஆனால் செல்வந்தர்களின் பேராசையினால் பாமரமக்கள் ஏழ்மைக்குள்ளாக்கப்பட்டனர். வறுமை திணிக்கப்பட்டது. நீதி அற்றுபோயிற்று அதிக லாபம் ஒன்றே குறிக்கோளானது.

சிறுமைப்பட்டவர்களை ஒழியப்பண்ணி எளியவர்களை விழுங்கினார்கள் (ஆமோ. 8: 4).இந்த சமூகக் கொடுமையினைக் கண்ணுற்ற ஆண்டவர் ஆமோஸ் வழியாகக் குரல் கொடுத்தார். வறியோரை நசுக்கி, நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழித்தனர். மரக்காலை சிறியதாக்கி, எடைக்கல்லை கனமாக்கி கள்ளத் தராசினால் மோசடி செய்தனர். ஏழைகளை ஒரு வெள்ளிக் காசுக்கும், ஒரு ஜோடி காலணிக்கும் வாங்கலாம் என்ற நிலை வந்தது. தானியத்தோடு பதரையும் விற்றனர். இஸ்ரவேலரின் இந்தச் செயல்களை நான் மறப்பதில்லை (ஆமோ. 8: 7) என் மக்களாகிய இஸ்ரவேலுக்கு முடிவு வந்தது என முழங்கினார்.

இன்றும் சமூகத்தில் வறுமை திணிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது என்பதில் ஐயமில்லை. பசி, நோய், ஏமாற்றம், சிறுவர் தொழிலாளர்கள், கொத்தடிமை முறை, குறைந்த கூலி, சுகாதாரரமற்ற இடங்களில் குறைந்த கூலிக்குப் பணியமர்த்தல், கூலி சுரண்டப்படுவது, வேலை தேக்குடும்பங்கள் அலைந்து திரிவது, இதனால் ஏற்படும் மன உளைச்சல் போன்றவைகள் நமது இந்திய நாட்டிலும் வறுமை திணிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்த வறுமை திணிப்புக்கு யார் காரணமாக இருந்தாலும் (அரசு, கார்பரேட் முதலாளிகள்) அவர்களுக்கு எதிராக ஆண்டவர் செயல்படுகிறார், குரல் கொடுக்கிறார் என்பது உண்மை.

சமூக, பொருளாதார அந்தஸ்தை வைத்து மதிப்பிடும் கலாச்சாரம் பெருகி வருகிறது. ஆண்டவர் இதனை விரும்புவதில்லை (யாக். 2: 1-7) சமூகத்தில் இதுபோன்ற செயல்களைச் செய்பவர்களை ஆண்டவர் எதிர்க்கின்றார், இதற்குக் காரணம் பொருளாசையே. இது சிலை வழிபாட்டுக்கு இணையானது (கொலோ. 3: 5, வெளி. 22:15). இன்று சமூகத்தின் விரைவான வளர்ச்சி, கணினி, மற்றும் ஏனைய தொடர்புச் சாதனங்கள், பெருமுதலாளிகளின் அதிக வளர்ச்சி இவை வறுமை திணிப்புக்குக் காரணமாகின்றன.

### 2. ஆண்டவரால் அங்கீகரிக்கப்படும் வறியவர்கள் (லூக். 16: 22-25)

பொருளாசை மிக்க சமயத்தலைவர்களுக்கு நமதாண்டவர் இயேசு நாதர் வறியவர்கள் பற்றியும், வறியவர்களோடு தம் பணியினையும், தம் எதிர்பார்ப்பையும் கூறுகிறார். யாரை வறியவர் என தள்ளுகிறோமோ அவர்களை

ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். தனது பணி வறியவர்களுக்கு என்றும் துணை நிற்கும் என்பதைத் தம் பணியில் நிரூபித்துக் காட்டினார்.

ஏழையருக்கு நற்செய்தி அறிவிப்பதை திருப்பணித்திட்டமாக அறிவித்தார் (லூக். 4: 18), விருந்து செய்யும்போது ஏழைகளையும் ஊனமுற்றவர்களையும் அழைக்கும்படி வலியுறுத்தினார் (லூக். 14: 13), எளியவர்களை என் சகோதரர் என்றார் (மத். 25: 40), ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் என்றார் (லூக். 6: 20), ஆயக்காரர், பாவிகளைப் புறந்தள்ளவில்லை (மாற். 2: 16). வறுமையைச் சமூகத்தினின்று முற்றிலும் அகற்ற தமது போதனைகளை வெளிப்படுத்தினார். வாழும் சமூகத்தில் வறுமை ஒளியவேண்டுமானால் வறியவர்கள் இல்லை என்னும் நிலை உருவாக வேண்டுமானால் எளியவர்களை ஏற்றுக்கொள்வதும், அவர்களுக்கு உதவி செய்வதுமே சிறந்த வழி (விப. 23: 11, இச. 15: 7-11, 24: 14,15). ஏழைகளுக்கு உதவி செய்வது இறைவனுக்குச் செய்வதாகும் ஏனென்றால் அவர் ஏழைகளோடு இணைந்திருக்கின்றார் (லூக்.கா 6: 35, 36, 38; லூக். 6: 30; நீமொ. 19: 17; திபா. 37: 26, 112: 9; நீமொ. 17: 31).

இன்று வறுமையைப் போக்க பல்வேறு பணிகள் நடைபெற்றாலும், இதனை முற்றிலும் இச்சமூகத்தைவிட்டு அகற்ற வேண்டுமானால் கிறிஸ்து நாதர் காண்பித்த வழியில் பயணிக்க வேண்டும். இரக்கம் செய்தல், ஆதரவளித்தல், உதவி செய்தல், பகிர்ந்தளித்தல், தயை செய்தல் இப்பண்புகளால் வறுமையை வேரறுக்க முடியும்.

அருள்திரு. S. பெல்சன் கிராமணி

# வழிபாட்டில் ஒன்றிப்பு

## Unity in Worship

நெகே. 2:17-20 உரோ. 8:31-39

திபா. 66 லூக். 9:1-6

"என் கடவுளின் அருட்கரம் என்னோடு இருக்கிறதையும், மன்னர் எனக்கு உரைத்ததையும் அவர்களுக்குச் சொன்னேன். அவர்களும் "வாரும் கட்டுவோம்" என்றனர்; நற்பணி செய்ய தங்களைத் தயார் செய்து கொண்டனர்" (நெகே. 2: 18).

ஒன்றிப்பு, ஒற்றுமை, ஐக்கியம், கூட்டுறவு இவை ஒன்றோடொன்று தொடர்புடைய சொற்களாகும் Alexander Dumas, 1844-இல் எழுதிய "The Three Musketteers" என்ற நாவல் புத்தகத்தில் "All for one, One for all; United we stand, divided we fall." "ஒன்றுக்காக (ஒற்றுமைக்காக) அனைவரும், அனைவருக்காகவும் ஒன்று (ஒற்றுமை). ஒன்றுபட்டால் நிற்போம்! பிரிந்தால் வீழ்வோம்!" என்னும் கூற்று ஒன்றிப்பு என்னும் பதத்தின் பொருத்தமான கூற்றாகும்.

நம் நாட்டில் பல வேறுபட்ட திருச்சபை பாரம்பரியங்களிலிருந்து வந்த அருட்தொண்டர்கள் உருவாக்கிய திருச்சபைகள், Angelican, Methodist, Presbyterian, Congregational மற்றும் சில திருச்சபை அமைப்புகள் நம் நாடு சுதந்திரம் பெற்ற அடுத்த மாதத்தில் (1947-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 27-ம் தேதி) ஒன்றிணைந்து உருவாக்கியதுதான் தென்னிந்தியத் திருச்சபையாகும். இதனை பெந்தெகோஸ்தே திருநாள் என்றும், திருச்சபை வரலாற்றில் மாபெரும் ஓர் அற்புதத்தின் நாள் என்று கூறினால் அது மிகை அல்ல. காரணம் வேறுபட்ட நான்கு அருட்தொண்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள் ஒன்றிணைந்து ஓர் ஐக்கிய திருச்சபை உருவாகி இன்றும் அதன் நிலை மாறாமல் செயல்பட்டு வருவது இறைவனின் வல்ல செயலாகும். குறிப்பாக தொழுகைகளின் ஒன்றிப்பு வேண்டும் என்ற தூரக்காட்சியோடு பலதரப்பட்ட வழிபாட்டு முறைமைகளை ஒன்றிணைத்து "தென்னிந்தியத் திருச்சபை பொது இறை வழிபாட்டு நூல்" (C.S.I. Book of Common Worship) உருவாக்கப்பட்டு இன்றும் நாம் பல்வேறு தொழுகைகளில் பயன்படுத்தி வருவது ஒன்றிப்புக்கான ஒரு நற்சான்றாகும்.

தொழுகை என்பது இறைவனின் திருப்பெயரில் இறைமக்கள் ஒன்று கூடிவதும், பரமனோடு ஒன்றித்தல் என்கிற மாபெரும் அனுபவமாகும்.

அமெரிக்காவில் ஆதிவாசி மக்களிடம் ஒரு பழக்கம் இருந்தது. இறைத் தொழுகைக்கு செல்வதற்கு முன் யாரிடமாவது பகை உணர்வு, கோப உணர்வு, அல்லது கசப்பு ஏதாவது காணப்பட்டால் முதலில் மனம்பொருந்திவிட்டு தான் பின்பு தொழுகையில் பங்கேற்பார்களாம். இரவில் கனவில் கூட யாரிடமாவது கோபப்பட்டால் விடிந்த உடன் அந்த நபரிடம் சென்று பூக்கள் அல்லது பழங்கள் வழங்கி ஒப்புரவு ஆகிவிடுவார்களாம். காரணம் இறைவனைத் தொழுவதற்குப் பிரிவினை, பகையுணர்வு என்பவை மாபெரும் தடை என்பது அவர்களின் நிலைப்பாடும், நம்பிக்கையுமாம்.

நெகேமியா 2-ம் அதிகாரத்தில் பாபிலோனிய படையெடுப்பால் எருசலேம் நகரம் பாழாக்கப்பட்டிருந்தது. மதில் சுவர் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு, வாயிற்கதவுகள் தீக்கு இரையாக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் நீண்டகால சிறையிருப்புக்குப் பின் சொந்த நாடு திரும்பிய யூத மக்களின் இழிநிலையைக்கண்டு நெகேமியா வருத்தமுற்றார். பாழடைந்து கிடந்த எருசலேம் நகரின் மதிலைப் பல சவால்களுக்கு இடையே மனந்தளராது கட்டியெழுப்பினார். இந்த நல்ல செயலைச் செய்வதற்கு மக்களை ஒன்றுபடுத்தினார். இணைந்து பணிசெய்யும்படி “கட்டியெழுப்புவோம் வாருங்கள்” என அழைப்பு விடுத்து அதனை முன்னின்று நடத்தினார். நாமும் இறையரசின் தொடர்பணிகளைச் செய்யும்படி பல நிலைகளில் அழைக்கப்பட்டவர்கள். அதற்கு அடித்தளமாய் அமைவது தொழுகை ஆகும். அதில் ஒருமனம், ஒற்றுமை மிக இன்றியமையாததாகும். இதனை மூன்று நிலையில் சிந்திப்போம்.

### 1. பணிவிடையில் ஒன்றிப்பு (Unity in Service)

தொழுகை என்பதின் ஆங்கிலச் சொல் ‘worship’ இதனை இரண்டாகப் பிரித்தால் work + ship என வருகிறது. இதில் ‘ship’ என்ற பின்னொட்டுச் சொல் (suffix) ஒன்றித்தல் மற்றும் உறவு நிலையைக் குறிக்கிறது. அப்படியென்றால் work together அதாவது இணைந்து பணியாற்றுதல் என்று பொருள் தருகிறது. தொழுகை என்பது மண்டியிட்டுத் தொழுதல், இறைவேண்டல், இறைத் துதி, திருமறைத் தியானம் போன்றவைகளோடு நின்று விடுவதில்லை. தொழுகையில் பங்குபெறும் சக மாந்தரோடு ஒன்றிணைந்து, இறையவரோடும் இணைந்து சேவை புரியும் ஓர் உன்னத அனுபவமாகும் (யோசு. 24:15, மத். 18:19,20).

“எருசலேம் மதில்களைக் கட்டியெழுப்புவோம் வாருங்கள்” என்ற நெகேமியாவின் அழைப்பு எல்லோரையும் ஒன்றுபடுத்துகின்ற ஓர் கூட்டு

அழைப்பாகும். நெகே. 2:17-இல் “இனியும் நமக்குச் சிறுமை வராதபடி” என்று குறிப்பிட்டு அழைப்பு விடுகின்றார். அப்படியெனில் சவால்கள் வந்தாலும் ஒன்றுபட்டு பணிபுரிந்தால் பணியில் வெற்றியும், முழுமையும் அடையலாம் என்பதாகும். அதன்படி இணைந்த கரங்களோடு நெகேமியாவின் தலைமையில் சவால்களை வென்று பணியில் வெற்றியைக் கண்டனர். இன்று திருச்சபையின் வெளியில் பல எதிர்ப்புகளும், அதே வேளையில் திருச்சபைக்கு உள்ளேயும் சுயநலம், அகங்காரம், பிரிவினை, போட்டி மனப்பான்மை போன்ற சவால்கள் ஒன்றிப்புக்கு எதிராக காணப்படுகின்றன. இவைகளை இறைபெலத்தோடு மேற்கொள்ளுவோம். தியான வசனத்தில் “என் கடவுளின் அருட்கரம் என்னோடு இருக்கிறதையும்,....” என்ற நெகேமியாவின் கூற்றின்படி இறை நம்பிக்கையோடு ஒன்றிணைந்து செயல்படுவோம்.

## 2. பணி செய்வதில் ஒன்றிப்பு (Unity to Serve)

தொழுகை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட சில மணித்துளிகளில் மட்டும் கடவுளைத் தொழுதுகொள்ளும் நிலையோடு நின்றுவிடாமல், இன்னும் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் பரந்து விரிந்து செல்ல வேண்டும்.

“ஆலயம் அருளுரை போதாதே
ஆசரிப்புகளும் போதாதே
ஆண்டவர் தொழுவத்தின் வெளியிலுள்ளார்
ஆடுகள் தேடியே ஆவல் கொண்டே”

என்ற பாடல் வரிகளுக்கேற்ப திருச்சபை ‘தெருச்சபையாக’ வேண்டும். அதாவது தொழுகை ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமல்ல எங்கும் தொழுது கொள்ளும் நிலை ஏற்பட வேண்டும். இன்னும் புதிய பணிக்களங்கள் உருவாக வேண்டும்.

16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த Charles Wesley என்ற Methodist சபை நிறுவநர் இங்கிலாந்தில் ஆயராக பணியாற்றிய போது ஆலயத் தொழுகை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு மட்டும் இருந்தது என்றும், மற்றோர் புறக்கணிக்கப்பட்டதை நன்கு உணர்ந்து ஆலயத்தின் வெளியே தெருக்களில், வீடுகளில், மர நிழல்களில் என்று எல்லா நிலையிலுள்ள மக்களுக்கும் நற்செய்தி அறிவித்து அனேகரைக் கிறிஸ்துவண்டை வழி நடத்தினார். இதனால் பல எதிர்ப்புகளையும் சவால்களையும் சந்தித்தார். திருச்சபையிலிருந்து புறந்தள்ளப்பட்டார். ஆனால் கடைசி மட்டும் நற்செய்திப் பணியில் அயராது உழைத்தார். இவர் இட்ட அடித்தளத்தால் பல அருட்பணி இயக்கங்கள் உருவாகி பல நாடுகளில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, பற்பல ஆலயங்கள் இந்நாள் மட்டும் உருவாகி வருகின்றன. அதற்குச் சான்று நாம் சார்ந்திருக்கும்

தென்னிந்தியத் திருச்சபை ஆகும். இன்றைய நற்செய்தி பகுதியில் இயேசுநாதர் தாம் தெரிந்து கொண்ட பன்னிரு சீடர்களையும் ஒன்றாக வரவழைத்து இறையாட்சி பற்றி பறைசாற்றவும், நலமருளும் பணி செய்யவும் அனுப்பினார். மாற். 6:6-13-இல், இருவர் இருவராக அனுப்பப்பட்டதைக் காணலாம். அவர்கள் ஊர் ஊராகச் சென்று எங்கும் நற்செய்தி அறிவித்து நலமருளும் நற்பணிச் செய்தனர். இயேசு கிறிஸ்து விண்ணேற்றமடைவதற்கு முன் "உலகமெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" மாற். 16:15 என்ற மாறாத கட்டளையை முன் வைத்து சென்றார். எனவே கிறிஸ்துவின் சான்றாளர்களாகிய நாம் தொழுகையில் உண்மையாய்ப் பங்குகொண்டு, தொழுகை அல்லாத பிற நாட்களிலும், எல்லா வேளைகளிலும், நம்முடைய பணிவிடைகளிலும் இயேசு கிறிஸ்துவை வாழ்வோராகப் பிறருக்குக் காண்பிப்போம். கிறிஸ்துவை அறியாத அனேகருக்கு அவரை அறிவித்து அவரோடு ஒன்றிக்கச் செய்யும் அருட்பணியில் அயராது உழைத்து அவரது சித்தத்தை நிறைவேற்றுவோம்.

### 3. பரமனோடு ஒன்றிப்பு (Union with God)

தொழுகையின் பிரதான நோக்கம் பரமனோடு ஒன்றித்தல் ஆகும். சக மாந்தரோடும் படைப்புகளோடும் நாம் ஒன்றிணைந்து செயல்படும்போது இறையுறவு சாத்தியமாகும். இன்றைய திருமுகப் பகுதியில் பவுலடிகளார், இயேசு கிறிஸ்துவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் பிரிக்க முடியாத அன்பைக் குறித்து சொல்வதைக் காணமுடிகிறது. கடவுளின் அன்பு, அது தியாக அன்பு, அவரது அன்புக்கு ஈடு இணை ஏதும் கிடையாது, கடவுள் அன்பின் வடிவமாவார் (God is love) தொழுகையில் நாம் கடவுளின் அன்பை அறியவும், அதனை உணரவும், புரிந்து கொள்ளவும் முடிகிறது. அந்தத் தெய்வீக அன்பை நாம் சொந்தமாக்கிக் கொண்டு அதனை உண்மையாய் வெளிப்படுத்த வேண்டும். இந்த அன்பைக் குறித்துப் பவுலடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் 13-ம் அதிகாரத்தில் முழுவதும் விளக்கமாக எழுதியுள்ளார். இந்த தெய்வீக/ தியாக அன்பு (AGAPE) தீமைகளை எதிர்க்கும் ஒரு வல்ல ஆயுதமாகும். இயேசுநாதர் திருச்சபையைக் குறித்து சீமோன் பேதுருவிடம் கூறியது "இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா" என்பதாகும். திருச்சபையும் அதன் ஒன்றிப்பைக் கெடுக்கும் பாதாள வாயில்கள் அதாவது தீயோனின் செயல்கள் பல உள்ளன. அவை சுயநலம், அகங்காரம், பிரிவினை, தற்பெருமை, வைராக்கியம், போட்டி மனப்பான்மை, பொறாமை போன்ற குள்ளநரிகள் (இனிமை மிகு பாடல் 2:15). 1 கொரி. 13:4-7-இல் பார்க்கும் போது அன்பு பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, தன்னலம் நாடாது, தீங்கு

நினையாது, அனைத்தையும் தாங்கும், அனைத்திலும் மன உறுதியாயிருக்கும் என அன்பானது தீமைகளை வெல்லும் வல்ல ஆயுதமாக சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தெய்வீக அன்பில் நாம் ஊன்றக் கட்டப்படும் போது எந்த எதிர்ப்புகளும் நிந்தைகளும், பழிச்சொற்களும் வந்தாலும் அது அனைத்தையும் தாங்கிக்கொள்ளும் மனவலிமையைத் தருகின்றது. இதனைப் பவுலடிகளார் எச்சூழலிலும் நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது (உரோ. 8:39) என்று நிச்சயமும் உறுதியுமாய் கூறியிருக்கிறார். இந்த அன்பின் வலிமையினால் ஒன்றிப்புக்கு எதிராகச் செயல்படும் அனைத்துத் தீமைகளையும் வேரறுத்து இறை உறவை நாம் வலுப்படுத்துவோம். இறைவன் சார்பில் நாம் இருக்கும் போது எந்தத் தீங்கும் நம்மை அணுகுவதில்லை (உரோ. 8:31-33).

தொழுகையிலும் வாழ்வியல் சூழல்களிலும் கடவுளின் வல்ல செயலை நாம் அனுபவிக்க வேண்டும் என்றால் நம்மிடம் ஒற்றுமையுணர்வு மிக அவசியம். கடவுளின் வல்லகரம் நெகேமியாவோடு இருந்தபடியினால் பல எதிர்ப்புகளும் சவால்களும் இருந்த நிலையிலும் எந்தத் தடையும் இன்றி எருசலேம் மதில் சுவரைக் கட்டி எழுப்பும் பணிவிடையை வெற்றியாய் நிறைவேற்ற முடிந்தது.

“விசுவாசிகள் என்னும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம், ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்.

இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆகிடுமே”

என்ற பாடல் வரிகளுக்கேற்ப ஒருமனதோடு கடவுளைத் தொழுவோம், ஒற்றுமை உணர்வோடு ஆண்டவருக்காய்ப் பணி செய்வோம். ஒன்றிப்புக்கு எதிராய் செயல்படும் அனைத்துச் சவால்களையும் மேற்கொண்டு வெற்றியின் பாதையில் முன்னேறிச் செல்வோம் இறையவரின் சான்றாய் செயல்படுவோம் இறையரசைச் சொந்தமாக்குவோம் - ஆமென்

அருள்திரு. **D. ஒனேசிமஸ் சகாயம்**

# முதியோரின் ஞானம்

## The Wisdom of the Elderly

தொநூ. 24: 1-14 2 தீமொ. 1: 3-14

லூக். 1: 5-7 தி.பா 92

“ஆபிரகாம் வயது மிகுந்தவராய் முதுமை அடைந்தார். ஆண்டவர் அவருக்கு அனைத்திலும் ஆசி வழங்கியிருந்தார்” (தொநூ. 24: 1).

ஆபிரகாம் - இஸ்ரயேலரின் தேசத் தந்தை. இஸ்ரவேலருக்கென்று ஒரு தேசத்தைக் கொடுப்பேன் என்று கர்த்தர் ஆபிரகாமிடம் தான் வாக்குறுதி கொடுத்தார். அதன் பின் ஆபிரகாமின் ஒவ்வொரு செயல்பாடுகளும் ஏனோதானோ என்று இல்லை. மிகக் கவனமாகத் தான் கர்த்தருக்கென்று ஒரு தேசத்தையும், கர்த்தருடைய நாட்டின் பிள்ளைகள் என்னும் நோக்கத்தையும் நிறைவேற்றுவதாக இருக்கவேண்டுமென்று செயல்பட ஆரம்பித்தார். இஸ்ரவேலின் வரலாற்றின் ஆரம்ப கால கல்வெட்டு ஆபிரகாமிலிருந்து தான் ஆரம்பிக்கிறது. எத்தனை நூற்றாண்டுகளைக் கடந்தாலும் மக்களுடைய வாயிலிருந்து வற்றிப் போகாத வார்த்தை - ஆபிரகாம். ஆபிரகாமின் எண்ணங்களும் செயல்களும் உயர்ந்ததாகவும், இஸ்ரவேல் வம்சத்திற்கே மாதிரியாகவும் இருந்தன. ஒருவன் எவ்வாறு அறியப்படுகிறானோ, அவ்வாறே வரலாற்றில் நிலைத்திருப்பான். ஆபிரகாம் ஆண்டவர் மீது அளவற்ற விசுவாசம் உள்ளவராக, விசுவாசிப்போருக்கெல்லாம் தந்தை என்று அறியப்படுகிறார். ஆபிரகாமின் எண்ணங்களும், செயல்பாடுகளும் ஆண்டவரை முழுமையாக விசுவாசிப்பதாக இருந்தது. ஆண்டவர் மீது ஆபிரகாம் வைத்த விசுவாசம் இடர்பாடுகளை எதிர்கொண்டு வாழ்வதற்கான ஞானத்தைக் கொடுத்தது.

நம் வாழ்க்கை என்பது பயணம் என்னும் அலகினால் அளவிடப்படுகிறது. ஆபிரகாம் தம் சந்ததியாரை “விசுவாசப் பயணம்” செய்ய வைத்தவர். வாழ்க்கையிலே எதையும் இலவசமாகப் பெறக் கூடாது; உழைத்து பெற வேண்டும். மனித தயவை விட, தேவ தயவு மிகவும் முக்கியம். மற்றவர்களிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுவோராக இருக்கக் கூடாது; ஆசீர்வாதம் கொடுப்போராக இருக்க வேண்டும். வாங்குவதைப் பார்க்கிலும், கொடுப்பதே பாக்கியம். இதற்கு ஆதார சம்பவம் தொ.நூ. 23-இல் மக்பேலா நிலத்தைக் கானான் தேசத்தில் ஆபிரகாம் வாங்கிய நிகழ்வு. இவைகளெல்லாம் ஆபிரகாமின் வாழ்விலிருந்து இஸ்ரவேல் வம்சம் பெற்றுக்கொண்ட ஞானப்பாடங்களாகும். ஆபிரகாமின் புகழைத் தங்களுடைய பாதுகாப்பிற்கு

மிகப் பெரிய ஆயுதமாக பின் நாட்களில் யூத மூப்பர்கள் பயன்படுத்தினார்கள். தனக்கென நிலையான வாழ்விடமும், ஏற்ற வயதிலே வாரிசும் இல்லாத காலத்திலே ஆபிரகாம் விரக்தியடையாமல், உணர்ச்சிவசப்படாமல் ஞானத்தோடு செயல்பட்டார். தனக்கு இருக்கும் இடர்பாடுகளைக் கண்டு, தன் மேல் அனுதாபம் கொண்டு தன் பின்னால் பயணமாக வருகிற கூட்டம் ஆண்டவரின் பாதையை விட்டு இடறிவிடக் கூடாது என்று ஆபிரகாம் ஞானத்தோடு செயல்பட்டார்.

பேருந்து பயணத்தில் நடத்துநர் கொடுக்க வேண்டிய மீதி சில்லறைக்காக சிலர் முழு பயணத்தையும் ரசிக்க மறந்து போவார்கள். அப்படித் தான் வாழ்க்கையிலும் வரும் அற்ப பிரச்சனைகளில் சிக்குண்டு எரிச்சலபட்டு, வாழ்க்கையை ரசிக்காமல் ஞானமற்றவர்களாக முட்டாள்தன உணர்ச்சி பெருக்கோடு நடந்து கொள்வதுண்டு. இப்பேர்பட்ட எல்லாருக்கும் வாழ்வை ஞானத்தோடு வாழ்வதற்கான ஞானியாக ஆபிரகாம் இருக்கிறார். ஆபிரகாமின் ஞானம் குறித்துத் தியானிப்போம்.

### 1. ஆண்டவரைப் புரிந்து கொண்ட ஞானம்

“ஆண்டவர் அவருக்கு அனைத்திலும் ஆசி வழங்கியிருந்தார்.”(தொநூ. 24: 1).

ஆபிரகாமை திருமறை விசுவாசத் தலைவர், விசுவாசிகளுக்குத் தலைவர் எனச் சிறப்பிக்கிறது. ஆபிரகாமிடம் ஆண்டவர் “நீ எழுந்து, இந்நாட்டின் நெடுகிலும், குறுக்கிலும் நடந்துபார். ஏனெனில் இதை நான் உனக்குக் கொடுக்கப் போகிறேன்” என்றார்” (தொ.நூ. 13: 17). ஆனால் ஆண்டவர் தனக்குத் தரட்டும்; தான் எதையும் இச்சித்துக் கேட்கக் கூடாது என்பதிலே ஆபிரகாம் தெளிவாக இருந்தார். இது தான் ஆபிரகாம் ஆண்டவரைப் புரிந்துகொண்ட ஞானம். தான் கேட்பதை விட அவர் தருவது அதிகமாக இருக்கும் என்று புரிந்து நடந்தது தான் ஆபிரகாமின் தனித்தன்மை.

ஆபிரகாமின் விசுவாசத்தைச் சிறப்பிக்கும் யூத பாரம்பரிய கதை ஒன்று உண்டு. ஆண்டவர் ஒருநாள் கடை போல தம் அருட்கொடைகளைப் பரப்பி வைத்தார். அவரவர் விரும்புவதை எடுத்துக் கொள்ளச் சொன்னார். பெண்கள் அழகை முதன்மைப்படுத்தி விரும்பினதை எடுத்துக்கொண்டார்கள். ஆண்கள் தங்கள் ஆசைக்கேற்ப விதவிதமான பொருட்களை எடுத்துக் கொண்டனர்.தலைவர்கள் புகழை வாங்கிக் கொண்டனர். கவிஞர்கள் கற்பனையை எடுத்துக்கொண்டனர். எல்லாரும் கேட்டதையெல்லாம் அவர் கொடுத்தார். ஆபிரகாமிடம் நீ என்ன வேண்டுமோ கேள் என்றார். அவர் ஒன்றும் கேட்கவில்லை. நீ கேட்க வேண்டாம், நடந்து எவ்வளவு தூரம் போக முடியுமோ,

அவ்வளவு தூரம் போ. நான் உனக்கு அவ்வளவும் தருவேன் என்றார். அதற்கும் ஆபிரகாம் ஒன்றும் சொல்லவில்லை. உம்முடைய உள்ளத்தில் எனக்கு இடமிருந்தால் போதுமென்றார். இதைக் கேட்ட ஆண்டவர், ஆபிரகாமின் விசுவாசத்தைப் பார்த்து எல்லாவற்றிலும் ஆசீர்வதித்தார் என்று அந்த கதை முடிகிறது.

நம்முடைய விசுவாசம் தூய்மையாக இருக்கவேண்டுமானால் நம் ஆசைகள் சீரமைக்கப்பட வேண்டும். ஆண்டவர் சொல்லிவிட்டார் என்பதற்காக உலகமே தனக்கும் தன் சந்ததிக்கும் மட்டுமே இருக்கவேண்டும் என்று பேராசைப்படவில்லை. அதிக நிலத்தைப் பெற்றுக்கொள்ள பேராசை கொண்டு வேறு வேலைகள் எதுவும் செய்யாமல் நடந்து திரியவில்லை. ஆண்டவர் எனக்கும் என் சந்ததிக்கும் தேவையானதைத் தருவார் என ஆண்டவரைத் தெளிவாகப் புரிந்துகொண்டு விசுவாசத்தோடிருந்தார். தன் ஆசைகளைச் சீரமைத்து நடந்து கொண்டது தான் ஆபிரகாமின் ஞானம். ஆசைகளைச் சீரமைக்கிற ஞானத்தை ஆபிரகாமிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். மனம் எதைத் தீவிரமாக சிந்திக்கிறதோ, அதுவாகவே மாறும் தன்மை கொண்டது. தன் ஆசைகளைச் சீரமைக்கும் போது ஆபிரகாம் இதைப் புரிந்துக்கொண்டார். எப்போதும் அது வேண்டும் இது வேண்டும் என சிந்தித்துக் கொண்டிருப்பவரே எப்போதும் எல்லாம் இருந்தாலும் ஏழையாகவே இருப்பார்.

ஆபிரகாம் இப்படிச் சிந்திக்கவில்லை. ஆகவே நிறைவோடிருந்தார். அவரால் அநேகருக்கு உதவவும் முடிந்தது. தான் குறைந்து போக போவதில்லை. தனக்குத் தேவையானதை ஆண்டவர் தருவார் என்பதை விசுவாசித்த ஆபிரகாம், மோரியா மலை ஏறும் போது, “அப்பா! பலிக்கான எல்லாம் எடுத்துக்கொண்டோம். ஆனால் முக்கியமானதை மறந்துவிட்டோமே! பலிக்கான ஆடு எங்கே அப்பா?” என நினைவுபடுத்துவது போல கேட்ட மகனிடம் ஆபிரகாம் “அதைக் கர்த்தர் பார்த்துக் கொள்ளுவார்” என்று பதில் சொல்லியே தன் சந்ததியை ஆண்டவர் மீது முழுமையான விசுவாசம் வைக்கிற விசுவாச சந்ததியாக வளர்த்தார். எல்லாரிடமும் ஏதாவது ஒரு நற்குணம் கடைசி வரை நிலையாக நிலைத்திருந்தால், அதுவே அவர்களை நீதிமானாக, நீதிபதியாக மாற்றும். ஆபிரகாமிடம் ஆண்டவர் அப்படிக் கண்ட நற்குணம் விசுவாசம் என்பதாகும். அது அவரை நீதிமானாக்கியது. அவரைக் குறித்து சொல்லப்படுகிற நற்சாட்சி “ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்” (தொநூ. 15: 6). விசுவாச வார்த்தையால் வைத்தியம் பார்க்கிற ஆபிரகாமின் ஞானம் நமக்குத் தேவை.

விசுவாசம் எதையோ சொல்லும் ஒரு சாதாரண சொல் அல்ல; அது வாழ்வு நெறி. நம்முள் இருக்கும் இறையைத் தூண்டி நமக்கு அனுபவத்தைத் தர

வல்லது விசுவாசம். விசுவாசித்து வருவதும் அனுபவம்; அனுபவம் தருவதும் விசுவாசம். ஒரு மனிதன் தன்னில் ஆழ்ந்து ஆண்டவரைப் புரிந்துகொண்டால் அவனில் விசுவாசம் பெருகும். இருட்டறையில் ஒளியைக் கொண்டு வந்துவிட்டால் போதும், இருளை ஜன்னல் வழியாக பிடித்து வெளியே தள்ள வேண்டியதில்லை. ஒளி உள்ளே வந்தவுடன் இருள் தானாக போய் விடும். விசுவாசம் தரும் இறையனுபவம் இதுவே. ஆண்டவரிடமிருந்து என்னை எவரும், எதுவும் பிரிக்க முடியாது என்று வாழ்ந்து சிறந்த ஆபிரகாம் ஆண்டவருக்குச் சிநேகிதன் என ஆண்டவராலே புகழப்பட்டார். விசுவாசமும் வாழ்வும் இணையும் தளத்தில் ஆண்டவரே ரசிக்கும் ஒரு மானிட மதிப்பு எழுகிறது. இதற்கான ஞானத்தை ஆபிரகாமிடமிருந்து கற்றுக்கொள்ளுவோம்.

## 2. தெளிந்து புரிந்துகொண்ட ஞானம்

"என் சொந்த நாடடிற்குப் போய், என் உறவினரிடம் என் மகன் ஈசாக்கிற்குப் பெண் கொள்வாய் என்றும் சொல் என்றார்" (தொநூ. 24: 4)

ஆபிரகாமின் ஞானமான அடுத்த செயல்பாடு தன் காலத்திலேயே தன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்து, சொத்துக்களை மகனுக்கும், வீட்டு விசாரணைகாரனுக்கும் அவன் வீட்டிலே பிறந்த ஏனைய வேலையாட்களுக்கும், பிற பிள்ளைகளுக்கும் பங்கு போட்டுக் கொடுத்ததாகும். சாராளின் மரணத்திற்குப் பின், உடனே ஞானமாக ஆபிரகாம் செயல்படத் தொடங்குகிறார். ஈசாக்கிற்குத் திருமணம் செய்து வைத்து, அந்த பணிகளை ஞானமாகத் தொடங்குகிறார்.

வயதாவோர் பலரும் ஞானமற்று பிள்ளைகளுக்குக் காலாக் காலத்தில் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் அப்படியே விட்டு விடுவார்கள். அது பிற்காலத்தில் பிள்ளைகளிடையே விரோதத்தையும், வருத்தத்தையும் ஏற்படுத்தி அந்தச் சந்ததியையே பாதித்துவிடும். பெற்றோர் முதுமையடைந்த பின் பிள்ளைகளுக்குப் பயந்து பின்வாங்காமல், இதைச் செய்ய வேண்டும். ஆபிரகாம் ஈசாக்கிற்காகச் செய்த ஆயத்தத்தில் இருந்து இதைத் தெளிவாக அனைத்து முதியோருக்கும் புரிய வைக்கிறார். முதுமையிலே சோர்ந்து போகாமல் தன்னையும் தன் நிலைமையையும் புரிந்துக்கொள்ளும் ஞானம் தேவை. சாராள் விடைபெற்றதும் ஆபிரகாம் தன் முதுமையை யோசிக்க ஆரம்பித்தார். தன் வயதையொத்தவர்கள் ஒவ்வொருவராக விடை பெறுவதையும், மீதமிருப்போர் தங்களைப் பராமரிக்க சிரமப்படுவதையும், அடுத்த தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையில் கவனம் செலுத்துவதையும் கவனித்தார். ஆகவே தன்னைப் பாசமாக அறியாத ஒரு அந்நிய இனத்தில் தன் மொழி தெரியாத அந்நிய மண்ணில் தன் மகனுக்கு மனைவியைத் தேடினால்

பிற்கால சந்ததியே குடும்ப பிணைப்பில்லாத ஒரு சந்ததியாகப் போய் விடும் என்பதை ஞானத்தோடு சிந்திக்கலானார். இஸ்மவேலின் வாழ்வு அவருக்கு இந்த அனுபவத்தைக் கொடுத்திருந்தது.

அந்நிய மண்ணில் சொத்துக்களைச் சம்பாதித்த ஆபிரகாம் சொந்த மண்ணிலிருந்து சொந்தங்களைச் சம்பாதித்து வைக்க வேண்டும்; தன் மகன் தனியன்; அவன் தனிமையாகி போய் விடக்கூடாது என்பதை ஞானத்தோடு யோசித்தார். உதட்டளவில் பழகும் அன்னியர்களிடம் கழுத்தளவு அன்பு காட்டினால், கழுத்தில் நுகத்தடி பூட்டப்பட்டு விடும் என்பதை ஞானமாக உணர்ந்து ஆபிரகாம் செயல்பட்டார். தனக்குப் பிறகு எப்படி வேண்டுமானாலும் தன் மகன்(கள்) வாழட்டும் என்று யோசிக்காமல் தன் வாழ்நாளிலேயே ஞானத்தோடு ஆபிரகாம் திட்டமிட்டதால் ஒரு பக்தியுள்ள சந்ததி உருவாயிற்று. உள்ளுக்குள்ளே எல்லாக் குடும்பத்திலும் உள்ளது போல பிரச்சனைகள் இருந்தாலும் உடைந்து போகாத ஒரு சந்ததி உருவாயிற்று.

ஆபிரகாமிடமிருந்த ஒரு நற்குணம் மனிதர்கள் மத்தியில் அவருக்குப் "பிழைக்கத் தெரியாதவர்" என்னும் ஏளனப்பெயரைக் கொடுத்தது உண்மை தான். எலியேசர் கூட அவ்வளவு தூரம் போக வேண்டுமா? என்று கொஞ்சம் தயங்கி பல கேள்விகளைக் கேட்டாலும், ஆபிரகாம் விசுவாசத்தோடு தன் முடிவிலே தெளிவாக இருந்தார். யாரும் தன் ஆசைகளைத் தூண்டி முதிய காலத்தில் கற்பனையில் மிதக்க விட்டு விடாதபடி தன் முடிவில் ஆபிரகாம் ஞானமாக இருந்தார். அன்னிய மண்ணிலே தன் ஆஸ்தியைப் பார்த்து தான் சம்பந்தம் வைக்க வருகிறார்கள்; தன் நற்குணத்தைப் பார்த்து அல்ல என்பதை ஞானமாகப் புரிந்து நடந்து கொண்ட ஆபிரகாம் ஒரு சிறந்த வாழ்வியல் ஞானி.

அருள்திரு. **J. பிரகாஷ் நாயகம்**

# பாதுகாக்கும் பரமன்

திபா. 121: 1 - 8

"ஆண்டவரே உம்மைக் காக்கிறார். . ." (திபா. 121: 5)

இந்த வருடத்தின் ஒன்பது மாதங்களை நிறைவு செய்து பத்தாவது மாதத்தில் பல எதிர்பார்ப்புகளோடு அடியெடுத்து வைத்திருக்கின்ற நம்மை ஆண்டவர் பாதுகாக்கிறார்.

கடவுளின் பாதுகாவலும் பராமரிப்பும் மேலானது என்பதை 121-ஆம் திருப்பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பக்தியுள்ள ஒவ்வொரு யூதனும் தன் வாழ்நாளில் ஒரு முறையாவது எருசலேமுக்குப் புனிதப் பயணம் செல்வார். புனிதப் பயணம் செல்லும் பாதையில் கடுமையான வெப்பம், தாகம், பசி, சுகவீனம், விபத்து, திருடரின் தாக்குதல் போன்ற பல அபாயங்களைச் சந்திக்க நேரிடும். இரவு நேரங்களிலே தங்குமிடங்களில் கொள்ளையரிடமிருந்து, தங்களைப் பாதுகாக்க வேலைக்காரர்களைக் காவலுக்கு அழைத்துச் செல்வர். இதனைப் பின்னணியாக கொண்டுதான், 'கடவுள் பாதுகாக்கின்றார்' என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

மனிதனின் பாதுகாப்புக்கும் கடவுளின் பாதுகாப்பிற்கும் வேறுபாடு உண்டு. அலெக்சாண்டர் உலகத்தைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வந்தவர். ஒரு முறை அவரிடம் உங்களைச் சுற்றி ஏராளமான பகைஞரும், விரோதிகளும் இருக்கிறார்கள். எப்பொழுது என்ன நடக்கும் என்று தெரியாது. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உங்களால் எப்படி நிம்மதியாய் தூங்க முடிகிறது என்று கேட்டார்கள். அலெக்சாண்டர் அருகில் நின்ற ஒரு வீரனைச் சுட்டிக் காண்பித்து "இவன் என்னைப் பாதுகாக்கும் போது எனக்குப் பயமில்லை. காரணம் அவன் என் நம்பிக்கையானவன்!" என்று கூறினாராம் அலெக்சாண்டரின் நம்பிக்கை காவலர் மேல் இருந்தது.

ஆனால் பாதுகாவலர்கள் எப்போதும் நம்பிக்கையாய் இருக்கமாட்டார்கள். பல வேளைகளில் அவர்களால் கூட ஆபத்து வரும் : நம் தேசத்தின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தன் மெய்க்காப்பாளராலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். எனவே தான் மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம் (திபா. 118: 8, எசா. 2: 23) எனத் திருமறை கூறுகிறது. கடவுள் எப்படி நம்மைப் பாதுகாக்கிறார் என்பதைச் சிந்திப்போம்.

## 1. விழித்திருந்து பாதுகாப்பார்

"அவர் உம் கால் இடறாதபடி பார்த்துக்கொள்வார். உம்மைக் காக்கும் அவர் உறங்கி விட மாட்டார் இஸ்ரயேலைக் காக்கிறவர் கண்ணயர்வதுமில்லை உறங்குவதும் இல்லை" (திபா. 121: 3, 4).

நாம் வாழும் உலகில் மனிதரையும், அரண்களையும் தூங்காமல் விழித்திருந்து பாதுகாக்க காவல்காரர்களையும், ஜாமக்காரர்களையும் வைத்துக்கொள்வார்கள். திருமறையிலும் அலங்கம் கட்டும்போது எதிரிகளால் ஏதாவது ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தார்கள் (நெகே. 4: 8) இவர்கள் விழித்திருந்து எதிரிகள் வந்து தாக்காதபடி, அழிவை ஏற்படுத்திவிடாதபடி எச்சரிக்கையாய் இருந்து பாதுகாக்க வேண்டும். ஆனால் பல வேளைகளில் இவர்கள் தூங்கிவிடலாம். சவுல் ராஜாவைக் கண் அயராமல் விழித்திருந்து பாதுகாக்க வேண்டிய தளபதிகளும், காவல்காரர்களும் தூங்கிடியால் தாவீது சவுலின் அருகில் எளிதில் வந்து, அவர் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்டு போனார் (I சாமு. 26: 7).

மனிதன் அசதியில் தூங்கிவிடலாம். ஆனால் நமது ஆண்டவர் கண்ணயர்வதுமில்லை! தூங்குவதுமில்லை! 24 மணி நேரமும் நம்மை விழித்திருந்து பாதுகாக்கிறார். தாவீதின் வாழ்வில், எதிரிகள் பல, பிரச்சனைகள் பல இருந்தாலும் பாதுகாக்கின்ற ஆண்டவர் தம் மேல் இருக்கிறார் என்ற நம்பிக்கை இருந்தபடியால் அவரால் சுகமாய்த் தூங்க முடிந்தது. எனவே தான் "சமாதானத்தோடே படுத்துக் கொண்டு, நித்திரைச் செய்வேன் நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப் பண்ணுகிறீர்" (திபா. 4: 8) என நம்பிக்கையுடன் கூறுகிறார்.

இயேசுவின் சீடர்கள் ஒன்றாம் ஜாமத்தில் கடலில் பயணம் புறப்பட்டார்கள். அவர்கள் நடுக்கடலில் சென்ற போது காற்று அவருக்கு எதிராய் இருந்தபடியினால், அவர்களால் முன்னேறிச் செல்ல முடியாமல் தவித்தனர். மரண பயம், கலக்கம் அவர்களை சூழ்ந்தது கரை சேர்வோமா என்ற பதட்டத்துடன் காணப்பட்டனர். அந்த நடு இரவில் நான்காம் ஜாமத்தில் கண் அயராது பாதுகாக்கும் இயேசு கடலின் மேல் நடந்து அவர்களிடம் வந்து காற்றையும், கடலையும் அமர்த்தி சீடர்களுக்கு எந்த தீங்கும் வராதபடி பாதுகாத்தார் (மாற்கு 6: 46 - 51). கடவுள் இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்திர பயணத்தில் இரவும் பகலும் உடன் இருந்து எல்லா தீமைகளுக்கு விலக்கிப்பாதுகாத்தார்!

நம் வாழ்விலும் இரவின் திகிலுக்கும், பகலின் அம்புக்கும் இருளில் உலாவும் கொள்ளை நோய்க்கும் விலக்கிப் பாதுகாப்பார். எனவே விழித்திருந்து பாதுகாக்கும் ஆண்டவரை நம்பிக்கையோடு பற்றிக் கொள்வோம்.

## 2. நிழலாய் இருந்து பாதுகாப்பார்

"அவர் உம் வலது பக்கத்தில் உள்ளார். அவரே உமக்கு நிழல் ஆவார்" (திபா. 121: 56).

"நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும்" இவ்வுலகில் எவருமே கடுமையான வெயிலை விரும்புவதில்லை. காரணம் வெயிலினால் நம் உடலும், உள்ளமும் சோர்வடையும். வேதனை உண்டாகும். அப்பொழுது நிழலுக்காக மனம் ஏங்கும். நிழல் வெயிலின் தாக்குதலில் இருந்து நம்மைப் பாதுகாக்கிறது. அதுபோல நம் வாழ்க்கைப் பயணத்தில் வெயில் போல பல பிரச்சனைகளும், வேதனைகளும் நம்மைத் தாக்கலாம். ஆனால் ஆண்டவர் நமக்கு நிழலாய் இருந்து பாதுகாப்பார். அவர் வெயிலின் வேதனையை மாற்றும் நித்திய நிழலாய் இருக்கிறார்.

இவ்வுலகில் பல நிலையற்ற நிழல்கள் உண்டு. அவை மாயையானவை யோனா தீர்க்கன் ஆமணக்குச் செடியின் நிழலைத் தெரிந்துக் கொண்டு அதில் போய் உட்கார்ந்து அந்த நிழலினால் மிகவும் சந்தோஷப்பட்டார் (யோனா. 4: 6). ஆனால் அந்த நிழல் ஒருநாள் மாத்திரமே இருந்தது. மறுநாளிலே பூச்சி அரித்துப் போட்டது. அந்தச் செடியின் நிழலை யோனா நம்பி ஏமாந்து போனார். உலக நிழல் காணாமல் போய்விடும். அது போல உலக மனிதர்களின் நிழலை நம்பினால் ஏமாற்றமும் தோல்வியும் அடைவோம். சிம்சோன் - தெலீலாளின் நிழலையும், எலிமலேக்கு மோவாபின் நிழலையும் நம்பிப் போய் ஏமாந்து போனார்கள்! உலக நிழல் கானல் நீர் போன்றது. ஆனால் என்றும் மாறாத நிழல் ஆண்டவர் ஒருவரே! "பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிழலாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை" (திபா. 121 : 6) நிழல் நம்மை மறைத்துக் கொள்கிறது.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்கள் ராஜா நிறுத்திய பொற்சிலையைப் பணிந்துக்கொள்ள மறுத்தபோது ராஜாவின் கோபம். தீச் சூளையை ஏழு மடங்கு அதிகரிக்கச் செய்தது. ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கப்பட்ட தீச் சூளையில் மூன்று வாலிபர்களும் தூக்கிப் போடப்பட்டனர். மூன்று வாலிபர்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு போனவர்கள் அக்கினியால் கொல்லப்பட்டனர். ஆனால் இந்த மூன்று வாலிபர்களும் அந்த கடுமையான தீ சூளையிலே உலாவிக் கொண்டிருந்தனர். அந்த வெப்பம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை! ஒரு சேதமும் இல்லை. அக்கினி பஞ்சு மெத்தையாக இருந்தது காரணம் ஆண்டவர் அந்தத் தீச் சூளையில் நிழலாக இருந்தார். எனவே வெப்பம் அவர்களைத் தாக்கமுடியவில்லை! உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான் (திபா. 91: 1) என்ற வார்த்தையின் படி பாதுகாப்பாக இருந்தனர்.

தாவீதும், அவனோடிருந்தவர்களும் வெளியே சென்றிருந்த போது அமலேக்கியர் வந்து, எல்லோரின் உடமைகளையும், மனைவி பிள்ளைகளையும் சிறைப்பிடித்துக் கொண்டு போனார்கள். தாவீது திரும்பி வந்தபோது பட்டணம் தீக்கொளுத்தப்பட்டு, குடும்பத்தார் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டிருப்பதைக்கண்டு மிகவும் அழுதார்! தாவீதோடு இருந்தவர்கள் அவரைக் கல்லெறிய வேண்டும் என்றனர். தாவீது மிகுந்த வேதனையடைந்தார். ஆனால் அவர் கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டார். ஏனெனில், கர்த்தர் தாவீதுக்கு நிழலாய் இருந்து பாதுகாத்தார்.

நம் வாழ்வில் வரும் அக்கினி போன்ற சோதனைகளிலும், பகல், இரவு அபாயங்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கும் பரமன் இயேசுவின் சிலுவை நிழல் உண்டு, அவரின் ஆறுதல் உண்டு. பாதுகாக்கும் பரமனைப் பின் தொடருவோம்!

### 3. ஆசீர்வதித்துப் பாதுகாப்பார்

“நீர் போகும் போதும் உள்ளே வரும் போதும் இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மை ஆசீர்வதிப்பார்” (திபா. 121 : 8)

கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறவர் “இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்” (எண். 21: 1). ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். ஆபிரகாமை ஆசீர்வதித்தார் (தொநூ. 12: 2) ஈசாக்கை நூறு மடங்கு ஆசீர்வதித்தார் (தொநூ. 26: 12) இஸ்ரவேலரை ஆசீர்வதித்தார்.

நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையயிலும் ஆசீர்வதிப்பார் (இச. 28: 6).

“பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்” (எசா. 10: 1) என்று சொன்ன கர்த்தர் எல்லாவற்றிலும். நம்மை ஆசீர்வதித்துப் பாதுகாப்பார்.

துக்கத்தின் மகனாக எண்ணப்பட்ட யாபேஸ் கர்த்தரிடம் வேண்டிக்கொண்ட போது கர்த்தர் அவனை ஆசீர்வதித்து, அவன் எல்லையைப் பெரிதாக்கி, எல்லா தீங்கிற்கும் விலக்கிக் காத்தார். (1 குறி. 4: 10). எசேக்கியா ராஜா போகும் இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று. கர்த்தர் அவனோடு இருந்து ஆசீர்வதித்தார். காரணம் எசேக்கியா கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்தது போல் எவரும் வைக்கவில்லை என்று (2 அர. 18: 5) கூறுகிறது. உங்கள் வாழ்க்கையில் அற்புதங்கள் நடைபெற வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதற்கு ஒரே வழி கர்த்தர் மேல் நம்பிக்கை வையுங்கள்.

நம் வாழ்வை ஆசீர்வதித்து உயர்த்துகின்ற ஆண்டவரின் கரங்களை நம்பிக்கையோடு பற்றிக்கொண்டு நடப்போம்! பயணத்தில் விழித்திருந்து, நிழலாயிருந்து, ஆசீர்வதித்துப் பாதுகாக்கும் பரமன் எந்நாளும் நம்மைப் பாதுகாத்து ஆசீர்வதிப்பாராக! நம்பிக்கையோடு பயணிப்போம்!

**திரு. M.T. காட்வின்**

# இறைமக்களின் திருப்பணி

## Ministry of the Laity

1 சாமு. 25: 14-28 1 தெச. 4: 1-12

திபா. 23 லூக். 10: 25-37

அதற்கு திருச்சட்ட அறிஞர், “அவருக்கு இரக்கம் காட்டியவரே” என்றார். இயேசு, “நீரும் போய் அப்படியே செய்யும்” என்று கூறினார் (லூக். 10: 3.

இயேசுநாதர் திருச்சட்ட அறிஞருக்கு அறிவுரைகூறும் போது இறைமக்களின் திருப்பணி தேவையில் இருக்கிறவர்களின் தேவையை நிறைவு செய்வது என்று கற்றுக்கொடுத்தார். இறைமக்கள் இறைமகனின் மந்தையில் ஆடுகள். இறைச்சாயலில் படைக்கப்பட்ட இறைமக்கள் அனைவருமே இறைப்பணியாளர்கள். தூய பேதுரு “நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர் அவரது உரிமைச் சொத்தான மக்கள் . . . அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி” என்கிறார் (1 பேது. 2: 9). உலகில் கிறிஸ்துவுக்கு சாட்சியாக திருப்பணி செய்ய அழைக்கப்பட்ட சமூகம் திருச்சபை ஆகும். மார்ட்டின் லூதர், “இறைமக்கள் அனைவரும் ஆசாரியர்கள். கிறிஸ்து இறைமக்களின் நிலையான வாழ்விற்காக உயிர்த்தியாகம் செய்து உயிருடன் எழுந்தார் என்று நம்பிக்கை கொள்வோர் அனைவருமே இறைப்பணியாளர்கள்” என்கிறார்.

இறைமக்களின் திருப்பணி இன்றைய சூழலில் சமாதானத் திருப்பணியாக, ஆற்றுப்படுத்தும் திருப்பணியாக அமைய வேண்டும். திருச்சபையும் சமூக தேவைகளைச் சந்திக்க தம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகின்றது. M.M. தோமஸ் என்ற இறையியலாளர் “மனிதரை மனிதராக்கும் பணியில் இறைமக்கள் ஈடுபட வேண்டும்.” ஏனெனில், லேகியோன் பிசாசு பிடித்த மனிதர் யாருக்கும் பயனில்லாதவர், இறைவனால் மீட்கப்பட்டப் பின் அனைவருக்கும் பயனுடைவர். அதுபோல மனிதராக்கும் திருப்பணியினை இறைமக்களாகிய நாம் நிறைவேற்ற அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### 1. இறைமக்கள்: பின்தொடர்பவர்கள்

“கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார்” (1தெச. 4: 7)

திருத்தூதுவர் பவுல் தெசலோனிக்கேயத் திருச்சபையாருக்கு அழைப்புக் கொடுக்கின்றபோது ஒழுக்கக் கேடான வாழ்வைவிட்டுத் தூய வாழ்வு வாழ்ந்து இறைவனைப் பின் தொடர்ந்து திருத்தொண்டாற்ற அழைக்கிறார். இறைமக்கள் சுயத்தை நிறைவேற்றுபவர் அல்லர், கிறிஸ்துவையும் அவரது போதனைகளையும் பின் தொடர்பவர்கள்.

கடவுளைப் பின் தொடர்கின்ற இறைமக்கள் நிறைவேற்றவேண்டிய திருப்பணி என்ன என்பதைக் குறித்து தற்கால அருட்பணி இயக்கங்களின் தந்தை என அழைக்கப்படும் வில்லியம் கேரி அவர்கள் கூறும்போது "கடவுளிடம் பெரிய காரியங்களை எதிர்பார், கடவுளுக்கென பெரிய காரியங்களைச் செய்" என்கிறார்.

இறைவனைப் பின் தொடர அழைக்கப்பட்டவர்கள் பற்றுறுதியுடன் பாடுகளைச் சந்திக்கவும் முன்வருதல் வேண்டும். 2023 ஜூன் மாதத்தில் மணிப்பூரில் உள்ள கிறிஸ்தவ இறைமக்கள் பல்வேறு நிலைகளில் துன்புறுத்தப்பட்டனர். அன்புக்குரியோரை இழந்ததாலும், ஆலயங்கள் இடிக்கப்பட்டதாலும் அவர்களின் பற்றுறுதி அசைக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் தளர்ந்துவிடவில்லை.

திருப்பணி என்னும்போது கூடாரத்தின் இடத்தை விசாலமாக்க வேண்டும். வாசஸ்தலங்கள் விரிவாக்கப்பட வேண்டும் (எசா 54: 2) கொர்நேலியு நற்செய்திக்கென இல்லத்தைத் திறந்து பேதுருவை அழைத்து திருப்பணியினை நிறைவேற்றினார் (திப. 10: 34). பேராயர் I.R.H. ஞானதாசன் அவர்கள் கூறும்போது இறைமக்களாகிய நாம் "பிறருக்கு ஒளி காட்டவே வெளிச்சமாய் வைக்கப்பட்டிருக்கிறோம் பிறரைச் சுட்டெரிப்பதற்கல்ல" என்கிறார்.

கிறிஸ்துவைப் பின்தொடர்வோர், கிறிஸ்துவின் தூய ஒளியைப் பெற்று, நல்லொழுக்கமாய்த் தூயவாழ்வு வாழ்ந்து, பாவ இருளில் வாழ்வோரை நல்வழிப்படுத்தவேண்டும்.

### 2. இறைமக்கள்: கரிசனை கொள்பவர்கள்

"மறுநாள் இருதெனாரியத்தை எடுத்து, சாவடி பொறுப்பாளரிடம் கொடுத்து, "இவரைக் கவனித்துக்கொள்ளும் இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்" என்றார்." (லூக். 10: 35)

தியாகமின்றி 'பிறன்' என்ற உறவு இல்லை. மனுக்குலத்தின் மீது கரிசனை கொள்பவர்களிடம் தியாகம் பிறக்கிறது. காயத்தோடு தேவையிலிருந்த மனிதனைக் கண்டும் காணாதவர் போல போகிறது அல்ல. மனதுருகி கிட்ட வந்து காயங்களைக் கட்டுவது. தியாகத்தினால் பயணம் தடைப்பட்டது.

உணவுப் பொருட்கள் செலவிடப்பட்டன. மருந்துப் பொருட்கள் செலவாயின. இரத்தக் கறை ஆடையைக் கறைப்படுத்தினது, வாகனத்தைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. நேரம் செலவிடப்பட்டது, பணம் செலவிடப்பட்டது இவையெல்லாம் அந்தப் பிறன் என்ற உறவுக்காரனின் நல்வாழ்விற்கான கரிசனைச் செயல்கள் ஆகும்.

இயேசுநாதர் தம் ஊழியத்தின் ஆரம்பத்தில் திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார். அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப் போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள். இவர்களுக்காகப் பரிதபிக்கிற நிலை மனுக்குலத்தின் மீதிருந்த கரிசனையையும், ஒப்படைப்பையும், அதன் செயல்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன.

இறையரசின் திருப்பணி என்பது உடன் வாழ் இறைமக்களோடு கரிசனை கொள்வதும் இன்னல்களில் இணைந்து கொள்வதுமாகும். இயேசுநாதர் போதித்தது மட்டுமல்ல தம்மை மானிடத்தோடு இணைத்துக் கொண்டார். அதன் அடையாளம் தமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் உடலையும், உதிரத்தையும், உயிரையும் மனுக்குலதத்தின் வாழ்விற்காக கையளித்தார்.

### 3. இறைமக்கள்: இரக்கத்தைப் பெற்றுத் தருபவர்கள்

“ . . . தாவீது, . . . அவரை நோக்கி, “சமாதானத்துடன் நீ உன் வீட்டுக்குப் போ உனக்குச் செவிகொடுத்து உன் வேண்டுதலை நிறைவேற்றியுள்ளேன்” என்றார்” (1 சாமு. 25: 35).

1 சாமு. 25-ல் நாபால் மாகோனில் வாழ்ந்த செல்வந்தனான துன்மார்க்கர், தீய குணமுடையவர், ஆனால் அழகான அறிவுள்ள விசுவாசமுள்ள மனைவி அபிகாயில் வழியாக இறைவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொண்டார் (25: 3). விசுவாச வீரரான காலேபின் வழி மரபில் தோன்றியவர். எல்லாவற்றிலும் உதவியாக இருந்த தாவீதையும் அவரது வீரர்களையும் இழிவாகப் பேசி அவர்கள் செய்த நன்மைகளை மறந்து பழிச்சொற்களையும் கூறினார். மட்டுமல்ல விமர்சனத்தாலே விழுந்து போனவர். நாபாலிடம் உதவி கேட்டு வந்த தாவீதின் ஆட்களுக்குக் கடுமையான பதில் கூறியதால் பேரழிவு தனது குடும்பத்தைச் சூழ்ந்து கொண்டதை அறிந்தவுடன் விரைவாக புறப்பட்டார் அபிகாயில். வாளுடன் வந்த தாவீதைத் தனது பணிவான நாவுடன் எதிர்கொண்டாள் (25: 20-31). இதனால் தாவீதிடமிருந்து இரக்கத்தைப்பெற்று தன் குடும்பத்திற்கு வர இருந்த பழி நீங்கி பாதுகாக்கப்பட்டார். இறைமக்களின் திருப்பணியின் தலையாய கடமை இரக்கம் காட்டுவதும் இரக்கத்தைச்

சுதந்தரித்துக் கொள்வதுமாகும். குடும்ப உறவுகள் தவறிழைக்கும் போது நல்வழி காட்டுவதும், தீமைகளை எதிர்கொள்ளும்போது, ஞானமாய்ச் செயல்பட்டு இரக்கம் பெறச் செய்வதும் இறைமக்களின் திருப்பணிகளாகும்.

மார்ட்டின் லூதர் கூறும்போது, "இறைமக்களின் திருப்பணியில் கிறிஸ்துவைப் பின்தொடராதவர்கள், மனுக்குலத்தின்மீது கரிசனை கொள்ளாதவர்கள், இரக்க சிந்தை இல்லாத கிறிஸ்தவ வாழ்வு வெறுமையான ஒரு துறவிமடம்" என்கிறார். வாழ்வின் பல்வேறு துன்பச் சூழல்களில் சிக்கித் துயருறுவோர் இறைவனைப் பின் தொடர்ந்து அவரது இரக்கச் சிந்தையில் கரிசனையுள்ள வாழ்வு பெற்று மகிழ்வடையும் பாதையைக் கண்டடைவோம்.

அருள்திரு. **G. சதிலால் விஜின்**

# மாற்றுத் திறனுடையோர்: மாண்பும் சார்பும்

## Differently Abled : Dignity and Dependence

விப. 4:10-17 திப. 3:1-10

திபா. 103 : 1-33 மத். 17:14-21

ஆண்டவர் அவரிடம், "மனிதனுக்கு வாய் அமைத்தவர் யார்? அவனை ஊமையாக அல்லது செவிடாக அல்லது பார்வையுள்ளவனாக அல்லது குருடனாக வைப்பவர் யார்? ஆண்டவராகிய நான் தானே!" (விப. 4: 11)

மாற்றுத்திறனுடையோர் என்பவர்கள், "உடலில் செயல்பாடு குறைவானவர்களாக" (Limitation in functioning), பிறப்பின் போது உலகில் வரும் நம் சகோதர, சகோதரிகள் ஆவர். சிலர், பிறப்பிற்குப் பிற்பாடு ஏற்படும் பாதிப்புகளினாலும் அவ்வாறு மாறிவிடுகின்றனர். இந்த மாற்றுத்திறனுடையோரை, நம் காலத்து சமூகம், வீண்பழிகள் சுமத்தி, புண்படுத்துகிறது - புறக்கணிக்கிறது. மாற்றுத்திறனுடையோர் பெற்றோரின் சொத்துக்களைப் பெறவிடாமல் சமூகம் அவர்களைத் தடுக்கிறது. மாற்றுத் திறனுடையோரைப் "பாவிகள்", ,"தாழ்வானவர்கள்",, "கடவுளின் சாபம் பெற்றவர்கள்" என்றெல்லாம், சமூகம் அடையாளப்படுத்துகிறது. மாற்றுத்திறனாளிகளான சிறு குழந்தைகளை, சில சமூகம் கொல்லுகிறது (Infanticide). மாற்றுத்திறனுடையோர் கைவிடப்படுகின்றனர், கனவீனப்படுத்தப்படு கின்றனர். மாற்றுத்திறனுடையோரைச் "சுமைகள்" (Burdens) என்றும், "ஊர்ந்து செல்லும் உயிரிகள்" (Creeping Creatures) என்றும் "பயன்படுத்தித் தூக்கி வீசி எறியும் பொருட்கள்" (Use & Throw objects) என்றும் குடும்பத்தாலும், சமூகத்தாலும் கணிக்கப்படுகின்றனர் - கண்ணீர் விட வைக்கப்படுகின்றனர். இவர்களுக்குரிய மாண்பும்(Dignity), இவர்கள் பக்கமான சார்பும் (Dependence) இன்றும் கேள்விக்குறியாகி இருக்கின்ற நிலை.

மாற்றுத்திறனாளிகளும் மனிதர்கள், அவர்களுக்கு உரிய மாண்பு அவர்களுக்கு உரிமையுள்ளது. இதைச் சமூகம் உணர வேண்டும். மாற்றுத் திறனுடையோரின் மாண்பு என்ன? திருமறை நமக்குச் சொல்லும் பாடம் என்ன? எனச் சிந்திப்போம்.

### 1. மாற்றுத்திறனுடையோரின் மாண்பு (விப. 4: 11)

மனிதரை உருவாக்கிய ஆண்டவரே மாற்றுத்திறனுடையோரையும் உருவாக்கினார். எல்லாருமே ஆண்டவருடைய கரத்தினால் உருவம் பெற்றவர்கள் தான். இதை மனிதன் உணரவேண்டும் இது

மாற்றுதிறனுடையோரின் மாண்பு ஆகும். மாற்றுத்திறனாளியான என் நண்பனும், என் சகோதரியும் ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்ற எண்ணம் எல்லோரிடமும் ஏற்படவேண்டும். மோசே, இஸ்ரவேல் மக்களை மீட்கும்படியான அழைப்பு பெறுகிறார். எகிப்தில் ஆட்சிபுரிகின்ற பார்வோனிடம் செல்லவும் அறிவுறுத்தப்படுகிறார். அப்பொழுது மோசே கூறுகிறார், "நான் நாவன்மை அற்றவன்; எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும்" (விப. 4:10). இச்சூழ்நிலையில் தான் ஆண்டவர் மோசேயிடம், "நான் எல்லோரையும்; உருவாக்கினவர்" என்கிறார். யோவா. 9:1-3 வசனங்களில் பிறவியிலேயே பார்வையற்ற மனிதனின் பிறப்புக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் உண்டு என்று கூறப்பட்டுள்ளது. கடவுள், மனிதனை (பிறவியில் பார்வையற்றவர் உட்பட) உருவாக்கியவர் என்பதை இயேசு கிறிஸ்து கூறினார். இதை நாமும் ஏற்றுக்கொண்டு, மாற்றுத்திறனுடையோரை, ஆண்டவராய் உருவாக்கப்பட்டவர்கள் என்று எண்ணி அவர்களுக்குரிய மாண்பை நாம் கொடுக்கவேண்டும்.

மாற்றுத்திறனுடையோரை மாண்புடன் பார்க்கும்போது, அவர்களிடம் உள்ள தனித்தன்மைகளையும் உணர்தல் வேண்டும். மாற்றுத்திறனுடையோர் பிறருக்கு நன்மை கொடுக்கக்கூடிய திறனும், பண்பும் உள்ளவர்கள். அவர்கள் யாருக்கும் குறைவானவர்கள் அல்ல. மாற்றுத்திறனுடையோரிடம் பல திறன்களும், வளங்களும், நற்பண்புகளும் உள்ளன. அவர்கள் உபயோகமானவர்கள் என்ற சிறந்த மாண்பு எல்லார் மனதிலும் ஏற்பட வேண்டும்.

## 2. மாற்றுத் திறனுடையோரின் சார்பு

மாற்றுத்திறனுடையோர் தனித்துச் செயல்படுவதில் பல சவால்கள் உண்டு. எனவே, அவர்கள் சார்புத்தன்மை உடையவர்கள். வலிப்பு நோயால் துன்புற்றுக் கொண்டிருந்த ஒரு சிறுவன் - அவனது தந்தையால் முதலில் இயேசுவின் சீடர்களிடம் கொண்டு வரப்படுகின்றான். சீடர்களால் சிறுவனைக் குணமாக்க முடியவில்லை. சீடர்கள் 12 பேரும் முயற்சி செய்தனர். ஒருவராலும் வலிப்பு நோயுடைய சிறுவனைக் குணமாக்க முடியவில்லை. இது இயல்பு தான். ஆனால், அந்த சீடர்கள் 12 பேரும், வலிப்பு நோயுடைய சிறுவனையும், அவனது தந்தையையும் விட்டு விட்டார்கள் - விட்டு விலகி விட்டார்கள் - "நமக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம்?" என்று ஒதுங்கிக் கொண்டார்கள். எனவே, வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனை அவனது தந்தை, இயேசுவிடம் அழைத்து வருகிறார். இயேசு, "வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனை," **"தம் பக்கம்"** அழைக்கிறார். தம்மருகே வரவழைத்து அவனைக் குணமாக்குகிறார். இங்கே சீடர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனைக் குணமாக்கமுடியவில்லை. உண்மை தான். தொடர்ந்து, அவனை,

அப்படியே இயேசுவிடம், அவர்களே கொண்டு வந்திருக்க வேண்டும். இது சீடர்கள் செய்ய மறந்த செயல் ஆகும். ஆம்! நாமும் இயேசுவைப் போல, மாற்றுத்திறனுடையோரின் “பக்கம்” நிற்க வேண்டும் - உறவு காட்டவேண்டும் - உதவி செய்ய வேண்டும் - அன்பு காட்டுதல், உடனிருத்தல், நேரம் செலவிடுதல், கரிசனை காட்டுதல் போன்ற உயரிய பண்புகளைச் செயல்படுத்த வேண்டும்.

மாற்றுத்திறனுடையோரும் - நம் சகோதர சகோதரிகள் என்ற எண்ணத்துடன் அவர்களும் எல்லோரையும் போலவே “ஆண்டவரால் உருவாக்கப்பட்டவர்கள்” என்றும், அவர்களிடம் திறனும், பண்பும் உள்ளது, அவர்களுடைய மாண்பை எண்ணி, மாற்றுத்திறனுடையோரை கனப்படுத்துவோம், சமத்துவப் பார்வையில் அவர்களைக் கண்ணோக்குவோம். மேலும், நாம், அவர்கள் சார்பாளராக எப்போதும் இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன், உறவு காட்டி, உதவி செய்து உயரிய இறை மனிதர்களாக செயல்படுவோம்.

மாற்றுத்திறனுடையோரை பற்றிய நல்ல எண்ணங்களை எண்ணுவோம் நம் தலைமுறைகளுக்கு திருச்சபை மக்களுக்கு - கற்றுக் கொடுப்போம். நம் கோவில்களிலும் (Churches) மற்றும் நம் குரு மனைகளிலும் (Church Parsonages) சாய்வு தளங்கள் (Ramps), இருக்கை வசதிகள் (Seating Facilities) போன்றவற்றை மாற்றுத் திறனுடையோருக்காக ஏற்படுத்துவோம். பல குழுக்களில் அவர்களை இணைப்போம். மாற்றுத்திறனுடையோர் உட்பட நல்ல இறை மனித சமூகத்தைக் கட்டி எழுப்புவோம். ஆண்டவரின் ஆசீர்வாதத்தை நாம் எல்லாரும் பெறுவோம். ஆமென்!

அருள்திரு. **P. பிரின்ஸ்லி சாம் ஏசுதாஸ்**

# பொருளுள்ள வாழ்வுத் தேடலில் இளையோர்

## Youth in search of meaningful Life

தொநூ. 39:1-23 எபி. 12: 1-11

திபா. : 17 யோவா. 1: 43-51

"…..எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக" (எபி. 12: 1).

இளமைப்பருவம் வாழ்வில் மிக முக்கியமான பருவமாகும். இளையோர் ஆற்றல் நிறைந்தவர்கள் என்பதைத் திருப்பாடகர், "இளையோர் வீரரின் கையிலிருக்கும் அம்புகளுக்கு இணையாயிருக்கிறார்கள்" என்கிறார் (தி.பா. 124:4). இஸ்ரயேலிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுக் கொண்டு சென்றோரில் இளையோரைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ள, பண்புகள் அனைத்தும் இளையோரின் சிறப்புகளைத் தெரிவிப்பதாக உள்ளன. (தானி. 1:3, 4) இன்றைய தியானப் பொருளின் வழியாக ஆற்றல் நிறைந்த இளையோர், பொருளுள்ள வாழ்வைத் தேட வேண்டும் என்ற அழைப்பு தரப்பட்டுள்ளது. இதனைத் தான் இயேசு கிறிஸ்துவிடம் வந்து, "நிலை வாழ்வைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்", என்று வினவிய இளைஞரின் கேள்வி வழியாக புரிந்துகொள்ளமுடியும் (மத். 19:16-24). எனினும் இயேசுவிடம் விரும்பி வந்த இவர், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார். இயேசுவிடம் வந்து ஏமாற்றத்துடன் சென்றவர் இந்த இளைஞர் மட்டுமே என்பது குறிப்பிடத்தகுந்தது. இன்றைய திருமறைப் பகுதிகள் சார்ந்து பொருள்ள வாழ்வு எவை என்பதை ஈண்டு தியானிப்போம்.

### 1. தீமையைத் தீண்டாதிருத்தல்

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது இடையீட்டாளர் மன்றாட்டில், அடியார்களைத் தீயோனிடமிருந்து காத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறார் (யோவா. 17:15). அதாவது தீமையால் நிறைந்திருக்கும் இவ்வுலகில் தீமைகளை மேற்கொண்டு வாழ்வதற்குரிய ஆற்றலை கடவுள் அருள வேண்டும் என்றே மன்றாடுகிறார். மேலும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும் என்று மன்றாடக் கற்றுத்தந்துள்ளார். (மத். 6:13). ஆக, உலகில் தீமைகள் மலிந்துள்ளன என்பது வெளிப்படையான உண்மை. தீமை நிறைந்த உலகில் இளையோர் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்று தீர்மானம்

கொண்டுள்ளவர்களின் எண்ணங்களை யோசேப்பு என்ற இளைஞர் மாற்றியமைத்தார். தீமையில் விழுந்து விடுவதற்கான வாய்ப்பு கட்டாயம் என்ற நிலை வந்தபோதும் தப்பித்து ஓடிவிடுகிறார். (தொநூ. 39: 13) எபிரேயர் திருமுக ஆசிரியர், "......எந்தப் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு.... மன உறுதியோடு ஓடுவோமாக" என்றும், "இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம்....." என்றும் ஆலோசனை கூறுகிறார் (எபி. 12:1, 2). தூய பவுலார் இவ்வுலகின் பல்வேறு தீமைகளுக்கு எதிர்த்து நில் (எபே. 6:11-13), போராடு (எபே. 6:12, 1 திமொ. 6:12) என ஆலோசனை கூறியவர், பாலிய இச்சைகளை விட்டு ஓடி விடு (2 திமொ. 2:22) என்று கட்டளையிடுகிறார். காரணம் என்னவென்றால் எதிர்த்து நின்று வெற்றி பெற இயலாத தீமை பாலியல் இச்சை என்பது வெளிப்படையான உண்மை. இதனை நன்குணர்ந்த யோசேப்பு ஓடிவிடுகிறார். இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்க நல்ல முன்மாதிரியாய் இருக்கவேண்டும் என திமொத்தேயுவுக்கு பவுலார் அறிவுரை கூறுகிறார் (1 திமொ. 4:12). எனவே தீமை நிறைந்திருக்கும் உலகில் தீமையைத் தீண்டாது எச்சரிக்கையுடன் வாழ வேண்டியது இன்றியமையாததாகும்.

### 2. கட்டுப்பாட்டுடன் வாழ்தல்

எபிரேயர் திருமுக ஆக்கியோன் ஓட்டப்பந்தயம் போன்ற வாழ்க்கைப் பயணத்தில் நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் பொறுமையோடே ஓடவேண்டும் என்கிறார். ஓட்டப் பந்தய வீரர்கள் ஓடுவதற்கான ஓட்டக்களத்தில் இரண்டு கோடுகள் வரையப்பட்டு அக்கோடுகளைத் தொடாதபடி ஓடவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்படும். அதுபோல வாழ்க்கைப் பாதையில் கட்டுப்பாடுடன் பொறுமையுடன் ஓட வேண்டும் என்ற ஆலோசனை தரப்படுகிறது. இன்று இளைஞர்களின் மேன்மையான வாழ்வுக்குச் சில கட்டுப்பாடுகள், நெறிமுறைகள் (Guidelines) தரப்படுகின்றன என்றால் அதை ஏற்பதில் முரண்படுவதுண்டு. ஆனால் சபை உரையாளர், "இளையோரே இளமைப்பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே. இளமையின் நாள்களில் உள்ளக் களிப்புடனிருங்கள். மனம் விரும்புவதைச் செய்யுங்கள் கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால், நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்" (ச.உ. 11:9) என எச்சரிக்கிறார். இன்று கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்வே நன்மை பயக்கும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். கட்டுப்பாடின்றி விருப்பம் போல் வாழ்தல் அழிவிற்குரிய பாதையாகும். இயேசு கூறும், இடுக்கமான வாயில் (மத். 7:13; லூக். 13:24), சிலுவையை எடுத்தல் (மத். 10:38; 16:24) போன்றவற்றை இந்த பின்னணியத்தில் புரிந்துகொள்வது சிறப்பு. எப்படியும் வாழலாம் என்பதல்ல;

இப்படித் தான் வாழவேண்டும் என்ற உண்மையை உணர்ந்துகொண்டு வாழ வேண்டும்; அதுவே உயர்வைத் தரும்.

### 3. உண்மையை உரக்கச் சொல்லுதல்

பிலிப்புவினால் இயேசு கிறிஸ்துவண்டை அழைத்து வரப்பட்டவர் நத்தனியேல் (நாத்தான் வேல்). பிலிப்பு நத்தனியேலிடம், திருச்சட்ட நூலில் மோசேயும், இறைவாக்கினர்களும் குறிப்பிட்டுள்ள நாசரேத்தைச் சேர்ந்த இயேசுவைக் கண்டு கொண்டோம் என்றார் (மத். 1:45). உடனே நத்தனியேல் எந்த ஒளிவு மறைவுமின்றி, எந்தத் தயக்கமுமின்றி தன் மனதில் பட்டதை உரக்கக் கூறுகிறார்; அவர் “நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ?” என கேட்கிறார். நத்தனியேல் உண்மையுடையவராக இருந்தபடியால் தான் அவர் இயேசுவிடம் வரும்போது இயேசு அவரை, இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர் என்று கூறினார் (யோ. 1: 47). இளைஞருக்கு இருக்கவேண்டிய சிறந்த பண்பு உண்மை என்பதனை நத்தனியேலின் பண்பின் வழியாக இயேசு கிறிஸ்து உரக்கக் கூறுகிறார். பொய்களும், பித்தலாட்டங்களும், போலிகளும் மலிந்துள்ள இவ்வுலகில் உண்மையுள்ள வாழ்வு மிக முக்கியமானதாகும். உள் ஒன்றை வைத்து வெளியில் ஒன்று பேசுவது அல்ல; அப்பட்டமாக, வெளிப்படையாக உண்மை பேசுவது சிறப்பு ஆகும். மோசேயின் உண்மையான வாழ்வு கடவுளால் நினைவு கூரப்படுகிறது (எபி. 3: 2). அன்னியாவும், சப்பிராவும் உண்மைக்கு மாறாக பொய் உரைத்ததால் தண்டனைக்கு உள்ளாயினர். பொய் உரைத்தோரை அப்புறப்படுத்தும் பொறுப்பு இளையோருக்கு வழங்கப்பெற்றது (திப. 5: 6, 10) இளையோர் உண்மைக்குச் சான்றாளராய் திகழ்ந்ததாலேயே துணிவுடன் இப்பணியை நிறைவேற்ற முடிந்தது.

எனவே தீமை நிறைந்த இவ்வுலகில் தீமையைத் தீண்டாது, கட்டுப்பாடுடன் வாழ்ந்து, உண்மையை உரைத்து அர்த்தமுள்ள வாழ்வு வாழ்வோமாக.

அருள்திரு. **A. பிரைட் சாலமோன்**

# சீர்திருத்தப்பெற்ற சீர்திருந்தும் திருச்சபை

## Church : Reformed and Reforming

இச. 26: 4-11 திப. 2: 42-47

திபா. 109: 21-32 மத். 13: 33-35

இந்திய நாட்டில் 150 ஆண்டுகளுக்கு முன் குழந்தைத் திருமணம், தேவதாசி முறை, உடன்கட்டை ஏறுதல் போன்ற கொடிய பழக்கங்கள் நடைமுறையில் இருந்தன. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. சாதியின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளும், உரிமைகள் மறுக்கப்பட்ட சூழல்களும் மலிந்துக்கிடந்தன. இத்தகைய சூழலைச் சீர்படுத்த, சமுதாயத்தை மாற்றுருவாக்கம் செய்ய இறையவரால் பயன்படுத்தப்பட்டவர் தான் பண்டித ராமாபாய் ஆவார். இளம் வயதில் பல இன்னல்கள் வாழ்வில் அனுபவித்திருந்தாலும், அவைகளைப் பொருட்படுத்தாது சமுதாயத்தில் நிலவிய தீமைகளை வேருடன் அகற்றி சமுதாயத்தைச் சீர்படுத்த தம்மை அர்ப்பணித்தார். “முக்தி மிஷன்” “சாரதா சதன்” போன்ற அமைப்புக்களை உருவாக்கி கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு ஆதரவு கொடுத்தார். இந்து பூசாரிகளின் கடும் எதிர்ப்புகள் நடுவிலும் தேவதாசி முறையை அகற்ற பாடுபட்டார். பாடுகளினூடாய்ச் சமுதாயத்தைச் சீர்திருத்தம் செய்தார்.

அன்று உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தவறான அணுகுமுறை, நடைமுறைகளை எதிர்த்து ஜெர்மன் நாட்டில் விட்டன்பர்க் என்னும் இடத்திலுள்ள உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பங்குப் பணியாளராகப் பணிச் செய்த மார்ட்டின் லுத்தர் என்பவர் 95 கோட்பாடுகள் கொண்ட கடிதத்தை மக்கள் பார்வைக்குத் தொங்கவிட்டார். இத்துணிவான செயல் திருச்சபை சீர்திருத்தத்திற்கு வலுவூட்டியது. இயேசு பெருமகனாரின் கோட்பாடுகளை உலகிற்கு எடுத்துச்சொன்னவருள் தூய பவுலார், தூய அகஸ்டின் போன்ற பெரியோர் வரிசையில் மார்ட்டின் லுத்தரும் ஒருவர் ஆவார். இவரது போதனைகள் அருள் மட்டுமே (Grace alone), திருமறை மட்டுமே (Scripture alone), பற்றுறுதி மட்டுமே (Faith alone) என்பவைகளை மையமாக கொண்டு உருவாக்கம் பெற்றது. இவரது முற்போக்குச் சிந்தனைகளுக்கு இடமில்லை என்று திருச்சபை அவரை உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை ஐக்கியத்திலிருந்து வெளியேற்றியது. ஆயினும் அவர் தாம் கொண்டிருந்த கொள்கைப் பிடிப்பில் உறுதியாக இருந்தார், திருவிவிலியத்தின் வெளிச்சத்தில்

திருச்சபை சீர்திருத்தங்களை முன்னெடுத்தார். இதன் விளைவாகச் சீர்திருத்தத் திருச்சபைகள் உருவாயின. இந்தச் சீர்திருத்த அணுகுமுறைகளை முன்னெடுக்கும் விதமாக இந்த ஞாயிறு சீர்திருத்த ஞாயிறாக பின்பற்றப்படுகிறது. சீர்திருத்தம் பெற்றுச் சீர்திருந்தும் திருச்சபையில் இருக்கவேண்டிய சீர்திருத்தம் எதன் அடிப்படையில் அமையவேண்டும் என்பதைச் சிந்தனை செய்வோம்.

**1. சீர்திருத்தும் போதனை** (Reforming Teaching)

கிறிஸ்துவின் போதனையும் வாழ்வும் மக்கள் வாழ்வைச் சீர்படுத்தியது. உரோமை அரசிற்கு வரிதண்டுகிறவராகப் பணிச் செய்த காரணத்தால் தம் இனத்தார் தம்மைப் புறக்கணித்தனர், வெறுத்தனர். இப்படிப்பட்ட சமூதாய அமைப்பில் தம்மைப் போன்ற ஒருவரை சீடராக அழைத்து ஏற்றுக்கொண்ட யூதராகிய இயேசு கிறிஸ்து எப்படிபட்டவரோ அவரை பார்க்கவேண்டும் என்ற சிந்தை சகேயுவுக்கு உருவாகியிருக்க வேண்டும். எனவே தான் அவர் காட்டு அத்திமரத்தில் ஏறினார். இறைமகனார் சகேயு அருகில் வந்து அவரைப் பெயர் சொல்லி அழைத்து அவரோடு உரையாடினார். அவ்வுரையாடல் வரி தண்டும் பணிச்செய்த சகேயு வாழ்வைச் சீர்படுத்தியது. “இவரும் ஆபிரகாமின் மகன்” என்று இயேசு கிறிஸ்து கூறும் பேற்றினைப் பெற்றார்.

கிறிஸ்துவைப் போன்று திருத்தூதுவர் போதனைகள் மக்கள் வாழ்வைச் சீர்படுத்தியது. திப. 2: 1-12-இல் பெந்தேகோஸ்தே அனுபவம் கூறப்பட்டுள்ளது. கூடியிருந்த அனைவரும் தூயஆவியாரைப் பெற்றனர். திப. 2: 14-36-இல் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட மக்களுக்குப் பேதுரு இயேசு கிறிஸ்துவில் கண்டு, கேட்டு அனுபவமாக்கிய அத்தனை உண்மைகளையும் விளக்கமாகக் கூறி அருளுரையாற்றினார். திப. 2: 37-இல் பேதுருவின் அருளுரை கேட்ட மக்கள் உள்ளம் குத்தப்பட்டவர்களாய், பேதுருவையும் மற்ற திருத்தூதுவர்களையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். திப. 2: 38-இல் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொள்ள ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள் என பேதுரு கூறினார். அன்று 3000 பேர் திருமுழுக்குப் பெற்றனர். திருத்தூதுவர்களின் போதனையை ஏற்றுக்கொண்டவர்கள் தாங்கள் வாழ்வைச் சீர்திருத்தம் செய்தனர். பற்றுறுதியில் உறுதியடைந்தவர்கள் நாள்தோறும் தங்களைச் சபையிலே இணைத்துக்கொண்டனர். இறையன்பர்களே! வாழ்வில் சீர்திருத்தம் தேவை. விவிலியத்தின் போதனையின்படி வாழ்வோம். நம் வாழ்வைச் சீர்படுத்துவோம். அது சமுதாயத்தையும் திருச்சபையும் சீர்படுத்தும்.

**2. சீர்திருத்தும் தோழமை** (Reforming Companionship)

மாய்மாலம் இல்லாத பழுதற்ற அன்பு இருக்கும் இடத்தில் தோழமை

உறவு நிறைவாய் இருக்கும். சீர்திருத்தப் பெற்று சீர்திருந்தும் திருச்சபையில் விவிலியத்தின் போதனையின்படி தங்களைச் சீர்திருத்தியவர்களிடம் உறுதியான அடுத்த கட்ட செயல் தோழமை உறவு மற்றும் அப்பம் பிட்குதல் ஆகும். இவை இயேசு கிறிஸ்துவின் போதனையில் வெளிப்பட்ட அடையாளங்கள். தோழமை உறவு என்பது மாய்மாலமற்றதாகவும் கூட்டுறவை வலிமைப்படுத்தும் ஒன்றாகவும் அமைதல் வேண்டும்.

யூதர்களும் சமாரியரும் பகைவர்களாயிருந்தனர். லூக். 9: 51-56-இல் சமாரியாவினுள் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீடர்களும் நுழைய அனுமதிக்கப்படவில்லை. அப்போது யாக்கோபும் யோவானும் வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா? என்று கேட்டனர். இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார். இத்தகைய மனநிலை கொண்ட சமாரியரிடம் இயேசு கிறிஸ்து தோழமை உறவை உருவாக்கினார். யோ. 4: 39-42 இயேசு கிறிஸ்துவின் போதனையைக் கேட்ட சமாரியர் அவரில் நம்பிக்கை வைத்தனர். அவரைத் தங்களோடு தங்குமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் அங்கு இரண்டு நாள் தங்கினார்.

தொடக்கக்கால திருச்சபை இறைமக்கள் திருத்தூதுவர் கற்பித்தவற்றில் நிலைத்திருந்தனர். திருமுழுக்கு பெற்றுக்கொண்டவர்களிடம் தோழமை உறவு நிறைவாயிருந்தது. இந்தத் தோழமை உறவின் வெளிப்பாடு தான் சுயநலமில்லா வாழ்வும், அவர்களிடம் இருந்த பகிர்வும் ஆகும். திப. 2: 44, 45-இல் நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களையும், பிற உடமைகளையும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். சுயநலமில்லாப் பகிர்வு. ஏற்றத்தாழ்வு இல்லாச் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கியது. அவர்களிடம் உருவான தோழமை உறவு பொருளாதாரத்தை மையப்படுத்தியதல்ல. அவர்கள் இனம், நிறம், பொருளாதாரம் என வேறுபாடுகளைக் கடந்து, எல்லாரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்கிற தோழமை உறவைக் கொண்டவர்களாக வாழும் சமுதாயத்தில் பிறருக்குச் சான்றாளர்களாக வாழ்ந்தனர்.

விவிலியத்தின் வழியாய் கிறித்துவின் போதனைகளைப் பெற்றிருக்கும் நாம், சுயநலம் களைவோம், பிறர்நலம் பேணுவோம். சகோதரத்துவ உறவை உருவாக்குவோம். இதன்வழி தோழமை உறவை வலுப்படுத்தி வாழும் சமுதாயத்தில் பிறச் சமய நண்பர்களுக்குத் தோழமை உறவுக்குச் சான்றாளராக வாழ்வோம்.

### 3. **சீர்திருத்தும் இறைவேண்டல்** (Reforming Prayer)

இறைவேண்டல் இறைமக்கள் வாழ்வின் அடித்தளம். சீர்திருந்தும் திருச்சபையின் உயிர்துடிப்பு. இயேசு கிறிஸ்து தம் பணிவாழ்வில்

இறைவேண்டலுக்கு அதிக முக்கியம் கொடுத்தார். திருமுழுக்கு முனிவர் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றபின் பாலைநிலத்தில் 40 நாட்கள் நோன்பிருந்து திருப்பணிக்காய்த் தம்மை ஆயத்தப்படுத்தினார். சிலுவைச் சாவுக்கு தம்மை ஒப்புக்கொடுக்கும் முன் கெத்சமனே தோட்டத்தில் அவர் இறைவேண்டல் செய்தார். தம் பணி வாழ்வு காலத்திலும் இறைவேண்டல் செய்தார். இப்படி தம் வாழ்வு முழுமையும் இறைவேண்டலுக்கு முக்கியம் கொடுத்த இயேசு கிறிஸ்து, மத். 6: 5-15-இல் எப்படி இறைவேண்டல் செய்யவேண்டும் எனக் கற்றுக்கொடுத்தார்.

திருத்தூதுவர்களின் போதனைகளைப் பின்பற்றிய தொடக்ககால திருச்சபை இறைமக்கள் இறைவேண்டலில் உறுதியாய் நிலைத்து நின்றனர். இறைமக்கள் ஒன்றுகூடிய இடங்களில் ஒரே மனத்தோடு இறைவேண்டல் செய்தனர். இதனால் அற்புதங்கள், அடையாளங்கள் நிகழ்ந்தன. பொதுவுடமை சிந்தனை அவர்களிடம் இருந்தது. பாகுபாடின்றி அப்பம் பிட்டனர். (திப. 2: 43-47). இறைமக்கள் (பற்றுறுதியாளர்) வாழ்வில் உள்ள மாற்றங்களை அல்லது சீர்திருத்தங்களைப் பார்த்த யூதர்கள் அஞ்சினர்.

சீர்திருத்தத்திற்கான இறைவேண்டலை வணிகமயமாக்கிச் செல்வம் சேர்க்கும் கருவியாகப் பயன்படுத்தி சீர்திருந்தும் நோக்கத்திலிருந்து தடுமாறிப் பயணிக்கிறது. உறுதியான இறைவேண்டல் சீர்திருத்தத்தின் அடையாளம். அத்தோடு சீர்திருந்தும் திருச்சபையின் அடிப்படைத் தேவை. இறைவேண்டல் செய்கிறவர்கள் தங்களை இறையவருக்கு ஏற்புடையவராக காத்துக்கொள்ளவேண்டும்.

தொடக்ககால திருச்சபை இறைமக்கள், திருத்தூதுவர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிட்குதலிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தனர். இது அவர்களின் வாழ்வியலாகவும் வாழ்விலிருந்து பிரிக்க இயலாத ஒன்றாகவும் இருந்தது. அவர்கள் வாழ்வு சமுதாயத்தில் வாழ்ந்த பிற யூதர்களுக்கு மாற்றாகவும் முன்மாதிரியாகவும் இருந்தது. சிறிதளவு புளித்தமா எல்லா மாவையும் புளிப்பாக்கும் (மத். 13: 33-35) ஆயத்தப்படுத்தும் உணவுபொருளுக்குச் சுவைகொடுக்கும். சீர்திருத்தப்பெற்ற சீர்திருந்தும் திருச்சபை இறைமக்களாகிய நாம் விவிலியம் கற்பித்தவற்றிலும், இறையவர் நம்மிடம் எதிர்பார்க்கும் நட்புறவிலும், அப்பம் பிட்குதலிலும், இறைவேண்டலிலும், உறுதியாய் நிலைத்து நின்று பிறருக்கு நற்கனிகளைக் கொடுத்து வாழ்வோம். இது அனைவரின் வாழ்வியலாகவும், வாழ்விலிருந்து பிரிக்க இயலாத ஒன்றாகவும் கொண்டு சீர்திருத்தம் பெற்ற மக்களாய் வாழ்வோம்.

அருள்திரு. **S. அருள் ஜெபசிங்**

# இரங்கும் இறைவர்

விப. 34: 1-7

" . . . ஆண்டவர் இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் . . ." (விப. 34: 6)

அமெரிக்காவில் தென்பகுதி நகரம் ஒன்றின் வழியாக ஒருநாள் பில்லி கிரஹாம் தன் வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது, காவலர் ஒருவர் அவரைத் தடுத்து நிறுத்தி வேகக்கட்டுப்பாட்டை மீறி சென்றதாக அவர்மேல் குற்றம் சாட்டினார். கிரஹாம் தன் குற்றத்தை ஒத்துக் கொண்டார். ஆனாலும் அந்த காவல்துறை அதிகாரி அவரை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று கூறியிருந்தார். நீதிமன்றம் சென்ற அவரிடம் நீதிபதி "நீங்கள் குற்றவாளியா? அல்லது நிரபராதியா?" என்று கேட்டார். "நான் ஒரு குற்றவாளி" என்று ஒத்துக் கொண்டபோது, அவர் வேகக்கட்டுப்பாட்டை மீறிச் சென்ற ஒவ்வொரு மைலுக்கும் இரு டாலர் அபராதம் கட்டவேண்டும் என்று கூறினார். தீர்ப்பு கூறினபின்பு, அந்த நீதிபதி அவர் ஒரு உலகப் பிரசித்தி பெற்ற பிரசங்கியார் என்பதை அறிந்து "நீங்கள் சட்டத்தை மீறி விட்டீர்கள் அபராதம் கட்ட வேண்டும், ஆனால் அந்த அபராதத்தை உங்களுக்குப் பதிலாக நானே கட்டி விடுகிறேன்" என்று கூறி, பத்து டாலரை எடுத்து அந்த அபராதத்தை அவருக்காகக் கட்டினார். பிறகு அந்த நீதிபதி பில்லி கிரஹாமை வெளியே அழைத்துச் சென்று அவருக்கு விருந்தொன்றையும் கொடுத்தார். இந்த நீதிபதியைப் போலத்தான் கடவுள் மோசேயினுடைய வாழ்வில் அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்ட போது அவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இரக்கத்தைக் காண்பித்து மீண்டும் அவர்களைப் பரிவோடு வழிநடத்தி அவர்கள் மீது பேரன்பு கொண்ட கடவுளாய் தன்னை வெளிப்படுத்துகிறார்.

இந்தப் புதிய மாதத்தில் தொடக்க நாளிலே ஆண்டவருடைய சமூகத்திலே கடந்து வந்திருக்கிற நாம் கடவுள் இரக்கமும், பரிவும், பேரன்பும் கொண்டவர் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். எந்த நிலைகளில் எல்லாம் அவர் நமக்கு இரங்கும் இறைவராய் இருக்கிறார் என்பதை திருமறை பகுதி வழி சிந்தனை செய்யவும், இந்த மாதத்தில் அவருடைய இரக்கத்தையும், பரிவையும், பேரன்பையும் நம்முடைய வாழ்வுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் அழைக்கப்படுகின்றோம்.

**1. நாம் செய்யும் கொடுமைகளை மன்னித்து இரங்கும் இறைவர்** (விப. 34: 7a)

". . . கொடுமையையும் . . . மன்னிப்பவர்"

விடுதலைப் பயணத்தில் கடவுள் அருளிய முன் பின் இரு பக்கமும் எழுதப்பட்ட உடன்படிக்கை பலகையைப் பெற்று மலையில் இருந்து வர

மோசேக்குத் தாமதம் ஏற்பட்டதால் இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய அணிகலன்களைக் கொண்டு ஒரு கன்றுக் குட்டியைச் செய்து ஆண்டவருக்கு விழா என்று அறிவித்து அதற்கு முன்பாக ஆடி, பாடி குதுகலித்துக் கொண்டிருந்தனர். இத்தனை காலமாய்த் தங்களை நடத்தி வந்த கடவுளை விட்டுவிட்டு கடவுள் விரும்பாத கொடுமைதனை இஸ்ரயேல் மக்கள் செய்தபோது அந்த செய்கை கடவுளுக்கு எரிச்சல் ஊட்டியது. இந்த கொடுமைதனைக் கண்ட கடவுள் அவர்களை அழிப்பேன் என்று சொன்னபோது மோசே அவர்களுக்காக முறையிட்டு ஆண்டவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்கிறார். இந்த இஸ்ரயேல் மக்களைப் போல பல தருணங்களில் நாமும்கடவுள் நம்மைச் சிறப்பாக வழி நடத்தி வந்த விதங்களை மறந்து கடவுளை மறந்து சில சமயங்களில் இந்த இஸ்ரயேல் மக்களைப் போல அஞ்ஞானிகளாய் நடந்து நாள் பார்க்கிறவர்களாய், நேரம் பார்க்கிறவர்களாய், குறி கேட்கிறவர்களாய், சகுனம் பார்க்கிறவர்களாய் இப்படி பல்வேறு கொடுஞ்செயல்களுக்கு ஆளாகி கடவுள் நம்மீது கொண்ட இரக்கம் பரிவு பேரன்பு நிமித்தமாக இந்த கொடுஞ்செயல்களுக்குரிய தண்டனைகளைப் பெறாதவர்களாய் அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொண்டு இவ்வுலகில் இன்றும் வாழ்ந்து வருகின்றோம்.

உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன் என்று நம் கொடுஞ்செயல்களை மன்னித்து, நம்மை மீட்டுக் கொண்ட கடவுளுக்கு நன்றியுடன் வாழ இம்மாதத்தில் நம்மை அர்ப்பணிப்போம்.

**2. நாம் செய்யும் குற்றத்தை மன்னித்து இரங்கும் இறைவர்** (விப. 34: 7)

"... குற்றத்தையும் ... மன்னிப்பவர்"

இஸ்ரயேல் மக்களினுடைய கொடுஞ்செயல்களினால் ஆத்திரமடைந்த மோசே கடவுள் தன்னுடைய கைப்பட முன்பின் இருபுறமும் எழுதிக் கொடுத்த உடன்படிக்கை பலகையை உடைத்து போடுகிறார். தன்னுடைய கோபத்தால் கடவுளின் மகத்தான காரியத்தைச் சேதப்படுத்தி விட்டோமே என்று மனம் வருந்திய மோசே கடவுளிடம் தான் செய்த அந்த குற்றச் செயலுக்காக மனம் வருந்துகிறார் மன்னிக்க வேண்டுகிறார், மறுபடியும் அந்த மகத்தான காரியத்தைத் தான் பெற்றுக்கொள்ள தனக்கு உதவவேண்டும் என்று முறையிடுகிறார். முறையிட்ட மோசேயின் மன்றாட்டுக்குக் கடவுள் செவி கொடுத்து அவனுடைய குற்றத்தை மன்னித்து மீண்டும் அவனுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கி அந்த உடன்படிக்கைப் பலகையை மீண்டும் பெற்றுக்கொள்ள கடவுள் உதவி புரிந்தார். இந்த மோசே போல நாமும் பல தருணங்களில் கோபம் கொண்டவர்களாய் எரிச்சல் அடைந்தவர்களாக

மனோரீதியாக தடுமாற்றம் கொண்டவர்களாய் பல தருணங்களில் கடவுளினுடைய அருட்கொடைகளைச் சேதப்படுத்தியது உண்டு. கடவுள் தந்த மகத்தான மீட்பை அலட்சியப் படுத்தியதுண்டு. இப்படிப்பட்ட குற்றச்செயல்கள் நாம் புரிகின்றபோது அவைகளை எல்லாம் மன்னித்து, சினம் கொள்ள தயங்கி, நமக்கு வாழ்வு தரும் கடவுளாய் தொடர்ந்து தன்னை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறார் அந்த கடவுளுக்கு நன்றி உள்ளவர்களாய் வாழ இம்மாதத்தில் நம்மை அர்ப்பணிப்போம்.

**3. நாம் செய்யும் பாவங்களை மன்னித்து இரங்கும் இறைவர்** (விப. 34: 7)

" . . . பாவத்தையும் மன்னிப்பவர்"

இஸ்ரயேல் மக்கள் கடவுளின் பேரிரக்கத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள். எகிப்தின் அடிமைத்தன வாழ்வில் இருந்து அவர்களை மீட்டெடுத்த கடவுள் மிகச் சிறப்பாக பாலைவனப் பயணத்தில் அவர்களைப் பாதுகாத்துப் பராமரித்து உணவளித்து வழிநடத்தி வந்தார். ஆயினும் இஸ்ரயேல் மக்கள் அந்த வழிநடத்துதலில் மனநிறைவு கொள்ளாதபடி பல தருணங்களில் கடவுளால் தங்களை வழிநடத்த தரப்பட்ட தலைவர்களுக்கு விரோதமாய்க் கூட்டம் கூடுகிறவர்களாய் வார்த்தைகளினால் காயப்படுத்துகிறவர்களாய் பல பாவங்களை கடவுளுக்கு விரோதமாய்ச் செய்து கொண்டு வந்தனர். இவர்கள் செய்கின்ற இந்த பாவங்களை எல்லாம் மன்னிக்கும்படியாக மோசே பல தடவை கடவுளிடம் முறையிட்டு மன்னிப்பைப் பெற்று தந்திருக்கிறார். இஸ்ரயேல் மக்களின் பாவங்களின் நிமித்தமாய் மோசேயும் தவறு இழைக்கக்கூடிய சூழலுக்கு தள்ளப்பட்டார் (திபா. 106: 32, 33) ஆயினும் ஆண்டவர் பேரன்பும் நம்பிக்கைக்குரியவருமாய் இருந்தார். (விப. 34: 6ம்). இந்த இஸ்ரயேலர்களைப் போலத்தான் நாமும் கடவுளால் அடிமைத்தன வாழ்வில் இருந்து மீட்டெடுக்கப்பட்டோம். நாம் செய்யும் பாவங்களை மன்னித்து இரங்கும் இறைவனாய் இருந்து அவர் அருளினால் இவ்வுலக வாழ்வில் பல நன்மைகளை நாம் பெற்று இருக்கின்றோம். ஆனாலும் பல தருணங்களில் நமக்கு வாழ்வருளிய கடவுளையும், நன்மைகளைத் தந்த கடவுளையும் நாம் மறந்து பாவத்திலே விழுந்து கடவுளைத் துக்கப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றோம்.

நம் பாவத்தினிமித்தம் மரணத்திற்குப் பாத்திரவான்களாக இருந்தபோதிலும், கடவுள் நம்மேல் இரக்கம் பாராட்டி, தமது சொந்த குமாரனையே நம் பாவங்களுக்காக கிரயமாக செலுத்தி, நம் பாவங்களை மன்னித்து, இறையரசுக்குப் பாத்திரமாக மாற்றியிருக்கிறார். தகுதியில்லாத நமக்கு கடவுள் பாராட்டியிருக்கிற இரக்கம் எவ்வளவு பெரியது! அதை நினைத்து நன்றியுடன் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

**திரு. S. சஜின் ராஜ்**

**03.11.2024**

# திருச்சபையில் சிறார்கள்

## Children in the Church

வி.ப. 2: 1-10 3 யோவா. 1: 15

தி.பா. 47 லூக். 18: 15-17

சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. (லூக். 18: 16)

கடவுள் சொல்லிமுடியாத அருட்கொடைகளை மனுக்குடும்பங்களுக்கு வழங்குகிறார். அவர் தம் மக்களுக்கு வழங்குகின்ற அருட்கொடைகளில் முக்கியமான ஒன்று குழந்தை. “பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்” (திபா. 127: 3). ஆண்டவர் அருட்கொடையாய்க் குழந்தைகளை மனுக்குடும்பங்களுக்கு வழங்குவதில் அவருக்கு ஒரு நோக்கம் அல்லது திட்டம் உண்டு. ஒவ்வொரு குழந்தையிலும் அவருக்கு ஒரு நோக்கம் உண்டு. குடும்பத்தில், சமூகத்தில், திருச்சபையில், நாட்டில், உலகில் என்று அவரது நோக்கம் விசாலமானது. திருமறையில் மோசே, சாமுவேல், தாவீது, யோசேப்பு என ஒவ்வொருவரிலும் அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒருதிட்டம் வைத்திருந்தார். அவரது திட்டம் நிறைவேறும் வரையில் அவர்களோடு இருந்து செயல்பட்டார்.

கடவுளின் திட்டம் சிலரில் நிறைவேறுவதும் பலரில் நிறைவேறாமல் போவதும் இயல்பாகிப்போன ஒன்று. சிறுபிள்ளைகளில் கடவுளின் நோக்கம் நிறைவேறும் வகையில் அவர்கள் வளர்க்கப்பட விரும்புகிறவர் ஆண்டவர். ஆனால் இந்த நம்பிக்கை ஓட்டத்தில் பல தடைகளும் இடறல்களும் ஏற்படும்போது கடவுளின் திட்டம் நிறைவேறாமல் போகின்றன. ஆனால் யாரால் இடறல்கள், தடைகள் ஏற்படுத்தப்படுகிறதோ அவர்களுக்கு ஐயோ என இயேசு எச்சரிப்பையும் கொடுக்கிறார்.

சிறு பிள்ளைகளை இயேசு தொடவேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர். இயேசு இதைக் கண்டு, கோபம் கொண்டு, “சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள், ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது,” எனத் தெளிவுபடக் கூறினார் (மாற்கு 10: 13,1 4).

என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஓர் எந்திரக்கல்லைக் கட்டி,

கடலில் தள்ளிவிடுவதே அவர்களுக்கு நல்லது (மாற்கு 9: 42). மனிதனின் பாவம் இறையாட்சியில் அவன் பங்குகொள்ளவிடாமல் இடறல் ஏற்படுத்துகிறது.

பிள்ளைகளை இறையாட்சிக்குச் சொந்தமானவர்களாய் உருவாக்குவதில் திருச்சபை மற்றும் பெற்றோரின் பொறுப்பு மிக முக்கியமானது. அதனையே தொடர்ந்து இந்த பகுதியில் தியானிப்போம்.

**1. வளர்க்கப்பட வேண்டும்** (விப. 2: 1-10)

". . . நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு . . ." (விப. 2: 9)

சிறார்கள் கடவுளின் திட்டப்படி அவரின் திட்டத்திற்கென வளர்க்கப்பட வேண்டியவர்கள். ஒரு குழந்தை புவியில் பிறக்கும்போது நல்ல குழந்தையாய் தூய உள்ளத்துடனேயே பிறக்கிறது. "எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே" என்கிறார் கவிஞர் ஒருவர். ஆனால் பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டியதில் திருச்சபை, பெற்றோர், பெரியோர், ஆசிரியர் என பலரின் பொறுப்பு கலந்த கடமை முக்கியம் பெறுகிறது.

ஆண் பிள்ளைகள் பிறந்தால் நதியில் போட்டுவிட வேண்டும் என்ற எபிரேயருக்கு எதிரான கொடுமையான சட்டம் பார்வோன் என்ற எகிப்தின் மன்னனால் பிறப்பிக்கப்பட்டிருந்த காலக்கட்டத்தில் பிறந்ததுதான் மோசே என்ற குழந்தை. அழகிய குழந்தை மோசேயை எகிப்தின் சட்டத்தின்படியே நதியில் போட்டுவிடாமல், தாய் ஒரு நாணல் பெட்டியைச் செய்து பிசினும் கீலும் பூசி அதில் பிள்ளையை வைத்து நைல் நதியோரத்திலுள்ள நாணலுக்குள் வைத்தாள். தன் மகனுக்கு என்ன நேரிடப்போகிறது என்பதைக் கண்காணிக்க தன் மூத்த மகளையே பணிக்கிறாள். தன் முயற்சிக்குத்தக்க பலன் அவளுக்குக் கிடைத்து விட்டது. தன் மகனை வளர்க்கின்ற பொறுப்பு பார்வோனின் குமாரத்தி வழியாகக் கிடைக்க அவனைத் தனக்கே உரித்தான தெய்வீக நம்பிக்கையிலே வளர்த்தெடுக்கிறாள்.

"நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய்,
அதை எனக்கு வளர்த்திடு" (விப. 2: 9)

மோசே குழந்தைப் பருவத்தில் தன் தாயிடமிருந்து பெற்றுக்கொண்ட இறை நம்பிக்கை, தன் நாட்டுப்பற்று, துன்புறுவோருக்கு உதவிடும் பண்பு, தன் பின்னணியம் இவை அனைத்தும் அவனுக்கு ஒரு உயர்ந்த தலைவனுக்கான அடித்தளத்தைக் கொடுத்தது. தான் யார் என்பதைக் கற்றுக்கொண்டான். தாயிடம் பெற்றுக்கொண்ட இறை நம்பிக்கையால் முட்செடியில் நின்று ஆண்டவர் அழைத்தபோது அங்கேயே தன்னை ஆண்டவருக்கு

அர்ப்பணிக்கிறார். அடிமைப்பட்டுக் கிடந்த தன் மக்களாகிய இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அழைத்துவரும் விடுதலைத்தலைவனாக ஆண்டவர் அவரை மாற்றுகிறார்.

பிள்ளைகள் சிறு வயது முதல் திருவசனங்களில் வேரூன்றி வளரவேண்டும். "நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாவின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேது. 2: 3). வஞ்சகமற்ற ஞானப்பாலாம் திருவசனத்தைப் பருகி வளரும் பிள்ளைகள் ஆண்டவரில் நிலைத்திருந்து இறையாட்சிக்குத் தங்களை ஆயத்தப்படுத்துகின்றனர்.

பிள்ளைகளை இறைநம்பிக்கையில் பேணி வளர்ப்பதும் நற்செய்தி/ திருவசனங்களைக் கேட்டுக் கற்றுக் கொள்ளத் தூண்டுவதும் அவசியமானது. ஒரு தாயின் பொறுப்புணர்வும் கனிவும் யோவா. 6-ஆம் அதிகாரத்தில் வெளிப்படுகிறது. மலையடிவாரத்தில் நற்செய்தி கேட்க ஆர்வத்தோடு இயேசுவிடம் வந்த சிறுவனுக்கு 5 அப்பங்களும் 2 மீன்களும் கொடுத்து அனுப்புகிறார் (யோவா. 6: 9). அங்கு கூடிவந்த ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு அது உணவானது மட்டுமல்ல பன்னிரண்டு கூடை நிறைய மீந்ததையும் சேகரித்தார்கள் (6: 13). திரள்கூட்டம் மக்களின் பசி நீங்கி, மாற்றுருவாக்கத்திற்கு சிறுவன் கருவியாக மாறுகிறான்.

"இவன் ஒரு முட்டாள், படிப்பதற்கு லாயக்கற்றவன் இவனை நாளையிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டாம்" என்று ஆசிரியராலும் பள்ளிக் கூடத்தாலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு மாணவனை, தாய் அரவணைத்து இல்லத்திலேயே கல்வியைக் கொடுத்து, அவனுக்குள் இருந்த திறமையை வெளிக்கொணர்ந்து, பலவான் கையிலுள்ள அம்பாய் அவனை உருவாக்கி தாமஸ் ஆல்வா எடிசன் எனும் உலகம் போற்றும் விஞ்ஞானியாய் அவனை உலகுக்கு வெளிப்படுத்துகிறார். குழந்தைகள் பெற்றோரால், ஆசிரியரால் வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

### 2. வழிகாட்ட வேண்டும்

ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் ஒவ்வொரு மனிதனையும் குறிப்பாக குழந்தைகளை நேர்த்தியான வாழ்வுக்கு நேராய் வழிநடத்துகிறது. இறையாட்சிப் பயணத்தில் சரியான பாதையில் பயணிப்பது மிக அவசியமானது. பகலில் அல்லது ஒளியில் பயணம் செய்கிற ஒருமனிதன் பாதை அறிந்து பயணம் செய்கிறான். ஆனால் இருளில் பயணிக்கிறவன் இடறிப்போகிறான். இறைமக்கள் வாழ்வை நெறிமுறைப்படுத்த கடவுள் கொடுத்த நீதிச் சட்டங்கள், மீட்பின் வாழ்வுக்கு வழிகாட்டிட இயேசு கிறிஸ்து

போதித்த நற்செய்திப் போதனைகள் அத்தனையுமே மனுக்குலம் இறையாட்சிக்கு நேராய்ப் பயணம் செய்ய பாதைகாட்டியாய் இருக்கும் ஒளிக்கீற்றுகள். இவைகளை வாழ்வுக்குரியதாக்குவதில் அதிக ஆரவம் காட்ட வேண்டியதே திருச்சபைத் திருப்பணியின் மையம் ஆகும்.

குறிப்பாக வருங்காலத் திருச்சபையாகிய சிறார்கள் கவனிக்கப்பட வேண்டியவர்கள். பிறரைச் சார்ந்தே வாழும் இயல்புடைய, கபடமற்ற, வெறுமையான தூய உள்ளத்துடன் பிறந்து வளரும் பிள்ளைகள் நல்லவைகளைக் கற்றுக் கொண்டு நற்செய்தியின்படி வாழ்ந்து இறையாட்சிக்குச் சொந்தமாக வழிகாட்ட வேண்டியது அவசியம். இதனால் ஆண்டவரும் மகிழ்கிறார். எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும் ஆவல் இன்று பிள்ளைகளிடம் அதிகம். உலகின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற அறிவுப்பெருக்கமும் வியப்பானதே. குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும் முன் Smart Phone-ஐ இயக்கும் நிபுணத்துவம் பெற்றுவிடுகிறது. சமூக ஊடகங்களுக்குள் புகுந்து தனக்கு விருப்பமானவைகளைப் பார்க்க, கேட்க அறிந்து கொள்கிறது. புது நுணுக்கங்களை அறிந்துகொள்ளும் ஆவலில் வெற்றிகண்டு விடுகிறது. ஆனால்திருவசனங்களைக் கற்றுக்கொள்வதில் இந்த அதீத ஆர்வத்தைக் காண்பது அரிதானதே.

பெற்றோரும் பிள்ளைகளுக்கு இசைந்தவாறே தங்களைக் குழந்தைகளுக்குக் கீழ்ப்படுத்திக் கொள்கிறார்கள். பிள்ளைகளுக்குப் பாசத்தைக்கொட்டி வளர்க்கிறார்கள். அவசியமானதே. தெவிட்ட தெவிட்ட அனைத்தும் கொடுத்து விடுகிறார்கள். அவசியமானதே. நல்ல கல்வி, நல்ல கல்விக்கூடங்கள், நல்ல ஆடை, நல்ல உணவு என நல்லவைகளைத் தெரிவு செய்து பிள்ளைகளுக்குக் கொடுப்பதில் எடுத்துக்கொள்கின்ற அக்கறையும் முக்கியத்துவமும், அவர்கள் திருவசனங்களைக் கற்று அதன்படி வாழ்வதற்கும் திருச்சபை திருப்பணி நாட்டத்துடன் கிறிஸ்துடன் இணைந்து வாழ்வதற்கும் எடுத்துக் கொள்வதில்லை. சாலோமன் ஞானி பிள்ளைகளைப் பற்றி,

நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு;
முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார் (நீதி. 22:6)

என்று தெளிவாய் குறிப்பிடுகிறார்.

தங்கள் எதிர்காலத்தைக் குறித்த அறிவே இல்லாமல் சேற்றிலும் சகதியிலும் விளையாடி வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருந்த சிறார்களைக் கண்டெடுத்து அவர்களுக்கு நல்வழி காட்டுவதற்கு உருவாக்கப்பட்டதுதான் திருமறைப்பள்ளி. 1780-ஆம் அண்டு ராபர்ட் ரெய்க்ஸ் என்னும் பெரியவரால் இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட இந்த இயக்கமே இன்று உலகெங்கும் பரந்து

திருச்சபைகள் உருவாகவும் நல்ல பிரஜைகள் உருவாகவும் காரணமாக அமைந்திருக்கின்றன. "பிள்ளைகளைக் கிறிஸ்துவுக்கு நேராய் வழிநடத்துதல்" (Lead the Children to Christ) என்னும் நோக்கத்தை மையப்படுத்தி இன்றும் திருச்சபைகளில் செயல்படும் திருமறைப்பள்ளி போட்டிகளையும் பரிசுகளையும் தாண்டி பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவைச் சொந்தமாக்கி மீட்பின் அனுபவத்தோடு இறையாட்சிக்குச் சொந்தமாக அவர்களை வழிநடத்தும் ஒரு இயக்கமாகவே செயல்பட வேண்டும்.

### 3. வாழ்ந்து காட்டவேண்டும்

வாழ்வியலைக் கற்றுக் கொடுப்பவர்கள் நல் மாதிரிகளாய் வாழ்ந்து காட்டும் பொறுப்புடையவர்கள். பலரையும் இன்று வாழ்வின் மாதிரிகளாக ஏற்றுக்கொள்வது வழக்கமான ஒன்று. அது ஒரு ஆசிரியராய் இருக்கலாம் அல்லது தலைவராகவோ, நடிகராகவோ, விளையாட்டு வீரராகவோ சாதனையாளராகவோ இருக்கலாம். சிலரை வாழ்க்கையில் மறக்கவே மாட்டோம். ஏன்? ஏதோ ஒரு நிலையில் பிறர் வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியவர்களாக இருப்பார்கள். தேசத் தந்தையாக போற்றப்படுகின்ற மகாத்மா காந்தியை உலகம் இன்னும் மறந்துவிடவில்லை. ஏன்? தன் கொள்கையை வாழ்ந்து காட்டியவர்.

கிறிஸ்துவைப் பின்பற்றி அவரது திருவசனங்களைக் கற்றுக் கொடுக்கிறவர்கள், அவர் வாழ்ந்தபடியே வாழ்ந்து காட்ட கடமைப்பட்டவர்கள் (1 யோவா. 2:6). குறிப்பாக பெற்றோர், திருமறைப்பள்ளி ஆசிரியர்கள் மிகவும் முக்கியம் பெற்றவர்கள். ஒரு திருமறைப்பள்ளி ஆசிரியரிடம் வாரத்தில் ஒரு மணிநேரம் மட்டுமே இருக்கிறது குழந்தை. ஆனால் அது அந்த வாரம் முழுவதும் ஆசிரியரை, பெற்றோரைக் கவனிக்கின்றது. பவுலடியார் இறையடியவரான தீத்துவுக்கு "நற்செயல்களைச் செய்வதில் எல்லா வகையிலும் நீயே முன்மாதிரியாய் இரு" (தீத்து 2: 7) என்று ஆலோசனை கூறுகிறார்.

சிறுவன் ஒருவன் பள்ளிக்கூட சீருடையுடன் புத்தகப்பையைத் தோளில் போட்டுக்கொண்டு நேராக பக்கத்தில் இருந்த காவல்துறை அலுவலகத்திற்குச் சென்றான். அங்கே நின்ற காவலர் ஒருவர், ஏம்பா பள்ளிக்கூடம் போகாம இங்க வந்திருக்கிற என்ன வேணும்? அப்படின்னு கேட்டார். சிறுவனோ நான் Inspector-ஐ பார்க்கணும் அவர் இருக்காரா?ண்ணு கேட்டான் அவர் இல்லை வெளியே Rounds போயிருக்காரு, ஒரு மணிநேரம் கழித்துதான் வருவாரு, உனக்கு என்னப்பா வேணும் என்று காவலர் மீண்டும் கேட்டார். நான் இன்ஸ்பெக்டரைப் பார்க்கணும் பார்த்த பிறகுதான் இங்கிருந்து போவேன் அப்படீன்னு அடம்பிடித்து சிறுவன் அங்கேயே உட்கார்ந்துட்டான்.

சிறுவனின் மனநிலையைப் புரிந்த காவலர் தகவலை இன்ஸ்பெக்டருக்குச் சொல்ல சில மணித்துளிகளில் அவரும் வந்து சேர்ந்தார். சிறுவனை அழைத்தார், விசாரித்தார். என்னப்பா என்ன விஷயம் என கேட்க சிறுவன் சொன்னான், ஐயா நான் 9-ம் வகுப்பு படிக்கிறேன், நல்லதா சமூகத்தில் வாழ விரும்புகிறேன். நன்றாய்ப் படித்து உயரவேண்டும் என்பதும் என விருப்பம். ஆனால் என் பெற்றோரின் செயல்கள் என்னைத் தவறான வழியில் கொண்டுபோய் விடுமோ என அச்சப்படுகிறேன். வீட்டில் என் பெற்றோர் தினமும் அடிதடி, கெட்ட வார்த்தை தேவையற்ற செயல்கள், என் படிப்பும், ஆசையும் இவர்கள் செயல்களால் கரைந்துவிடுமோ என அச்சப்படுகிறேன் என்றான். சம்பவத்தைப் புரிந்து கொண்ட இன்ஸ்பெக்டர் பெற்றோரை வரவழைத்தார் எச்சரித்து அனுப்பி சிறுவனையும் ஆற்றுப்படுத்தி ஆலோசனை வழங்கி அனுப்பி வைத்தார்.

இத்தகைய நிகழ்வுகள் இன்று அதிகமான குடும்பங்களில் இயல்பாகிவிட்டது. சகரியா-எலிசபெத்து குடும்பம் திருச்சபை வாழ்ந்து காட்ட வேண்டிய நல்ல மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

> “அவர்கள் இருவரும் கடவுள் பார்வையில் நேர்மையானவர்களாய் விளங்கினார்கள். ஆண்டவருடைய அனைத்து கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்பக் குற்றமற்றவர்களாய் நடந்து வந்தார்கள்.” (லூக். 1:6)

ஆண்டவர் அவர்களின் குழந்தை யோவான் வழியாய் அவர்களுக்கும் இன்னும் பலருக்கும் மகிழ்ச்சி உண்டாகும் என்ற வாக்கைக் கொடுக்கிறார்.

ஒருவரின் வாழ்வு செயல் பிறர் வாழ்வில் தடைக்கல்லாய் மாறுவதை இயேசு எச்சரித்தார். எனவேதான் அவரிடம் கொண்டு வரப்பட்ட சிறு பிள்ளைகளைச் சீடர்கள் தடுத்து அதட்டியபோது, அவர்களைத் தடுக்காதீர்கள் என்றார். அவர்கள் என்னிடம் வரட்டும். இறையாட்சி அவர்களுக்கு உரியது என்றார். பிள்ளைகள் ஆண்டவருக்குச் சொந்தமாக அவர்களை இறை நம்பிக்கையில் வளர்த்தெடுப்போம்! நல்வழி காட்டுவோம்! அவர்களுக்கு கிறிஸ்துவின் நல்மாதிரிகளை வெளிப்படுத்தி வாழ்ந்து காட்டுவோம்! நாமும் இறையாட்சிக்குரியோராவோம்!

அருள்திரு. **J. வின்சென்ட் இராபர்ட்**

# விளக்குத் தண்டுகளின் மீதுள்ள விளக்கு

## Light on the Lamp Stands

செக். 4:1-14 I கொரி. 3:10-15

தி.பா. 27 மத். 5:14-16

"எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பார். அப்பொழுது தான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும்" (மத். 5;15).

ஜார்க்கண்ட் மாநில பழங்குடி மக்களின் வாழ்வில் இருள் அகற்றவும், ஒளி ஏற்றவும் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் அருள்தந்தை ஸ்டேன் சுவாமி தமிழகத்திலுள்ள திருச்சியைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக பழங்குடி மக்களின் சுய நிர்வாகம், நிலம், நீர், காடு சார்ந்த உரிமைகளுக்காகவும், பழங்குடி மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் உழைத்தார். பழங்குடி மக்களின் சேவகராகவும், பழங்குடியினருக்கு எதிரான அரசின் அநீதியான முடிவுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிராகச் செயல்படுபவராகவும் திகழ்ந்தார்.

அருள்தந்தை ஸ்டேன் சுவாமி மக்கள் பணியாற்றுவதை விரும்பாத அரசு, அவர் மாவோயிஸ்டுகளுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்ற பொய்யான குற்றச்சாட்டை அவர் மீது சுமத்தித் தேசிய புலனாய்வு அமைப்பின் கீழ் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

2020, அக்டோபர் 8-ஆம் நாள் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது அவருக்கு வயது 83. பார்க்கின்சன் என்ற நரம்பு தொடர்பான நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார். எனவே, கை நடுக்கத்தின் காரணமாக குவளையில் தண்ணீர் பருக இயலாததால் ஓர் உறிஞ்சி குழாய் தரும்படி நீதிமன்றத்தில் கோரியிருந்தார். நீதிமன்றம் மறுத்துவிட்டது. சிறையில் அடிப்படை வசதிகள் மற்றும் தேவையான சிகிட்சை கிடைக்கப் பெறாமல் பெரும் துன்பத்தின் நடுவில் 2021, ஜூலை 5 ஆம் நாள் மரித்துப் போனார். அவருக்கு இழைக்கப்பட்ட தொடர் அநீதிகள் குறித்து அருள்தந்தை ஸ்டேன் சுவாமி சொன்னது :

"எனக்கு நடந்து கொண்டிருப்பது எல்லாம் எனக்கு மட்டுமே நடக்கிற தனித்துவமான ஒன்றன்று, இது நாடு முழுவதும் நடக்கிற ஒரு நடைமுறை. இந்தியாவில் அநீதியான அதிகார வர்க்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிடும் கேள்வி கேட்கும் அறிவு ஜீவிகள், வழக்குரைஞர்கள், கவிஞர்கள்,

எழுத்தாளர்கள், செயற்பாட்டாளர்கள், மாணவ தலைவர்கள் போன்றோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். நாமும் அந்த நடைமுறையில் ஓர் அங்கமாக இருக்கிறோம். அதே போன்று, நானும் அந்நடைமுறையின் ஓர் அங்கமாக இருப்பதை மகிழ்ச்சியாக கருதுகிறேன். நான் அமைதியாக எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்கும் மௌன சாட்சி அல்லன்; நானும் இவ்விளையாட்டின் ஓர் அங்கம். அதற்காக எந்த ஒரு விலையும் கொடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். பழங்குடி மக்களின் உரிமைகளைக் காக்க உழைக்கும் என்னை இந்த அரசாங்கம் தேசத் துரோகி என்று அழைத்தால் அது அவ்வாறே இருக்கட்டும்."

மெழுவர்த்தித் தன்னை எரித்துக் கரைத்து ஒளி கொடுப்பதைப் போலவும், விளக்குத் தண்டின் மீது ஏற்றபட்ட, விளக்காகவும் பழங்குடி மக்களுக்காக ஒளிர்ந்தார் அருள்தந்தை ஸ்டேன் சுவாமி.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மைப் போல தம் அடியவர்களும் இருக்கவேண்டும் என்பதற்காக சொன்ன வார்த்தை தான் :

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 8:12)

"நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்" (மத். 5;14)

எவ்வாறு உலகிற்கு ஒளியாயிருக்கவேண்டும் என்பதற்கு ஆண்டவர் தருகின்ற விளக்கம் தான். "எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை, மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்போதுதான் அது வீட்டில் உள்ள அனைவருக்கும் ஒளி தரும் என்கிறார்".

இன்றைய திருமறை பகுதிகளின் அடிப்படையில் விளக்குத் தண்டுகளின் மீதுள்ள விளக்காக நாம் ஒளி வீச ஆண்டவர் கற்பிக்கும் உண்மைகளைத் தியானிப்போமாக.

**1. ஏற்றப்பட்ட விளக்காவோம் :**

டுவைட் ட மூடி, "இறைமக்கள் ஒளி ஏற்றப்பட்ட விளக்காக இருக்க வேண்டும்" என்பதை வலியுறுத்தி ஒரு கதையை எழுதியுள்ளார். அக்கதை ஒரு ரயில்வே Gate Keeper-யைப் பற்றியதாகும். இவருடைய பணி ரயில் பயணிக்கும் தண்டவாளத்தில் ஆபத்தான ஏதாவது தென்பட்டால் அல்லது அசம்பாவிதம் ஏதாவது நடக்கும் என உணர்ந்தால் இவரிடம் இருக்கும் விளக்கை உயர்த்தி, அசைக்க வேண்டும். ஓர் இரவு இந்த ரயில்வே Gate Keeper பணிபுரிகின்ற இடத்தின் அண்மையில் ரயில் விபத்து ஏற்பட்டுப் பலியானார்கள். இதனால் அந்த ரயில்வே Gate Keeper நீதிமன்றத்துக்கு அழைத்து செல்லப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி Gate Keeper-ரிடம் நீங்கள் ரயில் வரும்போது விளக்கை அசைத்தீர்களா எனக் கேட்டார். Gate Keeper-ரும், ஆம் நான்

விளக்கை அசைத்தேன் என்றார். மீண்டும் மீண்டும் அதே கேள்வி கேட்கப்பட்டாலும் அதே பதிலை அளித்தார்.

வழக்கிற்குப் பின்னர் Gate Keeper-ன் நண்பர் Gate Keeper-யை அணுக, நீதிபதி உங்களிடத்தில் மிகத் தீவிரமாக ஒரே கேள்வியைக் கேட்ட போது நீங்கள் சோர்ந்த நிலையில் பதிலளித்தது ஏன்? என்றார்.

ரயில் விபத்து நடந்த அன்று நான் மிகவும் களைப்புற்றுப் போயிருந்தேன். திடீரென ரயில் தண்டவாளம் அபாயத்தில் இருப்பதைக் கண்டு கொண்டேன். ரயிலும் அண்மையில் நெருங்கி வந்துவிட்டது. பதற்றத்தில் என்ன செய்வது என அறியாமல் அபாயம் இருப்பதை உணர்த்தும்படியாக விளக்கை எடுத்து அசைத்துக் காண்பித்தேன். ஆயினும் விபத்து நடந்துவிட்டது. ஏனென்றால் விளக்கை எடுத்து அசைத்துக் காண்பித்த நான் அதில் ஒளியூட்டத் தவறிவிட்டேன், என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

வெறுமையான விளக்குகளாயினும், எண்ணெய் நிரப்பப்பட்ட விளக்குகளாயினும், அவற்றில் ஒளி ஏற்றப்படாவிட்டால் விளக்குகளாயினும், அவற்றால் ஒளி தர முடியாது என்பதை இக்கதையின் வாயிலாக நாம் அறிந்துகொள்கிறோம்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து மலைப்பொழிவிலே தம் அடியவர்கள் உலகிற்கு ஒளியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, மரக்காலால் மூடப்பட்ட விளக்காக இராமல் விளக்குத் தண்டின் மீதுள்ள விளக்காக விளங்கிப் பிரகாசிக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஏற்றப்பட்ட விளக்காக இருக்கவேண்டும் என்பதை விளக்குவதற்காக மத். 5:15-ல் இரண்டு பொருட்களைப் பயன்படுத்துகின்றார்.

1. மரக்கால், இது ஒரு அளவைப் பொருள், விளக்கை மரக்காலால் மூடி வைப்பது என்பது விளக்கின் வெளிச்சத்திற்கு எல்லை வகுப்பதாகும். அல்லது வெளிச்சத்தைத் தடை செய்வதாகும்.

2. மற்றொன்று வீடு, வீடு என்பது உறவுகள் அனைத்தையும் (பரந்துபட்ட கண்ணோட்டம்) உள்ளடக்கிய ஒன்று எனப் புரிந்து கொள்ளலாம். விளக்குத் தண்டின் மீதுள்ள ஏற்றப்பட்ட விளக்கு வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் என கிறிஸ்து கற்பிக்கின்றார்.

வெளிச்சம் தருவதிலே இரண்டு வகையுண்டு

1. Reflecting (பிரதிபலித்தல்) 2. Shining (ஒளிர்தல்)

நம்முடைய வெளிச்சம் ஒரே விளக்கின் பிரதிபலிப்பாக இல்லாமல் ஒரே விளக்கிலிருந்து பல விளக்குகள் ஒளி பெற்று ஒளிர்வது போல நம்முடைய

வெளிச்சம் இருக்கவேண்டும். ஒளியாகிய கிறிஸ்துவே நம்மையும் ஒளியூட்டுகிறார். அவரிடமிருந்தே நாம் ஒளியைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆகவே, தான் பவுலடியார் ஒளிபெற்ற மக்களாக வாழுங்கள் என்கிறார்.

**2. எரிந்து பிரகாசிக்கும் விளக்காவோம் :**

செக்கரியா 4-ஆம் அத்தியாயத்தில் இறைவாக்கினர் கண்ட காட்சியில் விளக்குத் தண்டின் அருகில் வலப்புறம் மற்றும் இடப்புறமாக இருக்கின்ற இரு ஒலிவ மரக்கிளைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு மரங்களும் தலைமை குருவாகிய யோசுவாவையும், செருபாபேலையும் குறிக்கின்றன என்று திருமறை அறிஞர்கள் விளக்குகின்றனர்.

திருவெளிப்பாடு 11-ஆம் அத்தியாயத்திலும் இவ்விருவரையும் ஒத்த இரு சாட்சிகளைக் குறித்த செய்திகளைப் படிக்கிறோம். இவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற உண்மையாதெனில் இவர்கள் ஆண்டவருக்காக அவரது திருக்கோவிலுக்காக, திருச்சபைக்காக எரிந்து பிரகாசிக்கின்ற விளக்காக இருந்தார்கள் என்பதாகும். 1 கொரி. 3-ல் ஆண்டவருக்காக எரிந்து பிரகாசிக்கின்ற திருத்தூதர்களின் பணிவிடைகளால் கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றுக்கொண்ட கொரிந்து திருச்சபையார், காலப்போக்கில் பிரிவினைக்கும், கட்சி மனப்பான்மைக்கும் இடம் கொடுத்து தங்களை இருளின் ஆதிக்கத்திற்கு ஒப்புக்கொடுத்தனர். கிறிஸ்துவின் வெளிச்சத்தில் வழி நடப்பதற்குப் பதிலாக விளக்குகளைக் கொண்டாடத் தொடங்கி வழி விலகிச் சென்றனர்.

இச்சூழலில் தான் பவுல் அவர்களுக்குச் சொல்லும் ஆலோசனை அனைத்துக்குமான அடித்தளம். ஒளிக்கான ஆதாரம் இயேசு கிறிஸ்துவே என்று குறிப்பிடுகின்றார். ஏனென்றால் எரிந்து பிரகாசிக்கின்ற விளக்காகச் செயல்பட்டோரின் பணிவிடைகள் தீர்ப்பு நாளில் தெளிவுப்படுத்தப்படும் நெருப்பே (ஒளி) அவரவருடைய வேலை எத்தகையது என்பதைக் காட்டும் திருத்தூதுவர்கள் (பணிவிடைக்காரர்கள்) மகிமைப்பட அல்ல, ஆண்டவரே மகிமைப்பட வேண்டும்.

எனவே, நாம் எரிந்து பிரகாசிப்பது என்பது நமது செயல்களால், நமது அர்ப்பணமுள்ள வாழ்க்கையால், தியாகத்துடனான சேவையால், நமது விண்ணக தந்தைக்கு மாட்சியைக் கொண்டு வருவதாக இருக்கவேண்டும். (மத். 5:16)

கிறிஸ்துவின் அடியவர்களாகிய நாமும் கிறிஸ்துவிடமிருந்து ஒளியைப்பெற்று விளக்குத் தண்டின் மீது ஏற்றப்பட்ட விளக்காக எரிந்து பிரகாசிக்கின்ற விளக்காக ஒளிவீசுவோம். நம்முடைய செயல்கள் கிறிஸ்துவாகிய ஒளியினிடத்தில் மற்றவர்களை அழைத்து வரும் காரணிகளாகட்டும்.

அருள்திரு. **A. கால்வின் தேவநேசன்**

# பெண் குழந்தையைப் பாதுகாத்தல்

## Protecting the Girl Child

யோபு 42: 10-17 திப. 16: 16-18

தி.பா. 45: 8-14 மத். 15: 21-28

“யோபுவின் புதல்வியரைப் போல் அழகு வாய்ந்த நங்கையர் நாடெங்கும் இருந்ததில்லை. அவர்களின் தந்தை அவர்களின் சகோதரர்களோடு அவர்களுக்கும் சொத்தில் உரிமை கொடுத்தார்” யோபு 42: 15

நாம் வாழ்கின்ற தற்கால சூழ்நிலைகள் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பில்லாத சூழல் என்பது மறுக்க இயலா உண்மை. காரணம் பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவற்றை செய்திதாள்களின் வழி நம்மருகேயும் அண்டை மாநிலங்களிலேயும் நடந்தேறி வருகின்றவற்றை அறிகிறோம். கண் கூடாகவும் கண்டு வருகிறோம். காலங் காலமாய் ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே காணப்படுகின்ற சமமற்ற செல்வாக்கின் வெளிப்பாடே பெண்களுக்கெதிரான வன்முறையாக வெளிப்படுகிறது என சமூக பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் (2006-ஆம் ஆண்டின்) பொதுச் செயலாளரான திரு. கோபி அன்னான் அவர்கள் கூறும்போது, பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறை உலக அளவினாலானது என்கிறார். இப்படிப்பட்ட சூழலில் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் அதன் பல்வேறு வடிவங்களான சுரண்டல், தீங்கிழைத்தல், புறக்கணிப்பு போன்ற இவைகளிலிருந்து பாதுகாத்தல், பெண் குழந்தைகள் ஆரோக்கியமாக உயிர்வாழ உடல், மன வளர்ச்சி பெற்று தனித்தன்மையுடன் வாழச் செய்தல் என்பது திருச்சபைக்கும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பாகும். இன்றைய திருமறை பாடங்களின் வழியாய் எவற்றிலிருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதைச் சிந்திப்போம்.

**1. ஆட்டிப்படைக்கும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்தல்** (திப. 16: 16-18)

திருத்தூதுவரான பவுல் மற்றும் அவரோடிருந்த மறைபரப்பும் திருப்பணியாளர்களும் மாசிதோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி என்ற உரோமையரின் குடியேற்ற நகரம் சென்றிருந்தனர். இறைவேண்டல் செய்ய நகர வாயிலுக்கு வெளியே ஓர் ஆற்றங்கரைக்குச் செல்வது வழக்கம்.

ஒருநாள் இறைவேண்டல் செய்யும் இடத்துக்குச் சென்றபோது குறி சொல்லும் ஆவியைத் தம்முள் கொண்ட அடிமைப்பெண் ஒருவர் அவர்களுக்கு எதிரே வந்தார். அவர் குறிசொல்லி அதனால் தம்மை அடிமையாக வைத்திருப்பவர்களுக்கு மிகுதியான வருவாய் கிடைக்கச் செய்து வந்தவர். அவர் பவுலுக்கும் அவரோடுள்ள திருப்பணியாளர்களுக்கும் எதிர்ப்பட்டு இந்த மனிதர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள்; மீட்பின் வழியை அறிவிக்கிறவர்கள் என உரக்கக் கூறுவது வழக்கமாக இருந்தது. பொதுவாக தீய ஆவிபிடித்தோர் தீய ஆவியின் உந்துதலாய் மனிதருக்கு எதிரே புகழுரை கூறி அவர்களைத்தம் வலையில் சிக்க வைத்து வீழ்த்துவது பற்றிய பல நிகழ்வுகளை அறிவோம். ஆனால் பவுல் இந்த மாய வலையில் வீழாது எரிச்சல் கொண்டு அந்த அடிமைப்பெண் பக்கம் திரும்பி, நீ இவரை விட்டுப் போகுமாறு இயேசு கிறிஸ்துவின் பெயரால் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியிடம் கூறினார். அந்நேரமே அது அவரைவிட்டுச் சென்றுவிட்டது. இங்குப் பவுலின் செயல் சிறப்பானது. தம்மை நாள்தோறும் பின்தொடர்ந்து வந்து புகழுரை கூறிய அப்பெண்ணின் பின்னணியத்தினை உற்று நோக்கியிருக்கக்கூடும். அப்பெண் யாரோ ஒரு ஆதிக்க சக்தியின் ஆட்டுவிக்கும் புதுமையாக இருக்கக் கூடும் என்பதை அறிந்திருப்பார். இச்சூழலில் அப்பெண் மகளிடம் இருந்த குறி சொல்லும் தீய ஆவியை விரட்டியடித்து அப்பெண் மகளை விடுவித்தால் மட்டுமே அவள் பாதுகாக்கப்பட முடியும் என்பதை உணர்ந்தவராய் அவளிடம் குடி கொண்டிருந்த தீய ஆவியை விரட்டினார். அதனால்வரும் விளைவு எதுவாக இருந்தாலும் அதனைக் குறித்து கவலை கொள்ளவில்லை. இச்செயல் இன்றைய கிறிஸ்தவ சபைக்கும், திருப்பணிக்கும், சமுதாயத்திற்கும் சவாலாக உள்ளது. பெண் குழந்தைகளுக்கு எதிராக செயல்படுகின்ற பல்வேறு தீய சக்திகளைக் கண்டறிந்து அவைகளிலிருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியதும் அவர்கள் நிறைவேற்றிட வேண்டிய முக்கிய திருப்பணி. இதனைக் குறித்துச் சிந்திப்பதும் அதற்கான முயற்சியை எடுக்க வேண்டியதும் அவசியம்.

**2. அடிமைப்படுத்தும் பாரம்பரியங்களிலிருந்து பாதுகாத்தல்** (யோபு 42: 10-17)

யோபு என்னும் பெயர்கொண்ட ஒரு மனிதர் ஊசு (ஊத்ஸ்) நாட்டில் வாழ்ந்து வருகிறார். அவர் மாசற்றவரும், நேர்மையானவருமாய் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சித் தீயதை விலக்கி வந்தார். அவரது வாழ்வில் எதிர்பாராமல் நடந்த ஒரு தீய நிகழ்வில் யோபு தன் எல்லாச் செல்வங்களையும் இழந்தார். இழப்பில் பெரிய இழப்பாக யோபு தன் எல்லா ஆண் மக்கள் மற்றும் பெண் மக்களையும் இழந்து போனார். யோபு செல்வத்தை இழந்ததை விட தன்

பிள்ளைகளை இழந்து அதினால் தன் அன்பு உறவுகளை இழந்து போனதை அவரால் தாங்கிக் கொள்ள இயலா ஒன்றாக இருந்திருக்கக்கூடும். வாழ்வின் கடை நிலைக்கே சென்றுவிட்டார். எனினும் தன் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு துன்பங்களுக்காகக் கடவுளைக் குறை கூறவில்லை. மறுபடியுமாக கடவுளின் அருளினால் அவர் இழந்த அனைத்தையும் குறிப்பாக ஆண் மகன்களையும் பெண் மகவுகளையும் பெற்றுக் கொண்டார். கடவுளின் நிலையான அருளினைப் பெற்றுக் கொண்ட யோபு தன் பிள்ளைகள் அனைவரையும் ஒன்றுபோல் நேசித்து அன்பு செலுத்தினார். "யோபின் புதல்விகளைப் போல் அழகு வாய்ந்த நங்கையர் நாடெங்கும் இருந்ததில்லை. அவர்களின் தந்தை, அவர்களின் சகோதரர்களோடு அவர்களுக்கும் சொத்தில் உரிமை கொடுத்தார்" என (யோபு 42: 15) திருமறை கூறுகிறது. யோபு செய்த இச்செயல் அதாவது தன் புதல்வியருக்கும் சொத்தில் உரிமை கொடுத்த செயல் அப்போதிருந்த பாரம்பரியங்களுக்கெல்லாம் சாட்டையடி கொடுப்பதாக இருக்கிறது. பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதாக உள்ளது. பெண்களுக்குச் சொத்தில் உரிமையில்லை என்ற பாரம்பரியங்கள் பெண் மகளின் வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்தது. 1956-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட இந்து வாரிசுச் சட்டத்தின் வழியாக பெண்களுக்கும் சொத்தில் உரிமையுண்டு என்ற நிலை வந்தாலும் அவை பெரிதளவில் மக்கள் பயன்பாட்டுக்கு வரவில்லை. "பெண் குழந்தைகள் வீட்டிற்கு அலங்காரம், அவர்கள் விற்பனைக்குரிய பொருட்கள்" என்ற எஸ்மோனிய பழமொழி வெளிப்படுத்தும் அடிமைத்தன பாரம்பரியங்களிலிருந்து பெண் குழந்தையைப் பாதுகாக்க ஒவ்வொரு பெற்றோரும் சமுதாயமும், திருச்சபையும், நாடும் முன் வரவேண்டும்.

**3. ஆட்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாத்தல்** (மத்தேயு 15: 21-28)

இன்றைய நற்செய்திப்பகுதியில் தீர், சீதோன் அவற்றின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த கானானியப் பெண் ஒருவர் பற்றியும் அவரது பெண் மகளைப் பற்றியும் கூறும் ஒரு நிகழ்வு தரப்பட்டுள்ளது. இந்நிகழ்வினைப் படிக்கும்போது, அக்கானானிய பெண்ணின் மகளை ஒரு பிரச்சனை ஆட்கொண்டிருந்தது. என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள் (மத். 15: 22) என கதறி ஆண்டவர் இயேசுவிடம் கூறுவதிலிருந்து தெரிகிறது. இப்பெண் முதலாவதாக இயேசுவிடம் சென்று தன் மகளை விடுவிக்குமாறு கதறினார். ஆனால் இயேசு அவரிடம் ஒரு வார்த்தைகூட மறுமொழியாகச் சொல்லவில்லை. எனவே சீடர்கள் இயேசுவை அப்பெண்ணுக்காக மறுபடியும் அணுகி, நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு

வருகிறாளே. இவரை அனுப்பி விடும் என வேண்டுகின்றனர். ஆனால் அதற்கும் இயேசு மறுமொழியாக, காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரயேல் குலத்தாருள் இருப்போரிடமே அனுப்பப்பட்டேன் என அவர் எதிர்பாராத பதிலினைக் கூறுகிறார். எனினும் தன் பெண் மகள் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் கொடுமையிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற அவரது உண்மையான தாய்ப்பாசம் இன்னும் அவரை இறங்கி, தாழ்பணிந்து போகச் செய்கிறது. பெண் மகள் தானே என எண்ணி தனது சுய மரியாதையைக் காப்பாற்ற நினைக்காமல், தனது உண்மையான பற்றுறுதியை வெளிப்படுததி இயேசுவிடம் தன் மகளின் விடுதலைக்காகக் கெஞ்சினார். அவளின் உண்மை பற்றுறுதியையும் அதன் பின்னால் இருந்த அவரின் மகள் பற்றும் இயேசுநாதரை ஆச்சரியப்பட வைத்தது. விடுதலையையும் பெற்றார். இத்தகைய உண்மைப் பாசமும், பெண் மகளின் வாழ்வும் எதிர்காலமும் பற்றிய அக்கரையும், கரிசனையும் அரவணைப்பையும் கொடுக்கும்போது ஆட்கொள்ளப்படும் பிரச்சனைகளிலிருந்து அவள் பாதுகாக்கப்படுவாள். இன்றைய பெண் குழந்தைகள் (அவர்களுக்கே உரிய) பல்வேறு பிரச்சனைகளில் சிக்கிக் கொள்கின்றனர். பிரசித்தி பெற்ற ஆலோசனையாளர் திருமதி. கிருத்திகா உதயநிதி அவர்கள் கூறும்போது பிரச்சினைகளுக்குள்ளாகும் பெண் குழந்தைகளின் பிரச்சனைகளைப் பெற்றோர் காது கொடுத்து கேட்டாலே பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்கிறார். அன்பான திருச்சபையே, கிறிஸ்தவக் குடும்பங்களே, சமுதாயமே, பெண் குழந்தைகளைப் பாதுகாப்பது நமது கடமை என்பதை உணர்ந்து தீய சக்திகளிடமிருந்தும் அடிமை பாரம்பரியத்திலிருந்தும் அவர்களின் பிரச்சினைகளிலிருந்தும் பாதுகாப்போம். கடவுளின் அருள் நம்மனைவரோடும் தங்கியிருப்பதாக.

திருமதி. **ஹெர்லின் சஜிதா நெல்சன்**

*24.11.2024*

# ஆண்டவரின் வருகைக்காக இறைவேண்டலோடு காத்திருத்தல்

## Waiting Prayerfully for the Coming of the Lord

யோபு 42: 10-17 தி.ப. 16: 16-18

தி.பா. 45: 8-14 மத். 15: 21-28

கேளாய் மகளே. . . உன் இனத்தாரை மறந்துவிடு; பிறந்தகம் மறந்துவிடு. உன் எழிலில் நாட்டங்கொள்வார் மன்னர்; உன் தலைவர் அவரே ; அவரைப் பணிந்திடு! (திபா. 45: 10-11)

கடவுள் தங்களுக்கு ஓர் அரசரைத் தாவீதின் குடும்பத்திலிருந்து எழுந்திருக்கச் செய்வார் என்றும் அவர் தாவீதின் அரசை நிறுவுவார் என்றும் அவ்வரசு நிலையானது என்றும் இஸ்ரவேலர் நம்புகிறார்கள். ஆகையால் கிறிஸ்துவின் வருகைக்காய்க் காத்திருக்கிறார்கள். ஆனால் இயேசுவின் சீடர்கள், கடவுள் தீர்க்கதரிசிகள் வழி முன்னறிவித்த கிறிஸ்து இயேசுவே என உறுதிபட நம்பினார்கள். கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை இயேசுவின் மரணம் உயிர்தெழுதல் வழி ஆய்வுசெய்த அவர்கள் இயேசுவே கிறிஸ்து என உறுதியாக கூறினார்கள். உயிர்தெழுந்து விண்ணகம் சென்ற இயேசு கிறிஸ்து திரும்ப வருவார் என முழுமையாக நம்பினார்கள். ஒவ்வொரு கிறிஸ்மஸ் காலங்களும் அவர் பிறப்பை நினைவுகூரும் காலங்களாய் மட்டுமல்ல அவர் திரும்ப வருவதை எதிர்நோக்கும் காலங்களுமாய் இருக்கிறது. எனவே இஸ்ரவேல் மக்களின் காத்திருத்தலும் திருச்சபையின் காத்திருந்தலும் முற்றிலும் வேறுபட்டவையாகும்.

45-வது திருப்பாடல் (சங்கீதம்) “கிறிஸ்துவை”க் குறித்த பாடல் என யூதர்களும் கிறிஸ்தவர்களும் நம்புகிறார்கள். ஆனால் இருவரின் வியாக்கியானம் இரு திசையில் செல்லுகின்றன. யூதர்கள் அது கிறிஸ்துவாகிய அரசரின் வருகையைக் குறித்தது என்றும் திருச்சபை அது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தது என்றும் விளக்குவர். இந்தத் திருப்பாடல் (சங்கீதம்) கர்த்தரின் வருகையை எவ்வாறு எதிர்நோக்கி இருக்கவேண்டும் என்று கூறுகிறது. வரலாற்று ரீதியாக கூறின இத்திருப்பாடல் இஸ்ரவேல் அரசர் ஒருவரின் திருமணத்தைக் குறித்துப் பாடப்பட்டதாகும். அந்த அரசர் யார் என உறுதிப்பட கூறமுடியாது. இத்திருப்பாடல் சிறையிருப்பின் காலத்தில் பாடப்பட்டபடியால் தாவீதின் வழி வரும் கிறிஸ்துவின் மண தினத்தைக்

குறிப்பிடும் பாடல் என யூத போதகர்கள் விளக்கினார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் நடக்கும் திருமணமாக விளக்கினார்கள். புதிய ஏற்பாடு இயேசுவை மணமகன் என்றும் திருச்சபையை மணமகள் என்றும் குறிப்பிடுவதை இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் (மத். 9: 15; 22:2-14; 25:1-13; யோவா. 3: 29; திவெ. 21: 2; 22: 7). திருமணம் என்பது ஓர் உருவக அணியாக புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமான திருமணம் என்பது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமான உறவை வெளிப்படுததும் ஓர் உருவகம் (Metaphor). மணமகனான அரசரைக் காத்திருக்கும் மணமகளான அரசியைப் போல கிறிஸ்துவின் வருகைக்காய் திருச்சபை காத்திருக்கிறது. நாம் கிறிஸ்துவின் வருகைக்காய் எப்படிக் காத்திருக்கவேண்டும் என்பதை இத்திருப்பாடல் விளக்குகிறது. திருப்பாடல் 45: 10-11 வசனங்களில் நாம் எவ்வாறு காத்திருக்கவேண்டும் என பாடலாசிரியர் கூறுகிறார்.

### 1. முழுமையான ஒப்படைப்புடன் காத்திருத்தல்

"கேளாய் மகளே! . . .உன் இனத்தாரை மறந்து விடு; பிறந்தகம் மறந்து விடு." (திபா. 45: 10).

முதலாவது முழுமையான ஒப்படைப்பு வலியுறுத்தப்படுகிறது. அரச கவி மணமகளை நோக்கி பாடும்போது மணமகள் தன் குடும்பம், தன் இனத்தார் யாவற்றையும் மறந்து மணமகனான அரசரை மட்டுமே நினைக்கச் சொல்லுகிறார். குடும்பம் மற்றும் உறவுகள் என்பது எளிதில் மறந்துவிட முடியாது. திருமண வயது வரை தன் வளர்ந்த வீடு, தன்னை வளர்த்த பெற்றோர், தன்னுடன் பிறந்த உடன்பிறப்புகள், தன்னுடன் விளையாடிய உறவுகள் முதலியவற்றைத் திருமண நாளில் மறந்துவிடுவது என்பது சாத்தியமற்றது. திருமணம் தங்கள் உறவுகளிலிருந்து பிரித்து விடுகிறது எனப் பெண்கள் கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. உண்மையில் திருமணங்கள் உறவுகளைப் பிரிக்கிறதா? அல்லது உறவுகளை வலுப்பெற செய்கிறதா? எனத் திருச்சபை விவாதிக்க வேண்டும். "இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்" (தொநூ. 2: 24) என்பது உறவுகளை முறித்தலா அல்லது உறவுகளின் புதிய பரிமாணமா என நாம் பொருள் தேடவேண்டும்.

பண்டைய உலகில், குறிப்பாக இஸ்ரவேலில் திருமணம் என்பது சமூகம் சார்ந்ததாக அல்ல சமய-அரசியல் சார்ந்ததாகப் பார்க்கப்பட்டது. திருமணம் வெறும் மண அளவில் இரு நபர்கள் இணைவதல்ல மாறாக அது ஒருவருக்கு இன்னொருவர் கொடுக்கும் சமய-அரசியல் ஆதரவை (allegiance) வெளிப்படுத்தும் அடையாளம் (sign).

திருமணம் சமய-அரசியல் ஆதரவைக் கூறுவதால் மணமகள் இப்போது உறுதியான ஒரு முடிவு எடுக்க வேண்டும். வேறு ஒரு வார்த்தையில் சொன்னால் மணமகள் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி இருக்கிற நாம் நம்மைக் கிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இயேசு கிறிஸ்து சொன்னார், என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். “என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத்தகுதியற்றோர்” (மத்.10: 37). இது கிறிஸ்துவுக்கு நம்மை முழுவதும் ஒப்புக்கொடுப்பதை வலியுறுத்துகிறது. எனவே, கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கும் நாம் முழுமையான ஒப்படைப்புடன் காத்திருத்தல் அவசியமாகிறது. யோபு இழப்புகள் மத்தியிலும் கடவுளுக்குத் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தார். கடவுள் அவரின் கீழ்ப்படிதலோடுகூடிய ஒப்புக்கொடுத்தல் கனம் பண்ணி அவர் முன்னைய நாள்களைவிட பின்னைய நாள்களை அதிகமாய் ஆசீர்வதித்தார் (யோபு 42: 12). நாம் கடவுளிடம் நம்மை முழுமையாய் ஒப்புக்கொடுக்கும்போது அவர் நம்மை இவ்வுலகிலும் ஆசீர்வதித்து விண்ணுலகிலும் அவரோடு வாழும் நிலைவாழ்வை அருளுவார்.

## 2. கடவுளுக்கு உகந்தவராய்க் காத்திருத்தல்

“உனது எழிலில் நாட்டங்கொள்வார் மன்னர்” (திபா. 45: 11)

இரண்டாவது கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்வதின் வழியாய் நமது காத்திருத்தல உறுதிப்படுத்தவேண்டும். எப்படிச் செயல் வடிவம் பெறாத விசுவாசம் உயிரற்றதாய் இருக்கிறதோ (யாக். 2: 17). அப்படியே வாழ்வற்ற காத்திருத்தல் பொருளற்றது. கிறிஸ்துவின் வருகைக்காய்க் காத்திருக்கும் ஒருவர் எப்படிக் கிறிஸ்தவ நெறி தவறி வாழமுடியும். காத்திருத்தலும் கிறிஸ்தவ நெறியும் ஒன்றிணைந்து இயங்கவேண்டும்.

அரச கவி அரசியின் உயர் குணங்களை உருவக அணியாகத் தருகிறார். பட்டத்து அரசி, “ஓபீரின் பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றாள்” (திபா. 45: 9). பவார் மொழி பெயர்ப்பில் இந்த வசனம் இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. “ராஜஸ்திரீ ஒப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலது பாரிசத்தில் நிற்கிறாள்.” ஓபீர் பெயர் சொல் பழைய ஏற்பாட்டில் பன்னிரண்டு முறை வருகிறது. ஓபீர் என்பது சிலநேரத்தில் ஒரு நபரின் பெயராகவும் (தொநூ. 10: 29) சில நேரத்தில் ஓர் இடத்தின் பெயராகவும் (1குறி. 29: 4) வருகிறது. அது ஓர் இடத்தின் பெயராக வரும்போது அது பொன் உற்பத்தி செய்யும் இடமாக அடையாளப்படுத்தப்படுகிறது.

உயர்தர ஓபீரின் பொன்னால் பட்டத்து அரசி அலங்கரிக்கப்பட்டிருப்பது மணமகளின் தூய்மையையும் உயர் குணத்தையும் குறிப்பிடும் குறியீடுகளாகும். அந்த உயர் குணங்கள்தான் அவளின் அழகில் இரகசியம். அரசருக்காய் நியமிக்கப்பட்ட மணமகள் எவ்வளவு தூய்மையுள்ளவளோ அதேபோல கிறிஸ்துவின் மணமகளான திருச்சபை தூய்மையுள்ளதாய் இருக்கிறது. தூய ஆவியாரே அதைத் தூய்மைபடுத்துகிறார். கிறிஸ்துவின் வருகைக்காய்க் காத்திருக்கும் நாம் அவர் பிரியப்படும் தூய வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

பிலிப்பி நகரில் பவுல் ஊழியம் செய்துவரும் நாட்களில் குறி சொல்லும் ஆவியால் ஆள்கொள்ளப்பட்ட பெண் பவுலுக்கும், உடன் பணியாளர்களுக்கும் பின்னே சென்று “இவர்கள் உன்னத கடவுளின் பணியாள்கள்; மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள் என்று உரக்க கூறிக்கொண்டு வந்தார்” (திப. 16: 16). தீய ஆவி பிடித்த அப்பெண் வழியாய் தீய ஆவி கடவுளின் ஊழியர்களைக் குறித்து நற்சான்று பகர்ந்ததை நாம் இங்கு கவனிக்கிறோம். ஆவிகள் சாட்சி கூறும் இடத்தில் அப்போஸ்தலர்கள் இருந்தார்கள். நம்மைக் குறித்து பிறர் சொல்லும் சாட்சி என்ன? கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி இருக்கும் நாம் சாட்சியுள்ள மக்களாக வாழ அழைக்கப்படுகிறோம். நமது காத்திருத்தல் என்பது அவருக்காய் வாழ்வதில் பிரதிபலிக்கவேண்டும். கிறிஸ்து வெளிப்படும்போது அவர் விரும்பும் தூய்மையான மக்களாக இருப்பது மிக முக்கியமானதாகும்.

பவுல் கொரிந்து விசுவாசிகளை “கிறிஸ்து என்னும் ஒரே மணமகனுக்கு . . . மண ஒப்பந்தம் செய்துள்ளேன்” (2 கொரி. 11: 2) என்று குறிப்பிடுகிறார். நாம் யாவரும் அறிந்திருக்கிறபடி மண ஒப்பந்தம் (நிச்சயதார்த்தம்) செய்யப்பட்ட ஒரு பெண் தன்னை மணமுடிக்கும் நபருக்காய் மணநாள் வரை தன்னை தூய்மையாக காத்துக்கொண்டு அவருக்கு நம்பிக்கைக்குரியவராக வாழ்வது போல் நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் தூய்மையான வாழ்க்கை வாழ வேண்டும்.

### 3. கடவுளைத் தொழுது கொண்டு காத்திருத்தல்

“உன் தலைவர் அவரே ; அவரைப் பணிந்திடு” (திபா. 45: 11)

திருப்பாடல் 45 கிறிஸ்துவை (மேசியாவை) குறித்தப்பாடல் என நாம் தொடக்கத்திலே சொன்னோம். திபா. 45: 6-7 வசனங்களில் அரசர் கடவுள் எனக் குறிப்பிடப்படுவதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். எகிப்து மக்கள் அரசனைக் கடவுளின் வெளிப்படுத்தலாக, கண்டதினால் எகிப்தின் அரசர்கள் தொழுதுக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் இஸ்ரவேலின் மரபில், சமய

நம்பிக்கையில் ஒருபோதும் அரசனைக் கடவுளோடு ஒப்பிட்டு வணங்கியது கிடையாது. இங்கே, திருப்பாடல் 45-ல் அரசரைக் "கடவுள்" என இரு இடங்களிலும் ஆண்டவர் (தலைவர்) என ஓர் இடத்திலும் குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். நமது கர்த்தர் இயேசு இந்த வசனங்களைத் தம்மோடு ஒப்பிடுவதை நாம் கவனிக்க வேண்டும் (மத்.22: 43).

அரசர் தனது "ஆண்டவர்" எனவே அவரைப் பட்டத்து அரசி தொழுது கொள் என அரச கவி பாடுகிறார். ஒரே நேரத்தில் அரசர் கணவராகவும், "ஆண்டவராகவும் இருப்பதை இங்குக் கவனிக்கிறோம். கிறிஸ்து இந்த உலகில் வந்தபோது தமது சீடர்களை "நண்பர்கள்" எனக் குறிப்பிட்டார் (யோவான் 15: 14-15). அவர் அவர்களின் ஆண்டவராயிருந்தும் அவர்களோடு ஒரு நண்பரைப்போல பழகினார் என நாம் இதிலிருந்து புரிந்துகொள்ள முடியும். அண்டத்தைப் படைத்த கடவுள் தம்மை நமக்கு வெளிப்படுத்தியபோது தந்தையாக வெளிப்படுத்தினார். கர்த்தர் இயேசு நமக்குக் கற்றுத்தந்த இறைவேண்டலில் கடவுளை "எங்கள் தந்தையே" என அழைக்கும்படி சொன்னதை நாம் மறந்துவிட கூடாது. படைப்பின் கடவுள் தம்மை கடவுளாகவும் தந்தையாகவும் வெளிப்படுத்தினது போல, கடவுளின் குமாரன் தம்மை மணமகனாகவும் (கணவர்) ஆண்டவராகவும் வெளிப்படுத்துவதை இங்கு நாம் கவனிக்க முடிகிறது.

கிறிஸ்து நமது ஆண்டவர். எனவே நாம் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி இருக்கும் நாம் அவரைத் தொழுதுகொள்ளும் மக்களாகக் காணப்பட வேண்டும். வெளிப்பாடு புத்தகத்தில் கிறிஸ்துவை நான்கு உயிர்களும் இருபத்தி நான்கு மூப்பர்களும் வணக்கமாய் அவர் பாதத்தில் விழுந்து தொழுது கொள்வதைப் பார்க்கிறோம் (வெளி. 5: 8). கடவுளை நாம் பயத்தோடும், பத்தியோடும் தொழுது கொள்ள வேண்டும். அவர் நமது தந்தை என்பதும் எவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கு அவர் நமது கடவுள் என்பதும் உண்மையே. கிறிஸ்து இயேசு நமது நண்பர், மணமகன் என்பது எவ்வளவுக்கு உண்மையே அவ்வளவுக்கு அவர் நமது ஆண்டவர் என்பதும் உண்மையே.

கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் மக்கள் அவர் திருமப வானங்கள் வழி வரும்வரை அவரைத் தொழுது கொண்டு காத்திருக்க வேண்டும். இந்தக் காத்திருப்பு இறைவேண்டலோடு கூடியதாக இருத்தல் மிக அவசியம். ஏனென்றால் நமது காத்திருப்பில் நாம் சோர்ந்து போவதற்கும் நம்பிக்கை இழப்பதற்குமான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. எதிரியாகிய பிசாசு நம்மை கிறிஸ்துவை விட்டுப் பிரிக்க பலஇன்னல்களைக் கொண்டு வருவான். உலகச் செல்வங்கள் நம்மைக் கிறிஸ்துவை விட்டு பிரிக்க முயற்சி

செய்யும் (மத். 13; 22). வியாதி நம்மை நம்பிக்கை இழக்க செய்யும். பிசாசு, உலகம், புலன்கள் நம்மை வீழ்த்த முயலும்போது இறைவேண்டல் நம்மை எழுந்து நிமிர்ந்து நிற்க செய்யும். எனவே தான் நமது கர்த்தர் இயேசு தமது சீடர்களைப் பார்த்து "சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து கடவுளிடம் வேண்டுங்கள்" (மத். 26: 41) எனக் கூறினார். எனவே இறைவேண்டல் மிக முக்கியமானது. நாம் இறைவேண்டலோடே கிறிஸ்துவின் வருகைக்காய் காத்திருக்க வேண்டும்.

**நிறைவுரை**

திருப்பாடல் 45 ஒரு கிறிஸ்தியல் பாடல். யூதர்களும் கிறிஸ்தவர்களும் இப்பாடல் கிறிஸ்துவைக் குறித்த பாடல் என உறுதிப்பட நம்புகிறார்கள். இந்தப் பாடல் ஒரு "காதல் பாடல்". திருப்பாடல் புத்தகத்தில் இந்த ஒரு பாடல் மட்டுமே "நேசப்பாடல்" அல்லது "காதல் பாடல்" என்னும் வகையில் திருப்பாடலின் தலையங்கத்திலே குறிப்பிடப்படுகிறது. இப்பாடல் அரசராகிய கிறிஸ்துவை மணமகனாகவும், திருச்சபையாகிய இறைமக்களை மணமகளாகவும் உருவகப்படுத்திப் பாடப்படுகிறது. நாம் ஒரு கிறிஸ்து பிறப்புக் காலத்தில் இருக்கிறோம். இக்காலம் வெறும் கொண்டாட்டத்தின் காலம் மட்டும் அல்ல, மாறாக கிறிஸ்துவின் இரண்டாவது வருகையை எதிர்நோக்கி காத்திருக்கும் காலமும் கூட. எனவே நாம் முழுமையான ஒப்படைப்புடனும், தூய வாழ்க்கையாலும் தொழுகை வாழ்வாலும் இறைவேண்டுதலோடு அவருடைய வருகைக்காய்க் காத்திருப்போம்.

அருள்திரு. அறிவர். **R. ஜாண் விஜயராஜ்**

# திருவருகை: ஒரு தெளிவுரை

திருவருகை ஞாயிறு திருச்சபை வழிபாட்டு ஆண்டின் முதல் நாள் ஆகும். திருவருகை கால வழிபாடுகளை அல்லது ஒழுங்குகளைப் பற்றிய முதல் குறிப்புகள் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் உள்ளன. தவக்காலத்தில் கடைபிடிக்கப்படும் உண்ணா நோன்பு, சுய ஒழுக்கம் சார்ந்த கட்டுப்பாடுகள் பல வருகைக் காலத்திலும் கடைபிடிக்கப்பட்டன. நாளடைவில் இக்கட்டுப்பாடுகள் நலிந்து போயின. கிறிஸ்து பிறப்பு திருநாளுக்கு முன்னுள்ள ஆறு ஞாயிறுகள் திருவருகை ஞாயிறுகளாகக் கொண்டாடப்பட்டன. கிழக்கத்தியத் திருச்சபை மரபில் பல திருச்சபைகள் ஆறு ஞாயிறுகளை திருவருகை கால ஞாயிறுகளாக இன்றும் கொண்டாடுகின்றன. மேற்கத்திய திருச்சபையில் நான்கு ஞாயிறுகளை திருவருகை கால ஞாயிறுகளாக ஆசரிக்கின்றனர். இந்த ஆண்டில் (2024) டிசம்பர் 1, 8, 15, 22 ஆகிய தேதிகள் முறையே திருவருகை முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ஞாயிறாக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

திருவருகை காலம் வழிபாட்டு ஆண்டின் ஆரம்பப் பகுதியாக அமைய பல காரணங்கள் உண்டு. ஆண்டவரது இரண்டாம் வருகை தங்கள் வாழ்நாட்களிலேயே இடம் பெறுமென இயேசுவின் சீடர்களும் ஆதித் திருச்சபையின் பிற அடியார்களும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இரண்டாம் வருகை தாமதமாகிக் கொண்டே போனபோது, இரண்டாம் வருகையைப் பற்றி ஏற்பட்ட திரிபுக் கொள்கைகளுக்கும், புரட்டுப் போதனைகளுக்கும் விடையளிக்க வேண்டிய பொறுப்பு திருச்சபைக்கு ஏற்பட்டது (2 பேது. 3: 8-10) திருச்சபைக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்கள், “எதுவரைக்கும் இப்பாடுகள் ஆண்டவரே?”, என்ற பற்றுறுதிக் கேள்வியை எழுப்பின. தவறானச் சிந்தனைகளைக் களையவும், கிறிஸ்துவின் சிந்தைக்கேற்றப் புது விளக்கங்களைக் கண்டுகொண்டு, திருச்சபைக்கு புதுப் பார்வைகளைக் கொடுக்கவும் திருவருகை காலம் வழிபாட்டு ஆண்டின் முதல் பகுதியாக ஏற்படுத்தப்பட்டது. திருவருகை ஞாயிறு திருவருகை முதலாம் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகின்றது.

இறைமக்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவை எதிர்நோக்கி, நம்பிக்கையோடுக் காத்திருந்தனர். இன்று, நாம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்து நல்லெதிர் நோக்குடன் காத்திருக்கின்றோம் (எசா. 40:1 5; மீக். 4:1-5, 5:2-5; 1பேது. 2: 1-12). இறைவாக்கினர் அமைதியின் அரசரான ஆண்டவரின் வருகையை முன்னறிவித்து, அவரின் வருகைக்காக இறைமக்களை ஆயத்தப்படுத்தினர். கிறிஸ்துவே நமக்கு அமைதி அருளுபவர்.

அமைதியை ஏற்படுத்தும் பணியை நாம் பெற்றுள்ளோம் (எசா. 9: 6-7; 11:1-9; எபே. 2: 11-22; மத். 5: 9). முழுக்கு முனிவர் யோவான் ஆண்டவரின் வருகைக்கான வழியை ஆயத்தம் பண்ணினார்; நிறைவான வாழ்வுக்கு, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வுக்கு இறைமக்களை அழைத்தார். கிறிஸ்து பிறப்பு நமக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது (மத். 3: 1-17; 11:1-19; பிலி. 4:4-9). மரியாள் ஆண்டவரின் பிறப்புக்காகத் தன்னை ஈந்து, அர்ப்பணித்து, ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருந்தார். ஆண்டவரின் பிறப்பு கடவுளின் அளவில்லாத அன்பைக் குறிக்கின்றது. அன்பு வழி வாழ்வு வாழ நம்மை அழைக்கின்றது (லூக் 1: 26-56; யோவா. 3: 16; 13: 34-35; 15: 9-15; 1 கொரி. 13: 1-13; 1 யோவா. 2: 3-11).

திருவருகை "ஆண்டவர் வருகின்றார்" என்ற திருச்சபையின் பற்றுறுதியையும், "ஆண்டவரே, வாரும்" என்ற இறைவேண்டலையும் சுட்டுகின்றது. ஆண்டவர் வந்தார், வருகின்றார், வருவார் என்பது திருவருகையின் மூன்று அம்சங்கள்.

ஆண்டவராகிய கிறிஸ்துவின் முதல் வருகையை நாம் கிறிஸ்து பிறப்பு வாயிலாகக் கொண்டாடுகின்றோம். இயேசு கிறிஸ்துவே உலகின் ஒளி, நீதியின் கதிரவன், இம்மானுவேல். அவர் நம்மிலும், நம் உறவு நிலைகளிலும், திருச்சபைகளிலும், இயக்கங்களிலும், அமைப்புகளிலும் உருவாகவேண்டும் (மலா. 4:2; மத். 1:18 2:12; லூக். 2:1 38; யோவா. 1:1 14; கலா. 4:19). கடவுளின் மனுவுருவேற்பு மிகச் சிறந்தது, தன்னிகரற்றது. எனினும், இயேசுவின் வாழ்க்கை, திருப்பணி, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் அல்லது விண்ணேகுதல் என்பனவும் அவரின் முதல் வருகையின் பிரிக்க இயலா பகுதிகள் என்ற தெளிவு மிக முக்கியம். ஆகவே, கிறிஸ்து பிறப்போடு ஆண்டவரின் முதல் வருகையைக் கட்டுப்படுத்துவது நிறைவானதன்று. கிறிஸ்து பிறப்பு காலங்களில் இடம்பெறும் சில தாலாட்டுப் பாடல்களும் நிகழ்ச்சிகளும் குழந்தையாகப் பிறந்த இயேசுவை வளரவிடாமல் தடுக்க முயற்சிக்கின்றனவோ என்ற கேள்வி எழும்புகின்றது.

உயிரோடு எழுப்பப்பட்டு விண்ணுக்கேறி, தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும் ஆண்டவர் மீண்டும் வருவார் என்ற நல்லெதிர் நோக்கை, நம்பிக்கையை தன் தொடக்கத்திலிருந்தே திருச்சபை அறிக்கை செய்து, கொண்டாடி வருகின்றது. "மீண்டும் வருவேன்" என்ற இயேசுவின் வாக்குத்தத்தம் நிறைவேறும் என்ற தனது பற்றுறுதியை திருச்சபை இரண்டாம் வருகை என்று குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவின் இரண்டாவது வருகை மங்களமான வாழ்வை வழங்கும். கடவுள் அனைத்திலும் அனைத்துமாயிருப்பார். நாம் கிறிஸ்துவைப் போலிருப்போம். "இப்போது நாம்

கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால், அவர் தோன்றும் போது நாமும் அவரைப் போல் இருப்போம்; ஏனெனில், அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்" (1 யோவா. 3:2).

மீண்டும் வருவேன் என்பது இயேசுவின் வாக்குறுதி (யோவா. 14: 3). இயேசு கிறிஸ்து விண்ணுக்கேறிய போதும் இவ்வுறுதிஅளிக்கப்படுகின்றது. "இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" (திப. 1: 11). திருவெளிப்பாடு நூல் மீண்டும் வருவேன் என்ற இயேசுவின் வாக்குறுதியை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகின்றது (3: 11; 22: 7, 20). "ஆமென், ஆண்டவராகிய இயேசுவே, வாரும்" என்ற எதிர்நோக்கோடு, விண்ணப்பத்தோடு, வாஞ்சையோடு, அழைப்போடு திருவெளிப்பாடு நூல் நிறைவுபெறுகின்றது (22: 20). மீண்டும் வருவேன் என்ற தமது வாக்குத்தத்தத்தை இயேசு கிறிஸ்து உண்மையாகவே நிறைவேற்றுவார். இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளவும், இதற்காக ஆயத்தமாகவும், காத்திருக்கவும், இறைவேண்டல் புரியவும், விழித்திருக்கவும், நம்பிக்கையோடு ஆண்டவரின் இரண்டாம் வருகையை வாஞ்சிக்கவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

வந்தவர் வருவார். அவர் இப்போதும் வருகின்றார். முதல் வருகையில் வந்தவரும், இரண்டாம் வருகையில் வரவேண்டியவருமான ஆண்டவர் இப்போதும் இங்கும் நம்மண்டை, நம்மிடையில் வருகின்றார். அவர் மனுக்குடும்பத்தண்டைவராமலிருந்த காலம், தருணம், எதுவுமில்லை (தொநூ. 2: 19; 3: 8-10; 4: 9-10).

தீமைகள் பல உலகை, நம்மை, ஆட்டிப் படைக்கின்றன. நீதியின்மை அதனால் ஏற்படுகின்ற ஊழல், வன்முறை, போர், பயங்கரவாதம், துன்புறுத்தல்கள், வறுமை, பசி, பட்டினி, அகால மரணங்கள், ஓரங்கட்டப்படுதல், ஒதுக்கப்படுதல், கைவிடப்படுதல், ஏமாற்றப்படுதல், தனித்துவிடப்படுதல் என்பன நம் வாழ்க்கையின் அன்றாடக யதார்த்தங்கள். ஆனால், இவை கடவுளின் சித்தமுமல்ல, திட்டமுமல்ல. இவை நம்மால், நம்மவரால் திட்டமிடப்பட்டு, நடத்தப்படுபவை. இத்தகு வீழ்ச்சிகளுக்கு நேரிடையாக நாம் காரணர் அல்லர் என்றாலும், ஒரு முறையிலோ இன்னொரு முறையிலோ நாமும் உடந்தைகளாக மாறி விடுகின்றோம். இத்தகு சூழல்களிலும், இன்று, இப்போது ஆண்டவர் நம்மண்டை, நம்மிடம் வருகின்றப் பற்றுறுதியுண்மை இத்தகு சூழல்களையும் ஆற்றல்களையும் அகற்றவும் அழிக்கவும் நமக்கு அறைகூவல் விடுக்கின்றது.

மக்களினத்தார் அனைவரும் தீர்ப்புப் பெறும் உவமையில் ஆசி பெறுவோரும் தண்டனை பெறுவோரும் குழம்புகின்றனர். தாங்கள் அன்றாடம் சந்திக்கும் நிகழ்வுகளுக்காக இப்படி நியாயத் தீர்ப்பு பெற வேண்டியிருக்குமென்ற எண்ணம் கனவிலும் அவர்களுக்கு இருக்கவில்லை. "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் . . . மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ, அதை எனக்கும் செய்யவில்லை" என்ற மானிட மகனின், அரசரின் சொற்கள் இங்கு இப்போது ஆண்டவர் எந்நிலையில், எப்பாணியில், எப்படி வருகின்றார் என்ற பேருண்மையை உணர்த்துகின்றன (மத். 25: 31-46). இன்று இங்கு நம்மண்டை, நம்மிடம், வருகை தரும் ஆண்டவரை நாம் எப்படி வரவேற்கின்றோம், ஏற்றுக் கொள்ளுகின்றோம்; வழியை எப்படி ஆயத்தப்படுத்துகின்றோம்; பாதையை எவ்விதம் செம்மையாக்குகின்றோம் என்பன மிக முக்கியமானவை. முழுக்கு முனிவர் யோவானின் செய்தி நமக்கு விடுக்கும் அறைகூவல்கள் எவை என்ற தெளிவு இன்றியமையாதது. பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படவேண்டும்; மலை, குன்று யாவும் தாழ்த்தப்படவேண்டும்; கோணலானவைகள் நேராக்கப்படவேண்டும்; மானிடர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காணவேண்டும் (லூக். 3: 1-14). இதற்கு நமது திருப்பணி எத்தகையதாக இருக்கவேண்டும்? நமது பங்களிப்பு எப்படி அமைய வேண்டும்? கடவுளின் அன்பிற்கு, நீதிக்கேற்ற முறையில் திருப்பங்களும் மாற்றங்களும் ஏற்பட, நாம் அவரின் கருவிகளாகச் செயல்பட அழைக்கப்படுகின்றோம்.

டீட்ரிச் போன்ஹோஃபர் (1906-1945) தரும் சிந்தனை நம்மை விழிப்புள்ளவர்ளாக்கட்டும்: மக்கள் நடமாட்டம் மிக்கவுள்ள ஒரு தெருவில் ஒருவர் குடித்து வெறித்து, குடிபோதையில், வாகனத்தை நெறி தவறி ஓட்டி, பலரைக் காயப்படுத்தியும், பலரைக் குற்றுயிராக்கிவிட்டும், பலரைக் கொன்று குவித்தும் கொண்டிருக்கிறார். காயப்பட்டோருக்கு முதலுதவி அளித்து, குற்றுயிராயிருப்போரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்து, கொல்லப்பட்டோரை நல்லடக்கம் செய்வது மட்டும் போதாது. இப்படிப்பட்ட நல்ல சமாரியர்களின் பணிகள் மிகத் தேவையே. எனினும், எப்படியாவது அவ்வாகனத்தைத் தடுத்து நிறுத்தி, கார் ஓட்டுநரை வெளியேத் தள்ளி, இன்னும் பலர் காயப்படுத்தப்படுவதற்கும், குற்றுயிராக்கப்படுவதற்கும், கொல்லப்படுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

ஆண்டவரின் முதல் வருகைக்கு அவரது அன்னை மரியாவின் அர்ப்பணிப்பும் பங்களிப்பும் மகத்தானவை. எனவே, கிழக்கத்தியத் திருச்சபை

மரபு மரியாளை, "இட எல்லைகளைத் தாண்டி நிற்கும் இறைவனுக்கான இடம்", "தன்னிகரற்ற புதிரின் வாயில்" எனச் சிறப்பிக்கின்றது. மரியாளின் கீதம் பெரும் புரட்சியின் பாடல்; மானிடரின் தவறுகளோடு கடவுள் தொடுக்கும் போரின் பாடல் என விளக்கம் பெறுகின்றது (லூக். 1: 52-53). மரியாவின் கீதம் நமது கீதமாகட்டும்! அது, மானிடரின் தவறுகளோடு கடவுள் தொடுக்கும் போரின், கடவுளின் பெரும் புரட்சியின் பாடலாகட்டும்! சிலஆண்டுகளுக்கு முன் யூதர்களின் தலைமை ரபியிடம் (ஜோனத்தான் ஸாக்ஸ், 1948-2020) வானொலி மற்றும் தொலைக்காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை வழங்கும் கிறிஸ்தவத் தலைவர் பாம் ரோட்ஸ் (1950) ஒருவினா எழுப்பினார். "பற்றுறுதியுள்ள ஆறு மில்லியன் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது, கடவுள் எங்கிருந்தார்?" கொடுக்கப்பட்ட பதில்: "கடவுள் எங்கிருந்தார் என்பது கேள்வியாக இருக்கக்கூடாது; மாறாக, மானிடர் எங்கிருந்தனர் என்பதுவே கேள்வி". ஆம்! ஆண்டவரின் திருவருகை நாம் எங்கிருக்கின்றோம் என்ற கேள்வியை எழுப்புகின்றது.

திருவருகையின் அர்த்தத்தையும், தாக்கங்களையும், செயலாக்கங்களையும் தூய ஆவியர் ஏற்றமுறைகளில் நமக்கு விளக்கித் தருவாராக. ஆமென்.

அருள்திரு. அறிவர். **செல்லையன் லாறன்ஸ்**

# உடனிருக்கும் உன்னதர்

மத். 1: 18 - 23

"…. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள்" (மத்தேயு 1: 22, 23)

இது பலமான கிறிஸ்திய இறையியலை உள்ளடக்கிய சொல். இதில் இரண்டு விதமான பழைய ஏற்பாட்டுச் சிந்தனைகள் உள்ளடக்கியது. ஒன்று நான் உங்கள் கடவுளாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். இரண்டு உடனிருக்கும் கடவுள். தனி மனித வாழ்விலும், குழுவாக வாழுகின்ற வாழ்விலும் கடவுளின் வல்லமை இருக்கிறது. மாறாக ஆணவம், வீம்பு, இரக்கமில்லா மனநிலை போன்ற பண்புகளோடு இருப்பவரிடம் கடவுள் இருப்பதில்லை என்பதும் சான்றாகிறது. எசாயா 8: 8-10-ம் வசனங்களில், இஸ்ரயேலர் வாழ்வில் அசீரியர்கள் எதிர்த்து வந்தபோது கூறுகிறார். "நீங்கள் எடுக்கும் முயற்சிகள் வீண்போகும், ஏனெனில் கடவுள் எங்களோடு இருக்கிறார். 1 அரசர்கள் 8: 27-ல் சாலமோன், "கடவுள் உண்மையில் இந்த மண்ணுலகில் தங்கியிருப்பாரா?" என்று கேள்வி கேட்கிறார். இங்கேயும் உடனிருப்பவராகத் தம்மை வெளிப்படுத்துகிறார். இப்புதிய மாதத்தில் இம்மானுவேல் உடனிருக்கும் உன்னதராக எங்ஙனம் நம் வாழ்வில் செயல்புரிகிறார் என்பதனைக் காண்போம்.

## 1. இம்மானுவேல் : வார்த்தையால் உடனிருக்கும் உன்னதர் :

இம்மானுவேல் என்பது மானிட பண்புகளோடும் இறைவனின் பண்புகளோடும் இணைந்த இறை மகன். பிலிப்பியர் 2-ம் அதிகாரத்தில் கடவுளின் இணையாக இருந்தும், தம்மை கடவுளாகக் காட்டவில்லை. வீண் பெருமைக்கும் கட்சி மனப்பான்மைக்கும் இடம் தராமல் அன்பு, தாழ்மை, ஒரே உள்ளம் உடையவராய் மனிதப் பண்புகளோடும் இறைப்பண்புகளோடும் செயலாற்றுகிறார். இயேசுநாதரின் சீடர்களும் இயேசுநாதரை விசுவாசிக்கவில்லை. யோவான் 14: 8, 9-ல் தந்தையை எங்களுக்குக் காட்டும் என்கின்றனர். இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும் என்கிறார். எபி. 1: 3-ல் இவர் தம்முடைய வல்லமைமிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார். வார்த்தையினால் நன்மையை அருளிச் செய்கிறார். யோவான் 3-ம் அதிகாரத்தில் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நிக்கதேமுவிடம் கூறும்போது, இது, எப்படி ஆகும் என்று வினா எழுப்புகிறார்.

“மானிட மகனிடம் நம்பிக்கைகொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்” என்கிறார். மத்தேயு 10-ம் அதிகாரத்தில் திருத்தூதர்களைத் திருப்பணிக்காக அனுப்பும்போது பொருட்கள் மீது ஆசைக்கொள்ளாமல் இறைப்பணியைச் செய்யும்படி அறிவுறுத்துகிறார். பொன் அல்ல பணியே மேலானது என்பதனை உணர்த்துகிறார். கொலோ. 2: 9-ல் இறைத்தன்மையின் முழுநிறைவும், உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிக்கொண்டிருக்கிறது. கடவுளின் தன்மையும், வார்த்தையினால் நன்மையும், மானிட மகனிடம் நம்பிக்கையும், பணியின் சிறப்பையும், இறைத்தன்மையின் முழுநிறைவும் இம்மானுவேல் வெளிப்படுத்துகிறார். கடவுளின் வார்த்தையாலும், உடலாலும் இறைதன்மையை மானிட மகன் வெளிப்படுத்துகிறார். இப்புதிய மாதத்தில் இறைத்தன்மையின் பண்புகளையும், இறைவார்த்தைகளையும் உடனிருக்கும் உன்னதரிடம் பெற்றுக் கொள்வோம்.

## 2. இம்மானுவேல் : தனிமனித வாழ்வில் உடனிருக்கும் உன்னதர்:

இம்மானுவேலரைத் தனிமனித வாழ்வில் கடவுளாக நம்மைப் பாதுகாப்பவராக ஏற்றுக்கொள்ளும்போது நம்மோடு உடனிருப்பவராகச் செயல்புரிவார். II கொரி. 13: 5-ல் நம்பிக்கையில் நிலைத்திருக்கிறீர்களா? என சோதித்துப் பாருங்கள். உங்கள் நடத்தையைச் சீர்தூக்கிப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் செயலாற்றுகிறார் என்பதனைச் சீர்தூக்கிப் பாருங்கள் என்கிறார். எபேசியர் 1: 13-ல் மீட்பளிக்கும் நற்செய்தியைக் கேட்டு, அவர் மீது நம்பிக்கை கொண்டு மீட்பின் வாழ்வைப் பெற்றோம். I கொரி. 6: 19-ல் நாம் நமக்குரியவர் அல்லர், மாறாக, நம்மைக் கடவுள் விலை கொடுத்து மீட்டுள்ளார். உரோமையர் 8: 15-ல் கடவுளின் பிள்ளைக்குரிய மனப்பான்மையைப் பெற்றிருக்கிறோம். எனவே அப்பா, தந்தையே என அழைக்கிறோம். எனவே இம்மானுவேலர் நம்மில் செயலாற்றுகிறார், மீட்பளிக்கிறார். அவர் தம் குழந்தைகளாய் இருக்கிறோம். எனவே இப்புதிய மாதத்தில் கடவுள் நம் வாழ்வில் செயலாற்றுகிறார் என்பதனை, மீட்பளிக்கிறார் என்பதனையும் உணர அழைக்கப்பட்டுள்ளோம்.

இம்மானுவேல் உலகத்தில், வார்த்தையில், தனிமனித வாழ்வில் உடனிருக்கும் உன்னதர் என்பதனை உணர்ந்து இப்புதிய மாதத்தில் அடியெடுத்து வைப்போம். இறையாசி அனைவரையும் தாங்குவதாக.

**திரு. S. ஜான் வினோ ராஜ்**

# நற்செய்தியைக் கொண்டாடுதல்
# (எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு)

## Celebrating the Good News
## (Meeting of Mary with Elizabeth)

விப.2: 1-10 திப. 9: 10-18

தி.பா. 117 லூக். 1: 46-56

"ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார், தூயவர் என்பதே அவரது பெயர்" (லூக். 1: 49)

சந்திப்புகள் பல மாற்றங்களையும், கசப்புகளையும், மறக்க முடியாத நினைவுகளையும் நினைவூட்டும். இறைவன் மனிதர்களைச் சந்தித்தபோது அசாதாரண நிகழ்வுகளும், ஆச்சரியமான மாற்றங்களும் ஏற்பட்டிருக்கிறது. இறைவன் ஆதாமையையும், ஏவாளையும் சந்தித்தபோது "நீ எங்கே இருக்கிறாய்?" (தொ.நூ. 3: 9) என்ற தேடலின் குரல் வெளிப்பட்டது. காயின் சதி ஆலோசனையோடு பொறாமையின் உச்சத்தில் சகோதரன் ஆபேலைச் சந்தித்தான், கொலை செய்தான் (தொ.நூ. 4: 8), இறைவன் காயினைச் சந்தித்தபோது, "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" என்று கேட்டார் (தொ.நூ. 4: 9) இறைத்திட்டத்திற்குக் கருவியாக மோசேயைத் தெரிந்து கொண்டு உருவாக்கிய இறைவன் மோசேயைச் சந்தித்தபோது இஸ்ரயேல் மக்களை விடுவிக்க பார்வோனிடம் அனுப்புகிறேன் (விப. 3: 10) என்றார். தூய பவுலாரை இறைவன் சந்தித்தபோது "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" (திப. 9: 4) என்ற கேள்வி எழுப்பி, நற்செய்தியை அழிக்க துடித்தவரை, நற்செய்தி அறிவிக்கும் கருவியாக மாற்றினார். இறைச் சத்தம் மரியாவின் காதில் தொனித்த போது இறைத் திட்டத்திற்குத் தன்னை அர்ப்பணித்து (லூக். 1: 38) நற்செய்தி அறிவிக்கும் ஊடகமானார். இறைவனைச் சந்தித்த மரியாவும் எலிசபெத்தும் நற்செய்தியைக் கொண்டாடினர் அகமகிழ்ந்தனர்.

**1. புதிய விடியலுக்கு வழிவகுத்த சந்திப்பு** (விப. 2: 1-10)

பார்வோனின் மகளுடன் மிரியாமின் சந்திப்பில் இருளின் பிடியிலிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு மோசேயின் பிறப்பு விடியல் தரும் நம்பிக்கையின் செய்தியாய் அமைந்தது. இறைப்பணிக்காக இறைவன் மோசேயை உருவாக்கும் செயல் வெளிப்பட்டது. எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலரை எகிப்தியர் ஒடுக்குகின்றனர் (விப. 1: 11). வாழ்க்கையினைக் கசந்துப் போகச் செய்தனர் (விப. 1: 14). ஆண் குழந்தைகளின் பிறப்பு உரிமையினைப் பறித்தனர் (விப. 1: 16). ஆனால் கடவுளின் திட்டம் மானிட

எண்ணங்களுக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. மோசே என்ற தலைவரது பிறப்பு மற்றும் உருவாக்கத்தில் அவருடைய தாயாரின் பங்கு சிறப்பானதாயிருந்தது. குழந்தையினை " . . . மூன்று மாதங்களாக மறைத்து வைத்திருந்து" (விப. 2: 2) பாதுகாத்தார். குழந்தையினை வளர்த்த (விப. 2: 9) மோசேயின் சகோதரி குழந்தையின் எதிர்காலம் குறித்த கவலையுடன், "என்ன ஆகுமோ" (விப. 2: 4) என்ற வேதனையுடன் சரியான நபரிடத்தில் சரியான நேரத்தில் குழந்தையைக் கொண்டு சேர்த்தாள் (விப. 2: 7,8). ஆண் மகவுகள் கொலை செய்யப்பட வேண்டுமென்ற சட்டம் வகுத்த அரண்மனையின் பங்காளிகளே குழந்தையின் உயிர்காக்கும் பங்காளி ஆயினர் (விப. 2: 6,9). அந்த குழந்தைக்கு பெயரும் சூட்டி (விப. 2: 10) சகல கலைகளிலும் பயிற்றுவித்தனர்.

நைல் நதியோரம் மிரியாம் - பார்வோனின் மகளுடனான சந்திப்பு புதிய விடியலுக்குப் புதிய பாதையை வகுத்ததினால் அனைவரும் இறைத்திட்டத்தின் பங்காளிகள் ஆயினர். இறைத்திட்டத்தில் சாதாரணமானவர்கள் அசாதாரண செயல்கள் நிகழ்வதற்குக் காரணமாகின்றனர். மிரியாமின் துணிவு, தெளிவு, தூரக்காட்சி (விப. 2: 7) மோசே என்ற ஒரு தலைவர் உருவாகக் காரணமானது.

ஒவ்வொரு குழந்தையும் நற்செய்தியின் பங்காளிகள், "இந்தக் குழந்தையை . . . எனக்குப் பதிலாக வளர்த்திடு . . ." (விப. 2: 9) என்பது நமக்குத் தரப்படும் அறைகூவல். சாமுவேலின் உருவாக்கத்தில் பெற்றோர் மற்றும் ஏலியின் பங்கு சிறப்பானது, திமொத்தேயுவின் உருவாக்கத்தில் அவரது பாட்டி, தாய், மற்றும் தூய பவுலாரின் பங்கு சிறப்பானது நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் புதிய விடியலுக்கு வழிவகுக்கும் நற்செய்தியின் தகவுகளைச் சுமக்க வழிகாட்டுவோம்.

**2. புதிய காட்சிக்கு வித்திட்ட சந்திப்பு** (திப. 9: 10-18 & லூக். 1: 46-56)

மனிதர்களாகிய நாம் நமக்கு அன்பானவர்களைச் சந்திக்கும்போது முகம் மலருகின்றது. அகம் மகிழுகின்றது, மனதிற்குப் பிடிக்காதவர்களை சந்திக்கும்போது, உதடு சிரிக்கின்றது, உள்ளம் அழுகின்றது, சிலரைச் சந்திக்கும்போது பார்ப்பது போல் பார்ப்போம், பார்க்காதது போல் முகத்தைத் திருப்பிக் கொள்வோம், எதிர்பாராமல் பால்ய நண்பர்களைப் பார்க்கும்போது அகமகிழுகின்றோம். இறைவன் தூய பவுலாரைச் சந்திந்தபோது அவர் தம் பெற்ற கல்வி, செல்வம், உரோமைக் குடியுரிமை என்ற அங்கீகாரம் போன்ற பெருமைக்குரியவைகள் எல்லாம் குப்பையும் நஷ்டமுமென்று உணர்ந்து புதிய காட்சி பெறுகின்றார். நற்செய்தியை அழிக்கத் துடித்தவர்; நற்செய்தி அறிவிக்கும் கருவியானார், கிறிஸ்தவர்களைக் கொலை செய்ய துடித்தவர், கிறிஸ்துவுக்காக வாழும் நற்செய்தியானார்.

மரியா-எலிசபெத் சந்திப்பு இறைவாக்குரைத்த இறைவன் மாறாதவர், என்றும் நம்மை நினைவில் வைத்துள்ளார் என்பதைப் பறைசாற்றுகின்றது.

சந்திப்பின்போது இருவரும் நற்செய்தியைக் கொண்டாடினர். இருவரது சந்திப்பில் இரு பாரம்பரியங்களின் இணைவைக் காணமுடிகிறது. அதாவது பொது நிலையினரும் - ஆசாரிய பாரம்பரியமும் ஒரே நேர் கோட்டில் இணைந்தனர். மரியா-யோசேப்பு குடும்பம் சாதாரணமானவர்கள், வலுவான பொருளாதாரப் பின்னணியம் இல்லாதவர்கள், புறாக்களைக் காணிக்கைச் செலுத்துகின்றவர்கள் (லேவி. 12: 8). சகரியா-எலிசபெத் தம்பதியர் லேவி கோத்திரத்தைச் சார்ந்த ஆசாரிய வகுப்பினர், ஆரோனின் வழி வந்தவர்கள் (லூக். 1: 5). இறைமக்களுக்கும் ஆசாரியர்களுக்கும் இடைவெளி அதிகம். ஆனால் இறைத்திட்டத்தில், உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், படிக்காதவன் என்ற வேறுபாடு இல்லை. இப்புதிய காட்சி மரியாவின் பாடலில் வெளிப்படுகின்றது (லூக்.1: 48-52). இறைவன் கரத்தில் முழுமையாக ஒப்படைக்கும் எவரையும் இறைவன் உயர்த்துவார். இறைவன் மடமையானோரையும், வலுவற்றவரையும் பயன்படுத்த முடியும் (1கொரி. 1: 27).

### 3. புதிய எதிர்நோக்குக்கு அடித்தளமிட்ட சந்திப்பு (லூக். 1: 45-56)

செக்கரியா எலிசபெத் சந்திப்பில் இறை நம்பிக்கைக் கொண்டோரை இறைவன் ஒருபோதும் கைவிடமாட்டார் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. செக்கரியா, எலிசபெத் இருவருக்கும் இறைச்செய்தி உரைக்கப்பட்டபோது, இருவருமே இது எப்படி நிகழும்? என்று கேள்வி எழுப்பினர். ஆனால் அவர்களது நீண்ட கால மன்றாட்டுக்குப் பதில் கிடைத்ததால். தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணித்தனர். மரியாவும் இறைத்திட்டத்தை நிறைவேற்ற கொடுக்கப்படும் அறைகூவலுக்கு அர்ப்பணித்தார். இறை வார்த்தைகளை முழுமையாக நம்பியவர்கள், தங்கள் வாழ்வில் இறைவன் ஆற்றிய அருஞ்செயல்களைச் சான்றாகப் பகிர்ந்து ஒருவரையொருவர் வாழ்த்தினர் (லூக். 1: 42, 45). இறைமக்களாகிய நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போது துர்ச்செய்திகளைப் பேசாமல் நல்லுறவைக் கட்டும் விசுவாச வார்த்தைகளைப் பேச வேண்டும் (எபே. 4: 29). கேள்வியினால் விசுவாசம் வளரும். இறை நம்பிக்கை கொண்டோர் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை என்ற புதிய காட்சி பெற்றனர்.

பெருமை கொண்ட மன்னர்கள் நெபுகத்னேசர், சவுல் ஆகியோர் வீழ்ந்தனர். சாதாரணமானவர்கள் அசாதாரண செயல்களை நிறைவேற்ற இறைவனால் கூடுமென்று பறைசாற்றினர். இறைவன் பெருமை எண்ணங்கொண்டோரை சிதறடித்து எளியோரை உயர்த்துவார் என்ற புதிய காட்சியை வெளிப்படுத்தினார். இறை மானிட சந்திப்பில் இறைவனின் திட்டத்தில் இணைந்தவர்கள் புதிய காட்சி பெற்று நற்செய்தியைக் கொண்டாடினர். இவ்வருகை காலத்தில் இறைச் சித்தத்திற்கு அர்ப்பணம் செய்வோம்! புதிய விடியல், புதிய காட்சி பெறுவோம்!

**அருள்திரு. C. கில்டன் தயானந்த்**

# இறைவாக்கு : தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே

## Word of God : Inspired to Inspire

1 அர. 19: 1-21 தி.வெ. 10 : 1-11

திபா. 119 : 33 - 40 லூக். 1: 39 - 45

“ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” (லூக். 1: 45)

ஒவ்வொரு நாளும் தொழில்நுட்பம் மாறிக்கொண்டே இருக்கும் வேகமான உலகில் நாம் வாழ்கிறோம். ஆனால், கடவுளுடைய வார்த்தையின் முக்கியத்தையும், அதன் உண்மையையும் அதன் பொருத்தத்தையும் குறித்து விசுவாச வாழ்வில் ஆராய வேண்டியது நமது கடமை. இறைவாக்கு இறை விருப்பத்தையும், அவருடைய திட்டத்தையும் இறைமக்களுக்கு அறிவிக்கும் ஊடகமாகும். இறைவாக்கு இறைமக்களைக் குணப்படுத்துகிறது, பாதுகாக்கிறது என்பதை நினைவூட்டுகிறது. திருப்பாடகர் தாவீது, கடவுளிடம், உம் வாக்கு எனக்கு கேடகமாயிருக்கட்டும் என்று பாடுகின்றார். மட்டுமல்ல இறைவாக்கு, கடவுளோடு பிணைப்பை உருவாக்குகின்றது. அவரது சித்தம் மற்றும் வாழ்க்கையில் நமது நோக்கத்தை நாம் புரிந்துகொள்கிறோம். (திபா. 145: 18) ஆகவே இன்றைய ஆன்மீக வாழ்வில் இறைவாக்கு நம்மைச் செயல்பட தூண்டுவது மட்டுமன்றி வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையை எதிர்கொள்ளச் செய்கிறது. இன்றைய விவிலியப் பாடங்களில் வெளிப்படும் இறைவாக்கின் தன்மைகளையும் அதன் பயன்களையும் தியானிப்போம்.

### 1. இறைவாக்கு ஆற்றல்படுத்துகிறது

I அர. 19: 13 (b) “....அப்பொழுது, எலியா, நீ இங்கே என்ன செய்கிறாய்? என்று ஒரு குரல் கேட்டது.”

அரசர் ஆகாப் இறைவாக்கினருக்கு எதிராகச் செயல்பட்டு, யேசபெல் வாயிலாக எலியாவினிடத்தில் தூது அனுப்பி, நான் நாளையத்தினம் உன் உயிரைப் பறிக்கபோகிறேன் என கூறினான். எலியா தன் பிராணனைக் காக்க பாலை நிலத்தில் பிராயணப்பட்டு வேதனையோடு அமர்ந்து ஆண்டவரே, நான் வாழ்ந்தது போதும் என மன்றாடிச் சூரைச் செடியின் அடியில் அமர்ந்து கொண்டார். அப்பொழுது வானதூதர் அவரைத் தட்டி எழுப்பி, நீ நீண்ட தூரம்

பயணம் செய்ய வேண்டும் என்று ஆற்றல்படுத்தினார். மேலும் ஆண்டவருடைய குரலைக் கேட்டவுடன் பயந்து நடுக்கமுற்றார். கடவுளின் வார்த்தை அவரைத் தேற்றுகிறது. எலியா ஆற்றல் கொண்டு தன் பணியைத் தொடருகிறார்.

கடவுள் தம்மீது நம்பிக்கைவைப்போரை ஏற்ற காலத்தில் வார்த்தையினூடாய் ஆற்றல்படுத்துகிறார். எலியாவிற்கு என்ன தேவை என்பதைக் கடவுள் அறிந்திருந்தார். அவருடன் தனிப்பட்ட சந்திப்பு தேவைப்பட்டது. அதன் வாயிலாக நம்பிக்கை பெற்று தன் பணியைத் தொடர்ந்தார். அதை போல இறைவாக்கு விசுவாசத்தை அதிகரிக்கிறது (உரோ. 10: 17), தேவையற்ற அச்சங்களை நிவிர்த்தி செய்கிறது (வி.ப. 4: 4), ஞானவானாக மாற்றுகிறது (திருப்பாடல் 19: 7), மீட்பின் வல்லமையை உறுதிப்படுத்துகிறது (உரோ. 1: 16), தூய்மைப்படுத்துகிறது (யோவா. 17: 17), வாழ்வின் திசையை வழங்குகிறது (திபா. 119: 105) எதிர்காலத்திற்கான நம்பிக்கையைத் தருகிறது (உரோ. 15: 4).

## 2. இறைவாக்கு நம்பிக்கையளிக்கிறது

தி.வெ. 10: 6(b) "....இனி தாமதம் கூடாது"

யோவான் கிறிஸ்தவர்களின் கொடிய துன்ப காலத்தில் நம்பிக்கையின் செய்தியைச் துணிச்சலோடு எழுதுகிறார். தீயோன் கிறிஸ்துவின் சீடர்களுக்கு எதிராக துன்பங்களை மிகுதிப்படுத்துவான். ஆனாலும் இறுதிவரை உறுதியாக இருக்க வேண்டும் என்கிற செய்தியை வலியுறுத்துகிறார். திருவெளிப்பாடு 10-ம் அதிகாரத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. வானதூதரும் ஒரு சிறிய சுருளோடும் (1-4), வானதூதரின் சத்திய சாட்சியம் (5 - 7), புஸ்தகச் சுருளை உணவாக்குதல் (8 - 11).

கிறிஸ்துவின் பணிவிடைக்காரனாகிய வானதூதன் ஆண்டவரின் வல்லமையையும் மகத்துவமான செயல்களையும் சொல்லுகின்றார். இயேசுவின் பிறப்பின் போது சந்தோஷ நற்செய்தியை அறிவித்த தூதன், இப்போது மேலும் சந்தோஷம் வழங்கும் செய்தியாக குறுகிய காலத்தில் கிறிஸ்து மீண்டும் வருவார். தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் காத்துக்கொள்வார் என்றும் அவர்கள் சோதனையைக் கடந்து செல்வார்கள் எனவும் அழுத்தமாகக் கூறினார். இவ்விடத்தில் நியாயத்தீர்பைக் குறித்த சிறப்பு அறிவிப்பையும், இயேசு நீதியுள்ள நியாயாதிபதி என்பதையும் வானதூதன் அறிவிப்பாகச் சொல்லுகின்றார். காரணம், உலகின் உரிமை யாருக்கும் சொந்தமானது அல்ல, கிறிஸ்து உங்களை மீட்டுக்கொண்டார். ஆகவே நீங்கள் கடவுளுக்குரியவர்கள். பூமியிலுள்ள சகலமும் அவருக்குரியது (தி.பா. 8: 6 - 8).

மேலும், யோவான் கிறிஸ்துவின் வசனத்தைப் புசிக்கவும் அதன் இரகசியத்தை இஸ்ரவேல் மக்களுக்கு சொல்லவும் தூதன் கட்டளை பிறப்பிக்கிறான். காரணம், திருப்பாடல்கள் கேட்பதற்குச் சிறந்ததாய் இருந்தாலும், அதன் உண்மையாகிய நியாயத்தீர்ப்பு மிகவும் கசப்பாயிருந்தது. எனவே இறைவாக்கு நம் இதயங்களில் நல் செயல்வடிவம் பெற்று சுத்தமனசாட்சியோடே வாழ ஆண்டவர் விரும்புகிறார்.

### 3. இறைவாக்கு உறுதிப்படுத்தப்படுகிறது

லூக்கா 1: 45 "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்"

எலிசபெத் - மரியாளின் சந்திப்பும், உரையாடலும் இருவருடைய வாழ்க்கையிலும் கடவுளின் செயலை இன்னும் முழுமையாக உணர்ந்துகொள்ள உதவினது. இருவருடைய பின்னணியமும் வயதும் வாழ்வும் வித்தியாசமானது. எலிசபெத்து வயது சென்றவர், ஆனால் மரியாளோ திருமாணமாகாதவர் ஆனால் இருவரும் கருவுற்றிருந்தார்கள். இச்சூழலில் கடவுளின் இடைபடுதலும், மீட்பின் திட்டமும் எவ்வாறு செயல்பட்டது என்பதை இவ்விவிலிய பகுதி விளக்குகின்றது. எலிசபெத்தின் வாழ்த்துதல் மரியாளுக்கு ஆறுதலைக் கொடுத்தது மட்டுமல்ல அவரை தேற்றியது காரணம் என்னவென்றால் அக்கால சமூக பின்னணியத்தில் தகர்ந்து போன வாழ்வுடனும், சேர்ந்து போன இருதயத்தோடும் காணப்பட்டார். இது வரையிலும் இல்லாத புதிய மகிழ்ச்சி பெறுகின்றார். எசாயா 44: 24 (a) கூறுகிறது, "உன் மீட்பரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவருமான கர்த்தர் சொல்லுகிறதாவது : நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர் மரியாள் கடவுளின் கிருபையை உறுதிப்படுத்திக்கொண்டார்.

எலிசபெத்தின் வாழ்த்தில் குறிப்பாக "என் ஆண்டவருடைய தாயார்" என்கிற வார்த்தை மரியாளைத் தேற்றியது. மரியாளே, உன் சத்தம் கேட்டவுடன் என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளியது. இருவருடைய அங்கீகரிப்பும், ஊக்குவிப்பும் புதிய விடியலுக்கான ஆயத்தமாய் அமைந்தது.

வருகையின் கொண்டாட்டத்தில் அனைவரையும் ஆயத்தப்படுத்தி வருகிறோம். ஆனால் இக்காலகட்டத்தில் ஒருவரையொருவர் அங்கீகரிக்க இறைவாக்கு நமக்கு அழைப்புவிடுக்கின்றது. எனவே இறைவாக்கிற்கு இணங்குவோம். இன்றைய நிலையில் இறைவாக்கினரின் உண்மை நம் ஒவ்வொருவரையும் தூண்டுவதாயும் அதன் சாராம்சம் ஆற்றல்படுத்தி, நம்பிக்கையளித்து, உறுதிப்படுத்தட்டும் அனைவரிடமும் மகிழ்வும், பகிர்வும் தொடரட்டும். இந்த பயணத்தில் இறைவாக்கின் அனுபவம் நம்மை விண்ணகச் சந்திப்புக்கு நேராக ஒருமுகப்படுத்தட்டும்.

**அருள்திரு. R. இராஜ பக்தசிங்**

# பாவக்கட்டிலிருந்து விடுதலை

## Deliverance from the Bondage of Sin

விப. 14: 1-14 உரோ. 8: 1-11

திபா. 37: 1-12 யோவா. 8: 31-38

" . . . ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்" (உரோ. 8: 3).

கிரேக்க மெய்யியலாளர்களில் ஒருவரான சாக்ரடீசு, தன் மாணாக்கரிடம் மீண்டும் மீண்டும் வழங்கிய அறிவுரை, "பாவத்தைக் கண்டு அஞ்சுங்கள்" என்பதாகும். ஏறக்குறைய எல்லா மாணாக்கரும் சாக்ரடீசின் கற்பிதத்திற்குச் செவிசாய்த்து வந்த நிலையில் ஒருவர் மட்டும் பாவத்தை விட்டு விலகி ஓடாமல் தீய நாட்டமுடையவராகத் திகழ்ந்தார். ஒருமுறை குரு சாக்ரடீசின் போதனையை மீறி பாவச் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது தற்செயலாக வழியில் குருவைக் கண்டார்; ஓடி ஒளிந்து கொண்டார். ஆனால், இதைக் குரு கவனித்துவிட்டார். ஒளிந்திருந்த தன் மாணவரை அழைத்து, ஏன் என்னைக் கண்டு நீ அஞ்சுகிறாய்? பாவம் செய்துவிட்டு அகப்பட்டுவிடுவோமோ? என அஞ்சுவதைவிட பாவம் செய்யத்தான் பெரிதும் அஞ்சவேண்டும் என்று கூறினார். சாக்ரடீசின் மாணவரிடம் காணப்பட்டதுபோல, அனைவரிலும் பாவத்தைக்குறித்த அச்சத்தைவிடவும் அகப்பட்டு விடுவோமோ என்கிற அச்சமே மேலோங்கியிருக்கிறது. எனவேதான், "துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்" (திபா. 19: 13) என்று மன்றாடினார் திருப்பாடலாசிரியரான தாவீது. பாவத்தால் நாம் ஆளப்படக்கூடாது என்பதே திருமறையின் கற்பிதமாகும்.

திருமறை அனைத்து மனிதர்களையுமே பாவிகள் என்று குறிப்பிடுகின்றது (திபா. 14: 3; உரோ.3: 10-12). மேலும் பாவத்தைப் பல பொருள்களோடு ஒப்புமைப்படுத்தியும் உருவகப்படுத்தியும் கூறுகிறது (எ.கா. சுமை-திபா. 38; 4, கறை - எரே. 2: 22, கடன் -கொலோ. 2: 14; மத். 9: 12 . . .). அந்த வரிசையில் பாவத்தைக் "கட்டு" எனத் திருமறை அடையாளப்படுத்துகிறது (திப. 8: 23).

பாவக்கட்டுக்குள் அடிமைப்பட்டுக் கிடந்த மனுக்குலத்தை மீட்கவும் பாவத்திற்கு முடிவு கட்டவும் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். கிறிஸ்துவின் வருகையால் பாவ அடிமைத்தனத்திலிருந்து நமக்கு விடுதலை

அருளப்பட்டது. அவ்விடுதலை வாழ்வில் நிலைத்திருக்கவும் விடுதலையை முழுமையாகச் சொந்தமாக்கிக் கொள்ளவும் நாம் செய்ய வேண்டியவைகளைக் குறித்து திருமறையின் ஒளியில் தியானிப்போமாக!

**1. அடிமைத்தனத்தின் சுவையை (ருசியை) வெறுத்தல்** (விப. 14: 1-14)

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பெற்று உறுதிமொழியாகப் பெற்ற நாட்டிற்கு நேராக இஸ்ரயேலர் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். தங்கள் முன்னால் செங்கடலும், பின்னால் பார்வோனின் எகிப்தியப் படையணியும் வருவதைக் கண்டு செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். விடுதலை வாழ்வுக்கு நேரான பயணத்தில் கடவுள் தங்களோடிருந்து தங்களை அழைத்துச் செல்கிறார் என்ற உறுதிப்பாடின்றித் தடைகளைக் கண்டவுடன் கடவுள் அருளுகிற விடுதலையைக் கருத்திற்கொள்ளாமல் அதாவது கானானைத் தங்கள் மனத்திற்கொள்ளாமல் அதற்குப் பதிலாக எகிப்திய அடிமைத்தனத்தைக் கற்பனை செய்யத் தொடங்கிவிட்டனர் விப. 14: 11-12 (Instead of imagining the liberation of God, They started to imagine the slavery in Egypt).

ஆடவர் மட்டும் ஆறு இலட்சம், பெண்கள், குழந்தைகள் என மாபெரும் மக்கள் திரளான இஸ்ரயேலர், தங்களைப்பின் தொடர்ந்து வரும் பார்வோனின் படையணியைக் கண்டு பயந்தது ஏன்? தலைமையேற்றுத் தங்களை நடத்திச் செல்லும் மோசேயைக் குற்றம் சாட்டியது ஏன்? வெற்றிக்கை உயர்த்தியவாறு புறப்பட்டவர்கள் இப்போது தோல்வியின் முகத்தை நோக்கித் திரும்புவது ஏன்? தங்களின் விடுதலைக்காகவும் தங்கள் தலைமுறையினரின் விடுதலைக்காகவும் ஏன் அவர்களால் எகிப்தியருக்கு அஞ்சாமல் முன்னேற முயலவில்லை? ஏனெனில் தடங்கல்களையும் தடைகளையும் எதிர்கொண்டு விடுதலையை அடைவதைவிட எகிப்திய அடிமைத்தனத்தன நுகத்திற்குப் பழகிப் போயிருந்தனர். அடிமைத்தனத்தின் அவலச் சுவை (ருசி) விடுதலை வாழ்வின் உன்னதத்தை உணரமுடியாமல் செய்துவிட்டது.

முதன் முதலில் பாவம் இவ்வுலகில் நுழைவதற்குக் காரணமே மனிதர் சுவைக்கு அடிமையாகிப் போனதுதான். உண்பதற்குச் சுவையானது எனக் கண்டு நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் பறித்து உண்ட தொடக்கப் பெற்றோர் பாவ அடிமைத்தனத்திற்குள் தங்களை அகப்படுத்திக் கொண்டனர். சுவையான பயற்றங்கூழுக்கு ஆசைகொண்டு தன் தலைமகனுரிமையை ஏசா விற்றுப்போட்டார் (தொநூ. 25: 29-34). நாம் வாழும் சூழலில், மனிதர்கள் பல்வேறு அடிமைத்தனத்திற்குள் கட்டுண்டு கிடக்கின்றனர். பாவக்கட்டுக்குள் சிக்கி தாம் அகப்பட்டுள்ளோம் என்பதை

அறியாமல் அதன் சுவைக்கு, நுகத்திற்குப் பழகிப் போயுள்ளனர். பாவத்தில் சிறிது காலம் இன்புறுவது இன்றைய மனிதர்களாகிய நமது வாழ்க்கை முறையாக மாறிவிட்டதோ என்னும் ஐயம் எழுகின்றது. கடவுள் கிறிஸ்துவில் நமக்கு வழங்கியிருக்கும் ஒப்பற்ற மீட்பைக் குறித்த காட்சியும் அக்கறையும் விழிப்புணர்வும் நமக்கு வேண்டும் (கலா. 5: 1). அடிமைத்தனத்தின் அவலச்சுவை நம்மை ஆட்கொள்ளாமல் காத்துக் கொள்வோம்.

**2. ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருத்தல்** (உரோ. 8: 1-11)

புதிய ஏற்பாட்டில் பாவத்தைக் குறிக்கும் சொற்களில் ஒன்றான "ஹமர்த்தியா" (Hamartia - Missing the mark - குறி தவறுதல்) என்னும் கிரேக்க வார்த்தை பவுலாரின் கடிதங்களில் சற்றேறக்குறைய எழுபது முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் நாற்பத்தியெட்டு முறை உரோமையருக்கு எழுதிய மடலில் இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து பவுலார் எழுதிய கடிதங்களில் பாவத்தையும் அதன் விளைவுகளையும் குறித்த எச்சரிக்கையையும் விழிப்புணர்வையும் பெரிதும் பேசும் மடலாக உரோமையர் உள்ளதை நாம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் எது பாவம் என்பதற்கு, தீய நாட்டம், நெறிகேட்டை உருவாக்குவது, சீரழிந்த இயல்பு, திருச்சட்டத்தை மீறுவது, மனித வாழ்வின் அடிப்படை நோக்கத்திலிருந்து விலகுவது, இறையுறவை உடைப்பது, இறைத் திருவுளத்திற்கு எதிராகச் செயல்படுவது எனப் பவுலாரின் வார்த்தைகளில் புரிந்துகொண்டாலும் இவை எல்லாவற்றையும் உள்ளடக்கி பாவத்தையும் தூய்மையையும் விளக்குவதற்கு ஊனியல்பு (பாவம்), ஆவிக்குரிய இயல்பு (தூய வாழவு) என வேறுபடுத்தி எடுத்துக்காட்டியிருப்பதை உரோமையர் எட்டாம் அத்தியாயத்தில் படிக்கிறோம்.

பவுலார், உரோ. 8-இல் ஊனியல்புக்கேற்ப நடத்தல், ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழ்தல் என இருவகையான வாழ்க்கை முறையைக் குறிப்பிடுகின்றார். ஊனியல்புக்கேற்ப வாழ்தல் சாவைக் கொண்டுவரும்; ஊனியல்பின் மனநிலை கடவுளுக்குப் பகையானது; ஊனியல்பின்படி வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவராய் இருக்கவியலாது. எனவே, வாழ்வையும் அமைதியையும் கொண்டுவரும் ஆவிக்குரிய இயல்பை அணிந்துகொள்ள பவுலார் அழைப்புத் தருகின்றார்; அதற்குத் தன்னை மாதிரியாகக் காட்டுகின்றார்.

உரோ. 7-இல் தன்னுள் நிகழும் நன்மைக்கும், தீமைக்குமான போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்; தன்னில் குடிகொண்டிருக்கும் பாவத்தின் வீரியத்தை விவரிக்கின்றார் (உரோ. 7: 19, 20). சாவுக்குள்ளாக்கும்

இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்? எனக் கேள்வி எழுப்பி, உரோ. 8: 2-இல் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது என விடை தருகின்றார். இங்கு யூதச் சமய திருச்சட்டத்தின் போதாமையையும் குறிப்பிடுகின்றார். திருச்சட்டம் பாவத்தை அடையாளம் காட்டும். ஆனால், பாவத்தினால் வரும் தண்டனைத் தீர்ப்பிலிருந்து நம்மை அதனால் விடுவிக்க இயலாது. ஆனால், தூய ஆவியின் சட்டம் பாவத்திலிருந்தும், தண்டனைத் தீர்ப்பிலிருந்தும் நம்மை விடுவிக்கும். சட்டத்தாலும் சடங்குகளாலும் நமக்கு விடுதலை இல்லை என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் திருச்சட்டம் செய்ய முடியாத ஒன்றைக் கடவுள் செய்தார். ஊனியல்பு கொண்டமனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி நம்மிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்.

கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து மரியாவுக்குச் சொல்லப்பட்டபோது, மரியா ஊனியல் மனநிலையின்படி, “இது எப்படி நிகழும்?” எனக் கேள்வி எழுப்பினார். வானதூதர் அவரிடம், “தூய ஆவி உம்மிடம் வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்” (லூக். 1: 31, 34, 35) என்றதும் தூய ஆவி தம்மில் குடிகொள்ளவும் செயல்படவும் தம்மை அர்ப்பணித்தார். மீட்பரை உலகுக்குத் தரும் கருவியானார்.

தூய ஆவி நம்மில் குடிகொண்டிருந்தால் நாம் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்போம். எனவே ஊனியல்பை வெறுத்து ஆவிக்குரிய இயல்புடையரோய் வாழ்வோம். கடவுளுக்கு உகந்தோராயும் அவருக்கு உரியோராயும் இருந்து விடுதலை வாழ்வை வாஞ்சிப்போம் (உரோ. 8: 8, 9).

**3. ஆண்டவர் அருளும் உண்மையான விடுதலையைப் பெறுதல்** (யோவா. 8: 31-38)

ஒருமுறை இருவர் திருச்சபை ஆயரை அணுகி நாங்கள் குற்றம் செய்துவிட்டோம். இப்போது எங்கள் மனச்சான்றினால் குத்தப்படுகிறோம். எனவே, நாங்கள் மன்னிக்கப்பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். நீங்கள் செய்த தவற்றையெல்லாம் பட்டியிலிடுங்கள் என ஆயர் கூறினார். முதல் மனிதர் சொன்னார்: பெரியதும் துயரப்படத்தக்கதுமான ஒரு பெரும்பாவத்தைச் செய்துவிட்டேன். நான் சிறிய சிறிய பாவங்களைத்தான் செய்துள்ளேன். எனவே அவற்றைக் குறித்துப் பெரிதும் கவலைப்படத் தேவையில்லை என்றார் இரண்டாமவர். இருவரும் போய் நீங்கள் செய்த பாவங்களுக்கேற்ப கற்களை எடுத்துக்கொண்டு வாருங்கள் என அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

சிறிது நேரத்திற்குப் பின்னர், முதலாமவர் சுமக்கக் கனமானதும் கடினமானதுமான ஒரு பாறாங்கல்லைத் தூக்கிக் கொண்டு வந்தார். ஒரு கூடை நிறைய சிறிய கற்களை நிரப்பி எடுத்து வந்தார் இரண்டாமவர். இப்போது ஆயர் சொன்னார்: இருவரும் திரும்பிப்போய் எடுத்த இடங்களிலேயே கற்களை வைத்து விடுங்கள். பாறாங்கல்லை எங்கிருந்து எடுத்தாரோ அங்கேயே வைத்துவிட்டார் முதலாமவர். கூடை நிறைய சிறிய கற்களை எடுத்துவந்த இரண்டாவது மனிதருக்கு எந்தெந்தக் கற்களை எங்கெங்கிருந்து எடுத்தோம் என்பதே மறந்துவிட்டது.

பாவம் என்பது இந்தக் கற்களைப் போன்றதே. ஒரு மனிதர் ஒரு பெரும் பாவத்திற்கு உடன்பட்டாரெனில் அது அவரது உள்ளத்தில் பாறாங்கல்லைப் போல அழுத்திக்கொண்டே இருக்கும். அவர் உண்மையான மனவருத்தத்துடன் அதை அகற்றமுடியும். சிறிய கற்களைப் போன்று, சிறிய பாவங்களுக்கு உடன்படுவோர், அதைப் பாவம் என்றே உணராமல் தொடர்ந்து அவற்றில் நிலைத்திருப்பர் என்றார் ஆயர்.

பிழையென்றுணராப் பிழையே பிழையுள் பெரிதாம் பிழை என்பது அருட்குறள்களில் ஒன்றாகும். பாவத்தைப் பாவம் என உணராதிருப்பதும் ஒத்துக் கொள்ளாதிருப்பதும் மனிதர்களின் பிரதான பிரச்சனையாகும். இயேசு கிறிஸ்துவின் காலத்தில், அவரை விசுவாசித்த யூதர்களும் அத்தகைய மனநிலையையே கொண்டிருந்தனர். எனவே, அவர்களால் விடுதலையின் உண்மைப் பொருளையும் எது உண்மையான விடுதலை என்பதையும் (யோவா. 8: 31, 32) அறிந்துகொள்ள முடியாமற்போயிற்று. மேலும், நாங்கள் ஆபிரகாமின் வழிமரபினர்; நாங்கள் யாருக்கும் ஒருபோதும் அடிமைகளாக இருந்ததில்லை என மேட்டிமை சிந்தையைக் கொண்டிருந்தனர். எப்போதும் தங்கள் சுயநீதிக்கும் (self-righteousness) வெளியலங்காரத்திற்கும் (Externalism) வெளிவேடத்திற்கும் (Hypocrisy) அதிக முக்கியத்துவம் தந்தனர்.

மேலும், நாங்கள் யாருக்கும் ஒருபோதும் அடிமைகளாக இருந்ததில்லை என்ற யூதர்களின் கூற்றும் உண்மையில்லை (யோவா. 8:33). எகிப்திய அடிமைத்தனம், பாபிலோனியச் சிறையிருப்பு என அவர்களின் வரலாறு முழுக்க அடிமைத்தனத்தின் சுவடுகளை நாம் காணமுடியும். ஏன், இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இக்கூற்றைக் கூறும்போது கூட உரோமையரின் ஆதிக்கத்திற்குள்ளாக இருக்கின்றார்கள். ஆயினும் அடிமைத்தனத்தை உணராத, ஒப்புக்கொள்ளாத அவலநிலையை நாம் காண்கிறோம்.

அரசியலில் மட்டுமல்ல ஆன்மிக வாழ்விலும் அடிமைகளாக இருந்தனர் என்பதைக் கிறிஸ்துவையும் அவரது வார்த்தையையும் அவர்கள்

ஏற்றுக்கொள்ளாததிலிருந்து அறிய முடிகிறது. பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை என்று அடிமைத்தனத்தின் அவலம் அவர்களிலிருப்பதை உணர்த்தினார் ஆண்டவர். மேலும், வீட்டில் அடிமைக்கு நிலையான இடம் இல்லை ; மகனுக்கு என்றென்றும் அங்கு இடம் உண்டு. மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள் என்கிறார் (யோவா. 8:35-36). கிறிஸ்து அருளும் விடுதலையே உண்மையானது, நிறைவானது, கடவுளின் வீட்டில் நம்மை நிலைத்திருக்கச் செய்யவல்லது. பாவ அடிமைத்தனத்தில் சிக்கி வீட்டில் நிலையான இடமில்லாதிருந்த நமக்கு கடவுள் தம் ஒரே மகனை அனுப்பி அவர் வாயிலாக அவரது வீட்டில் நிலையான இடத்தை நமக்கு ஏற்படுத்தினார் (யோவா. 14: 1-3; 8: 35) அந்த உரிமைப் பேற்ற உடைமையாக்க நாம் முயல வேண்டும்.

இந்த திருவருகைக் காலத்தில் நமது பாவங்களை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு அடிமைத்தனத்தின் அவலச் சுவையை வெறுத்து ஆவிக்குரிய இயல்பை அணிந்து, நம் பாவக்கட்டு அறுப்புண்டு ஆண்டவர் அருளும் உண்மையான விடுதலையையும் அவரது வீட்டில் நிலையான இடத்தையும் பெற்றுக் கொள்ள அவர் அருள்புரிவாராக!

அருள்திரு. **B. சாம் ஜெபசிங்**

# மாரநாதா : ஆண்டவரே வாரும்

## Maranatha : O Lord Come

இச. 18: 15 - 22 I கொரி. 16: 13 - 24

திபா. 96 யோவான் 1: 1 - 14

"ஆண்டவரே வருக" (I கொரி. 16: 22)

உலக வரலாற்றில் தலைவர்கள் பல இடங்களுக்கு வருகை தருகின்றனர். சிலர் எளிமையாக வருவர்; சிலர் ஊர்வலமாக வருவர்; சிலர் ஆடம்பரமாக வருவர். முதலமைச்சராக இருந்த திரு. K. காமராசரின் வாகனத்துக்கு முன்னால் முதன் முறையாக சைரன் ஒலியுடன் அவரது பாதுகாப்புக்கான கார் புறப்பட்டபோது அதனைத் தடுத்து, நான் உயிருடன் தான் இருக்கிறேன், அதுக்குள்ளே ஏன் சங்கு ஊதுறீங்க? என்று கூறி எளிமையான பயணத்துடன் எளிமைக்கு இலக்கணமாய்ச் சென்று வந்தார். ஆனால் தற்கால சூழல்களைக் கவனிக்கும் போது அனைவரும் ஆச்சரியப்படும் அளவிற்கு வாகனங்கள் அணிவகுக்க பலரது வருகை அமைகின்றது. நம் ஆண்டவராகிய இயேசுவின் வருகையானது எந்த ஆரவாரமுமில்லாமல், எதிர்பாரா வேளையில் நடைபெறும் (லூக். 12: 39, தி.வெ. 16: 15, மத். 25: 13) ஆண்டவரின் வருகையைக் குறித்து விழிப்பாயிருந்து, அவரது வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்திச் சான்றாளர்களாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

உரோமருடைய ஆட்சியில் தொடக்கக்கால திருச்சபையானது பல துன்பங்களுக்கு உள்ளானது. இறைப் பற்றாளர்கள் விலங்குகளுக்கு உணவாக்கப்பட்டனர்; பலர் நெருப்பிலிட்டு எரிக்கப்பட்டனர்; வாளால் அறுத்துக் கொலை செய்யப்பட்டனர். நாடு கடத்தப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர் (எபி. 11: 36 - 38) இச்சூழலில் தொடக்கக்காலத் திருச்சபையினரின் ஆர்வமிக்க ஜெபத்தொனி "மாரநாதா" என்பதாகும். இறைமக்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது "மாரநாதா" என்று சொல்லி தங்களைத் தேற்றினர். மேலும் தொடக்கக்காலத் திருச்சபையினரிடையே ஆண்டவரின் வருகையைக் குறித்த Parousia எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தபடியால் எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர் (தி.ப. 2: 44 - 45).

"மாரநாதா" என்ற அரமேய மொழிச் சொல்லைப் பிரித்து மாரநா + தா (Marana + tha) ஆண்டவர் வருகிறார் எனவும், மாரன் + அத்தா (Maran + atha) = ஆண்டவர் வந்து பிரசன்னமாகியுள்ளார் (Our Lord has come) எனவும் இரு முறைகளில் மொழிப்பெயர்ப்பர். தூய பவுலார் தொடக்கக்காலத்

திருச்சபையினர் பயன்பாட்டில் கொண்டிருந்த ஆண்டவர் வருகிறார் என்னும் அரமேய வார்த்தையைப் பாமரரும் புரியும் வகையில் கிரேக்கத்தில் பயன்படுத்துகிறார். (I கொரி. 16: 22) வருகிற ஆண்டவர் யார் என்பதை புரிந்து தெளிவு பெற, திருமுழுக்குநர் யோவான் தம் சீடர் இருவரை இயேசுவிடம் அனுப்பி வரவிருப்பவர் நீர் தானா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா? என்ற வினாவை எழுப்பித் தெளிவு பெறுகிறார் (லூக். 7: 18 - 20). நம்மைச் சந்திக்க வருகிற ஆண்டவர் எப்படிப்பட்டவர் என்பதனைப் புரிந்து அவருடைய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்தி வாழ்வது நமது பற்றுறுதியை வளரச் செய்வதாய் அமையும் நம்மைச் சந்திக்க வருபவர் எப்படிப்பட்டவர்?

**1. வாக்குரைக்கப்பட்டவர்** (இ.ச. 18: 15)

ஆண்டவரின் வருகையைக் குறித்து இறைவாக்கினர் பலர் முன்னுரைத்தனர் (ஏசா 11, 53, தி.பா. 28: 1-18). கடவுளால் தெரிவு செய்யப்பட்டு இஸ்ராயேலரின் விடுதலைக்காக பயன்படுத்தப்பட்ட மோசே மெசியாவின் வருகையைக் குறித்து, "உன் கடவுளாகிய ஆண்டவர் உன் சகோதரர் நடுவினின்று என்னைப் போல் ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவார்" (இச. 18: 15) என்று குறிப்பிடுகிறார். வரப்போகும் இறைப்பணியாளர் உண்மையுள்ளவராய் இருக்க வேண்டும் என்பது மோசேயின் எதிர்பார்ப்பு. உண்மையான இறைப்பணியாளர் கடவுளின் திருப்பெயரில் சொல்பவை அனைத்தும் நிறைவேற வேண்டும் என்பது தான் அவருக்கான அளவுகோலாகக் காட்டப்படுகிறது (இச. 18: 22). அவர் குறி சொல்பவராக அல்ல கடவுளின் உண்மையான துன்புறும் பணியாளராயிருப்பார். பேதுரு தம் அருளுரையில் மோசேயினால் கூறப்பட்ட உண்மையானப்பணியாளர் என்பது இயேசுவில் நிறைவேறுவதாகக் குறிப்பிடுகிறார் (திப. 3: 22) மோசேயைப் போல ஆண்டவரும் ஒரு இஸ்ரவேலராகவும், கடவுளின் வாக்கினைப் பேசுகிறவராகவும் இருந்தார் (திப. 3: 18-19). இறைவாக்கினரால் வாக்குரைக்கப்பட்டு வருகிற ஆண்டவரை அடையாளம் காண்பதற்கும், உலகுக்கு வெளிப்படுத்துவதற்கும் நாம் ஆயத்தமா? முன்மதியுடைய மணமகளின் தோழியர் ஐந்து பேர் தங்கள் விளக்குகளால் மணமகனை அடையாளப்படுத்தினர் (மத். 25: 1-13). ஆனால் அறிவிலிகளாகிய ஐந்து பேர் மணமகனின் வருகைக்காக காத்திருந்தும், மணமகனை அடையாளப்படுத்த இயலவில்லை. கடவுளின் பிள்ளைகளாகிய நாம் வாக்குரைக்கப்பட்ட ஆண்டவர் வருகிறார் என்பதனைப் புரிந்து நற்செயல் என்னும் வெளிச்சத்தால் ஆண்டவரை உலகிற்கு அடையாளப்படுத்தி வாழ்வோம்.

**2. வார்த்தையானவர்** (யோவா. 1: 2)

யோவான் தமது யூத மற்றும் புற இன வாசகர்களுக்கு நன்கு தெரிந்த "வார்த்தை" என்னும் ஆற்றல் நிறைந்த சொல்லைக் கூறி அதனுடன் இயேசுவை

இணைத்து அறிமுகப்படுத்துகிறார். வார்த்தை என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கும் கிரேக்கச் சொல் “லொகொஸ்” (Logos) என்பதாகும். “வார்த்தை” என்பது அன்றைய கிரேக்க தத்துவத்திற்கும், யூத சிந்தனைகளுக்கும் பொதுவானதாக இருந்தது. குறிப்பாக பழைய ஏற்பாட்டில் கடவுளின் வார்த்தை என்பது ஆள்த்தன்மை உடையதாக உருவகப்படுத்தப்படுகிறது (திபா. 33:6,107: 20, 119: 29). எனவே யூத வாசகர்கள் எளிமையாக புரிந்துகொள்ள இயேசுவை வார்த்தையாக யோவான் வெளிப்படுத்துகிறார். மேலும், உலகம் தீயது எனவும் படைப்புக்குக் காரணம் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள இடைவெளிகள் எனவும் ஞானக் கொள்கைக்காரர் (Gnosticism) நம்பினர். யோவான் இக்கொள்கையை மறுத்து அனைத்துலகும் வார்த்தையின் மூலமாக படைக்கப்பட்டது (தொ.நூ.1) என்று உறுதிப்படுத்துகிறார். வார்த்தையின் மூன்று சிறப்புகளை யோவான் நற்செய்தி நூல் வலியுறுத்துகிறது.

(a) **வார்த்தை நித்தியமானது** (யோவா.1: 3).

படைப்புகளுக்கு முன்பு வார்த்தை இருந்ததால் இந்த வார்த்தை நித்தியமானதாக விளக்கப்படுகிறது. அதுபோல ஆண்டவரும் நித்தியமானவராய் இருக்கிறார்.

(b) **வார்த்தை ஆளியல்பு உடையது** (யோவா. 1: 14) : வாக்கின் சிறப்பு மனிதராக மாறியதில் வெளிப்படுகிறது. வாக்கு மனிதரானார் என்பதற்கு சாக்ஸ் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள் மாமிசம் என்பதாகும். அதாவது மனிதரிலும் கடைநிலையானார் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. ஆண்டவரும் அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி. 2: 7).

(c) **வார்த்தை கடவுள் தன்மையுடையது** (யோவா. 1: 1) : வார்த்தை கடவுளோடிருந்தது என்பதனைக் கடவுள் தன்மையுடன் இருந்தது எனவும் மொழிப்பெயர்க்கலாம். கடவுளுக்குரிய தன்மைகளை இயேசு உலகில் வெளிப்படுத்தினார் (யோவா. 14: 9). நித்தியராய், ஆளியல்புடன், கடவுள் தன்மையாயிருக்கிற ஆண்டவர் நம்மைச் சந்திக்க வருகிறார். அவர் படைப்புகளுக்கு முன் இருந்தபடியால், அனைத்துப் படைப்புகளுக்கும் முதன்மையானவராயிருக்கிறார் (கொலே. 1: 17), ஊனுடல் எடுத்து மனிதராக மாறியதால் நம் துன்பங்களில் அவரது உடனிருத்தலைத் தந்து நம்முடன் இணைந்திருக்கிறார். கடவுள் தன்மையுடன் இருக்கிறபடியால் உலகத் தீமைகளை நீக்கி, அத்தீமைகளினின்று நம்மை விடுவிக்க அனைத்து ஆற்றலுடையவராய்ச் செயல்படுகிறார். இதனைப் புரிந்து நம்பிக்கையுடன் வாழ்வோம். ஆம்! வாக்குரைக்கப்பட்டவர் வருகிறார். வார்த்தையானவர் வருகிறார்.

மாரநாதா ஆண்டவரே வாரும். ஆமென்.

அருள்திரு. **S. கிரீஷ் குமார்**

# உலகில் அமைதி

## Peace on Earth

எசா. 52:7-10 தீத். 2:11-14

தி.பா. 96 லூக். 1:67-79

“நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது” (லூக்கா 1:79.)

விண்ணிலிருந்து மண்ணுலகத்தை மீட்க வந்த விடியல், இயேசு கிறிஸ்து, அவர் பிறப்புக்கு முன்னும் பின்னும் பாடப்பெற்ற பாடல்கள் முழுமையாக கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றன. அவர் பிறப்புடன் தொடர்புடைய நான்கு முக்கிய பாடல்கள் லூக்கா நற்செய்தி நூலில் இடம்பெற்றுள்ளன.

1. தூய மரியாளின் பாடல் (Song of Mary) லூக்கா 1:26-55
2. சகரியா பாடல் (Song of Zachariah) லூக்கா 1:57-75
3. தூதர்களின் பாடல் (Song of Angels) லூக்கா 2:1-14
4. சிமியோனின் பாடல் (Song of Simeon) லூக்கா 2:21-38

இறைப்பணியாளர், சகரியாவின் பாடல் உலகில் அமைதி ஏற்படுத்தி உலகில் வருகை தந்த இயேசு கிறிஸ்துவுக்கு முன்னுரையாக அமைந்தது.

புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்தி நூல்களில், தூய லூக்கா நற்செய்தி நூலில் மட்டும் சொல்லப்பட்ட நிகழ்வு சகரியா, எலிசபெத் அவர்களின் இறைப்பணியாகும். சகரியா, எலிசபெத் வாழ்வில் இறைப் பணியை உண்மையாக, இறை அச்சத்துடன் நிறைவேற்றி வந்தாலும், அமைதியிழந்து வாழ்ந்து வந்தார்கள். இறை அருட்கொடையாம் குழந்தைச் செல்வம் இல்லாமல் குறைவுடன், அதே நேரம் மிகுந்த பொறுமையுடன் தங்கள் பணியைச் செய்து வந்தார்கள். முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர், அதற்குப் பின் உலகில் ஏற்பட்ட சுமார் 150-க்கும் அதிகமான போர்களினால், இயற்கைப் பேரழிவினால், Covid-19 பெரும்தொற்று, பொருளாதார பிரச்சினைகள், வேலை வாய்ப்பின்மை, வன்முறை, இனக்கலவரங்கள், தீவிரவாத செயல், இறப்புகள், இழப்புகள் ஆகிய இவைகளினால் மனிதர்கள் வாழ்வில் அமைதியை இழந்துள்ளனர். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இறைப்பணியாளர் சகரியாவின் பாடல் வழியாக உலகில் அமைதியை வெளிப்படுத்தியதை சிந்திப்பது, இறை அமைதியைச் சுதந்தரிக்க நமக்கு உதவி செய்கிறது.

## 1. இறை வாக்குறுதிகள் வழியாக அமைதி (Peace through God's Promises)

"பிள்ளையின் தந்தை செக்கரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரைத்த இறை வாக்கு" லூக்கா 1:67

இறைப் பணியாளர்கள், இறைத் தூதர்கள், இறைவாக்கினர்கள் வழியாக வழங்கப்படுகின்ற இறைவாக்குறுதி அமைதியிழந்த மக்களுக்கு முழு அமைதியைக் கொடுக்கின்றது. இறைப் பணியாளர்கள் சகரியா, எலிசபெத் வாழ்விலும் இறைத் தூதர்களால் இறை வாக்குறுதியைப் பெற்றார்கள். லூக்கா 1:13-இல் "செக்கரியா அஞ்சாதீர், உமது மன்றாட்டு கேட்கப்பட்டது, உம் மனைவி எலிசபெத் உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார்; அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர்", என்று தூதர் கூறுகின்றார். லூக்கா 1:18-இல் இறை வாக்குறுதியை நம்ப மறுத்து செக்கரியா தூதனிடம் இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டார். "இறைத் தூதன் கபிரியேல் அதற்கு மறுமொழியாக இறை வார்த்தைகளை, வாக்குறுதிகளை நீர் நம்பவில்லை ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர்" என்று கூறினார். இறை வாக்கின்படி எலிசபெத் கருவுற்று அவர் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்குப் பெயர் சூட்ட ஆயத்தப்பட்டார்கள். சகரியா பெயர்ப் பலகையை வாங்கி "யோவான்" என்று எழுதிப் பெயரிட்டார். லூக்கா 1:64 செக்கரியாவின் வாய் திறந்தது, நாவு கட்டவிழ்ந்து அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார் என்று கூறுகிறது.

II கொரிந்தியர் 1:20-இன் படி "அவர் சொல்லும் "ஆம்" வழியாக கடவுள் அருளும் எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறுகின்றன. அதனால் தான் நாம் கடவுளைப் போற்றிப் புகழும் போது அவர் வழியாக "ஆமென்" எனச் சொல்லுகிறோம். யோவான் 14:27-இல் ஆண்டவர் தரும் இறை வாக்குறுதி, "என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்" என்பதாகும். உரோ. 15:13-இல் "எதிர்நோக்கைத் தரும் கடவுள், நம்பிக்கையால் உண்டாகும் பெரு மகிழ்ச்சியாலும், அமைதியாகவும் உங்களை நிரப்புவாராக என்றும் திபா. 29:11-இல் ஆண்டவர் தம் மக்களுக்கு ஆற்றல் அளிப்பாராக, ஆண்டவர் தம் மக்களுக்கு அமைதி அருள்வாராக, ஆண்டவர் தம் மக்களுக்கு ஆசி வழங்குவாராக என்றும் இறை வாக்குறுதிகள், அமைதியை வழங்குவதாய் அமைந்துள்ளன. Fanny Crosby என்ற விழியிழந்த அருட்பணியாளர், கிறிஸ்தவப் பாடல்களைப் பண் அமைத்தவர். அவருடைய பாடல் வரிகளில் "God is faithful to His Promise" வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கடவுள் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்று குறிப்பிடுகின்றார். ஆகவே அவருடைய பாடல் வரிகளில் அமைதியிழந்தோருக்கு அமைதியைக் கொடுக்க இறை வாக்குறுதிகளை வெளிப்படுத்தினார். (எபிரேயர் 10:23).

**2. இறை மீட்பின் செயல்களால் அமைதி** (Peace through God's Redemption)

"அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்ற செய்தார்."

"நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார்". லூக்கா 1:70-71

இறை மீட்புக்காக, மேசியா என்பவருடைய வருகைக்காக அன்று மக்கள் காத்திருந்தனர். இன்றும் பாவம், சாபம், வாழ்வின் பிரச்சினைகளிலிருந்து விடுவிப்பவர் யார் என்று ஏங்கி நிற்பவர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு செய்தி, மீட்பர் வந்துள்ளார் என்பதை உறுதி செய்தது. மரியாள் இறைத் தூதர்களால் உரைக்கப்பட்ட இறை வாக்கைப் பெற்று இறை மீட்பின் செயல்களை நினைத்துப் பாடின பாடலில், லூக்கா 1:47-இல் "என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது." என்று மகிழ்கின்றார். மரியாளைப் போன்று, சிமியோன் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட இறை அமைதியை எதிர்பார்த்திருந்தவர். மேசியாவைக் காணும் முன் சாவதில்லை என்று கூறப்பட்டிருந்தது. அவருடைய பாடல் வரிகளில் (லூக்கா 2:29-32) "ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை" என்றார். எபேசியர் 1:7-இல் "கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள் வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார்; இம் மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மன்னிப்பு பெறுகிறோம்." என்றும் கலாத்தியர் 1:4-இல் "இவரே நம் தந்தையாம் கடவுளின் திருவுளத்திற்கேற்ப இன்றைய பொல்லாத காலத்தினின்று நம்மை விடுவிக்குமாறு நம்முடைய பாவங்களின் பொருட்டுத் தம்மையே ஒப்புவித்தார்" என்றும் கலாத்தியர் 3;13-இல் நமக்காக கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார் என்றும் பவுலடியார் கூறுகின்றார்.

மார்டின் லூதர்கிங் ஜூனியர் அவர்கள், இனநிறவெறிக் கொள்கையால் பாதிக்கப்பட்டு மீட்புக்கு ஏங்கி நின்றோருக்கு, மீட்பை அளித்திட தம் இன்னுயிரையும் அதற்கு அளித்து குருதி சான்றானார். அவர் கூறும் போது, இந்த மீட்புச் செயலுக்காக என் உயிரையும் விலைக்கிரயமாக கொடுப்பேன் என்றார். "I have a dream" (எனக்கு ஒரு கனவு உண்டு) என்ற அவரது உரை மிகவும் பிரபலமானது. மீட்பின் திட்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு, ஆகஸ்ட் 28, 1963-இல் இரண்டு திருமறை பகுதிகளைப் பயன்படுத்தினார். ஆமோஸ் 5:24-இல் நீதி, நேர்மை, வெள்ளமென ஆறாக பொங்கி, பாய்ந்து ஓடுவதைக் குறிப்பிட்டார். ஏசாயா 40:4-இல் பள்ளதாக்கு, மலை, குன்று, கோணலானது

நேராக்கப்படுவதைக் குறிப்பிட்டுள்ளார். மார்டின் லூதர் கிங் அவர்கள் தம் உரைகளாலும் போராட்டங்களாலும் அமைதி உருவாகக் காரணியானார். கிறிஸ்து பிறப்பின் நோக்கமே மண்ணுலகை மீட்டு அமைதியை நிலைநாட்டுவது ஆகும். (எசாயா 52:7-10).

**3. இறை அரசின் தகவுகளால் அமைதி** (Peace through God's kingdom values)

"ஏனெனில் பாவமன்னிப்பால் வரும் மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய்" (லூக்கா 1:77)

"இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளி தரவும் . . ." (லூக்கா 1:78)

இறை அரசின் தகவுகளான அன்பு, நீதி, நேர்மை, இறை அமைதியை இறை மீட்பை அறிவித்து, இருளிலும் இறப்பின் பிடியில் இருப்போருக்கு ஒளிதர இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மாபெரும் விடியலாக அமைந்துள்ளது. உரோ 14:17-இன் படி, இறை அரசின் தகவு என்பது, நாம் உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாகத் தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது. மேலும் உரோ. 14:19-இல் "ஆகையால், அமைதிக்கு வழி வகுப்பவற்றை நாடுவோமாக," என்றும் மத்தேயு 5:9-இல் அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் என்றும் அமைதியின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. சாது சுந்தர் சிங் அவர்கள், வாழ்வில் நிம்மதி இழந்து, அமைதியற்று தன் வாழ்வை மாய்த்துக் கொள்ள விரும்பியபோது இயேசுகிறிஸ்து காட்சி கொடுத்து பிறருக்கு அமைதி கொடுக்கும் பாத்திரமாக்கினார். ஊழியத்தை மிக கடினங்களுடன் நிறைவேற்றினார். அவர் குறிப்பிடும் போது, என் இறைவனாம் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற நான் தகுதியற்றவன். அவரைப் போலவே எனக்கும் வீடும் உடைமையும் வேண்டாம், அவரைப் போலவே நானும் என் மக்களின் துன்பங்களைப் பகிர்ந்துக்கொள்வேன், எல்லா மனிதர்களிடமும் இறைவனின் அன்பைச் சொல்லுவேன், என்றார்.

மத்தேயு 25:31-46-இல் மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நாம் எதைத் செய்கிறோமோ அதை இறை மகனுக்கே செய்த நிறைவு பெறுகிறோம். இறை அரசின் தகவுகள் முழுமை பெற்று அமைதி, திருச்சபையில், குடும்பங்களில் தனி நபர் வாழ்வில் ஏற்படும். கிறிஸ்து பிறப்பின் செய்தி வழியாக, இறை அரசுக்கு நேராக அனைவரையும் ஒன்றிணைத்து நம் உடனிருப்பை நம் அன்பின் செயல்களால் வெளிப்படுத்துவோம். இறை அமைதி அனைவரது உள்ளங்களிலும் உலகிலும் ஏற்பட உழைப்போம்.

அருள்திரு. அறிவர். **S. டேவிட் ஜோசப்ராஜ்**

## 25.12. 2024

# கிறிஸ்து பிறப்பு: ஒரு புதிய விடியல்

## Christmas : A New Dawn

எசாயா 9 : 1-7 கலா. 4 : 1-7

திபா. 98 லூக். 2 : 1-14;

"வான தூதர் அவர்களிடம், அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக். 2 : 10, 11).

இங்கிலாந்து இளவரசர் வில்லியம்ஸ் - கதே மிடில்டன் தம்பதியருக்கு 2013-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் நாள் ஜார்ஜ் அலெக்ஸாண்டர் லூயிஸ் என்ற பிள்ளை பிறந்தான். இந்தக் குழந்தையின் பிறப்பை "நமக்கு ஒரு பாலகன் பிறந்தான்" என்ற தொனியோடு நாடு முழுவதும் கொண்டாட, புகழ்பெற்ற பிரிட்டன் பத்திரிக்கையான 'Sun' அன்று மட்டும் அதன் பெயரை 'Son' என்று மாற்றி மகிழ்ந்தது. ஒரு நாடே மகிழ்ந்தது. பொதுவாக ஒரு இல்லத்தில் குழந்தை பிறந்தால் அது அந்தக் குடும்பத்தாருக்கு மகிழ்ச்சியைத் தரும். நாட்டில் மன்னருக்குக் குழந்தை பிறந்தால் வீட்டாருக்கு, குடும்பத்தாருக்கு மட்டுமல்ல நாட்டுக்கே மகிழ்ச்சி தரும் செய்தியாக அமையும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வீட்டுக்கு, நாட்டுக்கு மட்டுமல்ல அனைத்துலகத்துக்கும் மகிழ்வைத் தரும் நற்செய்தியாய் அமைந்தது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி அகில உலகத்திற்கும் நற்செய்தியாய் அறிவிக்கப்பட்டது. வானதூதர் மேய்ப்பர்களிடம், அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். (லூக். 2 : 10) எனக் கூறுகிறார். ஏனெனில் அவருடைய பிறப்பின் செய்தி அனைத்து உலகத்திற்கும் ஒரு புதிய விடியலின் செய்தியாய் இருந்தது. மீட்பின் செய்தியாய் அமைந்தது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அகில உலகத்தின் மக்களுக்கு மகிழ்வின் செய்தியாய், விடியலின் செய்தியாய், மீட்பின் செய்தியாய் அமைந்தது. இச் செய்தி தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகள் அடிப்படையில் நாம் சிந்திக்கும் போது:

**1. கிறிஸ்து பிறப்பு : அற்புதத்தின் செய்தி** (எசா. 9 : 6)

"ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சி பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும்; அவர்

திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை அமைதியின் அரசன் என்று அழைக்கப்படும்."

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அற்புதத்தின் செய்தியாய் அமைந்தது.

மண்ணைப் படைத்த இறைவன் மண்ணில் பிறந்தது அதிசயம்!
மனிதனைப் படைத்த இறைவன் மனிதனாய்ப் பிறந்தது அதிசயம்!
கன்னிகை தூயஆவியால் கருவுற்றது அதிசயம்!
யோசேப்பு மரியாளை ஏற்றுக்கொண்ட விதம் அதிசயம்!
வானத்து நட்சத்திரம் வழிகாட்டியது அதிசயம்!
வானதூதர் அறிவித்த செய்தி அதிசயம்!
ஆம்! கிறிஸ்து பிறப்பே அதிசயம்.! அவர் பிறப்பில் பல அதிசயங்கள் நடந்தன தொ.நூ. 18 : 13 "ஆண்டவரால் ஆகாதது எதுவும் உண்டோ?" என்ற கூற்றிற்கு ஏற்ப ஆபிரகாம் - சாராளுக்கு ஈசாக்கு; எல்கானா - அன்னாளுக்கு சாமுவேல்; சகரியா - எலிசபெத்-க்கு யோவான் என பல அதிசயமாக குழந்தைகளைத் தந்த கடவுள் குழந்தையாகவே பிறந்தது அதிசயம். ஆம்! "அவர் அதிசயமானவர்".

இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் இறைவாக்குநர்களின் இறைவாக்குகள் அனைத்தும் நிறைவேறியன. இது ஒரு புதிய விடியலின் நம்பிக்கையின் செய்தியாய் மக்களுக்கு அமைந்தது. ஏசா. 9 : 1-7-ல் செபுலோன், நப்தலி நாடுகள் இஸ்ரயேலின் வடப்பகுதியில் உள்ளன. இந்நாடுகளை முற்காலத்தில் அவமதிப்புக்கு உட்படுத்திய ஆண்டவர் பிற்காலத்தில் மேன்மை வரச் செய்வார், காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது என்கிறார். இது விடியலின் செய்தி. அவர்களை ஒடுக்குவோரின் கொடுங்கோலை ஒடித்தெறிந்தீர் எசா. 9 : 6 "ஏனெனில், ஒரு குழந்தை ....... அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும். இப்பகுதியில் கூறப்பட்டுள்ள இறைவாக்கு இயேசுவில் நிறைவு பெறுவதாக நற்செய்தியாளர் மத்தேயு குறிப்பிடுகிறார். (மத். 4 : 14-16). இருளின் ஆதிக்கம் அதிகமாக இருந்த அந்த நேரத்தில் இருளைப் போக்கும் ஒரு புதிய விடியலாய் "ஒளியை" அனுப்புவதாக வாக்களிக்கிறார் கடவுள். அந்த ஒளிதான் "வியத்தகு ஆலோசகராக, வலிமை மிகு இறைவனாக, என்றுமுள தந்தையாக, அமைதியின் அரசனாக" இயேசுவில் வெளிப்பட்டது. ஏசாயா வழியாக ஆண்டவர் அருளிய இறைவாக்கு இயேசுவில் முழுமை பெற்றது.

**2. கிறிஸ்து பிறப்பு : ஆச்சரியத்தின் செய்தி :** (லூக். 2 : 18)

"அதைக்கேட்ட யாவரும், இடையர்கள் தங்களுக்குச் சொன்னவற்றைக் குறித்து வியப்படைந்தனர்."

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அற்புதத்தின் செய்தி மட்டுமல்ல ஆச்சரியத்தின் அல்லது வியப்பின் செய்தி என திருமறை கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் போது, பலர் ஆச்சரியப்பட்டார்கள். வானதூதர் செய்தியால் இடையர்கள் ஆச்சரியப்பட்டனர். இவர்கள் ஆச்சரியப்பட்டதற்கு காரணமிருந்தது: ஏனெனில் இடையர்கள் ஏழைகள், நாகரீகமற்றவர், நாடோடிகள், கந்தை ஆடை அணிபவர், புறக்கணிக்கப்பட்டவர், கலாச்சாரமில்லாதவர். இடையர்களுக்கு ஓய்வுநாள் கிடையாது. இடையர் நியாயசனத்தில் சென்று சாட்சி கூற முடியாது. இது யூத பாரம்பரியம். ஆனால் யூதருக்கு அரசராகப் பிறந்தவர் (மத். 2 : 2) செய்தி இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது அவர்களுக்கு வியப்பைத் தந்ததில் தவறில்லை. லூக். 2 : 9 "திடீரென்று ஆண்டவருடைய தூதர் அவர்கள் முன் வந்து நின்ற போது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது". இது இடையர்கள் வாழ்வில் விடியலைத் தந்தது. புறக்கணிக்கப்பட்ட இடையர் உலக மீட்பர் பிறப்பின் செய்தியை அறிந்து, அவரை தரிசித்து, அதைப் பிறருக்கும் இடையவர் அறிவிக்க அனைவரும் வியப்படைந்தனர். இது இடையர்கள் வாழ்வில் ஒரு புதிய விடியலின் செய்தியாய், அனுபவமாய் அமைந்தது. இடையர்களுக்கும் வாழ்வில் அங்கீகாரம் கிடைத்தது.

ஏரோது அரசனும் அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று என மத். 2 : 3 கூறுகிறது. இவர்கள் கலக்கத்திற்கும் காரணமிருந்தது. கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் ஏரோது அரண்மனையில் வந்து "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம் அவரை வணங்க வந்திருக்கிறோம்" என்றனர். இது ஏரோதுக்கு வியப்பைத் தந்தது. ஞானிகளும் (சாஸ்திரிகள்) வியப்படைந்தனர். சாஸ்திரிகள் தெய்வீகத் தன்மை கொண்டவர்கள். கனவுகளுக்கு விளக்கம் தருபவர்கள். வானவியல் வல்லுநர், அறிவு, ஆற்றல், வசதிப் படைத்தவர்கள். இவர்களுக்கு நட்சத்திரம் தோன்றல் (மத். 2 : 2) வழிகாட்டல் (2 : 9) குழந்தை இருந்த இடத்தின் மேல் நின்றவை மகிழ்வையும் ஆச்சரியத்தையும் தந்தது. (மத். 2 : 9, 10, 12). இவர்கள் ஆச்சரியத்திற்கும் காரணமிருந்தது: யூதருக்கு அரசராகப் பிறந்த பிள்ளை அரண்மனையில் இல்லை. குழந்தையையும் மரியாளையும் எளிய நிலையில் சந்தித்த நிகழ்வு ஆச்சரியத்தைத் தந்தது. யூத அரசர் அரண்மனையில் அல்ல 'தீவனத் தொட்டி'யில் இருந்தார். நட்சத்திரம் வழிகாட்டிய நிகழ்வு, ஞானிகளை மாற்றுப் பாதையில் திரும்பிப் போக அறிவிக்கப்பட்ட செய்திகள் ஞானிகளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஆம்! கிறிஸ்து பிறப்பின் செய்தி ஆச்சரியத்தின் செய்தி. இடையர்கள் பெத்லகேமுக்கு விரைந்து சென்று மரியாவையும், யோசேப்பையும், தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையும் கண்டு

ஆச்சரியமடைய, கேட்ட அனைவரும் வியப்படைந்தனர். கிறிஸ்துவின் பிறப்பின் அனுபவங்கள் ஆச்சரியத்தைக் கொடுத்தாலும், உலக மக்கள் வாழ்வில் ஒரு புதிய விடியலை ஏற்படுத்தும் என்பதை அறிஞர்கள் முதல் அனைவரும் அறிந்துகொள்ளும் அனுபவமாய் அமைந்தது.

**3. கிறிஸ்து பிறப்பு : அன்பின் செய்தி :** (லூக். 2 : 11)

“இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்”

கடவுளின் ஈடு இணையற்;ற அன்பின் அடையாளம் கிறிஸ்து பிறப்பு அல்லது கிறிஸ்மஸ். யோ. 3 : 16 “தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகத்தின் மேல் அன்பு கூர்ந்தார்”, அவரது அன்பின் உச்சக்கட்டம் சிலுவை மரணம். பிலி. 2 : 6, 7 “கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார்”. ஆண்டவரின் அன்பின் வெளிப்பாடு கிறிஸ்து பிறப்பு.

பெத்லகேம் விடுதியில், இடம் இல்லாததால் அங்குத் தங்கியிருந்த பயணிகள் பயன்படுத்திய, விலங்குகள் கட்டப்பட்டிருந்த இடத்தில் மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்தார். கடவுள் நம்மை எவ்வளவு அன்பு செய்கிறார்? என்பது நன்கு புலப்படுகிறது. “இதுவே உங்களுக்கு அடையாளம்” : ஏழ்மை, எளிமை, தனிமை, துன்பம், ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட நிலை. இவற்றில் தான் ஏழையாகப் பிறந்த இயேசுவைக் காணமுடியும். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறவர் அவர். அவர் பிறப்பு ஒரு புதிய விடியல். அது நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கை தந்தது. புறக்கணிக்கபட்டவர்களுக்குப் புது நம்பிக்கை தந்தது. ஞானிகளுக்கு நல்வழி காட்டியது. யூதருக்கு மட்டுமல்ல எல்லா மக்களுக்கும் மகிழ்வின் செய்தியாய் நற்செய்தியாய், புதிய விடியலின் செய்தியாய் அமைந்தது. ஆம், அவர் பிறப்பில் ஆண்டவரின் பேரன்பு வெளிப்பட்டது. அவரது பிறப்பின் செய்தி நம் அனைவருக்கும் புதிய விடியலின் செய்தியாய் அமையட்டும். அதை அனைவருக்கும் நற்செய்தியாய் அறிவிப்போம். இறையாசி நம்மனைவரோடும் இருப்பதாக - ஆமென்.

**அருள்திரு. T. டேவிட் கிளேட்சன்**

# குடும்பம் என்னும் நலமருளும் இடம்

## Family as Healing Space

தொநூ. 33: 1-11 எபே. 6: 1-9

திபா. 91 லூக்கா 15: 11-24

" . . . உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பதுபோல் இருக்கிறது . . ." (தொநூ. 33: 10).

குடும்பம் என்பது மனிதரின் தனிமையை அகற்றி உறவுகளுடன் இணைந்து வாழ கடவுள் ஏற்படுத்திய கூட்டுறவு எனலாம். இந்த குதூகலமான கூட்டுறவு வழியாக வாழ்விற்குத் தேவையான எண்ணற்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றோம். அவற்றில் முதன்மையான ஒன்று குடும்பத்தின் "நலம் அருளும் தன்மை" ஆகும். உலகில் எதிர்கொள்ளும் சவால்களும், கடினங்களும் உள்ளத்தில் காயங்களை ஏற்படுத்துகின்றபோது குடும்பம் நலமருளும் இடமாகத் திகழ்கின்றது. ஒருவருக்கொருவர் அன்பு பகிரப்படுவதால் மனங்களில் அமைதி பெருகுகின்றது. பல்வேறு உறவுகளின் ஆதரவுக் கரங்கள் ஒன்றிணைவதாலும், ஒருவரின் சுமை பலரால் பகிரப்படுவதாலும் மனம் இலகுவடைகின்றது.

நீண்ட நாள் பகையின் விளைவாக, நலம்நிறைந்த நல்லுறவை இழந்து நின்ற ஏசா - யாக்கோபு என்ற சகோதரரிடையே மீண்டும் துளிர்த்த சகோதர உறவு அவர்களின் உளக்காயங்களை ஆற்றும் அருமருந்து ஆனது. சகோதரரின் முகத்தில் கடவுளைக் காண்பது போன்ற இறை அனுபவத்தை உள்ளத்தில் உணர்ந்தனர். இந்த சகோதரர் ஒருவரையொருவர் சந்தித்த போது நிகழ்ந்தவற்றை அடிப்படையாகக்கொண்டு, ஒரு குடும்பம் நலமருளும் இடமாக உருவாக்கம் பெற தேவையான நற்பண்புகளை இந்நாளில் தியானம் செய்யலாம்.

### 1. குடும்பம்: அன்பு அருளும் இடம்

"ஏசாவோ அவருக்கு எதிர்கொண்டு ஓடி அவரை அரவணைத்து இறுகக் கட்டித்தழுவி முத்தமிட்டார். இருவரும் மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தினர்." (தொநூ. 33: 4).

சகோதரர்களான ஏசாவும், யாக்கோபும் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ஒருவரையொருவர் சந்தித்த தருணம் நெகிழ்ச்சியான நேரமாக

அமைந்துவிட்டது. அன்பு குறைவுபட்டதால் உருவான பகைமையின் விளைவாக ஏற்பட்ட மனவேதனையை ஆற்ற அதே அன்பு தேவைப்பட்டது. அவர்கள் சந்திப்பின்போது உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பினால் பொங்கிவழிந்த மகிழ்ச்சி கண்களில் கண்ணீராக வெளிப்பட்டது. ஏசாவிடம் இருந்த பழைய பகை உணர்வும், யாக்கோபிடம் இருந்த குற்ற உணர்வும் மறைந்துவிட்டன. அன்பின் அளப்பரிய ஆற்றலினால் ஆறாத காயங்கள் ஆறின. உள வேதனை அகன்று உளநலம் பெற்றனர். மன மகிழ்வையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்டவர் இயேசு கூறிய "காணாமற்போன மகன்" உவமையிலும் (லூக். 15: 11-24) "குடும்பம் நலம் அருளுகின்ற இடம்" என்ற கருத்து உறுதியடைகிறது. இளைய மகன் தந்தையின் உண்மையான அன்பை விட்டு தூரம் சென்றார். வாழ்வில் வீழ்ந்ததால் உள்ளம் உடைந்தார். அமைதியை இழந்து துயருற்றார். நலமருளும் தந்தையை நாடி வந்தார். தொலைவில் வரும்போதே கண்டுகொண்ட தந்தை ஓடோடிச் சென்று, அளப்பரிய அன்பினால் மகனைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். தந்தையின் அன்பு உடைந்த உள்ளத்துடன் வந்த மகனுக்கு நலம் அருளியது. குடும்பம் என்ற கூட்டுறவில் மீண்டும் இணைந்து புது வாழ்வைத் தொடங்கினார்.

குடும்ப உறவுகளிடையே இருக்க வேணடிய வாழ்வியல் நெறிமுறைகளைப் பவுலடியார் தமது மடலில் அழகாக வரிசைப்படுத்தியுள்ளார். கீழ்ப்படிதலும், மதித்து வாழ்கின்ற பண்பும் பெற்றோரிடம் பிள்ளைகள் காண்பிக்கின்ற அன்பைப் பிரதிபலிக்கும் நற்பண்புகள் ஆகும் (எபே. 6: 1, 2). இந்த அறிவுரையைப் பின்பற்றுவோருக்கு "நீடுழி வாழ்வாய்" என்ற ஆசியுடன் ". . . நீ நலம் பெறுவாய் . . ." என்ற வாழ்த்தினையும் பவுலடியார் இணைத்து வழங்குகின்றார் (எபே. 6: 3).

குடும்பத்தின் உறவுகளிடையே பகிரப்படுகின்ற பல்வேறு பண்புகளில் முதன்மையான ஒன்று அன்பு எனலாம். குடும்பத்தில் தான் உண்மையான அன்பு பரிமாறப்படுகிறது. அன்பு மனிதரின் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் மகத்தான உணர்வு ஆகும். அன்பு என்ற நற்பண்பு கொடுக்கக் கொடுக்க குறையாதது. அன்பைக் கொடுப்பதும், அன்பைப் பெற்றுக்கொள்வதும் மிகவும் மகிழ்வானது. எனவே, குடும்ப உறவுகளிடையே அன்பு சிக்கனமிற்றி தாராளாமாகப் பகிரப்படுதல் வேண்டும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்கின்றார் திருவள்ளுவர். குடும்ப வாழ்வு பண்புடையதாகவும் பயனுடையதாகவும் திகழ அன்பான உள்ளமும் அதனுடன் இணைந்த நல்ல செயல்களும் தேவை என்பதே இந்தத் திருக்குறளின் பொருள் ஆகும். ஒருவரின் வாழ்வில் அன்பு என்ற பண்பு

இருந்தால், மன்னிப்பு, தியாகம், விட்டுக்கொடுக்கும் தன்மை, புரிந்துக்கொள்ளும் தன்மை ஆகிய நற்பண்புகள் இயல்பாகவே வாழ்வில் இணைந்துவிடுகின்றன. இந்த நற்பண்புகள் ஒருங்கிணையும்போது சுமைகளும் சுகமாக மாறி விடுகின்றன. உள்ளம் அமைதியையும் நலத்தையும் பெறுகின்றது.

“அன்பு நம் ஆரோக்கியத்திற்கு நல்ல மருந்து” (“Love is good medicine for our health”) என்கிறார் மாண்டி காலின்ஸ். அன்பு உள நலத்தை மட்டுமன்று உடல் நலத்தையும் வழங்குகிறது என்பது மருத்துவத்துறையில் நிரூபிக்கப்பெற்றுள்ளது. அன்பு ஒருவரின் கவலையைக் களையச்செய்து, மன அழுத்தங்களை மறையச் செய்து இதயத்தை இதமாக்குகிறது. இதனால் உடலைப் பாதிக்கின்ற சில நோய்கள் தவிர்க்கப்படுகின்றன. எனவே, அன்பைத் தாராளமாகப் பகிர்ந்து குடும்பத்தை “நலம் அருளும் இடமாக” உருவாக்கம் செய்வோம்.

## 2. குடும்பம்: ஆதரவு அருளும் இடம்

“ . . . உமக்கு அடியேன் கொண்டு வந்துள்ள அன்பளிப்பைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளும். ஏனெனில், கடவுளின் கருணையினால் எனக்கு வேண்டிய மட்டும் உள்ளது” (தொநூ. 33: 11).

தொடக்கத்தில் தன்னைத்தான் அன்பு செய்து, தனக்கான ஆதரவை தந்தையிடம் பெற்றுக்கொள்வதில் தீவிரம் காட்டிய சகோதரர்கள், சிந்தனை தெளிவுபெற்று, மனமாற்றம் பெற்றதின் விளைவாக குடும்ப உறவுகளிடையே இருக்கவேண்டிய நல்ல தகவுகளை உணர்ந்து கொண்டனர். யாக்கோபு தன் சகோதரரை அமைதிபடுத்தவும் (தொநூ. 32: 20). அவரிடம் தயை கிடைக்கவும் (தொநூ. 33: 8) அன்பளிப்புகளை வழங்கியதைப் போன்று தோன்றினாலும், இருவருமே தங்கள் ஆதரவைச் சகோதரருக்கு வழங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தைத் தங்கள் உள்ளங்களில் உருவாக்கியிருந்தனர் என்பது இந்த அன்புச் சந்திப்பு வழியாகத் தெளிவாகிறது. யாக்கோபு தன்னிடம் இருந்த மந்தையிலிருந்து அதிகமான உயிரினங்களை ஏசாவுக்கு வழங்கினார் (தொநூ. 32: 14, 15; 33: 10, 11). ஏசா தன்னிடம் இருந்த ஆள்களில் சிலரை யாக்கோபுக்கு வழங்க முன்வந்தார் (தொநூ. 33: 15). யாக்கோபு அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், ஏசாவின் அன்பை உணர்ந்து உள்ளம் மகிழ்ந்திருப்பார்.

ஆதரவு அருள்தலின் நோக்கம், தேவைகளை நிறைவு செய்வது மட்டுமல்ல உள்ளங்களில் மகிழ்வை வழங்கி அதின் விளைவாக ஒருவரையொருவர் நலமடையச் செய்யும் நல் முயற்சி ஆகும். ஏசா யாக்கோபு

சந்திப்பு இந்த உயரிய உண்மையை அழகுற உறுதிப்படுத்துகிறது. “என்னிடம் மிகுதியாக உள்ளது” என ஏசாவும், “எனக்கு வேண்டிய மட்டும் உள்ளது” என யாக்கோபும் கூறி தங்களுக்குக் குறை ஏதும் இல்லை என்பதை மன நிறைவுடன் தெரிவிக்கின்றனர். ஆனாலும், ஒருவருக்கொருவர் பகிர்ந்து வாழ்தல் நல்லுறவை மேம்படுத்தும் என்ற நற்சிந்தையுடன் இருவரும் பகிர முன்வந்தனர்.

தந்தை பிள்ளைகளை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி அறிவுக்கட்டி வளர்க்க வேண்டும் என்ற அறிவுரையைப் பவுலடியார் முன் வைக்கின்றார் (எபே. 6: 3). பெற்றோரின் ஞானமான இத்தகைய வளர்ப்பு முறை பிள்ளைகள் நல்வழியில் வளர ஆதரவாக அமைகின்றது. ஆண்டவர் இயேசு கூறிய “காணாமற்போன மகன்” உவமையில் வருகின்ற, இளைய மகன், தந்தையின் “கண்டித்துத் திருத்தி அறிவுபுகட்டுகின்ற வளர்ப்பு வட்டத்தை” விட்டு வெளியேறிவிட்டார். இதன் விளைவாக வாழ்வில் நலம் இழந்து போனார். தவறை உணர்ந்து ஆதரவு நாடி வந்த இளையமகனை அன்புடன் ஏற்றுக்கொண்ட தந்தை சில அன்பளிப்புகளை வழங்கி தனது ஆதரவை உறுதி செய்தார் அழுக்கான ஆடையைக் களைந்து முதல் தரமான ஆடையையும், உரிமைக்கு அடையாளமான மோதிரத்தையும், கரடு முரடான பாதையிலும் முன்னேறிச் செல்ல மிதியடியையும் வழங்கியதுடன் மகிழ்வை வெளிப்படுத்த விருந்தையும் ஆயத்தம் செய்தார் (லூக். 15: 22, 23). குடும்பம் எனும் கூட்டுறவில் இணைந்த மகனுக்குத் தந்தை வழங்கிய ஆதரவு, புதுவாழ்வில் தொடர்ந்து பயணிக்க உறுதுணையாக அமைந்தது.

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவை வழங்குவதும் ஆதரவைப் பெறுவதும் நலமான வாழ்விற்குப் பேருதவியாக அமைகின்றன. வாழ்க்கை என்னும் பயணத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆதரவு வழங்கும் உறவுகளைக் கடவுள் வழங்கியுள்ளார். முதலில் பெற்றோரும், அதனைத் தொடர்ந்து உடன்பிறந்தோரும், வாழ்க்கைத்துணைவரும், முதுமையான வயதில் பிள்ளைகளும் ஆதரவுக் கரம் நீட்டுகின்றனர். உறவு நிலைகளில், ஒவ்வொரு நபரும் மற்றவரை ஆதரிக்க வேண்டும் அவர்கள் ஒருவரையொருவர் உயர்த்த வேணடும் என்ற நல்லதோர் கூற்றினை டெய்லர் ஸ்விஃப்ட் கூறியுள்ளார். “. . . இடுக்கணில் உதவுவதற்கே உடன் பிறந்தவன் இருக்கின்றான் . . .” (நீதி. 17: 17) என்பது சாலமோன் கூறியதோர் நீதிமொழியாகும். மோசேயின் வாழ்வில் கடவுளின் அளப்பரிய ஆற்றல் இருந்தாலும், சகோதரரான ஆரோனின் ஆதரவை நாடும்படி கடவுளாலேயே

வழிநடத்தப்படுகிறார் (விப. 4: 14-16). மோசேயின் அர்ப்பண வாழ்வுடன் ஆரோனின் பேச்சாற்றல் இணைந்த போது அவர்களின் விடுதலைப் போராட்டம் வெற்றியாக அமைந்தது.

குடும்பம் என்ற உயர்ந்த அமைப்பு, வாழ்விற்கான நெறிமுறைகளை வகுத்துத் தந்து நல்வாழ்விற்கு வழிகாட்டுகின்றது. வாழ்வில் துயரங்களையும், தோல்விகளையும் எதிர்கொள்ள நேரிடுகின்றபோது குடும்ப உறவுகளின் அன்பும், அவர்கள் வழங்கும் ஆதரவும் மகிழ்வான வாழ்விற்குத் துணை செய்கின்றது. வாழ்வில் வீழ்ந்திடாமல் தாங்கவும், வீழ்ந்தோரைத் தூக்கிவிடவும், உயர்த்தி நிறுத்தவும் குடும்ப உறவுகள் உறுதுணையாக அமைகின்றன. இங்ஙனம் குடும்பத்தை நலமருளும் இடமாக உருவாக்கம் செய்ய ஆண்டவர் அருள்புரிவாராக. ஆமென்.

அருள்திரு. **R. ஜெகதீஸ்லால் ரெகு**

# ஆண்டவரிடம் வாருங்கள் பேருவகை கொள்ளுங்கள்

## Come to the Lord and Rejoice

எசாயா 1: 1-20 திப. 16: 19-34

தி.பா. 89: 1-18 லூக்கா 19: 1-10

அவர் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினார். கடவுள்மீது நம்பிக்கை கொண்டதால் தம் வீட்டார் அனைவரோடும் சேர்ந்து அவர் பேருவகை அடைந்தார். (திப. 16: 34)

இன்னும் ஒர் ஆண்டின் இறுதி நிமிடங்களில் இறைப்பாதம் அமர்ந்து வழிபட கிடைத்திருக்கும் நற்பேறினை எண்ணி அக மகிழ்வோம். ஒவ்வொரு செயலுக்கும் துவக்கமும் நிறைவும் உண்டு ஒவ்வொரு நிறைவும் வெவ்வேறு அனுபவங்களைத் தருகின்றன. நீண்ட பயணங்களை மேற்கொள்ளும்போது பயணத்தின் நிறைவில் சந்தித்த விதவிதமான அனுபவங்களை நாம் நினைத்து பார்ப்பது உண்டு. ஓர் ஆண்டின் துவக்கத்திலும் ஆவலோடு அடியெடுத்து வைத்து, ஆண்டு நிறைவில் கடந்து வந்த காலங்களின் நினைவுகளை எண்ணிப் பார்ப்பதும் உண்டு. பயணங்களில் மேடும், பள்ளமும், திருப்பங்களும் நேர்வழியும் இருப்பதுப் போல நாம் கடந்து வந்த காலங்களின் அனுபவங்களும் இருக்கின்றன. மகிழ்வும், துக்கமும், ஆசியும் இழப்பும், சந்திக்காத எவருமில்லை. ஆயினும் கடவுளின் உடன் இருப்பு ஒவ்வொரு தருணங்களிலும் நம்முடன் இருந்தது என்பதன் சாட்சியாகவே இந்த ஆண்டு நிறைவுத் தொழுகையிலும் பங்கேற்றிருக்கிறோம். ஆனால் ஆண்டவர் நம்முடன் இருந்தாலும், நாம் அவரோடு இணைந்து பயணித்தோமா என்கிற கேள்வியை எழுப்பினால், பெரும்பாலும் இல்லை என்ற பதிலே விஞ்சி நிற்கும். பிள்ளைகளைப் பேணி வளர்த்தேன் அவர்களோ எனக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்கள் . . . ஆனால் இஸ்ரவேலோ என்னை அறிந்து கொள்ளவில்லை என் மக்களோ என்னை புரிந்து கொள்ளவில்லை என்ற எசாயாவின் இறைவாக்கு நம்மை உணர்த்துவதாக அமைகிறது.

**1. இணங்கி வாருங்கள்** (எசாயா 1: 19)

“மனமுவந்து நீங்கள் எனக்கு இணங்கி நடந்தால்; நாட்டின் நற்கனிகளை உண்பீர்கள்.”

கடவுள் தம் மக்களுக்கு எதிராக குறை கூறுகின்ற பகுதியாக எசாயா முதலாவது அதிகாரம் அமைந்துள்ளது. பிள்ளைகளாக பேணி வளர்க்கப்பட்டவர்கள் தந்தைக்கு இணங்காமல் நடந்த பிள்ளைகளாக மாறிப் போனார்கள். காளையும் கழுதையும் கூட தங்கள் உடமையாளரையும் தலைவனையும் அறிந்தது. கடவுளின் மக்கள் என்று சொந்தம் கொண்டாடப்பட்ட இஸ்ரவேல் மக்கள் கடவுளுக்கு இணங்காத வாழ்க்கையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பாவம் நிறைந்த மக்களினம், அநீதி செய்கின்ற கூட்டம், தீச்செயல் புரிவோரின் வழி மரபு. கேடுகெட்ட மக்கள், ஆண்டவரை புறக்கணித்தவர்கள், அவமதித்தவர்கள், ஆண்டவருக்கு அன்னியர் வன்முறையாளர் என்று அடையாளப்படுத்தப்படுகின்றார்கள் (எசாயா 1: 4-5). காணிக்கைகளால் கடவுளைப் பிரியப்படுத்த நினைத்து கடவுளுக்கும் அவர் வார்த்தைகளுக்கும் இணங்கி நடப்பதை விட்டுவிட்டார்கள். அதன் விளைவாக உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை உடலில் நலமே இல்லை என்கிற நிலைக்கு தள்ளப்பட்டார்கள். கைவிடப்பட்டார்கள் (1: 6). இந்நிலையில் கடந்த கால வாழ்வினைச் சீர்தூக்கிப் பார்த்து கடந்தகால தவறுகளுக்காக மனம்வருந்தி (1: 15) திருந்தி (1: 6). நன்மை செய்ய கற்றுக்கொள்ளும்படி (1: 17) அறைகூவல் விடுக்கப்படுகிறது. மனமுவந்து கடவுளுக்கு இணங்கி நடப்பதே நாட்டின் நற்கனிகளை உண்பதற்கான வழிமுறை என்று உணர்த்தப்படுகிறது. மனதாலும் உடலாலும் கடவுளுக்கு இணங்கி நடப்பதால் வருகின்ற பேருவகை வேறு எதற்கும் ஈடாவது இல்லை அதனை அனுபவத்தோடு உணர்ந்த H.A. கிருட்டிணப்பிள்ளை "உன்னையல்லால் எனக்கார் துணை யாருறவே?" என்று எந்த சூழ்நிலையிலும் கடவுளோடு உள்ள தனது இணக்கத்தை வெளிப்படுத்துகிறார். ஆண்டவரிடம் வருவது என்பது அவருக்கு இணங்கி வாழ்வதாகும். இணங்கிப்போகாத இயல்புகளை விட்டு ஒழித்து இணங்கி நடப்போம் பேருவகை கொள்வோம்.

## 2. இறங்கி வாருங்கள்

அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார். (லூக்.19: 6)

வரிதண்டுவோருக்கு தலைவராகவும் செல்வந்தராகவும் இருந்த சக்கேயு எரிகோவுக்கு வந்திருந்த இயேசுவை பார்க்க விரும்புகிறார். வழியே சென்று கொண்டிருந்த இயேசுவை இவர் குட்டையாக இருந்ததாலும் மக்கள் திரளாய் கூடி இருந்தபடியினாலும் பார்க்கமுடியவில்லை. ஆகவே இயேசுவைப் பார்ப்பதற்காக காட்டத்தி மரத்தில் ஏறி அமர்ந்து கொள்கிறார். அவ்வழியாகக் இயேசு வந்தபோது விரைவாய் இறங்கி வாரும் என்கிற அழைப்பைப் கொடுக்கிறார். இறங்கி வந்து மகிழ்ச்சியோடு தனது இல்லத்தில் இயேசுவை

சக்கேயு ஏற்றுக் கொள்கிறார். இயேசுவை சந்தித்ததால் மகிழ்ச்சி உண்டு. அறிக்கை உண்டு, பகிர்வு உண்டு, அங்கீகாரம் உண்டு என்பதனை சக்கேயுவுடனான இயேசுவின் சந்திப்பு வெளிப்படுத்துகிறது. இறங்கி வந்ததால் மட்டுமே இவைகள் சாத்தியமாகின்றன. சக்கேயு ஏறி அமர்ந்திருந்த இடம், வழியருகே நின்ற காட்டு அத்திமரம். பாதுகாப்பாக அமர்ந்து இயேசுவை பார்ப்பதற்கான இடமாக காட்டு அத்திமரம் அமைந்தது என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். தான் குட்டையானவன் என்ற தாழ்வு மனப்பான்மையும், தான் இயேசுவை நேரிடையாக சந்திப்பதற்குத் தகுதியற்றவன் என்ற பாவி மனப்பான்மையும், தனது பணி நிமித்தமாக மக்கள் தன்னை புறக்கணித்த நினைவுகளும், பிறரது உடைமைகளை வரி என்ற போர்வையில், கவர்ந்திழுத்த செயல்களும் சக்கேயுவை உறுத்தியிருந்த காரணத்தால் பதுங்கி இருப்பதற்குப் பாதுகாப்பான இடம் வழியருகே நின்ற அத்திமரம் என்பதனை உணர்ந்து இருப்பார். ஆனால் இயேசுவோ பாதுகாப்பு வளையத்தில் இருந்து தன்னை சந்திப்பதற்காக, நேரடி சந்திப்பின் வழியாக மீட்பினை வழங்குவதற்காக அழைத்து உண்மையான மகிழ்வை வழங்குகிறார். வருட நிறைவிலும் துவக்கத்திலும் மட்டும் வந்து ஆண்டவரை வழிபடுகிறவர்கள் பாதுகாப்பான வளையத்தில் இருந்து கொண்டு இயேசுவை பார்வையிடுகின்ற சகேயுயவைப் போன்றவர்கள்; பார்வையிடுகின்றவர்களாக மட்டுமல்ல இயேசுவுக்காக வாழ்வதற்குத் தங்களது இயலாமைகளை விட்டுவிட்டு இறங்கி வந்து சந்தித்து ஏற்றுக்கொண்டு மீட்படைவதற்கான வழிதனை நாடுவோம். மீட்படைவதற்கான வாஞ்சை இருந்தும் வாழ்வில் நாம் பிடித்துக் கொண்டிருக்கிற பண்புகளோ பதவிகளோ பணிகளோ, எவையாயினும் அவைகளில் இருந்து இறங்கி வந்து செயல்பட வேண்டும்.

### 3. இறைப்பற்றோடு வாழுங்கள்

“அவர் அவர்களைத்தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினார். கடவுள்மீது நம்பிக்கை கொண்டதால் தம் வீட்டார் அனைவரோடும் சேர்ந்து அவர் பேருவகை அடைந்தார்.” தி.ப. 16: 34

பிலிப்பு நகரில் பவுலும் சீலாவும் குறி சொல்லும் பெண்மணியிடம் குடி கொண்டிருந்த ஆவியைத் துரத்தி விட்டார்கள். இதனால் அவரை அடிமையாக வைத்திருந்தவர்கள் தங்கள் வருவாய்க்கான வாய்ப்புகள் போய்விட்டதால், பவுலையும் சீலாவையும் நகரில் கலகம் விளைவிக்கிறவர்கள் என்று குற்றம் சாட்டி சிறையில் அடைத்தார்கள். நள்ளிரவில் பவுலும் சீலாவும் சிறையில் பாடுகிற போதும் இறைவரிடம் வேண்டுகிறபோதும் சிறையினுடைய அடித்தளமே அதிர்ந்து சிறைக் கதவுகள் திறந்து அனைவரின் விலங்குகளும் கழன்று விழுகின்றன. சிறைக் காவலர் இதைக் கண்டு கைதிகள் தப்பிச்

சென்றார்கள் என்று எண்ணி தற்கொலை செய்து கொள்ள முயலுகின்றார். பவுல் அவரை கூப்பிட்டு நாங்கள் எங்கும் தப்பிச் செல்லவில்லை தீங்கு செய்ய வேண்டாம் என்கிறார். கண்முன்னே நடப்பதை நம்ப முடியாத சிறைக் காவலர் பவுல், சீலா காலில் விழுந்து மீட்படைய என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறார். ஆண்டவராகிய இயேசுவிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் நீயும் உன் வீட்டாரும் மீட்படைவீர்கள் என்று சொல்லுகிறார். சிறைக் காவலரும் அவரது குடும்பமும் கடவுளிடம் நம்பிக்கை கொண்டு பேருவகை அடைந்தனர். சமூகமாக நாம் வாழ்கின்ற போது பலதரப்பு மக்களுடனும் சார்ந்து வாழ வேண்டிய சூழல் உள்ளது. பிறரோடு நமது நட்புறவை நமது செயல்களால் வளர்த்துக் கொள்ளும்போது தான்நம்மை குறித்த நம்பிக்கையும் புரிதலும் பிறருக்கு ஏற்படுகிறது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த பவுலும் சீலாவும் தப்பிப் போவதற்கான தருணங்களும் வாய்ப்புகளும் தங்களுக்குக் கிடைத்த போதும் அதைச் செய்யவில்லை. அதனால் ஓர் உயிர் (சிறைக் காவலர்) காக்கப்படுகிறது. மட்டுமல்ல அவரது முழு குடும்பமும் ஆண்டவராகிய இயேசுவின் அன்புக்குள் திருப்பப்படுகிறது. ஆண்டவரின் வார்த்தை அறிவிக்கப்படுகிறது. காயம் கட்டுகின்ற உணவு பரிமாறுகின்ற, உறவு பரிமாற்றம் நடக்கிறது. திருமுழுக்கு கொடுக்கப்படுகிறது. கடவுள் மீது கொண்ட நம்பிக்கை அவர்களைப் பேருவகை அடையச் செய்தது. இயேசுவின் அன்பை உணர்ந்து பிறர் நம்பிக்கை கொள்ள நாம் காரணி ஆக மாறவேண்டும் என்பதைப் பவுல் சீலாவின் வாழ்வு நமக்கு கற்றுத் தருகிறது. ஜான் பால்மர் தனது கீர்த்தனையில் “சிறை படுத்தினவற்றைச் சிறையாக்கிவிட்ட அதி தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே” என்று கடவுளை அழைப்பார். சிறைப்படுத்தியவர்களையே சிறையாக்குவது சாதாரண காரியம் இல்லை அதனை நற்பண்புகளால் தான் சாத்தியமாக்க முடியும். நம்பிக்கை இழந்து நிற்கிற தருணங்களில் ஆண்டவரே நமதுநம்பிக்கை. தாவீது தன்னுடன் இருந்த வீரர்களால் கல்லெறியப்பட இருந்த தருணத்திலும் கூட தம் கடவுளாகிய ஆண்டவரிடத்தில் வலிமை பெற்றிருந்தார் (1 சாமுவேல் 30: 6) கடவுளுக்குள் நாம் வைக்கிற நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது அந்த நம்பிக்கை நமக்கு மட்டுமல்ல இணைந்து வாழும் நமது சமூகமும் பெற்றுக் கொள்ள நம்பிக்கையூட்டும்படி செயல்படுவோம். புத்தாண்டுக்குள் அடியெடுத்து வைக்கும் போது பேருவகை கொள்ளும்படி ஆண்டவரிடம் வந்திருக்கிறேனா என்பதனை ஆராய்ந்து ஆண்டவரிடம் இணங்கி, இறங்கி, பற்றுறுதியோடு வருவோம் நல்லாசி பெறுவோம்.

அருள்திரு. **R. ஐசக் மெரின் சிங்**

# சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்

# கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்ளுங்கள்

## Learn From Christ

நீதி. 3 : 13-18 மத். 11 : 25-30

“என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்” (மத். 11 : 29 b)

இங்கிலாந்தின் முன்னாள் Lord Chancellor ஆக பணியாற்றிய Henry Peter Brougham கல்வியை பற்றி கூறுகையில்,

“கல்வி ஒரு மனிதனை வழி நடத்த மிகவும் வல்லது. ஆனால் அடக்கியாளுவதற்குக் கடினமானது. ஆட்சி செய்வதற்கு மிகவும் எளிமையானது, ஆனால் அடிமைப்படுத்த இயலாதது என்று உரைக்கிறார்”.

கல்வி என்பது ஒரு மனிதன் தான் அறியாத அறிவை அறிந்துகொள்ள உதவுவதாகும். அறிவு என்பது ஆங்கிலத்தில் (Knowledge) என்று கூறுவர். அறிவு என்பது எட்டாத கனி என்று கருதுவது அல்ல. மாறாக ஒன்றைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வமும் விருப்பமும் கொள்ளுவதே. உதாரணமாக ஒரு புதிய கைபேசியை நாம் வாங்கும்பொழுது அதன் உறையைப் (cover) பிரித்த உடனே முதலாவது ஓர் அட்டவணை (Catalog) ஒன்றை வைத்திருப்பார்கள். அதில் என்னென்ன பொருள் இருக்கின்றன அதனுடைய பயன்பாடுகள் என்ன, அதை எப்படி எல்லாம் பயன்படுத்த வேண்டும், எப்படி பயன்படுத்தக் கூடாது என்பதை அறிவதற்கு அது உதவுகின்றது.

அதைச் சரியாக படித்து அறிந்து கொள்ளுகின்றவர்கள் மட்டுமே அதன் பயன்பாட்டை முழுமையாக அடைய முடியும். அல்லாதவர்கள் அந்த கைபேசியில் தாங்கள் அறிந்த சிலவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும். அது போல் கல்வி என்பது நாம் அறியாததை அறிந்துகொள்ள உதவும் ஒரு வழி முறை ஆகும். இந்த கல்வி அறிவை உலகம்; ஒரு கசப்பு நிறைந்த பாத்திரமாகவும் எட்டாத கனியாகவும் அனைவரும் இதை பெற்றுக்கொள்ள முடியாததாகவும் உருவகப்படுத்தி காட்டுகின்றது. எப்படியெனில் கல்வி அறிவைப் போட்டி நிறைந்ததாகவும் (Who will come first) அதில் முதலில் வருகின்றவர்களுக்கே வெற்றி என்பதை போன்ற தோற்றத்தையும் மற்றவர்கள் வாழ்வில் இழப்பைச் சந்தித்து விடுவார்கள் என்ற பயத்தையும் (பிம்பத்தையும்) உருவாக்கி கல்வி என்கின்ற தித்திப்பான கனியைக் கசப்பான கனியாகவும், அதை எல்லாராலும் பெற்றுவிட இயலாத ஒன்றாக உருமாற்றம் செய்து விளம்பரப்படுத்திவிட்டனர்.

இயேசு கிறிஸ்துவையும் இந்த உலக கல்வி முறை பரீட்சை பார்க்க விட்டு வைக்கவில்லை.

“படிப்பற்ற இவருக்கு இத்துணை அறிவு எப்படி வந்தது? என்று யூதர்கள் வியப்புற்றார்கள்” (யோவான் 7 : 15). காரணம் யூதர்களுடைய நம்பிக்கை என்பது ஒரு கல்விப் பட்டறை மூலமாகவோ தான் அறிவை மற்றவர்கள் பெருக்க முடியும். எனவே தங்களது கல்வி முறை உயர்ந்தது என்று ஒரு பிம்பத்தை ஏற்படுத்தி வைத்திருந்தனர். ஆனால் இயேசுகிறிஸ்துவின் அறிவு அவற்றை பொய்மை என உறுதிபடுத்தியது. அதற்கு அவர்களது சான்றிதழே ஆதாரம் ஆயின.

இயேசு யூதர்களுடைய முறைமைகளின்படி கல்வி பயிலாவிட்டாலும், அவர் இறைவன் வழி அறிவு பெற்றவர் என்பதைத் திருமறையில் யோவான் நற்செய்தியாளர் உறுதிபடுத்துகின்றார் (யோவான் 3 : 1, 2) எனவே தான் பரிசேயரில் ஒருவரான நிக்கதேமு, இயேசுவிடம் வந்து “ரபி நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம்” என்று சான்று பகர்ந்தார். இயேசுவின் நாட்களில் சிறந்த கல்வியாளர்கள் என்று பெயர் பெற்ற வேதபாரகரும், பரிசேயர்களும் இருந்தபோதிலும் இயேசுவின் கல்வி முறைமைக்கு மக்களிடம் சிறந்த வரவேற்பு இருந்தது. எனவே தான் அவருடைய போதனைகளைக் கேட்பதற்கு மக்கள் கூட்டம் அலைமோதியது.

அப்படி என்றால் இயேசு கிறிஸ்துவின் கல்வி முறைமை என்ன என்பதையும், அது உலகக் கல்வி முறைமையில் இருந்து எந்த முறைமையில் வேறுப்பட்டது என்பதையும், அதின் சிறப்பு என்ன என்பதையும் புதிய கல்வி ஆண்டில் பிரவேசிக்கும் மாணவர்களாகிய நாம் (மத். 11 : 25-30) இந்தத் திருமறைப் பகுதியின் நிழலில் தியானிப்போம்.

**1. அறிவை பெறுவதற்கான திறந்த அழைப்பு :** (An open invitation to acquire the knowledge)

“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள்” (மத். 11 : 28).

மத். 11 : 25-இல் இயேசு கிறிஸ்து தமது வேண்டுதலில் ஆண்டவரின் அறிவின் சிறப்பைப் பற்றி கூறும்போது உலகத்தால் அறிவேற்றப்பட்ட அறிஞரும், பெரும் பட்டங்களைப் பெற்ற ஞானிகளும் அறியாத அறிவு முறைமையை குழந்தைகள் அறிந்துகொள்ளும் அளவிற்கு எளிமையான முறையே இறை அறிவு என்பதை வெளிப்படுத்துகின்றார் (The education should be easy).

அறிவை முழுமையாக பெற்றுவிட்டேன் என எவரும் கூற இயலாது. கல்வி அறிவு பெறுவது என்பது சிறார்கள் முதல் பெரியோர் வரை எல்லோருக்கும் திறந்த முறையே. இயேசுவின் அழைப்பு என்னவென்றால் உலகக் கல்வியியல் முறைகளால் சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் என்ற திறந்த அழைப்பை விடுக்கின்றார்.

இங்கு இயேசுகிறிஸ்து ஒரு திறந்த கல்வி முறைமையை அறிமுகம் செய்வதுடன் யார், யார் கற்றுக் கொள்வதற்கு விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் இலவசமாக அறிவைப் பெற்றுகொள்வதற்கான அழைப்பை இங்கு விடுக்கின்றார். இந்த அழைப்பை உறுதிப்படுத்தும் வகையில் அவருடைய போதனைகள் எல்லாம் எல்லா மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் எளிய முறையில் காணப்பட்டது. கல்வி என்பது அறிவு சார்ந்தவர்கள், ஞானிகள் என்று முதல் நிலை இரண்டாம் நிலை என்று தரம் பிரிப்பது அல்ல. மாறாக சமயம், இனம், மொழி, உயர்வு, தாழ்வு என பிரிவுபட்டு பிளவுபட்டு கிடக்கும் சமூகத்தைக் கல்வி அறிவு என்னும் ஒளியின் ஆயுதத்தை ஏற்றி சமூகத்தில் ஒன்றிணைந்து வாழச் செய்வதே. எனவே தான் குழந்தைகள் கூட அறிந்துகொள்வதற்கான எளிதானதாக எடுத்துக்காட்டி அனைவரும் கல்வி அறிவை பெற்றிட அழைக்கின்றார் இயேசு.

**2. அறிவை பெறுவதற்கான வெளிப்படையான வாக்குறுதி** மத். 11 : 29 a
An open promise to acquire the knowledge

இன்று உலகம் கல்வி அறிவைப் பெறுவதற்கான முறைமை என்பது கடினமானது. கல்வி என்பது ஒரு மனிதனுடைய வாழ்வை தரம் உயர்த்துவதாக இருக்க வேண்டியது. ஆனால் இன்று அது மனிதர்களைத் தரம் பிரிக்கின்ற கருவியாக மாற்றப்பட்டுவிட்டது என்பது தான் கசப்பான உண்மை.

ஆனால் இயேசுவின் அழைப்பு முற்றிலும் உலக பார்வையிலிருந்து மாறுப்பட்டது. அவருடைய அழைப்பு என்பது உலகத்தால் பாரம் ஏற்றப்பட்டவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்பதே.

நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுகொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் (மத். 11 : 29 a) யூத சமய வழக்கப்படி கல்வி அறிவைப் போதிக்கிறவர்கள் அதிகாரத்தின் வழி போதித்தார்கள் (மத். 23 : 2, 4) மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மக்களிடம் தங்களது அதிகாரத்தைச் செலுத்தி மோசேயின் சட்டத்தைப் புகட்ட சுமப்பதற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி அவர்கள் தோள்களில் வைத்தார்கள்.

ஆனால் இயேசு தம்மிடம் கற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கும் மக்களுக்கு ஒரு வெளிப்படையான வாக்குறுதியைப் பகிர்ந்துகொள்கிறார். (மத். 11 : 29) நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். என் நுகத்தை ஏற்று என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி திருச்சட்டத்தை இலகுவாக மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் தனது அன்பினாலும் மாதிரியான வாழ்வினாலும் அவர்களுக்குப் போதித்தார். இயேசுவின் பார்வையில் அறிவு என்பது வெளிப்புற மாற்றம் மட்டும் அல்ல மாறாக ஒருவர் அறிவு பெறுவதன் மூலம் தமது அறியாமையாகிய இருள் நீங்கி அவர் காட்டிய நுகமாகிய அவரது பண்பு நலன்களான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பிரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என ஆவியின் கனிகளை ஏற்றுக்கொண்டு தனது வாழ்வில் மாற்றம் பெறுவதோடு தாம் பெற்றுக்கொண்ட அறிவின் மூலம் சமூகத்தில் உள்ள மற்ற மக்களும் மாற்றம் பெறுவதற்கு உதவியாக ஒரு சான்றுள்ள வாழ்வை வெளிப்படுத்த அழைக்கின்றார்.

பின்லாந்து நாடு கல்வி அறிவில் உலகளாவிய நிலையில் தலைசிறந்த நாடு ஆகும். அந்த நாட்டு மக்கள் கூறுகையில் எங்கள் பிள்ளைகள் படிக்கவில்லை ஆனால் அவர்கள் கற்றுக்கொள்கின்றனர் என்று கூறிவிட்டு கல்வி அறிவு ஒருவரின் மனதின் அறியாமையாகிய இருளை அகற்றி அவரை நல்ல சிந்தனைகள் நிறைந்த மனிதராய் மாற்றுகிறது என்கிறார்கள். இயேசுவின் வாக்குறுதியில் கல்வி என்பது

- சுமை அல்ல, அது சுகமானது, வாழ்வியலையும் அறநெறிகளையும் உள்ளடக்கியது.
- அது திறக்க முடியாத பூட்டு அல்ல, வழிமுறையை அறிந்துகொண்டால் எளிதாகத் திறந்து நம்மை விடுதலை செய்யக்கூடியது.
- கடினமான பாதை அல்ல, மாறாக அதை அறிந்துக் கொண்டால் எளிதாகப் பயணிக்கலாம் என்று உறுதியளிக்கிறது.

### 3. **அறிவைப் பெறுவது எதிர்காலத்திற்கான சிறந்த உத்தரவாதம்** (மத். 19 : 29 c) An open Assurance for future by acquiring the knowledge

“அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்”. இயேசுகிறிஸ்துவின் இந்த அழைப்பில் ஒருவன் தனது அறிவைப் பெருக்கும்போது தனது வாழ்வில் எதிர்காலத்திற்கான ஒரு உத்திரவாதத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குகிறது இத்திருமறைப் பகுதி.

உள்ளத்திற்கு இளைப்பாறுதல் என்பது பதட்டமற்ற தெளிவான எதிர்காலம் உருப்பெறுவதால் உள்மனம் மகிழ்ந்திடச் செய்கிறது. இதனால் சமத்துவ சமுதாயம் உருப்பெறுவதுடன் இவ்வுலகம் இறையரசின் முன்சுவையாக மாறும்.

கல்வி அறிவு நமது அறியாமையை அகற்றி, எதிர்காலத்தைக் குறித்து மாபெரும் நம்பிக்கையைத் தரவேண்டும். இன்று உலகம் கல்வி அறிவை குறித்து ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கிவிட்டது. எப்படியெனில் அறிவைப் பெறுவது ஒரு வேலையைப் பெற்றுக்கொள்வதற்கானது என்பது போல் காட்சி ஆக்கப்பட்டுவிட்டது. ஆகவே இன்று மனிதர் குழப்பத்துடனும் தடுமாற்றத்துடனும் அலைகின்றனர்.

கிறிஸ்துவில் மிகவும் அன்புமிக்கவர்களே! கல்வி அறிவு பெற்றுக்கொள்ளுதல் என்பது நம்மை ஓர் இடத்தில் அடைத்து வைத்து அடிமைப்படுத்துவதற்கு அல்ல. மாறாக கல்வி அறிவு நம்மை விடுதலையாக்குகின்றது. யாரும் பயணிக்க இயலாத புது பாதைகளில் நாம் பயணிப்பதற்கும் மற்றவர்களைப் பயணிக்க வைப்பதற்கும் உதவுகின்றது. Thomas Alva Edison என்ற அறிவியல் கண்டுபிடிப்பாளரை உலக கல்வி முறைமை அவரை அறிவற்றவராக உதறி தள்ளியது. ஆனால் அறிவின் மூலம் அவர் புதுமையை உருவாக்கி யாரும் பயணிக்காத பாதையில் துணிவுடன் பயணித்து இருளில் இறைவன் தந்த ஒளியை இந்த உலகிற்கு வெளிச்சமாக்கினார்.

புதிய கல்வி ஆண்டில் பயணிக்க இருக்கும் நாமும் நல்ல ஆசிரியராம் கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்வோம். அவரது வாழ்வாகிய நுகத்தை நம்மில் ஏற்றுகொண்டு கல்வி அறிவைப் பெற்று நாம் விடுதலை பெறுவது மட்டுமல்லாமல் மற்றவர்களும் விடுதலை அடைய திருச்சபையிலும் கல்விச் சாலைகளிலும் சமூகத்திலும் குடும்பத்திலும் ஒரு சான்றுள்ள வாழ்வை வாழ நம்மை அவரிடம் கையளிப்போம்.

திரு. **R. ஜிஜின் ராஜ சாமுவேல்**

# வெற்றி அருளும் கடவுள்

யோசுவா 1:1-9

கடவுள் வெற்றிக்கான வழிமுறைகளை திருமறையில் வகுத்துத் தந்துள்ளார். வெற்றியை சொந்தமாக்கிக் கொள்ள இறைத்திட்டத்தை நாம் பின்பற்ற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பு. கடவுள் ஆசி வழங்குகின்ற கடவுள். படைப்பாளராக தமது படைப்புக்கு, குறிப்பாக அவரது மக்களுக்கு சிறப்பானதை வழங்க ஆவல் கொள்கின்றார். அவருடைய மக்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் வெற்றிபெற வேண்டும் என்றும் விரும்புகிறார். கடவுளே தம் மக்களுக்கு வெற்றியைத் தருகிறார்.

"போர் நாளுக்கென்று குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம்; ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே" (நீமொ. 21: 31) என சாலொமொன் ஞானி கூறுகிறார். 1 கொரிந்தியர் 3:6ல், "நான் நட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; கடவுளே விளையச் செய்தார்" என பவுலடியார் கூறுகிறார். எனவே, முயற்சி செய்பவர் மனிதர், வெற்றியைத் தருபவர் கடவுள் என்ற செய்தியை இந்தத் திருமொழிகளிலிருந்துப் பெற்றுக் கொள்கின்றோம்.

யோசுவா முதலாம் அதிகாரத்தின் வரலாற்றுப் பின்னணியத்தின்படி, எகிப்திலிருந்து கானானுக்கு மக்களை வழி நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரான மோசே இறந்துவிட்டச் சூழலில், யோசுவா மக்களை கானானுக்கு வழி நடத்தவேண்டும் என்று கடவுள் எண்ணினார். தியானத்திற்கான திருமறைப் பாடத்தில், கடவுள் இஸ்ரவேலர்களுக்கு வெற்றியை வாக்களித்தாலும், கானானைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற மூன்று முக்கியமான நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றவேண்டும் என்று விரும்பினார். அவைகளை இந்தநாளில் தியானம் செய்யலாம்.

### 1. கடின உழைப்பு

"...இப்பொழுது நீ புறப்பட்டு, யோர்தானைக் கடந்து, இந்த மக்கள் அனைவரோடும் நான் இஸ்ரயேலருக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் செல்" (யோசுவா 1: 2).

யோர்தான் நதியைக் கடக்க மக்களுடன் சேர்ந்து புறப்படும்படி கடவுள் யோசுவாவிடம் கூறுகிறார். "புறப்படுதல்" என்ற சொல்லில் போருக்கான ஆயத்தம் என்ற பொருளும் உள்ளடங்கும். போர் திட்டங்களைத் வகுத்தல், போர் நுட்பங்களைக் கற்றுக் கொள்தல், எதிரியின் உத்திகளை அறிதல் மற்றும்

பலவற்றை இந்த சொல் உள்ளடக்கியுள்ளது. முன்னால் இருக்கும் பணியில் முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்படுவதும் இந்தச் சொல் குறிக்கும் செயலில் அழுத்தம் பெறுகிறது. போரில் வெற்றியடைய தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் உண்மையுடனும், கருத்துடனும் பயன்படுத்தவேண்டும். புதியவற்றைக் கற்றுக்கொள்வதிலும், முன்பு கற்றுக்கொண்டதை மீண்டும் கற்றுக்கொள்வதிலும் முழு முனைப்புடன் செயல்படுதல் இன்றியமையாதது. "புறப்படுதலை" குறிக்கின்ற இந்த செயல்பாடுகள் எல்லாம் கடினமான உழைப்புடன் தொடர்புடையவையாகும். வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால், கடினமாக உழைக்க வேண்டும். கடினமாக உழைப்போருக்கும் பணியில் முழுமையான அர்ப்பணிப்புடன் இருப்போருக்குமே கடவுள் ஆசிவழங்குவார்.

## 2. கருத்தான நம்பிக்கை

"உன்னைக் கை நெகிழமாட்டேன்; கை விடவும் மாட்டேன்" (யோசு. 1: 5).

யோசுவா 1: 3-5-இல், கடவுளுடைய மக்களை கானானுக்கு அழைத்துச் செல்லும் யோசுவாவுடன் கடவுள் இருப்பதாக வாக்களிக்கிறார். ஐந்தாம் திருவசனத்தில், "உன்னைக் கை நெகிழமாட்டேன்; கை விடவும் மாட்டேன்" என்று கடவுள் கூறுகிறார். கடவுள் அவர்களுக்கு ஒரு பரந்த நிலப்பரப்பைக் கொடுப்பதாகவும் வாக்களிக்கிறார். இப்போது, யோசுவா கடவுளின் வாக்குறுதியை நம்ப வேண்டும்.

எபிரேயர் திருமுகத்தின் ஆசிரியர் நம்பிக்கையை அழகுற வரையறை செய்கின்றார். "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை" (எபி. 11: 1) என்பதே அந்த வரையறை.

இந்த உறுதியான நம்பிக்கையை ஆபிரகாமின் வாழ்வில் காண்கிறோம். ஆபிரகாம் தன் மகன் பலிபீடத்தில் பலியிடப்பட்டாலும், கடவுள் அவனை உயிர்ப்பிக்க வல்லவர் என்று நம்பினார். வெற்றி பெற 'தனக்கும் இஸ்ரவேலர்களுக்கும் கானான் தேசத்தைக் கொடுப்பார்' என்ற கடவுளின் வாக்குறுதியை யோசுவா நம்ப வேண்டும் என கடவுள் எதிர்பார்க்கின்றார். 'நம்பிக்கை' வெற்றிபெற உதவியாக அமைகின்ற "மூன்றாம் கை" எனலாம்.

## 3) கவனமாக பின்பற்றுதல்

" ...எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடிப்பதில் கவனமாயிரு ..." (யோசு. 1: 7).

மோசே வழியாக வழங்கிய அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதில் கவனமாக இருக்குமாறு யோசுவாவிடம் கடவுள் கூறுகிறார். "நீங்கள் வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அதை விட்டுத் திரும்பாதீர்கள்" என்று அவர் கூறுகிறார். வாழ்க்கையில் வெற்றிபெற, நாம் சில கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். 2 திமொத்தேயு 2:5-இல், பவுலடியார் கிறிஸ்தவ வாழ்வை ஓர் விளையாட்டு வீரருடன் ஒப்பிடுகிறார். வெற்றிக் கிரீடத்தைப் பெற, ஒருவர் விதிகளைப் பின்பற்ற வேண்டும். நமது கிறிஸ்தவ வாழ்வு வெற்றியடைய, கடவுள் கொடுத்த வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் வெற்றிபெற, நமக்குக் கொடுக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். விதிகள் அல்லது அறிவுரைகளை மீறுவது தேர்வில் இருந்து நம்மைத் தகுதி நீக்கம் செய்கிறது.

இந்த மூன்று நிபந்தனைகளையும் நாம் பூர்த்தி செய்யும் போது (கடின உழைப்பு, கருத்தான நம்பிக்கை மற்றும் கவனமாக பின்பற்றுதல்) அச்சமடையத் தேவையில்லை. வெற்றி பெறலாம் என உறுதியாக இருக்க முடியும். தியானத்திற்கான திருமறைப்பாடத்தில், கடவுள் யோசுவாவை துணிவுடன் இருக்குமாறு அவ்வப்போது கூறி திட நம்பிக்கை வழங்குகிறார். (யோசு. 1: 6, 7, 9) மேலும் யோசுவாவிடம் தம் உடனிருப்பையும் உறுதிப்படுத்துகிறார். கடவுள் எப்போதும் நம் வாழ்வில் வெற்றியை ஆசியாக வழங்க விரும்புகிறார், வெற்றிபெற சில நிபந்தனைகளை நிறைவேற்றும்படி கேட்கிறார். வெற்றியடைவதற்குத் தேவையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அருளையும் திறனையும் அவர் நமக்குத் தருகிறார்.

நம் கடினமான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் என்று அவர் உறுதியளிக்கிறார். நாம் நம்பிக்கையின்மை மற்றும் திகிலுடன் இருக்கும்போது, நம் பணியை நிறைவேற்றுவதற்கும் வெற்றியைச் சுவைப்பதற்கும் துணிவையம் ஞானத்தையும் தருகிறார். இறைவரின் ஆசியும் அவர் வழங்கும் வெற்றியும் உங்கள் வாழ்வை வளமாக்கட்டும்.

அருள்திரு. அறிவர். **R. எட்வின் ஜெபராஜ்**

# திருப்பணிக் கொடைகளும் பகிர்தலும்

மத். 5: 21 - 26

“ . . . அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள் . . . செலுத்துங்கள்” (மத். 5: 24).

திருப்பணிக் கொடை நாம் கடவுளிடம் கொண்டிருக்கும் அன்பிற்கு அடையாளமாக அமைந்துள்ளது. ஆசி வழங்கி, ஆற்றல்படுத்தி, வழிநடத்தும் கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்காக வழிபடும் இடத்தில் திருப்பணிக்கொடை கொடுப்பது தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவதை திருமறை தெளிவாக கற்றுத் தருகிறது. ஆண்டிற்கு இருமுறை அறுப்புக்கால பண்டிகை என்று ஆசரித்து செலுத்தப்படுகின்ற காணிக்கைகளின் (வி.ப. 23: 16) தொடர்ச்சியாக சங்கப் பண்டிகை திருச்சபைகளில் வருடத்திற்கு இரண்டு முறை ஆசரிக்கப்பட்டு கடவுளுக்கு நன்றிச் செலுத்துகின்ற பேற்றினை மக்களுக்கு திருச்சபைகள் ஏற்படுத்தித் தருகின்றன. காணிக்கை படைத்தலின் போது கடைபிடிக்கவேண்டிய வாழ்வியல் நெறியை இயேசுநாதர் மலைப்பொழிவில் கற்றுத் தருகின்ற நிகழ்வு மத். 5: 21 - 26-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

நம்முடைய திருப்பணிக்கொடைகள் அங்கீகரிக்கப்பட நேரம், திறமைகள் பொருட்கள் மற்றும் ஆற்றல் பகிரப்பட வேண்டும். அதாவது இறை உறவை (Vertical relationship) சரி செய்ய வேண்டும். (ஏசா. 59: 2) உங்கள் தீயச் செயல்களே உங்களுக்கும், உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கி உள்ளன. நீதி, உண்மை, நம்பிக்கை அற்றுப்போன சமூகத்தில் இறை உறவை சரிச் செய்ய வேண்டும். இதற்கு தினத்தியானம், மன்றாட்டு மற்றும் திருப்பணியில் ஈடுபடுதல் அவசியம். சகமனிதர்களிடம் உள்ள உறவை (Horizontal Relationship) திருப்பணிக் கொடைகளைப் பகிர்வதற்கு முன் சரிசெய்ய வேண்டும். சினம் கொள்ளுதல் கூடாது (மத்தேயு 5: 21). சினத்தோடு எழுபவன் நஷ்டத்தோடு உட்காருவான். சினம் என்ற அமிலம் வீசப்படும் இடத்தை விட வைத்திருக்கும் கலத்தையே அழித்துவிடும்.

ஆண்டவர் நமக்குத் தந்திருக்கும் வளங்களை அருட்கொடை என்று நினைப்போமானால் நாம் கொடுக்கும் கொடை அன்புக் கொடை அல்லது அன்புப் படையல் எனலாம். இறை உறவை பலப்படுத்தி மனித உறவை சரிசெய்து, ஒப்புரவாகி திருப்பணிக்கொடை படைத்தல் அங்கீகரிக்கப்படும்.

## I. ஏன் திருப்பணிக்கொடை கொடுக்கவேண்டும்

திருப்பணிக்கொடை குறித்து தவறான புரிதலுண்டு. 10 ரூபாய் கொடுத்தால் 1000 ரூபாய் கிடைக்கும் என்ற எண்ணம் மிகவும் தவறானது. இறைவனின் மனதை சாந்திப்படுத்துவதற்கு என்று கொடுப்பது, நம்முடைய பாவத்திற்கு ஈடாக கொடுப்பது, நாம் கொடுத்துத்தான் அவர் வாழ வேண்டுமென்ற நெருக்கடியும் இல்லை, ஆண்டவர் பலியின் கொடையினாலும் திருப்தி அடைகிறவரும் இல்லை. அப்படியானால் ஏன் கொடுக்க வேண்டும்? என்பதை தியானம் செய்யலாம்.

### I.a. இது ஆண்டவரின் கட்டளை

“உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கியதற்கேற்ப ஒவ்வொருவனும் தன்னால் ஆனதை கொண்டு வருவானாக” (இ.ச. 16: 17) “கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையாய் வரலாகாது. உன் கடவுளாகிய கர்த்தர் உனக்கருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக அவனவன் தன்தன் தகுதிக்குத் தக்கதாக காணிக்கை படைக்கவேண்டும்.” இயேசுநாதர் “கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்” என்கிறார் (லூக். 6: 38). நாம் அவரது கற்பனைகளைக் கைக்கொள்வது, அவரில் அன்புகாட்டுவதற்கு அடையாளம்.

### I.b. மீட்கப்பட்டதை நினைவுகூருதல்

பழைய ஏற்பாட்டில் முதற்பலன்களை செலுத்த வருகின்ற பொழுது ஆசாரியன் கூடையை வாங்கி பலிபீடத்தில் வைத்து, ஒவ்வொரு இஸ்ரவேலனும் “என் தகப்பன் சீரியா தேசத்தான்...” என்று சொல்லும் விசுவாச அறிக்கையைச் சொல்லவேண்டும். (இ.ச. 26: 1 - 11) சிலுவையில் வதைக்கப்பட்ட உடலும், வாடிய முகமும், வழிந்தோடிய உதிரமும் கிறிஸ்துவின் அன்புக் கொடையாகிய மீட்பை, நினைவுகூரச் செய்கின்றது. நம்மையே ஆண்டவருக்கென்று படைக்கும் மகிழ்வைப் பெறுகிறோம்.

### I.c. ஒப்படைத்தலுக்கு அடையாளம்

மக்கதோனியா சபையைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, “முதலில் அவர்கள் தங்களைத் தாமே கர்த்தருக்கும்... பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்” என்கிறார் (II கொரி. 8: 5). சகேயுவின் வீட்டிற்கு இயேசு சென்றார், அவன் தன் வாழ்க்கையை இறைவனுக்கு ஒப்படைத்து புது வாழ்விற்குள் வருகிறான். அதற்கு அடையாளமாக “இதோ என் சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். எவனையாவது வஞ்சித்ததுண்டானால் நாலத்தனையாகத் திருப்பிக் கொடுக்கிறேன்” என்கிறார். இங்கு கொடை ஒப்படைத்தலுக்கு அடையாளமாகிறது.

### I.d. நன்றி செலுத்துவதற்கு அடையாளம்

"ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்னத்தை கைமாறு செய்வேன். மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து ஆண்டவரது பெயரைத் தொழுவேன். ஆண்டவருடைய மக்கள் அனைவர் முன்னிலையில் அவருக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்" (தி.பா. 116: 12 - 14) என்பது நன்றியின் அடையாளமாகக் காணிக்கையை முன்னிறுத்துகிறது.

### II. எவ்வளவு கொடுக்கவேண்டும்

ஒரு நாடு இன்னொரு நாட்டை கனம் பண்ணுவதற்கு அந்த நாட்டின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதற்கு அடையாளமாகப் பத்தில் ஒன்றைக் கொடுப்பது வழக்கம். தொ.நூ. 14: 20-ல் மெல்கிசதேக் என்னும் அரசனுக்கு ஆபிரகாம் பத்தில் ஒன்று வழங்கியது இப்பழக்கத்தை உறுதிப்படுத்துகிறது. தொ.நூ. 28: 20-ல் பெத்தேலில் யாக்கோபு கடவுளிடம் பேசுகிற போது, தன்னைக் கர்த்தர் சுகமாய் கொண்டு வந்து சேர்த்தால் பத்தில் ஒன்று வழங்குவேன் என்பது இப்பழக்கத்தை உறுதிப்படுத்துகிறது. தொ.நூ. 28: 20-ல் பெத்தேலில் யாக்கோபு கடவுளிடம் பேசுகிற போது, தன்னைக் கர்த்தர் சுகமாய் கொண்டு வந்து சேர்த்தால் பத்தில் ஒன்று கொடுப்பதாக வாக்களித்தார். லேவியர் 27: 30-33-ல் நிலத்தின் வித்திலும், விருட்சத்தின் கனியிலும், ஆடு மாடுகளிலும் பத்தில் ஒன்று லேவி கோத்திரத்திற்குக் கொடுக்கவேண்டும். ஏனெனில் அவர்களுக்கு சொத்தில் பங்கில்லை, இதுவே அவர்களது சொத்து. இ.ச. 14: 22 - 27-இல், வருடந்தோறும் பத்தில் ஒன்றை ஆலயத்தில் படைக்கவேண்டும். விருந்துண்டு மகிழலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஆமோஸ் 4: 4-ல் நீதி, நியாயம் செய்யாதோர் பத்தில் ஒன்றைப் படைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறார். ஆக நம்மால் இயன்றவரை அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி கொடுக்கவேண்டும். வில்லியம் கோல்கேட் பற்பசை (Colgate) செய்ய ஆரம்பித்தபோது தொய்வை கண்டு கொண்டார். பின்னர் கப்பல் பயணத்தின்போது மாலுமி அவருடைய சோர்வைக் கண்டு ஜெபித்து பத்தில் ஒன்றை இறைவனுக்கு திருப்பணிக்கொடையாக செலுத்துங்கள் என்று ஆலோசனை கூறினார். பின்னர் இவர் பத்தில் ஒன்றை எடுத்து திருப்பணிக்கொடையாக செலுத்த மிகுந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்.

### III எப்படி கொடுக்க வேண்டும்

முகவாடலாய் அல்ல, மனப்பூர்வமாய் கொடுக்கவேண்டும் (வி.ப. 25: 2) என கூறப்பட்டுள்ளது. எருசலேம் தேவாலயம் கட்டப்பட மனப்பூர்வமாய்

மகிழ்ச்சியாய் கொடுத்தார்கள் (I நாளா. 29: 9). ஈகை குணமுள்ளோர் வளம்பட வாழ்வர் (நீதி. 11: 25) ஏழைக்குக் கொடுக்கும்போது மலர்ந்த இதயத்துடன் கொடுக்கவேண்டும் (மத். 6: 1 - 4).

திருப்பணிக்கொடைகள் தியாகத்தின் செயல்பாடாய் அமைந்திட வேண்டும். ஏழைக் கைம்பெண்ணின் தியாகம் தழுவியக் கொடையினைக் குறித்து, “இவரோ தனக்கு பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே ஏன் தன் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்.” (மாற். 12: 44) என தெளிவுப்படுத்தினார் கிறிஸ்து. ஜாண் ஸ்டாட் என்பவர் குறிப்பிடும்போது திருப்பணிக்கொடை என்பது சுயபாராட்டுதலில் அல்ல, சுய தியாகத்தினால் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்கிறார். எனவே தியாகத்தின் வெளிப்பாடாகவும், அன்பின் அடையாளமாகவும், மீட்பை நினைவு கூறுவதாகவும், நன்றி செலுத்துவதற்கு அடையாளமாகவும் திருப்பணிகொடைகள் அமைய வேண்டும். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்.

**அருள்திரு. அறிவர். J. ரசல் ஐசக்**

# பண்டிகை : விடுதலையின் கொண்டாட்டம்

இச. : 14: 22-29 1 கொரி. 10: 14-22; மாற். 7: 11-16

“. . . உன் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் உண்டு மகிழ்வீர்களாக” (இச. 14: 26)

மூங்கில் இறையியலில் (Bamboo Theology) அழகான கதை ஒன்றை வடகிழக்கு மாநிலங்களில் சொல்வார்கள். மரங்களில் அதிகமாக மக்கள் விரும்பும் ஒரு மரம் மூங்கில். ஒவ்வொரு நாளும் அதன் உரிமையாளர் அந்த மூங்கில் மரத்தின் பசுமையை, அழகை, அது அசைந்தாடும்போது, எத்தனை வளைந்தாலும், மீண்டும் நேராக நிற்கும் அழகைப் பார்த்து மகிழ்ச்சியடைவாராம். ஒருநாள் அந்த மரத்தை அவர் வெட்டி இலைகளைக் களைந்து, அதனை இரண்டாகப் பிளந்து, அதனுள் இருந்த மரத்தின் இதயத்தைக் கீழே போட்டார். ஒரு மலையில் சென்ற நீரோடையில், அதன் ஒரு முனையை வைத்து, மறுபக்கத்தை வறண்ட வயல்வெளியில் வைக்கிறார். தண்ணீர் அதன் வழியாகப் பாய்ந்தது. நெற்பயிரிட்டார். பயிர் வளர்ந்தது. பசுமையாகக் காட்சி அளித்தது. அறுவடை செய்தார்கள். அப்போது அந்த மூங்கில் மரத்தைப் பார்க்கிறார். அது உயரமாக வளர்ந்து நிற்கும்போதும் அழகாக இருந்தது. இப்போது, உடைபட்டு கிடக்கும்போது, அதனைவிட அழகாக இருக்கிறது. உடைந்து கிடக்கும்போது பலருக்கு மகிழ்வாழ்வைக் கொண்டு வரும் வாய்க்காலாக மாறிவிட்டது. வாழ்விலும், உடைவிலும் மக்களின் வாழ்வை அழகுபடுத்துவதும் வாழ்வை வளப்படுத்துவதும் இயற்கை. இயற்கையை மையமாகக் கொண்ட அறுப்பின் பண்டிகையை, திருச்சபையாகக் கொண்டாடும்போது, வாழ்வின் சுவையான நிகழ்வுகளும், உடைந்து போன நிகழ்வுகளும் நினைவுக்கு வருகின்றன.

பண்டிகைகளைக் கொண்டாடுங்கள் என்ற செய்தி இணைச்சட்ட நூலில் இஸ்ரயேல் மக்கள், தங்கள் நெடும் பயணத்திலும், தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்பதை, மோசே தன் பேருரைகளில் அழுத்தமாகத் தெரிவித்து முக்கியப்படுத்தப்பட்ட ஒன்று. வாக்களிக்கப்பட்ட, புதிய நாட்டின் அனுபவத்திற்குள் செல்லுமுன், எகிப்தில் பட்ட 400 ஆண்டு பாடுகளையும், 40 ஆண்டு கால பாதைகளையும், விடுதலையளித்த கடவுளையும், நினைத்துக் கூட பார்க்க முடியாத கடவுளின் அன்பையும் நினைத்துப் பார்த்து, பண்டிகைக் கொண்டாடுங்கள் என்கிறார். இதன் அடிப்படையில் மூன்று பண்டிகைகளைக் கொண்டாடினார்கள். பஸ்கா பண்டிகை (Feast of Passover) பார்வோனின்

அடிமைத்தனத்திலிருந்து பெற்ற விடுதலையை நினைவுகூரும் பண்டிகை. கூடாரப்பண்டிகை (Feast of Tabernacle) தற்காலிக கூடாரங்களில் தங்கள் பயணத்தின்போது, வாழ்ந்த நாட்களை நினைவு கூரும் பண்டிகை. அறுப்பின் பண்டிகை (Feast of Harvest) விவசாய சமுதாயமாக மாற்றிய கடவுளையும், அவர்கள் பெற்ற விளைச்சல்களுக்காக, கடவுளுக்கு நன்றி சொல்லும் பண்டிகை. பிந்திய நாட்களில் இது பெந்தேகோஸ்தே பண்டிகையுடன் இணைத்து கொண்டாடப்பட்டது. எனவே சேர்ப்பின் பண்டிகை, பல நூற்றாண்டு வரலாறு பெற்றது. வரலாற்றைத் திரும்பி பார்க்கும் பண்டிகை. அடிமைகளாகத் தாங்கள் செய்த பணியை மாற்றி, தங்கள் உணவைத் தாங்களே உற்பத்தி செய்யும், அதனைத் தாங்களாகவே பயன்படுத்தும், ஒரு பொருளாதார வாழ்வு முறையைத் (Subsistence economy) தந்த கடவுளுக்கு, தங்கள் விளைச்சலின் பகுதியைக் காணிக்கையாகப் படைத்து, கொண்டாடும் பண்டிகை தான் சேர்ப்பின் பண்டிகை. இந்த பண்டிகையை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பதை மோசேயின் வழியாகக் கற்றுக்கொடுக்கிறார்.

**1. உண்மையுடன் கொண்டாடுங்கள்** (Be Faithful) (இச. 14: 22)

கொடுப்பதில் உண்மை. திருமொழி 22-ல் "தசம பாகத்தைப் பிரித்து கொடுத்து கொண்டாடுங்கள்" எனக்கூறப்பட்டுள்ளது. தசம பாகத்தைப் பற்றிய தெளிவு திருச்சபைகளில் இல்லாததால் இன்று இது தனி நபர் திருச்சபைகளின் பணபலத்திற்கு காரணமாக பயன்படுத்தப்படுகிறது. தொநூ. 4: 3-4-ல் காணிக்கை செலுத்தவேண்டும் என்ற புதிய சிந்தனையை அறிமுகப்படுத்தியவர் காயீன் என்று படிக்கிறோம். மெல்கிசெதேக் என்ற பிரதான ஆசாரியனுக்கு, ஆபிரகாம் முதலாவது தசம பாகம் கொடுத்தார் (தொநூ. 14: 22, 23). இச. 14: 23, 26-ல், "கடவுளுக்குப் பயந்து வாழ்வதற்கும், ஆண்டவரின் சமூகத்தில் இணைந்து உண்பதற்கும்" என்று படிக்கிறோம். தசம பாகம், கடவுள் பயத்தின், உடன் மக்களுடன் கொள்ளும் உறவின் வெளிப்பாடு. ஆனால் மன்னர் ஆட்சி காலத்தில், அரசர்களின் அரசு செலவுகளுக்காகவும், ஆசாரியர்களின் ஊதியத்திற்காகவும், தசம பாகம் திணிக்கப்பட்டது (1 சாமு. 8: 15). ஆனால், புதிய ஏற்பாட்டில், தசமபாகம் கட்டாயமாக்கப்படவில்லை. இயேசு சொல்கிறார். நீங்கள் வெந்தயத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்துகிறீர்கள். ஆனால், நீதியையும், இரக்கத்தையும் விட்டு விடுகிறீர்கள் (மத். 23: 23). தசமபாகம், நீதியையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தும் செயல்பாடு. (1 கொரி. 16: 1-2, 2கொரி.8: 1-15). இயேசு கொர்பான் என்ற காணிக்கையைக் கடுமையாகக் கண்டிக்கிறார். மாற்கு7: 11-ல் பெற்றோரை முதிர்வயதில் கவனிக்காமல், ஆலயத்தில் கொர்பான் காணிக்கையைச் செலுத்தினால் போதும் என்ற காணிக்கையை வெறுக்கிறார் இயேசு. தசமபாகம்

கணக்கு பார்த்து கொடுப்பது, ஆனால் இயேசு உங்கள் ஆற்றலுக்கேற்றவாறு கொடுங்கள் என்கிறார். வரி என்ற பெயரில் காணிக்கை கட்டாயமாக்கப்படல் தவிர்க்கப்பட வேண்டும். தசமபாகம் கொடுக்காவிட்டால் சாபம் என்ற செழுமை இறையியல் மக்களிடம் திணிக்கப்படுதலை எதிர்த்து, காணிக்கை தங்கள் பொருளாதார ஆற்றலுக்கு ஏற்ற மனமுவந்து கொடுப்பது, நன்றியுடன் கொடுப்பது அது இரக்கம் சார்ந்த நற்பணிகளுக்குக் கொடுப்பது, என்ற சிந்தனைகள் மக்களிடம் விதைக்கப்பட வேண்டும். கொடுப்பது ஒரு சட்டம் அல்ல, மாறாக ஒரு வாய்ப்பு (Giving is not an obligation; rather it is a privilege). பவுல் சகோதரர்களுக்குக் கொடுப்பதன் அவசியத்தைச் சொல்கிறார். காணிக்கை என்பது, இல்லாதவர்களின் தேவைகளைச் சந்திப்பது ஆகும். கடவுள் மன்னாவை அனுப்பி மக்களைச் சமநிலைப்படுத்தியதைப் போல, காணிக்கை மக்களைச் சமநிலைப்படுத்தும் செயல்பாடு. கட்டாயமாக அல்ல - வெறுப்புடன் அல்ல - மகிழ்ச்சியுடன் - நன்றியுடன் - மனதிருப்தியுடன் கொடுப்பதுதான் காணிக்கை (2 கொரி. 9:7). காணிக்கையினால் கடவுளைப் பிரியப்படுத்தவும் முடியாது - வாங்கவும் முடியாது. கொடுப்பதில் உண்மை, கொடுப்பதில் உற்சாகம் தேவை. காணிக்கை கொடுப்பவர்களிடம் அல்ல, உற்சாகமாய் கொடுக்கிறவர்களிடம் கடவுள் அன்பு செய்கிறார்.

மிசோராம் மாநிலத்தில் பிரஸ்பிட்டீரியன் திருச்சபையில், ஒரு ஆண்டு பிடி அரிசி காணிக்கையின் வருவாய் ஏறத்தாழ ஒன்பது கோடி ரூபாய். பிடி அரிசி காணிக்கை பெண்களின் ஆற்றல் (A handful of rice is women's power). ஒரு காலத்தில் நம் திருச்சபைகளில் இருந்த இந்த பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. வி.ப. 36: 1-7-ல் கூடாரம் அமைக்க மோசே மக்களிடம் கேட்கிறார். மக்கள் அதிகமாக கொடுத்தார்கள். மோசே இதுபோதும் என்று நிறுத்துகிறார். காணிக்கை திருச்சபையில் குவித்து வைக்கப்பட வேண்டிய ஒன்று அல்ல. மலா. 3: 8-11-ல் ஆலயத்தில் ஆகாரம் பரிமாறப்பட தசமபாகம் கொடுங்கள் என்றார். சேர்ப்பின் பண்டிகையில், ஆலய வளாக நுழைவாயிலை அடைத்து, காசுக்காக உணவை விற்பதைத் தவிர்த்து உணவு வழங்க தசமபாகம் கொடுத்து உண்மையுடன் பண்டிகை கொண்டாட மோசே அறிவுரை தருகிறார்.

**2. நன்றியுடன் கொண்டாடுங்கள்** (Be Thankful) (விப. 14: 26)

பண்டிகை கொண்டாட்டத்தின் முக்கியமான பகுதி நன்றி செலுத்துதல். யூத பண்டிகைகளில், சேர்ப்பின் பண்டிகை மிக மகிழ்ச்சியானது "ஆண்டவரின் திருமுன் நீயும் உன் குடும்பத்தாரும் உன் இருப்பிடங்களில் இருக்கிற லேவியனும் உண்டு மகிழ்ச்சியடைவீர்களாக" (வ.26). பண்டிகை கொண்டாட்டம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வது. உணவு பண்டிகையின்

சிறப்பு பகுதி (Eating is part of every festival). சேர்ப்பின் பண்டிகை ஒரு குடும்பக் கூடுகை. இயேசுவின் செய்தியில் விருந்து சிறப்பு அழுத்தம் பெறுகிறது. ஐயாயிரம் பேருக்கு மேல் உணவளித்த நிகழ்வு, வழிப்போக்கர்களை அழைத்து உணவு கொடுங்கள் என்றும், இறையரசின் முன் மேற்கிலும், கிழக்கிலும், வடக்கிலும், தெற்கிலுமிருந்து விருந்தில் பங்கு பெறுவார்கள் போன்றவை விருந்து பற்றிய இயேசுவின் போதனைகளைத் தெளிவுபடுத்துகிறது.

இயேசுவும் இப்பண்டிகையைக் கொண்டாடுகிறார். அப்பத்தையும், திராட்சை சாற்றையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, இது ஆண்டவரின் உணவு என்று பகிர்ந்து வழங்குகிறார். ஆண்டவரின் உணவு என் தனி உணவு அல்ல, அது அனைவருக்கும் உரியது. இயேசு திருவிருந்தைக் குடும்ப உணவாக்கினார். குடும்ப உறவுக்கு அடையாளமாக்கினார். எனவே தான் ஆதித்திருச்சபை அந்த ஒரே அப்பம் ஒரே பாத்திரத்தில் பங்குபெறும் நாம் ஒரே குடும்பம் இயேசுவின் குடும்பம் என்று திருவிருந்தை உறவின் சாக்கிரமெந்தாக மாற்றினார்கள் (1 கொரி. 10: 17). திருவிருந்து நன்றி சொல்லும் விருந்து. நன்றி நாவால் சொல்வது அல்ல, அது ஒரு செயல்பாடு, அது ஒரு பகிர்தலின் செயல்பாடு. விளைச்சலை அதிகமாகப் பெற்ற மனிதன் நன்றி வெளிப்பாட்டை விட்டு, குவித்து வைத்து, வாழ்வின் ஆடம்பரங்களைஅனுபவிக்கக் நினைக்கும்போது எச்சரிக்கப்படுகிறான். செல்வக் குவிப்பு, கடவுளுக்கு எதிரான பாவம். அந்த பாவத்தை தீர்க்க, கடவுளுக்குக் கொடுத்து, கடவுளைப் பிரியப்படுத்தும் செயலை, திருச்சபைகளில் பார்க்கிறோம். இதனை கடவுள் வெறுக்கிறார். பகிர்தலின் வழியாக நன்றி செலுத்த, மோசே அறிவுரை தருகிறார்.

### 3. இரக்கத்துடன் கொண்டாடுங்கள் (Be Merciful) (விப. 14: 28, 29)

உண்மையான இரக்கம், தேவையுடன் இருக்கும் மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது ஆகும். ஆதரவற்றவர்கள், கைம்பெண்கள், பரதேசிகள் என்று அலைந்து திரிகிறவர்கள் மேல் இரக்கம்காட்டி கொண்டாடுங்கள் (வ. 28, 29). லூக்கா 14-ம் பிரிவில், நீ விருந்து உண்ணும்போது, ஏழைகள் மாற்றுத்திறனாளிகளுடன் பகிர்ந்து கொடு என்று இயேசு சொல்கிறார். இறைவனின் இறுதி நீதி தீர்ப்பையும், உணவை மையமாகக் கொண்டது. நான் உணவின்றி இருந்தேன், எனக்கு உணவளித்தீர்கள் என்பது, கண்முன் வாழும் ஏழைகளுக்குக் கொடுப்பது இறைவனுக்குக் கொடுப்பதற்கு இணையானது என்பதாகும்.

நாம் இரு பெரிய பிரச்சனைகளைப் பார்க்கிறோம். ஏழைகளாக்கப்பட்ட மக்கள், இயற்கை அழிக்கப்படுவதால் வாழ்வாதாரங்களை இழந்து புலம் பெயர்ந்த மக்கள் போன்ற மக்களுக்கு நேரான இரக்கம் சேர்ப்பின்

பண்டிகையில் உருவாக வேண்டும். இயற்கை அழிக்கப்படுவதற்கு காரணம், மனிதனின் பேராசை. ஏழைகள் உருவாக்கப்படுகிறார்கள். எனவே நம் பற்றுறுதி பசுமையாக்கப்பட வேண்டும். அப்போது நம்பண்டிகைக் கொண்டாட்டங்களில், நெகிழிகளை தவிர்த்து, உணவுப் பொருட்களை பகிர்வதில், பாலித்தீன் பைகளைத் தவிர்க்கும் பற்றுறுதி வெளிப்பாடுகள் உருவாக்கப்படவேண்டும். அப்போதுதான் நம் தலைமுறைகள் இயற்கையுடன் இணைந்த சேர்ப்பின் பண்டிகையைக் கொண்டாடமுடியும்.

இயேசு தம் வாழ்வின் கடினமான சூழலில் பண்டிகை கொண்டாடினார். திருவிருந்தைப் பறிமாறினார். இயேசுவின் பண்டிகை ஒரு வலி நிறைந்த இடமாக இருந்தது. (Eucharistic table was a painful spot). அந்த வலியிலும் சீடர்களின் பாதங்களை இயேசு கழுவி அவர்களுடன் பண்டிகை கொண்டாடி உறவையும், உணவையும் பகிர்ந்து கொடுக்கிறார். Eucharist is God's physical embrace. திருவிருந்து கடவுளின் உடல் அரவணைப்பு. திருவிருந்து காயப்பட்ட திருச்சபையைப் பிரதிபலிக்கிறது. அந்த காயத்திலும் பண்டிகை கொண்டாடப்படுகிறது. Eucharist mirrors the wounded Chruch. The wounded Church celebrates festivals. வறுமை, அநீதிக்கு எதிராகப் போராடிய எல்வாசடார் நாட்டு பேராயர் ஆஸ்கார் ரொமாரோ தன் திருச்சபையில், திருவிருந்து பரிமாறும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது குருதிச்சான்றை பற்றி வில்லியம் கேவனாக் என்பவர், 'Dying for Eucharist' திருவிருந்துக்காக இறத்தல் என்ற நூலில், "திருவிருந்து குருதி சான்றின் மய்யம்; நெருப்பின் முன் வரிசையாக நிற்கும் மக்களை திருவிருந்து உருவாக்குகிறது." (Eucharist is the centre of martyrdom. Eucharist creates a body of people who stand in the line of fire) என்று எழுதுகிறார். பண்டிகைகள் கொண்டாடத்தின் நிறைவோடு நின்று விடக்கூடாது. அது விடுதலையின் கொண்டாட்டங்களாக மாற்றப்படவேண்டும்.

**அருள்திருமதி. அறிவர். ஜவி சிங்**

# நீரே என்னை கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்

திருப்பாடல்கள் : 22: 1-10

"என்னை கருப்பையினின்று வெளிக்கொணர்ந்தவர் நீரே . . ." (22: 9)

2023-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 6-ஆம்நாள்அன்று ஏற்பட்ட பயங்கரமான பூமி அதிர்ச்சியால் துருக்கி நாடு நிலை குலைந்தபோது 'அற்புதக் குழந்தை ஒன்றை' (Miracle Baby) இந்த உலகம் வரவேற்றது. நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணான அஃப்ரா அபு ஹாதியா (Afraa Abu Hadiya) என்பவரும் அவர் கணவரும் குடியிருந்த ஐந்து மாடி கட்டிடம் இடிந்து விழுந்து இறந்துபோனபோது, சுமார் பத்து மணி நேரத்திற்கு பின் இடிபாடுகளுக்கிடையே அவரது தொப்புள்கொடி உடன் இணைந்திருந்த நிலையில் பச்சிளம் பெண் குழந்தை ஒன்று உயிருடன் கண்டெடுக்கப்பட்டது. எல்லோரும் வியந்து போகும் வகையில் அழிவு மற்றும் மரண ஓலங்களுக்கிடையில் தாயின் கருப்பையிலிருந்து எடுக்கப்பட்டு உயிருடன் பிழைத்திருந்ததினால் வாழ்வின் குறியீடாக விளங்கிய இந்த குழந்தைக்கு ''ஆயா' (Aya) என்று பெயரிடப்பட்டது. 'ஆயா' என்பதற்கு அரபி மொழியில் 'கடவுளிடமிருந்து வரும் குறியீடு' (Sign from God) மற்றும் 'அற்புதம்' (Miracle) என்றும் பொருள்படுகிறது. ஆக, இந்த குழந்தையும், அவளின் பெயரும், கடவுள் ஒருவரே மனித பிறப்பிற்கெல்லாம் காரணர் எனவும் புதிதாகப் பிறக்கும் எந்த ஒரு குழந்தையும் கடவுளிடமிருந்து கிடைக்கும் குறியீடு என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகிறது.

மெசியாவின் திருப்பாடல் (Messianic Psalm) என்று அறியப்படுகின்ற 22-ஆம் திருப்பாடலில் 1-10 வரையிலுள்ள வசனங்களில் திருப்பாடலாசிரியர் ஆண்டவராம் கடவுளை நோக்கி துன்ப சூழ்நிலையில் மன்றாடுவதையும், தன்னுடைய பிறப்பு முதற்கொண்டு கடவுளின் உடன்இருப்பை நினைவு கூருவதையும் காண இயலும். குறிப்பாக, 9, 10 ஆகிய வசனங்களில் தன்னைக் கருப்பையினின்று வெளிக்கொணர்ந்த கடவுளே பிறப்பிற்கும், பராமரிப்பிற்கும் காரணர் என்பதைத் தெளிவுப்படுத்துகின்றார்.

## 1. கருப்பையினின்று வெளிக்கொணர்ந்த கடவுள் : பிறப்பிற்கு காரணர்

22-ஆம் திருப்பாடலின் 9-ஆம் வசனத்தில் ". . . என் தாயிடம் பால் குடிக்கையிலேயே என்னைப் பாதுகாத்தவரும் நீரே . .." என்று காணக்கிடக்கும் இரண்டாம் பாகம், முதல் பாகத்தோடிணைந்த திருப்பாடலாசிரியரின் அறிக்கையாக அமையப்பெறுகிறது. எனினும், வேறு சில மொழி பெயர்ப்புகளில்

(Bower) காணப்படுகின்ற இரண்டாம் பாக வாக்கியம் ("என் தாயின் முலைப்பாலை நான் உன்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாய் இருக்கப்பண்ணினீர்") எபிரேய திருமறையின் சொற்களுக்கு ஒத்ததாக இருக்கிறது. பின்புலத்தினடிப்படையில், திருப்பாடலாசிரியரின் இந்த அறிக்கை, இஸ்ரயேல் என்னும் மக்களினம் பிறப்பதற்கு ஆண்டவராகிய கடவுளே காரணர் என்பதையும், தான் மனிதனாகப் பிறப்பதற்கும் அவரே காரணர் என்பதையும், பிறப்பிலிருந்து கடவுளையே அவர் நம்பி இருப்பதையும் சுட்டுகிறது. அஃது, அவர் இயற்கையான செயல்முறையை நம்பவில்லை அல்லது பிறப்பையும் இயற்கையான செயல்முறையாக (Natural Process) அணுகவில்லை, மாறாக பிறப்பிற்கும், உயிர் உருவாக்கத்திற்கும் ஆண்டவராகிய கடவுளே காரணர் என்பதற்கு அழுத்தம் தருகிறார்.

சமீப காலங்களில் தாயின் கருப்பையில் இருக்கும் ஒரு குழந்தை, பெற்றோர் விரும்புகிற வண்ணம் வடிவமைக்கப்படுவதற்கும், திறமையான குழந்தையாக இந்திய (இந்து) பாரம்பரியம் மற்றும் ஆன்மீகத்தில் விளங்குவதற்கு, தற்கால தொழில்நுட்பத்தின் வாயிலாய் ஒலிக்குறிப்புகள் (Subliminal Audio Affirmations), படக்காட்சிகள் (Visuals) , இசை (Music) போன்றவற்றைக் கொண்டு அக்குழந்தையின் மரபணுவில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு 'கர்ப் சன்ஸ்கார்' (Garbh Sanskar) என்னும் பெயரில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 'கர்ப் சன்ஸ்கார்' என்னும் இத்திட்டமுறையை வியாபாரமாகக் கொண்டு "தற்செயலாக அல்ல, விரும்புகிறபடி குழந்தை: உங்கள் குழந்தையை வடிவமையுங்கள்" (Baby by choice, not by chance: Design your baby) என்னும் முழக்கத்தோடு மக்களைத் தவறாக வழி நடத்துகின்றது ஒரு கும்பல். மனிதர்களாலேயே தாங்கள் விரும்புகின்ற குழந்தையை வடிவமைக்க முடியுமென்றால் கடவுள் எதற்கு எனும் தான் தோன்றித்தனத்திற்கே ஆபத்தான இப்போக்கு இட்டுச்செல்கிறது. புதிதாய் பிறந்த குழந்தைகளைக் கரங்களில் பெறும்போது இது என் குழந்தை அல்லது இந்த குழந்தை என் பெருமை என்று கூறாமல் திருப்பாடலாசிரியர் ". . . என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாய் இருக்க பண்ணீர்" என்று கூறும் வண்ணமாக நம்முடைய திறமைகளில் அல்ல, ஆண்டவராம் கடவுளையே புதிதாக பிறக்கும் குழந்தைகள் நம்பியிருக்கின்றன என்றும், அவரே அவர்களின் பிறப்பிற்கு காரணம் என்பதையும் உணர்தல் வேண்டும். கலீல் ஜிப்ரான் என்னும் எழுத்தாளர் குழந்தைகள் உலகில் பிறப்பதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார். உங்கள் குழந்தைகள் "உங்கள் பிள்ளை அல்ல . . . அவர்கள் உங்கள் வழியாக வருகிறார்கள் உங்களிலிருந்து அல்ல . . ." ("Your children are not your children . . . They come through you but not

from you . . .) ஆம், இவ்வுலகத்தில் நம்முடைய கைகளில் கிடைக்கப்பெறும் ஒவ்வொரு குழந்தையும் நம்முடையதன்று, அது பிறப்பிற்கு காரணமான கடவுளுடையது.

## 2. கருப்பையினின்று வெளிக்கொணர்ந்த கடவுள் : பராமரிப்பிற்கு காரணர்

9-ஆம் வசனத்தில் வரும் முதல் பாகமான "என்னை கருப்பையினின்று வெளிக்கொணர்ந்தவர் நீரே . . ." என்பதையே 9-ம் வசனம் மையப்படுத்தி நிற்கிறது. எபிரேய திருமறையில், "என்னை வெளிக்கொணர்ந்தவர்" என்பதைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் "கோஹி" (Gohi) என்னும் வினைச்சொல், வேறு எங்குமே பயன்படுத்தப்படவில்லை. இத்தகைய வார்த்தைப் பயன்பாட்டால், திருப்பாடலாசிரியர் தன்னைப் பராமரிப்பதற்கு தன்னைக் கருப்பையினின்று வெளிக்கொணர்ந்த ஆண்டவராகிய கடவுள் ஒருவரே போதுமானவர் என்பதை ஆணித்தரமாக எடுத்தியம்புவதைப் புரிந்துகொள்ளமுடியும். இந்த வினைச்சொல்லின் ஆதாரமாக இருக்கும் "கீயக்" (Giach) என்னும் வேர்ச்சொல், வெளிக்கொணர்தல், வெளியே வருதல், உடைதல் போன்ற அர்த்தங்களைக் கொண்டதாகும். எனினும், 9, 10 போன்ற வசனங்களில் காணக்கிடக்கின்ற தாய்மற்றும் சேயை மையப்படுத்தும் உருவக வார்த்தைகளினால் (கருப்பை, வயிறு, முலைப்பால்) மேற்குறிப்பிட்ட வினைச்சொல் சூழலுக்கேற்ப "பராமரித்தல்" (Nurse) "வளர்த்தல்" (Nurture), "தேற்றுதல்" (Comfort) என்றும் பொருள் தரலாம். ஆகையால் ஒரு குழந்தையைக் கருப்பையினின்று வெளிக்கொணரும் கடவுள், அக்குழந்தையை முழுமையாகப் பராமரிப்பதற்கும், வளர்ப்பதற்கும் தம்மை ஈடுபடுத்துகிறார். தயேயா எர்கான்ட்ராஸ் (Diaea Ergandros) என்னும் ஆஸ்திரேலியா சிலந்திப் பூச்சி Matriphagy' எனும் செயல்பாடு கொண்ட அபூர்வ வகை சிலந்தியாகும். இந்தச் சிலந்தி பொதுவாக தன்னுடைய குஞ்சுகளை ஈன்றெடுத்து ஓரிரு வாரங்களில் அதன் குஞ்சுகளுக்கே இரையாகி இறந்துவிடும் குணம் கொண்டது. தன் குஞ்சுகள் தன்னை உண்டு வளர்வதற்குத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் செயலாகக் கூட இதை நாம் புரிந்து கொள்ளமுடியும். மெசியாவின் திருப்பாடல் என 22-ஆம் திருப்பாடல் அறியப்படுவதால், தம்மையே மனுக்குல வாழ்விற்கென்று பலியாக தந்த இறைமகனார் இயேசு கிறிஸ்துவின் பாராம்பரிப்பையும் இத்திருப்பாடலிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிகிறது. 10-ஆம் வசனத்தில் "கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்ட போதே உமது சார்பில் விழுந்தேன் . . ." ( Bower மொழிபெயர்ப்பு) என திருப்பாடல் ஆசிரியர் அறிக்கை இடுகிறார். 10-ஆம் வசனத்தில் "வெளிப்பட்ட போதே" (I was cast) என்பதைக் குறிப்பதற்கு எபிரேயத்தில் "ஷெலக்தி" (Shelakthi) எனும் வினைச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதன் வேர்ச்சொல்லான "ஷாலக்" (Shalak) வளர்த்தல் (Nourish), வழங்கல் (Provide), போன்ற அர்த்தங்களையும் தருகிறது. ஆகையால், 9-ஆம் வசனத்தில் வரும் "வெளிக்கொணர்ந்த" எனும் வார்த்தை, 10-ஆம் வசனத்தில் வரும் "வெளிப்பட்டபோதே" எனும் வார்த்தையோடு ஒத்துப்போவதையும், கடவுளால் வெளிக்கொணரப்படுதல் என்பது பிறப்பிற்குக் காரணமாய் அமைதல் என்பதோடு மட்டுமல்லாமல், பராமரிப்பு கொடுப்பதையும் மையப்படுத்தி நிற்கிறது என்றும், அதற்கு அவர் காரணராய் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

துருக்கி நாட்டில் கட்டிட இடுபாடுகளுக்கிடையிலிருந்து தன்னுடைய தாயின் கருப்பையினின்று வெளிக்கொணரப்பட்ட ஆயா என்னும் அற்புத பெண் குழந்தையைக் குறித்து ஊடகங்களும், உலக மக்களும் கேள்விப்பட்ட உடனேயே பலரும் அக்குழந்தையைப் பராமரித்து, வளர்க்கும் முகமாக தத்தெடுக்க முந்தினர். ஆம், வெளிக்கொணரப்பட்ட அக்குழந்தை கைவிடப்படவில்லை, மாறாக, வாழ்நாள் முழுமைக்குமான பராமரிப்பிற்கு ஆளானது. இதைப்போன்றே கருப்பையினின்று மனிதர்களை வெளிக்கொணரும் கடவுள், பிறப்பிற்கு மட்டும் காரணர் அல்ல, அவர் பராமரிப்பிற்கும் காரணராகவே இருந்து தாம் உருவாக்கிய தம் மக்களை வாழ்வின் நிறைவுமட்டும் நிறைவாக வழிநடத்தும் கடவுளாக (திபா. 22: 10) இருக்கிறார்.

**திரு. V. ஜோஷ்வா பாக்யநாத்**

# இல்லறம் : இறைவனின் இணைப்பு

தொ.நூ. 2:18-24 மத். 19:1-7

"இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்; இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" (தொ.நூ. 2:24)

திருமணமும் அதன் வாயிலாக உருவாக்கப்படும் குடும்பமும் கடவுள் மனுக்குலத்திற்கு வழங்கிய அருள்கொடையாகும். திருமணத்தின் வழியாக கணவனும் மனைவியும் தங்களுக்கிடையே உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். கடவுள் அதற்கு சாட்சியாக உள்ளார். இந்த உடன்படிக்கையின் மூலமாக குடும்பத்தைக் குறித்த கடவுளின் திருவுளத்தைப் புரிந்துகொள்வதும் அது நிறைவேற செயல்படுவதும் கணவன் மற்றும் மனைவியின் கடமையும் ஒப்படைப்புமாகும். திருமறை திருமணத்தை அனைவரும் உயர்வாக மதிக்க வேண்டும் (எபி. 13 : 4) எனக் கற்றுத் தருகிறது. படைப்பு முதல் கடவுள் ஏற்படுத்திய திருமணத்தையும், குடும்பத்தையும் எவ்வாறு மாண்புமிக்கதாகக் கருதிச்செயல்பட வேண்டும் என்பதை இறை வார்த்தை சார்ந்து தியானிப்போமாக.

## 1. அன்பினால் இணைந்த வாழ்வு

இல்லற வாழ்வின் இணைவையும் நெருக்கத்தையும் "ஒரே உடல்" என்ற உருவகம் வழியாகக் குறிப்பிடுகிறார் (தொ.நூ. 2:24; மத். 19:5) "ஒரே உடல்" என்னும் இந்த ஒன்றிப்புக்கு அன்பே ஆதாரமாக இருக்கவேண்டும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" - திருக்குறள்.

இல்லற வாழ்வுக்கு அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய அன்பு மற்றும் அறம் இவற்றில் அன்புக்கே திருவள்ளுவர் முதலிடம் தருகிறார். ஏனெனில் அன்பு செய்வதை விட சிறந்த அறம் வேறெதுவுமில்லை. இல்லறமாய் இணைந்த வாழ்வுக்கு திருமறை அன்பையே அடித்தளமாக கற்பிக்கின்றது. கணவன் மனைவி இல்லற வாழ்வில் அன்பு செய்து வாழ்வதற்கு ஆண்டவர் அவரது வார்த்தையின் வாயிலாக முன் மாதிரிகளை நமக்கு காட்டுகின்றார். திருத்தூதரான பவுல் எபே, 5:25-ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல கணவர் மனைவி மீது அன்பு செலுத்த வேண்டும். தம்பதியர் ஒருவரையொருவர் தம் சொந்த உடலாகக் கருதி அன்பு செய்யவேண்டும். பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத்

தரித்துக்கொள்வது, உறவுகளில் நெருக்கத்தையும் ஆழத்தையும் அதிகரிக்கும் (கொலோ. 3:14).

கிறிஸ்துவின் அன்பு சீடரான யோவான், அன்பு செய்தலுக்கு ஒரு புதிய பாடத்தை போதிக்கின்றார். அது முந்தி அன்பு செய்தலாகும் (1 யோவான் 4:19) நாம் ஆண்டவரை அன்பு செய்ய மறந்து அவரை விட்டு விலகிப் போனோம். அவர் மறவாமல் தேடி வந்து நம்மை அன்பு செய்தார். அவருடைய அன்பு முந்தி செயல்பட்டது. கணவன் - மனைவி ஒருவருக்கொருவர் அன்பு செய்வதில் முந்திக்கொள்ளவேண்டும்.

### 2. அறம்சார் விழுமியங்களால் உயரும் வாழ்வு

திருமண வாழ்வுக்கு அலங்காரமாகவும் இல்லற வாழ்வை அழகுபடுத்துபவையாகவும் இருக்கவேண்டியவை கிறிஸ்தவத் தகவுகள். (விழுமியங்கள் - Values) ஆகும். திருத்தூதரான பேதுரு தன் முதலாம் திருமுகம் 3:3-4-லில் வெளிப்படையான அலங்காரத்தைக் காட்டிலும் உள்ளத்தில் மறைந்திருக்கும் உயரிய விழுமியங்களே இல்லற வாழ்வில் அழியாத அலங்காரமாய் இருக்கவேண்டும். அதுவே கடவுளின் பார்வையில் விலையுயர்ந்தது என அறிவுரை வழங்குகிறார்.

Walls make a house, Hearts make a Home என்பது ஆங்கில பழமொழியாகும். சுவர்களால் இல்லம் உருவாகிறது; அவ்வாறு இதயங்களில் உருவாகும் இல்லம் உயர்ந்து நிற்பதற்கும் நிலைத்து நிற்பதற்கும் கிறிஸ்தவ விழுமியங்களே ஆதாரமாக உள்ளன. "ஒரு மகிழ்ச்சியான திருமணம் என்பது மன்னிக்கும் குணம் படைத்த நல்லோர் இருவரின் இணைப்பாகும்" என்கிறார் ரூத்பெல் கிரகாம் (A Happy marriage is the union of two good forgivers)

குடும்ப வாழ்வில் அறம் சார்ந்த விழுமியங்கள் வெளிப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியே திருமண வாழ்வை இல்லறம் என அழைக்கின்றனர். எனவே தம்பதியர், அன்பு, மன்னிப்பு, ஒப்புரவு, சகிப்பு ஏற்றுக்கொள்தல், மதித்தல், கீழ்படிதல், செவிகொடுத்தல் போன்ற அறம் சார்ந்த விழுமியங்களால் தங்கள் வாழ்வை அணி செய்ய வேண்டும்.

### 3. ஆண்டவரின் ஆசியால் நிறையும் வாழ்வு

ஆண்டவர் மனுக்குலத்திற்கு குடும்பத்தின் வழியாக ஆசி வழங்குகிறார் என்பதற்குத் திருமணம் ஆதாரமாக உள்ளது. இல்லறத்தின் இன்றியமையாத நோக்கம் இறையாசி பெறுதலாகும். திருமறை திருமண வாழ்வை கனி கொடுத்தலுக்கு ஒப்பிட்டு பேசுகிறது. ஒரு செடி அல்லது மரம் கனி கொடுப்பதற்கு இணைந்த, இசைந்த, அதன் நிலைத்திருக்கின்ற செயல்பாடு

அவசியமாய் உள்ளது. இல்லற வாழ்வில் கனி கொடுப்பதற்கு, தம்பதியர் ஆண்டவரில் இணைந்த நிலைத்திருக்கின்ற தன்மை உடையவர்களாயிருக்க வேண்டும். யோவா. 15:4-இல் "ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்" என்கிறார் இயேசு கிறிஸ்து. தி.பா. 128:3-இல் "உம் இல்லத்தில் உம் துணைவியார் கனி தரும் திராட்சைக் கொடி போல் இருப்பார்; உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போல் உம்மை சூழ்ந்திருப்பர்" என்கிறார் திருப்பாடலாசிரியர். இவற்றிலிருந்து கனி கொடுக்கும் வாழ்வைக் "கடவுள் தரும் ஆசி" என புரிந்துக்கொள்ள முடிகிறது.

இல்லற வாழ்வில் ஆசி பெறுவதற்குத் தம்பதியர் கடவுளுக்கும் அவரது வார்த்தைக்கும் முக்கியத்துவம் தர வேண்டும். இது மிகுதியான கனிகளைக் கொடுப்பதற்கு வழிவகுக்கும் தங்களின் குடும்பத்தின் மீதான கடவுளின் திருவுளத்தை அறிய விழைந்து அத்திருவுளம் நிறைவேற இணைந்து உழைக்கவேண்டும். அப்போது இல்லற வாழ்வு இறையாசியால் நிறையும்.

திருமணமான தம்பதியரை "ஈருடல் ஓருயிர்" என குறிப்பிடுவர். ஆனால், திருமறை, அவர்களை "ஈருயிர் ஒருடல்" என்கிறது. அத்தகைய ஆழமான அர்த்தம் பொதிந்த, ஆன்மிகமான இல்லறத்தைத் திருமணத்தின் வாயிலாகக் கட்டி எழுப்புவோம். அன்பினால் இணைந்தவர்களாய், அறம்சார் விழுமியங்களை வெளிப்படுத்தி ஆண்டவரின் ஆசி பெறுவோம்.

அருள்திரு. D. டேவிஸ் கில்பர்ட்

# உன் இல்லத்தில் நல்வாழ்வு

திபா. 122: 6-9 மத். 7: 24-29

"உன் கோட்டைகளுக்குள் அமைதி . . . நல்வாழ்வு இருப்பதாக" (திபா. 122: 7)

இல்லம் இறைவன் தருகின்ற அருட்கொடைகளில் ஒன்றாகும். நீர், நிலம், காற்று இவைகளை இறைவனின் பேரருளால் இயற்கையின் அருட்கொடைகளாகப் பெற்றுள்ளோம். மேலும் மனித வாழ்வின் அடிப்படையாக உணவு, உடை, உறைவிடம் தேவைப்படுகிறது. இவற்றில் ஒன்று குறைவுபட்டாலும் வாழ்வு முழுமையாகாது. இவை மூன்றும் பெற்றுக் கொண்டாலும் ஆரோக்கியத்தோடும், அமைதியோடும் நம் வாழ்வு அமைந்தால் அதுவே நல்வாழ்வாகும். இந்த நல்வாழ்வை அனைவரும் விரும்புகின்றனர். ஆனால் எல்லாருக்கும் அது அமைவதில்லை. மனுக்குலம் இறைவன் தந்த குடும்ப வாழ்வை தூய்மையாக அமைத்துக் கொள்ளாதது, பிறரோடு அன்பு செய்து வாழாததுமே இதற்கு காரணமாகின்றது. திபா. 127-ல், "இல்லங்களைக் கட்டுகின்றவர் ஆண்டவர்" என்பதைத் திருப்பாடகர் தெளிவுபடுத்துகின்றார். சில இல்லங்களில் "இயேசுவே இவ்வீட்டின் தலைவர்" என்ற வாசகம் அடங்கிய அட்டையைத் தொங்கவிட்டிருப்பர். ஆனால் இயேசுவுக்கு அந்த இல்லங்களில் பெரும்பாலும் இடமில்லை. இல்லங்களில் நல்வாழ்வை பெற்றுக்கொள்வதற்கு நாம் செய்ய வேண்டியதென்ன? என்பதைச் சிந்திப்போம்.

**1. ஆண்டவரில் கட்டுங்கள்** மத். 7: 24-29

ஆண்டவர் இயேசு இல்லங்களைக் கட்டிய 2 விதமான மனிதர்களைக் குறித்து மலைப்பொழிவில் கூறியுள்ளார். ஒருவர் புத்தியுள்ளவர் மற்றவர் புத்தியில்லாதவர், புத்தியுள்ளவரின் இல்லம் கன்மலை மீது கட்டப்படுகிறது. பெரும்வெள்ளம் வந்தாலும் புயல் வீசினாலும் இந்த இல்லம் அசைக்கப்படுவதில்லை. எனவே கன்மலைமீது இல்லம் கட்டப்படவேண்டும். ஆம் கிறிஸ்துவாகிய கன்மலைமீது இல்லம் கட்டப்படும்போது நல்வாழ்வு பெறமுடிகிறது. மாறாக புத்தியில்லாத மனிதன் மணலின் மீது கட்டிய இல்லமோ, மழைக்கோ, புயலுக்கோ நிற்பதில்லை அழிந்து போகிறது. எனவே இல்லங்கள் கிறிஸ்துவாகிய கன்மலை மீது கட்டப்படவேண்டும். அதுவும் கிறிஸ்துவால் கட்டப்படவேண்டும். ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லை எனில் அதை கட்டுவோரின் உழைப்பு வீணாகும் என திபா. 127: 1-ல் படிக்கிறோம்.

இன்று ஆண்டவரில் கட்டப்படவேண்டிய இல்லங்கள் நாள்பார்த்து, சமயம் பார்த்து, வாஸ்து பார்த்து கட்டப்படுகின்றன. ஆகவே தான் மகிழவேண்டிய இல்லங்கள் பண நிறைவுக்காய் துடிக்கின்றன. மன்னித்து வாழவேண்டிய இல்லங்கள் மனிதநேயமற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றன. காரணம், இல்லம் ஆண்டவரில் கட்டப்படாமல் அந்தஸ்தினால் கட்டப்படுகிறது.

**2. அமைதி உருவாகச் செய்யுங்கள்** (திபா. 122: 6-9)

வன்முறைகளும், தீவிரவாத செயல்களும் வளர்ந்து வரும் இன்றைய உலகில் அமைதி வாழ்விற்கான ஏக்கம் ஒரு தொடர் தேடலாகவே உள்ளது. எது அமைதி? அமைதிக்கு எபிரெய மொழியில் 'Shalom' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் பொருள் உடல் நலமும், வளமான வாழ்வும், நீதியும், வளமையும், மானிடர் - இயற்கை இவைகளோடு இறைவன் கொண்டுள்ள நல்லிணக்கமாகும். இது நல்வாழ்வுக்கான அடித்தளமாகும். அமைதிக்கு கிரேக்க மொழியில் "ஐரேனே" - என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. போரில்லாமையே இதன் பொருள். அமைதி என்ற சொல், வாழ்த்துதலாக யூதர்களுடைய பழக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "உன் கோட்டைக்குள் அமைதி நிலவுவதாக! உன் மாளிகைகளில் நல்வாழ்வு இருப்பதாக" என்ற திபா. 127: 7-ன் படி இன்று இல்லங்களில் அமைதி இருக்கின்றதா? அடிதடி சண்டைகள் அல்லவா அடிக்கடி காணமுடிகிறது. குட்டிப் பரலோகமாக இருக்க வேண்டிய இல்லங்கள் இன்று நரகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. காரணம் அமைதி உருவாக்க யாரும் ஆயத்தமாக இல்லை.

ஏசாவும், யாக்கோபும் பகை மறந்து அமைதியின் பாதைக்குத் திரும்பும்போது அதிகாரவேட்கையை அகற்றி ஆயுதங்கள் இல்லாமல் அன்புக்கு அடையாளமாக மந்தைகளும், பரிசுப் பொருட்களுமே பரிமாறப்பட்டன. அவர்களில் அமைதி உருவானது. அமைதியும், நீதியும் நாணயத்தின் இருபக்கங்கள் என J.W. வான்கதே கூறியுள்ளார். எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என மனித குலமானது அலைந்து கொண்டிருக்கும் சூழலில், ஓநாய் போன்று தாக்கும் முரட்டு குணமுடையவர்களும், ஆடு போன்று அமைதியானவர்களும் கூடி வாழும் அமைதி மேசியா தரும் அமைதியாகும் என ஏசாயா இறைவாக்கினர் எசா 11: 6-ல் கூறுகிறார். இந்த அமைதி இல்லங்களில் உருவாகச் செய்யும்போது இல்லங்கள் நல்வாழ்வு பெறும்.

இல்லங்கள் நல்வாழ்வு பெற ஆண்டவரில் கட்டப்பட்ட இல்லங்களாக நம் இல்லங்கள் இருக்கட்டும் துன்பங்கள், பெலவீனங்கள், கவலைகள், கண்ணீர்கள் எது வாழ்வில் வந்தாலும் நாம் ஆண்டவர் பேரில் அசையா நம்பிக்கையோடு நல்வாழ்வு வாழமுடியும். மேலும் இல்லங்கள் அமைதியின் உறைவிடமாக மாற நாம் அமைதியின் கருவிகளாக நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அங்கே தான் நல்வாழ்வு அமைகிறது. அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவார் என இயேசு மலைப்பொழிவில் கூறினார். இல்லங்கள் நல்வாழ்வு பெற நாம் ஆண்டவரில் கட்டப்பட்டு, அமைதி உருவாக்கும் கருவிகளாய், நற்சான்றுகளாய் வாழ்வோம். ஆமென்.

அருள்திரு. **S. சம்பத் ஜெயசிங்**

# ஒப்புரவு மற்றும் ஒன்றிப்பை நோக்கிய திருச்சபை

செக். 8 :14-23 உரோ. 12:1-5
யோவா. 13:31-35

"........வாய்மையையும் நல்லுறவையும் நாடுங்கள்" (செக். 8:19 b).

"என்னை வடிவமைத்த வடுக்கள்" (The scars that have shaped me) என்ற நூலில் வஸித்தா ரிச்னெர் மனித வாழ்வு வடுக்களால் நிரம்பியது (Human life is full of scars) என்று எழுதுகிறார். வடுக்களுக்கு அசாத்திய ஆற்றல் உண்டு. அவை நம் பார்வையை (perspective) நம் பற்றுறுதியை (faith), கடவுளுடன் இணைந்த நம் பயணத்தை மாற்றும் ஆற்றல் பெற்றது. கிறிஸ்தவ ஆலயங்களை அகழ்ந்து பாருங்கள் அங்கு அருள்பணியாளர்களின் கல்லறை இருக்கும் என்பார்கள். திருச்சபை வரலாறு வடுக்களால் நிகழ்ந்தது. வடுக்களைத் தடவிப் பார்த்து ஆண்டவருக்கு நன்றி சொல்வதும், வடுக்களைத் தடயங்களாக மாற்றுவதும் தான் திருச்சபை நமக்குத் தரும் அறைகூவல்.

இறைவாக்கினர் செக்கரியா உண்மையையும் உறவையும் தேடுங்கள் என்று தடயங்களைத் தேட அழைப்பு விடுக்கிறார் செக்கரியா ஒரு இளவயது ஆசாரியன். செக்கரியா என்றால், "யாவே நினைவு கூருகிறார்" என்று பொருள். கி.மு. 6-ம் நூற்றாண்டில் இறைவாக்கு உரைக்கிறார். முதல் 8 பிரிவுகள் கி.மு. 6-ம் நூற்றாண்டிலும், 9 - 14 வரையுள்ள பிரிவுகள் கி.மு. 3-ம் நூற்றாண்டிலும், எழுதப்பட்டது என்று அதன் செய்தியின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான கருத்து. இவரது சமகால இறைவாக்கினரான ஆகாய் சிறையிருப்புக்குப் பின் ஆலயம் கட்ட தீவிரமாக செயல்பட்ட போது செக்கரியாவும் அதற்குத் துணைநின்றார் பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின் கட்டப்பட்ட ஆலயத்தில் ஆகாயையும் செக்கரியாவையும் நினைவு கூர்ந்தார்கள். இவரது மிக முக்கிய நோக்கம், சாலமோனின் காலத்திற்குப் பின் உடைபட்ட வடநாடு தென்நாடு, யூதா - இஸ்ரவேல் குடும்பங்கள் ஒப்புரவு ஒன்றிப்பை நோக்கிய முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதாகும். யூதரும் யூதர் அல்லாதோர் என்று கருதப்பட்ட மக்களும் ஒன்றாக இணைந்து ஆலயத்தில் வழிபட வேண்டும். ஒப்புரவும் ஒன்றிப்பும் ஆலயத்தில் தொடங்க வேண்டும் என்று பிரிந்து கிடந்த இறைமக்களை அழைக்கிறார். 13-ம் திருமொழியிலிருந்து தொடங்குகிறார். "யூதா குடும்பத்தாரே இஸ்ராயேல் குடும்பத்தாரே இப்பொழுதே நான் உங்களை மீட்டருளுவேன், நீங்களும் ஓர் ஆசி மொழியாவீர்கள்; அஞ்சாதீர்கள், உங்கள் கைகள் வலிமை பெறட்டும் அதற்கு அடிப்படையாக வாய்மையும் உறவையும் நாடுங்கள்" என்கின்றார்.

ஒப்புரவும் ஒன்றிப்பும் உருவாக அடிப்படையான 3 செயல்பாடுகளைச் செக்கரியா எழுதுகிறார்.

**1. திரும்பிப் பாருங்கள்** (Retrospection)

இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பல செய்திகள் அவர்களை எகிப்தின் பாடுகளை, வடுக்கள் கண்ணீர் பாடுகள் நிறைந்த வாழ்வை, பசி தாகம் அடிமைத்தன வாழ்வையும் அவைகளினூடே கடவுள் அவர்களை வழிநடத்தி வந்த தடயங்களைத் திரும்பிப் பார்க்கும் அவசியத்தை வலியுறுத்துகிறது. பூர்வ நாட்களை நினை என்ற மோசே விப. 19 : 4, 5-இல் "நான் எகிப்தியருக்குச் செய்ததையும் கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களைச் சுமந்து வந்ததையும்...." திரும்பிப் பாருங்கள் என்கிறார். பாபிலோனின் ஆறுகளின் அருகே அமர்ந்து "வேற்று நாட்டில் இறைபாடல்களை எப்படிப் பாடுவது" என்று அழுது கொண்டிருந்த மக்கள் திரும்பிப் பாருங்கள் என்கிறார். 19: 8-ல் ஒரு காலத்தில் சாபமாய் இருந்ததை நினைவு கூருங்கள் என்கிறார். குமரி மாவட்ட மக்கள் "அடிமை வரலாற்றை" திரும்பிப் பார்த்தல் மிக அவசியம். மகாராசன் வேதமாணிக்கனார் பெற்ற வடுக்களைத் தடவிப் பார்க்கவேண்டும். ரிங்கல் தௌபே, மீட், லீச் அவர்களுடன் இணைந்து பணி செய்த பெண் அருள்பணியாளர்களின் தடயங்களைத் தேடிப் பார்க்க வேண்டும். பேராயர்கள், ஆயர்கள், உபதேசியார்கள், கோயில்பிள்ளைகள், வேதாகமப் பெண்கள், இறை மக்களின் தியாகம், உழைப்பு, கண்ணீர், இரத்தம், காயங்கள் இன்னும் வடுக்களாகச் சான்றுகளாக நிற்கின்றன.

அண்மை கால அரசியல் பிரிவினைகள0ால் எவைகளை இழந்திருக்கிறோம்? யூதா - இஸ்ரவேல் குடும்பங்களாக - இன்னும் பல உடைவுகளாக பிரிந்து கிடக்கிறத் திருச்சபை தடயங்களைத் திரும்பிப் பார்க்க வேண்டும். இன்றைய திருச்சபைகளில் :

சத்தியம் குறைந்து விட்டது - சத்தம் பெருகிவிட்டது; கண்டிப்பு செய்தி இல்லை - கண் துடைப்புச் செய்தி;புது புது யுக்திகள் வருவாய் பெருக்க - பயபக்தி குறைந்துவிட்டது; பொழுது போக்கும் இடமாக - பழுது பார்க்கும் இடமாக இல்லை

ஆலய அருளுரை மேடைகள் நெருப்பில்லாத பலிபீடங்களாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. மக்களுக்காக திருச்சபை உருவாக்கிய கல்வி - சுகாதார நிறுவனங்கள் தடயங்களை விட்டு வெளியே நிற்கின்றன. திரும்பிப் பார்க்கும் போது கடவுள் எவ்வளவு அற்புதமாக நம்மை வழி நடத்தினார் என்று நன்றி சொல்லும் அனுபவமாகவும், தடம் மாறிச் செல்லாமல் தடுக்கும் பாடமாகவும் அமையும்.

திரும்பிப் பார்த்தல் என்பது கடந்த காலத்தை நினைவுபடுத்துதல் அல்ல. Remembering is not just thinking about the past. But staying fresh.

புதியவைகளைச் சிந்திப்பது ஆகும். It is moving forward, எவைகளையெல்லாம் நாம் இழந்திருக்கிறோம் - பிரிவினையினால் நாம் சாதித்தது என்ன என்பதை திரும்பிப் பார்த்து கற்றுக்கொள்வதே திரும்பிப் பார்த்தல். இவ்வாறு திரும்பிப் பார்ப்பது ஒரு ஒப்புரவு ஒன்றிப்பு நோக்கிய பயணத்தில் நமக்கு வழிகாட்டியாக அமையும். திரும்பிப் பாருங்கள்!

**2. திருந்தி வாழுங்கள்** (Introspection)

செக். 8:15 திருமொழி, "அஞ்சாதீர்கள்" என்று தொடங்குகிறது. கடவுள் நன்மை செய்யும் நாள்கள் வருகின்றன. நீங்கள் செய்ய வேண்டியன : உண்மை பேசுங்கள்; - நீதியாக தீர்ப்பு சொல்லுங்கள்; - உறவுக்காக தீர்ப்பு சொல்லுங்கள்; - மனதாலும் தீமை செய்யாதிருங்கள்; - பொய்யாணை இடாதீர்கள்.

அதாவது, வாய்மையையும் நல்லுறவையும் நாடுங்கள். பிரிவு 7:1-7-ல் செக்கரியா இரு உண்மையற்ற செயல்பாடுகளை எழுதுகிறார். ஒன்று, உபவாசம். ஆண்டவரின் அருளைப் பெற உபவாசம் தேவையா? உபவாசம் யாருக்காக. நம் தனிப்பட்ட வாழ்வை விரிவுபடுத்தவும், வசதிகளைப் பெருக்கிக்கொள்ளவும் ஊடகங்களில் விளம்பரப்படுத்திச் செய்வது உபவாசம் அல்ல தனி நல, தன்னல சிந்தனைகள் உண்மையற்றவை, உறவை உருவாக்குவது என செக்கரியா உரைக்கிறார். உபவாசம் உணவற்ற மக்களுக்கானது ஆகும். (Fasting is for the poor) நாம் உபவாசம் என்ற பெயரில் உண்ணாத உணவு, உணவின்றி பட்டினியாக இருக்கும் மக்களிடம் சென்று அவர்கள் பசி தீர்க்கப்படும்போது தான் அது உபவாசமாகிறது. விளம்பர உபவாச ஜெபக் கூடுகைகளில் சிந்தனை மாற்றங்களும், செயல்பாடு மாற்றங்களும் அவசியம். பவுல், 1கொரி. 10: 15-17-இல் "பலர் பசியாக இருக்கும் போது சிலர் உண்டு குடித்து இல்லாதவர்களை அவமானப்படுத்துகிறார்கள்" என்கிறார்.

இரண்டாவது, போலி பக்தி வாழ்வுக்கும் வழிபாட்டுக்கும் இடையே இடைவெளி. போலி ஆன்மிகம் - பரவச ஆன்மிகம் - பகுத்தறிவற்ற ஆன்மிகம். செக்கரியா 7:8-14-இல் கடவுளின் வார்த்தைக்குச் செவி கொடுக்க மறுத்தார்கள் - முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள் - காதுகளைப் பொத்திக் கொண்டார்கள் என்கிறார். என் வார்த்தையைக் கடவுள் கேட்க வேண்டும் என்பது போலி பக்தி. கடவுளின் வார்த்தை உண்மையானது. உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையற்ற தன்மை போலி ஆன்மிக வெளிப்பாடு. நல்லுறவை விரும்பாத தன்மை போலி ஆன்மீக வெளிப்பாடு. போலி ஆன்மிக வாதிகள் தான் இன்று திருச்சபைகளில் - பொறுப்புகளில் உண்மையற்றவர்களாகப் பிரிவினைகளை உருவாக்குகிறவர்களாக இருக்கிறார்கள். வடநாடு என்றும் தென்நாடு என்றும் பிரிந்து வாழும் மக்கள் உங்கள் எல்லைகளைத் தாண்டி வாருங்கள் என்று செக்கரியா உரைக்கிறார்.

வாய்மையும் உறவும் உருவாக திருச்சபை தன்னைத் தற்பரிசோதனை (introspection) செய்தல் தேவை. ஆதி திருச்சபையில் பற்றுறுதி சார்ந்த விவாதங்கள் எழுப்பப்பட்டன. திருச்சபைக்கு உறுதியான பற்றுறுதி கோட்பாடுகள் - பற்றுறுதி அறிக்கைகள் எழுதப்பட்டன. இன்று பதவி, பணம், அதிகாரம், ஆணவம் போன்றவைகளுக்காக வழக்கு மன்றங்களில் தீர்ப்புகள் எழுதப்படுகின்றன. தீர்ப்புகளைத் தக்கவைக்கவும் அவைகளைத் தகர்க்கவும் திருச்சபை மன்றங்கள் கூட்டப்படுகின்றன.

நான் பவுலைச் சார்ந்தவன் - பேதுருவைச் சார்ந்தவன் என்ற பிரிவினை உருவாவதற்குக் காரணம் இறைமக்கள் மட்டும் அல்ல. மாறாக பவுல் பேதுரு போன்ற இறைப்பணியாளர்களும் காரணம். ஆனால் இதனைத் தாண்டிய ஆதித்திருச்சபை அப்போஸ்தல உபதேசம், உறவு, அப்பம் பிடுதல், இறைவேண்டலில் வளர்ந்தது. (திப. 2:42). பெர்காமு திருச்சபையில் (தி.வெ. 2:12-17) ஆதாயத்துக்காக ஆண்டவரின் வார்த்தையை விற்கும் பிலேயாமின் போதனையும், உலக சிற்றின்பங்களுக்காகப் பற்றுறுதியை சமரசம் செய்யலாம் என்ற நிக்கலோயரின் போதனையும் நுழைந்ததைப் போன்று இன்று திருச்சபைகளில் பிலேயாம்களும், நிக்கலோயரும் அழைக்கப்படுவதால் தவறான போதனைகளால் திருச்சபை நிலைமாறி சென்று கொண்டிருக்கிறது. மார்ட்டின் லுத்தர், கடவுள் எங்கெல்லாம் திருச்சபைகளை நிறுவுகிறாரோ அங்கெல்லாம் சாத்தான் சிற்றாலயங்களை நிறுவுகிறான் என்கிறார்.

பவுல் உரோமையருக்கு எழுதும் போது (12:1-5); - “கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள வாழ்வு வாழுங்கள்; - உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் பெறட்டும்; - தன்னைக்குறித்த மட்டுமீறி மதிப்புகொள்வதைத் தவிருங்கள்; - ஒரே உடலாய் வாழுங்கள்” என்கின்றார்.

யோவான், நீங்கள் அன்பு செலுத்துங்கள் (13:31-35) என்கிறார். திருச்சபையில் ஏற்படும் உறவினால் மட்டுமே நாம் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள் என்கிறார். திருச்சபைக்குத் தைரியமான தற்பரிசோதனை அவசியம் (Church should involve into a bold introspection)

**3. திடப்படுங்கள்** (Prospection)

செக்கரியா 8:9 “உங்கள் கைகள் வலிமை பெறட்டும்” என்கிறார். பிரிவினை வலுவின்மையை உருவாக்கும். நல்லுறவு வலிமையை கூட்டும். திருச்சபை சமுதாயங்களின் சமுதாயம் (Church is a Community of Communities) இணைப்பில் தான் வலிமை. (Unity is strength). திருச்சபை மக்களின் அதிகார மய்யம் அல்ல. அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் சமுதாயம் (Church is not to be a prebase for its members, but a community that redistributes power to the communities). திருச்சபையின் வருங்காலம் நம் செயல்பாடுகளில்

தான் இருக்கிறது (Future will not come by wonders and miracles). அற்புதங்களினால் திருச்சபையின் வருங்காலம் அமையாது. வலிமையான எதிர்நோக்கு (தரிசனம்) தேவை. தரிசனத்தின் அடிப்படையில் வலிமையான கரிசனைத் திருப்பணிகள் உருவாக்கப்படவேண்டும். அருள்பணியாளர்களின் பணிகளை நினைவுபடுத்தும் போது நம் அருள்பணி முறைகள் என்ன என்பதைப் பற்றிய தைரியமான திறனாய்வு சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்படவேண்டும். அப்போது திருச்சபை வலிமையான அருள்பணி இயக்கமாக இயங்கும். திருச்சபையின் அருள்பணி (mission of the church) என்பது பழைய வெளிநாட்டு (western) மேற்கத்திய சிந்தனை. திருச்சபையே அருள்பணி (church is the mission) அல்லது அருள்பணித் திருச்சபை (missionary church) என்ற சிந்தனைகள் திருச்சபையின் எதிர்காலத்தை வலிமையாக்கும்.

வாய்மையையும் நல்லுறவையும் திருச்சபையில் பார்க்கும் போது அருள்பணியாளர்களை அனுப்புவதைத் தாண்டிய அருள்பணி முறை உருவாகும். செக்கரியா,

- நீங்கள் ஆசி மொழியாய் மாறுவீர்கள் (8:13)
- பல நகரங்களில் வாழும் மக்கள் கடவுளைத் தேடி நாடி வருவார்கள்.
- கடவுள் உங்களுடன் இருக்கிறார் என்று சான்று பகர்வர்.
- நாங்களும் உங்களுடன் வருகிறோம் என்று கூறுகின்றார்.

அப்போது, திருச்சபையின் வெளியே உள்ளோரும், நம் நல்லுறவில் தங்களை இணைத்துக் கொள்வார்கள். வாழ்வில் கடவுளை உண்மையாக உணர்ந்த, 8000-க்கும் மேலான பாடல்களை எழுதிய, கண் பார்வையற்ற பெண்மணி பேணி கிராஸ்பி (Fanny Grasby) தன் பாடலில் "உடைந்த கம்பிகளை இணைத்து ஒருமுறை கூட அதிரச் செய்வோம்" (Let us vibrate the broken chords once more) "நாம் வாழும் ஒரு வாழ்வை அழகாக்குவோம் அப்போது அது நம் நினைவில் நிற்கும்" என்கிறார். (Live in the moment and make so beautiful that it will be worth remembering ) நம் வருங்கால தலைமுறைகள் நம்மை நினைத்து சபைநாள் விழாக்களைக் கொண்டாடும்.

**அருள்திரு. அறிவர். M. பீட்டர் சிங்**

# உருவாக்கப்படும் மனிதப் பாறைகள்

எசா. 51: 1-8 மத். 16: 13-19

“இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்” (மத். 16: 18)

உலக அளவில் வரலாறு வலுவிழந்து மறையும் இந்நாட்களில் சிந்தனைக்குரிய சிறப்புநாட்களை உருவாக்கி மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, மறுக்கப்பட்ட வரலாறுகளை நினைப்பூட்டுகின்றோம். தென் திருவிதாங்கூர் மண்ணில் கிறிஸ்தவம் உருவானதும், பரிணாமம் பெற்றதும் மறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலங்களில் இத்தகைய சிறப்பு நாட்களை நினைவூட்டி சிந்தனை செய்வது நன்றியுடையவர்களாக நம்மை மாறச் செய்யும்.சபைகள் வேரூன்றி வளர ஏதுவாகும். நமது பேராயம் ரிங்கல்தௌபே வேதமாணிக்கம் அவர்களின் பணிகளை நினைவுகூரும் விதமாக வருடம்தோறும் ஒரு பேராய நற்செய்திக்கூட்டமும், மைலாடி திருச்சபையில் ஒரு நினைவு ஆராதனையும் வைத்து இந்நாளை பாதுகாப்பது சிறப்பு வாய்ந்ததாகும். திருச்சபை அளவிலும் இந்நாள் நினைவு கூரப்பட்டு, தலைமுறைகள் நன்றியுடையவர்களாக வாழ தூண்டுவது வரலாற்றை உயிர்ப்பிப்பதாக அமையும். இந்நாளின் சிந்தனை வாக்கியத்தினை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்படும் மனிதப் பாறைகள் என்னும் தலைப்பில் சிந்தனை செய்வது நன்மை தருவதாக அமையும்.

**1. கடவுளை உருவகப்படுத்தும் பாறைகள்** (1 சாமு. 2: 2)

“நம் கடவுளைப் போன்ற வேறு பாறை இல்லை”

புவியியல் கல்வியில் பாறைகள் மிகவும் முக்கியத்துவமானவை. பாறைகள் 3 வகையாக பிரிக்கப்படுகின்றன. தீப்பாறை, படிவுப்பாறை, உருமாறிய பாறை. தீப்பாறையைப் பயன்படுத்தி கட்டிடங்கள் கட்டலாம்; சாலைகள் அமைக்கலாம்; படிவுப்பாறையை பயன்படுத்தி சுவர் பலகை, கட்டிடப் பணி செய்யலாம். உருக்காலைகளில் இரும்பைச் சுத்திகரிக்கப் பயன்படுத்தலாம். உருமாறிய பாறைகளைக் கொண்டு வைரம், பளிங்குக்கல், கட்டிடம் கட்டும் கற்கள், சிலைகள் போன்றவற்றை உருவாக்கலாம். உயர்ந்த பாறைகள். பலவிதங்களில் மனித வாழ்விற்குப் பயன்தரும் படைப்பாக உள்ளன. (புயலின் வேகத்தை தடுத்தல், மேகத்தை தடுத்து மழையை உருவாக்குதல், பாதுகாப்பான அரண்)

திருமறையில் கடவுள் பாறைக்கு உருவகப்படுத்திக் காண்பிக்கப்படுகிறார். கடவுள் முடிவில்லாதவரும் பாறையுமானவர் என எசாயா கூறுகிறார் (எசா. 26: 4). பாறை எப்படி உறுதியானதும், நிலை

பெயராததும், கெட்டியானதும் வலிமையானதுமாக இருக்கிறதோ அதுபோல கடவுள் தம் மக்களிடையே இருக்கிறார். தப்பியோடும் மனிதனுக்குக் கன்மலை அல்லது பாறை புகலிடமாகவும், அதன் குழுக்கள் எப்படிப் பாதுகாப்பாகவும் இருக்கிறதோ அதுபோல கடவுள் தம் மக்களுக்குப் புகலிடமாகவும், பாதுகாப்புமாக இருக்கிறார் என எரேமியா 48: 28-ல் கூறப்பட்டுள்ளது.

திருவிதாங்கூர் வரலாற்றில் வேதமாணிக்கம், ரிங்கல்தௌபே ஆகிய இருவருக்கும் அரசாலும், உயர் வகுப்பினராலும் அச்சுறுத்தல் ஏற்பட்டபோது மறைந்திருக்க வேண்டியது அவசியமாயிற்று. மலைப்பகுதிகளைத் தான் தெரிந்தெடுத்தனர். அதில் ஒரு மலை தான் இன்றும் இருக்கின்ற மருத்துவாழ் மலை. ஆபத்து நீங்கினபின் மலையினின்று கீழ் இறங்கி பணி செய்தனர். இஸ்ரவேலருக்கு மீட்பினை உறுதியளிப்பதால் இறைவன் இஸ்ரவேலரின் பாறை எனப்படுகின்றார். அவர் வனாந்தர வறட்சியில் தாகம் தீர்க்கும் கன்மலையுமானார். சமீப காலங்களில் அனைவரும் பாடுகின்ற ஒரு பாடல் நினைவில் நிற்கின்றது. "எந்தன் கன்மலையானவரே, என்னை காக்கும் தெய்வம் நீரே" என்று பாடி மகிழ்கின்றோம். அடைக்கலப் பாறையான இயேசுவே என பாடியதும் நினைவு இருக்கிறது. பாறைக்கு உருவகமான ஆண்டவர் இன்றும் கோட்டையாக, அரணாக துருகமாக, தஞ்சமாக நமக்கு பயன்தரும் ஆண்டவராக செயல்படுகிறார். அவரில் அடைக்கலமாவோம், தஞ்சம் பெறுவோம். பாறையாகிய அவரே திருச்சபையின் மூலைக்கல்லும் அஸ்திபாரமுமாய் உள்ளார். அவரில் திருச்சபைகள் நிலைபெறுகின்றன என்ற அடிப்படைத் தன்மையை மறவாதிருப்போம்.

**கடவுள் உருவாக்கும் மனித பாறைகள்** (எசாயா 51: 1)

"நீங்கள் எந்த பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ . . . அதை நோக்குங்கள்."

விளைச்சல் கொடாத பாறை மலட்டுதன்மையின் அடையாளமாகும்.

கடவுள் இஸ்ரவேலரைத் தங்கள் தொடக்க நிலையைத் திரும்பிப்பார்க்க அழைப்பு விடுக்கின்றார். ஒரே ஒரு தம்பதியினரை கடவுள் அழைத்து அவர்களை ஆசீர்வதித்தார். ஒரே தேசமாக உருவாக்கியதை அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். இறைவன் உருவாக்கும் மனிதப் பாறைகளின் வரிசையில் ஆபிரகாம் முதலிடம் பெறுகிறார். விசுவாசிகளே! நீங்கள் எந்த பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்த குழியினின்று தோண்டப்பட்டீர்களோ, அதை நோக்கிப் பாருங்கள் என்கிறார். (எசா. 51: 1) கிறிஸ்துவின் பாடுமரணங்களுக்குப் பின் சிதறுண்டு கிடக்கிற முழு தேசத்தின் மக்களையும் திரும்பக் கூட்டி சேர்க்கும் ஆற்றலுள்ள பாறையாக பேதுருவை சமூகத்திற்கு தம் பணிக்காலத்தில் அறிமுகமாக்கினார். அதற்குத் தடையாக இருந்த பேதுருவின் வலிமையின்மை, விசுவாச குறைவு, மறுதலிப்பு, தீயோனின் தந்திரம் இவை அனைத்தையும் மாற்றி செதுக்க வேண்டியிருந்தது.

(லூக். 22: 31) ஒருமுறை இயேசு பேதுருவிடம் "நீ என்னை யாரென்று சொல்லுகிறாய்" எனக் கேட்ட கேள்வி, நேசிக்கிறாயா எனக் கேட்ட கேள்வி விசுவாசம் ஒளிந்து போகாமல் வேண்டிக் கொண்ட வேண்டுதல் பட்டயத்தை உறையில்போடச் சொன்னது, கால்களை கழுவுதல் அனைத்தும் பேதுருவை உருவாக்கம் செய்கிற காட்சிகளாகும். பேதுரு என்னும் பாறையின்மேல் திருச்சபை கட்டப்பட்டது. திப. 2-ஆம் அதிகாரத்தில் ஒரே செய்தி, சவாலான செய்தி, 3000 பேரை கிறிஸ்துவுக்குள்ளாக வழி நடத்தியது. இந்த வரிசையில் நம் மண்ணில் முன்னோர் சந்தித்த வரிக்கொடுமை, சாதியக் கொடுமை, தீண்டாமை, அரை நிர்வாணம், அடக்குமுறை போன்ற நிலையில் வாழ்ந்த முன்னவர்களை முழு மனிதனாக மாற்றுவதற்கு ஒரு மகாராசனை மனிதப் பாறையாக செதுக்கி வேதமாணிக்கமாக மாற்றியது, ஒரு ரிங்கல்தௌபேயை மேலைநாட்டிலிருந்து அழைத்தது. உறுதியோடு பணிபுரிய வைத்தது. 7 திருச்சபைகளை உருவாக்கியது. இது பாறையைப் போல கெட்டியான, நிலைபெயராத, உறுதியான வேதமாணிக்கம், ரிங்கல்தௌபேயால் கட்டப்பட்ட ஆலயங்கள் ஆகும்.

பஞ்ச காலத்தில் உணவுக்கான வழிகளை மக்களுக்காக உருவாக்குதல், கற்பித்தல், தொழில் கற்பித்தல் அருட்பணிக்கான அதிகாரத்தை வேதமாணிக்கத்திற்கு அளித்தல் ஆகிய இவைகள் அனைத்தும் பாறைமேல் கட்டப்பட்ட சபைக்கான அடையாளங்களாகும்.

இன்று பேதுருவை அழைத்த ஆண்டவர் கிறிஸ்துவுக்காக அவரது அஸ்திபாரத்தின்மேல் சபைகளைக் கட்டும் பணிகளில் நம்மை பயன்படுத்த அழைக்கிறார். பேதுருவின் இறுதி அர்ப்பணம், வேதமாணிக்கம் ரிங்கல்தௌபேயின் இறுதி அர்ப்பணம் போன்று நம்மை அர்ப்பணம் செய்வோம்.

மனித உறுதி மட்டுமல்லாமல் பிரமாணிக்கமுள்ள கடவுளின் அருளால் அப்பாதையில் நாம் உறுதியாக நிலையாக நிற்பதற்கு ஒரு சிறு பங்கு நமக்கு தருகிறார். இப்பங்கை இழந்துவிடாமல் பயன்படும் பாறைகளாக மாறுவோம். வார்த்தைகளால் அல்ல செயல் வடிவமாக்குவோம். இன்று திருமறைப்பள்ளி, பக்தி முயற்சி சங்க தியான முகாம் என்ற பெயரில் சுற்றுலா செல்வதைத் தவிர்த்து, வேதமாணிக்கம், ரிங்கல்தௌபே துவங்கின 7 திருச்சபைகளையும் பார்வையிட்டு அந்தந்த சபையாரிடமிருந்து வரலாற்றைக் கேட்டறிந்து பிஞ்சு உள்ளங்களை குட்டிப்பாறைத் துண்டுகளாக ஏன் மாற்றக்கூடாது. வரலாறு மங்கி அழியாமல் ஏன் அதை உயிருடன் காக்கக்கூடாது. செய்தி மட்டுமல்ல, செய்தி செயல்வடிவமாகட்டும், இறைப்பெயர் மகிமையடையட்டும்.

**அருள்திரு. C. ஞானதாஸ்**

# ஆண்டவருக்கென்று தூயகோயிலாய் வளரும் திருச்சபை

எபேசி: 2 : 19 - 22

“கிறிஸ்துவின் உறவில் கட்டம் முழுவதும் . . . வளர்ச்சி பெறுகிறது” (எபே. 2: 21)

பெந்தேகோஸ்தே நாளில் மேல் வீட்டறையில் குடியிருந்த இயேசுவின் சீடரும் விசுவாசிகளும் தூய ஆவியாரின் பொழிவைப் பெற்ற நிகழ்வுதான் திருச்சபையின் நாள்.

திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். இது கிறிஸ்து தமது தூய இரத்தத்தால் சம்பாதித்தது ஆகும். இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொண்ட மக்கள் உலகம் எங்கும் சென்று சாட்சி பகர்ந்தனர். அந்த அருட்பணியாயாளர்களின் தியாகமான பணியால் நாம் பெற்றது தான் கிறிஸ்துவின் வழியாக வரும் நிறைவான வாழ்வு. இந்த வாழ்வு, திருச்சபை என்ற இயக்கம் மூலமாய் அன்னியரும், பரதேசிகளுமாயிருந்த நமக்கு சிலுவையின் வழியாய் அருளப்பட்டது. அதன் வெளிப்பாடுதான் கன்னியாகுமரிப் பேராயம். இப்பேராயத்தின் வழியாக நாம் பெற்ற அனைத்து விதமான நன்மைகளுக்காக நன்றி சொல்லும் நாள் தான் இந்த நாள். கன்னியாகுமரிப் பேராயம் 1959-ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் நாள் உருவானது. மத். 16:18ன் படி இயேசு கிறிஸ்து பேதுருவிடம் “உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்” என்று கூறுகின்றார்.

1 பேது. 2 : 4, 5, 6 வசனங்களில் “மனிதரால் உதறித் தள்ளப்பட்டதாயினும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உயர்மதிப்புள்ள கல் அதுவே. நீங்களும் உயிருள்ள கற்களாயிருந்து, ஆவிக்குரிய இல்லமாகக் கட்டி எழுப்பப்படுவீர்களாக! இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்களாக! ஏனெனில், இதோ, சீயோனில் நான் ஒரு மூலைக்கல் நாட்டுகிறேன், அது தேர்ந்தெடுக்கப்பட்ட, விலையுயர்ந்த மூலைக்கல்” என்கிறார். இந்த கல்லின் மேல் விசுவாசம் வைத்தால் இடறல் இல்லை, வளருவோம் என்று கூறப்படுகிறது. எபேசியர் நிருபத்தின் அழுத்தமான கருத்து, “கிறிஸ்துவின் சரீரமாகிய கட்டிடம் கட்டுதல்” ஆகும்.

ஆண்டவருக்கென்று தூய கோயிலாய் திருச்சபை வளர எவற்றை நாம் கடை பிடிக்க வேண்டும் என்பதைக் காண்போம்.

**1 ஐக்கியமாய் பயணிக்க வேண்டும்** (ரோமர் :12:5)

எசா: 56 : 7 இன்படி சபை சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு. விசுவாச அறிக்கையில் ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தல திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறோம் என்று அறிக்கையிடுகிறோம். பவுல் எபேசு சபைக்கு எழுதும் போது ( எபே. 4 : 3) ஆவியின் ஒருமையை காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருங்கள் என்று அறிவுறுத்துகின்றார். அப்போஸ்தலனாகிய பவுலை புற இனத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்கும்படி கடவுள் தெரிந்துகொண்டார் என்றும் இதற்கு மற்ற அப்போஸ்தலர்கள் ஐக்கியத்திற்கு அடையாளமாக வலது கை தந்து உற்சாகப்படுத்தினார்கள் (கலா : 2 : 9) என்றும் திருப்பணிக்கு ஐக்கியம் தேவை என்றும் கலாத்தியத் திருச்சபைக்கு எழுதுகின்றார்.

நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம். ஒருவருக்கு ஒருவர் உடலுறுப்புகளாய் இருக்கிறோம் (ரோமர் 12 : 5). அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம். (1கொரி :10:17) ஐக்கியம் இறைபக்தியின் அடையாளமாகக் கூறப்படுகிறது. திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. திருத்தூதர் வழியாகப் பல அருஞ்செயல்களும் அடையாளங்களும் நிகழ்ந்தன (திப. 2 : 42,43). திருச்சபை முழு உலகத்திற்கு சாட்சியாய் இருக்க அழைக்கப்பட்டுள்ளது. அறிஞர் ஒருவர், "மனிதன் மீனைப் போல் நீந்த கற்றுக்கொண்டான். மனிதன் பறவையைப்போல் பறக்கக் கற்றுக்கொண்டன், ஆனால் மனிதன், மனிதனாக வாழ கற்றுக்கொள்ளவில்லை" என்று சுறுகின்றார்.

சமாதானத்தை விரும்புகிறவர்கள் எப்போதும் ஒருமைப்பாட்டுக்குரியவர்களாகவே இருப்பார்கள். ஒரே கடவுள், ஒரே நம்பிக்கை, ஒரே ஆவியானவர் என்ற புரிதல் நமக்கு வேண்டும் யோவான் 17-ல் நமது ஆண்டவரின் ஆசாரிய இறைவேண்டலை பார்கின்றோம். அதில் யாவரும் ஒன்றாக ஒருமைப்பாட்டுடன் இருத்தல் அவசியம் என வேண்டுகிறார். ஒருமைப்பாடு என்பது இறையரசின் தகவு. அதனை நாம் நடைமுறைப்படுத்தும்போது, அது இறையரசை கட்டுகின்ற பணியாக காணப்படும். ஐக்கியமாய் பயணிக்கும் போது திருச்சபை தூய கோயிலாய் வளர முடியும்

**2. தூய்மையாய் வாழ வேண்டும்** (1 தெச : 5 : 23)

கடவுளுடைய எதிர்பார்ப்பு மனிதர் தூய்மையாய் வாழவேண்டுமென்பது ஆகும். (விப. 19: 6). "நான் பரிசுத்தர் ஆகையால்

நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்” (லேவி. 12:45) என்று ஆண்டவர் கூறுகிறார். மெய்யாக நீதியிலும், பரிசுத்தத்திலும் கடவுளுடைய சாயலாக படைக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துகொள்ளுங்கள் என்று பவுல் எபேசு சபைக்கு எழுதுகிறார் (எசே : 4 : 24). தூய்மையைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் *‘HOLINESS’* இதனுடைய அர்த்தம் *‘set apart’* என்பது ஆகும். பிரித்தெடுக்கப்பட்டது என்பது தான் இதன் பொருள். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்டகப்பட்ட நாம் உலகத்திற்கு ஒத்தவேஷம் தரியாமல், கிறிஸ்து தரும் விடுதலையினைப் பெற்று வாழும் போது நமக்கு கிடைக்கும் பலன் தூய்மையாகுதல் ஆகும் (ரோ. 6 : 22). தூய்மையாக வாழும்போது நம் வழியாக திருச்பை வளரும். மத்தேயு 5 ஆம் அதிகாரத்தில், “தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளை காண்பர்” என்றும், இயேசு, “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள், உலகத்திற்கு வெளிச்சமாயிருக்ககிறீர்கள்” என்றும் நம்மைப் பார்த்து கூறுகின்றார். வாழ்விலும் பணியிலும் இதை நாம் அடையாளப்படுத்தும்போது, மெய்யான ஒளியான கிறிஸ்துவிடம் மக்கள் வருவார்கள். சபை வளரும்

**3. பற்றுறுதியில் உறுதி வேண்டும்** (எபே 6- 16 b)

மானிட வாழ்வில் போரட்டம் என்பது பிரிக்க முடியாதது. இப்போராட்டத்தில் வெற்றியுள்ள வாழ்வு வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்வாகும். இயேசு கிறிஸ்து தந்தையின் அருளால் போரட்டங்களை மேற்கொண்டார். எல்லா விதத்திலும் நம்மைப் போல் கிறிஸ்து சோதிக்கப்பட்டார் (எபி. 4 : 15). பவுல் பிலிப்பிய சபைக்கு எழுதும்போது நம்முடைய வாழ்விலேயும் போராட்டம் உண்டு என்று கூறுகிறார் (பிலி. 1 :30). இந்த போராட்டம் நீதிக்கான தீமையை மேற்கொள்ளும் போராட்டமாய் அமைகிறது. இப்போராட்டத்தில் வெற்றி பெற கடவுள் அருளும் எல்லா படைக்கலன்களையும் எடுத்துக் கொண்டு (எபே:6;13) விசுவாசமென்னும் கேடகத்தை பிடித்துக்கொண்டு (எபே. 6: 16) இறைவார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தின் உதவியோடு போராட வேண்டும் (எபே. 6: 16). அப்போராட்டம் வெற்றிக்கு நேராக வழிநடத்துகிறது பவுல் விசுவாச வாழ்வின் உச்சத்தில் “நல்ல போராட்டத்தைப் போராடினேன்.” என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். நாமும் அழைக்கப்பட்ட அழைப்புக்கு உண்மை உள்ளவர்களாயிருந்து ஆண்டவர் எதிர்பார்க்கின்ற வாழ்வு வாழ்ந்து சிறப்பான தகவுவளை பின்பற்றி ஆண்டவருக்கென்று தூய கோயிலாய் வளரும் திருச்சபையைக் கட்டுவோம். நம் திருச்சபைகள் வழியாக இறையரசு விரிவாக்கம் பெறட்டும்.

அருள்திரு. **R. இராஜபால்**

# மேகம் போன்ற சாட்சிகள்

எபிரேயர் 11: 32 - 12 : 2

"எனவே,திரண்டுவரும் மேகம் போல் இத்தனைசாட்சிகள் நம்மைச் சூழ்ந்துநிற்களந்தச் சுமையையும்,நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித்தள்ளிவிட்டு,நமக்குக் குறிப்பிட்டுள்ளபந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக" (எபி. 12: 1)

அனைத்து ஆன்மாக்கள் திருநாளில் நமது அன்புக்குரியவர்களையும் அவர்களின் விசுவாச வாழ்வையும், திருச்சபை வாழ்வில் அவர்கள் கொண்ட பற்றுதியையும் நினைவு கூருகின்றோம். ஆதித்திருச்சபையில் ஏற்பட்ட இவ்வழக்கம் இன்றைக்கும் சில திருச்சபைகளில் பின்பற்றப்படுகின்றது. ஒளியேற்றி, அவர்களது வாழ்வை நினைவுக்கூர்ந்து மன்றாடும் நிகழ்வு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையையும் நமதாண்டவர் இயேசுவின் வழியாக பெறுகிற நித்திய வாழ்வையும் நினைவூட்டி நம்மை மாதிரியாக வாழத் தூண்டுகிறது. கீழ்க்கண்ட மூன்று குறிப்புகளோடு, இந்நாளுக்குரிய சிறப்பினை அறிவோம்.

**1. இழப்பில் எழும் சாட்சி :**

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக். 23: 43) மரணத்திற்குப் பின் ஏறக்குறைய அனைத்து ஆன்மாக்களுமே, நித்திய இளைப்பாறுதலுக்குள் கடந்து செல்லுகின்றனர். அது நித்திய பேரின்ப வீடு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மனித வாழ்வு இயல்பாகவே சார்புடையது (Dependent). ஒருவரையொருவர் சார்ந்து வாழ்கிற தன்மை பிற படைப்புகளுக்கு மாத்திரமல்ல, மனித வாழ்வில் அது மிக முக்கியப்படுத்தப்படுகிறது. இவ்விதமான வாழ்வின் வழியாக மனித வாழ்வில் நிச்சயத்தையும், உறவுகளில் நிலைப்பாட்டையும், வளர்ச்சிகளில் உற்சாகத்தையும் அளிக்கிறது. இதைத்தான் யோவான் 11: 21 -ல் மார்த்தாள் இயேசுவை நோக்கி, "ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான்" இழப்பின் மத்தியில் இயேசுவின் வழியாய் நாம் நம்பிக்கை பெறுகிறோம். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு,"

என்ற இயேசுவின் வார்த்தை நமது இழப்புகளிலும், நம்பிக்கையின்மை போன்ற சூழலிலும் நம்மைத் தேற்றுகிறது. ஆகவே, ஆண்டவர் இயேசுவின் வழியாய் பெறுகிற நம்பிக்கை, நமது இயலாத சூழ்நிலைகளிலிருந்து பெரிதான நம்பிக்கையின் சாட்சியாக வழிகாட்டுகிறது.

### 2. உயிர்த்தெழுந்த ஆண்டவரில் வரும் சாட்சி

“சகோதரசகோதரிகளே! இறந்தோரைப் பற்றிநீங்கள் அறிந்திருக்கவேண்டும் எனநாங்கள் விரும்புகிறோம்; எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்தநிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்துவருவார்.” I தெச. 4: 13, 14.

இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் வழியாகவும் உயிர்த்தெழுதலின் வழியாகவும் பெற்ற உறவை நினைவு கூறவும் இதன் வழியாய் பரிசுத்தமாய் வாழ்ந்த ஆத்துமாக்களின் ஐக்கியம் உண்டென்று அறிக்கையிடுகிற விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் இத்திருநாள் நம்மை அறைகூவி அழைக்கின்றது. இந்த அன்பின் உறவை மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவின் மூலமாக நாம் பெற்றுக்கொள்கிறோம். ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் வழியாய் பெற்ற வாழ்வை நம்மோடு பகிர்ந்தவர்கள் மரித்தாலும் அவரோடு இணைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கிற விசுவாச பற்றுறுதியை இத்திருநாள் நமக்கு கற்றுத் தருகிறது. பவுலடிகளார் கற்றுத் தருகிற வண்ணம் எபேசியர் 3: 18-ன்படி, ஆண்டவரது அன்பின் முழுமை, அகலம், நீளம் மற்றும் உயரம் என சகலத்தையும் அறிந்துகொள்ள கிறிஸ்தவ வாழ்வில் தெளிவான விசுவாசிகள் ஐக்கியம் அடிப்படையானது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

### 3. கிறிஸ்தவ வாழ்வின் சாட்சி

அனைத்து ஆன்மாக்கள் திருநாள், நம்மை கிறிஸ்துவுடன் வாழ அறைகூவி அழைக்கிறது. வெளிப்படுத்தல் 7-ம் அதிகாரம் இவ்வாழ்வை உறுதி செய்கிறதை நாம் காணலாம். “வெள்ளை அங்கிகளை தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்ற கேள்விக்கு, பதிலாக இவர்கள் துன்பத்திலும், நெருக்கத்திலும் இவ்வுலகத்தோடு இணையாமல் கிறிஸ்துவுக்காய் இரத்தம் சிந்தியவர்கள்” என்று குறிப்பிடப்படுகிறது. பரிசுத்த வாழ்வு, இவ்வுலகத்தில் பரமனோடு வாழ்கிற வாழ்வையும், நமது சாட்சியையும் நினைவூட்டி அவருக்குள் எப்பொழுதும் வாழ நம்மை ஏவுகிறது.

இவ்வுலகத்தோடு உடன்படாமல், உன்னதரோடு உடன்படவும் அவரது உடன்படிக்கையில் நிலைத்திருக்கவும் நம்மை அழைக்கின்றது. ஆகவே, நடைமுறை வாழ்வில் உலகோடு வேடந்தரியாமல், உண்மையுள்ள ஆண்டவரிடம் நம்மை ஒப்புக்கொடுத்து பொறுப்புள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை நிறைவேற்றுவோம். அவர் தூயவராய் இருப்பதினால் நாம் தூயவராய் வாழ அழைக்கப்படுகின்றோம்.

நம்பிக்கையின் திருநாளாகிய இந்நாளில் ஆண்டவரது வாழ்விலும் அவரது வார்த்தையிலும் உடன்படுவோம். தூய ஆவியரின் ஆற்றலும், புது நம்பிக்கையும் நம் அனைவரோடும் நிலைத்திருப்பதாக.

அருள்திரு. **C.R. ராஜசெல்வன்**

# கடவுளின் பணிவிடையில் பங்கேற்றல்

## Participating in God's Work

விப. 36: 1-13 திப. 9: 36-43

திபா. 104: 23-25 யோவா. 4: 34-38

"அறுப்பவர் கூலி பெறுகிறார்; நிலைவாழ்வு பெறுதவற்காக மக்களைக் கூட்டி சேர்க்கிறார். இவ்வாறு, விதைப்பவரும், அறுப்பவரும் ஒருமிக்க மகிழ்ச்சியடைகின்றனர்" (யோவா. 4: 36).

1886-ம் ஆண்டு அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு மே 1-ஆம் தியதி 8 மணிநேர வேலைக் கோரிக்கையை முன்வைத்து நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. இப்போராட்டத்தில் அமெரிக்கா முழுவதும் மூன்று லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பங்கேற்றனர். பல ஆயிரம் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இதனைத் தொடர்ந்து மே 3-ஆம் தியதி சிகாகோவில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்ற கண்டனப் போராட்டமும் நடைபெற்றது. இப்போராட்டத்தில் பங்கேற்ற பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இதை ஒருங்கிணைத்த தொழிலாளர் தலைவர்கள் ஏழு பேர் தூக்கிலிடப்பட்டனர். இவர்கள் இறுதி ஊர்வலத்தில் அமெரிக்காவில் ஐந்து லட்சம் பேர் பங்கேற்று பெரும் எழுச்சி உருவானது.

இதனைத் தொடர்ந்து 1889-ஆம் ஆண்டு ஜூலை 14-ஆம் தியதி பாரீசில் நடைபெற்ற உலகத் தொழிலாளர் பாராளுமன்றத்தில், கார்ல் மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் உள்ளிட்ட 18 நாடுகளைச் சார்ந்த 400 பேர் பங்கேற்றனர். இதில் மே 1-ஆம் தியதியை உழைப்பாளர் தினமாகவும் மே தினமாகவும் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இந்தியாவில் 1923-ஆம் ஆண்டில் சென்னையில் முதன்முதலாக உழைப்பாளர் தினம் கொண்டாடப்பட்டது. 8 மணிநேர வேலை, அடிப்படைச் சம்பளம், தொழிலாளர் வைப்பு நிதி, காப்பீடு, பெண்களுக்குப் பணியிடத்தில் கிடைக்கும் உரிமைகள், தொழிலாளர்கள் என இன்று தொழிலாளர் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளுக்கும் இந்த மே தினப் போராட்டமே அடிப்படை.

நிகழ்கால உலகில் நாம் பெறும் வருவாய், அதன் வழி நாம் அனுபவிக்கும் அனைத்து ஆசிகளுக்கும் அடிப்படை, நாம் பெற்றிருக்கும் பணிவிடை. இப்பணிவிடை நம் கல்வி மற்றும் நம் முயற்சியின் வழி நாம்

பெற்றிருக்கிறோம் என்று நாம் நினைத்தாலும், உண்மையில் இப்பணிவிடை கடவுளால் நமக்கு அருளப்பெற்றது ஆகும். ஏனென்றால் அப்பணிவிடை கடவுளால் உருவாக்கப்பட்டது. அதோடு அப்பணிவிடைக்கு நம்மை தெரிவு செய்தவரும் கடவுளே. எனவே,நாம் நமக்கு தரப்பட்டிருக்கும் பணியில் ஈடுபடும்போது, கடவுளின் பணிவிடையில் நாம் பங்கேற்கிறோம். இத்தகைய நிலையில் நம் பணிவிடை எங்ஙனம் அமையவேண்டும் என்பதைத் திருமறை துணையோடு சிந்திப்போம்.

**1. உண்மையான பணிவிடை** (விப. 36: 1-13)

பெட்சலேல், ஒகொலியாப் போன்றவர்கள் கடவுளால் திருஉறைவிட அமைப்புப் பணிக்கென தெரிவு செய்யப்பட்டவர்கள் (விப. 31: 1-11). விப. 36: 1-13-ல் தூயக அமைப்பு பணியனைத்தையும் செய்ய கடவுளிடமிருந்து அறிவுக்கூர்மையும்,தொழில் திறமையும் பெற்றிருந்த இவர்களும் இவர்களோடிருந்த பணியாளர்களும் மோசேயின் மேற்பார்வையில் பணியாற்ற துவங்குகின்றனர். தினமும் காலையில் தூயகப் பணிக்கென மக்கள் படைக்கும் காணிக்கைகள் யாவற்றையும் இவர்கள் மோசே முன்னிலையிலிருந்து எடுத்துச் சென்று, பணிகளை நேர்த்தியாகச் செய்தனர்.

மக்கள் கொண்டு வந்த காணிக்கைகள் தேவைக்கு அதிகமாக இருந்தது. மக்கள் இன்னும் அதிகமானவற்றைக் கொண்டுவர முன்வருவதை அவர்கள் உணர்ந்து, மேலும் காணிக்கைகள் தேவையில்லை என்று மோசே வழியாக அனைத்து இஸ்ராயேல் மக்களுக்கும் அறிவித்தனர்.

இங்கு மக்களின் காணிக்கைகளால் தங்களை வளப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு பெட்சலேல், ஒகொலியாப் மற்றும் அவர்களோடிணைந்த பணியாளர்களுக்கும் கிடைத்தது. அவர்கள், அதிகப்படியானவற்றைத் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கு மாற்றியிருக்க முடியும். ஆனால் அவர்களோ உண்மையான பணியாளர்கள். மக்களை ஏமாற்றித் தங்களுடைய பணிவிடைக்குத் தேவையானதை விட அதிகமாக எடுத்துக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

தேவைக்கு அதிகமாகவே சம்பளம் கிடைத்தும், கையூட்டு என்ற பெயரில் மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் இக்கால பணியாளர்களுக்கு நடுவே, பெட்சலேல், ஒகொலியாப் போன்றவர்கள் உண்மையான பணிவிடைக்குச் சான்றாளர்களாகத் திகழ்கின்றனர். நாமும் உண்மையாய் பணியாற்றி கடவுளின் பணிவிடையில் பங்கேற்க அழைக்கப்படுகின்றோம்.

**2. உதவும் பணிவிடை** (திப. 9: 36-43)

யோப்பா நகரில் வாழ்ந்த தொற்கா என்றும் மறுபெயருடைய தபித்தா என்ற பெண் உயிரோடு எழுப்பப்பட்ட நிகழ்வை திப. 9:36-43 விவரிக்கிறது. இந்த தபித்தா மட்டுமே புதிய ஏற்பாட்டில் 'மத்தேட்ரியா' என்கிற கிரேக்க வார்த்தையினால் குறிக்கப்படுகிறார். 'மத்தேட்ரியா' என்பதற்கு 'பெண் சீடர்' என்று பொருள். தபித்தாவின் வாழ்வு இரண்டு கிரேக்க பதங்களால் விவரிக்கப்படுகிறது. 1. "அகத்தோஸ் எர்கா" - நல்ல பணிவிடைகள்; 2. "எலீமோசுனான்" - ஏழைகளுக்கான தேவைகள். எனவே, தபித்தா, நற்பணி செய்பவராகவும், ஏழைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்பவராகவும் வாழ்ந்தார் என நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

தபித்தாவினுடைய சுயநலமற்ற வாழ்வு இங்கு மெச்சப்படுகிறது. அவள் தனக்காகவும் தன் வாழ்வுக்காகவும் பணி செய்யாது, தன் நலனையும் தன் நேரத்தையும் தன் வளத்தையும் பிறர் நலனுக்காகச் செலவிடுகிறாள். தன்னுடைய உழைப்பு மற்றும் பணி வழியாக பிறருக்கு உதவி செய்கிறாள். அவளுடைய இச்செயல்கள் மரணத்திற்குப் பின் அவளை உயிர்ப்பெற செய்கிறது. தபித்தாவின் வாழ்வு தன்னலமற்று பிறருக்கு உதவி செய்யும் பணிவிடைக்கான நல்ல முன் மாதிரி. நாமும் பிறருக்கு உதவி செய்து கடவுளின் பணிவிடையில் பங்கேற்க அழைக்கப்படுகின்றோம்.

**3. ஊக்கமான பணிவிடை** (யோவா. 4: 34-38)

யோவான் 4: 37, 38-ல் இயேசு ஊக்கமாய் பணி செய்ய தம் சீடர்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். விதைப்பவர் ஒருவர்; அறுவடை செய்பவர் வேறு ஒருவர் என்ற கூற்று, பணி செய்தவர் பணியின் பலனைப் பெறவில்லை என்ற உண்மையை விவரிக்கிறது. இங்கு இயேசு பலனை எதிர்பாராது ஊக்கமாக உழைக்கவேண்டும் என தம் சீடர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துரைக்கின்றார்.

விப. 36: 1-13-ன் பிறபகுதியில், பெட்சலேல் ஒகொலியாப் மற்றும் அவர்களோடிணைந்த பணியாளர்கள் திருஉறைவிடத்தைக் கடவுளின் கட்டளைப்படி சிறப்பாய் செய்து முடிக்கிறார்கள். அவர்கள் தங்களுக்காக மட்டும் உழைக்கவில்லை, அனைத்து இஸ்ராயேல் மக்களுக்காகவும் உழைத்தார்கள். அவர்களின் உழைப்பின் பலனை பெறுவது அனைத்து இஸ்ராயேல் மக்களும் அவர்களின் சந்ததியும் எனினும் அவர்கள் ஊக்கமாய் பணியாற்றினார்கள்.

இன்று ஒரு விவசாயி பயிரிடுவதும், அறுவடை செய்வதும், அவனுக்காகவும் அவன் குடும்பத்திற்காகவும் மட்டுமல்ல, உலகத்திற்கு

உணவு கொடுக்க வேண்டும் என்பதற்காக. இவ்வாறு தன்னலம் துறந்து ஊக்கமாய் பணியாற்றி, கடவுளின் பணிவிடையில் பங்கேற்க அழைக்கப்படுகின்றோம்.

கிறிஸ்துவில் அன்புமிக்கவர்களே, இவ்வுலகத்தின் வளர்ச்சி மக்களின் உழைப்பில்தான் அடித்தளமிடப்பட்டிருக்கிறது. இன்று நாம் காணும் நவீன உலகின் வளர்ச்சி பல மக்களுடைய கடின உழைப்பின் மேல் தான் கட்டப்பட்டுள்ளது. மக்களின் பணிவிடையில் தான் உலகின் தொடர் வளர்ச்சி சார்ந்துள்ளது. எனவே நம் பணிவிடைகள் உண்மையான பணிவிடையாக, உதவும் பணிவிடையாக, ஊக்கமான பணிவிடையாக அமையும்போது கடவுள் விரும்பும் உலகின் வளர்ச்சியில் நாமும் பங்கேற்க இயலும். அத்தகைய நற்பணி செய்யும் ஒரு வாய்ப்பினை கடவுள் நமக்குத் தந்து நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

**திரு. D.S. எபனேசர் சாமுவேல்**

# அருட்பணியில் பங்கேற்பு

2 அரசர்கள் 7: 5-10 கலாத்தியர் 6: 1-6

திருப்பாடல் 47 மத்தேயு 28: 16-20

“ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு, கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்” (கலாத். 6: 2).

தென்னிந்தியத் திருச்சபை குமரிப்பேராயத்தின் அருட்பணி அமைப்புக்களில் ஒன்று தான், 1900-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சுதேஷ மிஷனெறி சங்கம். ஆலயம் இல்லாத இடங்களை அடையாளம் கண்டுப் புதியப் திருப்பணிக்களங்களை அமைத்து, தொடர்ந்து ஆலயம் அமைக்கும் பணியினை நிறைவேற்றி வருகிறது. இதுவரையும் 102 திருச்சபைகளை உருவாக்கி குமரிப் பேராயத்திடம் ஒப்படைத்துள்ளது. பேராயத்தின் ஒழுங்கின்படி ஆண்டுதோறும் மார்ச் மாதத்தின் மூன்றாம் ஞாயிற்றினை சுதேச மிஷன் ஞாயிறாக பேராயர் அவர்களின் அனுமதியுடன் அனுசரித்து வருகின்றது. அன்று பேராயத்தின் திருச்சபைகள் வழங்கும் திருப்பணிக் கொடையானது அருட்பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. H.M.S. ஞாயிறு ஆகிய இன்று “அருட்பணியில் பங்கேற்றல்” (Partnership in Mission) என்ற தலையங்கத்தில் அருளுரை அமைகின்றது.

அருட்பணி (Mission) என்ற கருத்து கிறிஸ்தவர்களால் நன்கு அறியப்பட்ட ஒன்று. “அப்போஸ்தலோ” என்ற கிரேக்கச் சொல் Mission என்ற ஆங்கிலச் சொல்லின் அடிச்சொல்லாக அமைகின்றது. இதற்கு தமிழில் “அனுப்புதல்” என்பது பொருள். இறைப்பணிக்கு யார் நம்மை அனுப்புவது, அனுப்புதலின் நோக்கம், செயல் முறை போன்ற பல பொருட்களை உள்ளடக்கியதாக இவ்வார்த்தை அமைகிறது. “அருட்பணி” என்ற வார்த்தையை பயன்படுத்தும்போது அதன் முழுமைப் பொருளைப் புரிந்து பயன்படுத்துகின்றோமா? உயிர்த்தெழுந்த ஆண்டவர் சீடர்களுக்கு கட்டளை கொடுத்து அனுப்பும்போது நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள் (மத் 28: 29) எனக் குறிப்பிடுகின்றார். தம் ஒரே மகன் மீது நம்பிக்கைக்கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வுப் பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் (யோவான் 3: 16) என்ற நற்செய்தியின் அடிப்படையில் கிறிஸ்துவை உலகம் அறியச் செய்வதே இந்த அருட்பணி சார்ந்த அனுப்புதலின் நோக்கம் எனலாம்.

தலைச் சிறந்த அருட்பணியரான டேவிட் லிவிங்ஸ்டன் அவர்கள், "கடவுளுக்கு ஒரே ஒரு திருமைந்தன்; கடவுள் அவரை அருட்பணியராக்கினார்" என்கிறார் (God had only son and He made the son missionary) இந்த கிறிஸ்துவை நாம் அறிவதும், மற்றவர்கள் அறியச் செய்வதுமே அருட்பணி எனலாம். ஜோகன்னாஸ் நிசான் என்பவர் குறிப்பிடும் போது "திருச்சபையின் அருட்பணி என்பது, அன்பு செலுத்தவும், சேவை புரியவும், அருளுரையாற்றவும் கற்றுக்கொடுக்கவும் குணமளிக்கவும் மற்றும் விடுதலை வழங்கவும் அனுப்பப்படுதல்" என்கின்றார். அதாவது எமில் புரூனர் என்பவர் குறிப்பிடுவதைப் போன்று "நெருப்பானது எரிவதினால் நிலைத்திருப்பதைப் போன்று திருச்சபையும் அதன் அருட்பணியினால் நிலைத்து நிற்கிறது". (Church exists by Mission as fire exists by burning) எனவே திருச்சபை அருட்பணிக்கு முன்னுரிமை தந்து பணிபுரிய வேண்டும்.

சீர்திருத்த செம்மல் மார்ட்டின் லூத்தர் ஒரு முறை கலாத்தியர் நிருபத்தைக் குறித்து "கலாத்தியர் நிருபம் எனது நிருபம். அதனுடன் நான் திருமணம் செய்துள்ளேன். அது எனது கதரின் வான்போரா" என்றார். பவுலடியாரின் இக்கடிதம் குறித்த லூத்தரின் விளக்க உரை சீர்திருத்த திருச்சபை பின்னணியத்தில் மிகவும் முக்கியமானது. பற்றுறுதியினால் மனிதன் ஏற்புடையவனாகின்றான் (Justification by faith) என்ற இறையியல் கருத்தினை இந்நூலின் பிற்பகுதியில் குறிப்பிடுகின்றார். அதன்படி கிறிஸ்துவின் அன்பின் பிரமாணத்தை நிறைவேற்றும்படி நாம் நமது பொறுப்புக்களை உணர்தல் வேண்டும். அருட்பணியில் பங்கேற்கும் அனைவருக்கும் இந்த பவுலடியாரின் சிந்தனை ஓட்டம் ஏற்புடைய ஒன்று.

**1. ஒவ்வொருவரும் அவரவர் சுமையைத் தாங்கி கொள்ளட்டும்**: கலா.6:5

அருட்பணியில் பங்கேற்கிற நாம் அனைவரும் நமக்குக் கொடுக்கப்பட்ட பணி குறித்த பொறுப்புடையவர்களாக காணப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட திருவசனத்தில் குறிப்பிடப்படும் "சுமை" (பாரம்) என்ற வார்த்தையின் அடிச்சொல் "பார்டியான்" என்ற கிரேக்கச் சொல். அதன் பொருள் போருக்குச் செல்லும் வீரன் தனது சுமையை சுமந்து செல்வதைக் குறிக்கும். அது போன்று அருட்பணியில் பங்கேற்கும் நாம் வாழ்வில் சுமக்க வேண்டிய பாரங்கள் உண்டு. அவற்றை ஒப்படைப்புடன் நிறைவேற்றி இறைப்பணியில் பங்கேற்பதுச் சிறப்பு. ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்வு என்பது சமூகத்தில் கிறிஸ்துவின் அன்போடு கூடிய தாக்கத்தை உருவாக்கவேண்டும். கெவின் குரூஸ் என்பவர் குறிப்பிடுவதைப் போன்று "வாழ்வு என்பது பாதிப்பை உருவாக்கவே தவிர வருமானத்தை உருவாக்குவதற்கு அல்ல" (Life is about making an impact not

making an income) என்பதனை உணர்ந்து வாழ்வில், அருட்பணியில் தகவுகளை உருவாக்குவதாய் அமைந்திட வேண்டும்.

அருட்பணியில் பங்கு பெறும் நமக்கு, தந்தையாக தாயாக நம் குடும்பங்களில் பொறுப்பானப் பணிகள் உண்டு. குடும்பத்தில் தந்தையின் பொறுப்பினை ஒருவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். அதாவது, "தந்தை என்பவர் கடலிற்கு மேலாக உயர்ந்து நிற்கும் கலங்கரை விளக்கம் போன்றவர். வாழ்வில் புயல்கள் வந்து நெருக்கும்போது தந்தையிடமிருந்து வரும் வெளிச்சத்தாலேயே கரை சேரும் வழியைக் காணமுடியும்" என்கிறார். மேலும், "ஒவ்வொரு தந்தையும் தங்களது மகன் / மகள் ஒரு நாள் தங்களது ஆலோசனையை அல்ல வாழ்க்கை மாதிரிகளை பின்பற்றுவார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்" என சார்லஸ் கெட்டரிங் என்பவர் குறிப்பிடுவதை எல்லா பெற்றோரும் உணர்ந்து வாழ்வின் சுமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும். அதுபோன்று கூட்டுக் குடும்பமாகிய திருச்சபைக்கும் பொறுப்பான சுமைகள் உண்டு.

கிறிஸ்துவின் அருட்பணிக்காக அனுப்பப்பட்ட திருச்சபை, அதன் அருட்பணியின் பொருளடக்கத்தினை நன்கு புரிந்து அதனை அறிவிக்க வேண்டும். பவுலடியார் குறிப்பிடும்போது நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிப் பறைசாற்றுகிறோம் (I கொரி. 1: 23). என்றும், நான் உங்களிடையே இருந்தபோது மேசியாவாகிய இயேசுவைத் தவிர, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர வேறு எதையும் அறியவேண்டும் என்று நினைக்கவில்லை (I கொரி. 2: 2) என்று குறிப்பிடுவதன் மூலம் கிறிஸ்துவின் சிலுவையும்; அதனால் வெளிப்படும் மீட்பையும் நமது அருட்பணியின் பொருளடக்கமாகத் தொடர்புபடுத்தத் திருச்சபை அழைக்கப்பட்டுள்ளது என்பதனை உணர வேண்டும்.

போப் பிரான்சிஸ் அவர்கள்,

"சிலுவையின்றி நாம் நடக்கும் போது

சிலுவையின்றி நாம் கட்டியெழுப்பும் போது

சிலுவையின்றி கிறிஸ்துவை நாம் அறிவிக்கும்போது

நாம் கிறிஸ்துவின் சீடர்கள் அல்ல, நாம் உலகத்தார்" என ஒரு முறை குறிப்பிட்டார்கள். இக்கூற்றும் அருட்பணியில் சிலுவையின் மையம் முதன்மையானது என நாம் அறிந்துகொள்ள உதவுகின்றது.

**2. பொது துன்பத்தில் ஒருவரை ஒருவர் தாங்கி அருட்பணி பங்கேற்பு :**

"ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்" (கலா. 6: 2).

இப்பகுதியில் "சுமை" என்பதற்குரிய கிரேக்க அடிச்சொல் "பாராஸ்" என்பதாகும். இதற்கு சுமை மற்றும் அசாதாரணமான சுமை (extraordinary burden) என்பது பொருள். அருட்பணியில் பங்கேற்கும் நாம் மானிட வாழ்வில் பொதுத்துன்பங்களிலும் பங்கேற்றுப் பணிபுரிய வேண்டும். அருட்பணியின் நோக்கம் ஆன்ம ஆதாயம் (Winning of the Soul) என்ற பாரம்பரிய கண்ணோட்டத்தை விட்டு அருட்பணி என்பது மக்களின் பாடுகளில், தேவைகளில் ஒன்றுபடுதல் என்ற நிலையில் (Mission as Solidarity) மக்களின் தேவைகளில் ஒன்றுபட்டு பணிபுரிதல் வேண்டும். பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உதவிகளை மறுக்கும் கொர்பான் காணிக்கையை இயேசு குறை கூறினார் (மாற். 7: 11). பெற்றோருடன் ஒன்றுபட்டுப் பணிபுரிய வலியுறுத்தினார்.

கதரேனருடைய நாட்டில் கல்லறைகளில் வாழ்ந்து கொண்டிருந்த லேகியோனுடன் பேசி, உன் பெயர் என்ன? என கேட்டு சிந்திக்கச் செய்து அவனுக்கு வாழ்வு வழங்கினார். (லூக்கா 8: 26-39). அருட்பணியில் எளியோரோடு ஒன்றுபடுவதற்குத் தூண்டுதலாக சிறைப்பட்டோருக்கும், பார்வை இழந்தோருக்குப் பார்வை தரவும் தம் அருட்பணி அறிக்கையை (லூக். 4: 16 - 19) வெளியிட்டு, நன்மை செய்பவராக, பிணியாளர்க்கு மருத்துவர் தேவை என குறிப்பிட்டு மக்களுடன் ஒன்றுபட்டு அருட்பணியில் பங்கேற்றார். இன்று நமக்கும் மக்களுடன் ஒன்றுபட்டு அருட்பணி செய்யும் மாதிரியில் அர்ப்பணத்துடன் முன்னேறும் ஒப்படைப்பு தேவை.

**3. சுமை சுமக்கும் அருட்பணிக்கு ஆற்றல் :**

திருப்பாடல் 55: 22-ல் "ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டு விடு; அவர் உனக்கு ஆதரவளிப்பார்" எனக் காண்கிறோம். அருட்பணியில் பங்கேற்கும்போது சந்திக்கும் சுமைகளுக்கு ஆற்றலாயும் ஆதரவாயும் இறைவன் அமைகின்றார். மோல்ட்மேன் (Moltman) என்ற இறையியலார் "சிலுவையில் அறையுண்ட ஆண்டவர் பாடுகளை நாம் சந்திக்கும் போது நம்முடன் இருக்கின்றார்" என குறிப்பிட்டார். பாரம் சுமக்க சிலுவையில் ஆண்டவரின் தாங்குதல் நமக்கு எப்போதும் உண்டு என்ற உணர்வில் அருட்பணியர் முன்னேறிச் செல்ல வேண்டும். Tim Keller என்பவர் குறிப்பிடும் போது, "கடவுள் உங்களுக்காக உங்களுடன் இருக்கிறார் என்பதனை உறுதி செய்யாத வரைக்கும் துன்பமானது தாங்க முடியாத ஒன்று" என்கிறார். (Suffer-

ing is unbearable if you are n’t certain that God is for you and with you) மார்ட்டின் லூத்தர் “அவர்கள் நம் தலைவராகிய ஆண்டவருக்கு முட்கிரீடத்தைக் கொடுத்தார்கள். நாம் ஏன் மலர்கள் நிறைந்த கிரீடத்தை எதிர்பார்க்கிறோம்?” என்கிறார். எனவே அருட்பணியில் பாடுகளும், சிலுவை தழுவிய போராட்டங்களும் உண்டு. அதிலே இறைவனின் தாங்கும் கிருபையும் உண்டு. பவுலடியார் குறிப்பிடும் வண்ணமாக, “கடவுள் எங்களுடைய இன்னல்கள் அனைத்திலும் ஆறுதல் அளிக்கிறவர். நாங்களே கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க எங்களால் முடிகிறது” (II கொரி. 1: 4) என்ற இறைவார்த்தையுடன் இறைசார்புடன் அருட்பணியில் ஈடுபடுவோமாக.

“கர்த்தரிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்

கர்த்தருக்கென்று பெரிய காரியங்களைச் செய்யுங்கள்”

வில்லியம் கேரி

அருள்திரு. **W. ஸ்டான்லி ஜோண்ஸ்**

# விண்ணரசின் நற்செய்தியைப் பறைசாற்றுவோம்

எசாயா 11:1-10 மத். 4:23-25

"விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார்; மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார்" (மத்தேயு 4: 23).

இயேசு கிறிஸ்துவின் போதனையின் கருப்பொருள் இறையரசு ஆகும். கடவுளின் ஆட்சி நெருங்கி வந்துவிட்டது என்பது நற்செய்தி (மாற்கு 1:15). கடவுளின் ஆளுகையை மத்தேயு இறையரசு என 3 முறையும், விண்ணரசு என 34 முறையும் தனது நற்செய்தி நூலில் குறிப்பிட்டுள்ளார். விண்ணரசு என்பது அரமேயிக் பதத்தின் சொற்பொருள் மொழிபெயர்ப்பு. மத்தேயு யூத கிறிஸ்தவர்களின் உணர்வுக்கு மதிப்பளித்து யூதர்களுக்கென எழுதப்பட்டாலும், விண்ணரசு என்பது கடவுளின் அதிகாரம் ஆளுகை மண்ணுலகில் நிலைநாட்ட வந்த பலன்களுக்கெட்டாத உண்மை பொருளாகும். இது மானிட வாழ்வினை நெறியூட்டி, அறவியல் சார்ந்து வாழத்தூண்டும் அளவீடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஜெபிக்கும் போது, "உமது அரசு வருக" என இயேசு கிறிஸ்து கற்று தந்தார் (மத். 6:9) இந்த அரசு இறுதிக் காலத் தொடர்புடைதாயினும், முற்றிலும் - உலக முடிவு சார்ந்தது அன்று. இந்த அரசு இவ்வுலகிலேயே, இப்போதே இங்கேயே உணர்ந்து அனுபவிக்க வேண்டியதாகும். எனவே இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என அறிவிக்க இயேசு சீடர்களை அனுப்பினார் (லூக்கா 10:9-11). இவ்வரசு நீதி, நியாயம் உண்மை, இரக்கம் இவ்வுலகில் அமையப்பெற்று முடிவின்றி தொடரவேண்டும். அதற்கென்று கட்டளைகளும், நியமங்களும் தரப்பட்டுள்ளன. சுய நல போக்கால் கட்டளைகளையும், நியதிகளையும் புறம்தள்ளி நெறிகெட்டு, சமூகத்தைக் கறைப்படுத்தி நீதி, நியாயத்தை நிராகரித்து கையூட்டுகளால்அதிகாரத்தை கையகப்படுத்தி எளியோரை நசுக்கி ஒடுக்கி உரிமைகளைப் பிடுங்கி உடைமைகளைப் பறித்துக்கொண்டு மக்களுக்குள் குழப்பங்களை உருவாக்கி பிரிவினை ஏற்படுத்தி ஆளுமையைத் தக்க வைத்தனர், மக்களின் ஏக்கக்குரல் இறையவருக்கு நேராக எழும்பியது. இந்நிலையில் இறையரசு நெருங்கி வந்துவிட்டது என அறிவிக்க இயேசு சீடர்களை அனுப்பினார் (லூக்கா 10:9-11). விண்ணரசின் வாழ்வைக் காண்போர் பேறுபெற்றோர் நாம் பேறு பெற்ற வாழ்வுபெற முயலுவோம்.

**1. அழியாமையுடைய விண்ணரசு :**

கடவுள் உலகத்தின் இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் கொண்டவர். மேலும் வழிமுறைப்படுத்தி வழி நடத்தி, தீர்ப்பிடும் அதிகாரம் கொண்டவர். இவ்வாளுமை அதிகாரம் அரசியல் அதிகாரம் சார்ந்ததாக அல்லாமல் ஒழுக்கவியல், அறிவியல், வாழ்வியல் சார்ந்தவையாகும். இருப்பினும் காலப்போக்கில் பிற சமய நம்பிக்கைக்கும் சுயம் சார்ந்த நிலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடியாலும் பேராசையாலும் இறை திட்டங்களுக்குக் கீழ்படியாது அடிமையின் நுகத்திற்குப்பட்டு சாபத்திற்குரியவர்கள் ஆனார்கள். ஆனாலும் அவர்களின் பெருமூச்சுகளுக்கு செவிமடுத்த கடவுள் மனமிரங்கி மீட்டு கொண்டார். மட்டுமல்லாது தொடர்ந்து மானிடம் நல்லொழுக்கத்துடன் நடத்திட விண்ணிலிருந்து வருபவர் உயர் குணங்களால் நிரப்பப் பெற்றவராயும், உண்மையுள்ளவராகவும் இருப்பார் என (எசாயா 11:2) தீர்க்கர் தெளிவுப்படுத்துகிறார். அவரது பணியால் விழுந்து போன மகிமை விடியலாய் எழும்பும், வீழ்ச்சியுற்றோர் எழுச்சியுடன் செயல்படுவர். வீதிக்கு தள்ளப்பட்டோர், உரிமை மறுக்கப்பட்டோர், ஒடுக்குதலுக்கும், நெருக்குதலுக்கும் ஆழானோர், அநீதமான தீர்ப்பின் நிமித்தம் வாழ்விழந்தோர், அனைவரும நம்பிக்கை பெறுவர் (எசா. 11:4,5) அதற்கேற்ப நேர்மை, நீதி இவைகளை இடைக்கச்சையாக அணிந்திருப்பார். அதனால் எவரையும் இழந்துவிடாது ஒன்றாய் விண்ணரசில் சேர்க்கவும் மனித விருப்பப்படி அன்று இறை சித்தத்தின்படி கட்டமைப்பு பெறுவதால் எந்நிலையிலும் உறுதியுடன் நிலையான விண்ணரசின் அங்கமாய் வாழ மீட்பை உறுதிப்படுத்தி அவரது ஆளுமைக்கு ஒப்புகொடுப்போம்.

**2. அநீதியற்ற விண்ணரசு**

“. . . கண் கண்டதைக் கொண்டு மட்டும் அவர்நீதி வழங்கார் காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் அவர் தீர்ப்பு செய்யார்.

நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார். நடுநிலையோடு நாட்டின் எளியோரது வழக்கை விசாரிப்பார்; வார்த்தை எனும் கோலினால் கொடியவரை அடிப்பார். உதட்டில் எழும் மூச்சினால் தீயோரை அழிப்பார்.” (எசா. 1 : 3, 4).

சுய நலம், பெருமை, நான் என்னும் அகம்பாவம், அதிகார வெறி, செல்வாக்கு, செல்வத்தால் எளியோரை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்னும் அநீதியான எண்ணம் கொண்டோருக்கு எதிராக விண்ணரசு வெளிப்பட்டது. அலகையின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என கூறி நம்பிக்கை தருகிறார். இதன் மூலம் வேறுபாடுகளற்று எல்லாரையும் ஒன்றுபடுத்துவதுதான் இறையரசு என இயேசு பலமுறை தெளிவுப்படுத்தியுள்ளார் (மத். 13). அதனை

உறுதிப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்ட உவமை வலை உவமையாகும் (மத். 13:47-50) விண்ணரசு, கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும், வாரிக்கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும். இதில் தெரிந்து கொள்வது என்பது தூய்மையுடனும் குற்றமில்லாமையுடனும், மாசில்லாமையுடனும், வாழ்ந்து சான்று பகிர்வதற்கே , சரிசம நிலைக்குள்ளானோம். உண்மையான தகவுகளோடும் உயர்ந்த இலட்சியத்தோடும் வாழ அங்கீகரிப்பதின் அடையாளம். நீதியான வாழ்வு ஆகும். நீதியான வாழ்வால் அநீதியற்ற விண்ணரசின் பங்காளிகளாவோம்.

### 3. அமைதியின் விண்ணரசு

கொடுக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கும் நியதிகளுக்கும், எதிர்மறை நிலைகளிலும், எதிர்மறை எண்ணங்களிலும், எதிர்மறை செயல்களிலும் காணப்படுவோரால் அமைதி சீர்குலைக்கப்படுகிறது. சுயநல போக்கால் வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு எதிர்கால நம்பிக்கையும் சிதைவடைகிறது. அதிகார வெறியாட்டத்தாலும் அமைதி குலைக்கப்படுகிறது. வட கொரியா செயற்கை சுனாமி ஏற்படுத்தி தென் கொரியாவை அச்சுறுத்துகிறது. தென் கொரியா அமெரிக்காவின் துணைத் தேடுகிறது. இதனால் போர் பதட்ட நிலை அமைதியற்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் விண்ணரசின் செய்தி அமைதியை உறுதிப்படுத்துகிறது. (எசா. 11:6-9) ஓநாய் - ஆட்டுக்குட்டி, புலி - வெள்ளாட்டுக்குட்டி, கன்றுகுட்டி - சிங்கம் - காளை ஒருமித்து வாழும். சிறுவன் ஆளுமை செய்வான். பசு - கரடி, குழந்தை - விரியன் பாம்பு, பால் மறந்த பிள்ளை விரியன் பாம்பு புற்றில் கரத்தைப் போடும் ஆனாலும் தீமை நிகழ்வதில்லை. எதிரும் புதிருமானவைகள் ஒன்றாய் அமைதியுடன் கூடி வாழும் ஓர் அரசு அது. மீட்பு பெற்றோர் நாம் அமைதியின் நாம் அமைதியின் அரசின் சாயலை வெளிக்காட்டுவோம்.

வாழ்க ! நம் இயேசுவின் நாமம் ! வளர்க நம் அருட்பணியர் பணி ! மலர்க நம் திருச்சபை தொண்டு ! பெருகுக நம் ஆதரவாளர்கள் பங்களிப்பு !

**அருள்திரு. V. டேவிட் றாபி ஜேக்கப்**

# அனைத்து மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்

மத். 28: 16 - 20

“நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்” மத். 28: 16 - 20

1905-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ம் நாள் கொல்கத்தாவில் உள்ள செராம்பூர் கல்லூரியில் கூடிய கூட்டத்தில் உதயம் பெற்றது தான் தேசிய அருட்பணி சங்கம். பேராயர் V.S. அசரியா அவர்கள் தான் இந்த சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் ஆவார். இச்சங்கத்தின் மிக முக்கிய நோக்கம், இந்தியர்களுக்கு இந்திய அருட்பணியாளர்களால் நற்செய்தி கூறுவது ஆகும். உலகம் முழுவதும் கிறிஸ்துவை அறிவிப்பது, மேல்நாட்டவர்களுக்கு மட்டும் உள்ள கடமை அல்லாமல், இந்தியர்களுக்கும் அந்த கடமை உண்டு என்பதும் முதன்மைப் பெறுகின்றது. இச்சங்கத்தின் அருட்பணி எதிர்நோக்கு என்னவெனில் இந்திய மக்களுக்கு, இந்திய அருட்பணியர்களால், இந்தியரின் நிதி உதவியோடு இந்திய முறைமைப்படி இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை பறைச்சாற்றுவது ஆகும். இதன் Motto என்னவெனில், ‘India for Christ’ “இந்தியா கிறிஸ்துவுக்கே”, கடவுளின் அரசினை இவ்வுலகில் உருவாக்குவதே இந்த சங்கத்தின் தரிசனம் ஆகும்.

உலகில் வாழும் அனைவருக்கும், வாழ்விற்குரிய நிறைவு கிடைப்பதன் வழியாகவே நற்செய்தியின் முழுப்பொருளும் முழுமை பெறுகின்றது. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு உலகில் உள்ள அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாய் அமைய காரணம் மன அமைதியும், புதுவாழ்வுக்குரிய மகிழ்வும் கிடைத்ததால் தான் என்பது உண்மையே!

நற்செய்தி ஒரு தனி நபரில் மாற்றம் ஏற்பட வழிவகை செய்வதுடன், அனைத்து மக்களுக்குள்ளும் புது உணர்வுடன் கூடிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. Dietrich Bonhoeffer, என்பவர் தான் எழுதிய ‘The cost of discipleship’என்ற நூலில் “சீடத்துவம் இல்லாத வாழ்க்கை அது கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம்” என்கின்றார். Pope Francis “சிலுவை இல்லாத கிறிஸ்தவன் இயேசுக்கு சீடனாய் இருக்கமுடியாது” என்று குறிப்பிடுகின்றார்.

உயிருடன் எழுந்த இயேசு கிறிஸ்துவை கலிலேயாவின் மலைப்பகுதியில் தரிசித்த சீடர்கள், அவரைக் கண்டவுடன் பணிந்திடவே, அவர்களிடம் இயேசு, விண்ணுலகிலும், மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு

அருளப்பட்டுள்ளது. நீங்கள் சென்று எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்றார். இந்த அருள்வாக்கு நமக்கு வழங்கும் ஆழமான அறைகூவல்களை இந்த தேசிய அருட்பணி சங்க நாளில் நாம் தியானம் செய்வது மிகவும் பொருத்தமான ஒன்றே.

தேசிய அருட்பணி சங்கத்தின் நோக்கம் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை உலகம் முழுவதும் பறைசாற்றுவது ஆகும். இங்கே இயேசுநாதரும் அனைத்து மக்களினத்தாரையும் சீடர் ஆக்கிட பயன்படுத்திய ஊடகம் 'Good News' எனும் நற்செய்தி ஆகும். இந்த நற்செய்தி எந்நிலையில் தொடர்புபடுத்தப்பட்டது என்பதை நாம் தியானம் செய்வோம்.

**1. பணிவிடை செய்யுங்கள் :**

மத். 28: 19 (a). "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" என்ற இயேசுவின் செய்தி கூறும் முதல் அருட்பணியின் அறைகூவல் என்னவெனில், கிறிஸ்துவில் கண்ட முன் மாதிரியை மக்கள் பின்பற்றி, கிறிஸ்துவின் சீடர் ஆகிட அவர்கள் முன் பணிவிடை செய்ய வேண்டும் என்பதாகும். William Cowper, "ஒருவர் செய்யும் பணிவிடை மற்றும் இரக்ககுணம் வழியாக இறைவரின் இரக்கம் பெறுகிறார்" என்கிறார். பணிவிடை என்பது பதவி வகிப்பது அல்ல கடைநிலைப்பணியில் இணைந்து பயணிப்பதுவே என்பதைப் புரிய வைக்கிறார். "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" (மாற். 9: 35) என்று கூறியதை நினைவுறுத்தி, நற்செய்தி என்பது போதிப்பது மட்டும் அல்ல, அது வாழ்வின் வழியாக செயல்வடிவில் வெளிப்படுத்திக் காண்பிப்பது என்பதைப் புரிய வைக்கிறார்.

இயேசுவின் கடைசி இரவு உணவின் போது சீடர்களின் கால்களைக் கழுவிய இயேசு தம்மை வாழ்வின் கடைசி மட்டும் கடைநிலைப்பணியாளர் என்பதை நிரூபித்தார். (யோவான் 13: 4 - 5) மக்களினத்தாரைச் சீடராக்கப் பயணிக்கும் சீடரும் தங்கள் பணிவிடையால் மட்டுமே பிறரைச் சீடராக்க இயலும் என்பதை அவர்அழகாக கற்பித்தார்.

பணிவிடையைக் குறிக்கும் கிரேக்கச் சொல், "டயக்கோனியா" என்பதாகும். இதன் பொருள், தேவையிலிருக்கும் எவருக்கும் உதவுதல், என்பதாகும். பணிவிடை என்பது பிறரையும் அவர்களது வாழ்வையும் நாம் உடன் இருந்து பராமரிப்பது மட்டும் அல்ல, அவர்களது வாழ்வை கட்டி எழுப்பிட முயல்வதும், அவர்களது வாழ்வு முன்னேற்றத்திற்காய் நம்மை இழக்கத் துணிவதும் அதில் அடங்குகிறது.

## 2. பயிற்சி கொடுங்கள் :

மத். 28: 20, “நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்”

சீடராக்குங்கள் என்பது கற்றுக்கொள்ளுதல் வழியாகவே நடைமுறை பெறுகின்றது. ‘Dicipulus’ என்கிற லத்தீன் சொல்லில் இருந்து தான் Disciple என்ற சொல் வந்தது. சீடர் என்ற சொல்லுக்கு ‘Mathitis’ என்ற வார்த்தை கிரேக்க மொழியில் உள்ளது. சீடர் என்ற வார்த்தைக்கு மாணவர், பயிற்சி எடுப்பவர், பின் தொடர்பவர், கற்றுக்கொள்பவர் என பல பொருள்கள் உள்ளன. பிரேசில் நாட்டுக் கல்வியாளர், Paulo Freire தான் எழுதிய ‘Pedagogy of the oppressed’ என்ற நூலில் கல்வி மனிதரை உணர்வு அடையச் செய்கிறது என்கின்றார். யோவான் தன் சீடர்களுக்கு இயேசுவை “இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி” எனக் கூறி அறிமுகம் செய்தார் (யோவா. 1: 36). உடனே உணர்வு அடைந்த சீடர்கள் இயேசுக்கு பின்சென்று அவரது சீடர்கள் ஆயினர். அவர்கள் இயேசுவோடு கலிலேயாவில் தங்கி பயிற்சி பெற்றனர். இயேசு வழங்கிய சீடத்துவப் பயிற்சி அவர்களை உணர்வு அடையச் செய்தது. சீடத்துவ வாழ்வு என்பது ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பது. சிறைப்பட்டோர் விடுதலை, பார்வையற்றோர் பார்வை பெறச் செய்வது, ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவது (லூக். 4: 18) என்பதை இயேசு தெளிவுடன் கலிலேயா மக்களின் வாழ்க்கைச் சூழலில் கற்பித்துக் கொடுத்தார். அந்த பயிற்சி வழியாக முறையாக கற்றுத்தான் அந்திரேயாவும், சீமோன் பேதுருவும் சீடத்துவ குழுவில் இணைந்தனர் (யோவா. 1: 40 - 42).

உயிர்த்த இயேசு கிறிஸ்து அனைத்து மக்களினத்தாரையும் நற்செய்தியால் பயிற்றுவிக்கக் கூறுகின்றார். கிறிஸ்துவை ஏற்பது என்பது கிறிஸ்துவின் வாழ்வியல் தன்மைகளான அன்பு, மன்னிப்பு, பகிர்வு, உதவி செய்தல் ஆகிய பண்புகள் வழியாக பிறர் வாழ்வின் நலனுக்காய் துன்புறவும் துணிதல் என்பதை கற்றுக்கொடுக்க கட்டளை கொடுத்தார். சீடராய் மாறுவது என்பது சிலுவையைச் சுமக்கவும் துணிவது என்பதை மக்கள் புரியும் வண்ணம் துணிவுடனும், பணிவுடனும் பயிற்றுவிக்க அறைகூவல் விடுகின்றார் (மத். 16: 24). கிறிஸ்துவில் வெளிப்படும் தன்மைகள் ஒருவரை நல்ல சீடராகப் பயிற்றுவிக்கின்றன.

## 3. பரமனின் அரசை நிறுவுங்கள் :

மத். 28: 19 (b) “தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்”

Akita என்பவர், திருமுழுக்கு என்பது உள்ளான "மாற்றுருவாக்கத்திற்கான வெளிப்படையான சான்று" ("Baptism is an outward testimony of a inward transformation") என்கிறார். திருமுழுக்கு என்பது புதுவாழ்வின் அடையாளம் எனலாம். Peter litel ward - என்பவர் "திருமுழுக்கு வேறுபாடற்ற புது மானிடத்தை உருவாக்குகிறது" என்கிறார். சீடராக்குதல் வழியாக ஒருவர் மனம் புதிதாக்கப் பெற்று, ஆவியின் கனிகள் அவரது அன்றாட வாழ்வில் வெளிப்படுத்த முயற்சிப்பது இதில் அடங்குகின்றது (கலாத். 5: 22 - 23).

"அனைத்து மக்களினத்தாரையும்" என்ற செய்தியில் படைப்பும் உட்படுத்தப்படுகின்றது (மாற். 16: 15). இறையரசு என்பது படைப்பனைத்திற்கும் நற்செய்தி அறிவிப்பது வழியாக முழுமை பெறுகின்றது. இறைவரின் பார்வையில் படைப்புகள் அனைத்தும் போற்றப்படுவதுடன், அவை முக்கியத்தன்மை பெறுகின்றன. இதுவே, எசா. 11: 6 - 9 வரையுள்ள பகுதியில் எசாயா இறைவாக்கினர் கூறும் நீதியுள்ள அரசரின் வருகையின் போது உதயம் பெறும் புதிய ஆட்சி ஆகும். அன்பும், அமைதியும், ஒற்றுமையும், சமத்துவமும் அனைத்து மக்களிடையே உருவாகும். இறையரசு என்பது இந்த உலகில் தான் உருவாக்கம் பெறும் ஒன்று. நீதியும், நேர்மையும், அன்பும், அறனும், அமைதியும், எளியவரை ஏற்றலும், இயற்கையோடு இணைந்து வாழ்தலும் நிலவுகின்ற ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கிடவே அனைத்து மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்று கிறிஸ்து தம் சீடர்களை அனுப்பினார்.

இன்று தேசிய அருட்பணி சங்கமும் "India for Christ" எனும் உயரிய தூரக்காட்சியோடு கடவுளின் அரசினை இவ்வுலகில் உருவாக்கும் நோக்கோடு அனைத்து மக்களினத்தாரையும் சீடராக்கும் உன்னதப்பணியை நிறைவேற்றுகிறது.

நாமும் உன்னதமான ஆண்டவர் கிறிஸ்துவின் உண்மைப் பணிவிடையர்களாய், நற்பயிற்சியுடன் இறையரசை இவ்வுலகில் நிறுவும் முனைப்புடன் அனைத்து மக்களினத்தாரையும் சீடராக்குவோம். இறைவனின் நல் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம்.

ஆமென்!

**திரு. S.S. ஆல்பின் டேவிட் ராஜ்**

# விழாக்கால அருளுரைகள்

# சிறுவர் : விண்ணரசின் அடையாளங்கள்

1 சாமு. 1: 20-28 எபே. 6: 1-6

மத். 19: 13-15

"இயேசு, சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" என்றார் (மத். 19: 14).

ஒரு நல்ல சமூகம் அமைய வேண்டுமெனில்,நல்ல பிரஜைகள் அச்சமூகத்தில் காணப்படவேண்டும். இன்று விஞ்ஞான வளர்ச்சி ஒருபுறம் வேகமாக வளர, மனித சிந்தனை திறன், ஆற்றல் பெருகிக் கொண்டிருக்க, மறுபுறம் தீவிரவாதம், சமய, இன, மொழி அடிப்படையில் கலவரங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. இத்தீமைகள் சமூகத்தில் வளர காரணமென்ன? என ஆய்கின்றபோது, ஆற்றலும், திறமையும் மிக்க மானிடம் தவறாக வழிநடத்தப்படுவதே என்பது புலனாகும்.

நீமொ. 22: 6-ல் ஞானி, "நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு: முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார்." எனக் கூறுகிறார். நமது குடும்பங்களில், திருச்சபையில் கடவுள் ஈவாக, கிருபையாக, ஆசீர்வதித்து பிள்ளைகளை தந்திருக்கிறார். அவர்களை இறைப்பயத்தோடும், நல்வழியில் ஒழுக்கத்தோடும் வளர்ப்பதுப் பெற்றோர் கடமை. அப்போது, நாம் நம் சமூகத்திற்கு நல்ல பிரஜைகளை உருவாக்க முடியும். இவ்வண்ணமாக சீர்படுத்தும் அருட்பணியைத் தான் இன்று திருச்சபை திருமறைப்பள்ளி வாயிலாக செய்து வருகிறது. 1780-ல் ராபட் ரெய்க்ஸ் என்ற பெரியார் சீர்கெட்ட வழியில் சென்ற சிறுவரை சீர்படுத்தவே இப்பணியை ஆரம்பித்தார். அதே வேளையில் சிறுவர் சுயநலத்திற்காகப் பயன்படுத்தப்படல், ஒடுக்கப்படல், சுரண்டப்படல் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கிறது.

கி.பி. 1112-ல் நடைபெற்ற சிலுவைப்போரில் ஒன்றும் அறியா சிறுவர்கள் கழுத்தில் சிலுவை கட்டிப் போர்களம் அனுப்பப்பட்டனர். இன்று குழந்தைத் தொழிலாளர் பற்றி பல குரல்கள் எழுப்பப்பட்டாலும், சிறுவரின் வறுமையைப் பயன்படுத்தி அவர்கள் உழைப்பை உறிஞ்சும் முதலாளிகள் இருக்கத்தான் செய்கின்றனர். இச்சிறுவர்கள் "இறை அரசின் அங்கத்தினர்" என்கிறார் அருள்நாதர் இயேசு கிறிஸ்து.

**1. சிறுவர் இறைஆசியின் அடையாளங்கள்** (1 சாமு. 1: 20)

"அன்னாள் ஒரு குமாரனைப்பெற்று, கர்த்தரிடத்தில் அவனை கேட்டேன் என்றுச் சொல்லி,அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாா்."

உலக வாழ்வில் மனிதன் ஆசீர்வாதமாக மகிழ்ந்து வாழ இறைவன் கொடுக்கும் ஈவுதான் பிள்ளைகள். பிள்ளைகள் இறைஆசியின் அடையாளங்களாக கடவுளின் ஈவாக கொடுக்கப்படுகின்றனர் (திபா. 127: 4). இதை அனுபவத்தில் கண்ட அன்னாள் ஆண்டவரை நன்றியுடன் துதித்தார். தொ.நூ. 17: 16-ல் "சாராளை ஆசீர்வதித்து ஒரு குமாரனை தருவேன்." என்கிறார். வாழ்வில் பொலிவும், அழகும், கனிதரும் வாழ்வுமாக பெற்றோரை நெருங்கி இருப்பார்கள். (திபா. 128: 3) இறைஆசியின் அடையாளங்களான சிறுவர் சீடர்களால் அதட்டப்பட்டபோது இயேசு கிறிஸ்து அவர்களை ஏற்று, அரவணைத்து, ஆசி வழங்கி அவர்கள் சிறப்பை எடுத்துரைத்தார். மத். 18: 15 "ஒரு பிள்ளையை ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்." இன்று இறைஆசியின் அடையாளங்களாக ஆண்டவர் இல்லத்திலும், திருச்சபையிலும் சிறுவர்களைத் தந்திருக்கிறார்.இச்சிறப்பு மிக்க சிறுவர்களைச் சீரான வழியிலே நடத்த வேண்டியது பெற்றோர், திருச்சபையின் கடமையாகும். இரவீந்திரநாத் தாகூர் தன் கவிதையில் "ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போதும் இறைவன் இன்றும் இம்மானிடத்தில் நம்பிக்கை இழக்கவில்லை என்பதை நினைவுப்படுத்துகிறது" என்கிறார்.

குழந்தைப் பருவத்தில் கிறிஸ்தவப் பண்பை, ஒழுக்க நெறிகளை, இறைபக்தியை ஊட்டத் தவறும் பெற்றோரால் பிள்ளைகள் திசை காட்டும் கருவி இல்லாத கப்பலாக மாறுகிறார்கள். பிள்ளைகளை யாருடனும் சேரவிடாமல், பாதுகாப்பாக அடைத்து வளர்க்கும் பெற்றோரால் பிள்ளைகள் மனிதாபிமானமில்லாத சுயநலமிக்க பிள்ளைகளாக வளருவார்கள். குழந்தைகள் முன்பாக குடும்பச் சண்டைகளை தினந்தோறும் அரங்கேற்றினால் குழந்தைகளும் குடும்பப் பாசமில்லாத விட்டுக் கொடுக்காத குணமுள்ளவர்களாய் மாறிவிடுவார்கள். குழந்தைகளை ஆளாக்குவதும், பாழாக்குவதும் நம் கையிலே உள்ளது. இறைஆசியின் அடையாளங்களாகிய சிறுவருக்கு இயேசு கிறிஸ்து தந்த சிறப்பைத் திருச்சபையும் தரவேண்டும்.

**2. சிறுவர் இறை அரசுக்குரியவர்கள்** (மத். 19: 14)

"சிறுப்பிள்ளைகள், என்னிடம் வர விடுங்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது."

இயேசு கிறிஸ்துவின் இறைஅரசு குறித்த போதனையில் சிறுவர் சிறப்பிடம் பெற்றனர். சிறுவருக்கும் இறையரசுக்கும் உள்ள நெருக்கம், உறவு

நிலை தெளிவுபடுத்தப்பட்டது. பரலோக ராஜ்யத்தின் மாதிரிகளாக சிறுவர் சீடர்கள்முன் நிறுத்தப்பட்டனர். இதன் வழியாக சிறுவர் கடவுள் பார்வையில் பெற்ற மதிப்பையும் அவர்களுக்கு இறையரசில் இருந்த முக்கியத்துவமும் வெளிப்பட்டது. சிறுவரைப் புறக்கணிப்பது இறை அரசை புறக்கணிப்பது போன்றது. சிறுவர் இறை அரசின் அடையாளமாக்கப்பட்டனர் (மத். 18: 3) இயேசு "பிள்ளைகள் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" என்றார். சிறுவரை அதட்டல், தடுத்தல் இறை அரசு அங்கத்தினரைத் தடுப்பது ஆகும் (மத். 19: 14). இயேசு கிறிஸ்து குழந்தைகளுக்குத் தந்த சிறப்பை, முக்கியத்துவத்தை திருச்சபையும் தர இப்போதனை தூண்டுகிறது. மத். 18: 10 "இந்த சிறியரில் ஒருவரையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" என்றார். சிறுப்பிள்ளையை ஏற்பவன் என்னை ஏற்கிறான் என்றார் இயேசு கிறிஸ்து (18: 5).

இந்த சிறப்பு மிக்க சிறுவரும் தங்கள் கடமைகளை உணர்ந்து வளர வேண்டும், வாழ வேண்டும். "பெற்றோருக்குக் கீழ்படியுங்கள்" (எபே. 6: 1) என்பது பவுலாரின் போதனை நாம் திருமறைக்கு, திருச்சபைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் தவறால் ஏலிக்கு வேதனையான முடிவு நேர்ந்தது. இதனால் ஒரு சமூகமே பாதிக்கப்பட்டது (1 சாமு. 2: 12,2 5) அவர்கள் கர்த்தரை அறியவில்லை, தகப்பன் சொல் கேட்கவில்லை. பிள்ளைகளின் தவறான செயல்கள் குடும்பங்களின் தலைகுனிவிற்கும் அழிவிற்கும், கிறிஸ்தவ சமூகத்தின் கெட்ட பெயருக்கும் காரணமாகி விடுகிறது. இறைபயம் நமக்குத் தேவை. இறை ஆலோசனை தேவை. இயேசு கிறிஸ்துவின் மாதிரியை நாம் பின்பற்றுவோம்.

திருச்சபையும் இன்று சிறுவர் பணி ஆற்றும்போது, சிறுவர் இறை ஆசியின் அடையாளங்கள், இறை அரசின் அங்கத்தினர் என்பதை உணர்ந்து, இறை எச்சரிப்பை ஏற்று அர்த்தமுள்ள முறையில் பணியாற்ற அழைக்கப்படுகிறது. திருமறை சத்தியங்களின் உண்மைத் தன்மைகளைத் தெளிவாகக் கற்றுக் கொடுக்கக் கடமைபட்டுள்ளோம். பெற்றோர் நம் பிள்ளைகள் இறை அறிவில் வளர உற்சாகப்படுத்துவோம். ஆசிரியர் மாதிரியாய் வாழ்ந்து திருமறையைத் தெளிவாகப் போதிப்போம். மாணவர் நம் கடமை உணர்ந்து திருவசனப்படி வாழ்வோம். அப்போது நல்ல சமூகம் உருவாகும்.

நம் பிள்ளைகள் சிறப்பு மிக்கவர்கள். இறைவனின் அருட்கொடைகள். இறை அரசுக்குரியவர்கள்.

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய . . . விடாதிருப்பான்". ஆமென்.

அருள்திரு. **M. ஜேக்கப் ராஜ்**

# ஆற்றல்மிகு இளையோர்

1 சாமு. 24: 16-20 1 திமொ. 4: 12-16

லூக்கா 18: 18-24

"நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும்" (1 திமோ. 4: 12a)

உலகம் இன்று சந்தித்துக்கொண்டிருக்கும் தலையாயப் பிரச்சனை காலநிலை மாற்றம். எவராலும் கணிக்கமுடியாத அளவில் பெருவெள்ளம், கடும் வறட்சி பூமியை வதைத்துக் கொண்டிருக்கிறது. இந்த காலநிலை மாற்றத்தை தடுத்துநிறுத்த தனது 16-வது வயதில் களம் இறங்கிய பெண்மணி கிரேட்டா தன்பர்க். இவர் 2003-ஆம் ஆண்டு சுவீடன் நாட்டில் பிறந்தார். தனது எட்டாவது வயதிலிருந்தே காலநிலை மாற்றம் குறித்துக் கற்றும் கேட்டும் அறிந்து கொண்டார். காலநிலை மாற்றத்தைத் தடுக்க ஏன் எவரும் முன்வரவில்லை என்ற முதன்மை கேள்வியோடு சிந்திக்கவும் செயல்படவும் தொடங்கினார். காலநிலை மாற்றத்தின் பாதிப்பைத் தடுக்கும் பணியை முதலில் வீட்டிலிருந்தே தொடங்கினார். இதற்கு இவரது தாய் உறுதுணையாக இருந்து சில மாற்றங்களை மேற்கொண்டார். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை உண்டாக்கும் விமானப் பயணத்தைக் குறைத்துக்கொண்டார். தனது வீட்டிற்குள் நடந்த மாற்றங்கள் கிரேட்டாவுக்கு மனவலிமையைக் கொடுத்தது. காலநிலை மாற்றத்தின் பாதிப்பைத் தடுக்க பள்ளிக்கூட மாணவர்களை ஒன்றிணைக்க முயற்சித்தார். எவரும் முன்வராத நிலையில் தானே களத்தில் இறங்கி போராடவேண்டும் என முடிவு செய்தார். சுவீடன் பாராளுமன்ற கட்டிடத்திற்கு முன்பு தனியாக போராட்டத்தை ஆரம்பித்தார். இவரது பெற்றோர் ஆதரவாக இருந்தனர். ஆனால் கிரேட்டாவின் ஆசிரியர் இந்த பேராட்டத்தை நிறுத்திக்கொள் என்றார். என்றாலும் "பருவநிலையைக் காக்க பள்ளிப் போராட்டம்" என்ற பதாகையை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டார். இதன் விளைவாக இந்தியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் பல மாணவர்கள் வீதிக்கு வந்து போராடத் தொடங்கினர். கிரேட்டாவின் குரல் உலகெங்கும் ஒலிக்கத் தொடங்கியது. ஐ.நா. சபையில் சென்று பேசும் வாய்ப்பும் கொடுக்கப்பட்டது. அங்கு பேசும்போது, பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு மக்களை ஏமாற்றி இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள். மக்கள் துன்பப்படுகிறார்கள், இறந்துமடிகிறார்கள் மொத்த சூழலியலும் உருக்குலைந்துவிட்டது. உலகத் தலைவர்களாகிய நீங்கள் பணம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி என்று கதை பேசிக்

கொண்டிருக்கிறீர்கள். இயற்கை நம்மீது கோபத்தைக் காட்ட இருக்கிறது. அதற்குள் விழித்துக்கொள்ளுங்கள் என்று தலைவர்களைக் கடின வார்த்தைகளுடன் சாடினார்.

பல விமர்சனங்களுக்கு இப்பெண்மணி ஆளாக்கப்பட்டாலும் இன்று பல இலட்சக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் தங்கள் ஆற்றலை காலநிலை மாற்றத்தைத் தடுக்கப் பயன்படுத்துவதற்கு இப்பெண்மணி காரணமாய் இருக்கிறார். இளைஞர்கள் தங்களுக்கிருக்கும் ஆற்றலைத் தீயவற்றிற்குப் பயன்படுத்தாமல் இதுபோன்ற ஆக்கபூர்வமான நிலைகளில் பயன்படுத்தவேண்டும். இளைஞர்களின் ஆற்றல்மிகு பணி எப்படி அமைந்திட வேண்டும் என்பதைப் பற்றி சிந்திப்போம்.

### 1. தீங்கிழைத்தோருக்கு நன்மை செய்தல்

"நீ எனக்கு நன்மையே செய்து வந்திருப்பதை இன்று நீ வெளிப்படுத்தினாய்" (1 சாமு. 24: 18)

சவுல் அரசர் இஸ்ரயேலை ஆளுகைச் செய்த நாட்களில் பெலிஸ்தியனான கோலியாத் இஸ்ரயேலுக்கு அச்சுறுத்தலாக இருந்தார். இந்த கோலியாத்தை இளைஞனாய் இருந்த தாவீது கொலைச் செய்தார். மேலும் சவுல் ராஜாவால் அனுப்பப்பட்ட இடங்களிலெல்லாம் தாவீது சென்று வெற்றி கொணர்ந்தார். இதனால் சவுல் ராஜா தாவீதை படைத் தலைவராக்கினார். குறிப்பாக, தாவீது பெலிஸ்தியனான கோலியாத்தைக் கொன்றது இஸ்ரயேல் மக்களுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. மக்கள் ஆடல் பாடலுடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்போது சவுல் ஆயிரம்பேரை கொன்றார்; தாவீதோ பதினாயிரம்; பேரைக் கொன்றார் என்று பாடினர். தாவீதின் பெயர் பிரபலமாவதை சவுல் ராஜாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தாவீதின் மீது பொறாமைக் கொண்டார். தாவீது உயிரோடு இருந்தால் தன் பதவிக்கு ஆபத்து என்று நினைத்து தாவீதைக் கொலைச் செய்ய முன் வருகிறார். தாவீது தன்னை காப்பாற்றிக் கொள்ள மறைவான இடம் தேடி செல்கிறார்.

தாவீது சவுல் ராஜாவுக்கு பயந்து ஏன்கேதி பாலை நிலத்தில் 600 பேருடன் ஒரு குகையின் அருகில் இருக்கும்போது சவுல்ராஜா 3000 வீரர்களுடன் தாவீதையும் அவரது ஆட்களையும் கொலை செய்ய தேடி வருகிறார். குகையின் மறு பக்கத்தில் தாவீதும் அவரது ஆட்களும் இருக்கிறார்கள். தாவீதின் ஆட்கள் சொன்னார்கள் ராஜாவைக் கொன்றுவிடும் இது கடவுள் உமக்கு தந்த வாய்ப்பு என்றார்கள். ஆனால் தாவீது கொலைச் செய்ய முன்வரவில்லை. "என் ஆண்டவனே" என்று சவுல் ராஜாவைக் கூப்பிட்டு முகம்குப்புற வீழ்ந்து வணங்கினார். "நான் உமக்கு எந்த தீங்கையும் செய்யவில்லை. உமக்கு முன்பு

நான் செத்த நாயாகவும், தெள்ளுப்பூச்சியாகவும் இருக்கிறேன்" என்றார். அப்போது சவுல் ராஜா நீ எனக்கு நன்மை செய்தாய்; ஆனால் நானோ உனக்கு தீங்கு செய்தேன். ஆண்டவர் என்னை உன்னிடம் ஒப்புவித்திருந்தும் நீ என்னை கொல்லவில்லை. நீ எனக்கு நன்மை செய்திருக்கிறாய் (1 சாமு.24: 17, 18). இங்கே தாவீது தனக்கு தீங்கிழைத்த ராஜாவைக் கொலைச் செய்யக்கூடிய தருணம் வந்தும் தீங்கு செய்யாமல் சவுல் ராஜாவுக்கு நன்மையேச் செய்தார்.

கடவுள் நமக்கு தந்திருக்கும் ஆற்றலை தீமையான காரியங்களுக்குப் பயன்படுத்தாமல் நன்மையான காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும். தீமைக்குத் தீமை செய்யும் காலத்தில் வாழ்கிறோம். இன்று பழிக்குப் பழிவாங்கும் செயல்கள் அதிகமாய் நடந்துக் கொண்டிருக்கின்றன. நாம் நமக்குத் தீமை செய்ய நினைப்போருக்கு எப்படி நன்மை செய்யலாம் என்ற சிந்தையுடன் நமக்கு இருக்கும் ஆற்றலைப் பயன்படுத்துவோம். இயேசு கிறிஸ்து "உங்கள் சத்துருக்களிடம் அன்பு செலுத்துங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை நிந்திப்பவர்களுக்காகவும், துன்படுத்துகிறவர்களுக்காகவும் விண்ணப்பம் செய்யுங்கள்" என்கிறார்.

**2. நற்பண்புகளில் வளர்தல்**

"இவை எல்லாவற்றிலும் கவனம் செலுத்து. இவைகளிலேயே ஈடுபட்டிரு. அப்பொழுது நீ அடைந்துள்ள வளர்ச்சி எல்லாருக்கும் தெளிவாகும்" (1 திமொ. 4: 15).

திருத்தூதுவர் பவுல் வழியாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு உடன்பணியாளராய் பணி செய்தவர் திமொத்தேயு. இவர் பவுல் அடிகளாரின் நம்பிக்கைக்குரிய பணியாளராய் இருந்தார். எபேசுத் திருச்சபையின் கண்காணிப்பாளராய் (ஆயராய்) ஏற்படுத்தப்பட்டார். ஆயராக நியமித்த திமொத்தேயுவுக்கு அவர்தம் கடமைகளை நினைவுறுத்துவதற்காக பவுல் இத்திருமுகத்தை எழுதினார். (1 திமொ. 4: 12-16) வரை உள்ள வசனங்களில் இளைஞனாய் இருக்கின்ற தீமோத்தேயு நற்பண்புகள் வெளிப்படுத்தி வாழ்வதில் எவ்வளவு கவனமாகவும், கருத்தாகவும் இருக்கவேண்டும் என்பதை அறிவுறுத்தியிருக்கிறார்.

திருத்தூதர்களின் மறைவுக்குப் பின் கிறிஸ்தவ நம்பிக்கையையிலிருந்து மக்களை இடறச்செய்யும் தடைகற்களாகச் சில புரட்டுப் போதகர்கள் காணப்பட்டார்கள். தவறான போதனைகளைக் கொடுப்பது மட்டுமல்லாமல் இறைமக்கள் இடறக்கூடிய விதத்தில் தங்கள் வாழ்வையும் அமைத்துக் கொண்டார்கள். சிறப்பாக பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை இவைகளில் முன்மாதிரியற்று வாழ்ந்தார்கள். இயேசு கிறிஸ்துவை

ஏற்றுக்கொண்டு நற்பண்புகளை வெளிப்படுத்தி வாழ்வதற்கு முன்வந்த இறைமக்களில் பலர் இவர்களது தவறான போதனையினாலும், செயல்பாடுகளாலும் பின்மாறிப்போகும் அளவிற்கு இவர்களது வாழ்வு இருந்தது. இதனை அறிந்துக்கொண்ட பவுல் இளைஞனான தீமோத்தேயுவிற்கு ஆலோசனை தருகிறார். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை போன்றவற்றில் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் இருப்பது மட்டுமல்லாமல் மறைநூலை விளக்குவதிலும், கற்றுக்கொடுப்பதிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும். நற்பண்புகளில் நீ வளர்ந்திருக்கிறாய் என்பதை எல்லாரும் காணக்கூடிய விதத்தில் கவனமாய் இரு என்றார்.

இன்று அறிவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்று எல்லா துறைகளிலும் நாம் வளர்ந்தாலும் நற்பண்புகளில் குறைவுள்ளவர்களாகவே இருக்கிறோம். குறிப்பாக இன்றைய இளைஞர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி அநேக ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடுகின்றனர். இப்பேற்பட்ட காலச் சூழலில் நம்மை காத்துக்கொள்வதில் கவனமாய் இருக்கவேண்டும். அது மட்டுமல்லாது நற்பண்புகள் நம்மில் உருவாகவும், நற்பண்புகள் நம்மிலிருந்து வெளிப்படவும் நமக்கிருக்கின்ற ஆற்றலைப் பயன்படுத்தவேண்டும்.

### 3. தேவையில் இருப்போருக்கு உதவி செய்தல்

“இயேசு அவரிடம் உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும்”. (லூக்கா 18: 22).

செல்வந்தரானத் தலைவர் ஒருவர் இயேசு கிறிஸ்துவிடம் வந்து நல்ல போதகரே நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்னச் செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு இயேசு கிறிஸ்து திருமறை வலியுறுத்தியுள்ள கட்டளைகளைக் கடைபிடித்து வாழும்போது நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார். அதற்கு அந்தச் செல்வந்தர் இவைகளை என் இளமைப்பருவத்திலிருந்தே கடைபிடித்து வருகிறேன் என்றார். இதைக் கேட்ட இயேசு கிறிஸ்து அவரிடம் உமக்கு இன்னும் ஒன்று குறைவுபடுகிறது. உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்தால் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார். இதைக்கேட்ட செல்வந்தர் அதிக வருத்தமடைந்தார். ஏனென்றால் பகிரும் மனம் அற்றவராய் இருந்தார். ஆகவே தான் இயேசு கிறிஸ்து செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது என்றார் (லூக்கா 18: 25).

தேவையில் இருப்போருக்கு உதவ திருமறை நம்மை போதிக்கிறது. இணைச்சட்டம் 15: 11-இல் உன் சகோதரனுக்கும், உன் நாட்டிலுள்ள

வறியவர்களுக்கும், தேவையுள்ளோர்க்கும் உன் கையைத் தாராளமாய்த் திற. அதாவது, ஏழ்மை,வறுமை மாறக்கூடிய விதத்தில் நாம் உதவி செய்யவேண்டும் என்பதை இப்பகுதி நமக்கு கற்பிக்கிறது மத். 25: 31-46-இல் மத்தேயு நற்செய்தியாளர் இறுதித் தீர்ப்பு குறித்த உவமையை விளக்குகிறார். இதில் நம் வாழ்க்கையில் நம் செயல்பாடுகளுக்கு ஏற்ப கடவுள் வழங்கவிருக்கும் பரிசையும் தண்டனையையும் காண்பிக்கின்றார். மனித நேய செயல்பாடுகளின் அடிப்படையில் நாம் செயல்பட்டால் மட்டுமே விண்ணரசில் செல்ல முடியும் என்று இயேசு கிறிஸ்து சொன்னதைத் தெளிவுபடுத்துகிறார். உணவு இல்லாமல், தண்ணீர் இல்லாமல், ஆடை இல்லாமல், இல்லம் இல்லாமல் இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு செய்கின்ற உதவி ஆண்டவருக்குச் செய்த உதவி என்று தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

18-ம் நூற்றாணடில் இங்கிலாந்தைச் சார்ந்த டாக்டர். ஜாண் டெக்கர் திருநெல்வேலி பகுதியில் மருத்துவராகப் பணி செய்தார். ஒரு நாள் தெருவில் செல்லும்போது தண்ணீர் தாகத்தால் ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். ஒரு பெண்மணி கதவைத் திறந்து இவரை பார்த்தவுடன் கதவை மூடினார். அன்னிய ஆண்களிடம் இப்பெண்கள் பேசுவதில்லை என்பதை அறிந்துகொண்டார். இந்த செய்தியை இரண்டு கால்களும் இல்லாத தனது சகோதரி சாராள் டெக்கருக்கு கடிதம் வழியாகத் தெரியப்படுத்தினார். வீட்டில் முடங்கி கிடக்கும் பெண்கள் வெளியில் வரவேண்டும் என சாராள் டெக்கர் விரும்பினார். இவர்களுக்கு திருநெல்வேலி தெரியாது. ஆனால் இங்குள்ள பெண்கள் வாழ்வில் ஏற்றம்பெற பள்ளிக்கூடம், கல்லூரி தேவை என உணர்ந்தார். தனக்கென்று இருந்த 20 பவுன் நகையைச் சகோதரருக்கு அனுப்பிவைத்து கல்விக் கூடம், கல்லூரி துவங்கச் சொன்னார். இன்று வரை இலட்சக்கணக்கான பெண்கள் கல்விக்கற்று வாழ்வில் ஏற்றம்பெற இப்பெண்மணி காரணமாய் இருந்தார். நாமும் பெண்கள், ஏழை எளிய மக்கள், தேவையில் இருப்போர் வாழ்வில் மேன்மை பெற நமக்கிருக்கும் அறிவு, ஆற்றல், செல்வம் இவைகளைக் கொடுக்க முன்வருவோம்.

கடவுள் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கும் ஆற்றலை நல்வழியில் பயன்படுத்தி தீங்கு செய்தோருக்கு நன்மை செய்யவும், நற்பண்புகள் நம்மில் வெளிப்படுவதற்கும் எளியோர் வாழ்வு பெறுவதற்கும் பயன்படுத்துவோம்.

அருள்திரு. **J. ஸ்டீபன்**

# பெண்கள் இறைத் திட்டத்தின் கருவிகள்

விப. 1: 15 - 22 திப. 9: 36 - 42

லூக். 8: 1 - 3

மனிதர்கள் இப்பூமியில் தாங்கள் வாழும் காலத்தில் பல திட்டங்களைத் தீட்டி அவைகளைச் சிறப்பாய் செயல்படுத்துகின்றனர். பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கமும் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம். மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் என இன்னும் பல. ஆனால் இறைவனின் திருத்திட்டத்தை நிறைவேற்ற, இறைவன் இஸ்ரவேலரின் வரலாற்றில் மனிதர்களைக் குறிப்பாக, பெண்களை மிகச் சிறப்பான முறையில் சாதனையாளர்களாகப் பயன்படுத்தினார். சோம்பலுக்கோ, சோம்பேறிகளுக்கோ இடமில்லாத இறைத்திட்டத்தில் பெண்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மிகச்சிறந்த கருவிகளாக இறைவனால் பயன்படுத்தப்பட்டனர். விப. 1: 15 - 22, வசனங்களை அடிப்படையாகக் கொண்டு பெண்கள் எப்படி இறைத்திட்டத்தின் கருவிகளாக செயல்பட்டார்கள் என சிந்திப்போம்.

ஆதியிலே தேவன் மனிதர்களைப் படைத்து, ஆசீர்வதித்து, பலுகிப் பெருகி, பூமியை நிரப்பும்படியாகச் சொன்னார். தொடக்கநூல் 1: 28-ல் கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, “பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல்மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்” என்றார். ஆனால், விடுதலைப்பயண நூல் 1: 10-ல் “அவர்கள் எண்ணிக்கையில் பெருகிடாதவாறு தந்திரமாய்ச்செயல்படுவோம், வாருங்கள்”. எனக் கூறி எகிப்தியர் இஸ்ரவேலரை ஒடுக்கும்படிக்குக் கொடுமையாக வேலை வாங்கினார்கள் (விப. 1: 13).

**1. சளைக்காமல் உழைத்தார்கள்** (விப. 1: 13, 14)

முதலாவதாக, சிப்ரா, பூவா என்னும் மருத்துவப் பெண்கள் இருவரும் சளைக்காமல் முயற்சியுடன் உழைத்தார்கள். கடினமாக முழுமுயற்சியுடன் ஓயாமல், ஓய்வில்லாமல் உழைத்தார்கள். கடினமாய் உழைத்ததோடு கவனமாய் உழைத்தார்கள். கைகால்களை மட்டும் நம்பி கடினமாய் உழைக்காமல் கழுத்துக்கு மேலே இருக்கும் மூளையைப் பயன்படுத்திக் கவனமாய் உழைத்தார்கள். இவர்களுக்கு உழைப்பு வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. உழைப்பே வாழ்க்கையாக இருந்தது. இஸ்ரவேலருக்கு வேலை

செய்வது ஒன்றும் கடினமான பணி அல்ல. “நீ பூமிக்கு திரும்புமட்டும் உன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிப்பாய்” (தொநூ. 3: 19) என்பதை நன்கு அறிந்திருந்த அவர்கள் கடினமான வேலையைச் செய்ய கடுகளவும் அஞ்சவில்லை. ஆனால், பார்வோனின் கட்டளை கட்டாயப் பணியாக கொத்தடிமை வேலையாக இருந்தது. எல்லோரும் சாந்தினாலும் செங்கல்லினாலும் வேலை செய்தார்கள். (விப. 1: 14). இந்த மருத்துவப் பெண்களோ மாம்சத்தோடும் இரத்தத்தோடும், சாவுக்குப் போராடும் கர்ப்பிணிப் பெண்களோடும், பச்சைமண் என்று சொல்லப்படும் பச்சிளங் குழந்தைகளோடும் பணி செய்தார்கள். இவர்களுடைய வேலை மனித உயிர்களைக் கையாளுவதாக இருந்தது. மற்றவர்கள் வயல்களில் களையெடுக்கும் பணி செய்தார்கள். இவர்களோ சமுதாயத்தின் களையை அகற்றி, காக்கும் களப்பணிச் செய்தார்கள். மற்றவர்கள் தீவிரமாக வேலை செய்தார்கள். இவர்களோ தீவிரச் சிகிச்சை பிரிவில் உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். (விப. 1: 17). மற்றவர்கள் செய்த வேலைகள் அவர்களுடைய ஜீவனையும் கசப்பாக்குகிற அனுபவமாக இருந்தது. (விப. 1: 14). ஆனால், இவர்களுடைய வேலை ஜீவனை பாதுகாக்கும் பணியாக இருந்தது. (விப. 1: 17) மற்றவர்களின் வேலை நேரம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், 8 அல்லது 9 மணி நேரம். ஆனால் இவர்களுடைய வேலையோ குறிப்பிட்ட நேரமல்ல 24 மணிநேரம். “கைவருந்தி உழைப்பவர் தெய்வம்” என்றான் பாரதி. எங்கே உழைப்பிருக்கிறதோ, அங்கே மனம் தூய்மையாக இருக்கும். உழைப்பாளர் மனம் இறைவனின் சந்நிதியாகும். செய்யும் தொழிலே தெய்வம். உழைப்பாளிகள் வாழ்வர். வாழ்வித்து வாழ்வர். உழைப்பாளிகள் எவருக்கும் தீங்குசெய்யார். இக்கருத்துக்களை அழகுற விளக்கும் பட்டுக்கோட்டையின் பாடல் :

“உழைக்கின்ற நோக்கம் உறுதியாயிட்டா
கெடுக்கிற நோக்கம் வளராது - மனம்
கீழும் மேலும் புரளாது”

இஸ்ரவேலர் அநேகர் வேலை செய்து செத்தார்கள். ஆனால் இவர்கள் வேலை செய்ததால் சாவின் விளிம்பில் இருந்த அநேகர் பிழைத்தார்கள். தொற்காள் (எ) தபீத்தாள் தான் உயிரோடிருக்கும் போது விதவைகளுக்குச் செய்து கொடுத்த அங்கிகளும், வஸ்திரங்களும் அவளது கடின உழைப்பிற்கு ஆதாரங்களாயின. அவள் மரித்த பின்னும் அவளது உழைப்பு, உடை வடிவில் உரையாடியது (அப். 9: 39). கடின உழைப்பு நிச்சயமாக கனி தரும் என்பதில் ஐயமில்லை. “கண்டுபிடிப்புக்களின் தந்தை” என்று அழைக்கப்படுகின்ற தாமஸ் ஆல்வா எடிசன், கடின உழைப்பிற்கு சிறந்த உதாரணம். மின்குமிழைக் கண்டுபிடித்த அவர், மின்குமிழ்கள் நீண்டநேரம் எரிவதற்கான சரியான மின்னிழையைக் கண்டறிவதற்காக கிட்டத்தட்ட ஐந்தாயிரம் இழைகளைப் பரிசோதித்து

தோல்வியையே தழுவினார். பின்னர் விடாமுயற்சியுடன் கடினமாக உழைத்து சரியான இழையை கண்டுபிடித்து உலகத்தையே வியப்பில் ஆழ்த்தினார். ஒரு நபர் அடித்தட்டு மனிதராய் பிறந்து சாதனையாளராய் மாற வேண்டுமாயின் அவர் மிகுந்த அர்ப்பணிப்புடன் கடினமாக உழைத்தாக வேண்டும். மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் சோம்பேறித்தனத்தைக் கைவிட்டு உழைப்பை மூலதனமாக்கி கடினமாக, கவனமாக உழைத்தால் மட்டுமே வையகத்தில் வாழ்வாங்கு வாழமுடியும்.

**2. சாகாமல் பிழைத்தார்கள்** (விப. 1: 17, 18)

இரண்டாவதாக, பார்வோனின் ஆட்சி காலத்தில் பலர் செத்துப் பிழைத்து கொண்டிருந்தனர். கடினமான கட்டாய வேலைகளை செய்யச் சொல்லி உயிரை வாங்கினதால், வாழும் போதே, நாம் ஏன் வாழ்கிறோம் என்ற அவல நிலைமை. ஜீவன் கசப்பாகுகிற அளவிற்கு உழைத்தார்கள். ஆனால், சாகவில்லை. எகிப்தியர் சுமைச் சுமக்கிற வேலையினால் ஒடுக்கினார்கள் (வ. 11). பித்தோம், ராம்சேஸ் என்னும் பண்டகச்சாலைப் பட்டணங்களைக் கட்டும் கட்டிட பணியாளர்களாய் பயன்படுத்தினர் (வ. 11). எவ்வளவோ ஒடுக்கினார்கள் (வ. 13). கடின உழைப்பினால் நடைப் பிணங்களாக வாழ்ந்தவர்கள் அநேகரை பிழைக்க வைத்தார்கள். எடுத்துக்காட்டாக, பயத்தோடும், தயக்கத்தோடும் தாய்மை நிலையிலிருந்த எபிரேய பெண்கள், ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுத்து தற்காலிகமாக தாய் என்ற பதவி உயர்வு பெற்ற தாய்மார்கள், சாவின் விளிம்பிலிருந்த புதிதாய் பிறந்த ஆண் குழந்தைகள், ஏன்? இந்த இரு மருத்துவப் பெண்களின் வாழ்க்கையும், எந்நேரமும் சாவு வரலாம் என்ற நிலையில் மரணத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர். இந்த இரு மருத்துவப் பெண்களும் மரணத்தைப் பார்த்துப் பயப்படவில்லை. பார்வோனின் கட்டளைக்குப் பயப்படவில்லை. காக்கும் கடவுளுக்குப் பயந்தனர். (வ. 17). "மரணத்தைப் பார்த்து நான் பயப்படவில்லை. ஏனெனில், நான் இருக்கும் வரை அது என்னை நெருங்கப் போவதில்லை. மரணம் வரும் போது நான் இருப்பதில்லை", என்ற ஜூலியஸ் சீசரின் வார்த்தைகளை இந்த பெண்களின் உதடுகள் உச்சரித்தன. இறைவனால் பிரமிக்கத்தக்க அதிசயமாய், விசித்திர, விநோதமாக (தி.பா. 139: 14, 15) தாயின் கருவில் உருவாக்கப்பட்ட பிள்ளைகளை (ஆண்) உருத்தெரியாமல் வாழ்வை அழிக்கத் துடிக்கும் பார்வோனின் சதித்திட்டத்தைத் தவிடுபொடியாக்கி வாழ்வளிக்கும் இறைத்திட்டத்தின் பங்காளிகளாக மாறினர். தாலாட்டு பாடுவதற்கு முன்பே ஒப்பாரி பாடல் கேட்கக்கூடாது. தொப்புள்கொடி அறுக்கும் முன்னே கழுத்தறுத்து கொலை செய்யக்கூடாது. கன்னி கட்டும் போதே பூக்கள் உதிரக் கூடாது, கர்ப்பம் தரித்த அடுத்த கணமே கருச்சிதைவு நிகழக் கூடாது. வாழப் பிறந்த பச்சிளங்குழந்தைகள் சாகக்கூடாது என இறைவனோடு இணைந்து

இணைப்படைப்பாளர்களாக செயல்பட்டனர். படைத்தவருக்கும் பார்வோனுக்கும் இடையில் நடந்த வாழ்வா? சாவா? போராட்டத்தில் இந்த மருத்துவ பெண்கள் உயிர்காத்த மீட்பர்களாக செயல்பட்டனர்.

வாழ்க்கையின் முடிவு மரணம். ஆனால் இவர்களுக்கு மரணமே வாழ்வாக இருந்தது. கடினமாக உழைக்கிற பெண்களுக்குப் பிரசவம் சுகமாக இருக்கும் என்பார்கள். பிரசவத்திலும் ஒரு சுகம்? மகப்பேறு அறைக்கு 'Labour Ward' என்று பெயர் வைத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. பிரசவத்திலும் ஓர் கடின உழைப்பு தேவைப்பட்டது. இல்லையென்றால் இரு உயிர்களுக்கும் ஆபத்து நேரிடும். தமிழில் மகப்பேறு அறை என்று பெயர் பெற்றிருந்தாலும், பிரசவ அறை என்றும் சொல்லுகிறோம் ஏன் தெரியுமா? இன்னும் ஓர் உயிர் தவமாய் பிறக்கலாம் அல்லது இருக்கும் உயிர் சவமாய் துறக்கலாம். வேதனையோடு பிள்ளை பெறுவது கடவுளின் கட்டளை (தொநூ. 3: 16). ஆனால் அந்த வேதனையிலும் ஆண் பிள்ளை பிறந்தால் கொல்லப்படும் என்பது வேதனையிலும் வேதனை. வேதனையின் உச்சகட்டத்தில் இருப்போரின் சாவிற்கே சாவுமணி அடித்த சாதனையாளர்கள் இந்த இரு பெண்மணிகள் ! துணியாதவரை வாழ்க்கை பயங்காட்டும் ! துணிந்து பார் வாழ்க்கை வழிகாட்டும் ! சாவை சந்திக்கும் வரை உழைக்கும் வர்க்கம் பெண்கள் தான் ! எத்தனை எத்தனை பரிசோதனை ! அத்தனை வேதனையும் தாங்கியது அவள் சாதனை, மொத்த எலும்புகளும் உடையும் வலிதர, இடுப்பெலும்புகள் விலக வலிதர உயிரைக் கொடுத்து உயிரைப் பெற்றெடுக்கும் பெண்கள் !

மருத்துவம் செய்யும் போது பார்த்து "கொன்று போடுங்கள்". இது பார்வோனின் கட்டாய கட்டளை (விப. 1: 17). கொன்று போடுவது மருத்துவச்சிகள் பணியல்ல. உயிர் காக்கும் வேலையை இந்த வெள்ளை தேவதைகள் செய்தார்கள். "தம் அலுவலில் திறமை காட்டுகின்ற ஒருவரைப் பார், அவர் பாமர மனிதரிடையே இரார், அரசு அவையில் இருப்பார்" (நீமொ. 22: 29). தங்கள் வேலையில் ஜாக்கிரதையாக இருந்த சிப்ரா, பூவா பார்வோனுக்கு முன்பாக நின்றதில் வியப்பொன்றுமில்லை. சொல்லுகிற வேலைகளைச் செய்வது உழைப்பு. ஆண் பிள்ளைகளை கொன்றால் சம்பளமும் சன்மானமும் கொடுக்கப்படும். ஆனால் சொல்லுகின்ற காரியத்தைச் செய்யாமல், அதை மாற்றி செய்வதும் உழைப்பு தான். எபிரேய பெண்கள் எகிப்திய பெண்களைப் போல வேலைக்கள்ளிகள் அல்லர், மாடு மாதிரி உழைக்கும் இவர்கள் வேலைக்காரிகள் மட்டுமல்ல மூளைக்காரிகளும் தான் !

இறைவன் பலவீனமான பெண்களான சிப்ரா, பூவாளைக்கொண்டு பலசாலிகளான ஆண் பிள்ளைகளைக் குறிப்பாக, விடுதலையாளரான மோசேயை சாவிலிருந்து விடுதலையாக்கினார். அதோடு இவர்கள்

பிரசவத்திலிருந்து பல எபிரேய பெண்களையும் அனைத்து (ஆண், பெண்) பிள்ளைகளையும் காப்பாற்றி இவர்களும் சாவாமல் பிழைத்து இறைத்திட்டத்தில் இடம் பிடித்தார்கள்.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்,
வாசல்தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எது வென்றாலும்
வாடிநின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்,

இறுதிவரைக்கும் அமைதி இருக்கும் என்ற கண்ணதாசனின் வரிகள், இன்றைய மனிதர்களின் துன்பங்களுக்கு காரணம் "வாழத் தெரியாததா" அல்லது "வாழவே தெரியாததா" என நம்மை யோசிக்க வைக்கிறது. சில மணி நேரங்களே வாழும் மலர்கள் மனித சமூகத்துக்கு மகரந்தத்தை உண்டு பண்ணி, நறுமணத்தை வீசி விட்டுத் தன் மரணத்துக்கும் மதிப்பு கூட்டுகிறது. ஆனால் மனித இனம் இன்று பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உள்ள வாழ்வை குழப்பத்தோடே தான் வாழ்ந்து வருகிறது.

**3. சந்ததியாய் தழைத்தார்கள்** (விப. 1: 20, 21)

இறுதியாக, உழைத்து, பிழைத்தவர்கள், இப்போது தழைத்தார்கள். தழைத்தல் என்பது வளர்தல். பெருகுதல் அங்கே, இஸ்ரயேல் தலைமுறை தழைப்பதற்குத் தடை இருந்தது. வளரக்கூடாது, பெருகக்கூடாது என்று எத்தனையோ எத்தனங்கள் இருந்தன. எதுத் தடைப் பண்ணப்பட்டிருந்ததோ அதைக் கொண்டே இறைவன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இந்த பெண்கள் வலுவிழந்த, வாழ்விழந்த பெண்களின், குழந்தைகளின் வாழ்க்கையைக் காப்பாற்ற உழைத்ததோடு அவர்களைப் பிழைக்க வைத்தார்கள். கர்த்தரின் கட்டளைகளுக்குப் பயந்து கீழ்ப்படிந்தார்கள். கடவுளின் சுதந்தரத்தைக் கரங்கொடுத்து, உயிர் கொடுத்துக் காப்பாற்றினார்கள். இறைத்திட்டத்தில் வாழ்வில் வளமில்லாதவர்களை, தழைக்கச் செய்தார்கள். பிழைப்பிற்காக உழைக்கவில்லை. பிறரைப் பிழைக்க வைக்க உழைக்கிறார்கள். வாழ்வை அழிக்க அல்ல. வாழ்வளித்து வாழ்கிறார்கள். உழைக்கப் பயப்படாதவர்கள், கடவுளுக்குப் பயப்படுகிறார்கள். கடவுள் மிகச் சிறந்த படைப்பாளர். படைக்கப்பட்டவைகளைப் பாங்குடன் பராமரிப்பது அனைவரின் பொறுப்பு. இறைத்திட்டத்தில், தங்கள் பணியை கடமைக்குச் செய்யாமல் கண்ணும் கருத்துமாகச் செய்ததால் வெற்றி பெற்றார்கள். எகிப்தியர் இஸ்ரவேலரை எத்தனை ஒடுக்கினார்களோ, அத்தனைக்கு அவர்கள் எண்ணிக்கையில் உயர்ந்தனர் பெருகிப் பரவினர். இதன் பொருட்டு கடவுள் மருத்துவப் பெண்களுக்கு நன்மை செய்தார் (வி.ப. 1: 20) இஸ்ரயேல் மக்களையும்

எண்ணிக்கையில் பெருகச் செய்தார். அவர்கள் ஆள்பலம் மிக்கவர் ஆயினர். இம்மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், அவர் அவர்கள் குடும்பங்களைத் தழைக்கச் செய்தார் (வி.ப. 1: 21). லூக். 8: 1 - 3-ல் பல பெண்கள் தங்களுக்கென எதையும் சேர்த்து வைக்காமல் தங்கள் ஆஸ்திகளை இறைத் திட்டத்தின் நிறைவேறுதலுக்கென்று கொடுத்ததால் அவர்கள் தழைத்ததோடு, இறைத் திட்டத்திலும் கருவிகளாக செயல்பட்டார்கள்.

தனது மருத்துவ மிஷனரி தந்தையின் அடிச்சுவடுகளை ஒருபோதும் பின்பற்ற மாட்டேன் என்பதில் உறுதியாக இருந்தார் ஐடா ஸ்கடர். இந்தியப் பெண்கள் தங்கள் மத நம்பிக்கையால், ஆண் மருத்துவர்கள் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அனுமதிக்காததால், இறப்பதை தன் கண்களால் பார்த்தபோது, அவர் கடவுளிடம், ஆண்டவரே! நீர் விரும்பினால், இந்த பெண்களுக்கு உதவுவதற்காக இந்தியாவில் என் வாழ்நாள் முழுவதையும் செலவிடுவேன் என்று பிரார்த்தனை செய்தார். ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் சேவை செய்து கிறிஸ்துவில் காணப்பட்ட இரக்கத்தை வெளிப்படுத்தினார். அவர் கடவுளுக்கு அஞ்சி, கர்ப்பிணிப் பெண்களின் அவல நிலையை உணர்ந்து, கரிசனையுள்ள கண்களையும், கருணையுள்ள கரங்களையும் பெற்றிருந்ததினால் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை வேலூரில் ஸ்தாபித்து கிராமப்புற மக்களுக்கு உயிர் காக்கும் ஆரோக்கிய பாதுகாப்பைக் கொண்டு வந்தார். மேலும் ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மக்களைக் குணப்படுத்தும் மிகச் சிறந்த இடமாக அந்த மருத்துவமனை தழைத்து ஆலமரமாக திகழ்கிறது.

நாமும் இறைவனின் திருத்திட்டத்தில் உழைப்போம்! பிழைப்போம்!! தழைப்போம்!!! இறைத்திட்டத்தின் கருவிகளாக செயல்பட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

**திருமதி. அறிவர். I. சோபனா**

# ஊக்குவிக்கும் இறைமக்கள்

தி.ப. 9: 19-30

திப. 9: 27

ஊக்கமூட்டல் எனும் பண்பு மிகப்பெரிய ஆற்றலுடையது. மனித மனமும் மூளையும் பணிப்பழுவாலும் நம்மைச் சுற்றியுள்ள நெருக்கடிகளாலும் சோர்வடையும் இயல்புடையது. ஒன்றரை மணிநேரத்திற்கு ஒருமுறை மூளை சோர்வடையக்கூடியது என மூளை ஆய்வு நிபுணர்கள் கூறுகின்றனர். இப்படிச் சோர்வடையும் மனதையும் மூளையையும் திரும்பச் செயல்படத் தூண்டும் காரணி ஊக்கமூட்டுதல் மட்டுமே.

இன்றைய சமூகம் பலச் சவால்களையும் சிக்கல்களையும் மனிதருக்குக் கொடுப்பதால் ஊக்கமூட்டல் மிகமிகத் தேவையாகக் காணப்படுகிறது.

விவேகானந்தரின் இளமைப்பருவ நாட்களில் நிகழ்வு ஒன்றில் ஒரு காகிதத்தை மற்றொரு காகிதத்துடன் இணைக்க "பின்" தேவைப்பட்டபோது எவரிடமாவது இருக்கிறதா என்று தன்னுடன் இருந்தவர்களிடம் கேட்டார். இதைக் கண்ணுற்ற பெரியவர் ஒருவர் இவரைக் கொச்சைப்படுத்தும் வண்ணம் இளைஞர்கள் பின் வாங்கலாமா என்று கேட்டார். இதற்கு பதிலுரையாக விவேகானந்தர் அந்த பெரியவரிடம் முதியவர்களாகிய நீங்கள் (ஊக்குவித்தால்) ஊக்கு விற்றால் நாங்கள் ஏன் பின் வாங்கப்போகிறோம் என்று ஊக்குவித்தலின் அருமையை அழகாகக் கூறினார்.

ஊக்குவிக்கும் மனப்பான்மை குன்றிய இக்காலத்தில் உள்ள நாம் திருமறையின் வெளிச்சத்தில் ஊக்குவித்தலுக்கு நற்சான்று பகர்ந்த யோசேப்பு எனும் இயற்பெயரைக்கொண்ட பர்னபா-வின் வாழ்வை மையமாகக் கொண்டு சிந்திப்போம்.

**இந்த பர்னபா யார்?**

சீப்புரு (சீப்ரு) தீவிலே குடியேறியிருந்த யூதனும், லேவியனுமாகிய யோசேப்பு (யோசே) என்ற இயற்பெயரைக் கொண்டவரே இவர். திருத்தூதுவர்களே இவருக்கு ஆறுதலின் மகன் என்ற பெயரை வழங்கியுள்ளனர் (திப.4: 36). 'PARAKLESIS' என்ற கிரேக்க வார்த்தையையே தமிழ் திருமறை மொழியாக்கத்தில் "ஹென்றி பவர்" அவர்கள் "ஆறுதலின் மகன்" என்று மொழியாக்கம் செய்துள்ளார். இந்த கிரேக்க சொல்லானது புதிய

உடன்படிக்கை நூலில் (N.T.) சுமார் 29 முறை வருகிறது. இது ஊக்குவி/ஊக்கப்படுத்து/ஊக்குவித்தல் என்ற பொருளில் மொழியாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 1 திமொ. 5: 1 இதற்கு பொருத்தமான எடுத்துக்காட்டாகும். திருவிவிலிய மறையில் (தி.ப. 4: 36) ஊக்குவிக்கும் பண்பு என்றே மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ‘KJV’ மொழி பெயர்ப்பைத் தவிர வேறு பல திருப்புதல்களில் ‘PARAKLESIS’ என்பதற்குப் பொருள் ‘SON OF ENCOURAGEMENT’ என்றே மொழியாக்கம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பர்னபா தமது ஊக்குவிக்கும் பண்பால் மற்றவர்களுக்கு ஆறுதலாய் இருந்திருக்கலாம் என்று நாம் ஏற்றுக்கொள்வது பொருத்தமானதே.

இன்று நாம் ஆண்கள் சங்க ஆண்டுவிழா சிறப்பு தினத்தில் நாம் ஒருவருக்கொருவர் பிறர் வாழ்வில் ஒளியேற்ற நம்மில் காணப்பட வேண்டிய ஊக்குவித்தல் பண்பியல்பை பர்னபாவின் வாழ்வை மையமாகக் கொண்டு சிந்தனைச் செய்வோம்.

**1. பகிர்தலின் வழி ஊக்குவிக்கும் பர்னபா** (தி.ப. 4: 37)

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தொடர்ப் பணியை அவரது சீடர்கள் செய்யத் தொடங்கிய அந்த நாட்களில் அவர்களுக்கு நல்ல வரவேற்பு எதுவும் இல்லை மக்கள் எல்லாராலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை. மாறாக நெருக்கம் ஏற்படுத்தி அவர்களை கலங்கடித்து சிதறச் செய்தனர். இந்த நாட்களில் ஏழைப் பற்றுறுதியாளர்கள் அவர்களது பற்றுறுதியில் சிதைந்துவிடாதபடி அவர்களைக் காக்கவேண்டியது திருச்சபையின் கடமையாக இருந்தது. ஒன்று கூடிய இறைமக்கள் தங்கள் உடமைகளை ஒன்றாகப் பகிர்ந்து அனுபவித்தனர். நிலங்களை உடையவர்கள் அதனை விற்று அதன் தொகையை திருத்தூதுவர்களிடம் கொணர்ந்தனர். எவரும் எதையும் தமக்குரியது என்று கூறவில்லை (திப. 4: 32-35) எவருக்கும் எதுவும் குறைவுபடவுமில்லை.

அந்த நாட்களில் பர்னபா என்ற இந்த சகோதரரும் எவரது வேண்டுகோளும், கண்டிப்பும் இன்றி தனது நிலத்தைத் தாமாக முன்வந்து விற்று அதன் தொகையை திருத்தூதுவர்களிடம் ஒப்படைத்தார். இது இவரது பகிர்தலின் பண்பிற்கு அடையாளமாகும்.

கடந்த ஆண்டு ஒரு பெயர்பெற்ற அயல்நாட்டு மென்பொருள் நிறுவனம் தனது பணியாளர்களுக்கு மொத்த இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தொகையை பகிர்ந்து கொடுத்தது (பணம், வீடு, கார், அயல்நாடு சுற்றுலா) இதனைக்குறித்து அந்நிறுவன உரிமையாளரும், நிர்வாக இயக்குனருமாகிய அந்த நபர் கூறும்போது எமது நிறுவன பணியாளர்களுக்கு இலாபத்தில் பகிர்ந்து

கொடுப்பதன் வழியாக அவர்கள் இன்னும் ஆர்வமுடன் உழைப்பதால் எனது ஆண்டு வருமானம் இன்னும் பெருகிட வாயப்பு இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் இப்படிச் செய்கிறோம் என கூறினார்.

பர்னபாவின் பகிர்தலில் எந்த இலாப நோக்கும் இல்லை. தன் நிலத்தை விற்று அதன் தொகையை திருத்தூதுவர்களிடம் கொடுப்பதற்கு கைமாறாக அவர்களிடம் எதையும் எதிர்பார்க்கவுமில்லை.

அந்நாட்களில் கொடுக்கப்பட்டப் பகிர்தல் எல்லாவற்றிலும் இவரது பகிர்வு மேலானதாகவும் சிறந்ததாகவும் இருந்திருக்கக் கூடும். எனவேதான் தூய லூக்கா பர்னபாவுடைய பெயரை பதிவு செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அன்பர்களே, ஆண்டவர் இயேசு நமது கையில் தந்துள்ள பணம், பொருட்கள், திறமை, ஞானம் நம் ஒருவருக்கே என்று எண்ணுகிறோமா அல்லது நம்முடன் வாழும் ஏழை எளியோருக்கும் தேவையில் இருப்பவர்களுக்கும் பகிரப்பட்டு அவர்கள் வாழ்வில் நம்பிக்கையிழந்த நிலையிலிருந்து ஊக்கம் ஊட்டப்பட செலவிடுகிறோமா எனச் சிந்திப்போம்.

“தாராள குணமுள்ள ஆத்துமா செழிக்கும்”, என நீமொ. 11: 24-28 வரையுள்ள திருமொழிகள் கூறுகின்றன.

திருத்தூதுவர்களால் அந்தியோகியாவுக்கு அனுப்பப்பட்ட பர்னபா கொடிய பஞ்சமுண்டான காலத்தில் யூதாவில் குடியிருக்கிற சகோதர சகோதரிகளுக்கு உதவ அந்தியோகிய திருச்சபையைத் தூண்டினார். இதனால் ஏனைய சகோதரர்கள் சேகரித்த உதவித் தொகையையும் பர்னபா வழியாக மூப்பர்களிடம் கொடுத்து அனுப்பினர் என தி.ப. 11:30 கூறுகிறது. இவரது பகிர்தலின் பண்பிற்கு இதுவும் ஒரு நற்சான்றே.

நமது பகிர்தலின் பண்பால் தொய்ந்துபோன உள்ளங்களை, ஊழியங்களை ஊக்கப்படுத்துவோம் உதவிகரமாகச் செயல்படுவோம் கர்த்தருடைய திருப்பெயருக்கே மாட்சி ஏற்படுத்துவோம்.

**2. ஏற்றுக்கொள்வதின் வழி ஊக்குவிக்கும் பர்னபா** (திப. 9: 27)

“மானிடரை மீட்க தம்மையே தருவில் தந்த இயேசுவே கிறிஸ்து”, என்று சீடர்கள் உலகிற்கு உரக்கக் கூறியபோது எருசலேமிலிருந்த அதிகார வர்க்கம் அவர்களை ஒட்டுமொத்தமாக அழித்துவிடத் திட்டமிட்டது. யூதச் சமயத் தலைவர்கள், பரிசேயர், சதுசேயர் இன்னும் ரோம ஆளுநர்கள் யாவரும் ஒன்றுக் கூடி திருத்தூதுவர்களுக்குத் துன்பம் விளைவித்தனர் (திப. 4-6 அதிகாரங்கள்). ஆனால் சீடர்கள் கர்த்தர் தங்களுக்குத் தந்தருளின தூய ஆவியாரின்

ஆற்றலாலும், அறிவாலும் திடன்பெற்று இன்னும் அதிக தைரியத்தோடே திருவசனத்தைப் போதித்து சான்று பகர்ந்தனர். இந்நாட்களில் சீடர்களின் பெருக்கம், திருச்சபையின் எழுச்சி மற்றும் வளர்ச்சி போன்ற நல்ல மாற்றங்களும் நிகழ்ந்தன. இதை பொறுக்கமாட்டாத அதிகார வர்க்கம் சீடர்களைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டது. முதல் குருதிச் சான்றாளராக ஸ்தேவான் மாண்டார் (திப. 6: 8-15) அந்த கொலையான கூட்டத்தில் ஒருவரே சவுல் எனப்பட்ட இளைஞன். தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் கிறிஸ்துவின் பேரொளியால் சந்திக்கப்பட்டு அவரது விருப்பத்திற்குத் தன்னை ஒப்படைத்து (திப. 9: 1-18) தமஸ்குவில் திருப்பணியைத் தொடங்கினார். அங்கே பவுலுக்கு நெருக்கம் ஏற்படுகிறபோது தமஸ்குவிலிருந்த சீடர்கள், அவரைக் காப்பாற்ற பத்திரமாக அந்நகரை விட்டு வெளியே அனுப்பிவிடுகின்றனர். பவுல் எருசலேமிலிருந்த சீடர்களுடன் இணைந்து திருப்பணிச் செய்ய விரும்பினார். ஆனால் எருசலேமிலிருந்த சீடர்கள் எவரும் பவுலை நம்பி ஏற்றுக்கொள்ளவில்லை இந்நேரம் பவுலை ஏற்றுக்கொண்டு ஊக்குவித்து சீடர்களுடன் பேசி பவுலின் மனமாற்றம் உண்மை என பவுலுக்காக குரல் கொடுத்தவர் பர்னபா எனும் இளைஞனே (திப. 9: 26, 27).

தவறிழைத்து திருந்தி வருவோரை உள்ளன்போடு ஏற்றுக்கொள்வதே அவர் புதிய வாழ்வு வாழ்வதற்கான அடிப்படை என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர். பொதுவாக நமது சமூகம் சிறைத் தண்டனை பெற்று விடுதலை பெறும் நபர்கள், போதைக்கு அடிமையாகி அதினின்று மீண்டு புது வாழ்வுக்குத் திரும்புவோர் போன்றோரின் பழைய வாழ்வையே முன்னிறுத்தி ஏற்க மறுத்து விடுகின்றது. அவர்கள் புதிய வாழ்வு வாழ ஊக்குவிப்பதற்குப் பதிலாக அவர்களைக் கொச்சைப்படுத்துகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் கூட மறுப்பு தெரிவிக்கப்படுகிறது. இது அவர்கள் மீண்டும் தவறிழைக்கக் காரணியாகிவிடுகிறது.

இங்கு மனமாற்றம் பெற்று கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்படைத்த பவுலை திருத்தொண்டர்கள் ஏற்க பயந்து நின்ற வேளையில் பர்னபா மிக தைரியமாக ஏற்று பிற சீடர்களும் அவரை ஏற்றுக்கொள்ள காரணராக அமைந்தனர். பவுலை ஊக்கப்படுத்தியதால், பவுல் திருத்தூதுவர் எல்லாரிலும் சிறப்பானவராக விளங்கிட முடிந்தது.

“அந்நியனாய் இருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்” (மத். 25: 35) என்ற இயேசு கிறிஸ்துவின் கூற்றிற்கிணங்க அந்நியராக எண்ணப்பட்டப் பவுலை ஏற்று ஊக்கமூட்டிய பர்னபாவின் செயல் மிகப்பெரிய புரட்சி என்று சொல்லலாம். இதன் வழி பவுலாரை முதல் நூற்றாண்டு திருச்சபைக்கு அடையாளம் காட்டியவர் என்ற சிறப்புப் பெயரையே பெற்றுவிட்டார் பர்னபா.

நாமும் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட நபர்களை ஏற்றுக்கொண்டு அவர்களை ஊக்குவிப்பதன் வழி நமது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

**3. சான்று பகர்தலின் வழி ஊக்குவிக்கும் பர்னபா** (திப. 11: 24)

“அவன் நல்லவனும் தூய ஆவியாராலும் பற்றுறுதியாலும் நிறையப்பட்டவருமாயிருந்தான்.”

இந்த சிறந்த கூற்று திருத்தூதர் பணிகளை எழுதிய தூய லூக்காவால் பர்னபாவுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புச் சான்றாகும். ஏற்கனவே சீடர்களால் “ஆறுதலின் மகன்” அல்லது “ஊக்குவிப்பவர்” என்ற பெயர்களைப் பெற்றவரான இவருக்கு லூக்கா தரும் சான்று மிக உயர்ந்தது.

கிறிஸ்தவர்கள் என்றும் பற்றுறுதி கூட்டத்தார் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் நம்மைக் காண்கிறவர்கள், நமக்கு அடுத்திருப்பவர்கள், உடன் பணியாளர்கள் நம்மைக்குறித்து இத்தகைய சான்றுரைக்க முடிகிறதா? என சிந்தித்தல் நன்று.

பழைய உடன்படிக்கை நூலில் (O.T.) அல்லது ஒரு சில தனிநபரைக் குறித்து கர்த்தர் அவர்களின் உண்மைத் தன்மை, கர்த்தருக்குக் கீழ்படிதல், பற்றுறுதி வாழ்வு, நேர்மை இவைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்குச் சான்றுள்ள பெயர்களைச் சூட்டியுள்ளதையும், பெயரிட்டு அழைப்பதையும் நாம் திருமறையில் காணலாம். (ஆபிரகாம், மோசே, யாக்கோபு, யோபு) அதுபோல புதிய உடன்படிக்கை நூலில் நாத்தான்வேல் போன்று ஒரு சிலரை இயேசு பாராட்டி மகிழ்ந்தார். அந்த வரிசையில் இயேசுவின் திருத்தூதுவர்களாலும் சிலர் பாராட்டப்பட்டனர் அவர்களில் ஒருவர் இந்த பர்னபா.

இம்மனிதன் தனது சான்றுள்ள வாழ்வின் வழி நமக்கு கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு ஊக்கமளிக்கிறார். படித்து பணம் செலவு செய்து வாங்கும் பட்டங்களைவிட வாழ்வியல் செயல்களால் சான்றுள்ள வாழ்வால் நாம் பெற்றிடும் நற்சான்று நம்முடன் வாழ்வின் இறுதிவரை மட்டுமல்ல அதற்குப் பின்னரும் நம்மைக்குறித்துப் பேசும்.

கிறிஸ்து இயேசுவில் அன்பு சகோதர சகோதரிகளே இந்த உலகத்தில் நமக்கு தரப்பட்டுள்ள வாழ்வு ஒரே ஒரு வாழ்க்கை. இந்த நாட்களில் நான் பெரியவன், என்னைப் போல ஒருவரும் இல்லையென நமது பெருமையைக் கூறாமல் நமது செயல்களால் சான்றுள்ள வாழ்வு வாழ்ந்து காட்டுவோம். குறிப்பாக பகிர்தலின் வழியாகவும், நம் சமூகத்தில் ஓரம் கட்டப்பட்டு, பின்

தங்கிய நிலையில் அங்கீகாரம் இழந்த நம் சகோதர சகோதரிகளை ஏற்று மதிப்பளித்து அவர்களை ஊக்கப்படுத்தி நற்சான்றுகளாய் நாம் வாழ வேண்டியவர்கள் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

கலாத்தியர் திருமுகத்தில் (கலா. 5: 24-26) பவுலார் கிறிஸ்துவினுடையவர்கள் வாழவேண்டிய வாழ்வுமுறை என்ன என்பதை மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். அதோடு அழிக்கப்படவேண்டிய ஊனியல்புகளையும் குறிப்பிட்டுள்ளார். இன்று நமது சிந்தனைக்கு ஆதாரமான பர்னபா போன்று மற்றவர்களை நம் எல்லா செயல்களாலும் ஊக்கமூட்டுவோம். இறையரசை இம்மண்ணில் இன்னும் விரிவடையச் செய்வோம்.

அருள்திரு. **P. ஜேக்கப் பீற்றர்**

# என் உள்ளம் ஆண்டவரைப் போற்றுகின்றது

திபா. 98 லூக். 1: 46-55

“இசையையும்” “பாடல்களையும்“ விரும்பாத, மக்கள் இல்லை. மனிதர்கள் தங்கள் இன்ப, துன்ப வேளைகளில் பாடல்களைப் பாடுகின்றனர். ஆய்வுகள் கூறும்போது பாடல்களைக் கேட்பதினால் மனிதர்களின் மூளை சீராக செயல்படுவதாகக் கூறுகின்றனர். ஞாபகச் சக்தி அதிகரிக்கிறது என்கின்றனர். கிரேக்க நாட்டில் முற்காலங்களல் வியாதிலிருந்து விடுதலைப் பெறும் அருமருந்தாக இசையை கருதினர். மனித வாழ்வில் பாடல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடவுளுக்கும் மனிதர்களுக்குமிடையே உள்ள உறவை வலுப்படுத்துவதிலும், பாடல்கள் முக்கிய இடம் பெறுகிறது. இசையை மனிதன் கண்டு பிடித்தான் என்பதை விட உலகம் உண்டாவதற்கு முன்னே உலகில் வியாபித்திருந்தது என்று கூறுவர். இறைத் தொழுகையை அலங்கரிப்பது இசையும் பாடலுமே.

**திருமறையும் பாடல்களும்**

திருப்பாடல்கள் முழுவதும் மனித உணர்வுகளாகிய மகிழ்ச்சி, இன்பம், துன்பம், கோபம், பயம், சோர்வு ஆகியவைகளைப் பாடல் வழியாக வெளிப்படுத்தும் ஊடகமாக உள்ளது. திருப்பாடல் புத்தகத்தைத் தவிர விடுதலைப் பயணம் 15-ம் அதிகாரத்தில் மோசேயின் வெற்றிப்பாடலை பார்க்கலாம். “ஆண்டவருக்கு நான் புகழ்பாடுவேன் ஏனெனில் அவர் மாட்சியுடன் வெற்றி பெற்றார்” என்று பாடுகின்றார்.

**மிரியாமின் பாடல் :** (விடுதலைப்பயணம் 15: 19-21)

இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத் தனத்தில் இருக்கும்போது ஆண்டவருக்கு ஆராதனை செய்ய முடியவில்லை. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று செங்கடலைக் கடந்த பின்னரே அவர்கள் ஆண்டவரைப் புகழ்ந்துப் பாடி ஆராதித்தனர். மிரியாம் தன் கையிலே தம்புருவை எடுத்து கொண்டாள் (கஞ்சிரா), பெண்கள் அனைவரும் கஞ்சிரா கொட்டி கொண்டும், நடனத்தோடும் அவள் பின் சென்றனர். விப. 15: 21 ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள். ஏனெனில் அவர் மாட்சியுடன் வெற்றி பெற்றார் . . . என்று பாடினார்கள்.

**தெபோராவின் வெற்றிப் பாடல்** (நீத. 5: 1-31)

“அதிகாரம் படைத்த ராஜாக்களே கேளுங்கள் அதிபதிகளே செவி

கொடுங்கள் நான் கர்த்தரைப்பாடி ஆண்டவருக்குப் பண் இசைப்பேன். ஆண்டவரின் புகழைப் பாடுவேன்" (நீத. 5: 3) என்று ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்த வெற்றியைப் பாடி ஆண்டவரைப் புகழ்கின்றார். இஸ்ரவேலரை ஆண்டவர் கானானிய மன்னன் யாபினிடம் ஒப்புகொடுத்தார். அவனுடைய படைத்தலைவன் சிசரா. தெபோரா பாராக்கிடம் எழுந்திரும் இந்நாளில் ஆண்டவர் சிசராவை உம்மிடம் ஒப்படைப்பார் என்று கூறுகின்றார். பாராக்கு தாபோர் மலையிலிருந்து இறங்கினார். பத்தாயிரம் பேர் அவரை பின் தொடர்ந்தனர். ஆண்டவர் சிசராவையும் அவருடைய தேர்கள் அனைத்தையும் படை முழுவதையும், வாள் முனையில் பாராக்கின் முன்னால் சிதறடித்தார். சிசெரா யாவேலின் கூடாரத்தில் தஞ்சமடைந்தார். தண்ணீர் கேட்ட சிசெராவிற்கு பாலை குடிக்கக் கொடுத்து, அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது எபேரின் மனைவி யாவேல் நெற்றிப்பொட்டில் சுத்தியால் அடித்துக் கொலை செய்தாள். அந்த வெற்றியை தான் தெபோராள் பாடலாகப் பாடி ஆண்டவரை புகழ்ந்தார்.

**அன்னாவின் நன்றிப்பாடல்** (1 சாமு. 2)

எல்கானாவிற்கு அன்னா, பெனின்னா என்ற 2 மனைவிகள் இருந்தனர். அன்னாவுக்கு குழந்தைகள் இல்லை. பெனினாவுக்கு குழந்தைகள் இருந்தனர். அன்னாவுக்குக் குழந்தைகள் இல்லாததால் பெனின்னா அவளைத் துன்புறுத்தி வந்தார். ஆகவே பண்டிகைக்குச் சீலோவிற்கு சென்ற அன்னா மனம் கசந்து அழுதார். ஆண்டவரிடம் பொருத்தனை பண்ணி வேண்டுதல் செய்தாள். ஆண்டவரே நீர் எனக்கு ஒரு ஆண்மகவைக் கொடுத்தால், அவனை இறைப்பணிக்கு ஒப்புக்கொடுப்னே என்று. ஆண்டவர் இரங்கிக் கொடுத்த சாமுவேலை ஆலயம் சென்று ஏலியிடம் ஒப்படைத்து விட்டு நன்றி நிறை இதயத்தோடு ஆண்டவரின் புகழைப் பாடினார். 1 சாமு. 2: 25, "ஆண்டவரைப் போன்ற தூயவர் வேறு எவரும் சிலர், ஆண்டவர் அறிவின் இறைவன்". 1 சாமு. 2: 4, "வலியோரின் வில்கள் உடைபடுகின்றன. தடுமாறினோர் வலிமை பெறுகின்றனர். நிறைவுடன் வாழ்ந்தோர் கூலிக்கு உணவு பெறுகின்றனர். பசியுடன் இருந்தோரின் பசி தீர்த்தார்". 1 சாமு. 2: 8, "புழுதியிலிருந்து அவர் ஏழைகளை உயர்த்துகின்றார். குப்பையினின்று வறியவரைத் தூக்கி விடுகின்றார். மாண்புறு அரியணையை அவர்களுக்கு உரிமையாக்குகிறார்" என்று பாடி புகழ்கின்றார். அன்னாவின் பாடலைப் போலவே மரியாள் ஆண்டவரைப் பாடி போற்றுகின்றார்.

**மரியாவின் மகிழ்ச்சி பாடல்**

மரியாவின் பாடலை மரியாவின் நன்றிப் பாடல், மகிழ்ச்சிப் பாடல் (தோத்திரப் பாடல்) என்று கூறலாம். இது அன்னாவின் நன்றி பாடலுக் கொப்பான

(1 சாமு. 2 : 1-10) பாடலாக கருதப்படுகிறது. இப்பாடலின் லத்தீன் மொழிப்பெயர்ப்பிலுள்ள முதல் சொல்லிருந்து ‘magnificate’ என்னும் ஆங்கிலப்பெயர் வந்துள்ளது. யூத மக்கள் பழைய ஏற்ப்பாட்டிலுள்ள பல பக்திப்பாடல்களையும், சங்கீதங்களையும் மனனம் செய்து பாடி வந்தனர். மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளும், உணர்ச்சிகளும் ஏற்படும் பொழுது இப்பாடல்களின் சொற்களால் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினர். மரியாவின் ஆனந்த உணர்ச்சியால் மரியா இப்பாடலைப் பாடியுள்ளார். மரியா இப்பாடலை அரமேயு மொழியில் பாடினார். கிரேக்கச் சொல்லின் சரியான மொழிபெயர்ப்பு “பெரிதாகிறது”. “அகலமடைகிறது”, “விரிவடைகிறது” என்பதாம். கர்த்தரை புகழ்ந்து பாடி மகிமைப்படுத்தும். இப்பாடலில் கர்த்தரை “இரட்சகர்” என்று மரியா பாடி மகிழ்கிறார்.

மரியாவின் பாடல் ஒருங்கிணைந்த பெண்மையின் பேராற்றலை வெளிப்படுத்துகிறது. அடிமைதனத்தின் நுகத்தடியில் இருந்த பெண்கள் பேறு பெற்றவர்கள் ஏனெனில் அவர் தம் அடிமையின்தாழ்மையைக் கண்ணோக்கினார் (லூக்கா 1: 48) . இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். யூத கலாச்சாரத்தில் பெண்களை நாயை விட தாழ்வாகக் கருதினர். ஆகவே தான் மரியா அடிமையின் தாழ்மையைக் கண்ணோக்கினார் என்று பாடினார்.

“ஆண்டவரை எனது உள்ளம்போற்றிப் பெருமைப்படுத்துகிறது. எனது மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது. ஏனெனில் வல்லவராம் கடவுள் அரும்பெரும் செயல்களைச் செய்துள்ளார்” என்று ஆண்டவரின் புகழைப் பாடுகின்றார். ஆண்டவர் ஒருவரே புகழ்ச்சிக்குரியவர். உலக இரட்சகராம் அருள்நாதர் இயேசு மரியாவின் மகனாய் மண்ணுலகில் பிறந்தபோது பரமச் சேனையின் திரளும் இவ்வண்ணமான பாடலைத்தான் பாடியது. “உடனே விண்ணகத்தூதர் பேரணி அந்தத் தூதருடன் சேர்ந்து உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” என்று கடவுளை மகிமைப்படுத்தி பாடினர் (லூக்கா 2: 13-14).

ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்னும்; இறைவாக்கினர் ஒருவர் இருந்தார். அவர் வயது முதிர்ந்தவர். அவர் வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லாரிடமும் அக்குழந்தையைப் பற்றிப் பேசினார் (லூக். 2: 36, 37).

சமூக, அரசியல் யதார்த்த நிலையையும் மரியா தன் பாடலில் வெளிப்படுத்தினார் (லூக். 1: 53, 54)

“உள்ளத்தின் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையிலிருந்து தூக்கி எறிந்துள்ளார். தாழ்வில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார்.”

ஏழை, பணக்காரர், பசியாய் இருப்போர் என்று சமூகத்தின் நிலையில் ஏற்படவிருக்கும் மாற்றங்களை மரியா தன் பாடலில் கோடிட்டுக் காட்டுகிறார். அரியணையில் இருக்கும் வலியோரைத் தூக்கி எறிந்து இறையாட்சியை மலர செய்ய வல்லவர் என்ற தூரக்காட்சியோடு பாடுகின்றார். ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று இறைவாக்கு கூறுகின்றார்.

பாடல்கள் அற்புதமானவை. பாடல்கள் இறைமாட்சியை மட்டுமன்றி உள்ள குமுறல்களின் வெளிப்பாடாகவும் இருக்கின்றன. பண்டிகை காலங்களில் இறைமாட்சியைப் பாடி, போற்றி, புகழ்ந்து துதிப்போம். இறையாசியை பெறுவோம்.

**அருள்திருமதி . சார்லெற் சௌந்தரராஜன்**

# 'வேண்டுதல் கேட்டருளும்'

மத். 7: 7 -11

"கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத். 7: 7)

தாழ்மையுடன் கேட்போர் பெற்றுக்கொள்வர், கருத்தோடு தேடுவோர் கண்டடைவர், தீமையை விட்டு ஆண்டவரிடம் திரும்பும் இதயங்களை தட்டி, உயிர் தருபவராக ஆண்டவர் இருக்கிறார். நம் வாழ்வு வளம்பெற இறைவேண்டலில் இணைந்து நம்மை தாழ்த்தவும், ஆண்டவரில் நம் அமர்வு எங்கே என தேடவும், முழு இதயத்தோடு அவரிடம் திரும்பவும் அழைப்பு பெறுகிறோம். (மத். 7: 7)

## 1. உங்களைத் தாழ்த்துங்கள்

இறைவேண்டலின் முதல் நிலை தாழ்மைப்படுதல். ஆபிரகாமுக்கு நன்மையான உடன்படிக்கையை அறிவித்த கர்த்தர் (தொ.நூ. 12: 1 - 3), இஸ்ராயேல் என்னும் மக்கள் எகிப்தில் துன்புறப்போகும் 400 வருட அடிமைத்தனமும் உடன் வருகிறது என்பதையும் (தொ.நூ. 15: 13 - 14) அறிவித்தார். தாவீது கர்த்தரின் வல்லமையை பெற்றவராயினும் உடல் சார்ந்த வீழ்ச்சி (II சாமு. 15: 30) அவரில் இடைபட்டது. தன்நிலை உணர்ந்த தாவீது சொல்கிறார், "என் தலைவராம் ஆண்டவரே ! இதுவரை நீர் என்னை வழி நடத்தி வந்தமைக்கு, நான் யார்? என் குடும்பம் யாது?" (II சாமு. 7: 18). கர்த்தருக்கு முன் இறைவேண்டலுடன் நாம் தாழ்மைபட்டால் நம் வாழ்வில் நன்மை பெறுவோம்.

## 2. உங்களைத் தேடுங்கள்

தேடல் தொடர்ச்சியானது, தடையின்றி தேட தேட புதுமை வெளிப்படும். "ஆதாமே : நீ எங்கே இருக்கிறாய்" என்ற தேடல், கர்த்தர் மனிதரைத் தேடுகிறார் என்ற செய்தியை ஒவ்வொரு நாளும் நினைப்பூட்டுகிறது. நாள்தோறும் நாம் கர்த்தருக்கு முன் நிற்கிறோமா, அவரில் அன்பு கொள்கிறோமா என நம்மை நாமே தேட அழைக்கப்படுகிறோம். தாவீது சாலோமோனுக்கு தரும் அறிவுரை, நீ அவரை தேடினால் உனக்கு தென்படுவார், நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார் (1 குறி. 28: 9). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்துகொண்ட நாம் கர்த்தருக்கு முன் நாள்தோறும் இறைவேண்டலுடன் நிற்கையில் அவர் கண்கள் நம்மை கண்டு, நாம் ஆசி பெறுவோம்.

### 3. உங்களைத் திருப்புங்கள்

உங்கள் பொல்லாத வழிகளை விட்டு கர்த்தரிடம் திரும்புங்கள், ஆண்டவர் வாசம் பண்ணும் ஆலயத்தை நோக்கி பாருங்கள். சாலொமோன் எருசலேம் ஆலயத்தில் வேண்டுதல் செய்து சொல்வது, (II குறிப். 6: 24 - 42) தோல்வியுற்றவர் இந்த ஆலயத்தில் உம்மிடம் விண்ணப்பம் பண்ணினால் பாவங்களை மன்னியும், பஞ்சம் அகற்றி நல்வழி காட்டும், நோய் அகல செய்யும் (வ. 29) தூர தேசத்தில் இருந்து வந்தோர் விண்ணப்பம் பண்ணினால் ஏற்றுக்கொள்ளும், (வ. 31) தூர தேச பயணத்தில் இருப்போர், சிறைவாசம் சென்றோர் உமது ஆலயம் நோக்கி விண்ணப்பம் பண்ணினால் (வ. 36 - 39) அவர்களை நினைத்தருளும், உம்முடைய தாசனாகிய தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கிருபைகளை நினைத்தருளும் (வ. 42) என்றெல்லாம் இறைவேண்டல் ஏறெடுக்கிறார்

ஓராண்டு முழுவதும் கிருபையாய் காத்த கர்த்தர் சமூகம் பணிந்து இறைவேண்டலில் நிலைத்திருப்போம் ஆமென்.

அருள்திரு. **ஜோசப் C.G. ஷெனித்**

# திருச்சட்டத்தை உரக்க வாசித்த எஸ்ரா

நெகேமியா 8: 1 - 8

“அவ்வாறே ஏழாம் மாதம் முதல் நாள் குரு எஸ்றா ஆடவர், பெண்டிர், புரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிறுவர் அனைவரும் அடங்கிய சபை முன்னிலையில் திருநூலைக் கொண்டு வந்தார். தண்ணீர் வாயிலுக்குமுன் இந்த வளாகத்தில் காலை முதல் நண்பகல் வரை ஆடவரையும், பெண்டிரையும், புரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிறுவரையும் பார்த்து அதை உரக்க வாசித்தார். எல்லா மக்களும் திருநூலுக்குச் செவி கொடுத்தனர்” (நெகேமியா 8: 2, 3).

ஆபிரகாம் லிங்கள் பள்ளிக்கு தினமும் காடுகளுக்கிடையில் 9 மைல் தூரம் நடந்து சென்றார். புத்தகங்கள் விலை கொடுத்து வாங்கி படிக்க முடியவில்லை. ஆகவே இரவல் வாங்கி படித்தார். இந்த நிலையில் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் முதல் ஜாதினாதிபதியான ஜார்ஜ் வாஷிங்டனின் வரலாறு பற்றி வீஸ் என்பவர் எழுதியிருந்த புத்தகத்தைப் படிக்கத் தேடினார். அப்போது அந்த வரலாறு, “கிராப்போர்ட்” என்ற விவசாயிடம் இருப்பதை அறிந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் உள்ள அவரின் இல்லம் சென்று அவரைச் சந்தித்தார். அவரிடமிருந்து கெஞ்சி கூத்தாடி அந்த புத்தகத்தை வாங்கி வந்தார். வரும்போது படித்துவிட்டு கட்டாயம் திருப்பித் தருவேன் என்று உறுதிகூறி புத்தகத்தை வாங்கி வந்தார். வீட்டிற்கு வந்த லிங்கன் ஆர்வத்துடன் அடுப்பிலிருந்து வரும் மெல்லிய சுவாலையின் ஒளியில் ஒரு ராத்திரியில் அந்த புத்தகத்தைக் கிட்டதட்ட படித்து முடித்துவிட்டார். புத்தகத்தை லிங்கன் வீட்டில் கூரைக்கு அருகில் சுவரில் செருகி வைத்திருந்தார்.

அன்றிரவு அதிக மழையும், காற்றும் பின்னி எடுத்தது. கூரை காற்றில் பஞ்சுப்பொதியாய் பிய்ந்து பறந்துவிட்டது. சுவரில் இருந்த புத்தகம் நனைந்தும் கிழிந்தும் போனது. காலையில் புத்தகத்தைப் பார்த்த ஆபிரகாம் பதை பதைத்து போனார். ஆபிரகாம் லிங்கனின் வருத்தத்துக்கு அளவே இல்லை. ஒரே கவலைதான். எப்படி அந்த விவசாயியைச் சந்தித்து பதில் சொல்வது என்ற பயம் இருந்தது. நனைந்த புத்தகத்தை ஆபிரகாம் லிங்கன் மறுநாள் காலை வெயிலில் உலர வைத்தார். அந்த பயத்திலும் அச்சத்திலும் கூட அவர் ராத்திரி படிக்காமல் விடுபட்டுப்போன சில பக்கங்களையும் படித்து முடித்தார். பின் கிழிந்த புத்தகத்துடன் விவசாயி “கிராபோர்த்திடம்” சென்றார். நடந்ததைக் கூறி மன்னிப்பு கோரினார். மேலும் என்னிடம் புத்தகத்திற்கு உரித்தான விலையைத் தருவதற்குக்கூட பணம் இல்லை. எனவே உங்கள் நிலத்தில் உழைத்து அந்த புத்தகத்தின் பணத்தை கழித்துக்கொள்கிறேன்- என்று சொல்லி விட்டு அந்த

புத்தகத்தின் இழப்புக்காக 75 சென்ட்க்கு மூன்று நாள் விவசாயியின் நிலத்தில் உழைத்தார். அந்த புத்தகம் படித்த பின்னர் தான் ஆபிரகாமுக்கு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகும் எண்ணமும் ஆசையும் வந்தது.

இதுபோல வாசித்தல் என்பது அறிவிற்கும், ஆன்மாவிற்கும் விருந்தாகவும், உள்ளத்திற்கு இன்பம் தரும்பொழுதுபோக்காகவும் அமைகிறது. வாசிப்பு வேறுபாடுகளை நீக்கி, தெளிவுடன் குறுகிய உலக வாழ்வில் இருந்து பரந்த சிந்தனை கொண்ட உலகத்திற்கு செல்ல வழிகாட்டுகிறது. எதிர்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்து தன்னை விடுவிப்பதற்கும், தனித்துவமாகத் தனக்குத்தானே நீதிபதியாகயிருக்கவும் உதவுகிறது. அதோடு மொழித்திறன் விருத்தி, சொல்வன்மை, சொல்லாட்சி, கேட்டல் திறன்களை விருத்தியடைய செய்து புதிய விஷயங்களையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் காணச் செய்கிறது.

நெகேமியா 8: 1 - 11 வரை அடங்கிய திருவாக்கியங்களில் திருச்சட்டத்தை மக்கள் முன் வாசிக்கின்றார் எஸ்ரா. இதை மக்கள் அனைவரும் ஒன்று கூடி தண்ணீர் வாயிலுக்கு எதிரே இருந்த வளாகத்தில் ஒன்று கூடியபோது வாசிக்கின்றார். இதில் ஆடவர், பெண்டிர், புரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிறுவர்களும் கலந்துகொண்டார்கள். அப்பொழுது, சில மாறுதல்களைத் திருச்சட்டத்தை வாசிக்கிற வேளையில் பெற்றார்கள்.

**1. நல்வழிகாட்டியாக கண்டனர்** (நெகே. 8: 3 - 6)

மோசேயின் திருநூலைக் கொண்டு வந்து எஸ்ரா மரமேடையில் வந்து நின்ற பொழுது அனைவரும் இந்நூல் நமக்கு சிறந்த வழிகாட்டியாகயிருக்கும் என்று நம்பினர். காரணம் நூல், வரலாற்றை ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்திற்கு எடுத்துச் செல்கிறது என்றும், வாழ்வை நெறிப்படுத்தி, சுதந்தரமான நல்வாழ்க்கை முறையைத் தூண்டுகிறது என்றும், சமூக, சமய, அரசியல் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது என்றும் நம்பினர். எப்படியும் வாழலாம் என்பது “விலங்கு” போன்ற வாழ்க்கை. இப்படித்தான் வாழ வேண்டும் என்று கடவுள் கூறியதின் அடிப்படையில் வாழ்வது மனித வாழ்க்கை. வரலாற்றில் கடவுளின் செயல்பாடுகள், நம்பிக்கைக் கொண்டு முன்பு வாழ்ந்தவர்களின் அனுபவங்களையும் அறிவையும் எடுத்துக்கொண்டு வாழ்வைத் தொடர்வது சிறந்ததொரு மனிதவாழ்க்கை என்பதை அறிந்துகொள்ள நூல் முக்கியமானது என்பதை அறிந்தனர். ஆகவேதான் திருநூலை திறந்தபோது எழுந்து நின்று மதிப்பளித்தார்கள். கடவுளாகிய ஆண்டவரை வாழ்த்தினர், கைகளை உயர்த்தி” ஆமென்! ஆமென்! என்று பதிலுரைத்து பணிந்தனர்.

புத்தகங்களை நல் வழிகாட்டியாக கொண்டவர்கள் அநேகர். புத்தகங்கள் மீது அன்பு கொண்ட நேரு தான் மறைந்த பின் தமது சடலத்தின் மீது மலர் மாலைகள் வைக்கக்கூடாது புத்தகங்கள் தான் வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம். புத்தகப் பிரியரான பேரறிஞர் அண்ணா புற்றுநோயால் உயிரோடு போராடிக் கொண்டிருந்தார். சிகிச்சைக்காக அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஒருநாள் மருத்துவர்கள் இன்று உங்களுக்கு அறுவை சிகிச்சை என்ற போது தாம் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால் அதை முடிக்கும் வரை உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சையைத் தள்ளி வைக்கச் சொன்னார். அந்த அளவுக்கு நூலை ஒரு செல்வமாகவும், நல்வழிகாட்டியாகவும் கொண்டார். முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சோவியத் ரஷ்யாவில் இந்திய தூதுவராகப் பணியாற்றியபோது புத்தகத்தை ஒரு அரிய செல்வமாகவும், நல்வழிகாட்டியாகவும் கொண்டார். ஒரு நாளில் பன்னிரண்டு மணி நேரம் படிப்பதிலும் படித்ததைச் சிந்திப்பதிலும் செலவிட்டாராம். இந்த செயலே அப்போதைய ரஷ்யாவின் அதிபராக இருந்த ஸ்டாலின் அவர்களின் நன்மதிப்பைப் பெற காரணமாக இருந்தது. இரும்பு மனிதர் என்றழைக்கப்பட்ட ஸ்டாலின் இதயத்தையும் கவர்ந்த ஒரு பேரறிஞராக, தத்துவ ஞானியாக டாக்டர் இராதாகிருஷ்ணன் விளங்கக் காரணமாக அமைந்தது நூல்களே.

**2. நல்லறிவு பெற்றார்கள்** (நெகே. 8: 7, 8)

மக்களுக்குப் புரியும்படி தெளிவாகவும், பொருளோடும் கடவுளின் திருச்சட்டத்தை உரக்க வாசித்தார்கள். ஆதலால் மக்கள் அனைவரும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்து நல்லறிவு பெற்றார்கள். இவர்களுக்கு வாசிப்பு மூலம் கடவுளின் நீதி, நியாயம், சமத்துவ செயல்களையும், ஆன்மீகத்திற்குரிய பெலன், அறிவு, அனுபவம், நம்பிக்கையை வலுப்படுத்தவும், அறிவுக்கூர்மை, நல்லொழுக்கம், தாராளகுணம் போன்றவற்றை விருத்தியடைய செய்யமுடியும் என்ற உறுதியான சிந்தனையிருந்தது. ஆகவேதான் வாசிக்கின்றபோது ஒரு மனதோடு கேட்டார்கள். ரூசோ பிறந்த ஒரு வாரத்திற்குள் அவரது தாயார் காலமானார்கள். எனவே தந்தையின் கண்காணிப்பில் ரூசோ வளர்ந்தார். குடும்பம் ஏழ்மையில் வாடியது. அவர் முறையாக பள்ளிக்கு சென்று கல்வி கற்க முடியவில்லை. தந்தைக்கு தலைசிறந்த தத்துவ நூல்களைப் படிப்பதில் பெரும் ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் ரூசோவிற்கும் பரவியது. பல நூல்களையும் புதினங்களையும் படித்தார். இப்படி புத்தகங்களைப் படித்துப் படித்து தன் அறிவை பெருக்கி கொண்ட ரூசோ தமது 30-வது வயதில் கட்டுரைகள் எழுதத்

தொடங்கினார். பல நூல்களையும் புதினங்களையும் எழுதினார். இவரது புதிய எலவீஸ் என்னும் புதினம் 18-ம் நூற்றாண்டில் அதிகம் விற்பனையானது. ரூசோ எழுதிய மிகச் சிறந்த தத்துவ நூலானது “சமுதாய ஒப்பந்தம்” (The Social Contact) 1762-ஆம் ஆண்டு வெளியானது. “மனிதன் சுதந்திரமாகத் தான் பிறக்கிறான். ஆனால் எங்கும் அடிமை சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான்” என்ற தத்துவத்தோடு இந்நூல் தொடங்குகிறது. இந்நூலை பிரான்சும், ஜெனிவாவும் தடை செய்தது. ஆனாலும் ரூசோவின் சிந்தனைகளைப் படித்தவர்கள், இளைஞர்கள், தொழிலாளிகள், பெரியோர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது. அதோடு, மக்கள் சிந்திக்கவும் தூண்டியது. அதனால் தான் 1789-ஆம் ஆண்டு மக்கள் கூடி அரசனுக்கு எதிராக ஒரு பெரும் புரட்சியை செய்தனர். அந்த பிரெஞ்சு புரட்சியில் மன்னர் லூயிசின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

உலகில் தலைசிறந்த புத்தகங்களில் ஒன்று மோட்ச பிரயாணம் என்பதாகும். இந்நூல் ஜான் பனியன் என்பவரால் எழுதப்பட்டது. இங்கிலாந்தில் போதகர்களைத் தவிர மற்ற எவரும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கூடாது என்றொரு சட்டம் இருந்தது. நீதிபதி இவரிடம் இனி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கமாட்டேன் என்று உறுதி கூறினால் உன்னை விடுவிக்கிறேன் என்று கூறினார். ஆனால் அப்படி உறுதியளிக்க ஜான் பனியன் முன்வரவில்லை. முதலில் 3 மாத சிறைத்தண்டனை அவருக்கு அளிக்கப்பட்டது. பிறகு 12 வருடமாக நீடித்தது. சிறிய இருண்ட அறையில் 50 பேருடன் அடைக்கப்பட்டார். பலர் இறந்தார்கள். கடினங்கள் மத்தியிலும் திருமறை வசனத்தை வாசித்தார், எழுதினார். நல்லறிவு பெற்றார். இங்குதான் “மோட்ச பிரயாணம்” என்ற தலைசிறந்த புத்தகத்தை எழுதினார். இந்நூல் திருமறைக்கு அடித்தபடியாக 130-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு எல்லோராலும் விரும்பி வாசிக்கப்படுகிறது. உலகில் பல படைப்புகளைப் படைக்க அடிப்படை வாசித்தலே என்று நிரூபித்துக் காட்டினார்.

**3. நல்ல அனுபவங்களை பெற்றார்கள்** (நெகே. 8: 9-12)

வாசிப்பு ஓர் அற்புத அனுபவம். அது புதியதொரு உலகை திறந்துகாட்டும். பல புதிய அரிய தகவல்களை அள்ளிதரும். இப்பதிவிலும் மக்கள் திருச்சட்டத்தின் சொற்களைக் கேட்டதினால் கடவுளின் செயல்பாடுகள், விசுவாசிகள் பெற்ற நல்ல அனுபவங்களை உணர்ந்தனர். இதனால் அழுது புலம்பினார்கள். எனவே லேவியர் எல்லா மக்களையும் நோக்கி “அமைதியாயிருங்கள், எனெனில் இன்று புனித நாள், துயரம் கொள்ளாதீர்கள்” எனச் சொல்லி அழுகையை அமர்த்தினார்கள். மக்கள் வார்த்தைகளைப் புரிந்துகொண்டதால், உண்ணவும், குடிக்கவும், உணவு அனுப்பவும், மகிழ்ச்சி கொண்டாடவும் புறப்பட்டுச் சென்றார்கள். ஐன்ஸ்டீன் ஒரு பொருளை

நகர்த்துவது வேறு ஒரு கண்ணுக்கு தெரியாத சக்தி என்று நினைத்தார். ஆனால் தனது 12-வது வயதில் அவரது ஆசிரியர் Max Talmnd எழுதிய Euclidean Plane Geometry என்ற புத்தகத்தைக் கொடுத்தார். இதை வாசித்து கணிதத்தில் விடை தெரியாத புதிர்களை உணர்ந்து கொண்டார். மிகப் பெரிய ஆய்வுக்கூடமோ, உபகரணங்களோ இல்லாத சூழ்நிலையிலும், அவர் தனது உள்மனதின் எண்ணத்தின் சக்தியைக் கொண்ட உலகளாவிய உண்மையைக் கண்டு வளர்ந்தார். அவரின் அத்தனை சாதனைகளையும் படைப்பதற்குப் புத்தகங்களை வாசித்ததே காரணமாக அமைந்தது.

மெத்தடிஸ்ட் சபையை ஸ்தாபித்த ஜான்வெஸ்லி, திட்டமிட்ட வாழ்க்கைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக திகழுகிறார். ஒவ்வொரு மணி நேரத்தையும் அவர் திட்டமிட்டு செலவழிப்பார். அதோடு திட்டமிட்டு புத்தகங்களைப் படிப்பார். குறிப்பாக பிரயாணத்தின் போது பலப் புத்தகங்களைப் படிப்பார், எழுதுவார். இதனால் பலப் புத்தகங்களை எழுத முடிந்தது. பிரசங்களின் இளவரசர் (Prince of Preachers) என்று அழைக்கப்படுவர் ஸ்பர்ஜன். புத்தகங்களை வாசிக்கின்ற பழக்கம் இருந்த காரணத்தினால் 40 தொகுப்புக்கள் அடங்கிய புத்தகங்களை எழுதினார். இவைகள் வாசிப்போருக்கு ஆன்மீக ரீதியான உந்துதலைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது.

திருச்சட்டத்தை உரக்க வாசித்த எஸ்ராவின் மாதிரியானது நாமும் பொது அறிவு, நன்னெறி நூற்களையும், திருமறையும் வாசிக்கவேண்டும் என்ற உந்துதலைத் தருகிறது. ஆகவே, வாசிப்போம்! வளம் பெறுவோம்!

**அருள்திரு. அறிவர். M. எட்வின் சோபிதா**

# LITURGICAL COLOURS 2024

| | |
|---|---|
| **January 1 to January 6** | **White (Christmas Season)** |
| **January 7 to February 13** | **Green (Epiphany Season)** |
| **February 14 to March 30** | **Purple (Lenten Season)** |
| **March 31 to May 18** | **White (Easter Season)** |
| **May 19 to May 18** | **Red (Pentecost Season)** |
| **May 26** | **White (Trinity Sunday)** |
| **May 27 to November 30** | **Green (Pentecost Season)** |
| **December 1 to 24 morning** | **Purple (Advent Season)** |
| **December 24 Eve to December 31** | **White (Christmas Season)** |

**WHITE** is the colour for the festal periods from Christmas Eve to the festival of Epiphany, from Easter day to the eve of Pentecost, and for Trinity Sunday. It is also used for marriages, thanksgiving services, harvest festivals, the feast of dedication of the church and for feasts commemorating saints. White is suitable for baptism, confirmation and ordination, though red may be preferred.


**RED** is used on the feast of Pentecost, and during the week between Pentecost and Trinity Sunday. It is used on All Saints' day and for the feasts of those saints venerated as martyrs. It is appropriate for any service which focuses on the gift of the Holy Spirit, and is therefore suitable for baptism, confirmation and ordination.

**PURPLE** is the colour for Advent season and Lenten season and is therefore used from the first Sunday in Advent to the fourth Sunday in Advent; from Ash Wednesday until Holy Saturday. However, white may be preferred at holy communion service on Maundy Thursday.

Purple is recommended for funerals and for the commemoration of the faithful departed, although either black or white may also be used. White is preferred at the funeral of a child.

**GREEN** is the colour for ordinary Sundays. It is used between Epiphany and Ash Wednesday, and between Trinity Sunday and Advent Sunday.

**ORANGE / SAFFRON** CSI Episcopacy has instituted Orange/Saffron Handbands and stolls for its Bishops. Orange is colour of India & it is on the top of the Indian Flag symbolizing Indian spirituality of Prayer, Meditation, Sacrifice, Selflessness and Commitment. The CSI Episcopal vestments do not change the colours through out the year, for Episcopacy stands for continuity of Pastoral Leadership, Solemnity & Dignity of Liturgical continuance and perpetual Theological reflection and commitment to God and to His Word and to His Church.




திருப்பீடம், காட்டாத்துறை ஆயர்மண்டலத் திருச்சபை

2024 - ஆம் ஆண்டு பேராய கருப்பொருள்

**கடவுளின் திருச்சபை கடவுளின் உலகிற்காக**

**God's Church for God's World**

**தொடர்புத்துறை**

**கன்னியாகுமரிப் பேராயம்**

DIOCESAN PRESS
Nagercoil, 04652 - 231643